த. பா. நி. (க. வெ.) வரிசை எண் — 668

குற்ற இயல் தத்துவம்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

ச. நாராயணசாமி, பி.ஏ., எம்.எல்.,
டிப். சி. பி. ஐ. எல்.,
பகுதி நேர விரிவுரையாளர்,
சட்டக் கல்லூரி,
சென்னை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — December, 1975

T.N.T.B.S. (C.P.) No. 668

© Government of Tamilnadu

THE PRINCIPLES OF CRIMINOLOGY

S. NARAYANASAMY

Price Rs. 12-70

Published by the Tamilna lu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and terature in regional languages at the Iniversity level, of the Government of dia in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

KUMARAN PRESS,
298, Mint Street,
Madras-600001.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'குற்ற இயல் தத்துவம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 668ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 703 நூல்கள் வெளி வந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச் சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங் களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங் களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

முதல் பகுதி

பக்

1. குற்ற இயலும் குற்றச் சட்டமும் (Criminology and Criminal Law) ... 1

குற்றத்தின் தோற்றுவாய் — குடும்ப வரலாறு — குற்றம் என்பது என்ன? — குற்ற இயல் என்றால் என்ன?—சமுதாயவியல் சட்டம்—குற்றத்திற்கான காரண காரிய ஆராய்ச்சித்துறை—தண்டனை இயல் —குற்றமும் குற்றச் சட்டமும்—குற்றம்—அரசியல் தன்மை-வரையறுத்தல்-ஒருருப்படுத்துதல் அல்லது முறைமை ஒழுங்கு—தண்டனை வழங்குதல்—தோற்றத்தின் அடிப்படையைக் கொண்டு குற்றச் சட்டத்தின் இயற்கைத் தன்மையை ஆராய்தல் — முதல் கொள்கை — இரண்டாவது கொள்கை — மூன்றாவது கொள்கை — நான்காவது கொள்கை — குற்ற வகைகளின் பண்பு — சமுதாயக் கொள்கையின் அடிப்படையில் குற்றங்களின் பண்புகளைக் காணல்—குற்றச்சார்பியல் கோட்பாடு—குற்றங்களை வகைப்படுத்துதல் அல்லது பாகுபாடு செய்தல்—குற்றவாளி — குற்றவியல் அறிவியலாகக் கருதக்கூடிய சாத்தியக் கூறுகள்—குற்றப் பிரச்சினை.

2. குற்ற ஆய்வும் அதன் வழிமுறைகளும் (Analysis of Crime and Methods in Criminology) ... 5

குற்ற இயல் ஆய்வுக் கழகங்களின் சுருக்கம் — முதல் அல்லது பண்டைய கழகம் — நில இயல் சார்ந்த கழகம் — பொதுநலக் கழகம் — பரம்பரை ஆய்வுக் கழகம் அல்லது குற்ற இயல் மரபாய்வுத் துறைக் கழகம்—லெம்ரோஸா கழகம்—மனநோய் தேர்வாய்வாளர்கள் கழகம்—உளநோய் ஆய்வியல் கழகம்—சமுதாய ஆய்வியல் கழகம்—குற்றங்களை ஆராயும் முறைகள்.

பக்கம்

3. குற்ற ஒழுக்கம் (Criminal Behaviour) ... 87

குற்றவொழுக்கமும் ஆராய்ச்சியும்—குற்றவொழுக்கத்திற்கான காரணக்கூறுகள் — குற்றவொழுக்கத்திற்கான வரையறை — குற்றவொழுக்கம் பரவும் முறைகள்—பல்வேறுபட்ட சமுதாய அமைப்புகள்.

4. குற்றங்களின் வளர்ச்சியும் குற்றச் சட்டமும் (The Development of Crimes and Criminal Law) ... 102

இடம் பெயர்வு ஆற்றல்—நாகரிக முரண்பாடு—பரத்தைமை.

5. சுற்றுப்புறமும் உடற்கூறு அமைப்புகளும் குற்றமும் (Environment and Physiological Factors and Crime) ... 133

இயற்கை அமைப்பின் சூழ்நிலைகள்—பரம்பரைப் பண்பாடு அல்லது பரம்பரை குணம்—உடலமைப்புகளின் பண்புகளைக் கொண்டு குற்றங்களை ஆராய்தல்—உடல் அமைப்பும் குற்றமும் அல்லது உடல் குறைபாடும், ஊனமும் குற்றமும் - குற்றங்களுக்கும் வயதிற்கும் உள்ள தொடர்பு — பால் உறவிற்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பு.

6. உளநோய்க்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பு (Psychopathy in Relation to Crime) ... 159

பல்வேறுபட்ட பண்புக் கூறுகள்—வெறிய விளைவு அல்லது வெறிய நச்சுத்தன்மை — உளநிலைப் பகுப்பாய்வுக் கொள்கை.

7. குற்ற இனங்கள் (Criminal Tribes) ... 185

8. குடும்பமும் குற்றமும் (Family and Crime) ... 193

குடும்பங்களின் வகைகள் - குடும்பத்தில் குற்றத்தன்மை—சிதறிய குடும்பம்—கட்டுப்பாடும் பயிற்சியும்—குற்றத்திற்கும் உடன் பிறப்புகளுக்கும் உள்ள தொடர்பு—திருமணத்திற்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பு.

பக்கம்

9. பொது நிறுவனங்களும் குற்றமும் (General Institutions and Crimes) ... 222

பொருளாதாரக் காரணக் கூறுகள் அல்லது பொருளாதார நிறுவனங்கள்—அரசாங்கக் காரணக் கூறு—கல்வி நிறுவனங்கள்—போர்.

10. குற்றமும் சமுதாயத்தில் செயல் எதிர்ச் செயல்களும் (Crime and Social Relations) ... 253

குற்றத் தகுதி — தனிமைப்படுத்துதல் — முன்னேற்றத்தில் முரண்பாடு—குற்றக் குழுவமைப்பு.

11. குற்றப் புள்ளி விவரங்கள் (Criminal Statistics) ... 272

செல்வாக்காளர் குற்றம்

இரண்டாம் பகுதி

12. தண்டனையியல் (Penology) ... 287

குற்றக் கட்டுப்பாடு—தண்டனையின் தொடக்கம்—தண்டனை என்பது என்ன ?—தண்டனைக்கு வரையறை—தண்டனையின் வகைகள்—மரண தண்டனை —மரண தண்டனையை நிறைவேற்றும் முறைகள்—மரண தண்டனையின் நன்மை தீமைகள்—மரண தண்டனை அளிப்பது தீமை என்ற கோட்பாடு—உடல் ஒறுப்பு—குற்றவாளியை இழிவுபடுத்துதல் — நாடு கடத்துதல் — சிறைத் தண்டனை — மாதா கோயில்கள் சிறைத் தண்டனை வழங்கி வந்தது—கப்பல்களில் சிறைவைத்தல் குற்றவாளிகளைச் சீர் திருத்த இல்லங்களில் சிறை வைத்தல்—அபராதம்—அபராதத் தண்டனையின் சிறப்பியல்புகள்.

13. காவல்துறை அமைப்பு (The Police System) ... 324

காவல் துறையின் தோற்றுவாய் - குற்றவாளியைக் கைது செய்யச் சட்டம்—அரசியல்- கண்ணியமான காவல் துறையை உருவாக்க வேண்டும்—காவல் துறை நாய்கள்.

14. வழக்கு விசாரணைக்கு முன்பு குற்றவாளியைத் தடைப்படுத்தி வைத்தல் (Detention Before Trial) .. 346

புதிய குற்ற நடைமுறைச் சட்டம்—அலுவல் சாரா முறையற்ற விடுவிப்பு—பிணையத்தில் விடுவித்தல்.

பக்கம்

15. குற்ற நீதிமன்றம் (The Criminal Court) ... 365

அரசாங்கக் குற்ற வழக்கறிஞர் – எதிரி வழக்கறிஞர் அல்லது குற்றவாளிக்கு ஆதரவாக வழக்காடும் வழக்கறிஞர் — நீதிபதி — நீதிமன்ற எழுத்தர்களும், ஊழியர்களும் — குற்ற விசாரணை — சான்றுயம் — சான்றுளர்களும் சான்றும் வழக்கைச் சரிகட்டுதல்.

16. குற்றச்சிறுர் நீதிமன்றம் அல்லது இளங் குற்றவாளி நீதிமன்றம் (Juvenile Court) ... 384

குற்றச்சிறுர் நீதிமன்றத்தின் தோற்றுவாய் — சிறுவர்களின் குற்ற ஒழுக்கங்கள்.

17. முதன்முறைக் குற்றவாளிகளுக்கு நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலை அல்லது நன்னடத்தை உறுதிமொழி விடுதலை (Probation) ... 401

நன்னடத்தை உறுதிமொழி விடுதலையின் வரலாறு — நன்னடத்தை உறுதிமொழி விடுதலையின் அமைப்பு முறைகளும் அதன் பணிகளும் — நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலைக்குக் குற்றவாளிகளைத் தேர்ந்தெடுத்தல் நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலையில் செல்லும் குற்றவாளி அனுசரிக்க வேண்டிய விதிகள் — நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளின் கடமைகள் — ஆராய்ந்தறிதல்.

18. கைதி, சிறைத் தண்டனை, சிறை (Prisoners, Imprisonment and Prison) ... 424

கைதிகள் — பென்சில்வேனியா முறை — ஆபுபர்ன் முறை — பென்சில்வேனியா முறைக்கும் ஆபுபர்ன் முறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் — சிறைகளைச் சிறப்புற அமைத்தல் — கைதிகளும் சமுதாயத் தொடர்பும்.

19. நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் (Parole) ... 443

நன்னடத்தைச் சோதனை முறையில் குற்றவாளியை விடுவித்தலுக்கும், நாணய வாக்குறுதியின்

பக்கம்

மீது கைதியை விடுவித்தலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் — தோற்றம் — நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவிக்குப் குழு—நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவிக்கும் முறையின் கட்டுப்பாடுகள்—கட்டுப்பாடுகளை நீக்கி, முழு விடுதலை அளித்தல்.

20. சிறைக் கல்வியும் தொழிலும் (Education and Labour in Prison) ... 455

சிறைக் கல்வியின் வளர்ச்சி — வாழ்க்கைத் தொழிற் கல்வி—சிறை நூலகம்—சிறையில் உழைப்பு.

21. சிறையிலிருந்து விடுதலை (Release from Prison)... 469

பொது மன்னிப்பு அளித்தல் — மன்னித்தலின் வரலாறு கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை.

22. குற்றத்தைக் கட்டுப்படுத்துதல் (The Control of Crime) ... 479

காவல் துறையினர்களின் கடமை — மீண்டும் குற்றஞ் செய்யத் தலைப்படும் பான்மை — பழக்கம் உண்டாகிவிடுதல்—சிகிச்சை முறையால் குற்றத்தைத் தடுத்தல் - தற்கொலை முயற்சிக் குற்றம்.

மேற்கோள் நூல்கள் ... 512

கலைச்சொற்கள் ... 518

முதல் பகுதி

1. குற்ற இயலும் குற்றச் சட்டமும்

(Criminology and Criminal Law)

குற்றத்தின் தோற்றுவாய் (The origin of Crime)

பாரில் மனிதன் தோன்றியதிலிருந்து வாழ்க்கை ஒரு மாபெரும் போராட்டமாகவே அமைந்து இருக்கிறது. வாழ்வதற்கு உயிர் அவசியம். உயிரைப் பேணிக்காக்க 'தற்காப்பு' அல்லது 'தற்காத்துக் கொள்வது' என்ற இயற்கையுணர்வு மனிதனுக்கு மட்டும் அல்லாமல் உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றது. முதன் முதலில் மனிதன் தன் வாழ்க்கையைப் பாதுகாப்பான இடத்தில் நடத்தி வந்தான். காலத்திற்குக் காலம் அவன் இடம்மாறிக் கொண்டிருந்தான். அவைகள் குகைகள், கரடுமுரடான இல்லங்கள், பாறையின் வெடிப்புகள், மரக்கிளைகள், மரப்பொந்துகள் முதலியனவாகும். அந்த வாழ்க்கை நாகரீகமற்றதாகவும் நாடோடித் தன்மையான தாகவும் அமைந்திருந்தது. இயற்கையாக உள்ள அரண்களை நாடிச் சென்று வாழ்ந்து வந்தான். உயிர் வாழ உணவு வேண்டும். மனிதன் முதன் முதலில் உணர்ந்தது பசியைத்தான். அதற்காக எதிர்ப்பட்ட மிருகங்களைக் கொன்று தின்றான். பசியின் காரணத் திற்காகவே இன்னோர் உயிரைக் கொல்லக் கற்றுக்கொண்டான். பிறகு தற்காத்துக் கொள்ளவும் மற்ற உயிர்களைக் கொல்வது அவசியம் எனக்கருதி நடந்தான். ஆக, பசியைப் போக்கவும், தற்காத்துக்கொள்ளவும், பிற உயிர்களைக் கொல்வது கடமை எனக் கருதிவந்தான். இதில், பாவம், பழிச்சொல்லிற்கு இடமில்லை எனக் கருதி வந்தான். ஆரம்ப காலத்தில் அப்படிப்பட்ட கருத்து களும் இருந்திருக்க நியாயமில்லை.

'தற்காத்துக்கொள்வது' (Self preservation) என்ற இயற்கை உணர்வின்.அடிப்படையில் அமைந்த எண்ணம், 'பழி வாங்குதல்' என்ற நோக்கமாக அமைந்தது. 'பழிவாங்குதல்' என்ற நோக் கத்தினால், இயற்கை உணர்ச்சியால் 'பழிக்குப் பழி' என்ற

உணர்வு பிரதிபலித்தது. 'பழிக்குப்பழி' என்ற உணர்வு, எண்ணம் வளர்ச்சியடைந்தபோதுதான் பெரும்பான்மையானோர்கள் ஒன்று கூடித் தங்களுக்குச் சாதகமான முறைகளில் சட்டத்தை இயற்றிக் கொண்டார்கள். இதனால் சிறுபான்மை மக்கள் சட்டத்தை மீறிய தற்காகக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு வந்தார்கள். சிறுபான்மையோர் தங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தவிடத்து அதாவது பெரும்பான்மையினருக்குள் சண்டை, சச்சரவு போன்ற காரணங்களினால் பிளவு ஏற்பட்டவிடத்து, சட்ட வழி முறைகளை அவர்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டார்கள். இதே முறைதான் நாகரீக உலகிலும் கையாளப்பட்டு வருகின்றது.

குடும்ப வரலாறு (The History of family)

தனிமனிதன் இயற்கையின் உணர்வால், பெண் துணையை நாடிச் சிறு குடும்பமாக வாழ்ந்து வந்தான். இல்லற வாழ்க்கையின் பலன்தான் மக்கள் பெருக்கம். மனைவி, மக்கள் ஆகியவர்களுக்குத் தந்தை தலைவனாக விளங்கினான். குடும்பத்திற்கு முழுப்பொறுப்பு தந்தைதான். தந்தையின் சொல், செயல் ஆகியவை குடும் பத்தின் சட்ட விதிமுறைகளாகும். இப்படிப் பல குடும்பங்கள் பெருகின. பல குடும்பங்கள் அமைந்ததுதான் ஊர். பல ஊர்கள் அமைந்ததுதான் நகரம், நாடு எனப்பட்டன. ஆரம்பகாலத்தில் சிறு மக்கள்தொகை கொண்ட ஊராக, நாடாக இருக்கும்போது அங்கே அதிகமான சட்டவிதிமுறைகள் இல்லை. குடும்பத்திற்கு எதிராகச் செயல்படுபவர்களுக்குக் குடும்பத் தலைவன் தண்டனை வழங்கி வந்தான். தந்தைக்குக் கீழ்ப்பணிய மறுத்தாலும், குடும் பத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டாலும் மகனேயானாலும் கொலை செய்யப்பட்டான். ஊருக்கு ஒரு தலைவனாக விளங்கினான். அவன் அந்தக் குழுவிற்கு எதிராகச் செயல்படுபவர்களை தண்டித்து வந்தான். குடும்ப விவகாரத்திற்கும் ஊர் தலைவ னுக்கும் தொடர்பு இல்லை. குடும்பத்தைப் பொறுத்தவரை குடும்பத் தலைவனே முழுப் பொறுப்பாகும். குடும்ப அங்கத்தினர் களைக் கொன்றாலும் அதை ஊர்த்தலைவன் ஏன் என்று கேட்க மாட்டான். கேட்கவும் கூடாது. இந்த முறை ரோம் நாட்டில் காணப்பட்டது (patriarchal system). தொடக்கத்தில் குடும் பத்திற்கு எதிராகவும், குழுவிற்கு எதிராகவும், செயல்படுவதைத் தான் குற்றங்கள் எனக் கருதப்பட்டது. அவைகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. அல்லது குழுவைவிட்டுத் துரத்தி விட்டார்கள். அந்தக் காலத்தில் பல்வகையான குற்றங்கள் இல்லை. மூன்றாவதாகப் பிறந்த குற்றம் வன்புணர்ச்சிக் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கும் மரண தண்டனை வழங்கப்பட்டு வந்தது.

பிறகுதான், திருடுதல், கொள்ளையிடுதல், தாக்கமுனைதல், தாக்குதல் போன்ற செயல்கள் குற்றங்களாகக் கருதப்பட்டுக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆகவே, ஆதிமனித வாழ்க்கையில் விரல்விட்டு எண்ணத் தக்க சிலவகைச் செயல்களைத்தான் குற்றமாகக் கருதினார்கள். மக்கள் பெருக, நாகரீகம் வளர, அறிவு வளர, அறிவியல் துறை வளர, குற்றங்கள் அதிகரித்துவிட்டன. சட்டங்களும் அதிகரித்துவிட்டன. இன்றைய நிலையில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஓர் அவசரச்சட்டம், உத்தரவு வந்துகொண்டே இருக்கின்ற நிலை உருவாகிவிட்டது.

மக்கள் இனம் இனமாக, குழு குழுவாக ஆங்காங்கே வாழ்ந்து வந்தார்கள். அவரவர்களுக்குத் தகுந்த சட்ட விதி முறைகளை வகுத்துக்கொண்டார்கள். தனித்தனி பழக்க வழக்கங்களைப் பின்பற்றினார்கள். சில செயல்களை எல்லாக் குழுக்களும் குற்றமாகக் கருதி வந்தன. இவை, ஆட் கொலை, (Murder) வன்புணர்ச்சி (Rape), குழுவிற்கு எதிரான செயல் (Treason) ஆகியவைகளாகும். அடிப்படை வாழ்க்கைமுறை, வசதிகள், உணர்வுகள் ஆகியவைகள் இனம் மதம் வேறுபாடின்றி அனைவருக்கும் தேவைப்படுபவையாகும். ஆதிகால மனித வாழ்க்கையில் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகளை விதித்து வந்தார்கள். அதாவது, குடும்பத்திற்கு, சமுதாயத்திற்கு ஒவ்வாத சில பல நிகழ்ச்சிகளையே குற்றங்களாகக் கருதி வந்தார்கள். ஆகவே, இந்தக் குற்றச் செயல்களை மக்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவிக்கவே அவைகளைச் சட்டமாக நிறைவேற்றிப் பொதுமக்கள் அறியும் வண்ணம் வைத்தார்கள். 'ரோம் நாட்டில் பன்னிரண்டு சட்டப் பதிவுகள் (Twelve tables) இவ்வாறு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆகவே குற்றச்செயல்கள், அவற்றை மீறினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றி மட்டும் அக்கால மக்கள் அறிந்து இருந்தார்கள். அக்கால மக்கள் குற்ற இயல் தத்துவத்தைப் பற்றியும் (Criminology) குற்றம் ஏன் செய்கின்றார்கள், தண்டனை அளிப்பதன் விளைவுகள் என்ன என்பனபற்றியெல்லாம் அறியாமல் இருந்தார்கள். அறிவின் வளர்ச்சியால், அனுபவத்தின் அறிவால், குற்ற இயல் (Criminology) மலர்ந்தது.

குற்றம் என்பது என்ன? (What is Crime)

குடும்பத்திற்கோ குழுவிற்கோ சமுதாயத்திற்கோ ஒவ்வாத, எதிரான, அல்லது சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட அல்லது சமுதாயத்தால் தடுக்கப்பட்ட செயல்களைச் செய்வதுதான் குற்றம் (crime) என்று கருதப்பட்டது.

குற்றஇயல் என்றால் என்ன ? (What is Criminology)

குற்றங்களுக்கான காரண காரியங்களைக் கண்டறியவும், அதைத் தடுப்பதற்கான காரணக் கூறுகளை ஆராயவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதனால் ஏற்படும் விளைவுகள் இதன் தொடர்பாகச் சட்டம் இயற்றும் வழிமுறைகளையும், சட்டத்தை மீறுவதற்குரிய காரணக் கூறுகளையும், சட்டத்தை மீறுவதற்குரிய வழிமுறைகளையும், சட்டத்தை மீறுவதனால் ஏற்படும் எதிர் விளைவுகள் ஆகியவைகள் ஒன்றுக்கொன்று இணைந்து தொடர்ச்சியான செயல், எதிர்ச் செயல்களைப்பற்றி விளக்கும் நூலுக்குக் (கோட்பாடு) குற்ற இயல் தத்துவம் (The Principles of Criminology) என்று பெயர். அரசியல் சமுதாயம் விரும்பாத செயல்கள், எதிர்ச் செயல்கள் குற்றமெனக் குற்றச் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

குற்ற இயல் (Criminology) மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது :

1. சமுதாயவியல் சட்டம் (Sociology of Law) : இதில் குற்றச் சட்டம் (Criminal Law) எந்தெந்தச் சூழ்நிலையில் வளர்ச்சியடைந்தது என்பதைப்பற்றிய அறிவியல் ஆராய்ச்சி (scientific analysis) இதில் அடங்கும். சமுதாயத்தின் வளர்ச்சியுடன் குற்றச் சட்டத்தின் வளர்ச்சியையும் இதில் காணலாம். ஆனால் குற்ற இயல் (criminology) நூலில் பொதுவாக இதை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

2. குற்றத்திற்கான காரண காரிய ஆராய்ச்சித் துறை (Criminal Etiology) : குற்றம் புரிவதற்கான அடிப்படைக் காரண காரியங்களின் மூலம்பற்றி ஆராய்வதாகும்.

3. தண்டனை இயல் (Penology): தண்டனை இயல் குற்றங்களைக் கட்டுப்படுத்துதல் (Control of Crime), குற்றங்களின் வரையறைகள், விளக்கங்கள், தண்டனை வகைகள், தடுக்கும் முறைகள் ஆகியவைபற்றியதாகும். பொதுவாகத் 'தண்டனை இயல்' என்ற வார்த்தை பொருந்தாத வார்த்தையாகும். ஏனெனில் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் பல விதிமுறைகளைப்பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவைகளில் சில தண்டனையில்லாத தன்மையாகவும் அமைந்துள்ளதுதான் காரணமாகும்.

குற்ற இயல் தத்துவ நூல் (The Principles of Criminology) குற்றத்திற்கான காரண காரியங்களை மட்டும் விளக்காமல், சட்டம் இயற்றுதல், குற்றங்களைக் குறைத்தல், குற்றவாளிகளைச் சீர் திருத்துதல், சிறைச்சாலைகளைச் சீர்திருத்திக் குற்றவாளிகளுக்கு

மறுவாழ்வு அளித்தல், நீதிமன்றங்களின் நடைமுறைச் செயல்கள், குற்றவாளிகளைக் குறைத்தல், குற்ற விசாரணை, நீதி முறை, குற்றங்களைத் தவிர்க்கும் வழிமுறைகள் ஆகிய விதி முறைகளையும் விளக்குகின்ற காரணத்தினுல் இந்த அறிவு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது. இந்தக் குற்றவியல் தத்துவத்தின் அறிவின் மூலமாகச் சமுதாயத்தை எப்படித் திறமையாகக் கட்டுப்படுத்தலாம், என்னென்ன மாற்றங்களை மேற்கொள்ளலாம். சமுதாயத்தைக் கட்டுப்படுத்த என்னென்ன விதி முறைகளைக் கையாளலாம் என்பன போன்ற பல திட்டங்கள் வகுக்கவும் இந்தக் குற்றவியல் அறிவு பயன்படுகிறது.

இதில் நடைமுறைத் திட்டங்களின் (practical programs) தொடர்பானவைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாகும். ஏன் என்றுல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள், செயல்கள் முதலியன உடனடியாகப் பயனளிப்பதுடன் காலப் போக்கில் அறிவின் ஆற்றல் வளர்ச்சியடையவும் ஏதுவாகிறது. அறிவு வளர வளரத்தான் இதன் உண்மையான பயனை அறிய முடியும். நடைமுறை சாராத, கொள்கையளவேயான அறிவு (theoretical knowledge) முழுமை பெறும் வரையில் காத்திருந்தால் அவர்கள் பேரூழிக் காலம் வரையில் (eternity) காத்திருக்க வேண்டும். ஆகவே சமுதாயக் கட்டுப்பாடு முயற்சியால்தான் கொள்கை அளவிலேயான கருத்தளவிலேயான அறிவு ஆக்கம் பெறும் என்பது திண்மையாகும்.

மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வுத் துறை (Social Science) வளர்ச்சியடைந்த பிறகுதான் சமுதாயக் கட்டுப்பாடு (Social control) முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது முற்றிலும் தவருன எண்ணமாகும் என்று ஜான் டிவே (John Dewey) கூறுகின்றுர். இதற்கு முக்கிய காரணம், ஆதி காலத்திலிருந்தே சமுதாயத்தில் பல கட்டுப்பாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. படிக்காத பாமர மக்களும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுதான் வாழ்ந்து வந்தார்கள், வருகின்றுர்கள். அனுபவ அறிவைக் கொண்டே பல கட்டுப்பாடுகள் விதித்தும், செயல்படுத்தியும் வந்துள்ளார்கள். இன்றும் காட்டுப் பகுதிகளில் வாழும் மலைஜாதியினரும், படிக்காத நரிக்குறவர்களும், நாடோடி மக்களும் அவர்களுக்குள் சமுதாயக் கட்டுப்பாடுகள் பல உள்ளன என்றுல் அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் அந்தக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றுர்கள் என்பது பொருள். ஆனல் சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிதான்

சமுதாயத்தின் திட்டங்கள் நிறைவு பெறுவதற்கு முக்கியத் தொடர்பாக அமைகின்றது. பொருளாதார அறிவு இன்றியே பொருளாதாரம் வளரும். ஆனால், பொருளாதார அறிவின் வளர்ச்சி, பொருளாதாரம் பெருகுவதற்கு முக்கிய துணையாக விளங்கு கிறது. ஆகவே, எதிலும் அனுபவ அறிவின் செயல்களைக் கொண்டு கருத்தறிவை வளர்ப்பதற்கும், கருத்தறிவைக் கொண்டு மேலும் அனுபவ அறிவை வளர்க்கவும் பயன்படுகின்றது. அதாவது பழைய செயல்களின் குறைபாடுகளைக் கண்டறிவதற்குக் கருத்தறிவு தேவைப்படுகின்றது. இந்தக் கருத்தறிவைக்கொண்டு புதிய முறைகளைக் கண்டறியவும், அதைப் பயன்படுத்தவும், பழைய முறைகளை மாற்றி அமைக்கவும், திட்டங்களை விரைவில் செயல்படுத்தவும் பயன்படுகின்றது. மேலும் எளிமையான முறைகளைக் கையாளவும், குறைவான செலவு வழிமுறைகளை மேற்கொள்ளவும், அதிக நன்மைகளை அடையவும், பயன்படுத்திக் கொள்ளவும் ஏதுவாகிறது. மனிதன் மனதாரத் திட்டமிட்டுத் தேர்வாய்வு செய்ததின் பயனாக அனுபவ அறிவும், கருத்தறிவும் இணைந்து சமுதாயம் முன்னேக்கிச் செல்ல வழி உண்டாயிற்று. இயற்கையின் படைப்பினை அடக்கி ஆண்டதனால் மனிதனுக்கு இயற்கை அறிவின் சக்தி அதிகரித்தது. இதனால் அவனது அனுபவ அறிவுடன் கல்வி அறிவு அதிகரித்ததனால் சமுதாயத்தில் பெரிய பெரிய கட்டுப்பாடுகளை விதிக்கவும், அவைகளைச் செயல் படுத்தவும் முற்பட்டான். ஒருவருக்கு வெறும் கொள்கை அல்லது கருத்தறிவு எவ்வளவுதான் இருந்தாலும் அவருக்குத் திறனாய்வு சார்ந்த அறிவு எண்ணம் (Experimentations) இல்லாத வரையில் அவைகள் எல்லாம் தேவையற்றதும் பயனற்றதும் ஆகிவிடு கின்றன. ஆகவே திறனாய்வு சார்ந்த எண்ணமும் செயலும் முக்கியமாகும். படிக்காத பாமர மக்கள் பலர் தங்கள் அனுபவ அறிவால் சமுதாயத்தில் சிறந்தும் அதே நேரத்தில் குற்றங்களைப் பொறுத்தவரையில் எதிர்த்தும் வருகிறார்கள். ஆனால் அவர் களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை உண்டு. பல திட்டங்களும் உண்டு. ஆனால் திறனாய்வு எண்ணம் எளிதில் வளரக் கூடியது அல்ல. ஆனால் அது வாழ்க்கைக்கு முக்கியமானதாகும்.

குற்றமும் குற்றச் சட்டமும் (Crime and Criminal Law)

குற்றம் : குற்றவாளியின் ஒழுக்கம் குற்ற ஒழுக்கமாகும் (Criminal behaviour). ஆகவே குற்றச் சட்டத்தை மீறுவதுதான் குற்றமாகும். குற்றச் சட்டத்தால் தடுக்கப்படாத, குற்றச் சட்டத் தில் குறிப்பிடாத செயல்களைச் செய்தாலும், செய்யாமல் இருந் தாலும் (Act or omission) அவை குற்றங்களாகக் கருதப்பட மாட்டா. ஒரு செயல் எவ்வளவு பாவச் செயலாக இருந்தாலும்

பழித்துக் கூறக்கூடியதாக இருந்தாலும், நாணமில்லாத செயலாக இருந்தாலும், அறத்திற்கு முரண்பாடாக இருந்தாலும், குற்றச் சட்டத்தால், அச் செயலைத் தடை செய்யாத வரையில், கட்டுப் பாடு விதித்துத் தண்டனை வழங்காத வரையில், அது குற்றமாகாது. ஆகவே ஒரு செயல் குற்றமாக (Crime) விளங்க வேண்டும் என்ருல் அந்தச் செயல் குற்றச் சட்டத்தினுல் தடை செய்யப் பட்டிருத்தல் வேண்டும். அதை மீறினுல் அதற்குரிய தண்டனையும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே, தடை அல்லது கட்டுப்பாடு, தண்டனை (Prohibition and Punishment) இரண்டும் குற்றத்திற்கு இரண்டு கண்களாகக் கருதப்படுகின்றன. வெறும் கட்டுப்பாடு விதித்துத் தண்டனை இல்லையென்ருலும், கட்டுப்பாடு இல்லாமல் தண்டனை விதிப்பதாக இருந்தாலும் அவைகள் குற்றச் செயல்களாகக் கருதப்பட மாட்டா. உதாரணமாக, குடும்பக் கட்டுப்பாடு (Family Planning). இது இந்திய அரசாங்கத்தின் கொள்கையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இதைச் செயல் படுத்த எல்லா முயற்சிகளும், அத்துடன் ஓரளவிற்குப் பணமும் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஆனுல் இந்தக் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தை மீறினுல் அபராதமோ சிறைத் தண்டனையோ விதிக்க முடியாது. காரணம் இத்திட்டம் குற்றச் சட்டத்தில் இடம் பெறவில்லை. மேலும் இதை மீறினுல் தண்டனை உண்டு என்ற அறிவிப்புப் பகுதியும் இல்லை. ஆகவே இதுபோன்ற பல செயல்களை மீறினுலும் அவை குற்றமாகாது. அதே போன்று 'ஐயம் இட்டு உண்' என்பது அறம். தருமம் செய்யாமல் உண்டால் அறத் திற்கு மாருன செயலாகும். இதனுல் பாவம் சேரும் என்பார்கள். ஆனுல் அவனுக்குத் தண்டனை கிடையாது. இது குற்றச் சட்டத்தில் இடம் பெறவில்லை. அல்லது தண்டனையும் விதிக்கப்படவில்லை. குற்றச் சட்டத்தினுல் (Criminal Law) இடம் பெருத பல செயல்கள் குற்றமாகக் கருதப்படுகின்றன. அதற்குத் தண்டனையும் வழங்கப் படுகின்றது. உதாரணமாக வருமானவரிச் சட்டம் (Income-tax Act), விற்பனை வரி, காட்டுச் சட்டம் (Forest Act) தொழிலாளர் சட்டம் (Labour Act) இப்படிப் பல சட்டங்கள் குற்றங்களையும், தண்டனை பற்றியும் விவரிக்கின்றன. ஆகவே, அவைகளை மீறி னுலும் குற்றம்தான். அந்தச் செயல் குற்றச் சட்டத்தில் இடம்பெற வில்லையே என்ற கேள்வியை எழுப்பினுலும், அந்தந்தச் சட்டத் தில் அதற்குரிய தண்டனை வழங்கப்பட்டிருப்பதால், அவைகளை மீறினுலும் குற்றம்தான். மற்றநாடுகளைவிட நம் நாட்டில் குற்றச் சட்டங்களை விட (Criminal Law) மற்றச் சட்டங்களில் கட்டுப் பாடும், அதை மீறினுல் தண்டனையும் உண்டு என்ற நிலை உண்டு. அவை ஏறத்தாழக் குற்றச் சட்டத்திற்குத் தொடர்புள்ளவை போலக் காணப்படு ஆகவே, அந்தச் செயல்களை யெல்லாம், குற்றச்

சட்டத்தில் சேர்த்துவிடுவது நலம். எடுத்துக்காட்டாக, சில சட்டங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

1. The Indian Christian Marriage Act ;
2. The Banking Companies Act ;
3. The Business Profits tax Act ;
4. The Coffee Act ;
5. The Cotton Ginning & Pressing Act ;
6. The Motor Transport Workers Act ;
7. The Arms Act ;
8. The Motor Vehicle Act ;
9. The Rubber Act ;
10. The Census Act ;
11. The Collection of Statistics Act ;
12. The Sea Customs Act ;
13. The Post Office Act ;
14. The Special Marriage Act.
15. The Tea Act ;

ஆகவே சட்டங்களை மீறினாலும் குற்றம். அதற்காகத் தண்டனையும் வழங்கப்படும். இவைகளைத் தவிர மற்றச் செயல்கள் குற்றமாகக் கருதப்படமாட்டா. ஆதியில் குடும்பத்தலைவனும், பிறகு குழுவின் தலைவனும், பிறகு ஊர் தலைவனும், தற்காலத்தில் அரசாங்கமும் எந்தெந்தச் செயல்களைக் 'குற்றம்' (crime) என்று வரையறுத்து அவைகளுக்கு என்னென்ன தண்டனை விதிக்கப்படலாம் என்று வரையறுக்கப்பட்டு வருகின்றது. நேற்று ஒரு செயல் குற்றமாக இருக்கலாம். இன்று அதைக் குற்றமற்ற செயலாக அறிவித்துவிடலாம். எடுத்துக்காட்டாக, மதுவிலக்குச் சட்டம் (Prohibition law). ஆக, அரசாங்கம் நாட்டின் சூழ்நிலைக்கும் மக்களின் நலனுக்கும் ஏற்ற வகையில் சட்டத்தை இயற்றி வருகின்றது. அரசாங்கம் ஒரு செயல் குற்றம் என்று கருதினால் குற்றமாகும். இல்லை என்றால் அது குற்றமில்லை. இன்று ஒரு செயல் குற்றம் என்றால் அச் செயல் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு, அதற்கு அரசாங்கம் தண்டனை விதிக்கும் உரிமை வேண்டும். ஆகவே, தனி நபர் தடுத்தாலும் அதை மீறினாலும் அது குற்றமாகாது. அதற்குத் தண்டனையும் வழங்க முடியாது

தனி நபருக்குப் பிடிக்காத செயல்கள் குற்றச் செயலாகாது. அதை மற்றொருவர் மீறினாலும் குற்றத்தை மீறியதாகாது. தனி நபரின் விருப்பு, வெறுப்பு பொறுத்துக் குற்றச்சட்டத்தை அமைத்துக் கொள்ள முடியாது. அரசாங்கம்தான் அதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றுள்ளது இன்று.

மேலும் குற்றம் என்று கருதப்படும் செயல் கீழ்க்காணும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(1) அரசியல் தன்மை (Politicality)

(2) வரையறுத்தல் (Specificity)

(3) ஒருருப்படுத்துதல் (Uniformity)

(4) தண்டனை வழங்குதல் (Penal sanction)

இவைகளைப்பற்றி விரிவாக ஆராய்வோம்.

(1) அரசியல் சட்டம் (Constitution)

(2) நாட்டு உடன்படிக்கை (Treaties)

(3) நாட்டு மரபுச் சட்டம் (Common law)

(4) சட்டமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் (Enactments by the legislatures)

(5) அதன் உட் கோட்பாடுகள் (Subdivisions)

(6) நீதித்துறை (Judicial)

(7) ஆட்சி ஒழுக்க முறைகள் (Administrative regulations)

முதலியவை சட்டம் என்று பொதுவாக வரையறுத்துக் கூறப்படுகின்றன. அவைகளை மீறுவது குற்றமாகும். தடை செய்யப்பட்டவையெல்லாம் குற்றச்சட்டமாகிவிடாது. சட்டத்தைச் செயல்படுத்தும் பிரதிநிதி நீதிமன்றமாகும். ஆகவே சட்டமன்றத்தைவிட நீதிமன்றம்தான் குற்றம் என்றால் என்னவென்று உறுதிப்படுத்தி, அதைத் தீர்மானிக்கின்றது. ஆனால் எல்லாச் சட்டங்களையுமா நீதிமன்றம் தீர்மானிக்கின்றது? அதன் முன்புள்ள ஒரு சில சட்டத்தை மட்டும்தான் தீர்மானிக்கின்றது. ஆகவே, நீதிமன்றமே எல்லாச் சட்டங்களையும் தீர்மானித்துவிடவில்லை என்று ஒரு சிந்தனைக் கழகம் (School of Thought) கூறுகின்றது. ஆனால் நீதிமன்றம் சட்டத்திற்குப் பொருள் விளக்கம் அளித்து அதைப் பயன்படுத்தும் சட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. அதன் தீர்ப்பானது சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டத்திற்குச் சமமாக அமைகிறது. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்போது

அறிவிக்கும் கருத்து மாறுபாடு, இன்னொரு தீர்ப்பு வழங்கும்போது அந்தக் கருத்து மாறுபாடு பயன்படுத்தப்படுகின்றது. இதனால் புதிய சட்டம் இயற்றும்போதும், பழைய சட்டத்தை மாற்றியமைக்கும்போதும் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் முக்கியமாக விளங்குகின்றன. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கேற்பச் சட்டத்தை மாற்றிக்கொள்கின்றார்கள். அல்லது சட்டத்தை நீக்கிவிடுகின்றார்கள். சட்டத்தில் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆகவே, சட்டத்தைப் பயிலும் மாணவர்களும், மற்றவர்களும் சட்டத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும் என்றால் அவர்கள் நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் படித்தாக வேண்டும். நீதிமன்றங்களும் கடமை வழுவாமல் சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போலத் தீர்மானிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு ஆதரவாகவோ, மக்களுக்கு எதிராகவோ ஒரு சார்பாக நீதி வழங்கக்கூடாது. நீதிமன்றங்களின் ஒழுக்க முறையானது பொதுமக்களின் எண்ணத்தையும் செயலையும் பொறுத்திருக்கிறது. சட்டமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே காவல்துறை (police) செயல்துணையாக இருக்கிறது. காவல்துறைதான் சட்டத்தை வலியுறுத்தியும் வருகின்றது. சட்டம், ஒழுங்கு இவைகளைப் பேணிக்காப்பது காவல்துறையின் கடமையாகும்.

பல சட்டங்கள் செயல்படுத்தப்படுவதில்லை; அல்லது செயலாக்கப்படுவதில்லை. பல சட்டங்கள் அமலாக்கப்படுவதில்லை. சில சட்டங்கள் அபூர்வமாகச் செயலாக்கப்படுகின்றன. சில சட்டங்கள் ஒரே மாதிரி ஒரே தன்மையாக ஓருருத்து முறையில் முழுமையாகச் செயலாக்கப்படுவதில்லை. செயலாக்கப்படுவதும் ஆட்சிமுறை செயலாண்மை முறைகளும் பொதுமக்களின் கருத்தால் பாதிக்கப்பட்டுவிடுகிறது. சட்டம் செயல்படுகிறதா இல்லையா என்பதை முடிவாகத் தீர்மானிப்பது பொதுமக்களின் கருத்துதான் (public opinion). பொதுமக்களின் கருத்தைக் கொண்டுதான் சட்டம் செயல்படுகிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும் என்று ராஸ்கோபாண்டு (Roscoepound) கூறுகிறார். ஆகவே, முடிவாகக் கூறப்போனால் சட்டம், சட்ட நூலில் மட்டும் இல்லை. சட்டம் படிவத்தில் மாறாமல் இருந்த போதிலும், சட்டம் வழக்கில் மாறிவிடலாம் என்று கூறுகிறார் சதர்லாண்டு (Sutherland).

அரசியல் தன்மை (Politicality)

குற்றச் சட்டத்திற்கு அரசியல் தன்மை ஒரு முக்கிய ஆக்கக் கூறு என்று எல்லோரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். 1. தொழிற்சங்கச் சட்டங்கள், 2. கிறிஸ்துவ திருக்கோவில்

தொடர்பான சட்டங்கள், சமயக் கட்டுப்பாடுகள், 3. குடும்பத் தொடர்பான வழக்க முறைகள் [The rules of (1) Trade Union, (2) The Church and (3) The family] ஆகியவை குற்றச் சட்டங்கள் ஆகா. அவைகளை மீறுவதும் குற்ற மாகாது. அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களை மீறுவதுதான் குற்றமாகும். இப்படிப் பிரித்து வேறுபாடு காண்பது கொடுங்கோன்மை எனச் சாடுகின்றார் சதர்லாண்டு. ஆதியில் தனிக் குடும்ப விதியை மீறினாலும் குற்றம். அதை விசாரணை செய்து நீதி வழங்குவது குடும்பத் தலைவனின் பொறுப்பாக இருந்தது. இன்று அதெல்லாம் பறிபோய்விட்டது. பழக்க வழக்கத்தை எதிர்ப்பது, மீறுவது குற்றமாக இருந்து வந்தது அல்லவா? இன்று அவைகள் குற்றமாகக் கருதப்பட வில்லை. இவைகளை எல்லாம் மக்கள் எண்ணிப் பார்த்தால் அவர்கள் பெற்றிருந்த குடும்ப ஆட்சி முதல்வரின் செயலுரிமை (Patriarchal power) இழந்து விட்டதை நினைத்தால் அவர்களின் ஆவேசம் அதிகரிக்கும். பிறகு அவர்களைக் கட்டுப்படுத்துதல் மிகவும் கடின மாகும் என்று கூறுகின்றார் சதர்லாண்டு. இதற்கு எடுத்துக்காட் டாக, நாடோடி இனத்தவர்கள், நரிக் குறவர் (Gypsies) ஆகியோ ரைக் குறிப்பிடலாம். அவர்களுக்குக் குறிப்பிட்ட நில வரம்பு கிடையாது. இமய முதல் குமரி வரையில் சுற்றித் திரிவார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வலுவான சட்டமும் இல்லை. சமூகக் கட்டுப்பாடு (taboos) சமூக நீதிமன்ற முறை முதலியன உருவமைப்பில் இல்லை யென்றாலும் செயலளவில் உண்டு. அவர் களின் பழக்க வழக்கங்களை மீறுகின்றவர்களுக்கு அபராதம் அல்லது சித்திரவதை அல்லது குழுவை விட்டு நீக்கிவிடுதல் ஆகிய தண்டனைகளை வழங்கிவருகின்றார்கள். அவர்களின் நீதி மன்றங்களுக்கு அரசாங்கம் அதிகாரம் வழங்கவில்லையென்றாலும், அவர்கள் செவ்வனே நீதி பரிபாலனம் புரிந்து வருகின்றார்கள். இதேபோன்று சிகாகோ நகரத்தில் குடியேறிய சீனத்து மக்கள் அரசாங்க அதிகாரம் இல்லாமலே நீதிமன்றம் அமைத்து, அதி காரம் வழங்கப்பட்ட நீதிமன்றங்கள் போலவே சிறப்பாக நீதி பரிபாலனம் செய்துவருகின்றார்கள் என்றும் அவர்கள் தாய் நாட்டின் சட்டதிட்டங்களையே பின்பற்றி வருகின்றார்கள் என்றும் கூறுகிறார் சதர்லாண்டு. இந்தியாவில் வட மாநிலங்களில், நாகரீகம் வளராத பகுதிகளில், குறிப்பாக அருணாசலப் பிரதேசத்தில் பல இன மக்கள் இன்றும் அவரவர்கள் பழக்க வழக்கங்களைப் பேணி வருவதுடன் பழைய முறையிலேயே அவர் களுக்குள் நீதி வழங்கிக் கொள்ளுகின்றார்கள். சாதி மத வேறுபாடு பாராட்டக் கூடாது எனச்சட்டம் இருந்தாலும் சாதியை விட்டுத் திருமணம் செய்யும் ஆண், பெண் முதலானோர் கடுமையான

தண்டனைக்குள்ளாகின்றார்கள் அவர்களின் சமுதாய நீதிமன்றத்தால். ஆகவேதான் அரசியல் தன்மை வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால், அரசியல் தன்மை சரிவர வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாகப் பல கொடுங்கோன்மைகள் நிகழ்ந்துவிடுகின்றன. சில வேளைகளில் அரசாங்கம் தன் அதிகார வெறியினால் தான் இயற்றிய சட்டங்களை மீறிவிடுகின்றது. ஆனால் அரசாங்கம் அதற்காகத் தண்டனையடைவதில்லை. மேலும் கட்சியின் கொள்கை அடிப்படையில் சட்டம் இயற்றப்படுகின்றதே தவிர மக்களின் தேவைக்காக இயற்றப்படுவதில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

வரையறுத்தல் (Specificity)

வரையறுத்தல் என்பதும் குற்றச் சட்டத்தின் ஒரு முக்கிய மூலக் கூறாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால், குற்றச் சட்டத்திற்கும் (Criminal law) உரிமைச் சட்டத்திற்கும் (Civil law) உள்ள வேறுபாடுகள் தெளிவாக விளக்கப்பட வேண்டும். உரிமைச் சட்டம் பொதுவானதாக அமைந்திருக்கலாம். ஒருவன் கருதியோ அல்லது கருதாமலோ மற்றொருவனுக்கு ஊறு (தீங்கு) விளைவித்தால் அவனுக்கு ஈட்டுறுதி (damages) அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது ஜெர்மனியின் உரிமைச் சட்டம். ஆனால் குற்றச் சட்டத்தில், குற்றச் செயல்களுக்குக் கண்டிப்பான பொருள் வரையறை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நீதிபதிகள் குற்றவாளிகளின் செயல்களைக் கூர்ந்து கவனித்து அவர்களின் செயல் குற்றச் சட்டத்தில் அடங்குமா அடங்காதா என்று ஆராய்ந்து பார்த்து ஐயம் ஏற்பட்டால் குற்றவாளிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிவிடுகின்றார்கள். சட்டத்தில் தெளிவாகக் கூறப்படாத காரணத்தால் அந்தச் செயலைக் குற்றம் என நீதிபதிகள் தீர்மானிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, விமானத்தை எடுத்துச்சென்று விட்டதாக ஒருவன்மீது குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டான். அவன் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிற்று. காரணம், குற்றச்சட்டத்தில் வாகனம் (vehicle) என்ற வார்த்தைதான் இருக்கிறதே தவிர தன்னாலேயே இயங்குகின்ற (self-propelled) என்ற வார்த்தை இல்லாததேயாகும். சில சட்டங்கள் வரையறுக்கப்பட்டு இருக்கலாம். சில பொதுவாக அமைந்திருக்கலாம். அதாவது தொல்லைக் குற்றம் (nuisance), சதிக்குற்றம் (conspiracy), ஒழுங்கின்மையாக நடத்தல் (disorderly conduct), அலுவலக முறைப்பிழை (official misfeasance) முதலியவைகளைக் கூறலாம். இவைகளுக்குத் தெளிவான வரையறை அளிக்கப்படவில்லை.

ஒருருப்படுத்துதல் அல்லது முறைமை ஒழுங்கு (Uniformity)

ஒருருப்படுத்துதல் என்பது குற்றச் சட்டத்தின் மற்ருெரு முக்கிய அமைப்பாகும். எந்தவித வேறுபாடின்றி, ஏற்றத்தாழ்வு இல்லாத முறையில் நீதியை வழங்க வேண்டும் என்று சட்டம் முயற்சி செய்கிறது. சமுதாயத்தில் ஒருவர் கௌரவத்தோடும், பெரும்புகழோடும் வாழ்கின்ருர் என்ற காரணத்திற்காக அவர் குற்றமிழைப்பினும் அந்தச் செயல் குற்றப் பொறுப்பிலிருந்து விடுதலை அளிப்பதில்லை. சட்டம் எந்தச் செயலைக் குற்றம் என்று கூறுகின்றதோ, அதுதான் குற்றமே தவிர, குற்றத்தை யார் செய்தார்கள், ஆண்களா, பெண்களா, ஏழையா, பணக்காரனு, உயர்ந்தவனு தாழ்ந்தவனு என்பன போன்ற வேறுபாடுகளைக் கவனிப்பதில்லை. ஆனல் நடைமுறை வாழ்க்கையில் பல வேறு பாடுகள் காணப்படுவதாக வினவலாம். அது குற்ற நடைமுறைச் சட்டத்தின் (Criminal Procedure Code) குறைபாடு என்று கூறு வதைவிட, குற்ற விசாரணை செய்பவர்களின் குறைபாடுகள் என்றுதான் கூறவேண்டும். சிறுவர்களுக்கும், பெண்களுக்கும் சட்டத்திலேயே சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏழு வயதிற்குள் உள்ள சிறுவர்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அது குற்றம் ஆகாது எனக் குழந்தைகளுக்குக் குற்றவிலக்களிப்பு அளிக் கப்பட்டிருக்கின்றது சட்டத்தில். இதற்குக் காரணம் குழந்தை களுக்குக் குற்றமனம் (mensrea) இல்லாமல் இருப்பதுதான். சிறு குழந்தைகளுக்கு எது குற்றம், எது குற்றமற்றசெயல் போன்ற வேறுபாடுகள் தெரியாதல்லவா ? மேலும் ஒரு செயலைக் குற்ற மனத்தோடு (mensrea) செய்தால்தான் குற்றமாகும். குற்றமனம் இல்லையென்ருல் எந்தச் செயலும் குற்றமாகாது. அந்த அடிப் படையில்தான் :சிறுவர்களுக்குக் குற்றவிலக்களிப்பு அளிக்கப்பட் டிருக்கிறது. அதேபோன்று பிறன்மனைவி புணர்தல் (adultery) குற்றத்தில் பெண்கள் குற்றவாளியாகக் கருதப்படுவதில்லை. தண்டனையும் வழங்கப்படுவதில்லை. இந்தியக் குற்றச் சட்டத் தொகுப்பில் (Indian Penal Code) பெண்களுக்குக் குற்றவிலக் களிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பிறன் மனைவி புணர்தல் குற்றத்திற்கு மட்டும். ஆனல் ஜப்பான், ஜெர்மனி, ஃபிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் பெண்களுக்கு அவ்வாறு சலுகைகள் அளிக்கப்படவில்லை.

பொதுவாகச் சட்டம் எல்லா மக்களையும் ஒரே கண்ணோட் டத்துடன்தான் பார்க்கிறது. ஆனல் குற்ற நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) இதில் வேறுபடுகின்றது. மேலும் விருப்புரிமை (discretionary power) நீதிபதிக்கு வழங்கப்பட்டிருப் பதனல் இதன் முக்கியத்துவத்தை மாற்றிவிட்டது. தனிமனி

தனின் தனித்தகுதியை அடிப்படையாகக் கொண்டே நீதிமன்றம் தன் விருப்புரிமையைப் பயன்படுத்துகிறது. மேலும் தனி மனிதனின் நடத்தை மற்றும் ஒழுக்கத்தைக் கொண்டும் தன் விருப்புரிமையைப் பயன்படுத்துகின்றது. குற்ற நீதிமன்றத்தில் (Criminal Court) ஏற்கெனவே வழங்கியுள்ள தீர்ப்புகளின் அடிப் படையிலும் நீதி வழங்கப்படுகின்றது. ஆகவே, முன் தீர்ப்புகளும் நீதி வழங்குவதற்கு முக்கியமாக அமைகிறது, தண்டனை வழங் கும்போதும் எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே மாதிரியாகத் தண்டனை வழங்கப்படுவதில்லை. நீதிமன்றத்திற்குத் தன் விருப் புரிமை அளிக்கப்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணமாகும். மேலும் தண்டனைக் காலத்தைத் தெளிவாக வரையறுத்துக் கூறாமல் அதிக அளவு தண்டனைக் காலம் மட்டும் கூறப்பட்டிருக் கிறது. குறைந்த அளவு தண்டனை குறிப்பிடப்படவில்லை. இவைகளை மறுசீரமைத்து ஒருருப்படுத்துதல்வேண்டும். ரஷியாவில் குறைந்த தண்டனை காலத்தின் அளவு சட்டத்தில் வரையறுத்துக் கூறப் பட்டிருக்கின்றது. இதனால் அந்நாட்டு நீதிமன்றங்கள் எல்லாக் குற்றவாளிகளுக்கும் குறைந்தபட்ச தண்டனையை வழங்கியே தீரவேண்டும். நீதி எல்லா மக்களுக்கும் சம அளவில் கிடைக்கச் செய்வது சமுதாயத்தின் முதற்கடமையாகின்றது.

தண்டனை வழங்குதல் (Penal sanction)

தண்டனை வழங்குதல் குற்றச் சட்டத்தின் முக்கிய கூறுகும். தண்டனை என்பது என்ன? குற்றம் செய்தவர்கள் அதற்குப் பரிகாரமாக உடல் துன்பத்தையோ அல்லது பொருள் நட்டத் தையோ அல்லது சுதந்திரமற்ற வாழ்க்கையையோ அனுபவிப் பதுதான் தண்டனையாகும். மேற்சொன்ன தண்டனை வகைகள் அரசியல் அங்கீகாரத்தோடு அடைந்தால்தான் தண்டனையாகும். தனிநபர் திருப்பி அடிப்பதும் துன்புறுத்துவதும் தண்டனையாகாது. அறவாழ்க்கையில் அது தண்டனையாகக் கருதப்படலாம். தற் காப்பிற்காக மற்றவனுக்குத் தீங்கு (self-defence) இழைக்கவும் அல்லது கொலை செய்யவும் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் அவைகள் தண்டனையாகாது. நீதிமன்றத்தில் குற்றவாளி விசாரணை செய்யப்பட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்டு அதற்குப் பரிகார மாக அளிக்கப்படும் சிறைத்தண்டனையோ, மரணதண்டனையோ அல்லது அபராதமோதான் 'தண்டனை' என்று சட்டம் கருது கிறது. மற்றபடி யார் என்ன நடவடிக்கை எடுத்தாலும் எவ்வளவு தான் துன்பத்தைக் கொடுத்தாலும், அவை தண்டனையாகிவிட முடியாது. குறிப்பாகத் திருடன் பிடிபட்டுவிட்டால் அக்கம்பக்கம் உள்ளவர்கள் அவனை அடி அடி என்று அடித்தாலும் அது தண்டனையாகாது. அப்படியே அவனை விட்டு விடவும் மாட்டார்

கள். அவனைக் குற்றக் கூண்டில் ஏற்றி நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புதான் தண்டனையாகும்.

தண்டனையில், சிறைத் தண்டனை இவ்வளவு நாள்கள் இருக்க வேண்டும், அபராதம் இவ்வளவு விதிக்கவேண்டும் என்ற கோட்பாடு கிடையாது. ஒரு பைசா அபராதம் விதித்தாலும் அபராதம் தான். ஒரு நாள் சிறையில் அடைத்தாலும் அது சிறைத் தண்டனை தான். தண்டனை வழங்காத சட்டம் சக்கைப் போன்றது. அது எவ்வளவுதான் கட்டுப்பாடு விதிமுறைகளைக் கொண்டிருந்தாலும் குற்றச் சட்டமாகாது.

ஆனால் குற்றச்சட்டம் தெளிவாக வரையறை செய்யப்படாத அநாகரிக காலத்திலும் இன்னும் கல்வியறிவில்லாத மலைப்பகுதிகளில் நாகரீகமற்று வாழும் மலை ஜாதியினரும் குறிப்பிட்ட செயல்களுக்குக் குறிப்பிட்ட தண்டனைகளை வழங்கிவருகின்றனர்கள். இந்தச் சூழ்நிலையில் தண்டனையைக் கொண்டுதான் குற்றத்தை அறிந்து கொள்ள முடியும். அவைகள் எழுத்து வடிவத்தில் இல்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும்.

நீதிமன்றத்தில் குற்றவாளி (criminal) என்று தீர்ப்பு வழங்கி விட்டாலே தண்டனை அளித்ததற்குச் சமமாகும். சில வேளைகளில் நீதிமன்றங்கள் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கலாம். ஆனால் அவனுக்குத் தண்டனை அளிக்காமல் எச்சரிக்கை செய்து, விடுதலை அளித்துவிடலாம். இதுவும் நடைமுறையில் உண்டு. இதற்கு எச்சரிக்கை விடுதலை (admonition) என்று பெயர்.

தற்சமயத்தில், கடுமையான தண்டனை வழங்கும் முறை மாறி வருகின்றது. ஆதியில் இருந்ததைப்போல இன்று இல்லை. சிறைத் தண்டனைக்குப் பதில் அபராதம் விதிக்கலாம் என்ற கருத்து அதிகமாகப் பரவி வருகின்றது.

இளங் குற்றவாளிகளை (juvenile delinquents) விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றத்திற்கு இளங்குற்ற நீதிமன்றம் (Juvenile Courts) என்று பெயர். இளங்குற்றவாளிகள் புரியும் செயல்களைக் 'குற்றம்' (Crime) என்று பெயரிடுவதில்லை. இளங்குற்ற நீதிமன்றம், இளங் குற்றவாளிகளை விசாரணை செய்தாலும் 'இளங் குற்றவாளி' என்றோ நிரபராதி (innocent) என்றோ தீர்ப்பு வழங்காது. இளம் பருவத்திலேயே குற்றவாளி என்ற பழிச்சொல்லை, கறையை (stigma) அவர்களின் மீது சுமத்துதல் கூடாது என இளங்குற்ற நீதிமன்றம் கருதுகிறது. குற்றவாளிகளை தண்டிப்பதைவிட அவர்களின் உள்ளத்தை மாற்றி நல் வழியில்

செல்லத் தூண்டுவதே நீதிமன்றத்தின் முக்கிய நோக்கமாக அமைகிறது.

இவ்வாறு, இளங் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்காமல் சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொண்டாலும், இளங்குற்றவாளிகள் செய்த செயல்கள் அனைத்தும் குற்றச்சட்டத்தால் தடுக்கப்பட்டவையேயாகும்.

அதேபோன்று, ஆக்கத் தொழில் (manufacturing), வணிகத் தொழில் (commerce), வேளாண்மைத் தொழில் (agriculture) மற்றும் இதரத் தொழில்களை ஒழுங்குபடுத்துவதற்காக மத்திய, மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றுகின்றன. இந்தச் சட்டங்களால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் மரியாதைக் குரியவர்களாகவும், பெரும் செல்வந்தர்களாகவும் சமுதாயத்தில் முக்கிய பிரமுகர்களாகவும் விளங்குவார்கள். ஆகவே, இவர்களைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் அவர்களுக்கு ஏற்றமாதிரி அமைத்துவிடுகின்றனர். அதாவது பாராளுமன்றமும், சட்டமன்றமும் இவர்களின் தகுதிக்கு ஏற்ப குற்ற நடைமுறைச் சட்டத்தையும், சட்டத்தையும் அமைத்துள்ளார்கள். மேற்சொன்ன செயல்களை மீறுவது குற்றமேயென்றாலும், அவர்கள் குற்ற நீதிமன்றத்தில் அபூர்வமாகத்தான் விசாரணை செய்யப்படுவார்கள். அல்லது நேர்மை நெறிமன்றத்தில் (Equity Court) விசாரணை செய்யப்படுவார்கள். அல்லது ஆட்சி ஆணைக்குழுவின் முன்பு (Administrative Commissioner) விசாரிக்கப்படுவார்கள்.

இந்தக் குற்றவாளிகளுக்குச் சிறைத்தண்டனை விதிப்பதைக் கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்துவார்கள். இக் குற்றவாளிகளுக்குப் பெரும்பாலும் அபராதம் மட்டும் விதிக்கப்படும். அதிலும், முதல்முறை குற்றவாளிகள் இரண்டாம் முறை குற்றவாளிகள், மூன்றும் முறை குற்றவாளிகள் என தரம்பிரித்து அதற்கேற்பத் தான் தண்டனை விதிக்கப்படுகின்றது. முதல் முறை குற்றவாளியாக இருந்தால், வெறும் அபராதம் மட்டும் விதிக்கப்படும். இரண்டாம் முறை குற்றவாளியாக இருந்தால் அபராதத்துடன் குறைந்த அளவு சிறைத் தண்டனையும் அளிக்கவேண்டும் என்று சட்டத்தில் வரையறுத்துள்ளார்கள். மேலும், இம்மாதிரியான குற்றவாளிகள் தினமும் குற்றம் செய்ய வாய்ப்புண்டு. ஆனால் அவர்களை தினமும் விசாரணை செய்வதும் இல்லை. எப்பொழுதாவது ஒரு முறைதான் அவர்கள்மீது குற்ற விசாரணையைத் தொடுப்பார்கள்.

இவர்களைக் கட்டுப்படுத்த முதலில் வேறுபல வழிமுறைகளைக் கையாளுவார்கள், அதாவது அவர்களின் தொழில் உரிமையை

ரத்து செய்வது அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பது அதற்கு விளக்கங்கள் கோருவது போன்றவைகள்தாம் இவ் வகையைச் சேர்ந்தவை. கடுமையாகவும் அவர்கள் எச்சரிக்கப் படுவார்கள். இவைகளையும் மீறினால்தான் அவர்கள்மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் இவர்கள் குற்றம் என்ற கறைபடாமலும் சமுதாயத்தில் முக்கியத்துவம் குறையாமலும் வாழ வசதி அளிக்கப்படுகிறது. நாட்டிற்கு எதிராகப் புரியும் செயல்கள் எல்லாம் குற்றங்கள் என்றும் தனிப்பட்ட நபருக்கு எதிராகப் புரியும் செயல்கள் எல்லாம் உரிமைத் தீங்கு (Tort) என்றும் அழைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட செயல் குற்ற மாகவும் (Crime) இருக்கலாம். உரிமைத் தீங்காகவும் விளங்க லாம். இதை எப்படி எடுத்துக் கொள்வது என்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

எடுத்துக்காட்டாக, ஒருவன் மற்றொருவனைத் தாக்க முனைகிறான் (Assault) என்று வைத்துக் கொள்வோம். இதில் தாக்கப்பட்டவன் (Victim) உரிமைத் தீங்கியல் (Tort) சட்டத்தைத் தேர்ந்தெடுத்து உரிமை நீதிமன்றத்தில் (Civil Court) வழக்கைத் தொடுத்தால் அந்த நீதிமன்றம் தாக்கப்பட்டவனுக்கு ரூ. 500 இழப்பீடாகக் (Damages) கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கலாம். அவனே குற்ற நீதிமன்றத்தில் வழக்கைத் கொடுத்தால், குற்றவாளிக்கு ரூ. 500 அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கக் கூடும். இதில் முன்னது தீர்ப்பில் வழங்கப் பட்டது தண்டனை அல்ல, இழப் பீடாகும் (Damages). பின்னது தீர்ப்புதான் தண்டனையாகும். முன்னதில் தனி நபர்கள் வாதி பிரதிவாதிகளாக உள்ளவர்கள். பின்னதில் வாதி அரசாங்கமும் பிரதிவாதி குற்றவாளியுமாகும். இந்த வேறுபாடுகளைப் படிக்காத பாமரமக்களுக்கு விளங்க வைப்பது பெரிதும் கடினம் தான்.

தனி மனிதன் புரியும் குற்றம் சமுதாயத்திற்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் புரிந்த குற்றமாகக் கருதப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் தனி மனிதன் சுயாட்சியுள்ளவனாக (Autonomous) விளங்குகின்றான்.

தற்காலச் சமுதாயம் வளர்ச்சி அடைந்திருந்த போதிலும், குற்றச் சட்டத்திற்கும் உரிமைத் தீங்கிற்கும் (Tort) உள்ள வேறு பாடுகள் தெள்ளத் தெளிய வரையறுக்கப்படவில்லை என்பது வெளிப்படை. தீங்கியல் சட்டமும் (Tort) குற்றச் சட்டமும் (Cirimінal Law) நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. புதிய புதிய குற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

அவைகளைத் தடுக்க, புதிய புதிய குற்றச் சட்டங்களும் இயற்றப் பட்டு வருகின்றன. குற்றச் சட்டத்தின் நடைமுறைகள் தெளிவாகவும் எளிமையாகவும் காணப்படுகின்றன. ஆனல் தீங்கியல் சட்டத்தைப் பயன்படுத்தும்போது அதன் நடைமுறைகள் மாறுகின்றன. குற்றக் சட்டத்தைப் பின்பற்றினல் தாக்கப் பட்டவருக்கு (Victim) அதிக சிரமமில்லாமல், செலவில்லாமல் அரசாங்கமே வழக்கை நடத்திக் குற்றவாளியைத் தண்டிக்கிறது. ஆனல் தீங்கியல் சட்டத்தைப் பயன்படுத்தினல் அவ்வாறில்லை. குற்றச் சட்டத்தின் மூலம் விசாரணை செய்யும்போது, தாக்கப் பட்டவன் (Victim) அவசியம் சான்று கூறவேண்டும். தாக்கப் பட்டவன் குற்றவாளியிடத்தில் முன்கூட்டியே பணம் வாங்கி விடுவதனல் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கெதிராகச் சான்று கூற மறுத்துவிடுகிருன் என்று குற்றஞ்சாட்டும் வழக்கறிஞர்கள் (Prosecutions) புகார் கூறுகின்ருர்கள்.

சட்டம் என்ருல் என்ன என்ற வினவைப் பவுண்டு (Pound) என்பவர் எழுப்பி அதற்கு அவரே சட்டத்திற்குப் பொருள் விளக்கம் தரமுடியாது என்று பதிலளிக்கிருர். நடைமுறையில் உள்ள சட்டம் அடிக்கடி மாறும் இயல்புடயது. நேற்று குற்றமாக இருந்த ஒரு செயல், இன்று குற்றமற்றதாக அறிவிக்கப் படலாம். இது அரசாங்கத்தின் விருப்பத்தைப் பொறுத்து அமைந்திருக்கும். பிறகு அதுவே சட்ட வல்லுநர்களின் அறிவாக விளங்கும். ஒரு சமயத்தில் ஒரே சீராக அமைந்திருக்கும். பிறிதொரு சமயத்தில் நீதிமன்றத்தின் விருப்புரிமைக்கும் இடமளிக்கும். ஒரு சமயத்தில் வெளிப்படையாகக் குறிப்பிட்டுத் தடை செய்யும், பிறிதொரு காலத்தில் பொதுவாகத் தடைசெய்யும். இப்படி இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் சட்டம் மாறியும் மாற்றப்பட்டும் வருகின்ற காரணத்தினல் ஒரு காலத்தில் இருந்த சட்டத்தையே மற்ருெரு காலத்திற்குப் பயன்படுத்த முடியாது, அவைகளைச் சட்டம் என்று கூறமுடியாது. சட்ட மாணவர்களும் சட்ட வல்லுநர்களும் படிப்பதற்காகவும் ஆராய்ச்சிக்காகவும் மட்டும் பயன்படும்.

முன்சொன்ன அரசியல் தன்மை வரையறுத்தல், ஒருமைப் படுத்துதல் அல்லது ஓருருப் படுத்துதல் ஆகியவைகளைவிட தண்டனை வழங்குதல் குற்றச் சட்டத்தின் முக்கிய காரணக் கூருகும். ஒருமைப்படுத்துதல் அல்லது ஓருருப்படுத்துதல் இல்லாமல் இருக்கலாம். ஆனல் தண்டனை வழங்குதல் இல்லையென்ருல் அது குற்றச் சட்டமாகாது. இந்தியாவில் எல்லாச் சட்டங்களும் ஓருருப்படுத்தப்பட்டுள்ளதா என்ருல் அப்படி

யிருப்பதாகத் தோன்றவில்லை. குறிப்பாக இரு துணைமணம் (Bigamy) என்ற குற்றத்தை எடுத்துக் கொண்டால் இது முஸ்லிம்களுக்குப் பொருந்தாத சட்டமாக இருக்கிறது. அவர்களின் மதப்படி ஒருவன் நான்கு மனைவிகளை ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொள்ளலாம். ஐந்தாவது மனைவியைத் திருமணம் செய்வதைத்தான் முஸ்லிம் சட்டம் தடை செய்கிறது. ஆகவே, இந்திய குற்றச் சட்டம் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தவில்லை. மற்ற பிரிவினர்களைக் கட்டுப்படுத்துவதாலும் அதை மீறினால் தண்டனை வழங்கப்படுவதாலும் குற்றச் சட்டமாகத் திகழ்கின்றது.

தோற்றத்தின் அடிப்படையைக் கொண்டு குற்றச் சட்டத்தின் இயக்கத் தன்மையை ஆராய்தல் (Nature of criminal law from the genetic point of view)

சமுதாயக் கட்டுப்பாட்டின் வளர்ச்சியால்தான் குற்றச் சட்டம் தோன்றியது எனப் பல கருத்தாய்வுத் தொகுதிகள் (Theories) கூறுகின்றன. இதைப்பற்றி முன்னமே தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இங்கு, குற்றச் சட்டத்தின் வளர்ச்சியைப்பற்றிப் பல்வேறு கொள்கைகள் என்ன கூறுகின்றன என்பதைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

முதற் கொள்கை (Classical Theory)

தீங்கியல் (Tort) சட்டத்திலிருந்துதான் குற்றச்சட்டம் (Criminal Law) தோன்றியிருக்க வேண்டும் என்று கூறுகின்றது இக்கொள்கை. இது முற்றிலும் உண்மை என்றே கொள்ளலாம். தாக்கப்பட்டவன், தாக்கியவனைத் திருப்பி அடித்துவிடுகிறான். திருடப்பட்டவன் திருடனைப்பிடித்து திருடிய பொருளைத் திருப்பி வாங்கிக் கொள்கிறான். அவ்வாறு திரும்பப்பெறாத பொருளுக்கு இணையாக வேறு பொருளையோ பணத்தையோ ஈடாகப் பெற்றுக் கொள்கின்றான். ஆகவே தாக்கப்பட்டவனே, திருடப்பட்டவனே வலியச் சென்று தனக்கு நேர்ந்த இன்னல்களுக்கும் இழப்புக்கும் பரிகாரம் தேடிக் கொள்ளவேண்டும். இவ்வாறு தனி மனிதன் பரிகாரம் தேடிக்கொள்வது என்றால் அது தீங்கியல் சட்டத்தின் தன்மையாகக் கருத இடமுண்டு. இதில் மற்றவர்கள் தலையிட வழியில்லை. குடும்ப அங்கத்தினர் பாதிக்கப்பட்டால், குடும்பம் தலையிட்டு அதற்குப் பரிகாரம் தேடியது. குடும்பம் பாதிக்கப்பட்டபோது, குழு தலையிட்டு குடும்பத்திற்கு வேண்டிய பரிகாரம் கண்டது. குழுவிற்கே தீங்கு ஏற்பட்டபோது அந்தச் சமுதாயமே இணைந்து பரிகாரம் காண முற்பட்டது. அதன் முயற்சியின் வளர்ச்சிதான் குற்றச்சட்டம். தனி மனிதனுக்கு ஏற்பட்ட தீங்காக

நினைத்திருந்த நிலைமை மாறி தனி நபருக்கு ஏற்பட்ட தீங்கு சமுதாயத்திற்கு ஏற்பட்ட தீங்காக கருதப்பட்டது கால மாற்றத்தால்.

இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது? பழிவாங்குபவன் தன் பழிவாங்கும் நோக்கத்தை, கருத்தை மற்றவர்களுக்கு வெளிப் படுத்தியதனுலும் பழிவாங்குபவன் எதிரியைப் பழிவாங்கும் முன்பு சமுதாயத்தினிடம் முறையிட்டதனுலும், சமுதாயம் அதை எண்ணிப்பார்த்து அதற்குப் பரிகாரம் தேடியதனுல், பிறகு ஒவ்வொருவரும் பழிவாங்கும் முன்பு சமுதாயத்திடம் அனுமதி பெற வேண்டும் என்ற காரணத்தினுலும் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி சமுதாயத்தினிடம் முறையிட்டதனுலும் அதே நேரத்தில் குற்றவாளிகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டதனுலும் குற்றவாளிகள் தாங்கள் இழைத்த தீங்கிற்கு அதிகமாகத் தண்டிக்கப் பட்டுவிட்டதாகச் சமுதாயத்திடம் முறையிட்டதனுலும் சமுதாயமானது சில விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டது. அதாவது பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கும் முன்பு சமுதாயத்திடம் அனுமதி பெறவேண்டும். குற்றவாளிகளுக்கு எந்த அளவிற்குக் காயத்தை உண்டாக்கி, தன் பழிவாங்கும் உணர்ச்சியை தீர்த்துக் கொள்ளலாம், அதை எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும், எந்தெந்த முறையில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும், எந்தெந்த இடத்தில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் மேலும் அந்த வழக்கைப் பற்றிய குண நலன்கள் பற்றிய பொதுமக்களின் கருத்து, தாக்கப்பட்டவனுக்காக உதவி செய்பவர்களின் பங்கு, கடமை, குற்றவாளிகளுக்காக உதவி செய்பவர்களின் கடமை, பங்கு போன்ற பல கட்டுப்பாட்டு விதிமுறைகள் வரையறுக்கப்பட்டன. அவைகளே காலத்தால் குற்றச் சட்டமாகவும் குற்ற நடைமுறைச் சட்டமாகவும் மாறின.

இந்தக் கொள்கையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. தனி நபருக்கு எதிரான குற்றங்களை மட்டும் கட்டுப் படுத்தி அவைகளுக்கு வரையறை வழங்கியது என்பதற்குத் தீங்கியல் சட்டம் ஆதாரமாக அமைந்தது எனக் கொள்ளலாம். ஆனல் சமுதாயத்திற்கு எதிரான குற்றங்கள் எப்படி வரையறுக் கப்பட்டன என்பதற்குப் போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, நாட்டுத் துரோகக் குற்றம் (Treason) வேட்டையாடும் விதிமுறைகள் (Hunting Rules) கடவுளின் கோபத்தைத் (Sacrilege and Witchcraft) தூண்டுதல் போன்ற குற்றங்கள் சமுதாயத்திற்கு நேரடியான ஆபத்துள்ள குற்றங்கள். இவை தீங்கு இயல் சட்டம் மூலம் குற்றச்சட்டமாக மாறியது

என்பதற்குப் போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை. ஆகவே நாம் மற்ற கொள்கைகளையும் ஆராய்தல் வேண்டும்.

இரண்டாவது கொள்கை (Second theory)

பகுத்தறிவின் ஆற்றலால், மக்கள் இணைந்து வாழக் கற்றுக் கொண்டனர். பகுத்தறிவின் வளர்ச்சியால் சமுதாயம் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியடைந்த சமுதாயத்திலிருந்து குற்றச் சட்டம் பிறந்தது என்பது இரண்டாவது கொள்கை. அதாவது தீங்கு நடந்தவுடனேயே குற்றவாளிமீது நடவடிக்கை எடுத்து வந்தது சமுதாயம். அதே தீங்கை மீண்டும் மீண்டும் செய்யாமலிருக்க தக்க ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொண்டது. ஆகவே மக்களின் உணர்ச்சி வேகத்தால் சட்டங்கள் இயற்றப் படுகின்றன என்று பொருள் கொள்ளப்படுகிறது. சில செயல்கள் சமுதாயத்திற்கு எதிராகவும் அமைந்து விடுகின்றன. ஆகவே, அந்தச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் தடை செய்யவும் சட்ட மன்றத்தின் உதவி தேவைப்படுகிறது. உடனடியாகச் சட்ட மன்றமும் சமூகத்திற்குப் பாதுகாப்பை அளிக்கின்றது.

பேராசிரியர் ராபர்ட் பார்க் (Prof. Robert Park) தமது உரையில், "அமெரிக்காவில் நாம் எப்பொழுதும் சட்டங்களை இயற்றிக்கொண்டே இருக்கின்றோம். நாம் எழுந்து நம் சக்திக்கு ஏற்றவாறு நடனமாடுகிறோம். சட்டங்கள் உணர்ச்சியின் வேகத்திற்கு ஓய்வு அளிக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த உண்மையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார், இந்த முறையில்தான் சில குற்றச் சட்டங்கள் இயற்றப் படுகின்றன என்பது வெளிப்படையாகும். ஆனால் இந்த இரண்டாவது கொள்கையில், எப்படிக் குற்றச் சட்டம் வளர்ச்சியடைந்தது என்பதற்குக் கொள்கை அடிப்படையில் போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை.

மூன்றாவது கொள்கை (Third Theory)

பழங்குடிமக்கள் அவர்களுக்கே உரிய நடைமுறை விதிகளைப் (Conventions) பின்பற்றி வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அந்த நடைமுறைப் பழக்கம்தான் வாழ்க்கையின் வழக்கமாகவும், மரபாகவும் (Customs) வளர்ந்து உறுதி பெற்றது. இதன் அடிப் படையில் அறம் வளர்ந்தது. பிறகு வழக்கத்தை, மரபை மீறுகிறவர்களைச் சமுதாயத்தின் பகைவர்களாகக் கருதப்பட்டு வந்தது. அவர்களைக் கட்டுப்படுத்தவும் செய்த செயல்களுக்குப் பரிகாரம் தேடவும் மக்கள் ஆராய்ந்தார்கள். அதன் முடிவாக

சமுதாயத்திற்குப் பொருந்தாத, பிணக்கான செயல்கள் எவை எவை என அறிந்து அவைகளைச் சமுதாயத்தின் விதிமுறைகளாக வகுத்தார்கள். அந்தச் சமுதாயத்தின் விதிமுறைகளை மீறுபவர்கள் சமுதாயத்தின் பகைவர்கள், கெட்டவர்கள், குற்றவாளிகள் என்று கருதினார்கள். ஆகவே, அதற்குப் பரிகாரமாக அவர்கள் இன்னல்களை அனுபவிக்க வழி வகுத்தார்கள். சமுதாயத்தின் விதிமுறைகள் அல்லது ஒழுங்குமுறைகள்தான் குற்றச் சட்டம் எனவும் அதற்குப் பரிகாரம்தான் தண்டனை எனவும் அழைக்கப் பட்டது. நாட்டு மரபுச் சட்டம் (Common Law) இதன் அமைப் பைக் கொண்டது. பழங்காலச் சட்டத்தைப் பற்றியும் தற்கால நாட்டு மரபுச் சட்டத்தைப் பற்றியும் (Modern Common Law) அறிவதற்கு இந்த அறிக்கை நடுநிலைமையாக இருப்பதுடன் உண்மையான விளக்க உரையாகவும் விளங்குகின்றது. ஆனால் இரயில்வே (Railways) சட்டம், தொழிற்சாலைகள் வழி முறைகள் (Factories) சட்டம் தானியங்கிச் சட்டம் (Automobiles Act) தொலைக்காட்சி (Television) வரிகள் (Taxes) தொடர்பான சட்டங் கள், சாலை விதிகள் ஆகியவைகளும் இன்னும் தற்காலத்தில் இயற்றிய சட்டங்களுக்கும் மேற்சொன்ன விளக்கங்கள் உண்மை யான விளக்க உரையாகாது.

நான்காவது கொள்கை (Fourth Theory)

நான்காவது கொள்கையில், முன்பே குறிப்பிட்டபடி பல குடும் பங்கள், பல குழுக்கள் இணைந்து வாழ்வதுதான் சமுதாயமாகும். ஆகவே அந்தச் சமுதாயத்தில் பலவித மக்களைக் கொண்ட குழுக்கள் அமைந்திருப்பதனால், அவர்களிடையே பல வேறுபாடு களும் முரண்பாடுகளும் வளர்ந்து வந்தன. இந்த முரண்பாடு அல்லது வேறுபாடு அறிவின் வளர்ச்சியாலும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது சமுதாயத்தின் முன்னேற்றத்தாலும் உண்டாகி இருக் கலாம். இதனால் சமுதாயத்தில் சண்டை சச்சரவு, குழப்பம் உண்டாயிற்று. இந்தச் சண்டையின் அல்லது முரண்பாட்டின் அடிப்படையில்தான் குற்றச் சட்டம் பிறந்தது என்று கூறுகிறது. நான்காவது கொள்கை குழுக்களிடையே போட்டியும் பகை மையும் வளர்ந்து விட்டதனால் ஒரு குழு மற்றொரு குழுவை அடக்கி ஒடுக்கச் சொந்த நோக்கத்தோடு இயற்றப்பட்டதுதான் குற்றச் சட்டம் என்பது கருத்தாகும்.

சட்டத்தை நிறைவேற்ற ஆர்வம் கொண்ட ஒரு குழு தனக்குச் சாதகமாக அரசாங்கத்தின் பாதுகாப்பையும், ஆதர வையும் நாடுகின்றது. இந்தக் குழுவின் செயல் போட்டிக் குழு விற்கு எதிராக அமைந்து விடுவதுடன் அவர்களின் செயல்களும்

குற்றங்களாக மாறி விடுவதுடன் அவர்களும் குற்றவாளிகளாக மாறிவிடும் சூழ்நிலைக்கு உள்ளாகிவிடுகின்றார்கள். இந்தக் கருத்தை ஆராய்ந்தால், தற்காலத்தில் எல்லா வகுப்பினர்களின் தனிச் சிறப்புப் பண்பு என்பது தவறான செயல்கள் என்று தெளிவாகின்றது. மேல் நிலையில் உள்ளோர்கள் தங்களின் திறமைகளினால் மதிநுட்பத்தோடு தவறுகளைப் புரிகின்றார்கள். இதனால் குற்றங்கள் வெளிப்படுவதில்லை. சமுதாயத்தின் அடிமட்டத்தில் முழு உரிமையற்ற நிலையில் வாழும் மக்கள் எதையும் வெளிப்படையாகவே செய்கின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கள் பொருளாதார வசதியின்றியும் மதிநுட்பம் இல்லாதவர்களாகவும் விளங்குவதால்தான். அரசியலில் மேல் வகுப்பினருக்கு அதிகச் செல்வாக்கு உண்டு. ஆகையினால் தாழ்ந்த நிலையில் வாழும் மக்களின் தவறான செயல்களை எளிதில் தடை செய்துவிடுகின்றார்கள். சட்டங்களுக்குப் பொருள் வரையறை வழங்கப்பட்டு அவற்றை நிறைவேற்றியும் வருகின்றார்கள். இதில் மேல் நிலையில் உள்ளவர்களின் பல தவறான செயல்கள் சட்டத்தில் இடம் பெறவில்லை. இவைகளை நோக்கும்போது சட்டம், முரண்பாட்டினால் பகைமையால் நிறைவேற்றப்படுகின்றது அல்லது பிறக்கின்றது என்பது தெளிவாகும். இது மூன்றாவது கொள்கைக்கு முரண்பட்ட கருத்தாக விளங்குகிறது. மற்றக் கொள்கைகள் (Theor es) போலவே இக் கொள்கையும் எப்படிச் சட்டம் நிறைவேற்றுகின்றார்கள் என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. ஆனால் சட்டத்தின் மற்றக் கருத்துகளுக்குப் போதிய விளக்கம் அளிக்கத் தவறிவிட்டது.

நாட்டில் சட்டங்கள் அடிக்கடி நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் 1900ஆம் ஆண்டு முதல் 1930ஆம் ஆண்டு வரையில் ஒரு குறிப்பிட்ட குழுக்களிடையே தோராயமாக 40 சதவீதம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அத்துடன் கால் பந்தாட்ட விதிகள், சூதாட்ட விதிகள், சீட்டாட்ட விதிகள், தொழிற்சங்க விதிகள் போன்ற விதிமுறைகளும் மற்றச் சட்டங்களும் இயற்றப்பட்டன. 1900-லிருந்து சுமார் 5,00,000 மாநிலச் சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன என்று ஹேரி எல்மர் பர்னீசு, நீக்லே டீட்டேர்ஸ் (Harry Elmer Barnes and Negley K. Teeters) ஆகியவர்களின் ஆராய்ச்சியிலிருந்து அறிகின்றோம். அமெரிக்காவில் மூர் (Mores) இனத்தவர்கள் எளிமையானவர்களாகவும், மிகவும் ஏழையாகவும், அவர்களுக்குள்ளும் சமுதாயத்திற்குள்ளும் அதிக முரண்பாடு உடையவர்களாகவும் இருந்து வந்ததால் சட்டங்கள் குவிந்துவிட்டன. சட்டங்கள் இயற்ற மூர் இனத்தவரின் உதவி தேவைப்பட்டதே இல்லை. அதேபோலச் சட்டத்தைக் கட்டுப்படுத்துவதிலும் அவர்கள் திறமையற்றிருந்

தனர். மூர் இனத்தவரின் எண்ணிக்கை போதுமான அளவு இருக்கின்றபொழுது சட்டம் அவர்களுக்குத் தேவையற்ற தாகவும் எண்ணிக்கை குறைகின்றபோது அந்தச் சட்டம் பயனற்றதாகவும் ஆகிவிடுகின்றது.

குற்றச்சட்டத்தின் தோற்றம் பற்றி பல்வேறு கொள்கை களுடன் தொடர்பு படுத்தி ஆராய்ந்து பார்த்தாலும், முடிவான ஒரு கருத்துக்கு வருவது கடினமாக இருக்கிறது. சமுதாயத் தையும் குற்றச் சட்டத்தையும் இணைத்து மேலும் பல ஆராய்ச்சிகள் நடத்தப்படவேண்டும். அப்போதுதான் குற்றச் சட்டத்தின் தோற்றுவாயை நாம் அறிய இயலும். மருத்துவத் துறையில் ஓயாமல் அதன் தோற்றுவாய், வகைகள், தணிப்பு, தடுப்பு முறைகள் ஆகியவைகளைக் குறித்து, தொடர்ந்து ஆராய்ந்து வருவதால், அதில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சட்டத்தைப்பற்றியும் அதன் தோற்றுவாயைப்பற்றியும் விரிவான ஆராய்ச்சி இல்லை. செய்யப்படுகின்ற ஆராய்ச்சிகளும் சட்டம் என்றால் என்ன என்பதைப் பற்றியதாகத்தான் இருக் கிறது. இந்த வழிக்கு மாருக இருவர் மட்டும் விதிவிலக்காக அமைந்துள்ளார்கள். திரு. ஜெரோம் ஹால் (Jerome Hall) என்பவர் 'தற்கால சமுதாயத்தில் திருட்டுக் குற்றம் வளர்ந்த விதம்' என்பது பற்றியும் திரு. லியோன் ராத்ஜினேவிச்ஸ் (Leon Radzinowicz) என்பவர் 'இங்கிலாந்தில் குற்றச் சட்டம் வளர்ந்த விதம்' என்பது பற்றியும் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். இவர்களைப்போன்று மேலும் பல சட்ட வல்லுநர்கள் சட்டத்தின் தோற்றுவாயைக் குறித்து ஆய்ந்து உண்மையான காரணத் தைக் கண்டறிய முயல வேண்டும்.

குற்ற வகைகளின் பண்பு (The Differential of Crime)

குற்ற வகைகளின் பண்பு என்பது குற்றத்தின் ஒரு வகையை மற்ற வகைகளினின்றும் பிரித்துக்காட்டும் வேறுபாடுகளைக் குறிப் பதாகும். குற்றச் சட்டத்தில் குறிப்பிட்ட சிலபல குற்றங்களுக்கு மட்டும் வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது திருட்டுக் குற்றம், கொலைக்குற்றம், வன்புணர்ச்சி, கொடுங்காயங்கள் உண் டாக்கும் குற்றம், ஆட்கடத்தல் முதலியனவும் மற்றும் பலவும் குற்றங்களாகும். சட்ட வல்லுநர்கள் இந்தக் குற்ற வரையறை களினின்றும் பொதுவான கோட்பாடுகளைப் பெறமுடிகிறது. இந்தப் பொதுவான கோட்பாடுகள் எல்லா வகைக் குற்றங் களுக்கும் பொருந்தும். இதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட நடத்தை, ஒழுக்கம் குற்றமா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும். குற்றச் சட்டத்தின் அமைப்பின் பொதுவான குணங்

களாவன : அரசியல் தன்மை (Politicality) வரையறுத்தல் (Specificity) ஒருருறுத்தல் (Uniformity) தண்டனை வழங்குதல் (Penal Sanction) ஆகியவைகளாகும். இவைகளுடன் குற்ற அறிக்கைகளேயும் ஆராய்ந்து அறிதல் வேண்டும். அவ்வாறு ஆராயும்போது குற்றத்தின் ஆக்கக் கூறுகள் தண்டனை வழங்குதல் ஆகியவை குற்றத்தின் சிறப்பான இயல்புகளாக விளங்கும். செயல் (Act) அல்லது செய்யாமை (Omission) இவையிரண்டும் குற்றங்களாகவே கருதப்படும். இங்கு, செயல் என்பது குறறச் செயல் (Actus reus). செய்யாமை (Omission) என்பது ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று சட்டம் கட்டாயப்படுத்தும் போது அதைச் செய்யாமல் ஒதுக்குவதுதான் செய்யாமையாகும். சிறை அதிகாரி கைதிகளுக்கு உணவு அளிக்கவேண்டும். ஆனால் சிறை அதிகாரி அவ்வாறு உணவு அளிக்காமல் தம் கடமையை வேண்டுமென்றே ஒதுக்கிவிட்டால், அதன் காரணமாக அந்தக் கைதி பட்டினியால் இறக்க நேர்ந்தால், அந்தச் சிறை அதிகாரி கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பாகின்ருர். இங்கு, சிறை அதிகாரி கைதியைத் தம் கையால் கொலை செய்ய வில்லை எனினும் கடமையைச் செய்யத் தவறியதால் கொலைக் குற்றத்திற்குப் பொறுப்பேற்க வேண்டியவராகிருர் எனவே செயல் என்பது குற்றத்தைச் செய்யக் கருதியே செய்யப்படும் குற்றங் களைக் குறிக்கும். ஆக இரண்டும் குற்றம்தான். இங்கு, குற்றத்தின் ஆக்கக் கூறுகள் மாறுபட்டாலும் இரண்டிற்கும் பொதுவான சிறப்பு இயல்பு '' தண்டனை தான் ''.

குற்றத்தின் பண்புக் கூறுகளைக் கீழே காணலாம் :

(1) சமுதாயத்தின் விதிமுறைகளை மீறுதல் அல்லது சமுதாயத்தைத் தாக்குதல் அல்லது சமுதாயத்தின் விருப்பத்திற்கு மாருகச் செயல்படுதல் ஆகியவை குற்றமாகும். இதில் குற்ற மனம் (Mensrea) குற்றச் செயல் (Actus reus) இரண்டும் இணைந்து தான் குற்றமாகும். ஒன்றில்லாமல் மற்ருென்று குற்றமாகாது. குற்ற மனம் என்பது மனத்தால் பிறர்க்குத் தீங்கு (Harm) செய்ய வேண்டும் என்று எண்ணிச் செயல்படுவதாகும். கொலை செய்ய கத்தி வாங்குதல், துப்பாக்கி வாங்குதல், விஷம் வாங்குதல் போன்றவை குற்றமாகாது. ஒருவன் கொலை செய்யும் நோக்கத் தோடு தன் வீட்டில் கத்தியோ, கைத்துப்பாக்கியோ வைத்திருந் தாலும் அது குற்றமாகாது. ஏன் என்ருல் அவன் தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளலாம். அல்லது காய் நறுக்கக் கத்தி வாங்கியதாகக் காரணங் காட்டலாம். அல்லது பயிர்ப்பூச்சிகளை ஒழிக்க விஷம் வாங்கியதாகவோ அல்லது வேட்டையாடத் துப்பாக்கி வைத் திருப்பதாகவோ தன் எண்ணத்தை மாற்றிக் கூறலாம். எனவே

தான் பிரெய்ன் (Brain) என்ற நீதிபதி கூறினர், "மனிதனின் உள்ளத்தைப் பிசாசுகள்கூட அறிய முடியாது". ஆகவேதான் வெறுங் குற்றமனம் குற்றமாகக் கருதப்படுவதில்லை. அதே போன்று குற்ற மனமின்றி, குற்றம் செய்தாலும் அது குற்றமாகாது. பைத்தியக்காரன் (Insane Person), சிறுகுழந்தை (Child), குடிகாரன் (Drunkard) ஆகியோர் கொலை செய்தாலும் அது குற்றமாகாது. காரணம் அவர்களிடம் குற்ற மனம் இல்லை. அதாவது அந்தக் குற்றத்தை அவர்கள் வேண்டுமென்றே செய்யவில்லை. மேலும் அவர்கள் செயல் குறறமாகவோ அல்லது தவருகவோ அவர்களுக்குப் புலப்படுவதில்லை.

(2) தீங்கு (Harm) செய்யக்கூடாது என்று சட்டப்படி தடை விதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுவும் தண்டனைச் சட்டத்தில் (Penal Laws) குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அதாவது சமுதாயத்திற்கு எதிரான எல்லாச் செயல்களும் குற்றங்களாகக் கருதப்படுவதில்லை. ஆனல் அது சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்தால் குற்றமாகும். தீங்கு, தெளிவாக தடை செய்யப்பட்டிருக்கவேண்டும். இறந்தகாலச் செயல்களை தண்டிக்கின்ற தன்மை தண்டனைச் சட்டத்திற்குச் கிடையாது. (No retroactive effect). பின்னேக்கிச் சென்ற காலத்தை அதாவது இறந்த காலத்தை உட்படுத்துகின்ற (ex post facto) சட்டங்களை இயற்றுவதற்கு சட்டமன்றத்திற்கு எப்பொழுதும் எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கிறது. உதாரணமாக இந்து மதப்படி ஒருவன் ஒன்றிற்கு மேற்பட்ட திருமணம் செய்துகொள்ளும் உரிமை இருந்தது. அது 1955ல் இந்துமதச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுவிட்டது. இதனல் ஏற்கெனவே அவ்வாறு திருமணம் செய்து கொண்டவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை. இன்று முஸ்லிம் மதப்படி நான்கு மனைவிகளை ஒரே சமயத்தில் திருமணம் செய்துகொள்ளலாம். நாளைக்குத் திடீரென்று ஒவ்வொரு முகமதியரும் ஒரு மனைவிக்குமேல் திருமணம் செய்துகொள்ளக்கூடாது, அவ்வாறு செய்தால் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டம் நிறைவேற்றப்படுமேயானல், இன்றுவரையில் திருமணம் செய்து கொண்டவர்களை நாளைக்கு நிறைவேற்றப்படும் சட்டத்தால் தண்டிக்க முடியாது. காரணம், செயல் செய்யப்படும்போது அந்தச் செயல் குற்றச் செயலாக அறிவிக்கப்படவில்லை. அது அப்பொழுது தடை செய்யப்பட்டிருக்கவும் இல்லை. இன்று இந்திய அரசியல் சட்டத்தில் (Indian Constitution) இருபதாம் பிரிவில் (Art 20) அடிப்படை உரிமைகளில் ஒன்ருக வழங்கப்பட்டுள்ளது.

(3) முதலில் குறிப்பிட்டதைப் போல செயல் அல்லது குற்ற நடத்தை அவசியம் இருக்கவேண்டும். அந்தச்செயல் கருதிய

செயலாகவும் (Intentional Act) அசட்டையான செயலாகவும் (Reckless Act) அல்லது அசட்டையான செயலின்மையால் (Inaction) தீங்கு (Harm) விளைவிக்கப்பட்டும் இருக்கவேண்டும். ஒருவன் மற்றொருவனைப் பலவந்தமாகத் துப்பாக்கி விசையிழுப்பை (Trigger) இழுக்கும்படி கட்டாயப்படுத்தினால் அதனால் யாராவது குண்டடிபட்டு இறந்துவிட்டாலும் அது கொலைக்குற்றமாகாது. ஆகவே குற்றம் தானாகவே கருதிச் செய்யப்பட வேண்டும். மற்றவர்களால் கட்டாயப்படுத்தி செய்யப்பட்டால் அந்தச் செயல் குற்றமாகாது. ஆனால் அந்தச் செயலுக்குக் காரணமானவர்கள் குற்றவாளியாகிறார்கள்.

(4) குற்ற மனம் (mensrea) இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆராய்ந்தோம். குற்றத்தின் செயல் நோக்கம் பற்றி (Motive) கவலையில்லை. அதாவது செயல் நோக்கம் (Motive) நல்லதாக இருந்தாலும் குற்றத்தைக் கருதிச் செய்தால் குற்றம் தான். எடுத்துக்காட்டாக, ஒரு தாய் தன் குழந்தைகளின் பசியைக் காணப் பொறுக்காமல் ஒரு வீட்டில் பணத்தைத் திருடி அதன் மூலம் குழந்தைகளின் பசியைப் போக்குகின்றாள் என வைத்துக் கொள்வோம். இங்கு தாயின் நோக்கம் குழந்தைகளின் பசியைப் போக்கி மகிழ்விப்பது. நோக்கம் நல்ல நோக்கம் தான். எல்லாரும் செய்யக் கூடிய கடமையும் ஆகும். ஆனால் அவளின் செயல்? 'திருடுவது' (Theft) குற்றம் என்று சட்டத்தில் தடைவிதிக்கப் பட்டிருக்கிறது. திருடினால் மூன்றாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை என தண்டனையும் குறிப்படப்பட்டிருக்கின்றது. ஆகவே தாயின் நோக்கம் நல்லதாக இருந்தாலும் அவளின் செயல் சட்டத்தால் தடுக்கப்பட்டிருப்பதால் அது குற்றமாகின்றது. மேலும் நோக்கத்தை ஆராய்ந்து அதற்குப் பிறகு ஒருவன் செய்த செயல் குற்றமா இல்லையா என முடிவு செய்யவேண்டுமென்று சட்ட மிருந்தால் எல்லாக் குற்றவாளிகளுமே உயர்ந்த நோக்கத்திற்காகத் தான் குறறங்களைச் செய்ததாக விளக்கங்கள் அளிப்பார்கள். இறுதியில் ஒரு குற்றவாளியைக் கூட குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கி, தண்டனை வழங்க முடியாமல் போய்விடலாம் அல்லவா? நீதிமன்றங்களும் குற்றவாளிகளின் நோக்கத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. ஆனால் நேரடியான நேர்முகச் சான்றுகள் (Direct Evidence) இல்லாமலிருந்தால் இந்தக் குற்றவாளி அந்தக் குற்றத்தைச் செய்யவேண்டிய அவசியம் என்ன என்று அப்பொழுது குற்றவாளியின் உள்நோக்கத்தை ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவது மரபாக அமைந்துள்ளது. உள்நோக்கமின்றியே குற்றம் செய்யவும் வாய்ப்புண்டு. அப்பொழுதும் அது குற்றம் தான். தடை செய்யப்பட்ட (Actus Reus) செயல்களைக் கருதியே (intentional) செய்வது குற்றமாகும்.

(5) குற்ற மனமும் குற்றச் செயலும் இணைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் குற்றம் என்று முன்னமேயே கூறினேம். எடுத்துக்காட்டாக காவல் துறை அதிகாரி குற்றவாளியைக் கைது செய்வதற்காக ஒரு வீட்டினுள் நுழைகின்ருர். பின்பு அந்த அதிகாரி அதே வீட்டில் உள்ள பெண்ணைக் கற்பழித்தாலோ அல்லது பணத்தைத் திருடினுலோ அவன் கற்பழித்த (Rape) குற்றத்திற்கோ அல்லது திருடிய குற்றத்திற்கோ பொறுப்பாகிருன். ஆனுல் அத்துமீறல் (Trespass) குற்றத்திற்குப் பொறுப்பாவதில்லை. காரணம் அவன் அந்த வீட்டினுள் நுழையும் போது குற்றத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு உள்ளே நுழையவில்லை. குற்றவாளியைக் கைது செய்யும் நோக்கத்தோடுதான் நுழைகிருன். ஆகவே, முதலில் அவன் வீட்டினுள் நுழையும் போது அவனிடம் குற்ற மனம் இல்லை. ஆகவே அத்துமீறல் (Trespass) குற்றத்திற்குப் பொறுப்பாவதில்லை.

(6) குற்றங்கள் எல்லாம் தண்டனைச் சட்டத்தில் அறுதியிட்டுக் கூறப்பட்டுருக்க வேண்டும். அத்துடன் சட்டத்தால் தீங்கை (Harm) தடை செய்து இருந்தால் மட்டும் போதாது. அதை மீறுகின்றவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்ற அச்சமும் கலந்திருக்க வேண்டும்.

மேற்சொன்ன குற்றவகைகளின் பண்புகள் பெரும்பாலும் குற்ற நடத்தையில், ஒழுக்கத்தில் இயற்கையாகவே அமைந்திருக்கும். அதற்குத்தான் குற்றம் என்று பெயர். குற்றத் தீர்ப்பு வழங்கும் போது இந்தப் பண்புகளைப் பொதுவாக நோக்கினுல் போதும். ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய வேண்டிய அவசியம் இல்லை. குற்ற மனமும் குற்றச் செயல் (அதாவது சட்டத்தால் தடை செய்யப்பட்ட செயல்) இணைந்திருந்தால் அங்கே குற்றம் இருப்பது தெரியும். இதைக் குற்ற வழக்கறிஞர்களும் (Criminal Lawyers) குற்றச் சட்ட வல்லுநர்களும் (Crimiual Law Theorists) ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

எல்லாக் குற்றங்களின் மூலக் கூறுகளுக்கும் பொது விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கலாம். குற்றச் சட்ட கோட்பாடுகள் (the theory of criminal law) குறுகிய கொள்கைகளைக் கொண்டவை அல்ல. காரண காரியத் தொடர்புக்கும் (logical) பின்பற்றத் தக்க குறிக்கோள் நிலைக்கும் (ideal) இடையே பொருத்தம் இல்லாமல் இருக்கலாம். இதற்கு எடுத்துக் காட்டாக குற்ற எண்ணம் (Criminal Intent) என்பது பொதுவான குற்ற மனத்தையே குறிக்கும். குற்றத்திற்கு, குற்றமனம் மிக மிக அவசியம்

என்று முன்பே கூறியிருக்கிறோம் அல்லவா? ஆனால் சில வகையான குற்றங்களுக்கு அந்தக் குற்ற மனம் (Mensrea) தேவையற்றதாகிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, கடும் பொறுப்புக் குற்றத்தில் (Strict Liability) குற்றவாளிகளின் மன நிலையைப்பற்றி எண்ணிப் பார்ப்பது கிடையாது. குற்ற எண்ணம் (Criminal Intent) அல்லது குற்றமனம் (Mensrea) இன்றியே அவன் அவனுடைய செயலுக்குப் பொறுப்பாகிறான். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டத்தை நிறைவேற்றும்போது, குற்ற மனம் (Measrea) இந்தாலும் இல்லையென்றாலும் அந்தச் செயல்கள் குற்றம் என்று சட்டத்தில் வரையறுக்கப்பட்டு விட்டதுதான் காரணமாகும். எடுத்துக்காட்டு: கலப்படமான உணவுப் பொருள்கள் விற்பது (Adulterated Food), பாலிலே நீர் கலந்து விற்றல், ஆகியவை கடும் பொறுப்புக் குற்றங்களாகும். இதில் குற்றவாளி வேண்டுமென்றே பாலில் நீர் கலந்து விற்றாலும் சரி அல்லது அவனுக்குத் தெரியாமல், மற்றவர்கள் நீர் கலந்துவிட்டிருந்தாலும் சரி அதை யார் விற்பனை செய்கின்றார்களோ அவர்களே அந்தக் குற்றத்திற்குப் பொறுப்பாகும். மேலும் வன்புணர்ச்சிக் குற்றம் (Rape) ஆட்கடத்தல் (Kidnapping) ஆகிய குற்றங்களிலும் குற்ற மனத்தைப்பற்றி ஆராய்வதில்லை. அதாவது 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண் இசைவு (Consent) அளித்ததனால் ஒருவன் அந்தப் பெண்ணை உடலுறவு கொண்டாலும் அது வன்புணர்ச்சிக் குற்றமாகத்தான் சட்டம் கருதுகிறது. குற்றவாளி, அந்தப் பெண்ணிற்கு 16 வயதிற்குமேல் இருக்கும் என உண்மையில் நம்பியிருக்கலாம். அல்லது அந்தப் பெண்ணே தனக்கு 16 வயதிற்கு மேல் ஆகிவிட்டது என்று கூறியிருக்கலாம். ஆனால் உண்மையில் அவள் வயது 16க்குள் இருந்தால் அவள் உடலுறவுக்கு இசைவு அளித்தாலும் அது சட்டப்படியான இசைவு ஆகாது. ஆகவே அவன் அவளுடைய இசைவுடன் உடலுறவு கொண்டாலும் அது வன்புணர்ச்சி (Rape) என்று சட்டம் கருதுகிறது. இந்த எடுத்துக்காட்டில், குற்றவாளிக்கு, குற்ற மனம் இல்லை என்று வாதாடினாலும், சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டிருப்பதால், அது குற்றமாகிறது. மேலும் போக்குவரத்துச் சட்டங்கள் அல்லது சாலை விதிகள் ஆகியவைகளுக்கும் குற்ற மனம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சட்டத்தை மீறினாலே குற்றம்தான். ஒருவன் சிறு குற்றத்தைச் செய்யக் கருதி, செய்தால், அதனால் பெருங் குற்றம் விளைந்தால், அவன் பெருங் குற்றத்திற்கே பொறுப்பாகிறான். எடுத்துக்காட்டாக, ஒருவன் வீட்டிற்கு தீ வைப்பதாக வைத்துக்கொள்வோம். பிறகு தீயணைப்பவர்கள் (Firemen) தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களில் ஒருவன் தீயால் இறந்துவிட்டால், தீ வைத்தவன் கொலைக் குற்றத்திற்குப் (Murder) பொறுப்

பாகிறன். இதில் குற்றவாளி வெறும் தீயிடத்தான் கருதிச் செயல் பட்டானே தவிர கொலை செய்யக் கருதவில்லை. இருப்பினும் அவன் செயலின் விளைவால் நேர்ந்த மரணத்திற்கு அவனே பொறுப்பாக வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது.

குற்ற மனம் இன்றி, குற்றச் செயல் இல்லை. குற்ற மனமும் குற்றச் செயலும் இணைந்ததுதான் குற்றம் எனக் கண்டோம். ஆனால் காலத்தின் வளர்ச்சியால் சமுதாயத்தின் பொது நோக்கால் அந்த விதிக்குச் சிறிது விலக்கும் அளிக்கப்பட்டது. வளர்ந்து வரும் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த இன்று இந்தச் சட்டம் அவசியம் தேவைப்படுகிறது. உண்மையையே பொய்யாக மாற்றிவிடும் திறமை படைத்த வியாபாரிகள், கள்ளச் சந்தை வியாபாரிகள், ஆகியவர்களைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டம் அவசியமாகிறது. ஆனால் பொதுவாக குற்ற மனம் இன்றிச் செய்யப்படும் செயல்களைக் குற்றமாகக் கருதினாலும் அந்த வகையான குற்றங்களுக்குக் குறைந்த சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அளிக்கப்பட்டு வருகிறது. குற்றச் சட்ட வல்லுநர்களிடையே, குற்ற மனம் இன்றி, குற்றமாகக் கருதப் படும் குற்றத்தை ஏற்பாரும் எதிர்ப்பாரும் (For and Against) அதிகமாக உள்ளனர். ஹால் (Hall) என்னும் குற்ற இயல் வல்லுநர் இதைக் கடுமையாக எதிர்க்கிறார். இந்தக் கடும் பொறுப்புக் குற்றத்தை (Strict Liability) குற்றச் சட்டத்திலிருந்தே நீக்கவிடவேண்டும் எனக் கூறுவதுடன், இது கீழ்த்தரமான, மட்டரகமான சட்டம் (Bad Law) என வர்ணிக்கிறார். குற்ற மனம் இன்றிச் செய்யப்படும் செயல்கள் குற்றமாகக் கருதப்படக்கூடாது. குற்றச் சட்டத்தின் முக்கிய நோக்கமே குற்றவாளி குற்ற மனத்துடன் குற்றத்தைச் செய்யவேண்டும் என்பதுதான். அவ் வாறு இல்லை என்றால் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. ஆகவே கடும் பொறுப்புக் குற்றத்தை நீக்கிவிட வேண்டும் என்று வாதாடுவோர்களும் உண்டு. மேலும், சிலர் அப்படி, கடும் பொறுப்பு குற்றத்தைக் குற்ற மாக, கருதப்பட்டு வந்தாலும், அந்தக் குற்றத்திற்குத் தண்டனை யாகச் சிறைத் தண்டனை (Imprisonment) அளிக்கக்கூடாது, வெறும் அபராதம் (Fine) மட்டும் விதிக்கப்படவேண்டும். கள்ளம், கபடமற்றுச் செயல்படுவோர்கள் ஏன் தண்டிக்கப்படவேண்டும்? அவ்வாறு தண்டனை வழங்குவதும் அநீதியாகும். ஆனால் சமுதாயத்தை ஒழுங்குபடுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானால் அதற்குக் கருவியாக கடும் பொறுப்புக் குற்றத்தை (Strict Liability) கையாண்டாலும், தண்டனை வழங்கு வது நியாயமாக இருக்க வேண்டும். அபராதம் நேர்மையான

தண்டனையாக விளங்க முடியும் எனக் கூறுவோர்களும் உண்டு. சமீபத்தில் போலியான மருந்துகள் (Spurious Drugs) கலப்படமான குழந்தை உணவுகள் (Adulterated Baby Food) ஆகியவைகளால், ஏராளமான மக்களும் குழந்தைகளும் மரணம் அடைய நேர்ந்தது நினைவிருக்கலாம். ஆகவே கடும் பொறுப்புக் குற்றத்தை மேலும் கடுமையான குற்றங்களாக (felonious) மாற்றப்பட வேண்டும். அபராதம் தண்டனையாக அளிப்பதைவிட மரண தண்டனை அல்லது கடுங்காவல் சிறைத் தண்டனை (Rigorous Imprisonment) குறைந்தது 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தில் இதுபோன்று நிகழ்வதைத் தடுக்கமுடியும். வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் இலாபத்திற்காகப் போலி மருந்துகளையும், கலப்படமான குழந்தை உணவுகளையும் மற்ற உணவுப் பண்டங்களையும் தயார் செய்து விற்பனை செய்யமாட்டார்கள். கள்ளம், கபடமற்ற குழந்தைகளும் மற்றவர்களும் மரணம் அடையவேண்டிய அவசியம் இருக்காது. மேலும் கடும் பொறுப்புக் குற்றத்திற்கான குற்ற ஒழுக்கத்தைப்பற்றி (Criminal Behaviour) தற்கால கருத்துரைகள் போதுமான விளக்கங்கள் அளிக்க முடியாது. உணவு கலப்படம், மருந்து கலப்படம், போலி மருந்து தயாரித்தல், ஆகிய குற்றங்களைச் செய்தவர்களின் மனநிலை ஒழுக்கம் குற்ற ஒழுக்கமாகும். அதைப்பற்றிப் பின்பு தெளிவாக ஆராயலாம். ஆனால் கடும் பொறுப்புக் குற்றவாளிகளின் மனம் குற்றவாளிகளின் குற்ற மனத்தைப் போல அமைந்திராமல் நல்லொழுக்கம் உள்ளவர்களின் மனநிலையிலிருந்து வேறுபட்டிருக்கும். இவர்களின் நோக்கம் இலாபத்தைப் பெருக்கவேண்டும், ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு செயல்படுகிறார்கள். இவர்கள் செயல்களின் எதிர் விளைவு (Repercussions) எதிர் நோக்கியும் இருக்கலாம், அல்லது எதிர் நோக்காமலும் இருக்கலாம். ஆகவே குறிப்பிட்ட தீங்கு விளையும் என்று எதிர்பார்க்காமல் இருந்தாலும் ஏதாவது ஒரு தீங்கு விளையக்கூடும் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும் அல்லவா. அப்படி அவர்கள் மனத்தில் தோன்றினும் அது குற்ற மனமாகத்தான் கருதப்படவேண்டும். ஆகவே கடும் பொறுப்புக் குற்றத்தில் முழு அளவில் குற்ற மனமே இல்லையென்று கூறிவிட முடியாது. கொலையாளி கொலையை நேரடியாகச் செய்கிறான். வியாபாரி மறைமுகமாகச் செய்கிறான். இது மெல்ல மெல்ல ஆளைக் கொல்லும். மேலும் அவனுக்கு வழங்கப்பட்ட தொழிலுரிமைக்கு (Licence) மீறிதான் செயல்படுகிறான். சுகாதாரமான கலப்படமற்ற உணவுப் பண்டங்களையும், மருந்துகளையும் தயாரிக்கவேண்டும். விற்பனை செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடுடன்தான் தொழிலை நடத்துகிறான். இலாப நோக்கத்தின் காரணமாக அவைகளை மீறிவிடு

கிறன். ஆகவே அப்படியும் அவன் தொழில் உரிமை முறையை மீறிவிடுகிறன். அதுவும் குற்றம்தான். ஆகவே கடும் பொறுப்பு குற்றவாளிகள் நல்லொழுக்கம் உள்ளவர்கள் என்று கூற முடியாது. அவர்களின் தீயொழுக்கம் வளர்ந்து குற்றமாக மாறிவிடுகிறது. குற்ற ஒழுக்கத்தின் வளர்ச்சிதான் குற்றச் செயலாகும். ஆகவே இன்றைய சூழ்நிலையில் கடும் பொறுப்பு (Strict Liability) குற்றங்களுக்கு, கடுமையான தண்டனை வழங்குவது அவசியமாகிறது. இவர்களின் செயல்களால் மரணம் விளைந்தால், அவர்கள் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப்படவேண்டும். அதற்கு மரண தண்டனையே விதிக்கப்படவேண்டும். பாராளுமன்ற அங்கத்தினர்களும், சமுதாயத்தின் நலனை நாடும் தலைவர்களும், குற்ற இயல் வல்லுநர்களும் விவாதித்து நல்ல முடிவு எடுக்க இது நல்ல சூழ்நிலையாகும்.

சமுதாயக் கொள்கையின் அடிப்படையில் குற்றங்களின் பண்புகளைக் காணல் (Nature of Crime from the Social Point of View)

முன்பு பல்வேறு வகையான குற்றங்களின் வகைகளையும், தன்மைகளையும் ஆராய்ந்தோம். இங்கே குற்றங்களின் பண்புகளை ஆராய்வோம். குற்றச் சட்டத்தால் தடை செய்யப்பட்டு அதற்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்தால், அந்தச் செயல் குற்றம் என முன்பு கண்டோம். அதனுல் குற்றச் சட்டங்களே நாட்டில் இல்லை என்றுல் குற்றமே இருக்காது என்பதுதானே பொருள்? ஆகவே குற்றங்களை ஒழிக்க வேண்டுமென்றுல், இல்லாமல் செய்ய வேண்டுமென்றுல், நாட்டிலுள்ள குற்றச் சட்டங்கள் அனைத்தையும் நீக்கி விட்டால், எடுத்துவிட்டால் நாட்டில் குற்றங்களே இருக்காது என்று கூறலாம் அல்லவா? அப்படிக் கூறினுல் அது வார்த்தை அலங்காரமாகவும், சொல்வன்மையாகவும் விளங்குமே தவிர உண்மையில் குற்றங்களைத் தடுத்துவிட்டதாகவோ அல்லது குற்றங்கள் செய்யப்படவில்லையென்றே கூறி விடமுடியாது. ஏனென்றுல் குற்றச் சட்டம்தான் இல்லையே தவிர, குற்றங்கள் தொடர்ந்து செய்யப்பட்டுதான் வருகின்றன. உதாரணமாக திருடுவது குற்றம் அல்ல என்று அரசாங்கம் அறிவித்துவிட்டால், திருடுவது குற்றச் செயலாக கருதப்பட மாட்டாது. அதற்கு நீதி மன்றம் தண்டனை வழங்காது. ஆனுல் சமுதாயம் இதைக் குற்றமாகவே கருதுவதுடன் பொதுமக்களும் எதிர்ச் செயலாற்றுவார்கள். இதனுல் சமுதாயத்தில் பொது வெறுப்புணர்ச்சியால் விசாரணையின்றி யார், யார் பாதிக்கப்பட்டார்களோ அவர்களாகவோ அல்லது அவர்களின் உறவினர்களாவது அல்லது நண்பர்களோ குற்றவாளிக்குத் தண்டனை வழங்கிவிடுவார்கள். இப்படி விசாரணையின்றியே மக்கள் வழங்கும் தீர்ப்பு

முறை உருவாகிவிட ஏதுவாகும். குற்ற ஒழுக்கத்தின் பெயர்தான் மாற்றம் அடையுமே தவிர குற்றவொழுக்கமும் சமுதாயத்தின் எதிர்ப்புச் செயல்களின் தன்மையும், ஒழுக்கமும் மாருமல் பெரும்பாலும் அப்படியேதான் இருக்கும். குற்ற ஒழுக்கத்தில் சமூக நலன் பாதிக்கப்படுவதும் மாருமல் அப்படியேதான் இருக்கும். மேலும் சமுதாய வளர்ச்சி குன்றுமே தவிர வளர்ச்சி அடையாது. ஆகவேதான், செயலின் பண்பு (nature of acts) விளக்கத்தையும் குற்ற வரையறை (definition) விளக்கத்தையும் குற்றச் சட்டத்தில் சேர்த்துவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குற்தத்திற்கு வரையறை காணும்போது சட்ட வாசகத்தைவிட சமுதாயத்தின் நோக்கத்தையும் பண்பையும் ஆராய்ந்து குற்றத்திற்கு வரையறை அளிப்பது சாலச் சிறந்ததாகும். ஏனெனில், எந்தச் செயலை சட்டம் தடை செய்கின்றதோ அது குற்றமாகிறது. சமுதாயம் அதைக் குற்றமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கேராஃபலோ (Garafolo) என்ற குற்ற இயல் வல்லுநர் இரக்கம், உண்மை, நாணயம் முதலிய உணர்ச்சிக் கனிவுகளை மீறுவதும் குற்றத்தின் பண்பு, ஒழுக்கம் எனக் கூறுகிருர். மேலும் இதிலிருந்துதான் குற்றம் இயற்கையாக வளர்ச்சியடைந்ததாகக் கூறுகிருர்.

ராதக்ளிஃப் ப்ரௌன் (Radcliffe Brown) என்பவர்கள், பழக்க வழக்க மரபை மீறுவதுதான் (usage) குற்றம். அதுவே தண்டனை வழங்குவதற்கும் அதிகாரம் அளிக்கின்றது என்று குற்றத்திற்கு வரையறை வழங்கியுள்ளார்கள்.

தாமஸ் (Thomas) என்பவர் சமூக உளவியலின் (Social Psychology) அடிப்படையைக் கொண்டு ஆராய்ந்தால் சமுதாயத்தின் ஒற்றுமைக்கு, குழுவின் ஒருமைப்பாட்டிற்கு முரண்பட்ட செயல்களே தனிப்பட்ட நபருக்கு இழைத்த செயலாகக் கருதுகிறது; அதுதான் குற்றம் என வரையறை வழங்கியுள்ளார். மேலே கூறப்பட்ட குற்ற வரையறை விளக்கங்களை ஆராய்ந்தால், குற்றம் எந்தச் சூழ்நிலையில் உருவாகின்றது என்பதை அறியலாம். இதில் மூன்று கருத்துப் பொருள்கள் உள்ளடங்கி இருப்பதைக் காணலாம்.

(1) சமூகத்தில் உள்ள குழுக்கள் அனைத்தும், ஒரு செயலைப் பின்பற்றுதல் அல்லது வரவேற்றல் அல்லது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பாதி குழுக்கள் அந்தச் செயலை பின்பற்றுதல், வரவேற்றல்.

(2) மேற்சொன்ன செயலையோ கருத்தையோ சமுதாயத்தின் மற்ற பிரிவினர்கள் அதை எதிர்த்தல் அல்லது அவற்றிற்க்கு முரண்பாடாக செயல்படுதல். இதனால் சமுதாயத்தில் ஆபத்தான நிலை உண்டாக்கப்பட்டுவிடுகிறது.

(3) செயல் நல்லது என்று வலியுறுத்தும் குழுவானது மற்றவர்களை எதிரிகளாகவும் குற்றவாளிகளாகவும் கருதுகிறது. ஆகவே, அவர்களை அடக்கி ஒடுக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அதற்காக அச்சுறுத்துதல் மூலமாகக் கட்டாயப்படுத்தும் வழியை மேற்கொள்கிறது. குற்றம் செய்யப்படும் போது மேற்சொன்ன கருத்துகளின் தொடர்புகள் காணப்படும். தனி நபரைக் கொண்டு குற்றத்தை ஆராய்வதைவிடக் குழுக்களைக் கொண்டு ஆராய்ந்தால், இதன் தொடர்புகள் எளிதில் வெளிப்படும். இவைதாம் குற்றம் வளர்ந்த வரலாற்றுக்கான கருத்துகளாகும். இவையே குற்றத்திற்கான அடிப்படை வரையறையும் ஆகும். ஆனால், தற்காலச் சட்டங்களை ஆராய்ந்தால் மேற்சொன்ன கருத்துகள் பொருந்தக் கூடியவையாக இருந்தாலும் அவை தெளிவாக, சுருக்கமாக விளக்கக் கூடியதாக இல்லை. மேலும் இந்தக் கருத்துகள் எல்லாக் குற்றங்களுக்கும் பொருந்துமா என்பதும் ஐயமே.

குற்றச் சார்பியல் கோட்பாடு (Relativity of Crime)

குற்றம், சமுதாயக் கொள்கைக்கும் சட்டத்திற்கும் தொடர்புடையதாகும். குற்றச் சட்டத்தின் வாசகங்கள் அடிக்கடி மாற்றம் அடையக் கூடிய தன்மையைக் கொண்டதாகும். புராதனக் காலத்தில் பெரும்பாலான குற்றங்கள், சமய சம்பந்தமான (Religious Offences) குற்றங்களாக இருந்தன. சமீப காலம் வரையிலும், அவையே குற்றங்களாக விளங்கி வந்தன. தற்பொழுது, சிலபல சமயச் சம்பந்தப்பட்ட குற்றங்கள் மட்டும் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றையும் இன்று செம்மையாக வலியுறுத்திச் செயல்படவில்லை. இதற்குக் காரணம், சமயக் கட்டுப்பாடு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதாகும். மேலும் சமுதாயத்தில் மக்கள், சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காததும் மற்றொரு காரணமாகும். இது காலமாற்றத்தால், விளைந்த மறுமலர்ச்சியாகும். சங்க காலத்தில் இருந்ததைப் போல் சமயக் கட்டுப்பாடுகள் இன்று இல்லை. மேலும் காலம் செல்லச் செல்ல சமுதாயத்தில் சமயம் என்று ஒன்று இருப்பதை மக்கள் மறந்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தச் சமயத் தொடர்பான குற்றச் சட்டங்கள் பயனற்றுப் போய்விடவும் வாய்ப்புண்டு.

ஐஸ்லாண்டில் (Ice Land) 8, 10ஆவது நூற்ருண்டில், வைகிங் (Viking Age) காலத்தில், ஒருவன் மற்ருெருவனைப்பற்றி, கவிதை எழுதுவது குற்றமாகும். உணர்ச்சி வசப்பட்டு பாராட்டுவதற்காக எழுதிளுலும் குற்றமேயாகும். அந்தக் கவிதை நான்கு செய்யுட் கூறுக்கு (Strophes) மேல் நீண்டாலும் குற்றமேயாகும்.

1784-இல் புருஷிய சட்டத்தில் (Prussian Law of 1784) தாய்மார்களும் தாதிமார்களும் தங்களின் இரண்டு வயதிற்குட் பட்ட குழந்தைகளைப் படுக்கை அறைக்கு எடுத்துச் செல்வது குற்றமாகக் கருதப்பட்டது. அது குற்றச் சட்டத்தால் தடை செய்யப்பட்டது.

14ஆவது நூற்ருண்டில், இங்கிலாந்தில் அடிமைத் தளைப்பு (English villein) இல்லாமலே அடிமை நிலையிலுள்ள குடியான வர்கள், அதாவது கீழ்மட்டத்தில் உள்ள குடியானவர்கள் தங்களின் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைச் சட்டம் அனுமதிக்க வில்லை. சொந்த நிலம் உள்ளவர்களைவிட (free holder), கீழ்மட்ட நிலையில் உள்ளவர்கள் நாய் வளர்ப்பதைச் சட்டம் தடை செய்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை பல்வேறு காரணங்களினுல், பல்வேறு காலங்களில் குற்றமாக விளங்கின. நூல் அச்சடித்தல், மருத்துவக் கோட்பாட்டைக் கொண்டு இரத்த ஓட்டத்தைப் பரிசோதித்தல், வீடுகளில் பொன்னைப் பதுக்கிவைத்தல், நாண யத்தை வெளிநாட்டவருக்கு விற்றல், சந்தையில் சரக்குகளை வாங்காமல் வழியில் வாங்குவது, சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வழியில் வாங்குதல், ஒரு பவுனுக்குக் குறைவாகக் காசோலையை (Cheque) பயன்படுத்துதல் முதலியன வாகும். மேலும் தற்காலச் சட்டங்கள் பல பழைய தலைமுறை யினருக்குத் தெரியாமலே இருந்தது. அதாவது தடுப்புக்காப்புச் சட்டம் (Quarantine) போக்குவரத்துச் சட்டம் (Traffic laws) துப்புரவுச் சட்டம் (Sanitation) தொழிற்சாலைச் சட்டங்கள் (Factory Laws) ஆகியவையாகும். ஒரு குறிப்பிட்ட காலங்களி லேயே ஓர் எல்லைக்கும் மற்ருேர் எல்லைக்கு மட்டும் அல்ல. நாட்டின் ஒரு பகுதிக்கும் மற்ருெரு பகுதிக்கும் இடையில் சட்டம் வேறுபடும். எடுத்துக்காட்டாக அமெரிக்காவில், மாநிலத்திற்கு மாநிலம் சட்டம் வேறுபடுகிறது. ஜார்ஜியாவில் (Georjia) பிறன் மனைவி புணர்தல் குற்றத்திற்காக 1,000 பவுன் அபராதம் அல்லது 6 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை என்று சட்டம் உள்ளது. ஆனுல், லாசியானுவில் (Louisana) பிறன் மனைவி

புணர்தல் குற்றமாகக் கருதப்படவில்லை. இந்தியாவில் சில மாநிலங்களில்தான் மதுவிலக்கு அமுலில் உள்ளது. பல மாநிலங்களில் மதுவிலக்கை எடுத்துவிட்டார்கள். அதேபோன்றுதான் விபச்சாரமும் ஆகும் (Suppression of Immoral Traffic Act). பம்பாய் மாநிலத்தில் விபச்சாரம் நடத்த உரிமம் (Licence) வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் அது குற்றமாகக் கருதப்பட்டு வருகின்றது. அதே போன்று, ஒரு நாட்டின் எல்லைக்குள் குறிப்பிட்ட காலத்தில், சட்டத்திற்குப் பொருள் வேறுபடுகிறது. ஒவ்வோர் உயர்நீதி மன்றமும் சட்டப் பொருள் விளக்கம் அளிப்பதில் மாறுபடுகின்றது. ஒரே குற்றமாக இருப்பினும் தண்டனை வழங்கும்போது நீதிமன்றத்திற்கு நீதிமன்றம் வேறுபடுகின்றது. இந்த மாறுபாடுகளுக்கு முக்கிய காரணம் குற்றவாளிகளின் தனிச் சிறப்பு இயல்பும் குற்றங்களின் தனிச் சிறப்பு இயல்பும் குற்றவாளிகளின் தகுதியின் அடிப்படையும் ஆகும். காவல் துறையினர் வழக்கமாகப் பெரிய பெரிய மோசடிக் குற்றங்களைக் கண்டுபிடித்துவிடுகின்றனர். ஆனால் நுட்பமான மோசடிக் குற்றம் பரவலாகக் காணப்படும் வணிகத் தொழில்கள் நடக்கும் இடங்களில் குற்றங்களை ஆய்வு செய்யும் பேராற்றல் வாய்ந்த துப்பறியும் அதிகாரிகள் இல்லை. ஆகவேதான் வியாபாரிகளிடையே அதிகமான மோசடி காணப்படுகிறது. ஒருவேளை துப்பறியும் அதிகாரிகள் வியாபாரிகளின் தகுதியை அறிந்து கண்டும் காணுமல் இருந்து விடுவதற்கும் வாய்ப்புண்டு. கடந்த சில ஆண்டுகளாக, இந்த / நோக்கத்திற்காகப் பல வசதிகள் உண்டாக்கப்பட்டுள்ளன. அவை தற்பொழுது அதிக அளவில் வளர்ந்தும் உள்ளன. இதன் காரணமாக அநேக தந்திரமான, வஞ்சகமான, பழக்கங்களைத் தெளிவாகக் கண்டறிந்து, தெளிவான பொருள் விளக்கம் தந்து, வணிகர்களின் செயல்கள் குற்றம்தான் என அறிவிக்கப்பட்டது. இதை ஆராயும்போதும் குற்றத்திற்கும் குற்றவாளியின் தகுதிக்கும் அதிகமான தொடர்புகள் இருப்பது தெரியவரும். சாதாரணத் திருடன் செய்யும் மோசடியும் குற்றம்தான். பெரிய ஆலை முதலாளி செய்யும் மோசடியும் குற்றம்தான். முன்னவன் சிறிய தொகைக்காக மோசடி செய்கின்றுன். பின்னவன் லட்சக் கணக்கான ரூபாய்க்காக மோசடி செய்கின்றுன். இதுதான் வேறுபாடு. இவர்கள் எந்தெந்தச் சந்தர்ப்பத்தில், சூழ்நிலையில் சட்டத்தை மீறுகின்றுர்கள் என்பதை அவரவர்களின் தகுதியைக் கொண்டும், சூழ்நிலையைக் கொண்டும் கண்டுபிடித்துவிடலாம். சிலர் தகுதியின் அடிப்படையில், சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் போர்வையாகப் பயன்படுத்திக் கொண்டு பெரிய பெரிய மோசடிக் குற்றங்களில் ஈடுபடுகின்றுர்கள். பல குற்றங்கள்

நடப்பதற்கும் அவர்கள் காரண கர்த்தர்களாக விளங்குகின்றனர்கள். பெரிய புள்ளிகள் செய்யும் குற்றங்கள் பெரும்பாலும் மோசடிக் குற்றம், கள்ள நோட்டு அச்சடித்தல், கள்ள நாணயம் அச்சடித்தல், சூதாட்டம், பதுக்கி வைத்தல், கள்ளக்கடத்தல் ஆகிய குற்றங்களாகும். ஆகவே, குற்றத்திற்கும், குற்றவாளியின் தகுதிக்கும், நெருங்கிய தொடர்புண்டு. மேற்சொன்ன குற்றங்களைச் சாதாரண குற்றவாளிகள் அல்லது உடல் ஊறு விளைவிக்கும் குற்றவாளிகள் செய்ய முடியாத குற்றங்களாகும். இதனால் குற்றவாளிகளின் மனநிலையும் செயல்முறைகளும் குற்றத்திற்குக் குற்றம் வேறுபடுகின்றன என்பது தெளிவாகும். வன்புணர்ச்சிக் குற்றத்தைச் செய்கின்றவனுக்கும் கொலைக் குற்றம் புரிகின்றவனுக்கும் மனநிலை வேறுபாடு உள்ளது. ஒருவன் ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்கிறான். அதே நேரத்தில் அவன் மனைவி மாற்றானோடு புணர்ச்சிச் செய்தால் அவனைக் கொலை செய்துவிடுகிறான். ஆக இடத்திற்கு இடம் சூழ்நிலைக்குச் சூழ்நிலை குற்றமும் குற்றவாளியின் மனநிலையும் மாறிவிடுகிறது என்பதை எடுத்துக்காட்டின் மூலம் அறியலாம். திருடன் திருடிய பொருளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள எண்ணுகிறான். அவனிடத்தில் வேறு யாராவது வந்து திருடினால் அவர்களை விரட்டுகிறான். ஆக, ஓர் இடத்தில் அவனே திருடனாகவும் மற்றோர் இடத்தில் திருடனை விரட்டுபவனாகவும், பாதுகாப்பாளனாகவும், செயல்படுகின்றான். ஆகவே, குற்றவாளி ஒருவனாக இருந்தாலும், குற்றம் இடத்திற்கு இடம், சூழ்நிலைக்குச் சூழ்நிலை, காலத்திற்குக் காலம் குற்றத் தொடர்பினால் மாறுபடுகின்றது.

குற்றங்களை வகைப்படுத்துதல் (அல்லது) பாகுபாடு செய்தல் (Classification of Crimes)

குற்றம் ஒரே இனமாகவோ அல்லது வகையாகவோ கொண்ட ஒழுகலாற்றைப் பெற்றிருக்கவில்லை. ஆகவேதான் குற்றங்களை வகைப்படுத்த, பாகுபாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குற்றங்களின் விளைவுகளைப் பொறுத்து பெருங்குற்றம் (Felonies) சிறு குற்றம் (Misdemeanous) எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபாடு இந்தியாவில் இல்லை. இங்கு அடையாளங் கண்டு கொள்ளக்கூடிய—புலனாலுணரக்கூடிய குற்றம் (Cognizable Offences) என்றும் புலனாலுணரமுடியாத குற்றம்—(Non-cognizable Offences) அல்லது பிணையில் விடத்தக்க குற்றம் (Bailable Offencces) என்றும் பிணையில் விடத்தகாத குற்றம் (Non-bailable Offences) என்றும் இந்திய குற்ற நடைமுறைச் சட்டத்தில் (Indian Criminal Procedure Code) பாகுபாடு

செய்யப்பட்டுள்ளது. கடுமையான விளைவுகளை உண்டாக்கும் குற்றத்திற்குப் பெருங்குற்றம் (Felony) என்றும் அதற்குத் தண்டனையாக மரண தண்டனை அல்லது நாடுகடத்துதல் அல்லது ஆயுள் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது. சாதாரண விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய குற்றங்களுக்கு சிறு குற்றம் (Misdemean-ous) என்றும் இதற்குத் தண்டனையாக சிறைத் தண்டனையும் அபராதமும் அளிக்கப்பட்டு வருகிறது. அரசுக் கெதிரான குற்றங்களுக்கு நாட்டுத் துரோகக் குற்றங்கள் (Treason) என்று பெயர். இதற்குத் தண்டனையாக மரண தண்டனை அல்லது நாடுகடத்துதல் அல்லது ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வந்தன. குற்றங்களைப் பாகுபாடு செய்தல் அவ்வளவு பயனளிக்கக் கூடியதாக இல்லை என்று சர் ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Stephen) நீண்ட நாட்களுக்கு முன்பே கூறியுள்ளார். அதே நேரத்தில் வகைகளைத் தெள்ளத் தெளிவாக வேறுபாடு காண்பதும் கடினமான செயலாகும். ஒருவன் கொலைக் குற்றம் செய்து விடுகிறான். இது பெருங்குற்ற வகையைச் சார்ந்ததாகும். ஆனால், கள்ளச் சாராயம் காய்ச்சுதல் சாதாரண குற்ற வகையைச் சார்ந்ததாகும். இதில் கள்ளச் சாராயம் காய்ச்சி வந்ததனால் அதைக் குடித்த 10 பேர் இறந்து விட்டார்கள் என்றால் இது கொலைக் குற்றத்தை விட பெருங் குற்றமாகத் தோன்றும் அல்லவா? ஆனால் கள்ளச் சாராயம் தயார் செய்தல் கொலைக் குற்த்தைவிடக் கடுமையான குற்றம் அல்ல. ஆனால் அதன் விளைவு அதைவிடக் கடுமையாக உள்ளது. சதர்லாண்டு (Southerland) கீழ்க்கண்ட எடுத்துக் காட்டைக் கையாளுகின்றார். ஒருவன் தன்னுடைய தரிசு நிலத்தில் களையை வளர விடுவது முனிசிபல் நெருக்கடிச் சட்டத்தின்படி (Mnnicipal Ordinance) குற்றமாகும். இது எளிமையான, சாதாரண குற்றமாகும். ஆனால் சாதாரண வகையைச் சார்ந்த குற்றத்தின் விளைவு அதிக தீங்கை உண்டாக்கி விடுகிறது. அதாவது களையை வளர விடுவதனால் ஏற்படுகின்ற விளைவு என்னவென்றால் அதன் மேல் தூசி படிவதனால் ஏற்படும் வேனிற்கால சளிக் காய்ச்சல் (Hay Fever) பரவுகிறது. இதனால் 10 பேர் பாதிக்கபப்டுகின்றார்கள் என்றால் அது கொலைக் குற்றத்தைவிடப் பெருங் குற்றமாகும் அல்லவா? என்று கூறுகின்றார்.

ஒரு மாநிலத்தில் பல வகையான குற்றங்கள் பெருங்குற்ற வகையிலும் பெருங்குற்ற வகையில் உள்ள அதே வகைகள் மற்றொரு மாநிலத்தில் பெருங்குற்ற வகையில் இருப்பதில்லை. அந்த மாநிலத்தில் சிறு குற்ற வகையில் உள்ள குற்றங்கள்

மற்ெெரு மாநிலத்தல் பெருங்குற்ற வகையில் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே அமெரிக்காவில் குற்றங்களை வகைப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இல்லை என்று கூறுகின்ருர் சதர்லாண்டு. மேலும் ஒரே மாநிலத்தில்கூட அதன் வேறுபாடுகள் தெளிவாக இல்லை என்று குறை காணுகின்ருர் சதர்லான்டு.

குற்றவாளிகளை வகைப்படுத்தும் நோக்கத்திற்கும், பெருங்குற்றம், சிறு குற்றம் என வகைப்படுத்துவதற்கும், குற்றங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது பெருங் குற்றத்தை (Felony) யார் செய்கின்ருர்களோ அவர்கள் பெருங் குற்றவாளி (Felons) என்றும் சிறு குற்றத்தை யார் புரிகின்ருர்களோ அவர்கள் சிறு குற்றவாளிகள் (Misdemeanants) என்றும் அழைக்கப்படுகின்ருர்கள். பெருங்குற்றவாளிகளைவிட சிறு குற்றவாளிகள் குறைந்த ஆபத்துள்ளவர்களாகவும் அதே நேரத்தில் மிக எளிதில் மறு சீரமைத்து வாழ்க்கையைத் (Rehabilitative) தொடங்கக் கூடியவர்கள் என்று நம்பப்படுகிறது. பெருங்குற்றவாளிகள் சமுதாயத்திற்கு அதிக ஆபத்தும் அவர்களைச் சீர்திருத்தம் செய்ய அதிக முயற்சிகளும் மேற்கொள்ளவேண்டிய அவசியமாகிறது, ஆனுல் ஒரு செயலை வைத்துக்கொண்டு அது சமுதாயத்திற்கு ஆபத்து, அவனைச் சீர்திருத்தம் செய்வதும் கடினம் என்று வாதிடுவதெல்லாம் பொய்யான வாதமாவதுடன் முற்றிலும் தவருன முடிவாகும். இதை ஓர் எடுத்துக்காட்டுடன் கூறுகிருர் சதர்லாண்டு. ஒருவன் சிறு குற்றத்தை ஒரு வாரத்திலும், மற்ெெரு வாரத்தில் பெருங்குற்றத்தையும், மூன்ருவது வாரத்தில் சிறு குற்றத்தையும் செய்யலாம். இந்தச் செயல்களினுல் அவனுடைய நடத்தையின் மாறுபாட்டையோ அல்லது சமுதாயத்திற்கு விளையும் ஆபத்தையோ மாறுபட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது.

சிறு குற்றவாளி, பெருங் குற்றவாளி என வகைப்படுத்தி வேறுபாடு காணப்பட்டாலும் சில வேளைகளில் இரண்டையும் மிஞ்சி விடுகிறது. அதாவது நாம் வகைப்படுத்தி அதன் விளைவை எதிர்பார்க்கும்போது நம் எண்ணத்திற்கு நேர்மாருன விளைவுகளை உண்டுபண்ணுவதுதான் இதற்குக் காரணமாகும். பெருங்குற்றம் சமுதாயத்திற்கு அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்று கருதினுலும் சிறு குற்றத்தால்தான் அதிக ஆபத்தையும் அதிக செலவினத்தையும் உண்டாக்கிவிடுகிறது என்பதற்கு அதிகமான சான்றுகள் உள்ளன. 1950இல் மசாசுசட்ஸ் (Massachusettes) மாநிலத்தில் உள்ள பண்ணைகளில்

வேலை செய்ய அனுப்பப்பட்ட மொத்த கைதிகளும் சிறு குற்றவாளி களாகப் பிரிக்கப்பட்டபோதிலும் அவர்களில் 88 சதம் ஏற்கனவே மாநில சிறைச்சாலையில் கைதிகளாக இருந்தவர்களே ஆகும். ஆனால் மாநில சிறையில் உள்ள 70 சதம் கைதிகளில் சராசரியாக அதாவது ஏற்கனவே குற்றவாளிகளாக இருந்தவர்கள் 17 சதம்தான்.

1852இல் மசாசுசட்ஸ் (Massachusetts) மாநிலத்தில் தான் முதன் முதலில் பெருங்குற்றத்திற்கு வரையறையும் விளக்கமும் (Definition) அளிக்கப்பட்டு, அதற்குத் தண்டனையாகக் கடுங் காவல் சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டிய குற்றம் என அறி வித்தது. எந்தச் சூழ்நிலையில் தண்டனையை மாநிலச் சிறையில் அனுபவிக்க வேண்டும் அல்லது சீர்திருத்த இல்லங்கள் (Correctional Home) அல்லது சீர்திருத்தப் பள்ளிகள் (Correctional School) ஆகிய நிலையங்களில் எவ்வளவு காலம் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கங்களுக்காக அந்த மாநிலத்தில், மாநிலச் சட்டங்களைக் குறைந்தது நான்கு முறையாவது மாற்றங்கள் உண் டாக்கப்பட்டிருக்கக்கூடும் என எதிர்பார்க்கலாம். சிறு குற்றம், பெருங்குற்றம் என்றெல்லாம் தரம் பிரித்து அதற்கேற்றவாறு குற்றங்களையும் பிரித்து வேறுபாடு காணுவது குற்றங்களின் கடுமையைக் குறைப்பதற்காக அல்ல. நிர்வாகத்தின் காரணங் களுக்காகவும், மாநிலச் சிறையில் கைதிகளின் கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும்தான் குற்றவாளிகளையும், குற்றங்களையும் தரம் பிரித்து, கைதிகளைப் பாகுபடுத்தி, சிறு குற்றவாளிகளைச் சீர் திருத்தப் பள்ளிக்கோ, இல்லத்திற்கோ அல்லது பண்ணையில் வேலை செய்யவோ பல்வேறு இடங்களுக்கு அனுப்புவதால் கைதி களின் நெரிசல் குறைகிறது. மேலும், பெருங்குற்றவாளிகளை மட்டும் மத்திய சிறையில் அடைத்துப் பாதுகாக்கவும் வசதி ஏற் படுகிறது. குற்றவாளிகள் ஒரே சூழ்நிலையில் இருப்பதும் இல்லை. குற்றங்களும் ஒரே விளைவை உண்டு பண்ணக்கூடியவையும் அல்ல. சில வேளைகளில் சிறு குற்றம் பெரிய ஆபத்தையும் உண் டாக்கிவிடுகிறது என்று முன்பே ஆராய்ந்தோம். சிறு குற்றத் திற்கும் பெருங் குற்றத்திற்கும், சிறு குற்றவாளிகளுக்கும் பெருங் குற்றவாளிகளுக்கும் ஒழுக்கத்தில், நடத்தையில் அதிக வேறுபாடு இல்லாதபோது இந்தக் குற்றப் பாகுபாடு முறைகளை ஏன் பின்பற்ற வேண்டும்? இந்தப் பாகுபாடு முறைகளைக் கைவிடுவதற்கு நல்ல பல காரணங்கள் இருக்கின்றனவே. ஆகவே, குற்றவாளிகள் அனைவரையும் ஒரே இனத்தில் சேர்த்து விட்டால் என்ன?

பாங்கர் (Bonger)என்ற குற்ற இயல் வல்லுநர், குற்றவாளி களின் உள்நோக்கத்தைக் கொண்டு (Motive) குற்றங்களின் தரத்தைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கின்றார்:

(1) பொருளாதாரக் குற்றம் (Economic Crimes)

(2) அரசியல் குற்றம் (Political Crimes)

(3) பால் உணர்ச்சிக் குற்றம் (Sexual Crtmes)

(4) மற்ற குற்றங்கள் (Misceallaneous Crimes). அதாவது பழிக்குப்பழி என்ற நோக்கத்திற்காகக் குற்றங்கள் புரிதல் ஆகியவையாகும்.

ஆனால் பொதுவாக ஒரு குற்றங்கூட உள்நோக்கம் இல்லாமல் இருக்க முடியாது. பணத்தாசையாலும், பழிக்குப்பழி என்ற உணர்ச்சியின் வேகத்தாலும், பொருளாதாரக் குற்றங்கள் நிகழ் வதாகக் கூறுகின்றார். மேலும் கன்னக்கோல் வைத்துத் திருடுதல் (Burglary), கொள்ளையடித்தல் (Robbery), மோசடிக் குற்றம் (Fraud) ஆகியவற்றைப் பொருளாதாரக் குற்றங்கள் என்று பாகு படுத்துகின்றார். ஆனால், இந்தப் பாகுபாடுகள் போதிய அளவு தெளிவாக இல்லை என்பது புலனாகும்.

பொதுவாகக் குற்றப் புள்ளிவிவரங்கள் சேகரிப்பதற்கும் குற்றங்களின் வீதத்தைக் கண்டறியவும் குற்றங்களின் காரணங்களை ஆராயவும், குற்றங்கள் அடிக்கடி வகைப்படுத்தி ஆராயப்படுகின்றன. அதாவது, நபருக்கு எதிரான குற்றம், சொத்திற்கு எதிரான குற்றம், பொது மக்களின் அமைதிக்கு எதிரான குற்றம் என்று குற்றங்களைப் பிரித்து குற்றப் புள்ளி விவரங்கள் சேகரித்ததில், குடிபோதைக் குற்றமும், கட்டுப்பாடு அற்ற நடத்தைக் குற்றமும் அதிக அளவில் காணப்பட்டதாக அறியப்படுகிறது. 1958ஆம் ஆண்டில் 1586 நகரங்களில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்களில் 55 சதம் குடிபோதைத் குற்றமும் அல்லது கட்டுப்பாடற்ற நடத்தைக் குற்றமும் அல்லது நாடோடித் தன்மையான குற்றமும், பெருங் குற்றத்தைச் சார்ந்த கொலைக் குற்றமானது 0·1 சதமும், வன்புணர்ச்சி 0·2 சதமும், கொள்ளைக் குற்றம் 0·6 சதமும் திருடுதல் 2·5 சதமும் ஆக மொத்தம் கடுமையான குற்றங்களின் சதவீதம் 3·5 ஆகும். மோசடி சம்பந்தப்பட்ட எல்லா வழக்கு களையும் இதில் சேர்த்துக் கொண்டால், குடிபோதை, சட்டத் திற்குக் கட்டுப்படாத குற்றத்திற்கும் சமமாக வரும் என நம்ப இடமுண்டு.

புள்ளிவிவரங்கள் தயார் செய்யும் நோக்கத்திற்காக காவல் துறை அதிகாரிகள் குற்றங்களை ஒரே சீராக வகைப்படுத்தி யுள்ளார்கள். குற்றச் சட்டத்தை அமைக்கும் நோக்கத்திற் காகவும் குற்றங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. குற்றச் சட்டம் பல பிரிவுகளைக் கொண்டது. அதற்கேற்றவாறு குற்றங்களைப் பாகுபடுத்தி அதற்கேற்றாற்போல தண்டனைகளை வழங்குவதற்கும் முறைப்படுத்துவதற்கும், குற்றங்களின் பாகுபாடு அவசிய மாகிறது. இந்த வகைப்படுத்துதல் அதனதன் நோக்கத்திற்காக குற்றங்கள் வகைப்படுத்தப்படுகின்றன என்பதை மேலே ஆராய்ந் தோம். கொள்கையளவில், கருத்தளவில் குற்றத்தின் தன்மை களையும் காரணங்களையும் ஆராய்ந்து அறிவதற்கு இந்தப் பாகு பாடுகள் போதுமானவையாக இருக்கவில்லை.

கொள்கையளவில், கருத்தளவில் ஆராயும் நோக்கத்திற்குக் குற்றங்களின் பிரிவுகள் ஒவ்வொன்றும் சமுதாயத்தின் வளர்ச்சியில் ஒன்றியதாகவும் சமுதாயத்தின் இயல்புகளாகவும் அமைந்திருப்பதுடன், மற்ற திட்டமிடப்படாத செயல் முறை யிலிருந்து இந்த வகைகள் வேறு பட்டிருக்கும். குற்றங்களை ஆராய்வதற்கு அவை சமுதாயத்துடன் இணைந்து சமுதாயத்தின் இயல்பாக அமைந்திருப்பதால்தான் குற்றத்தின் காரண காரியங் களை ஆராய்வதற்கும் அதைத் தடை செய்வதற்கும், எளிமையாக இருக்கும். குற்ற வாழ்க்கைத் தொழில்களில் (Professional Crimes) ஈடுபடும் குற்றவாளிகள் ஏறத்தாழ, எல்லாக் குற்றவாளி களும், சிலவகையான குற்றங்களைச் செய்தே தங்களின் வாழ்க் கையை நடத்தி வருகின்றார்கள். அதாவது கொலைக் குற்றம், தீயிடுதல், கன்னம்வைத்தல், கொள்ளையிடுதல், திருடுதல் ஆகிய வற்றை ஓர் இனமாகப் பிரித்துவிடலாம். அவற்றைச் செய்வ தற்குக் குற்றவாளிகள் பயன்படுத்தும் நுட்பங்களை ஆராய்ந்து அறியவும் இந்தப் பாகுபாட்டு முறையைப் பயன்படுத்தலாம். குற்றவாழ்க்கைத் தொழிலர்கள் அல்லது குற்றத்தைப் பிழைப் பாகக்கொண்டவர் (Professional Criminals) மேற்கூறிய குற்றங் களைத் தனித்தோ அல்லது தங்களுக்குள் ஒரு குழு அமைத்துக் கொண்டோ, குற்றங்களைச் செய்து வருகின்றார்கள். இவர்களின் குற்ற ஒழுக்கமும் குற்றங்களைச் செய்யும் நுட்பமும் ஏறத்தாழ எல்லாக் குற்றவாளிகளிடமும் ஒரே மாதிரியாக இருக்கக்கூடும். இந்தக் குற்றங்களிலிருந்து, மற்றக் குற்றங்களும், குற்றவாளி களின் ஒழுக்கமும் வேறுபட்டிருக்கும். அதாவது, ஒப்புவிக்கப்பட்ட உடைமையையே மோசடியாகக் கையாடல் குற்றம் (Embezzle- ment) மோசடி விளையாட்டு (Confidence Game) பொய் ஆவணம் புனைதல் (Forgery) சாமான்களைக் கொண்டு சேர்க்கும்

வேலையாளின் திருட்டு. (Larceny by Bailee) நம்பிக்கை மோசக் குற்றம் (Criminal Breach of Trust) ஆகிய குற்றங்களின் வகைகள் மேற்கூறியவற்றிலிருந்து மாறுபட்டிருக்கும். இந்தக் குற்றங்களின் தன்மைகள், நுட்பங்கள், குற்றவாளிகளின் குற்ற வொழுக்கம் ஆகியவை மாறுபட்டிருக்கும். இந்த வகையில் குற்றங்களை வகைப்படுத்தி ஆராய்ந்தால், குற்றத்திற்கான காரணம், குற்ற நுட்பம், உத்தி, குற்றவாளிகளின் மனப்போக்கு ஆகியவற்றிற்குத் தெளிவான விடை காணமுடியும். இவற்றைப் போக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அடுத்து, குற்றவாளிகளைப் பற்றி ஆராய்வோம்.

குற்றவாளி (Criminal)

குற்றவாளி என்றவுடன் குற்றவாளி என்பவன் யார்? என்ற வினவும் உடனே எழுகிறது அல்லவா? முன்பு ஆராய்ந்ததைப் பார்த்தால் யார் குற்றத்தைச் செய்கின்றார்களோ அல்லது சட்டத்தை மீறுகின்றார்களோ அவர்களே குற்றவாளிகள் என்று கண்டோம். இதன்படி, யார்யார் குற்றம் செய்கின்றார்களோ அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று பொருள்படுகிறது அல்லவா? ஆனால் உண்மையில் இக்கொள்கை தவறானது ஆகும். எப்படி எனில், மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்திலும் சரி, அந்நாளிலும் சரி ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்ததாக காவல்துறை அதிகாரியிடம் ஒப்புக்கொண்டாலும் அல்லது ஏற்றுக் கொண்டாலும் சட்டப்படி அவன் குற்றவாளி அல்ல. சட்டப்படி குற்றவாளியைக் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்து, குற்றம் நிரூபிக்கப்பட்டு நீதிபதி குற்றவாளி யெனத் தீர்ப்பு வழங்கி, தண்டனையும் வழங்கினால்தான் அவன் குற்றவாளியெனச் சட்டம் கூறுகிறது. ஆகவே சமுதாயத்தின் பார்வைக்கு, சட்டத்தை மீறுகின்றவர் எல்லாம் குற்றவாளிகளாகக் காட்சி அளித்தாலும், சட்டத்தின் கண்களுக்கு அவர்கள் குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் அவர்கள் நிரபராதிகள் (Innocents) என்று கருதுகிறது. எடுத்துக் காட்டாக, ஒருவன் ஒரு வீட்டில் புகுந்து வெள்ளிப் பாத் திரங்களைத் திருடிவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது வீட்டின் சொந்தக்காரன் கையும் களவுமாகப் பிடித்துச் சிறை பாதுகாப்பாளரிடம் (Prison Warden) அவனை ஒப்பிவித்தால் சிறை அதிகாரி அவனைக் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டு சிறையில் அவனைக் கைதியாக அனுமதிக்கமாட்டான். காரணம் குற்ற நீதிமன்றத்தால் அவன் விசாரணை செய்யப்படாததும் அவன் குற்ற வாளியெனத் தீர்ப்பு வழங்கி தண்டனை அளிக்காததுமாகும்.

ஆகவே நீதி மன்றங்களால் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளி யென நிரூபிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கி தண்டனை பெற்றவர்கள் தான் குற்ற புள்ளிவிவரப் பட்டியலில் இடம்பெறுவர். அந்தப் பட்டியலை வைத்துக்கொண்டுதான் மற்ற ஆராய்ச்சிகளைச் செய்ய முடியும். சிறைக் கைதிகள் அத்தனை பேரும் முறையாக நீதி மன்றங்களில் விசாரித்துத் தண்டனை வழங்கப்பட்டவர்களேயாவர். குற்றவாளிகளின் வாழ்க்கை வரலாற்றை அறிய விரும்பினாலும், குற்றவாளிகளின் சுற்றுச் சூழ்நிலைகளை (Environment) ஆராயவும், குற்றவாளிகளின் உள்ளத்தை அறியவும் வேண்டுமானால் சிறைக் கைதிகளைத்தான் ஆராய்ந்து அறிய வேண்டும். அதுதான் குற்ற வாளிகளைப்பற்றிய உண்மையான குறிப்பாக இருக்க முடியும். இதேபோன்று சமுதாயத்திற்கெதிராக, சமுதாயத்தின் கொள் கைக்கெதிராக. சமுதாயத்தின் நடைமுறைக்கெதிராக செயல் படுவோர்களைக் குற்றவாளிகள் என்று யாரும் அழைக்கக்கூடாது. அவர்கள் குற்றச் சட்டத்திற்கு எதிராகச் செயல்படவில்லையே. பின் எப்படி அவர்களைக் குற்றவாளிகள் என்று அழைப்பது ? சமுதாயத்தின் கொள்கைகள் பிடிக்கவில்லையென்றால் அதற்கு எதிராகச் செயல்படுகிறார்கள். கொள்கைக்கு எதிராகச் செயல் படுவது குற்றமாகாது. மேலும் குற்றவாளியென்று அவர் கருதப் பட்டாலும் குற்றத்திலிருந்து விடுவித்துக்கொள்வதற்கு அவருக்கு எல்லா உரிமைகளையும், வசதிகளையும் அளிக்கவேண்டும், என்று அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிகைள் (Fundamental Rights) மூலம் வழங்கப்பட்டு உள்ளன.

ஆனால், நேரிடையாகச் செய்யும் குற்றங்கள் பல உண்டு. கையுங் களவுமாகப் பிடிபடுகின்ற குற்றவாளிகள் பலர் உண்டு. சான்றாக, பல பொருள்களும் பலரும் இருக்கும்போது அவர் களைக் குற்றவாளிகள் என்று ஏன் அழைக்கக்கூடாது என்று சாதாரண மக்கள் வினா எழுப்பலாம். இதற்கெல்லாம் நீதி மன்றத்தில் குற்றவாளி நிறுத்தப்பட்டு. விசாரணையின்போது சான்றுகள் அளித்தபிறகுதான் குற்றவாளிகள் என்றுகூற வேண்டுமா ? இதற்காக எவ்வளவு காலம், பொருள் விரையம், இவை ஏற்படாமல் குற்றவாளியை விசாரணை செய்யாமல் நேரிடையாகச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடலாம், என்றால் நாட்டில் யார் சிறையிலிருப்பார்கள், சிறைக்கு வெளியே யார் இருப்பார்கள் என்று அறுதியிட்டு யாரும் கூறிவிட முடியாது. வலிமை பொருந்தியவர் வெளியில் உலாவி வருதற்கும், வலிமை யற்ற எளியோர் சிறையில் உலவி வருதற்கும் இடம் அளித்து விடும் அல்லவா ? இங்கு 'வலிமை' என்ற சொல் பணம், படை, செல்வாக்கு, சமுதாயத்தில் உள்ள தகுதி ஆகியவற்றைக்

குறிக்கும். வலிமையுள்ளவர்களுக்கு ஆகாதவர்கள், எதிரிகள், எல்லாம் உள்ளே இருப்பார்கள். ஆகவேதான் குற்றவாளி தானே குற்றத்தை ஒப்புக் கொண்டாலும் அந்தக் குற்ற ஒப்புதலை (Pleads Guilty) நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்காது. குறிப்பாக, கொலைக் குற்றத்திற்கு குற்ற ஒப்புதலை (Pleads Guilty) மட்டும் ஏற்றுக்கொண்டு தீர்ப்பு வழங்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, விஸ்வநாத். 1945, ந. க. 492 ஐயாவு (Aiyave) டில்லி V. எம்பரர் Dilli V. Emperor AIR 1922. All 233. (1) In re Sandararaju 1964 ந.க.) அப்படி அளிக்கவும் கூடாது என உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது. இதற்கும் பல காரணங்கள் உண்டு. ஒருவன் உண்மையிலேயே குற்றத்தைச் செய்துவிட்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அவனை விசாரணை செய்தாலும் குற்றவாளிதான். அவனுடைய குற்ற ஒப்புதலைக் கொண்டே குற்றவாளியெனக் கருதித் தீர்ப்பு வழங்குவது அநீதி ஆகாது. ஆனால் வாழ்க்கையை வெறுத்தவன் பிறரைக் காப்பாற்ற எண்ணங் கொண்டவன், தியாக மனப் பான்மை கொண்டவன் ஆகியோர் தங்களுடைய நெருங்கிய உறவினரோ அல்லது நண்பர்களோ குற்றத்தைப் புரியாவிட்டாலும் அதைத் தானே செய்ததாகக் கூறி உண்மையான குற்றவாளிகளைக் குற்றத்திலிருந்து, குற்றத் தண்டனையிலிருந்து தப்புவித்துவிட்டு அந்தக் குற்றத்தையும் தண்டனையையும் அவன் ஏற்றுக்கொண்டால் இது நீதியாகுமா? பிறர் குற்றத்தைத் தன்மேல் சுமத்திக் கொள்வது தியாகமாகவும் இருக்கலாம். அல்லது அச்சுறுத்தலினாலும் இருக்கலாம். எப்படியும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஆகவேதான் குற்றவாளிகள் குற்றச் செயல் புரிந்துவிட்டதாகத் தானே ஏற்றுக்கொண்டாலும் அவர்களைக் குற்றவாளிகள் என்று சட்டம் ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்குவது இல்லை. அவர்கள் குற்றம் நிருபிக்கப்படும் வரையில் கொலைக் குற்றவாளி (Murderer) உட்பட அனைவரும் 'நிரபராதி' என்றே நீதிமன்றம் கருதுகிறது.

குற்றவாளி யார் என்பதை ஆராய்ந்தோம். அடுத்து, குற்றவாளியென்பது எதுவரையில்? என்ற வினா எழுகிறது அல்லவா? நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட பிறகுதான் குற்றவாளி என்று ஆராய்ந்தோம். அப்படியென்றால் அந்தக் 'குற்றவாளி' என்ற சொல் எது வரையில் நிலைத்து நிற்கும், அதாவது அபராதமோ, சிறைத் தண்டனையோ விதித்தால் அபராதத்தைச் செலுத்துகின்ற வரையில் குற்றவாளியா? அல்லது சிறைத் தண்டனைக் கழியும்வரை குற்றவாளியா? என்ற வினா

எழுகிறது. இதற்கு அவ்வளவு எளிதில் விடை காணமுடியாது. ஏன் என்ருல் சமுதாயத்தில் நற்பெயருடன் விளங்கியவன்மீது 'குற்றவாளி', 'சிறைக் கைதி', என்ற கறைபடிந்து விடுகிறது. அந்தப் பழிச்சொல், கறை, சமுதாயத்தில் எவ்வளவு நாட்கள் நிலைத்து நிற்கும் என்பதுதான் இப்பொழுது உள்ள கேள்வியாகும். 'குற்றவாளி' என்ருல் சதுதாயத்திற்கு எதிரானவன், சட்டத்தை மீறியவன், நாடோடி, குடிகேடன், குடும்பத்திற்கு ஆகாதவன், சமுதாயத்திலிருந்து கழிக்கப்படவேண்டியவன், கழிப்பொருளுக்குச் சமமானவன் (Social Excrement) என்றெல்லாம் கூறி அவனைப் பழிக்கிருர்கள். சில குற்றவாளிகள் வாழும் வரையிலும் குறிப்பாகக், கொலைக் குற்றவாளியை 'கொலைகாரன்' (Murderer) என்றே கூறுகின்ருர்கள். அவன் இறந்த பிறகும் அவனுடைய குடும்பத்தை 'கொலைகாரக் குடும்பம்' என்று அழைக்கிருர்கள். இத்தனைக்கும் அவன் ஆயுள் தண்டனையோ அல்லது 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையோ அனுபவித்து வந்த பிறகு, அவன் சாதாரண மனிதனுக இருக்கும் போதும் அவனைக் 'கொலைகாரன்' என்றும் அவனுடைய குடும்பத்தைக் 'கொலைகாரக் குடும்பம்' என்றும் சமுதாயத்தால் அழைக்கப்படுகின்றது அல்லவா? இதனுல் சமுதாயத்திஞல் அவன் தகுதி, குடும்ப கௌரவம் ஆகியவை பாதிக்கப்படுகிறது அல்லவா? ஒருவன் தன் குற்றத்திற்காக தண்டனை அனுபவிக்கும் காலம் வரையில் குற்றவாளி என்று கருத இடமுண்டு. அதற்குப் பிறகும் அப்படி அழைப்பது எப்படி நீதியாகும். குற்றவாளியென்று தொடர்ந்து அழைப்பதற்கும் காரணம் உண்டு. அதாவது டாக்டர், வழக்கறிஞர், இன்ஜினியர், மின் ஆய்வாளர், குழாய் பழுது பார்ப்பவர், கட்டடக் கலைஞன் முதலியவர்களை அவர்கள் தொழிலைக் கொண்டு பெயரிட்டு அழைப்பதைப் போன்று குற்றவாளிகளையும் அவர்களின் குற்றத்தைக் குறிப்பிட்டு அழைக்கிருர்கள், அதாவது கொலைகாரன், தாலி அறுத்தான், ஜேப்படித் திருடன், கள்ளக் கடத்தல் மன்னன் என்று அழைக்கப்படுகிறது. மேற்சொன்னவை தொழிலாளிகளால் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் அந்தத் தொழில் பழக்கத்தில் அறிவும் தெளிவும் ஏற்படுதல்போல குற்றவாளிகளின் குடும்பத்தின் அங்கத்தினரிடையேயும் குற்றவாளிகளின் பழக்கங்கள் காணப்படலாம் அல்லவா? தந்தை திருடனுக இருந்தால் பிள்ளைக்கும் அதில் பயிற்சி இருக்கும் இல்லையா? குற்றவாளிகளின் ஒழுக்கம் குற்றவொழுக்கமாகவும், அவர்கள் எண்ணம். செயல், எல்லாம் சட்டத்தை முறியடிப்பதற்கும், சமுதாயத்தைப் பழிவாங்குவதற்கும் பயன்படுத்தப் படுகிறது. ஒருமுறை திருடியவன் மறுமுறை திருடும்போது

முன்னைவிட அதிக எச்சரிக்கையுடன் அவன் செயல்படலாம் அல்லவா? இது மற்ற ஒழுங்கான தொழில்களிலும் அப்படித்தான் அமைந்திருக்கிறது. டாக்டரின் ஒழுக்கம் மருத்துவத்தைப் பற்றியும். நோய்களைக் குணப்படுத்துவதைப்பற்றியும் அமைகிறது. இதனால் மருத்துவத்தில் டாக்டரின் திறமை அதிகரிக்கிறது. ஆனால் குற்றவாளியின் ஒழுக்கம் குற்ற ஒழுக்கம்தான். குற்றத்தை எப்படிச் செய்வது, அதிலிருந்து எப்படித் தப்புவது இவைதான் அவன் எண்ணம் ஆகும். இதனால் குற்றவாளியின் திறமை அதிகரித்து விடுகிறது. ஆகவே குற்றவாளி என்ற சொல் எது வரையில் இருக்கும் என்று சட்டத்தால் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனால் கொலைகாரனுக்கு, திருடன், கற்பழித்தவன், கொள்ளைக்காரன், மோசடி செய்தவன் ஆகியோருக்கு அரசாங்கம் உரிய பதவிகளை வழங்காது என்பது மட்டும் உண்மை. 'குற்றவாளி' என்ற பெயர் நிலைத்து விடுவதனால் அவனைத் திருமணம் செய்து கொள்ளும் மணப் பெண்ணும் யோசிக்கிறாள். அவனுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் கிடைக்காமலும் போய்விடுகிறது. மேலும், அவன் குற்றவொழுக்கம் உள்ளவர்களையே நாடுகிறான். இதனால் மேலும் அவன் கடுங் குற்றங்களையே புரிய வாய்ப்புண்டாகிறது. இதைத் தடுக்க 'குற்றவாளி' என்ற சொல் எது வரையில் பயன் படுத்தலாம் என்பதற்கு முடிவு எடுக்கப்பட வேண்டும். இதற்காக குற்ற இயல் வல்லுநர்கள், சமுதாயவியல் வல்லுநர்கள், உளவியல் வல்லுநர்கள் ஆகியோர் ஆராய்ந்து முடிவு காணுதல் வேண்டும்.

குற்றவியல் அறிவியலாகக் கருதக் கூடிய சாத்தியக் கூறுகள் (Possibility of Science of Criminology)

குற்றவியல் அறிவியலா? (Science) இல்லையா? என்ற வினா எழுப்பப்படுகிறது. தற்பொழுது இது அறிவியல் துறையைச் சார்ந்தது என்று கூற முடியாது. ஆனால், வருங்காலத்தில் குற்ற வியல், அறிவியல் துறையில் பாடப்பிரிவாக வருவதற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன என நம்பலாம். குற்றவியல், அறிவியல் பிரிவாக நிரூபிக்கப்படும் நிலை வந்தாலும் ஆச்சிரியப்படுவதற் கில்லை. தற்பொழுது குற்றவியல் (Criminology) ஏன் அறிவிய லாகக் கருதப்படவில்லை என்ற வினா எழலாம் அல்லவா? முதலில் அறிவியலுக்குள்ள சிறப்புக் குணங்களைக் காணலாம். அறிவியலுக்கு, எல்லாக் காலத்திற்கும், எல்லாவற்றிற்கும் பொருந்தக் கூடிய ஆய்வுப் பொருள்கள் (Propositions) எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய (Universal Validity) கருத் துப் பொருள்கள், அடிப்படைக் கூறுகள் ஆகியன ஒரே தன்மை யாக (Homogeneous) இருக்க வேண்டும். இதன் அடிப்படையில்

அமைந்ததுதான் அறிவியல். ஆனால் குற்றவியலில் அவ்வாறு எல்லாக் காலத்திற்கும் எல்லாக் குற்றவாளிகளும் பயன்படுத்துகிற தொழில் நுட்பங்கள், உத்திகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குற்றவாளிகள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காரணக்கூறுகளும் எல்லாக் குற்றங்களும் எல்லாக் குற்றவாளிகளின் உணர்ச்சிகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குற்றத்திற்குக் குற்றம், குற்றவாளிக்குக் குற்றவாளி, சட்டம், காலம், இடம், செயல், வயது, சூழ்நிலை முதலியவை வேறுபடுகின்றன. உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரே கருத்துரைகளும், ஆய்வுப் பொருள்களும் இதில் அமைந்துவிட முடியாது. குற்றவாளிகளின் குற்ற ஒழுகலாற்றை (Criminal behaviour) அதாவது குற்ற ஒழுக்கத்தை அறிவியலினால் ஆராய முடியாது. மனிதனின் எண்ணம், உணர்ச்சிகள், மனப்பாங்குகள், செயல்கள் முதலியன நபருக்கு நபர் வேறுபடுகிறது. ஒரு சூழ்நிலையில் உணர்ச்சி வசப்படக் கூடியவன் அதே சூழ்நிலைக்கு மற்றொரு நபர் உணர்ச்சி வசப்படாமல் இருக்கக் கூடுமல்லவா ? கொடுமைகளை எளிதாகத் தாங்கும் இதயம் படைத்தவர்களும் உண்டு. எதையும் தாங்கும் இதயம் இல்லாதவர்களும் உண்டு. அகவே குற்றங்கள் உள்ளத்தின் உணர்ச்சியால் செய்யப்படுகின்றன. உணர்ச்சியை அளந்து அறியக்கூடிய விஞ்ஞானக் கருவிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும் அறிவியல் சார்ந்த ஆய்வுப் பொருள்களைக் கொண்டு, செய்முறைப் பயிற்சியினால் விளைவுகளைச் செய்து காட்டுகின்றார்கள். அதேபோன்று சிறைகளையும், கைதிகளையும், ஆராய்ந்து ஆய்வு செய்தால் அதன் முடிவுகள் ஒரே மாதிரியாக இருக்காமல் ஒன்றுக்கொன்று மாறுபடும். இதற்குக் காரணம் சமுதாயம் ஒரே தன்மையாக இருப்பதில்லை. அடிக்கடி மாறும் தன்மை கொண்டது ஆகும். மனித வாழ்க்கையில், பஞ்சம், பட்டினி, சண்டை சச்சரவுகள், பொறுமை, போட்டாப் போட்டிகள், அன்பு, பாசம். உறவு, கோபம், தாபம், அறிவு, அறியாமை, அனுபவமில்லாத நிலை இப்படிப் பலப்பல உணர்ச்சி இயல்புகள் ஏற்படுகின்றன. இவை எங்கே, எப்பொழுது, எப்படி ஏற்படும் என்று யாரும் முன்கூட்டிக் கூறிவிடமுடியாது. இவற்றை முன்கூட்டியே கூறமுடியுமானால் குற்ற இயலையும் அறிவியலைச் சார்ந்த பிரிவாகக்கொள்ள இடம் உண்டு. குற்றங்களுக்கு மேற்கூறியவைதாம் காரணக் கூறுகளாக விளங்குகின்றன. அவற்றின் தோற்றம், அதிகரிப்பு, குறையும் தன்மை முதலியவற்றை அளந்துவிட முடியுமானால் குற்றங்களுக்கும் வரையளவு காணலாம். பொதுவாக எல்லாக் குற்றங்களுக்கும் பொதுவான வரையறை காணுவது முடியாத செயல் ஆகும். குற்றங்களின் கருப்பொருள்கள் நாட்டுக்கு நாடு

மாறுபடுகின்றன. மேலும் சட்டமன்றங்களும், பாராளுமன்றங்களும் ஒரேவகையான வரையறைகளை வழங்கமுடியாது. குற்றங்களின் வரையறைகள், கருத்துப் பொருள்கள் ஆகியவை அந்தந்த நாட்டின் சமுதாயப் பழக்கவழக்கங்களின் அடிப்படையைக் கொண்டும், மக்களின் மனஎழுச்சிக்கு ஏற்றவாறும் வழங்கப்படுகின்றன. இவைதான் குற்ற வரையறைகள் மாறுபடுவதற்குக் காரணமாகும். ஆனால் ஒரு குறிப்பிட்ட சில குற்றங்களில் இருந்தாவது பொதுவான வரையறைகள் (General Definition) வழங்குவதன் மூலம் குற்றவியலை, அறிவியல் சார்ந்த பிரிவாக மாற்ற முயற்சி மேற்கொள்ளலாம். அதாவது மருத்துவ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சிசெய்து குறிப்பிட்ட நோயினை (Disease) ஆராய்ந்து அதன் தன்மைகள், தடுப்பு முறைகள், போக்கும் முறைகள் ஆகியவற்றைக் கண்டறிவதுபோல. குறிப்பிட்ட குற்றத்திற்கு வரையறை வழங்கி அதன் தன்மை, தோற்றம், தடுக்கும் முறை, செயல்படும் முறை, அதற்குப் பரிகாரம் ஆகியவற்றை ஆராய்ந்து அறிய வாய்ப்புண்டு. இதற்குக் குற்றவியல் வல்லுநர்கள் முழுமூச்சுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கண்டறிதல் வேண்டும். சட்டசபைகள் வழங்கும் வரையறைகளை நீக்கிவிட வேண்டும், அவை அவர்கள் கொள்கைக்கு ஏற்றவாறு அமைந்துவிடும். எடுத்துக்காட்டாக 'தைரியம்' (Courage) என்ற வார்த்தை இடத்துக்கு இடம், நபருக்கு நபர் மாறுபடுகிறது. 'தைரியம்' என்பது ஒழுக்கத்தைக் (Behaviour) குறிக்கிறது. திருடன் திருடுவதை தைரியமான செயலாகக் கருதுகிறான். ஆனால் திருட்டுக்குள்ளானவன் (Victim) திருடனைப் பிடிப்பதுதான் தைரியம் என்று கருதுகின்றான். 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்று வள்ளுவர் கூறுகிறார். ஆகவே, தைரியம் அல்லது துணிவு என்ற ஒரே ஒழுக்கம், நபர்களைப் பொறுத்து மாறுபடுகிறது. இந்த ஒழுக்கம் நல்லவனிடம் உள்ளபோது நன்மையும், தீயவனிடம் உள்ளபோது தீமையும் ஏற்படுகிறது. ஆனால் அறிவியல் துறையில் ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் இடமாற்றத்தாலோ, நபர் மாற்றத்தாலோ அதன் தன்மை மாறிவிடாது. அதன் விளைவும் மாறிவிடாது. ஆனால் குற்றத்தில் மாறிவிடுகிறது என்பதைப் பார்த்தோம். ஒரே ஒழுக்கம் இரு செயல்களைச் செய்து விடுகிறது. குற்றங்கள் மனிதப் பண்பின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. மனிதப் பண்புக் கூறுகளுக்கு (Personality) வரையறை வழங்கமுடியாது. கற்றறிந்தவர்களைச் சான்றோர் என்கிறோம். கல்லாதவர்களைப் புண்ணுடையோர் என்கிறோம். ஆனால் கற்றறிந்தவர்கள் குற்றம் செய்யும் போது அவர்களும் கயவர்களாக ஆகி விடுகின்றனர். படித்தவன் சுவாசிப்பதும் பிராணவாயுதான் (ஆக்ஸிஜன்

தான்) படிக்காதவன் சுவாசிப்பதும் பிராணவாயுதான். இதில் யாதொரு மாறுபாடும் இல்லை. ஆனால் பண்புக் கூறுகள் வேறு படுகின்றன. அவை எப்படி வேறுபடுகின்றன, எங்கே வேறு படுகின்றன, ஏன் வேறுபடுகின்றன என்று கூறமுடியாது. மேலும், மனித இயல்புகள், பண்புக் கூறுகள் ஆகியவற்றை ஒருவன் ஒரு செயலைச் செய்த பிறகுதான் அறிய முடிகிறது. இதற்கு முன்னால் அவன் குண இயல்புகள், பண்புக் கூறுகள் அறிய முடியாததாய் உள்ளன. முன்கூட்டியே மனித குணங்களை அறிய முடியு மேயானால் குற்றவாளிகளுக்கு வரையறை அளித்துவிடலாம். குற்றங்களுக்கும் வரையறை அளித்துவிடலாம். அதனால் குற்றங் கள் நிகழாவண்ணம் தடுத்துவிடலாம். இந்தப் பருவக்காற்று வீசினால் மழை பொழியும் என்று கூறுவதைப்போல இந்தந்த பண்புக் கூறுகள் மாறுபாட்டினால் இன்னின்ன குற்றச் செயல்கள் நிகழும் என்று முன்கூட்டியே கூறிவிடலாம் அல்லவா? ஒருவன் நல்லவனாக இருந்தவன் திடீரென்று குற்றவாளியாக மாறிவிட வாய்ப்புண்டு. குற்றம் செய்வதற்கு முன் அவனுடைய பண்புக் கூறுகள் போற்றப்படக் கூடியதாக இருந்தன. அப்பொழுது அவன் பின்னர் குற்றத்தைச் செய்வான் என்று எப்படிக் கூற முடியும், அல்லது கருத முடியும். அப்படித் தெரிந்தால் உடனே நாம் முன்னெச்சரிக்கையாக இருந்துவிடலாம் அல்லவா? (உதாரணம்) நம்பிக்கை மோசடிக் குற்றம் (Criminal Breach of Trust). ஆகவேதான் குற்றவியல், அறிவியல் பிரிவாக ஆகமுடியாத நிலை உள்ளது. ஆனால் சட்டம் இயற்றும் முறையைப் பற்றியும், சட்டத்தை மீறும் முறைகளைப் பற்றியும், சட்டத்தை மீறுவதால் விளையக்கூடிய எதிர்ப்புச் செயல்களையும் அதன் விளைவுகளையும் தொடர்ந்து படிப்பதால் சட்டத்தின் கருத்துக் கொள்கைகள், பண்புக் கூறுகள், திறமை முதலியவை அதிகரிக்கும். இதனால் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் முறைகளையும், தடுக்கும் முறை களையும் ஆராய்ந்து அறிந்தால் குற்ற இயலில் பயனுள்ள பண்புக் கூறுகள், கருத்துக் கூறுகள் உள்ளன என நாம் பெருமகிழ்ச் சியோடு விளங்க வாய்ப்புண்டு அல்லவா? இதன் அடிப்படையில் குற்றவியலில் அறிவியல் வளர்ச்சியடைவதற்கு வழி ஏற்படும்.

குற்றப் பிரச்சினை (Problem of Crime)

சமுதாயத்தில் சீரிய பிரச்சினையாக உள்ள குற்றத்தின் கொடு மைகள் விளக்கப்பட வேண்டும். பொதுமக்கள் குற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள், பலியாகின்றார்கள் என்பது தான் குற்றத்திற்கான உண்மையான வரையறையாகும் (Definitions). குற்றம் நடந்து விட்டது என்றால் அதனால் மற்றவர் கள் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு விட்டார்கள் என்பதுதான்

பொருளாகும். ஆகவே குற்றத்தால் பொதுமக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ பல நட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். நாட்டுத் துரோகக் குற்றம், திருட்டுக் குற்றம், கொள்ளை, பொதுச் சொத்தை அழித்தல், வன்புணர்ச்சி, கொலைக் குற்றம், உடலுக்கு ஊறு விளைவித்தல் ஆகிய குற்றங்களினால் பொதுமக்கள் நேரிடையாகவே பாதிக்கப்படுகின்றார்கள். நாட்டில் ஒழுங்கு, அமைதி, ஆகியவற்றை நிலைநாட்டவும், மக்கள் அச்சமின்றி நலமாக. வளமாக வாழவும் காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைச்சாலை ஆகியவற்றை நிர்மாணப்படுத்துவதற்காகச் செய்யப்படும் செலவினங்கள் மக்களை மறைமுகமாகப் பாதிக்கும் வழிமுறைகளாகும். நாட்டின் வருமானத்தில் ஒரு பங்கு மேற்கூறிய காரணத்திற்காகச் செலவிடப்படுவதால் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனும் குற்றத்தால் பாதிக்கப்படுகிறான் என்பது புலனாகும். இத்துடன் சில வேளைகளில் தனிப்பட்ட நபர்களும் குறிப்பிட்ட முறையில் குற்றத்திற்குப் பலியாகிவிடுகின்றார்கள் என்பது நாடறிந்த உண்மை. (எடுத்துக்காட்டாக) கொலைக் குற்றம், திருட்டு, அடி, உதை, மோசடி போன்ற குற்றங்கள் ஆகும். இதைத் தவிர தனிப்பட்டவர்கள் பெற்றிருக்கும் நன்மதிப்பையும் இழந்து விட நேரிடுகிறது. அதாவது கற்பழிப்பால் பாதிக்கப்பட்ட பெண் சமுதாயத்தில் கௌரவத்தை இழந்து விடுகிறாள் அல்லவா? மனித வாழ்க்கைக்குப் பணம், பாதுகாப்பு, சொத்து முதலியன அடிப்படைத் தேவைகள். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும், தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவை பெரிதும் பயன்படுகின்றன. அமெரிக்காவில் ஒரு வருடத்திற்கு 10,000 பேர் மனித கொலைக்கு (Homicide) பலியாகிறார்கள். இதில் மூன்றில் ஒருபங்கு கொலைக் குற்றமாகும் (Murder). இந்தியாவில் 10·7 மணிக்கு ஒரு கொலைக் குற்றமும், பீகாரில் 3மணிக்கு ஒரு கொலைக் குற்றமும், ஒவ்வொரு மணிக்குக் கன்னக்கோல் குற்றமும், ஒரு நாளைக்கு 5 கால்நடை திருட்டும் 57 சாதாரணத் திருட்டும் ஒரு மணிக்கு ஒரு கலகக் குற்றமும், 3 மணிக்கு ஒரு ஏமாற்றுதல் குற்றமும் நடைபெறுவதாகப் புள்ளிவிவரம் கூறுகின்றது. திருட்டு, கொள்ளை இவற்றால் ஏற்படும் நட்டத்தை விட மோசடியான சூதாக உள்ள இருப்புச் சரக்கு சேமிப்பு (Fraudulent Stock) பத்திரம் வழங்குதல் (Bond issues) மோசடியான வணிகத்தால், ஏற்படும் பொருள் நட்டம் அதிகமாகும். (எடுத்துக்காட்டு) அமெரிக்காவில் ஒரு வருட புள்ளிவிவரத்தில் கன்னம் வைத்துத் திருடுதல் (Burglary) 500ம், கொள்ளைக்குற்றம் 500ம் ஆக மொத்தமாக பொருள் நட்டம் வருடத்திற்கு டாலர் 1,00,000 ஆகும். ஆனால் இதே நேரத்தில் ஒரே வருடத்தில் நடந்த, ஒப்பு

விக்கப்பட்ட உடைமையை மோசடியாகக் கையாடிய குற்றங்கள் (Embezzlement) 6,00,000 டாலருக்கு மேலாகும். இந்தியாவில் 1 நாளைக்கு 20,000 ரூபாய் மதிப்புப் பொருள்கள் திருடப்பட்டு வருகின்றன என ஒரு புள்ளிவிவர அறிக்கை கூறுகின்றது.

குற்றம் இழைக்கப்படுவதால் சமுதாயத்தில் தகுதியை இழந்துவிடுகிறார்கள் என்று முன்பே கூறப்பட்டது அல்லவா? வன்புணர்ச்சிக்கு (Rape) உள்ளாவதால் பெண்கள் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். ஒருவன் விபச்சாரக் குற்றத்திற்காகத் தண்டனை வழங்கப் பட்டால் அவனுடைய சொந்தக்காரர்களும் சமுதாயத்தில் கௌரவத்தை இழந்துவிட நேரும் அல்லவா? இதைப் போன்றே ஒருவன் கொலைக் குற்றத்திற்காகவோ அல்லது நம்பிக்கை மோசடிக் குற்றத்திற்காகவோ தண்டிக்கப் பட்டால் அவனுடைய குடும்பமும் பிற்காலச் சந்ததிகளும் பாதிக்கப்படுகின்றார்கள். சமுதாயத்தில் கௌரவத்தை இழந்து விடுகின்றார்கள். இதன்மூலம் குற்றத்தின் விளைவால் சமுதாயத்தில் அடிக்கடி கௌரவத்தையும், தகுதியையும். இன்பத்தையும் இழந்துவிட நேரிடுகின்றது. இந்த உண்மைகளை குற்றவாளிகளோ மற்றவர்களோ உணர்ந்துகொள்ளமாட்டார்கள். எடுத்துக் காட்டாக, சிறுவர் தொழிற் சட்டத்தை (Children Labour Law) மீறி சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். இந்தக் குற்றத்தினால் சிறுவர்களுக்குப் பேரிழைப்பு ஏற்பட்டுவிட்டது என்பதைப் பெற்றோர்களோ அல்லது சிறுவர்களோ நினைத்துப் பார்த்தார்கள் இல்லை. இதனால் சிறுவர்களின் கல்வி, வளர்ச்சி இதர முன்னேற்றங்கள் தடைப்பட்டு விடுகின்றன. இதை, சிலர் தம் வாழ்க்கை முழுதும் எண்ணிப் பார்க்காமலே காலம் கடத்திவிடக்கூடும். ஆக, குற்றங்களால் சமுதாயத்தில் பெருங் குழப்பமும், அச்சமும், பொருள் நட்டமும் விளைவதுடன் குடும்ப கௌரவம், சமுதாயத்தகுதி ஆகியவற்றை இழந்து, அதனால் அமைதியற்ற வாழ்க்கையும், மகிழ்ச்சியற்ற வாழ்க்கையும்தான் மிஞ்சுகிறது. ஒரு குற்றத்தால் சமுதாயமே பாதிக்கப்படுகிறது என்றால் தனிப்பட்ட குடும்பத்தைப் பற்றிச் சொல்வானேன்.

குற்றத்தால் சமுதாயம் எப்படி பாதிக்கப்படுகிறது? அதாவது நேரிடையான வன்முறைச் செயல்கள் (Personal Violence) எப்பொழுதும் ஒரே குழுவிற்குள் நிகழக்கூடும். ஏதோ சில அபூர்வ வேளைகளில் மற்ற குழுக்களுடன் நிகழக்கூடும். அதாவது, சண்டை, அடிதடி, கலகம் ஆகியவை எப்படித் துவங்குகின்றன என்றால், முதலில் உறவினர்களுக்குள்ளும் பிறகு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சண்டை போடலாம். பக்கத்துத் தெரு

வுடன் சண்டை போடலாம். இப்படித்தான் சண்டை துவங்குமே தவிர புதிய நபர்களுடன் சண்டையோ அல்லது கலகக் குற்றமோ நிகழாது. ஆனால், திருட்டு, கொள்ளை, கொலை, வன்புணர்ச்சி ஆகியவை புதிய இடத்தில் புதிய ஆட்களிடம் செய்யப்படலாம். சதர்லாண்டு (Sotherland) இதையேதான் எடுத்துக்காட்டு கின்றார். அதாவது, ஒரு நீக்ரோ மற்றொரு நீக்ரோவைக் கொலை செய்கிறான். இத்தாலியன், இத்தாலியனைக் கொலை செய்கிறான். சீனன் மற்றொரு சீனனைக் கொலை செய்கிறான். அதாவது, பொறுமையின் அடிப்படையில் செய்யப்படும் குற்றங்கள் யாவும் நண்பர்கள் குழாமிற்குள்ளும், ஒரே இனத்திற்குள்ளும், ஒரே குழு விற்குள்ளும் நிகழும். பழக்கம் இல்லாதவர்களின்மீது யாரும் பொறுமைப்படுவதில்லை. அவர்களைப் பழிவாங்கவும் நினைப் பதில்லை. ஆகவேதான், 'தான் கெட்டாலும் தன்னுடைய பங்காளி, உறவினன் ஆகியோர் முன்னேறக்கூடாது' என்ற கொள்கையின் அடிப்படையில்தான் இன்று ஏராளமான குற்றங் கள் செய்யப்படுகின்றன. நபருக்கு எதிரான குற்றங்கள், நேரி டையான தாக்குதல், சிறுகாயம் ((Hurt), பெரும் காயம் (Grievous Hurt) வன்முறைச் செயல்கள் ஆகிய குற்றங்களில் பெரும்பாலும் குற்றவாளிகளுடன் தொடர்புள்ளவர்கள்தான் தாக்கப்படுகிறார்கள். ஆனால் வழிப்பறிக் கொள்ளை, மோசடிக் குற்றம், கன்னம் வைத்துத் திருடுதல், பத்திர விற்பனை, போலி விளம்பரங்கள் ஆகிய குற்றங்கள் பெரும்பாலும் அறிமுகம் ஆகாத வர்களிடத்தில்தான் செய்யப்படுகின்றன. பொதுமக்களுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் பகையின் காரணத்தால் செய்யப்படுபவை அல்ல. அது குற்றவாளியின் உள்நோக் கத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த வகைக் குற்றங்கள் எல்லாம் பொருள் சம்பந்தமான குற்றங்களாகவே இருக்கும். கூட்டுக் கொள்ளைக் குற்றம் (Dacoity) அல்லது கொள்ளைக் குற்றம் (Robbery) இவற்றுடன் கொலைக் குற்றமோ அல்லது கொடுங் காயமோ இணைந்து இருக்கலாம். இந்தக் கொலைகளும் கொடுங் காயங்களும் பொருள் சேர்க்கும் நோக்கத்திற்காகச் செய்யப் படுபவை ஆகும். இவை இரக்கமற்றதாகவும், கருணையற்ற தாகவும், துடுக்கான செயலாகவும், அசட்டையானதாகவும் காணப்படும்.

அமெரிக்காவில் நேரிடையான குற்றம், மறைமுகமான குற்றம் இவற்றிற்கு ஏற்படும் ஒரு வருடச் செலவைக் கணக் கிட்டுள்ளார்கள். 20 முதல் 25 (Billion) நூறுகோடி டாலர் செலவிடப் படுவதாகக் கூறப்படுகிறது. இந்தக் கணக்கு பயனற்ற கணக்கு என்று சாடுகிறார் சதர்லாண்டு. இதற்காக

அவர் கூறும் காரணங்கள். (1) இவை வெறும் ஊகம்தான் (2) இதற்கு ஆதாரம் கிடையாது (3) சட்டப்படி செல்லாதவை. மேலும் அவர், எதிர்காலத்தில் குற்றங்களே செய்யப்படவில்லை என்றால் அப்போது குற்றங்களைத் தடுப்பதற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றால் எவ்வளவு டாலர் சேமிக்கப்படும்? என்ற வினாவை எழுப்புகிறார். ஆனால் சமுதாயத்தில் குற்றங்கள் நிகழாத நாடாக மாற்றவேண்டுமானால் சமுதாயத்தைக் குற்றங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் இப்பொழுது ஆண்டிற்கு குற்றத்திற்காக செலவிடப்படும் தொகையைவிட அதிக அளவு தேவைப்படும் என்று கூறுகிறார் சதர்லாண்டு. சதர்லாண்டு கூறுவதைப் போல வெறும் தொகையை மட்டும் அதிகமாக ஒதுக்கிவிட்டால் குற்றங்களை அறவே எடுத்துவிட முடியுமா என்ன? அதிக செலவீடுகளினால் திருட்டு, கொள்ளை, கூட்டுக்கொள்ளை, வழிப்பறிக்கொள்ளை, மோசடிக் குற்றங்கள், போலி விளம்பரங்கள், பொய் பத்திரம் வழங்குதல் ஆகிய குற்றங்களைத் தடுத்துவிடலாம். இவை பெரும்பாலும் ஒழுங்கமைக்கப்பட்ட (Organized Criminals) குற்றவாளிகளால் செய்யப்படுகின்றன. ஆகவே காவல் துறையினரின் கைத்திறத்தால், நுட்பத்தால் அவர்களைக் குற்றம் செய்யாதவாறு தடுத்துவிடக் கூடும். அதிகமான காவல் துறையினரை நியமித்தல், முன்னெச்சரிக்கையாகப் பல வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றால் தடுத்துவிடலாம். ஆனால் பகைமையின் காரணத்தால், உணர்ச்சி வசத்தால், உள்ளக் குழப்பத்தால், செய்யப்படும் குற்றங்களை எப்படித் தடுத்துவிடக் கூடும்? இவை எங்கே, எப்படித் தோன்றும் என்று யாரும் முன்கூட்டிச் சொல்ல முடியாது அல்லவா? ஆதலால் நாட்டிலுள்ள மக்களின் நிலையும், மன நிலையும், வாழ்க்கையும் வளப்படுத்தப்பட்டால் ஒருவேளை குற்றமே நடக்காதபடித் தடுத்துவிடலாம். இந்த நிலை அடைவதற்குப் பொருட்செலவு மட்டும் போதாது. மக்களின் தளராத உழைப்பும், ஒத்துழைப்பும், மனம் மாறாத கடமை மறக்காத காவல் துறை அதிகாரிகளும் தேவைப்படுகின்றார்கள். இவற்றைப் பெறுவது கடினம் அல்லவா? ஆகவே குற்றங்களைத் தடுப்பதற்காக இப்பொழுது செய்யப்படும் செலவைவிட பல மடங்கு அதிகமாகச் செலவு செய்தாலும் ஓரளவிற்குத்தான் கட்டுப்படுத்த முடியுமே தவிர, சதர்லாண்டு கூறுவதுபோல குற்றமற்ற நாட்டை, சமுதாயத்தை (Crimeless Society and State) அமைப்பது முற்றிலும் முடியாத செயலாகும்.

குற்றங்களால் சமுதாயத்திற்குச் சில நன்மைகளும் ஏற்படுவதாக சதர்லாண்டு கூறுகிறார். கொள்ளை, கூட்டுக் கொள்ளை,

கொலை, வன்புணர்ச்சி ஆகிய குற்றங்கள் நிகழும்போது சமுதாயத்தில் ஒற்றுமை நிலவுகிறது. அதாவது போர்க் காலங்களில் நாட்டில் ஒற்றுமை காணப்படுவது போல மேற்கூறிய குற்றங்கள் நிகழும்போதும் சமுதாயத்தில் ஒற்றுமை நிலவுகிறது. குற்றங்களால் ஏற்பட்ட நட்டத்தை இது சரி செய்துவிடுகிறது என்று பல வல்லுநர்கள் கூறுகின்றனர்கள். கொள்ளைக் கூட்டத்தாரை விரட்டியடிப்பதற்கு சமூகம் ஒன்றுபடுகிறது என்பது உண்மை தான். அதே நேரத்தில் இவ்வொற்றுமை வேறுபல குற்றங்கள் புரிவதற்கும் பயன்படுத்தப்படலாம் அல்லவா? மற்றொரு குற்றக் கும்பல் உருவாகவும் வாய்ப்பு இருக்கிறது. போர்க் காலங்களில் ஏற்படும் ஒற்றுமைக்கும் குற்றங்கள் நிகழும்போது ஏற்படும் ஒற்றுமைக்கும் வேறுபாடு உண்டு. போர்கள் தொடர்ந்து நடந்தாலும், மக்களிடம் ஒற்றுமை தொடர்ந்து இருக்கும். குற்றங்கள் நேரிடையாகத் தாக்கப்பட்டு வருகின்றன. இதனால் உணர்ச்சி வசப்பட்ட ஒற்றுமை நிலவுகிறது. குற்றங்கள் சிறிது நேரத்தில் நடந்து முடிந்துவிடுகின்றன. அதாவது குற்றம் நடந்து அதனைத் தடுத்துவிட்ட பிறகு பழைய நிலைமை உருவாகக் கூடும்.

சமுதாயத்தில் குற்றங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்க வேண்டும். ஆகவே குற்றவாளிகளைத் திருத்த வேண்டும் அல்லது வெளியேற்ற வேண்டும். இப்படியே மீண்டும் மீண்டும் குற்றவாளிகள் திருத்தப்படுவதாலும், வெளியேற்றப்படுவதனாலும் சமுதாயத்தின் தரம் உயரும் அல்லவா? பின் சமுதாயத்தின் அறம், ஒழுக்கம், பண்புகள் ஆகியவை சிறந்து விளங்கும். குற்றங்களே இல்லையெனில் சமுதாயத்தில் கடுமையான கட்டுப்பாடு உள்ளது என்பது பொருள் அல்லவா. சமுதாயச் சீர்குலைவு (Social disorganization) சமுதாயத்தில் ஒழுங்கற்ற தன்மை ஆகியவைதான் குற்றத்தின் அடையாளம். ஆகவே சமுதாயத்தை மறு சீரமைப்பதன் மூலமும், சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதன் மூலமும் குற்றங்களைத் தடுக்கலாம். காலம், நாகரிகம் இவற்றிற்கு ஏற்றவாறு சட்டங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

2. குற்ற ஆய்வும் அதன் வழிமுறைகளும்

(Analysis of Crime and Methods in Criminology)

குற்றங்களுக்கான காரண காரியத் தொடர்பு (Causation) களைப் பற்றிய முறையான ஆய்வு சமீப காலத்தின் தோற்ற மாகும். இடைக் காலத்திலும், தற்காலத்தின் தொடக்கத்திலும் குற்றங்களுக்கான ஒழுங்கற்ற, தெளிவற்ற, நிலையற்ற அநேக விளக்கங்கள் அறிவிக்கப்பட்டும் அவற்றையே பின்பற்றியும் வந்துள்ளார்கள். பண்டைய காலத்தில் தீய ஆவியின் (Devil) அல்லது பிசாசு, பேய் இவற்றின் தூண்டுதலினால் குற்றங்கள் நிகழ்கின்றன என்று நம்பினார்கள். அவையே மற்றவர்களுக்கும் விளக்கங்களாக அளிக்கப்பட்டு வந்தன. உள்ளார்ந்த கஷ்ட நஷ்டங்களுக்கும், கைப்பொருளை இழப்ப தற்கும் அதுவேதான் காரணம் என நம்பினார்கள். இவற்றைப் போன்ற மூட நம்பிக்கைகள் பண்டைக் காலத்தின் விளக்கங்க ளாக இருந்ததனால் உண்மையான, தெளிவான காரண காரியங் களையும் குற்றத்திற்கான நோக்கம், குற்றவாளியின் எண்ணம், கருத்து ஆகியவற்றைக் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட வில்லை. குற்றங்கள் தொடர்பாகவும் ஆராய்ச்சிகள் மேற் கொளளப்படவில்லை. குற்றச் சட்டங்களும் ஒழுங்காக, தெளிவாக, முடிவாக அமைந்திருக்கவில்லை. குற்றங்களைத் தடுக்கும் முறை களும் ஒரே சீராக, எளிமையாக அமைந்திருக்கவில்லை. குற்ற வாளிகளுக்குத் தண்டனை வழங்குவதிலும் ஒரே சீராக இருக்க வில்லை. முகமதியச் சட்டங்கள் (Code 3 Quaran) செயல் பட்ட போது முகமதியர்களுக்குச் சலுகையும், மனுநீதி (Code 3 Manu) சட்டங்கள் செயல் படுத்தியபோது பிராமணர்களுக்குத் தனிச் சலுகையும், மற்ற இனத்தவர்களுக்குத் தண்டனை வேறு விதமா கவும் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஆக ஒரே சீரான நீதிமுறைகள் வழங்கப்படவில்லை என்று சட்ட வரலாறு கூறுகின்றது. மேலும்

அந்தக் காலத்தில் குற்றத்திற்கான காரண காரியங்கள், உள் நோக்கங்கள், கருதிய எண்ணங்கள், சூழ்நிலைகள் மற்றும் குற்றத்திற்கான நேரடியான தொடர்புத் தூண்டுதலான நிலைமைகள், பண்பு முதலியவற்றைப் பற்றி அறிவதற்கு அக்கறை காட்டப்படவில்லை. தாறுமாறுன, ஒன்றிற்கொன்று ஒவ்வாத கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. குற்றவாளிகளுக்கு அளவற்ற, அதே நேரத்தில் கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தன. குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதைத் தெய்வச் செயலாகக் கருதினுர்கள். அந்தச் செயல்கள் தான் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் என்று நம்பினுர்கள். குற்ற இயல் வளர்ச்சியைப் பற்றிய வரலாற்றைக் காணுவோம்.

குற்ற இயல் ஆய்வுக் கழகங்களின் சுருக்கம் (Outlines of Schools of Criminology)

கடந்த இரண்டு நூற்றுண்டுகளாகக் குற்ற இயல் ஆய்வுக் கழகங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. குற்ற இயல் ஆய்வுக் கழகங்களின் கருத்துகள் யாவும் சிந்தனையின் அடிப்படை அமைப்பால் வளர்ந்த சிந்தனைக் கோவையாகும் (System of Thoughts). அந்த அமைப்பிற்குச் சிந்தனைக் கழகம் (School of Thought) அல்லது குற்ற இயல் ஆய்வுக் கழகங்கள் (Schools of Criminology) என்று பெயர். பலவகையான சிந்தனைக் கழகங்கள் தோன்றியுள்ளன. அவற்றின் தோற்றம், அமைப்புமுறை, அவற்றின் கருத்துகள் ஆகியவற்றைக் கீழே காணலாம்,

பொதுவாக, குற்றத்திற்கான காரண காரியங்கள், கருத்து, திட்டங்கள், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான காரணகாரிய கருத்துகள், குற்ற ஒழுக்கங்கள் ஆகியவற்றை ஆராய்வது இந்தக் கழகங்களின் பணியாகும். இக் கழகங்களின் வரையறைகளில் பொது மக்களிடையே வழங்கி வருகின்ற குற்றத்திற்கான அநேக விளக்கங்கள் இடம் பெறுமல் இருப்பதை வெளிப்படையாக அறிய முடிகிறது.

முதல் அல்லது பண்டைய கழகம் (Classical School) :— இதன் தோற்றம் **1775**. அறநூல் வகையில் இன்பமே சிறந்த நலம் (Hedonism) என்னும் கோட்பாடு உடையதாகும். ஆனுல் இது 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் வளர்ச்சியடைந்தது. பிறகு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் பரவியது. இது உள இயல் சார்ந்த இன்பவியல் (Hedonistic Psychology) என்னும் அடிப்படையில் அமைந்ததாகும். இதை

உள இயல் அடிப்படையில் நோக்கினுல், இன்பம் துன்பம் இவற்றின் அடிப்படையில் மனிதனின் ஒழுக்கம் அமைந்திருக்கிறது என்பது வெளிப்படும். ஒரு குறிப்பிட்ட செயலிலிருந்து இன்பத்தை எதிர்நோக்குவதைப்போல அதே குறிப்பிட்ட செயலிலிருந்து துன்பத்தையும் எதிர்நோக்கலாம் அல்லவா. இதனுல் அந்த எண்ணம் சரி செய்து விடக்கூடும் அல்லவா. அதாவது ஒரு செயலின் மூலமாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவு உள்ள இன்பத்தையும் துன்பத்தையும் பெறுவதைப் போலவே மற்ருெரு செயலினுல் அதே எண்ணிக்கை அளவுள்ள துன்பம் இன்பம் பெறுவதால் அவற்றைச் சமன் செய்துவிடக்கூடும்.

இதன் அடிப்படையில் நோக்கும்போது செயல்படுகின்றவர் (Actor) தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்படும் நிலைமையை உடையவர் என்ற ஊகம் உள்ளதால் அவர் தன் மன நிலைக்கு ஏற்ப இன்ப துன்பத்தைப் பொறுத்துச் செயலைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார். இதை நாம் அறிந்துகொண்டால் குற்றத்திற்கான காரண காரியங்கள் எளிதில் அறிந்துகொள்ள சிறப்பான, முடிவான, முழுமையான விளங்க்ககளாக அமைந்திருப்பது புலப்படும். மேலும். குற்றத்திற்கான காரண காரியக் கூறுகளை ஆராயவேண்டிய அவசியம் இருக்காது. அப்படி ஆராய்ந்தால் அது தேவையற்ற கற்பனை என்றே கருத வேண்டும்.

1764ஆம் ஆண்டில் பெக்கெரியா (Beccaria) என்பவர் தண்டனை இயலுக்கு (Penology) இந்தக் கோட்பாட்டின் கருத்துகளைப் பயன்படுத்தினுர். ஏற்கனவே உள்ள கொடூரமான தண்டனையைவிட எளிமையான தண்டனையை வழங்கவேண்டும் என்பது இவரது நோக்கமாகும். குறிப்பிட்ட சட்டத்தை மீறும் போது அதற்குரிய தண்டனையை எல்லோரும் வேறுபாடின்றி ஒரேவிதமான தண்டனையை அனுபவிக்க வேண்டும். அதற்கு வயது, மனநலம், செல்வாக்கு, செல்வம், சூழ்நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தக்கூடாது. மேற்சொன்ன காரணங்களுக்காக ஒருவருக்குத் தண்டனையைக் குறைத்தும் மற்றவருக்கு அதிகரித்தும் இன்னெருவருக்குக் குற்றத்திலிருந்து விடுதலை அளித்தும் இப்படி வேறுபட்ட நீதி வழங்கப்படக்கூடாது என வாதிட்டிருக்கின்ருர். எல்லாக் குற்றவாளிகளும் ஒரே மாதிரியாக நடத்தப்படுவதால் தனி மனிதனின் உரிமை, பாதுகாக்கப்படுவதற்கு இதுவே நேர்மையான, ஆதாரமான சான்ருகும் அல்லவா. இதனுல் சட்டத்தை மீறுவதனுல் கிடைக்கின்ற இன்பத்தையும் துன்பத்தையும் கணக்கிட்டு அறிந்துகொள்வதற்கு இது பெரிதும்

பயன்படும். மேலும் சட்டத்தை மீறுவதனால் கிடைக்கின்ற இன்பத்தைவிட தண்டனை சற்று அதிகக் கடுமையானதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தண்டனையின் கடுமையை எண்ணிப் பார்க்கவும், குற்றங்களைச் செய்ய அஞ்சுவதற்கும் ஏதுவாக அமையும் என்பது இதன் கோட்பாடாகும். உயர்ந்த இந்த நடுநிலைமைக் கொள்கை இரண்டு காரணங்களுக்காக விரைவில் மாற்றி அமைக்கப்பட்டது (1) குழந்தைகள் (2) புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் (பைத்தியக்காரர்கள்). மேற்கூறிய இருநிலையில் உள்ளவர்களும் அறிவாற்றலோடு, நல்ல சிந்தனையோடு இன்பத்தையும் துன்பத்தையும் எண்ணிப் பார்த்துச் செயல்படமுடியாத நிலையில் இருப்பதால் அவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மேலும், (அபராதங்களை) தண்டனைகளைக் குறிப்பிட்ட வரம்பிற்குள் அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் நீதிமன்றங்கள் விருப்புரிமையை (judicial discretion) சிறிய அளவிற்குப் பயன்படுத்த முடியும். தண்டனைகளுக்குத் தெளிவான வரையறை அளிக்காமல் பொதுவாக அமைந்திருந்தால் நீதிபதிகள் தம் விருப்புரிமையை அதிக அளவில் பயன்படுத்துவதற்கு ஏதுவாகிறது. இதனால் தண்டனை வழங்குவது மாறுபடுகிறது. ஆகவேதான் நீதிபதிகளின் விருப்புரிமையைக் கட்டுப்படுத்திவைப்பது அவசியமாகிறது. இந்த மாற்றங்களினால்தான் பண்டைய கழகத்தின் சிறப்புக் கொள்கைகள் குற்றச் சட்டத்தின் முதுகெலும்பாக அமைந்தது. தற்கால நீதிமன்றங்களும் புகழ் வாய்ந்த சிந்தனைக் கொள்கைகளை விடாது பின்பற்றும்படி வற்புறுத்தப்படுகின்றன.

உள இயல் அடிப்படையில் அமைந்துள்ள இந்தக் கழகத்தின் கொள்கைகளுக்குப் பொதுவான வினா எழுப்பப்பட்டுள்ளது. இது தனியுரிமைக் கோட்பாடு (Individualistic) ஆய்வறிவுக் கோட்பாடு (Intellectualistic) தன் விருப்பச் செயல் முறைக் கோட்பாடு (Voluntaristic) ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்து இருந்ததனால், குற்றங்களுக்கான காரண காரியத் தொடர்புகளை மேற்கொண்டு ஆராய்வதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இக்கழகத்தின் சிந்தனைகளை, கொள்கைகளை மற்ற கழகங்களும் பின்பற்றி வந்துள்ளன. ஆகையினால் இதற்கு நேர்நிலைக் கொள்கை (Positiuistic) என்று பெயர். இக் கழகத்தின் அடிப்படைக் கொள்கை இன்பம், துன்பம் என்ற அடிப்படையில் குற்றங்களை அணுகித் தண்டனை வழங்க வேண்டும் என்கிறது. ஒருவன் இன்பம் ஒரு செயலால் எந்த அளவிற்கு அனுபவித்தான் அதே

அளவிற்குச் சற்று அதிகமாகத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறது, இது நடைமுறையில் பின்பற்றக்கூடிய சாத்தியக் கூறுகளாகத் தென்படவில்லை. ஒரு செயலால் ஒரு வருக்கும் துன்பம் இல்லை என்ற நிலை வரும்போதும் அந்தச் செயல் குற்றமாகக் கருதப்படுகிறதே. அதாவது, விபச்சாரத் தினல் விபச்சாரிக்கோ அல்லது அவளுடன் கூடும் ஆட வனுக்கோ துன்பம் கிடையாது. இருவருக்குமே இன்பந்தான். இந்தக் கொள்கையின் அடிப்படையைக் கொண்டு நோக்கினல் விபச்சாரம் குற்றமாகக் கருதப்படக்கூடாது. ஆனல் மற்ற குற்றங்களைப் பொறுத்தவரையில் குற்றவாளியின் குற்றத்திற்கான நோக்கத்தையும் செயல்களையும் ஆராய்ந்துதான் தண்டனை வழங் கப்படுகிறது.

மேலும் அந்தக் காலத்தில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் தீங்குகளை மட்டுந்தான் குற்றங்களாகக் கருதி வந்ததனல் இன்ப துன்பக் கோட்பாடு ஏற்றதாக அமைந்திருந்தது. நவீன கால வளர்ச்சிக்கு இக்கொள்கை பொருந்துமா என்பது சந்தேகம்தான்.

நில இயல் சார்ந்த கழகம் (Cartographic School)

இதன் தோற்றம் 1830 ஆகும். இந்த இரண்டாவது குற்ற இயல் ஆய்வுக் கழகத்திற்கு நில இயல் சார்ந்த கழகம் என்று பெயர். இது சமீப காலத்தில் தோன்றிய சூழல் ஆய்வு இயலின் கொள்கையைப் (Ecological) போன்றதாகும். இந்தக் கழகத்தின் தலைவர்கள் பெரும்பாலும் நில இயலும், சமூகவியலும் (Social) இரண்டும் இணைந்து குறிப்பிட்ட நில பாகத்தில் குற்றங்கள் எப்படிப் பரவுகின்றன, எப்படிச் செய்யப்படுகின்றன என்பவை பற்றிய ஆய்வுதான் இக் கழகங்களின் நோக்கமாக அமைந் திருந்தது. இக் கழகங்களின் ஆய்வுரைகள், சமுதாய சூழற் பண்புகள் (Social conditions) தான் குற்றத்திற்கான தோற்றம் என்று பகர்கின்றன.

பிரான்சில் குவெட்லெட், A. M. குவேரி (Guetelet and A. M. Guerry) ஆகிய இருவர்களும் அந்தக் கழகத்தின் கருத் தைப் பரப்பும் தலைவர்களாக இருந்தனர். இவர்கள் பிரான்சு நாட்டைச் சார்ந்தவர்கள் ஆனல் அவர்களுக்குத் தங்கள் நாட்டிலும், ஜெர்மன், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் நிறைய தொண்டர்கள் இருந்தார்கள். 1830 முதல் 1880 வரையில் இந்தக் கழகம் தழைத்தோங்கி வளர்ந்திருந்தது. அவர்கள் குற்றங்கள் எப்படிப் பரவுகின்றன, குற்ற விகிதங்கள் ஏன் மாறுபடு கின்றன என்பவைகளுக்கு மட்டும் ஆய்வு நடத்தவில்லை. இளந்

குற்றவாளிகளின் தன்மைகளைப் பற்றியும், குற்றங்களையே தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட அல்லது குற்றத்தையே பிழைப்பாகக் கொண்டவர்களைப்பற்றியும் குற்ற வாழ்க்கைத் தொழில் (Professional Crime) பற்றியும் ஆராய்ந்து தற்கால இளங் குற்றவாளிகளுடனும் மற்ற குற்றவாளிகளுடனும் ஒப்பிட்டுப் 1880ஆம் ஆண்டிலிருந்த சிறப்புப் பண்புகளையும் ஆய்வு செய்துள்ளனர்.

லின்ஸ்மித்தும், லேவினும் (Lindsmith and Levin) அந்தக் காலத்தின் குற்ற ஆய்வியல் கோட்பாடுகளை மறு ஆய்வு செய்ய வில்லை என்றால் தற்கால குற்ற ஆய்வு வல்லுநர்களுக்கு அவற்றின் உண்மை தெரியாமலே இருந்திருக்கக் கூடும். அவர்களின் ஆய்வுதான் கருத்துப் பெட்டகங்களாக. நிறைய உள்ளன.

இந்த நிலஇயல் சார்ந்த கழகங்கள், நாகரிகம், மக்கள் அமைப்பு, மக்கள் தொகையின் அமைப்பு முதலியவைகளைக் கொண்டு ஆய்வு நடத்தினார்கள். நிலங்களின் அடிப்படையைக் கொண்டு அதாவது சமுதாயங்களின் அமைப்புகளைக் கொண்டு மக்கள் அதிகமாக வாழும் இடங்களில் குற்றம் நிகழ்வதற்கான காரணங்கள். பொதுவாக சமுதாயத்தில் குற்றங்கள் நிகழ்வதற்கான சூழ்நிலைகள் யாவை போன்ற காரணக் கூறுகளை ஆராய்ந்தார்கள். அதற்கான தேசப் படங்களையும் குற்றப்புள்ளி விவரங்களையும் சேகரித்தார்கள். இவைகளின் துணைகொண்டு குற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்தார்கள், இந்தக் கழகம் தற்கால ஆராய்ச்சிக் கழகங்களுக்கு ஒப்பானதாகும். நவீனகால கருத்துகளோடு குற்ற ஆய்வுகள் ஆராயப்பட்டுள்ளன. ஆகவே முதல் கழகத்தைவிட இக் கழகம் சிறப்பு வாய்ந்தாகக் கருதப்படுகிறது,

பொதுநலக்கழகம் (The Socialist School) இதன் தோற்றம் 1880 ஆகும். இந்தக் குற்ற இயல் பொதுநலக் கழகம் மார்க்ஸ் (Marx) ஏஞ்சல்ஸ் (Engles) முதலியவர்கள் கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இந்தக் கழகத்தின் முக்கிய கருத்துகள் பொருளாதாரத்தைப் பற்றியவையாகும். மனிதச் செயல், துணிவு, ஆற்றல் உள்ளடக்கங்களாக எல்லாச் செய்திகளும் புறப் பொருள் தூண்டுதலாற்றல்களாலேயே துணியப்படுகின்றன (Economic Determinism) என்னும் கோட்பாட்டை வலியுறுத்தினார்கள். குற்றங்களுக்கான முக்கிய காரணக்கூறு பொருளாதாரம் என்பதுதான் இந்தக் கழகத்தின் அடிப்படைக்

கொள்கையாகும். இதற்கு ஏற்றாற்போல குற்றப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தார்கள். அந்தப் புள்ளிவிவரத் தொகுப்புகளைக் கொண்டு ஆராய்ந்து உண்மையான காரணக் கூறுகளைக் கண்டறிந்தார்கள். அதன் முடிவுதான் பொருளாதாரத்தைச் சார்ந்த காரணக் கூறுகளினால்தான், குற்றங்கள் எண்ணிக்கை வீதம் வேறுபடுவதற்குக் காரணம் என்பதாகும். இந்தக் கழகம் தொடக்கத்தில் வாதத்திற்கான காரணத்திற்காகத் தொடங்கப் பட்டாலும் இதன் செயல்முறைகள், அறிவியல் சார்ந்த துறையாக விளங்கியது. இக் கழகங்களின் புள்ளிவிவரங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் பெரும்பாலும் உண்மையானவையாக விளங்கின. இதனாலேயே இந்தக் கழகம் அறிவியல் கழகம் என்று அழைக்கப்படலாம் என்ற நிலை இருந்தது. மற்ற குற்ற இயல் ஆய்வு வல்லுநர்களும் இக் கழகங்களின் குற்றப் புள்ளி விவரங்களைப் பரிசோதனை செய்து ஆராய்ந்து அறிவதற்கும் துணையாக விளங்கின. இந்தக் கழகத்தின் அடிப்படையில் இன்றும் உலகெங்கும் பல கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. நாட்டில் ஏற்படும் ஏற்றத் தாழ்விற்கும் நடக்கும் குற்றங்களுக்கும் முக்கிய கூறுகளாக இருப்பது பொருளாதார ஏற்றத் தாழ்வேயாகும் என்பது இந்தக் கழகங்களின் கொள்கை யாகும். பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வை, சீரழிவைச் சரிசெய்து விட்டால் நாட்டில் குற்றங்களைக் கட்டுப் படுத்திவிடலாம் என்பது இக் கழகங்களின் வாதமாகும். இந்தக் கழகங்களின் கொள்கைகளை ஆராய்ந்தாலும் சில குறை பாடுகள் காணப்படுகின்றன. அதாவது நாட்டில் பொருளாதாரமே சம்பந்தப்படாத குற்றங்கள் பல நடக்கின்றனவே அதற்காக இக் கழகங்களின் கொள்கைகள் தெளிவான விளக்கங்கள் அளிக்க வில்லை. பொருளாதார வசதிகளினால் குற்றத்தை ஓரளவிற்குத் தான் கட்டுப்படுத்த முடியுமே தவிர பெரும்பாலான குற்றங்கள் பல்வேறுபட்ட காரணக் கூறுகளினால் செய்யப்படுகின்றன. அவற்றைத் தடுத்தல் முடியாது. ஆனால், முன் சொன்ன கழகத்தை விட இது சிறந்தது எனக் கொள்ளவேண்டும். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுதான் குற்றங்களுக்கான காரணம் என்று சமுதாய இயல் வல்லுநர்களும் சேர்ந்து கூறுகின்றனர். பல அரசியல் கட்சிகளும் இக்கொள்கையை வற்புறுத்தி வருகின்றன.

பரம்பரை ஆய்வுக் கழகம் அல்லது குற்ற இயல் மரபாய்வுத் துறைக் கழகம் (Typological Schools)

இதன் தோற்றம் 1875 ஆகும். இதை மாதிரி படிவ வரன் முறை மரபாய்வுத் துறைக் (Bio-typological) கழகம் என்று கூறுவதுண்டு. இந்தக் குற்ற ஆய்வியல் கழகம் மூன்று பிரிவு

களைக் கொண்டதாகும். அவை (1) லெம்ரோஸக் கழகம் (Lombrosians). (2) மனநோய் தேர்வாய்வாளர் கழகம் (Mental Testers) (3) உளநோய் இயல் கழகம் (The Psychiatric School) முதலியனவாகும். இவற்றின் வாதமுறைகளும் ஆராய்ச்சி முறைகளும் பொதுவாக ஒன்று போலவே அமைந்திருக்கின்றன. இந்தக் கழகம் மானிட இனத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. (1) குற்றவாளிகள் (2) குற்றம் புரியாதவர்கள். இந்தப் பிரிவுகள் ஒழுக்கத்தால், நடத்தையால் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்றது என்று நிரூபிக்கப்படாத அடிப்படையில் கருத்துகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது நல்லொழுக்கம் உடையவர்கள், குற்றங்களைப் புரியாதவர்கள், குற்றங்களைப் புரியக்கூடாது என்ற நோக்கம் கொண்டவர்கள் வாழும் அதே சூழ்நிலையில் அதாவது குற்றங்களைப் புரிவதற்கு வாய்ப்புள்ள சூழ்நிலையில் வாழ்ந்தாலும் மேற்சொன்ன ஒழுக்கம் உள்ளவர்கள் குற்றங்கள் புரிவதில்லை.

ஆனால் குற்றவாளிகள், தீயொழுக்கம் உள்ளவர்கள். தீய நடத்தை உடையவர்களிடம் மேற்சொன்ன அதே சூழ்நிலையில்தான் வாழ்கின்றார்கள். ஆனால் இவர்கள் மட்டும் ஏன் குற்றங்களைப் புரியவேண்டும், அதாவது குற்றவாளிகள் வழக்கத்திற்கு மாறுபட்ட குணத்தையும், நடத்தையையும், ஒழுக்கத்தையும் உடையவர்கள் என்ற காரணங்களினால் அவர்கள் அதே சூழ்நிலைகளில் எளிதில் குற்றங்களைப் புரிந்துவிடுகின்றார்கள். ஆகவே குற்றவாளிகளின் போக்கு, மனப்பான்மை, ஒழுக்கம், நடத்தை ஆகியவை அவர்களின் மரபுரிமையாக, பரம்பரைப் பண்பாக இருக்கக்கூடும் என்று வலியுறுத்துகின்றது இந்தக் கழகம். மேலும் குற்றங்களைச் செய்யவேண்டும் என்ற மனப்பான்மை குற்றவாளிகளுக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த தனிமுறை உரிமையுடைய சிறப்புக் குணத்தின் உணர்ச்சியின் அவசியமாக இருக்கலாம் என்று வலியுறுத்துகின்றது இந்தக் கழகம். மேலும் குற்றங்களைச் செய்யவேண்டும் என்ற மனப்பான்மை குற்றவாளிக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த தனிமுறை உரிமையுடைய சிறப்புக் குணத்தின் உணர்ச்சியின் காரணமாக இருக்கலாம் என்று வலியுறுத்துகின்றது இந்தக் கழகம். ஆகவே சமுதாயச் சூழ்நிலைகளையும் அதன் காரணகாரியவழிமுறைகளையும் அதன் விளக்கங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. குற்ற ஒழுக்கத்தைத் திருத்தவும், தடுக்கவும் அல்லது தடைசெய்யும் முறைகளை ஆராயவேண்டிய அவசியம் இல்லை. அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வலியுறுத்துகிறது இந்தக் கழகம். இந்தக் கழகம் குறிப்

பிட்ட ஒழுக்கம். போக்கு, பண்புக் கூறுகள் ஆகியவை குற்றவாளிகளுக்கும் குற்றம் புரியாதவர்களுக்கும் வேறுபடு கின்றன என்று வலியுறுத்துவதனல் இது மற்ற மூன்று கழகங்களி லிருந்து கருத்தாய்வுக் கொள்கைகள் (Theory) வேறுபடுகின்றன, இந்தக் கழகம் பரம்பரையைக் குற்றம் சாட்டுகிறது. மரபுரிமைப் பண்புக் குணம்தான் குற்றங்களுக்கான காரணம் என்கின்றது. இக் கழகம் பொதுவாக அதன் கொள்கையைச் செயல் முறையில் நிரூபித்துக் காட்டவில்லை. ஆகவே இக் கழகத்தின் கொள்கை பகுத்தறிவாளர்களால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

லெம்ரோஸா கழகம் (Lombrosians School)

இதன் தோற்றம் 1875 ஆகும். இவர் இத்தாலிய நாட்டைச் சார்ந்த குற்ற ஆய்வியல் வல்லுநராவார். இத்தாலியில் குற்ற ஆய்வியல் கழகத்திற்கு இவரே தலைவராக விளங்கியதால் இவர் பெயரைக் கொண்ட குற்ற ஆய்வியல் கழகமாக விளங் கியது. இவர் முதன் முதலில் 1876இல் இவரது கோட்பாடுகளைத் துண்டுப் பிரசுரத்தில் வெளியிட்டார். அதன் பிறகு மூன்று பாகங்களாக அச்சு வடிவத்தில் வெளியிட்டார். இவரின் கோட்பாடுகள் கீழ்க்கண்ட கருத்துகளைக் கொண்டதாகும். 1) குற்றவாளிகள், பிறப்பால் மாறுபட்ட பண்புகளையுடைய அமைப்புருவம் கொண்டவர்கள். அவர்களின் உடலமைப்புகளின் வடுக்களின் தோற்றம் மாறுபட்டிருக்கும். 1. ஒழுங்கற்ற தோற்றம் அல்லது குறைபாடுள்ள உடலமைப்பு, சமச்சீர் அற்ற மண்டை ஒடு 2. நீண்ட கீழ்த்தாடை 3. தட்டையான மூக்கு, சிறு அளவான கொஞ்சமான தாடி, சொரணையற்ற அல்லது உணர்ச் சியை மெதுவாக உணரக்கூடிய முரட்டு உடல் ஆகிய உடல் வடுக் களைக் கொண்டு குற்றவாளிகளை அடையாளம் காணலாம் எனக் கூறுகின்றது இக் கழகம். லெம்ரோஸோ மேற்கூறிய ஆறு வகையான உடல் வடுக்களில் மூன்றுக்குக் குறையாமல் ஐந்து வரையில் இருந்தால் அவனைக் குற்றவாளி எனக் கொள்ளலாம். ஆனல் மூன்றுக்குக் குறைவான வடுக்களைப் பெற்றிருந்தால் அவனைக் குற்றவாளி எனக் கருதமுடியாது எனக் கூறுகின்றார் லெம்ரோஸோ (Lombroso). (3) மேற்கூறிய ஒழுங்கற்ற உடல் வடுக்கள் மட்டுமே குற்றத்திற்குக் காரணமாவதில்லை. ஆனல் இயற்கையாகவே அவை குற்றங்களை வெளிப்படுத்தும் வடுக்கள் எனக் கொள்ளப்பட்டதால் அவை குற்ற ஒழுக்கத்தைக் குறிக் கின்றன. குற்றத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

அவர்களைக் குற்றவாளிகள் என்று அடையாளம் காட்டுகிறது. அல்லது மூதாதையர்களின் பண்பு வெளிப்படையாக இருக்கும். அல்லது முந்திய காட்டுமிராண்டி பழக்கவழக்க போக்காக இருக்கலாம். அல்லது இனச் சிதைவின் அடையாளமாக இருக்கலாம் அல்லது காக்காய் வலிப்புக்குத் தொடர்புடையதாக விளங்கலாம் எனக் கூறுகிறார்.

மேற்கூறிய உடல் வடுக்களைக் கொண்டவர்கள் தங்களின் இயற்கையான பண்புக் கூறுகளினால் குற்ற ஒழுக்கத்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் குற்றங்கள் புரிவதுதான் அவர்களின் பண்பு இயல்புகளாக விளங்கும். சாதாரணமாக, அவர்களின் வாழ்க்கையில் சூழ்நிலைகள் அவர்களுக்குச் சாதகமாக இல்லாமல் இருந்தாலொழிய அவர்கள் குற்றம் செய்யாமல் இருக்கமாட்டார்கள்.

லெம்ரோஸோ (Lombroso)வின் தொண்டர்கள் பல குற்றவாளிகளை ஆராய்ந்து அதாவது திருடர்கள், கொலைகாரர்கள், பால் உறவுக் குற்றவாளிகள் (Sex Offender) ஆகியோர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உடல் வடுக்களால் வேறுபாடுகளைக் கொண்டுள்ளார்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். லெம்ரோஸோவின் (Lombroso) கொள்கைகள் பண்டைய கழகங்களின் கொள்கைக்கு முரண்பாடானவையாகும். மேலும் தன்னுரிமைச்செயல் தடுக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் எதிர்மாறான கொள்கையாக (Determination versus Free Will) அமைந்தது. மேலும் டார்டேவினுடைய (Tarde) கொள்கையைப் பின்பற்றுதல் என்னும் கருத்துக்கு மாறான கொள்கையாக அமைந்துள்ளது. உயிரியலுக்கும் சமுதாய நியதி வாதத்திற்கும் எதிர்மாறாக அமைந்துவிட்டது (Biological versus Social Determinism). பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டதனால் முடிவில் லெம்ரோஸோ (Lombroso) தமது கழகத்தின் கொள்கையைப் படிப்படியாக மாற்றிக்கொண்டுவிட்டார். அதாவது பிறவியிலேயே குற்றவாளிகளாக விளங்குகின்றார்கள் என்ற கொள்கையில் 100 சதவீதத்திலிருந்து 40 சதமாக மாற்றிவிட்டார். லெம்ரோஸோவின் (Lombroso) தொண்டர்களான கேராஃபலோ (Garafalo), ஃபெரி (Ferri) மற்றும் உள்ள தொண்டர்களும் மேலும் சிலபல மாற்றங்களை மேற்கொண்டதனால் இறுதியில் இக்கழகத்தின் உண்மையான, தெளிவான, முடிவான, கொள்கை என்ன என்பதை இழந்துவிட்டது. டாக்டர் கோரிங் (Dr. Goring) என்பவர் பல ஆயிரக்கணக்கான குற்றவாளிகளையும் குற்றஞ்செய்யாதவர்களையும் நேரடியாக ஆய்வு செய்து

அவர்களின் உடல் அமைப்பில் எந்தவித வேறுபாடுகளோ அல்லது வடுக்களோ காணப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளார். இதனால் இவர் குற்றவாளிகள் தனிப்பட்ட உடல் அமைப்புகளை, வடுக்களைப் பெற்றுள்ளார்கள் என்ற கருத்துக் கொள்கையை பொய் என்று நிரூபித்துவிட்டார். லெம்ரோஸோவும் (Lombroso) அவரது கழகத்தைச் சார்ந்த தொண்டர்களும் ஒருபோதும் அக்கறையோடு, ஆய்ந்த அறிவோடு குற்றவாளிகளையும் குற்றம் செய்யாதவர்களையும் ஒப்பிட்டு ஆய்வு நடத்தவில்லை. அதே நேரத்தில் குற்றவாளிகள் காட்டுமிராண்டித் தன்மையும், அநாகரிகத் தன்மையும் கொண்டவர்கள் ஆதலால் அவர்கள் குற்ற ஒழுக்கத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்திருக்கவில்லை.

தெற்கு ஐரோப்பிய நாடுகளிலும் (South European Countries) தென் அமெரிக்காவிலும் (South America) இயற்கையுருவம் பற்றிய ஆய்வு சற்றுத் திருந்திய முறையில் ஆராய்ச்சி செய்யப் பெற்று வலியுறுத்தப்பட்டு வந்தது. ஐக்கிய அமெரிக்காவில் (United States) 1915ஆம் ஆண்டு வரையிலும் இது தெளிவற்ற நிலையில்தான் இருந்து வந்தது. பாமர மக்களிடையே இக் கொள்கை நிரந்தரமான செல்வாக்கைப் பெற்று வந்துள்ளது, 'குற்றம்' என்பது சமுதாயத்தில் நிகழ்கின்ற குறிப்பிட்ட நிகழ்ச்சிகள், செயல்களைப் பற்றிக் குறிக்கும் என்ற கொள்கையிலிருந்து தனி மனிதனின் தனிச் செயல்தான் குற்றம் என்ற கொள்கைக்கு மாற்றிக்கொண்டதனால் குற்ற ஆய்வு இயலின் ஆராய்ச்சியானது ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குத் தடைபட்டுவிட்டது. இந்தக் கழகத்தில், தொடக்கத்தில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், அது இறுதியில் எந்தவிதக் கருத்தையோ, கொள்கையையோ, பலரும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு உலகிற்கு அளிக்கவில்லை. இந்தியாவில் கொக்கோகம், காமசூத்திரம் போன்ற நூல்களில் பெண்களின் உடல் அமைப்புகளைக் கொண்டு அவள் பத்தினியா அல்லது பரத்தையா என்பதை அறியலாம் என்று கூறப்படுகிறது. இந்தக் கொள்கையும் லெம்ரோஸோவின் (Lombroso) கொள்கையேயாகும். ஆகவே எடுத்துக்காட்டு விளக்கங்களுடன் ஆராயப்படாததனாலும், அதே உடல் அமைப்பு, வடுக்கள் உள்ளவர்கள் நல்லவர்களாக இருப்பதனாலும் அதில் சிலர் மட்டும் மாறுபடுவது அவரவர்களின் சூழ்நிலைதான் காரணமாக இருக்கக்கூடும். ஆனால் இக் கழகம் சூழ்நிலையே காரணம் அல்ல என்று கூறுகிறது. அதாவது குற்றம் செய்யவே முடியாத அளவிற்குச் சூழ்நிலை உருவானால்தான் மேற்சொன்ன வடுக்களை உடையவர்கள் குற்றம் செய்யாமல் இருப்பார்கள். மற்றபடி குற்றம் செய்வதே அவர்

களின் இயல்புக் குணமாகும் என்று உறுதியாகக் கூறுகிறது. செயல் விளக்கம் கோருபவர்களின் மத்தியில் இக் கொள்கை சிறிதும் எடுபட முடியாது. இக் கொள்கை உடல் வடுக்களைக் கொண்டு மனிதனையே குற்றவாளி என்று முடிவு கட்டிவிடுகிறது. ஆகவே, இது இயற்கைக்கு, சட்டத்திற்கு மாறான கொள்கை யாகும். குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்புதான் குற்றவாளி என்று அழைக்க வேண்டும் என்ற நவீன காலக் கொள்கைக்கும் முரண் பட்ட தாகவும் விளங்குகிறது.

மனநோய் தேர்வாய்வாளர்கள் கழகம் (Mental Testers)

இக் கழகத்தின் தோற்றம் 1905 ஆகும். லெம்ரோஸோ (Lambroso) வின் கழகம் சீரழிந்து விட்ட பிறகு அக் கழகத்தின் கொள்கைகள் மட்டும் அதாவது அதன் வாதத் திறமையும், ஆராய்ச்சி முறைகளும் விடாது பின்பற்றப்பட்டு வந்தன. குற்ற வாளிக்கும் குற்றம் செய்யாதவர்களுக்கும் உடல் அமைப்பு வகையில் வேறுபாடு, உடல் வடுக்கள் வேறுபாடு காணப்படு கின்றன என்பதற்குப் பதிலாக அவர்களின் குண இயல்புகளை வேறுபடுத்துவதற்கும், குற்றவாளிகள், குற்றம் செய்யாதவர்கள் ஆகியவர்களின் வேறுபாடுகளை அறிவதற்கு மன உறுதியற்ற தன்மையினைப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதாவது உடல் வகைகள் அல்லது உடல் அமைப்பின் வகைகள், வடுக்கள் என்ற கொள்கையிலிருந்து மன உறுதியற்ற நிலை என்ற (feeble minded) கொள்கையைப் பின்பற்றி குற்றவாளிகளை ஆராய்ந்தார்கள். இக் கொள்கை தற்காலத்திலும் குற்றவாளிகளின் தன்மையை ஆராய்ந்தறிய பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காடார்டு (Goddard) என்னும் குற்ற இயல் வல்லுநர் இக் கழகத்தின் பிரதிநிதியாக விளங்கினார்.

இவர்தம் கொள்கைகளை இக் கழகத்தின் கொள்கையாக, மன உறுதியற்ற தன்மையானது, மரபு வழியாகப் பரவக் கூடியது என்று மரபுப் பண்புகளை எண்கணிப்பு முறைக்குள்ளாக்கும் கோட்பாடுகளைக் கொண்டு (Mendelian Unit) தெள்ளத் தெளி வாக விளக்கியுள்ளார். ஆகவே, குற்றவாளிகள் மன உறுதியற்ற தன்மையை உடையவர்கள் என்று உறுதியுடன் கூறியுள்ளார். ஆகையால் குற்றவாளிகள் தங்கள் நடத்தையை, ஒழுக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும், சட்டங் களின் பயன்களை உய்த்துணரவோ அல்லது சட்டங்களின் நன்மை தீமைகளை ஆய்ந்தறியவோ அவர்களுக்குத் தெளிவான அறிவும் மன உறுதியும் இல்லை என்று கூறுகின்றார்.

காடார்டு (Goddard) தம் ஆராய்ச்சியில் ஏறத்தாழ எல்லாக் குற்றவாளிகளுமே மன உறுதியற்றவர்கள் என்றும் மன உறுதி அற்றவர்கள் அத்தனை பேரும் குற்றவாளிகளாக இருந்தார்கள் என்றும் உறுதிபடுத்துகின்றார். இந்தக் குற்ற இயல் மனநோய் ஆய்வுகள் வளர்ச்சியடைந்த பிறகு இம்முறையைக் கொண்டு அதிகமான குற்றவாளிகள், குற்றம் புரியாதவர்கள் ஆகியவர்களை ஆராய்ந்ததில் மன உறுதியற்ற தன்மைதான் குற்றம் புரிவதற்கு வேண்டிய காரணக்கூறு ஆகும் என்ற கருத்துப் பெரிய அளவிற்குக் குறைந்துவிட்டது. ஆகவே, இக் கழகமும் தன் செல்வாக்கை இழந்துவிட்டது. இச் சிந்தனைக் கழகம் (School of Thought) மறைந்து விட்டது.

'மன உறுதியற்ற தன்மை' குற்றம் புரிவதற்கு ஏதுவான காரணக் கூறுகளில் ஒன்று என்று உறுதியுடன் கூறலாம். மன வலிமைதான் மனிதனுக்குத் தேவையானதாகும், ஒருவனுக்கு உடல் பலம், உடல் வலிமை இல்லையென்றாலும் அவனுக்கு மன வலிமை இருக்குமேயானால் அவன் எந்தவித குற்றங்களையும் செய்யமாட்டான். உதாரணமாக, காந்தியடிகள் உடல் வலிமையற்றவராகத் திகழ்ந்தாலும் மன உறுதியைப் பெற்றிருந்ததனால் கடும் போராட்டங்களையும் சத்தியாக்கிரகங்களையும் நடத்த முடிந்தது. உடல் வலிமை உள்ளவர்கள்கூட இந்து முஸ்லிம் கலவரப்பகுதிகளுக்குச் செல்ல அச்சங்கொண்ட நேரத்தில் காந்தியடிகள் நவகாளிப் பகுதிகளுக்குச் சென்று இரு பிரிவினர்களுக்கும் ஆறுதல் கூறினார் என்றால் அவரின் மனவலிமைதான் காரணமாகும். ஆகவே, ஒருவனுக்கு மனவலிமை இருக்குமேயானால் எந்தச் சூழ்நிலையிலும் குற்றங்கள் செய்யமாட்டான். அவனிடத்தில் எதையும் தாங்கும் இதயம் இருக்கின்ற காரணத்தினால் உள்ளஉணர்ச்சிகளை எளிமையாக அடக்கிக்கொள்ள முடிகின்றது. ஆகவே, மன உறுதியற்றவன் சாதாரண சூழ்நிலைகளிலும் குற்றங்களைந் புரிந்துவிடக் கூடும். அதே சூழ்நிலைகளில் மன உறுதியுள்ளவன் குற்றங்கள் செய்யமாட்டான் என்று கருதவும் இடமுண்டு. ஆகவே இக் கழகத்தின் கொள்கையில் சிறிது உண்மை இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காடார்டு கூறுவதைப் போல மனவுறுதியற்றவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதல்லவா? குற்றங்கள் பல காரணக் கூறுகளினால் நிகழ்கின்றன. மனவுறுதியற்றதன்மை உள்ளவன் குற்றங்கள் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகாமலிருக்கும் சூழ்நிலையில் இருக்கலாம் அல்லவா? அதாவது மன உறுதியற்றதன்மைதான் உள்ளதே தவிர அவனுக்கு மற்ற சூழ் நிலை, சுற்றுச்சார்புகள் அவனுக்குச் சாதகமாக இருந்தால்,

அவன் குற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையல்லவா? அல்லது மற்ற காரணக் கூறுகள் அவனுக்குப் பாதகமாக இருந்தால்தான் குற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகலாம். ஆகவே மன உறுதியற்றதன்மையை வைத்துக்கொண்டு அவனைக் குற்றவாளி என்று பழி சுமத்துவது பொருந்தாத செயல் மட்டும் அல்ல, அது நீதிக்கு முரண்பட்டதாகும். மேலும் மனவுறுதியற்றவன் தன் ஒழுக்கத்தால் பயந்த குணத்தை உடையவனாக இருக்கலாம். மன உறுதியற்றவன் தன் ஒழுக்கத்தால் அச்சமற்றவனாக விளங்கலாம். இந்த ஒழுக்கங்களைக் கொண்டு ஆராய்ந்தால் மன உறுதியற்றவனைவிட மன உறுதியுள்ளவன் அதிகமான குற்றங்கள் செய்யக்கூடும் அல்லவா? மன உறுதியுள்ளவன் சட்டத்திற்கோ தண்டனைக்கோ மற்ற சமூகத்திற்கோ அஞ்சாதவனாக இருக்கக்கூடும் அல்லவா? ஆகையினால் அவன் குற்றவாளியாகவே வாழவும் இடமுண்டு. இன்று நாட்டில் நடக்கும் அரசியல் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் மன உறுதியுள்ள, மனவலிமையான தலைவர்களின் தூண்டுதலினால்தான் செய்யப்படுகின்றன. இதனால் அவர்கள் குற்றவாளிகளாக ஆகின்றார்கள். மீண்டும் அரசாள வாய்ப்பு கிடைத்தபோது திறமையாக ஆட்சி நடத்துகின்றார்கள். ஆகவே காடார்டு கூறுவதைப் போல் மன உறுதியற்றவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்பது முற்றிலும் ஆராய்ச்சிக்குப் புறம்பானதாகும். ஆகவேதான் இக் கழகம் சீரழிந்துவிட்டது.

உளநோய் ஆய்வியல் கழகம் (The Psychiatric School)

இக்கழகத்தின் தோற்றம் 1905 ஆகும். லெம்ரோஸோ (Lombroso) கழகத்தின் கொள்கையான இயற்கையுருவ ஆராய்ச்சியைச் (Morphological) சார்ந்த உடலமைப்புகளால் குறிப்பிட்ட பண்புக் கூறுகள்தான் குற்றத்திற்குக் காரணம் என்று வலியுறுத்தப்பட்டதல்லவா? அக் கழகத்தின் வலியுறுத்தல் இல்லாமலே உளநோய் ஆய்வியல் கழகம் அதைப் பின்பற்றி லெம்ரோஸா (Lombroso) கூறியதைப்போலவே உளநோய் அல்லது மனநோய், காக்காய் வலிப்பு, கொள்கை வெறி ஆகியவற்றை வலியிறுத்தி வந்தது. ஆனால் இது உணர்ச்சிக் கொந்தளிப்புதான் (Emotional Disturbances) குற்றத்திற்கு முக்கிய காரணம் என்று அறிவித்தது. இதனால் உளநோயைக் கடுமையாக ஆய்வு செய்ய அக்கறை காட்டப்படவில்லை. இதனால் மனநோய் தேர்வாய்வாளர்கள் கழகம் சீரழிந்ததைப் போலவே இக் கழகமும் சீரழிந்தது. இக் கழகத்தின் பிற்கால வரலாற்றிலும் உயிரியல் சார்ந்த (Biological) தன்மையினால் மரபுரிமையாகப் பரவுதல் என்ற கொள்கையைவிட சமுதாயத்தின்

செயலெதிர்ச் செயல்களினுல்தான் உணர்ச்சி வசப்பட்ட கொந்தளிப்புகளினுல் குற்றங்கள் நிகழ்கின்றன என்பதை வலியுறுத்தி வந்ததாகக் கூறுகிறது. இக் கழகத்திற்குள் பல்வேறு பட்ட கொள்கைகள், கருத்துகள் நிலவி வந்துள்ளன. குறிப்பாக தன்னுணர்வற்ற (Unconsicous) ஏமாற்றம், உள ஆய்வியலின்படி எதிர்ப்பாளராகிய பெற்ருேர்மீது பிள்ளைக்கும் உட்செறிவாக இருப்பதாகக் கருதப்படும் உள்ளுணர்ச்சிக்கூறு (Oedipus Complex) ஆகியவற்றைப்பற்றி பிருடியன் கருத்தியல் கொள்கை (Freudian Theory) வலியுறுத்தி வந்தது. மேற்கூறிய மூன்று நிலைகளும் குற்றம் செய்வதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றன என வலியுறுத்தப்பட்டது.

குற்றம் அதிக அளவில் நிகழ்வதாக எழுத்தாளர்களால் உறுதி படுத்தப்பட்டுக் கூறப்படுகின்றன. இளம் பருவத்தில் காம உணர்ச்சியால் அறிவு மயங்கிய நிலையில் தன் உணர்வற்ற நிலையில் மகன் தன் தாயையே புணர நினைக்கிருன் அல்லது காம உணர்ச்சியைக் கழிக்க முற்படுகிருன். ஆனுல் முறைதகாப் புணர்ச்சியை வெளிபடுத்துவதற்கு மகனுக்கு நடுக்கம், பேரச்சம் உண்டாகின்ற காரணத்திஞல் அவன் தன் நோக்கத்தை, கருத்தை, எண்ணத்தை நேரடியாக வெளிப்படுத்த முடியாமலும் வெளிப்படையாகச் செயல்படுத்தமுடியாமலும் உள்ளம் குமுறுகிருன். அந்தக் குமுறுதல் பல்வேறு வகைகளில் வெடிக்கின்றன. அதாவது. வீட்டில் திருடுவது, தந்தையின் சொல்லுக்கு மறுப்பு தெரிவிப்பது, மற்ற சொத்துக்களை அழிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்ருன். அவனுக்குச் சொத்தின் மீதோ அல்லது அதைத் திருடுவதிலோ ஆசை இல்லை. முறைதகாப் புணர்ச்சி ஏக்கத்தின் ஏமாற்றமேதான் அவன் மற்ற குற்றச் செயல்களைச் செய்யும்படி தூண்டுகிறது.

உளநோய் ஆய்வியல் கழகத்தின் முக்கிய ஆராய்ச்சிகள் மனிதப் பண்புக் கூறுகளின் அமைப்புகளைப் பற்றியதாகும். இந்த ஆராய்ச்சி பெரிதும் வளர்ச்சி அடைந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புக் குணங்களால் குற்றங்களின் சாயல் அவசியம் இருக்கின்றது. அப்படி இல்லையென்ருல் ஆராயப்படவேண்டுமென்று கூறுகிறது இக் கழகம். எல்லாக் குற்றவாளிகடத்தும் இந்தக் குணங்கள் காணப்படுகின்றன என்று தீவிரவாதிகள் கூறுகின்றனர். குற்றவாளிகளின் குண நலத்துடன் சமுதாயத்தின் சூழ்நிலைகள் இணைவதால் குற்றங்கள் செய்யப்படுகின்றன என்று ஒரு சில மிதவாதிகள் கூறுகின்றனர். ஆனுல் சமுதாயத்தின் சூழ்நிலைத் துணை இன்றியே குற்றவாளிகளின் தனிப்பட்ட பண்புக்

கூறுகளினுல் குற்றம் செய்யப்படுகின்றன என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனுல் குற்றவாளிகளின் குற்ற ஒழுக்கத்திற்கும் சமுதாயத்தின் சுற்றுச் சூழ்நிலேகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லே. குற்றவாளிகளின் குற்ற ஒழுக்கமே குற்றத்தின் முழுப் பொறுப்பாகும் என்று கூறுகின்றனர்.

தற்காலத்தில் உளநோய் ஆய்வியல் முறை, குற்றவாளிகளே ஆராய்வதற்கு முக்கியமானதாகும். குற்றவாளிகளின் உள்ளங்கள் அவர்களின் செயல்களினுல் பிரதிபலிக்கின்றன. அதாவது அவர்களின் மன நிலேதான் அவர்களின் ஒழுக்கமாக அமைகிறது. அந்த ஒழுக்கம் குற்றங்களேச் செய்வதற்கு அது குற்ற ஒழுக்கமாக மாறுகிறது. உளநோய் உள்ளவர்கள் எல்லாம், குற்றவாளிகள் எனக் கூறுவது பொருந்தாத ஒன்ருகும். மனநோய் அல்லது உளநோயுடன் அவரவர்களின் ஒழுக்கத்தைப் பொறுத்து அவரவர்களின் செயல்கள் மாறுபடுகின்றன, குற்ற ஒழுக்கத்தை உடையவன் மனநோய் அல்லது உளநோய் உள்ளவனுக விளங்கினுல் அவன் குற்றவாளியாகின்ருன். மனநோய் அல்லது உளநோயுடன் விளங்கினுலும் அவனிடத்தில் குற்ற ஒழுக்கம் இல்லேயென்ருல் அவன் சாதாரண உள நோயாளியாகவே திரிகின்ருன். ஆகவே உளநோயுடன் குற்ற ஒழுக்கமும் மற்ற சமுதாயச் சூழ்நிலேகளும் இருந்தால்தான் ஒருவன் குற்றவாளியாக மாறமுடியும். ஆகவே உள நோயாளிகளே ஆராயும்போது மற்ற காரணக் கூறுகளேயும் ஒப்பிட்டு ஆய்வு நடத்துதல் வேண்டும். அவ்வாறு இன்றி வெறும் உளநோயைமட்டும் ஆய்வு செய்து அவள் குற்றவாளி என்று கூறுவது ஆராய்ச்சிக்கு உரியது அன்று. மேலும் உளநோய் ஆய்வியல் கழகம் மனநோய் அல்லது உளநோய் எப்படி உண்டாகிறது என்பதற்கு விளக்கங்களேயோ காரணங்களேயோ ஆராயவில்லே. ஆகவே இக் கழகம் தன் பணியை செவ்வனே செய்யத் தவறிவிட்டது. மேலும் உளநோய் வளராமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் ஆராயவில்லே. உளநோய் மரபுரிமை வழியாகப் பரவுகிறது என்று கூறினுலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லே. எத்தனேயோ உளநோயாளி களின் குழந்தைகள் உளநோயின்றி நன்ருக வளர்ந்து நல்ல வர்களாக வாழ்கிருர்கள். ஆகவே மரபுரிமை வழியாகப் பரவுகிறது என்பதற்கு ஆதாரம் இல்லாமல் போய்விடு கிறது. ஆகவே மேலும் சிறந்த முறைகளே மேற்கொண்டு செயல்பட வேண்டும். ஆனுல் அதே நேரத்தில் இன்னும் நாட்டில் ஏராளமான உள நோயாளிகள் இருக்கின்ருர்கள். அவர் களுக்கு மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வரு

கின்றது. ஆனால் உளநோய் நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சியை மேலும் விரிவாக்கி நல்ல முறையில் செயல்பட முன்வர வேண்டும். குற்ற ஒழுக்கத்தைத் தடுக்க பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமுதாய ஆய்வியல் கழகம் (Sociological School)

இக் கழகத்தின் தோற்றம் 1915 ஆகும். குற்ற ஆய்வியல் கழகங்களிடையே சமுதாய ஆய்வியல் கழகம் முற்றிலும் மாறுபடுவதுடன் தன்னுள் மாறுபடும் தன்மையும் உடையது. நிலவியல் ஆய்வுக் கழகம் அல்லது நிலப்படத்தைப் பற்றிய ஆய்வுக் கழகம், பொதுநல ஆய்வுக் கழகம் ஆகிய கழகங்களின் துணையுடன் இக் கழகம் வளர்ச்சியடைந்தது. அவற்றைக் கொண்டு குற்றங்கள் எப்படி நடக்கின்றன என்று கண்டறிவதற்கு சமுதாய ஆய்வியல் முறையில் ஆராயப்பட்டது. குற்றங்களுக்கான காரண காரியங்கள் பல இருந்த போதிலும் சமுதாய இயலும் முக்கிய காரணங்களில் ஒன்றாக விளங்குகிறது. சமுதாயம் இல்லையென்றால் குற்றம் காணப்படாது. சமுதாயம் வளர வளர குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகும். ஆதியில் சமுதாயம் குறுகியதாக இருந்த காலத்தில் சிலபல குற்றங்களே காணப்பட்டன. அதாவது கொலைக் குற்றம், வன்புணர்ச்சிக் குற்றம், திருட்டு, கொள்ளை, தீ வைத்தல், தாக்குதல், காயம் உண்டாக்குதல் ஆகிய குற்றங்கள் மட்டும் இருந்தன. இன்று இருக்கும் எண்ணற்ற சட்டங்களும் கட்டுப்பாடுகளும் சமூகம் வளர்ச்சியடையாத காலத்தில் இல்லை. அன்று சமூகத்திற்கு இவை தேவையற்றனவாக இருந்ததுமன்றி இந்தச் சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் அறியாமலே இருந்தார்கள். 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மேதைகள் சமுதாய ஆய்வியல் கழகத்துடன் தொடர்பு கொண்டிருக்கவில்லையென்றாலும் குற்றங்கள் நிகழ்வதற்குச் சமூகச் சூழ்நிலைகள்தான் காரணம் என்றும் சமூகச் சூழ்நிலைகளின் (Social environment) செயலாற்றல்தான் 'குற்றம்' என்றும் பொருள் உணர்ந்தார்கள். அவர்களில் வோன் லிஸ்ட் (Von liszt) என்ற ஜெர்மெனியைச் சார்ந்தவரும், பிரின்ஸ் (Prins) என்பவர் பெல்ஜியத்தையும் வான்ஹேமல் (Van Hamel) ஹாலந்தையும், பாயின்ட்ஸ்கி (Fointsky) என்பவர் ருசியாவையும் சேர்ந்த முக்கியமானவர்கள் ஆவார்கள். டார்டே (Tarde) என்பவர் பிரான்சைச் சார்ந்த சமூக உளவியல் நிபுணர் ஆவார். இவரும் லெம்ரோஸோவும் சம காலத்தவர்கள். இவர் உயிர் இயலின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, பார்த்து, பின்பற்றுதல்தான் (Imitation) குற்றங்களுக்கான காரண காரியமாக அமைந்து இருக்கிறது என்று வலியுறுத்தினர்.

அதாவது, ஒருவன் தான் வாழும் சமூகத்திலுள்ள பழக்க வழக்க நெறிகளுக்குத் தகுந்த மாதிரிதான் தன் ஒழுக்கத்தை, நடத்தையை, போக்கை அமைத்துக் கொள்கிருன் என்பது இவரது அடிப்படைக் கருத்தாகும். அதற்காக அவர் கூறும் எடுத்துக் காட்டுகள் : ஒருவன் திருடுவதாக இருந்தாலும் அல்லது கொலைக் குற்றம் புரிவதாக இருந்தாலும் அவன் மேற்சொன்னவைகளை மற்றவர்களிடமிருந்துதான் பார்த்துப் பின்பற்றுகிருன் என்பது இவரது வாதமாகும். 'பார்த்துப் பின்பற்றுதல்' (Imitation) என்ற கொள்கையை அவர் பெரிதும் வலியுறுத்தி வந்தார்.

சமுதாய ஆய்வியல் கழகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெரிதும் பரவி வளர்ச்சியடைந்துள்ளது. 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வளர்ந்துவரும் பல்கலைக் கழகங்கள் சமுதாய ஆய்வு இயல் துறைகளில் குற்ற ஆய்வு இயலையும் ஒரு பாடமாக வைத்து, குற்ற ஆய்வியலை ஆராய்ந்தறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தக் காலத்திலிருந்து முதன் முதலாக குற்றம், குற்றவாளி ஆகியவற்றைப்பற்றித் திட்டமிட்டு ஆய்வு நடத்தி வருகின்ருர்கள். 1901இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பல பல்கலைக் கழகங்களில் சமுதாய ஆய்வியல் என்ற பொதுப் பாடநூலில் குற்ற ஆய்வு இயல், தண்டனை இயல் ஆகியவற்றையும் சேர்த்து, பாடம் கற்பிக்கப் பட்டது. ஆனுல் முதன் முதலில் 1895ஆம் ஆண்டு குற்ற ஆய் வியல் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. ஐரோப்பாவின் மேதைகள் போலவே அமெரிக்காவின் சமுதாய ஆய்வியல் வல்லுநர்களும் லெம்ரோஸோவின் கொள்கையினுல் ஆழ்ந்த உணர்ச்சியடைந்து இருந்தார்கள். 1915இல் கோரிங் (Goring) என்பவர் தமது கருத்துகளை வெளியிட்ட பிறகு இது மாற்றம் அடைந்தது. 1914இல் சமுதாய ஆய்வியல் வல்லுநர் அமெரிக்காவில் குற்ற ஆய்வு நடந்ததை விவரிக்கின்ருர். நீண்ட காலமாகவே இந்த நாட்டில் குற்றங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. குற்றத்திற்கான காரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. அதற்குக் காரணம் சமூகம் தான் என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் தான் அமெரிக்காவில் குற்ற ஆய்வியல் கழகம் தன் ஆய்வுகளை நடத்தி வருகிறது.

சமுதாயத்தில் மற்ற ஒழுக்கங்கள் எப்படிப் பரவுகின்றனவோ அதே மாதிரிதான் குற்ற ஒழுக்கமும் பரவுகின்றது. சமுதாயத்தின் மற்ற நடவடிக்கைகளின் விளைவால்தான் குற்ற ஒழுக்கம் பிறக்கிறது என்ற கருத்துதான் சமுதாய ஆய்வியல் கழகத்தின்

முக்கிய கருத்தாகும். அதாவது பார்த்துப் பின்பற்றுதல் இக் கழகத்தின் முக்கிய கொள்கையாகையினால் குற்ற ஒழுக்கங் களையும் மற்ற ஒழுக்கங்களைப் போல பார்த்து அறிந்து கொள் கின்றார்கள் என்பது வலியுறுத்தப்படுகிறது. சமுதாய அமைப்பு களுக்கு ஏற்ப, குற்ற விகிதங்களும் மாறுபடுகின்றன என்பது இக் கழகத்தின் கொள்கையாகும். அவைகளில் முக்கிய மாற்றங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

(1) எளிதில் இயங்கும் தன்மைக்குரிய வழிவகைகள் (2) அறிவு வளர்ச்சி, முரண்பாடு அல்லது எதிர்த்தல், நாகரிக வளர்ச்சி, நாகரிகத்தின் முரண்பாடு, போட்டி, நெருக்கமாக இல்லங்கள் அமைதல், அரசியல், மதம், பொருளாதாரக் கொள் கைகள், மக்கள் தொகை நெருக்கடியும் அதன் அமைப்பும், நாட்டின் செல்வத்தைப் பகிர்தல், வருமானமும் வேலையும், சமுதா யத்தில் மாற்றங்கள் உண்டாவதற்கு மேற் கூறியவை பெரிதும் பயன்படுகின்றன. இதனால் குற்றங்களின் எண்ணிக்கை விகிதம் மாறுபடுகிறது. ஆனால் குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் மேற் கூறியவற்றை குற்றங்களுக்கான முக்கிய காரணக் கூறுகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் என்றால் குற்ற விகிதங்கள் நம்பக் கூடியதாக இல்லை என்று காரணம் கூறியுள்ளார்கள். மேலும் சமுதாய மாறுபாடுகளினால் குற்றங்கள் நிகழ்வதாக இருந்தால் மிகவும் ஆபத்தானதாகும் என்று கருதினார்கள்.

(2) சமுதாய ஆய்வியல் கழகத்தின் வல்லுநர்கள் ஒரு நபர் எப்படிக் குற்றவாளியாக மாறுகின்றான் என்பதைக் கண்டறிய முயற்சியை மேற்கொண்டார்கள். பொது கோட்பாடாகிய கற்றல் (Learning) சமுதாயத்தில் நிகழும் செயல்களைக் கற்றறிதல் (Social Learning) என்ற முறையில் குற்றங்களையும் கற்றுக்கொள் கின்றார். சிறுவர் முதல் வயதானவர்கள் வரையில் சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் ஏற்படும் மாற்றங்களையும் பார்த்துக் கற்றுக்கொள்கின்றார்கள். அவ்வாறு கற்றுக்கொள்ளும்போது நல்லவை கெட்டவை என்ற வேறுபாடு இல்லாமல் அவரவர் மனநிலைக்கு ஏற்ப, செயல்களையும், ஒழுக்கங்களையும் கற்றுக்கொள் கின்றார்கள். அதை அவரவர் கொள்கைக்கு, தகுதிக்கு, ஒழுக்கத் திற்கு ஏற்ப பயன்படுத்துகின்றார்கள். பின்பற்றுதல், மனப் பான்மை, பழக்கவழக்க நடத்தை ஒழுக்கம், தகுதி, வேறுபட்ட நட்புகள் அவரவர் குணநலத்திற்கு ஏற்ப நண்பர்களைத் தேர்ந் தெடுத்தல், ஏமாற்றமும், சண்டையிடுதலும் ஆகியவை அவரவரின் குணங்களுக்கு ஏற்ப வாழ்க்கையிலும் பின்பற்றி வருகின்றார்கள். சமுதாயத்தின் அமைப்புகளும் சூழ்நிலைகளும்

அவர்களுக்குத் துணையாகின்றன. அதாவது, ஒருவன் வங்கியராகப் பணியாற்ற என்னென்ன கற்க வேண்டுமோ அவையெல்லாம் கற்ருல்தான் வங்கியாளராகப் பணியாற்றமுடியும். பணிப் பெண்ணுகவும், மருத்துவராகவும், வழக்கறிஞராகவும், பணியாற்ற சிலபல கட்டுபபாடுகளையும் வழிமுறைகளையும் கற்று அறிதல் போலவே குற்றவாளிகளும் அறிவு, ஆற்றல் ஆகியவற்றைப்பயன்படுத்தி குற்ற ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கின்ருர்கள். 'கற்றல்' என்பது பொதுவான ஒரு செயலாகும். யார் எதை எப்படிக் கற்ருர்கள், ஏன் கற்ருர்கள் என்பவை போன்ற விஞக்கள் எழும்போது இடம், நோக்கம், கருத்துப் பொருள், செயல் ஆகியவை வேறுபடுகின்றன. ஒழுக்கமுள்ளவன் பள்ளியில் பயில்கின்ருன். குற்ற ஒழுக்கம் உள்ளவன் குகையில், தோப்பில், காடுகளில் குற்ற ஒழுக்கத்தைக் கற்று அறிகிருன். ஆக 'கற்றல்' என்பது பொதுவாக இருந்தாலும் அதன் வழிமுறைகள் மாறுபடுகின்றன. சமுதாய ஆய்வியல் கழகத்திற்கும், உள இயல் கழகத்திற்கும் அடிக்கடி கொள்கைப் போராட்டங்கள், கருத்து வேறுபாடுகள் நிகழ்வதுண்டு. மனத்தின் தோற்ற வளர்ச்சியின் பண்புக்கூறுகளைக் கொண்டு குற்ற ஒழுக்கத்தை அறிவதற்கு முடியும் எனச் சமுதாய ஆய்வியல் கழகத்தின் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதேபோன்று சமுதாய ஆய்வியலின் முக்கியத்துவத்தையும் உள இயல் கழகத்தினர் ஏற்றுக் கொண்டார்கள். ஆனுல், இரு கழகத்தார்களும் மனிதப் பண்புக் கூறுகளையும் நாகரிக வளர்ச்சிகளையும் குற்றத்திற்கான காரணக் கூறுகளாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இரண்டு கழகங்களில் உள்ள சில எழுத்தாளர்கள் மனிதப் பண்புக்கூறுகளையும், நாகரிகப் பண்பாடுகளையும் கொண்டு குற்றவாளிகள், குற்றம் புரியாதவர்கள் ஆகிய இருவருக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கினுர்கள். ஆனுல், தனிமனிதப் பண்புக்கூறுகள், நாகரிக வளர்ச்சி ஆகியவை குற்றவாளிகளிடம் அதிகமாகக் காணப் படலாம். அதே நேரத்தில் அவை இல்லாமலும் இருக்கலாம். பொதுவாக, சமுதாய ஆய்வு இயல் கழகக் கொள்கைப்படி பார்த்துப் பின்பற்றுதல் என்ற கொள்கையை வலியுறுத்தி வந்துள்ளார்கள். பார்த்துப் பின்பற்றுதல் என்ற கொள்கை உண்மையாக இருக்குமேயானுல் ஒரு சிலர் மட்டும் குற்றங்களைப் பார்த்து கற்றுக் கொள்கிருர்கள் என்ருல் மற்றவர்கள் ஏன் அவற்றைக் கற்றுக் கொள்ளவில்லை. எல்லோரும் ஏன் குற்தவாளிகளாக மாறவில்லை. மற்றவர்கள் அச்சத்தால் செய்யாமல் இருக்கின்ருர்களா? அல்லது கோழைகளா? இவை போன்ற விஞக்களுக்கு இக் கழகம் தெளிவாக விளக்கம் அளிக்கவில்லை. ஓருவன் நல்லதைப் பார்த்து பின்பற்றுவதற்கும் மற்ருெருவன் குற்றத்தைப்

பார்த்துப் பின்பற்றுவதற்கும் சமுதாயம் ஒரு காரணமாக இருந்தாலும் அது அவரவர் தனி மனிதப்பண்புக் கூறுகளாலும் நாகரிக வளர்ச்சியினாலும் சுற்றுச் சூழ்நிலைகளினாலும் வேறுபடுமே தவிர, பொதுவாக பார்த்துப் பின்பற்றுதல் என்ற கொள்கை மட்டுமல்ல.

இது தனிமனித அறிவு வளர்ச்சி மனப்பான்மை, வளர்ப்பு முறை, கட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றைப் பொறுத்து இருக்கும். ஒரு வகுப்பில் பல மாணவர்கள் இருந்தாலும் அதில் அத்தனை பேரும் தேர்வில் தேறி விடுவதும் இல்லை. அதே நேரத்தில் அனைவரும் ஒரே நிலையில் தேறிவிடுவதும் இல்லை. அதாவது ஒருவன் முதல் வகுப்பு என்றால் நால்வர் இரண்டாம் வகுப்பிலும் நாற்பது ஐம்பது மூன்றும் வகுப்பிலும் தேறி விடுகின்றார்கள். பார்த்துப் பின்பற்றுதல் என்ற கொள்கை பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கே பொருந்துவதில்லை. மேலும், குற்றவாளிகள் பார்த்துப் பின்பற்றுதல் என்பது நடைமுறைகளையும் குற்றச் சம்பவங்களையும், குற்ற நுட்பங்களையும், உத்திகளையும் பார்த்து அறிந்துகொள்வார்களே தவிர குற்ற ஒழுக்கத்தை அறிந்துகொள்ள முடியாது. மேலும் குற்ற ஒழுக்கம் ஒருவனுடைய பண்பாக அமைவதாகும். அந்தப் பண்பு அடிப்படை வளர்ப்பு முறையைப் பொறுத்து அமைந்திருக்கும். ஒரே சமுதாயத்தில் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கட்டுப்பாடுடன் வளர்க்கின்றார்கள். சிலர் கட்டுப்பாடு இல்லாமல் வளர்க்கின்றார்கள். அது பெற்றோர்களின் மன நிலையையும் அவர்களின் அடிப்படைப் பண்புகளையும் பொறுத்து அமைகிறது. ஆகவே இதற்குக் காரணம் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வேதான். பல காரணக் கூறுகளினால் குற்றம் புரியப்பட்டு வருகின்றது. பார்த்துப் பின்பற்றுதல் என்ற சமுதாய ஆய்வியல் கழகத்தின் கொள்கை அவ்வளவு சிறந்த கொள்கையாக எடுத்துக்கொள்ள முடியாது.

இதுவரையில் பல கழகங்களின் கருத்துகளைப்பற்றி ஆராய்ந்தோம். இனி, பொதுவாக அமைந்துள்ள பல்வேறு காரணக் கூறுகளைப் (Multiple-Factor) பற்றி ஆராய்வோம். குற்றம் பல காரணக் கூறுகளினால்தான் செய்யப்படுகிறது என்பதுதான் உண்மையான விளக்கமாகும். இதற்குக் காரணம், மனநோய் உள்ளவர்கள் அத்தனை பேரும் குற்றங்கள் செய்வதில்லை. பண்பாடற்றவர்கள் அனைவரும் குற்றம் செய்வதும் இல்லை. பார்த்துப் பின்பற்றுதல் மூலமும் குற்றவாளிகளைப் பார்க்கின்ற அனைவரும் குற்றங்கள் புரிவதில்லை. குற்ற உத்தி, நுட்பம் அறிந்திருக்கின்ற அனைவரும் குற்றங்கள் செய்வதில்லை. உணர்ச்சி வயப்படக்

கூடிய அனைவரும் குற்றவாளிகள் அல்ல. ஆகவே மேற்சொன்ன காரணக் கூறுகளுடன் மற்றும் பல காரணக் கூறுகள் இணைவதனால் குற்றம் புரியப்படுகிறது. இவற்றை அறிய வேண்டுமானால் ஒரு தனிநபர் குற்றவாளியை ஆராய்ந்தால் மேற்சொன்ன உண்மைகள் வெளிப்படும். ஒரு சந்தர்ப்பத்தில் செய்யப்படும் குற்றம் அதே சந்தர்ப்பத்தில் அதே நிலையில் உள்ள மற்றொருவர் குற்றத்தைச் செய்வதில்லை, மற்றொரு குற்றம் வேறொரு சந்தர்ப்பத்தில் செய்யப்படுகின்றது. போராட்டம் நடத்த வேண்டுமென்று ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கானவர் ஒன்று திரண்டாலும் முடிவில் குற்றங்கள் செய்தவர்கள் அதில் ஒரு சிலராகத்தான் இருக்கிறது, இவ்வாறு திட்டமிட்டுக் கூடிச் செய்யும் குற்றங்களையே அனைவரும் செய்ய முடியாமல் போய்விடுகிறது. அதே போன்று ஒன்று இரண்டு காரணக் கூறுகளில் குற்றங்கள் செய்யப்படுவதும் இல்லை.

ஒரு குழந்தை அல்லது சிறுவர் குற்றவாளியாக மாறவேண்டுமானால் பல துன்பங்களுக்குள்ளாக வேண்டும். அதாவது பெற்றோர்களில் ஒருவர் இறந்து விடுதல், பெற்றோர் குடிகாரனாக விளங்குதல் அல்லது பெற்றோர்கள் முறையற்ற, நேர்மையற்ற வாழ்க்கை வாழ்தல், குழந்தைகள் வறுமையில் வாடுதல், போதிய சுகாதார வசதி இன்மை, நெருக்கமான இல்லங்களில் வாழ்தல், சிறு வயதில் பள்ளியை விட்டுவிடும் கட்டாயத்திற்கு உள்ளாதல், சிறு வயதில் வேலையில் சேர்ந்து உழைக்கும் கட்டாயத்திற்கு உள்ளாதல், தீய நண்பர்களுடன் பழக்கம் ஏற்படுதல், பெற்றோர்களை வெறுத்தல் ஆகிய பல காரணக் கூறுகளைத் தாங்கிக்கொள்ள முடியாத குழந்தைகள் குற்றங்களைச் செய்கின்றனர்கள். மேற்சொன்னவற்றைத் தாங்கிக் கொண்டு குற்றம் புரியாமல் வாழும் சிறுவர்களும் உண்டு. வாழ்க்கையில் கடமை, கொள்கை, இலட்சியம், கடமை உணர்ச்சியற்ற வாழ்க்கை முறைதான் குற்றங்கள் புரிவதற்கு எளிதில் இசைந்து விடுகின்றன. குற்ற புள்ளிவிவரகளைச் சேகரிப்பவர்களும் குற்ற விகிதங்களைக் கணக்கிடுகின்றனர்களே தவிர அத்துடன் குற்றங்களுக்கான உண்மையான காரணம் யாது என்பனவற்றை ஆராய்ந்து அறிவதில்லை. குற்றச் சட்டத்தை மீறுகின்றவர்கள் அவர்களின் குற்றங்களைப் பொறுத்து அவர்களின் சமுதாயத்தில் தகுதி, வயது, பால்வகை, குணம், பிறப்பிடம், தொழிலின் தரம், குடியிருப்பு முறை, கல்வித் தரம், மனப்பான்மை, மனப்போக்கு, அவர்கள் வளர்க்கப்பட்ட முறை, பழகும் நண்பர்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து விடலாம்.

குறைவான வருமானம் உள்ளவர்கள் அதிக குற்றம் புரிந்துள்ளதாகக் குற்றப் புள்ளிவிவரங்கள் அறிவிக்கின்றன. ஆகவே குறைந்த வருவானம் உள்ளவர்கள் குற்ற ஒழுக்கத்தை உடையவர்கள் எனக் கூறிவிட முடியுமா? முடியாது. அதாவது குறைந்த வருவானம் உள்ளவர்கள் நாட்டில் கணக்கற்றவர்கள் உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் அதிக வருமானம் உள்ளவர்கள் மிகச் சிலர்தான் உள்ளார்கள், அந்த மிகச் சிலர் குற்றங்களைச் செய்யலாம். அவர்களின் தகுதியால், திறமையால், சமுதாய கௌரவத்தினால் குற்றங்களை மறைத்துவிடலாம். ஆகவே அதிக வருமானம் உள்ளவர்கள் குற்றங்கள் செய்வதில்லை என்று கூறுவது பொருத்தம் ஆகாது. குறைந்த வருமானம் உள்ளவர்கள் அத்தனைபேரும் குற்ற ஒழுக்கம் உள்ளவர்கள், நேர்மையற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. அவரவர்களுடைய வருமானத்துடன் மற்ற காரணக் கூறுகள் இணைந்தால்தான் குற்றவாளிகளாக மாறிவிடுகின்றார்கள். கையூட்டு வாங்குதல் குற்றம். அடிமட்டத்தில் உள்ளவர்கள் வாங்கினால் இல்லாமையால், வறுமையினால் வாங்குகின்றார்கள் என்று கூறுவிடலாம். ஆனால் உயர் பதவியில் நல்ல செல்வாக்குடன் இருக்கும் ஒருவன் கையூட்டு வாங்கினால் அதற்கும் சமுதாய ஏற்றத் தாழ்விற்கும் என்ன தொடர்புண்டு. முன்னவன் அவசியத்திற்காகக் கையூட்டு வாங்கினால், பின்னவன் மன அமைதிக்காக, போலி நாகரிகத்திற்காக வாங்குகிறான் என்று பொருள். இதில் அதிகமாக தண்டனை வழங்கப்பட வேண்டியவன் யார்? ஆகவே பல்வேறு காரணக் கூறுகள்தான் குற்றங்கள் நிகழ்வதற்கான காரணக் கூறுகளாகும்.

குற்றங்களை ஆராயும் முறைகள் (The Methods of Studying Crime).

குற்றங்களை ஆராய இரண்டு வழிகளைப் பயன்படுத்தலாம். அதாவது பொதுவான முறையில் அமைந்துள்ள பொது அறிவு ஆராய்ச்சி முறை (Methodology) குற்றப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து அதன் மூலம் குற்றங்களுக்கான காரணக் கூறுகளைக் கண்டறிதல் ஆகும். பொது அறிவு ஆராய்ச்சி (Methodology) முறையில் இனம், மதம், வணிகம், தொழில், அரசியல், ஆகியவைகளுடன் மக்கள் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினால் சமுதாயத்தில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளில் குற்றங்களும் நிகழ்கின்றன. ஆகவே இந்நிகழ்ச்சிகளைச் சமுதாய ஆய்வு வல்லுநர்களும் வரலாற்று ஆசிரியர்களும் குற்றங்களுக்கான காரணக் கூறுகளைக்காண ஆராய்கின்றார்கள். அல்லது குற்ற நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு தங்களின் கருத்துகளை, அபிப்

பிராயங்களை குற்றங்களுக்கான விளக்கங்களாகக் கூறுகின்றனர்கள். ஆகவே பொது அறிவு ஆராய்ச்சி முறையில் ஆய்வு முறைகளுக்கும் குற்றப் புள்ளிவிவரங்கள் மூலம் கண்டறியும் ஆய்வு முறைகளுக்கும் நிறைய வேறுபாடு உள்ளன. குற்றப் புள்ளி விவரங்கள் சேகரிப்பதன் மூலம் குற்றங்களுக்கான காரணக் கூறுகளை ஆராய்தல் சிறந்தவையாக இருக்கக்கூடும். புள்ளி விவரங்கள் சேகரிப்பவர்கள் குற்றவாளிகளையும் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்களையும், தண்டனை வழங்கப்பட்டவர்களையும் சிறையில் தண்டனையை அனுபவித்துக்கொண்டு இருக்கின்ற சிறைக் கைதிகளையும் கணக்கெடுப்பதுடன் அவர்களின் மனநிலை, அவர்கள் செய்த குற்றங்கள், எந்தச் சூழ்நிலையில் குற்றங்கள் செய்யப்பட்டன, அவர்களுக்காக சான்றுகள் அளித்தவர்களும், எதிராகச் சான்றுகள் கூறினவர்களையும். சிறை அனுபவம், விசாரணை பற்றிய கருத்து ஆகியவற்றையும் குற்றவாளிகளிடம் இருந்தே அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. இத்துடன் குற்றவாளிகள் இல்லத்தின் இருப்பிடம், சமுதாயத்தில் அவர்களுக்கு இருந்த தகுதி, கௌரவம், குற்றவாளிகளின் பெற்றோர்கள், அவர்களின் பண்புக்கூறுகள், நல்லொழுக்கம் உள்ளவர்களா தீயொழுக்கம் உள்ளவர்களா, இயற்கையாகவே குற்றம் புரிந்தவர்களா அவர்களின் பரம்பரை பற்றியும் அறிந்துகொள்ளவும் வாய்ப்புண்டு. மேலும் குற்றவாளிகளின் உடலமைப்புகள், உடல் வடுக்கள், உயரம், அவர்களின் தோற்றம், நிறம், பொதுவான குணங்கள், பொதுவாக அமைந்து உள்ள உடல் அமைப்புகள், வயது, பால் வேறுபாடு, ஆகியவற்றையும் நேரடியாகப் பார்த்து அறிந்து கொள்வதுடன் குற்றவாளிகளின் மனநிலைகளையும், குற்றம் செய்யும்போது இருந்த மனநிலைகளையும், சிறையில் தண்டனை அனுபவிக்கும் காலத்தில் ஏற்பட்ட மனநிலைகளையும் வருங் காலத்தில் அவர்களின் கொள்கைகள் யாவை போன்ற நோக்கங்களைக் கேட்டறியவும் குற்றப் புள்ளிவிவரங்கள் சேகரிப்பதன் மூலம் குற்றத்திற்கான காரணக் கூறுகளை ஆராய்வோருக்கு வசதிகள் உண்டாகின்றன.

ஆகவேதான் குற்றத்திற்கான காரண காரியங்களை ஆராய்வதற்கு குற்ற ஆய்வு இயல் வல்லுநர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர்கள். சமுதாய ஆய்வியல் வல்லுநர்களைக் காட்டிலும் குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் குற்றத்திற்கான காரணங்களை அறிவதற்கு அதிகம் தகுதி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்கள். குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் ஏற்கெனவே குற்றச் சட்டங்களையும் குற்ற நடைமுறைச் சட்டங்களையும் தெளிவாக கற்றிருப்பதுடன், குற்றவாளிகளுடன் பழகி அவர்களுக்காக வாதாடிய

அனுபவமும் உள்ளவர்கள். ஆகவேதான் மற்ற ஆராய்ச்சியாளர்களைக் காட்டிலும் குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் இத்துறைக்கு மிகவும் பொருத்தமானவர்கள் என்பதில் ஐயமில்லை. குற்றங்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக நிகழ்வதில்லை. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படும்போதும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போதும் உள்நாட்டுக் கலகம், புரட்சி, குழப்பம், போராட்டம் கிளர்ச்சி ஆகியவை நிகழும்போதும் குற்றங்கள் அதிகமாக நிகழ ஏதுவாகும். அத்துடன் தேர்தல் காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துவருகின்றன. மேற்சொன்ன காலங்களிலும் சந்தர்ப்பங்களிலும் அதிகமாக நிகழும் குற்றங்கள் அதாவது கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம், கொள்ளைக் குற்றம், கற்பழித்தல் அல்லது வன்புணர்ச்சிக் குற்றம், ஏமாற்றுதல், தீயிடுதல் குற்றம், தாக்குதல், கொடுங்காயம், சிறிய காயம் உண்டாக்குதல் ஆகிய குற்றங்கள் நிகழக் கூடும்.

குற்றங்கள் பருவகாலத்திற்கு ஏற்றவாறு அதிகரித்தும் குறைந்தும் காணப்படலாம். குளிர்காலத்தைவிட வெய்யில் காலங்களில் நபருக்கு எதிரான குற்றங்கள் அதிக அளவில் நிகழ்வதாக அறிய முடிகிறது. இதனால் வெய்யில் காலங்களில் வெம்மையின் கொடுமையால் மக்களின் மனநிலை பறிக்கப்படுகின்றதா அல்லது வெய்யில் காலங்களில் மக்கள் மற்றவர்களுடன் வணிகத்தின் மூலமோ அல்லது மற்ற குடும்பத் தொடர்புகளின் காரணத்திற்காகவோ அதிகமாக பழகவும் அடிக்கடி சந்திக்கவும் வாய்ப்புண்டு என்ற காரணத்திற்காக குளிர்காலத்தைவிட வெய்யில் காலங்களில் அதிகமாக குற்றங்கள் நிகழ்கின்றன. கோடையில் அதிக குற்றங்கள் நிகழ்வதாக குற்றப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனால் அவற்றிற்கான உண்மையான காரணங்களைப் பற்றிக் கூறவில்லை. அதேபோன்று பொருளாதாரத்திற்கும் குற்றத்திற்கும் அதிக தொடர்பு இருப்பதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

ஆனால் அவை வறுமைக்காக குற்றங்கள் செய்யப்பட்டனவா அல்லது இலாபத்தைக் கருதி குற்றங்கள் செய்யப்பட்டனவா அல்லது பொருளாதாரத் தொடர்பாக நிகழ்ந்த குற்றங்கள் யாவும் ஏழைகளால் செய்யப்பட்டனவா என்பனபோன்ற நிலைமைகளைப் புள்ளிவிவரங்கள் அளிக்கவில்லை. ஆகவே இனி புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் குற்ற ஆய்வு இயல் வல்லுநர்கள் மேற்கூறிய காரணங்களையும் ஆராய்வார்களாக.

குற்றத்திற்கான காரணங்களை அறிவதற்கு மேலும் பல வழிகளைக் கையாளலாம். அதாவது குற்றவாளிகளை கணக்கெடுக்

கின்றபோது அவர்களின் தோற்றம், நடை, உடை, பாவனை ஆகியவற்றைக்கொண்டு மற்ற குற்றவாளிகளின் நடை, உடை, பாவனை, தோற்றம் ஆகியவற்றையும் ஒப்பிட்டு வேறுபாடுகளை அறியும் முறையாகும். மேலுள்ள பண்புகளை வைத்துக்கொண்டு குற்றம் புரியாதவர்களின் நடை, உடை, பாவனை, தோற்றம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு எந்தச் சூழ்நிலையில் ஒருவன் குற்றவாளியாகின்றான், அதாவது மற்றவர்களைவிட குற்றவாளி மட்டும் உணர்ச்சி வசப்படுவது குற்றங்கள் புரிவதற்கும் அதே நேரத்தில் மற்றவர்கள் சட்டத்திற்கு அடங்கியவர்களாக கட்டுப்பாடுடன் விளங்குவதற்கும் யாது காரணம் என்பனவற்றை ஆராயவேண்டும். இதற்காகக் குற்றவாளிகளின் இல்லத்தின் அமைப்பு அதாவது சிதறிய குடும்பமா (Broken House) அல்லது சீர்கெட்ட குடும்பமா, குடிகாரக் குடும்பமா, பெற்றோர்கள் இல்லறத்தை நல்லறமாக நடத்தாமல் நடுத்தெருவில் விட்டுவிட்ட குடும்பமா, பெற்றோர்கள் அடிக்கடி உணர்ச்சிவசப்படக் கூடியவர்களா அவர்களின் குழந்தைகளும் அதே தன்மைகளைப் பெற்றிருக்கின்றார்களா என்பனவற்றை ஆராய்தல்வேண்டும்.

மேலும் பால் உறவுத் தொடர்பான குற்றங்களையும் ஆராய்தல் வேண்டும். ஒரு குற்றத்திற்கும் மற்றொரு குற்றத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் குற்றச் சட்டம் தெளிவாக விளக்குவதைப்போல குற்றவாளிக்கும் மற்றொரு குற்றவாளிக்கும் உள்ள வேறுபட்ட பண்புக் கூறுகள் யாவை என்பதைத் தெளிவாக ஆராய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட குற்றவாளியின் குற்றத்திற்கான காரணங்கள் யாவையெனத் தெளிவாக ஆராய்ந்து அறிந்தாலும் பொதுவான குற்றவாளிகளைப்பற்றி அதிக குறிப்புகள் கிடைப்பதில்லை. அதாவது சிறைக் கைதிகள் குறிப்புகள் மட்டும் கிடைக்கக்கூடும். கைதிகளின் பண்புக் கூறுகளையும் மற்ற குற்றவாளிகளின் பண்புக் கூறுகளையும் ஆராய்ந்தால் அவர்களின் பண்புக் கூறுகள் வேறுபட்டிருக்கும். சிறைக் கைதிகளின் பண்புக் கூறுகள் ஏறத்தாழ ஓரே மாதிரியாக இருக்கும். இருப்பினும் இருமுறை, மூன்றும்முறை கைதிகளாக இருப்பவர்கள் உள் உணர்ச்சி, குற்ற ஒழுக்கம், தீயொழுக்கத்தில் நாட்டம், சமுதாயத்தை வெறுத்தல், உறவினர்களை வெறுத்தல் ஆகிய குணங்களை வழக்கமாகப் பெற்றிருப்பார்கள். பிற குற்றவாளிகளிடத்தில் மேற்சொன்ன பண்புக் கூறுகள் காணப்படமாட்டா.

மேலும் புள்ளிவிவரங்கள் மூலம் சேகரிக்கும் குற்றவாளிகளின் வாழ்க்கைக் குறிப்புகள் அதாவது வயது, பால் (ஆண் பெண்),

இனம் இவற்றைத் தவிர மற்ற விவரங்கள் உண்மையானவையா என்பது ஐயம்தான். மற்ற விளக்கங்களான பிறப்பிடம், இல்லறத்தின் சூழ்நிலை, நிலைமைகள், பெற்றோர்களின் பண்புக் கூறுகள், சமுதாயத்தில் அவருக்குள்ள கௌரவம், வீட்டு வசதிகள், பழக்க வழக்கங்கள், பெற்றோர்கள் வாழ்க்கையின் வரலாற்றுச் சுருக்கம், தரம் ஆகியவை குற்றவாளிகளின் மூலமாக அறிவது எவ்வளவு உண்மையாக இருக்கும் என்பது ஐயம்தான். காரணம், குற்றவாளிகளுக்கு ஞாபக மறதியாக இருக்கலாம். அல்லது தங்கள் குடும்பத்தைப்பற்றி மற்றவர்களுக்கு ஏன் கூற வேண்டும் என்ற நோக்கத்தினுல் உண்மையை மாற்றிக்கூறியிருக்கக்கூடும். அல்லது சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற வெறுப்பினுல் எதையும் கூற மறுத்துவிடலாம். அல்லது வீட்டில் உள்ளவர்களையும் கைதுசெய்து தொந்தரவு செய்வார்கள் என்ற அச்சத்தின் காரணமாக உண்மையைக் கூருமல் இருந்துவிடலாம். ஆகவே குற்றவாளிகளின் மூலம் சேகரிக்கும் செய்திக் குறிப்புகள் அத்தனையும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளமுடியாது. மேலும் குற்றவாளிகளின் உண்மையான நிலைமைகளை அறிய வேண்டுமானுல் குற்றம் புரிவதற்கு முன்பு வாழ்ந்த இல்லங்களின் ஊர்களுக்குச் சென்று ஆராய்ந்தால்தான் குற்றவாளியின் பெற்றோர்களைப் பற்றியும் இல்லத்தின் சூழ்நிலை, கல்வி, வாழ்க்கைத் தரம், குற்றவாளிகளின் பழக்க வழக்கங்கள், நண்பர்கள், ஆகிய தகவல்களை அறிந்துகொள்ளலாம். மேலும் பல சிக்கல்கள் உள்ளன. அதாவது குற்ற ஆய்வாளர்களுக்கு, குற்றவாளிகளின் மொழி தெரியாமல் இருக்கலாம். இந்நிலையில் மொழிபெயர்ப்பாளர்கள் உதவியால் தகவல்களைச் சேகரித்தல் அவ்வளவு உண்மையாக இருக்க நியாயமில்லை. மேலும் குற்றவாளிகளுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லத் தெரியாது. ஆகையினுல் குற்ற விஷயங்கள் மூலம் ஆராயும் செய்திக் குறிப்புகள் சிறப்பாக இருக்கும் எனக் கூறுவதற்கில்லை, மேலும் குற்றவாளிகள் மனவுறுதியற்ற தன்மையினுல்தான் குற்றம் புரிவதற்குக் காரணமென்று முன்பு எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் பகர்கின்றன. ஆனுல் முதல் உலகப் போரின்போது, ராணுவ ஆட்சி நடந்தபோது, ஆய்வு செய்ததில் குற்றவாளிகளைவிட குற்றம் செய்யாதவர்கட்கு மனவுறுதியற்ற தன்மை அதிக அளவு மக்களிடத்தில் காணப்பட்டதாக அப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

ஆகவே மனவுறுதியற்ற தன்மை, குற்றத்திற்கான காரணம் எனக் கூறிவந்தது மறுக்கப்பட்டுவிட்டதல்லவா.

ஆகவே குற்றப் புள்ளிவிவரங்கள் மூலமாக ஒரு சில பண்புக் கூறுகளைமட்டும் அறிந்துகொள்ள துணை செய்யும். இதை

வைத்துக்கொண்டு குற்றத்திற்கான காரணக்கூறு அவைதாம் என்று கூறிவிடமுடியாது. மேலும் அவற்றைக்கொண்டு குற்ற வொழுக்கம், குற்றத் தன்மை எவ்வாறு உற்பத்தியாகின்றது, எப்பருவத்தில், எந்த நிலையில் அவை குற்றவாளி மனத்தில் படரு கின்றன என்பதை விளக்குவதில்லை. எடுத்துக்காட்டாக பெண் களைவிட ஆண்கள் பத்து மடங்கு குற்றத்திற்கான தண்டனை வழங்கப்படுகின்றார்கள் என்றால் இதில் பாதிபாகம் திடீர் கிளர்ச்சி யால் கொலைக் குற்றத்தைச் செய்கின்றார்கள்.

இந்தப் பால் பாகுபாட்டு வாழ்க்கைக்கு நடைமுறையில் இருக்கும் வேறுபாடா காரணம்? அதாவது ஆண்கள் பெண்களை விட தொழிலில் அதிகமாக ஈடுபடுகின்றார்கள் என்ற காரணத் தினலா? அல்லது வேறு எந்தக் காரணத்தினுல் இவ்வாறு நிகழ் கின்றன என்பதற்குத் தகுந்த விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. ஆனல் குற்றப் புள்ளிவிவரங்கள் மட்டும் பெண்களைவிட ஆண்கள் பத்துமடங்கு குற்றங்கள் அதிகமாகச் செய்கின்றார்கள் என்று குறிப் பிடுகின்றன.

அதேபோன்று இளங் குற்றவாளிகளுக்கும் பெற்றோர்கள் மது வகைகளை அருந்துவதனுல் ஏற்படுகின்ற வெறிய நச்சுத் தன்மைக்கும் தொடர்புண்டா என்றால் முடிவாக அறிவிக்கப்பட வில்லை. வெறிய நச்சுத்தன்மை குழந்தைகட்கும் பரவுகின்றது. இதனுல்தான் குழந்தைகள் குற்றம் செய்கின்றார்கள் என்றால் சிறுவர்கட்கு ஏற்பட்ட உடலமைப்புகளினுல்தான் குற்றம் செய் கின்றார்கள் என்பது பொருளாகின்றது. அல்லது பெற்றோர்கள் தங்கள் வருமானத்தையெல்லாம் மது அருந்துவதற்கே செல வழித்துவிடுவதனுல் குழந்தைகளின் தேவைகள் கவனிக்கப்படுவ தில்லை. குழந்தைகளின் தேவைகளை, குழந்தைகளே தேட வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆகையினுல்தான் குழந்தைகள் குற்றவாளிகளாக மாறுகின்றார்கள் என்பதா? அல்லது பெற் றோர்கள் மது அருந்தியதனுல் மயக்கமடைந்து மதிகெட்ட நிலையில் இல்லத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்ற காரணத்தினுல் குழந்தைகள் குற்றங்களைச் செய்கின்றார்களா? அல்லது மிருகத்தனமாக, மூர்க்கத்தனமான கட்டுப்பாட் டினுல் குழந்தைகள் இல்லத்தை வெறுத்து வெளியில் நாடோடி களாகத் திரிந்து குற்றவாளிகளாக ஆகின்றார்களா அல்லது குழந்தைகள் உளக்கிளர்ச்சியினுல் அல்லது உணர்ச்சி வயப்பட்ட காரணத்தினுல் குற்றங்களைச் செய்கின்றார்களா என்று புள்ளிவிவரங்களின் மூலம் அறிய முடிந்தாலும் மேற் சொன்ன பல்வேறு காரணக்கூறுகள் ஏன் ஏற்படுகின்றன.

அந்நிலைமைகள் குற்றத்தைச் செய்யத் தூண்டுவதற்கு யாது காரணம்? போன்ற வினாக்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்படவே யில்லை. குழந்தைகள் உணர்ச்சி வயப்பட்டால் குற்றங்களைத்தான் செய்யவேண்டுமா? ஏன் செய்ய வேண்டும்? நல்லதைச் செய்ய விடாமல் தடுப்பது யாது? என்பவைகட்குத் தகுந்த விளங்கங்கள் காணுதல் வேண்டும்.

கோரிங்ஸ் என்பவர், தமது புள்ளிவிவர ஆய்வுகளால் குற்றவாளிகள் அறிவின் தரத்தில் குற்றம் செய்யாதவர்களைவிட குறைந்து காணப்படுவதாகக் கூறுகின்றார். ஆனால் அறிவின் தரம் குறைவதால்தான் குற்றம் செய்யப்படுகின்றது என்றால் அது ஏன் செய்யப்படுகிறது என்பதற்கு விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. அறிவு குறைந்துவிட்டால் மற்ற செயல்களைச் சரிவர செய்யாமல் இருக்கும்போது குற்றங்கள் மட்டும் செய்ய எப்படித் துணிவுவரும். மேலும் அறிவின் தரத்தில் குறைந்த அத்தனை நபர்களும் குற்றங்களைச் செய்தாகவேண்டுமே? ஆனால் உண்மையில் அப்படி இல்லையே. ஏன்!

குற்றங்களுக்கான காரணக் கூறுகளாகிய சீரழிந்த குடும்பம், பெற்றோர்களின் மணமுறிவு, கைவிடுதல், பெற்றோர்களின் இறப்பு, வறுமை, கல்வியின்மை, பொழுதுபோக்கின்மை ஆகியவையாகும் என்றால் அதே சூழ்நிலையில் மேற்சொன்ன அதே காரணக் கூறுகள் சூழ்ந்துள்ள நிலைகளில் வாழும் குழந்தைகள் பலர் குற்றங்களையே செய்வது இல்லையே ஏன்? அதே நேரத்தில் நல்ல வசதியுள்ள குடும்பத்தில் சீரழியாத, மணமுறிவில்லாத குடும்பங்கள், பெற்றோர்கள் இறக்காத இல்லங்களில் உள்ள குழந்தைகள் குற்றங்களைச் செய்கின்றார்களே அதற்கு யாது காரணம்? மன உறுதியற்றவர்கள் குற்றம் செய்தால் மன உறுதி உள்ளவர்களும் குற்றங்களைச் செய்கின்றார்களா? அதற்கு என்ன காரணம்? ஆகவே மன உறுதியற்ற தன்மைதான் குற்றத்திற்குக் காரணம் என்பதும் அடிபட்டுப் போகிறது அல்லவா. ஆகவே மன உறுதியற்ற தன்மையாக, சீரழிந்த குடும்பமாக மனமுறிவுடன் நிம்மதியற்ற குடும்பமாக, கைவிடப்பட்ட குடும்பமாக, குடிகாரக் குடும்பமாக, வறுமையில் வாடிய குடும்பமாக, இடவசதியற்ற நெருக்கடியான வீடாக விளங்கினாலும் அவர்களுடைய குழந்தைகள் குற்றவாளிகளாக மாறுவதில்லை. அத்துடன் வேறு பல சூழ்நிலைகளும் இணைந்து செயல்படும்போதுதான் குற்றவாளிகளாக மாறுகின்றார்கள் என்பது விளங்கும்.

தனி மனிதனைப்பற்றி ஆய்வு செய்தாலும் மேற்சொன்ன உண்மையான காரணக் கூறுகளை அறியலாம். மேலும் இளை ஞர்கள் இளம்பருவத்தில் உறுதியற்ற மனநிலையும் உள்ளக் கொந் தளிப்பும் உணர்ச்சியால் குழப்பமும் இன்னல்களும், அடக்கு முறைகளும் சமுதாயத்திற்கு எதிராக சாழ்ப்பு அடைதலும் ஆகிய தனித்தன்மை வாய்ந்த மனநிலைகள் கொண்டிருப்பதனால் அவர் களிடத்தில் மனப்போராட்டம், மனமாறுட்டம், மனக்குறைபாடு ஆகிய சூழ்நிலைகள் உருவாகின்றன.

ஆகவே புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும்போது நடத்தும் ஆய்வு முறைகள் குற்றவாளிகளின் உண்மையான மனநிலை களையும் குற்றத்திற்கான உண்மையான காரணக் கூறுகளையும் ஆராய்தல் வேண்டும். அவ்வாறு அல்லாமல் சாதாரண காரணக் கூறுகளுக்கே அதிக முககியத்துவம் கொடுத்துவிட்டு அவைதான் குற்றத்திற்கான காரணக் கூறுகள் எனக் கூறினால் உண்மையான காரணங்களைக் கண்டறிய முடியாமல் போய்விடக் கூடும் அல்லவா. ஆகவே குற்றப் புள்ளிவிவரங்கள் மூலம் ஆயவு செய்ய விழைவோரின் குறிப்பிட்ட காரணக் கூறுகளைக் கொண்ட குற்றத் தையும் குற்றவாளிகளையும் ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆய்வு நடத்துகின்றபோது புதிய கருத்தோ காரணக் கூறுகளோ தெரியவந்தால் அதற்குப் புதிய வரையறைகளை வழங்குவதுடன் அதன் பண்புகளை ஆராய்தல் வேண்டும். சிறப்பான குணங்களை ஒன்றுபடுத்தி, பிறகு முடிவான கருத்துரையை வழங்குதல் வேண்டும். அந்தக் குற்றவாளியின் குற்ற ஒழுக்கத்தின் பண்புக் கூறுகள் ஆராய்ந்து வெளியிடப்பட வேண்டும்.

மேற்கூறியபடி ஆய்வு நடத்த வேண்டுமானால் குற்றவாளி களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். அதாவது ஆய்வாளர் குற்றவாளியுடன், மற்றொரு குற்றவாளியாகக் காட்சியளிக்க வேண்டும். அப்பொழுதுதான் சிறைக்கைதி, நண்பன் எனக் கருதி எல்லா உண்மைகளையும் கூறுவான் அல்லது திறந்த வெளியில் குற்றவாளிகளுடன் தானும் ஒரு குற்றவாளியாக நினைத்துப் பழகவேண்டும். குற்றவாளிக்கு உற்ற நண்பனாக விளங்க வேண்டும். இதற்கு ஆய்வாளர்கள் பல உத்திகளைக் கையாள வேண்டும். இம்முறையில் ஆய்வு நடத் தினால் குற்ற ஒழுக்கத்தையும் குற்ற உத்திகளையும், சூழ்நிலை களையும் ஆராய்ந்து அறியலாம். ஆனால் இம்முறையில் ஆய்வு நடத்தச் சிலரால்தான் முடியும். மற்றவர்கள் இம்முறையைக் கையாளக் கூடாது. உடன் பழகுவதால் ஒரு நபர் எப்படி எந்தச் சூழ்நிலையில் குற்ற ஒழுக்கத்தைப் பெற்றுக் குற்றவாளியாக மாறு

கிருன் அல்லது குற்ற ஒழுக்கம் இல்லாமலே குற்றவாளியாக மாறக் கூடிய சூழ்நிலைகளையும் கண்டறிய வேண்டும். பெரும்பாலும் சிறையைவிட வெளிப் பரப்பில் செய்யும் ஆய்வு முறையே சிறந்த தாகக் காணப்படும். காரணம், திறந்தவெளியில் குற்றவாளி பழகும் இடங்கள், தங்கும் இடங்கள், குற்றவாளியின் சாயல், பேச்சு, முகபாவனை, எண்ணம், சுதந்திரமான போக்குடன் கூடிய செயல் ஆகியவற்றைக் கொண்டு குற்ற ஒழுக்கத்திற்கு வரையறை காணலாம். சிந்தனையாளர் கழகங்களும் (School of Thought) இதே முறையில் ஆய்வு நடத்தி குற்ற ஒழுக்கத்திற்குப் பொது வரையறைகள் வழங்கியுள்ளன. ஆனால் அந்தப் பொதுக் கருத்துக்கள், வரையறைகள் பொருந்தக் கூடியவையாக அமை யாதது விருப்பத்தகாததுதான். ஒரு குறிப்பிட்ட குற்ற ஒழுக் கத்தை அதாவது திருட்டார்வக் கோளாறு (Kelptomania) ஆராய வேண்டுமானால் முன் கூறிய வழிமுறைகளை மனத்தில் கொண்டு ஆராய்தல் வேண்டும்.

முடிவாக, குற்ற ஒழுக்கத்திற்கு மொத்தமாக நல்லதொரு பொது வழியைப், பொதுக் கருத்துரையை, வரையறையை வழங் குவதற்குத் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு குற்றவாளியின் குற்ற ஒழுக்கத்தை ஆராய்ந்த பிறகு எல்லாக் குற்றவாளியின் குற்ற ஒழுக்கத்தை ஆராய்ந்து அதில் காணப்படும் பொதுவான காரணக்கூறுகளுக்குப் பொதுவான வரையறை வழங்குதல் வேண்டும். மற்ற வேறு பல குற்றவொழுக்கத்திற்குத் தனித்தனி வரையறை வழங்குதல் வேண்டும். அவற்றை ஆராய்ந்து அறிந்த பிறகு குற்றங்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளையும் ஆராய்ந்து வழங்குதல் வேண்டும். குற்றம் இல்லாத சமூகத்தை அமைத்திட குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் முயன்றிடல் வேண்டும்.

3. குற்ற ஒழுக்கம்

(Criminal Behaviour)

குற்றவொழுக்கமும் ஆராய்ச்சியும் (The Criminal Behaviour and Research)

குற்ற ஆய்வியல் சமூகங்களின் வளர்ச்சி, வீழ்ச்சி கொள்கைகள் ஆகியவற்றையும், புள்ளிவிவரங்கள் சேகரிக்கும்பொழுது கவனிக்க வேண்டிய முக்கிய விதிமுறைகளையும் ஆராய்ந்தோம். அடுத்து குற்றவொழுக்கத்தைப்பற்றி ஆராய்வோம்.

குற்றங்கள் நிகழ்வதற்குப் பல காரணக் கூறுகள் என ஆராயப்பட்டது. அக்காரணக் கூறுகள் எங்கெங்கு தோன்றுகின்றனவோ எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கெங்கெல்லாம் குற்றங்கள் புரிவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் எதையுமே முடிந்த முடிவாகக் கூறமுடியாது. குற்றங்கள் புரிவதற்கு வேண்டிய எல்லா சாத்தியக் கூறுகள் இருப்பினும் குற்றங்கள் நடக்காமலும் இருக்க வாய்ப்புண்டு சாதாரண சூழ்நிலைகள் இருக்கின்ற காலத்தில் குற்றங்கள் நிகழ்வதற்கும் வாய்ப்புண்டு. சாதாரணமாக குற்றமே நிகழாத இடமாகக் கருதும் இடத்திலும், சூழ்நிலைகளினாலும் குற்றங்கள் நிகழ்ந்துவிடக்கூடும். ஆகவே பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு சாத்தியக் கூறுகள் இருக்கும்போது குற்றம் நிகழ்கின்றது. இதற்கு யாது காரணம்? குற்றவொழுக்கம்தான் மேற்சொன்ன சூழ்நிலைகளில் குற்றங்கள் நிகழ்வதற்கும் நிகழாமல் இருப்பதற்கும் முக்கிய காரணக்கூறு ஆகும். குற்றவொழுக்கத்தைப்பற்றி விரிவாக ஆராய்வோம்.

குற்றவொழுக்கமானது அறிவியல் சார்ந்த (Scientific) ஒழுக்கமாக அமையாமல் பல்வேறு காரணக் கூறுகளைக் கொண்டு இணைந்த கூட்டுப் பண்பு. குணம், உணர்வு, தன்மை ஆகியவைதாம் குற்றவொழுக்கமாகும். அவ்வாறின்றி குற்றவொழுக்கத்தின் வரையறை, கருத்துத் தெளிவு, அமைப்பு முறை, குற்றச் சாயல் ஆகியவை எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே மாதிரியாக அமைந்திருக்குமேயானால் அந்த குற்றவொழுக்கத்தைக் கொண்டு யார் குற்றவாளி யார் குற்றமற்றவர்கள், தீயவொழுக்கமுடையவர்கள் யார், நல்லொழுக்கமுடையவர்கள் யார் என்பதை வரையறுத்து விட்டால் பின்பு குற்றவாளிகளை இனம் பிரித்துக் குற்றங்கள் நிகழா

வண்ணம் முன் கூட்டியே தடுத்துவிடலாம் அல்லவா! அந்த ஒரே தன்மையான குற்றவொழுக்கத்தைக் கண்டறிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றைக் குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் ஆராய்ந்து அறிந்துவிட்டார்களேயானால் குற்ற ஆய்வியலும், அறிவியல் துறையாக ஆக்கப்பட்டுவிடும். இன்று அறிவியல் துறையில் விஞ்ஞானத்தின் துணையால் கருவிகளைக் கொண்டு இன்று புயல் வருகிறது, மழை பொழியப் போகிறது. இன்று நிலநடுக்கம் ஏற்படக்கூடும் என்றும். நோயின் தன்மைகளை ஆராய்ந்து நோய்களுக்கு மருந்து காணுவதும், அதற்குச் சிகிச்சையளிக்க முயல்வதும், குறிப்பிட்ட மருந்தானது குறிப்பிட்ட எல்லா நோய்களையும் குணப்படுத்துவதும் ஆகிய அரிய பெரிய செயல்கள் அறிவியல் துறையினுல் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதனுல் நோய்கள் பரவுவதைத் தடுக்கவும், வந்ததைக்குணப்படுத்தவும். ஆபத்தை முன் கூட்டியே அறிவதால் அது நிகழாமல் தடுக்கப்பட்டு விடுவதும் இன்று அறிவியல் துறையால் செய்யமுடிகின்றது. இதற்கெல்லாம் காரணம் கருப்பொருள், ஆக்கக்கூறுகள், ஒரே வகையைச் சார்ந்த பல செயல்களுக்கும் பொருந்துவதுதான். ஆனுல் குற்றத்திற்கான காரணக் கூறுகளோ, குற்றவாளிக்கான ஒழுக்கமோ ஒரே மாதிரியாக அமையாததுதான் இதற்குக் காரணம்.

ஆகவே கடந்த கால குற்றவாளிகள் நடத்தையை, ஒழுக்கத்தை ஆய்வு செய்வதன் மூலம் ஓரளவிற்கு குற்றவாளியின் ஒழுக்கத்தைக் காணமுடியும். அதைக்கொண்டு குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கும், குற்றவொழுக்கம் பரவாமல் தடுப்பதற்கும் பேருதவியாக இருக்கும். அதாவது புதிய நோய் வந்தால் மருத்துவர் அந்த நோயின் தன்மையை ஆராய்ந்து அதைத் தடுக்கும் முறைகளையும், குணப்படுத்தும் வழியையும் காணுவதைப்போல குற்ற ஆய்வியல் வல்லுநர்களுர் தொடர்ந்து தங்கள் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான காரணக் கூறுகளைக் கண்டறிய இயலும். விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைவதுபோல் குற்றங்களின் வழிமுறைகளும் குற்றவாளிகளின் ஒழுக்கங்களும் காலத்திற்கு காலம் மாறுபடுகின்றன. முதலில் குற்றவொழுக்கம் எந்தச் சூழ்நிலைகளில் தோன்றக்கூடும் என்பதை ஆராய்வோம். அதனை அறிந்து கொண்டால் குற்றவொழுக்கத்திற்கு வரையறை காண முயற்சி மேற்கொள்ளலாம். ஆதிகாலத்தில் கொலை செய்துவிட்டால் அது பிசாசுவின் தூண்டுதல், பேய்களின் தூண்டுதல் என்ற கருத்து பரவியிருந்த காரணத்தினுல் குற்றங்களைத் தடுக்கவும் குற்றவொழுக்கத்தை ஆராயவும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆனுல் இன்று நிலைமை அவ்வாறில்லை. குற்றமனத்தோடு குற்றம் செய்யப்பட்டிருந்தால்தான் குற்றவாளியென்றும் அச்செயல் குற்றம் என்று தண்டனைச் சட்டங்களில் வரையறை

அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதிகாலத்தில் குற்றவாளிகளின் மனநிலையைப் பற்றி ஆராயப்படவில்லை. தற்காப்பிற்காக கொலைசெய்தாலும் கொலைக் குற்றமாக கருதப்பட்டு வந்தது ஆனால் இன்று அவ்வாறில்லை. தற்காப்பிற்காக செய்யப்படும் செயல்கள் யாவும் குற்றமல்லவென்று கூறுகிறது குற்றச் சட்டம். ஆகவே ஒரே செயல் இடத்தை, காலத்தைப் பொறுத்து செயலின் தன்மை மாறுபடுகிறது. ஆக தற்காப்புரிமைக்காகச் செய்யப்பட்ட குற்றவாளியிடத்தில் குற்றவொழுக்கம் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் அவன் புரிந்த செயல் குற்றமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அவன் ஒழுக்கம் குற்றவொழுக்க மாக இருந்திருக்கும். ஆகவே குற்றவொழுக்கம் காலத்திற்குக் காலம், செயலுக்குச் செயல் மாறுபடுகிறது. இருப்பினும் பொது வாக அதிகமான குற்றங்கள் செய்கின்றவர்கள் என்று குற்றப் புள்ளிவிவரங்கள் கூறுகின்ற காரணத்தையொட்டி அவர்களின் குற்றவொழுக்கத்தை ஆராய்வோம்.

II. குற்ற ஒழுக்கத்திற்கான காரணக் கூறுகள் (The Causes for the Criminal Behaviour)

பொதுவாக, குற்றங்கள் அதிகமாகச் செய்பவர்கள் பொருளா தாரத்தில் அடிமட்டத்திலுள்ளவர்கள், அல்லது தாழ்த்தப்பட்ட வர்கள், பின் தங்கிய வகுப்பினர்கள், ஆதிவாசிகள், ஆகியோ ராவர். கிராமப்புறத்தாரைவிட நகரத்தில் வாழும் மக்கள் அதிக மாகக் குற்றங்கள் செய்கின்றார்கள். அமெரிக்காவில் வெள்ளையர் களைவிட நீக்ரோக்கள் அதிக குற்றவாளிகளாக விளங்குகின்றார்கள். முதியவர்களைவிட இளைஞர்கள் அதிக குற்றவாளிகளாகக் காணப் படுகின்றார்கள். பெண்களைவிட ஆண்கள் அதிககுற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர். அப்படி ஒரு சில பிரிவினர்கள் மட்டும் அதிக குற்றவாளிகளாக விளங்குவதற்கு யாது காரணம்? அவரவர்களின் குற்றவொழுக்கமும் சமுதாயத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்புமேயாகும். தனி நபரின் உணர்ச்சிப் பெருக் காலும் அவனிடத்தில் குற்றவொழுக்கமானது குறைந்தோ அல்லது அதிகரித்தோ காணப்படுகின்றது. இந்தக் கொந் தளிப்புகளும், உணர்ச்சிப் பெருக்கமும் ஏற்பட யாது காரணம்? அதாவது ஏழ்மை, சீர்கேடான, மோசமான குடியிருப்பு, குடிசைப் பகுதி, குடிசை வீடு, மனம் மகிழ்வதற்கு வசதிகள் இல்லாமலிருத்தல், பெற்றோர்கள் ஒழுக்கக் கட்டுப்பாடு அற்ற வர்கள், குடும்பங்களைக் கட்டுப்பாடின்றி நடத்துதல், மனவுறுதி யற்ற தன்மை, ஏமாற்றம், மாற்றம், முறையான உணவும் இல்லாத தால் நிலையான எண்ணங்களும், போதுமான தூக்கமும் இருப்ப தில்லை. இதனால் மனவுறுதியற்ற தன்மை, அடிக்கடி வாழ்க்கையை வெறுக்கும் மனப்பான்மை, அடிக்கடி உணர்ச்சி வயப்படுதல், வாழ்க்கையில் நம்பிக்கையின்மை ஆகிய பண்புக் கூறுகளும்

மற்றும் பல சூழ்நிலைகளும் இணைந்து குற்றத் தன்மையை அதிக மாக வளர்ப்பதற்கும், குற்றவொழுக்கத்தைப் பெருக்குவதற்கும், குற்றவாளிகள் அதிகரிப்பதற்கும் காரணமாகின்றன என்று கூறினால் அதே சூழ்நிலைகளில் வாழும் எத்தனையோ மக்கள் குற்றம் செய்யாமல் நல்லொழுக்கத்துடன் விளங்குகின்றார்கள் அல்லவா? என்ற குரல் ஒலிக்கும். அதேபோன்று சமுதாயத்தில் மாடி வீட்டில் வாழும் பணக்காரர்களும் உயர் வகுப்பினர்களும் ஒரு சிலர் குற்றங்களைப் புரிகின்றார்களே அதற்கு என்ன காரணம் என்ற வினா மறுபக்கம் எழுமல்லவா? பணக்காரர்களுக்கு மேற் சொன்ன வசதிகள் குறைவு என்று கூறமுடியுமா? ஆகவே சூழ் நிலைகளும் மற்ற பண்புக் கூறுகளும் மட்டுமே குற்றத்திற்குக் காரணமாவதில்லை. குற்றங்கள் நிகழாதபோதும் அதே சூழ்நிலை கள் அமைந்திருக்கும். குற்றமனம், குற்றவொழுக்கம் ஆகியவை இருக்கும்போதுகூட மற்ற காரணக் கூறுகள் இருக்கின்றனவே! அதேபோன்று மற்ற சூழ்நிலைகள், காரணக் கூறுகள் வசதியாக அமையாதபோதும் குற்றங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. காரண காரியத் தொடர்பாகப் பிரித்தால் குற்றவொழுக்கத்திற்குக் காரண மாக விளங்குகின்ற விளக்கங்களைப் பெறக்கூடும். ஆனால் இயக்கம் செயலமைவுத் திட்டம், நடைமுறை, ஆகியவை பணக் காரர்களுக்கும், நீக்ரோக்களுக்கும், வெள்ளையர்களுக்கும், தாழ்ந் தவனுக்கும், உயர்ந்தவனுக்கும் நகரவாசிக்கும், கிராமவாசிக்கும், இளைஞர்களுக்கும், முதியோர்களுக்குப் குற்றங்களைச் செய்வதற்கு பொதுவானவையாகும். இயக்கம், செயலமைவுத்திட்டம், நடை முறை ஆகியவற்றிற்குத் தெளிவான விளக்கம் காண, குற்ற வொழுக்கத்திற்குத் தெளிவான. சுருக்கமான விளக்கம் காணுதல் வேண்டும். அத்துடன் குற்றவொழுக்கத்திற்கும், நல்லொழுக் கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஆராய்ந்து தெள்ளத்தெளிவாக, சுருக்கமாக குற்றவொழுக்கத்திற்குப் பொருள் வரையறை காணுதல் வேண்டும். அதாவது நாம் குற்றவொழுக்கத்திற்கும், அதன் தன்மைகட்கும் விளக்கம் காணவேண்டுமேயன்றி பொது வான ஒழுக்கத்திற்கு அல்ல

III. குற்ற ஒழுக்கத்திற்கான வரையறை (The Definition of Criminal Behaviour)

மேலே கூறப்பட்ட இயக்கம், செயலமைவுத்திட்டம், அதாவது குற்றம் புரியும் நடைமுறைகள், வழிமுறைகள் ஆகியவை குற்றவாளிகளுக்கெல்லாம் பொதுவாக அமைந்திருக்குமேயன்றி, அதே இயக்கம், செயலமைவுத்திட்டம், நல்லொழுக்கமுடை யவர்கட்கும் பொதுவானதாக இருக்கமுடியாதல்லவா! குற்ற வொழுக்கம் மானிடர்கட்கே உரிய ஒழுக்கமாகும். இக் குற்ற மனத்தின் அடிப்படையில் குற்றத் தன்மையாக வளர்ந்து, பிறகு குற்றச் செயல் மூலமாக வெளிப்படுகிறது. ஒழுக்கம் என்பது பொதுவாக அமைந்த தன்மையை, நடத்தையைக் குறிப்பதற் காகப் பயன்படுத்தும் வார்த்தையாகும்.

ஆகவேதான் வள்ளுவரும்—

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்"

என்று உயிரைவிட மேன்மைப்படுத்திக் கூறுகின்றார். நல்லொழுக்கம் தீயொழுக்கம் இரண்டு தானே, குற்ற ஒழுக்கம் எப்படி வந்தது என வினவலாம். தீயொழுக்கமானது புகை பிடிப்பதும், பல் துலக்காமல் சாப்பிடுவதும், குளிக்காமல் சாப்பிடுவதும், பெரியோர்களுக்கு மரியாதை அளிக்காமல் பேசுதலும் ஆகியவையும் இன்னும் பிறவும் தீயொழுக்கமாகக் கருதப்படுகின்றன. ஆனால் அவற்றைச் செய்யாமல் இருந்தாலும் முறை தவறிச் செய்தாலும் குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஆகவேதான் குற்ற ஒழுக்கம் என்பது தீயொழுக்கத்தைவிடச் சிறிது கடுமையான குணம், தன்மை, நடத்தையைக் குறிக்கும். ஆகவேதான் குற்ற ஒழுக்கம் (Criminal Behaviuor) என்றே அழைக்கிறோம். தீயொழுக்கம் என்பது பொதுவான தீய பழக்க வழக்கங்களைக் குறிப்பதாம். குற்ற ஒழுக்கம் தனித்து விளங்கும் குற்ற ஒழுக்கத்தில் தீயொழுக்கம் அடங்கியுள்ளது. ஆனால் தீயொழுக்கத்தில் குற்ற ஒழுக்கம் உள்ளடங்கி இருக்கும் எனக் கொள்ளக்கூடாது. தீயொழுக்கம் பொதுவாக கெட்ட பழக்கத்தைக் குறித்தாலும் குற்ற ஒழுக்கம் தனிமையான, குற்றப் பண்புக் கூறுகளைக் குறிக்கும். ஒழுக்கம் என்பது மனிதர்க்கே உரிய ஒழுக்கமாகும். விலங்குகளிடத்தில் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

> 'மாவும் மாக்களும் ஐயறி வினவே
> மக்கள் தாமே ஆறறி வுயிரே"

எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். ஆகவேதான் மனிதனின் செயல்மட்டும் குற்றமாகக் கூறப்படுகின்றது. நல்லொழுக்கத்துடன் வளர வாழ வேண்டும் என்பது மனிதனது கடமையாகும். அதை மீறி நடக்கும்போது குற்றமாகக் கருதப்பட்டு அதற்குப் பரிகாரமாகத் தண்டனை அனுபவிக்க வேண்டிருக்கிறது. 'பொய்' சொல்வதும தீயொழுக்கம்தான். ஆகவே குற்ற ஒழுக்கமாகவும் அமைந்து விடுகிறது. ஒருவன் பொய்சொல்ல ஆரம்பித்தால் அவனிடத்தில் குற்ற ஒழுக்கம் உருப்பெறுகிறது என்பது பொருள். ஒருவன் அதிகமான பட்டங்களைப் பெற்றிருந்தாலும், அறிஞன், கலைஞன், சொல்லின் செல்வர், மாமேதை, மாபெரும் தலைவன், கவிஞன் என்று பெயர் பெற்றிருந்தாலும், புகழடைந்திருந்தாலும் அவனிடத்தில் 'பண்பு' இல்லையென்றால் 'மரம் என்று கூறுகின்றார் வள்ளுவர் குற்ற ஒழுக்கமானது எந்தப் பருவத்திலும் எந்த நேரத்திலும் பரவக்கூடியது, சமுதாயத்தில், இருக்கும் நற்பெயருக்கும் கௌரவத்திற்கும் புகழுக்கும் குற்ற ஒழுக்கத்திற்கும் தொடர்பு கிடையாது. குற்ற ஒழுக்கமானது அவனிடத்தில் மறைந்திருக்கலாம் அல்லது மறைககப்பட்டிருக்கலாம்.

குற்றச் செயல் புரியும்போது அந்தந்த ஒழுக்கம் வெளிப்படுகிறது குற்றச்செயல் புரியாதபோது குற்ற ஒழுக்கம் வெளிப்படாமலே மறைந்துவிடவும் வாய்ப்புண்டு. குற்றமனத்தின் வளர்ச்சியால் விளைவதுதான் குற்ற ஒழுக்கம். ஆகவே குற்ற மனமே இல்லாத மக்கள் நாட்டில் உண்டா என்ன? ஆனால் குற்ற மனம் குற்ற ஒழுக்கமாக வளர்ந்து அது குற்றச்செயல் வடிவத்தில் வெளிவராத குற்றமனம் நாட்டில் அதிகமுண்டு. குற்றமனம் குற்ற ஒழுக்கமாக வளர்ச்சியடையாததற்குக் காரணம் சுற்றுச் சூழ்நிலைகள், வளர்ப்பு முறைகள், பழகும் நண்பர்கள், மனத்தின் வளர்ச்சியுடன் கூடிய மாற்றங்கள், கடமை, உணர்ச்சி, கட்டுப்பாடு, கண்ணியமான வாழ்க்கை வாழ விரும்புவது குற்ற ஒழுக்கம் வெளிப்பட்டால், இருந்த கௌரவம் பறிபோய்விடும் என்று அஞ்சும் தன்மை, மனப்பக்குவம், தானே மற்றவர்களுக்கு அறிவுரை, நீதி, கட்டுப்பாடு, ஒழுக்கம், ஆகியவற்றை உணர்த்தும் பருவமும் நிலைமையும் அடைந்து விடுதல். சிறுவனாக இருந்தபோது தான்தோன்றியதாகத் திரிந்தவன் பெரியவனாகிக் குடும்பத் தலைவனாகப் பொறுப்பு ஏற்பதைப் போன்றும், தான் விபச்சாரியாக மாறிவிட்டாலும் தன் மகள் விபச்சாரியாக மாறக்கூடாது என்று விரும்பும் தாயைப்போலவும், குற்ற ஒழுக்கம் காலத்திற்குக் காலம், பருவத்திற்குப் பருவம் மாறிக்கொண்டே இருக்கும். ஒரு வங்கியில் பணிபுரியும் பொருளாளர் பணத்தைக் கையாடல் செய்யவேண்டும் என்று பல ஆண்டுகளாக மனத்தில் திட்டமிட்டு வருகின்றான். நாளைக்கு மொத்தமாக எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்று துணிந்து வங்கிக்குச் செல்லும்போது அங்கே அவனுக்கு உயர் பதவியுடன் மாற்றலும் நடந்திருந்தால் அவன் குற்றமனம் வெளிபடாமலும் குற்ற ஒழுக்கம் வளராமலும் இருப்பதற்கு வாய்ப்புண்டு அல்லவா? ஆகவே சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் குற்றமனம், குற்ற ஒழுக்கம் மறைக்கப்பட்டு விடுவதும் உண்டு. ஒருவன் நல்ல நிலைமை அடைந்துவிட்ட பிறகு பழைய குற்ற மனம் கைவிடப்படுவதும் உண்டு. ஆக வாழ்வின் மாற்றத்தாலும், ஏற்றத்தாலும், ஏமாற்றத்தாலும் குற்றமனம், குற்ற ஒழுக்கம் வளர்வதும் உண்டு, மறைவதும் உண்டு. ஆனால் தீயொழுக்கத்திற்குக் குற்ற மனம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. தீயொழுக்கம் அறியாமையாலும் வளரலாம். அறிந்தும் தீயொழுக்கத்தில் ஈடுபடலாம்.

ஆகவே குற்ற ஒழுக்கத்திற்குரிய வரையறை மனித ஒழுக்கத்திற்குட்பட்டே அமைந்திருக்கவேண்டும். குற்ற ஒழுக்கமானது பொது ஒழுக்கத்தின் ஒரு தனிப்பட்ட பிரிவாக இருக்கமுடியும், நல்லொழுக்கத்தைக் கற்றுத் தெளிவதைப் போலவே குற்ற ஒழுக்கத்தையும் கற்று அறிதல்வேண்டும். தானாகவே பொது ஒழுக்கத்தைத் தவிர நல்லொழுக்கமோ, தீயொழுக்கமோ, குற்ற ஒழுக்கமோ வளர்ந்துவிடாது. ஆகவே குற்ற ஒழுக்கத்தற்கு வரையறைகளும் விளக்கங்களும் காண நல்லொழுக்கத்திற்குப்

பொருள் விளக்கமும் வரையறைகளும் முதலில் காணவேண்டும். நல்லொழுக்கத்திற்குத் தேவையானவை குற்ற ஒழுக்கத்திற்குத் தேவைப்படமாட்டா. குற்ற ஒழுக்கம் அதையும் மறைக்கச் செய்யும். நல்லொழுக்கம் எதையும் விளக்கும் தன்மை வாய்ந்தது. இரண்டிற்குமே புத்தி கூர்மை. உத்தி தேவைப்படுகிறது. ஆனால் திசைதான் வேறு வேறு பக்கம். ஆனால் சுவாசித்தல் மனிதனுக்குப் பொதுவாகத் தேவைப்படும் ஒன்று. சுவாசித்தலைக்கொண்டு ஒருவன் நல்லொழுக்கம் உடையவனா குற்ற ஒழுக்கம் உடையவனா என்று வேறுபாடு காணமுடியாது. சுவாசித்தல் எல்லோருக்கும் பொதுவான செயலாகும். ஆனால் ஒருவன் நடை, உடை, பாவனை, உணவு, உணர்வு, தன்மை ஆகியவற்றைக்கொண்டு நல்லொழுக்கம் உள்ளவனா குற்றவொழுக்கம் உள்ளவனா என்பதை ஆராய்ந்து அறியலாம். உள்ளத்தின் எதிரொலி ஒருவனின் உணவு, உடை, நடை, ஆகியவற்றில் தெரியும். கள், மது அருந்துபவனை குற்றவொழுக்கம் உள்ளவனாகவே கருத இடமுண்டு. ஆனால் குற்றச் செயல் மூலமாகவும் அவை வெளிப்படாமல் இருக்கலாம். அல்லது குற்றச் செயல்கள் மறைக்கப்பட்டு இருக்கலாம். அல்லது விரும்பியது தானாகவே கிடைத்துவிட்டு இருக்கலாம். அல்லது வாய்ப்பு கிடைக்காமல் இருந்து இருக்கலாம். வசதிபடைத்தவனாக இருக்கலாம். வேறு கோணத்தில் எண்ணத்தை மாற்றிவிட்டிருக்கலாம், அல்லது குற்றச் செயலை மறந்து இருக்கலாம். குற்றச் செயல் என்பது கொலைக் குற்றம், வன்புணர்ச்சிக் குற்றம், கொடுங்காயம் உண்டாக்குதல் மட்டும் குற்றங்கள் அல்ல. பிறன்மனை புனர்வது, சூதாட்டம் ஆடுவது, வீட்டினுள்ளே திருடுவது, கணவன், மனைவிக்குத் தெரியாமல் திருடுவது, வீட்டில் உள்ள பாத்திரங்களை விற்றுவிடுவது, அக்கம் பக்கம் வயல்களில் விளைந்த பொருள்களைத் திருடுவது, காமத் தரகர் வேலைசெய்வது. குடித்துவிட்டு அக்கம் பக்கம் வீட்டாருடன் சண்டையிடுவது, கத்திப்பேசுவது, பிள்ளைகளை அவசியமில்லாமல் அடிப்பது ஆகிய எண்ணற்ற குற்றச் செயல்கள் தினமும் மக்களிடையே காணப்படுகின்றன.

அவை வளர்ந்து விட்டால்தான் கொலையாகவும், கொள்ளையாகவும் வன்புணர்ச்சியாகவும் வெளிப்படுகிறது. குற்ற ஒழுக்கமே இல்லாமல் நல்லொழுக்கத்துடன் வாழும் ஒருவன் திடீரென்று ஒருநாள், தன் மனைவியை மாற்றான் கற்பழிக்கிறான் அல்லது வன்புணர்ச்சி செய்கின்றான் என்றால் அதைக் கண்டதும் கணவன் மனைவியைக் காக்க கற்பைப் பாதுகாக்க, கோபமும், ஆத்திரமும் பொங்க கற்பழிக்கும் சண்டாளனைக் கொலைசெய்து விடுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். நல்லொழுக்கமே உருவான

அவனிடத்தில் திடீரென்று குற்றவொக்கம் புகுந்துவிட்டது எப்படி என்று வினு எழலாம் அல்லவா. மனைவியின் கற்பைக் காக்க செய்த 'கொலை' கொலைக் குற்றமாகாது. அவன் செயலும் குற்றச் செயலாகாது. சாதாரண அறிவுள்ள மனிதன் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வானே அப்படியேதான் அவன் நடந்து கொண்டான். ஆகவே சாதாரணமாக மனைவியையும் தன் சொத்தையும் பாதுகாக்கக் கடமைப்பட்டவன் தன் கடமையைத் தான் செய்தான். ஆகவே அது குற்ற ஒழுக்கமாகாது. சட்டத்திலும் அவனுக்கு குற்றவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சாதாரணமாக முன்கோபம் குற்றவொழுக்கத்தில் ஒரு பிரிவாகும். ஏன் என்ருல் இது நல்லொழுக்கத்திற்கு எதிரானதாகும்,

பொதுவாக குற்ற ஒழுக்கத்தை ஆராய்ந்தறிய வேண்டுமானல் குற்றங்கள் மலிந்து காணப்படும் பகுதிகளில் சுற்றுச் சார்பு நிலைமைகளையும். அங்குள்ள குற்றவாளிகளின் வாழ்க்கை முறைகளையும் ஒழுக்கச் சாயல்களையும் அவர்களின் செயல், உணவு, உடை, நடை, பாவனை, ஆகியவற்றையும் காலவரிசையாக ஆராய்ந்தால் காரண காரியத் தொடர்புகளை ஆராய்ந்தால், காரண காரிய இயைபுள்ள தேர்வாராய்ச்சி நடத்தினல், சமுதாயத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மக்களின் குற்ற ஒழுக்கத்திற்குத் தீர்வு காணப்பெறுவதுடன் அதற்கு வரையறையும் (Difinition) வழங்க ஏதுவாகும்.

அதாவது அறிவியல் துறையில் மண்வளப் பரிசோதனை செய்வதைப் போன்றதாகும். மண் என்ற வார்த்தை பொதுவாக விளங்கினலும் பல பெயர்களைப் பெற்றிருக்கிறது. செம்மண், களிமண், கரிசல்மண், சுண்ணும்பு மண், மணல், சரளை என்று பலவாறு பிரிக்கப்படுகிறது. அந்தந்த மண்ணிற்குத் தகுந்த பயிர்களை நடுவதைப்போல மனிதன் என்று பொதுவாகக் கூறினலும் மனிதர்களில் ஒருவருக்கொருவர் தன் உள்ளத்தாலும், மனத்தாலும், அறிவாலும், செயலாலும், சொல்லாலும் வேறுபடுகின்ருர்கள் அல்லவா. அவர்களின் பழக்க வழக்கங்களையும் செயல் முறைகளையும் வேறுபடுத்தி மண்வள ஆராய்ச்சியைப் போன்று மக்களின் ஒழுக்கத்தைப் பிரிக்கவேண்டும்.

ஆகவே ஒழுக்கத்திற்கு வரையறை வழங்குதல் வேண்டும். பிறகு குற்றவொழுக்கம், நல்லொழுக்கம் இவற்றைப் பாகுபாடு செய்தல் வேண்டுப். அதைக் கொண்டே மேலும் பல ஆய்வுகள் நடத்தினல் காலப்போக்கில் குற்ற ஒழுக்கத்திற்கு உண்மையான கருப்பொருள், வரையறை கிடைக்கக்கூடும். இதற்குப் பல குற்ற

ஆய்வியல் வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர்கள். அதற்காக நாடெங்கும் உள்ள கல்லூரிகளில் குற்ற ஆய்வியலைப் பாடமாக வைத்துப் போதிக்க வேண்டும். இம்மாதிரி முயற்சிகள் அமெரிக்காவில் அதிகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்குள்ள எல்லாக் கல்லூரிகளிலும் மற்ற பாடங்களைப்போல குற்ற ஆய்வியல் பாடமும் மாணவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. ஆகவேதான் இத்துறையில் அமெரிக்கா இன்று சிறந்த குற்ற இயல் நூல்களையும் குற்ற ஆய்வியல் வல்லுநர்களையும் உற்பத்தி செய்ய முடிகிறது. ஆனால் இது சிறிது கடினம்தான். எனினும் முயன்று வெற்றி கண்டுவிட்டால், குற்றவொழுக்கத்திற்கு வரையறை வழங்குவதுடன் குற்றங்களைத் தடுக்கவும் வழிவகைகளை மேற்கொள்வதுடன் மேலும் குற்றவொழுக்கம், இளம் தலைமுறையினருக்குப் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். இதற்காக குற்றவொழுக்கத்தின் கொள்கையளவேயான பழைய காரணக் கூறுகளையும், அறிக்கைகளையும் ஆராய வேண்டிய அவசியமில்லை. புதிய காரணக் கூறுகள் வேறுபட்டிருக்கலாம். ஆகவே புதிய காரணக் கூறுகளைத் தள்ளிவிட முடியாது. காலத்திற்கேற்ற மாதிரி குற்றவொழுக்கமும் மாறுவதனால் குற்றவொழுக்கத்தின் காரணக் கூறுகளும் மாறுபடும். சூழ்நிலைகளும் மாறுபாட்டிருக்கும். மேலும் இரு நண்பர்கள் சேர்ந்து திருடுகின்றனர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களின் திருட்டை அறிந்து பிடிக்க வருகின்றனர்கள் காவல்துறை அதிகாரிகள். இதில் உயரமானவன் வேகமாக ஓடிவிட்டதனால் அவன் தப்பிவிட்டான். சிறுவன் குள்ளமானவன். ஆகவே அவன் பிடிபட்டுவிட்டான். ஓடினவன் பிற்காலத்தில் திருந்தி மேலும் படித்து ஆசிரியனாக மாறிவிடுகின்றான். பிடிபட்டவன் சிறுவன் ஆகையால் அவன் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றான். இதனால் குள்ளமாக இருந்தவன் பிற்காலத்தில் கொள்ளைக் கூட்டத் தலைவனாக மாறிவிடுகின்றான் என்று வைத்துக் கொள்வோம். கால்கள் நீளமாக இருந்த காரணத்தினால் அவனால் வேகமாக ஓடமுடிந்தது. ஆகவே அவன் குற்றத்திலிருந்து தப்பி விடுகின்றான். குட்டையான கால்களை உடையவன் அவனைப் போல ஓடமுடியாமையினால், பிடிபட்டதனால், குற்லவாளியாக மாறுகின்றான். இவர்களின் மாற்றத்திற்குக் காரணம் அவர்களின் கால்கள் எனப் பொதுவாகத் தோன்றும் அல்லவா!

குற்றவொழுக்கத்திற்கும் குற்ற மனத்திற்கும் நீண்ட கால்களுக்கும் குட்டையான கால்களுக்கும் என்ன தொடர்பு? குட்டையான கால்களை உடைய எத்தனையோ பேர்கள் நல்லவர்களாக இருக்கின்றனர்களே, அதே நேரத்தில் நீண்ட கால்களை உடைய

வர்கள் எத்தனையோ பேர்கள் குற்றவாளிகளிகளாக இருக்கின்றனர் களே! ஆகவே கால்களின் அமைப்பைக்கொண்டு குற்ற ஒழுக் கத்தைத் தீர்மானிக்க முடியாது. இது தேவையற்ற தொடர்பும் ஆகும். ஆனால் கால்களின் வேறுபாடுகளைக் கொண்டு அடை யாளங் காணமுடியும். யார் குற்றவாளி யார் குற்றமற்றவன் என்று அறியலாம். அதைக்கொண்டு அவர்களின் குற்றவொழுக்கத்தை யும் குற்றத்தன்மையையும் குற்ற மனப்பான்மைகளையும் ஆராய லாம். மேலும் அவர்களின் தரத்தையும், பழக்க வழக்கங்களையும் அவர்களின் நெருங்கிய நண்பர்கள், பழகும் இடம் ஆகியவற்றை யும் ஆராயப் பயன்படும். இதிலிருந்து குற்றவொழுக்கத்திற்கும் குற்றமற்ற நல்லொழுக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள் காணுவ தற்கும் ஆதாரமாக இருக்கும்.

பொதுவாக, குற்றம் நிகழ்கின்ற சரியான காலத்தையும் குற்றம் புரியும் வழிமுறைகளையும் ஆய்வு நடத்தினால் குற்ற ஒழுக்கத்திற்கு விளக்கங்களைக் காணமுடியும். அல்லது குற்ற வாளியின் முந்திய வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து அறிவதிலும் அவன் கையாண்ட குற்ற நுட்பங்கள், குற்ற உத்திகள் அவன் செய்த செயல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்தாலும் குற்ற வாளி தானே வலிய அக் குற்றத்தைச் செய்தானா அல்லது இயற் கையின் ஆற்றலினால் அவ்வாறு செய்தானா அல்லது பழக்க வழக்கதினால் அவ்வாறு செய்தானா அல்லது பரம்பரையாக அவனிடத்தில் குற்றவொழுக்கம் இருந்த காரணத்தினால் குற்றத் தைச் செய்தானா என்றெல்லாம் அறியமுடியும். இதில், தானே வலிய குற்றத்தைச் செய்யும்போது நிகழும் மற்ற காரணக் கூறுகளிலும் குற்றவாளியின் உடல் சார்ந்த உணர்ச்சிகளில் உந்தப்பட்டு செய்கின்றான் என்பது பொருள். திட்டமிட்டு குற்றத் தைச் செய்யும்போது அதற்காகப் பல நாட்கள் திட்டம் தீட்டி யிருப்பான். செயலின் நடைமுறைகளைப்பற்றி மனத்தில் எண்ணிப் பார்த்து இருப்பான், குற்றத்திலிருந்து தப்புவது எப்படி, பிறரும் பார்க்காமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், செயலின் முதல் வேலை என்ன, அடுத்த செயல் என்ன, செயல் செய்துவிட்ட பிறகு என்னென்ன காரியங்களை மேற்கொள்ள வேண்டும். உடனே எங்கே எப்படி மறைவது. யாராவது கேட்டால் என்ன பதில் கூறுவது என்றெல்லாம் பலவாறு மனத்தில் திட்டம் தீட்டிய பிறகு குற்றத்தைச் செய்பவன் குற்றவொழுக்கத்தில் தேர்ச்சி பெற்றவனாக இருப்பான்.

மேற்கூறிய தன்மைகளைப் பெற்ற குற்றவாளிகளுக்கும் சூழ் நிலை காரணமாகக் குற்றவாளியாக மாறுபவர்களுக்கும் அதிகமான

வேறுபாடுகள் உண்டு. சூழ்நிலையின் கட்டாயத்தால் குற்றம் புரிபவன் குற்ற மனம், குற்றவொழுக்கம் ஆகியவற்றைச் சூழ்நிலையின் கட்டாயத்தால் கற்றுக்கொள்கிறான். சூழ்நிலைகள் குற்றவொழுக்கம் வளர்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. குற்றச் செயல் நடப்பதற்கும் சில வேளைகளில் அவையே காரணமாகின்றன. பழக்கடையில் கடைக்காரன் இல்லாத நேரத்தில் பழம் திருடப்படுகிறது. கடைக்காரன் அங்கே இருந்தால் அவன் திருடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது அல்லவா. கடைக்காரன் இருந்தால் உணர்ச்சியை அடக்கிக் கொள்கிறான். அதே போன்று வங்கித் திருடர்களும், வங்கிக் கொள்ளையர்களும் எளிமையான காவல் உள்ள வங்கிகளையே திருடுகின்றார்கள் அல்லது கொள்ளையடிக்கிறார்கள். அதிகமான காவலாட்களும் வலுவான பாதுகாப்பும், அபாய அறிவிப்பொலி (Alarm) ஆகியவை இருந்தால் திருடாமல், கொள்ளையடிக்காமல் இருந்து விடுகின்றார்கள். அல்லது தங்கள் குற்ற உணர்ச்சியை அடக்கிக் கொள்கின்றார்கள். அதே போன்று தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் உணவுக் கலப்படக் குற்றத்தைச் செய்ய முடியாது அல்லவா. ஆனால் மளிகைக் கடைக்காரன் இக் குற்றத்தை அடிக்கடி செய்யலாம் அல்லவா. ஆகவே சூழ்நிலைகள் குற்ற ஒழுக்கத்திற்கு ஒரு காரணக்கூறாக அமைகின்றன. ஆனால் உடலியல் சார்ந்த ஆய்வாளர்களும், சமுதாயவியல் சார்ந்த ஆய்வாளர்களும் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதாவது சூழ்நிலை மட்டும் குற்ற ஒழுக்கத்திற்குக் காரணமாகாது. அதாவது கடைக்காரன் கடையில் இல்லாமல் இருப்பதும், எளிமையான காவல் போடப்பட்டிருப்பதும் குற்றச் செயலுக்கான சூழ்நிலைகள் என்று கொண்டால் குறிப்பாக அவர்கள் மட்டும் ஏன் அந்தக் குற்றத்தைச் செய்யவேண்டும்? கடையில் ஆள் இல்லாததும், எளிமையான காவல் போடப்பட்டிருப்பதும் மற்றும் பலருக்குத் தெரிந்திருக்கும் அல்லவா. பிறகு அவர்கள் ஏன் குற்றவாளிகளாக மாறவில்லை. ஆகவே சூழ்நிலைகள்மட்டும் குற்ற ஒழுக்கத்திற்குக் காரணமாக இருக்க முடியாது. குற்றவாளியின் பிறப்பு, வளர்ப்பு, சுற்றுச்சார்பு சூழ்நிலைகள், உணர்வு, அவன் பழக்க வழக்கம், நண்பர்களின் ஒழுக்கம், கடந்த கால அனுபவங்கள் அவனுடைய விருப்பார்வம், மனப்பற்று, மனநிலை, திறமைகள், குற்றச் செயல், குற்றமனம், குற்றவொழுக்கம் ஆகிய காரணக் கூறுகளினால்தான் அவன் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் குற்றம் புரிகின்றான். ஆகவே கடந்த கால அனுபவங்களைக் கொண்டு குற்றவொழுக்கத்திற்திற்கு வரையறைகள் காணப்படுவது வரலாறு சார்ந்த பரம்பரைப் பண்பு இயல்பு சார்ந்த விளக்கங்களாக அமையும். இவற்றிற்கு, மரபுவழி சார்ந்த அல்லது பரம்

பரைப் பண்பு இயல்பு சார்ந்த விளக்கங்கள், கோட்பாடுகள் எனக் கூறலாம். குற்றவாளியின் குற்றவொழுக்கத்தை அறிந்தவுடன், எங்கெங்கே சூழ்நிலைகள், சுற்றுச்சார்பு நிலைகள் குற்றத்திற்கு ஏற்றனவாக இருக்கின்றனவோ அங்கெல்லாம் குற்றச் செயல்கள் நிகழும் எனக் கருதலாம். இதைத் தற்காலிகமாகக் கொண்டு உண்மை நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் மேலும் பல உண்மையான கருத்துகள் வெளிப்படும்.

குற்ற ஒழுக்கம் பரவும் முறைகள் (The Spread of Criminal Behaviour)

பொதுவாக, குற்றவொழுக்கம் பரவும் வழிமுறைகளைச் சிறிது ஆராய்வோம். அதாவது குற்றவொழுக்கம் எந்தெந்த வழிகளில் பரவக்கூடும் என்பதைக் காண்போம். குற்றங்கள் எந்தெந்த வழிகளில் புரியப்படும் என்பதைக் காண்போம். பொதுவாக மனிதன் பிறக்கும்போது குற்றவாளியாகப் பிறப்பதில்லை. இது நாடறிந்த உண்மையாகும். குற்றவொழுக்கமும் குற்ற மனமும் பிறப்புடன் சேர்ந்து வருவன அல்ல. அதேபோன்று ஒருவன் பிறக்கும்போது இயந்திர நுட்பம் அறிந்தவனாக இருக்க முடியாது. புதிய கருவிகளையும் கண்டுபிடிக்க முடியாது. அதே போன்று பிறப்பிலிருந்து ஒருவன் குற்றவொழுக்கம் உள்ளவனாக வளர முடியாது. ஆகவே விஞ்ஞான அறிவைப் புகட்டவும் குற்றவொழுக்கத்தைப் புகட்டவும் நபர்கள் தேவைப்படுகின்றார்கள். அல்லது முன்மாதிரியைப் பார்த்து அறிந்து கொள்கின்றார்கள். அதாவது மற்றவர்களின் பின்னிய செயல் விளைவுகள், செயல் எதிர்ச் செயல்கள் ஆகிவற்றின் தொடர்பால் குற்றவொழுக்கத்தைக் கற்றறிகின்றார்கள். இது எப்படி எனில் அநேகமாக, வாய்மொழியாலும், சைகை மூலமாகவும், உணர்ச்சிக் குறிப்பு, குற்றச் சாயல் ஆகியவற்றின் மூலமாகவும் கற்றறியப்படுகின்றன. அடுத்து, குற்றக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதனாலும் குற்றவொழுக்கத்தின் முக்கிய பகுதிகள் கற்றறியப் படுகின்றன. பொதுவாகக் கூறப்போனால் (ஏஜெண்டுகள்) இயக்கிகள் மூலமாகத் தொடர்பு கொள்வதனாலும் குற்றவொழுக்கம் பரவுகிறது. அதாவது திரைப்படம், செய்தித்தாள், நாடகம், துப்பறியும் நாவல்கள் மற்றும் பால் உணர்ச்சி தூண்டக்கூடிய கதை, கவிதைகள் ஆகியவை மூலமாக குற்றவொழுக்கம் தோன்றுவதற்கு ஆதாரமுண்டு. சமீபத்தில் அரியானாவில் வேலைக்காரன் ஒருவன் துணைச் சிறை அதிகாரியைக் கொலை செய்வதற்கு ஒரு இந்தித் திரைப்படத்தின் மூலம் அந்தக் குற்ற உத்தியைக் கற்றதாகக் குற்றவாளி கூறி இருப்பது நோக்கத்தக்கதாகும். பெரும்பாலும் திரைப்பட மூலமாகவும் பால் உணர்ச்சி

குற்ற ஒழுக்கம் அதிகமாகப் பரவி வருகின்றது. குற்றங்களுக்கான குற்ற நுட்பங்களையும் உத்திகளையும் படத்தின்மூலம் எளிமையாகக் கற்றுக் கொள்கின்றார்கள். வங்கிகளில் கொள்ளையிடுவது, வழிப் பறிக் கொள்ளை, கன்னம் வைத்துத் திருடுதல், மற்றும் பல குற்றங் களுக்கான உத்திகள் படத்தின் மூலமும் பெற்றதாகப் பல குற்ற வாளிகள் கூறியிருக்கின்றார்கள். இன்னும் சில இளைஞர்கள் குற்ற வாளிகளுடன் நெருங்கிப் பழகி குற்ற நுட்பத்தை அறிந்து கொள் கின்றார்கள். குற்றச் செயலுக்கான இலக்கு வைத்தல், உள் நோக்கத்தின் இலக்கு, குற்றப் பழக்க வழக்கங்கள் கற்றல். சட்டங்களுக்கு எப்பொழுதும் கீழ்ப்படியாமல் மீறியே வாழும் மக்கள் சார்ந்த பகுதிகளில் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழும் தனி நபரும் இருப்பதுண்டு. பெரும்பாலானவர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழும் மக்கள் சார்ந்த பகுதிகளில் சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல் வாழும் தனி நபரும் இருப்பதுண்டு.

சமுதாயத்தில் ஆங்காங்கு குற்றவாளிகள் காணப்படுவதனால் நல்லொழுக்கம் உள்ளவர்களும் குற்ற ஒழுக்கத்தை அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றார்கள். குற்ற வொழுக்கத்தை அவர்கள் வெறுத்தபோதும் குற்ற நுட்பத்தையும் உத்தியையும் அறிந்து வைத்துக்கொள்கின்றார்கள். குற்ற வாளியை நேரடியாக எதிர்த்தாலும் மறைமுகமாக அவர்களுடன் தொடர்பு கொள்பவர்களும் உண்டு. இம் முறையிலும் குற்ற வொழுக்கம் பரவுகின்றது. பிறகு சூழ்நிலைகளின் தூண்டு தலினால் குற்றச் செயல் புரிகின்றார்கள். மேலும், நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்னும் வேறுபாடின்றிக் கற்றறியும் இயல்புள்ளவர் களும் உண்டு. தீயொழுக்கம் வளர்ந்து குற்ற மனத்துடன் குற்ற வொழுக்கமாக வளர்ந்து பிறகு சூழ்நிலையுடன் குற்றச் செயல் நிகழ்வதும் உண்டு. இவர்கள் சந்தர்ப்பவாதிகளாக விளங்கு வார்கள். பொதுவாகக் குற்ற வொழுக்கத்தைப் பார்த்துப் பின் பற்றுதல் முறையில், அதிக அளவில் கற்கப்படுகிறது. மக்களின் மனநிலையைப் பொறுத்தும் குற்ற ஒழுக்கம் பரவக் கூடும். அதாவது பணம் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் பொதுவாக எல்லோருக்கும் உள்ளதுதான். குற்ற ஒழுக்கம் உள்ளவன் கொள்ளையடித்தல் மூலமாகச் சேமிக்க முயல்கின்றான். நல்லொ ழுக்கம் உள்ளவன் உடல் உழைத்துப் பொருளீட்டிச் சேமிக்க முற்படுகின்றான். எண்ணம் ஒன்றாக இருந்தாலும் செயல் வேறு படுகிறது. இதற்கு அவரவர்களின் ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு அவர்களின் செயல்கள் வேறுபடுகின்றன. நேர்மையான வழி களில் பொருளை ஈட்டவும் சமுதாயத்தில் கௌரவத்தைப் பெறவும் நேர்மையான வழிகளில் முயலும்போது மாற்றமோ,

ஏமாற்றமோ ஏற்பட்டுவிட்டால் அதைத் தாங்கிக்கொள்ளும் மனம் இல்லாதவர்கள் வாழ்க்கையின் சுகத்திற்கு ஆசைப் பட்டுத் தன் தகுதி, கடமை. கௌரவம், சமுதாயத்தின் இழிச்சொல் ஆகியவற்றை மறந்து, கையூட்டு வாங்குதல். ரூபாய் நோட்டு இரட்டிப்புச் செய்தல், சூதாட்டம் ஆடுதல், கையாடல் ஆகிய குற்றங்களைச் செய்துவிடுவார்கள். இதனுல் அவர்களிடத் தில் தொடக்கத்திலிருந்து நல்லொழுக்கமோ குற்றவொழுக்கமோ இருந்ததாகக் கூறிவிட முடியாது. சபல புத்தியுடன் தான் இந்நாள் வரையில் அவர்கள் வாழ்ந்து வந்து இருப்பார்கள். அவர்களை அணுகி ஆராய்ந்தால் ஏற்கனவே பல குற்றங்கள் செய்து இருப்பது வெளிப்படும். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஆசையைத்தவிர வேறு குறிக்கோள் கொண்டிருக்கமாட்டார்கள். கட்டுப்பாடற்ற வாழ்க்கையை வாழ்ந்து வருவார்கள். இவர் களுக்குச் சூழ்நிலை சிறிது சாதகமாக இருந்தாலும், உடனே குற்றச் செயலைச் செய்துவிடுவார்கள்.

மேலும் சமுதாயத்தில் மக்கள், குழு குழுவாக, கட்சி கட்சி யாகப் பிரிந்து அவர்களுக்குள் தொடர்பு கொண்டு வாழ்வதனுல், கொள்கை வேறுபாட்டினுல் மோதல் ஏற்படுகிறது. இதனுல் பகைமை வளர்கிறது. இதன் காரணமாகவும் குற்றவொழுக்கம் வளர்கிறது. தன் கட்சியின் ஆதரவுக்காக குற்றவொழுக்கத்தை மேற்கொண்டு குற்றச் செயல் புரியும் தொண்டர்கள் மூலமும் குற் றங்கள் அதிகரிக்கின்றன. இன்றைய நிலையில் சமுதாயத்தில் அதிக மான கொலைக் குற்றங்கள், தாக்குதல், சொத்து அழித்தல், கொடுங்காயம் உண்டாக்குதல், அவதூருகப் பேசுதல் ஆகிய குற்றங்கள் நாளுக்கு நாள் நாடுகளிடையே அதிகரித்து வரு கின்றன. கட்சியின் பற்றுதலால் குற்றவொழுக்கம் பரவுகிறது. சில வேளைகளில் குற்றவொழுக்கம் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இன்றைய இளைஞர்கள் ஏதாவது ஒரு கட்சியின் அங்கத்தினர் களாகவோ அல்லது அனுதாபிகளாகவோ விளங்குகின்ருர்கள். இதனுல் இளைஞர்களிடையே கொள்கைப் போராட்டம் ஏற்பட்டுப் பகைமையில் வளர்ந்து இறுதியில் அடி உதையில் முடிவடை கிறது. இந்நிலையைக் கல்லூரி மாணவர்களிடையே காணலாம். இவற்றிற்கெல்லாம் யார் பொறுப்பு, பெற்ருேர்கள். தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பொறுப்பாகும். இன்றைய நிலை மேலும் வளர்ந்தால் குற்றவொழுக்கத்திற்கு வரை யறை காணச் சிறைச் சாலைக்குப் போகவேண்டிய அவசியமில்லை. கல்லூரி, பள்ளி ஆகிய இடங்களிலேயே குற்றவொழுக்கத்திற்கு விளக்கமும் வரையறையும் காணலாம்.

V. பல்வேறுபட்ட சமுதாய அமைப்புகள் (Various Social Organizations).

சமுதாய ஆய்வியல் முறையில் குற்றவொழுக்கத்திற்கு வரையறை காணுவதில் பல சிக்கல்கள் இருந்தாலும் மற்ற காரணக் கூறுகளைவிட சமுதாயம்தான் குற்ற வொழுக்கத்திற்கு முக்கிய காரணக்கூறுகும். ஒழுங்கற்ற சமுதாய அமைப்பும், வலுவற்ற சட்டங்களும், நேர்மையற்ற நிர்வாகமும் முக்கிய காரணக்கூறுகளாக விளங்குவதுடன் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வு, உயர்ந்தவன், தாழ்ந்தவன், மேல்சாதி, கீழ்சாதி, ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், ஒரு சார்பான சலுகைகள், ஒரு சார்பான முன்னேற்றம், சமுதாயத்தின் தெளிவற்ற கொள்கைகள், மக்களின் வருமானம், வாழ்க்கை வசதிகள் குறைவு, இட நெருக்கடி அதாவது குடியிருப்பு, கல்வி பயில, வேலை வாய்ப்பு தேடுவதில் மக்கள் பெருக்கம், உணவு உற்பத்திக் குறைவு, பங்கிடும் முறையில் குழப்பம், இளைஞர்களுக்குத் தெளிவற்ற பாதை, அரசியல் மோகம், பொருளாதார நெருக்கடி, உள்நாட்டுப் போர், வெளி நாட்டுப் போர், ஆட்சி மாற்றம், கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் ஆகிய காரணக் கூறுகளினுல் நாட்டில் குற்றவொழுக்கமும், குற்றச் செயல்களும் மேலும் மேலும் பரவுகின்றன. மேற்கூறியவைகள்தாம் குற்றவொழுக்கத்திற்குக் காரணமாக அமைந்தவையாகும்.

4. குற்றங்களின் வளர்ச்சியும் குற்றச் சட்டமும்

(The Development of Crimies and Criminal Law)

குற்ற ஒழுக்கம் எவ்வாறு உண்டாகிறது. அது எப்படி வளர்ந்து குற்றச் செயலாக வெளிவருகிறது என்பது ஆராயப்பட்டது. இனி, குற்றம் எப்படி வளர்ச்சியடைந்தது என்பதைச் சமுதாயத்தின் நடைமுறையைக்கொண்டு ஆராய்வோம். ஆக்கபூர்வமாக அனுபவத்தின் மூலமாக விளக்குவதைவிட வாத ஆதாரமாக தற்காலிகமாய் கொள்ளப்பட்ட கருத்துக்குவியல்தாம் அதிகமாக உள்ளன. பொதுவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற குற்றப் புள்ளிவிவரங்களின் எண்ணிக்கையைவிட பலமடங்கு அதிகமான எண்ணிக்கை இருக்கும் என நம்பலாம். அதாவது பல்வேறு காரணங்களினுல் பல்வேறு குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படவில்லை. மேலும் மாநிலத்திற்கு மாநிலம், (பகுதிக்கு பகுதி), சட்டங்களும் வேறுபடுகின்றன. அதாவது ஒரு மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் வலியுறுத்தப்படாமல் இருப்பதனுல் மாநிலத்திற்கு மாநிலம் குற்றங்களின் எண்ணிக்கை வேறுபடும். மேலும் பரத்தையரை (Prostitute) ஒரு மாநிலத்தில் அனுமதித்தும் மற்ற மாநிலங்களில் அனுமதிக்காமலும் இருப்பதனுலும் குற்ற விகிதங்கள் வேறுபடுவதுடன் மக்களின் நடத்தையும் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. அதாவது ஒரு செயல் ஒரு மாநிலத்தில் குற்றச் செயலாகவும் மற்ருெரு மாநிலத்தில் குற்றமற்ற செயலாகவும், மாறுகின்றது. மேலும் பண்டைக் காலத்தில் கொலைக்குற்றம், திருட்டுக் குற்றம். கொள்ளைக் குற்றம், வன்புணர்ச்சிக் குற்றம், தாக்குதல், சமூகத்திற்கு விரோதமாகச் செயல்படுதல். தீயிடுதல் ஆகிய மிகச் சொற்பமான குற்றங்களே காணப்பட்டன. சமுதாயம் வளர வளர, மக்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க, நாகரிகம் வளர வளர, சட்டங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. 100 ஆண்டுகளுக்கு

முன்னால் இந்தியாவில் 10 சட்டங்கள இருந்தன என்றால் இன்று 100 சட்டங்கள் வழக்கத்தில் உள்ளன. ஆகவே சமுதாய வளரச்சிக்கும் குற்றங்கள் அதிகரிப்பதற்கும் முக்கிய தொடர்புண்டு என்பது வெளிப்படையாகும்.

பழங்கால சமுதாய அமைப்பில் மக்களே தங்களின் பாதுகாப்பைத் தேடிக்கொண்டார்கள். அல்லது அவரவர்களின் உறவினர்களுடன் இணைந்து பாதுகாப்பாக வாழ்ந்துவந்தார்கள். அதாவது நோய்நிலை, உடல் நலமின்மை, விபத்து, வயதுமுதிர்ந்தநிலை, பைத்தியம் மற்றும் ஏதாவது அவசரங்களில் நிகழும் செயலுக்கும் அந்தக் கூட்டமே பாதுகாப்பாக விளங்கியது. அந்தச் சமூகத்தில் மன்பதை அன்பு, ஒப்புரவு, இன்னலம், ஆகியவையும் எவ்வித கறையோ, களங்கமோ பெற்றிருக்கவில்லை. அதாவது வெறுப்போ, இகழ்வோ எவ்வகைச் செயல்களிலும் காணப்படவில்லை. பெரிய குடும்பங்கள் சிறு குடும்பங்களுக்கு ஆதரவாக விளங்கின. பரம்பரைப் பண்புகள் பின்பற்றப்பட்டு மகிழ்ச்சியுடன் விளங்கினார்கள். அந்தச் சூழ்நிலையில் வாழும் தனி நபரின் ஒழுக்கத்தைப் பற்றித் தெளிவாகக் கூறிவிடமுடியும். காரணம் சில குறிப்பிட்ட பழக்கவழக்கங்களும். குறிப்பிட்ட சில செயல்களுமே வழக்கத்தில் இருந்தன. ஆகவே அந்த ஒழுக்கந்தான் அவனிடத்திலும் காணப்படும். பண்டைய சமுதாயத்தில் தனியுரிமைக் கோட்பாட்டு ஒழுக்கத்திற்கு சில நல்ல வாய்ப்புகள் வழங்கப்பட்டன. உள்ளூர் மக்கள் வெளியாருடன் சிறிதே தொடர்பு கொண்டிருந்தார்கள். அக்காலச் சமுதாயம் தன்கையாதரவுடனும் தன்னிறைவமைதியுடனும் விளங்கியது. தனித்து இயங்கும் வாழ்க்கையினால் ஒரே ஒழுக்கத்தைப் பெற்றிருப்பதற்குத் துணையாக அமைந்திருந்து. அக்காலத்தில் கூட்டத்திற்குள் நிகழும் குற்றங்கள் மிகச் சிலவேயாகும். அவ்வப்போது கூட்டத்தினருக்கும், வெளிக் கூட்டத்தினருக்கும் நிகழும் குற்றங்கள் சிலவே.

இக்காலச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு ஒழுக்கங்களைப்போல் அக் காலத்தில் இல்லை. அங்கே மனமகிழ்ச்சியை எதிர்நோக்கியிருக்கும் குணங்களும், களங்கமிலா முழுமையான ஒத்துழைப்பும் தாண்டவம் ஆடின. அக்காலச் சமுதாயத்தில் சண்டை சச்சரவு, பூசல், சொற்போர், மனப்போராட்டம், குழப்பம், மோதல் ஆகியவை அபூர்வமாக நிகழ்ந்தன. வன்முறைகள் எளிதில் முறியடிக்கப்பட்டன. அந்தக் கால மக்களிடத்தில் காணப்பட்டவையெல்லாம் சமுதாய விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும் தன்மையேயாகும். அக் காலத்தில் சொத்துப் பராமரிப்பு. கடமையாற்றுதல், உயர்ந்த எண்ணம், நல்ல கருத்துரை

கள். ஆரோக்கியமான விளையாட்டு ஆகியவையே சமுதாயத்தில் தாண்டவமாடின. இவையே மக்களின் குணங்களாகவும் பழக்க வழக்கங்களாகவும் அமைந்திருந்தன.

இன்றைய நிலையில் நகரகங்களில் பல்வேறுபட்ட ஒழுக்கங்களும் குணங்களும் மக்களிடத்தில் காணப்படலாம். ஆனால் பண்டைய பழக்க வழக்கம், கோட்பாடுகள் ஆகியவை கிராமங்களிலும். மலைப்பகுதிகளில் வாழும் மக்களிடத்தும் பழைய கட்டுப்பாடுகளை இன்றும் காணலாம். அதே ஒழுக்கம் இன்று மக்களிடத்தில் காணப்படுகிறது. நகரங்களில் வாழும் குழந்தைகளின் ஒழுக்கத்திற்கும் பெற்றோர்களின் ஒழுக்கத்திற்கும் முரண்பாடு காணப்படும். நாகரிக வாழ்வில் கொள்கை மாறாமல் வாழமுடிவதில்லை. இதனால் அவர்களின் ஒழுக்கங்களும் முன்னுக்குப்பின் முரண்பட்டிருக்கின்றன. அதாவது தங்கள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தைப் போதிப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் கையூட்டு, பொய்பேசுதல், ஏமாற்றுதல் ஆகிய குற்றங்களைச் செய்யத் தவறமாட்டார்கள். அவர்களிடத்தில் குற்றவொழுக்கம், குற்றச் செயல் காணப்படும். அதாவது வாழ்க்கையில் தெளிவற்ற, உறுதியற்ற குறிக்கோள்கள் இருக்குமேயானால் அவர்களின் ஒழுக்கமும் முரண்பட்டே இருக்கும். கூட்டத்தோடு இணைந்து வாழும்போது ஒற்றுமை வளர்கிறது. இதனால் ஒருவருக்கொருவர் உதவி செய்யத் தயங்குவதில்லை. பண்பாடுகளைப் பேணியும் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கியும் வாழ்ந்து வந்தார்கள். வாழ்வின் முன்னேற்றத்திலும் சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் அறிவின் வளர்ச்சியில் பழமைக்கும் புதுமைக்கும் கருத்து வேற்றுமைகள் நிகழ்ந்தன. அவை செல்வாக்கு உள்ளவர்களின் துணையால் அடக்கப்பட்டன. தனிமனிதனின் முன்னேற்றமே முக்கியம் எனக் கருதியவன் சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்கு முரண்பட்டவனாகின்றான். இதனால் தன் கொள்கைக்கு ஏற்ப, பலரை ஈர்க்கின்றான். இதனால் சமுதாயத்தில் பிரிவு உண்டாகின்றது, சமுதாயத்தின் தலைமையாட்சிமீது வெறுப்பு ஏற்பட்டாலும் அதற்கு எதிராகச் செயல்பட தனி ஆதரவு தேடுகின்றான். இதற்கு முக்கிய காரணம் போட்டி மனப்பான்மைகளும், பதவி ஆசையும் தோன்றிய காரணத்தினால் நல்ல செயலையே எதிர்த் தரப்பினர் கெட்ட செயல், தீச்செயல் என்றும், தீச்செயலை நல்ல செயல் என்றும் வாதாடுகின்றார்கள். இது மக்களின் அடிப்படை ஒழுக்கத்தால் மாறுபடுகிறது. கொள்கைகளையும் செயல்களையும் நல்லது கெட்டது என்று கூறுவதைப்போல அறிவியல் சார்ந்த பொருள்களை யாரும் அப்படிக் கூறிவிடமுடியாது. விஷம் என்றால்

நல்லவனுக்கும் விஷம்தான். குற்றவொழுக்கம் உள்ளவனுக்கும் விஷம்தான். இதனை மாற்றிக் கூறுவதனால் அதன் தன்மையோ குணமோ மாறிவிடாது. ஆனால் சமுதாயத்தின் வளர்ச்சியை ஆராயும்போது மக்களின் கொள்கைகளும் எண்ணங்களும் செயல் களும் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. ஒரு காலத்தில் உடன்கட்டை ஏறுவது (சதி) சமுதாயத்தில் வலி யுறுத்தப்பட்டு வந்தது. உடன்கட்டை ஏறுவது கணவனை இழந் தவள் கடமை என்று சமுதாயம் கருதி அதைச் செயல்படுத்தியும் வந்தது. ஆனால் காலத்தின் மாறுதலால் மக்களின் அறிவு வளர்ச்சியினால் அது தவறு என்று கருதி அதைத் தடுத்துவிட்டது. அதேபோன்று மறுமணம், கலப்பு மணம், சாதி வேறுபாடு, தீண்டாமை, தொழில் கற்றல் ஆகியவை காலத்தின் வளர்ச்சி யால் மாற்றம் அடைந்தன. மேற்சொன்னவற்றை அந்தக் காலத்தில் கடுமையாக வலியுறுத்தி வந்தார்கள். கட்டுப்பாடுடன் வாழ்பவர்களின் ஒழுக்கம் நல்லொழுக்கமாகக் கருதப்பட்டது. வெறுப்பவர்களின் ஒழுக்கம் குற்றவொழுக்கமாகக் கருதப்பட்டது. ஆனால், இன்று மக்களிடையே மாறுபாடு காணுவதுதான் குற்ற வொழுக்கமாகவும், வேறுபாடு காணாமல் அனைவரும் சமம் என்று பழகுவது நல்லொழுக்கமாகவும் விளங்குகின்றன. ஆகவே காலம் மாற மாற மக்களின் ஒழுக்கமும் மாறுபடுகின்றது.

இப்படிப் பண்டைய கொள்கைகள் மாறுபடுவதையும் சமுதாயம் புதிய கொள்கையாக ஏற்றுக் கொள்வதையும்தான் சமுதாயத்தின் ஒழுங்குமுறை அமைப்பு சிதறிவிட்டது (Social Disorganization) என்று கூறுகின்றார்கள். பழைய சட்டங்கள் கொள்கைகளைப் புறக்கணிப்பதும் புதிய சட்டங்கள் கொள்கைகளைப் பின்பற்றுவதும் சமுதாயத்தின் மாற்றமாகும். இதனால் பழைய அமைப்பு, கட்டுப் பாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. அப்படி நோக்கும்போது சமுதாயத்தின் ஒழுங்குமுறையான அமைப்பு சிதைந்து விட்ட தாகத்தான் அமைகிறது, இது ஏன் ஏற்படுகின்றது என்றால், சமுதாயத்தில் அதிக செல்வாக்குப் பெற்றவர்களும், அரசாங்கத் திடம் நம்பிக்கை பெற்றவர்களும், அதிக பணம் படைத்தவர்களும் ஒன்றுகூடிப் புதிய கொள்கைகளை உருவாக்கும்போது அதற்கு எதிர்ப்பும் உண்டாகிறது. இயற்கையாகவே உள்ள செல்வாக் கினால் அவர்களின் கொள்கைகளை எளிதில் சட்டங்களாக நிறை வேற்றி விடுகின்றார்கள். இதனால் அதை எதிர்ப்பவர்கள் குற்ற வொழுக்கத்தை உடையவர்களாகக் கருதப்படுகின்றார்கள். நேற்று வரையில் நல்லொழுக்கம் உள்ளவர்களாக விளங்கியவர்கள் புதிய சட்டங்களையும், கொள்கைகளையும் எதிரப்பதனால் குற்ற வொழுக்கம் உள்ளவர்களாகக் கருதப் படுகின்றார்கள். ஏற்கனவே

அவர்களால் அமைக்கப்பட்ட சமுதாயத்தை மீண்டும் மாற்றிப் புதிய சமுதாயத்தை அமைக்கும்போது சமுதாயத்தின் ஒழுங்கமைப்பு முறை சிதறிவிட்டது என்று அழைக்கப்படுகிறது. இந்த முறைகள் நவீன காலத்திலும் காணப்படுகின்றன. இன்று போட்டி, முரண்பாடு ஆகியவை அதிகமாகக் காணப்படுகின்றன. இப்படி அமைந்திருப்பதனால் குற்றவொழுக்கம் வளர்வதற்கும் குற்றச் செயல் அதிகரிப்பதற்கும் வாய்ப்புண்டு. அதே நேரத்தில் குற்றவொழுக்கத்தையும், குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்த குற்றவாளிகளைத் தண்டிக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் நல்லொழுக்கத்திற்கும், குற்றவொழுக்கத் திற்கும் இரண்டிற்குமே ஊக்கம் அளிக்கப்பட்டுவிடுகிறது. ஒரே நபரிடத்தில் குற்றவொழுக்கமும் நல்லொழுக்கமும் இணைந்து செயல்படக்கூடும். ஒருவர், செல்வாக்காளர் குற்றத்தின் (White Collar Crime) மூலமாக ஏராளமான செல்வத்தை ஈட்டியிருக் கலாம். அதே நேரத்தில் சமுதாயத்தில் ஓய்வுநேரப் பொழுது போக்கிற்கு அல்லது இன்ப விளையாட்டிற்கு அதிக இடவசதி களையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால் இளங் குற்றவாளிகள் உருவாவதற்கும் குற்றத் தன்மை, குற்ற வொழுக்கம், குற்ற மனம் ஆகியவை வளர்வதற்கும் வாய்ப்பு அதிகமாகும் என்று ஆர்வத்தோடு ஆதரித்து வாதாடுபவராக விளங்கலாம். அதாவது மது அருந்துவது பாவச் செயலாகும் என்று மேடையில் பேசிவிட்டு, விருந்தில் ஸ்காட்ஸ் விஸ்கி கேட்பதை ஒக்கும். ஆகவே பிரச்சாரம் செய்பவர்கள் எல்லாம் நல்லொழுக்கம் உடையவர்கள் என்று கருதிவிடமுடியாது. அவர்களிடத்தில் குற்றவொழுக்கமும் இணைந்து மறைந்து இருப்பது தெரியவரும். இந்த அடிப்படையில் அதாவது சொல்லிற்கும் செயலுக்கும் தொடர்பில்லாமல் வாழும் சமுதா யத்தில் பல்வேறு வகைப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளாக அமைந்து இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமான குற்ற வொழுக்கங்களும் குற்ற எண்ணிக்கை விகிதங்களும் அமைந் திருக்கும் என யாரும் எதிர்நோக்கலாம்.

சமுதாயமானது பல காரணங்களினால் மாற்றம் அடைகிறது. அதாவது பொருளாதார வளர்ச்சி அல்லது வீழ்ச்சி, அரசியல் மாற்றம், வெளிநாட்டுப் போர் ஆகியவை முக்கிய காரணக் கூறுகளாகும். குடியேறுதல், தொற்றுநோய், வறுமை, இயற்கை யால் ஏற்படும் ஆபத்து அதாவது வெள்ளம் புகுதல், ஆகியவை இதர காரணக் கூறுகளாகும். மேற்கூறியவை ஒன்றிற்கொன்று தொடர்புடையவையாகும். பொருளாதார நெருக்கடி சமுதா யத்தில் ஏற்படுமானால் அரசியல் மாற்றம் ஏற்படும்.

வறுமையின் காரணமாக வேறு இடங்களுக்குக் குடியேறுதல், இதனால் புதிய நாகரிகம், பண்பாடு, புதிய சட்டங்களின் கட்டுதிட்டங்கள் ஆகியவற்றிற்குள்ளாகுதல், இதனால் குற்ற வொழுக்கம் வளர்வதற்கு ஏதுவாகிறது. வறுமையின் காரணத்தினால் சமுதாயத்தில் கலகம், புரட்சி, கிளர்ச்சி ஆகியவை உண்டாகக் காரணமாகின்றன. இதனால் விவசாயிகள் போராட்டம். தொழிலாளர்கள் போராட்டம், அரசியல் கட்சிகள் போராட்டம் ஆகியவை அவசியத்தின் அடிப்படையில் எழுந்த போராட்டங்களாகக் கருதப்பட்டாலும் அத்துடன் மாணவர்கள் போராட்டம் அடிக்கடி நடத்தப்படுகிறது. போராட்டத்திற்கும் அவர்களுக்கும் நேரடித்தொடர்பு இல்லையென்றாலும் அவர்களே நேரடித் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வார்கள். இந்தப் போராட்டங்களினால் நல்லொழுக்கம் உள்ளவர்களில் பலருக்குக் குற்ற வொழுக்கமாக மாறிவிட ஏதுவாகிறது. வறுமையினாலும் அரசியல் மாற்றத்தாலும் சமுதாயத்தில் பொருளாதார உற்பத்தி பாதிக்கப் படுகிறது. உற்பத்தித் தடைப்படுவதனால் பண்டங்கள் போதிய அளவு மக்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் விலைவாசி உயர்வு. விலைவாசி உயர்வால் பதுக்கல், கள்ளக்கடத்தல், கலப்படம், அளவில் மோசடி, தரத்தில் மோசடி, இப்படிப் பல குற்றங்கள் வளர்வதற்கு அடிப்படையாக அமைந்துவிடுகின்றன. இதனால் வாழ்க்கையின் வசதி குறைகிறது. மக்களின் மனம் மாறுகிறது. இன்ப வாழ்க்கையை நாடுபவர்கள் கண்ணியத்தையும், கட்டுப் பாட்டையும், கொள்கைகளையும் மறந்து கையூட்டுக் குற்றம், மோசடிக் குற்றம், பொய் ஆவணம் தயாரித்தல் ஆகிய குற்றங் களில் ஈடுபடுகின்றார்கள், மேற்கூறிய பல்வேறு காரணக் கூறு களினால் பலவித போராட்டங்களும் கலகங்களும் குழப்பமும் நிகழ்கின்றன. இதனால் கொலை, கொள்ளை. வன்புணர்ச்சி, சொத்து அழித்தல், தீயிடுதல், தாக்குதல் ஆகிய குற்றங்கள் நிகழ் வதற்கு ஏதுவாகின்றன. மேற்சொன்ன போராட்டங்களை அடக்கவும், ஒடுக்கவும் அரசாங்கம் பல பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் தடியடித் தாக்குதல், கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச்சூடு ஆகியவற்றை மேற் கொள்ளவேண்டிய காட்டாயத்திற்குள்ளாகிறது அரசாங்கம். இதனால் கொடுங்காயங்கள், இறப்பு ஆகியவையும் நேர்ந்து விடுகின்றன. இவற்றிற்கு எல்லாம் முக்கிய காரணம் பொருளா தார நலிவுதான். ஆனால், பொருளாதாரச் சீர்கேடு அடையாத நாடுகளில் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் நடைபெறுகின்றன என்றால் அது அரசியல் மாற்றத்திற்காக நடத்தப்படும் போராட்ட மாகும். போர்க்காலங்களில் அதிகமாக நிகழும் குற்றம், விபச் சாரம், திட்டுடுக் குற்றங்களாகும்.

காலத்தின் மாற்றத்தினுலும் வளர்ச்சியாலும் இயந்திர சாதனங்கள் அதிகரித்துவிட்டன. இதனுல் உற்பத்திப் பெருக்கம், ஆலை முதலாளி கைக்குப் போய்விட்டது. இதனுல் உற்பத்தி யானது நுகர்வோரின் பிடியிலிருந்து முதலாளியின் கட்டுப்பாட் டிற்கு மாறிவிட்டது. வீட்டில் செய்து வந்த வேலைகளை இன்று தொழிற்சாலைகளில் செய்து வருகின்றுர்கள். இதனுல் அனைவரும் தொழிற்சாலைகளில் பணிபுரியவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனுல் தொழிற்சாலையைச் சுற்றி நகரம் வளர்ச்சியடைகிறது. இன்றைய பெரிய நகரங்களின் வளர்ச்சியே தொழிற்சாலைகள் அமைப்பின் அடிப்படியில் வளர்ந்தவையாகும். அங்கே புதிய கட்டுப்பாடு, புதிய சமுதாயம் உருவாகிறது. மக்களின் பழைய ஒழுக்கங்கள் மாறுபடுகின்றன. அவர்கள் புதிய கட்டுப்பாடு களையும், வழிமுறைகளையும், சட்டங்களையும் கற்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றுர்கள். இங்கே இந்தக் கட்டுப்பாடு களுக்கு எதிராக மீண்டும் கலகம், குழப்பம், போராட்டம் உண்டா கிறது. பிறகு பல போட்டிகள் நடக்க ஏதுவாகின்றன. சுயநலக் கொள்கை வளர்கிறது. சுயநலத்தின் அல்லது தன்னலத்தின் அடிப்படையில் அமைந்தவையே சமுதாயத்தின் நலமாகும். அதாவது சமுதாயத்தில் உள்ள ஒவவொருவரும் தன்னலத்திற் காகப் பாடுபட்டு வாழ்க்கையை உயர்த்திஞலேயே சமுதாயத் தின் மொத்த நலமும், வளமும் உயர ஏதுவாகிறது. ஆகவே ஒவ்வொருவரும் தன் திறமை, தகுதி, முயற்சி, ஆகியவற்றிற்கு ஏற்ப எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்தி உழைத்து தனது வருமானத்தை அதிகரிக்கவேண்டும். இதன் முடிவாக நாட்டின் பொருளாதாரம் பெருகும்.

குடியரசு நாட்டின் பொருளாதாரப் புரட்சி தவிர்க்க முடியாத தாகும். முடி மன்னர்களுக்கு எதிராகவே, பொருளாதாரப் புரட்சி நடத்தப்பட்டு வந்துள்ளதை வரலாறு கூறுகிறது. பிரான்சு, ரஷியா ஆகிய நாடுகளின் பொருளாதாரப் புரட்சி உலகிலேயே பெரும் புரட்சியாகக் கருதப்படுகிறது. மேலும் பொருளாதாரக் கொள்கைகளை மீறுவோர்கள் பலவீனமான, கீழடக்கமான, திறமை யற்ற ஆட்சியைத்தான் விரும்புவார்கள். ஏன் என்றுல் பொருளா தாரக் கொள்கைகளும் புதிய புதிய கட்டுப்பாடுகளை மீறுவதற்கு எளிமையாக இருக்கும் அல்லவா. அதிக லாபத்தை விரும்புவோர் ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக தன் ஒழுக்கத்திற்கு ஏற்ப கலகத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குவார்கள். ஆகை யினுல்தான் பலவீனமான ஆட்சியே நீடிக்கவேண்டும் என்று கூச்சல் இடுவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, சுங்கவரி, காப்புவரி, வாக்குரிமை, வருமானவரி, விற்பனைவரி ஆகியவற்றை தனக்

கேற்றவாறு மாற்றிக்கொள்ளவும் அரசாங்கத்தை வலியுறுத்து வார்கள். அரசியலில் போட்டியிட்டவர்கள் புதிய கட்டுப் பாடுகளை விதிக்கவேண்டும். பொருளாதாரக் கொள்கைகள், சட்டங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று முழங்கின வர்கள் இறுதியில் தொழிலதிபர்களின் கையூட்டை வாங்கிக் கொண்டு அவர்களின் பக்தர்களாக மாறிவிடுகின்றனர்கள். இதில் அரசியல் தலைவர்களுக்கும் தொடர்புண்டு. இறுதியில் பனவீன மான ஆட்சியுடன் ஒழுக்கங்கெட்ட ஆட்சியாக மாற ஏதுவாகும். அல்லது கட்டுப்பாடுகளைத் திறமையாக, வலிமையாகச் செயல் படுத்தாமல் பார்த்துக்கொள்வார்கள் முதலாளிகள். இன்னும் பிற குற்ற ஒழுக்கங்கள் வளர ஏதுவாகிறது. இன்று நாட்டில் நில உச்ச வரம்புச் சட்டங்களும், நகர உச்ச வரம்புச் சட்டங் களும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நிலத்தின் வார முறைகளும் (Lease) வாடகை, வரிமுறை களும் மாற்றி அமைக்கப்பட்டுவருகின்றன. விவசாயிகள் போராட்டத்தைத் தவிர்க்க, நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்ற சட்டத்தினால் ஓரளவிற்குப் போராட்டத்தைத் தடுக்க கலாம். இதனால் விவசாயிகளிடையே வளரும் குற்ற மனம் குற்றத்தன்மை, குற்றவாழ்க்கம் ஆகியவற்றை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம். இங்கேயும் தனியுரிமைக் கோட்பாடு முறைதான் முன்னேக்கி நிற்கிறது. தனியுரிமைக் கோட்பாடுகள் (Individualistic ideolgy) பண்டைக் காலந்தொட்டே வற்புறுத் தப்பட்டுவருகின்றன. அதாவது தன் நலத்தைப் பேணுவதைப் போல் பிறர் நலத்தைப் பேணவேண்டும். உன்னைப்போல் தான் பிறரும், ஆகவே பிறர்க்குத் தீங்கு விளைவிக்காதே என்று கூறப் பட்டு வந்தது. பிறகு அவையே சமுதாய விதிமுறைகளாகவும் பிறகு சட்டங்களாகவும் மாற்றப்பட்டு அவற்றை மீறுபவர் களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுவருகின்றது. ஆகவே ஒவ்வொரு வரும் தன்னை உணர்ந்தாலே போதும், அங்கே பொது உரிமை தானாக வளர்ந்துவிடும். குற்றவாளியும் சமுதாயத்தில் தகுதி யுடனும் வசதியுடனும் வாழ முற்படுகின்றான். ஆகவே அதனுக்கு வேண்டிய துப்பாக்கி மற்ற ஆயுதங்களைப் பெற, சட்டங்கள் மறுத் தாலும் அவற்றை அதே சமூகத்தினிடமிருந்து பெற்றுவிடுகின்றான். எடுத்துக்காட்டாக மத்திய பிரதேசத்தில் சாம்பல் பள்ளத்தாக்கில் வாழும் கொள்ளைக் கூட்டத்தினர்களுக்கு காவல்துறை அதிகாரி களே ஆயுதங்களை வழங்கியதாகக் கொள்ளைக் கூட்டத்தினர் நீதி மன்றத்தின் முன்பு கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பணத்தைச் சேமிக்கவேண்டும். அதிகமாகக் குவிக்க வேண்டும் என்ற குறிக்கோள் உள்ளவன், கொள்கை உள்ளவன், குறிக்கோள் உள்ள திருடனுவான் அல்லது குற்றவாளியாவான்.

இவர்கள் மற்றவர்களின் விருப்பம், எண்ணம், பரிவு, தேவை, கஷ்டம், ஆகியவற்றை எண்ணிப்பார்க்காத ஒழுக்கமுள்ளவர் களாகவும் இரக்கமற்ற தன்மையர்களாகவும் எதைப்பற்றியும் கவலேப்படாதவர்களாகவும் உள்ள குற்றவாளிகளேப் போன்ற வர்கள் ஆவார்கள். ஆனுல்அவர்களின் தகுதியைப்பற்றி அதிக அக்கறை காட்டுவார்கள். இவர்கள் லாபத்திற்காக எந்தக் கட்டுப் பாட்டையும் மீறும் குணம் உள்ளவர்கள். பொதுப் பணத்தைச் செலவழிக்கவேண்டும் அல்லது சேமிக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் நிச்சயம் அதிகாரிகளாக இருக்கமுடியாது. அப்படி யிருந்தால் அவர்கள் உடனே பிடிபட்டுவிடுவார்கள். பொதுவாக வணிகர்கள்தாம் பணத்தைச் சேர்க்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருப்பார்கள். அதற்காகப் பல மாற்றுக் கணக்குகள் தயாரிப் பார்கள். அவர்களின் ஒழுக்கம், செயல் ஆகியவை சமுதாயத் திற்கு எதிரானவையாக கருதப்படுவதுடன் அவர்களின் ஒழுக்கம் குற்றவொழுக்கமாக மாறிவிடுகிறது. வணிகர்களேக் கட்டுப்படுத்த விற்பனே வரிச் சட்டம், வருமானவரிச் சட்டம் ஆகிய சட்டங்களே இயற்ற வேண்டியுள்ளது. மக்களின் ஊக்கம், கருத்து, இலட் சியம் யாவும் வாழ்வின் வெற்றிக்காகப் பாடுபடுவதே என்று கருதி உழைத்து வந்தாலும் வாழ்வில் அனேவரும் வெற்றி வாகை சூடுவதில்லே. அநேக மக்கள் வாழ்வின் அடிப்படைத் தேவைகள் கூடக் கிடைக்காமல் வாடுகின்ருர்கள். இதில் அவர்களின் உழைப்பு போதிய அளவு இல்லேயா? அல்லது காலம் நேரம் அறிந்து செயல்படவில்லேயா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்க வாழ்வில் ஏற்றம் காண முடியாதவர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகின்ருர்கள் என்பது வெளிப்படையாகும். ஆகவே எப்படி யாவது வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலேக்குத் தள்ளப்படுவ தனுல் அவர்கள் நேர்மையான வழியிலிருந்து வேறு வழிக்குத் தள்ளப்படுகின்ருர்கள். நாட்டில் பல்வேறு இன மக்கள் கூடி வாழ் வதனுல் அவர்களின் ஒழுக்கங்களும் மாறுபடுகின்றன. இதன் காரணமாகத்தான் நாட்டில் பலர் செல்வந்தர்களாகவும் பலர் நடுத்தர வாழ்க்கையும், மற்றும் பலர் கீழான நிலேயிலும் வாழ்க்கை நடத்தி வருகின்ருர்கள். மேலும் உள் நாட்டில் வாழ முடியாதவன் வெளிநாடுகளில் சென்ருவது சிறப்புடன் வாழலாம் என எண்ணு கிருன். இது பண்டைக் காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வரும் பண்பாடாகும். இதன் அடிப்படையில் அமைந்ததுதான் இடம் பெயர்வு ஆற்றல்(Mobility).

இடம் பெயர்வு ஆற்றல் (Mobility)

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழின் முது மொழியாகும். இதன் அடிப்படையில் அமைந்ததுதான் குடி

யேறுதலும்இடம்பெயர்வாற்றலும் ஆகும். நாட்டில் தொழில் வளம் அதிகரித்து விட்டதனுல் மக்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பொருட்டுக் கிராமங்களையும் நகரங்களையும் விட்டுத் தொழிற் சாலைகள் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று வாழ விரும்புகின் ருர்கள். புதிய இடத்தில் குடியேறுவதனுல் அவர்களின் ஒழுக்கம், பண்பாடு புதிய இடத்தில் வேறுபடுகின்றன. புதிய இடத்தில் புதிய கட்டுப்பாடு. புதிய கலாச்சாரம், புதிய பண்பாடு ஆகியவற் றைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்ற காரணத்தினுல் பழைய கலாச்சாரம், பண்பாடு, கட்டுப்பாடு ஆகியவற்றை நாளுக்கு நாள் மறந்து விடுகின்ருர்கள். மேலும் ஒரு கூட்டத் திலிருந்து பிரிந்து வாழ்பவர்களின் ஒழுக்க வரலாறு பழைய ஒழுக்கங்களிலிருந்து மாறுபடுகின்றன. புதிய பகுதிகளில் புதிய தாக வந்தவர்களின் எண்ணிக்கையும் அவர்களின் செல்வாக்கும் அதிகரித்துவிட்டால் புதிய இடத்தில் ஏற்கனவே உள்ளவர்களின் நாகரிகங்கள், கலாச்சாரம் நசுக்கப்பட்டு விடுகின்றன. புதியதாக சென்றவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவதனு பூர்வீகக் குடிகளின் ஒழுக்கம் மாறுபடுகிறது. இதனுல் அவர் தங்களின் பழைய கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளை விட்டுப் புதிய கட்டுப்பாடுகளுக்கு ஏற்றவாறு வாழ வேண்டிய களாகின்ருர்கள். இவ்வாருக காலத்திற்கு, இடத்திற்கு ஏற் வாறு குற்றச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

இடம் விட்டு இடம் மாறுவதனுல் (Mobility) குற்றங்கள் அதிகம் நிகழ்வதற்கு ஏதுவாகிறது. கட்டுப்பாடு முறைகளை வலியுறுத்துவதிலும் பல சிக்கல்கள் எழுகின்றன. அதாவது குடி யிருப்பு எல்லை அதிகரிக்கின்றது. அதிக காவல் துறையினர் தேவைப்படுகின்றனர். அதாவது வணிகம், பயணம், செய்தித் தாள்கள் மற்றும் இதர உறவு முறைகளுக்காக அடிக்கடி ஓர் இடத்திற்கும் மற்ருேர் இடத்திற்கும் தொடர்புகள் இருந்து கொண்டே இருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் சிரமம் உள்ளது. மக்கள் தாமாகவே கட்டுப்பாட்டுடனும் அடக் கத்துடனும் இருந்தால் கட்டுப்பாட்டோடு நடப்பவர்களுக்கும் சமுதாயத்திற்கும் நல்ல பயனளிக்கும். ஒரு கூட்டத்தின் செய லெதிர் செயல் விளைவுகளை மற்றொரு கூட்டத்தினர் உடனடியாக உணரமுடியாமல் போகிறது. இதற்குக் காரணம் அறிமுகம் இல்லாத இடங்களுக்குக் குடிபெயரும்போது ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டவர்களும் குற்ற ஒழுக்கம் உள்ளவர்களும் புதிய இடத்தில் வாழும்போது தங்களின் உண்மையான குணங் களையும், குற்றங்களையும் மறைத்து நல்லவர்களாக நடிக்கவும் வாய்ப்பு உண்டு. அல்லது குற்றவாளிகள் தங்கள் பெயர்களை

மாற்றி வைத்துக்கொண்டு ஏமாற்றுவதற்கும் வாய்ப்பு உண்டு. புதிய குடும்பங்களுடன், தங்கள் குழந்தைகள் பழகுவதை வன்மையாகக் கண்டிக்க முடியாத நிலை பழைய குடுபங்களுக்கு உண்டாகிவிடுகிறது. புதியதாகக் குடியேறியவர்களின் குழந்தைகளுடன் ஏற்கனவே உள்ள குழந்தைகள் பழகுவதற்கு அதிக ஆர்வம் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம். இதனால் புதிய குழந்தைகளின் ஒழுக்கங்கள் பழைய குழந்தைகளுக்கும், பழைய குழந்தைகளின் ஒழுக்கங்கள் புதிய குழந்தைகளுக்கும் பரவ வாய்ப்புண்டு. இந்த முறைகளினால் ஒழுக்கச் சிதைவும் பண்பாட்டுச் சிதைவும் உண்டாகிவிடுகின்றன. ஆகவே கண்டபடி குடிமாறும் வழக்கங்களைத் தடுத்தல் நல்லது. மேலும் போதிய காவல் துறையினரை நியமித்து மக்கள் ஒழுக்கங்களைக் கண்காணித்துவருதல் மிக்க நன்மை பயக்கும். மக்களுக்குக் கடமை, ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலி ந்துதல், சுதேசியப் பற்று, நாட்டுப் பற்று, மொழிப்பற்று ய மனப்பான்மைகளை மக்களுக்கு உண்டாக்க முயற்சிகள் கொள்ளப்படவேண்டும். இவற்றினால் குற்ற ஒழுக்கங்கள் தைத் தடுக்க முடியும்.

மேலும் இடம் மாறி வாழ்வதனால் எல்லா இடங்களும் ஒரே ரியாக இருக்க வாய்ப்பில்லை. குற்றங்களும் குற்ற ஒழுக்கங் நம் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. மக்களின் தன்மை, த்திற்கு ஏற்ப குற்ற விகிதங்களும், குற்ற ஒழுக்கங்களும் றுபடுகின்றன. இடம் மாறியவர்களின் குற்ற விகிதத்தில், இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கைஅதிகமாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இளைஞர்கள் அதிகக் கட்டுப்பாடுகளுக்கு ஆளாவதில்லை. சுதந்திரமாகப் பழகும் மனப்பான்மை உள்ளவர்கள் துணிச்சலுடன், போட்டி மனப்பான்மையும் இளைஞர்களிடையே அதிகம் காணப்படுகிறது. உழைக்காமல் ஊதியத்தை ஈட்ட வேண்டும் என்ற ஆர்வம் இளைஞர்களிடையே அதிகம் காணப்படுகிறது. இதன் விளைவால், தாங்கள் என்ன செய்கின்றோம் என்ற நினைவு இல்லாமல் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அதிலும் குடியேறிய இளைஞர்கள் அதிக குற்ற எண்ணிக்கை விகிதங்களைப் பெற்றிருப்பதாக ஆய்வுகள் பகர்கின்றன. புதிய இடத்தில் கட்டுப்பாடுகள் குறைவு என்பதற்கு இதுவே சான்றாகும். அதாவது அவர்கள் பழைய இடத்தில் வாழ்ந்தபோது செய்த குற்றங்களையும், புதிய இடத்தில் குடியேறிய பிறகு செய்த குற்றங்களையும், புதிய இடத்தில் குடியேறிய பிறகு செய்த குற்றங்களின் எண்ணிக்கை விகிதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது புதிய இடத்தில் குடியேறிய பிறகுதான் அதிகமான குற்ற

எண்ணிக்கை விகிதங்கள் காணப்படுகின்றன. இத்துடன் வேறு பல உண்மைகளும் புலப்படுகின்றன. அதாவது அதிக குற்ற எண்ணிக்கை விகிதங்கள் உள்ள பகுதிகளிலிருந்து குடியேறியவர்கள் அதிக குற்ற எண்ணிக்கை விகிதத்தையும், குறைந்த குற்ற எண்ணிக்கை விகிதங்களிலிருந்து குடியேறியவர்கள் குறைந்த குற்ற எண்ணிக்கை விகிதங்களையும் பெற்றிருக்கிறார்கள். அவரவர்களின் குற்ற ஒழுக்கங்கள் அப்படியே பரவி அதிகரித்துள்ளன என்பது தெரிய வருகின்றது. மேலும் குறைவான குற்றங்கள் உள்ள பகுதிகளிலிருந்து அதிகமான குற்றங்கள் உள்ள பகுதிக்கு மாறினால் அதன் மாற்றத்தினால் மேலும் அதிக குற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. புதிய இடத்தில் அதிக குற்றங்களும் குற்ற ஒழுக்கங்களும் காணப்படுவதால் புதியவர்களுக்கும் அவ்வொழுக்கங்களே பரவுகின்றன. அதேபோன்று அதிகமான குற்ற ஒழுக்கம், குற்றங்கள் நிகழும் பகுதிகளிலிருந்து, குறை வான குற்றங்கள் நிகழும் பகுதிகளுக்குச் சென்றாலும் கு...ர் விகிதங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆனால் இது கு...த்த பவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும். ...யவை வான மக்கள் குடியேறினால் குற்றங்கள் குறைந்தே காண... தாவது

ந்தவர்

எல்லா நாடுகளிலும், கிராமங்களைவிட பெரிய பெரிய ...கைத் களில் அதிகமான குற்றங்கள் நிகழ்கின்றன, அதாவது குற்ற... ...கிய நடைபெறும் இடங்கள், துறைமுகம், நகரின் புகலிடம், க... ...தும் வழிகள், அங்காடிகள், கேளிக்கை அரங்குகள், படக்கா... ...வு அரங்குகள் (Cinema Theatres), பேருந்து நிலையங்கள், பு... வண்டிச் சந்திப்பு நிலையங்கள் முதலியன ஆகும். மேலும் உணவு விடுதிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் அதிகமான குற்றங்கள் நிகழ்கின்றன. அமெரிக்காவில் ஒரு நகரின் உணவு விடுதியில் 25000 துண்டுகள் (Towels) காணாமல் போய்விட்டதாகவும் மற்றொரு விடுதியில் இரண்டு வருடத்தில், விடுதி திறக்கும்போது மாட்டப்பெற்ற வண்ணப் படங்களில் 1/5 பாகம் காணாமல் போய்விட்டதாகவும் அறிக்கை கூறுகிறது. இதன் அடிப்படையில் தான் இங்கிலாந்தில் இடைக்காலத்திய (Medieval) திருடனைக் குறிப்பாகக் கூறுவதற்கு (Travellers) 'பயணிகள்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இது எவ்வளவு உண்மை என்பதை மேற்கூறிய புள்ளிவிவரங்களிலிருந்து அறியலாம். மேலும் குடிமாற்றத்தினால், குடியேற்றத்தினால் குற்றவிகிதங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதனால் அவர்களின் குடிமாற்றங்களே காரணம் என்று கூறிவிடமுடியாது. அவர்கள் குடியேறாமல் இருந்தாலும் அவர்களின் குற்ற விகிதங்கள் அதிகரித்திருக்கக் கூடுமல்லவா. ஆகவே மற்ற காரணக் கூறுகளும்

இணைவதினால்தான் குற்றங்கள் அதிகரிக்கின்றன. வெறும் குடியேற்றத்தினால் மட்டும் அல்ல.

நாகரிக முரண்பாடு (Culture Conflict)

இடம்விட்டு இடம் குடிமாறுவதனால் சமுதாயத்தில் ஒழுங்குமுறை சீர்கேடு அடைகிறது என்பதை ஆராய்ந்தோம். இது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று குடியேறுவதனாலும், மற்ற நாடுகளிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு வந்து குடியேறுவதனாலும், ஒழுங்காகச் சீரமைந்திருந்த சமுதாயத்தில் பல சிக்கல்கள், சீர்கேடுகள், சண்டை, சச்சரவு ஆகியவற்றுடன் கல்வி, கலை, கலாச்சாரம் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள், சமுதாயத்தின் ஒழுக்கங்கள், கட்டுப்பாடுகள், சமுதாயத்தின் மதிப்பு, நலன் ஆகியவை பாதிக்கப்படுகின்றன அல்லது மாற்றங்களுக்குள்ளாகின்றன. பழைய நாகரிகம் அழிந்து, புதிய ...கரிகம் உருவாகிறது. அதாவது யார் யார் எந்தெந்த ஒழுக்கங்...ப் பெற்றிருக்கிறார்களோ அதே ஒழுக்கங்கள் அவர்கள் ...று குடியேறும் அல்லது வந்தேறிகள் வாழும் பகுதிகளில் ...நாகரிகங்கள் பரவுகின்றன. இந்தியாவில் கிரேக்கர்களின் ...படுப்பால கிரேக்க நாகரிகமும், மற்றும் யவன தேசம், ...லாந்து, போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் வணிகத் தொடர்பால் ...நாடுகளின் நாகரிகமும், பிரெஞ்சுக்காரர்கள் வருகையால் ...த நாட்டு நாகரிகமும், இந்தியாவில் பரவியுள்ளன. அதனால் ...றும் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் பரவிக் காணப்படுவது வெள்ளையர்கள் நாகரிகம்தான். இன்றுள்ள கல்வி, மருத்துவம், நாகரிகம், சமுதாய அமைப்பு, சட்டங்கள், ஒழுக்க விதிகள் ஆகியவை யாவும் வெள்ளையர் நாகரிகத்தின் தொடர்பு கொண்டவை ஆகும். இந்தியாவில் வெள்ளையர் வருகையால் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இங்குள்ள பழமையான நாகரிகம், நடை, உடை, பாவனை, வாழ்க்கைமுறை, தொழில்முறை, பாதிக்கப்பட்டுவிட்டன அல்லது மாற்றத்திற்குள்ளாகிவிட்டன.

தமிழகத்திலும் மற்ற பகுதிகளிலும் குருகுல வாசம் இருந்தது. அதாவது ஆசிரியர் இல்லத்தில் தங்கி மாணவர் கல்வி பயிலும் முறைக்கு 'குருகுலவாசம்' என்று பெயர். இம்முறையில் மாணவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடனும், அதே நேரத்தில் ஒழுக்க சீலர்களாகவும் திகழ்ந்தார்கள். அந்த முறை இன்று அடியோடு மாறிவிட்டது, அல்லது மறைந்து விட்டது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அக்காலங்களில் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று, பண்பாடுகளைப் பேணுதல் ஆகியவை மக்களின் குறிக்கோள்களாகவும் அமைந்திருந்தன. ஆனால் இன்று

ஆங்கிலேய மோகமும், மற்ற மொழிகளின் ஆதிக்கமும் மக்களிடத்தில் குடிகொண்டு விட்டன. இதன் விளைவால் அறம் பாதிக்கப்பட்டுவிட்டது. ஒழுக்கம் சீர்குலைந்து விட்டது. பெரியோரைப் பேணல், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" போன்ற நெறிகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. இதன் விளைவால் இல்லத்திலும் சமுதாயத்திலும் கட்டுப்பாடும், ஒழுக்கமும் சீர் குலைந்து விட்டன. எங்கும் குற்ற ஒழுக்கமும், குற்றச் செயல்களும் மலிந்துவிட்டன. இன்று குற்ற ஒழுக்கங்களையும், குற்றச் செயல்களையும் போற்றிப் புகழ்கின்ற அல்லது ஆதரவு அளிக்கின்ற நிலை உருவாகி வருகின்றது. குற்றவொழுக்கம் உள்ளவன் இன்று பலருக்குத் தலைவனாக விளங்கும் நிலை உருவாகிவிட்டது என்றால் அவனைச் சார்ந்தவர்களும் அவனுடைய தொண்டர்களும் எப்படி இருப்பார்கள். இன்று வழிகாட்டி யார் என்றால் குற்ற ஒழுக்கம் உள்ளவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள். ஆகையால் குற்ற ஒழுக்கம் தான் விரைவாகப் பரவ ஏதுவாகிறது. சாதாரணமாக அடக்கத்துடனும், வாய்மையுடனும், வாழும் பகுதியினர் குற்ற ஒழுக்கம் உள்ளவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்த பின்பு அவர்களின் அடக்கம், வாய்மை, ஒழுக்கம் ஆகியவை நாளுக்கு நாள் மறைந்து வரும் நிலை உள்ளது. அதாவது வாணிகத்தில் ஈடுபாடு கொண்டதனால் ஒழுக்கமாக இருந்தவர்களும் பொய் பேசவும், கலப்படம் செய்யவும், நம்பிக்கைத் துரோகம் செய்யவும், பழக்கப்படுத்திக் கொண்டதுடன், வாங்கிய கடனை நாணயமாக திருப்பிக் கொடுக்காததுடன், மது அருந்தும் பழக்கத்திற்குள்ளாகியும் விடுகிறார்கள். இதனால் உடல் உறவு இன்பத்தில் கட்டுப்பாடு அற்றவர்களாகவும், பரத்தைமை செய்யக்கூடியவர்களாகவும் மாறிவிடுகிறார்கள். ஒரு நாகரிகத்தோடு மற்றொரு நாகரிகமே கலக்கும்போது இரண்டு நாகரிகங்களும் சீர்குலைந்துவிடுகின்றன. சில வேளைகளில் கூட்டத்தின் தன்மையைப் பொறுத்து நாகரிகத்தை ஏற்றுக்கொள்வதிலும் வேறுபாடு ஏற்படுகிறது. இன்று மலைப் பகுதிகளில் வாழும் காடர், தோடர், மலைச் சாதியினர் போன்ற இனத்தவர்களிடத்திலும் நாகரிக முரண்பாடு காணப்படுகிறது. நாகரிக முரண்பாடு என்பது பழமைக்கு எதிரானது என்பது அல்ல. நாகரிகம் என்ற போர்வையில் பல குற்ற ஒழுக்கங்கள் பரவுவதைத்தான் நாகரிக முரண்பாடு என்று அழைக்கப்படுகிறது. மலைச் சாதியினர் தங்களின் மூடப் பழக்கங்களை விட்டு விட்டு கல்வி பயில முன் வருகின்றனர் என்றால் அது நாகரிக வளர்ச்சியாகும். ஆனால் நாகரிகத்தின் பெயரால் மது அருந்துதல், உடல் உறவுகொள்வதில் ஒழுக்கங்களைக் கடைபிடிக்காமல் சுதந்திரமாகப் பழகுவது தான் நாகரிகம் என்று கருதி விபச்சாரம் செய்யத் தொடங்கி

விட்டால் அது நாகரிக வளர்ச்சி அல்ல. இதுதான் நாகரிக முரண்பாடாகும். மேலும் நாட்டின் எல்லை ஓரப்பகுதி மக்களுடன் பழகுவதும் தனித் தன்மை வாய்ந்ததாகும். எல்லை ஓரங்களில் பொதுவான நாகரிகம் அமைந்து இருக்கும். அமெரிக்காவில் எல்லைப் பகுதிகளில் தங்கிப் படித்த பெண்களில் 86 சதவீதம் இளங் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். அதே நேரத்தில் உள்நாட்டில் படித்தவர்களில் 14 சதம்தான் பெண்கள் இளங் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள் என்று ஈவிலன் குருக் (Evelyn Crook) என்பவர் ஆராய்ந்துள்ளார்.

பொதுவாக, குடியேற்றம், குடிவந்து இறங்குதல், குடிமாற்றம் ஆகிய காரணங்களினால் மக்களின் வாழ்க்கைநிலை பாதிக்கப்படுகிறது. புதிய நாட்டில் அல்லது ஊர்களில் குடியேறும்போது மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள். புதிய சூழ்நிலை, புதிய பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள், நாகரிகம் இவற்றைப் புதிய இடத்தில் உடனே பரப்புவதும் கடினம். ஏற்கனவே அமைதியாக வாழும் மக்களுக்கும் புதியவர்கள் வருகையால் அமைதி பாதிக்கப்படுகின்றது. வாழ்க்கையின் தேவைகள் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக விலைவாசி உயர்வுகள், பசி, பட்டினி, பஞ்சம், வறுமை, நோய், கலகம், குழப்பம், அமைதியின்மை, தெளிவு அற்ற வாழ்க்கை, நம்பிக்கையற்ற வாழ்க்கை முதலியன ஏற்படுகின்றன. இதனால் இரு சாராரின் ஒழுக்க முறைகளும் மாறுபடுகின்றன அல்லது சிதைந்து விடுகின்றன. 'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற கொள்கை மாறி 'எப்படியும் வாழ்ந்துவிட வேண்டும்' என்ற நிலைமை மக்களிடத்தில் உண்டாகி விடுகின்றது. இன்று பர்மா, இலங்கை அகதிகள், தமிழ் நாட்டிலும் மற்றும் பல பகுதிகளிலும் குடியேற்றப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் பூர்வீகத் தமிழர்கள், இந்தியர்கள் என்று கூறினாலும் வெளிநாட்டில் நீண்ட காலம் தங்கிவிட்டதனால் அந்நாட்டின் பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் அவர்களை ஆட்கொண்டுவிட்டது. அங்கே சுகமாக, அமைதியாக வாழ்ந்தவர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பப் போய்விட வேண்டும் என்ற கட்டளையினால் தாயகம் திரும்பியவர்களுக்கு இங்கே நிலையான தொழில்கள், இடங்கள் வசதியாக அமைந்துவிடவில்லை. ஏற்கனவே இங்குள்ளவர்களே வேலையில்லாத் திண்டாட்டத்தில் உழலும் போது, புதியதாக வந்தவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரமுடியும்? ஆகையினால் அதிக அகதிகள் கள்ளக் கடத்தல், போலிச் சாமான்கள் தயார் செய்தல் மற்றும் லாபம் தரக்கூடிய பல வழிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் ஒழுக்க முறைகளும் குற்ற ஒழுக்கங்களாக மாறிவிட்டன. இதற்கு

வறுமை, ஏமாற்றம், வாழ்க்கைப் போராட்டம் முதலியன காரணமாக இருந்தாலும் இடம் விட்டுக் குடியேறுவதனுல் ஏற்படுகின்ற நாகரிக முரண்பாடும் முக்கிய காரணமாகும். மேலும் நாட்டுக்கு நாடு நாகரிகம், கட்டுப்பாடு, சட்டம் முதலியன மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக ரஷியாவின் சட்டப்படி பெண்கள் முகத்திரை (Veils) அணியக் கூடாது. சைபீரியாவின் குலமரபுக் குழுவின் (Siberian tribes) கட்டளைப்படி பெண்கள் முகத்திரை அணியாவிட்டால் அவர்களின் உறவினர்களே அவர்களைக் கொலை செய்துவிடலாம் என்ற கட்டுப்பாடு உள்ளது. ரஷியாவின் சட்டத்தை சைபீரியாவில் செயல் படுத்தும்போது அது மக்களுக்கு முரண்பாடாக அமைவதுடன் குற்றமாகவும் அமைந்துவிடுகிறது. சைபீரியர்கள் தங்கள் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல், ரஷியாவின் சட்டத்தை மீறிய குற்றமாக அமைந்து விடுகிறது. இதேபோன்று அல்ஜீரியாவில் (Algeria), பிரான்சு (French) நாட்டின் சட்டம் செயற்படுத்துவதற்கு முன்பு, கணவனைத் தவிர மற்ற ஆண்களைப் புணர்ந்தால் அந்தச் செயலைக் கண்ட உடனே பெண்ணின் தந்தையோ அல்லது சகோதரனே அவளைக் கொலை செய்துவிடலாம். கொலை செய்வது இவர்களின் உரிமையும் கடமையும் ஆகும். ஆனால் பிரான்சு நாட்டுச் சட்டப்படி அதே சூழ்நிலையில் கொலை செய்வது கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறது. அதற்கு மரண தண்டனை வழங்கப்படும்.

ஒரு நாகரிகத்தில் ஊறித்திளைத்தவர்கள், பழக்கப்பட்டவர்கள், பின்பற்றி வந்தவர்கள், நாடுவிட்டு நாடு சென்று குடியேறும்போது, அந்த நாட்டுடன் இணையும்போது, புதிய நாகரிகத்திற்கும், பழைய நாகரிகத்திற்கும் மோதல் ஏற்படுகின்றது. இதனுல் அவர்கள் புதிய நாகரிகத்தை ஏற்கவேண்டிய சூழ்நிலைக்குள்ளாகிருர்கள். பழைய நாகரிகத்தைக் கைவிட வேண்டியவர்களாகிருர்கள். ஆனுல் இது தலைகீழாக மாறிவிடும் சூழ்நிலையும் உண்டு. ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சியைப் பற்றிக்கொண்டால் அந்நாட்டின் சட்டங்களையோ, பழக்க வழக்கங்களையோ பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. தங்கள் நாட்டுச் சட்ட திட்டங்களையும், நாகரிகத்தையும் பின்பற்றுவதோடு அல்லாமல் அந்த நாட்டு மக்களையும் புதிய சட்டத்தையும் நாகரிகத்தையும் பின்பற்றும்படிக் கட்டளையிடலாம் அல்லது திணிக்கலாம். இதனுல் வெற்றியடைந்த நாட்டிற்குக் கடினம் எதுவுமில்லை. ஆனுல் தோல்வியுற்ற நாட்டிற்கு மிகவும் சிரமம். தோல்வியுற்ற மக்களுக்குப் பொருளாலும், புகழாலும் நட்டமடைந்ததோடல்லாமல் புதிய நாகரிகத்தையும், சட்டங்களையும் பின்பற்றியாக வேண்டிய நிப்பந்தமும் ஏற்படு

கிறது. படையெடுப்பின்றி விரும்பிக் குடியேறும் மக்களாக இருந்தால், அவர்களாகவே புதிய நாகரிகத்தையும், சட்டவிதிகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். மேலும் அவர்களுக்கு அரசியல் செல்வாக்கோ, பொருளாதார வளமோ, மக்கள் ஆதரவோ இருக்க முடியாது. அந்நிலையில் தங்களின் பழைய பண்பட்ட நாகரிகத்தையும், சட்டத்தையும் விட்டுவிட்டு புதிய நாட்டின் சட்டத்தையும், நாகரிகத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் இரு நாடுகளின் சட்டங்களும் நாகரிகமும் இணைந்தும் விடக்கூடும். எடுத்துக்காட்டாக வெள்ளையர்கள் ஆதிக்கத்தால் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் நாகரிகம் பரவியது. இந்தியப் பண்பாடும் ஒரு பக்கம் தழைத்து வளர்ந்தது. இன்று இரண்டு நாகரிகமும் இணைந்த கூட்டு நாகரிகம் இந்தியர்களிடம் உள்ளது. உணவு, உடை, பழக்க வழக்கங்கள், பேச்சு முறைகள், ஆகியவை ஆங்கில நாகரிகமும் இந்தியப் பண்பாடும் இணைந்தே காணப்படுகின்றன. வெள்ளையன் ஆதிக்கம் இல்லையென்றாலுங்கூட இன்று வெள்ளையனின் நாகரிகத்தை இந்தியா விடாமல் பிடித்துக்கொண்டுதான் இருக்கிறது. இதுவும் குற்ற ஒழுக்கங்கள் வளர்வதற்கு வழிகளாகின்றன. பால்உறவுக் குற்றங்கள், மது அருந்துதல், சூதாடல், ஆகியவை நாகரிகம் என்ற பெயரால் அதிக அளவிற்கு வளர்ந்துவிட்டன. இன்றைய இளைய தலைமுறையினர் பால் உணர்ச்சி, உள்ளத்தின் குழப்பம், உள் உணர்ச்சி, ஏக்கம் ஆகியவற்றின் பெருக்கத்தால் இளைஞர்களும் சிறுவர்களும் குற்றவொழுக்கங்களில் ஈடுபடுகின்றனர்.

நாகரிகம் சிதைவதும், மாறுபடுவதும், மாற்றப்படுவதும் அந்தக் காலங்களின் குடியேற்றத்தாலும், குடிபுகுதலாலும் (Migration & Immigration) ஏற்பட்டன. ஆனால் இன்று ஒரே நாட்டில், வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறாமல் நாகரிகம் இடம் விட்டு இடம் மாறாமல் நாகரிகம், பண்பாடு, கலை, கல்வி, கலாச்சாரம், ஒழுக்கங்கள் ஆகியவை பாதிக்கப்படுகின்றன. பால் உணர்வு தூண்டும் புதிய அலை (New wave) புகைப்படம், திரைப்படம், தொலைக்காட்சி, கதை, கட்டுரை, செய்தித்தாள் ஆகியவற்றின் மூலமாக தீய நாகரிகங்கள், தீய பண்பாடுகள் ஆகிய குற்ற ஒழுக்க விதிகள், நாடுகளிடையே, எளிதில் பரவி விடுகின்றன.

ஹிப்பிசுள் (Hippies) மூலமாகவும், இன்பச் சுற்றுலாவிற்காக நாடுகளிடையே சுற்றித் திரிபவர்கள் மூலமாகவும் தீய நாகரிகம், குற்றவொழுக்கம் பரவுகின்றது. அமெரிக்காவில் மாணவர்களும் மாணவிகளும் செய்யும் செயல்களையும் பழகும் முறைகளையும்

இந்திய மாணவ மாணவிகள் அப்படியே பின்பற்ற முயற்சி செய்கின்றனர். இன்று நாகரிகத்தின் பெருக்கத்தால் அறிவியலின் ஆற்றலால் உலகம் சுருங்கிவிட்டது. பல போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டன. உட்கார்ந்த இடத்திலிருந்தே தொலைபேசி மூலம் காதல் வார்த்தைகள் பேசுவதும், கள்ளக் கடத்தலுக்கு வழி செய்வதும் பெருகிவிட்டன. இன்றைய இளைய தலைமுறையினர் கட்டுப்பாட்டில் இல்லை. அவர்கள் வெளி சூழ்நிலைகளின் ஆதிக்கத்திற்கு அடிமைகளாகிவிட நேரிட்டுவிட்டது. பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்குப் போதிய அறிவுரையும், ஒழுக்க முறையும் கற்றுக் கொடுப்பதில்லை. நாகரிகத்தின் பெயரால் அவர்களும் குற்றவொழுக்கத்தில் ஈடுபாடு கொள்வது தான் காரணமாகும். வயது, தகுதி இவற்றை மறந்து பெற்றோர்களும் இளைஞர்களைப் போலவே செயல்படுவதுதான் இளைஞர்களின் குற்ற ஒழுக்கத்திற்கு முக்கிய காரணமாகும். பெற்றோர்களிடம் குற்றவொழுக்கம் காணப்பட்டாலும் அவை குற்றச் செயலாக மாருமல் இளைஞர்கள் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள், எழுச்சியுள்ளவர்கள், குற்றத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாதவர்கள், எதையும் துணிந்து செயல்படக்கூடியவர்கள், துன்பத்தைப் பற்றியும் பொறுப்பைப் பற்றியும் சிந்திக்காதவர்கள். அந்த நிலையை அடையாதவர்கள். ஆனால் குழந்தைகள் உள்ளம் கள்ளம் கபடு அற்றதாகவும், நெருப்பினும் தூய்மையானதாகவும், பளிங்கினும் தூய்மையானதாகவும், வானிலும் உயர்ந்ததாகவும் உள்ளது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இலட்சியம், குறிக்கோள், நோக்கம், உயர்ந்த எண்ணங்கள், ஆகியவற்றை இளம் உள்ளங்களிடம் சுடர்விட்டு எரியும்படி செய்வது பெற்றோர்கள் பொறுப்பும் ஆசிரியர்களின் கடமையும் ஆகும். இதனால் குற்ற ஒழுக்கம் இளைஞர்களிடையே பரவாமல் தடுக்க ஏதுவாகும்.

கல்வி பயிலும் மாணவர், வீட்டைவிட்டு, ஊரைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று தங்கினால், அவன் பழகும் நண்பர்களைப் பொறுத்தும், சூழ்நிலையைப் பொறுத்தும் அவனுடைய ஒழுக்கம் அமையும். தற்காலிகமாக ஓராண்டு முதல் நான்கைந்தாண்டுகள் வரையில் வீட்டைவிட்டு வெளியே தங்கிப்படிக்கும் மாணவரின் ஒழுக்கம் அவனுடைய சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடும். ஆனால் கொள்கை உறுதியும் இலட்சியக் குறிக்கோளும் கொண்டிருக்கும் மாணவன் எந்தச் சூழ்நிலையிலும், குற்றவொழுக்கம் உள்ளவர்களாலும் குற்றவொழுக்கத்திற்குக் காரணமாகமாட்டான் என்பது திண்ணம்.

அடுத்து குற்றவொழுக்கம் பரவுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று விளையாட்டுகளாகும் (Sports). குறிப்பாக கிரிக்கெட் (Cricket) பேஸ் பால் (Base Ball), ஆக்கி (Hockey) கால் பந்து (Foot Ball) ஆகியவற்றைக் கூறலாம். விளையாட்டிற்கு எல்லா நாடுகளிலும் முக்கியத்துவம் உள்ளது. அதன் வெற்றி தோல்வி நாட்டின் ஒழுக்கத்தையே பிரதிபலிக்கின்றது உண்மையாக விளையாடி, தோல்வி அடைந்தால் அதனால் அவ்வளவு பாதகம் இல்லை. ஆனால் சில கைக்கூலிகள் நாட்டின் நன்மையைக் கருதாமல், சரிவர விளையாடாமல் தோல்வி அடைந்தால், தோல்வி அடைந்தவர்களின் நாட்டுக்கே கெட்ட பெயராகிவிடுகிறது. ஆகவேதான் விளையாட்டு வீரர்களுக்கு கையூட்டுக் கொடுப்பது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் 1919இல் வாழ்ந்த ஆரனல்டு ரோத்திடியன் (Arnold Rothsteen) என்பவன் புகழ்பெற்ற கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவனும், பெரிய சூதாடியும் ஆவான். இவன் பேஸ் பால் (Base Ball) விளையாட்டு வீரர்களுக்குக் கையூட்டு கொடுத்து ஆட்டத்தைத் தோல்வியுறச் செய்து விட்டான். இந்தச் செய்தி உலகைப் பரபரப்பிற்குள்ளாகிவிட்டது. இதனால் ஆட்டத்தவர்களுக்கும் (Players), கையூட்டு வழங்கியவனுக்கும் கடும் தண்டனை அளிக்க வேண்டும் என்ற முழக்கம் வானைப் பிளந்தது. ஆட்சியின் திறமையினால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கடும் தண்டனைக் குள்ளாயினர். சாதாரண அதிகாரிகள் கையூட்டு வாங்கினால் கூட மக்கள் பரபரப்பும், கொதிப்பும் அடைந்திருக்கமாட்டார்கள். இதேபோன்று 1950-51இல் கல்லூரியில் 'பேஸ் பால்' ஆடியவர்களுக்குக் கையூட்டு வழங்கியபோதும் சமுதாயத்தில் எதிர்ச் செயல்கள் (Reaction) காணப்பட்டன. இதன் காரணமாக விளையாட்டு வீரர்கள் அனைவரும் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டுவிட்டனர். அமெரிக்காவின் பல மாநிலங்களில் கொள்ளையர்களுக்கு வழங்கிய கடும் தண்டனைகளைவிட விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. ஓர் ஊரில் திருட்டுக் குற்றம் நடந்துவிட்டால் அதைப்பற்றி மக்கள் அதிக அக்கறை கொள்வதில்லை. ஏனெனில் இதில் தனியார் சொத்தே பாதிக்கப்படுகின்றது. ஆனால் விளையாட்டுகளில் ஊழல் நடந்தால் உடனே மக்கள் கொதித்து எழுகின்றனர். காரணம் இதில் ஒரு நாட்டின் புகழோ அல்லது ஒரு பகுதியின் திறமையோ அடங்கியுள்ளது. அதனால், விளையாட்டுகள் கௌரவச் பிரச்சினைகளாக அமைந்து விடுகின்றன. சமீபத்தில் இந்திய கிரிக்கெட்டுக் குழு இங்கிலாந்து சென்று படுதோல்வியுற்றது. இதைப்பற்றி பல செய்தித்தாள்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் முதலியவற்றி

லிருந்து குழுவிற்கு எதிராகப் பல கருத்துகள் வெளியிடப்பட்டன. நீதி விசாரணை வேண்டும் என்போரும், நேர்மையற்ற தேர்வு என்று ஏங்குவோரும், முறையில்லாமல் இந்திய அணியினர் விளையாடினர், ஆகவே அவர்கள் தாயகம் திரும்பத் தகுதியற்றவர் என்று மற்றொரு பக்கம் சாடுவோரும், இப்படிப் பல கோணங்களில் எதிர்ப்புகள் வந்த வண்ணம் இருந்தன. அதே நேரத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து ஆட்டக்காரர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்றனர். அனுகுண்டு வெடிப்பால் இந்தியாவிற்கு ஏற்பட்ட புகழின் பிரகாசத்தை இந்தத் தோல்வியானது, மறைக்கும் மேகமாகிவிட்டது.

பொது மக்களுக்காக நடத்தப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நீதியோடும், நேர்மையோடும், கட்டுப்பாட்டுடனும் அமையும்படி மேற்கொள்ளப்படவேண்டும். பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் பார்த்தும் கேட்டும் மகிழும் நிகழ்ச்சிகளில் சிறிது ஒழுங்கீனமோ குற்றமோ, குறையோ நிகழ்ந்துவிட்டாலும் ரசிகர்கள், பார்வையாளர்கள் மனநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. பெரும் பாலோர் உணர்ச்சி வசப்படுகின்றனர். இதனால் அதே இடத்தில் குழப்பங்களும், கைகலப்புகளும் ஏற்பட்டுவிடுவதற்கும் வாய்ப்பு உண்டு. ஒலிம்பிக் (Olimpic) விளையாட்டுகளில் வன்முறைச் செயல்கள் நிகழ்வதைப் பார்க்கிறோம். கல்லூரிகளிலும் இந் நிலையே ஏற்படுகின்றது. ஆகவே விளையாட்டுகளை நடத்துவதில் தொடர்பு கொண்டுள்ள அதிகாரிகள் மிகவும் கவனத்துடனும், அக்கறையுடனும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குரிய எல்லா வழிகளையும் கடைப்பிடிக்கவேண்டும். அதிகாரிகள் மேன்மையோடும், நன்னடத்தையோடும் நடந்துகொள்ளவேண்டும். விளையாட்டு வீரர்களும் முறையாகச் செயல்படவேண்டும். அரசியல், உறவு, நண்பர்கள், மற்ற செல்வாக்கு ஆகியவற்றைப் பாராமல் விளையாடுபவர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் அக்கறைகாட்டவேண்டும். விளையாட்டுகள் ஒரே பள்ளியிலேயே விளையாடப்படுகின்றன. கல்லூரிகளுக்கிடையே, மாவட்டங்களுக்கிடையே, மாநிலங்களுக் கிடையே, இறுதியாக நாடுகளுக்கிடையே விளையாட்டுகள் ஆடப் படுகின்றன. அதன் வெற்றி தோல்விகள் எல்லா இடங்களிலும், சூழ்நிலைக்குத் தகுந்தபடி பாதிக்கப்படுகின்றன.

விளையாட்டுக்காக இடம்விட்டு இடம்மாறி ஆடுவதனாலும் குற்ற ஒழுக்கம் வெளிப்படுகிறது. நடைமுறைகள் மாறுகின்றன. மதக் கட்டுப்பாடுகளும், அறக் கட்டுப்பாடுகளும் உள்ள பகுதிகளி லிருந்து அவை இல்லாத பகுதிகளுக்கு விளையாடச் செல்லும் போது ஆட்டத்தார்களிடையே ஒழுக்கம் பாதிக்கப்படுகிறது.

குறிப்பாக, பரத்தைமை (Prostitution), மதுவிலக்கு ஆகிய இரண்டு கட்டுப்பாடுகளும், இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு மாறுபடுவதால் அங்கே செல்லும் வீரர்கள், ரசிகர்கள் ஆகியவர்களின் மனநிலை பாதிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் குற்றவொழுக்கத்தில் ஈடுபட ஏதுவாகிறது.

நாட்டில் கலகம், புரட்சி, குழப்பம், உள்நாட்டுப் போர் ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கத்தால், வறுமையில் வாடும் மக்களின் மனநிலையை மாற்றவும் சில பொதுநலக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் சொத்துக்களின் அளவைக் குறைத்து, பொதுமக்கள் சொத்தாக, நாட்டுடைமையாக மாற்றப்பட்டு வருகின்றன. ஐரோப்பாவில் தேசிய உடைமைக் கொள்கையும் (Nationl sm in Europe) ஜெர்மனியில் நாசிக் கட்சிக் கொள்கைகளும் (Nazi Regime in Germany), இத்தாலியில் பாசிசக் கொள்கைகளும் (Fasicism in Italy) ரஷ்யாவில் கம்யூனிசமும் (Sovietism in Russia) இந்தியாவில் சம உடைமைக் கொள்கையும் (Socialism) சீனாவில் பொது உடைமைக் கொள்கையும் (Communism in China) மற்ற சில நாடுகளில் சர்வாதிகாரக் கொள்கைகளும் செயலாக்கப்பட்டு வருகின்றன. மனித உழைப்பால் செயற்கை முறையில் மனித சமுதாயத்திற்காகப் பொதுவான முன்னேற்றங்களுக்குப் பாடுபட்டு வருகிறது சில முற்போக்குச் சக்திகள். குற்ற ஒழுக்கத்தையும் குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும். இந்தியாவில் இன்று பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. தொழில்களை நாட்டுடைமை ஆக்குதல், வங்கிகளை நாட்டுடைமை ஆக்குதல் ஆகியவையும் நில உச்சவரம்பு (Land Ceiling), நகரச் சொத்தின் உச்சவரம்பு (Urban Ceiling), அதிக வேலைவாய்ப்பு குடிசைமாற்று வாரியம் (Slum Clearance Board) மூலமாக ஏழைகளுக்கு இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்தல், உழுபவனுக்கே நிலங்களைச் சொந்தமாக்குதல், ஏழைகளுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கு அதிக வழி ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலமாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் செய்துகொண்டு வருகிறது. மேற்கண்ட செயல் திட்டங்களால் எவ்வளவோ போராட்டங்களும் புரட்சிகளும் தடைபட்டுவிட்டன.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் மக்கள் மனநிலைக்கும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைக்கும் ஏற்றவாறு அரசாங்கம் செயல்பட்டு வருவதால் குற்றவொழுக்கங்களைக் கட்டுப்படுத்துவது ஏதுவாகிறது. ஆனால் நாட்டில் வளர்ந்துவரும் பல பிரச்சினை

களுக்கு உடனடியாகத் தீர்வு காணுதல் வேண்டும். ரஷ்யாவில் நடந்த அக்டோபர் புரட்சி 1917, பிரெஞ்சுப் புரட்சி, சீனுவில் நடந்த பொருளாதாரப் புரட்சி, அமெரிக்காவில் ரூஸ்வெல்ட்டால் (Roosevelt) 1932 இல் திட்டமிடப்பட்ட சமூகப் பொருளாதாரச் சீரமைப்புத் திட்டம் (New Deal) ஆகிய புரட்சிகள் யாவும் தனியுரிமைக் கோட்பாட்டிற்கு (Individualistic Idealogy) எதிராக அமைந்தவை ஆகும்.

இன்று இந்தியாவில் நகர்ப்புறங்கள் தொழில் மயமாகக் காட்சி அளிக்கின்றன. ஆனுல் கிராமப்புறங்கள் இன்றும் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. வேளாண்மைத்துறை அதிக முன்னேற்றத்தை அடையவில்லை. விவசாயியின் வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை. மற்றவர்களின் முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் உள்ளம் வெடித்து விடும். அதனுல் பல போராட்டங்கள் நிகழ ஏதுவாகும். அதற்குள் சில மாற்றங்களையாவது மேற்கொள்வது அவசியம். அறிவியலின் துணைகொண்டு பல நல்ல ஆக்கத் தொழில்களையும், வாழ்க்கை முன்னேற்றம் அடைவதற்கு பல வழிமுறைகளையும் காணுவது அவசியமாகிறது. கூலி நிர்ணயம், வேலைநேர நிர்ணயம், அனைவருக்கும் சமமான வேலை வாய்ப்பு, உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் ஆகியவற்றை மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து மக்கள் மன வளத்தையும், வாழ்க்கை வளத்தையும் பெருக்க வேண்டும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தனிமனிதனுக இருந்தாலும் குடும்பமாக வாழ்ந்தாலும், இனமாக, ஜாதியாக இணைந்து வாழ்ந்தாலும் காலத்திற்கு ஏற்ப, தேவைக்கேற்ப கொள்கைகளையும் செயல்முறைகளையும் மாற்றிக்கொள்வதுடன், ஏற்றத் தாழ்வின்றி, ஆண், பெண் வேறுபாடின்றி, ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி வளர்ந்து வரும் சமுதாயத்தில் அனைவரும் சமம் என்ற நோக்கத்தோடு ஒழுகினுல்தான் சமுதாயத்தில் கட்டுப்பாடும் அமைதியும் ஒழுக்கமும், நேர்மையும், வாழ்வும் வளமாக தழைத்து ஓங்கும். இல்லையென்ருல் கட்டுப்பாடு தளர்ந்து, அமைதி குலைந்து, குற்றவொழுக்கம் பரவி, போராட்டம், புரட்சி ஆகியவற்றின் வடிவத்தில் குற்றச் செயல்கள் பிறக்கும்.

தொழிலாளி, முதலாளி என்ற வேறுபாடு வேரோடு அறுபட வேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கையோடும், இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம், அன்பே கடவுள், தேசத்தொண்டே மக்கள் தொண்டு என்று ஒவ்வொரு தனி மனிதனும் அரசாங்கமும் பாடுபடவேண்டும். இவ்வாறு காலம், இடம், சூழ்நிலை அறிந்து செயல்பட்டால் சமுதாயத்தில் குற்றங்கள நிகழ வாய்ப்பில்லை. மக்களுக்காக மக்களின் நன்மைக்காக, மக்களால் அமைக்கப்பட்டதுதான் சமுதாயம். அந்தச் சமுதாயத்தில் நல்லொழுக்கமும், நன்னெறிகளும் தாண்டவமாட அனைவரும் பாடுபடவேண்டும். சமுதாயத்தில் குற்றவொழுக்கம் பரவுகிறது என்றால் பல்வேறு காரணக் கூறுகள் பொறுப்பாக இருந்தாலும் அவை சமுதாயத்தில் உள்ள முறையைத்தான் முதலில் குறிக்கும். சமுதாயத்தில் கடுமையான, ஒரு சார்பான சட்டங்களைச் செயல்படுத்தும்போது அதை எதிர்ப்பவர்கள் குற்ற ஒழுக்கத்தை உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். இதனால் மேலும் குற்றவொழுக்கம் பரவுகிறது. ஆகவே கடுமையான, தேவையற்ற சட்டங்களை நீக்குதல் வேண்டும். சமுதாயத்தில் ஒரு பகுதியினரோ, ஒரு இனத்தவரோ மட்டும் முன்னேறிவிட்டால் நாடு முன்னேற்றம் அடைந்துவிட்டதாகக் கருதமுடியாது. அப்படி இருந்தால் குற்றச் செயல்கள் பெருகிவிடும். அதனால் நகரத்தில் அதிக தொழிற்சாலைகளை ஒரே இடத்தில் அமைத்து மக்கள் தொகை குவிந்திடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லா பாகங்களிலும் பரவலாக மக்கள் குடியேற வழிவகை செய்ய வேண்டும். மக்கள் நெருக்கடியைக் குறைத்தாலே குற்ற ஒழுக்கம் குறைந்துவிடும். நெருக்கடியான பகுதிகளில் குற்ற விகிதங்கள் அதிகமாகவும் இருப்பதோடு சுகாதாரக்கேடு, நோய் பரவுதல், ஆகியவையும் ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றன.

சமுதாயத்தில் எதிர்ச் செயல்கள் பரவாமலும், வலுக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். விலைவாசி உயர்வு, பஞ்சம், பட்டினி, பற்றுக்குறை, வருமானமின்மை, தொழில்மாற்றம், வாழ்க்கையில் ஏமாற்றம், போட்டி, பொறுமை, பகைமை ஆகிய செயல்களினால் எதிர்ப்புச் செயல்கள் நிகழ்கின்றன. மேலும் சமுதாயத்தில் பொருளீட்டும் வழிமுறைகள் மாறுபடுகின்றன. சிலர் எளிமையாகப் பணத்தைச் சம்பாதிக்கின்றனர். சிலர் கடுமையாக உழைத்துப் பொருளீட்டுகின்றனர். சிலர் மன்பதைக்காக தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைச் செலவு செய்கின்றார்கள். சிலர் அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கின்றனர். சிலர் சமுதாயத்தின் நலனைப் பெரியதாகக் கருதிச் செயல்படுகின்றனர். சிலர் சமுதாயத்தையழித்தாவது சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ள எத்தனிக்கிறார்கள். சிலர் கடமையுணர்வோடு செயல்படுகிறார்கள்.

சிலர் மடமையோடு செயல்படுகின்றனர். மேற்கூறியவை தான் சமுதாயத்தின் செயலெதிர்ச் செயல்கள் ஆகும். அரசாங்கம் நடுநிலையான சட்டங்களைச் செயல்படுத்தாவிட்டால் குற்ற வொழுக்கங்களும், குற்றச் செயல்களும் அதிகரித்து குற்ற விகிதம் அதிகரிக்க வாய்ப்புண்டாகிறது. இதனால் பயனற்ற ஆட்சியை மாற்ற, எதிர்க்கட்சிகள் முயற்சியை மேற்கொள்கின்றன. மேலும் தவறான பொருளாதாரக் கொள்கையால் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்ந்து செயல்பட்டுவரும். அதாவது மோசடிக் குற்றங்கள், உணவுக் கலப்படம், பதுக்கல், வருமானவரி செலுத் தாமல் ஏமாற்றுதல் ஆகிய குற்றங்கள் அதிகரித்துவிடும்.

பிற மொழிகளைத் திணிப்பதனாலும் சமுதாயத்தில் கட்டுப் பாடும் அமைதியும் சீர்குலைந்து விடுகின்றன. தாய்மொழியைக் காக்க, தியாகம், கலகம், புரட்சி, போராட்டம் ஆகியவை அமைய, மொழிதிணித்தல் காரணமாகிறது. அடக்குமுறைகளும், அடிமை முறைகளும் சமுதாயத்திலிருந்து அப்படியே அடியோடு நீக்கப்படவேண்டும். மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ்வதற்கும், அறிவியலின் (Science) நற்பயனை அனை வரும் நுகரும்படியும் வழிவகை செய்தல்வேண்டும். இவற்றால் குற்றவொழுக்கங்களையும் குற்றங்களையும் குறைக்கலாம்.

'எரிகின்ற வீட்டில் பிடுங்கின மட்டும் லாபம்' என்ற முது மொழிக்கிணங்க, திறமையற்ற, வலுவற்ற நிலையில் (Least Government) உள்ள அரசாங்கத்தையே வணிகர்கள், மற்றும் ஆலை முதலாளிகள், கையூட்டு வாங்கும் அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள், கள்ளக் கடத்தல் பேர்வழிகள், கள்ளநோட்டு அச்சிடுவோர், வங்கிக் கொள்ளைக்காரர்கள் ஆகியோர் பெரிதும் விரும்புவார்கள். இந்த ஆட்சியே நீடிக்கவேண்டும் என விரும்பி அது நிலைக்கப் பெரிதும் பாடுபடுவார்கள். கடுமையான நடவடிக் கைகளையும் நேர்மையான சட்டங்களையும் செயல்படுத்தாததே இதற்குக் காரணம் ஆகும். மேற்கூறப்பட்டவர்கள் தங்கள் திறமைக்கு ஏற்ப பொருளீட்ட வாய்ப்பு இருக்கிறது அல்லவா? ஆகவே திறமையற்ற ஆட்சி நீடிக்குமேயானால் குற்றவொழுக்கங் களும், குற்றச் செயல்களும் தலைவிரித்து ஆடும். அந்நாட்டில் ஏனைய நாடுகளைவிட அதிகமான குற்ற விகிதங்கள் காணப்படும். மேலும் திறமையற்ற ஆட்சி நடக்கும் நாட்டில் என்றாவது ஒருநாள் பெரிய போராட்டம் அல்லது புரட்சி வெடிக்கும் வாய்ப்பு உண்டு. அன்று நாடே குற்ற ஒழுக்கத்திலும் குற்றச் செயலிலும் மூழ்கி விடும்.

அந்நியர் ஆதிக்கம் இந்தியாவில் கொடிகட்டிப் பறந்த காலத்தில் ஒரு சில இனத்தவர்களே முன்னேற்றமடைந்திருந்தார்கள். பெரும்பாலான இனத்தவர் நசுக்கப்பட்டு விட்டார்கள். நாட்டில் சாதி வெறி தலைவிரித்தாடியது. பஞ்சம், பட்டினி கோர தாண்டவம் ஆடியது. காந்தி, நேரு, பெரியார் போன்ற பெரியோர்கள் உழைப்பினாலும், போராட்டத்தினாலும் இன்று ஓரளவிற்குச் சாதி வேற்றுமைகள் குறைந்து காணப்படுகின்றன. குறிப்பாக, தமிழகத்தில், அரசாங்கமும் சாதியை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டு வருகின்றது. கலப்புத் திருமணத்தை சட்டப்படி அங்கீகரித்ததுடன் தங்கப் பதக்கம் வழங்குவதன்மூலம் மேலும் ஊக்குவித்திருக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட, தமிழகம் இன்று சிறந்து விளங்குகிறது. மற்ற மாநிலங்களில், கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளைக்கூட பெருமல்தான் இருக்கிருர்கள். கல்வியோ, மருத்துவமோ, சாலை வசதிகளோ, மின்சார வசதிகளோ ஆகிய எல்லாவற்றிலும் தமிழக அரசு தலை சிறந்து விளங்குகிறது. மற்ற மாநிலங்களில் 25 சதவீதங்கூட வளர்ச்சி அடையவில்லை. ஒரிசா, உத்தரப்பிரதேசம், ஆந்திரா, மத்தியப் பிரதேசம், மைசூர், பீகார் போன்ற இராச்சியங்களிலுள்ள கிராமப் புறங்களில் இன்னும் இதிகாச காலங்களில் வாழ்ந்த வாழ்க்கையே வாழ்ந்துவருகிருர்கள் என்பதற்கு ஆங்காங்கே நிகழும் சாதிவெறிச் சண்டையும், கூட்டுக் கொள்ளையுமே சான்றுகளாகும்.

உலக அரங்கில் நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தாலும், தொழிற் புரட்சி நடந்தாலும், குடியேற்றங்களும், வந்தேறிகளும் அதிகமாகக் காணப்பட்டாலும், குற்றத் தன்மையோ குற்ற வொழுக்கமோ, குற்றச் செயல்களோ ஒரே மாதிரியாக இருக்கவில்லை. மேற்சொன்ன மாற்றங்களும் ஒரே சீராக அமைந்திருக்கவில்லை. பொதுவாக, சமுதாயம் குற்றத்திற்கு ஆயத்தம் செய்கிறது. அதைக் குற்றவாளி செயல்படுத்துகிருன். (Society Prepares for Crime and the Criminal Excecutes it) என்று க்யூட்லெட் (Quetelet) என்பவர் குற்றத்திற்கான விளக்கத்தை அளிக்கிருர். ஆகவே, சமுதாயத்தின் ஓரவஞ்சனைதான் குற்றவொழுக்கம், குற்றச் செயல்கள் பரவுவதற்குக் காரணமாகின்றன.

ஆகவே, குற்றங்களும், சமுதாய வழிமுறைகளும் (Crimes and Social Processes) ஆராய்ந்ததன்மூலம் சமுதாயத்தின் நடைமுறைச் செயல்களினுல் குற்றங்கள் எவ்வாறு பரவுகின்றன என்பதை விரிவாகக் கண்டோம். தனிப்பட்ட நபர்கள்தான்

குற்றங்களைச் செய்வதாக இருந்தாலும் அதற்குச் சமுதாயம்தான் பொறுப்பாகின்றது. மேலும், சமுதாயத்திற்கு விரோதமானவை. ஆகவே, குற்றங்களைக் கட்டுப்படுத்துவது சமுதாயத்தின் தலையாய கடமை ஆகும்.

பரத்தைமை (Prostitution)

'பரத்தைமை' என்பது பணத்திற்காகப் பெண்டிர் ஆடவருக்கு உடல் உறவு இன்பம் அளிப்பதாகும். பணம் மட்டும் அளிக்க வேண்டும் என்பதல்ல. மற்ற பொருள்களும் அளிக்கலாம். பணமோ அல்லது பொருளோ ஏதுமின்றிப் பெண்டிர் ஆடவருக்கு உடல் உறவுக்கு வாய்ப்பளித்தால் அது பரத்தைமை ஆகாது. உலகெங்கும் பரத்தைமை பரந்து கிடக்கிறது. பரத்தைமை பல காரணக் கூறுகளால் நிகழ்கின்றன. (1) வறுமையினால் பரத்தையாக மாறும் கொடுமை; (2) பரத்தைமையைத் தொழிலாகக் கொண்ட பிரிவு, இவர்கள் தேவதாசிகள், தேவமாதுகள் என்று பண்டைக் காலங்களில் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். நல்ல அழகும் உடல் வனப்பும் கொண்டவர்கள். இவர்கள் பரம்பரையாகப் பரத்தைமைத் தொழிலைச் செய்து வருபவர்கள். இவர்கள் கோவில் திருவிழாக் காலங்களில் நடனமாடும் மங்கைகள். 'மாதவி' பரத்தையர் வகுப்பைச் சார்ந்தவள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது இவர்கள் தங்கள் வாழ்வைப் பொது நலத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இவர்கள் தெய்வச் சன்னதியின் முன்னால் நடனமாடியும், வணிகர்களையும், பிற பிரமுகர்களையும் அழைத்து உடல் உறவு அளித்தும் மகிழ்விப்பார்கள். உளஇயலின்படி, சில பெண்கள் உடல் கோளாறுகளினால் பரத்தையாக மாறுவதாக வல்லுநர்கள் கூறுகின்றார்கள். பரத்தைமை அறத்திற்கு மாறுபட்ட செயலாகக் கருதப்படுகிறது. சட்டத்திற்கு முரண்பட்ட செயலாகவும் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படுகிறது.

சாதாரணமாக நல்லொழுக்கமுடைய பெண்கள் எவ்வளவுதான் வறுமையால் வாடினாலும் இழிந்த பரத்தைமைத் தொழிலில் ஈடுபடமாட்டார்கள். சில பெண்டிர்கள் வறுமையைப் போக்க இத் தொழிலில் ஈடுபடுகின்றனர். கணவனை இழந்த பெண்களும் திருமணமாகாத பெண்களும், திருமணம் செய்துகொள்ள முடியாத, சூழ்நிலையிலுள்ள பெண்களும், தங்கள் உடற்பசிக்கும், உளப் பசிக்கும் தீனிபோட, பரத்தைமைத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். சில காதலில் தோல்வியுற்ற பெண்களும், அதிக மதுப்பழக்கத்தினால் ஆட்கொள்ளப்பட்ட பெண்களும், திருமணத்திற்கு முன்னால்

கள்ள உறவினுல் கருத்தரித்த பெண்களும், சிதறி குடும்பத்தில் வாழ வழியில்லாத பெண்களும் நாடுவது பரத்தைமையே ஆகும். இத் தொழிலில் ஈடுபடுவதற்கு முக்கிய காரணம் இது மூலதனம் அற்ற தொழிலாகும். அதோடு உடனடியாகக் கையில் பணம் கிடைக்கும் தொழிலாகவும் விளங்குகிறது. பெரும்பாலும் மது, மங்கை, புகைத்தல் ஆகியவற்றிற்குச் சாதி, மதம், இனம், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன், கறுப்பு, சிவப்பு என்ற வேற்றுமைகள் பாராட்டப்படுவதில்லை. நேர்முகமாக எதிர்த்தாலும் மறைமுகமாக ஆதரிப்பது சமுதாயத்தின் ஒழுக்க மாக மாறிவிட்டது.

சில பெண்கள் மனவலிமையற்ற காரணத்திஞலும், நரம்புக் கோளாறு (Neurotic defects) காரணத்திஞலும் இயற்கைக்கு மீறிய உணர்ச்சியுடைய காரணத்திஞல் செல்வத்தோடு வாழ்ந் தாலும் கணவனுடன் வாழ்ந்தாலும் பரத்தைமைத் தொழிலில் ஈடு படுகிருர்கள். மேலும் சோம்பேறி வாழ்க்கையில் சுகம் காண விரும்பும் பெண்களும் பரத்தைமையை விரும்புவார்கள். பொதுவாகப் பரத்தைமையில் ஈடுபடுபவர்கள் தங்கள் இயற்கை அழகுடன் செயற்கை அழகையும் அதிகப்படுத்திக்கொள்வார்கள். அவர்கள் அணியும் ஆடைகள் மிகவும் கவர்ச்சியாக இருக்கும். பார்வை, பேச்சு, செயல் முதலியன மயக்கக் கூடியதாக இருக்கும்.

முப்பது வயதிற்குள் பரத்தைமையில் ஈடுபட்டவர்கள் 80 சதம் இருப்பதாக ஆராயப்பட்டுள்ளது. இது இடத்திற்கு இடம் மாறுபடலாம். குளிர் தேசமாகிய மேற்கத்திய நாடுகளில் மட்டும் அதிகம் இருக்கிருர்கள் என்பதில்லை. இந்தியா போன்ற உஷ்ண நாடுகளிலும் அதிகமாக பரத்தைமை காணப்படுகிறது. பரத் தைமை பெரும்பாலும் போர்க்காலங்களில் அளவுக்கு மீறி பரவு கிறது. சமீபத்தில் வங்க தேசத்தில் நடந்த சுதந்திரப் போரின் போது பல லட்சம் பெண்கள் பரத்தைமையில் ஈடுபடுத்தப்பட் டார்கள் அல்லது ஈடுபட்டார்கள் என்ற செய்தி அறிந்ததாகும். அதே நிலை வியட்நாம் நாட்டிலும் மலிவாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம், கணவன் போரில் இறந்துவிடுவது, அல்லது போரிஞல் குடும்பம் சிதறிவிடுவது. வறுமையைப் போக்கவும், உடல் சுகத்தைப் பெறவும் இவர்கள் பரத்தைமையில் ஈடுபடு கிருர்கள்.

பரத்தைமையால் அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம்? அதை ஏன் தடை செய்யவேண்டும் என்று விஞவிஞல், பரத்தையர் களிடம் செல்பவர்கள் பொருளாதாரக் குற்றங்கள் செய்வதற்கு

இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் மறைமுகமாக ஊக்குவிக்கப்படுகிறார்கள். இளைஞர்கள் பணத்தையும், உள்ளத்தையும் பறிகொடுத்துவிட்டு வாழ்க்கையில் ஏமாற்றத்திற்கு ஆளாகிறார்கள். இறுதியில் அவர்கள் குற்றவொழுக்கத்தில் ஈடுபட இது துணைசெய்கிறது. குடும்பத்தலைவன் பரத்தையின் இல்லத்திற்குச் சென்றால் அக்குடும்பமே சீரழிந்துவிடுகிறது. பால் உறவினால் உணர்ச்சி வயப்படுகின்றவர்களின் உணர்ச்சி பல குற்றச் செயல்களுக்குக் காரணமாகிறது.

இன்றைய நிலையில் பரத்தைமையானது சமுதாயத்தில் சாதி வேறுபாடின்றி சமுதாயத் தகுதியின்றி எங்கும் பரவியுள்ளது. குடிசையிலும் நிகழ்கிறது. மாடி வீட்டிலும் நடைபெறுகிறது. இடம், பணம், வசதி, இவைதான் வேறுபாடு. பரத்தைமை இன்றைய சமுதாயத்தில் பரவலாக மலிந்துவிட்டது. பரத்தைமை செயல்படக்கூடாது எனச் சட்டம் தடை விதித்திருக்கிறது. இந்தியாவில் பம்பாயிலுள்ள சிவப்பு விளக்குப் பகுதி (Red Light Area) தவிர மற்ற இடங்களில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சாதாரண கூலியாளிலிருந்து கல்லூரி மாணவன் வரை எல்லோரும் பரத்தையரிடம் செல்ல ஆர்வம் கொண்டுள்ளார்கள். நகரத்திலுள்ள சில கல்லூரி மாணவர்களுக்குப் பரத்தையர் வாழுமிடங்கள் நன்கு தெரிந்துள்ளன என்று ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. பால் உணர்வூட்டும் திரைப்படங்களால் கல்லூரி மாணவர்கள் பரத்தையரிடம் செல்லத் தூண்டப்படுகிறார்கள். அதேபோன்று கல்லூரி மாணவிகளும் 'மாணவரிடையே' பரத்தையாகத் தோன்றுகிறார்கள். மாணவிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. இன்பமாக வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். இன்று யார் பரத்தையாக இருப்பார்கள் என்று தெரியாத அளவிற்கு நிலைமை அடியோடு மாறிவிட்டது. எந்த நிலையிலும் எங்கும் நிறைந்து இருக்கிறார்கள் என்று ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. பண்டைக்காலங்களில் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டு வந்ததைப் போல இன்றும் இத்தொழிலை அங்கீகரித்துவிடலாம். காரணம் சமுதாயத்திலுள்ள பெரும்பாலோர் இதை ஆதரிப்பது தான். மேலும் பல அறிஞர்கள் கூட பரத்தைமை, சமுதாயத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று வாதாடுவதுடன், ஏழை மக்கள் தான் பரத்தைமைச் சட்டத்தால் பாதிக்கப்படுகின்றார்கள். மேலிடத்துச் செல்வாக்கைப் பெற்றவர்கள் பரத்தைமைத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்படுவதில்லையென்றும் கூறுகின்றனர். சில பெண்கள் பிறப்பால் பரத்தையாக மாறக்கூடிய குணங்களை உடையவர்கள் என காம சூத்திரம் உரைக்கிறது. பெண்களின் உடல் அமைப்புகளின் தன்மையைக் கொண்டு அவள் பரத்

தையா இல்லையா என்பதைக் கூறிவிடலாம் என்று கூறுகிறது அந்நூல். ஆனால் அதை உண்மையா என்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும். சமுதாயச் சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை, ஏமாற்றம், மாற்றம், கைம்மைநிலை, உளநிலை இவைதான் பரத்தையாக மாற முக்கிய காரணக் கூறுகளாகும். குற்றங்கள் புரிவதற்கு என்னென்ன காரணக் கூறுகள் என்று ஆராய்ந்தோமோ அதே காரணக் கூறுகளினாலும் பரத்தமைக் குற்றம் நிகழ்கிறது.

பிரான்ஸ் நாட்டில் லூயி XI பரத்தைமையை அடியோடு வேரறுக்க முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் தடை செய்யப் பட்ட ஓராண்டுக்குள் அதிக அளவில் பரவிவிட்டது. எங்கும் பரவிவிடவே கோமகன் மறுஆய்வு செய்து, பரத்தையர் களுக்கும் அதை விரும்புகிறவர்களுக்கும் அனுமதி வழங்கினார். மற்ற குற்றங்களைப் போல இக் குற்றம் நேரடியான விளைவை உண்டுபண்ணக் கூடியது அல்ல. அதே நேரத்தில் இதை வெளிப் படையாகவும் அறிய முடியாது. இதைச் சமுதாயத்திலிருந்து அகற்ற வேண்டும் என்றால் காவல் துறையால் மட்டும் முடியாது. சமுதாயம் மனம் வைத்தால்தான் முடியும். சமுதாயம் என்றும் எப்பொழுதும் ஒரே தன்மையாகக் காணப்பட்டதாக வரலாறு களிலோ ஏன் கதைகளிலே கூட இல்லை. ஆகவே பரத்தை மையைச் சட்டத்தாலோ, சமுதாயக் கட்டுப்பாட்டினாலோ தடை செய்துவிட முடியாது என்பது உறுதி. நாகரிக வளர்ச்சியில் பால் உடலுறவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவிட்டது. இளைஞர்களிடமிருந்து உள உணர்ச்சிப் பீறிட்டு வருவதைத் தடை செய்ய முடியாது. இதனால் பல விபரீதங்கள் ஏற்பட ஏது வாகும். "கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால், மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்" என்கிறார் பாரதிதாசன். காதலி என்பது பரத்தையர் அல்ல என்பது உண்மைதான். இளைஞர்களின் உள்ளத்தின் முறுறல்களை வெளிப்படுத்தி, அதுவும் பால் உறவைத் தூண்டக்கூடிய சூழ்நிலை வந்துவிட்டால் இளைஞர்களை எந்தத் தடையும், கட்டுப்பாடும், சட்டங்களும் கட்டுப்படுத்த முடியாது என்பது உண்மையாகும். பிரான்சு நாட்டில் பரத்தையருக்குத் தண்டனையாகச் சாட்டை யடியும் (Flogging), மரச்சட்டத்தில் குற்றவாளிகளைப் பிணைத்துத் தண்டிக்கும் தண்டனைகளும் (Pillory) மரண தண்டனைகளும் (Capital Punishment) வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இத்தகைய கடுமையான தண்டனைகளாலும் பரத்தையரைக் கட்டுப்படுத் தவோ, பரத்தைமையைத் தடை செய்யவோ முடியவில்லை. அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. இறுதியில் பிரான்சு நாடு

கட்டுப்பாட்டைத் தளர்த்திக் குறிப்பிட்ட சில வழிகளில் மட்டும் பரத்தைமைத் தொழில் நடத்திக் கொள்ள அனுமதி வழங்கியது.

கூட்டங்கள், மக்கம் பெருக்கம் மக்கள் நெருக்கம், மாநாடு, திருவிழா, தேர்தல்கள் ஆகிய சமயங்கள் பரத்தையருக்கு அதிக வருவாய் வரும் காலங்களும், இடங்களும் ஆகும். மற்றும் பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடக்கும் காலங்களில் பரத்தைமை தவருமல் செயல்படுகிறது. கிராமங்களைவிட நகரங்களில் அதிகமாக இத் தொழில் காணப்படுவதுடன் தவிர்க்க முடியாததாகியும் வருகிறது இன்பச் சுற்றுலா (Tourists) வருபவர்கள் உணவு விடுதிகளில் தங்கும்போது (Hotels) எல்லா வசதிகளையும் அவர்கள் எளிமையாகப் பெறமுடிகிறது உணவு விடுதிகளின் பெருக்கம் பரத்தைமை பெருக்கத்திற்கு ஏதுவாகிறது. பெரிய பெரிய உணவு விடுதிகள் அரசாங்கத்தையும் காவல் துறையினரையும் சரிகட்டி மறைமுகமாக இத்தொழிலைச் சிறப்பாகச் செய்து வருகிகின்றன. ஆடைகளையும் நடனம் (Cabret Dance) எல்லாப் பெரிய பெரிய உணவு விடுதிகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அதைக் கண்ணுறும் இளைஞர்களும் முதியவர்களும் பரத்தையர்களைத்தான் முதலில் விழைவார்கள். மேலும் மனைவியின் பழக்க முறைகளுக்கும், பரத்தையரின் பழக்க முறைகளுக்கும் அதித வேறுபாடு உண்டு. ஆகவே அழகான மனைவியைக் கொண்டவர்கள்கூட பரத்தையர்பால் ஆர்வம் காட்டுகின்ருர்கள். பரத்தையர்களிடம் ஏதோ ஒரு தனிமையான அதே நேரத்தில் இனிமையான சுகம் இருப்பதாகச் சாதாரண மக்களிலிருந்து அறிஞர்கள் வரை கருதுகின்ருர்கள். பெண்களும் கணவன் இருந்தாலும் வேறு ஒரு ஆடவனிடம் பழகுவதை பெருமையாகவும் இன்பமாகவும் கருதுகின்ருர்கள். வறுமையோ, ஏழ்மையான நிலையிலோ இல்லாத ஆண் பெண்கள் இத்தகைய மனமாற்றத்தால் பரத்தையர்களைப் பெரிதும் விரும்புகின்ருர்கள். பரத்தைமை பரவுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணக் கூருகும். ஆகவே பரத்தைமையைக் கட்டுப்படுத்துதல் என்பது வெறும் வார்த்தைதான். உண்மையில் இது நடவாத செயல். வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் எப்படி வளரும். அதே போன்று கட்டுப்படுத்த வேண்டிய சமுதாயமும் அதற்கு மறைமுகமாக ஊக்கமும், ஆதரவும் கொடுக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் ஹிப்பிகள் (Hippies) என்ற ஒரு அநாகரிகக் கூட்டம் உலகெங்கும் சுற்றி வருகிருர்கள். இவர்கள் சமுதாயக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும், ஆண்கள் உறவுகளை அம்பலப்படுத்த வேண்டும். 'மனிதப் பிறவியில் கட்டுப்

பாடும், காவலும் எதற்கு' என்ற கோட்பாடுகளைக் கொண்டவர்கள். இதனால் இவர்கள் செல்லும் நாடுகளிளெல்லாம் பால் உணர்வைத் தூண்டக்கூடிய செயல்களைச் செய்தும் போதை தரும் பொருள்களை விற்றும் வருகின்றனர்கள். அவர்களுக்குப் பணம் தேவைப்படும்போது உடலை விற்று எளிமையாகப் பணம் தேடிக் கொள்ளுகின்றனர்கள். ஹிப்பிகளைத் தற்போது மாணவர்களும், மற்றவர்களும் பின் தொடர்கின்றனர். இவர்கள் மூலமாக பரத்தைமை உலகெங்கும் அதிக அளவில் பரவி வருகின்றது.

மேலும் நாகரிக வளர்ச்சியால் மனிதன் பல உரிமைகளைப் படிப்படியாகப் பெற்றுவருகின்றான், அதன் வளர்ச்சிதான் பரத்தைமையாகும். அதாவது இன்ப வாழ்க்கையில் சட்டுப்பாடு ஏன்? மனம் விருப்பியபடிச் செயல்பட உரிமை வேண்டும் என்ற எண்ணம் இளைஞர்களிடையே அதிக அளவில் பரவி விட்டது. மேலும் நம் நாட்டில், திருமணம், பெற்றோர்களின் கட்டுப்பாட்டினால் நடைபெறுகிறது. இத்தகைய திருமணங்களில் ஏமாற்றம் அடைந்த ஆண்களும், பெண்களும் பரத்தையர்களையும், ஆண்களையும் நாடிச் செல்கிறார்கள். இதனால் பெற்றோர்கள் கட்டுப்பாடு திருமணம்தான், பரத்தமைக்குக் காரணம் என்று கூறுவது சரியன்று. மக்கள் மனமாற்றம்தான் இதற்குக் காரணம். கானல் நீரைக் கண்டு ஏங்குவது மனிதனின் குணமாகும். மனிதன் கீழ் நாட்டில் வாழ்ந்தால் என்ன, மேல் நாட்டில் வாழ்ந்தால் என்ன? மன நிலைதான் காரணம். ஆகவே இத்தகைய பரத்தைமையைக் கட்டுப்படுத்த ஒரே வழி மனம்தான். காந்தியடிகள் காட்டிய மன உறுதி ஒன்றுதான் பரத்தைமையைக் கட்டுப்படுத்தும். இதைத் தவிர சட்டமோ, கடும் தண்டனைகளோ இதைக் கட்டுப்படுத்த முடியாது. இச் செயல் உள்ளத்தின் உணர்ச்சியால் வெளிப்படக் கூடிய செயலாம். ஆகவே மனதைக் கட்டுப்படுத்தி உணர்ச்சியை அடக்கிச் செயல்பட்டால் சட்டமும் தேவையில்லை. குற்றமும் இல்லை.

5. சுற்றுப்புறமும் உடற்கூறு அமைப்புகளும் குற்றமும்

(Environment and Physiological Factors and Crime)

சமுதாயத்தில் நிகழ்கின்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, செயல் (Social Phenomenon) ஆகிய இவைதான் குற்றம் என வரையறை வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கு எதிரான செயல் குற்றம் எனக் கருதப்படுகிறது. சமுதாயம் இல்லையென்றால், குற்றமும் இல்லை என்று இதனால் பொருளாகிறது. தனிமனிதன் வாழும் உலகில் குற்றம் இல்லை. ஏனெனில், அவன் யாருக்கு எதிராகக் குற்றம் விளைவிக்க முடியும்? தீங்கு விளைவிக்கமுடியும்? சமுதாயம் என்று ஒன்று உருப்பெறும்போது குற்றங்களும் உற்பத்தியாகின்றன, வளர்கின்றன. இந்த அடிப்படையைக் கொண்டு தான் சமுதாயத்திற்கு எதிராகச் செய்யப்படுகின்ற செயல்கள் குற்றங்கள் எனக் கருதப்பட்டன. சமுதாயம்தான் குற்றத்திற் கெதிரான காரணக் கூறு என்று முந்திய அத்தியாயங்களில் ஆராயப்பட்டது. சமுதாயக் கூறுகள் மட்டும் குற்றங்களுக்குக் காரணக் கூறுகளாக விளங்கவில்லை. இதர காரணக் கூறுகளும் உண்டு என்று பல நூற்றாண்டுகளாக மக்கள் கருதி வந்தார்கள். அந்தக் கருத்தை ஆய்வு செய்து பல கட்டுரைகள் மூலமாகவும், செய்தித் தாள்கள் மூலமாகவும் வெளியிட்டுப் பரப்பி வந்துள்ளார்கள். அதாவது இயற்பியல் சூழ்நிலைகளையும் (Physical Conditions), பூமியின் அமைப்புகளையும், குற்ற எண்ணிக்கை வீதத்தையும் (Crime Rate) ஒப்பிட்டு ஆராய்ந்து குற்றத் தன்மைகளையும், குற்றவொழுக்கங்களையும், உயிரியல் (Biological) சார்ந்த பண்புக் கூறுகளுடன் ஒப்பிட்டுக் குற்றவாளிகளை ஆய்வு நடத்தி உள்ளார்கள். அந்தச் செய்திக் குறிப்புகளில் கைது செய்தல், தண்டனை வழங்கல் அல்லது சிறைப்படுத்துதல் (Incarceration) ஆகிய விகிதங்கள் ஆராயப்பட்டுள்ளன. அந்தப்

பட்டியலில் செல்வாக்காளர்களின் குற்ற விகிதங்கள் (White Collar Crime) காணப்படாது.

இயற்கை அமைப்பின் சூழ்நிலைகள் (Physical Environments)

இயற்பியல் அல்லது இயற்கை அமைப்புகளைக்கொண்டு குற்றவாளிகளைப் பற்றியும், குற்றவொழுக்கங்களைப் பற்றியும் குற்றச் செயல்கள் பற்றியும் குற்ற ஆய்வியல் மேதைகள் பல தலைமுறையாக ஆய்வுகள் நடத்தி வந்திருக்கின்றனர்கள். மேற்சொன்னவற்றை மெய்ப்பிக்க, ஆதாரத்துடன் விளக்குவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சொத்திற்கு எதிரான குற்றங்கள் (Crimes Against Property) குளிர்ப் பருவத்தில் அடிக்கடி நிகழ்வதாயும் நபருக்கு எதிரான குற்றங்கள் (Crimes Against Persons) கோடைப் பருவத்தில் அடிக்கடியும், அதிகமாகவும் நிகழ்வதாயும் அவர்களின் அறிக்கைகள் கூறுகின்றன. இதே போன்று நில நடுக்கோடுகளின் (Equator) தூரத்திற்குத் தகுந்தாற் போன்று சொத்திற்கு எதிரான குற்றங்கள் அதிகரித்தும், நபருக்கு எதிரான குற்றங்கள் குறைந்தும் காணப்படுகின்றன என்று ஜெராடு ஜெஃபாக் (Gerhard Je Falk) என்பவர் ஆராய்ந்துள்ளார். காற்றழுத்தமானியின் அழுத்தம் (Barometric Pressures) மாறுபடுவதனாலும், காற்றின் திசைமாறுபடுவதனாலும் குற்ற எண்ணிக்கையின் விகிதங்கள் (Crime Rates) வேறுபடுகின்றன என்று சி. ஏ. மில்ஸ் (C. A. Mills) என்பவர் ஆராய்ந்துள்ளார். காடுகள், மலைகள் நிறைந்த மலைப்பாங்கான பகுதிகளில் (Mountainous Areas) குற்றங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. சமவெளிப் பகுதிகளில் (Plain Areas) குற்றங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. இதே போன்று கடற்கரைப் பகுதிகளிலும் (Coast) குற்றங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. உள்நாட்டுப் பகுதிகளில் (Interior) அடிக்கடி நிகழ்வது இல்லை என்று பல ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட காரணக் கூறுகள் முழுவதும் உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. குற்ற விகிதங்கள் அதிகரித்து இருந்தாலும். பகுதிக்குப் பகுதி சட்டங்களும் அதைச் செயற்படுத்தும் முறைகளும் மாறுபடும் அல்லவா? அதற்கேற்ப குற்ற விகிதங்கள் மாறுபடக் கூடும். குளிர்ப் பருவத்தில் குழந்தைக் கொலைகாரர்கள் (Infant Babies Murderers) அதிக அளவில் இருப்பதாக ஆய்வுரை அறிவிக்கிறது. பொதுவாக, நபருக்கு எதிரான குற்றங்கள் கோடைப் பருவத்தில் நிகழ்கின்றன என்று ஆய்வுகள் அறிவிக்கின்றன. இதற்குக் காரணம் கோடைப் பருவத்தில் ஒருவருக்கொருவர் அடிக்கடி பழக வாய்ப்பு ஏற்படுவதுதான்.

இயற்கையின் அமைப்பு, சூழ்நிலைகள் ஆகியவை, மனிதன் வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாகின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்கும், முன்னேற்றம் அடைவதற்கும் அவை வசதியாக அமைகின்றன அல்லது முட்டுக்கட்டையாக, தடையாக அமைந்துவிடுகின்றன. இதனால் வாழ்க்கையின் முன்னேற்றம் தடைப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் தாம் குற்றவொழுக்கத்திற்குச் சாதகமாக அமைந்துவிடுகின்றன. மேற்கூறிய ஆதாரத்துடன் ஆராய்ந்தால் இயற்கையின் அமைப்பும், சூழ்நிலையும் குற்றத்திற்கான காரணக் கூறுகள் என்பதில் ஐயம் இல்லை. பருவநிலைக்கேற்ப மக்கள் மனநிலைகளும் மாறுபடும். ஸ்கிமிட் (Schmid) என்பவர், மனிதகொலை (Homicide) குளிர்ப் பருவத்தில் அதிக அளவில் நடப்பதாகத் தமது அறிக்கையில் கூறியுள்ளார். கோடைப் பருவத்தில் பொருளீட்டும் பொருட்டு வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்குச் செல்வோர்களும், நாடோடியாகத் திரிவோர்களும், இலையுதிர் காலத்தில் (Autumn) தங்களுடைய இல்லங்களுக்குத் திரும்புவதுதான் காரணம் என விளக்கம் அளிக்கின்றார். ஆனால் இயற்கையின் அமைப்புகளாலும், சுற்றுச் சூழ்நிலைகளினாலும் மக்களின் மனநிலை, ஒழுக்கம், மாறுபடுகின்றன அல்லது பாதிக்கப்படுகின்றன என்பது ஆதாரத்தோடு விளக்கப்படவில்லை. அவர்கள் கூறுவது எல்லாம் குற்ற எண்ணிக்கையின் அடிப்படையைக் கொண்டுதான். இயற்பியல் சூழ்நிலைகளினால் மக்கள் மனநிலை பாதிக்கப்படுகிறது என்றால் அதே பகுதியில் வாழும் மற்ற மக்களும் குற்றவொழுக்கத்தையும், குற்றத்தன்மை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் அல்லவா? அங்கே நல்லொழுக்கம் உள்ளவர்களும் இருக்கின்றார்களே, அதற்கு என்ன விளக்கம் கூற முடியும். ஆகவே இயற்பியல், இயற்கை அமைப்புச் சூழ்நிலைகள் மட்டும் குற்றத்திற்கோ, குற்றச் செயலுக்கோ காரணமாவதில்லை. மற்ற காரணக் கூறுகளும் இணையும் போதுதான் குற்றவொழுக்கமும் குற்றமனமும் குற்றச்செயல்களும் பிறக்கின்றன என்பதுதான் உண்மையாகும். இயற்பியலின் சூழ்நிலைகள் மற்ற காரணக் கூறுகளுடன் இணையும்போது குற்ற விகிதங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

பரம்பரைப் பண்பாடு, பரம்பரைக் குணம் (Heridity)

உடலியல் காரணக் கூறுகளைப் பற்றி ஆய்வு செய்வதற்குமுன் மூதாதையர்களின் பண்புக் கூறுகளையும், பண்பின் மரபுத்தொடர்களையும் ஆராய்தல் வேண்டும். குற்ற ஒழுக்கம் குற்றச் செயல் ஆகிய காரணங்களுக்காக ஆராய்ந்ததில் மரபுத்தொடர் பரம்பரையாகப் பரவுகின்றதா அல்லது சுற்றுச் சூழ்நிலையின் காரணத்தினால் (Heredity and Environment) பரவுகிறதா என்ற கருத்து

வேறுபாடு இன்னும் அறிஞர்களிடையே இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் யாரும் இதைப் பற்றித் தீவிரவாக ஆராய முற்படவில்லை. சில குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் குற்றவாளிகளை ஆராய்ந்து குற்றம், குற்றவொழுக்கம், பரம்பரை. பரம்பரையாக வருகின்றனவா அல்லது சுற்றுச் சூழ்நிலையில் பரவுகின்றனவா என்பதற்குப் பல வழிமுறைகளைக் கண்டுள்ளார்கள். அவை யாவை என்பதை ஆராய்வோம்.

நாகரிகமற்ற குடும்ப வரலாறு (Sanage Family Trees) அல்லது காட்டுமிராண்டி இனத்தவர்களின் பரம்பரையை ஆராய்தல், மெண்டலின் கோட்பாட்டின்படி (Mendalian Ratios in Family Tree) குற்றவாளிகளின் மூதாதையர்களை ஆராய்தல், அவர்களின் குடும்ப வரலாற்றை ஆராய்தல், பெற்றோர்களின் குற்றங்களையும், அவர்களின் கால்வழியினர்களின் குற்றங்களையும் (Crimes of Parents) இணைத்து குற்ற விகிதங்கள் காணுவதன் மூலம் பரம்பரையின் மூலக் கூறுகளை ஆராய்தல், ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களையும் உடன் பிறந்த இரட்டையர்களையும் (Identical and Fraternal Twins) ஒப்பிட்டு ஆராய்தல் ஆகிய வழிமுறைகளில் பரம்பரையின் தொடர்புகளைப்பற்றி ஆராய்ந்துள்ளார்கள்.

லெம்ரோஸோவும் (Lembroso) அவரின் ஆதரவாளர்களும் காட்டுமிராண்டி குற்றவாளிகளையும் அவர்களின் குற்றவொழுக்கங்களையும் குற்றத் தன்மைகளையும் குற்றச் செயல்களையும் ஆராய்ந்து இறுதியில் குற்றவாளிகள் பரம்பரையாக அல்லது மரபுவழித் தொடர்பாகப் (Born Criminals) பிறக்கின்றார்களே அல்லாமல் சுற்றுச் சூழ்நிலை காரணங்களால் குற்றவாளிகளாக மாறுவதில்லை என்று அறிவித்துள்ளார்கள். பிறவியிலேயே குற்றவொழுக்கத்தை உடையவர்களாக விளங்குகிறார்கள் என்று அவர்கள் கூறுகின்றார்கள். குற்றவாளிகளின் நடத்தை. ஒழுக்கம், போக்கு ஆகியவை அவர்களின் மூதாதையர்களின் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. அல்லது மூதாதையர்களின் மூல மரபின் பண்புகள் பின்னிடையாக குற்றவாளிகளின் நடத்தை அமைந்துள்ளது. அதாவது குற்றவாளிகளின் நடத்தை, செயல், போக்கு, வாழ்க்கைமுறை ஆகியவை நாகரிகமற்ற காட்டுமிராண்டி வாழ்க்கையின் அடிப்படையில் அமைந்திருப்பது இதற்கு ஒரு காரணம் ஆகும் என்று கூறுகிறார்கள். கொள்ளைக் கூட்டத்தினர், கொலையாளி. ஆகியவர்களின் செயல்கள் காட்டுமிராண்டிகளின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது இதற்குச் சான்றாகும். ஆனால் ஒரு சில குற்றங்களுக்கு மட்டும்

லெம்ரோஸோவின் கொள்கையை ஏற்றுக் கொள்ளலாம். இன்றைய நாகரிக காலத்தில் எந்தவித கொடூரமோ. கோரமோ இல்லாமல் குற்றம் செய்கின்ற குற்றவாளிகளுக்கு இது பொருந்தாது அல்லவா? கள்ளக் கடத்தல, கள்ள நோட்டு. நாணயம், உணவுக் கலப்படம், நம்பிக்கை மோசம் ஆகிய குற்றங்கள் புரியும் குற்றவாளிகள் குணத்திலோ, ஒழுக்கத்திலோ, செயலிலோ. நடத்தையிலோ காட்டுமிராண்டித் தன்மை பிரதிபலிக்கவில்லையே. ஆகவே லெம்ரோஸோ ஊகத்தினால்தான் அந்த முடிவுக்கு வந்திருக்கவேண்டுமே அல்லாமல் ஆதாரங்களுடன் கூறியிருக்கமுடியாது அல்லவா? ஆனால் குற்றத் தன்மை, குற்ற மனம், குற்றவொழுக்கம் ஆகியவை பரம்பரை பரம்பரையாகப் பரவுகின்றன என நிரூபிக்க குடும்ப மரபுக் கிளை வழி அல்லது பிரிவுவழி விளக்கப் படத்தைப் (Family Tree) பயன்படுத்தியுள்ளார்கள். இந்த முறையில் ஆராய அமெரிக்காவில் உள்ள ஒரு ஜூக்கள் குடும்பம் தேர்ந்தெடுக்கப் பட்டது (Jukes Family). இந்தக் குடும்ப ஆராய்ச்சியைப்பற்றி டக்டேல் (Dugdale), ஸ்டாபுருக் (Estabrook) ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இவர்கள், ஜூக்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த 200 அங்கத்தினர்களை ஆய்வு நடத்தியுள்ளார்கள். இதில் 140 பேர் குற்றவாளிகள் ஆகும். இதில் 7 பேர் கொலைக்குற்றத்திற்காகத் தண்டனை வழங்கப்பட்டுள்ளார்கள். 60 பேர் திருட்டுக் குற்றத்திற்கும், 50 பேர் பரத்தைமை குற்றத்திற்கும் தண்டனை வழங்கப் பட்டுள்ளார்கள். இந்த ஜூக்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஜனுதன் எட்வர்ட் (Janathan Edward) என்பவருடன் ஒப்பிட்டுள்ளார்கள். ஜனுதன் எட்வர்ட் என்பவர் அமெரிக்காவில் குடியேற்ற காலத்தில் புகழ்பெற்ற சமயப் பேச்சாளராக, மதபோதகராக (Preacher) விளங்கினர். இவரும் ஜூக்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். இவருக்குப் பின்தோன்றல்கள் (Descendants) ஒருவர்கூட குற்றவாளியாகக் காணப்படவில்லை. அதே நேரத்தில் மாநில ஆளுநர்களாகவும் (Governors) ஐக்கிய நாடுகளின் தலைவர்களாகவும் (President of the United Nations) உச்ச நீதிமன்றத்தின் அங்கத்தினர்களாகவும் (Mambers of the Supreme Court) புகழ் வாய்ந்த எழுத்தாளர்களாகவும் சமயச் சொற்பொழிவாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் விளங்கியுள்ளனர். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஜனுதன் எட்வர்டின் முன்னோர்கள் (Ancestors) சிலர் குற்றவாளிகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவருடைய தாய்வழிப் பாட்டியானவள் (Maternal Grandmother) பிறன்மனை புணர்தல் (Adultry) என்ற குற்றத்தில் மணமுறிவு (Divorce) செய்யப்பட்டிருக்கின்றாள். அவருடைய பாட்டனுடன் பிறந்தவள் (Grand Aunt) தன் மகனைக் கொலை செய்து

இருக்கிறான். அவனுடைய பாட்டனாருடன் பிறந்தவன் (Grand Uncle) தன் கூடப் பிறந்த சகோதரியைக் கொலைசெய்து இருக்கிறான். ஆக ஜுனதன் எட்வர்டின் மூதாதையர் பெருங் குற்றவாளிகளாகத் திகழ்ந்து இருக்கிறார்கள். குற்றத் தன்மை, குற்ற வொழுக்கம், ஆகியவை பரம்பரையாகப் பரவக் கூடியதென்றால் ஜுனதன் எட்வர்டின் பின்தோன்றல்களும் குற்றவாளிகளாகத் திகழ்ந்திருக்கவேண்டுமல்லவா? ஆனால் குடும்ப மரபுக்கிளை வழி அல்லது குடும்ப மரபு பிரிவுவழி விளக்கப்படத்தின் (Family Tree) ஆராய்ச்சியானது, பின்தோன்றல்கள், தலைமுறையினருக்கு அந்தப் பண்புகள் பரவுவதாக அறிவிக்கிறது. மேலே காணும் எடுத்துக்காட்டை நோக்கினால் பண்புக் கூறுகள் பரம்பரையாக, மரபுரிமை உடைமையாகப் பெறப்படுகிறது என்பது நிரூபிக்கப் படவில்லை. இலையில் சாப்பிடும் பழக்கம் பல குடும்பங்களில் பழக்கமாக அமைந்துவிடுகிறது. இப் பழக்கம் பல தலைமுறைகளுக்கும் தொடரலாம். ஆனால் இலையிலேயே சாப்பிடும் பழக்கம் பரம்பரையாக அல்லது மரபுரிமை உடைமையாகப் பரவுகிறது என்பதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? இலையில்தான் சாப்பிடவேண்டும் என்ற மனப். எண்ணம் பரம்பரையாக வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? அது வெறும் பழக்கத்தாலேயன்றி இரத்தக் கலப்பால் ஏற்பட்ட பழக்கமாக இருக்கமுடியாது. அதேபோன்று ஜுக்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குழந்தையும் சுற்றுச் சூழ்நிலையின் தாக்குதலினாலும், பரம்பரைப் பண்பினாலும் இணைக்கப்பட்டு குற்றவாளிகளாகவோ, நல்லவர்களாகவோ விளங்க ஏதுவாகிறது.

தாஸ்டிரம் (Dahlstrom) என்னும் ஆய்வாளர் நான்கு தலைமுறைகளாக ஆராய்ந்தறிந்துள்ள குடும்பத்தில் ஆறு குழந்தைகள் ஏழு வயதடைவதற்குள் அந்தக் குடும்பத்தைவிட்டு நீக்கி வளர்த்ததனால் பிற்காலத்தில் சமுதாயத்தில் தகுதியுடையவர்களாயும், கௌரவம் உள்ள குடிமக்களாயும் விளங்கியுள்ளார்கள். அதே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு வயதிற்கு மேற்பட்ட இரு குழந்தைகளை குடும்பத்தைவிட்டு நீக்காமல் வளர்த்ததனால் அவர்கள் குற்றவாளிகளாக மாறிவிட்டார்கள் என அறிவித்துள்ளார்.

குற்றத்தன்மை, குற்ற மனம், குற்றக் குணம், ஆகியவை பரம்பரையாகப் பின்தொடர்கின்றன என்று ஓர் ஆய்வாளர் ஆராய்ந்துள்ளார். அவர் மெண்டலின் கோட்பாடு விகிதத்தின்படி அமைந்துள்ளதாக அறிவிக்கின்றார். கார்ல்ராத் (Carl Rath) என்பவர் ஜெர்மனியில் சைபர்க் (Sieburg) என்ற இடத்தில் தண்டனை

நிலையங்களிலிருந்து (Penal Institution) 98 குற்றவாளிகளின் குடும்பங்களை ஆராய்ந்ததில் அவர்களின் பரம்பரையினர் மெண்டலின் எதிர்பார்த்த அளவு குற்றவாளிகளாக விளங்குகின்றனர்கள் என்று அறிவிக்கின்றனர். ஆனால் டக்டேல் (Dugdale), ஸ்டாபுரூக் (Estabrook) ஆகியவர்களுடன் மற்றவர்கள் நடத்திய குடும்ப மரபு ஆய்வுகளில் மெண்டலியன் (Mendalian) கொள்கைக்கு ஏற்ப குற்ற குணங்களோ, குற்றத் தன்மைகளோ அமைந்திருக்கவில்லை என்று கூறுகிறார்கள். பொதுவாக. மூதாதையர்கள் அல்லது பெற்றோர்களின் குற்றத் தன்மைகளையும் குற்றக் குணங்களையும், குற்றப் பண்பாடுகளையும், குற்றச் செயல்களையும் ஆராய்ந்தறிந்து அவர்களின் பிற்காலப் பரம்பரையினரின் குழந்தைகள் குற்றக் குணங்களையோ, குற்றத் தன்மைகளையோ அறிந்து கொள்ள முடியும். அதேபோன்று குழந்தைகளின் குற்றக் குணம், குற்றப் பண்பாடு. குற்றச் செயல்கள் குற்றச் சாயல் ஆகியவற்றைக் கொண்டு அவர்கள் பெற்றோர்களின் குற்றக் குணங்களையும், குற்றப் பண்பாடுகளையும் அறிந்துகொள்ள முடியும் எனக் கூறுகிறார் சதர்லாண்டு. ஆனால் முறையான ஆராய்ச்சியிலும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதாவது மெண்டலியன், தாவரங்களையும். விலங்குகளையும் ஆராய்ந்ததைப்போல குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் மனிதர்களை ஆராய முடியாது. குறிப்பிட்ட கால வரையில் மனிதர்களை உடல் உறவு முறையில் (Breeding of Human Being) கட்டுப்பாட்டுடன் இருக்கும்படிச் செய்யமுடியாது. தாவரங்களையும், விலங்குகளையும் எளிதல் கட்டுப்படுத்தி அதன் அசல் கருவளர்ச்சியையும், அதன் குணங்களையும் ஆராயமுடிகிறது. ஆனால் மனிதர்களை எப்படிக் கட்டுபடுத்தமுடியும். ஆகவே குழந்தைகள். பெற்றோர்களின் உடல் உறவினால்தான் பிறந்தார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியாது அல்லவா? மேலும் பலதலைமுறைகள் வரையில் உடல் உறவு முறையில் கவனம் செலுத்தினால்தான் குழந்தை (Offering) அதே பரம்பரையைச் சார்ந்தது எனக் கூறமுடியும். அதைக்கொண்டு பரம்பரைக் குணத்தை எளிதில் கூறிவிடலாம். ஆகவே இது அவ்வளவு எளிதன்று. கோரிங் (Goring) என்ற ஆய்வாளர் குற்றவாளிகளின் குணங்களையும், குற்றப் பண்பாடுகளையும், உடற்கூறு சார்ந்த இயல்பான முற்சார்புகளைக் (Diathesis) கொண்டு பரம்பரையாய் வரும் குணங்களையும், சூழ்நிலைகளைக் கொண்டும் பரம்பரை பரம்பரையாய்க் குற்றக் குணம் பரவுவதை நிரூபிக்க முயற்சி மேற்கொண்டார். அதாவது பெற்றோர்களின் சிறைத் தண்டனைகளையும், பிள்ளைகளின் சிறைத் தண்டனைகளையும், ஆராய்ந்தறிந்து குற்றத் தன்மைகளையும் குற்றக் குணங்களையும் அளந்தறிந்தார். குற்றக் குணம் (Criminalistic Tendency) பரம்

பரையாக வரக்கூடியது என்று கூறுகின்றார். உடல் அமைப்புகளைக் கொண்டு, அதாவது, சாண் அளவு (Span) முன் கையின் நீளம் (Length of Fore Arm) கண் நிறம் (Eye Colour) எலும்புருக்கி நோய் (Tuberculosis), உடல் கூறு சார்ந்த இயல்பான அமைப்பு (Diseases) பைத்தியம், பரம்பரைச் செவிடு, (Hereditary Deafness) அவர்கள் சகோதரர்களின் சாயல் கூறுகள் உடம்பின் நிறம், முகவெட்டு, தலைமுடி, காது, கால் அமைப்பு, பொதுவான உடல் அமைப்பு, ஆகியவற்றைக் கொண்டு பரம்பரைக் குணத்தை ஆராயமுடியும் என நிரூபிக்கின்றார். மேற்கூறியவைகளுடன் சுற்றுச் சூழ்நிலைகளைக் கொண்டும் பரம்பரைக் குணத்தை ஆராயமுடியும் என்று கூறுகின்றார். மேலும் பரம்பரையின் குணங்களுடன், பண்பாடுகளுடன் சூழ்நிலை இணைந்தால் குற்றங்கள் நிகழக்கூடும் என்று கூறுகிறார். ஆனால் பரம்பரைக் குணங்களுடன் சூழ்நிலை இணையாவிட்டால் குற்றங்கள் நிகழும் என்று உறுதியாகக் கூறமுடியாது என்றும் கூறுகின்றார். மேலும் நாட்டில் குழந்தைகளைப் பார்த்துப் பெற்றோர்கள் யார் என்றும், பெற்றோர்களைப் பார்த்து குழந்தைகள் யார் என்பதையும் ஏறத்தாழச் சரியாகவே கூறிவிட முடியும். எத்தனையோ பெண்கள் தாயைப்போலவே விளங்குகின்றார்கள். உடலழகு, தோற்றம், கவர்ச்சி, உயரம், நிறம், கண்கள், தலைமுடி, முகவெட்டு ஆகிய அனைத்தும் அப்படியே நகல் எடுத்த மாதிரி இருக்கிறார்கள். 'தாயைப் போல பெண், நூலைப் போல சேலை' என்று கூறுவது தோற்றத்தை மட்டும் கருதி அல்ல, குணத்தையும் கருதித்தான் அப்படிக் கூறியுள்ளார்கள். எத்தனையோ சகோதர சகோதரிகள் ஒரே மாதிரியான தோற்றம் அளிக்கிறார்கள். இந்தத் தோற்றம், கலப்பு இல்லாமலிருந்தால் பல தலைமுறைகள் வரையில் ஒரே தோற்றம் அமைந்திருப்பதைக் காணலாம். இந்த உருவ ஒற்றுமை மிருகங்களிலும் காணப்படுகிறது. அதே ஒற்றுமை குணத்திலும் காணப்படுகிறது. பூனைக்குட்டி மரத்தில் ஏறுகிறது. மீன்குஞ்சு நீரில் நீந்துகிறது. பல்லி முட்டையிலிருந்து வெளிவந்ததும் ஓடுகிறது. இவற்றைப் போலவேதான் பாம்பு, தவளை, மற்ற மிருகங்கள் அதனதன் பெற்றோர்களின் உருவ அமைப்பையும், உடல் தோற்றத்தையும் கொண்டு விளங்குகின்றன. வாழ்வதற்கான சூழ்நிலை அறிவுகளும், இயற்கையாகவே அமைந்து விடுகின்றன. மீன் குஞ்சுக்கு நீந்துவதற்கு யாரும் கற்றுக் கொடுப்பதில்லை. அது இயற்கையாகவே அதனிடம் அமைந்துள்ளது. ஆனால் மனிதனுக்கு அறிவு இயற்கையாகவே வருவதும் இல்லை, வளருவதும் இல்லை. அதாவது பெற்றோர்களின் குணங்கள் மட்டும் பரம்பரையாக வருகின்றன. ஆனால் பெற்றோர்களின் அறிவு குழந்தைகளுக்கு

இயற்கையாகவே வருவதில்லை என்பதற்கு நிறைய ஆதாரம் உள்ளது. பெற்றோர்கள் குணம் குழந்தைகளுக்குப் பரவுவதைப்போல அறிவும் பரவினால் குழந்தைகள் அறிஞர்களாக, மேதைகளாக விளங்கவேண்டும். டாக்டர் மகன் டாக்டராகவும், வழக்கறிஞர் மகன் வழக்கறிஞராகவும், அறிஞர் மகன் பேரறிஞனாகவும் விளங்கவேண்டும். ஆனால் நடைமுறையில் யாரும் அவ்வாறு விளங்குவதில்லை. அதாவது சிலர் தந்தையைவிடச் சிறந்து விளங்குகிறார்கள், சிலர் கீழான நிலையில் இருக்கின்றார்கள். மேலும் பட்டதாரிகளின் மகன்கள் படிக்காமலும், படிக்காதவன் மகன் பட்டதாரியாகவும், டாக்டர் மகன் நோயாளியாகவும், ஆசிரியர் மகன் படிப்பில் முட்டாளாகவும் விளங்குகின்றனர். பரம்பரையாக அறிவு பரவுமேயானால் இன்று அந்தக் காலங்களில் வல்லுநர்களாகத் திகழ்ந்த சான்றோர்கள் பரம்பரைதான் உலகை ஆக்கிரமித்துக் கொண்டு இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறான நிலைதான் இன்று உள்ளது. ஆகவே தோற்றம் பரம்பரைக் குணம், தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தாலும், 'அறிவு' தொடர்வதில்லை என்பது வெள்ளிடைமலை. கல்வி கற்றால்தான் ஆராய்ச்சி செய்ய முடியும், அறிவும் வளரும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததோர் கல்வி மனப்பழக்கம் நித்தம் நடையும் கொடையும் பிறவிக் குணம்' என்ற பாடல் இந்த உண்மையை எவ்வளவு அழகாக விளக்குகிறது என்பதைப் பாருங்கள். ஆகவே குணம் மட்டும் பரம்பரையாகப் பரவுகிறது. அறிவு அவ்வாறில்லை. குற்றங்கள் செய்வதற்குக் குற்ற மனமும் குற்றவொழுக்கமும் மட்டும் இருந்தால் குற்றத்தைச் செய்துவிட முடியாது. தெளிந்த அறிவும் வேண்டும். இதைப் பிறர் மூலம்தான் கற்க முடிகிறது. கோபம் இயற்கையான குணமாக விளங்கலாம். ஆனால் அவன் குற்றவாளியாக இருப்பான் என்று கூறமுடியாது, ஆகவே குழந்தை, மற்றவர்களைப் பின்பற்றி, பார்த்துக் கற்றறிகிறது. ஆகவே குற்றங்கள் நிகழ்வது பரம்பரையின் பழக்கத்தினாலேயோ அல்லது குணத்தாலேயோ அல்ல. மற்றவர்களைப் பார்த்துக் கற்றறிந்துதான் குற்றங்களைச் செய்கிறது என்பது திண்ணம். குழந்தை பேசுவதற்குக்கூடச் சொல் கற்றுதான் தரப்படுகிறது. மேலும் குழந்தை இணையும் பழக்கத்தால் எதையும் அறிந்து கொள்கிறது. பார்த்துக் கற்றல் (Imitation) என்பதற்கு இணங்க. மற்றவர்களைப் பார்த்ததும், சூழ்நிலைகள் இணைவதாலும் குழந்தை குற்றவொழுக்கத்தை அறிந்து கொள்கிறது. மேலும் குற்றவொழுக்கம் என்பது குற்றச் செயலின் அடிப்படையில் அமைந்தது ஆகும். இது குணத்தின்பால் அமைவது இல்லை. ஆகவே குற்றவொழுக்கமோ குற்றச் செயலோ பரம்பரையாகப் பரவ முடியாது. வெறும் பழக்கத்தால்தான் குற்ற

வொழுக்கத்தையும் குடிச் செயலையும் கற்றுக் கொள்கிறது. அறிவு பரம்பரையாக வருமேயானால் டாக்டர் மகன் டாக்டராகவும். வழக்கறிஞர் மகன் சட்டத்தைப் படிக்காமலேயே வழக்கறிஞனாகவும், அறிஞர் மகன் பேரறிஞனாகவும் விளங்கவேண்டும். அப்படி யாரும் விளங்குவதில்லையே. ஒவ்வொருவரின் மகனும் ஒவ்வொரு வகுப்பாசத்தானே படித்து முன்னேற வேண்டியிருக்கிறது? ஆகவே குற்றம். பரம்பரைப் பண்பாட்டினால், பரம்பரைக் குணத்தினால் செய்யப்படுகிறது என்ற உண்மை. கொள்கைக் கோட்பாடு முற்றிலும் தவறானதாகும். குற்றங்கள் செய்யப்படுவதற்கு பரம்பரைக் குணம் ஒரு காரணக் கூறாக இருக்கலாமே தவிர அதுவே குற்றம் புரிவதற்கு முழுமையான காரணக்கூறாக விளங்க முடியாது. தந்தை கல்வியறிவு அற்றவர், மகன் பட்டதாரி, ஆனால் நம்பிக்கைமோசக் குற்றம் (Criminal Breach of Trust) செய்து வருகிறான் அல்லது கள்ள நோட்டுக் குற்றம் செய்கின்றான். மிகவும் அறிவு நுட்பம் வாய்ந்த குற்றத்தைச் செய்து வருகின்றான் என்றால் அவர்கள் மூதாதையர்களின் குணத்தினாலும், அறிவினாலுமா? சாதாரண குடிமகனுக்குப் பிறந்த மகன் இன்று நாட்டை ஆளும் தகுதியைப் பெற்ற தலைவனாக விளங்குகின்றான் என்றால் பரம்பரைக் குணத்தாலா அல்லது பரம்பரை அறிவினாலா? தன் சொந்த முயற்சியாலும், மற்ற தலைவர்களின் பழக்கத்தினாலும் மட்டுமே தலைவனாக வரமுடியும். பரம்பரைக் குணத்தால் அல்ல.

ஆனால் தாய் பரத்தையாக இருந்தால் மகளும் பரத்தையாக இருக்கிறாள். தந்தை திருடனாக இருந்தால் மகனும் திருடனாக இருக்கிறானே என்றெல்லாம் வினா எழுப்பலாம். மேற்கூறியவை அனைத்தும் சிறு வயதிலிருந்தே உடன் இருந்து பார்த்து அதனால் கற்றுக்கொள்ளப்பட்டவையாக இருக்கும். தாய் பரத்தைத் தொழிலை வீட்டிலேயேதான் செய்வாள், அப்பொழுது சிறு குழந்தையாக இருக்கும் மகளும் உடன் இருப்பாள் இல்லையா? மேலும் காவல் துறையிலிருந்து தப்புவதற்குக் குழந்தைகளை உடன் வைத்துக் கொள்கின்ற நிலைமை பெரும்பாலான பரத்தையரிடம் உண்டு. அதேபோன்றுதான் மற்ற குற்றங்களையும் பழக்கத்தால் தானாகக் கற்றுக்கொள்கிறார்கள். குற்றவொழுக்கம் பரம்பரைப் பண்பாட்டினால் வருவது அல்ல, திருடன் மகன் அறிவாளியாகவும் அறிவாளி மகன் திருடனாகவும் விளங்குகின்ற நிலையைப் பார்க்கிறோம். குற்றவொழுக்கம். குற்ற மனம், குற்றக் குணம், குற்றச் செயல் ஆகியவை பரம்பரையாக வருமேயானால் இன்றும் அதே பரம்பரையில்தான் குற்றவாளிகள் தோன்றவேண்டும் அல்லவா? அதேபோன்று மேதைகளும் அறிஞர்களும் தோன்ற வேண்டும் அல்லவா? மேலும் உடலமைப்புத் தோற்றம் (Resemblance)

பரம்பரை பரம்பரையாக வருகின்ற காரணத்தினால் அவர்கள் உடலுறுப்புகளும் பெற்றோர்கள் போல இருக்கும் அல்லவா? அப்படியென்றால் மூதாதையர் திருடர்கள், கொலைகாரர்கள், என்றால் அதே குற்றங்களை அவர்கள் கால்வழியினர் பின்பற்ற வேண்டும் அல்லவா. இதனால் சமுதாயத்தில் அவர்களுக்குத் தகுதி, புகழ் எப்படி இருக்கமுடியும். அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளவோ நண்பராய் இருக்கவோ யார் முன் வருவார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் எப்படி இருக்கும். ஒரு பெண்ணின் கண் நிறத்தைக்கொண்டு அவளை வெறுத்தால் அதாவது தாயைப் போலக் காணப்படுகிறாள் எனக் கருதி, தாய் திருடி, விபச்சாரி, என்று மகளை ஒதுக்கிவிட்டால் அந்தப் பெண்ணின் நிலையென்ன? ஆகவே பரம்பரைப் பண்பாடு, பரம்பரை ஒழுக்கம் இவையெல்லாம் பொய். பரம்பரை உருவ அமைப்பு மட்டும் உண்மையாகும். தாழ்த்தப்பட்ட இனமும், பின்தங்கிய இனமும் அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் அதிக அளவில் முன்னேறி வருவதற்குப் பரம்பரையா காரணம்? பழக்க வழக்கங்களும், சூழ்நிலைகளும் காரணமாகும். ஆகவே கோரிங் (Goring) உடற்கூறு சார்ந்த இயல்பான உடல் அமைப்புகள், தாழ்வு மனப்பான்மைக்கும் குற்றச் செயலுக்கும், குற்றப் பண்புக்கும், குற்றவொழுக்கத்திற்கும் காரணம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும். மேலும் பரம்பரையாக குற்றவொழுக்கம் பரவுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டுடன் நிரூபிக்கப்படவில்லை. குற்றங்கள் புரிவதற்கு வேண்டிய குற்ற உத்திகள், நுட்பங்கள் (Techniques) ஆகியவை பெற்றோர்கள் மூலம் பரவுகின்றன என்றால் கோரிங்கின் இந்தக் கொள்கையையும் முழு அளவிற்கு ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. குற்ற உத்திகள், நுட்பங்கள் காலத்திற்குக் காலம் மாறி வருகின்றன. இன்று புதிய, புதிய உத்திகளைக் கையாண்டு திருட்டுக் குற்றங்கள் செய்யப்படுகின்றன. அவற்றைப் பெற்றோர்கள் அறிந்திருக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே பெற்றோர்களிடமிருந்து தொற்றிக் கொள்ளுதல் (Parental Contagion) என்ற வாதமும் அடிபட்டுப் போகிறது. தொழில் நுட்பம் பரம்பரை அறிவாகப் பரவுவதற்குச் சிறிதும் வாய்ப்போ, சூழ்நிலைகளோ இல்லை. மேலும் சுற்றுச் சூழ்நிலைகளில் ஒருவன் குற்றச் செயல் செய்ய முடியாது என்று கூறுகிறார். அதுவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இல்லை.

இலாங்கே (Lange) என்பவர் முப்பது ஜதை ஆண் இரட்டையர்களை ஆய்வு செய்துள்ளார். முழுதொத்த இரட்டைக் குழவிகளையும் (Identical Twins) உடன் பிறந்த இரட்டைக் குழவிகள் (Fraternal Twins) இவை பற்றி ஆராய்ந்துள்ளார். முழுதொத்த

இரட்டைக் குழவிகள் சினைபட்ட ஒரே கருமுனையிலிருந்து வளர்ச்சி அடைந்தவை ஆகும். உடன் பிறந்த இரட்டைக் குழவிகள், இரண்டுக் கருக்களால் (Eggs) உற்பத்தியானவையாகும். பரம்பரைப் பண்பாடு, பரம்பரைக் குணம் முழு தொத்த இரட்டைக் குழந்தைகளில் காணப்படுவதாகக் கூறுகின்றார் (Identical Twins). ஒரு குழந்தை குற்றவாளியாகத் திகழ்ந்தாலும் மற்ற குழந்தையும் குற்றவாளியாகத் திகழ்வதாகக் கூறுகின்றார். முழுதொத்த இரட்டைக் குழந்தைகளில் 77 சதவீதமும் உடன்பிறந்த இரட்டைக் குழந்தைகள் 12 சதவீதமும் குற்றவாளியாகக் காணப்படுவதாக அறிவிக்கின்றார். முழு தொத்த இரட்டைக் குழவிகளின் ஒழுக்கம் பொருத்தமாக, இணக்கமாக (Concordance) அதிக அளவில் இருப்பதாக அறிய முடிகிறது. 6·4 மடங்கு அதிகமாகவும் காணப்படுகிறது என்று அறிவிக்கிறார். ஆனால் ஏதோ ஒரு சில ஜதை குழந்தைகளைமட்டும் ஆய்வு செய்துவிட்டு நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அதே குணம் பொருந்தி இருக்கும், அமைந்திருக்கும் என்று கூறினால் எப்படி ஏற்றுக் கொள்வது? மேலும் அந்தக் குழந்தைகள் பிறப்பின் மூலம்பற்றிய தகவல்கள் சரியானவையா என்பது ஐயம்தான்.

ஐரோப்பிய நாடுகளில் ஏ. எம். லெக்ராஸ் (A. M Legras) என்பவர் லாங்கேயைப்போல (Lange) முழுதொத்த இரட்டைக் குழவிகளை (Identical Twins) மூன்று ஆய்வு செய்ததில் 1·4 சதம் குற்றவொழுக்கம் மட்டும் காணப்படுவதாக அறிவிக்கிறார். ஆகவே மேற்கூறிய ஆய்வுகள் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை. மேலும் ஆராய்ந்தால் வேற்றுமைகள் அறவே இல்லாமல் போய்விடும். இதற்கேற்றாற்போல ரோசனாப்பும் (Rosanoff) மற்றவர்களும் வயதுவந்த குற்றவாளிகள் குற்றத் தன்மைகளையும் (Adult Criminality), இளங் குற்றவாளித் தன்மைகளையும், குழந்தைகள் ஒழுக்கப் பிரச்சினைகளையும் (Children's Behaviour Problem) ஆராய்ந்து இரட்டையர்களின் குற்றத் தன்மைகளையும் குற்றவொழுக்கங்களையும் ஆராய்ந்தார்கள். அப்படி ஆய்வு செய்வதில் உடன்பிறந்த இரட்டைக் குழவிகளைவிட (Fraternal Twins) முழுதொத்த இரட்டைக் குழவிகள் (Identical Twins) மூன்று மடங்கு இணக்கமாகவும் பொருத்தமாகவும் (Concordane) அடைந்து இருப்பதாகக் கூறியுள்ளார்கள். மேலும் முழுதொத்த இரட்டைக் குழவிகளின் இல்லங்களை, உடன்பிறந்த இரட்டைக் குழந்தைகளின் இல்லத்துடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் முழு தொத்த இரட்டைக் குழவிகளின் இல்லங்கள் வறுமையாலும், முறைகேடான உடல் உறவுகளினாலும், குடிபோதை போன்ற

பழக்கத்தினாலும், மனஉறுதி அற்ற தன்மையாலும் (Feeble Mindedness), மனநோயாலும் (Psychoser) சூழப்பட்டுள்ளன என்று ஆய்வு கூறுகிறது. இதில் ஏழைமை நிலைக்கும், முழுதொத்த இரட்டைக் குழவிகளுக்கும் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்தவில்லை. அல்லது விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. இறுதியில் இரட்டைக் குழவிகளின் குற்றவொழுக்கம், குற்றத் தன்மை பரம்பரையாக வரக்கூடியது என்பதற்கும் போதுமான விளக்கம் அளிக்கப்படவில்லை.

பொதுவாக, குற்றவாளிகள் அனைவரும் மானிடப் பிறவிகளே. மற்ற மனிதர்கள் குற்றவொழுக்கத்தையும், குற்றத் தன்மைகளையும் பெற்றுக் குற்றவாளிகளாகத் திகழ்வதைப்போன்று முழுதொத்த இரட்டைக் குழவிகளும் உடன்பிறந்த இரட்டைக் குழவிகளும் குற்றவொழுக்கத்தையும் குற்றத் தன்மைகளையும் பெற்று விளங்குகின்றனர். இரட்டையர்களாகப் பிறந்ததால்தான் குற்றவாளியானார்கள் என்பது சரியான காரணமன்று, ஆனால், இந்தக் கருத்திலும் ஒரு குறைபாடு உள்ளது. மனிதர்களின் பிறப்பு முறை பொதுவாகத்தானே அமைந்திருக்கிறது, அதில் ஒரு சிலர் மட்டும் குற்றவாளிகளாகத் திகழ்வதற்குக் காரணம் யாது என்பதற்குப் போதுமான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை.

பரம்பரையாகக் குற்றவொழுக்கத்தையோ அல்லது சில குணங்களையோ பெறக்கூடும் எனக் கருதினாலும் அவற்றிற்கும் குற்றத்திற்கும்கூடத் தொடர்பு இருப்பதாகத் தோன்றினாலும், இதில் அவர்கள் ஒழுக்கத்திற்கும் சமுதாயச் செயலெதிர்ச் செயல்கள் காரணமாக அமையலாம். அதாவது வெள்ளையர்களைவிட நீக்ரோக்கள் அதிகக் குற்றவாளிகளாகக் காணப்படுகிறார்கள். அதிக எண்ணிக்கை வீதம் காணப்படுகிறது. நீக்ரோவின் தோலின் நிறம் சிலபல செயலெதிர்ச் செயல்கள் உண்டாகக் காரணமாக விளங்கியுள்ளது. ஆனால், அவை பரம்பரைப் பண்பாட்டை அறிந்துகொள்ளக்கூடியதாக அமையவில்லை. ஆகவே குற்றவொழுக்கமும் குற்றத் தன்மைகளும் பரம்பரைப் பண்பாட்டினால், மரபுரிமையினால், மரபுரிமைத் தொடர்பால் வருவதில்லையென்பது வெளிப்படையாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. சட்டங்கள், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்றன. அவை சமுதாயத்திற்குத் தேவையானதாகக் கருதப்படுகின்றன. குற்றங்களுக்கான வரையறைகள் சட்ட மன்றத்தினர்களால் வழங்கப்படுகின்றன. ஆகவே, பரம்பரையாக வரும் ஒழுக்கத்திற்கு இது மாறுபட்டிருக்கும் அல்லவா. நேற்றைய குற்றங்கள் இன்று குற்றமற்ற செயலாகவும், இன்றைய செயல் நாளைய குற்றச் செயலாகவும்

மாறுபடக்கூடும். ஆனால், ஒழுக்கம் பரம்பரையாக வரக்கூடியது என்றால் அந்த ஒழுக்கம் மாறுபடாமல் அல்லவா இருக்கும். புதிய குற்றவொழுக்கமும், புதிய குற்றங்களும், புதிய குற்றவாளிகளும் தோன்றுவதற்குக் காரணம் இல்லையல்லவா? புதிய குற்றங்கள் நிகழ்வதற்கும் ஏதுவாகவில்லையல்லவா? ஆனால் இன்று புதிய புதிய குற்றங்களும் குற்றவாளிகளும் தோன்றிக்கொண்டே இருக்கிறார்கள். விமானத்தைக் கடத்துதல் (Air Piracy Hijackers) குற்றம் நவீன காலக் குற்றமாகும். ஆகவே, குற்றவொழுக்கம் பரம்பரையாகப் பரவுகிறது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகிறது. பரம்பரைக் குணத்துடன், சமுதாயச் சுற்றுச் சூழ்நிலைகளின் காரணக் கூறுகளினால்தான் குற்றவொழுக்கமும், குற்றச் செயல்களும் பரவுகின்றன என்பது உண்மையாகும்.

உடலமைப்புகளின் பண்புகளைக் கொண்டு குற்றங்களை ஆராய்தல்
(Anatomical Conditions and Crimes)

ஏற்கெனவே லெம்ரோஸோ (Lombroso) உடல் அமைப்புகளின் வடுக்களைக் கொண்டு குற்றவாளிகளையும், குற்றமற்றவர்களையும் தரம் பிரித்தார். அந்த வேறுபாட்டினைப் பண்புச் சிதைவுக் கறை அல்லது வடு (Stigmata of Degeneracy) என வலியுறுத்தினார். இந்த உடல் வடுக்கள் உடல் அமைப்பின் எல்லாப் பாகங்களிலும் காணப்பட்டாலும் குறிப்பாக மண்டையோட்டு அமைப்பில் அதிக வேறுபாடு காணப்படுவதாக வலியுறுத்தியுள்ளார். கோரிங் (Goring) என்னும் ஆங்கில நாட்டு மருத்துவ நிபுணர் பல ஆயிரக் கணக்கான கைதிகளை மிகவும் உன்னிப்புடன் ஆராய்ந்து பொதுமக்களுடன் ஒப்பிட்டு ஆய்வு நடத்தினார். அதில் கைதிகள் (Prisoners) உயரத்தில் சிறிது (Stature) குள்ளமாகவும், எடையில் சிறிது குறைந்து காணப்படுவதாகவும் அறிவிக்கிறார். லெம்ரோஸோவின் கொள்கையான உடல் வடுக்கள் அல்லது கறை, இழிந்த உடலமைப்புகளும் குற்றத்திற்குக் காரணம் என்ற கோட்பாடு மக்களிடையே அவலநிலை பெற்றுவிட்டதனால், செல்வாக்கை இழந்துவிட்டதனால். கோரிங் கொள்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் 1930-ல் ஹூட்டன் (Hootan) என்ற அமெரிக்க மனித இயல் வல்லுநர் (Anthropologist) லெம்ரோஸோவின் கொள்கையை, கோட்பாடுகளை மறுபடியும் பரப்பும் முயற்சியை மேற்கொண்டார். அதற்கான பல ஆயிரக் கணக்கான கைதிகளை ஆய்வு நடத்தியும், கைதியாகாதவர்கள் சிலரையும் ஆய்வு நடத்தி அவர்களின் குணங்களை, அமைப்புகளை ஒப்பிட்டு இரு தரத்தாரிடையேயும் சிறிது வேறுபாடுகள் காணப்படுவதாக அறிவிப்பதுடன் குற்றத்திற்கான காரணக் கூறு

உயிரியல் சார்ந்த கீழான தன்மை (Biological Inferiority) என்று முடிக்கிறார். ஹூட்டன் (Hooan) ஆராய்ச்சியின் கொள்கை விமர்சனம் (criticism) செய்யப்பட்டது.

முதலில் ஹூட்டன் (Hootan) கட்டுப்பாடுள்ள குழுவிலிருந்து (Control groups) ஆய்விற்காகத் தேர்ந்தெடுத்த மக்கள்தொகை மிகவும் குறைவு ஆகும். குற்றம் அற்ற மக்கள் தொகைக்கு, மாதிரிக்கு அது பயன்படக்கூடியது அன்று, போதுமானதும் அன்று. இரு பிரிவினர்களும் எப்படி வேறுபடுகிறார்கள் என்பதற்கு விளக்கமோ, வழியோ காணப்படவில்லை. குற்றமற்ற மக்கள் தொகைக்காக 29 இத்தாலிய அமெரிக்கர்களையும் (Italian American) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குற்றமற்ற மக்கள் தொகைக்காக 150 பேரையும், 150 தீயணைக்கும் வீரர்களையும் ஆராய்ந்துள்ளார். ஆகவே கோடிக்கணக்கான குற்றமற்ற மக்கள் தொகைக்கு ஏற்றதாக இது அமையாது அல்லவா? குற்றவாளி களுக்கும், குற்றமற்றவர்களுக்கும் குறைவான அல்லது அதிகமான வேறுபாடுகள் இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால், பெரும்பாலான குணங்கள் ஒரே தன்மையாக (identical) காணப்படுகின்றன என்று கூறுகின்றார். மேலும், உயிரியல் சார்ந்த கீழான தன்மைக் கான (Biological Inferiority) அடிப்படைக் காரணங்களை விளக்கவே இல்லை. அவருடைய ஆய்வுரைகளின் முடிவான கொள்கைக்கான விளக்கங்கள் ஆராய்ச்சிக் குறிப்புகளில் காண வில்லை. அதாவது ஆண்கள் சிறைப்படுத்தப்படுவதனாலேயே சமுதாயத்தில் இழிவாகக் கருதப்படுகிறார்கள் என்று விளக்கம் செய்துள்ளார். பொதுவாக, சிறை சென்ற ஆண்களைப் பற்றிப் பெண்கள் இழிவாகக் கருதுகின்றார்கள் என்று கூறுகிறார். இந்தக் கருத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. பல குற்றங்கள் சமுதாயத்தில் புரியப்படுகின்றன. அவற்றைச் சமுதாயத்தின் ஒரு பிரிவினர் போற்றிப் புகழ்வார்கள். எடுத்துக்காட்டாக அரசியல் குற்றங்களுக்காக (Political crimes), சிறை சென்றவருக்கு மாலையும் மரியாதையும் கொடுத்து உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது. சில பெண்கள் அவர்களையே விரும்பு கின்றார்கள். ஆகவே, சிறைசென்றவர்கள் எல்லாம் சமுதா யத்தால் இழிவாக நடத்தப்படுவார்கள் என்று கூறுவது பொருத்த மாகாது. சென்ற தலைமுறையில் மேலும் பல ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அதில் குற்றவாளிகளுக்கும், குற்றமற்றவர் களுக்கும் உடல் அமைப்பு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களோ, வேறுபாடுகளோ இல்லையெனக் கூறியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, இளங் குற்றவாளிகளை ஆராயும் நிலையத்தில் (Institute of the Juvenile Research) தோராயமாக அதாவது

பள்ளி மாணவர்கள் சிகாகோவில் (Chicago) இரண்டு குற்றப் பகுதிகளிலிருந்து 6 வயது முதல் 16 வரையில் உள்ள 4000 மாணவர்களை ஆராய்ந்ததில் சராசரியாக, குற்றமற்றவர்களைவிடக் குற்றவாளிகள் குறைவாகப் பண்புச் சிதைவின் வடுக்களைப் (Stigmata of Degeneracy) பெற்று இருப்பதாக ஆராய்ந்துள்ளார்கள். மனிதப்பண்பு குறைந்த (Degeneracy) மனிதப் பண்புகளை அழிப்பதற்காக அமைந்துள்ள வடுக்கள் சிவப்புத் தலை முடி (Red hair) என்று கூறுகிறார் லெம்ரோஸோ. சிவப்புத் தலைமுடி, மனிதனின் இழிந்த தன்மையைக் காட்டும் வடுக்களாக, கறையாக அமைந்துள்ளது என்பது அவருடைய கொள்கை. இந்தக் கொள்கைக்கு ஆதரவாக வோன் என்டிங் (Von Henting) என்பவர் அமெரிக்காவில் அதிகமாகச் சட்டத்தை மீறியவர்கள் சிவப்பு முடியை உடையவர்கள் என்று கூறுகிறார். இதை ராக் (Rasch) என்பவர் வன்மையாக மறுப்பதுடன், சிவப்பு முடிக்கும், குற்றத் தன்மைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கூறுவதுடன், எடுத்துக்காட்டு விளக்கங்கள் மூலம் விளக்கப்படவில்லை என்று கூறுகின்றார்.

உடல் அமைப்பும் குற்றமும் (Physiognomy and Crimes) அல்லது உடல் குறைபாடும், ஊனமும் குற்றமும் (Physiological Defects)

உடல் அமைப்பைக் கொண்டு குற்றவொழுக்கத்தை ஆராய்தல், அதற்காகக் குற்றவாளிகளின் உடல் அமைப்பை ஆராய்ந்தறிதல், அவற்றைக்கொண்டு ஒரு முடிவான, தெளிவான கருத்தையறிதல், அதற்காக உடல் ஊனங்களைப்பற்றியும், குறைபாடு உள்ள உடலைப் பற்றியும் ஆராய்ந்து குற்றத்திற்கும், குற்றவொழுக்கத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய்தலாகும். பொதுவாக, குருட்டுத் தன்மை, செவிட்டுத் தன்மை, முடமான தன்மை, கூனை தன்மை ஆகிய தன்மைகள் உடல் ஊனத்தைக் குறிக்கும். இவற்றிற்கும் குற்றத் தன்மைக்கும், குற்றவொழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. உடல் ஊனங்கள், உடல் குறைபாடுகள் பரம்பரையாகவோ பேறு காலத்திற்கு முற்பட்டதாகவோ (Ante natal) குழந்தை பிறக்கும் போது நிகழ்கின்ற கடினச் சூழ்நிலைகளினாலோ (Difficulty in Birth Process) அல்லது பிறப்பிற்குப் பின் நிகழ்கின்ற சூழ்நிலைகளினாலோ உடல் ஊனங்கள் அல்லது உடல் குறைபாடுகள் ஏற்பட அல்லது நிகழ்வதற்குக் காரணமாகலாம். குருட்டுத் தன்மைக்கும், குற்றத்திற்கும் அதிகத் தொடர்பு இருப்பதாக அறிய முடியவில்லை. அதற்கு முக்கியக் காரணம் கண்பார்வையற்றதனால் எதையும் தெளிவாக அறிந்துகொள்ள முடியாததாகும். ஆனால் செவிட்டுத்

தன்மையும், முடமான தன்மையும் குற்றவொழுக்கத்திற்கு அதிகத் தொடர்பு இருப்பதாக ஆய்வுரைகள் பகர்கின்றன. செவிடர், முடவர் மீது சமுதாயம் இரக்கம் காட்டுவது உண்மை. இயற்கையாலோ அல்லது செயற்கையாலோ பாதிக்கப்பட்டுவிட்டதை நினைத்து மக்கள் அவர்கள்மீது இரக்கம் காட்டுவது இயல்பாகும். இதையறிந்த செவிடர்களும், முடவர்களும் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் குற்றங்களைச் செய்துவிடுகின்றார்கள்.

விழிப்பார்வைத் தேர்வாய்வாளர்கள் (Optometrists) தங்களின் ஆராய்ச்சியில் குறை பார்வையினால் (Defect on vision) பள்ளிச் சிறுவர்களுக்கும், குற்றவாளிகளுக்கும் அதிகமான வேறுபாடுகள் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். அதற்கு அவர்கள் தரும் விளக்கங்கள் குறை பார்வையினால் குழந்தைகள் படிப்பதற்குச் சிரமப்படுகிறார்கள். உடற்சுழற்சி, களைப்பு, சினம், சோம்பேறித் தன்மை ஆகியவை உண்டாகிவிடுகின்ற காரணத்தினால் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலைமை உருவாக்கப்பட்டு விடுகிறது அல்லது குழந்தைகளே உருவாக்கிக்கொள்கிறார்கள். கூர்ந்து பார்க்க முடியாத, கூர்ந்து பார்க்காத, படிக்காத செயல்களாகப் பார்த்து அதில் குழந்தைகள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஊர்சுற்றுதல், பிச்சையெடுத்தல், எடுபிடி வேலை செய்தல், கூட்டத்தினருடன் இணைந்து செயல்படுதல், திருடுதல், திருடர்களின் ஏஜென்டுகளாகப் பணிபுரிதல் ஆகிய செயல்களில் ஈடுபடுகிறார்கள். குற்றவாளிகளிடையே அதிகமான தொங்கு காதுகள் (Flap ear) இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்குப் பெற்றோர்கள் அறியாமையும் அசட்டையான செயலுமாகும். குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் ஒரே பக்கமாக உறங்குவதனாலும், காதுகள் அழுத்தப்பட்டு உறங்குவதனாலும் இது ஏற்படுகிறது. சமுதாயத்தில் அக் குழந்தைகளைக் கேலியாகப் பேசுவார்கள். ‘தொங்கு காதா’ என்று அழைப்பதை இன்றும் கிராமங்களில் காணலாம். இதனால் குழந்தைகள் கோபமடைந்து மற்றவர்களிடம் சண்டையிடுவதும் உண்டு. மேலும், பெற்றோர்களே அக் குழந்தைகளை வெறுத்துவிட்டால் சிறுவர்கள் இல்லத்தை வெறுத்து வெளியே சுற்றித் திரிவார்கள். இதனால் சிறுசிறு குற்றங்கள் நிகழ ஏதுவாகிறது. ஆகவே தொங்கு காது, கோணற்பல், ஒன்றரைக் கண், சப்பை மூக்கு ஆகியவை குற்றவொழுக்கம் வளர்வதற்குத் துணைசெய்கின்றன. குற்றப் புள்ளிவிவரங்கள் இவர்களைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லையென்றாலும் குறிப்பிட்ட சில வழக்குகளில் இக் குறைபாடுகளின் முக்கியத்துவம் அதிக அளவில் காணப்படுகிறது. அரைக் கண்ணோ அல்லது ஒன்றரைக் கண்ணோ, திக்குவாயோ (Stulters) அமைந்திருந்தால்

சமுதாயத்தில் மக்கள் அவர்களின் குறைபாடுகளை வைத்தே பெயரிட்டு அழைப்பார்கள், உதாரணமாக ஒன்றரைக் கண்ணு, திக்கு வாயா, மூடுகண்ணு, அகல வாயா, கச்சா வாயா என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள். இதனால் சமுதாயத்தில் அவர்களின் கௌரவம், குறைந்துவிடுகிறது. சில குழந்தைகளைப் பெற்றோர் களே கேலி செய்வார்கள் அல்லது வெறுப்பார்கள். இச் சூழ்நிலைக் குள்ளான குழந்தை நாடோடியாகச் சுற்றித் திரிந்து சமுதாயத்தின் மீது வெறுப்படைந்து குற்றவொழுக்கங்களில் ஈடுபடுகிறார்கள். உடல் குறைபாடு உள்ளவர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகள் கிடைப்பதில்லை. சமுதாயத்தில் மதிக்கப் படாததனால் அவர்களிடத்தில் அன்பு வளர்வதற்குப் பதில் சினம் வளர்கிறது. அப்படியே வேலையில் சேர்ந்தாலும் மற்றவர்கள் கேலி செய்வதனால் சுணக்கம் (Retardation in work) ஏற்படுகிறது. மாணவர்களாக இருந்தால் மற்ற மாணவர்கள் கேலி செய்வதனால் பள்ளிக்குச் செல்லாமல் பூங்காவிலோ, தோப்பிலோ ஊர் சுற்றுவது அல்லது குற்றவாளிகளுடன் இணைவது அல்லது நாதியற்றவனாக, வீடற்றவனாக, பராரியாக அலைந்து திரிவது. அருவருப்புத் தோற்றங்களை உடையவர்களுக்கு (Ugliness or Deformity) நண்பர்களே இருக்க மாட்டார்கள். இறுதியில் அவர்களுக்குப் புகலிடம் அளிப்பது கொள்ளைக் கூட்டமாக இருக்கும். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட சிறுவர்கள், குடும்பத்தில் இதனால் வெறுப்புற்ற சிறுவர்கள், சமுதாயத்தையும் குடும்பங்களையும் பழி வாங்கும் எண்ணங்களுடன் அவர்கள் செயல்படுகிறார்கள். மூன்றால் தண்டனை அடைந்த குற்றவாளி ஒருவன் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுவதை நோக்குக : ‘குற்றத்திற்கும் அருவருப்பான தோற்றத்திற்கும் தொடர்பு இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால், அதில் தொடர்பு இருப்பதில் எனக்கு இப்பொழுது ஆச்சரியம் ஏற்படவில்லை; ஐயமும் இல்லை. உடல் உறுப்புகளால் கவர்ச்சி, அழகு அற்றவர்கள் பெண்களை அடைவதிலும், உடல் உறவு உணர்ச்சிகளை நிறைவேற்றி மகிழ்வதிலும் போட்டியிட முடியாமல் போய்விடுகிறது. இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அவனுக்குப் பணம் தேவைப்படுகிறது, அதற்காகப் பணத்தை நேர்வழியில் ஈட்ட முயல்கின்றான். முடியவில்லையெனில் திருடுகின்றான். திருடனுக்கு இதுதான் உண்மை என்றால், வன்புணர்ச்சிக்காரனுக்கும் (Raper), கொலையாளிக்கும் எவ்வளவு இருக்கும் பாருங்கள்’ என்று கூறியுள்ளான் என்று விக்டர் நெல்சன் (Victor Nelson) என்பவர் 1933-ல் ஒரு கைதியை ஆராய்ந்து அறிவிக்கின்றார். அழகு அற்றவர்கள், உடல் ஊனம் உடையவர்களின் மனம் எவ்வளவு அலைபாயும். உடல் உறவு உணர்ச்சியினால் மட்டும் ஒருவன் குற்றவாளியாக மாறு

கிறுன் என்று கூறிவிடமுடியாது. அது ஒரு காரணக் கூறுக இருக்கும். மற்றபடி வாழ்வில் ஏமாற்றம், மாற்றம், வலியச் சண்டை ஆகியவையும் காரணங்களாக இருக்கக்கூடும். அதாவது ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் என்றுல் அதில் மூத்த மகனுக்கு உடல் ஊனம் என்ற காரணத்தால் திருமணம் செய்யா மல் மற்ற இளையவர்களுக்குச் செய்துவிடும்போது மூத்தவனின் உள்ளம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடுகிறது. இதனுல் குடும்பத்தில் மற்றவர்களுடன் வலிய சண்டைபோட்டுக்கொண்டே இருக் கிறுன். இச் சண்டை ஒரு நாள் கொலையாகக்கூட மாறிவிடக் கூடும். அவனுக்குச் சரிபாகம் கொடுக்க மறுத்தல், நல்ல உணவு, உடை ஆகியவை வழங்க மறுத்தல் இவற்றுல் வெறுப்படைந்த அவன் உடன் பிறந்தவர்களையோ, பெற்றேர்களையோ கொலை செய்ய முயல்கிறுன். அவனுடைய அருவருப்பான தோற் றத்திஞலும், குடும்பத்தின் செயலெதிர்ச் செயல் அல்லது சமுதா யத்தின் செயலெதிர்ச் செயல்களின் காரணத்திஞலும் குற்ற வொழுக்கம் பரவிவிடுகிறது. பின்பு குற்றங்கள் செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது. உடல் ஊனம் உள்ளவர்கள் அனைவரும் உடல் வலிமையற்றவர்கள் என்று கூறமுடியாது. அநேகக் குற்றவாளிகள் நல்ல உடலுரத்துடன் விளங்குகின் றுர்கள். அதே நேரத்தில் ஊனமற்ற பலர் பலவீனமாகவும், நோயுற்றவர்களாகவும் காணப்படுகிறுர்கள். ஒரு வயதானவன் ஊனமான பின்பு அநேகக் குழந்தைகளை வன்புணர்ச்சி (Rape) செய்ய முயன்று இருக்கிறுன். அதற்குள் அவன் செயலைக் கண்டு அவன் அடித்து விரட்டப்பட்டான். ஆனுல், அவன் மீண்டும் பிறிதோர் இடத்தில் ஒரு பெண்ணை உடல் உறவுக்கு வரும்படி அழைத்து இருக்கிறுன். அவன் கடைசிவரையில் காம வெறியனுகவே இருந்து வந்தான். உடல் ஊனமாக இருக்கின்ற காரணத்திஞல் மற்றவர்கள் அவன்மீது கருணை காட்டுவார்கள் என்ற ஒரே நம்பிக்கையில் அவன் அவ்வாறு நடந்துகொண் டதாகப் பிறகு ஆய்வில் அறிய முடிகிறது. மேலும் ‘வாழ்க் கையில் ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதை ஈடு செய்ய முடியாமல் போகும்போது வாழ்க்கையே வெறுத்துப் போகிறது. இதனுல் என்ன செய்தால்என்ன’ என்ற நிலை உருவாகிவிடுகிறது. போதுமான உணவு இல்லாமை, நோய், ஆரோக்கியமற்ற உடல் ஆகியவை குற்றவொழுக்கத்திற்குக் காரணக் கூறுகளாகத் திகழ்ந்திருக்கின்றன. ஆனுல்,மீண்டும் மீண்டும் குற்றம் புரிபவர்கள் மற்றவர்களைவிட அதிக ஆரோக்கியம் உள்ளவர்களாகக் காணப் படுகிறுர்கள்.

உடம்பில் உற்பத்தியாகும் சுரப்பிகளின் தன்மையைப் பொறுத்தும் குற்ற ஒழுக்கம் வளரும் என்று ஆய்வு கூறுகிறது.

சுரப்பிகளின் தன்மைக்கேற்ப உடல் வளர்ச்சியடையும். உடல் வளர்ச்சி, அழகு, வலிமை, மனக்கட்டுப்பாடு ஆகியவற்றில் குறைவோ, அல்லது அதிகமோ நிகழ்ந்தால் அவையே குற்ற வொழுக்கத்திற்குக் காரணக் கூறுகளாக அமைந்துவிடுகின்றன.

நாகரிக வளர்ச்சியில், அறிவியல் வளர்ச்சியில், வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், இன்ப வாழ்வை அனுபவிப்பதற்கும் உடல் ஊனம் முட்டுக்கட்டையாக, தடையாக இருக்க முடியாது. செவிடர், குருடர், முடவர் ஆகியோர்களுக்கும் வழி பிறந்து விட்டது. செவிட்டைப் போக்கும் கருவி (Ear aid), கண்ணொளி தரும் திட்டம், ஊனமுற்றோருக்கு வாழ்வளிக்கும் திட்டம், இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல், பிச்சைக்காரர் மறுவாழ்வு, தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை, ஏழை மக்களுக்கு இலவச வீடு, இலவச உணவு, இலவசக் கல்வி, இலவச மருத்துவம் இப்படிப் பலப் பல வளமான திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றி வருகின்ற காரணத்தால் உடல் ஊனமுள்ளோர் நிலைமாறி அவர்களும் சமுதாயத்தில் மற்றவர்போல் பார்க்கவும், கேட்கவும், நடக்கவும், படிக்கவும், விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளவும், தொழில் செய்து பிழைக்கவும் வசதி ஏற்பட்டிருக்கிறது. இதனால் குற்றச் செயல்கள் சிறிது தடுக்கப்பட்டுவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. செயற்கைக் கை, கால், காது, மூக்கு போன்ற கருவிகள் அறிவியல் துறையில் கண்டுபிடித்துவிட்டதனால் 'அழகற்றவன்' என்ற நிலை இல்லாமல் போய்விடக்கூடும். செயற்கையழகுடன் விளங்க முடியும். ஆனால் மேற்சொன்ன அத்தனை வசதிகளும் சமுதாய ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வதுதான் கடினமான செயலாகும். அந்த நிலை என்று வரும்? அதுவரையில் குற்றங்கள் தொடர்ந்து புரிந்து வருவதற்கு வாய்ப்புண்டு.

அடுத்து, குற்றங்களுக்கும், வயதிற்கும் உள்ள தொடர்பினைக் காண்போம் (Age in Relation to Crime)

ஏழு வயதிற்குட்பட்ட சிறுவர்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அது குற்றமாகாது என வரையறுக்கிறது இந்தியக் குற்றச் சட்டம். ஏழு வயதிற்கு மேல் உள்ள குழந்தைகள் செய்யும் செயல்கள் தாம் குற்றம் எனக் கூறுகிறது. குற்றம் புரிவதற்கு வயது முக்கியக் காரணக் கூறாக அமைந்து இருக்கிறது. அதிக முதுமை அடைந்தவர்கள் குற்றங்கள் செய்யும் வலிமையை இழந்துவிடுகிறார்கள்.

இதனால் சட்டத்தில் முதுமையானவர்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை. சுற்றுச் சூழ்நிலைகளினால் முதுமையானவர்களும்

குற்றவாளிகளாக மாறக்கூடும் அல்லவா. 55 வயதான ஒரு பெண் 35 வயதான தன் மகன் தூங்கும்போது குத்திக் கொலை செய்து இருக்கிருள். அவள் மகன் அவளை மூன்று முறை வன் புணர்ச்சி செய்துவிட்டதனுல் ஆத்திரமடைந்து தன் மகனைக் கொலைசெய்யத் துணிந்துவிட்டாள். 70 வயது குற்றவாளி 35 வயதுடைய நபரைக் குத்திக் கொலைசெய்துள்ளான். கொலைக் குற்றத்தைப் பொறுத்தமட்டில் வயதிற்கு வரம்பு கிடையாது. சில குற்றங்கள் சூழ்நிலையில் குற்றமற்ற தன்மையாகவும் மாறி விடக்கூடும். பிறன்மனை புணர்தல் (Adultry) சாதாரணமாகக் கணவனின் இசைவோடு செய்தல் குற்றம் இல்லை. அல்லது அவள் கணவன் இறந்துவிட்டாலும் குற்றமில்லை. இதுபோன்ற பால் உறவுக் குற்றங்கள் பொதுவாக 15 வயதிற்கு மேல்தான் செய்யக்கூடும். பெண்கள் 16, 17 வயதுகளில் அதிகமான குற்றங்களைச் செய்யக்கூடும். தானியங்கு திருட்டுகள் (Automobile theft) 15 வயதிற்குள் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆனுல் கையாடல், நம்பிக்கைமோசக் குற்றம் ஆகியவற்றை வயதுவந்தவர்கள்தாம் அதிக அளவில் செய்கிருர்கள். ஆண்கள் மேலைநாடுகளில் மொத்தக் குற்றத்தில் 30 சதம் 25 வயதிற்குட்பட்டவர்களாகவும், 19 சதம் 21 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் 8 சதம் 18 வயதிற்குட்பட்டவர்களாகவும் அதே சமயத்தில் பெண்களில் சராசரிக் குற்றவாளிகள் 25 வயதிற்குட்பட்டவர்கள் 31 சதமும், 21 வயதிற்குட்பட்டவர்கள் 20 சதமும், 18 வயதிற்குட்பட்டவர்கள் 7 சதமும் ஆகும். 1875-ல் 72 சதம் குற்றங்கள் 30 வயதிற்கு உட்பட்ட வாலிபர்களாலும், 24 சதம் 21 வயதிற்குட்பட்ட இளைஞர்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது இளமைப் பருவத்திலும் நடுத்தர வயதிலும் அதிகமான குற்றங்கள் நிகழ்கின்றன. துடிப்பும், துணிவும், உடல்வலிமையும், எதையும் எளிதில் ஏற்றுக்கொள்ளாத தன்மையும், திடீரென்று கோபப்படும் தன்மையும், எதிர்க்கும் தன்மையும் உடையதனுல் இக் குற்றங்கள் நிகழ்கின்றன. நடுத்தர வயதினர்கள் அதிகமாகக் குற்றம் புரிவது வன்புணர்ச்சி, கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம், ஏமாற்றுதல், மோசடி, இருதுணை மணம் (Bigamy), கள்ளக் கடத்தல், கள்ள நோட்டு அச்சடித்தல், உணவுப் பொருள், மருந்து ஆகியவற்றைக் கலப்படம் செய்தல் ஆகிய குற்றங்களும், இளைஞர்கள் நாடோடியாகத் திரிதல், பள்ளிக்குச் செல்லாமல் இருத்தல், சிறு திருட்டு, பிச்சையெடுத்தல், தேர்வில் பார்த்து எழுதுதல் (Malpractice) ஆகிய குற்றங்களையும், அதே போன்று நடுத்தர வயது பெண்கள் திருடுதல், பரத்தைமை, குழந்தைகளைக் கொலைசெய்தல், கருச் சிதைத்தல், விபச்சாரத்திற்காக இளம் பெண்களைக் கடத்துதல், பரத்தைமை நடத்துதல் ஆகிய குற்றங்

களையும், இளம் பெண்கள் பரத்தைமை, திருடுதல், கள்ளக் கடத்தல், கள்ள நோட்டு, கள்ள நாணயம் அச்சடித்தல், ஏமாற்றுதல், மது அருந்துதல், மயக்க மருந்து உட்கொள்ளுதல் ஆகிய குற்றங்களையும் புரிகின்றார்கள்.

உடல் உறவுக் குற்றங்கள் நடுத்தர ஆண், பெண் இருபாலாரும் ஒரே அளவில் செய்கின்றார்கள். இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு வேலையின்மை, கட்டுப்பாடின்மை, ஒழுக்கமின்மை ஆகிய காரணங்களே ஆகும். பயந்த குணமும், கீழ்ப்படியும் தன்மையும் கொண்டவர்கள் அடிக்கடி குற்றங்கள் செய்வதில்லை. வலிமையானவர்களும், சுறுசுறுப்பானவர்களும் பல குற்றங்களைச் செய்கின்றனர். குற்றங்கள் வயதிற்கு வயது வேறுபடுவதற்காகக் காரணக் கூறுகள் அளிக்கப்படவில்லை. ஆனால் மற்றக் காரணக்கூறுகளுடன் வயதும் இணையும்போது குற்றம் நிகழ்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆனால், அதே வயதுடைய பலர் குற்றவாளிகளாக இல்லாமல் இருக்கும்போது சிலர் மட்டும் ஏன் குற்றங்கள் புரிய வேண்டும். ஆகவே வயதுமட்டும் காரணக்கூறாக இருக்க முடியாது. சுற்றுச் சூழ்நிலைகள், சமுதாயச் செயலெதிர்ச் செயல்கள், அரசியல் கொள்கைகள், அவர்களின் போராட்டங்கள் ஆகிய காரணக் கூறுகளும், வயதும் இணையும்போது குற்றம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஓர் அரசியல் கட்சி, ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தும்போது. குறிப்பாக இளைஞர்களை ஊக்குவிக்கின்றது. இளைஞர்களும் இளமை வேகத்தில் வருவதை அறியாது உடனே செயல்படுகின்றார்கள். அப்படிப் பார்க்கும்போது 18 வயது முதல் 25 வயது வரையில் உள்ள இளைஞர்கள் அதிக அளவில் போராட்டத்தில் ஈடுபட்டு இருப்பார்கள். அப்படி நோக்கும்போது வயது ஒரு முக்கியக் காரணக் கூறாகக் காணப்படுகிறது. ஆனால், சாதாரணமாகத் தனித்துச் செய்யப்படும் குற்றங்களுக்கும் வயதிற்கும் அதிகத் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் வளர்க்கப்பட்டவர்களுக்கு வயது ஒரு காரணக் கூறாக இருக்காது.

அடுத்துப் பால் உறவிற்கும், குற்றத்திற்கும் உள்ள தொடர்பினைக் காண்போம் (Sex ratios in Crime). ஆண் பெண் உடல் உறவுக் குற்றம், சமூகம் தோன்றிய காலம் தொட்டு இன்று வரையில் சமுதாயத்தில் விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் கொடிய குற்றமாகும். உடல் உறவுக் குற்றத்தால் கருச்சிதைவுக் குற்றமும் ஏற்படுகிறது. கருச் சிதைவு. அறத்திற்கும், சட்டத்திற்கும் எதிரானதாக அந்தக் காலத்தி

லிருந்தே கருதப்பட்டுவருகிறது. கருச் சிதைவின் தோல்விதான் குழந்தைக்கொலையில் (Infanticide) முடிவடைகிறது. பால் உறவு உணர்ச்சியில் கொலை, களவு, திருடுதல், கலகம், குழப்பம், கொடுங் காயங்கள், சிறு காயங்கள், அவதூறுக் குற்றம், இரு துணை மணம், பிறர் மனைவியைப் புணர்தல் ஆகிய குற்றங்கள் நிகழ்கின்றன. பால் உறவுக் குற்றம் இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. அந்தந்த நாடுகளின் பண்பாட்டிற்கும், கலாசாரத்திற்கும், சுற்றுச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற வகையில் பால் உறவுக் குற்றங்கள் அதிகரித்தோ குறைந்தோ இருக்கும். அதே போன்று பெண்கள் முன்னேற்றத்தைப் பொறுத்து அவர்கள் குற்ற விகிதங்கள் வேறுபடும். பொதுவாக, ஆண்களின் குற்ற விகிதங்கள் பெண்களின் குற்ற விகிதத்தைவிடப் பல மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது இந்தியாவில். ஆனால் ஜப்பான், அல் ஜீரியா, வியட்நாம் முதலிய நாடுகளில், ஆண்களைவிடப் பெண்களின் குற்ற விகிதங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அரசியலிலும் சமுதாயத்திலும் பெண்கள் செல்வாக்கு மிகுந்து இருந்தால் அவர்களின் குற்ற விகிதங்கள் அதிகரித்து இருக்கும். அதற்குக் காரணம் அவர்கள் இல்லத்திலேயே அடங்கி இருக்காமல் பொது வேலையில் ஈடுபடுகின்றபோது பல குற்றங்கள் செய்ய ஏதுவாகிறது. இன்று பெண்களும் ஆண்களுக்குச் சமம் என்ற கோட்பாடு வலுவடைந்து வருவதனால் ஆண்களைப் போலப் பெண்களும் அலுவலகங்களில் பணிபுரிகிறார்கள். எல்லாத் துறையிலும் போட்டியுடன் முன்னேறி வருவதனால் பெண்களின் குற்ற விகிதங்கள் மேலும் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு. மேலும், கிராமத்தில் இருக்கும் பெண்களைவிட நகர்களில் வாழும் பெண்கள் அதிகக் குற்றங்கள் புரிவதற்கு வாய்ப்புண்டு. நகரங்களில் ஆண்களின் குற்ற விகிதங்களுக்கும் பெண்களின் குற்றவிகிதங்களுக்கும் அதிக வேறுபாடு இருக்காது. நகரங்களில் வாழும் பெண்கள் அதிகமாகப் புரியும் குற்றம் பரத்தைமை ஆகும். இவர்கள் சொத்துக்கு எதிரான குற்றங்களோ, நபருக்கு எதிரான குற்றங்களோ அதிகமாகப் புரிவது இல்லை.

ஆனால் மாணவர்களின் (Boys) குற்ற விகிதமும் மாணவிகளின் (Girls) குற்ற விகிதமும் பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது. அதிகமான குற்றத் தன்மை நிறைந்த பகுதிகளில் வாழும் பெண்கள் அதிகக் குற்றங்களைப் புரிகின்றார்கள். அவர்கள் விகிதங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. போர்க்காலங்களில் ஆண்களின் குற்ற விகிதங்களைவிடப் பெண்களின் குற்ற விகிதங்கள் அதிகரித்து உள்ளன. இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவீடன், இங்கிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில்

பெண்களின் குற்ற விகிதங்கள் அதிக அளவு உயர்ந்துவிட்டன. ஆண், பெண்களின் விகிதங்கள், வயது, காலம், சூழ்நிலை ஆகிய வற்றிற்கு ஏற்ப, குற்ற விகிதங்கள் வேறுபடுகின்றன. சிதைந்த, சீரழிந்த குடும்பங்களில் மாணவர்களைவிட மாணவிகளே அதிக அளவில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக, மாணவர்கள் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் தாங்கிக் கொள்ளும் சக்தியை உடையவர்கள். பெண்கள் கட்டுப்பாட்டுடன் வளர்ந்து வருவதனால், கட்டுப்பாடு இல்லாமல் போகும்போது அவர்கள் சூழ்நிலைக்குப் பலியாகிவிடுகிறார்கள். மேலும் ஆண்களைப் போலப் பெண்கள் தனித் திறமை, தைரியம் படைத்தவர்கள் அல்லர். ஆகவேதான் குடும்பம் சிதைந்ததும் பெண்கள் குற்றவொழுக்கத்தை எளிதில் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். ஒருதாய் வயிற்றுப் பிறப்பாளருள் (Siblings) ஒரே ஒரு பெண் மட்டும் இருந்தால், அந்தப் பெண் குற்றத் தன்மையைப் பெற்றிருப்பதாக அறிக்கை கூறுகிறது. அதே நேரத்தில் எல்லாப் பெண்களும் அல்லது ஆண் பெண்கள் கலந்து இருந்தாலும் குற்றத் தன்மை குறைந்து இருப்பதாக அறிக்கை கூறுகிறது. இதற்குக் காரணம் ஒரு பெண் மட்டும் இருந்தால் வீட்டில் அவளுக்குச் செல்வாக்கு அதிகம் தரப்படுகின்றது. அதனால் குற்றவொழுக்கம் எளிதில் பரவுகின்றது. அதிகமாகப் பெண்கள் இருக்கும்போது யாருக்கும் செல்வாக்கு இல்லாமல் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படுகிறார்கள். சகோதர சகோதரிகளுடன் வளர்வதனால், சகோதரியைக் கண்காணிக்கச் சகோதரர்கள் இருப்பதனால் அந்தப் பெண்கள் குற்றவொழுக்கத்தை எளிதில் கற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள்

மேலும், நீக்ரோ ஆண்கள் அதிகக் குற்றவாளிகளாகக் காணப்படுவதால் மற்றப் பெண்களைவிட நீக்ரோ பெண்களில் அதிகப் பெண்கள் அதிகக் குற்றவாளிகளாகக் காணப்படுகிறார்கள். இதற்குக் காரணம் நீக்ரோ ஆண்கள் பெற்றிருக்கும் தகுதிகளையும், சூழ்நிலைகளையும் பெண்கள் பெற்றிருப்பதுதான். சிதையாத, சீரழியாத குடும்பத்தைவிடச் சிதைந்த, சீரழிந்த குடும்பத்திலிருந்து அதிகமான பெண்கள் குற்றவாளிகளாகக் காணப்படுகிறார்கள். பால் பாகுபாடுகளினால் குற்றவாளிகளும், குற்றமற்றவர்களும் வேறுபடுவதற்கு இதர பண்புக் கூறுகளையும் ஆராய்ந்து அறிதல் வேண்டும். மன உறுதியற்ற தன்மை, மனநோய்த் தன்மை, மற்றும் நபர்களின் தனிப்பட்ட பண்புக் கூறுகள் ஆகியவை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல. இவற்றைக்கொண்டு பால் பாகுபாட்டிற்கான விளக்கங்களைப் பெறமுடியாது. இவை இரு பாலாருக்கும் அமைந்துள்ள பொதுவான பண்புக் கூறுகளாகும்.

பால் பாகுபாடுகளின் குற்ற விகிதங்கள் வேறுபடுவதற்கு ஆண் தன்மை (Maleness) மட்டும் காரணம் இல்லை. அதே போன்று பெண் குறைவான விகிதங்களைப் பெற்றிருப்பதற்குப் பெண் தன்மை மட்டும் காரணமாக இருப்பதில்லை. குற்ற விகிதங்களைக் கொண்டு சமுதாயத்தின் சூழ்நிலைகள். குடும்பச் சமுதாயக் கட்டுப்பாடுகள், ஒழுக்க முறைகள் மற்றும் சமுதாயத் தொடர்புகள் முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. சகோதர சகோதரிகள், இருபாலாரும் ஒரே குடும்பத்தில் வாழ்கிறார்கள். ஆகையினால் சமமான ஏழ்மையிலும் கல்வியற்ற பெற்றோர்களும் ஒரே சுற்றுச் சூழ்நிலைகளிலும் வாழ்கிறார்கள். இன்பப் பொழுதுபோக்கிற்கு, வசதியற்ற, ஒழுங்கற்ற இடங்கள் ஆகிய காரணக் கூறுகள் மட்டும் குற்றத்திற்கான காரணங்களாவதில்லை. சமுதாயத்தில் அடிக்கடி மாறும் சூழ்நிலைகள், அதன் தன்மைகள், குற்றத் தன்மையின் கடுமை அல்லது எளிமை, மந்தம் அல்லது வேகத்தைப் பொறுத்தும், குற்றத்தன்மைக்கு எதிராகச் சமுதாயத்தின் செயலெதிர்ச் செயல்களைப் பொறுத்தும், குற்றத்தை எதிர்த்துத் தாக்குவதும் அல்லது ஆதரிப்பதும் குற்றங்களைச் செய்வதற்கான வாய்ப்பையும் அல்லது செய்ய முடியாமைக்கான வாய்ப்பையும் மற்ற வசதி அல்லது வசதியின்மை ஆகியவற்றைப் பொறுத்தும் குற்றத் தன்மை, குற்றவொழுக்கம், குற்றச் செயல்கள் பரவுகின்றன அல்லது தடுக்கப்படுகின்றன.

பொதுவாக, பெண் குழந்தைகளைப் பூப்போன்று வளர்க்கிறார்கள். ஆண் குழந்தைகளை அடித்தும் திருத்தியும் வளர்க்கிறார்கள். இதனால் பெண்களின் தன்மை மென்மையானதாகவும், ஆண்களின் தன்மை முரட்டுத் தன்மையாகவும் இருக்கின்றன. ஆண்களை அடித்து வளர்க்கவேண்டும். பெண்களைப் பூப்போன்று வளர்க்க வேண்டும் என்று கூறுவதுண்டு. ஏழைக் குடும்பமாக இருந்தாலும் ஏறத்தாழ இதே முறையில்தான் வளர்க்கப்படுகின்றார்கள். இதனால் ஆண்கள் இன்னல்களையும் ஏமாற்றங்களையும் எளிதில் தாங்கிக்கொள்ளுகிறார்கள். பெண்கள் சிறு துன்பம் வந்தாலும் உடனே கண்ணீர் விடுகின்றார்கள். சிறு துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் சக்தி அவர்களுக்குக் கிடையாது. மேலும், பெண்கள் குழந்தைகளுக்குத் தாய் ஆகக் கூடியவர்கள். அவர்கள் குழந்தைகளை அதிகக் கவனத்தோடு வளர்க்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மென்மையாக வளர்க்கப்படுகின்றார்கள். மேலும், பெண்கள் மென்மையுடனும் கண்டிப்புடனும் வளர்க்கப்படவில்லையென்றால் அவர்கள் கள்ளத்தனமாகக் கர்ப்பிணியாகிவிடக் கூடும். இதனால் குடும்பத்திற்கும், குலத்திற்கும் அவப் பெயர் ஏற்பட்டுவிடும். சில வேளைகளில்

தாயின் உயிருக்கு இது ஆபத்தாகவும் நேரிடும். ஒருவன் திருடினுல்கூட அது அவ்வளவு அவப் பெயராக இருக்காது. ஆனுல் கள்ளத்தனமாகக் கர்ப்பிணியாகிவிட்டால் அது ஊரெங்கும் அறிந்த செய்தியாகிவிடக்கூடும். இதனுல் அவமானம் தாங்காமல் பெற்ருேர்கள் தற்கொலையும் செய்துகொண்டுவிடுகின்ருர்கள். இதனுல் குடும்பத்தில் உள்ள மற்றக் குழந்தைகளும் பாதிக்கப் பட்டுவிடுகின்ருர்கள். ஆகவேதான் அறிவு வளர்ந்த நாள்தொட்டு இன்று வரையில் பெற்ருேர்கள் பெண்களை மிகவும் கட்டுப் பாட்டுடனும் அதே நேரத்தில் அன்புடனும் மனமாற்றம் ஏற்படா வண்ணமும் வளர்த்து வருகின்ருர்கள். சமுதாயத்தில் எவ்வளவு தான் புரட்சி, மறுமலர்ச்சி ஏற்பட்டாலும், கலப்புத் திருமணத்தை ஆதரித்தாலும், கள்ளக் குழந்தையை ஏற்றுக் கொள்வது கிடையாது. அவன் பெரியவனுக வளர்ந்துவிட்டாலும், பெயர் தெரியாதவனுக்குப் பிறந்த பிள்ளையென்றும், அவன் தலை முறைக்கும் அவப் பெயர் இருந்துகொண்டே இருக்கும். ஆகவே தான் பெண்கள் குடும்பத்தைவிட்டு வெளியே சென்ருலும் குற்ற வொழுக்கமாகக் கருதப்படுகிறது. ஆனுல், இன்று நாகரிக வளர்ச் சியினுல் கள்ளக் குழந்தைகள் பிறக்காமல் தடுப்பதற்கும், பிறந் தாலும் 'அனுதை' விடுதியில் விட்டுவிடுவதற்கும் அதிக வாய்ப்புண்டு. ஆகவே, பெண்களைக் கொண்டு முன்பு அஞ்சி வாழ்ந்த மாதிரி இப்பொழுது இருக்கத் தேவையில்லை. ஆனுல் இவை குற்றவொழுக்கமாகக் கருதப்படும். அது பல குற்றங்களைப் புரிவதற்கும் ஏதுவாக அமைந்துவிடும்.

6. உளநோய்க்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பு

(Psychopathy in Relation to Crime)

குற்ற ஒழுக்கத்திற்கும் குற்றச் செயலுக்கும் ஏதுவான காரணக் கூறுகளைப்பற்றி இதுவரையில் ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் உளநோய்க்கும், குற்றத்திற்கும், குற்ற ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்புகளைப்பற்றி ஆராய்வோம். உளநோய் அல்லது மனநோய் ஏற்படுவதற்குப் பல காரணக் கூறுகள் உண்டு. துன்பத்தால் பாதிக்கப்படும்போது மனம் பாதிக்கப் படுகிறது. அந்த மனவருத்தம் நிலையானது அன்று. அந்த மன வருத்தம் தாற்காலிகமானது. துன்பத்தை மறந்ததும் மனம் மகிழ்ச்சி அடைந்துவிடும். உடலில் ஏற்படும் 'சிறு வலிக்கு' நோய் என்பது போல மூளைக்கு ஏற்படும் 'சிறு துன்பத்தினை' உளநோய் அல்லது மன நோய் என்றே கூறலாம். சிறு மனவருத்தம் ஏற்பட்டாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தியற்றவர்களும் உண்டு. அதனால் தற்கொலை அல்லது கொலைக் குற்றம் நடந்து விடுகிறது. மனவருத்தம் ஏற்பட்டால் வாழ்க்கை வெறுத்து விடுகிறது. அந்த வெறுப்பு, பல குற்றவொழுக்கங்களுக்கு ஏதுவாகிறது. வாழ்க்கையில் மாற்றம், ஏமாற்றம், தோல்வி, வறுமை, அறியாமை, தைரியம் இன்மை ஆகிய சூழ்நிலைகளினால் மனவருத்தம் ஏற்படும். மேற்சொன்ன சூழ்நிலைகளிலும் வருத்தம் அடையாதவர்கள் உண்டு. அவர்களிடத்தில் மனத்திடம், திண்மை, மனவலிமை ஆகியவை இருப்பதுதான் காரணம். குண்டுமாரி பொழிந்தாலும் கவலைப்படாமல் தூங்கும் நபர்களும் உண்டு மன வருத்தம், மன நோய் ஆகியவை குற்றத் தன்மைக்கும், குற்றவொழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் காரணக் கூறுகளாக விளங்குகின்றன. மனவருத்தத்துடன் இருப்பவர் ஒரு செயலைச் செய்துவிட்டால் மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சி உண்டாகிவிடும். ஆனால், உளநோய் அப்படிப்பட்ட

தன்று. ஆக, மன வருத்தம் (Mental agony), உளநோய் (Psychopathy) ஆகியவற்றில் முன்னது சமுதாயச் சூழ்நிலை யால் நிகழக்கூடியது. பின்னது மூளை அமைப்புகளினுல் நிகழக்கூடியது. அதாவது உளநோய் என்பது மூளைக் கோளாறு களினுல் நிகழக்கூடியது. ஆனுல் உளநோய்க்கு, மனநிறை வின்மை அல்லது மனக் குறைபாடும் காரணம் என்று கூறுவாரும் உளர். முரண் மூளை நோய் (Schizophrenia) என்பது ஒருவன் எண்ணம், உணர்வு, செயல் ஆகியவற்றின் செயல்களை ஆராய்ந்து அறிவதாகும். பொதுவாக, ஒருவன் எண்ணம், உணர்வு, செயல்கள் ஆகியவை மூன்றும் இணைந்து ஒருங்கே செயல்படவேண்டும். ஆனுல், மூன்றும் தனித்தனியே செயல் படும் நிலையைத்தான் முரண் மூளைநோய் என்று கூறுகின்ருர்கள் உளநோய் மருத்துவர்கள். உளநோய்க்கு இந்த முரண்மூளை நோய்தான் முக்கியக் காரணம் ஆகும். ஆனுல், மற்றும் சிலர் உள நோய்களின் பண்புக் கூறுகள்தாம் உளநோய்க்குக் காரணம் என்றும், வேறு சிலர் உளநோய்கள் தொடர்பாக இணைந்துள்ள காரணக் கூறுகளின் தொகுதிதான் உளநோய்க்குக் காரணம் என்றும் கூறுகிருர்கள். குற்றவாளிகள் அனைவரும் உளநோய் உள்ளவர்கள் என்று கூறுவாரும் உண்டு. இந்தக் கூற்றும் ஓரளவிற்கு உண்மைதான். மனவெழுச்சியினுல், கொந்தளிப் பினுல், குழப்பத்தினுல் (Pathological Traits) உணர்ச்சி வயப்படுத லினுல் குற்றம் நிகழ்ந்துவிடுகின்றது. குற்றவாளிகளில் 10 சதம் உளநோய் உள்ளவர்கள் என்று சிலர் கருதுகின்ருர்கள். உள நோய் அல்லது மனநோய் பல வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை மனக் குறைபாடு அல்லது மன உறுதியற்ற தன்மை (Mental defect or Feeble mindedness), பைத்தியம் அல்லது தன்னிலை மறந்த தன்மை (Psychosis or Insanity), நரம்புக் கோளாறு (Neuropathic conditions) நிலைகள். நரம்புக் கோளாறு என்பது வலிப்பு அல்லது காக்காய் வலிப்பு, தடுக்க முடியாத தன்மை அல்லது பெருவலி வாய்ந்த தன்மை (Irresistability) துயிலியக்கந் தூண்டும் மூளை நிலை (Somnambulism) ஆகியவை அடங்கும். இவை நரம்புகளின் இயல்புக்கு மாருன செயல் களினுல் நிகழக்கூடியவை ஆகும். உளநோய் பொதுவாகப் பரம்பரையாகப் பரவக்கூடியது என்ற கருத்து உள்ளது. அதாவது செவிடு, ஊமை, குருடு, ஆகியவை பரவுவது போல. ஒரு குடும்பத்தில் ஒற்றைக்கண் பார்வை பரம்பரையாக வந்திருக்கிறது. அதே போன்று செவிட்டுத் தன்மையும் வந் துள்ளது. உடல் அமைப்புத் தொடர்பாக உளநோயாலும் அல்லது அங்க அமைப்பாலும் அது அப்படியே பின்வரும் தலைமுறைக்குப் பரவுகிறது. உளநோய் நரம்புத் தொடர்பாக உண்டாகக்

கூடியது. ஆகையினால் இது பரம்பரை உரிமையாகத் தொடர்ந்து வரக்கூடியது என்றும் பரம்பரைக் குணம், பண்பாடு, அமைப்பு ஆகியவை பரம்பரை பரம்பரையாகப் பரவக் கூடியது என மெண்டலின் கோட்பாடு ஆதாரமாக உள்ளது. ஆகவே, மனக் குறைபாடு, மன உறுதியற்றவர்கள், மூளைக்கோளாறு உள்ளவர்கள் ஆகியோரால் குற்றங்கள் நிகழ்கின்றன. குற்றங்களைத் தடுப்பதற்கு ஒரே வழி அந்தக் குற்றவாளிகளுக்கு மேலும் சந்ததிகள் உண்டாகாமல் தடுக்க வேண்டும். அதாவது உளநோய் உள்ளவர்கள், குழந்தைகள் பெற்றுக்கொள்வதைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுத்துவிட்டால் எதிர்காலத்தில் உளநோய் உள்ளவர்களும் அதனால் நிகழ்ந்துவரும் குற்றங்களும் தடுக்கப்பட்டுவிடும் அல்லவா? ஆகவே உளநோய் உள்ளவர்களை மலடாக்குதல் அல்லது கருவளக்கேடு (Sterilization) அல்லது தனிமைப் படுத்துதல் (Segregation) ஆகியவை சிறந்த முறைகளாகும். மேலும் நவீன காலத்தில், நிரோத், லூப் ஆகியவை கருவுண்டாகாமல் தடுப்பதற்குப் பயன்படுகின்றன வாஸக்டமி (Vasectomy) டூபெக்டமி (Tubectomy) ஆகிய முறைகளும் மலடாக்கப் பயன் படுத்தப்படுகின்றன. மேலும் உளநோயாளி, உளநோய் உள்ள குழந்தைகள் பெறாமல் இருக்க எல்லாவகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். ஹாரி எச். காடார்டு (Harry H Goddard) என்பவர் 1919-ல் எல்லா வகையான குற்றவாளிகளையும் சமுதாயத்திற்கு விரோதமான குழுக்களையும் (Anti-social Groups) ஆராய்ந்ததில் அவர்களின் மனநிலை கீழ்த்தரமான தன்மையுடையதாக (Low Mentality) கீழ்த்தரமான புத்தியை உடையவர்களாக விளங்குகின்றார்கள் என்று அறிவிக்கின்றார். இது அவர்களின் உறுதியற்ற மனநிலையைக் காட்டுகிறது என்று கூறியுள்ளார். பொதுவாக, மன உறுதியற்ற தன்மையிலும் தன்னம்பிக்கையற்ற நிலையிலும் குற்றங்கள் நிகழ்கின்றன. சதர்லாண்டு 1928-29-ல் குற்றவாளிகளின் அறிவுக் கூர்மையைச் சோதனை நடத்த முயற்சி செய்துள்ளார். அதற்காக 1,75,000 குற்றவாளிகளை ஆராய்ந்து மனஉறுதியற்ற தன்மையைக் கண்டறிந்தார். 350 அறிக்கைகள் மொத்த விவரம் மன உறுதியற்ற தன்மைதான் குற்றத்திற்குக் காரணம் என்ற கருத்து வெகுவாகக் குறைந்துவிட்டது என்று கூறுகிறார். அதாவது 1910—1914 ல் 50 சதவீதம் என்றால் 1925—28-ல் 20 சதவீதமாகக் குறைந்து விட்டது என்று அறிவிக்கிறார். மன உறுதியற்ற கைதிகளுக்கும் (Feeble Minded Prisoners), மனநிலை பாதிக்கப்படாத நிலையிலுள்ள கைதிகளுக்கும் (Normal Population) சிறையில் எந்தவித வேறுபாடும் காணப்படவில்லை என்று கூறுகிறார். மற்றக் கைதிகள் ஒழுக்கப்பதிவேடுகளைப் போலவே மனஉறுதியற்ற கைதிகளின் ஒழுக்கப்

பதிவேடுகளும் சிறையில் காணப்படுகின்றன. நாணய வாக்குறுதி மீது கைதியை விடுதலை செய்தல் (Parole) முறையில் விடுதலை பெறுவதிலும் மன உறுதியற்ற கைதிகளுக்கும் மற்றக் கைதிகளுக்கும் வேறுபாடு காணப்படவில்லையென்றும், சாதாரண குற்றவாளிகளில் மீண்டும் மீண்டும் குற்றவாளிகளாக மாறுவதைப் போன்றே மனஉறுதியற்ற குற்றவாளிகளும் விளங்குகிறார்கள் என்றும் கூறுகிறார். ஆனால், பால் உறவுக் குற்றங்களைப் பொறுத்த மட்டில் மற்றக் குற்றவாளிகளைவிட மன உறுதியற்ற குற்றவாளிகள் அதிக அளவில் காணப்படுவதாகக் கூறுகின்றார். இதற்குக் காரணம் பெண்களைக் கண்டவுடனே மனச் சபலம் அடைவது, உணர்ச்சி வயப்படுதல் ஆகும். மனத் தடுமாற்றத்தால் மாமன்னர்களும், சக்கரவர்த்திகளும் பெண்கள்மீது காதல் கொண்டு நாட்டையும், மணிமுடியையும் துறந்த வரலாறு நிறைய உண்டு. மன உறுதியற்ற தன்மை, நரம்புக் கோளாறு, உடலில் கொழுப்புத்தன்மை ஆகியவை இதற்குக் காரணங்கள் ஆகும்.

மேலும் குற்றவாளிகளின் பெற்றோர்கள் குற்றவாளிகளாக இருந்தால் அவர்களும் குற்றவாளிகளாக மாறிவிடுவதற்கு அவர்களின் மன உறுதியற்ற தன்மையைவிட சுற்றுச் சூழ்நிலைகள் தான் காரணம். மன உறுதியற்ற தன்மை பரம்பரையாகப் பெறப்படுகிறது என்ற கருத்துக்குத் தற்காலத்தில் ஆதரவு குறைந்துவிடுகிறது. கோழையாகவும், மன உறுதியும் அற்ற பரம்பரையிலிருந்து மனத் திடமும் வீரமும் செறிந்த மைந்தர்கள் பிறப்பதும் உண்டு. அதனால் மன உறுதியற்ற தன்மைதான் குற்றத்திற்குக் காரணம் என்று முடிவாகக் கூறிவிட முடியாது. மன உறுதியற்ற தன்மையுடன் மற்றக் காரணக் கூறுகளும் இணைவதால் குற்றங்கள் நிகழ்ந்துவிடுகின்றன என்பதுதான் உண்மையான விளக்கமாகும். மன உறுதியற்றவர்கள் அனைவரும் குற்றவாளிகள் எனக் கூறிவிட முடியாது, மனத் திடம், உறுதியுள்ளவர்கள் அனைவரும் நல்லவர்கள் என்று கூறிவிட முடியாது. வல்லவர்களாக இருக்கலாம். ஆனால் நல்லவர்களாக இருப்பது கடினம். ஒருவன் வல்லவனாக மட்டும் இருந்தால் போதாது. நல்லவனாகவும் இருக்க வேண்டும்.

போதிய கல்வி, ஒழுக்கம், பண்பாடு, போதிய உடற்பயிற்சி ஆகியவை அளிப்பதன் மூலம் மன உறுதியற்ற தன்மையைப் போக்க முடியும். போதிய கல்வியறிவு அற்றதனால்தான் குற்றங்கள் அதிக அளவில் நிகழ்ந்துவிடுகின்றன. இந்தியாவில் பல இனங்கள் வாழ்கின்றன. அனைவரும் அறிவால், சமூக வாழ்க்கையின் தரத்தில், மற்ற வசதிகளிலும் ஒரே மாதிரியாக

இருப்பதில்லை. அடிமட்டத்தில் வாழும் மக்கள் கல்வியறிவுடன் பொருளாதார வசதிகளும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் அதிகக் குற்றவாளிகளாக விளங்குகின்றார்கள். எடுத்துக்காட்டாக, அரிசனன். ஆனால் அதே நேரத்தில் உயர்குடி வகுப்பைச் சார்ந்த பிராமணர்கள் (Brahmin) கல்வியறிவு பெற்றிருக்கின்ற காரணத்தினால் ஏழ்மையில் வாழ்ந்தாலும் குற்றங்களைச் செய்வதில்லை. காரணம் அவர்கள் மன உறுதியுடன் விளங்குகின்றார்கள். ஆகவே போதுமான அளவு கல்வியறிவை அனைவரும் பெறக்கூடிய நிலையை உண்டாக்கினால் மன உறுதியற்ற தன்மையையும், குற்ற வொழுக்கங்களையும் குறைக்கமுடியும். கல்வியறிவு இருந்தால் பொருள்தேடும் வழியையும் கண்டறிகிறார்கள். இவற்றால் அவர்களின் வாழ்வு செம்மையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மனக் குறைபாடு அல்லது மன உறுதியற்ற தன்மை முன்பு ஆராயப்பட்டது. இப்பொழுது மனக்கோளாறு நிலை அல்லது பைத்தியம் (Unsoundness of Mind) பற்றி ஆராய்வோம். மனக் குறைபாடு அல்லது மன உறுதியற்ற தன்மைக்கும் மன நோய் அல்லது மனக் கோளாறுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. மனவுறுதியற்ற தன்மை (Feeble Mindedness) அறிவின் வளர்ச்சியின்மைக் குறைபாட்டைக் குறிக்கின்றது. ஆனால் மன நோய், மனக்கோளாறு, பைத்தியம் என்பதெல்லாம் அறிவு குழம்பிய நிலையைக் குறிக்கின்றன. மனக்கோளாறு அல்லது பைத்தியம் பற்றிப் பல தலைமுறைகளாக ஆராயப்பட்டு வந்தாலும் அவற்றிற்குத் தெளிவான வரையறையோ, விளக்கமோ, நோயை ஆராய்ந்து அறியும் முறைகளோ, அவற்றைக் குறைக்கும் முறைகளோ தெளிவாக விளக்கப்படவில்லை. இந்திய குற்றச் சட்டத்தில் 84ஆம் பிரிவு மனக்கோளாறு அல்லது பைத்தியம் பற்றிக் கூறுகிறது. அதாவது மனக் கோளாறினால், தான் செய்வது என்ன செயல் என்று அறியாமல், புரியாமல் செய்தல் அல்லது செயல் புரிந்தாலும் அது தவறானதா அல்லது சட்டத்திற்கு முரணானதா என்று அறிய முடியா நிலையில் செய்யும் செயல் குற்றம் அல்ல என்று கூறுகிறதே தவிர, மனக் கோளாறு அல்லது பைத்தியம் என்றால் என்ன என்பதற்கு வரையறை அளிக்கப்படவில்லை. செயலின் தன்மையையும், செய்யும்போது இருக்கும் மன நிலையையும், செய்யும் முறையையும் வைத்துத்தான் அந்தச் செயல் மனக் கோளாறினால் அல்லது பைத்தியமான நிலையில் செய்யப்பட்டதா என்று அறிய முடியும். ஒருவேளை 'பைத்தியத்திற்கு' வரையறை அளித்துவிட்டால் அந்த நிலை இருப்பதாக நடித்து மற்றவர்களை ஏமாற்றிக் குற்றம் செய்யவும் கூடும் அல்லவா? ஏன் என்றால் மனக்கோளாறு அல்லது பைத்தி

யத்தினல் எந்தக் குற்றம் செய்தாலும் அது குற்றம் அல்ல என்று சட்டம் விலக்கு அளிப்பதால் அதைத் தவருன முறையில் பயன்படுத்த மக்கள் முயற்சி செய்யக்கூடும் அல்லவா? ஆகவே தான் பைத்தியத்திற்கு வரையறை அளிக்கப்படவில்லை, மேலும் பைத்தியம், நபருக்கு நபர் வேறுபடும். மருத்துவ நிபுணர் ஒருவர் 'பைத்தியம்' என்று சான்றிதழ் மூலமாகவோ அல்லது நேரிடையாகக் கூறினலும் நீதிமன்றம் அவனைப் பைத்தியமாக எடுத்துக் கொள்ளாது. நீதிமன்றம் அவன் செயலை ஆராய்ந்து அவன் மனக்கோளாறினல் அல்லது பைத்தியமான நிலையில்தான் செய்தானு என்று ஆராய்ந்து கூறும் முடிவே முடிவானது. அதற்குத்தான் 'தண்டனை விலக்களிப்பு' உண்டு. மருத்துவர் கூறும் பைத்தியத்திற்குச் சட்டத்தில் விலக்களிப்பு இல்லை. இந்தக் கொள்கையைத்தான் இந்தியாவும் இங்கிலாந்தும் மற்ற நாடுகளும் பின்பற்றுகின்றன. அமெரிக்காவில் நீதிமன்றம் வரையறுக்கும் பைத்தியத்திற்கும் (Legal Insanity) மருத்துவர்கள் வரையறுக்கும் பைத்தியத்திர்கும் (Medical Insanity) வேறுபாடு இல்லை. மேக் நாட்டன் (Mc Naughten) 1843 க்குப் பிறகுதான், மூளைக் கோளாறினல் பைத்தியமான நிலையில் குற்றம் செய்தாலும் அது குற்றம் இல்லை என்ற நிலை இருந்து வருகிறது. அதன் அடிப்படையில்தான் இந்திய குற்றச் சட்டத்தின் 84-ம் பிரிவில் வரையறை அளிக்கப்பட்டுள்ளது.

மூளைக் கோளாறு பலவித காரணங்களினல் உண்டாகிறது. இது ஒரு வியாதியினல், நோயினல் மட்டும் வருவதில்லை. பல நோய்களினல் வருவதாகும். ஒன்றிற்கொன்று வேறுபடும். அதாவது எலும்புருக்கி நோய்க்கும் (Tuberculosis), மார்புச் சளி நோய் (Bronchitis) க்கும் வேறுபாடு இருப்பதைப் போன்றதாகும். தெளிவாக அறியக் கூடியதுயும் அதன் தொடக்கத்தையும் அறியக் கூடியதுமான நோய் முடக்குவாதமாகும். (Paralysis). ஆனல் முரண் மூளை நோய் (Schizophrenia) தெளிவாக அறிய முடியாத நோயாகும். அதன் குறிப்பையோ அல்லது பூர்வீகத்தையோ தெளிவாக அறிய முடியாது. ஆகவே பைத்தியத்தின் தோற்றம், மூலம் பற்றிய ஆய்வு (Etiology) செய்து சமுதாயத்திற்கும் அதற்கும் என்ன தொடர்பு என்று ஆராய்தல் வேண்டும். இத்துறையில் ஃபாரிஸ் (Faris), டன்ஹாம் (Dunham) ஆகியோர்கள் உள நோயாளிகளின் சுற்றுச் சூழ்நிலைகள், இடம் ஆகிய வற்றைக் கொண்டு ஆராய்ந்தார்கள். சமுதாய அமைப்பிற்கும், உள நோய்க்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறியுள்ளார்கள். மேலும் எல்லா உள நோய்களும் ஒரே தன்மை வாய்ந்தவை அல்ல. சில முரண் மூளை நோயாகவும் சில வெறியால் விளைந்த

ஒழுங்கீனமாகவும் (Manic depressive disorder) அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார்கள். சமுதாயம்தான் உள நோய்களுக்குக் காரணக் கூருக விளங்குகிறது என்று முடிவாகக் கூறியுள்ளார்கள். மருட்சியான, ஏமாற்றமான கொள்கைகள், கருத்துகளினுலும் (Delusional ideas) இயற்கைக்கு மீறிய ஆர்வத்தினுலும் சித்தப்பிரமை, மூளைக் கோளாறு ஏற்படுவதாக அலெக்ஸாண்டர் கிரால்னிக் (Alexander Gralnick) என்ற ஆய்வாளர் கூறுகின்ருர். மேலும் பிறப்பால் உடன் வருவதல்ல. உடன் நெருங்கிப் பழகுவதாலும் நேரிடையான தொடர்பு கொள்வதனுலும் பைத்தியக்காரத்தனம் பரவுவதாகக் கூறுகின்ருர். இந்தக் கருத்து இக்காலக் கட்சித் தொண்டர்களுக்குப் பொருந்தும். கட்சியின் தொண்டர்கள் வெறியர்களாக மாறிவிடுகின்ற தன்மையைத்தான் இது குறிக்கின்றது. கட்சிப் பற்றுதலினுல் உண்மை, பொய் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து அறியமுடியாத நிலையில் கட்சிக்காக, கொள்கைகாக வெறியர்களாக மாறிவிடுகின்ருர்கள். இதற்கு உறவு முறைகள் தேவை இல்லை. பழக்கம்தான் தேவைப்படுகிறது. இதனுல் உடன்பிறந்தவர்களையே கொலை செய்துவிடுகின்ருர்கள். கொள்கையைத்தான் எதிர்க்கின்ருர்கள் என்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டு மற்றவர்களும் சமுதாயத்தில் தகுதியுடையவர்கள் என்ற எண்ணத்தை மறந்து விடுகிருர்கள். அவர்களும் சமுதாயத்தில் ஒரு நபர் என்ற எண்ணத்தையும் இழந்து விடுகின்ருர்கள். இந்த அடிப்படையில் நடக்கும் கொலைக் குற்றம் ஏராளமானவையாகும். காந்தி, கென்னடி, லிங்கன் ஆகியவர்கள் பலியானதும் கொள்கை வெறியினுல்தான். இந்த வெறித்தன்மை முரண்மூளை நோயைவிட உடல் அமைப்பால் ஏற்படும் உளநோயைவிட கொடியதாகும். கொள்கை வெறி உண்டாகும்போது சமுதாயத்தை, நீதி நேர்மையை அறவே மறந்து விடுகின்ருர்கள். அந்தச் செயலைச் செய்து முடிக்கும் வரையில் பித்துப்பிடித்தவனுக அலைகிருன். இந்த நிலை பெரும்பாலும் இளைஞர் உள்ளத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. வயதானவர்களிடத்தில் மிகவும் குறைந்து காணப்படும். கட்சியின் வெறியால், கொள்கையின் வெறியால், தலைவர்களின் பற்றுதலால் தொண்டர்கள் அடிக்கடி சட்டத்தை மறந்துவிடுகின்ருர்கள். இந்த வெறிசார்ந்த பற்றுதல் நிரந்தரமானது அன்று. இது சூழ்நிலையினுல் மாறக்கூடியது ஆகும். தலைவர்களின் ஒழுக்கத்தைப் பொறுத்து, தொண்டர்களின் வெறி, நன்மைக்கும் பயன்படலாம். அல்லது தீமைக்கும் பயன்படலாம். ஒருவன் தீக்குளித்தல் (Self Immolation) செயல் வெறி சார்ந்த நிலையில் தான் செய்யப்படுகின்றது.

இயற்கையின் வலிமையால், உடல் குறைபாடுகளால், மூளைக் கோளாறுகளினால், உளநோய், சித்தப்பிரம்மை உள்ளவர்களின் சொல்லும், செயலும் வேறுபட்டிருக்கும். அவர்கள் எந்த நேரத்தில் எந்தச் செயலைச் செய்வார்கள் என்றே வரையறுத்துக்கூற முடியாது. அவர்கள் உள்ளம் மற்றவர்களைக் கொலை செய்யும்படித் தூண்டலாம். இதனால் ஒன்றும் அறியாதவன் கொலை செய்யப் படலாம். அதாவது எந்தவிதக் காரணமுமின்றி மற்றவர்களைக் கொலை செய்யும்படி உள்ளம் தூண்டுதல் (Hallucinatory Voice) அந்த எண்ணத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்து கள்ளம் கபடமற்றவர்கள் தாக்கப்பட்டுவிடுவார்கள். அல்லது பைத்தியக்காரர்களின் உள்ளத்தில் பல எண்ணங்கள் தோன்றலாம். அதாவது யாராவது அவர்களைத் தாக்கவோ கொலை செய்யவோ வருவதாக அவர்களே நினைத்துக்கொள்வார்கள். அந்த எண்ணம் வலிவடைந்து பிறகு யார் எதிரே வருகின்றார்களோ அவர்களை விரோதிகளாகக் கருதி அவர்களைத் திடீரென்று தாக்கி விடுவார்கள். அல்லது கொலைசெய்துவிடுவார்கள். ஆனால் அவர்கள் பழிக்குப்பழி செய்யப்பட்டதாக எண்ணிக் கொள்வார்கள். ஒரு தாய் தன் மகளை ஒரு ராணுவ வீரன் கற்பழிப்பதாகக் கனவு கண்டு, பிறகு உடனே எழுந்து, அந்த வீரனை வெட்டுவதாக நினைத்துக் கொண்டு, அருகில் தூங்கிக் கொண்டிருக்கும் மகளையே வெட்டிவிடுகின்றாள். பிறகுதான் தன் மகளையே கொலைசெய்தது அவளுக்குத் தெரிகிறது. தாயின் செயல் கற்பழித்தவனைப் பழிவாங்கும் செயலாக அமைந்தது. ஆனால் உண்மையில் தன் மகளையே கொலைசெய்து விடுகின்றாள். இது உளநோய்க்கு எடுத்துக் காட்டாகும். ஆனால் உளநோய் உள்ளவர்கள் அனைவரும் ஆபத்து உள்ளவர்கள் அல்ல. அவர்களுக்கு உடனே சிகிச்சை அளிக்கவேண்டும். ஆகவே பைத்தியக்காரர்கள், புத்தி பிறழ்ந்தவர்களை உடனடியாக மருத்துவ விடுதியில் சேர்த்துவிடவேண்டும் என்று சட்டம் வலியுறுத்துகிறது. பைத்தியக்காரர்களை இல்லத்தில் வைத்திருப்பது அவர்களுக்கும் ஆபத்து, மற்றவர்களுக்கும் ஆபத்து. ஆகவே அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. பொதுவாக உளநோய் உள்ளவர்கள் குற்றம் புரிந்தால் அவர்களைச் சிறைக்கு அனுப்புவது இல்லை. பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பிச் சிகிச்சை அளித்துக் குணம் அடைந்தபின் விசாரணை தொடங்கும். அல்லது விசாரணை முடிந்தபின் உளநோயாளி என்று முடிவானாலும் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பப்படுவார்கள், சிறு குற்றங்கள் செய்தவன் பைத்தியம் பிடித்தவன், வெறி சார்ந்தவன் என்று அறிவிக்கப்படுவதில்லை. மருத்துவ மனைக்கு அனுப்பிச் சிகிச்சை அளிப்பார்கள்.

பைத்தியம் உள்ள பலர் குற்றங்களையோ அல்லது சட்டத்திற்கு முரணாகவோ செயல்படுவதில்லை. இதை டன்ஹாம் (Dunham) தன் ஆய்வுரையின் மூலம் விளக்கியுள்ளார். 870 ஆண் முரண்மூளை நோய் உள்ளவர்கள் அதாவது 15, 29 வயதிற்குள்ளானவர்கள் இல்லோனிஸ் (Illinois) மருத்துவ விடுதியில் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். அவர்களில் 24 சதம்தான் இளம் குற்றவாளிகளாகவோ அல்லது வயதுவந்த குற்றவாளிகளாகவோ காணப்படுகின்றனர். அதிலும் அதிகமான குற்றங்கள், சிறு குற்றங்களாகக் (Minor Offences) காணப்பட்டன. நினைவு, சொல், செயல், மாருட்டக் கோளாறு (Catatonic) காரணமாக உளநோய் உள்ளவர்களைக் காட்டிலும், அறிவுப் பிறழ்ச்சி, சித்தப் பிரம்மையின் காரணமாக (Paranoid) பைத்தியக்காரர்களாக மாறி உள்ளவர்கள் அதிக அளவில் குற்றவாளிகளாகக் காணப்படுவதாக ஆராய்ந்துள்ளார்கள். இதே போன்று மெக்கேயன் (Michigan) மாநிலத்தில் ஒரு மருத்துவ விடுதியில் 1262 நோயாளிகளை ஆராய்ந்தார். அதில் 21·1 சதம் குறிப்பிட்டத்தக்க குற்றங்கள் செய்துக் இருப்பதாகக் குற்ற அறிக்கை அறிவிக்கின்றது. மேலும் 4·4 சதம் சாதாரண குற்றங்களாகிய அச்சுறுத்துதல், குற்றம் செய்ய முனைதல் ஆகிய குற்றங்களும் சேர்ந்து 25·5 சதமும் ஆகும். இதில் அவர்களின் ஒழுக்கம் ஆராயப்பட்டது. அதாவது 25·5 சதவீதத்தில் 39 சதம் ஏற்கெனவே குற்றவொழுக்கம் காணப்படுகிறது. 61 சதம் நோய் தாக்கிய பிறகு குற்றவொழுக்கம் காணப்படுவதாக அறிவிக்கிறது. பொதுவாக, அவர்கள் மூளை பாதிக்கப்படுவதற்கு முன்பு, சட்டத்திற்கும், சமுதாயத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்கும் ஒழுக்கமுள்ளவர்களாகக் காணப்பட்டதாகவும், நோய் கண்டபின்புதான் அவர்கள் ஒழுக்கம் குற்றவொழுக்கமாக மாறிவிட்டதாகவும் அவர்களின் வாழ்க்கை வரலாறு அறிவிக்கின்றது.

'பைத்தியக்காரன் யார்' என்று கூறுவது கடினமான செயலாகும். அதாவது ஒருவன் நாள் முழுதும் பைத்தியக்காரனாக இருப்பதில்லை. அப்படியும் இருக்கலாம், ஆனால் சிலர் சில நேரங்களில் சாதாரண நிலையில் இருப்பார்கள். சிலர் பகலில் பைத்தியமாக மாறிவிடுவார்கள், இரவில் சாதாரணமாகத் தோன்றுவார்கள். சிலர் பகலில் சாதாரணமாகவும், இரவில் பைத்தியக்காரனாகவும் மாறிவிடுவார்கள். சிலர் காலையிலும் சிலர் மாலையிலும் நேரத்திற்கு நேரம் பைத்தியமாகக் காணப்படுவதும் உண்டு. பைத்தியக்காரர்கள் சாதாரண நிலையில் இருக்கும்போது அவர்களுடன் வியாபாரமும் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அவர்கள் சான்று கூறினாலும் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் செய

லுக்கும் மற்றவர்கள் செயலுக்கும் சட்டத்தில் வேறுபாடு காணப் படுவது இல்லை. பைத்தியம் இல்லாத நேரத்தில் குற்றச் செயல்கள் செய்தாலும் குற்றந்தான். அவர்களுக்கும் மற்றவர்கள் போல் தண்டனை வழங்கப்படும். ஆனால் சிறைக்கு பதில், சிகிச்சைக்கு அனுப்பப்படுவார்கள். பைத்தியக்கார நிலையில் ஒருவன் குற்றம் செய்தால், அது நிரூபிக்கப்பட்டுவிட்டால், அவன் செய்த குற்றத் திற்காகத் தண்டனை அளிப்பது இல்லை. குற்றவாளி என்று தீர்ப்பு அளிப்பது இல்லை. குற்றமற்றவன் என்று தீர்ப்பு அளிப் பார்கள். ஆனால் அவன் சிகிச்சைக்கு அனுப்பப்படுவான். பைத்தியக்காரனுக்குச் சட்டம் விலக்கு அளிப்பதைப் போன்று தடுக்க முடியாத அல்லது பெருவலி வாய்ந்த உணர்ச்சியின் வேகத்தால் (Irresistable impulse) செய்யப்பட்ட குற்றவாளி களுக்கும் தன்னியக்கமுள்ள நிலையால், பண்பால் (Automatism) குற்றம் புரிந்தவர்களுக்கும் அமெரிக்காவில் குற்ற விலக்கு அளிக் கிறார்கள். காரணம் அந்தச் செயல்கள் குற்றமனத்தால் செய்யப் படுவன அல்ல என்பதுதான். ஆனால் உளநோய் பைத்தியம் உள்ளவர்களாக விளங்கினாலும், தான் செய்வது குற்றச் செயல் என்று அறிந்திருந்தார்களேயானால், அவர்களின் உள நோயைப் பற்றிக் கவலைப்படாமல் குற்றத்திற்குத் தண்டனை வழங்கப்படும்.

சில தலைமுறைகளாக மூளை அலைகளை (Brain Waves) ஆராய்ந்து குற்றவாளிகளுக்கும் குற்றமற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக மூளையை அளவிடும் கருவி (Electroenclephalogroph Technique) பயன்படுத்தப்பட்டது. அதைக்கொண்டு குற்ற வாளிகளுக்கும், பைத்தியம் சார்ந்த குற்றவாளிகளுக்கும் உள்ள அறிவு வேறுபாட்டைக் காண முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் தெளிவான முடிவுக்கு வரமுடியவில்லை. மூளையின் அமைப்பு, மற்ற அமைப்புகளும் எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே தன்மையாக அமைந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

மூளையின் தன்மையை ஆராயும் முறை சமீப காலத்தின் வளர்ச்சியாகும். பின் மூளையின் அமைப்பைக் கொண்டு (Post Encephaltic) ஒருவனுடைய ஒழுக்கத்தை வரையறுக்க முடியும் எனச் சமீபத்தில் நிரூபித்துள்ளார்கள். மூளை வீக்க நோய் (Epidermic Encephalitis) அல்லது மூளை வீக்க மயக்கம் அல்லது மூளைச் செயலின்மை (Encephalitis lethargia) ஆகிய வகைகள் சமீப காலத்தின் தோற்றமாகும். இந்த அமைம்பு மைய நரம்பு களைத் தாக்கி உறுப்புகளைச் சிதைத்து விடுகிறது. இது குழந் தைப் பருவத்தில் தாக்கப்பட்டுவிட்டால் குழந்தையின் ஒழுக்கம்

பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனுல் அசட்டை மனப்பான்மை, மயக்கம், சுணக்கம், வேகக் குறைவு, தடுக்கமுடியாத நிலை அல்லது கட்டுப்படுத்த முடியாத நிலை ஆகிய குணங்களுக்கும் செயல்களுக்கும் ஏதுவாகிவிடுகிறது. மேலும் சிறு சண்டைகள், திட்டுதல், பள்ளிக்குச் செல்லாமல் நாடோடியாகத் திரிதல் ஆகிய ஒழுங்கீனமான செயல்கள் அடிக்கடி நிகழும்.

இந்த நோய் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏன் என்ருல் அது நரம்புகளின் அமைப்பைத்தாக்கி அதைச் சிதைத்து விடுகிறது. இது குற்ற ஒழுக்கம் பிறப்பதற்கு ஏதுவாக அமைந்து விடுகிறது. அதாவது மைய நரம்புகளின் அமைப்பைச் சிதைப் பதால் கட்டுப்படுத்த முடியாத நிலை அல்லது தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதனுல் திறமை குன்றிவிடுகிறது. கட்டுப்பாட்டுத் தன்மையும் குறைந்து விடுகிறது. அதன் முடி வாகக் குழந்தை திடீர் இயக்கத்தால் அல்லது தாக்குதலால் செயல் படுகிறது. மேலும் குழந்தைக்குத் தாழ்வு மனப்பான்மை வளர்ந்து விடுகிறது. பலரின் கேலிக்கு ஆளாகிறது. குழந்தை ஏமாற்றத்திற் குள்ளாகிறது. இந்த நிலையிலுள்ள குழந்தைகளை அதே நிலையி லுள்ள குழந்தைகளுடன் சேர்த்து வளர்ப்பதனுல் குழந்தையின் தன்மை முன்னேற்றம் அடையும். உணர்ச்சிவயப்படுவதனுலும், மற்றவர்களின் செயலெதிர்ச் செயல்களினுலும் குழந்தையின் ஒழுக்கம் பாதிக்கப்படுகிறது. பைத்தியத்தில் பலவகை உண்டு. அவை காரியப் பைத்தியம் அல்லது தன்முனைப்புள்ள பைத்தியம் (Ego centric) தெளிவற்ற நிலைப் பைத்தியம் (In adequate), நாடோடியான பைத்தியம் (Vagabond) என்று பலவகையுண்டு. மற்றும் சிலர் முரண்மூளைநோய் வகையான பைத்தியம் (Schizoid types) அறிவுப் பிறழ்ச்சி (Paranoid types) சித்தப் பிரமை வகையான பைத்தியம் (Cyclothymic types) அதிக உணர்ச்சியும், குறைந்த உணர்ச்சியும் கொண்ட பைத்தியம், பால் உறவில் வெறி கொண்ட பைத்தியம் (Sexual Deniant) மது பைத்தியம், மயக்கப் பொருளை விரும்பும் பைத்தியம் (Drug Addicts) என்று பிரிப்பதும் உண்டு.

உளநோய்க்கான பண்புக் கூறுகளுக்கான (Psychopathic Personalities) வரையறைகள் அளிப்பதற்குப் பலர் பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். உளநோய் உள்ள குற்றவாளிகளில் 20-29 வயதிற்குள் அதிக அளவில் காணப்படுவதாகக் குறிப்பிடு கின்ருர்கள். மேலும் 30 வயதை அடைந்தவுடன் உளநோய் அற்றவர்களாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்ருர்கள். உளநோய் உள்ளவர்கள் 30 வயதைக் கடந்ததும் குற்றம்

புரியாமல் இருந்துவிடுவதாயும் அறிவிக்கின்றுர்கள். அமெரிக்காவில் பல மாநிலங்கள் பால் உறவு, உடல் உறவுத் தாக்குதல் அதிகம் நடந்துள்ளதாயும், அதனுல் அவற்றைத் தடுக்கும் பொருட்டு, பால் உறவு உள்ள உளநோய் சட்டங்கள் (Sexual Paychopath Laws) அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டன. ஆனுல் பால் உறவு உளநோய்க்கு (Sexual Psychopath) வரையறையோ, விளக்கமோ அளிக்கப்படவில்லை. இதனுல் பால் உறவு உளநோயாளியை எவரும் அடையாளம் காணமுடியவில்லை. பால் உறவு குற்றவாளிகளையும் தண்டனை செய்ய முடியாமல் போயிற்று. இதனுல் சட்டமும் பயனற்றுப் போனதுடன் நடைமுறையும் செயலற்றுப் போயிற்று. சாதாரண பால் உறவுக் குற்றவாளிக்கும், பால் உறவு உளநோயாளிக்கும் வேறுபாடு காணமுடியாததே இதற்குக் காரணமாகும். இந்தியாவில் வடமாநிலத்தில் ஒரு சாமியார் பெண்களை வன்புணர்ச்சி செய்துவிட்டுப் பிறகு கொலை செய்துவிட்டான் என்று செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இதை நோக்கும்போது அவன் பால் உறவு உளநோய் குற்றவாளியாக இருக்கக்கூடும் என நம்புவதற்கு இடமுண்டு. பால் உடல் உறவின் வெறிதான் இதற்குக் காரணம். ஆனுல், வன்புணர்ச்சி செய்தபிறகு கொலை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆகவே அதற்குரிய காரணத்தையும் ஆராய்தல் வேண்டும்.

பல்வேறுபட்ட பண்புக் கூறுகள் (Different Personalities)

உள இயல் சார்ந்த பல்வேறுபட்ட பண்புக் கூறுகளை முன் பகுதியில் ஆராய்ந்தோம். இங்கே உள்ளத்தோடு உடலும் இணைந்த தன்மையைப் பற்றி ஆராய்வோம். உணர்ச்சி வயப்பட்ட தன்மை அல்லது உணர்ச்சி வயப்பட்ட உறுதியின்மை (Emotional Instability) என்பது உடல் பலவீனத்தாலும் மன உறுதியின்மையினுலும் விளைந்ததுதான். இயற்கையறிவு, இயல்புணர்வு, மனவெழுச்சி, மன உணர்ச்சி, மனப்போக்கு, மனநிலை, மன இயல்பு, மனப்பாங்கு, உணர்ச்சி இயல்பு, நேர்மை, தீர்ப்பு, நேர்மையான கொள்கை ஆகிய உணர்ச்சிகளின் தன்மைகளினுல் வலியத் தாக்கும் தன்மை, எச்சரிக்கை, விழிப்புடைமை, சான்றேர்க்குக் கீழ்ப்படிதல், மனத்தைக் கட்டுப்படுத்துதல், கோபத்தைக் கட்டுப்படுத்துதல், ஏமாற்றம், அசையாத் தன்னம்பிக்கை, தன்னுறுதி, மக்களின் நன்மை நாடுதல், வருமுன்னர் அறிதல், நன்மையும் தீமையும் குறிப்பால் அறிதல் ஆகிய பண்புக் கூறுகள் அமைகின்றன. மேற்கூறிய உணர்ச்சிகளையும் பண்புக் கூறுகளையும் ஆராய்ந்து ஒருவனின் முழுத் தன்மையை

அறிந்துகொள்ள முடியும். மக்களின் அறிவுத் திறத்தையும், ஆற்றலின் அளவையும் அறிந்துகொள்ள ஏதுவாகும். மேற் கூறிய தன்மைகள், பண்புக் கூறுகள் ஆகியவற்றிற்கும், உள நோய்க்கும் அதிக வேறுபாடு உண்டு. நியூயார்க்கில் (New York) இந்த வேறுபாட்டை 1948-ல், 2537 நபர்கள் மன நோய் மருத்துவ நிலையத்திற்கு வருமுன்னர் ஆராய்ந்ததில் 19·4 சதம் உளநோய் உள்ளவர்கள் என்றும் 76·1 சதம் மாறுபட்ட பண்புக் கூறுகள் அல்லது இயல்புகளான (Personality Deviations) வலியத் தாக்கும் தன்மை (Aggressivenes.) உணர்ச்சி வயப்பட்ட உறுதியின்மை, அடிக்கடி மனம் மாறும் தன்மை அல்லது இயல்பு, பொதுவான மாறுபாடுள்ள இயல்பு ஆகிய பண்புக் கூறுகளைக் கொண்டவர்கள் எனக் கண்டறியப்பட்டது. ஆனல் இந்த ஆய்வுரை, எந்த நிலையில், எப்படி, எங்கே பண்புக் கூறுகள் மாறுபடுகின்றன என்பதற்கான விளக்கங்களை அளிக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட வேறுபட்ட பண்புக் கூறுகள் குற்ற வாளிகளிடத்தில் மட்டும் காணப்படும். குற்றமற்ற பொது மக்களிடத்தில் காணமுடியாது என்பதற்கு எந்தவித ஆதாரமும் உறுதியும் அளிக்கப்படவில்லை. இதே முறையில் மற்றும் பல வல்லுநர்கள் ஆராய்ந்தார்கள். அவர்களும் தெளிவான விளக் கங்கள் அளிக்கவில்லை. ஏறத்தாழ 113 ஆய்வுகள் நடத்தி யுள்ளார்கள், அவற்றின் மொத்த ஆய்வுரைகளிலிருந்தும் 'குற்றவொழுக்கம்' உள்ளவர்களுக்கும் கட்டுப்பாடு அல்லது ஒழுக்கம் உள்ளவர்களுக்கும் இடையே ஒரு பண்புக் கூறு வேறுபடுவதாகக்கூட அறிவிக்கப்படவில்லை. அதாவது எந் தெந்தப் பண்புக் கூறுகளினுல் குற்றவொழுக்கம் உள்ளவர்கள், நல்லொழுக்கம் உள்ளவர்களைவிட வேறுபடுகிருர்கள் என்று தெளிவாக அறிவிக்கப்படவில்லை. எல்லாப் பண்புக் கூறுகளும் இரு சாராரிடத்திலும் கூட்டியோ, குறைத்தோ காணப்படுவதாகத் தெளிவான முடிவுக்கு வரமுடியவில்லை என அறிவிக்கிருர்கள். ஆனல் சமீபத்தில் நடத்திய மனிதப் பண்பு இயல்புக் கூறுகள் ஆய்வு முறையில் (Personality Inventory) சில குற்றவாளிகளுக்கும் குற்றமற்றவர்களுக்கும் பண்புக் கூறுகள் மாறுபடுவதாகவும் ஆனல் மற்றவர்களிடம் காணப்படவில்லை என்றும் அறிவித் துள்ளார்கள். ஆனல் பண்புகளின் இயல்புகளைக்கொண்டு ஒருவன் கட்டுப்பாடு உள்ளவஞ, கட்டுப்பாடு அற்றவஞ என்பதை அறிய முடியும் என உறுதியளிக்கின்ருர்கள் வல்லுநர் கள். ஆனல் அதே நேரத்தில் குற்றமற்றவர்களிடத்தில் அதிகக் கட்டுப்பாடு, குறைந்த கட்டுப்பாடு ஆகிய குணங்கள் காணப்படுகின்றன என்று ஆராய்ந்து உள்ளதனல் இந்தப் பண்பு இயல் கூறுகளைக் கொண்டு யார் குற்றவொழுக்கத்தில்

ஈடுபட்டுள்ளார், எந்த நிலையில் குற்றவொழுக்கத்தை நாடு கின்றார் என்பதை அறிய உதவியாக அமையவில்லை. ஆனால் இந்த பண்புக் கூறுகள் இயல்பை ஆராய்வதனால் குற்றவாளி களைச் சீர்திருத்தி, மறுசீர் அமைத்து, புதுவாழ்வு அளிக்கப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

பண்புக் கூறுகள் இயல்பு மாறுபடுவதற்கு மனநிலை திரிந்த தன்மை, உளநோய் ஆகியவைதான் காரணம் என்று ஏற்றுக் கொண்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எண்ணக் குலைவு அல்லது செயல்குலைவு (Frustration) ஏமாற்றம் ஏற்படு மேயானால் உணர்ச்சியின் வேகத்தால், உள்ளத்தின் குழப் பத்தால் தன்னை மறந்து, தன் நிலை மறந்து, வலியத் தாக்குதல் நிலைமையை உருவாக்கி விடுகிறது. வலியத் தாக்குதல் என்பது குற்றவொழுக்கத்தின் செயல் வடிவமாகும். ஆனால் ஏமாற்றத் தால், எண்ணக் குலைவால் வலியத் தாக்கும் இயல்பு உண்டாகிறது என்பது முற்றிலும் உண்மையன்று. அதேபோன்று 'வலியத் தாக்குதல்' இயல்பும் குற்றத் தன்மைக்குத் தேவையான தொடர்பு என்று கூறிவிடமுடியாது. ஏன் என்றால் இன்று எவ்வளவோ பேர்கள் வாழ்க்கையில் ஏமாற்றத்தைச் சந்தித்து வருகிறார்கள். அவர்கள் அத்தனை பேருமா வலியத் தாக்குதலில் ஈடுபடுகின் றார்கள்? இல்லையே. அதேபோன்று வலியத் தாக்கும் தன்மை தான் குற்றவொழுக்கத்திற்கும், குற்றத் தன்மைக்கும் காரணக் கூறு என்றால் எவ்வளவோ பேர் வலியத் தாக்குதலில் ஈடுபடுகின் றார்கள். இதனால் அவர்கள் தொடர்ந்து குற்றவாளிகளாகவா மாறிவிடுகின்றார்கள்? ''தீங்கினர் கண்ணில் தெரியாத தூரத்தில் நீங்குவதே நல்லநெறி'' என்பதற்கு ஏற்ப மக்கள் ஒதுங்கிச் செல்லும்போது அவர்கள் குற்றவாளிகளாக மாறுவதற்கு இட மில்லை. ஆனால் வலியத் தாக்கும் இயல்புடையவர்கள் குற்ற வாளிகளிடையே அதிகமாகக் காணப்படுவர் என்பது உண்மை யாகும்.

ஆகவே, உணர்ச்சி வயப்பட்ட தன்மை, இயல்புகள், மாற்றம், ஏமாற்றம்' எண்ணக் குலைவு, வலியத் தாக்கும் தன்மை அல்லது இயல்பு ஆகியவைதாம் குற்றவொழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் காரணக் கூறுகள் என்பதற்கு இதுவரையில் யாரும் தெளிவாக ஆராயவில்லை. மேற்கூறிய இயல்புகள் மற்றக் காரணக் கூறுகளுடன் இணையும்போது குற்றவொழுக்கத்திற்கும், குற்றத் தன்மைக்கும் ஏதுவாகிறது என்பது உண்மையாகும்.

வெறிய விளைவு அல்லது வெறிய நச்சுத்தன்மை (Alcoholism)

பிறப்பின் தன்மை, உடல் அமைப்பு, உள்ளத்தின் இயல்பு, உறுப்புகளின் செயல்களின் தன்மை ஆகியவற்றை ஆராயந்து குற்றத்திற்கும் குற்றவொழுக்கத்திற்கும் உள்ள தொடர்பினை ஆராயப்பட்டது. அவை இயற்கை அமைப்பின் இயல்பு களினால் விளைகின்ற விளைவுகளாகும். செயற்கையின் பழக்கத்தினால் ஏற்படும் இயல்புகளின் விளைவுகளினால் விளையும் விளைவு களைப்பற்றி ஆராய்வோம். இவை. பொதுவாக, மது அருந்துதல், மயக்க மருந்துகள் உட்கொள்ளுதல், ஆகியவற்றின் பழக்கத்தால் உடலில் நச்சுத்தன்மை அதிகரித்து வெறிய விளைவு களுக்கு ஏதுவாகிறது. இயற்கையின் சூழ்நிலை உளநோய்க்குக் காரணக் கூறாக அமைந்து விடுகிறது. செயற்கைப் பழக்கத்தினால் உளநோய் வருகிறது. முன்னதைக் குணப்படுத்துவது கடினம். பின்னதைக் குணப்படுத்துவது எளிது. முதலில் மது அருந்துதலைப்பற்றி ஆராய்வோம் மது அருந்துதல் குற்றம். இது நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் மாறுபடும். மது அருந்துவதற்கும், குற்றவொழுக்கத்திற்கும் நேரடித் தொடர்புண்டு. மதுவின் மயக்கத்தால், வெறியால் சட்டங்களை மீறுவதற்கும் ஏதுவாகிறது. பொது இடங்களில் குடித்தல், குடித்துவிட்டு கார், லாரி போன்ற மற்ற வாகனங்களை ஓட்டுதல் குற்றமாகும். மேலும் மதுவின் மயக்கத்தால், கொலைக் குற்றம், வன்புணர்ச்சி, தாக்குதல், கொடுங்காயம், பொது அமைதி குலைத்தல், ஆகிய குற்றங்கள் புரியப்பட்டு வருகின்றன. பொதுவாக, மது அருந்து பவர்கள் பொருளாதாரக் கீழ்நிலையில் உள்ளவர்கள், நாடோடி களாகவும் இல்லத்தைப் பேணிக்காக்கத் தவறியவர்களாகவும், இல்லங்களில் அமைதி குலைந்து எப்பொழுதும் கூச்சல், குழப்பம், சண்டை ஆகியவற்றுடன், வீட்டிலுள்ள பாத்திரங்களைத் திருடி விற்றுவிடுதல் அல்லது அடகு வைத்துக் குடித்து விடுதல், சிறு குழந்தைகளைப் பராமரிக்காமல், பள்ளிக்கு அனுப்பாமல், சீர் கெட்ட நிலையில் அலைந்து திரியும்படி விட்டுவிடுதல் ஆகிய செயல் களுக்கும் ஏதுவாகின்றன. பொதுவாக, மது அருந்துதல், வலியத் தாக்குதல், கோபம் ஆகியவற்றை வெளிப்படையாக வெளிப்படுத்தாவிட்டாலும், இது உடல் வலிமை, அறிவுத் திறமை, உற்பத்தித் திறன், உன்னிப்பு, தொழில் உன்னிப்பு, குடும்ப நலம். பொது நலம், ஆதாயம் ஆகிய திறமைகளை வெகுவாகக் குறைத்து, வரும் வருமானத்தை மது அருந்துவதற்காகவே செலவு செய்துவிடக் கூடும். ஆகவே மதுவின் மயக்கத்தால் சீர்கெட்டவர்களும், சீர்கெட்ட குடும்பங்களும் ஏராளம், இறுதியில் திருடுதல், கொள்ளையிடுதல், கொலைசெய்தல் ஆகிய குற்றங்களில் முடிவடைகின்றன.

மது அருந்தும் குற்றவாளிகளுக்கும், மது அருந்தாத குற்றவாளிகளுக்கும் குற்றவொழுக்கத்தில் வேறுபாடு உண்டு. அதாவது மது அருந்தும் நபர் மயக்கத்தினுல் குற்றத்தில் ஈடுபடுகின்ருன். அந்த மயக்கம் இல்லாதபோது குற்றம் புரியாமல் இருக்கின்ருன் அல்லது சட்டங்களை மீறுவதற்கு முனைவதில்லை. மது மயக்கம் இல்லாதபோது புரியம் குற்றங்கள் பல்வேறு காரணக் கூறுகளினுல் செய்யப்படுகின்றன. ஆனுல் மது மயக்கத்தால் செய்யும் குற்றங்கள் பல்வேறு கூறுகளின்பால் செய்கின்ருன் என்பதல்ல. மது மயக்கத்தால் ஏன் குற்றம் செய்கின்ருன் என்பதற்குத் தெளிவான, உண்மையான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. பொதுவாக, சிறுமூளை பாதிக்கப்படுவதனுல் மயக்கம் உண்டாகிறது. மயக்கத்தின் தன்மையால், தான் செய்வது தவரு அல்லது சரியா என்பதை உணராத நிலையில் செய்கின்ருர்கள் என்பது பொதுவான விளக்கம் ஆகும். இந்த விளக்கத்தை முடிவானதாக ஏற்றுக்கொள்ளமுடியாத நிலை உள்ளது. ஏன் என்ருல் வசதியுள்ள மேலிடத்தார் மது அருந்துகின்ருர்கள். ஆனுல் அவர்கள் குற்றங்கள் புரிவதில்லை. மாருக, இன்பமாக, பாடி. பேசி காலத்தைக் கழிக்கின்ருர்கள். ஆனுல் அதே நேரத்தில் அடிமட்ட நிலையிலுள்ளவர்கள் மது அருந்தியவுடன் சண்டையைத் தொடங்கி விடுகின்ருர்கள். உடனே குற்றத்தைச் செய்து குற்றச் சட்டத்தை மீறியவர்களாக ஆகிவிடுகின்ருர்கள். இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும், இவ்வாறு காணப்படும் நகரமானுலும் சரி, கிராமம் ஆனுலும் சரி, பொருள் படைத்தவர்கள் மது அருந்தியும் அமைதியாக மேலும் இன்பமாகக் காணப்படுகின்ருர்கள். அடிமட்டத்தில் வாழுபவர்கள் நகரத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்க்கை, செயல் யாவும் நரக வாழ்க்கையாகவும், நரகச் செயலாகவும், காட்சியளிக்கின்றது. மேலும் மது அருந்தும் அனைவரும் குற்றங்களைச் செய்கின்ருர்கள் என்று கூறிவிட முடியாது. குற்றம் செய்வதும், செய்யாமல் இருப்பதும் நபருக்கு நபர் வேறுபடுகிறது. மேலும் மது அருந்தியவுடன் சிலர் வலியச் சண்டைக்கு முனைதல், வாய்ச்சண்டையில் முனைதல், ஆகிய செயல்களில் ஈடுபடுவதற்குக் காரணம் மதுவின் மயக்கத்தால் என்ன பேசினுலும், என்ன செய்தாலும் மற்றவர்கள் தவருக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற அடிப்படையில், தாறுமாருகப் பேசுவதாலும், வலியச் சண்டை இழுப்பதிலும் முனைகின்ருர்கள். 'கள்குடியன் பேச்சு பொழுதுவிடிந்தால் போச்சு' என்ற பழமொழி மக்களிடையே அதிக அளவில் பரவியுள்ளது. ஆகவே குடிகாரன் சண்டையும் உண்மையானதாக இருப்பதில்லை. இரவில் குடித்துவிட்டுச் சண்டை போடுவான். அவனே காலையில் எழுந்தவுடன் அமைதியாகக் காணப்படுவான்.

யாராவது ஏன் இரவு அப்படிச் சண்டையில் ஈடுபட்டாய் என்று வினவினால், தான் அப்படிச் சண்டை போட்டதாகவே ஞாபகம் இல்லையே என்று கூறுவான். மேலும் சண்டையிட்டவர்களுடன் வலியச் சென்று பேசிக்கொள்வான். இது குடிகாரர்களிடத்தில் சாதாரணமாகக் காணப்படும் பண்பாகும்.

மயக்கத்தினால் விளையும் வெறிய நச்சுத்தன்மை ஒருவித நோயா? என்ற பிரச்சினை வெகுவாக உள்ளது. அநேக உள நோய் மருத்துவர்கள் மதுவின் வெறித்தன்மையை ஆராய்ந்துள்ளார்கள். வெறிய நச்சுத்தன்மையானது ஒருவித நாடோடித் தன்மைக்கு (Vagabondage) அல்லது உண்மை நிலையிலிருந்து விடுபட்டு மயக்க அல்லது மாயத் தோற்றத்திற்கும் போய்விடுவதற்கு ஏதுவாகிறது என்று கூறியுள்ளார்கள். இதை நோக்கும் போது உளநோயாளியும், மது அருந்துகிறவர்களும் ஏறத்தாழ ஒன்று என்று அறியமுடிகிறது. வெறிய நச்சுத் தன்மையென்பது உளநோயின் ஒரு பிரிவாகக் காணப்படுகிறது. குடிப்பழக்கம் நாளடைவில் குடிப் பைத்தியமாக அல்லது குடிவெறியாக மாறிவிடுகிறது என்பது வெளிப்படையான உண்மையாகும். அதிகக் குடியினால் உடல் பாதிக்கப்படுகிறது என்பதும் உண்மை. உடல் பாதிக்கப்படுவதனால் வலிமை குன்றிவிடுகிறது, உள்ளம் சபலம் அடைகிறது. இதனால் ஒழுக்கம் சீர்கெடுகிறது. வாழ்க்கையில் வறுமை, வெறுப்பு, நோய், துன்பம், சலிப்பு இவைதாம் மிஞ்சுகின்றன. இறுதியில், சாதாரண காரணத்திற்குக்கூட பிறரைக் கொலை செய்துவிடுகின்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. தமிழகத்தில் மதுவிலக்கு நீக்கப்பட்டபின் குடிகாரர்களினால் ஏற்பட்ட வலியச் சண்டைகள். கொடுங்காயம், பொது அமைதி குலைத்தல், கொலைக் குற்றம் ஆகியவை அதிகரித்துவிட்டன. 1974 ஏப்ரல் மாதத்தில் வட ஆற்காடு மாவட்டத்திலும். சென்னையிலும் அடிமட்டத்திலுள்ள சுமார் 100 க்கும் மேற்பட்ட குடிகாரர்களை அணுகி 'குடித்தபின் ஏன் வலியச் சண்டைக்குச் செல்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, 'குடித்தபின் போதையின் மயக்கத்தில் என்ன பேசிவிட்டாலும், பிறகு விசாரணை செய்யும்போது, வினவும் போது, தனக்கு ஒன்றும் தெரியாது' என்று கூறித் தப்பித்துக் கொள்ளலாம் என்றனர். 'குடித்தபின் குறிப்பாக மனைவியிடம் ஏன் சண்டையிடுகிறீர்கள்' என்று கேட்டதற்கு, குடித்தபின் எதைக் கேட்டாலும் மனைவி குடிவெறியில் அப்படிப் பேசுவதாக எண்ணிக் கொள்வாள், மேலும் சாதாரண நிலையில் அப்படிக் கேட்க முடியாது என்றனர். குடிவெறியில் மனைவியின் நடத்தையைப்பற்றித் தாறுமாறாகப் பேசுவது, பொதுவாக கீழ்மட்ட நிலை மக்களின் பழக்கமாய்விட்டது. மனைவியின் நடத்தையைப்

பற்றித் தாறுமாருகப் பேசுவதற்குச் சாதாரண நிலேயிலிருக்கும் போது தைரியம் இருப்பதில்லே. ஆகவே, குடிவெறியைப் பயன் படுத்திக் கொண்டு அவ்வாறு பேசுகின்ருர்கள். அவர்கள் காலேயில் மனேவியுடன் அன்பாகப் பேசுவதையும், மனேவியும் இரவு ஒன்றும் நடக்காத மாதிரியும் நடந்துகொள்வாள். சிலவேளே களில் சூழ்நிலேகளின் காரணத்தால் சிறுசண்டைகள் விபரீதமாகி விடுகின்றன. ஆனல் மேல் நிலேயில் வாழும் மக்கள் தாங்கள் குடிப்பது மனேவிக்கே தெரியாதவாறு குடிக்கிருர்கள். குடிப்பது தெரிந்தால் மனேவி கோபிப்பாள் அல்லது (விவாகரத்து) மண முறிவுக் கோருவாள் என்ற அச்சம் ஒரு பக்கம். பெரும்பாலும் மனேவியின் அன்பிற்குக் கட்டுப்பட்டவர்களாகவே விளங்குவதால் அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத் திற்காக அளவோடு குடித்தும், குடிவெறியை அடக்கியும், பழக்கப் படுத்திக் கொள்ளுகிருர்கள். மேலிடத்தில் வாழ்பவர்களுக்கு பொருளாதார வசதி, மற்றக் கேளிக்கை வசதிகள் ஆகியவை வேண்டும் அளவிற்கு இருப்பதாலும், சமுதாயத்தில் அவர்களுக் கென்று இருக்கின்ற தனித் தகுதிகளேக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலுைம், வீடுகள், கிளப்புகள் போன்ற தனியான மறைவு இடங்களில் குடித்துவிட்டு அமைதியாக இருந்து விடுகின்ருர்கள். ஏழைகளுக்கு மேற்கூறிய வசதிகளோ அந் தஸ்தோ இல்லாமையினுல் பொது இடங்களில் குடிப்பது, கண்டபடி பேசுவது, மனேவி மக்களுடன் சண்டையிடுவது, அண்டை வீட்டாருடன் சண்டைக்குப் போவது போன்ற செயல் களில் ஈடுபடுகின்ருர்கள். மேலும், அவர்களேச் சுற்றியுள்ள குடும் பத்தினரும் ஏறக்குறைய அதே நிலேயில் இருப்பதால் தகுதியைப் பற்றி கவலேப்படுவதே இல்லே. ஆக மேற்கூறிய சூழ்நிலேகள்தாம் குற்ற ஒழுக்கம், குற்றத் தன்மை, குற்றச் செயல் ஆகியவை பரவு வதற்குக் காரணமாய் அமைகின்றன. வெறும் குடிப்பழக்கம், குடிவெறி மட்டுமே குற்றவொழுக்கம், குற்றச்செயல் ஆகிய வற்றுக்குக் காரணமாய் அமைவதில்லே. குடிப்பழக்கம் அற்றவர்கள் அனேவரும் நல்லவர்கள் என்ருே குடிப்பழக்கம் உள்ளவர்கள் அனேவரும் கெட்டவர்கள் என்ருே சொல்ல முடியாது. ஆகவே, குடியுடன் மற்றக் காரணக்கூறுகள் இணேவதனுல்தான் குற்ற வொழுக்கம், குற்றச்செயல் நிகழ்கின்றன. ஆனல் சூழ்நிலே களுடன் குடி இணேவதினுல் குற்ற ஒழுக்கமும் குற்றச் செயல்களும் ஓரளவு அதிகரித்து விடுகின்றன என்பதும் மறுக்கமுடியா உண்மை யாகும். குடியினுல் பொதுவாக, திருடுதல், கொள்ளே அடித்தல், கற்பழித்தல் அல்லது வன்புணர்ச்சி, கொலேக் குற்றம் ஆகியவை அதிகரிப்பதற்கு ஏதுவாகின்றன. ஆனல் மற்ற சுற்றுச் சூழ்நிலேகளினுல் மேற்கூறிய குற்றங்கள் நிகழ்ந்தாலும், குடியினுல்

அவை அதிகரித்துவிடுகின்றன. ஆகவே, மதுவிலக்கு குற்ற ஒழுக்கத்தை, குற்றச் செயலைக் கட்டுப்படுத்த, தடைசெய்ய ஏதுவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்தியாவில் பல மாநிலங்களில் மதுவிலக்கைச் செயற்படுத்தாமல் ஒரு சில மாநிலங்களில் மட்டும் செயல்படுத்துவது ஏற்றதல்ல.

அடுத்து, மயக்க மருந்து (அல்லது) மயக்கப் பொருள்களைப் பற்றி ஆய்வோம். (Narcotic Drugs or Narcotic Things) மயக்க மருந்து, மயக்கப் பொருள்களை உட்கொள்வதனால் விளையும் விளைவுகளையும், அவை குற்ற ஒழுக்கத்திற்கு,-குற்றச்செயலுக்கு எவ்வாறு தொடர்பு உள்ளன என்பனவற்றை ஆய்வோம். கஞ்சா (Hashish, Charas), பங்கி (Bhang), அபினி (Morphine), எல்.எஸ் டி. (L.S.D.) ஆகிய பொருள்கள் மயக்க நிலைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் அதிக அளவில் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்கள். குறிப்பாகக் கல்லூரி மாணவர்கள், மாணவிகள் ஆகியவரிடையே இப் பழக்கம் வேரூன்றிவிட்டது. சிகரெட்டில் உள்ள புகையிலையைத் தட்டி விட்டு அதில் கஞ்சாவை நிரப்பிப் புகைக்கின்றனர்கள். பங்கியைக் (Bhang) பீடா அல்லது செம்பால் (Rose Milk) ஆகியவற்றுடன் கலந்து உண்ணுகின்றனர்கள் L. S. D. ஐ மாத்திரையாக உட் கொள்கிறார்கள். இவற்றால் ஏற்படும் மயக்க நிலையில் குதிநடனம் (Tripping), நிர்வாணமாக இருத்தல் போன்ற செயலில் ஈடுபடு கின்றனர்கள். கல்லூரி மாணவ மாணவிகளிடையே சமரசநிலை, பால் பாகுபாடு அற்றநிலைகளை உண்டாக்கி, ஆணும் பெண்ணும் இணைந்து நடனமாடுவதற்கு இம் மயக்க மருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன. உடல் உறவுக்கு எளிதில் இசைவுதர பெண்களுக்கு மயக்க மருந்துகளைக் கொடுத்து அவர்கள் மனோநிலையை மாற்றி விடுகிறார்கள். பொதுவாக மாணவர்கள், ஹிப்பிகளிடையே இப் பழக்கம் மிகுந்துள்ளது. அவர்கள் எப்பொழுதும் மயக்க நிலையி லேயே இருக்க விழைகின்றனர். வாழ்க்கையில் கொள்கை, குறிக்கோள் ஏதுமற்ற மிருகங்கள் போன்று திரியும் ஹிப்பிகள் மிகுந்துவிட்டதால்தான் மயக்க மருந்துகள் பயன்படுத்தல் அதிகரித்துவிட்டது. சாதாரண பெட்டிக் கடைக்காரன்கூட மாணவர்க்குக் கஞ்சாவைத் தூள்செய்து பொட்டலமாக விற்கிறான். இதனால்தான் கஞ்சாக் கடத்தல் குற்றம் அதிகமாக நடைபெறு கிறது. சமீபத்தில்கூட இந்திய கிரிக்கெட் வீரர் கஞ்சா கடத்திய குற்றத்திற்காக மூவாண்டுகள் சிறைத் தண்டனையும் அவருடைய உடனாளருக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப் பட்டுள்ளன. ஆகவே இக்கொடிய மயக்க மருந்துப் பழக்கம் குற்ற ஒழுக்கமாக மாறிவிடுகிறது. அதன் வடிவம்தான்

நிர்வாணம், வெளிப்படையாக பால் உறவு கொள்ளுதல், திருட்டுத்தனமாக மயக்கப் பொருள்களை வாங்கல், விற்றல், கடத்துதல், சமுதாயக் கட்டுப்பாட்டை மீறல், மனிதத் தன்மையை இழிவு படுத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடுகின்றுர்கள். டெல்லி, பம்பாய், சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களில் உள்ள மாணவரிடையே அதிக அளவில் மயக்க மருந்து பயன் படுத்தும் பழக்கம் காணப்படுகின்றது. ஹோலி பண்டிகையின் போது வடநாட்டிலும், தென் இந்தியாவில் உள்ள மார்வாரிகளிடத்திலும் நீர் பீச்சும் பழக்கம் காணப்படுகின்றது. அப்போது அவர்கள் கஞ்சா, பங்கி, L. S. D. போன்ற மயக்க மருந்துகளைப் பயன்படுத்துகின்றுர்கள். இதனுல் அவர்கள் வரம்பு மீறிய ஆட்டம் போன்ற செயல்களில் ஈடுபட்டுச் சில வேளைகளில் கொலை போன்ற கடுங் குற்றங்களை இழைக்கின்றனர். ஹோலி பண்டிகையின்போது எப்படியும் ஒன்று அல்லது இரண்டு கொலைக் குற்றங்கள், கொடுங்காயச் சண்டைகள், வலியத் தாக்குதல்கள் போன்ற குற்றங்கள் நிகழ்கின்றன. மேலும் மதுப் பழக்க மற்றவரிடையும் இம் மயக்க மருந்துகள் உட்கொள்ளும் பழக்கம் இருக்கின்றது. சிறிதளவு மயக்க மருந்து உட்கொண்டாலும் நெடுநேரம் மயக்கநிலை நீடிக்கச் செய்யும் இம்மயக்க மருந்துகளால் அறிவற்ற மனிதன் கட்டுப்பாட்டை மீறி குற்றங்களைச் செய்துவிடுகிருன். தமிழ்நாட்டில் கீழ்நிலையில் உள்ள மக்கள் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களிலும், இறப்பு போன்ற துயர நிகழ்ச்சிக் காலங்களிலும் அதிக அளவில் மதுவகைகளை உண்டு, சட்டத்தை மீறுகிருர்கள். மதுவிலக்கு, செயலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இங்ஙனம் திருவிழா போன்ற மகிழ்ச்சிகரமான காலங்களிலும், இறப்பு போன்ற துயர காலங்களிலும் மதுவருந்துகின்றுர்கள். இதனுல் குற்ற ஒழுக்கம் பரவி, குற்றச் செயல்கள் நிகழ்கின்றன.

மயக்க மருந்துகளின் கெட்ட பழக்கத்திற்கு மாணவர்கள் அடிமையாகி விடுவதால் நாளடைவில் அவர்கள் எண்ணக் கோளாறு, திருட்டார்வக் கோளாறு, (Klep-to-Maniac) ஆகிய கோளாறுகள் அவர்களை ஆட்டிப் படைத்து நல்லொழுக்கத்தை மறந்து, குற்ற ஒழுக்கத்தில் ஈடுபடுகின்றுர்கள். இதனுல் நாடோடியாகத் திரிதல், பொருள்கள்மீது கல்லெறிந்து உடைத்து, அதில் இன்பம் காணுதல், கார்களின் டயர்களைத் திருடுதல், சக்கரத்தைக் திருடுதல், ஆகிய குற்றங்களை மயக்க நிலையில் புரிகின்றுர்கள். சில வேளைகளில் மயக்க மருந்து உட்கொண்ட மாணவர்கள் கூட்டமாகச் சென்று உணவு விடுதிகள், திரை, நாடக, கலை அரங்குகள் (Auditcriums) கல்லூரி விழாக்

காலங்களில் மேஜை, நாற்காலி, விருந்து பரிமாறும் தட்டுகள், கண்ணாடிப் பாத்திரங்கள் ஆகியவற்றை உடைப்பதோடன்றி உணவுப் பொருள்களை வீணுக்குதல், மற்றவர்களை வெகுவாகத் தாக்கிப் பேசுதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்கள். இந் நிலையில் மதுவிலக்கு செயல்பட்டுவிட்டாலும், மயக்க மருந்துகள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து விடும் என்பதில் ஐயமில்லை. இம்மாதிரிக் குற்றம் புரியும் மாணவர்கள் பொதுவாகப் பணக்கார வர்க்கமாகவே இருப்பதால் அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. மாணவர்களின் விஷயத்தில் நடவடிக்கை எடுத்தால் அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்ற அச்சத்தினால், குற்றம் புரியும் மாணவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக் காவல் துறையினர் ஒரு முறைக்குப் பலமுறை யோசிக்கின்றனர். நடவடிக்கை எடுக்க அஞ்சுகின்றனர் என்றே சொல்லலாம், சில மனநோய் மருத்துவ நிபுணர்கள் மருந்துகளின் கெட்ட பழக்கத்திற்கு அடிமையாவது உளநோய் வகைகளில் ஒன்று என்கின்றனர்கள். இப் பழக்கத்தின் முற்றிய நிலையானது அரைகுறை முடக்குவாதம் (Paresis) முரண் மூளை நோய் (Schizophrenia) ஆகிய நோய்களில் முடிவடைகின்றது. உளநோய்ப் பகுதியுடன் மயக்க மருந்து அல்லது மருந்துகளின் கெட்ட பழக்கம் இணைந்து இருப்பது வாதத்திற்கு அல்ல. உண்மையான உளநோயுடன் மருந்துகளின் கெட்ட பழக்கத்தினால் விளையும் விளைவுகளையும் பற்றி ஆய்வதற்காகத் தான் மயக்க மருத்துகளைப் பற்றிய ஆய்வும் இணைக்கப் பட்டுள்ளது. மயக்க மருந்துகள் தொடக்கத்தில் உடலின் தேவைக்காக மருத்துவரால் அளிக்கப்பட்டிருக்கலாம். நோயின் தன்மையை உணராது அமைதியாகத் தூங்குவதற்கும், ஜீரணம் ஆவதற்கும் கொடுக்கப்பட்டு இருக்கலாம், பிறகு அதே பழக்கத்தில் ஈடுபாடு கொள்ளுதல் அல்லது மயக்க நிலையை அடையும் நோக்கத்தோடு, ஆர்வத்தோடு மயக்க மருந்துகளை இன்பப் பொழுது போக்கிற்காக உட்கொண்டிருக்கலாம். சில முறை பயன் படுத்தப்பட்ட பின்பு அது அவசியமாகிவிடுகிறது. தூக்க மாத்திரை உண்ட பிறகு உறங்கும் பழக்கமுள்ளவர்கள், தூக்க மாத்திரை சாப்பிடாவிட்டால் அவர்களுக்குத் தூக்கமே வருவதில்லை. தூக்க மாத்திரைக்கு அடிமையாகிவிடுகின்றனர்கள். தினமும் மருந்து உடலில் சேருவதனால் அதன் 'விஷ'த் தன்மை அறிவைப் பாதிக்கச் செய்துவிடுகிறது. தூக்க மாத்திரைகளைத் தொடர்ந்து உண்டு வருபவர்கள் பாதி பைத்தியமாகக் காட்சியளிக்கின்றனர்கள். இதனால் அவர்களின் எண்ணம், செயல், உணர்ச்சி, மாறுபட்ட நிலையை அடைகின்றன. இதைப் போன்றே கஞ்சா, அபினி, பங்கி, எல். எஸ். டி. ஆகிய மயக்க மருந்துகளைச்

சாப்பிட்டுக் கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களும் உடல், உள்ளம், அறிவு பாதிக்கப்பட்டு உளம் திரிந்தவர்களாகக் காட்சி யளிக்கின்றார்கள். மருந்துகளின் கெட்ட பழக்கத்திற்கு அடிமை யாகிவிட்டு அதை விடாமல் சாப்பிட்டால்தான் அமைதி என்ற நிலை வந்துவிட்டாலே உள நோயாளியாக மாறிவிடுகின்றான். பிறகு அவர்களின் ஒழுக்கங்கள் மாறுபடுகின்றன. இதனால் குற்ற வொழுக்கம், குற்றச் செயல்கள் அதிகரிக்க ஏதுவாகின்றன. இதைச் சாண்டோஸ் (Sandoz) என்பவர் அபினி (Morphine) பழக்கத்திற்குட்பட்ட அறுபது நபர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தார். இதில் நாற்பத்திரண்டு நபர்கள் அபினி பழக்கத் திற்கு அடிமையாவதற்கு முன்னால் கைது செய்யப்படவில்லை. பழக்கத்திற்கு அடிமையான பிறகு ஒவ்வொருவரும் கைது செய்யப்பட்ட சராசரி எண்ணிக்கை 8·2ம், மற்ற பதினெட்டு நபர்கள் கெட்ட பழக்கத்திற்கு முன்னால் கைதுசெய்யப்பட்ட எண்ணிக்கை சராசரியாக 2·8ம் அதே நபர்கள் அபினி பழக்கத்திற்கு அடிமையான பின்பு அவர்கள் கைதுசெய்யப் பட்டதின் சராசரி எண்ணிக்கை 8·3 ஆகும். அந்தக் கூட்டத்தில் அபினிக்கு அடிமையாவதற்கு முன்னால் மொத்தம் கைது செய்யப்பட்டவர்களின் சராசரி எண்ணிக்கை 0·8 ம் கெட்ட பழக்கத்திற்குப் பிறகு ஒவ்வொருவரும் சராசரியாக 8·2ம் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் 5·5 சதம் மருந்து விதிகளை (Drug Laws) மீறிய குற்றங்களாகும். அதாவது சிறு திருட்டுக் குற்றம், நாடோடியாகத் திரிதல் ஆகிய குற்றங்களாகும். மருந்துகளின் கெட்ட பழக்கத்தினால் சிறு குற்றங்கள் அதிகரித் துள்ளன என்று கூறுகிறார். நகரங்களில் படிக்கும் கல்லூரி மாணவர்கள் மருந்துகளின் கெட்ட பழக்கத்தினால் அதிகரித்துள்ள சிறு சிறு குற்றங்களுக்கு ஒத்திருக்கிறது. மயக்க மருந்துகளின் கெட்ட பழக்கத்திற்கும், குற்ற ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றிச் சுருக்கமான, தெளிவான வரை யறைகள் யாரும் அளிக்கவில்லை. மயக்க மருந்துகளை உட்கொள் வதனால் குற்றவொழுக்கம் அதிகரிக்கின்றது என்ற வாதம் பொருந்துவதாக இல்லை. காரணம் மயக்க மருந்துகளை உட்கொண்ட பிறகு மடத் துணிச்சலில் மூர்க்கத்தனமாகச் செயல் படுகின்றார்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் மயக்க மருந்து (Opiates) மாறான விளைவை உண்டாக்கும் தன்மை உடையது. மயக்க மருந்து உண்ட பிறகு சுறுசுறுப்பு அற்றுவிடுகிறது. ஆனால் கோகைனுக்கும் (Cocaine) ஒபேட்ஸ்க்கும் (Opiates) வேறுபாடு உண்டு. கோகைன் உட்கொண்டால் முரட்டுத் தன்மை உண்டாகி விடுகிறது இதனால் கொள்ளைக் கூட்டத்தினர் குற்றம் புரிவதற்கு முன்னர் கோகைன் (Cocaine) உட்கொண்டு செல்வார்கள் என்று

கூறப்படுகிறது. அப்போதுதான் முரட்டுத்தனமாகக் குற்றங்கள் செய்யமுடியும் என்றும், மற்றப்படி அவ்வளவு துணிச்சலோடு செய்யமுடியாது என்றும் கூறப்படுகிறது. இது உண்மையாக இருந்தாலும், கொள்ளைக் கூட்டத்தினர் குற்றங்கள் புரிய வேண்டும். அதற்காகக் கோகைன் உட்கொள்ளவேண்டும் என்று கருதுவார்களேயானுல் அவர்களின் குற்ற ஒழுக்கமானது மயக்க மருந்தை உட்கொள்வதற்கு முன்னே அறிந்துகொள்ள முடிகிறது அல்லவா. ஆகவே கோகையினுல்தான் குற்றம் செய்கிருர்கள் என்று எப்படிக் கூறமுடியும்? மேலும் ஓபேட்ஸைவிட (Opiates) கோகைன் (Cocaine) அபூர்வமாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. மேலும், மயக்க மருந்துகள் உடலையும், உள்ளத்தையும் வெகுவாகப் பாதித்துவிடுகின்றன. அதனுல் வருமானம் குறைகிறது. ஆனுல் அதே நேரத்தில் தொடர்ந்து மயக்க மருந்துகள் தேவைப்படு கின்றன. இதனுல் மற்றவற்றைத் தியாகம் செய்து மயக்க மருந்து களைப் பெறுகின்ருர்கள். இறுதியில் கையில் பொருள் இல்லாத தனுல் சிறு திருட்டுகளில் ஈடுபடுகின்ருர்கள். இறுதியாகப் பொருளாதாரத் தேவைக்காகத்தான் குற்றங்களைச் செய்வதாக அறிய முடிகிறது. ஆனுல் இந்த விளக்கமும் போதுமானதாக இருக்க முடியுமா? பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் குற்றங்கள் செய்யவேண்டும் என்று எல்லோரும் கருதுகின்ருர்கள், அப்படியே செயல்படுகின்ருர்கள். சிலர் நேர்மையாக பொரு ளீட்டுகின்ருர்கள், சிலர் நேர்மையற்ற வழியில் பொருளீட்டு கின்ருர்கள். இது அவரவர்களின் ஒழுக்கத்தைப் பொறுத்தல்லவா அமைந்திருக்கும்? அடுத்ததாக மயக்க மருந்துகளின் கெட்ட பழக்கத்திஞல் பொருளீட்டும் திறமையை இழந்துவிடுகின்ருர்கள். ஆனுல் அவருக்குப் பொருள் தேவைப்படுகிறது. அதற்காக மறை முகமாகத், திருட்டுத்தனமாக, எளிமையான முறையில் பொரு ளீட்ட முற்படுகின்ருர். இதற்காகச் சிறு திருட்டு, கள்ளக்கடத்தல் ஆகிய செயல்களிலீடுபடுகின்ருர்கள். இதன்மூலம் மயக்க மருந்து களைப் பெறுகிருர்கள். எந்தக் காரணத்தினுலும் குற்றவொழுக்கம் உள்ளவர்களுடன் மறைந்து, பதுங்கி குற்றம் புரிபவர்களுடன் தொடர்பு கொண்டுவிட்டால் அவர்கள் அத்தனை பேரும் குற்ற ஒழுக்கத்தையும், குற்றங்களையும் கற்றுக்கொள்கின்ருர்கள். ஆகவே மற்றவர்களுடன் பழகும் போதுதான் (Associates) குற்ற ஒழுக்கத்திற்குத் துணையாகிறது. ஆனுல் ஒரு செயலுக்கும் மற்ருெரு செயலுக்கும் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஒரு நாள், இரண்டு நாள் மயக்க மருந்துகளை உட்கொண்டவர்கள் குற்ற ஒழுக்கத்தையோ குற்றங்களையோ பின்பற்றுகிருர்கள் என்று கூறமுடியாது. அவர்கள் மேன்மேலும் அதே கெட்ட பழக்கத்தில் டுபடுவதனுல்தான் அவர்களின் உடல், அறிவு ஆகியவை பாதிக்

கப்பட்டு ஒழுக்கமும் மாறுபடுகிறது என்பது உண்மை. இளைஞர்கள் மயக்க மருந்துகளின் பின்னால் சுற்றி அலைகிறார்கள். இந்நிலை நீடித்தால் வருங்காலத்தில் வீரர்களையும், அறிஞர்களையும் பெறமுடியாத நிலை உருவாகக்கூடும் ஆகவே பெற்றோர்கள், கல்லூரி முதல்வர்கள், குறிப்பாக விடுதி காப்பாளர்கள் (Warden), காவல் துறையினர் ஆகியோர் தக்க நடவடிக்கை எடுத்து இளைஞர் சமுதாயத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

உளநிலைப் பகுப்பாய்வுக் கொள்கை (Psychoanalytic Theory) உளநோய்த் தொடர்பாக விளையும் விளைவுகளை ஆய்ந்தோம். அதாவது இயற்கை, செயற்கை ஆகிய முறைகளில் உளநோய் பரவிவரும் முறைகளையும், உளக் கருத்துகளையும் விளைவுகளையும் பற்றி ஆய்ந்தோம்.

பொதுவாக மனிதன் இயற்கை அறிவினால், அதன் இயல்பு களினால் செயல்படுத்தப்படுகிறான். அவ்வியற்கை அறிவிற்குத் தகுந்தவாறு அவனுடைய உணர்ச்சிகள். செயல்கள் இடம் பெறுகின்றன. இயற்கை அறிவு என்பது அவனுடைய மூளையின் திறத்தைக் குறிக்கிறது. இது பரம்பரை உடலமைப்பையும் வெளிப்படுத்தும். ‘நான்’ எனும் சுயநல உணர்வு ஏற்பட்டு விட்டால் அதற்கேற்றாற்போன்று உணர்ச்சியும், செயலும் அடையும். பொதுத் தொண்டில் ஈடுபட்டிருந்தால், அவனுடைய உள்ளமும் செயலும் அதற்கேற்றாற் போன்றமையும். இயற்கை அறிவு, எண்ணம், சுயநலம், பொதுநலம் ஆகியவை பிறப்பின் தன்மையால், பிறப்பின்பால் வளர்ந்துள்ள மூலமான தொடக்க குணங்களாகும். ஆகவேதான் ஒருவன் வறுமையில் வாழ்ந் தாலும் பொதுநலத்திற்குப் பாடுபட விழைகின்றான். வேறொருவன் செல்வந்தனாக வாழ்ந்தாலும் சுயநலத்துடன் வாழ்கிறான். அதற் குத் தகுந்தவாறு அவரவர்களின் செயல்கள் மாறுபடுகின்றன. ஆனால் சமுதாயத்தின் அமைப்பு, கொள்கைகள், கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவை ஏறத்தாழ ஒரே மாதிரியாக அமைந் திருக்கின்றன. சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக் கடங்கிய இயல் புள்ளர்கள் சமூகத்தோடு ஒட்ட ஒழுகுகின்றார்கள். சமுதாயத்தில் அவர்களும் ஓர் அங்கமாக நினைந்து ஒழுகுகிறார்கள். சுயநலத் தோடு வாழ எண்ணங்கொண்டவர்கள் சமுதாயத்தின் கட்டுப் பாடுகளை எதிர்க்கின்றார்கள். அவர்களுக்குச் சமுதாயம் ஒரு ஏமாற்றமாகவும் எதிரியாகவும் காட்சியளிக்கிறது. ஆகவே ஒருவன் உணர்ச்சிப் பெருக்கினால் மூர்க்கனாக மாறிவிடுகிறான், மற்றொருவன் தியாகியாக மாறிவிடுகிறான். சமுதாயத்திற்கேற்றாற் போல் தன் இயப்பு, குணம், செயல் ஆகியவற்றை மாற்றிக் கொள்ளவியலாதவன் குற்றவாளியாக மாறிவிடுகிறான். இயற்கை

யறிவின் தூண்டுதல், இயல்புணர்ச்சியின் வலியுறுத்தல், செயல் ஆகியவற்றைப் பொறுத்து ஒருவனுடைய ஒழுக்கமும் நடத்தையும் வேறுபடும். அது நல்லொழுக்கமாகவோ, குற்ற ஒழுக்கமாகவோ, நற்செயலாகவோ. குற்றச் செயலாகவோ அமைந்துவிடுகின்றது. சில வேளைகளில் தன் உள் உணர்ச்சிகள், எண்ணங்கள், மனத்தாசைகள் நசுக்கப்படும்போது. ஒடுக்கப்படும்போது அடங்கியும் விடக்கூடும், ஆவேசத்தோடு அந்த உள்ளுணர்ச்சிகள் பொங்கி வெளிப்படவும் கூடும். தன் உணர்ச்சி பொங்கிச் செயலாக மாறும்போது குற்ற ஒழுக்கமாகவும், குற்றமாகவும் மாறிவிடுகிறது. மனிதனின் உள்ளம் எதை எதையோ எண்ணி ஏங்குகிறது. அது நேர்மையாகவோ அல்லது அநீதியாகவோ இருக்கலாம். சட்டத்திற்குட்பட்டோ இருக்கலாம். சட்டத்திற்கு முரண்பட்டதாயும் இருக்கலாம். சில வேளைகளில் அறத்திற்குட்பட்டதாகவோ இருக்கலாம். அறத்திற்கு மாறுபட்டதாகவோ இருக்கலாம். பொருள் ஆசை, பதவி ஆசை, பெண் ஆசை ஆகிய மூன்றுசைகள் உண்டு. பொருள், பதவி ஆகிய இரண்டு ஆசைகளையும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ அடைந்துவிடலாம். ஆனால் பெண் ஆசை அப்படிப்பட்டதல்ல. உடல் உணர்ச்சியின் உந்துதலினல், இயற்கையின் இயல்பினுல் ஏற்பட்டதாகும், இத்தகைய ஆசை நிறைவேருதபோது இவ்வாசை வெறியாக மாறிவிடுகின்றது. முறை தகாப் புணர்ச்சி (Incest), மனத்தைப் பறிகொடுத்துவிட்டால் அதைச் செயல் படுத்துவதும் கடினம். வெளிப்படுத்துவதும் கடினம். அதைச் சட்டம் மட்டும் தடை செய்யவில்லை. அறமும் தடை செய்கின்றது. உதாரணமாக மகன் தாய்மீது உடல் உறவு கொள்ள நினைத்தால் அதை வெளிப்படுத்தவும் முடியாது, செயல்படுத்தவும் முடியாது அல்லவா! எகிப்து, அரேபியா போன்ற நாடுகளில் இத்தகைய குற்றங்கள் அதிகமுண்டு. நம் நாட்டில் வட இந்தியாவில் 55 வயதான தாயை 35 வயதான மகன் ஒருவன் தொடர்ந்து மூன்றுமுறை வன்புணர்ச்சி செய்ததில், ஆத்திரமடைந்த தாய் அவனைக் கொன்றதும் சமீபத்திய செய்தியாகும். அந்த வெறி உணர்ச்சிக்கு (Oedipus Complex) முறைதகாப் புணர்ச்சி வேட்கை என்று பெயர். மேற்சொன்ன முறைதகா உணர்ச்சி தணியாத நிலையில் மகன் பைத்தியக்காரனுகி விடுகின்றுன், ஏதாவது ஒரு காரணத்திற்காக தந்தையைக் கொலை செய்துவிடுகின்றுன். திருட்டுத்தனமாக வன்புணர்ச்சி செய்துவிடுகின்றுன். அப்படியும் செயல்பட முடியாத நிலையில் வீட்டில் உள்ள பொருள்களைத் திருடுகின்றுன். வேண்டுமென்றே மற்றவர்களைச் சண்டைக்கு இழுக்கிறுன். உணவு உட்கொள்ளத் தகராறு, உணவைத் தூக்கியெறிதல், பாத்திரங்களை வெளியில்

வீசியெறிதல் போன்ற செயல்களில் அவன் மனம் செல்கிறது. அவன் காமவெறி தணியாத நிலையில், கொலைகூட செய்து விடுகின்றான். ஆகவே மனிதனின் உள்ள உணர்ச்சிக்கும், குற்றச் செயலுக்கும் அதிக நெருக்கமுண்டு. முறைதகாப் புணர்ச்சியில் ஈடுபட்டு அதனை மற்றவர்கள் அறிந்துவிடும் போதும் அதனால் ஒருவர் கர்ப்பம் தரித்த நிலையிலும் சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் இழிவான பெயருக்கஞ்சியும் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். மேலும் இதனால் கலவரம், குழப்பம், கொலை ஆகியவையும் நடக்கின்றன. சாதாரணமாக கிராமங்களிலும், நகரங்களிலும் முறைதகாப் புணர்ச்சியின் காரணமாக கொலை, தற்கொலை, கருச்சிதைவு, திருடுதல், இல்லத்தில் அமைதியின்மை, சகோதரன் சகோதரியைப் புணர்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு அவர்களின் மனநிலை மட்டும் காரணம் அல்ல. அவர்கள் வாழும் சுற்றுச் சூழ்நிலை ஆகியவற்றின் இணைப்பும் காரணமாகும். சமீபத்தில் ஒரு சகோதரி தந்தையுடன் முறைதகாப் புணர்ச்சியில் ஈடுபட்டிருந்ததனால் ஆத்திரமுற்ற சகோதரன், சகோதரியைக் கொலை செய்த நிகழ்சசி நடந்துள்ளது. இப்படிப்பட்ட குற்றங்கள் சமுதாயத்தில் இன்று வெகு வேகமாக பரவி வருகின்றது. சாதாரணமாக முறை தகாப் புணர்ச்சியினால் ஒவ்வொரு கிராமத்திலும் சராசரி ஒரு கொலையோ, தற்கொலையோ நடந்து விடுகிறது. ஆனால் வெளியில் கூறும்போது வயிற்று வலியினால் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தான் போன்ற வேறு காரணங்களைக் கூறிவிடுகின்றார்கள். தமிழ் நாட்டின் பல மாவட்டங்களின் பல வழக்குகளை ஆராயும்போது மேற்கண்ட உண்மை தெரியவருகிறது. முறைதகாப் புணர்ச்சியில் ஈடுபடுபவர்கள் பொதுவாகக் கணவனைவிட்டுத் தாயகத்தில் வாழவே விரும்புவார்கள். பெயரளவுக்குக் கணவனை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் உண்மையில் கணவனை வெறுப்பார்கள். ஆனால் அக் காரணத்தை வெளியில் கூறினால் கேவலம் என்று கணவன்மார்கள் கூறுவதில்லை. எதையும் தாங்கும் கணவர்கள் அமைதியாக வாழ்கின்றார்கள். ஆனால், மனைவியின் நடத்தையைப் பிடிக்காத கணவர்களோ அவர்களைத் துன்புறுத்தல், கொலை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆக பால் உணர்ச்சிக் கோளாறுதான் முறைதகாப் புணர்ச்சிக்கு முக்கிய காரணக் கூறுகும். அதற்காகப் பால் உறவுக் கல்வி புகட்ட வேண்டும்.

7. குற்ற இனங்கள்

(Criminal Tribes)

குற்றவொழுக்கத்திற்கும் குற்றச் செயலுக்கும் ஏதுவான பல்வேறு காரணக் கூறுகளை ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் குற்றத்திற்கும் இனத்திற்கும் உள்ள தொடர்பினை ஆராய்வோம். இதில் பல்வேறு இனங்கள், அவற்றின் தனித் தன்மைகள், இயல்புகள், சிறப்புக் கூறுகள், பண்புத் திறம் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றுக்கும் குற்றவொழுக்கம், குற்றச் செயல் ஆகியவற்றிற்கும் உள்ள தொடர்பினை ஆராய் வோம்.

'குற்ற இனங்கள்' (Criminal Tribes) என்று சுப்பரமணியப் பிள்ளை அவர்கள் பல இனங்களைக் குற்றங்கள் புரிவதே அவர் களின் தொழில் என்று வெகு விரிவாகக் கூறுகின்றார். அதில் அவர் கூறும் சில இனங்கள் இன்று சமுதாயத்தில் நல்ல நிலையில், தகுதியுடன் வாழ்கின்றார்கள். 40 ஆண்டுகளுக்கு முன்பு குற்றங் களைப் புரிவதே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கலாம். ஆனால், நாகரிகத்தில், கல்வி வளர்ச்சியுற்ற இன்றைய நாளில் எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் இந் நாட்டு மன்னர். 21 வயதடைந்த ஆண் பெண் இருபாலார்க்கும் இனம், மதம், ஏற்றத்தாழ்வின்றி வாக்குரிமைப் பெற்றிருக்கும் இந்தக் காலத்தில் சில இனங்களைக் குற்ற இனங்கள் என்று கூறுவது சட்டப்படிக் குற்றமாகும். ஆனால் அரசியலமைப்பு, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் உயர்ந்த இனம், தாழ்ந்த இனம், பின்தங்கிய இனம் என்று பாகுபடுத்தி வாய்ப்புகள் அளிக்க இடமளிக்கின்றது. மற்ற வேறுபாடு காணு வதற்கு அரசியல் அமைப்பு இடமளிக்கவில்லை. மேற்கூறிய பாகு பாடுகள்கூட பின்தங்கியோர், தாழ்ந்தவர் ஆகியோரின் மேம்பாட் டிற்காக ஏற்படுத்தப்பட்டவையேயாகும். சுப்ரமணியப்பிள்ளை 1930-ல் குற்ற ஆய்வியல் என்ற நூலை எழுதியுள்ளார். வெள்ளை

யன் ஆட்சிக் காலத்தில் இந்தியா அடிமை நாடாக இருந்தது. அப்போது இந்தியாவில் வறுமை, கல்லாமை, ஒற்றுமையின்மை ஆகியவை தாண்டவமாடின. இதனால் மக்கள் கூட்டங் கூட்டமாகக் காடுகளிலும் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும், மேடான பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள். மேலும் வாழ்க்கை வாழ வேண்டி. மாகாணம் விட்டு மாகாணம் சென்று கூலி வேலை, பிச்சையெடுத்தல், கைத்தொழில் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்து பிழைத்து வந்தனர். சிலர் நாடோடிகளாக வாழ்ந்துவந்தார்கள். அப்படி வாழ்ந்தவர்களில் சிலர்தாம் திருடர்களாகவும், கொலைகாரர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்களைத் தடுக்க, கட்டுப்படுத்த வெள்ளையன் ஆட்சி எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. அதற்காகக் குற்றவாளிகள், குற்ற இனங்கள் சட்டம் ஒன்று 1911-ல் இந்திய அரசால் இயற்றப்பட்டது. (Criminal Tribes Act 1911). அதன்படி மாகாண மாஜிஸ்டிரேட்டுகளுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. குற்றவாளிகள் எங்கெங்குச் செல்லுகின்றனரோ அங்கங்கு அவர்கள் தங்கள் முகவரி, செய்யும் வேலை ஆகியவற்றை மாஜிஸ்டிரேட்டுகளுக்குத் தெரிவிக்க வேண்டும். குற்றவாளிகளின் அங்க அடையாளங்கள், அவர்களின் கைரேகை பதித்த பதிவேடுகள் ஆகியவற்றை வைத்திருந்தார்கள். இப் புத்தகம் போலீஸ் சூப்பிரண்டிடம் இருந்தது. அப் பதிவேடுகளில் பெயர்களைச் சேர்க்கவோ நீக்கவோ மாஜிஸ்டிரேட்டிடம் முன் அனுமதி பெறவேண்டும். உள்ளாட்சியும் (Local Govt.) குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தும். அதாவது அவர்களைப் பற்றிய விசாரணை, வசிக்கும் இடங்கள் ஆகியவை கவர்னர் ஜெனரலின் உத்தரவின் பேரில் செயல்படுத்தப்படும். அதே சட்டத்தில் குற்றவாளியைச் சீர்திருத்தப் பள்ளிக்கு (Reformatory Schools) அனுப்பவும் தொழிற்சாலை, வேளாண்மை வசதிகள் செய்து கொடுக்கவும் வகை செய்கிறது. குற்றங்களை மனித இயல் (Anthropological) சட்டப்படி ஆராய்ச்சி செய்யப்பட்டது. லெம்ரோஸோ கழகத்தின் (Lombrosians) கொள்கைப்படி மனிதனின் உடல். உளம் ஆகிய இரண்டும் ஆராயப்பட்டன. குற்ற இனங்களில் இறந்தவர்களின் மூளை ஆராயப்பட்டது. அவர்களின் குறைபாடுகளை நீக்க அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த ஆராய்ச்சி பயனற்றது என்று பின்னர் நீக்கப்பட்டது. குற்றவாளிகள் இனங்களைக் கட்டுப்படுத்த அவர்கள் நிரந்தரமாக ஏதாவது ஒரு தொழில் செய்து ஒரே இடத்தில் வாழவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது.

குற்ற இனங்கள் அல்லது குற்றங்கள் புரியும் இனங்கள் (Ciriminal Tribes) உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து

வந்ததாகக் குற்ற ஆய்வியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்கள். 1568-ல் இத்தாலியில் கம்மோரா (Comorra) என்ற ஒரு கூட்டம் இருந்ததாகச் சுப்பரமணியப் பிள்ளை கூறுகின்றனர். ஸ்பெயின் நாட்டில் திருடர்களை வணங்கி வந்துள்ளார்கள். மெக்சிகோ (Mexico) நாட்டில் உயர் குடிமகன், வழிப்பறிக் கொள்ளையிடுவது தான் அவன் தொழில். அவர்களின் உடல் உறுதி பெறுவதற்கான பயிற்சியாகக் கருதினார்கள். இடைக்காலத்திலும் பண்ணை நில ஆட்சிக் கோமான்கள் (Barons) அதே முறையைப் பின்பற்றி வந்துள்ளார்கள். தற்காலத்தில் குற்றத் தொழிலை வாழ்க்கையாகக் கொண்டவர்கள் அதை வியாபார இலாப நோக்குடன் செய்து வருகின்றனர்கள். தமிழ் நாட்டில் தென் ஆற்காடு பகுதியைச் சார்ந்த வேப்பூர் பறையர்கள் (Vepber Pariahs of South Arcot) வீட்டைக் குடைந்து அல்லது கதவைப் பெயர்த்துத் திருடும் உத்தியைக் கையாண்டு வந்தார்கள். பௌரிஸ், (Bauris). (Keachaga Tribes) கீச்சக இனத்தைச் சார்ந்தவர்கள் கள்ள நாணயங்களைத் தயார் செய்தலில் ஈடுபட்டுள்ளார்கள்

இந்தியாவில், குற்றவாளிகள், திருட்டு, கொலை, வன்புணர்ச்சி ஆகிய குற்றங்கள் புரிவதற்கு ஏற்ற நாடாக இருக்கிறது. இக் கொள்ளைக் கூட்டம் இன்றும் வட இந்தியாவில், குறிப்பாக சாம்பல் பகுதியில் (Chambal Ghat Dacoits) இருக்கின்றனர்கள். பிண்டாரிகள் (Pindaris), தக்ஸ் (Thags) ஆகியோர் சக்தி வாய்ந்த கொள்ளையராக விளங்கினார்கள். இந்தியாவில் நடந்துள்ள குற்றங்களில் சுமார் 6/7 பாகம் குற்றவாளிகள் இனத்தைச் சேர்ந்தவர்களாலேயே செய்யப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலோர் சொத்துக்கெதிரான குற்றங்களையே செய்துள்ளனர். அக்காலத்தில் குலத் தொழில், அது எப்படிப்பட்டத் தொழிலாக (மேன்மையானது, கீழ்மையானது) இருந்தாலும், செய்வதுதான் தருமம், அறம் என்று நம்பினார்கள். பெஸ்வாரிஸ் (Peshwaris) மிகவும் ஆபத்தான பேர்வழிகள், குற்றவாளிகள். கோயில்களைக் கொள்ளையிடுதல், சூதாட்டம், துப்பாக்கி போன்ற பொருள்களைக் கடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் ஐம்பது வருடங்களுக்கு முன்பு கன்னியாகுமரி, காஞ்சிபுரம், பழனி, கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் கொள்ளையிட்டனர். கங்கை, பிரம்மபுத்ரா நதிக் கரையில் வாழ்ந்த மல்லர் (Mallahs) என்ற கொள்ளையர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். அவர்களை நதிக் குற்றவாளிகள் (River Criminals) என்று அழைப்பர். இதில் மற்றொரு பிரிவினர் ஜேப்படி செய்வதிலும், கன்னம் இடுவதிலும் வல்லவர்கள். பஞ்சாப், அலகாபாத் ஆகிய இடங்களில் கள்ள நாணயம் செய்யும்

குற்றவாளிகள் வாழ்ந்தார்கள். இவர்கள் மொகலாயர் காலந் தொட்டு இத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். மைசூரில் தோங்கா தேசாரிகள் (Donga Dasaris) இனம் குற்ற இனமாகத் திகழ்ந்து வந்துள்ளது. ஆந்திராவிலிருந்து தமிழகம் போந்து குளம், ஏரி, கிணறு ஆகியவற்றை ஆழப்படுத்தும், வெட்டும் 'ஒட்டர்கள்' எனப்படுவோர் வீட்டை உடைத்துத் திருடுவதிலும், கொள்ளையடிப்பதிலும் புகழ்பெற்று விளங்குகின்றார்கள். ஜோகிகள் (Joghis) ஆந்திராவில் வாழும் குற்ற இனத்தவர்கள். அவர்கள் பாம்பாட்டிப் பிழைத்தல், பன்றி வளர்த்தல் ஆகிய தொழில்களைச் செய்பவர்கள். செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், தென் ஆற்காடு, நெல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலையில் கொள்ளையிடுதல், கன்னம் வைத்தல் ஆகிய குற்றத் தொழில்களைச் செய்து வந்துள்ளனர். கயிறு நடனமாடிப் பிழைப்பவர்கள் தோம்ரா இனத்தவர்கள் (Domara Tribes). அவர்கள் கூட்டுக் கொள்ளை, திருடுதல் ஆகிய குற்றங்களைச் செய்துவந்தார்கள். குறவர், உப்புக் குறவர், தோகைமலைக் குறவர் (Kuravars, Uppu Kuravars and Thogaimalai Kuravars) போன்ற இனத்தவர்கள் ஜேப்படி, திருடுதல் ஆகிய குற்றங்களைச் செய்து வந்தார்கள். பூசாரிகள் (Pujaris) என்ற இனத்தவர்கள் கூட்டுக் கொள்ளையடித்தல், ஆட்கடத்துதல் ஆகிய குற்றங்களைச் செய்து வந்துள்ளனர். தென்பகுதியில் வாழும் மறவர்கள், வட நாட்டு இராஜபுத்திரரைப் போன்று சண்டை இடும் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பண்ணையாட்களாக இருந்தாலும் திருடுதல், சூதாட்டம் ஆகிய குற்றங்களைத் தொழிலாகக் கொண்டு விளங்குகிறார்கள் என்று பழையகாலக் குற்ற ஆய்வியல் நூலில் அறிய முடிகிறது.

முன் கூறியது போன்று இன்று குற்ற இனம் (Criminal Tribes) என்று ஒன்று இந்தியாவில் இல்லை. குற்றங்கள் பல்வேறு காரணக் கூறுகளால் நிகழ்கின்றன. ஆகவே இனம் வேறுபாடின்றி குற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கு அவர்களின் இனமோ அல்லது பரம்பரையோ பொறுப்பல்ல. சமுதாயத்தின் சுற்றுச் சூழ்நிலைகள், செயலெதிர்ச் செயல்கள் ஆகியவைதாம் காரணமாகும். இன்று எல்லா இனத்தவரும், உயர்ந்த நிலைகளிலும், உயர்ந்த பதவிகளிலும் வாழ்வதுடன் சிறந்த அறிவாளிகளாகவும் விளங்குகின்றார்கள்.

நம் நாட்டில் கருதப்படும் குற்ற இனங்களைப் போல, மேலை நாட்டில் நீக்ரோ இனம் குற்றவினமாகக் கருதப்படுகின்றது. அவர்கள் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். அதிக உடல்

உரமும், அதே நேரத்தில் எளிதில் உணர்ச்சி வயப்படுபவர் களாகிய இவர்கள் நபருக்கு எதிரான குற்றங்களில் அதிகமாக ஈடுபடுகின்றார்கள். மேலும் இவர்கள் அறிவைக் கொண்டு பொருளீட்டும் முறையை அறியாத காரணத்தினால் பொருளுக் கெதிரான குற்றங்களிலும் ஈடுபடுகின்றார்கள். மேலை நாடுகளில் இந்தியன். சீனக்காரன், ஜப்பானியர், நீக்ரோக்கள், பிலிப்பைன்ஸ் காரன் ஆகிய சிறுபான்மை இனத்தவரைக் குற்ற இனமாகக் கருது கின்றார்கள். ஒவ்வொரு இனத்திலும் 1,00,000 மக்கள் தொகையில் உள்ள குற்றவாளிகளைப்பற்றி எடுத்த குற்றப் புள்ளி யிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் இந்த ஆய்வு முறையானதா என்பது ஐயம்தான். உயர் இனத்தைச் சேர்ந்தவர்கள் குற்றப் புள்ளி சேகரிக்கும்போது அவர்களுக்குச் சாதகமாகவும், மற்ற வர்க்குப் பாதகமாகவும் அமைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. மேலும் மற்றெல்லாப் பகுதிகளிலும் வாழும் சிறுபான்மையினரைக் கணக்கெடுத்தல் வேண்டும். மேலும் ஒரேவிதமான குற்றங் களுக்குப் பல வேறுபாடான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதாவது நீக்ரோக்களுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனையும், வெள்ளையர்க்குக் குறைந்த காலச் சிறைத் தண்டனையும் அளிக்கப் படுகிறது. அதேபோன்று நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுதலை (Parole) அளிப்பதிலும் பாராபட்சம் காட்டப்படுகின்றது. மேலும் பொதுமக்கள் மத்தியில் நீக்ரோக்கள் என்பார் குற்ற வாளிகள் என்று காட்டவேண்டி அவர்களைக் குற்றவாளிகள் என்று தவறான புள்ளி விவரத்தைக் காட்டலாம். ஆகவே மேற் சொன்ன காரணங்களினால் குற்றவாளிகளைப் பற்றிய அந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை அல்ல என்று கூறலாம். வெள்ளையர்கள் கிறித்துவச் சமயத்தைச் சார்ந்த யாராவது குற்றமிழைத்தால் அவர்களின் பெயர்களை மட்டும் வெளியிட்டு, இனங்களின் பிரிவை வெளியிடாமல் மறைத்துவிடுகின்றார்கள். இதற்குக் காரணம் ஆட்சியும், அதிகாரமும் அவர்கள் கையில் குவிந்திருப்பதுதான். இந்தியாவிலும் அதே நிலைதான். வசதிபடைத்தோர், ஆட்சி யிலுள்ளோர் ஆகியவர்கள் சிலவற்றைக் குற்றவினங்கள் என்று கூறி ஒதுக்கி வந்துள்ளார்கள். ஆனால் இந்த நிலை இந்தியாவில் வெகுவேகமாக மாறிவருகின்றது. இந்தியாவில் ஆதியில் சாதியின் பெயரால் விளம்பரங்கள் செய்யப்பட்டுவந்தன. ஆனால் பெரும் போராட்டத்திற்குப் பின்பு அந்த நிலை இன்று அகற்றப்பட்டு விட்டது. மேலை நாட்டில் இனவெறி என்றால் இந்தியாவில் ஜாதி வெறி ஓங்கி நிற்கிறது. உயர்நிலையில் உள்ளவர்கள் தங்களுக்குள் கட்டுப்பாட்டோடு குற்றங்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கின்றார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட இனத்த வரிடையே பொறாமை, பகைமை தாண்டவமாடுதலினால் குற்ற

வாளிகளை அவர்களே காட்டிக் கொடுத்துவிடுகின்றார்கள். இதனால் குற்றங்கள் குறைவதற்குப் பதில் கூடுகின்றது. காட்டிக் கொடுத்தவனைத் தாக்கினால்தான் தண்டனை அடைந்தவனின் மனம் சாந்தியடையும். அவன் பழிவாங்கும் உணர்ச்சி வயப்படும்போது குற்றங்கள் தொடர்கதை போன்று தொடர்ந்து நடக்கின்றன.

சமுதாயத்தின் பின்னிய செயல் விளைவுகள், செயலதிர்ச் செயல்கள், அடக்குமுறை. வறுமை ஆகிய காரணக் கூறுகளால் தான் அடிமட்ட நிலையில் வாழ்வோர், சிறுபான்மையோர் ஆகியோரிடைக் குற்றங்களும், குற்ற விகிதங்களும் அதிகரித்து விடுகின்றன. மக்கள் வாழும் இடத்திற்கு ஏற்றவாறு குற்ற விகிதங்கள் மாறுபடுகின்றன. நீக்ரோவோ அல்லது தாழ்த்தப் பட்டவனோ, எவனாக இருந்தாலும் அவன் வாழும் இடம் குற்றப் பகுதியாக இருந்தால் அதிக குற்றத்தையும், குற்றம் புரிய முடியாத இடங்களாக இருந்தால் குற்றங்கள் குறைவாகவும் காணப் படுகின்றன். குற்ற இனங்கள் தொடர்ந்து குற்றங்கள் செய்வதற்கு முக்கிய காரணம், அவர்கள் கூட்டங் கூட்டமாகத் தனித் தனியே பிரிந்து வாழ்வதுதான். இவர்களை உயர்குண மக்களோடு வாழ ஏற்பாடு செய்தால் குற்றங்கள் பெருமளவு குறைய வாய்ப்புண்டு. நரிக்குறவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் தங்களோடேயே இருத்திக் கொள்வதால் அவர்களின் நடை உடை பாவனைகளை இளமையிலேயே பழகிக் கொள்கின்றார்கள். மீன் பிடிப்பான் மகன் துணிந்து கடலில் இறங்கி நீந்துவதும், விவசாயியின் மகன் பண்ணை மாடுகளிடையே பயம் இன்றித் திரிவதும், வேலையில் ஈடுபடுவதும் அவர்களின் பழக்கத்தால் அன்றிப் பரம்பரைக் குணத்தால் அல்ல. அது போலவே குற்ற இனங்கள் என்று முன்பு கூறியதுங்கூட அதே முறையில் தொடர்ந்து வந்த நிகழ்ச்சியே அன்றி வேறில்லை. அந்தக் குற்ற இனம் இன்று எங்கே போய்விட்டது? அது அழிந்தா விட்டது. இல்லையே! அதிகமாகத்தானே ஆகியிருக்க வேண்டும். ஆனால், கல்வி எல்லோருக்கும் அளிக்கப்பட்டு நிரந்தர வேலை வாய்ப்புகளைப் பெருக்கி நாகரிகமாக எல்லா இன மக்களும் வாழ முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதால் உயர்ந்தவனுக்கும் தாழ்ந்தவனுக்கும் நிறத்தாலன்றி அமைப்பால், வாழ்க்கையில் வேறுபாடு அறிய முடிவதில்லை. மேலும் அடிமட்ட மக்களின் பொருளாதார நிலை உயர ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால் அவர்கள் குற்றம் புரியவேண்டிய அவசியம் இல்லை. போதிய கல்வி யறிவு, வசதியான குடியிருப்பு, நல்ல பதவி ஆகியவை அனை வருக்கும் அளிக்கப்பட்டுவிட்டால் குற்றமேது, குற்ற இனம்தான் ஏது? அடியோடு மறைந்துபோகும். முன் கோபத்தால், உளக்

கோளாறுகளால், உணர்ச்சிவயத்தால், சந்தர்ப்பத்தால், தற்காப்புக்காகச் செய்யப்படும் குற்றங்களே மிஞ்சும். மற்றப்படி சொத்துக்கு எதிரான குற்றங்கள் நிகழ வாய்ப்பில்லை. இதற்காக அரசாங்கம் எந்த இன மக்களாக இருந்தாலும், குற்ற இனமோ, மற்ற இனமோ ஏழைக் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை அவர்களின் பெற்றோரினின்றும். பிரித்துத் தனியாக, செம்மையாக வளர்த்துக் கல்வி அறிவையூட்டி நல்ல இளைஞராக, இலட்சிய வீரராக உருவாக்கி வேலை வாய்ப்பு நல்கிப் பேணிட வேண்டும். இப்படிச் செய்தால் குற்ற இனம் என்பது வேரற்றுப் போய் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக, நல்லார்களாக, வல்லார்களாக விளங்க முடியும் என்பதில் சிறிதும் ஐயம் ஏதுமில்லை.

சமுதாயத்தில் மக்களிடையே ஓரங்காட்டுவது, ஒரு சார்பாக ஆட்சியோ, நீதியோ அளிப்பது. நீதியை எதிர்ப்பார்த்து ஏமாந்து விடுதல், பெரும்பான்மை என்ற பெயரால் சிறுபான்மையோரை அடக்குதல், நசுக்குதல் அல்லது அவர்களின் குறைகளைக் கவனியாமல் விட்டுவிடுதல் ஆகிய காரணங்களினால்தான் அடிமட்ட நிலையிலுள்ளோரும், பெரும்பான்மையோரும் ஏமாற்றத்துடன் ஆத்திரம் அடைந்து குற்றங்களைச் செய்கின்றனர்கள். இந்நிலை அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், பிரான்ஸ், ரஷியா, இந்தியா, இலங்கை, சீனு, பாகிஸ்தான், வங்காள தேசம், பர்மா ஆகிய நாடுகளில் வாழும் பின் தங்கிய மக்கள் நசுக்கப் படுவதால் அவர்கள் போராட்டம், குழப்பம், புரட்சி, வேலை நிறுத்தங்கள் ஆகிய தடுப்பு வேலையில் ஈடுபடுபவர்களாக, தங்களின் உரிமையைப் பாதுகாக்கவேண்டிய நிலையில் உள்ளனர். எனவேதான் அவர்கள் துணிந்து குற்றச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்கள். பின் வரும் தலைமுறைகளாவது நன்கு வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் குற்றச் செயல் செய்ய அஞ்சுவதில்லை. பொதுவாக, செல்வாக்குள்ளவர்கள் குற்றங்கள் செய்தால் அவை வெளியில் அறிவிக்கப்படுவதில்லை. காவல் துறையினரும் அவர்களைக் கைது செய்வதில்லை. அவர்களுக்கு நீதிமன்றம், காவல் துறை, பெரிய அதிகாரிகள் ஆகியோர் உறவினர், நண்பர், அறிமுகமானவர்களாக இருப்பதால் வழக்கில்லாமலே தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள், அப்படியே வழக்குத் தொடர்ந்தாலும் செல்வாக்கின் பேரில் விடுதலை ஆவார்கள். மீறிச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலும் நன்னடத்தையின்பேரில் விரைவில் விடுதலை ஆவார்கள். அல்லது செல்வாக்கினுல் குற்றத்தைச் சரிசெய்து விடுகின்றனர்கள். ஆகவேதான் மேலோர்களின் குற்ற விகிதங்கள் குறைந்து காணப்படுகின்றன.

மேலும் சமுதாயத்தின் மேலினத்தவர்களால் வஞ்சிக்கப்பட்ட வர்கள், அவர்களின் சீற்றத்தை அவர்களின் இனத்தின் மீதே செலுத்துகின்றனர். அதனுல்தான் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை, அடிதடி நிகழ்ந்துவிடுகின்றது. அப்படியும் மறைமுக மாகப் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள்தாம். ஏழை மக்கள் செல்வாக்காளர் குற்றங்களைச் (White collar Crimes) செய்வ தில்லை. காரணம் உயர் பதவியிலோ, அரசியல் செல்வாக்கோ அல்லது செல்வமோ இல்லாததுதான். ஒரே கூட்டத்துடன் ஒரே இடத்தில் இணைந்து வாழ்வதால் ஏழைகளின் பழக்க வழக்கம் மாறுபடுவதில்லை. நடை, உடை, பாவனையும் மாறுபடுவதில்லை. அவர்களுக்குள்ளேயே அதே இடத்தில் திருமணம் வைத்துக் கொள்வதிலும் அதே பழக்கம் தொடர்கிறது. ஆனுல் செல்வர்கள், மாநிலம் விட்டு மாநிலம் தங்களுக்குள் திருமண உறவு கொண்டு விளங்கும் காரணத்தால், பல்வேறு நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பயிலுவதால் குற்றங்கள் அதிகம் புரிய வாய்ப் பில்லை.

அடிமட்ட நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கையையும், தரத்தையும் மாற்றுவது கல்வி ஒன்றுதான். ஆகவே கல்வி இவர் களுக்குக் கிடைக்கச் செய்வதுடன் அதைக் கட்டாயப்படுத்தவும் வேண்டும். கற்ரூேர் குற்றங்களைப் புரிய அஞ்சுவர். ஏழைமக்கள் உய்ய, கல்விதான் சிறந்த வழி. பணத்தையோ, பொருள்களையோ கொடுத்தாலும் அது காலமெல்லாம் துணையிருக்காது. குற்ற வொழுக்கத்தை மாற்றவும், தடுக்கவும் கல்வியினுல்தான் முடியும். கற்றவர்கள் நம்பிக்கை மோசடிக் குற்றம், கள்ள நாணயம், பொய் ஆவணம் புனைதல், ஏமாற்றல் போன்ற குற்றங்களைச் செல் கின்றனர் என்ருலும், போதுமான பயிற்சியின் மூலம் அதையும் தடுத்துவிடமுடியும். தெளிவான மனப்பான்மை ஏற்பட்டுவிட்டால் பிறகு குற்ற மனமே இருக்க வாய்ப்பில்லை அல்லவா ! பின் குற்றச் செயல் ஏது ?

8. குடும்பமும் குற்றமும்

(Family and Crime)

இனத்தின் வகைகளையும், அவற்றுக்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பினையும் ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் குடும்பங்களின் வகைகளையும், அவை குற்றவொழுக்கத்திற்கும், குற்றச் செயல்களுக்கும் எவ்வாறு காரணக் கூறுகளாய் அமைகின்றன என்பதையும் ஆய்வோம்.

''நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்'' என்பது மட்டும் அல்ல. அதுவே திருக்கோயிலாகவும், பாசறையாகவும், பண்பின் கலைக் கூடமாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை. குடும்பம் என்ற கோயிலில் தாய் தந்தையர் குழந்தைகளுக்குத் தெய்வமாகவும் பாசறையில் தாய் தந்தையர் தலைவி, தலைவனாகவும் காட்சியளிக்கின்றனர். இல்லம் பண்பின் கலைக்கூடம் என்றால் பெற்றோர்கள் ஒழுக்க சீலர்களாகவும், நல்ல வழிகாட்டிகளாகவும், நல்லாசிரியராகவும் காட்சியளிக்கின்றார்கள். ஆகவே பெற்றோர்களின் நடத்தை, கல்வி, ஒழுக்கம், பண்பு, நாகரிகத்தைப் பொறுத்தே குழந்தைகளின் இயல்புகள் இருக்கும். குழந்தைகள் மாடியிலோ, குடிசையிலோ, கப்பலிலோ, விமானத்திலோ எங்குப் பிறந்தாலும் சரி. இட வித்தியாசத்தால் அவர்களின் அமைப்போ இயல்போ மாறிவிடுவதில்லை. எங்குப் பிறந்தாலும் அதன் உள்ளமும், உடலின் அமைப்பும் ஒன்றுதான். வித்தியாசம் இல்லை. பிறப்பால் குழந்தைகள் குற்றவாளிகளல்ல. சிறைச்சாலையில் குற்றம் புரிந்து தண்டனை அனுபவிக்கும் தாயின் குழந்தைகூட பிறப்பால் குற்றவாளியல்ல. எனவே குழந்தைகள் இயற்கையில் குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை. ஆனால் குறையுருவமாகப் பிறக்க வாய்ப்புண்டு, பரம்பரையாகக் குழந்தைகள் குற்றவொழுக்கமுடன் வருவதில்லை. ஆகவே வளர்ப்பின் குறைபாடுகளினால், வாழ்க்கையின் சீர்கேடுகளினால், சமூகத்தின் செயலெதிர்ச் செயல்களினால், சுற்றுச் சூழ்நிலைகளினால் கள்ளம் கபடமற்ற தெய்வத்திற்குச் சமமானக் குழந்தைகள், பிறகு குற்றவொழுக்கத்

துடனும், குற்றத் தன்மையுடனும் விளங்கி குற்றவாளியாக மாறிவிடுகின்றன. ஆகவே குழந்தை குற்றவொழுக்கமுள்ளதாக ஆகிவிடுகின்றதென்ருல் அதற்குக் காரணம் அவர்களைச் சூழ்ந்துள்ளவர்கள்தாம். வளர்க்கும் முறை மாறுபட்டால் கோட்டையில் பிறந்த குழந்தையும் திருடனுகலாம், கொலைகார னுகலாம். ஆனுல் அதே நேரத்தில் குடிசையில் பிறந்த குழந்தையைச்சிறப்பான வளர்ப்பில் கொண்டுவந்தால் அறிஞனுக, கலைஞனுக, தலைவனுக விளங்கும் என்பதில் ஐயமில்லை. குழந்தைப் பருவத்தில் குழந்தை மற்றவர்களைப் பார்த்துப் பின்பற்றும் செயல் வாழ்க்கை முழுதும் தொடர்கின்றது. குழந்தைக்கும் குடும்பத் திற்கும் நிறைய தொடர்புண்டு. குழந்தையின் முதல் தொடர்பு குடும்பந்தான். தாய்தந்தை இருவரும்தான் குழந்தைக்கு ஒழுக் கத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள். பெற்ருேரின் ஒழுக்கத்தைப் பொறுத்துக்குழந்தையின் ஒழுக்கமும் அமைந்திருக்கும். சமுதாயம் எல்லார்க்கும் பொதுவான ஒன்ருகும். ஆனுல் அதில் ஏற்றத்தாழ்வு, கற்றவன், கல்லாதவன், நல்லவன், தீயவன் என்று வேறுபட்ட ஒழுக்கக் கூறுகளும், பண்புகளும் விளங்குவதற்கு முதல் காரணம் அவர்களின் குடும்பம். சமூகத்தின் ஓரவஞ்சனை போன்ற காரணக் கூறுகள் இரண்டாவதுதான்.

பெற்ருேர்களின் முதற்கடமை குழந்தைகளைச் செவ்வனே நல்லொழுக்கத்துடன் வளர்த்தலாகும். ஆகவே குழந்தை வளர்க்கும் முறைகளைப் பற்றிப் பெற்ருேர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். இன்று குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்ற தெளிவான அறிவியல் முறைகளை விளக்கும் நூல்கள் இல்லை. சில இருந்தாலும் அவை போதுமானவையாகத் தெளிவாக இல்லை. அறிவுள்ள பெற்ருேர்களாக விளங்கினுலும் சூழ்நிலையின் காரணத்தால் குழந்தைகளை வளர்ப்பதில் அக்கறை கொள்ளவதில்லை. குழந்தையை வளர்ப்புத் தாயிடமோ, பாட்டி பாட்டனுரிடமோ ஒப்படைத்து விடுகிருர்கள். அவர்கள் தீயொ ழுக்கம் உள்ளவர்களாக இருக்கலாம். கணவன் மனைவி தகராறு காரணமாக குழந்தையைச் சரிவரக் கவனிக்காமல் விட்டு விடலாம். பெற்ருேர்களின் கவனிப்பற்ற குழந்தைகள் வெளியில் உள்ளவர்களுடன் பழக வாய்ப்பு ஏற்படும்போது அவர்களின் செயலுக்கும் பெற்ருேர்களின் செயலுக்கும் வேறுபாடு காணப் படலாம். இதனுல் குழந்தைக்குக் குழப்பம் ஏற்படும். குழந்தை முக்கியமாக ஒழுக்கம், கட்டுப்பாடு (Obedience and Control) இரண்டையும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். இது பெற்ருேர்களின் தகுதியைப் பொறுத்து வேறுபடும். அதாவது சமுதாயத்தில் அவர்களுக்குள்ள தகுதிநிலை, வறுமை, பெற்ருேர்

உடலமைப்பு, குடும்ப அமைப்பு, மொழி, பெற்ருேரின் போட்டித் திறன், பொருளீட்டும் வழி, திறமை ஆகியவற்றைப் பொறுத்தன வாகும். மேலும், குழந்தை யாருடன் பழகுகிறதோ, அவர்களின் ஒழுக்கத்தைப் பொறுத்தும் குழந்தையின் ஒழுக்கம் வேறுபடும். வளர்ப்புத் தாயிடமோ, மற்ருேரிடமோ கொடுத்துக் குழந்தையை வளர்த்தால் அவர்கள் குழந்தையை பயமுறுத்தி வளர்ப்பர். அதனுல் அக் குழந்தை பிற்காலத்தில் கோழையாக மாறவும் வாய்ப்புண்டு. அல்லது கொடுமையின் காரணமாகப் பழிவாங்கும் உணர்ச்சியும் பெறலாம். இன்று பெண்களும் அலுவலகம் சென்று பணியாற்றுகின்ற காரணத்தால் அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதில் நேரடிக்கவனம் செலுத்தாமல் மற்றையோரிடம் கொடுத்து வளர்க்கும் நிலை உருவாகின்றது. இவ்வாறு ஒப்படைக்கும்போது குழந்தைகளைப் பொறுப்புள்ளவர்களிடம், அனுபவம் உள்ளவர்களிடம் கொடுத்து வளர்த்தல் சாலச் சிறந்ததாகும்.

குடும்பங்களின் வகையைப் பற்றி ஆராய்வோம் (Types of Homes)

அதாவது எந்தெந்தச் சூழ்நிலையில் எந்தெந்தக் குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகள் குற்றவொழுக்கம் உள்ளவர்களாகவும் குற்றச் செயல் புரிபவர்களாகவும் உள்ளார்கள் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

முதலாவது குடும்பத்தில் மற்ற அங்கத்தினர்கள் ஏற்கெனவே குற்றவொழுக்கத்தையும், குற்றச் செயல்களையும் பெற்றிருத்தல். அதாவது தண்டனை அடைந்து குற்றவாளியாக இருக்கலாம், தண்டனை பெருமல் தப்பித்தும் குற்றங்களைச் செய்து வரலாம். அல்லது நேர்மையற்றவர்களாக, பரத்தையராக, குடிகாரராக, ஒழுக்கமற்றவராக இருக்கலாம்.

இரண்டாவதாக பெற்ருேர்களில் ஒருவர் அல்லது இருவரும் இறந்து விடுதல் அல்லது மணமுறிவு செய்துவிடுதல் (Divorce) அல்லது கைவிட்டுவிடுதல் (Desertion).

மூன்ருவதாகப் பெற்ருேர்களின் திறமையின்மை. அதாவது கல்லாமை, பார்வையின்மை, அல்லது மற்ற அங்கக் குறைபாடு, உடல் சொரணையின்மை, நோய்வாய்ப்பட்டிருத்தல் ஆகிய காரணங்களினுல் பெற்ருேர்கள் கட்டுப்பாடு, திறமையற்று விளங்குவது.

நான்காவதாக மன அமைதியற்ற தன்மை (Uncongeniality) அல்லது குடும்பத்தில் ஒருவருக்கொருவர் ஒத்து வராதத் தன்மை, பலர் உள்ள குடும்பத்தில் ஒருவர் மட்டும் ஆதிக்கம்

செலுத்துவது அல்லது செல்வாக்காக வாழுதல், அதாவது தனிச் சலுகை, தனிப்பற்று, அதிகமான சொந்தம், தனிமை நாடுதல், ஆள் நடமாட்டம் அற்ற இடம், அதிகக் கடுமை, அதிகச் சோதனை, கவனமின்மை, பொறுமை, பொச்சரிப்பு ஆகிய தீயொழுக்கமும், குற்றத் தன்மைகளும் நிறைந்து காணப்படுவதுடன் வீடுகள் வசதியின்றி நெருக்கமாக இருத்தல், அடிக்கடி உறவினர்கள் தொந்தரவு அளித்தல் ஆகிய நிலைமைகளும் இணைந்திருத்தல்.

ஐந்தாவதாக இன வேறுபாடுகள், மத வேறுபாடுகள், பழக்க வழக்கம், வாழ்க்கைத்தரம் ஆகிய வேறுபாடுகள், வளர்ப்பகம், சீர்திருத்தப் பள்ளி, பள்ளிக்கூடம் ஆகியவற்றில் வேறுபாடு காணப்படுதல்.

ஆறுவதாக பொருளாதார நெருக்கடி, அதாவது குடும்பத்தில் வேலையின்மை, போதிய வருமானமின்மை, அல்லது தாய் வெளியில் வேலைக்குச் (கூலி) சென்றுவிடுதல்.

ஏழாவதாக வசதியுள்ள குடும்பங்களில் பெற்றோர்கள் ஓர வஞ்சனையாக நடந்து கொள்ளுதல், பல குழந்தைகளில் ஒரு வருக்கு அதிகச் செல்வாக்கும் அன்பும் வைத்தல், மற்றவர்களைக் கவனியாமல் விட்டு விடுதல், இதனால் கோபமடைந்த குழந் தைகள் முதலில் தீயொழுக்கத்தில் ஈடுபட்டு, அதுவே பின்பு குற்றவொழுக்கமாக மாறி, பின் அவன் குற்றவாளியாக ஆகி விடுதல்.

எட்டாவதாக அளவு கடந்து குழந்தைகளைப் பெற்றுவிடுதல். இதனால் போதுமான கட்டுப்பாடும் கவனமும் செலுத்த முடி யாத நிலை ஏற்படுதல்.

ஒன்பதாவதாக பெற்றோர்கள் அழகும், அறிவுமுள்ள குழந்தை களையே கொஞ்சுதல், அன்பு செலுத்துதல். இதனால் வெறுப்புற்ற குழந்தை குற்றவொழுக்கத்தில் ஈடுபடுதல், குறிப்பாக அழகுள்ள பெண்களையே பெற்றோர் கொஞ்சுவதால் அழகற்ற பெண்கள் மனம் உடைந்து குற்றவொழுக்கத்தில் ஈடுபாடுகொள்ளுதல்.

பத்தாவதாக நன்கு படிக்கும் பிள்ளைகளுக்கு வீட்டில் செல் வாக்கும், படிக்காத பிள்ளைகளுக்குக் கடினமான உழைப்பை அளித்தல், உழைப்பின் கொடுமையாலும், ஓரவஞ்சனையைத் தாங்கிக் கொள்ளும் சக்தியின்மையாலும் வீட்டை விட்டு வெளி யேறி, நாடோடியாகத் திரிதல், பின் குற்றவொழுக்கத்தில் ஈடு பட்டுக் குற்றவாளியாகத் திகழ்தல்.

பதினொன்றாவதாக குழந்தைகளின் மனநிலை, அறிவின் சக்தி, தைரியம், நோக்கம், அறிவு வளர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கேற்ற முறையில் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கத் தவறுதல், கல்வி கற்ற பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கட்டாயப் படுத்தி டாக்டராகவோ, இன்ஜினியராகவோ, வழக்கறிஞராகவோ ஆக்க நினைத்து, அவர்கள் விருப்புக்கு மாறாகக் கட்டாயப் படுத்திக் கற்க வைத்தல். அதில் தோல்வி காணும் போது தற்கொலை அல்லது வீட்டை விட்டு வெளியேறல்.

பன்னிரண்டாவதாக ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தகுதியற்றவர்களாக இருத்தல். குழந்தைகளுக்கு அநீதிகளைக் கற்பித்தல். பாடங்களைச் சரிவரப் போதியாமல் இருத்தல். இதைப் பெற்றோர்கள் உணர்ந்து நல்ல பள்ளிக்கு மாற்ற முயலாமல் இருத்தல். சில ஆசிரியர்கள் குழந்தைகளை அதிகமாக அடித்து விடுதல். இதனால் குழந்தைக்குப் பள்ளி என்றாலே பயம் உண்டாதல். இதை உணராத பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்று கட்டாயப் படுத்தும்போது, பள்ளிக்கு என்று புறப்பட்டுப் பள்ளிக்குச் செல்லாமல் வழியில் உள்ள தோப்பு, மலை, வயல்காடு ஆகியவற்றில் தங்கி விளையாடிவிட்டு மாலையில் பள்ளி விடுவதுபோல் வீடு திரும்புதல். இதை அறியாமல் பெற்றோர் இருந்துவிட்டால் விரைவில் குழந்தை குற்றவொழுக்கத்தின் பாற்படும்.

பதின்மூன்றாக முதல் மனைவி இறந்துவிட்டால் மறுமணம் செய்துகொள்ளுதல். இதனால் சிற்றன்னை, பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துதல், இதனால் குழந்தைகள் விரைவில் குற்றவொழுக்கத்தின்பாற்படுதல்.

கடைசியாக, தந்தை வைப்பாட்டியை வைத்துக்கொள்ளல், மனைவியையும் குழந்தைகளையும் கவனிக்காமல் விட்டுவிடுதல், இதனால் தந்தையின் குற்றவொழுக்கம் தாய்க்கும் பரவி விடுதல். ஆகிய பல்வேறு காரணக் கூறுகளினால் குடும்பங்கள் குற்றவொழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் காரணக் கூறுகளாக அமைகின்றன.

அடுத்துக் குடும்பங்களின் தரத்தைப் பிரித்துக் குற்றவொழுக்கத்திற்கானக் காரணக் கூறுகளை ஆராய்தல். அதாவது சாதாரண குடும்பங்களிலிருந்து எத்தனை சதவீதம் குற்றவாளிகள் உருவாகின்றனர். மோசமான, மிகவும் மோசமான குடும்பங்களிலிருந்து எத்தனை சதம் குற்றவாளிகள் உருவாகின்றார்கள்,

நன் முறையிலான குடும்பங்களிலிருந்து எத்தனை சதவீதம் குற்றவாளிகள் உருவாகின்றனர் என்பதை ஆராய்தல் வேண்டும்.

குடும்பங்களின் தரத்தைப் பிரிப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது குடும்பத்தின் தேவைகள், தூய்மை, துப்புரவு, குடும்ப நபர்களின் எண்ணிக்கை, பெற்றோரின் எண்ணிக்கை, அவர்களின் கண்காணிப்பு, அல்லது பாதுகாவலரின் கண்காணிப்பு ஆகியவற்றைக்கொண்டு பிரித்தல், மேற்சொன்ன தகவல்களடிப்படையில் மிக ஏழைக் குடும்பம், ஏழைக் குடும்பம், சாதாரண குடும்பம், நல்ல குடும்பம், மிக நல்ல குடும்பம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலிருந்து எடுக்கப்பட்ட கணக்குகளின்படி மிக ஏழைக் குடும்பம், ஏழைக் குடும்பம் ஆகியவற்றிலிருந்து 62% குற்றவாளிகளும், சாதாரண குடுபங்களிலிருந்து 47 சதமும், நல்ல குடும்பங்களிலிருந்து 6 சதமும், மிக நல்ல குடும்பங்களிலிருந்து 0·5 சதமும் காணப்படுவதாக அறிவித்துள்ளனர். இங்கு அநேகக் குடும்பங்கள் மிக்க வறுமையுற்றனவாகவே உள்ளன. பெரும்பாலான குற்றங்கள் இவர்களால்தான் செய்யப்படுகின்றன. அதற்கடுத்தபடியாகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தோரும், நல்ல குடும்பங்களிலிருந்தும் மிகவும் குறைவாகவும் குற்றவாளிகள் காணப்படுகின்றனர்கள். இது குடும்பங்களின் தரத்தைக்கொண்டு பொதுவாக எடுக்கப்பட்ட புள்ளிவிவரமாகும்.

தனி நபர்களின் வழக்கைக்கொண்டு குடும்பங்களின் சூழ்நிலையை ஆராய்தல். இந்த முறையில் சிகாகோவில் ஹெலி (Healy) என்பவர் ஆயிரம் வழக்குகளை ஆராய்ந்து அதில் பெரும்பாலான காரணக்கூறு அதாவது குற்றத் தன்மையில் 19 சதமும், சாதாரண காரணக்கூறு 23 சதமும், வீட்டின் சூழ்நிலையின் காரணமாக 22 சதமும் காணப்படுகின்றன என்றும், மேற்கூறிய குற்றவாளிகளில் 23 சதம் பெற்றோர்களின் கட்டுப்பாடு இன்மையினால்தான் என்கிறார். இரண்டாம் முறை ஆய்ந்து பெற்றோர்களின் கட்டுப்பாடின்மையால் 46 சதம் குற்றங்கள் நிகழ்வதாகக் கூறுகின்றார். எனவே, பெற்றோரின் கட்டுப்பாடின்மை, குற்றங்களுக்கு முக்கிய காரணம் என்பதை அறிகிறோம்.

பெற்றோரின் கட்டுப்பாட்டுத்திறமை குடும்பத்திற்கு குடும்பம் வேறுபடுகிறது. சில குடும்பங்களில் தாயின் கட்டுப்பாட்டுத் திறனும், சிலவற்றில் தந்தையின் கட்டுப்பாட்டுத்திறனும் செயல்படுகிறது. தந்தை இருந்து, தாயின் செல்வாக்கு அதிகமிருந்தால் அக் குடும்படுத்தில் பெண்கள் அதிகச் செல்வாக்குடனும் ஆண்

கள் செல்வாக்கிழந்தும் இருப்பார்கள். இதனால் பெண்களின் தான்தோன்றித்தனம் அதிகமாக இருக்கும். தந்தையின் கட்டுப்பாட்டில் இயங்கும் குடும்பங்கள் நல்ல அடக்கத்துடன் அமைதியாக விளங்குகின்றன. தந்தை குடிகாரனாக, குற்றவொழுக்கமுள்ளவனாக விளங்கும்போதுதான் தாயின் கட்டுப்பாட்டில் விளங்கும் குடும்பம் நல்ல கட்டுப்பாடும் அமைதியும் கொண்டு விளங்குகின்றது. தாய், தந்தையாக இருந்தாலும் அளவோடும், திறமையோடும் குடும்பத்தை நடத்திச் செல்லும்போது குடும்பம் ஒழுக்கத்தில் சிறப்புற்று விளங்கும்.

குடும்பத்தில் குற்றத்தன்மை (Criminality in the Home)

குழந்தைகளின் குற்றவொழுக்கத்திற்கு முதற்காரணம் குடும்பம். அதன் உறுப்பினர்கள் இங்கிலாந்தில் பர்ட் (Burt) என்னும் அறிஞர் குற்றத்தின் ஒரு காரணக்கூறாக குடும்பத்தை ஆய்வு செய்தபோது சாதாரண குடும்பங்களிலிருந்து வரும் குற்றவாளிகளைவிட 5 மடங்கு அதிகமாகக் குற்றக் குடும்பங்களிலிருந்து உருவாகின்றார்கள் என்று கூறுகின்றார். இது எதைக் காட்டுகின்றது? சூழ்நிலையாலும், பெற்றோர்களின் அமைப்பை அப்படியே குழந்தைகள் பின்பற்றுதலையுமே இது காட்டுகின்றது. தமிழ் நாட்டிலும் குற்றத்திற்குக் காரணக்கூறு ஆய்வு செய்ததில் பல குடும்பங்களில் ஒருவர் அல்லது இருவர் குற்றவாளிகளாக விளங்குகின்றனர். இதற்குத் தாய் அல்லது தந்தை, அண்ணன், தம்பி, தமக்கை, தங்கை இப்படி யாராவது குற்றச் செயல் புரியும்படி தூண்டுதலே காரணம் அல்லது குற்ற ஒழுக்கத்தை உடையவர்களாக விளங்குதல். மஸாசௌசட்டில் (Massachauset) நகரிலுள்ள சீர்திருத்தப்பள்ளியில் வளர்க்கப்பட்ட குழந்தைகளைப்பற்றி குலுக்ஸ் (Glucks) என்பவர் ஆய்வு செய்தார். அதில் 84.8 சதம் குற்றவாளிகளால் அல்லது அவர்கள் மத்தியில் வளர்க்கபட்டவர்களே என்றார். அதே போன்று குற்றக் குடும்பங்களிலிருந்து இளங் குற்றவாளிகள் 86·7 சதமும், பெண் குற்றவாளிகள் 80·7 சதமும் காணப்படுவதாக அறிவிக்கின்றார். ஆனால் பார்க்கர் (Barker) சிகாகோவில் ஆய்வு செய்ததில் குழந்தைகள் மற்றக் குற்றவாளிக் குழந்தைகளுடன் பழகுவதுதான் குற்றத்திற்கு முக்கிய காரணம் என்று கூறுகிறார். 1950-ல் குலுக்ஸ் (Glucks) என்னும் அறிஞர் 500 குழந்தைகளை ஆய்வு செய்து குடிபோதை, ஒழுக்கக்கேடு, குற்றவொழுக்கம் ஆகிய தன்மைகள் கொண்ட குடும்பங்களில் மட்டும் 90·4 சதம் குற்றங்கள் புரிந்துள்ளதாகக் கூறுகின்றார். அதேபோன்று குற்றம் புரியா குடும்பங்களைச் சேர்ந்த 500 குழந்தைகளை ஆய்வு செய்ததில் 54 சதம் சிறுவர்கள் குற்றம் புரிந்துள்ளனர். ஆக,

கட்டுப்பாடு இருந்தாலும் பெற்றோர்கள் தீயொழுக்கம் உள்ளோ ரெனில் குழந்தைகளும் குற்றவொழுக்கத்தை நாடிவிடுகின்றார் கள். மது அருந்துதல், வைப்பாட்டி ஆகிய இரு தீயொழுக்கமே குழந்தைகளை வெகுவாகப் பாதிக்கக்கூடியவை. குழந்தைகள் தங்கள் பெற்றோரைப் பார்த்து அப்படியே பின்பற்றுகின்றார்கள். மேற்சொன்ன இரு தீயொழுக்கங்களும் ஒரு நாளுடன் முடிவடை வதில்லை. அவை தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கக் கூடி யவை. தந்தையின் தொழிலை, மகன் கற்றுக்கொண்டு செய்வதைப் போன்று, குற்றவொழுக்கத்தில் ஈடுபடுவோரின் மகன்களும் குற்றச் செயலைப் புரியும் திறமையைப் பெற்றுவிடுகின்றார்கள். குடிப் போர் தங்கள் குழந்தைகளைக் கள், சாராயம் ஆகியவற்றை வாங்கி வர அனுப்பும் செயலினால், மறைமுகமாக அவர்களைத் தீயொழுக்கத்தின்பால் ஈடுபடுத்துகின்றார்கள். அருகிலுள்ள சிறு பொருள்களைத் திருடிவரச் சொல்லுதல் அல்லது பெற்றோரே அக்கம் பக்க வயற்காடுகளில் திருடுதல் ஆகிய குற்றச் செயல் களால் குழந்தைகள் அத் தொழிலை விரைவில் கற்றுக் கொள் கின்றார்கள்.

தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆய்வு செய்ததில் குடும்பத்தில் பெற்றோர்கள் குடிகாரர்களாக இருந்தால், குழந்தை களும் குடிகாரர்களாக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் பாட்டன் குடிகாரன், அவன் மகன் குடிகாரன், அவன் பேரனும் குடிகாரனாகப் பின்னர் மாறிவிட்டான். அத்துடன் திருட்டுக் குற்றம், வலியத் தாக்குதல், பரத்தையர் நட்பு, பொது அமைதி குலைத்தல் ஆகிய குற்றச் செயல்களைப் புரிந்துள்ளார்கள். குடிப்பழக்கத்தில் அழிந்த குடும்பங்கள் எண்ணிலா. மேற்சொன்ன குடும்பம் குடியால் வறுமையாகிவிட்டது. மூன்றாவது தலைமுறையினரும் அதே குற்றவொழுக்கத்தை உடையவர்களாக விளங்கினார்கள். சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்திவிடுவார்கள். அதாவது வீட்டு வேலைகளைக் கவனிக்க, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளச் சொல்வார்கள். இதனால் அக் குழந்தைக்குப் பள்ளிக்குச் செல்லும் எண்ணத்தை மாற்றிவிடுவர். சில நாட்களில் அக்குழந்தை தானாகவே பள்ளிக்குப் போவதை நிறுத்திவிடுகிறது. குழந்தைகள் கல்வி பாழாவதற்கும் பெற்றோர் கள் தாம் காரணம். குடும்பத்தில் வறுமையோ, மற்ற இக்கட்டான நிலைமையோ உண்டாகும்போதும், பெற்றோர்களே குழந்தை களைப் பார்த்து ‘வீட்டைவிட்டு எங்கேயாவது போய் தொலை யுங்கள்’ என்று வெளிப்படையாகவே கூறி அனுப்பிவிடுவார்கள். வெளியே செல்லும் குழந்தைகள் ஊர்சுற்றி, வாழ்க்கைக்கு வேறு வழியில்லாமல், குற்றவொழுக்கத்தில் ஈடுபடவேண்டிய கட்டாயத் திற்குள்ளாகின்றார்கள்.

சிதறிய குடும்பம் (Broken Home)

பெற்ருேர்களின் இறப்பு, மணமுறிவு, கைவிடுதல், திடீரென்று வறுமையில் நொடிந்து விடுதல், அதாவது, பணியாற்றிய வேலை போய்விடுதல் (கதவடைப்பு அல்லது வேலையினின்றும் நீக்கிவிடுதல் வியாபாரத்தில் நட்டம் ஏற்படல்) ஆகிய காரணங்களினுல் குடும்பங்கள் சிதறிவிடுகின்றன, அல்லது சீரழிந்து விடுகின்றன. குடும்பங்கள் சிதறிவிடுவதற்கும், குற்றவொழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. வளமாக வாழ்ந்த குடும்பம், கட்டுப்பாடுடன் வாழ்ந்த குடும்பம், திடீரென்று வளமும், கட்டுப்பாடும், பாதுகாப்பும் நீங்கிவிடும்போது துடுப்பு இல்லாத படகைப்போல குடும்பம் துன்பத்திற்குள்ளாகிறது. தாய்ப்பறவை இறந்துவிட்டால் முட்டை அழுகிவிடும். இது ஆப்பிரிக்காவிலுள்ள பழமொழி. "தாயில்லாப் பிள்ளை தறுதலை" என்ற பழமொழி உண்டு. ஆகக் குடும்பத் தலைவன், தலைவி இறந்துவிட்டால் குழந்தைகள் ஆதரவற்றவர்களாய், அனுதைகளாய் அலைந்து திரிந்து குற்றவொழுக்கத்தைக் கற்றுக் குற்றச் செயலில் ஈடுபடுகின்ருர்கள். முப்பது முதல் அறுபது சதம் வரையில் சிதறிய குடும்பத்திலிருந்து குற்றவாளிகள் உருவாகின்ருர்கள் என்று ஆய்வின் அறிக்கைகள் பகர்கின்றன. சிதறிய குடும்பத்தில் பையன்களைவிட பெண்கள் குற்ற விகிதத்தில் அதிகமாக உள்ளனர் என்றும், வெள்ளையனைவிட நீக்ரோக்களின் குற்ற விகிதம் அதிகம் என்றும் ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. 43 சதம் குற்றவாளிகள் சிதறிய குடும்பங்களிலிருந்து தோன்றியவர்களே என்று போலக் (Polac) என்ற அறிஞர் கூறுகின்ருர். சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள மொத்த குழந்தைகளில் 58 சதம் சிதறிய குடுபங்களிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகின்ருர். ஐவான் நை (Ivan Nye) என்பவர் பள்ளிச் சிறுவர்களையும், பயிற்சிப் பள்ளி மாணவர்களையும் ஆராய்ந்ததில், அதில் பள்ளியிலிருந்து சிறுவர்கள் 24 சதமும், அதே போன்று பயிற்சிப் பள்ளியிலிருந்து 48 சதமும் சிதறிய குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் எனக் கூறுகின்ருர். இந்தப் புள்ளி விவரங்கள் குற்றவாளிகளிடையே கணக்கிடப்பட்ட புள்ளி விவரமாகும். இது சரியான முறையன்று. பொதுவாக, குற்றத்திற்கும் சிதறிய குடும்பத்திற்கும் உள்ள தொடர்பை அறிய குற்றவாளிகள் குடும்பம், குற்றம் புரியாதவர்கள் குடும்பம் ஆகிய இரண்டுவிதக் குடும்பங்களையும் ஆராய்ந்து, அதில் சிதறிய குடும்பங்களிலிருந்து எத்தனை சதம் என்று கணக்கிடுவதுதான் சிறந்ததாகும். இதன்படி ஷாவும், மைக்கேயும் (Shaw and Mickay) குற்றத்தன்மை உள்ள குழந்தைகளை, அதே வயதுள்ள பள்ளிக் குழந்தைகளுடன்

ஒப்பிட்டு ஆராய்ந்ததில் 42·5 சதம் குற்றத் தன்மை வாய்ந்த குழந்தைகள், சிதறிய குடும்பங்களிலிருந்தும் சாதாரண குடும்பத்திலிருந்து 36·1 சதமும் காணப்படுவதாக அறிந்துள்ளார்கள். சிகாகோ நகரத்தில் அதே போன்று ஆராய்ச்சி செய்ததில் அதாவது சிறுமிகளை ஆய்வு செய்ததில் 66·8 சதம் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர்கள். அதில் 44·8 சதம் சிதறிய குடும்பத்திலிருந்து உருவாக்கப்பட்டவர்கள் எனக் கூறுகின்றனர். மார்கரட் ஹாட்கிங் (Margaret Hodking) சிதறிய குடும்பங்களிலிருந்து ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலார்கள் ஏறத்தாழ ஒரே அளவில் காணப்படுவதாகக் கூறுகின்றனர். ஆனால் வீட்டை விட்டு ஓடிவிடுதல், தீய வாழ்க்கை வாழ்தல், ஆகிய குற்றங்களைப் பொறுத்தவரையில் ஆண்களைவிட பெண்களின் குற்ற எண்ணிக்கை விகிதம் அதிகமாக உள்ளது.

ஆண்களைப் பொறுத்தவரையில் சிதறிய குடும்பத்திற்கும், சிதறாத குற்றக் குடும்பத்திற்கும் வேறுபாடு காணப்படவில்லை. இந்த இரண்டுவிதக் குடும்பத்திலும் கட்டுப்பாடு இல்லாமல் போய் விடுகிறது. முன்னது குடும்பம் சிதறியதால் கட்டுப்பாடு அற்று விடுகிறது. பின்னது திறமையின்மையால் கட்டுப்பாடு இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் பெண்களைப் பொறுத்தமட்டில் சிதறாத குடும்பமாக இருக்கும்போது அவர்களுக்கு அதிகக் கட்டுப்பாடும் கண்காணிப்புமுண்டு. குடும்பம் சிதறியவுடன் அக்கட்டுப்பாடு தளர்ந்துவிடுகின்றது. இதனால் பெண்கள் எளிதில் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர்கள். பெண்களால் பாதுகாப்பின்றி தனித்து வாழ்வது இயலாத காரியமாகும்.

கட்டுப்பாடும் பயிற்சியும் (Discipline and Training)

நாட்டில் அமைதி, வீட்டில் அமைதி, பொது இடத்தில் அமைதி, இப்படி அமைதி, ஒழுக்கம் நிலவவேண்டுமானால் அங்கே கட்டுப்பாடு மிகவும் தேவைப்படுகின்றது. ஆக, கட்டுப்பாட்டுடன் தகுந்த பயிற்சியும் அளிக்கப்பட்டுவிட்டால் எங்கும் அமைதி, எதிலும் ஒழுக்கம் தானகவே அமைந்து விடும். நல்ல குடும்பங்களைவிட குற்றம் புரிந்தவர்கள் குடும்பங்களில் காணப்படும் குறைபாடான கட்டுப்பாடு 6·9 மடங்கு அதிகமுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம், பெற்றோர்கள் கட்டுப்பாட்டுடன் நடப்பதில்லை. பெற்றோர்களின் அறிவு, உடலமைப்பு, கெட்டபழக்கம் ஆகிய தன்மைகள் அவர்களின் கட்டுப்பாட்டை வலிமையற்றதாக்குகின்றன. மேலும் பெற்றோர்கள் தொடர்ந்து குடும்பத்தில் இல்லாமலிருக்கும் சூழ்நிலை உருவாகும்போது கட்டுப்பாடு குறைந்து விடுகிறது.

அதாவது தந்தை ராணுவத்தில் பணிபுரிவது, அல்லது வெளிநாடு களுக்குச் சென்றுவிடுதல், அல்லது குற்றத்திற்காகத் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் இருத்தல் ஆகிய காரணங்களினால் குடும்பத்தில் கட்டுப்பாடு செயல்படுத்த முடியாத நிலைமை ஏற் படுகிறது. குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில் பெற்றோர் களுக்குள் முரண்பட்ட கருத்து. ஒருவர் கட்டுப்படுத்தவும், மற் றொருவர் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியவும் முற்படும்போது, குழந்தை கட்டுப்பாட்டை மீறுவதையே ஏற்றுக்கொள்கிறது. கடுமையான கட்டுப்பாட்டை விதித்தால், குழந்தை மனம் உடைந்து வீட்டைவிட்டு வெளியேறிவிடுகிறது. குலுக்ஸ் (Glucks) என்ற அறிஞர் தமது ஆய்வில், தாயின் தகுதியற்ற கண்காணிப் பிலிருந்து வளர்ந்த குடும்பத்திலிருந்து 64 சதம் குழந்தைகள் குற்றவாளியாகவும், அதே சமயத்தில் குற்றம் புரியாதவர் குடும் பங்களிலிருந்து 13 சதம் காணப்படுவதாகவும், தாயினால் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட குற்றக் குடும்பங்களிலிருந்து 57 சதமும் அதே போன்று குற்றம் புரியாக் குடும்பங்களிலிருந்து 12 சதமும் காணப்படுகின்றது.

குடும்பங்களின்மீது பெற்றோர்க்கு கவனமின்மையாலும், குடும்பங்களில் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவை தோல்வி யடைந்து விடுகின்றன. பல குடும்பங்களில் குழந்தைகளுக்குக் கட்டுப்பாடோ பயிற்சியோ அளிப்பதில் முயற்சி மேற்கொள்ளப் படுவதில்லை. வாழ்க்கைக்குத் துணைசெய்யக்கூடிய தொழில் களையோ, கல்வியோ அளிக்காமல் விட்டுவிடுவதனால், குழந் தைகள் சற்று வளர்ந்தவுடன் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தேடிக்கொள்ளவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகின்றார்கள். இதனால் அவர்கள் வெளியில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டியுள்ளது. வெளியில் உள்ளவர்கள் நல்லவர் களா, தீயவர்களா என்பதைக் குழந்தை அறிய வாய்ப்பில்லை. இது சமுதாயத்தில் கட்டுப்பாடு, அமைதி ஆகியவற்றைப் பொறுத்து இருக்கும். குழந்தைகள் குற்றவொழுக்கத்தைக் கற்றுக் கொள்கின்றனரா அல்லது நல்லொழுக்கம் கற்றுக்கொள் கின்றனரா என்பது சுற்றுச் சூழ்நிலைகளைப் பொறுத்து அமையும். குழந்தைகளுக்குத் தக்க பயிற்சி அளிக்காமல் போய்விடுவதற்குக் காரணம் பெற்றோரின் அறியாமையும், குற்றவொழுக்கமும்தான். இந்த நிலை குடிசைப்பகுதியில் அதிகம் காணப்படுகிறது. நடுத் தரக் குடும்பங்களிலும் காணப்படுகின்றது. குழந்தைகள், குற்ற வொழுக்கம் உள்ளவர்களுடன் பழக்கம் ஏற்படுவதனால், குற்றச் செயல்கள், குற்றவொழுக்கம், குற்ற நடத்தை அதிகமாகப் பரவி விடுகிறது.

பெற்றோர்களில் பலர் தங்களின் குழந்தைகளைப்பற்றித் தரக் குறைவாக, இழிவாகப் பலர் முன்பு பேசுவார்கள் அல்லது நடத்தப் படுவார்கள். ஆசிரியரிடத்தில் பையனை நன்கு அடிக்கும்படி கூறுவார்கள். அதாவது என் பயைன் கட்டுக்கடங்காமல் திரி கின்றான், நீங்களாவது சற்று அடக்குங்கள் என்று ஆசிரியரிடமோ, யாராவது பெரியவரிடமோ, காவல்துறை அதிகாரிகளிடமோ அல்லது இளங்குற்றவாளி நீதிமன்றத்திலோ முறையிடுவார்கள். இப்படிப்பட்ட பெற்றோரின் செயல்களைக் குழந்தைகள் அறவே வெறுப்பர். தன்னைப் பற்றிப் பிறரிடம் இழிவாகக் கூறுகின்றனரே என்று அவன் மனம் வேதனைப்படும், வெதும்பும். இதனால் அவன் கோபம் இன்னும் அதிகரிக்கும். இப்படிப்பட்ட வீட்டுக்கு வரக் கூடாது என்று முடிவெடுத்து வெளியே கிளம்பிவிடலாம். மேற் கூறிய பெற்றோரின் முறையீட்டால் நன்மைக்குப் பதில் தீமையே அதிகம் விளைகிறது. மேலும் ஒரு முறை தங்கள் குழந்தைகளைப் பற்றி வெளியாரிடம் முறையிட்டுவிட்ட பிறகு தங்கள் குழந்தை களைக் கட்டுப்படுத்த, கண்டிக்க, அவர்களால் முடியாமற் போய் விடுகின்றது. "தலைக்குமேலே வெள்ளம் போன பிறகு நான் கெட்டவன் என்பது ஊருக்கெல்லாம் பறை சாற்றிய பிறகு, இனி நான் நல்லவனாக மாறினால் என்ன, மாறாவிட்டால்தான் என்ன" என்னும் கேள்வி அவர்களின் உள்ளத்திலே உருவாகின்றது. பிறகு பெற்றோர்கள் என்னதான் கூறினாலும் அதைக் காதுகொடுத்துக் கேட்கமாட்டான். குழந்தைகளிடம் அன்பு, பாசம் உள்ள பெற் றோர்கள், விவரம் அறிந்த பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை வெளிப்படையாகத் திட்டமாட்டார்கள், தண்டிக்கமாட்டார்கள். இந்த நிலைப் பொருளாதார அடிமட்டத்தில் உள்ளவர்களிடமே நிரம்பக் காணப்படுகிறது. படிக்காத, பாமர, ஏழை கிராம மக்களிடையே இந்த நிலை, வழக்கம் நிறைய உண்டு.

ஆகவே குழந்தைகளை வளர்ப்பதெப்படி என்பது குறித்து பெற்றோர்களுக்கும் பயிற்சி தேவைப்படுகிறது. அதைப் போக்க தமிழகத்தில் இளைஞர் அணி (Youth Corps) என்ற பட்டதாரி களைக் கொண்ட அணி இருக்கிறது. ஆனால் அந்த அணி செவ்வனே செயல்படவில்லை என்பது யாவரும் அறிந்த வொன்றாகும். தங்களுக்குப் போதிய ஊதியம், வேலை உத்தரவாத மற்ற தன்மையில் அவர்கள் வேலையைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் திட்டம் சிறந்த திட்டமாகும். நன்மை பயக்கக் கூடிய திட்டமாகும். பெற்றோர்கள் போதிய திறமை யற்றவர்களாக விளங்கும்போது அவர்களின் குழந்தைகள் அறிவுள்ளவராக விளங்கினால் பெற்றோர்களின் சொல்லுக்கு அவர்கள் கீழ்ப்படியமாட்டார்கள். இதை மூன்று வந்தேறிக் குடும்

பங்கள் (Immigrant Families) மூலம் எடுத்துக் காட்டலாம். லூயிஸ் எச். பௌன் (Louis H. Bowen) என்பவரால் 1914-ல் நியூயார்க்கில் ஆய்வு நடத்தப்பட்டதாகும்.

அமெரிக்காவில், ரஷியாவினின்று வந்து குடியேறிய ஒரு மருந்து வியாபாரிக்கு 14 வயது மகன் இருந்தான். அவன் பள்ளிக்குச் செல்லாமல் நாடோடியாகத் திரிந்து புகழ்பெற்ற குற்றவாளியாகிவிட்டான். ஒரு சில சமூக சேவகர் அவனின் தாயாரைப் பார்த்து உங்கள் மகன் வீட்டில் தங்க, வீட்டை அவன் விரும்பிய நிலையில் வைத்துக்கொள்ள, முயற்சி மேற் கொள்ளப்பட்டதா எனக் கேட்க, அத்தாய் "ஆம்! பலமுயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. வீட்டை அழகு படித்தி அவனை அழைத்துவர பலமுறை முயன்றோம். ஆனால் நாங்கள் அழகாக இல்லை. அமெரிக்கரைப் போன்று அழகாகப் பேசுவதில்லை என்று கூறினன். நான் இரவுப் பள்ளிக்குச் சென்று ஆங்கிலம் கற்க முயன்றேன். ஆனால் அம்மொழி எனக்கு வரவில்லை. என்னுடைய வயதுதான் அதற்குக் காரணம் என நினைக்கிறேன். பிள்ளைகளைப் போலவே பெற்றோரும் நடந்துகொள்ளவேண்டும் என்பது எவ்வளவு மோசமான நிலை என்பதைச் சற்றுக் கற்பனைச் செய்து பாருங்கள்" என்று கண்ணீருடன் கூறினாள்.

இதே நிலை நம் நாட்டிலும் உண்டு. பிள்ளைகள் அதிகம் படித்துவிட்டால் பெற்றோர்களின் பேச்சைக் கேட்பதில்லை. எம். ஏ. படித்தவர்கள்கூட பெற்றோர்களை வைவதையும், அடிப் பதையும் காணலாம். சில பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப் பெற்றோர் என்று அறிமுகம் செய்யவே கூச்சப்படுகின்றனர். அவர்களை எங்கள் வீட்டு வேலைக்காரர்கள் என்று கூறுவதைக் கேட்டிருக்கின்றேன். கல்லூரியின் விடுதிக்குப் பெற்றோர்கள் வந்து விட்டால், அவர்கள் ஆவேசமும் கோபமும் அடைவதைப் பார்த்திருக்கிறேன். அதேபோன்று உடன் பிறந்தவரையும் அலட்சியம் செய்வதைப் பார்த்திருக்கிறேன்.

மற்றொரு வழக்கில் ஆறு மாணவர்கள் சேர்ந்து கொள்ளை யடித்ததுமின்றி லாரி டிரைவரையும் கொலை செய்து விட்டார்கள். சிகாகோ நகரத்தில். அவர்களில் இருவர் வயது 17 க்குள் இருக்கும். மற்ற மூவர் வயது 19 க்குள்ளும், மீதி ஒருவனின் வயது 24. அவர்களின் பொதுவான குடும்பச் சூழ்நிலையைப் பற்றிக் கீழே தரப்படுகின்றது.

" ஒருவனைத் தவிர மற்றவர்கள் அதே நகரத்தில் பிறந்தவர் கள். மற்றவன் அமெரிக்காவுக்கு கொண்டுவரப்பட்டான். பெற்

ரோர்கள் கல்வியறிவற்றவர்கள். தனிச் சலுகையற்றவர்கள். வந்தேயறிகளுக்கு வேலையில்லாத நேரத்தில் பழைய அரைப்பு இயந்திர வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதன் மூலம் அவர்களின் குடும்பம் பிழைத்து வந்தது. புதிய இடத்தில் பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன, அவர்களின் தாய்மார்கள் இளம் குழந்தைகளை வளர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களில் ஒரு தாய் கூறுகிறாள் "எனக்கு 14 குழந்தைகளுண்டு. சமையல் வாழ்வைத் தவிர வெளி வாழ்க்கையே எனக்குத் தெரியாது. இது எப்படி இருக்கும் என்று நீயே பார். என் பிள்ளைகள் எங்கே போகிறார்கள் என்று எப்படி நான் பார்க்க முடியும்? பிள்ளைகளின் வேலை என்ன? எங்கே போகிறார்கள் எந்தச் சூழ்நிலையில் இது செய்யப்பட்டது? அவர்களின் வேலைகள் அவர்களின் மனதுக்கிசைந்ததாக இருந்ததா? அல்லது விரும்பவில்லையா என்கின்ற விஷயத்தை யெல்லாம் அறிந்துகொள்ள நாங்கள் முயற்சியெடுக்கவில்லை" என்று எல்லாத் தாய்மார்களும் ஒத்துக் கொண்டார்கள். சனிக்கிழமையன்று எவ்வளவு பணம் கிடைக்கும் என்ற ஒரே கேள்விதான் கேட்கப்பட்டது. (How much money on Saturday)? தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு இரண்டு பையன்களின் தந்தையை அணுகி அவர் பையன்களைப்பற்றி வினவியதற்கு "அவர்கள் என்ன செய்வார்களோ அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. அவர்களைத் தூக்கில் போட்டாலும் அல்லது சுடப்பட்டாலும் எனக்கு அதனால் ஒன்றுமில்லை" என்று கூறினர். தந்தையே மகன்களை வெறுத்து இப்படி மிருகத்தனமாகப் பேச எப்படி மனம் வந்தது? என்று ஒருவர் கேட்டதற்கு அவர் தமது தோள்களைக் குலுக்கி விட்டு "அந்தப் பையன்களில், யாரும் ஒரு பைசாகூட வீட்டிற்குக் கொண்டு வருவதில்லை" என்று கூறியுள்ளார்.

இதே நிலை நம் நாட்டிலுமுண்டு, கொண்டு வந்தால் தந்தை கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய் என்று கூறுவார்கள். சம்பாதிக்காத பிள்ளைகளை வீட்டைவிட்டே துரத்திவிடும் பெற்ரோர்களைப் பார்த்திருக்கிறேன். வேலைசெய்யாமல் திரியும் பிள்ளைகளை எங்கேனும் சென்று செத்துத் தொலை என்று திட்டுவதையும் கேட்டிருக்கிறேன். பணமே முக்கியம் என்று கருதும் தந்தைக்கு மகன் பெரியதல்ல. இப்படி அலட்சியப்படுத்துவதனால் பிள்ளைகள் மனம் வெதும்பி, குடும்பத்தை வெறுத்து வேறு எங்காவது திருடியாவது பிழைக்கலாம் என்று கருதி வீட்டை விட்டு வெளியேறி விடுகின்றார்கள்.

மூன்றாவது வழக்கைக் காண்போம். அமெரிக்காவில் குடியேறிய குடும்பம் ஒன்று இருண்ட, சுகாதாரமற்ற, பின்புற மோசமான

அறைகளில் 11 நபர்கள் வாழ்ந்து வந்தார்கள். கந்தைத் துணிகளைப் பொறுக்குவது தந்தையின் தொழில். அதாவது கொலை ந.. ந்த இரவு மற்றப் பையன்கள் அவருடைய மகன் பிலிப்பை அவ களுடன் வரும்படி எப்படி வற்புறுத்தினார்கள் என்று குற்றத்தின் சூழ்நிலை களைப் பற்றி நினைத்து நினைத்து, அவர்கள் ஏங்கிக் கொண்டிருந் தார்கள். மீண்டும் விரைவில் திருப்புவதாகக் கூறி வெளியேறிய பையனைக் காலையில், எல்லா இடங்களையும் தேடியும் காணவில்லை. பிலிப்பினுடைய படுக்கையின் இடவசதி குறித்து உணர்ச்சியற்ற நிலையில் ஏதோ சொல்லிக் கொண்டார். தாய் குழாயடியில் ஏதோ சாமானைக் கழுவிக் கொண்டிருந்தார். அவளின் கடைசிக் குழந்தை அழுதுகொண்டிருந்தது. அவன் வீட்டில் எப்போதும் நல்ல பிள்ளையாகவே இருந்தான் என்று அவள் சொன்னாள். அவளுடைய மகன் மாலை நேரத்தை எங்கே கழித்தான் என்ற வினாவிற்கு எனக்கென்ன தெரியும்? எப்போதும் அவன் எனக்குச் சொன்னது கிடையாதே! என்று அழுத வண்ணம் கூறினாள். வெளி நாடுகளிலிருந்து வந்து குடியேறிய மூன்று குடும்பங்களைப் பற்றி ஆராயப்பட்டது, இன்று நம் நாட்டில் எத்தனையெத்தனை குழந்தைகள், குடும்பங்கள் இடவசதியற்று, சுகாதார சீர்கேட் டுடன் வறுமையுடன் வாழ்ந்து வருகின்றனர், பெற்றோர்கள் பிள்ளைகளின் செயல்களைக் கண்காணிப்பதும் இல்லை. பிள்ளைகளும் தங்களின் செயல்களைப்பற்றி பெற்றோர்களுக்கு அறிவிப்பதுமில்லை. சாப்பாட்டு நேரத்தில் வீட்டிற்கு வந்தால் உணவு உண்டு மீண்டும் போய்விடுவான். பிறகு இரவு உணவுக்கு வருவான். உணவு முடிந்த பிறகு வெளியில் சென்று விடுவான். அவன் மீண்டும் எப்போது வந்து படுக்கிறான் என்பது பெற்றோர்க்குத் தெரியாது. காலையில் பார்த்தால் உறங்கிக் கொண்டிருப்பது தெரியும். கிராமங்களில் இது அன்றாட நிலை. அதிலும் அதிகக் குழந்தைகள் உள்ள குடும்பங்களில் இது சாதாரணமாக நிகழ்கிறது. மேலும் குடியே றியவர்களுககு மற்றவர்களின் ஆதரவோ, உதவியோ கிடையாது. ஆகவே அவர்கள் தங்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்த, கவனிக்கமுடியாது என்று அறிவித்துள்ளனர். வயது முதிர்ந்த பெற்றோர்கள் வளர்ந்துவிட்ட பிள்ளை எந்த கேள்வி கேட்டாலும் பதில் சொல்லமாட்டார்கள், கேட்பதற்கும் அச்சப்படுவார்கள்.

ஆகவே குழந்தைப் பருவம் முதல் குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்ப்பதைப்போல் அன்பு, பாசம், ஒழுக்கம், இலட்சியம், குடும் பப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று ஆகிய பண்புகளைப் புகட்டு தல் வேண்டும் ! அவை குழந்தையின் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் நிலைத்துநிற்கும். அதைவிடுத்து ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதற்கிணங்க பெரியவனாக வளர்ந்த

பிறகு அவனைக் கட்டுப்படுத்த முடியாது. அப்போது அவன் எண்ணம் சிதறி, பால் உணர்ச்சியில் ஈடுபாடு கொள்கிறான். அதனால் மேலும் தனக்கும், தன் குடும்பத்திற்கும் உள்ள தொடர்பு தூரமாக இருப்பது நல்லது என்று கருதுகின்றான். இதனால் வயது வந்தவர்களுடன் பழகுகின்றான். அந்தப் பழக்கம் நல்லதாக இருந்தால் நன்மையும் கெட்டதாக இருந்தால் தீமையும் விளையும். குழந்தைகளைக் கண்காணித்து வளர்க்கவும் ஒழுக்க சீலர்களாக மாற்றவும், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசாங்கம் ஆகிய மூவரும் இணைந்து செயல் பட்டால்தான் இளைய சமுதாயத்தை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

மற்றக் குழந்தைகளைவிட வளர்ப்புக் குழந்தைகள்தாம் குற்றத் தன்மை, குற்றவொழுக்கத்தை விரைந்து ஏற்றுக்கொள்கின்றார்கள் என்று நம்பப்படுகின்றது. ஒரு சில வளர்ப்புக் குழந்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு அவ்வாறு கூறிவிட முடியாது. அவர்களில் சிலர் நல்லவர்களாகவும் விளங்குகிறார்கள். பொதுவாக, தாய் அன்பைவிட உலகில் வேறு எந்த அன்பும் உயர்ந்தது கிடையாது. தாய் அன்புக்கு நிகர் தாய் அன்புதான். அந்த அடிப்படையில் நோக்கும்போது வளர்ப்புத்தாயின் அன்பு குறைவாகத்தான் தோன்றும். ஆனால் சூழ்நிலைகளின் காரணக் கூறுகளினால், அறியாமையால் சில தாய்மார்கள் தங்கள் மக்களிடத்தில் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். அவர்களை நோக்கும்போது அறிவுள்ள, பண்புள்ள வளர்ப்புத்தாய் சிறந்ததாகக் கருத இடமுண்டு. தாயின் அன்பில் வளரும் குழந்தைகள்கூட குற்றவாளிகளாக விளங்கினார்கள். ஆகவே மற்றச் சூழ்நிலைகளின் காரணக் கூறுகள்தாம் குற்றவொழுக்கத்திற்கும் குற்றச் செயலுக்கும் காரணமாகும்.

குடும்பங்கள் மூலம் எவ்வாறு குற்றங்கள் பரவுகின்றன என்பதை ஆய்ந்தோம். இங்கே அவற்றின் நேரடிச் செயல்களைப்பற்றி சிறிது காண்போம். குற்ற வொழுக்கத்தை குழந்தைகள் குடும்பத்திலிருந்துதான் கற்றுக் கொள்கின்றனர். அதாவதுப் பெற்றோர்கள். மற்ற சுற்றத்தினர் ஆகியோருடன் நெருங்கிப் பழகுவதால் குழந்தை அவர்களின் மனநிலை, மனப்பான்மை, ஒழுக்க முறைகள், நுட்பங்கள் ஆகியவற்றைப் பார்த்தே கற்றுக்கொள்கிறது. வீட்டில் கற்றதை வெளியில் செயல்படுத்துகின்றது. பிறகு குற்றவாளியாக மாறிவிடுகின்றது. ஆனால் அதே வயதுள்ள மற்றக் குழந்தைகளின் ஒழுக்க முறைகள். பண்புக் கூறுகள் ஆகியவை முக்கிய காரணக் கூறுகும். பெற்றோர்களின் ஒழுக்கத்தைவிட குழந்தைகள் பழகும் நண்பர்களின் ஒழுக்கத்தை அதிகமாகப் பின்பற்

பற்றுகின்றன. அது குற்றவொழுக்கமாக இருந்தால் குற்றவாளியாகவும், நல்ல நண்பர்களுடன் பழகினுல் நல்லவனுகவும் மாறிவிடுவான். அப்படி நல்லவனுக மாறிவிட்டால் பெற்ருேர்களைத் திருத்தவும் முயற்சியை மேற்கொள்வான்.

மேற்சொன்ன பழக்க வழக்க முறைகள், நண்பர்கள் ஆகியவை இடங்களைப் பொறுத்து வேறுபடும். ஆனுல் ஊர், இடம், வீடுகளைப்பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு பெற்ருேர்களுக்குத்தான் உண்டு. ஆகவே நல்லொழுக்கப் பெற்ருேர்களாக விளங்கினுல், அவர்கள் தாங்கள் வாழும் இடத்தை நல்ல இடத்திலும், குற்றவொழுக்கமுள்ள பெற்ருேர்களாக இருந்தால், குற்ற வொழுக்க இடத்தையும் தேர்ந்தெடுப்பார்கள். ஆகவே நல்ல நண்பர்கள் தீய நண்பர்கள் ஆகியோரைத் தங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதும் பெற்ருேர்களின் பொறுப்பு. ஆனுல் வறுமையின் காரணமாக மக்கள் நெருக்கம் உள்ள பகுதிகளில், குறைவான வாடகையுள்ள பகுதிகளில் குடியிருக்க நேரிடலாம். அப்படிக் குற்றப்பகுதிகளில் குடியிருந்தாலும் குழந்தைகளுக்குக் குற்றவொழுக்கம் பரவிவிடும் என்று கூறிவிட முடியாது. ஏனென்ருல் பெற்ருேர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக விளங்குவதால் அதே நல்லொழுக்கம் குழந்தைகளுக்கும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. குழந்தைகள் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படுவதனுல் வெளியில் உள்ள சூழ்நிலைகள் குழந்தைகளை வெகுவாகப் பாதிக்காது. ஆனுல் பெற்ருேர்கள் குற்ற வொழுக்கத்துடன் விளங்கி, குடியிருக்கும் பகுதிகளும் குற்றப் பகுதியாக விளங்கினுல் அங்கே வளரும் குழந்தைகளும் குற்றவொழுக்கத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக, குற்றம் புரிவதில் வல்லுநர்களாக, பிறகு கொள்ளைக் கூட்ட தலைவனுக விளங்குவதற்கும் வாய்ப்புண்டு. மேலும் அங்கே வளரும் குழந்தைகளில் 90 சதம் குற்றம் புரிபவர்களாக, குற்ற நடத்தையுடையவர்களாக விளங்குவார்கள். மீதி 10 சதம் அவர்களின் உடல் அமைப்பு, வலுவின்மை ஆகிய காரணங்களினுல் குற்றம் புரியமாட்டாரே தவிர ஆனுல், குற்றவொழுக்கமுடன் விளங்குவார்கள். அவர்கள் முதன்மைக் குற்றவாளியாக விளங்காவிடினும், அவனுக்குத் துணைபுரியும் குற்ற உடந்தையர்களாகக் கட்டாயம் விளங்குவார்கள்.

வீடுகளின் அமைப்பும், அது அமைந்திருக்கும் இடமுமே அதில் வாழும் மக்களின் ஒழுக்கத்தைக் காண்பிக்கும். மேலும் அவ்வீட்டுடன் யார் யார் தொடர்பு கொண்டிருக்கிருர்கள் என்பதைக் கவனித்தும் அவர்களின் ஒழுக்கத்தின் தரத்தை அறியலாம். குழந்தையானது புதியதாகக் குடிவந்தவர்களையும், சிறுபான்

மைக் குழுவினரையும், காவல்துறை அதிகாரிகளையும், சமூகச் சேவகர்களையும் ஒதுக்கிவிடலாம். ஆனால் குழந்தை, உடைமைகள், துணி மணிகள், மொழி அல்லது தொழில் ஆகியவற்றை மதிப்பிடக் கற்றுக்கொள்கின்றது. பின்பு அவற்றை ஏற்றுக் கொள்கின்றதா இல்லையா என்பது தனிப்பட்ட பிரச்சினையாகின்றது. புதிய இடத்தில புதுமையானவற்றை ஆச்சரியமுடன் விரும்பிப்பார்க்கும் இயல்புடையது குழந்தை.

குழந்தை வெறுப்பின் காரணமாக, மற்றச் சூழ்நிலைகளால் வீட்டைவிட்டு வெளியில் வாழலாம். வீட்டை நினைத்தாலே வெறுப்பும், வேதனையும் தோன்றலாம். வீட்டில் மகிழ்ச்சியே இல்லாமல் இருக்கலாம். வீட்டுக்கு வெளியில் செல்லும்போது அதற்கு மகிழ்ச்சி கிடைக்குமேயானல் வெளியே தங்கிவிடலாம். நீ (Nye) என்பவர் ஆய்ந்தபோது சிதறிய குடும்பங்களிலிருந்து அதிகக் குற்றவாளிகள் உருவாகின்றனர்கள். ஆனால் சிதறிய குடும்பத்தைவிட மகிழ்ச்சியற்ற குடும்பங்களிலிருந்து அதிகமான குழந்தைகள் விரைவில் குற்றவாளிகளாக மாறிவிடுகின்றனர்கள். அதாவது குழந்தை வீட்டில் தனிமையில் மகிழ்ச்சியற்று வாழும் போது ஏற்படும் வெறுப்பில். வெளியில் செல்லும்போது கிடைக்கும் மகிழ்ச்சியைப் பெரிதும் விரும்புகின்றது. வெளியில் உள்ளவர்கள் குற்றவாளிகளாக விளங்கினாலும் அதை ஏற்றுக்கொள்கின்றது. அவர்களின் உறவில் மகிழ்ச்சிகொள்கிறது. இதனால் குழந்தைக்குக் குற்றவொழுக்கம் ஏற்பட அதிக வாய்ப்பும், குற்றவொழுக்கத்திற்கு எதிரான சூழ்நிலை குறைவாகவும் உள்ளது. காரணம் நல்லொழுக்கம் உள்ளவர்களுடன் பழக, குழந்தை பொதுவாக விரும்பவில்லை. அங்கே மனத்திற்கு இன்பம் இல்லை. வீடுகள் தனியே இருந்து, எல்லா வசதிகளும் இருந்தால், குழந்தைகள் தனித்திருக்க விரும்பும். வீட்டிலுள்ளோரையும் விரும்பும். இதனால் குழந்தைக்கு நல்லொழுக்கம் ஏற்படும்.

குழந்தைக்குப் போதிய பயிற்சி அளித்து, சட்டத்திற்கு அடங்கி நடக்கவும். எதையும் சட்டத்திற்குட்பட்டே, செயல்பட வேண்டும் என்ற அறிவையும், பயிற்சியையும் அளிக்க வீடு தவறிவிடலாம். அதாவது குற்றவொழுக்கம் வீட்டில் இல்லாமலிருக்கலாம். குழந்தைக்குப் பயிற்சி அளிக்காததால் வீடு பொதுப்படையாக, பயனற்றதாக அமைந்துவிடுகின்றது, குற்றத்திற்கு எதிரான பயிற்சியைக் குழந்தைக்கு அளிக்காமல் போய்விடுவதற்குக் காரணம் பெற்றோர்கள் இல்லாமலிருத்தல் அல்லது குழந்தை பெற்றோர்களை அறியாமல் இருத்தல் அல்லது அதைப் பற்றிக் கவலைப்படாமலிருத்தல் அல்லது அதிகமான பாதுகாப்பு

அளித்தததனுல் பயிற்சி தேவையற்றது என்று கருதுதல் ஆகிய வையேயாகும். குற்றவாளிகளுடன் பழகும் வாய்ப்பே இல்லை என்ற காரணத்தால் குழந்தைகளுக்குக் கட்டுப்பாடு விதிமுறைகள் குறித்துப் பயிற்சி அளிக்காமல் இருக்கலாகாது. இந்த வகையான குற்றத் தன்மைகளை, குற்றவொழுக்கங்களை, குற்றவாளிகளைக் குழந்தை தடுத்துவிடலாம் என்று கருதலாம். அதாவது குழந்தை எளிதில் எதையும் ஏற்றுக்கொள்ளாது என்ற அசையாத எண்ணம், நம்பிக்கை அல்லது வெளி உலகில் சமூகக் கட்டுப்பாடு அதிகம் இருப்பதை எண்ணிப் பயிற்சி அளிக்காமல் விட்டுவிடுதல், இவ்வாறு குற்றவொழுக்கத்திற்கு எதிரான கட்டுப்பாடுகளை குழந்தையிடத்தில் வளர்க்கத் தவறிவிடலாம். குழந்தையிடத்தே அதாவது சிறு பருவப்பிராயத்திலேயே வளர்க்கப்படவேண்டிய இவ்வகையான கட்டுப்பாட்டு முறைகளை வளர்க்கத் தவறி விட்டால் அக் குழந்தை குற்றவாளியாக மாறுகிறது அல்லது நல்லொழுக்கமற்றவனுக மாறிவிடுகிறது. குழந்தை வெளியில் இருக்கும் துணைகளை நம்பி இருக்கவேண்டிய அவசியமில்லாமல்— அதாவது அவன் நண்பர்கள் நல்லொழுக்கம் உள்ளவராக இருப்பாரா அல்லது அல்லாதவராக இருப்பாரா என்ற கேள்விக்கு இடம் இல்லாமல்—குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்குப் போதுமான பயிற்சியைப் பெற்றோர்கள் அளிக்கவேண்டும்.

ஆனுல் ஒன்று, குழந்தைகள் வாழும் இடம் தனித்து இருந்து, மற்றச் சூழ்நிலைகளும் நல்லொழுக்கத்திற்கு ஆதரவாக இருந்தால், அதாவது குற்றவொழுக்கமோ, குற்றவாளிகளோ, குற்றங்களின் மாதிரிச் செயல்களோ இல்லாமல் இருக்குமானுல், அங்கு வளரும் குழந்தைகள் எவ்வளவு துன்புறுத்தப்பட்டாலும், சிதறிய குடும்பமாக இருந்தாலும், போதிய பயிற்சி அளிக்கப்படாவிட்டாலும், பெற்ருேர்கள் கவனியாமல் அசட்டையாக இருந்தாலும், வீட்டில் இன்பம்—மகிழ்ச்சியற்றுத் துன்பத்தில் உழன்ருலும், பெற்ருேர்கள் எவ்வளவு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தாலும் அதனுல் குழந்தையின் மனம் எண்ணி வேதனைப்படவோ அல்லது மனம் மாறி குற்றவொழுக்கமோ—செயல்களோ செய்ய முற்படாது. அதாவது அது வாழும் சுற்றுச் சூழ்நிலையில் குற்றமோ-குற்றவாளிகளோ இல்லையென்ருல் குழந்தையும் எக்காரணத்தைக் கொண்டும் குற்றவாளியாக மாறிவிடாது. ஆதாமை (Adam) ஏவாள் மூலமாகச் சாத்தான் (Satan) தூண்டுகின்ற வரையில் கடவுளால் விலக்கப்பட்ட அப்பழத்தை உண்ண வேண்டும் என்ற எண்ணமே தோன்றவில்லை. அந்த எண்ணம் இருந்தால்தானே அதனைப் பறிப்பதற்கான வழிகளைத் தேடுவான். ஆகவே குற்ற மாதிரிகள் சமூகத்தில் இருந்தால், எவ்வளவுதான் கட்டுப்பாடுகள்

இருந்தாலும் அவற்றையெல்லாம் மீறி, குற்றங்களைச் செய்வர். குற்ற மாதிரிகள், சாயல்கள் இல்லையெனில் சமூகக் கட்டுப்பாடுகள், இல்லாவிட்டாலும் குற்றத்தைச் செய்ய முற்படமாட்டார்கள். ஆகவே குழந்தைகளின் அறிவு, சிந்தனை அறிவு, மன உறுதி, கொள்கை, கடமையுணர்வு ஆகியவை வளருகின்ற வரையில் குழந்தைகளின் கண்களுக்கும், காதுகளுக்கும் குற்றவொழுக்கமோ, குற்றமோ, குற்ற மாதிரியோ அல்லது சாயலோ அறியாமல்—பார்க்காமல் இருக்கும்படி மிகவும் கட்டுப்பாட்டுடன் வளர்த்தல் வேண்டும். தன்னறிவு வளர்ந்து நன்மை தீமைகளை அலசி ஆராயும் அறிவு வளர்ந்தவுடன் எங்கு, எப்படி, எந்த நிலையில் பார்த்தாலும், உடன் பழகினாலும் குழந்தைக்குக் குற்றவொழுக்கமோ, குற்றச் செயல்களோ ஏற்றுக் கொள்ளாது, படியாது. காந்தி பரத்தையரின் மத்தியிலே அமைதியாக உறங்கியதற்குக் காரணம் பண்பட்ட மன வளர்ச்சியும்—மன உறுதியும் தான். அதே மாதிரி விவேகானந்தரும் விளங்கினார். கட்டுப்பாடு உள்ளவன் எதையும் ஆராய்ந்து செயல்படுவானேயன்றி உணர்ச்சிகளுக்கு அடிமையாகமாட்டான். கடமை வீரன், இலட்சியவாதி, எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும், யாருடன் பழகினாலும், எங்கே இருந்தாலும் அவன் தன் லட்சியம் நிறைவேற பாடுபடுவானேயன்றி குற்றவொழுக்கமோ அல்லது குற்றச் செயலோ அவனை நெருங்க முடியாது என்பது வெள்ளிடை மலையாகும். கொள்கையை—இலட்சியத்தை, காசாலோ அல்லது கன்னியாலோ கரைத்துவிடவோ அல்லது கலக்கிவிடவோ முடியாது. ஆகவே குழந்தைகளின் இளம் பிராயத்திலேயே நல்ல கொள்கையை—இலட்சியத்தை அவர்களின் உள்ளங்களில் விதைத்து நல்ல கொள்கை வீரர்களாக—இலட்சியத் தோன்றல்களாக வளர்த்திட வேண்டும். தாழ்ந்த மனப்பான்மை, பால் உணர்ச்சி மிகுதி, உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி மிகுதி போன்ற உள்ளக் குமுறல்களினால் வீட்டில் கலக்கம், கலகம், குழப்பம் ஆகியவை ஏற்படுகின்றன. உணர்ச்சி வயப்பட்ட பதற்ற நிலைமை, தனிப்பற்று, ஒதுக்கிவிடுதல், பாதுகாப்பின்மை, கடுமை, வளையாமை, சினமூட்டல் ஆகிய நிலைமைகளினாலும் வேறுபல சூழ்நிலைகளாலும் பல குடும்பங்களில் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றன. மேற்கூறிய காரணங்களினால் இளங்குற்றவாளிகள் உருவாக்கப்படுகின்றார்கள் என உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். பொருந்தாக் காமம், உள்ளத்தின் 'குமுறல், வீட்டின் குழப்பம் ஆகியவற்றின் காரணமாகக் குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியேறும் கட்டாயத்திற்கு ஆட்படலாம். வெளியில் குற்றவாளிகளின் தொடர்பினைப் பெறவும் வாய்ப்புண்டு. குற்றவாளிகளில் 54 சதம் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டவர்கள்தான் என்றும், பொருளாதார நெருக்கடி

காரணமாகக் குற்றவாளியாகிறவர்கள் 4 சதம்தான் என்றும் சிலாசன் (Slawson) என்ற குற்றவியல் வல்லுநர் தம் ஆய்வுரையில் கூறியுள்ளார். வீட்டில் அன்பைக் காணாத ஒரு பெண், வெளியில் கள்ளத் தொடர்பு அல்லது கள்ளக் காதலில் ஈடுபடுவதனால் அதிக அன்பையும் பாசத்தையும் பெறுவதனால், அப்பெண் வீட்டைவிட்டு வெளியேற விரும்புகிறாள். அல்லது கள்ளக் காதலில் ஈடுபாடு கொள்ளவில்லை என்றாலும் பள்ளியில் நடக்கும் குற்றமல்லாத செயல்களில் பங்குகொண்டு மனம் மகிழ்கின்றாள். மனம் மகிழ்ச்சியற்ற எல்லாக் குழந்தைகளுமே குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றார்கள் என்று கூறிவிடமுடியாது. அவர்களுக்கு ஏற்படும் ஒருவகையான உணர்ச்சிவயப்பட்ட குழப்பமே (Emotional disturbances) அவர்களைக் குற்றவொழுக்கத்தில் ஈடுபடச் செய்கின்றது.

குற்றத்திற்கும் உடன் பிறப்புகளுக்கும் உள்ள தொடர்பு (Crime in relation to Siblings)

குற்றத்திற்கும், குடும்பத்திற்கும், குழந்தைகளுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்தோம். இப்பொழுது குற்றத்திற்கும் குடும்பத்தில் உள்ள உடன் பிறப்புகளுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்வோம். "குடும்பம்" என்றால் தாய் தந்தையரும் அவரின் ஆணைக்குட்பட்ட மற்ற அங்கத்தினர்கள் சேர்ந்ததுதான். ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்களுக்குத் தெரியாமல் அவர்களின் குழந்தைகளுக்குள் பல போராட்டம், குழப்பம், மனமாற்றம், மனக்கசப்பு, பகைமை, பொறாமை ஆகிய இயல்புகளும், மற்றொரு பக்கம் பாசம், அன்பு, உணர்ச்சி, பற்றுதல், மரியாதை, தியாகம் இப்படிப் பல இயல்புகளும் விளங்குகின்றன. ஆகவே பெற்றோர்க்கும் குழந்தைகளுக்கும் அதிகத் தொடர்பு இல்லையென்றாலும் குற்றத்திற்கும் சகோதரர்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தைகள் தங்களுடைய இளைய பருவத்தில் தன் மூத்த சகோதரன் அல்லது சகோதரியிடம்தான் அதிகம் நெருங்கிப் பழகுகின்றார்கள். அல்லது இணைகின்றார்கள், பேசுகின்றார்கள், பேசவும் கற்றுக் கொள்கின்றார்கள். குழந்தைகள் தங்களுடைய மூத்தோரின் செயல், போக்கு, மனம் ஆகியவற்றை நன்கு கண்காணித்து வருகின்றார்கள். அவர்களின் ஒவ்வொரு செயலையும் கண்காணித்தும், அவர்கள் செய்வதை அப்படியே தானும் செய்கின்றான். பெரியவர் ஒருவர் குழந்தையின் கண் முன்னால் தகாத செயல் ஏதேனும் செய்யின், அதே செயலைக் குழந்தைகளும் செய்கின்றனர். இன்றைய குழந்தைகள் நாளைய இளைஞர்கள். எனவே குடும்பத்தில் உள்ள பெற்றோர், அண்ணன், அண்ணி, அக்கா போன்றவர்கள் நல்லொழுக்கம் உடையவ

ராயின், அவர்களைப் பின்பற்றி அவர்களின் தங்கை, தம்பி ஆகியோர் நல்லொழுக்கம் கொண்டு விளங்குவர். தாய் தந்தையற்ற ஒரு குடும்பத்தில் குடும்பப் பொறுப்பை ஏற்பவர்கள் பொதுவாக அக்காவாகவோ அல்லது அண்ணனாகவோதான் இருப்பார்கள். அவர்கள் நல்லொழுக்கமின்றி தீயொழுக்கம் மிக்கு, தரங்கெட்டுச் சமூகக் குற்றவாளியாக இருப்பின் அவர்களின் இளையவர்கள் தரங்கெட்டுப் போவது நிச்சயம். இவர்களின் தீயொழுக்கமே எளிதில் இளையவரைப் பற்றிக்கொள்ளும். ஆனாலும் மூத்தவர்கள் தீயொழுக்கம் கொண்டு விளங்கினால் இளையவரும் அவ்வாறே விளங்கவேண்டும் என்பது நியதியல்ல. பெற்றோர் உள்ள குடும்பங்களில் இது பொருந்தாது. பெற்றோரற்ற குடும்பங்களில்கூட சூழ்நிலை மாறுபாடுகளால் இளையவர்கள் நல்லோராக மாறவும் வாய்ப்புண்டு. இரண்டு குழந்தைகள் கொண்ட 372 குடும்பங்களை ஆய்வு செய்ததில், ஒரு குழந்தை குற்றவொழுக்கம், குற்றத்தன்மை உள்ளவனாகக் காணப்படுகிறது. அக் குடும்பங்களில் இன்னும் 20 சதம் குழந்தைகளும் குற்றவாளியாக விளங்குகிறது. மேலும் 2 சதம் அவர்களின் நடத்தையை அறியக்கூடவில்லை. ஆறு குழந்தைகள் கொண்ட 333 குடும்பங்களை ஆய்வு செய்ததில் ஒரு குழந்தை குற்றவொழுக்கம், குற்றத் தன்மை உள்ளவனாகவும், அவர்களின் உடன் பிறப்புக்களில் 12 சதம் குற்றவொழுக்கத்தை அறிந்தவர்களாகவும், 82 சதம் குற்றவொழுக்கம் அறியாதவர்களாகவும், இன்னும் 6 சதம் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று பகுக்க முடியாதவராகவும் உள்ளனர் என்று வில்லியம் ஹிலேயும், அகஸ்டா ப்ரௌனரும் (William Healy and Augusta F. Browner) ஆராய்ந்து அறிவித்துள்ளனர். இதைக் கூர்ந்து நோக்கின் குற்றத்திற்கு முக்கிய காரணம் குடும்பந்தான் என்று கூறுவது உண்மை அல்ல என்பது விளங்குகிறது. காரணம் மிகச் சிலரே குற்றவாளிகளாக மாறியுள்ளனர். ஆனால் இந்த ஆய்வுரைகள் சரியானவையா என்ற சந்தேகம் ஒருபுறமிருக்க, ஆய்வுக்கு எடுத்துக் கொளளப்பட்டவர்களின் வயது இந்தக் கணக்கில் கொள்ளப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேலானவர்களைக் கணக்கிட்டிருந்தால் குற்ற விகிதம் அதிகரித்திருக்கும். குறைந்த வயதுள்ள குழந்தைகளைக் கணக்கில் கொண்டிருந்தால் அதுவும் தவறு. ஏனெனில் வயது வந்தவுடன் அவர்களின் ஒழுக்கம் மாறுபட பெருமளவு வாய்ப்புண்டு. மேலும் பெற்றோரின் அன்பு குழந்தைக்குக் குழந்தை, காலத்திற்குக் காலம் வேறுபடும் அல்லவா ? ஒரு குழந்தைக்குக் கிடைத்த அன்பும், ஆதரவும் மற்றொரு குழந்தைக்குப் பல்வேறு காரணகளால் கிடைக்காமல் போகலாம். சில நேரங்களில் குடும்பத்தில் பொருளாதார நிலை

திடீரென்று உயரலாம் அல்லது தாழலாம். சில குடும்பங்களில், குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாக ஆகின்றவரை பெற்றோர் இருக்கலாம் அல்லது குழந்தைகள் சிறுவர்களாக இருக்கும்போதே இறந்துவிடலாம். நம்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறக்கவேண்டும் என்றால் முதல் பிள்ளையாகவும், ஏழைக்கு என்றால் கடைசிப் பிள்ளையாகவும் பிறக்க வேண்டும்" என்ற இது உண்மையே. பணக்காரனுக்கு முதல் குழந்தை பிறந்தால் அவன் அன்பாகவும், செல்வாக்கோடும் நடாத்தப்படுவான். இடையில் பொருளாதார நெருக்கடி ஏற்படின் அவன் ஏழையாகிக் கடைசி குழந்தையின்மீது வெறுப்பையும் கோபத்தையும் வீசுவான். இதனால் முதல் குழந்தையின் ஒழுக்கத்திற்கும் கடைசி குழந்தையின் ஒழுக்கத்திற்கும் கணிசமான வேறுபாடு இருக்கும். ஏழைக் குழந்தையின் ஒழுக்கத்திற்கும், பணக்காரக் குழந்தையின் ஒழுக்கத்திற்கும் வளர்ப்பு முறையில் வேறுபாடு தோன்றும். ஒரே குடும்பத்தில் பிறக்கும் பல குழந்தைகளினிடத்தும் ஒழுக்கம் மாறுபடும். அவர்களின் பரம்பரைக் குணமும், சூழ்நிலையும் அவர்களின் இயல்பான ஒழுக்கத்தோடு இணையும்போது நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ மாறுகின்றார்கள். சில குடும்பங்களில் மூத்த மகன் குற்றவாளியாகவும், சிலவற்றில் இளையவர்கள் குற்றவாளியாகவும் மாற வாய்ப்புண்டு. அது எப்படி என்பதை ஆராய்வோம். ஒரே குடும்பத்தில் பிறக்கும் பல குழந்தைகளுக்கிடையே பலவிதமான சூழ்நிலைகள் உருவாகின்றன. அதாவது குழந்தைகளின் பிறப்பின் வரிசையை வைத்தே பிறப்பின் தன்மை, உள இயல்பின் பண்பு, உடல் வலிமை, வலியத் தாக்கும் தன்மை, சிறப்புப் பண்புகள், அவற்றின் சிறப்பியல்புகள், மற்ற ஒழுக்கங்கள் ஆகியவற்றை ஆய்ந்து அறியலாம். பொதுவாக முதலில் பிறக்கும் குழந்தைகளிடம் தாழ்ந்த மனப்பான்மை இருப்பதாக ஆய்வுரை கூறுகின்றது. ஆனால் பிறகு நடாத்தப்பட்ட ஆய்வுகள் அது உண்மையன்று என நிரூபிக்கின்றன. எப்படியெனில் குற்றப்புள்ளி விவரங்கள் அதிகமாகக் குறைந்துவிட்டதுதான் காரணம். இதை நோக்கும்போது பிறப்பின் வரிசைக்கும் குற்றத்திற்கும் தொடர்புண்டா என்பதே சந்தேகம். தொடர்புண்டு என்று கூறுபவர்கள் இரண்டுவிதக் காரணங்களைக் கூறுகின்றார்கள். ஒன்று உடலியல் சார்ந்த பண்புக் கூறு. அதாவது முதல் குழந்தை மிகவும் கஷ்டத்துடன் பிறக்கிறது. அல்லது பெற்றோரின் பால் உறவு உணர்ச்சி முழு வளர்ச்சியடையாத நிலையில் முதல் குழந்தை பிறப்பதனால் குழந்தை அறிவு வளர்ச்சியின்றித் தாழ்வு மனப்பான்மையுடன் விளங்குகின்றார்கள் என்பது இரண்டாவது சமுதாயத் தொடர்பு அல்லது சூழ்நிலைகள். அதாவது முதல் குழந்தை பெற்றோரின்

இளமைப் பருவத்தில் பிறப்பதனுல். குழந்தையை வளர்க்க வேண்டிய முறை பற்றிய அனுபவமில்லாமல், குழந்தைக்குப் பயிற்சியளிக்கத் தவறிவிடுகின்றுர்கள். மேலும் இளம் தம்பதிகள் தனிமையில் காலத்தைக் கழிக்கவே பெரிதும் விரும்புவர். மேலும் இரண்டாம் குழந்தை பிறந்தவுடன் அவர்களின் அன்பும் மற்றச் செலவுகளும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அல்லது இரண்டாம் குழந்தை பிறந்தவுடன் முதல் குழந்தையின்மீது செலுத்தி வந்த கவனம், பாசம், அன்பு, பாதுகாப்பு ஆகியவை குறைந்து விடுகின்றன என்று சதர்லாண்ட் கூறுகின்றுர். ஆனுல் இந்தியாவின் கலாச்சாரம், பண்பாடு இவை வேறுபட்டன. இந்தியாவில் பெண்களின் முதல் பிரசவம் தாய் வீட்டில்தான் நடக்கும் மரபு உள்ளது. அங்கே அவள் தாய் குழந்தையை நன்குப் பேணி, எல்லா வளர்ப்பு முறைகளேயும் கண்காணித்து, மூன்று மாதம் அல்லது ஒரு வருடம் கழித்துத் தாயும் சேயும் நலமாகப் புக்ககம் அனுப்பிவைக்கப்படுவர். எனவே முதல் குழந்தையின் போது அதன் தாய்க்கு நல்ல பயிற்சிமுறை, அனுபவம் இல்லே என்று சொல்ல முடியாது. மேலும் இந்தியாவில் பொதுவாக எல்லாம் கூட்டுக் குடும்பமாக உள்ளதால் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை குடும்பத்தில் உள்ள மூத்தோரே ஏற்றுக்கொள்வர். அடுத்து முதல் குழந்தைப் பிறப்பின் போது பெற்ருேருக்கு அறிவு முதிர்ச்சியடையவில்லே என்பது ஏற்றுக்கொள்ளவியலாது. அடுத்த குழந்தை ஓராண்டுக்குள் பிறப்பதாக வைத்துக்கொண்டால் இந்த ஓராண்டுக்குள் அவர்கள் முழுமையான அறிவு வளர்ச்சி பெற்றுவிட முடியுமா? அல்லது அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளத்தான் முடியுமா? மேலும் முதல் குழந்தை கடினமாகப் பிறக்கிறது என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று. ஒவ்வொரு தாயும் பிரசவத்தின்போது மிக்க வேதனேயடைகின்ருள் என்பதே உண்மை. சில நேரங்களில் ஒரு தாயானவள் தன்னுடைய மூன்ருவது, நான்காவது குழந்தையின் பிரசவத்தின்போது உயிரையே விட்டுவிடுகின்ருள் என்பதனேக் கண்கூடாகக் காணுகின்ருேம். வாதத்தின்படி முதல் குழந்தைக்கு மட்டுமே கஷ்டப்பட வேண்டும். மற்றப் பிரசவங்கள் எளிமையாக அமைந்திருக்கும் என்று கூறமுடியாது. எல்லாக் குழந்தை பிறக்கும்போதும் தாயானவள் மெத்த சிரமப்படுகின்ருள் என்பதே உண்மை.

மேற்கூறிய கருத்துகளே ஆராய்ந்தறிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கிலாந்தில் இளங் குற்றவாளிகளிடையே இருந்த மூத்த பிள்ளேகளேயும், கடைசி பிள்ளேகளேயும், ஆராய்ந்து பார்த்ததில் இடைப்பட்ட வயதில் (Intermediate ages)

உள்ள பிள்ளைகள் அதிக அளவில் குற்றவாளிகளாகக் காணப் பட்டார்கள் என்று டி.பி. லீசும் (T.P. Leese) நியாசனும் (Newson) கூறியுள்ளார்கள். ஆனால் குமாரி பாஸ்லே (Miss Parsley) என்பவர் 361 குற்றவாளிப் பெண்களையும் அதே அளவுள்ள, வயதுள்ள பிறப்பிடமும் ஒன்றே உள்ள குற்றமற்றப் பெண்களையும் ஆராய்ந்த தில் மூத்த பெண்களுக்கும், இளைய பெண்களுக்கும் குறிப்பிடத் தகுந்த அளவு பெருத்த வேறுபாடுகள் இல்லை எனவும் ஆனால் குற்றமற்ற பெண்களில் இளம் பெண்கள் (Youngest Girls) குறிப்பிட்டத்தக்க அளவு சிறிது வேறுபடுகின்றனர்கள் என்றும் அறிவிக்கின்றனர். அதாவது இளம் பெண்கள் குற்றவொழுக்கத்தில் அவ்வளவு ஈடுபாடு கொள்ளவில்லை. வெள்ளையருக்கும் போலிஷ் (Polish) குழுவிற்கும், இது பொருந்தும். ஆனால் நீக்ரோ வினருக்கு இது பொருந்தாது என்று சதர்லாண்ட் (Southerland) என்ற அறிஞர் கூறுகின்றனர். முடிவாக பிறப்பின் வரிசையால் குற்றவொழுக்கம் நிலைநாட்டப்படுகிறது என்கின்ற வாதம் முறை யானது அல்ல என்ற கருத்தே மேலோங்கி நிற்கின்றது. குற்றங் கள் நிகழ்வதற்கு, பிறப்பின் வரிசையை, பல காரணக் கூறுகளில் ஒன்றாகக் கூறலாமே தவிர, இதைக்கொண்டு குற்றவொழுக் கத்தையோ, குற்றத்தையோ நிலைநாட்ட முற்படுவது நேர்மை யற்ற ஒரு கொள்கையாகும். சிலேட்டோ (Sletto) என்பவர் மூத்த சகோதர சகோதரிகள். இளைய சகோதர சகோதரிகள் இவர்களின் இணைப்பால் குற்றவாளிகளின் எண்ணிக்கை வேறுபடுகின்றதா என்று அறிய 1145 இளங்குற்றவாளிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார். ஆண்பிள்ளை, அவர்களில் மூத்த, இளைய சகோதரர்களை மட்டும் கொண்டு சகோதரிகள் இல்லாதவர்களின் குற்ற எண்ணிக்கை மிக அதிகமாகவும், மூத்த சகோதரர்களையும், மூத்த சகோதரிகளையும் மட்டும் கொண்டவர்களின் குற்ற எண்ணிக்கை மிகக் குறைந்த அளவினதாகவும் இருக்கக் கண்டார். பையன்களின் குற்றவெண் ணிக்கையைக் குறிக்கின்றனர். இனி, பெண்களின் குற்றவெண் ணிக்கையைக் காண்போம். மூத்த சகோதரர், இளைய சகோதரர், இளைய சகோதரிகள் ஆகியோர் உள்ள குடும்பத்தில் உள்ள பெண்களின் குற்ற எண்ணிக்கை மிக அதிகமாகவும், மூத்த சகோதர சகோதரிகளை மட்டும் கொண்டு இளைய சகோதர சகோதரிகள் இல்லாதவர்கள் குற்றவெண்ணிக்கையில் குறைந்தும் காணப்படுவதாகக் கூறுகின்றனர். மேலும் சகோதரரை மட்டும் பெற்ற சகோதரிகள் இல்லாத பெண்கள் குற்றவெண்ணிக்கையில் மிகுந்தும், சகோதரரன்றி சகோதரிகளை மட்டும் கொண்ட பெண்கள் குற்ற எண்ணிக்கையில் குறைந்தும் காணப்படு கின்றனர். சகோதரர் மட்டும் உடைய பெண்டிர் அவர்களைப் பார்த்துக் குற்றங்களை அறிந்து கொள்கின்றனர்கள். ஆகவே

அவர்களின் குற்ற எண்ணிக்கை ஆண்களைப்போன்றே அதிகரித்துள்ளது. ஆனால் பையன்களில் சகோதரர்கள் இல்லாமல் சகோதரிகளை மட்டும் உடையவர்களின் குற்றவெண்ணிக்கை அதிகரிக்கவில்லை. சிலேட்டோ தமது ஆய்வுரையின் முடிவுரையில் பிறப்பின் வரிசைக்கும், குற்றத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், சமுதாயத் தொடர்பால் பிறப்பின் வரிசை பாதிக்கப்படுகின்றது, எனவே சமுதாயத்தின் தொடர்புகள் குற்றத் தன்மைக்கு, குற்றவொழுக்கத்திற்கு முக்கியமாக விளங்குகின்றது என்று கூறுகின்றார்.

ஒரே குழந்தையாக (Only child) பிறந்தவர்க்கும் குற்றத்திற்கும் தொடர்பு உண்டா என்ற கேள்விக்குப் பதிலாக அமைந்த எந்த ஆய்வுரையும் தெளிவாக அமையவில்லை அல்லது விளக்கப்படவில்லை. ஷீல்ட்டும் (Shield) கிரிக்கும் (Gregg) ஆய்வு செய்து முதல் குழந்தை, கடைசி குழந்தை, ஒரே மகன் ஆகியவர்கள் குற்ற எண்ணிக்கையில் அதிகமாய்க்காணப்படுவதாக அறிவிக்கின்றனர். ஆனால் குலுக்ஸ் (Glucks) என்ற ஆய்வறிஞர் இக் கருத்துக்கு நேர்மாறாக அவர்கள் குற்றவெண்ணிக்கையில் குறைந்து காணப்படுகின்றனர் என்று கூறுகின்றார். நீ (Nye) என்ற ஆய்வாளர் நடுக் குழந்தை கடைசிக் குழந்தைகளைக் காட்டிலும் முதல் குழந்தை, ஒரே குழந்தை ஆகியவர்கள் குற்ற எண்ணிக்கையில் குறைந்து காணப்படுவதாக அறிவிக்கின்றார். வாட்டன் பர்க் (Wattenberg) என்பவர் குற்வொழுக்கத்திற்கும் ஒரே குழந்தைக்கும் இடையே உள்ள தொடர்பை அறிய மறு ஆய்வு நடத்தினார். அதில் ஒரே குழந்தையின் தன்மை நாட்டிற்கு நாடு, மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம் மாறுபடுகின்றது. ஆகவே, இவை இரண்டனுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக அறியவியலாது என்று கூறுகிறார். ஒரே குழந்தை என்பதில் உயிருடன் இருப்பதை கணக்கில் எடுப்பதா அல்லது பிறந்தது ஒரே குழந்தைதான் என்பதைக் கணக்கில் எடுப்பதா என்ற கேள்வி எழுகின்றது. ஒரே தாய்க்குப் பல குழந்தைகள் பிறக்கலாம். அவற்றில் எல்லாம் இறந்தது போக எஞ்சி இருப்பது ஒரே குழந்தைதான் என்றால் அது ஒரே குழந்தையாகக் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. ஏனென்றால் பிறப்பின்படி அது அந்தத் தாய்க்கு ஒரே குழந்தையல்ல என்பது தெளிவு. இதை உறுதிப்படுத்தாமல் ஆய்வுரை செய்வது சாலச் சிறந்ததன்று. சில தாய்மார்கள் கருச் சிதைவு செய்துகொண்டிருக்கலாம் அல்லது தானாகவே கருச் சிதைவுண்டு போயிருக்கலாம். ஒருவனுக்கு இரண்டு மனைவிகள் என்று கொள்வோம். ஒவ்வொரு மனைவிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது என்றால் தந்தையைப் பொறுத்தவரையில்

இரண்டு குழந்தைகள். ஆனால் தாய்க்கு ஒரே பிள்ளை என்று ஆகிறது. ஆகவே ஒரே குழந்தை என்ற கொள்கையை வரையறை செய்யப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மேலும் ஒரு தாய் கருச்சிதைவு செய்து கொண்டால் அதை வெளியில் சொல்ல வெட்கப்பட்டுச் சொல்லாமல் இருக்கலாம். அல்லது அந்தச் செய்தியை ஒரேயடியாக மறுத்திருக்கலாம். அல்லது சட்டம் அதை அனுமதிக்காத நிலையில் சட்டத்திற்குப் பயந்து வெளியில் சொல்லாமல் இருக்கலாம். ஆகவே 'ஒரே குழந்தை' என்பதை வயைறை செய்வது என்பது எளிதில் இயலாத காரியமாகும். எனவே ஒரே குழந்தைக்கும் குற்றவொழுக்கத்திற்குமிடையே உள்ள தொடர்பை ஆராய வேண்டுமானால் 'ஒரே குழந்தை' என்ற நிலை வரையறுக்கப்படவேண்டும். பின்புதான் குற்றத்திற்கும் அதற்குமுள்ள தொடர்பினை ஆராய முடியும். பொதுவாக 'ஒரே குழந்தை'யாக உள்ளவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் செல்வாக்கோடு அன்பினைச் சொரிந்து வளர்ப்பதனால் எளிதில் குற்றவொழுக்கத்தில் ஈடுபாடு கொண்டு குற்றங்களைச் செய்ய முற்படுகிறது. அக் குழந்தை புரியும் தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை அன்பின் காரணமாகக் கண்டிக்காமல் விட்டுவிடலாம். 'ஒரே குழந்தை' பல குற்றங்கள் செய்ய வாய்ப்புண்டு. அவன் படிக்காவிட்டாலும் கண்டிக்கமாட்டார்கள். குற்றங்கள் செய்தாலும் பெற்றோர்கள் அவற்றை மறைத்துவிடுவாரே தவிர கண்டிக்க முன் வரவே மாட்டார்கள். மேலும் சில பெற்றோர் 'ஒரே குழந்தை' என்ற காரணத்திற்காக அதிகக் கட்டுப்பாடுகளை விதிப்பர். வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் அவனுக்கு வெளியில் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணம் மிகுதிப்படுகின்றது. அவ்வாறு அவன் வெளியில் வரும்பொழுது அவனுக்குக் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுபவர்களின் நட்பு ஏற்பட்டுவிட்டால் எளிதில் அவனும் குற்றவொழுக்கத்தில் வசப்படுகின்றான். இப்போதைய சமுதாய அமைப்பின்படி ஒரு மனிதன் தனித்து வாழ முடியாது என்பதை ஈண்டு நாம் நினைவுகூர்தல் நல்லது.

திருமணத்திற்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பு (Crime n Relation to Marriages)

ஒருவனுடைய ஒழுக்கம் அவனுடைய திருமணத்திற்குப் பிறகு மாறுபடுகிறது அல்லது பாதிக்கப்படுகின்றது. மணப் பெண்ணின் தன்மையைப் பொறுத்தது இது. மனைவியால் நல்லொழுக்கமுள்ளவன் தீயொழுக்கம் உள்ளவனாகவும், தீயொழுக்கமுள்ளவன் நல்லொழுக்கமுள்ளவனாகவும் மாறமுடியும். திருமணத்திற்கு முன்பு நல்லோனாக இருந்த ஒருவன் திருமண வாழ்க்கையில் ஏமாற்றம் அடைகின்றபோது அவன் குற்றவொழுக்கத்தை நாடி, குற்றங்கள்

பல புரிகிருன். திருமணத்தால் அவன் வாழ்க்கையே பாதிக்கப் பட்டு விடுகின்றது. திருமணத்திற்கு முன்பு குற்றவொழுக்கத்தில் ஈடுபட்ட ஒருவன் அவனது மனைவியின் அன்பால் ஈர்க்கப்பட்டுத் தன் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கிருன். திருமணம் ஆனவர், ஆகாதவர்கள் ஆகியோரை ஒப்பிட்டு ஆய்வு செய்ததில் பின்வரும் உண்மைகள் தெரிய வந்தன. திருமணத் தகுதி பெற்ற சுமார் 1,00,000 (இவர்கள் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்ட குற்றவாளிகள்) பேர்களில் திருமணம் செய்து கொண்டவர்கள் குற்றவாளிகளின் எண்ணிக்கையில் மிகவும் குறை வாகவும் மனைவியை இழந்தவர்களின் எண்ணிக்கை அடுத்தும், பிரம்மச்சாரிகள் எண்ணிக்கை, குறைந்த குற்றவொழுக்கம் புரிந்த வர்களின் வரிசையில் மூன்ருவதாகவும் இருக்கிருர்கள். இவர் களில் மணமுறிவு செய்து கொண்டவர்கள்தாம் குற்றவாளிகளின் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்பட்டார்கள். எல்லா வய தினரிடையேயும் இரு பாலாரிடத்தும் (ஆண், பெண்) இந்த மண முறிவு செய்து கொண்டோரின் குற்ற எண்ணிக்கை அதிகம். 20 முதல் 24 வயதுக்குட்பட்ட பிரம்மச்சாரிகளைவிட 6 மடங்கு அதிக மான அளவில் அதே வயதுக்குட்பட்ட மணமுறிவு செய்து கொண்டவர்கள் இருக்கிருர்கள். திருமணம் செய்து கொண்ட ஆண்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மணமுறிவு செய்து கொண்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை ஆறு மடங்கு அதிக மாகவும் உள்ளது. அதே நேரத்தில், அதே வயது கொண்ட மண முறிவு செய்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை, கன்னிகள், கன்னி கழிந்தவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை விட 10 மடங்கு அதிகமாகவும் உள்ளார்கள். 15 வயது முதல் 19 வயது நீங்கலாக ஆண்களில் எல்லா வயதினரிடையேயும் குற்ற வொழுக்க விகிதம் பிரம்மச்சாரிகளைவிட திருமணமானவர்களி டையே குறைந்து காணப்படுகின்றது. ஆனுல் பெண்களில் எல்லா வயதினரிடையேயும் குற்ற விகிதம் திருமணமான பெண்களின் விசயத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. 24 முதல் 34 வயது நீங்கலாக திருமணமான பெண்களின் குற்ற விகிதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனுல் 15 வயது முதல் 19 வயதிற்குட் பட்ட திருமணமான பெண்கள் விஷயத்தில் திருமணமானவர்கள், ஆகாதவர்களிடையே பெருத்த வேறுபாடுகள் இல்லை. இப் புள்ளி விவரங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டுச் சிறைகளிலிருந்து சேகரிக்க பட்டது என்றும், இது ஐரோப்பாவுக்கும் பொருந்தும் என்றும் சதர்லாண்ட் அறிவிக்கின்ருர். மேலும் நன்னடத்தை விடுதலையில், திருமணமானவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக அளவில் விடுதலை ஆகின்ருர்கள் என்றும், அதிலும் முறையான அளவில் திருமணம் செய்து கொண்டவர்கள் அதிகமாகவும் விடுதலையா

கின்றனர் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. மேலும் கில்லின் (Gillion) என்ற அறிஞர் 172 கைதிகளைக் குற்றம் புரியாதவர்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்ததில் கைதிகள் மற்றவர்களைக் காட்டிலும் இயல்புகளில் வேறுபடுவதாகக் கூறுகின்றார். இவர்கள் மனைவியுடன் அன்பாகப் பழகுவதில்லை. ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஒரே மதத்தையுவடயவராகவும் இல்லை. கல்வி, பொருளாதாரம் இவை மனைவியின் தரத்தைப் போல் இல்லை என்று கூறுகின்றார். மேற்சொன்ன புள்ளிவிவரங்கள் மூலம் திருமண வயது அல்லது திருமணம் எவ்வாறு குற்றத்திற்குத் தொடர்புடையது என்பதையும், எப்படி இவை நேரடியாகக் குற்றத்திற்குக் காரணக் கூறுகளாய் அமைகின்றன என்பதையும் அறிய முடியவில்லை. அதாவது அறிவிக்கப்படவில்லை. குற்றத்திற்கான மற்றக் காரணக் கூறுகளின் இணைப்பால் திருமண வயது அல்லது திருமணம் குற்றத்திற்கு ஒரு காரணமாக அமையலாம் என்பதே உண்மை. அதாவது வறுமை, குடிபோதை. உளநோய், சமுதாயக் கட்டுப்பாடுகள் ஆகிய காரணக் கூறுகளினால் குடும்பத்தில் தகராறு, பிரச்சினை, குழப்பம், கருச்சிதைவு, பிறன் மனை புணர்தல், வைப்பாட்டி வைத்துக்கொள்ளல், இதனால் கொலைக் குற்றம், தற்கொலை, வலியத் தாக்கும் குற்றம், கையூட்டுக் குற்றம், மோசடி போன்ற பல குற்றங்கள் புரிய திருமணம் ஒரு கருவியாகின்றது.

வெளிநாட்டைவிட நம் நாட்டில் திருமணத்திற்கும், குற்றத்திற்கும் அதிகத் தொடர்புண்டு. திருமணம் புனிதமாக நம் நாட்டில் கருதப்படுகின்றது. அதற்கு அதிகக் கட்டுப்பாடும், சக்தியும் உள்ளது. மேலைநாடுகளில் திருமணம் ஒரு ஒப்பந்தமாக (Contract) கருதப்படுகின்றது. ஆகவே அவர்கள் நினைத்த நேரத்தில் மணமுறிவு செய்துகொள்கின்றார்கள். நம் நாட்டில் மணமுறிவு என்பது அவ்வளவு சுலபமல்ல. திருமணத்திற்குப் பின்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு தனித்தகுதி உண்டாகிறது. நாடோடியாக ஊர் சுற்றி அலைபவர்க்கும், குடும்பப் பொறுப்பை ஏற்காமல் காலத்தைக் கழிப்பவனுக்கும், வேலையில் பொருளீட்ட விருப்பமில்லாதவர்களுக்கும் திருமணம் செய்துவிட்டால் அவர்கள் பொறுப்புடன் வீட்டிலேயே தன் தொழிலைக் கவனித்து வருவார்கள். அவர்களைப்போலவே பெண்களும் திருமணத்திற்குப் பின்பு அவர்களின் ஒழுக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆக, திருமணத்தினால் ஒழுக்கத்தை வளர்த்து குற்றவொழுக்கத்தைக் கட்டுப்படுத்தவும் முடியும். அதே திருமணம் குற்றவொழுக்கத்தை உருவாக்கவும் துணைசெய்யக் கூடும். ஆகவே திருமணத்தோடு மற்றக் காரணக் கூறுகள் இணையும்போது குற்றவொழுக்கம், குற்றச் செயல் உருவாகிறது.

9. பொது நிறுவனங்களும் குற்றமும்

(General Institutions and Crimes)

பொது நிறுவனங்களை ஆராய்ந்து அவை எப்படிக் குற்ற ஒழுக்கங்களுக்கும் குற்றத்திற்கும் தொடர்புடையன என்பதை விளக்குவதுதான் இந்த அத்தியாயத்தின் நோக்கம். சமுதாயத்தில் செயல்படும் எல்லா நிறுவனங்களையும் ஆராய்வது கடினம். எனவே அடிப்படையாக அமைந்துள்ள சில முக்கிய நிறுவனங்களைப் பற்றியும், குற்றத்தோடு அவற்றின் தொடர்பினைக் குறித்தும், குற்றத்திற்கான காரணக் கூறுகள் குறித்தும் ஆராய்வோம். அந்த நிறுவனங்கள் குடும்பங்கள், அரசு, பொருளியல், கல்வி, பயிற்சி அளித்தல், மதம், இன்பப் பொழுது போக்கு மன்றங்கள், உணவு விடுதி, மற்றச் சங்கங்கள் முதலியன. சமுதாயம் உய்ய, மேற்கண்ட நிறுவனங்கள் அத்தியாவசியமானவை. ஆனால் அவையே குற்றவொழுக்கத்திற்கும் குற்றங்களுக்கும் ஏதுவாகின்றன. அதாவது அவரவர்களின் ஒழுக்கத்திற்கு ஏற்ப ஒவ்வொரு நிறுவனமும் அமைக்கப்பட்டிருக்கும். பொதுவாக நிறுவனங்கள் நாட்டிற்கு நாடு, கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபடும். அதேபோன்று குற்றங்களும் நாட்டிற்கு நாடு வேறுபடும். ஆனால் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் குற்றத்திற்கும் எவ்வகையில் தொடர்புண்டு என்பதை ஆய்வோம்.

பொருளாதாரக் காரணக் கூறுகள் அல்லது பொருளாதார நிறுவனங்கள் (The Economic Institution)

> **" அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
> **இவ்வுலகம் இல்லையாகி யாங்கு "**

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப இப்போது பொருளாதாரந்தான் வாழ்க்கையின் உயிர்நாடியாக விளங்குகின்றது. ஆகவே வாழ்வதற்குப் பொருள் தேவைப்படுகின்றது. பொருளற்றவன்

வறியவன். வறுமைக்கும் குற்றத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஆகவே பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் குற்றவெண்ணிக்கையில் உயர்நிலையில் உள்ளவரைவிட அதிகமா என்ருல் 'ஆம்' என்ற விடையே கிடைக்கும். வறுமை, பஞ்சம் தாண்டவமாடும்போது குற்றங்களின் எண்ணிக்கை, குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா என்ருல் 'அதிகரித்து இருக்கிறது' என்று துணிந்து கூறலாம். வறுமைக்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பைக் குறித்து மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளிலிருந்து பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலை உள்ளவர்கள் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைக் காட்டிலும் குற்றவெண்ணிக்கையில் அதிக விகிதம் உள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த ஆய்வுகள் கைது செய்யப்பட்டவர்கள் (Arrests) தண்டனை வழங்குதல், சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள் (கைதிகள்) ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்டன. செல்டன், எலினுர் குலுக்ஸ் (Shelden and Glucks) ஆகியோர் ஆராய்ந்ததில், முதல் ஆய்வில் 71'3 சதமும், இரண்டாவது ஆய்வில் 91·3 சதமும் பொருளாதார வறுமையினுல் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று அறிவித்துள்ளனர். வார்னர், லூண்டு (Warner and Lunt) ஆகிய இருவரும் பொருளாதாரத்தில் தாழ்ந்துள்ள இரு பிரிவுகளை ஆய்ந்து 57 சதம்தான் குற்றவாளிகள் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆனுல் அவ்விரண்டு பிரிவுகளிலும் ஏழு ஆண்டுகளில் மொத்தம் 80 சதம் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றனர். இலங்கையில் 1944-1956-ம் ஆண்டுகளில் ஏழை, அதிக ஏழை ஆகிய இரு பிரிவில் உளள குழந்தைகள் 73 சதம் குற்றங்கள் செய்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. டென்மார்க்கில் (Denmark) ஆராய்ந்ததில் உயர்ந்த அல்லது நடுத்தரக் குடும்பங்களிலிருந்து 10 சதம் குற்றவாளிகளும் மற்ற, பொதுவான குடும்பங்களிலிருந்து 27 சதமும் காணப்படுவதாக அறிவிக்கின்ருர்கள்.

பொதுவாக, எல்லாக் குற்றங்களையும் ஆய்ந்து, அதில் பொருளாதாரக் குற்றம் எத்தனை வீதம் என்பதை ஆராய்தல் வேண்டும். குற்றங்கள், குற்றத் தன்மை ஆகியவற்றை ஆராயும்போது பொருளாதாரத் தகுதி, தரங்களை ஆராய்ந்தால் பொருளாதாரக் குற்ற விகிதம் காணப்படும். இதை நாடு முழுவதுமுள்ள குற்றங்களையும், குற்றவாளிகளையும் ஆராய்ந்து, அவர்களில் ஏழைகள்—அவர்களின் வறுமையின் காரணமாக குற்றங்களைச் செய்தவர்கள், ஆகியவற்றை ஆராய்ந்துதான், வறுமையினுல் குற்றங்களைச் செய்தவர்களின் விகிதங்களைக் காண முடியும். இந்த முறைதான் பொருளாதாரத்திற்கும் குற்றத்திற்கும் உள்ள தொடர்பை அறிய

சிறந்த முறையாகும். இத்துடன் குற்றவாளிகள் வாழும் இடங்களையும் ஆராய்ந்து, அது குற்றவொழுக்கக் குற்றவாளிகள் வாழும் பகுதிகளில் இல்லையா என்பதையும் ஆராய்தல்வேண்டும். வறுமையோடு, அவர்கள் வாழும் சூழ்நிலையும் தான் அவர்களைக் குற்றவாளிகளாக்குகின்றது. உதாரணமாகக் குற்றவொழுக்கம் இல்லாத, குற்றவாளிகள் இல்லாத பகுதிகளில் எவ்வளவு வறுமை இருந்தாலும் அங்கே குற்றவொழுக்கமோ, குற்றமோ நிகழ்வதற்கு வாய்ப்பு இல்லை. காரணம் அங்குள்ள மக்களுக்குக் குற்ற வொழுக்கத்தன்மையே கிடையாது. மேலும் அந்தத் தன்மையிருந்தாலும் அவர்கள் நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து வருவதால் வறுமையின் காரணமாக குற்றவொழுக்கங்களோ, குற்றச் செயல்களோ அவர்களை அனுக அனுமதிக்கமாட்டார்கள். வறுமையின் காரணமாக இறந்துவிட்டாலும் விடுவார்களே தவிர, குற்றச் செயல்களில் ஈடுபட மனம் துணியமாட்டார்கள். இவர்கள் ஏழைகளாக இருந்தாலும் வயிற்றுப் பிரச்சினையைவிட ஒழுக்கப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தருகின்றார்கள். ஆகவே மக்களின் வறுமை நிலை, அவர்கள் வாழுகின்ற பகுதி, இடம், வீட்டு வசதி, உடலமைப்பு, அவர்களின் ஆரோக்கியம், கல்வி மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவற்றை ஆய்ந்தறிதல் வேண்டும்.

மேற்கண்ட புள்ளி விவரங்களில் செல்வாக்காளர் குற்றம் (White Collar Crime) சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எனவே இந்தக் குற்றப் புள்ளி விவரங்கள் உண்மையற்றதாகின்றன. ஓர வஞ்சனையான புள்ளி விவரம் என்றும் சொல்லலாம். மேலும் செல்வாக்காளர் குற்றங்களைக் கணக்கெடுப்பதும் இயலாத காரியம். மொத்த குற்றங்களைக் கணக்கில் எடுக்காமல் (செல்வாக்காளர் குற்றங்கள் உட்பட) வறுமையால் செய்த குற்றங்களை மட்டும் பிரித்துக் கணக்கெடுப்பது குற்றங்களின் உண்மையான காரணங்களை அறிய முடியாது. ஒருவேளை செல்வாக்காளர் குற்றங்கள் முழுமையாகக் கணக்கெடுக்கப்படுமேயானால், பொருளாதாரத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் குற்ற விகிதம் அதிகமாக இருக்குமா என்பது ஐயம்தான். ஏழை மக்கள் வறுமையிலும் வாடுகின்றனர். வேறு ஆதரவு அற்ற நிலையிலும் உள்ளனர். அதாவது குற்றங்களைச் செய்துவிட்டு தண்டனையினின்றும் தப்பி விடுகின்ற வாய்ப்பு அவர்களுக்கில்லை. ஆனால் செல்வந்தர்கள் குற்றங்களைச் செய்தாலும், அரசாங்கத்தில் அவர்களுக்குள்ள செல்வாக்கினால் மிக எளிதில் தண்டனையினின்றும் தப்பிவிடுகின்றார்கள். அந்த வாய்ப்பு அவர்களுக்கு நிறைய உண்டு. ஆகவே அப்படிப்பட்டவர்களின் பெயர்கள் குற்றப் பதிவேடுகளில் பதியா, இதனால்தான், மேல்மட்ட மக்களின் குற்ற எண்ணிக்கையும், குற்ற

விகிதமும் எல்லா நாடுகளிலேயும் குறைவாகவே உள்ளன. மேலும் புள்ளிவிவர ஆய்வர்களும், தொகுப்பாளர்களும் ஏழைகளை அணுகும் அளவுக்குச் செல்வர்களை அணுகுவது கிடையாது. காவல் துறையினரும் ஏழைகள் தவறிழைத்துவிட்டால் சட்டத்தை அவர்கள்மீது பிரயோகித்துத் தண்டனை வாங்கித் தருகின்றார்கள். ஆனால் செல்வர் குற்றம் செய்தால் சரிசெய்து அல்லது சரிகட்டி (Fix things) விடுகின்றனர். இதை அறிய ஒரு பயிற்சிப் பள்ளியில் உள்ள மாணவர்களை ஆராய்ந்ததில் பொருளாதார அடிமட்டத்தில் உள்ள மாணவர்கள் அதிகமாகக் காணப்படுவதாக அறிவித்துள்ளனர். ஆனால் ஓர் உயர்நிலைப்பள்ளியில் உள்ள மாணவர்களை ஆராய்ந்ததில் ஏழை மாணவர்களுக்கும் பணக்கார மாணவர்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் இல்லை எனக் கண்டறியப்பட்டது.

மேலும் குற்றத்திற்கும் வாணிகத் துறைக்கும் உள்ள தொடர்பு ஆராயப்பட்டது. அதாவது வாணிகத் துறையில் எந்தெந்தக் காரணங்களினால் குற்றங்கள் அதிகரித்துள்ளன, எந்தெந்தக் காரணங்களினால் குறைகின்றன என்பதை ஆராய்ந்தார்கள். அதில் கீழ்க்கண்ட விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக் காலங்களில் அதிகக் குற்றங்களும், வளமான, சற்று வளம் குறைந்த காலங்களில் குற்றங்கள் குறைந்தும் காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால் பொதுவான குற்றங்கள் நெருக்கடிக் காலங்களில் அதிகரிக்கவில்லை என ஆராயப்பட்டது. நெருக்கடிக் காலங்களில் சொத்திற்கு எதிரான வன்முறைக் குற்றங்கள் அதிகரித்தும், திருடுதல் போன்ற வன்முறையற்ற குற்றங்கள் குறைந்த அளவு அதிகரித்தும், ஆனால் வளமான காலங்களில் குடிபோதைக் குற்றம் பெருமளவு அதிகரித்துள்ளதாகவும் ஆராயப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தோரதி தாமஸ் (Dorothy Thomas) என்பவர் இங்கிலாந்தில் 1857 முதல் 1913 வரையிலான பொருளாதாரச் செழுமைக் காலங்களில் குடிபோதைக் குற்றம் 0·34 சதம்தான் அதிகரித்துள்ளதாகக் கணக்கெடுத்திருக்கின்றார். வின்ஸ்லோ (Winslow) என்பவர் மாசாசூஸட் மாநிலத்தில் (Masso Chusetts) ஆய்வு நடத்திக் குடிபோதைக் குற்றத்திற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் தொடர்பு இல்லை என்று அறிவித்துள்ளார். நபருக்கெதிரான குற்றங்களுக்கும் வாணிகர்கட்குமிடையே நிலையான தொடர்பில்லை என்று ஆராயப்பட்டது. ஆனால் சில ஆய்வுரைகளால் செழுமையான காலங்களில் நபருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து இருப்பதாக அறியப்பட்டது. மேலும் மது அருந்துவதனால்தான் நபருக்கெதிரான குற்றங்கள் அதிகரிப்பதற்குக்

காரணக் கூருக விளங்குகிறது என்றும் அறியப்பட்டது. வளப்பமான பொருளாதார காலங்களில் இளங் குற்றவாளிகளின் குற்றங்கள் அதிகரித்தும், நெருக்கடிக் காலங்களில் இவர்களின் குற்றங்கள் குறைந்தும் காணப்படுவதாக ஆராய்ந்தறியப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்தில் இளங் குற்றவாளிகளின் குற்றப் புள்ளி விவரங்களையும். வயதானவர்களின் குற்றப் புள்ளி விவரங்களையும் இணைத்து ஆராய்ந்ததில் பொருளாதார நெருக்கடிக் காலங்களில் பொதுவான குற்ற விகிதங்கள் மாறுபடவில்லை என ஆராயப்பட்டது.

குற்றத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து அறிய நில இயல்புகளின் (Geographically) அடிப்படையில் கால வரிசைப்படி (Chronologically), ஆராய்தல் வேண்டும். 'வறுமை' 'ஏழ்மை' (Poverty) என்று நாம் எதைக் குறிப்பிடுகின்றோம்? மோசமான வீட்டு வசதிகள், காற்றோட்டமற்ற அறைகள், கல்வி பயில வாய்ப்பில்லாமை பசி, பிணிகள் போன்றவற்றைச் சமாளிக்கப் போதிய பணமில்லாமை ஆகியவற்றை நாம் 'ஏழ்மை' என்று குறிப்பிடலாம். இப்படிப்பட்ட ஏழைகள் பொதுவாக நல்லொழுக்கம் மிக்கோராயிருந்தாலும் சூழ்நிலைகளினல் தீயொழுக்கத்தின்பால் ஈடுபடுகின்றனர். சமுதாயத்தில் தாழ்ந்தவர்க்கு மரியாதை என்பதே இல்லை. அதனல் அவர்கள் பிறர்க்கு மரியாதை கொடுப்பதோ அல்லது பிறரிடமிருந்து மரியாதை எதிர்பார்ப்பதோ கிடையாது. மேலும் தானே முன்னேறுவது என்பதும் முடியாததாக இருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் மோசமான இடத்தில், வீடுகளில், மோசமான வாழ்க்கை வாழ்வதுடன், சுகாதாரமற்ற உணவு உட்கொண்டு உடல் நிலை பாதிக்கப்பட்டு மோசமான உடற்கூறுகளும் கொண்டு வாழ்வதனல் சமுதாயத்தின்மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. அவ் வெறுப்பின் காரணமாக அவர்கள் குற்றவொழுக்கத்தை நாடுகின்றார்கள். அதாவது பெற்றோர்கள் நாள் முழுவதும் வெளியில் கூலி வேலை செய்துவிட்டு மாலையில் வீடு திரும்பும் வரைக்கும் அவர்களின் குழந்தைகள் பசி, பட்டினியால் வாடுகின்றார்கள். பொருளாதார வசதியின்மையால் பள்ளிக்குச் சென்று கல்வி பயில்வதும் கிடையாது. பயின்றாலும் இடையிலேயே நிற்க வேண்டிய கட்டாயம் அவர்களின் ஏழ்மையின் காரணமாக ஏற்படுகின்றது. மேலும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வி அவர்களின் ஆசிரியர்களால் சரியாகப் போதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வீட்டில் நல்லொழுக்கங்களையோ கட்டுப்பாடுகளையோ கற்றுக் கொடுப்பதில்லை. ஆனால் செல்வந்தர்கள் பிள்ளைகளுக்கு மிகச் சிறப்பான கல்வியும், நல்லொழுக்கமும் கற்றுக் கொடுக்கப்படு

கின்றன. ஏழைப் பிள்ளைகள் வறுமையின் காரணமாகப் படிப்பை நிறுத்தி விடுவதனால், சொற்ப ஊதியத்துடன் கூடிய மிகக் கடின மான உடல் உழைப்பு வேலையே கிடைக்கிறது. அதைக்கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றார்கள். அவர்கள் வருமானத்திற்கேற்ப குறைந்த வாடகை. குறைந்த வசதியுள்ள இடங்களையே தேடிப் பிடிக்கின்றார்கள். பொதுவாக இப்பகுதிகள் குற்றவொழுக்கம், குற்றவாளிகள் மிகுந்த இடமாகத் தான் இருக்கும். குற்றவொழுக்கம் இல்லாதார்கூட அப் பகுதிக்குக் குடியேறினால், சூழ்நிலையால் விரைவில் குற்றவொழுக் கத்தில் ஈடுபடுவர். அதாவது மது அருந்துதல், சூதாடுதல், களவாடுதல், விபச்சாரம் போன்ற குற்றங்கள் இவர்களையும் பற்றிக் கொள்ளும். பின்பு இவர்களின் குற்றங்கள் இவர்களின் குழந்தைகளையும் பற்றிக்கொள்ளும், ஆகவே வறுமை, ஏழ்மை என்பது சமுதாயத்துடன் இணைந்த ஒன்றாகும். உயர் மட்டத்தில் வாழ்பவர்கள்கூட குற்றவொழுக்கமுடையவரின் கூட்டுறவால் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றார்கள். அவர்களே நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அடிமட்டத்தில் உள்ளவர்கள் மூலம் செய் கின்றார்கள். செல்வர்கள். ஏழைகளை அவர்களின் குற்றக் கருவி களாகப் பயன்படுத்துகின்றார்கள். செல்வந்தன் மேலும் சேர்க்க, பணத்தைக் தீய வழிகளான பதுக்கல், கள்ளச் சந்தை, கலப்படம், விற்பனை அளவுகளில் மோசடி, கள்ள நோட்டு, கள்ள நாணயம் அடித்தல், கள்ளக் கடத்தல் போன்றவற்றின் மூலம் திரட்ட முற்படுகின்றான். சுருக்கமாகக் கூறினால், ஏழை தன் வறுமையின் காரணமாகக் குற்றமிழைக்கிறான். பணக்காரனோ மேலும், செல் வந்தனாக ஆவதற்குக் குற்றம் புரிகின்றான். ஆகவே பொருளா தாரக் கூறுகள் (Economic factors) இருவிதத்திலும் குற்றவொழுக் கத்திற்கும் குற்றங்களுக்கும் காரணமாக அமைகின்றன என்ப தைப் பார்ப்போம்.

முடிவாக வறுமை, ஏழ்மை நிலைதான் குற்றத்திற்குக் காரணம் என்று கூறிவிடமுடியாது. காலத்தால், பஞ்சத்தால், சூழ்நிலையால் ஏற்படும் வறுமைக்கும், பாம்பரையாக வறுமையால் பாதிக்கப் பட்ட ஏழைகளுக்கும் நிறைய வேறுபாடுண்டு என்று கீழ்க்கண்ட ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஜப்பான் காலனியில் இரண் டாம் உலகப் போருக்கு முன்னர் அவர்களைச் சுற்றியிருந்தவர்கள். அதிகமான குற்ற விகிதங்களை உடையவர்களாகக் காணப்பட்டா லும், அதே நேரத்தில் ஜப்பானியக் குடும்பங்கள் வறுமையால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் குழந்தைகளின் குற்ற விகிதங்கள் குறைந்த அளவே காணப்பட்டன. அமெரிக் காவில் ஒரு குறிப்பிட்ட நகரத்தில் பெண்கள் (Girls) பையன்களைப்

போலவே வறுமையில் வாடினாலும் குற்ற விகிதங்களில் அவர்களை விடக் குறைவாகவே காணப்படுகிறார்கள். அடுத்து இந்தியாவில் 1943-ம் ஆண்டு இருந்த கடும் பஞ்ச காலத்தில் கல்கத்தாவில் மிகக் கொடூரமான வறுமை-பஞ்சம் அந்த ஆண்டின் எல்லா மாதங்களிலும் நிலவியது. வெள்ளை பிராமணர் வறுமையில் வாடினார்கள். அவர்கள் வாழும் வீதியிலே நூற்றுக்கணக்கான பசுக்கள் சுற்றித் திரிந்தன. ஆனால், பட்டினியால் அவர்கள் பரிதவித்த போதிலும், விலா எலும்புகள் வாடி வதங்கி ஒட்டிய வயிறோடு காட்சி அளித்த அந் நிலையிலும் அவர்கள் தங்களைத் தாங்களே வருத்திக்கொண்டு உயிர் விடவும் தயார் நிலையில் இருந்தனரேயன்றிப் பசுவைக் கொன்று அவர்கள் உண்ண முற்படவேயில்லை அல்லது அந்த எண்ணமே அவர்களுக்குத் தோன்றவும் இல்லை. வறுமையில் எல்லாக் குடும்பங்களும் கூண்டோடு சாகத் தயாராய் இருந்தனரேயன்றி, மாட்டிறைச்சியை உண்டு உயிர்வாழ அவர்கள் ஒருகாலும் நினைக்கவேயில்லை. அவர்கள் வறுமையின் காரணமாக எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை. உணவுக் கிடங்குகள், கடைகள், உணவு விடுதிகள் போன்றவை இந்த வறியவர்களால் எங்கேயும் அச்சுறுத்தப்படவேயில்லை; கொள்ளையடிக்க முற்படவுமில்லை. இந்தியாவைப் பற்றிய இந்த நிகழ்ச்சி அமெரிக்கர்களுக்குப் பேரதிர்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தது என்று ஜான் ஃபிஸ்சர் (John Fishcher) என்பவர் 'இந்தியாவின் தீர்க்க முடியாத பசி' (India's Insolvable Hungry) என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். அவர் கூற்று முற்றிலும் உண்மை.

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

என்ற ஔவையின் வாக்குக்கு ஏற்ப சூழ்நிலையால், காலத்தால் வறுமையுற்றவர்கள் வறுமையைப்போக்கக் குற்ற ஒழுக்கத்தில் ஈடுபடுவதில்லை. வறுமையால் தாழ்ந்த நிலையை எய்திவிட்டாலும் அவர்கள் 'வாழ வழியில்லை' என்ற நிலையில் தற்கொலை செய்து கொள்வரேயன்றி குற்றவொழுக்கத்திலோ, குற்றச் செயலிலோ ஈடுபடமாட்டார்கள். ''நல்ல தங்காள்'' காலமுதல் இன்று வரையில் எத்தனையோ குடும்பங்கள். வறுமையின் காரணமாக விஷம் அருந்தியோ, கிணற்றில் விழுந்தோ தற்கொலை செய்து கொள்கின்ற காட்சியை நாடோறும் செய்தித் தாள்களில் காணலாம். 1972-ம் ஆண்டு ஒரு தாய், வறுமையின் காரணமாக தன்னுடைய ஐந்து குழந்தைகளைக் கிணற்றில் எறிந்து சாகடித்த பின்னர் தானும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாள். பிறகு அந்தத் தாய் கைது செய்யப்பட்டு கொலைக் குற்றமும்,

தற்கொலை முயற்சிக் குற்றமும் சாட்டப்பட்டாள். இவ்வாறு வறுமையின் காரணமாக தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் பலர் ஆனால் சிலர் வறுமையின் காரணமாய் தீயொழுக்கத்திலும், தீச்செயலிலும் ஈடுபடுகின்றனர்கள். இது அவர்களின் மனப் பான்மையைப் பொறுத்தும் அவர்களின் வாழ்க்கை முறைகளைப் பொறுத்தும் அமைந்துவிடுகின்றது.

அரசாங்கக் காரணக்கூறு (Government factors)

குற்றங்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பு எங்ஙனம் என்று பார்ப்போம். இதில் பலவகையான அரசியல் முறைகளை ஒப்பிட்டுக் குற்றத்திற்கான காரணக் கூறுகளை ஆராய்ந்தறிதல் வேண்டும். முதலாளித்துவம் சார்ந்த குடியாட்சி (Capitalistic democracy), பொதுவுடைமைக் கொள்கை சார்ந்த பாட்டாளி மக்களின் சர்வாதிகார ஆட்சி (The Communist dictatorship of proletariat), பரம்பரை மன்னர் ஆட்சி (Hereditary Monarchy) குடியரசு ஆட்சி ஆகிய (Democracy) முறைகளுக்கும் குற்றத் தன்மைக்கும் எவ்வாறு தொடர்புண்டு என்பதை ஆய்ந்தறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு உலக நாடுகளின் ஆட்சி முறைகளையெல்லாம் ஒப்பிட்டு, கிடைத்த புள்ளி விவரங்களைக் கொண்டு குற்றத்திற்கான காரணக் கூறுகளை ஆராய்தல் சிறந்த முறையாகும். இது ஒரு கடினமான பணியாகும். காரணம் இதற்கு மிகுந்த பொருட்செலவும், அதிகக் காலமும் தேவைப் படும். அப்படியே அவை கிடைத்தாலும் தேவையான புள்ளி விவரங்கள் கிடைக்குமா என்பது ஐயமே. ஏனென்றால் நாடுகளி டையே போர்கள் நிகழ்ந்த காலத்து அறிக்கைகள் அழிந்துபட் டிருக்கலாம், அல்லது அழிக்கப்பட்டிருக்கலாம். மேலும் ஒரு நாட்டில் குற்றமாகக் கருதப்படும் ஒரு செயல் வேறொரு நாட்டில் குற்றமற்ற செயலாக இருக்கலாம். ஒரே நாட்டில்கூட ஒரு வரின் ஆட்சி மாறும்போது, குற்றச் சட்டங்களும் மாற்றி அமைக் கப்படலாம். குறிப்பாக மதுவிலக்குச் சட்டம், பரத்தைமைச் சட்டம், மற்ற வாணிகத் தொடர்பான கட்டுப்பாட்டு விதிமுறைகள் ஆகியவை அடிக்கடி மாற்றப்படலாம். ஆகவே இம்முறையில் குற்றப் புள்ளி விவரங்கள் சேகரித்து. குற்றத்திற்கான காரணக் கூறுகளை ஆராய்வதென்பது செயலில் முடியாத காரியம். மேலும் குற்றச் சட்டங்களும், குற்றங்களும் நாட்டிற்கு நாடு மாறுபடுவ தனால் குற்றத்திற்கான உண்மையான காரணங்களை ஆய்ந்து அறிதல் முடியாத காரியமுமாம். இம்முறையில் ஆராய்ச்சி செய் வது வரவேற்கத் தக்கது என்றாலும் தெளிவான, உண்மையான காரணக் கூறுகளை அறிய உதவுமா என்பது ஐயப்பாட்டிற் குரியதுதான்.

இரண்டாவது முறை :

ஒரே நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குள் நடந்த ஆட்சி முறைகளை ஆய்ந்து அந்தக் காலங்களில் நிகழ்ந்த குற்றங்களை ஆய்ந்து புள்ளி விவரங்கள் சேகரித்து, குற்றத்திற்கான காரணக் கூறுகளைக் கண்டறிதலே இவ்விரண்டாம் முறையின் நோக்கம் ஆகும். இது முந்தைய முறையைவிட சிறந்தது மட்டுமல்ல, எளிமையானதும் கூட. "ஆட்சி முறைகள்" என்பது நவீன காலத்தில் அரசியல் கட்சிகள் பல மாறி மாறி ஆட்சியை மேற் கொள்ளக் கூடும். அதனால் ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வரும் போது அக் கட்சியின் அரசியல் கோட்பாடுகளின்படியே ஆட்சியை நடத்துகின்றன. குற்ற விகிதங்கள் அதிகரிப்பதற்கு ஆட்சியின் கொள்கையும் ஒரு முக்கிய கூருகும். மற்றப்படி சட்டத்தை வலியுறுத்தல், சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றை நிலை நிறுத்துவதிலுள்ள குறைபாடுகள் ஆகியவற்றின் காரணமாகக் குற்ற விகிதங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு. அஃதாவது நீதித் துறை, காவல்துறை ஆகியவற்றின் செயல்பாடுகட்கேற்ப குற்ற விகிதம் அதிகரித்தோ குறைந்தோ இருக்கலாம். சட்டங்களைக் கடுமையான முறையில் அமுல்படுத்தினுல் குற்ற விகிதங்கள் குறைவதற்கு வாய்ப்புண்டு. ஆனுல் அரசியல் கட்சிகளால் இவ்வகையில் செயல்படமுடியா நிலை ஏற்பட வாய்ப்புண்டு. சட்டங்களை வலியுறுத்தும் காவல்துறை, நீதித்துறை ஆகிய வற்றின் பணிகளில் அடிக்கடி ஆளும் கட்சிகள் தலையிட்டு அவை நேர்மையாகச் செயல்பட முடியாதபடிச் செய்துவிடுகின் றன. இதனுல் சட்டங்களை மிகக் கடுமையான முறையில் செயல் படுத்துவதென்பது முடியாத காரியம் ஆகும்.

மேலும் நாளுக்கு நாள் உலகில் உள்ள அரசாங்கங்கள் செல் வாக்கை இழந்துகொண்டு வருகின்றன. பழைய காலத்தில் மக்கள், அரசாங்கத்தையும் அதை நடத்துபவர்களையும் தெய்வப் பிரதிநிதிகளாகவே கருதி வந்தனர். தெய்வத்திற்குச் சமமாகவே கருதிப் போற்றி வந்தார்கள். (Divine Right of Soverignity) அந்நிலை இன்று மாறிவிட்டது. உலகில் உள்ள சில நாடுகளில் மன்னராட்சி நடைபெற்றுலும், மற்றெல்லா நாடுகளிலும் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே ஆட்சி புரிகின்றுர்கள். "எல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்ற நிலை உருவாகிவிட்டது. இதனுல் யாரும் ஆட்சிக்கு வரலாம் என்ற நியதி ஏற்பட்டுவிட்ட படியால் ஒவ்வொரு அரசியற் கட்சியும் ஆட்சியைப் பிடிக்க எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. இதனுல் சமுதா யத்தில் செயல் எதிர்ச் செயல்கள் நிகழ்கின்றன. ஒவ்வொரு கட்சி யும் மற்ற கட்சிகட்கெதிராகப் போராட்டம், குழப்பம், கலகம் ஆகிய

வற்றை நடத்துகின்றன. ஆளுங்கட்சி எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்க சட்டங்களையேகூட மாற்றி அமைக்கின்றது. கூடுமானால் புதிய சட்டங்களையும் இயற்றுகின்றன. இதனால் பாதிக்கப்படும் கட்சி அதை எதிர்த்துப் போராட்டம், கலகம் ஆகியவற்றைச் செய்கின்றது. இதற்காகக் கட்சியின் தொண்டர்களுக்குப் போராட்டப் பயிற்சியளித்து, மக்களின் அதிருப்தியை மேலும் தூண்டி ஆட்சியைக் கவிழ்க்க முயலுகின்றன. ஆட்சியாளரிடத்து மக்களுக்கும் தொண்டர்களுக்கும் எதிர்ப்புணர்ச்சி ஏற்பட்டு, பின்பு அதுவே குற்ற ஒழுக்கமாக மாறிவிடுகிறது, மேலும் சட்டங்களியற்றும்பொழுது ஆளும் கட்சிகள் எதிர்க்கட்சிகளையோ மக்களையோ கலக்காமல் அவர்களின் இசைவின்றித் தங்கள் போக்கிலேயே இயற்றிவிடுகின்றார்கள். ஆகவே அச் சட்டங்களை மக்கள் எதிர்த்து, கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அதை மாற்றப் பிறரையும் தூண்டுகிறார்கள். மேலும் அடிக்கடி சட்டங்களை மாற்றிக் கொண்டிருப்பதிலும் மக்களுக்குத் தெளிவோ, பற்றோ ஏற்படுவதில்லை. இன்றைய சட்டம் நாளை மாற்றப்படலாம் என்ற நிலை, எண்ணம் மக்களிடையே ஏற்பட்டுவிட்டால் அச் சட்டங்களை மக்கள் மதிக்கமாட்டார்கள். மேலும் சமுதாயத்திற்குத் தேவையற்ற அல்லது கடுமையான சட்டங்களை இயற்றினாலும் சட்ட மீறல்கள் இருக்கும், மேலும் சட்டங்கள் சில பிரிவுகட்குமட்டும் இயற்றப்படுகின்றன. அதை, அச் சில பிரிவினர் விரும்பார். ஆனால் சட்டங்கள் பொதுமக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படும். உதாரணமாக வருமானவரிச் சட்டம், விற்பனை வரிச் சட்டம், சூதாட்டச் சட்டம், மதுவிலக்குச் சட்டம் போன்றவற்றைக் கூறலாம். அதேபோன்று பொதுமக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படும் உணவுக் கலப்படச் சட்டம் (Food Adulteraton Act) வாணிகர்களால் மீறப்பட்டு எல்லா எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். ஆனால் நில உச்ச வரம்புச் சட்டம் (Land Ceiling Act) நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டம் (Urban Ceiling Act), தொழிலாளர் சட்டம் ஆகியவை திறமையாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகளோ முதலாளிகளோ நகர வாசிகளோ இம்மாதிரிச் சட்டங்களை அடிக்கடி மீறுவதில்லை; மீறவும் முடியாது. இதற்குக் காரணம் அரசுக்கும் இவர்களுக்கும் நேரடியான தொடர்புண்டு. ஆனால் உணவுக் கலப்படக் குற்றம். விற்பனை வரி, வருமான வரி மறைத்தல். மீறல் ஆகிய குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்ய வாய்ப்புண்டு. வாணிகர்களின் மனோநிலையும் சட்டத்தை வலியுறுத்தும் செயல்களின் (Agent) ஒழுக்கத்தையும் பொறுத்துக் குற்றங்கள் அதிகரிக்கவோ குறையவோ செய்யும்.

சட்டசபை அங்கத்தினர்களில் தனி நபர் தன்மையைவிட கூட்டுத் தன்மைதான் காணப்படுகிறது. அவர்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்பச் செயற்படாமல் கட்சியின் கொள்கைக்காகக் கட்டுப்பட்டு சட்டத்தை நிறைவேற்றுகின்றார்கள். உண்மையில் சட்டமாக்கப்படும் அச் சட்டங்களை அவர்கள் எதிர்ப்பவர்களாகக்கூட இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் மக்களை அரசுக்கெதிராகக் குழப்பம் செய்யத் தூண்டலாம். அமெரிக்காவின் சட்டசபை அங்கத்தினர்கள்மீது மக்கள் வெறுப்பும், ஏளனமும், ஐயுறவும் கொண்டுள்ளதாகவும், கடந்த நான்கு தலைமுறைகளாக அவர்கள் கைக்கூலி வாங்கும் தன்மையுடையவர்களாகவும், ஒழுக்கங் கெட்டவர்களாகவும், தலைமையின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும், அறிவியல் சார்ந்த வழிமுறைகளைச் செயல்படுத்த ஆற்றல் இல்லாதவர்களாயும் இருக்கின்றனர் என்று சதர்லாண்டு என்ற அறிஞர் அறிவிக்கின்றார்.

அதே போன்று சட்டத்தைச் செயற்படுத்தும் துறையினரும் விலங்கியல் (Brutal), கைக்கூலி (Corrupt) ஆகிய தன்மைகளைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் திறமையற்றும் காணப்படுகின்றனர். நீதிமன்றங்கள் மக்களால் மதிக்கப்படுவதில்லை. அவற்றின் தீர்ப்பு மக்களால் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றின் கட்டளைகளுக்கு மக்கள் கீழ்ப்படிவதில்லை. எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் நீதிமன்றத்தில் கன்னக்கோல் வழக்கு (Burglary Case) ஒன்றில் சாட்சி சொல்ல வேண்டிய பெண் ஒருத்தி அந்த நேரத்தில் வெளியில் ஒரு பெரிய பிரமுகருடன் உணவு விடுதி ஒன்றில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தாள் என்று கூறுகின்றார் சதர்லாண்டு.

சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகளும் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்து விடுகின்றார்கள் அல்லது சில நேரங்களில் மட்டும் செயற்படுத்தி மற்ற நேரங்களில் மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு ஆளாக நேரிடுமே என்று பயந்து சட்டத்தைத் தக்க முறையில் பிரயோகிக்க, செயற்படுத்தத் தவறிவிடுகின்றனர். ஆக, சட்டங்களைத் திறமையாகச் செயற்படுத்தாமைக்கு பொதுமக்களும் காரணமாகும் என்று கூறுகின்றார் சதர்லாண்டு. குற்றம் செய்கின்றவர்கள் உடனே சரிகட்டும் (Fix Things) முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். இது பொதுவாக, சட்டத்திற்குக் கீழ்ப்படியும் கூட்டத்தினரிடையே இருக்கிறது. அதாவது சாலைவிதி மீறல், சூதாட்டம், கள்ளக் கடத்தல், மது அருந்துதல் போன்ற சமூகக் குற்றங்களையும் கொலைக் குற்றம், சூறையாடல்

போன்ற பெரிய குற்றங்களையும் புரிந்தவர்கள் பெரும்பாலும் சரிகட்டிவிட்டுத் தப்பிவிடுகின்றனர்கள். இன்று கைதிகளிடைப் பெரும்பாலும் போதிய பணம் இருந்திருந்தால் குற்றத்தைச் சரி கட்டி தண்டனையினின்றும் தப்பியிருக்கலாமே என்ற எண்ணமே மேலோங்கி இருக்கிறது.

மேலும் கைது செய்வது. தண்டனை வழங்குவது ஆகியவை ஏழ்மையின் காரணமாகத்தான் என்றும் நம்புகின்றனர் குற்ற வாளிகள். சட்டமன்றம், நீதிமன்றம், காவல்துறை ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர்கள் குற்றவாளிகள் தாம். அவர்கள் ஒவ்வொரு காவல்துறை அதிகாரி, நீதிபதி ஆகியோரைப்பற்றி குற்ற வாழ்க்கைத் தொழிலர்கள் (Professionl-Criminals) நன்கு அறிந்துகொண்டு எவரெவரை எப்படிச் சரிக் கட்ட வேண்டும் என்பதையும் அறிந்து வைத்திருப்பார்கள். பல நகரங்கள், மாநிலங்கள் ஆளுங் கட்சியின் செல்வாக்கின் கீழ். அல்லது அவர்களின் ஆளுகையில் உள்ளன. அந்த அரசியல் வாதிகள் நாட்டின் நலனுக்காகப் பாடுபடுவதற்கு அரசியல் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு தங்கள் சொந்த வாழ்க்கையின் மேம்பாட்டுக்காக அரசியலையும், அதிகாரத்தையும் பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர். நாட்டில் இயற்றப்பட்ட சட்டங்கள் எத்தனை, என்னென்ன அவை, சமுதாய முன்னேற்றத்துக்கு எந்த வகையில் அவை பயன்படும் என்று கேள்விகேட்டு அதற்கான விரிவான விளக்கங்கள் கூறுவதால் மட்டும் நாடு முன்னேறாது. இயற்றப்பட்ட சட்டங்கள் எந்த அளவுக்கு மக்கள் மத்தியில் செம்மையாகச் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் சட்டத்தின் பயனும், திட்டத்தின் நன்மையும் விளையும். இன்று ஊழல் ஒழிப்புச் சட்டம், பதுக்கல் தடுப்புச் சட்டம், கலப்படம் தடுக்கும் சட்டங்கள் உள்ளன. ஆனால் மேற்கூறிய குற்றங்கள் எண்ணிக்கையில் இன்று மலிந்திருப்பதற்குக் காரணம் அச்சட்டங்களைக் கடுமையாகச் செயற்படுத்தாததால்தானே, அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் அறிவிப்பு ஒன்று 'பரிந்துரை கடிதத்துடன் யாராவது அணுகினால் அவரது மனு தள்ளுபடிச் செய்யப்படும்' என்று கூறுகின்றது. ஆனால் உண்மையில் பரிந்துரை இல்லாமல் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கிறது. ஆகவே சொல்லுக்கும், சட்டத்திற்கும், செயலுக்கும் தொடர்பில்லாதவரை குற்றங்கள் எங்கும் காணப்படும் என்பதுடன் மேன்மேலும் அதிகரித்தும் வரும். ஆகவே நாட்டில் குற்றங்களும். குற்றவொழுக்கங்களும் தடுக்கப் படவேண்டுமானால் சட்டத்தை அமுல்படுத்துவதில் கண்டிப்பும், நேர்மையும் அமைந்த ஆட்சி அமையவேண்டும்.

சிலபல குற்றங்களுக்கும், குற்றவொழுக்கங்களுக்கும் அரசே காரணமாய் அமைகின்றது. அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் செலவுக்கென்றும் வேறு பல காரியங்களுக்கும் பணம் தேவைப்படுகின்றது. அதை அரசிடமிருந்து நேரடியாகப் பெறமுடியாது. பொது மக்களிடமிருந்துதான் நன்கொடையாகவோ, சந்தா தொகையாகவோ திரட்டவேண்டும். ஆலை முதலாளிகளும், மிட்டா மிராசுகளும் கட்சிகளுக்கு நன்கொடை என்ற பெயரால் அள்ளித் தருகின்றார்கள். அதற்காக அவர்கள் வருமான வரி ஏய்ப்பு, விற்பனை வரி ஏய்ப்பு, சரக்குக் கலப்படம், அதிக விலை, அதிக லாபம், மட்டமான சரக்கு, தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியம், பொய்க் கணக்குத் தயாரித்தல் ஆகிய குற்றங்களைச் செய்துவிட்டு கட்சிகளின் பாதுகாப்பால் குற்றத்தினின்றும் தப்பி விடுகின்றார்கள். இதற்கு அரசாங்கமும் மறைமுக ஆதரவு அளிக்கின்றது. எனவே இந்த நிலை நீடிக்கின்ற வரையில் அரசாங்கம் நேர்மையாகச் செயற்படாது. குற்றமற்ற சமூதாயத்தையும் அமைக்க முடியாது.

அடுத்து, ஜனநாயக நாடுகளில் மக்களின் பெருவாரியான வாக்குரிமைகளைப் பெற்றவர்கள்தாம் ஆட்சியில் அமர முடியும். எனவே அரசியல் கட்சிகள் மக்களின் ஆதரவை நாடுகின்றன. பதவிக்கு மீண்டும் வரவேண்டும் என்ற காரணத்தினால் குற்றம் புரியும் கம்பெனி, ஆலை முதலாளிகள் வாணிகர் போன்றோர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுகின்றார்கள். பொது மக்கள் மது அருந்துதல், பரத்தைமை, கலகக் குற்றம் ஆகிய குற்றங்களைச் செய்தாலும் அவர்களின் ஆதரவைக் கருதி நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுகின்றார்கள். இது அந்தந்தப் பகுதிகளின் அரசியல் செல்வாக்கைப் பொறுத்திருக்கும். வங்கிக் கொள்ளையர்களுக்கும் (Bank Robbers) கட்சிகளுக்கும் நிரம்ப தொடர்பு இருப்பதாக அறிய முடிகிறது. மத்திய பிரதேசத்தில் கூட்டுக் கொள்ளையர்களுக்கும் (Dacoits) கட்சிகளுக்கும் தொடர்பிருந்ததாக அறியப்படுகின்றது. அதேபோல சுகாதார விதிகளைக் கடைபிடிக்காத உணவு விடுதிகள், ஆலைகள், திரையரங்குகள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலும் அரசியல் செல்வாக்கைக் கொண்டு சரிகட்டி விடுகின்றார்கள். அமெரிக்காவில் பொது நிறுவனங்களின் கட்டிடப் பணிக்காக ஏலம் விடுவதில் ஊழல் நடக்கிறது. அதாவது, ஒவ்வொரு பொதுப்பணித் துறை கட்டிடங்கள், சாலைகள் போடுதல், பழுதுபார்த்தல், அரசுக்காக வாங்கும், விற்கும் பொருள்களிலும், ஊழல் மூலமாக சிலருக்குப் பணம் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கும். அரசியலில் முக்கிய பதவி

வகித்த ஒருவர் பெரும் பணக்காரராகிவிடுகிருர். தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களுடன் (Contractors) அரசு அதிகாரிகள் வஞ்சகக் கூட்டு (Collusion) சேர்ந்து பொதுக் கருவூலத்திலிருந்து கொள்ளையடிக்கின்றனர் என்கிருர் சதர்லாண்ட் (Southerland). இது இந்தியாவிலும் நிகழ்ந்து வரும் செயலாகும்.

அமெரிக்காவில் அரசியல் ஊழல் (Political Corruption) பல வழிகளில் காணப்படுகின்றன. கவர்னர் உட்பட எல்லாத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், அலுவலகத்திற்கு நியமிக்கும் அதிகாரிகள், ஆகியோர்கள் உட்பட ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினர்களைச் சார்ந்தவர்கள் (Organisation Committee) தான் நியமிக்கப்படுகின்றனர். இந்தக் கட்டுப்பாட்டை அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றுர்கள். மேலும் அரசாங்கச் செயலாளர், மாவட்ட தலைமை அதிகாரி (Collector) மாவட்ட நீதிபதிகள் மற்றும் அரசிதழ்ப் பதிவு அலுவலர்களை (Gazetted Officer) நியமிப்பதிலும் ஆளும் கட்சியின் ஆதரவாளர்கள் அல்லது அங்கத்தினர்கள் நியமிக்கப்படுவதாக சதர்லாண்டு (Southerland) கூறுகிருர். இதனுல் அலுவலக அதிகாரிகளின் செயல்களைக் கட்டுப்படுத்தவும், தங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்ளவும், மற்றும் குழுவின் ஆதரவாளர்கள் குற்றம் புரிந்தால் அவர்களுக்குக் குற்ற விலக்களிப்பு (Privilege) அளிக்கவும் ஏதுவாக இருக்கின்றன. மேலும் வங்கிகள், கூட்டமைப்புகள். ஈட்டுறுதி அமைப்புகள் ஆகிய நிறுவனங்களையும் தமக்குள் வைத்துக் கொள்கிருர்கள். இதனுல் அவற்றைக் கட்டுப்படுத்தவும், மானியம் வழங்கும் உரிமை (Patronage System) முறையைப் பயன்படுத்தவும் முடிகின்றது.

தேர்தலில் கள்ள வாக்குரிமையை அளிப்பதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஏதுவாகத் தேர்தல் அதிகாரிகளை நியமித்துக்கொள்கின்ருர்கள். சிகாகோ நகரத்தில் 1933-ல் வாக்குச் சீட்டுகளை மறுமுறை எண்ணியதில் 29 சதம் வாக்குப் பெட்டிகளில் (Ballot Box) கள்ள ஓட்டுகள் இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. சில பகுதிகளில் ஒவ்வொரு வாக்குச் சீட்டுப் பெட்டியிலும் கள்ள வாக்குச் சீட்டுகள் இருப்பது கண்டறியப்பட்டது. 1936-ல் கான்சாஸ் (Kansas) நகரத்தில் தேர்தல் தொடர்பாக 275 தேர்தல் அதிகாரிகளும் மற்றக் கட்சித் தொண்டர்களும், தேர்தல் மோசடிக் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டார்கள். அதே போன்று 1948-ல் அதே நகரத்தில் வாக்கு உரிமைச் சீட்டுகளைத் திருடிய குற்றவாளிகளின் கூட்டம், நீதிமன்றம் கொள்ளாத அளவில் குற்றவாளிகளின் கூட்டம், குழுமியிருந்தது. இவற்றை ஆராய்ந்து நோக்கினுல் நவீன கால அரசியல் தன்மைகளை உணர்ந்து கொள்ளலாம்.

ஊழல் (Corruption) என்ற வார்த்தை இன்று மலிந்து விட்டது. இந்த ஊழல் எப்படி வளர்ந்தது என்று ஆராய்ந்தோ மானுல் ஊழலுக்கு முதற் காரணக் கூறு தேர்தல்தான். இந்தியாவில் ஊழல் எனபது சுதந்திரம் அடைந்த பிறகுதான் ஊழல் தோன்றியது. அதுவும் தேர்தல் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க ஊழல் அதிகரித்து வருகின்றது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் பட்டி தொட்டிகளிளெல்லாம் ஊழல் மலிந்து விட்டது. இன்று மக்கள் எதற்கெடுத்தாலும் கையூட்டைத் (Bribe) தங்களின் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்கின்றன. அரசியல் கட்சிகள் தேர்தலின் போது வாக்குஉரிமைகளைப் பெறுவதற்காக மக்களுக்குப் பணத்தை வாரி வழங்குகின்றன. அதிலும் ஒரு கட்சிக்கு மற்றொரு கட்சி போட்டியிட்டுக் கொண்டு பணத்தைத் தேர்தலுக்காகச் செலவு செய்து வருகின்றன. வெற்றி பெற்ற கட்சி தன் தேர்தல் செலவை மக்களிடத்தில் இருந்தே மறைமுகமாகப் பல வழிகளில் வசூலித்துவிடுகின்றுர்கள். மக்களும் அதிகமான பணம் கொடுப்பவர்களுக்குத்தான் தங்களுடைய வாக்குரிமைச் சீட்டுகளை வழங்கக் கூடிய நிலையில் உள்ளார்கள். இன்று பணம் வாங்காமல் வாக்குரிமைச்சீட்டு வழங்கும் மக்களைக் காண்பது அரிது. கடந்த தேர்தல்களே இதற்குச் சான்றுகும். சாதாரண கிராம பஞ்சாயத்து தேர்தல் முதல் சட்ட மன்ற, நாடாளுமன்றத் தேர்தல் வரையில் இதே நிலை காணப்படுகின்றது. அளவுக்கு மிஞ்சிய செலவு செய்துவிடுகின்ற தொகையை அதை ஈடுகட்ட தீய வழிகளில் பொருளைச் சேர்க்க முற்படுகின்றனர். அதற்குப் பொதுமக்கள் பலியாகின்றனர்.

ஆகவே, ஊழலை ஒழிக்க, கையூட்டைத் தடுக்க, தேர்தல் முறை, மாற்றியமைக்கப்படவேண்டும் அல்லது தேர்தல் தொடர்பான சட்ட விதிகளைக் கடுமையாகச் செயற்படுத்த வேண்டும். பொதுமக்களும் இதில் அக்கறை காட்ட வேண்டும். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் தாங்களே பதவியில் நீடிக்க வேண்டுமென்ற கொள்கையை விட்டுவிடவேண்டும். அப்படி விட்டுவிட்டால் தேர்தலில் கடும் போட்டி இராது. ஊழலுக்கு அதிக வாய்ப்பிருக்காது. மக்களும் பணத்தையோ பொருளையோ எதிர்பார்க்காமல் தகுதியின் அடிப்படையில் தங்கள் வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்த வேண்டும். அந்நிலை ஏற்படுமேயானுல் ஊழல், கையூட்டு ஆகியவை நாட்டை விட்டு மறைந்து விடும் என்பதில் ஐயமில்லை. இன்றைய தேர்தல் முறைக்கும், குற்ற ஒழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குற்றங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அரசே கள்ள

வாக்குச்சீட்டு போட மறைமுக ஆதரவு அளித்து வந்தால் குற்றத்தை எப்படித் தடுக்க முடியும்.

குற்றமும் சமயமும் (Crime in Relation to Religion)

குற்றத்திற்கும், மதத்திற்கும் அல்லது சமயத்திற்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்து மதத்தினுல் குற்றத்திற்கான காரணக் கூறுகளை ஆராய்வோம்.

பொதுவாக, எல்லா நாடுகளிலும் மதம்தான் நன்னெறியைப் புகட்டி வருகின்றது. எம்மதமாக இருந்தாலும் மக்களுக்கும் மதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாகக் கடவுள் வழிபாடு, தன்னம்பிக்கை உள்ளவர்கள் மதக்கோட்பாடுகளை உயர்ந்தவையாக மதிக்கின்றார்கள். மத நம்பிக்கை அற்றவர்கள் சிலர்தாம் நாகரிகம் வளராத காலங்களிலும் மதக்கோட்பாடுகளை மீறுவது குற்றமாகக் கருதப்பட்டு வந்தன. அநாகரிகமாக வாழ்ந்த மனிதனை நாகரிகமாக வாழ உதவியதும் மதமாகும். வாழ்க்கை முறைக்கு வரையறை அளித்தது மதம் தான், சட்டத்திற்கு வரையறை அளித்ததும் மதம்தான். பெரும்பாலான நாடுகளில் அந்தந்த நாட்டிலுள்ள அந்தந்த மதங்களின் கோட்பாடுகள்தாம் சட்டமாகச் செயற்பட்டு வந்தது. குறிப்பாக முகமதியருடைய வேத நூலாகிய குரான் முகமதியர்களுக்குச் சட்ட நூலாக விளங்கியது. இந்துக்களுக்கு மனுநீதி நூல் சட்டமாக விளங்கியது. நல்லொழுக்கத்துக்கு வரையறை அளித்ததும் மதம்தான், தீய ஒழுக்கத்திற்கு வரையறை அளித்துத் தீய ஒழுக்கம், தீய செயல் ஆகியவற்றைத் தடுக்க முற்பட்டதும் மதம்தான். காலச் சுழற்சியால் மதத்திலிருந்து சிறந்த கோட்பாடுகளைச் சமுதாயத்திற்கு ஏற்றவையாக அமைத்து அவற்றைப் பின்பற்றி வந்தது. அந்தக் கோட்பாடுகளை மீறுகின்றவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. இவ் அடிப்படையில்தான் குற்றச் சட்டம் தோன்றுவதற்கு ஏதுவாயிற்று, எடுத்துக்காட்டாக கொலை செய்தல், வன்புணர்ச்சி, திருடுதல், பொய் பேசுதல், ஏமாற்றுதல், வஞ்சகமாக ஏமாற்றி மோசடி செய்தல், பிறன்மனை புணர்தல், ஆள் கடத்துதல், கருச் சிதைத்தல், அரசுக்கு எதிராகச் செயற்படுதல், தீயிடுதல், ஆகிய செயல்களைக் குற்றம் என்று மதம் வரையறுத்து அதைக் கட்டுப்படுத்தி வந்தது. அதே செயல்களைச் சட்டம் குற்றமென்று கூறுகின்றது. அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்கின்றது. மதத்திற்கெதிரான செயல்களில் ஈடுபட்டால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அக்கால மக்கள் தண்டனையை விட அறத்திற்குக் கட்டுப்பட்டுக் குற்றங்களைப் புரியாமல் இருந்து வந்தார்கள்.

மதத்தில் தகுந்த பயிற்சி இன்மையால்தான் குற்றங்கள் அதிகம் நிகழுவதற்குப் பல்வேறு காரணக் கூறுகளில் ஒன்ருகத் திகழ் கிறது. அறத்திற்குக் கட்டுப்பட்டவன் குற்றச் செயல் புரிய அஞ்சுவான். இதையேதான் வள்ளுவர்,

> "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்"

என்றும்,

> "குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
> அற்றம் தரூஉம் பகை."

என்றும் கூறுகிருர். ஒருவன் அறத்திற்கு அஞ்சாதவன் தண்டனைக் காக அஞ்சி குற்றம் செய்யாமல் இருக்கமாட்டான். ஆகவே குற்ற ஒழுக்கம், குற்றச் செயல் அதிகரிப்பதற்கு தீய ஒழுக்கமே காரணமாகும். பிறன்மனை புணராதே, பிறர் பொருளைக் களவாட எண்ணுதே என்றும், கூடா ஒழுக்கம், வாய்மை, வெஃகுளாமை, வெஃகாமை, கள்ளுண்ணுமை, புறங்கூருமை, பகைமாட்சி, பகைத் திறன் தெரிதல், தீ நடப்பு, சூது ஆகிய அதிகாரங்களில் குற்ற ஒழுக்கங்களைப் பற்றியும், குற்றச் செயல்களைப் பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார் வள்ளுவர்.

நீதி நூல்களை வாழ்க்கையின் இலட்சியங்களாக, வழிகாட்டி களாக ஏற்றுக்கொண்டிருந்த காரணத்திஞல், தமிழகத்தில் குற்றங்கள் இல்லாமல் இருந்த காரணத்திஞல், குற்றச் சட்டம் தேவையற்றதாக இருந்தது. பிற்காலத்தில் வடவர் ஆதிக்கம் தமிழகத்தில் தலைதூக்கியபோது மனுநீதிச் சட்டம் செயற்படுத் தப்பட்டு வந்தது. தமிழக மக்கள் மட்டும் அறம் வழுவாது வாழ வில்லை. அரசனும் அறத்தின்படி கோலோச்சி வாழ்ந்தான். நீதி தவறியபோது அவன் முடி மட்டும் சாயவில்லை. அவன் உயிரும் பிரிந்து, நீதியை நிலைநாட்டிய வரலாற்றைச் சிலம்பு செப்புகின்றது. மக்களுக்கு அறத்தைக் கற்பித்து வந்த மதம் மக்களிடையே பகைமையையும், பூசல்களையும் உண்டாக்குவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. இந்து மதத்திற்கும், முகம்மதிய மதத்திற்கும் உண்டான பகைமையை வரலாறு கூறுகின்றது. அதேபோன்று ஒரு மதத்திற்கும் மற்ருெரு மதத்திற்கும் பகைமை இருந்து வந்தது. இந்தியா இரண்டாகப் பிரிவதற்கும் மதம்தான் அடிப் படைக் காரணமாகும்.

மதத்தின் அடிப்படையில் எத்தனையோ போர்கள் மூண்டன. ஔரங்கசீப்பின் மதவெறியினால் எத்தனை இந்துக் கோவில்கள் தரைமட்டமாயின என்பதைப் பற்றி வரலாறு கூறுகின்றது. ஒரே மதத்திலுங்கூட சைவம், வைணவம், வடகலை, தென்கலை என்ற வேறுபாடு. அதற்காகப் பெரும்பகை, பூசல், சண்டை, வழக்கு, வாதம் ஆகியவை ஏதுவாகின்றன, இந்த 20ஆம் நூற்றாண்டிலும் வைணவ சமயத்திலேயே வடகலை, தென்கலை என்ற பாகுபாட்டிற்கே உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் பழைய காலத்தின் மதவெறியைப்பற்றியும் அதனால் அது குற்ற ஒழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும், ஏதுவாக இருந்தது என்று கூறினால் அது தவறாகாது.

மட ஆலயத்தில் பணிபுரிபவர்களும் நேர்மையாக நடப்பதில்லை, பக்தி என்ற போர்வையில், தீய ஒழுக்கத்தையும், தீய செயலையும் மறைத்துக்கொண்டு வருகிறார்கள். மேலும் மட ஆலயத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள்கூட இதற்கு விதிவிலக்கன்று, கிறித்தவ மட ஆலயத்தில் கிறித்தவ மதத் தொடர்பான நூல்களைப் பயிலும் 915 மாணவிகளை ஆராய்ந்து அறிந்ததில் வாழ்க்கைக்கு வேண்டிய நல்லொழுக்கம், நற்செயல் ஆகியவை பற்றி தெளிந்த, திறமையான பயிற்சி அம் மாணவிகளுக்கு அளிக்கப்படவில்லை என அறிய முடிகின்றது என்று சதர்லாண்டு (Southerland) அறிவிக்கின்றார். அதே போன்று குவரசியஸ் (Kararaceus) என்பவர் 761 இளம் குற்றக் குழந்தைகளில் (Delinquent Children) 91 சதம் மாதாகோவிலுடன் தொடர்புகொண்டு இருந்தார்கள், அதில் 54 சதம் தினமும் ஒழுங்காக, கோவிலுக்குச் சென்று வந்துள்ளார்கள். 20 சதம் குழந்தைகள் எப்போதாவது மாதாகோவிலுக்குப் போனவர்கள். மற்ற 2 சதம் மாதாகோவிலுக்குச் அணுகாதவர்கள். வாட்டன்பர்க் (Watternberg) என்பவர் 2137 ஆண் குற்றவாளிகளை அல்லது கடமையை மறந்தவர்களை ஆராய்ந்ததில் 69 சதம் ஒழுங்காக மாதாகோவில் செல்பவர்கள் அல்லது எப்பொழுதாவது செல்லக் கூடியவர்கள். மறுமுறை குற்றவாளிகள் (இரண்டாம்முறை, மூன்றாம்முறை) குற்றம் புரிந்தவர்கள் (Recidivists) 65 சதம் ஒழுங்காக மாதகோவிலுக்குச் சென்றவர்வர்கள் அல்லது எப்போதாவது சென்றவர்கள். ஆனால் முதல் முறைக் குற்றவாளிகள் 71 சதம் மாதாகோவில் போகாதவர்கள். குலுக்ஸ் (Glucks) என்பவர் குற்றவாளிகளை ஆராய்ந்ததில் 39 சதம் ஒழுங்காக மாதாகோவில் சென்றவர்கள். 54 சதம் எப்போதாவது சென்றவர்கள். 7 சதம் மாதாகோவில் செல்லாதவர்கள். அடுத்து, குற்றம் புரியாத கட்டுப்பாட்டுக் குழுவில் உள்ளவர்களில் (Nondeliquents) 67 சதம் தினமும் முறையாக மாதா

கோவில் செல்வர்கள். 29 சதம் எப்பொழுதாவது செல்பவர்கள். 4 சதம் கோவிலுக்குச் செல்லாதவர்கள். தனியார் நிறுவனத்தில் உள்ள 162 இள நங்கை குற்றவாளிகளை ஆராய்ந்ததில் 76 சதம் மாதா கோவிலுடன் தொடர்பு உடையவர்கள். ஆனால் 2 சதம் மட்டும் ஒழுங்காக மாதா கோவில் செல்பவர்கள். மேற் கூறப்பட்ட ஆராய்ச்சி அறிக்கையில் குற்றவாளிகள் மாதா கோவிலுக்குச் செல்வதையும், செல்லாமல் இருப்பதையும் கூறுகின்றனரே தவிர, மாதா கோவில் போவதற்கும் போகாமல் இருப்பதற்கும் குற்ற ஒழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றி விளக்கவில்லை. ஒழுங்காகக் கோவிலுக்குச் செல்லும் குழந்தைகளின் சதவிகிதம் அதிகமாக இருந்தாலும் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர்கள். இதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி விளக்கவில்லை. ஆனால் மேற்கூறிய அறிக்கையில் இருந்து மதத்தைப் போதிப்பவர்கள் ஒழுங்கற்றவர்கள், திறமையற்றவர்கள், சிறந்த பயிற்சி இல்லாதவர்கள் என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. ஆகையினால்தான் பச்சிளங் குழந்தைகளை ஒழுக்க சீலர்களாக மாற்ற முடியவில்லை.

குழந்தைகள் போலவே வயது வந்த குற்றவாளிகளின் நிலைமையும் காணப்படுகிறது என்பதை பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம். கத்தோலிக்க பாதிரியார் இருவர் 45 சிறைச்சாலைகளை ஆராய்ந்து அறிந்ததில் வயது அடைந்த குற்றவாளிகளில் 87 சதம் கைதிகள் ஏதாவதொரு மதத்தில் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என அறியப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள மொத்தத் தொகையில் 40 சதம் மக்கள்தான் கோவிலுக்குப் போகிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது. அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாதிரியாரின் அறிக்கை நம்பக்கூடியதாக இல்லை. ஜனங்கள் கோவிலுக்குப் போகாமலேயே போவதாகப் பொய்யாகக் கூறியிருக்கலாம். மேலும் கைதிகள் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுதலை செய்யும் முறையில் (Parole) விடுதலை பெறுவதற்கான நல்லொழுக்கம் உள்ளவர்களாக, நாணயம் உள்ளவர்களாக வெளியில் காட்டிக்கொள்வார்கள். அதற்காகத் தாங்கள் தினமும் ஒழுங்காகக் கோவிலுக்குப் போவதாகக் கூறுவார்கள். அதே நேரத்தில் வேலை செய்யாமல் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்த நேரத்தில் கோவிலுக்குப் போய் வருவதாகக் கூறி கோயிலுக்குப் போய்விடுவார்கள். அவர்களின் மதப்பற்று, கடவுள் பக்தி ஆகியவை உண்மையானவையா என்பது ஐயம் தான். சிறை அதிகாரிகளையும், மற்றவர்களையும் நம்பவைப்பதற்காக அவர்கள் தினமும் கோவிலுக்குப் போகிறார்கள் என்று நம்ப இடமுண்டு.

மேலும் மதக் கருத்துகள் சில, நீதிக்கு, பண்பாட்டிற்கு ஒவ்வாத கருத்துகள் கூறப்பட்டிருப்பதாலும் அவற்றையே மற்றவர்களும் பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்துவதனுலும், குற்ற ஒழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும் ஏதுவாக அமைகின்றது. தமிழ்நாட்டில் தந்தை பெரியார் மூடநம்பிக்கையை அகற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக விநாயகர் சிலையை உடைத்தார் (Iconoclast). அவர் சிலையை உடைத்ததற்குக் காரணம் விநாயகர் பிறப்பு பற்றிய இழிவான கருத்து கூறப்பட்டுள்ளதே யாகும். பகுத்தறிவாளர்கள் (Rationalist) நீதிக்கும் ஒழுக்கத்திற்கும் புறம்பான கருத்துகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது அல்லது மற்றவர்களை ஏற்றுக் கொள்ளாமல் தடுக்கும்போது மதம் குற்ற ஒழுக்கத்திற்கும், குற்றச் செயலுக்கும், காரணமாக விளங்குகின்றது. இன்றைய நிலையில் மதம் குற்றத்திற்கோ குற்ற ஒழுக்கத்திற்கோ முக்கிய காரணமாக இருக்க வாய்ப்பில்லை. இன்று மக்களிடையே மத நம்பிக்கை அற்று வருகின்றது. மதமின்றியே மக்கள் நன்னெறியில் வாழ முடியும் என்றநிலை உருவாகி வருகின்றது. ஆனல் சில போலிச் சாமியார்கள் மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் பல நரபலிகள் வழங்குவதற்கு ஆதரவாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் கற்பழித்தல், கொலை செய்தல், நிர்வாணமாக ஊர்வலம் செல்லுதல் (வட இந்தியாவில்) ஆகிய குற்றங்களைச் செய்யத் தவறுவதில்லை. பகுத்தறிவுச் செயற்படும் காலத்திலும் குற்ற ஒழுக்கம் உள்ள, குற்றம் புரிகின்ற போலிச் சாமியார்களுக்கு மக்கள் ஆதரவு அளித்துவருவது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதனல் குற்றவொழுக்கம், குற்றச் செயல் மேலும் பரவுவதற்கு ஏதுவாகின்றது. இந்தியா மதமற்ற நாடாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் மதத்தின் அடிப்படையில் உரிமைகள், சலுகைகள், வழங்கப்பட்டுள்ளன. இருதுணை மணம் (Bigamy) குற்றச் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. முகமதியர்கள் நீங்கலாக மற்ற மதத்தினர்களைக் கட்டுப்படுத்துகிறது. முகமதியர்களின் மதத்தின் கொள்கைப்படி ஒரு முகமதியர் நான்கு மனைவிகள் வரையில் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கிறது. அது நடைமுறையிலும் அவர்கள் நான்கு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கு இந்திய குற்றச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந் நாட்டு மன்னர், சட்டத்தின் முன் அனைவரும் சமம்! என்றெல்லாம் முழங்கினுலும் இந்திய அரசாங்கம், ஒரு தனிப்பட்ட மதத்தினருக்குத் தனிச் சலுகை அளித்துள்ளது. சட்டத்திற்கு முரண்பாடாக இருப்பதுடன் சமுதாயத்திற்கு, அறத்திற்கு மாறுபட்டும் காணப்படுகின்றது.

ஆகவே இந்திய அரசாங்கம் இக் குறைபாடுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளுதல்வேண்டும். இந்த அநீதி சமுதாயத்திலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

மதத்தில் உள்ள குறைபாடுகள் களைந்து எறியப்படவேண்டும். பிறகு மதம் நல்லொழுக்கத்திற்கு உதவியாக இருக்கும். இப்பொழுது இருக்கின்ற பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துகள் குற்ற ஒழுக்கத்திற்கு ஆதரவாக அமைந்திருக்கின்றன. இதனால் குற்றங்கள் தொடர்ந்து நடக்க ஏதுவாகின்றன.

கல்வி நிறுவனங்கள் (The Educational Institution)

கல்வி நிறுவனங்கள்தாம் இளைஞர்களை உருவாக்கும் உலைக் களம் இளைஞர்களின் பாசறை. பண்பின் பிறப்பிடம். ஆகவே கல்வி நிலையங்களின் தகுதி, திறமை, கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பொறுத்து மாணவர்களின் ஒழுக்கம், தகுதி, திறமை ஆகியவை அமையும். குறிப்பாக இளம் குழந்தைகளை உருவாக்கும் தொடக்கநிலைக் கல்வி நிலையம். உயர்நிலை பள்ளி ஆகியவற்றின் பொறுப்பு மிகுதியாகும். கல்லூரிகளின் பொறுப்பு சற்றுக் குறைந்திருக்கும்.

ஆசிரியர்களின் நல்லொழுக்கத்திற்கும் மாணவர்களின் நல்லொழுக்கத்திற்கும் நிறைய தொடர்பு உண்டு. குடும்பம். கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் தரத்தைப் பொறுத்துக் குழந்தைகளின் ஒழுக்கம் அமைகிறது. ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு இணையான பொறுப்பு உள்ளவர்கள். ஆகவே ஆசிரியர்கள், குழந்தைகளுக்கு ஒழுக்கம், கல்வி, கட்டுப்பாடு. நன்னடத்தை ஆகியவற்றைப் போதிக்கும் ஆசிரியர்கள், தங்கள் வாழ்க்கையிலும் நல்லொழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் விளங்கவேண்டுவது இன்றியமையாததாகும்.

மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் வளரும் குழந்தைகள், கல்வி பயிலும் குழந்தைகள், நல்லொழுக்கம், கட்டுப்பாடு, ஆகியவற்றுடன் சிறந்த முறையில் உயர்ந்த கல்வியுடன் விளங்குகின்றார்கள். இளைஞர்களுக்கு நேர்மையையும், நல்லொழுக்கத்தையும் ஒற்றுமையையும் பாசத்தையும் புகட்டுவதுடன் அவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துதல் வேண்டும். குறைந்த கல்வி, பள்ளியில் தோல்வி அல்லது படிக்கும் வாய்ப்பு இல்லாமை, ஆகிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளும் மோசமான குடும்பங்களில் வளரும் குழந்தைகளின் நிலைமையும்

ஒன்றாகும். தரமற்ற பள்ளியில் பயிலும் மாணவனும், தரமற்ற குடும்பத்தில் வளரும் குழந்தையின் நிலையும் ஒன்றாகும். கல்வி அறிவு இல்லாத காரணத்தினால்தான் குற்றங்கள் அதிகமாகப் புரியப்படுகின்றன என்று குற்றப் புள்ளி விவர அறிக்கை அறிவிக்கின்றது. கல்வி ஒருவனுடைய அறியாமையைப் போக்குவதுடன் குற்ற ஒழுக்கத்தை, குற்றச் செயலைத் தடுக்கவும் பயன்படுகிறது. மேலும் சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டுச் சட்டத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்கவும் செயல்படவும் துணை செய்கின்றது.

கற்றறிந்தார்களிடத்தில் காணப்படும் குற்ற ஒழுக்கத்திற்கும் கல்லாதவர்களிடத்தில் காணப்படும் குற்ற ஒழுக்கத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டு. இரு சாராரிடத்திலும் குற்ற ஒழுக்கம் பொதுவாக அமைந்திருந்தாலும் குற்றங்களின் தன்மை வேறுபடுகிறது. கல்லாதவர்களின் குற்றங்கள் பெரும்பாலும் நபருக்கு எதிரான குற்றங்களைப் புரிவார்கள் (Offence against the person). கற்றவர்கள் பெரும்பாலும் சொத்திற்கு எதிரான குற்றச் செயல்களைப் புரிவார்கள் (Offences against the property). முன்னதைப் புரிவதற்கு உடல் வலிமையும் முரட்டுக் குணமும் அசட்டுத் துணிவும் தேவைப்படுகின்றன. பின்னதைப் புரிவதற்கு குற்ற உத்தி, துணிவு இரண்டும் இருந்தால் போதும். ஆனால் இரண்டும் சமுதாயத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் என்பதில் ஐயமில்லை. குடும்பச் சூழ்நிலை, சுற்றுச் சூழ்நிலைகள், குற்றவாளியின் மனப்பான்மை ஆகியவற்றைப் பொறுத்துக் குற்றங்கள் புரியப்படுகின்றன. பள்ளியில் பயிலும்போது மற்ற மாணவர்களுடன் இணைந்து நட்பாகப் பழகுவதில் இருந்தும் ஒருவனுக்கு ஒழுக்கம் படிகிறது. அதாவது அவன் நல்லொழுக்கம் உள்ளவனுடன் நட்பாக இணைந்து பழகினால் நல்லொழுக்கத்தையும், குற்ற ஒழுக்கம் உள்ளவனிடம் பழகினால் குற்ற ஒழுக்கத்தையும் பெறுகிறான். இதனால் பிற்காலத்தில் நல்லொழுக்கம் உள்ளவன் நல்லவனாகவும், தீய, குற்ற ஒழுக்கம் உள்ளவன் குற்றவாளியாகவும் மாறிவிடுகிறான். இதற்குப் பள்ளியின் சூழ்நிலைகள், பயிலும் மாணவர்களின் ஒழுக்கங்கள், மாணவர்களின் விடுதி அல்லது மாணவர்கள் தங்கும் இடங்களின் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்து மாணவர்களின் ஒழுக்கம் அமைகிறது.

மாணவர்களில் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் ஒழுக்கத் தன்மையில் நிறைய வேறுபாடு உண்டு. இல்லங்களில் இருந்து கொண்டே கல்வி பயிலும் மாணவர்களுக்கு மற்ற மாணவர்களின் ஒழுக்கம் பரவுவதற்கு அதிக வாய்ப்பில்லை. அவர்களின் குடும்பச்

சூழ்நிலைகளைப் பொறுத்து ஒழுக்கம் அமைந்திருக்கும். ஆனால் மாணவர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் ஒன்றாகவே இணைந்து செல்லுதல், உணவு அருந்துதல், விளையாடுதல், உலாவச் செல்லுதல், உறங்குதல் ஆகிய செயல்களில் ஒவ்வொரு பிரிவாகச் (Batch) செயல்படுவதனால் அந்தக் குழுவின் ஒழுக்கம், பண்பு. ஆகியவை அந்தக் குழுவைச் சார்ந்த அனைவருக்கும் படிந்துவிடுகிறது. பொதுவாக (ஆண் பெண் உடலுறவு) பால் உணர்ச்சி தூண்டக் கூடிய புத்தகங்கள், படங்கள் ஆகியவற்றைப் படிப்பதனாலும், பார்ப்பதனாலும் இளம் வயதிலேயே பால் உணர்ச்சியின் வேகம் அதிகரித்துவிடுகிறது. அதன் காரணமாக தன்னொத்த பால் இனத்தார் மாட்டே உடலுறவு விருப்பமுடைய தன்மை (Homosexuality) உண்டாகிவிடுகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் சில மாணவர்களுக்கு ஒரே இனப் பால் உணர்ச்சி ஆர்வமுள்ள குற்ற ஒழுக்கம் பரவி விடுவதனால் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். அதே போன்று சூதாடுதல், மது அருந்துதல், பரத்தையரை நாடிச் செல்லுதல், கஞ்சா புகைத்தல், மயக்க மாத்திரை (L. S. D.) பாங்கு (Bhang) ஆகிய மயக்கப் பொருள்களை உட்கொள்ளுதலில் குழு குழுவாகச் செயல்படுகின்றார்கள். மாணவர்கள் இணைந்து செயல்படும்போது தைரியம் இல்லாத, பழக்கம் இல்லாத, விருப்பம் இல்லாத மாணவர்களுக்கும் மற்றவர்கள் ஊக்குவிப்பதனால், நல்லொழுக்கம் உள்ள மாணவர்களும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இதற்காகப் பண வசதியற்ற மாணவ நண்பர்களுக்கும் அவர்களின் நண்பர்கள் பண உதவி செய்து குற்றச் செயலில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். மேற் கூறிய குற்றச் செயல்கள் சென்னை. பம்பாய், கல்கத்தா, டெல்லி, கோவை, மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் உள்ள மாணவர்கள் விடுதியில் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் சில ஆண்டுகளில் சில மாணவர் விடுதியில் அதிகரித்தும் மற்ற ஆண்டுகளில் சில விடுதிகளில் குறைந்தும் காணப்படுகின்றன. குற்றங்கள் அந்தந்தக் காலத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிவிடுகின்றன.

இல்லத்தில் நல்ல சூழ்நிலையில் இல்லாத மாணவனுக்குக் கல்வி நிலையங்களில் நல்ல சூழ்நிலை அமையும்போது அவன் நல்லொழுக்கம் உடையவனாக விளங்குவதற்கு ஆதரவாகிறது. இல்லத்தில் நல்ல கட்டுப்பாடும், நல்ல சூழ்நிலையும் இருக்கும் மாணவனுக்குக் கல்வி நிலையங்களில் குற்றச் சூழ்நிலைகள் அமைந்திருக்குமேயானால், அவன் நல்லொழுக்கம் உள்ளவனாக விளங்குவதைவிட, தீயொழுக்கம் உள்ளவனாக மாறுவதற்கே வாய்ப்புண்டு. ஆதாவது கட்டுப்பாட்டில் வளர்ந்தாலும் கட்டுப்பாடற்ற கல்வி நிலையங்களில்

பயிலும்போது, நண்பர்கள் தீயொழுக்கம் உள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தினால் தனக்குப் பிடிக்காத செயலாக இருப்பினும் நண்பர்களின் விருப்பத்திற்காக, மகிழ்ச்சிக்காகச் சூதாட்டம், மது முதலிய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இப் பழக்கம் நாளடைவில் வெறியாக மாறிவிடுகிறது. இதனால் கல்வி முடித்த பிறகும் வாழ்க்கையில் அதே பழக்கத்துடன் வாழ்க்கை தொடங்குகிறது. குற்ற ஒழுக்கம், குற்றச் செயல் ஆகியவை என்னவென்று அறியாமல் கள்ளங்கபடற்ற மாணவனாகக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்தவன் கல்லூரியை விட்டுப்போகும்போது சூதாட்டம், மது, மாது, மயக்க மருந்து, பால் உணர்ச்சி ஆகியவற்றைப்பற்றித் தெளிவாக அறிந்தவனாக வெளியேறுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடுகின்றது. இதற்குச் சூழ்நிலை மட்டும் காரணமல்ல. அவர்களின் வயது அதிகரிப்பதும் ஒரு காரணமாகும்.

நல்லொழுக்கத்தையும், உயர்ந்த கல்வி முறையான கட்டுப்பாட்டையும் அளிக்க வேண்டிய கல்வி நிலையங்களில் குற்ற ஒழுக்கத்தையும் குற்றச் செயல், கட்டுப்பாடற்ற தன்மையும் அளிக்கப்பட்டு வருவதாக எண்ணத் தோன்றுகிறது. ஆகவே மேற்கூறிய குற்றங்களைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் அவசியம். இன்று மாணவர்களைக் கட்டுப்படுத்தாவிட்டால், சீர்திருத்தாவிட்டால் நாளைய திருடர்களாகவும், கொள்ளையர்களாகவும், கொலைகாரர்களாகவும், மாறிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய குற்றப் புள்ளி விகிதங்களின்படி கல்வி கற்றவர்களிடையே குற்ற விகிதங்கள் குறைந்து காணப்படுகின்றன. இந்தியாவில் பட்டதாரிக் குற்றவாளிகள் மிகக் குறைவு. சாதாரண எழுதப் படிக்கப் தெரிந்தவர்களின் குற்ற விகிதங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவில் 1931-ல் மெக்கோர்மிக் (Maccormick) என்பவர் கைதிகளை ஆராய்ந்ததில் மொத்த கைதிகளில் 17 சதம் செய்தித் தாள்களைப் படிக்க முடியாதவர்கள் அல்லது கடிதம் எழுதத் தெரியாதவர்கள். அதே நேரத்தில் 1951-ல் மொத்த கைதிகளில் 10 முதல் 30 சதம் வரையில் கல்வி அறிவு அற்றவர்கள். இந்த அறிக்கை நாட்டின் மொத்த சிறைச் சாலைகளில் இருந்து ஆராய்ந்ததாகும். டெக்ஸாஸ் (Texas) சிறைச் சாலையில் 17 வயதிற்கு மேற்பட்ட 4000 கைதிகளில் 5 சதம் முதல் வகுப்பை (First Grade) முடிக்காதவர்கள். 44 சதம் எட்டாவது வகுப்பை முடிக்காதவர்கள். 89 சதம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காதவர்கள் 99+ சதம் கல்லூரிப் படிப்பை முடிக்காதவர்கள். அதேபோன்று 1955-ல் நியூஜெர்ஸி (New

Jersey) சிறைச்சாலையில் அதே மாதிரியாக 3·6 சதம், 41 சதம் 91 சதம், 99+, என்ற முறையில் குற்றவாளிகள் அமைந்துள்ளனர். இளங் குற்றவாளிகளில் பெரும்பாலோர் இள உயர் நிலைப் பள்ளிப் படிப்பை (Junior High School) முடிக்காதவர்கள் என்று மற்ெருரு அறிக்கை அறிவிக்கின்றது. அமெரிக்காவில் 1940-ல் ஆண்களின் மொத்த எண்ணிக்கையில் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் 3·9 சதம் முதல் கிரேடு முடிக்காதவர்கள் 35·3 சதம் 7 அல்லது 8-வது வகுப்பை முடித்தவர்கள். 12 சதம் உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள். 5·4 சதம் கல்லூரிப் படிப்பை முடித்தவர்கள். ஆனால் அதே நேரத்தில் அதே ஆண்டில் அதே அளவு கைதிகளின் கல்வி அறிவு விகிதங்கள் பின்வருமாறு: 7·5 சதம் முதல் கிரேடை முடிக்காதவர்கள் 29·9 சதம் 7 அல்லது 8-வது வகுப்பை முடிக்காதவர்கள். 5·6 சதம் உயர்நிலை வகுப்பை முடித்தவர்கள். 0·9 சதம் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள் என்ற விவரத்தை ஜோஸப் டி. லாக்மேன் (Joseph D. Lohman) என்பவரின் அறிக்கையில் இருந்து காணமுடிகிறது, இதை ஆராயும்போது கல்வியின் விகிதங்களுக்கு ஏற்ப குற்றவாளிகளின் விகிதங்களும் அமைந்திருக்கின்றன என்பதை உணரலாம்.

குற்றப் பகுதியில் வீடுகள் அமைந்திருந்தால் குற்ற விகிதங்கள் அதிகமாக உள்ளது போன்று, கல்வி நிலையங்கள் குற்றப் பகுதியில் அமைந்திருந்தால் அங்கே பயிலும் மாணவரிடையே அதிகமான குற்ற எண்ணிக்கை விகிதங்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாகிறது. சமுதாயத்தின் நன்மதிப்பை இழந்துவிட்ட பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் ஒழுக்கங்கள் ஐயத்திற்கு உரியனவாக விளங்கும். அந்த நிறுவனத்தில் பயிலுகின்ற மாணவர்களைத் தீயொழுக்கம் உள்ளவர்களாகவே கருதுகின்றனர்கள். அந்த எண்ணம் மாணவர்களை மேலும் குற்ற ஒழுக்கத்தில் ஈடுபடுத்தி விடுகின்றது. சில பள்ளிகள், கல்லூரிகள், சமுதாயத்தில் நன்மதிப்பைந் பெற்றிருக்கின்றன. அவற்றில் பயிலும் மாணவர்களின் ஒழுக்கமும் உயர்வாகக் கருதப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் பயிலும் மாணவர்களின் ஒழுக்கம் மேலும் சிறந்து நல்லொழுக்கம் உள்ளவர்களாக விளங்குவதற்குத் துணை செய்கின்றது. இது போன்ற கல்வி நிலையங்களில் பயில மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இப்படிப் பள்ளிக்குப் பள்ளி கல்லூரிக்குக் கல்லூரி தரம் மாறுபடுவதனுல் அதற்கேற்ப மாணவர்களின் ஒழுக்கமும் மாறுபடுகின்றது. சில கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோரை போக்கிரி (Rogue) என்று எண்ணுகின்ற நிலைமை உருவாகி வருகின்றது. இதனுல் நல்லொழுக்கம் உள்ள மாணவர்களும் பாதிக்கப்படுகிறுர்கள்.

கட்டுப்பாடில்லாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அடிக்கடி பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர்கள் அல்லது பள்ளியை விட்டே நின்று நாடோடிகளாகத் திரிகிறார்கள் அல்லது இளங் குற்றவாளிகளாக மாறிவிடுகிறார்கள். மாணவப் பருவத்தில் கட்டுப்பாடற்றவர்கள், ஒழுங்கற்றவர்கள் பிற்காலத்தில் அதிகக் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர்கள் என்று பல அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. மேலும் திரும்பத் திரும்ப, குற்றம் புரியத் தலைப்படும் குற்றவாளிகளை (Recidivists) ஆராய்ந்ததில் பள்ளியில் பயிலும்போது ஒழுங்கற்றவர்களாக விளங்கியவர்கள் அதிகச் சதவிகிதம் உள்ளனர் என்று மற்றொரு அறிக்கை கூறுகிறது. 8 முதல் 17 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகளில் 61 சதம் பள்ளியில் நிலைத்துப் படிக்காதவர்கள் என்றும் அவர்களின் குடும்பச் சூழ்நிலைகளுடன் கல்வியில் ஆர்வம் காட்டாததும் குற்றத்திற்கான காரணமாகும். பள்ளியில் கட்டுப்பாட்டுடன் ஒழுங்காகப் படிக்காமல் வெளியில் சுற்றித்திரிவதனால் குற்ற ஒழுக்கம், குற்றச் சாயல், குற்றத் தன்மை ஆகியவை எளிதில் பதிந்து விடுகின்றன. இதற்கு ஆதரவாகக் கீழ்வரும் ஆராய்ச்சி அறிக்கை அமைந்துள்ளது. அதாவது 42 நகரங்களில் உள்ள பள்ளிகளின் வேலை நாட்களைக் கணக்கெடுத்து அதில் அதிக நாட்கள் பணியாற்றிய பள்ளிகளில் குறைவான குற்ற விகிதத்தையும் குறைந்த நாட்கள் பணிபுரிந்த பள்ளிகளில் அதிகமான குற்ற விகிதத்தையும் பெற்றிருப்பதாக அறிக்கை அறிவிக்கிறது. இதிலிருந்து மாணவர்கள் அதிக நாள் பள்ளியில் தங்கிப் படிக்க வாய்ப்பளிப்பதனால் வெளியில் நாடோடியாகத் திரிவதையும் குற்றச் செயலில் ஈடுபடுவதையும் தடுப்பதற்கு ஏதுவாகிறது என்பதை அறியலாம்.

கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றைப் போதிப்பதுடன் குற்ற ஒழுக்கத்திற்கு, குற்றச் செயலுக்கு எதிரான நடவடிக்கைகள், செயல் முறைகள் ஆகியவையும் போதிக்கப்படவேண்டும். பாடங்களை விரும்பிப் படிக்கவும் திறமையை வளர்த்துக் கொள்ளவும் மாணவர்களை ஊக்குவிக்கவேண்டும். ஓய்வு நேரங்களை நன்னெறியில் பயன்படுத்த எல்லா வசதிகளையும் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் இளம் வயதிலேயே சமூகச் சேவை, தேசிய இளைஞர் படை (N.C.C.) செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross) ஆகிய பொதுப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தித் தக்க பயிற்சி அளிப்பதுடன் நாட்டுப்பற்று. கட்டுப்பாடு. மனித உணர்வு. ஆகியவற்றை அவர்களுக்கு ஊட்டுதல் வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாக மாணவர்கள் குற்ற ஒழுக்கத்தில் ஈடுபடுவதைத் தடுக்க ஏதுவாகும்.

அதற்காக ஆசிரியர்களுக்கு, குறிப்பாக தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி அளிப்பதன்மூலம் இளஞ் சிறுர்களை உருவாக்க முடியும். ஆசிரியர்களின் ஒழுக்கமே குழந்தை களுக்குப் பிரதிபலிக்கிறது. ஆசிரியர்கள் தீயொழுக்கம் உள்ளவர் களாக இருந்து அவர்கள் நல்லொழுக்கத்தை மாணவர்களுக்குப் போதிக்கும்போது, மாணவர்களிடையே நகைப்புக்குள்ளாகிருர். கிராமப் புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்கள் முழு கவனத்தையும் பள்ளியில் செலுத்துவதைவிட அவர்களின் சொந்தத் தொழில்களில் செலுத்தி வருகிருர்கள். குறிப்பாக நிலம் உள்ளவர்கள் வயல்களைத்தான் கவனித்துக் கொள்கிருர்கள். வருங்காலத் தலைமுறையினர், தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் போன்றவர்களை உருவாக்கத் தங்களிடம் ஒப்படைத் திருக்கின்ருர்கள் என்பதையும், பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ரேம் என்பதையும் மறந்து கடமையாற்ருது காலங்கழித்து வரும் ஆசிரியர்கள் ஏராளம். ஆகவே ஆசிரியர் களுக்கு உள இயல் பயிற்சியும் அளிக்கப்படுதல் வேண்டும். இந்தியா போன்ற ஏழை நாடுகளில் பெரும்பாலான குழந்தைகள் அரசாங்கம் நடத்தும் கல்வி நிறுவனங்களில்தான் கல்வி பயின்று வருகின்ருர்கள். ஆனால் பொது கல்வி நிறுவனங்களின் தரமோ மிகவும் சீர் கெட்ட நிலையில் உள்ளது. தனியார் கல்வி நிறுவனங்கள் சற்றுத் தரம் உயர்ந்ததாகக் காணப்படுகிறது. அதிலும் செல்வாக்கு உள்ளவர்கள் வசதியும் வாய்ப்பும் உள்ள வர்கள் அப்பள்ளிகளில் சென்று பயில்கின்றனர். பாமர குழந் தைகள் படிக்க வேண்டும் என்றும் நல் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ வேண்டும் என்றும் விரும்பி அரசாங்கம் அதிக பொருட் செலவு செய்கின்றது. பணம் செலவழிகிறதே தவிர, அதனுல் பாமர மக்கள், குழந்தைகள் நன்மை அடைகின்ருர்களா என்ருல் அதுதான் இல்லை. கண்காணிப்பும் கட்டுப்பாடின்மையுமே இதற்குக் காரணமாகும். அதனுல்தான் கிராமப் புறங்களில் பயிலும் குழந்தைகளும் நகரத்தில் குடிசைப் பகுதியில் பயிலும் குழந்தை களும் குற்ற ஒழுக்கத்தையும் குற்றச் சாயலையும் உடையவர் களாக விளங்குகின்ருர்கள். குற்றமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானுல், அது கல்வி நிறுவனங்கள் கையில் உள்ளது. இதை உணர்ந்து இனிமேலாவது கல்வி நிறுவனங்கள் பொறுப் புடனும் கட்டுப்பாடுடனும் செயலாற்றி ஒழுக்கம் உள்ள சமுதா யத்தை உருவாக்கப் பாடுபடவேண்டும். மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதையும் தவிர்த்தல் வேண்டும். அதற்கு அரசியல் தலைவர்கள் ஆதரவு அளிக்காமல் இருப்பது அவர்களின் முதல் கடமையாகும்.

போர் (War) : பொதுவாக போர் நடக்கின்ற காலங்களிலும் போர் நடந்த பிறகும் குற்றங்கள் அதிகமாகப் புரியப்படுகின்றன என்று குற்றப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. இதனால் போருக்கும் குற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று உணர்த்துகிறது. போர்க் காலங்களில் இளங் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை விகிதம் அதிகரித்து உள்ளது. அதே போன்று இளம் பெண்கள் உடலுறவுக் குற்றத்திற்காக அதிக அளவில் கைது செய்யப்படுவதும் இளங் குற்றவிகிதங்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாகிறது. போர் என்றாலே வன்முறைச் செயல்கள் என்று பொருள். வன்முறைச் செயல்கள் அதிக அளவில் நிகழ்கின்ற காரணத்தினால், இளைஞர்கள், அவற்றைப் பார்த்து உணர்ச்சி வயப்படுகின்றார்கள். உள்ளம் குமுறுகிறார்கள். அவர்களுடைய உணர்ச்சி கொந்தளித்து ஏதாவது குற்றத்தில் ஈடுபட்டுத் தணிந்து விடுகின்றது. மேலும் போர்க் காலங்களில் நாடுகள் முற்றுகைக்கு உள்ளாகின்றன. இதனால் கடல், நிலம், ஆகாய வழிகள் தடை செய்யப்படுகின்றன. அவை வாணிகத்தடை, போக்குவரத்துத் தடை ஆகிய தடைகளுக்கு ஏதுவாகின்றன. இதனால் உணவுப் பொருள்கள் பங்கீடு முறைகள், போதிய வருமானம் இன்மை ஆகியவற்றினால் பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடியானது பல குற்றங்கள் புரிவதற்குத் துணைபுரிகின்றன. பதுக்கி வைத்தல், விலை உயர்வு கள்ளக் கடத்தல் ஆகிய குற்றங்களுடன், உணவுக் கலப்படம் போன்ற குற்றங்களும் எடை அளவுக் குறைபாடுகளும் நிகழக் காரணமாகின்றன. மேலும் போரினால் குடும்பச் சூழ்நிலைகள், சமுதாயத்தின் சுற்றுச் சூழ்நிலைகள் ஆகியவை மாறுபடுகின்றன. கட்டுப்பாடுகள் தகர்ந்து விடுகின்றன. பெற்றோர்கள் போர்ப் படையில் பணிபுரிகின்ற காரணத்தினால் குடும்பத்தில் கட்டுப்பாடும் இல்லாமல் போய்விடுகின்றது. மேற்கூறிய சூழ்நிலையில் இளைஞர்கள் சுதந்திரமாக செயற்பட நல்ல வாய்ப்புண்டு. சூழ்நிலைகள் குற்ற ஒழுக்கத்திற்கு ஏதுவாக அமைந்திருப்பதனால் இளைஞர்கள் குற்றச் செயலில் ஈடுபடுகின்றார்கள். இதனால்தான் இளைஞர்களுடைய குற்ற விகிதம் அதிகரித்தும் வயது வந்தவர்களுடைய குற்ற விகிதம் குறைந்தும் காணப்படுகின்றன. வயது வந்த இளைஞர்கள் நாட்டைப் பாதுகாக்கப் போர்களில் ஈடுபடுவதனால் அவர்கள் குற்ற ஒழுக்கத்தில் ஈடுபட வாய்ப்பில்லாமல் போகின்றது. போர் முடிவடைந்த பிறகு உற்பத்தித் தொழில் துறைகள் பாதிக்கப்பட்டு விடுவதனால் பொருளாதாரம் சீர்குலைந்து நாட்டில் பஞ்சம், பட்டினி, குழப்பம், கலகம் ஆகியவை நிகழ்கின்றன. அப்பொழுது கடுங் குற்றங்கள் அதிக அளவில் நிகழ்

கின்றன. இவ்வாறு பிரான்ஸில் 1884-ல் பிரெஞ்சுப் புரட்சிக்குப் (French Revolution) பிறகும் அமெரிக்காவில் 1860, 1870 வரையில் உரிமைப் போருக்குப் பின்னும், (Civil War) ஜெர்மனி, ஆஸ்திரேலியாவில் 1866-ல் நடந்த போருக்குப் பின்னும் ஜெர்மனி, ஆஸ்திரேலியாவில் முதல் உலகப்போருக்குப் பின்னும் வங்காள தேசத்தில் 1971-ல் நடந்த சுதந்திரப்போருக்குப் பிறகும் கடுங் குற்றங்களின் குற்ற எண்ணிக்கை விகிதங்கள் குறிப்பிடத் தக்க அளவுக்கு அதிகரித்துள்ளன. முதல் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் அதிகமாகப் பாதிக்கப்படாத நாடுகளான அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் போர்க் காலங்களிலும் சரி, போருக்கு முன்னும் பின்னும் குற்ற விகிதங்கள் ஒரே நிலையில் இருந்ததாகக் குற்றப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. இதனால், போரினால் உள் நாட்டு அமைதி பாதிக்கப்படுவதனால்தான் குற்ற விகிதங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன. போர்க் காலங்களில் உள்நாட்டில் அதிக ஒற்றுமை, அதிகக் கட்டுப்பாடு, ஆகியவை காரணமாக குற்ற விகிதங்கள் குறையவும் வாய்ப்புண்டு. நாட்டின் நலனைக் கருதி, குற்றவாளிகளும் ஆக்க வேலையில் ஈடுபடுவதே இதற்குக் காரணமாகும். இது போன்ற நாடுகளில் போருக்குப்பின் குற்ற விகிதங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

பொதுத் தொடர்புகளும் குற்றமும்: (Public Communications in relation to Crime) குற்றங்கள் நிகழ்வதற்குப் பொதுத் தொடர்புகள் எவ்வாறு காரணமாகின்றன என்பதை இங்கு ஆராய்வோம். பொதுத் தொடர்புகளாவன திரைப்படம், செய்தித் தாள், நகைச்சுவைப் பத்திரிகை, வானொலி, நாடகம், கதை, கட்டுரை ஆகியவையாகும். அவையல்லாமல் நகைச்சுவைப் புத்தகம், ஆபாச புத்தகம், நிர்வாணப் படங்கள் ஆகியவையும் குற்ற ஒழுக்கத்திற்கு, குற்றத் தன்மைக்கு, குற்றச் செயலுக்கு ஆதரவாக அமைகின்றன. அதாவது மேற்கூறியவை, இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியவையாக விளங்குகின்றன. அந்த உணர்ச்சியின் வேகத்தால் இளைஞர்கள் குற்றச் செயலில் ஈடுபடுகின்றார்கள். குறிப்பாக, பால் உணர்ச்சி தூண்டக் கூடிய கட்டுரை, செய்தித்தாள் முதலியவை அதிக அளவில், மலிவான அளவில் தொடர்ந்து வெளியிடப்படுகின்ற காரணத்தினாலும் திரை அரங்குகளில் பால் உணர்ச்சி ஊட்டும் வகையால், ஒளிவு மறைவின்றி காட்டப்படுகின்றன. இவற்றால் பாலுறவுக் குற்றங்கள் புரிவதற்கு ஏதுவாகின்றன. அத்துடன் குற்ற ஒழுக்கம், குற்ற நுட்பம், குற்ற உத்தி ஆகியவற்றை இளைஞர்கள் கற்றுக்கொள்ள ஏதுவாக அமைகின்றன. இவற்றைத் தவிர

மேடைப்பேச்சு குற்ற ஒழுக்கத்திற்கு ஆதரவாக அமைகிறது. மேற்கூறியவற்றைவிட மேடைப் பேச்சுக்கு அதிக வலிமை உண்டு. பேசுகின்றவர்கள் உணர்ச்சி வயப்பட்டுப் பேசுவதனால் அதைக் கேட்கக் கூடிய வாய்ப்பு உள்ளவர்களும் உணர்ச்சி வயப்படுகிறார்கள். இதனால் அந்தப் பேச்சு முடிவடைவதற்குள் அதே இடத்தில் கலகம், குழப்பம், போராட்டம் ஆகியவை நிகழ்ந்து விடுவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். இதனால் குற்ற ஒழுக்கத்திற்கும் மேடைப் பேச்சுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை விளக்கத் தேவையில்லை. அதே போன்று நாடகங்கள், பாடல்கள், கவிதைகள் ஆகியவையும் இவ்வகையைச் சார்ந்தனவே. ஒரே பாடலினால் சமுதாயத்தின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பக் கூடிய சக்தி உண்டு. ஏன் ஒரே வார்த்தை "வந்தே மாதரம்" என்ற வார்த்தை மக்களுடைய உணர்ச்சியைத் தூண்டி சுதந்திரம் பெறுவதற்கே அடிப்படையாக அமைந்துவிடவில்லையா. மேடைப் பேச்சினால் ஆட்சிக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதற்கும் அதனால் கொலை, கொள்ளை, தீவைப்பு, சொத்து அழித்தல், கலகம், போராட்டம் என்ற பல குற்றங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஆகவே தீய நாவல்களை, செய்தித்தாள்களைப் படித்துக் குற்ற உத்தியைக் கற்று, குற்றச் செயலில் ஈடுபடுவதைக் காட்டிலும் உணர்ச்சியைத் தூண்டக் கூடிய நாடகங்கள். பாடல்கள் மேடைப் பேச்சு ஆகியவற்றை நேரடியாகப் பார்த்து அதிக உணர்ச்சி வயப்பட்டுக் குற்றச் செயலில் ஈடுபடுகின்றார்கள். உணர்ச்சி ஊட்டக் கூடிய கருத்துக்களை வீரர்களுக்கு ஊட்டுவதனால் அந்த நாடே வெற்றி பெற வாய்ப்புண்டு. இதையே அக் காலத்திலும் சரி இக் காலத்திலும் சரி நாட்டுப் பாடல்கள், (National songs) மூலம் உணர்ச்சியைத் தட்டி எழுப்பப் பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மனோன்மணீயத்தில் "போரின் காயமே புகழின் காயம்", "இப் படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற உணர்ச்சி ஊட்டக் கூடிய வாசகங்களை அக் காலத்திலேயே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கையாண்டுள்ளார். இக் காலத்தில் "வந்தவனை வாழவைத்து, சொந்தக்காரனைச் சுரண்டும் தமிழ் நாடே. ஏ! சிங்கத் திருநாடே! நீ சிலந்திக் கூடாக மாறியது எப்பொழுது? ஆறிலும் சாவு நூறிலும் சாவு. தாயகம் காப்பது கடமை" என்பன போன்ற உணர்ச்சி ஊட்டக் கூடிய வாசகங்களினால் ஆயிரமாயிரம் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்கள் என்று கூறுவது மிகையாகாது.

திரைப்படத்திற்கும் குற்ற ஒழுக்கத்திற்கும் நேரடித் தொடர்பு உண்டு. இன்றைய நிலையில் திரைப்படத்தைப் பார்த்து

சிறுவர், பெரியவர்களும் அதேபோல் தங்கள் வாழ்க்கையில் நடக்கவேண்டும் அல்லது அவற்றைப் பின்பற்றவேண்டும் என்ற திரைப்பட நாகரிகப் பைத்தியமாகத் திரிகின்ருர்கள். பல பாடல்களினுலும் நடிப்பினுலும் பால் உணர்ச்சிக் குற்றங்கள் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. மேலும் திரை அரங்கில் காட்டப்படும் துப்பறியும்முறை, குற்ற உத்தி நுட்பங்கள், குற்ற வகைகள் ஆகியவற்றைப் பார்த்து அவற்றைக் கற்று, குற்றங் களில் ஈடுபடுகின்ருர்கள். மேற்கூறிய உண்மையை அர்பர்ட் பிலம்மர் (Herbert Blumer), பிலிப் எம். ஹவுசர் (Phillip M. Hauser) ஆகியவர்கள் திரைப்படம் பார்ப்பவர்களை ஆராய்ந்ததில் ஆண்கள் 10 சதமும் பெண்கள் 25 சதமும் திரைப்படங்களினுல் குற்றவாளிகளாக மாறியிருக்கின்ருர்கள் என்றும், மறைமுகமாகப் பல வழிகளில் குற்ற ஒழுக்கத்திற்கும் செயலுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளன என்றும் கூறியுள் ளார்கள்.

திரைப்பட நாகரிகத்தைப் பார்த்துவிட்டு தங்களுடைய பொருளாதார நிலமையை எண்ணிப்பார்க்காமல் ஆடம்பர வாழ்வுக்கு ஆசைப்படுவதும் எளிமையில், விரைவில் பொருளீட்ட வழியைத் தேடுவதிலும் அக்கறை காட்டுகின்ருர்கள். இதனுல் கொலே, கொள்ளை, மோசடி, ஏமாற்றுதல், கள்ளநோட்டு அடித்தல், கள்ளக்கடத்தல், பெண்களைக் கடத்துதல் ஆகிய குற்றங்கள் நிகழ்வதற்கு ஏதுவாகின்றன. திரைப் படத்தில் தோன்றும் காட்சியைப் போலவே தங்கள் வாழ்வைச் செயல் படுத்த முற்படுகின்ருர்கள். அதேபோன்று விருந்தில் மது அளித் தல், மங்கையை ஆடவைத்தல், சூதாட்டம் ஆடுதல், ஆகிய குற்றங்களைச் செய்துவருகின்ருர்கள்.

திரைப்படத்தைப் பார்த்து அதில் காட்டப்படும் குற்ற உத்தியைப் பார்த்து தன்னுடைய முதலாளியையே கொலே செய்து விட்ட நிகழ்ச்சி அரியாணுவில் சமீபத்தில் நடந்ததாகச் செய்தித் தாள் அறிவிக்கின்றது. இப்படி எத்தனையோ குற்றங்களுக்கு திரைப் படங்கள் ஆதாரமாக அமைந்துவிடுகின்றன, மேலும் திரைப் படங்களைப் பார்ப்பவர்கள் திரைப்பட நடிகர்கள் பேரில் சங்கம் அமைத்துப் பாராட்டுகிருர்கள். இதனுல் ஒரு நடிகர் சங்கத்துக்கும் மற்றொரு நடிகர் சங்கத்திற்கும் பகைமை ஏற்பட்டு அதனுல் கலகம், குழப்பம், போராட்டம், சண்டை, கொலே, தாக்குதல். அமைதி யின்மை ஆகியவை நடந்துவிடுகின்றன ஆகவே திரைப்படங்கள், செய்தித்தாள்கள், கதை, கட்டுரை, பாடல். நாடகம், மேடைப் பேச்சு ஆகியவை உணர்ச்சியைத் தூண்டக்கூடியவைகளாக இல்லாமல் அறிவை வளர்க்ககூடிய நிலேயில் அமையுமாறு கவனித்துக் கொள்ளுதல் நலம்.

10. குற்றமும் சமுதாயத்தில் செயல் எதிர்ச் செயல்களும்

(Crime and Social Reactions)

குற்றத்தகுதி (Maturation): தனிமைப்படுத்துதல், (Segregation) குற்ற நுட்பங்கள் (Techiniques of Crime) குற்ற வாழ்க்கைத் தொழிலர்களின் செயல் எதிர்ச் செயல்கள், குற்ற உத்தியும், போட்டியும் (Crime Competion and Technique) காலத்திற்கு ஏற்றுவாறு குற்றங்களை மாற்றிக்கொள்ளுதல், குற்ற ஒழுங்கமைப்பு முறை ஆகியவற்றைப் பற்றி இந்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

குற்றத்தகுதி (Maturation): "தகுதி" என்பது ஒரு தொழிலைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலைத் திறமையைக் குறிப்பது தகுதி என்பது ஆகும். அதற்குத் தகுதி அடைதல் என்பது பெயர். அல்லது பயிற்சியில் தேர்வடைதல் என்றும் கூறலாம். அல்லது தொழிலில் திறமை பெறுதல் என்றும் கூறலாம். பொதுவாக, தகுதியானது அவரவர்களின் பழக்க வழக்கங்கள், உடலமைப்புகள், அறிவின் கூர்மை, சுற்றுச் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்து ஒருவன் ஒரு தொழிலைச் செவ்வனே செய்யக் கூடிய தகுதி, இளமையிலோ, நடுத்தர வயதிலோ மூத்த வயதிலோ பெறலாம். அல்லது சிலருக்கு எந்தப் பருவத்திலும் எந்தத் தொழிலைச் செய்வதற்கும் தகுதியைப் பெறமுடியாத நிலையும் உள்ளது. இங்கு நாம் குற்றத் தகுதியைப்பற்றி ஆராய்வோம். ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகள் எந்தச் செயலைச் செய்தாலும் அது குற்றமல்ல என்று குற்றச் சட்டம் கூறுகின்றது. ஏழு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் குற்ற உத்தியின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்தல்வேண்டும். ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைக்கு குற்ற உத்தி, குற்றம் புரியும் வழிகள், குற்றங்களின் வகைகள் ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தாலும்

அந்தக் குழந்தை குற்றத் தகுதியை அடைந்துவிட்டது என்று சட்டப்படிக் கூறமுடியாது

குற்றவாளிகளின் வாழ்க்கை வரலாற்றில் குற்றத் தகுதி அடைதல் (Maturation) என்பது அவர்களின் நடைமுறை வாழ்க்கையின் ஒரு உச்ச கட்டமாகும். இந்தக் குற்றத் தகுதி யானது பல விதங்களில் வளர்ச்சி அடைகின்றது. அதாவது மற்றக் குற்றவாளிகளுடன் தொடர்ந்து பழகுவதனுல் அல்லது குற்றவாளிகளுடன் இணைந்து செல்வதனுல் அவர்களின் குற்ற ஒழுக்கம், குற்றத் தன்மை, குற்றச் சாயல், குற்ற நடத்தை, குற்ற உத்தி, குற்ற மாதிரி, ஆகியவற்றை விரைவில் கற்றுத் தெரிந்து கொள்கிருர்கள். இளங் குற்றவாளிகள் அந்தப் பயிற்சியினுல் தானுகவோ அல்லது கூட்டத்தினருடன் இணைந்தோ குற்றத்தைச் செய்யக்கூடிய திறமையை அடையும் நிலைக்குக் குற்றத் தகுதி அடைதல் என்று பெயர் ஆனுல் ஒருவன் குற்றத் தகுதியை அடைவதற்கு முன், குற்றம் புரியவில்லை என்ருே அல்லது அவனி டத்தில் குற்ற ஒழுக்கம் இல்லை என்ருே அல்லது குற்ற நுட்பங்கள் பற்றித் தெரியாது என்ருே கூறமுடியாது. குற்றத் தகுதி என்பது குற்றம் புரிவதற்கு வேண்டிய தேர்ச்சித் திறம், பயில் திறம் கைத் திறம், தனித் திறனுற்றல் ஆகியவற்றைக் குறிக்கும். இந்தத் தகுதி நபருக்கு நபர் வேறுபடலாம். அதாவது ஒருவன் இளம் வயதிலேயே குற்றத் தகுதியை அடைந்துவிடலாம். மற்ருெருவன் நடுத்தர வயதில் அடையலாம். பிறிதொருவர் முதுமையில் அடையவும் வாய்ப்புண்டு. இதிலிருந்து குற்றத் தகுதியை அடை வதற்கு, அடிப்படை வயதைத் தவிர பொதுவாக, வயது முக்கிய காரணமல்ல. குற்றத் தகுதி அடைதல் சான்றிதழ், ஒருவனுக்கு அவனுடைய வயதைப் பொறுத்து அளிப்பதல்ல. அவனுடைய திறமையைப் பொறுத்து அளிப்பதாகும். அதிகக் குற்றங்கள், குற்றத் தன்மைகள், குற்ற ஒழுக்கங்கள் ஆகியவை நிறைந்த பகுதிகளில் வாழும் சிறுவர்கள் 10 முதல் 14 வயதிற்குள் குற்றத் தகுதியைப் பெற்றுவிடுகிருர்கள். அதாவது குற்றம் புரிவதற்கு வேண்டிய தகுதியைப் பெற்று விடுகிருர்கள். சிறு வயதில் இருந்து குற்றவொழுக்கம், குற்றச் சாயல், குற்றத் தன்மை, குற்ற நுட்பங்கள், குற்றவகை. இப்படியாகச் சொல், செயல், சுற்றுச் சூழ்நிலைகள் அனைத்தும் குற்ற மயமாகவே காணப்படுவதால் அங்கே வளரும் குழந்தைகள் விரைவில் குற்றம் புரிவதில் பயிற்சி அடைந்து விடுகின்ருர்கள். அதாவது விவசாயியின் மகன் இளம் வயதிலேயே பண்ணை வேலையில் தேர்ச்சி அடைந்து விடுவதைப் போல, குற்றப் பகுதியில் வாழும் குழந்தைகளின் எண்ணம், செயல், உணர்வு ஆகிய மூன்றுமே குற்றங்களைப் பற்றியதாகவே

அமைந்திருக்கும். அவர்கள் எதைப் பார்த்தாலும் குற்ற நோக்குடன் பார்ப்பார்கள். சாதாரணமாக கன்னக்கோல் திருடர்களாக இருந்தால் ஒரு வீட்டைப் பார்த்த உடனேயே எப்படித் திருடுதல் என்பது பற்றித் தெளிவாக அவர்கள் மனத்தில் பதிந்துவிடும். அதற்காகப் பல உத்திகளை மேற்கொள்கிறார்கள். குற்றம் புரியும் போது பிடிபட்டுவிட்டால் அதிலிருந்து தப்புவது எப்படி, யாராவது வந்தால் எப்படி மறைவது, திருட்டுப் பொருள்களை எப்படி மறைப்பது, மற்றவர்களுடன் எப்படிப் பேசுவது, கையும் களவுமாகப் பிடித்துவிட்டால் வழக்கைச் சரிகட்டி, (Fix things), தப்புவது எப்படி என்பன போன்ற பல பிரச்சினைகளை முன் கூட்டியே எண்ணி அதன்படி செயற்படுவதனால் குற்றப் பயிற்சியில் தேறினவர்கள் பெரும்பாலும் சட்டத்தின் பிடிக்கு அகப்படாமலே குற்றத் தொழில் புரிந்து வாழ்ந்து வருகின்றார்கள். குற்றவாளிகள் சட்டத்தையும் பாதுகாப்பையும் சவாலாக ஏற்றுக் கொள்கிறார்கள். கூடியமட்டும் சட்டத்தின் பிடிக்கு அகப்படாமலே செயற்பட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். தவறிச் சட்டத்தின் பிடியில் சிக்கிவிட்டால் 'சிறைத் தண்டனை' என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி என்று எண்ணிக் கொள்கிறார்கள். ஒரு முறை சிறை சென்றவன் பல முறை செல்லத் தயங்குவதே இல்லை. பல முறை சிறை சென்று வருவதே குற்றவாளிகளிடையே ஒரு கௌரவமான செயலாகக் கருதப்படுகின்றது. திருட்டுக் குற்றங்களுக்காக 40, 50 முறை சிறை சென்றவர்கள் உண்டு. ஜேப்படி திருடர்கள், கன்னக் கோல் திருடர்கள். கொள்ளையடிப்பவர்கள் முதலானோர் சொத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிபவர்கள், அவர்கள் சிறைத் தண்டனையைப்பற்றிப் பொருட்படுத்துவதில்லை. சிறை சென்று மீண்டவுடன், குற்றவாளிகள் மீண்டும் அதே குற்றத்தைப் புரியத் தயங்கமாட்டார்கள். ஆனால் ஒப்புவிக்கப்பட்ட உடைமையை மோசடியாகக் கையாடல் செய்பவர்களைவிட (Embezzler) பல மடங்கு திறமையுள்ளவர்களாக, வலிமையுள்ளவர்களாக, இளம் வயதுள்ளவர்களாக விளங்குவார்கள். ஆனால் கையாடல் (Embezzler) குற்றம் புரிபவர்கள் பெரும்பாலும் வயது வந்தவர்களாகவும், கற்றவர்களாகவும் மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர்களாகவும், அலுவலகத்தில் பணிபுரிபவர்களாகவும், சமுதாயத்தில் செல்வாக்கு உள்ளவர்களாகவும் விளங்குவார்கள். ஆகவே கையாடல் புரியும் குற்றவாளிகள் அகப்பட்டுக் கொண்டால் குற்றத்தில் இருந்து தபபித்துக்கொள்ள அவர்களுக்கு எளிதில் முடிவதில்லை. மேலும் பிடிப்பட்டுவிட்டால் அது அவர்களின் கௌரவப் பிரச்சினையைப் பாதிக்கின்றது. அவர் முகத்திரை கிழிக்கப்படுகின்றது. குற்ற விசாரணை, சிறைத் தண்டனை ஆகிய

வையும் புதிய அனுபவமாக இருக்கின்றன. தண்டனையை எளிதாக ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் அவர்கள் இடத்தில் இல்லை. சிறைத் தண்டனை என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி என்ற தத்துவம், எண்ணம் அவர்களிடம் இருக்க வாய்ப்பில்லை. அவர்களின் எண்ணமெல்லாம், கற்பனையான, வளமான வாழ்க்கையைப் பற்றியதாகவே இருக்கும். வாழ்க்கையைச் செவ்வனே நடத்திச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன். குறிக்கோளுடன் வாழ்க்கையைத் தொடங்கியவன், பிறகு நம்பிக்கை மோசடிக் குற்றம் புரிபவனாக மாறிவிட்டதன் காணத்தினால் குற்ற விசாரணை, சிறைத்தண்டனை, அபராதம் ஆகிய செயல்கள் வாழ்க்கையில் நிகழக்கூடிய நிகழ்ச்சி என்று எண்ணுவதே இல்லை. அவ்வாறு நிகழ்ந்துவிட்டால், வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்ட மாபெரும் கேடாக வாழ்க்கையே இருண்டுவிடுவதற்குச் சமமாகக் கருதுகின்றான். அவர்களின் பண்பு, குணம், ஒழுக்கம், கௌரவம், ஆகியவற்றிற்கு முரணாக அவர்களின் செயல் அமைந்து வருவதுதான் அவர்களின் வாழ்க்கையின் மாற்றத்திற்கும், ஏமாற்றத்திற்கும் காரணமாகின்றன. குற்றங்கள், குற்றவாளிகள் மாறுபடுவதைப் போன்று வயதும் மாறுபடுகின்றது. குற்றங்கள் இடத்திற்கு இடம் நபருக்கு நபர் வயதுக்கு வயது காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றன. குற்றவாளிகளின் வாழ்க்கை வரலாற்றை நாம் ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிப்படும். கூட்டுக் கொள்ளைத் தலைவனாகவும், கொள்ளைக்காரனாகவும் விளங்குபவர்கள், தொடக்கத்தில் அவர்கள் சூழ்நிலையின் காரணமாக சிறிய குற்றங்களைப் புரிந்தவர்களாகவும் இருப்பார்கள். தற்போது கடுமையான குற்றங்களைப் புரிவதுடன் விளையாட்டாகத் தொடங்கிய குற்றம் அதுவே வாழ்க்கைத் தொழிலாக மாறிவிட்டு இருப்பதையும், தனித்து செய்த குற்றம் தற்போது குழுக்களுடன் இணைந்து புரியும் நிலைமையும் சாதாரண திருடர் கூட்டத்தில் இருந்தவன் நிலைமை மாறி கூட்டுக் கொள்ளைக் கூட்டத்துடன் (dacoits) இணைவதுடன் அதற்குத் தலைவனாகவும் மாறிவிடுகின்ற பல வேறுபாடுகளைக் காணலாம். மத்திய பிரதேசத்தில் 1972-ல் கூட்டுக் கொள்ளைக் குழுவினர்கள் பிடிக்கப்பட்டபோது மேற்கூறிய உண்மைகளை அறியமுடிகின்றது. பொதுவாக, 19 வதுக்கு மேற்பட்டவர்கள்தாம் கடுமையான குற்றங்களைப் புரிகின்றார்கள். அல்லது குற்றங்கள் உச்ச கட்டத்தை அடைந்தன. அதிலிருந்து தொடர்ந்து 5 அல்லது 10 ஆண்டுகள் நிலைத்து செயல்படுகின்றன. இளமைப் பருவத்தின் துள்ளலும் வலிமையான உடல் அமைப்பும் கொண்டிருப்பதனால் எதையும் துணிந்து செயல்படுகின்றார்கள். எனவே அவர்கள் அச்சம் என்பதே தெரியாமல் இருக்கின்றார்கள். இப் பருவங்களில் அவர்களே குற்ற

இடங்களுக்குச் சென்று குற்றச் செயல்களில் ஈடுபடுகிருர்கள். 20 வயது முதல் 35 வயது உள்ளவர்கள், கொலை, கொள்ளை, கூட்டுக் கொள்ளை, வன்புணர்ச்சி, கன்னக்கோல் வைத்தல், தீயிடுதல் ஆகிய குற்றங்களில் அதிகமாக ஈடுபடுகின்றனர். குற்றவாளிகளின் உடல் வலிமை குன்றும்போது அவர்களின் செயல்களை மாற்றிக் கொள்கிருர்கள். அவர்களின் அனுபவத்திற்கு ஏற்ப, உடல் வலிமைக்கு ஏற்ப, குற்றங்களை மாற்றிக் கொள்கிருர்கள். 40 வயதைக் கடந்தவர்கள் பெரும்பாலும் குற்றக் குழுக்களுக்குத் தலைவர்களாக விளங்குவார்கள். அவர்களின் குற்ற அனுபவம், குற்ற உத்தி, நுட்பம் ஆகியவைற்றைக் கொண்டு இளைஞர்களுக்கு ஆசைகாட்டி, ஆர்வமூட்டி குற்றம் புரிவதற்குப் பயிற்சி அளிக்கிருர்கள். இளைஞர்களை ஊக்குவித்துக் குற்றம் புரியச் செய்து அதன் மூலமாகத் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்ருர்கள் அல்லது விரைவு, ஊக்கம், விரைவு இயக்கம், வீரம், துணிவு. ஆகியவை தேவைப்படாத தன்மையான குற்றங்களில் ஈடுபடுகின்ருர்கள். அல்லது அரசியலில் ஈடுபடுகின்ருர்கள். சூது சூதாட்டம், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விற்றல், விபச்சார விடுதி ஆகிய தொழில்களில் ஈடுபடுகிருர்கள். குலுக்ஸ் (Glucks), என்பவர் மசாசூசட்ஸ் (Massachusetts) சீர்திருத்தப் பள்ளியில் (Reformatory) உள்ள 500 பட்டதாரிகளை ஆய்ந்ததில் 21 முதல் 25 வயது உள்ளவர்களில் 31·3 சதம் விடுதலை அடைந்த இரண்டாம் ஆண்டின் தொடக்கத்திலேயே சொத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்துள்ளார்கள். ஆனால் அதே நேரத்தில் 36 அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களும், சொத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்தவர்களின் சதம் 10·8 ஆக உள்ளது என்று அறிவித்துள்ளார். ஆனால் தொழில் தொடர்பான வன்முறையற்ற குற்றங்கள் முதிய வயது வரையிலும் தொடர்ந்து செய்து வருகின்றனர் என்று அறிவிக்கின்ருர். ஆனால் ஒப்புவிக்கப்பட்ட உடைமையை மோசடியாகக் கையாடல் செய்பவர்களில் (Embezzler) வாழ்க்கை வரலாறு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். அதாவது இந்தக் குற்றத்தில் ஈடுபடுவதற்கு முன் அவர்கள் மிகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் விளங்குவார்கள். அந்த நல்ல நம்பிக்கையினுல் தான் உடைமை ஒப்படைக்கப்படுகிறது தொடக்கத்தில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள், அல்லது பணத்தைக் கையாடல் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருப்பதில்லை பல வருடம் அதே நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்ருர்கள் சூழ்நிலையின் வற்புறுத்தலினுலும் உறுதியற்ற மனத்தினுலும் நம்பிக்கை மோசடிக் குற்றத்தில் (Criminal breach of trust) ஈடுபடுகின்ருர்கள். முந்திய வாழ்க்கை ஒழுங்கான வாழ்க்கையாக வாழ்ந்த

காரணத்தினால் அவர்களிடம் மற்றவர்களின் உடைமைகளை ஒப்படைக்கின்றார்கள். பிறகு அந் நம்பிக்கை வீணாகிவிடுகின்றது. ஆகவே பொது உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுபவர்கள், உணர்ச்சி வசப்படாதவர்களாகவும், உளநோய் அற்றவர்களாகவும், மனத்திண்மை உள்ளவர்களாகவும் நியமித்தல் வேண்டும். சிலர் நல்ல ஒழுக்கத்துடன் செயற்பட்டு வந்தாலும் சூழ்நிலையின் காரணமாக அவர்களின் மனம் மாறுபட்டு நம்பிக்கை மோசடிக் குற்றத்தில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் சிக்கன வாழ்க்கையை வாழாமல், ஊதாரி வாழ்க்கை வாழ்வதும், சூதாட்டம், குதிரைப் பந்தயம் மற்றும் பல மோசடி விளையாட்டுகளில் ஈடுபட்டு அதனால் பொருள் நட்டம் ஏற்படுவதனால் அதை ஈடுபடுத்தத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தை அல்லது பொருளை எடுத்துச் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. அதற்குப் பதிலாக கடன் வாங்கிக் கடன் வாங்கிக் கட்டிச் சரி செய்துவிடலாம் அல்லது சமாதானம் கூறிக் குற்றத்தை மறைக்கலாம் என்ற எண்ணத்துடன் செயற்பட்டுவிடுகிறார்கள். இறுதியில் அவர்கள் எதிர்பார்த்தது ஏமாற்றப்பட்டுத் தண்டனை அடைகின்றார்கள். ஒப்புவிக்கப்பட்ட உடைமையை மோசடியாகக் கையாடல் செய்யும் குற்றவாளிகள் மறுமுறையும் அதே குற்றத்தைப் புரிய (Recidivism) வாய்ப்பில்லை. அதாவது ஒருமுறை தண்டனை அடைந்தவனுக்கு மீண்டும் அவனிடத்தில் பொருளையோ, பணத்தையோ நம்பிக்கையுடன் ஒப்படைக்க முன்வர மாட்டார்கள் அல்லவா? ஆனால் திருடுதல், கொள்ளையடித்தல், கன்னக்கோல் வைத்தல் ஆகிய செயல்கள் குற்றவாளிகள் மீண்டும் மீண்டும் அதே குற்றங்களைப் புரிய அதிக வாய்ப்புண்டு (Recidivism). ஃபுரம் (Frum) என்பவர் 148 வழக்குகளை ஆராய்ந்ததில் அதில் 63 சதம் திரும்பவும் குற்றம் புரியத் தலைப்படுவோர்கள் (Recidivists) காணப்படுகின்றார்கள். அவர்கள் அனைவரும் இளம் குற்றவாளிகளாகவே குற்றத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் அதில் 23 சதம் பள்ளிக்குச் செல்லாதவர்கள் அல்லது மட்டம் போட்டவர்கள். பள்ளியில் அவர்களைச் சீர்திருத்த முடியாதவர்கள். 13 சதம் குடித்துவிட்டு நாடோடிகளாகத் திரிந்தவர்கள். 1 சதம் கொள்ளைக் குற்றம் புரிந்தவர்கள் என்றும் கணக்கெடுத்துள்ளார். பர்க்கி (Burkey) என்பவர் சாதாரண அறிவுள்ள இளைஞர்களை ஆராய்ந்ததில் அவர்கள் பால் உறவுக் குற்றத்தில் (Sex offences) தங்கள் குற்ற வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார்கள் என்றும், சாதாரண அறிவு வளர்ச்சி குன்றியவர்கள் (Sub-Normal) அல்லது இயல் நிலைக்குக் குறைவான அறிவு

வளர்ச்சி உள்ள சிறுவர்கள் முதலில் திருட்டுக் குற்றங்கள் மூலம் தங்களின் குற்றங்களைத் தொடங்கி உள்ளார்கள் என்றும் அவர்கள் அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்துள்ளார்கள் என்றும் ஆராய்ந்துள்ளார்.

முடிவாக, குற்றத் தகுதி அடைந்தவர்களைச் சீர்திருத்த முடியும் என குலுக்ஸ் (Glucks) கூறுகின்றார். அதாவது குற்றவாளிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து அவர்களின் மனநிலையை மாற்றி நல்லொழுக்கம் உள்ள வர்களாக மாற்ற முடியும் என்றும் அதே நேரத்தில் 35 வயது கடந்தவர்களைச் சீர்திருத்தம் செய்வது கடினமான செயல் என்றும் அறிவிக்கின்றார். 35 வயதுக்கு மேற்பட்டவர்களின் மனநிலை உறுதிப்பட்டு விடுகின்றது. அவர்கள் கொள்கையிலே நிலைத்து நின்று விடுகின்றார்கள். மேலும் 40 வயதுக்கு மேல் நல்லொழுக்கமுள்ளவன் குற்றவாளியாக மாறுவதும் இயலாததாகும். 20 முதல் 35 வயது வரை உள்ளவர்கள் அதிகமான குற்றங்களைப் புரிகின்றார்கள் என்றும் எல்லா நாட்டு குற்றப் புள்ளிகளும் அறிவிக்கின்றன. ஆனால் இந்தியாவில் இந்த வயது குறைந்து இருக்கிறது.

தனிமைப் படுத்துதல் (Segregation)

குற்றங்களைத் தடுப்பதற்காகச் சமுதாயத்தில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது குற்றவாளிகள் குடும்பத்தைவிட்டு அல்லது குழுவைவிட்டு அல்லது சமுதாயத்தைவிட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். இப்படி ஒதுக்கப் பட்டவர்கள் மறைமுகமாக இயங்கும் திருட்டுக் குழுவுடன் (Underworld) தொடர்புகொண்டு தொடர்ந்து குற்றங்களைப் புரிந்து வருகிறார்கள். இதனால் பெரிய கொள்ளைக் கூட்டம் உருவாகின்றது. பொதுவாக, பால் உறவுக் குற்றத்திற்காக (Sex offender) சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்படுகின்றார்கள். அல்லது புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று அந்த இடத்தில் மக்களைக் கவர்ந்து பெரிய அரசியல் தலைவனாக மாறிவிடுகிறார்கள். இவர்களுக்குச், மறைமுகமாக வாழும் திருடர்கள் கூட்டத்துடனும் தொடர்பு உண்டு. அரசியல் போர்வையில் முழுக் குற்றவாளிக்கும் குற்றவொழுக்கம் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதனால் மறைஉலகத்தில் குற்றங்கள் தொடர்ந்து நிலைபெற்றுள்ளன. ஆகவே சமுதாயத்தில் நீக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் அனைவரும் கொள்ளைக் கூட்டத்துடன் இணைந்து கொள்ளைக்காரர்களாகவும், சூழ்நிலையால் அரசியல் தலைவர்களாகவும் உருப்பெறுகிறார்கள்.

முன்னேற்றத்தில் முரண்பாடு முட்டுக்கட்டை (Progressive conflict)

முன்னேற்றத்தில் முரண்பாடு என்பது சமுதாயத்தில் குற்றங்களை அகற்றிக் குற்றமற்ற சமுதாயத்தை உருவாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக விளங்குபவர்கள் குற்றவாளிகள். குற்றங்களைத் தடுப்பதற்கு என என்னென்ன பாதுகாப்பு முறைகள் கையாளப்படுகின்றனவோ அவற்றை எல்லாம் தகர்த்து எறிந்து விடுவதற்கு மேலும் மேலும் முயற்சி செய்து தகர்த்து எறிந்து விடுகிறார்கள். குற்றவாளிகள், குற்றங்களைத் தடுக்கின்ற காவல் துறையினர்கள் ஆகியோரும் தொடர்ந்து முரண்பட்டு விளங்குகின்றார்கள். குற்றவாளிக்கும் காவல்துறைக்குமிடையே ஒரு சவாலாகத் தொடர்ந்து வருகிறது. அந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதில் சில குற்றவாளிகளுக்குத் தனி இன்பம். மிகவும் கட்டுப்பாடான பாதுகாப்பைத் தகர்த்தெறிவதற்குக் குற்றவாளிகள் புதுப் புது குற்ற வழிமுறைகளை ஆராய்ந்தறிந்து காவல்துறையினருக்கு இணையான போட்டியாக நின்று குற்றங்கள் தொடர்ந்து புரிந்து வெற்றியும் அடைந்து வருகிறார்கள். இருசாராருக்கும் இடையே உள்ள எதிர்ப்புகள், பகைமைகள் குறையாமல், நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன. குற்றவாளிகளின் கை மேலோங்கி நிற்கும்போது பாதுகாப்புத்துறையினரின் கை சற்றுத் தாழ்ந்துவிடுகிறது. அதாவது குற்றவாளிகள் அனைவரும் இணைந்து கூட்டுக்கொள்ளை (Dacoities) புரியும்போது கொள்ளைக் கூட்டத்தாரின் கை மேலோங்கிவிடுகிறது. அதைத் தடுப்பது காவல் துறையினருக்குப் பெரும் கடினமாகிவிடுகிறது. போதிய எதிர்ப்புகள், தடுக்கும் ஆற்றல் இருந்தால் அந்தச் சமயத்தில் குற்றவாளிகள் அடங்கியிருப்பார்கள். பொதுவாக, காவல் துறையினர்கள் ஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்தினால் குற்றவாளிகளும் அதே தன்மையில் பயன்படுத்துவார்கள். எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் காவல்துறையினர் ஆயுதம் இல்லாமலேயே குற்றவாளிகளைப் பிடிக்க முற்படுவார்கள். அதேபோன்று குற்றவாளிகளும் கையில் ஆயுதமில்லாமலே குற்றங்களைப் புரியச் செல்வார்கள். இதன் காரணமாக இருதரப்பிலும் இறப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. அல்லது ஆபத்து அடியோடு நீங்கிவிட்டது என்று கூறலாம். ஒருவரை மற்றொருவர் பழிவாங்கும் எண்ணம் நீங்கிவிட்டது. ஆனால் அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் சமீப காலம் வரையில் காவல் துறையினர், குற்றவாளிகள் ஆகிய இருசாரார்களும் நவீன கால ஆயுதங்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். மேலும் சுடு, முதலில் சுடு (Shoot and Shoot first) என்ற சவாலுடன் செயற்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு சாராரும் மற்றொரு சாராருக்கு வாய்ப்பளிப்பது ஆபத்து என நினைத்துச் செயற்படுகின்றார்கள். இதனால் குற்றவாளிகளோ

காவல் துறையினர்களோ மட்டும் பாதிக்கப்படவில்லை. பொது மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் இறப்பின் விகிதங்கள் அதிகரித்துள்ளன. நியூயார்க் நகரத்தில் 1906 முதல் 1910 வரையில் 10,000 காவல் துறையினர்களில் பணிபுரியும்போது கொலை செய்யப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் சதம் 1·8 ஆகும். அதே எண்ணிக்கையில் 1926 முதல் 1930 வரையில் 4·1 சதமாக உயர்ந்துள்ளது. சிகாகோ நகரத்தில் அதே எண்ணிக்கையும் அதே ஆண்டுகளில் முதலில் 5·1 சதத்திலிருந்து 18·2 சதம் வரையில் அதிகரித்துள்ளன. மேலும் சிகாகோவில் 1945 முதல் 1948 வரையில் 2·8 சதமும் அடுத்து 1919 முதல் 1925 வரையில் காவல் துறையினர் பணிபுரியும்போது கொலை செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை 47-ம் 1926 முதல் 1931 வரையில் கொலை செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை 62-ம், ஆனால் 1946 முதல் 1950 வரையில் மொத்தம் 7-ம். 1951 முதல் 1955 வரை மொத்தம் 9-ம், 1956 முதல் 1958 வரையில் மொத்தம் 9-ம் காவல் துறையினர் பணிபுரியும்போது கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அதே நேரத்தில் சிகாகோ நகரத்தில் குற்றவாளிகள் குற்றம் புரியும் போது கொலை செய்யப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை பின் வருமாறு: 1919 முதல் 1925 வரை மொத்தம் 190 பேரும், 1926 முதல் 1931 வரை 314 பேரும் 1946 முதல் 1950 வரை 107 பேரும், 1951 முதல் 1955 வரை 147 பேரும் 1956 முதல் 1958 வரையில் 99 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஏறத்தாழ இதில் 1/3 பாகம் பொது மக்களாலும், மீதி பாகம் காவல் துறையினர்களாலும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 1926 முதல் 1931 வரை, 1945 முதல் 1955 வரை கொலை செய்யப்பட்ட காவல் துறையினர்களின் 88 சதம் குறைந்துள்ளது. அதே நேரத்தில் அதே ஆண்டுகளில் கொலை செய்யப்பட்ட குற்றவாளிகளின் விகிதங்கள் 53 சதவிகிதம் தான் குறைந்துள்ளது. காவல் துறை அதிகாரிகள் வாய்ப்பு கிடைக்கும்போது குற்றவாளிகளை மிகக் கடுமையான முறையில் கொடுமைப்படுத்துகிறார்கள். இதனால் குற்றவாளிகளும் வாய்ப்பு கிடைக்கும்போது அதிகக் கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இதனால் காவல் துறையினர்கள் மேலும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதைச் சமாளிக்க குற்றவாளிகள் அதைவிடக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். இதற்கு முதலில் யார் காரணமாக உள்ளனர் என்பதைப்பற்றி ஆராய்ந்தறிய வேண்டிய அவசியமில்லை பொதுவாக, இரு சாரார்களிடத்திலும் வன்முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த நிலை இன்று மாறி வருகின்றது. அமெரிக்காவைப் போன்று இந்தியாவில்

மத்திய பிரதேசம், வங்காளம் ஆகிய இரு மாநிலங்களில் இரு சாரார்களிடம் நிகழும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. மற்ற மாநிலங்களில் அவ்வளவான வன்முறைகள் காணப்படுவதில்லை. ஆனால், மத்திய பிரதேசத்திலும், வங்காளத்திலும் தற்போது குற்றவாளிகளின் கை அடங்கியுள்ளது. பொதுவாக ஒழுங்காக வரையறுக்கப்பட்ட வாழ்க்கை அமையாததனால் குற்றவாளிகள் குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். இதனால் அவர்கள் கைது செய்யப்படுவதும் அதன் காரணமாக போட்டி, பகைமை, முரண்பாடு, வஞ்சம் ஆகியவை வளர்ந்து கொண்டு வருகின்றன. மேலும் ஒருவன் கைது செய்யப் பட்டுவிட்டால் அவன் சமுதாயத்தின் பகைவன், விரோதி, ஒதுக்கப்படவேண்டியவன், சமுதாயத்தில் வாழத் தகுதி அற்றவன் என்று சமுதாயம் கருதுகிறது. அதனால் சமுதாயத்தில் இருந்து குற்றவாளியை நீக்கி அல்லது விலக்கி வைக்க விரும்புவதனால் குற்றவாளிகள் கைதாவதில் இருந்து தப்பிவிட முனைகிறார்கள். மேலும் சில வேளைகளில் குற்றத்திற்கு ஆதாரமில்லாமல் கைது செய்யப்படுகின்றனர். இம்மாதிரி கைது செய்யப்படுவதைச் சமுதாயத்தில் உள்ள பல அங்கத்தினர்கள் எதிர்க்கின்றார்கள். அல்லது எதிர்ச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். கைது செய்ய ப்படுவதைத் தடுக்கவும் முற்படுகின்றார்கள், இதனால் அந்தப் பகுதிகளில் பகைமை உணர்ச்சி வளர்ந்து விடுகின்றது. இந்தப் பகைமை உணர்ச்சியின் காரணமாகக் காவல் துறையினர்கள் அவர்களைப் பழிவாங்கத் துடிக்கின்றார்கள். இதை உணர்ந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு காவல் துறையினரை எதிர்த்துத் தாக்குவதற்கு முற்படுகின்றார்கள். இப்படிக் குற்றமற்ற பகுதியிலும் திடீரென்று வன்முறைகள் தோன்றிவிடுகின்றன.

பொதுவாக, குற்றவாளிகள், குற்றத்தைத் தடுக்கும் காவல் துறை அதிகாரிகள் ஆகிய இரு சாராருமே அறிவியலைச் சார்ந்த நவீன காலக் கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள். அந்தக் காலத்திருந்து இந்தக் காலம் வரையில் அறிவுக்குத், திறமைக்குச் குற்றத்திற்கு ஏற்றவாறு கருவிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள் குற்றவாளிகள். அதே நிலையில் காவல் துறையினர்களும் செயற்பட்டு வருகிறார்கள். எல்லா நாடுகளிலும் ஆதியில் குற்ற வாளிகள் காவல் துறையினர் ஆகிய இருபாலாரும் கால் நடையாகவே நடந்து தங்களது செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். பிறகு அறிவின் வளர்ச்சியால் இரு சாராரும் குதிரை மீது சவாரி செய்வதன் மூலமாகத் தங்களின் செயல்களை விரைந்து செய்து வந்தார்கள். பிறகு மிதி வண்டி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இருசாராரும் அவற்றைப் பயன்படுத்தி வந்தனர். அதற்கடுத்துத்

தானியங்கி வண்டிகள் வந்ததன் காரணமாக இரு சாராரும் அதைப் பயன்படுத்தி வந்தார்கள். அதிலும் வேகமாகச் செல்லக் கூடிய அதே நேரத்தில் பாதுகாப்புடனும் செல்லக்கூடிய வாகனங்களை (ஹெலிகாப்டர், விமானம் ஆகியவற்றைப்) பயன் படுத்தி வருகிறார்கள். கடற் கொள்ளையிலும் முதலில் கட்டுமரம், பிறகு படகு, பிறகு நீராவிக் கப்பல். பிறகு நீர்மூழ்கிக் கப்பல் என்று படிப்படியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையிலும் ஆதியில் இரு சாராரும் கைத்தடிகளை ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். ஆனால், சில வேளைகளில் குற்றவாளிகள் கற்களை ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். பிறகு இரும்பினால் செய்யப்பட்ட கூர்மையான ஆயுதங்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். சில பகுதி களில் வில், அம்பு போன்ற ஆயுதங்களையும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். தற்போது கைத்துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களையும் அத்துடன் தற்போது கை குண்டு (Grenade) கண்ணீர்ப் புகைக் குண்டு, ஆகிய வெடி குண்டுகளை இரு சாராரும் பயன்படுத்தி வருகிறார்கள். இவற் றுடன் தற்காப்புக் கவசம். போர்க் கவசம், பாதுகாப்புடைய (Armoured) கார்களையும் பயன்படுத்தி வருகிறார்கள் கண்ணீர்ப் புகை, நச்சு வாயு இவற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள இரு சாராரும் முகமூடிகளைப் பயன்படுத்துகின்றனர். ஆட்கடத்தல் காரர்கள் (Kidnappers) பசை நாடாக்களைப் (Adhesive tapes) பயன்படுத்துகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் மருத்துவர்கள் கூட இதை அறியாமல் இருந் தார்கள். இந்தப் பசை நாடா (Adhesive tape) என்ற நாடாவைக் கொண்டு கண்ணை மூடுவதற்கும், வாயை அடைப்பதற்கும், கைகால்களைக் கட்டுவதற்கும் பயன்படுத்தி வந்தார்கள்.

இதனால் காவல் துறையினர் குற்றவாளிகளைப் பிடிப்பதற்குப் பல புதிய முயற்சிகளைக் கையாண்டார்கள். குற்றவாளிகளைத் துப் பறியவும், அவர்களின் அடையாளங்களைக் கண்டறியவும் காவல் துறையினர் பல உத்திகளை மேற்கொண்டார்கள். இதன் காரணமாக குற்றவாளிகள் காவல் துறையினரிடமிருந்து தப்பித்துக் கொள்ள பல நுட்பங்களையும், உத்திகளையும் பயன் படுத்தி வருகின்றார்கள். இதில் கடும்போட்டி வளர்ந்து வருகிறது. அதாவது காவல் துறையினர் விரல் அடையாளங்களின் நுட்பத்தைக் கொண்டு குற்றவாளிகளைத் துப்பறிய முற்பட்ட போது குற்றவாளிகள் கை உறைகளையும் கை தொட்ட உடனேயே கைரேகை மறைந்து விடும் மாற்று வழிமுறை களையும் மேற் கொண்டார்கள். குற்றங்களை விரைந்து தடுக்கவும்

குற்றவாளிகளை அவ்விடத்திலேயே கைது செய்வதற்காகவும். இருந்த இடத்திலேயே தொடர்பு கொள்ளக் கூடிய வானொலி பொருந்திய காரைப் பயன்படுத்துகிறார்கள். அதே நேரத்தில் கன்னக் கோல் திருடர்கள், கொள்ளைக் கூட்டத்தார்கள் ஆகியோர் அதே மாதிரியான வானொலி அமைப்பு கொண்ட கார்களைப் பயன்படுத்திக் காவல் துறையினரின் வருகையை எச்சரிக்கையின் மூலம் அறிந்து பிடியில் இருந்து தப்பித்துக் குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். குற்றவாளிகளின் தொழில் மேலும் தீவிரம் அடைந்தது காவல் துறையினர் என்னென்ன உத்திகளைக் கையாள்கின்றார்களோ அதே உத்தியைக் கொள்ளைக் கூட்டத்தினரும் எதிர்மறையான நடவடிக்கைகளில் உடனுக்குடன் ஈடுபட்டு வெற்றியுடன் விளங்குகின்றார்கள். இந்த வெற்றிக்கு எடுத்துக் காட்டாக பாதுகாப்புப் பெட்டியின் (Safe box) வரலாறு சான்றாகும். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு பொருள்களைப் பெட்டியில் வைத்துப் பூட்டுப்போட்டுப் பொருள்களைத் திருடர்களிடமிருந்து பாதுகாத்து வந்தார்கள். திருடர்கள் அந்தப் பெட்டியைக் கள்ளச் சாவியின் உதவியால் பூட்டைத் திறந்தார்கள் அல்லது மரப்பெட்டியை உடைத்து வந்தார்கள். அதைத் தடுக்கக் கூட்டுப் பூட்டுபோட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தக் கூட்டுப் பூட்டையும் அடியோடு கழற்றிட கற்றிருந்தார்கள் திருடர்கள். அதைத் தடுக்க அதில் சிறிது சீர்திருத்தம் செய்து கழற்ற முடியாதவாறு செய்யப்பட்டது. திருடர்கள் அதை உடைப்பதற்கு, பாதுகாப்புப் பெட்டியில் சிறிது துவாரம் செய்து அதில் மருந்து அல்லது சுரங்க வெடி மருந்து (Dynamite) ஆகியவற்றை உட்செலுத்தி வெடிக்கச் செய்து பெட்டியை உடைத்தார்கள். அதன் பிறகு பாதுகாப்புப் பெட்டியைச் செய்பவர்கள், திருடர்கள் பெட்டியைத் துளையிடா வண்ணம் (Drill Proof) உற்பத்தி செய்தார்கள். ஆனால் அதையும் துளைக்கக் கூடிய வன்மையான கருவிகளைக் கண்டுபிடித்து உடைத்து விட்டார்கள். உற்பத்தியாளர்களோ மேலும் கடினமான உலோகத்தினால் பெட்டியைத் தயார் செய்தார்கள். அதாவது வெடி மருந்தோ, சுரங்க வெடி மருந்தோ புகாதவாறு சந்துவிடாமல் நெருக்கமாகப் பெட்டியைத் தயார் செய்தார்கள். ஆனால் திருடர்களோ வெடிப்பாற்றல் மிக்க மஞ்சள் கலவை நீர்மம் (Nitro glycerine) போன்ற திரவத்தை மிகச் சிறிய துவாரத்தில் செலுத்திப் பெட்டியை உடைத்து வந்தார்கள். பெட்டியை உற்பத்தி செய்பவர்கள் வெடிப்பாற்றல் மிக்க மஞ்சள் கலவை நீர்மம் உட்புகாதவாறு இடையில் காகிதம் வைத்துச் செய்தார்கள். இதனால் பூட்டும்போது சிறு துவாரமோ சந்தோ இல்லாமல் இருக்கும்படி செய்யப்பட்டது.

வெடிப்பாற்றல் மிக்க மஞ்சள் கலவை நீர்மம் பயன்படுத்தாதவாறு செய்யப்பட்டது. ஆனால் திருடர்களோ உயிரக் கைவளிக் கலவையடங்கிய ஒளியைப் பயன்படுத்தி (Oxyacetylene torch) பெட்டியை உடைத்து வந்தார்கள். உற்பத்தியாளர்கள் மேலும் ஆராய்ந்து கை மின்கல விளக்கின் ஒளியைப் பயன்படுத்தா வண்ணம் கவசத்துடன் செய்யப்பட்டது. பெட்டி உடைக்க முடியாததனால், கொள்ளைக் கூட்டத்தார் வங்கியர்களைச் கடத்திச் சென்று பாதுகாப்புப் பெட்டியை வங்கியர்களே திறக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இது இயந்திரத் தன்மை வாய்ந்த பெட்டியைத் திறப்பதைக் காட்டிலும் ஆட்களைக் கடத்திச் சென்று அவர்களை அச்சுறுத்திப் பெட்டியைத் திறக்க வைப்பது கொள்ளைக் கூட்டத்தாருக்கு எளிமையான செயலாகக் காணப்பட்டது.

இவ் வழியையும் தடுப்பதற்காகக் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் திறக்கக் கூடிய பூட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பாதுகாப்புப் பெட்டியைத் திறக்க முடியாதபொழுது திருடர்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள். இதனால் பெட்டியை நகர்த்தமுடியாத அளவுக்கு அதிகக் கனத்தோடு செய்யப்பட்டது. பெரிய பெட்டியினுள் சிறிய பெட்டியை வைத்துக் கொள்ள முற்பட்டார்கள். அத்துடன் பெட்டியுடன் எச்சரிக்கை (Alarm) பொருத்தப்பட்டது. மேலும் மின்னியக்கப் பூட்டு (Electronic lock) பொருத்தப்பட்டது. இதையும் உடைத்தெறியக் கூடிய வழிமுறை விரைவில் கண்டுப் பிடிக்கப்படலாம். அப்பொழுது கன்னக்கோல் திருடர்கள், கொள்ளைக் கூட்டத்தினர்கள் அதிகரிக்க அதிக வாய்ப்புண்டு. இப்பொழுதெல்லாம் கன்னக் கோல் குற்றத்தைவிடக் கொள்ளைக் குற்றம் அதிக அளவில் நடைபெறுகிறது. ஒரு சிறு கும்பலுடன் தானியங்கி வண்டிகளில் சென்று கண்ணிமைக்கும் வேகத்தில் பெரிய பெரிய வங்கிகளைக் கொள்ளை அடித்து விடுகிறார்கள். இதைத் தடுக்க. காவலாளிகளை உடனே அழைப்பதற்கு மறைவாகப் பொத்தான்களைப் பொருத்தும் முறை வளர்ந்தது. அதே நேரத்தில் கண்ணீர்ப் புகை, வெளியிடுவதற்கும் மறைவான இடங்களில் பொத்தான்கள் பொருத்தப்பட்டன. குற்றவாளிகளின் அங்கவடையாளங்களைக் கண்டு கொள்வதற்காகத் தானியங்கிப் புகைப்படக் கருவிகள் மறைத்து வைக்கப்பட்டன. பெரிய பெரிய வங்கிகளில் புதுப் புது வகையான பாதுகாப்பு முறைகளைக் கையாண்டதனால் கொள்ளைக் கூட்டத்தினர்கள் போதுமான பாதுகாப்பு இல்லாத சிறு சிறு வங்கிகளில் கொள்ளையிட முற்பட்டார்கள். சிறு வங்கிகளுக்கும் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டவுடன் கொள்ளைக்

கூட்டத்தினர் பாதுகாப்பற்ற வணிகத்துறை நிறுவனங்களையோ அல்லது மற்றச் செல்வந்தர்களின் இல்லங்களையோ கொள்ளையிடத் தொடங்கினர். இப்படிச் சமூகத்திற்கும், குற்றவாளிகளுக்கும் விடா முயற்சியாகத் தொடர்ந்து காலந்தோறும் பாதுகாப்பு நடவடிக்கையும் அதைத் தகர்த்தெறியும் வழிமுறைகளையும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

குற்றங்கள் காலத்திற்கேற்றவாறு அவ்வப்பொழுது மாறி வருகின்றன. பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் சுற்றுச் சூழ்நிலைகளின் மாற்றமும் ஒரு காரணமாகும். எடுத்துக்காட்டாக, கடற்கொள்ளைக் (Piracy) குற்றம் இன்று நடைமுறையிலிருந்து மறைந்து விட்டது என்றே கூறலாம். விரைந்து செல்லும் நீராவிக் கப்பலும், நீர்மூழ்கிக் கப்பலும் ஆகியவற்றின் கண்டுப்பிடிப்புக்களினால் கடற்கொள்ளைக் குற்றம் அடியோடு மறைந்து விட்டது என்று கூறலாம். ஆனால் இன்று விண்வெளிக் கொள்ளைக் (Air Piracy) குற்றம் அதிகரித்து வருகிறது. பிரயாணிகளுடன் விண் வெளியில் பறந்து செல்லும் விமானத்தைத் துப்பாக்கி முனையில், அல்லது வெடிகுண்டு அல்லது கண்ணி விமானத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் சிறிது நேரத்திற்குள் வெடித்து விடும் என்று கூறி விமானத்தைத் திசை திருப்பித் தனிமையான இடத்திற்கு ஓட்டச் செய்து அச்சுறுத்திப் பொருள்களை கொள்ளையிடல் அல்லது மற்றக் குற்றவாளிகளை விடுவிக்க அச்சுறுத்தல், அப்படி விடுவிக்கத் தவறினால் விமானத்தில் உள்ளவர்களைச் சுட்டுவிடுவதாக அச்சுறுத்துதல். சில வேளைகளில் விமானிகள், மற்றப் பிரயாணிகள் ஆகியோர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்கள். இம்மாதிரி அரசியல் பகைமை காரணமாகவும் கொள்ளையிடும் நோக்கத்திற்காகவும் செய்யப்படுகிறது.

அக்காலத்தில் கால்நடைகளைத் திருடுதல் அதிக அளவில் காணப்பட்டது. ஆனால் இன்று இந்த வகையான குற்றம் மறைந்து வருகின்றது. ஆனால் குடிசை, மற்ற வீடுகளுக்குத் தீ வைத்து அழிக்கும் குற்றங்கள் அதிக அளவில் அடிக்கடி புரியப்பட்டு வருகின்றன. மேலும் சூதாட்டம், பரத்தைமை, கள்ள நோட்டு அச்சடித்தல், கள்ளக்கடத்தல், கலப்படம் செய்தல், கள்ளப்பணம். கறுப்பு வாணிகம் செய்தல் ஆகிய குற்றங்கள் அதிகரித்துள்ளன.

குற்றக்குழுவமைப்பு (The Organization of Criminals)

குற்றவாளிகளிடையே காணப்படும் குற்றவொழுக்கம் ஒரே தன்மையாகக் காணப்படுவதனால் குற்றவாளிகள் எளிதில் உயிர் நண்பர்களாகிவிடுகின்றனர்கள். குற்ற நட்பு வளர்ந்து நாளடைவில்

இணைந்து குற்றச் செயல் புரிகின்றார்கள். பிறகு அவர்களுக்குள் ஒரு குழு அமைத்துக் கொள்கின்றார்கள். சட்டத்திற்குட்பட்டுச் செயற்படும் குழுக்களைப்போலவே குற்றக்குழுக்களும் குற்றக் குழுவின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகிறது. அந்தக் குழுவிற்கும் தலைவர், தொண்டர் என்ற பாகுபாடும் உண்டு. கட்டுப்பாட்டு, விட்டுக்கொடுத்தல், ஒற்றுமை, உழைப்புப் பங்கீடு, ஆகிய விதிமுறைகளுடன், குற்றக்குழுவின் விதிமுறைகளை மீறினால் கடும் தண்டனையும் குற்றக்குழுவின் தலைவனால் அளிக்கப்படுகிறது. அங்கே பெரும்பாலும் மரண தண்டனை தான் செயற்படுத்தப்படும். கள்ளக்கடத்தல், கள்ளச்சாரயம் காய்ச்சுதல், கொள்ளையிடுதல், சூதாட்டம், பரத்தைமை ஆகிய குற்றங்களை இக் குழுக்கள் மூலமாகப் புரிகின்றார்கள். இக் குழுக்களுக்குப் பல கிளைக் குழுக்கள் பரந்து காணப்படும். அந்தக் குழுவின் தலைவன் எங்கோ ஒரு மூலையில் தலைமறைவாகவோ அல்லது அரசியல் போர்வையில் சமுதாயத்தின் முக்கிய பிரமுகர் களில் ஒருவராகவோ திகழ்ந்து கொண்டுருப்பான்.

இக் குழுவின் முக்கிய நோக்கம் சட்டத்தை உடைத்தெறி வதிலும், குறுக்கு வழியில் குறுகிய காலத்தில் பொருளீட்டுவதும், சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதும், மற்ற அங்கத்தினர்களையும் தப்புவதற்கு உதவுவதுமேயாகும். மேலும் இந்தக் குழுக்கள் செயற்படும் பகுதிகளில் மற்றக் குற்றவாளிகள் வளர்வதையும் கட்டுப்படுத்துவதுடன் தாங்கள் நடத்தும் குற்றத் தொழில்களை, மற்றவர்கள் தொடங்காமல் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். இக் குழு ஏக போக உரிமைகளை எடுத்துக் கொள்ளுவதும் மற்றவர்கள் இவர்கள் தொழிலில் குறுக்கிடும்போது அவர்களை காவல்துறை அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிடுவதன் மூலமாக அவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வெளியில் காட்டிக் கொள்ளுவார்கள், அல்லது புதிய குற்றவாளிகளையும் தங்களின் குழுவுடன் இணைத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படும்.

இம்மாதிரியான குற்றக் குழுக்கள், வலுவற்ற அரசாங்கம் ஆட்சிபுரியும் காலங்களில் அதிக அளவில் மிக்க வலிமையுடன் செயற்படும். திறமையான அரசாங்கம் அமைக்கப்பட்டு விட்டால் இக் குழுக்களின் ஆதிக்கம் அடங்கிவிடும். இக் குழுக் கள், இரு நாடுகளின் எல்லைப்புறப் பகுதிகளில், காட்டுப் பகுதி களில், அல்லது காவல் துறையினர் எளிதில் வரமுடியாத மலைப் பகுதிகளில், கால்வாய்களின் ஓரம், ஆற்றுப் படுகை ஆகிய பகுதிகளில் அமைந்திருக்கும். இந்தியாவில் ஆங்கி லேயர் ஆட்சிக் காலத்தில் குற்றக் குழுக்கள் அதிக அளவில்

காணப்பட்டன. அக்காலத்தில் குற்ற இனமே (Criminal Tribes) இந்தியாவில் வாழ்ந்து வந்தது. ஆனால் இன்று அந்தக் கொடுமையான கொள்ளைக் கூட்டக் குழுக்கள் குறைந்து விட்டன. மத்திய பிரதேசத்திலும், வங்காளத்திலும், பீகாரிலும் அந்தக் கூட்டம் சில பகுதிகளில் செயற்பட்டு வருகின்றது. மேற்கூறப்பட்ட குற்றக் குழுக்கள், காவல்துறை அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், இன்னும் 'பசுத்தோல் போர்த்திய புலிகள்', வேடதாரிகள், ஆகியவர்களின் அந்தரங்க ஆதரவினால் செவ்வனே செயற்பட்டு வருகின்றன. இதனால் குற்றக் குழுக்களின் அங்கத்தினர்களில் யாராவது கைது செய்யப்பட்டு விட்டால் உடனே அவனை விடுவித்து விடவும். வழக்கைச் சரிகட்டவும் பல முனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களை வழக்குத் தொடராவண்ணம் வற்புறுத்துதல், அல்லது இழப்பீடு கொடுத்து வழக்கைச் சரிகட்டி விடுதல். அல்லது வழக்கைத் தொடுத்துவிட்டாலும் வழக்கைத் திரும்பப் பெறக் கோருதல் அல்லது வழக்கில் சான்று கூறுமிடத்துத் தெளிவாக அடையாளம் கூறுவண்ணம் இருந்து விடும்படி வேண்டுதல், அல்லது குற்றப் பொருள்களைத் திரும்பக் கொடுத்துவிடுவதன் மூலமாக வழக்கைத் திரும்ப பெறத் தூண்டுதல், அச்சுறுத்தி வழக்குத் தொடரா வண்ணம் தடுத்து விடுதல் அல்லது காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவண்ணம் சரிகட்டிவிடுதல், அரசாங்க வழக்கறிஞர்களை அணுகி வழக்கைத் தள்ளிவிட முயலுதல் அல்லது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வழக்கைத் தள்ளிவிட முனைதல் அல்லது நீதிபதிகளை அணுகி வழக்கில் விடுதலை அளிக்குமாறு வேண்டுதல் அல்லது குற்றத்திற்கு வெறும் அபராதம் மட்டும் விதித்துத் தண்டனை வழங்கும்படிவேண்டுதல், தண்டனை அளிக்கபட்டு விட்டால் நன்னடத்தைச் சோதனை முறை விடுப்பு முறையில் (Probation) விடுவிக்க முயற்சி செய்தல் அல்லது நாணய வாக்குறுதியின் மீது (குற்றவாளியை) கைதியை விடுவித்தல் முறையில் (Parole) விடுதலைபெற முனைதல். இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கள்ளநோட்டுக் குற்றவாளி, பதுக்கல் குற்றவாளி, கள்ளக்கடத்தல், கள்ளச்சாராயம்காய்ச்சுதல் (Bootlegging) கள்ளச்சாராயக்காரர்கள் (Bootleggers) சூதாட்டம், பரத்தைமை ஆகிய குற்றங்களைக் குற்ற வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்கள் (Professional Criminal) மேற்கூறிய பல குற்ற உத்திகளைக் கையாண்டு வருகின்றார்கள். அதனால்தான் சமுதாயத்தில் பரத்தைமை, கள்ளச் சாராயம், சூதாட்டம், கள்ளக்கடத்தல், கள்ள வாணிகம், கள்ள நாணயம், நோட்டுகள் அச்சடித்தல்,

கொள்ளையடித்தல் ஆகியவை சமுதாயம் வளர்ச்சியடைந்த காலங்களிலிருந்து இன்றுவரை குற்றங்கள் தொடர்ந்து ஒரு பகுதியில் இல்லாவிட்டாலும் மற்றப் பகுதியில் நடந்து கொண்டிருக்கின்றன. மேற்கூறிய குற்றங்களையும், குற்றக் குழுக்களையும் முடிமன்னர்கள் அரசாண்ட காலத்திலும் தடுக்க முடியவில்லை. முடியாட்சி மறைந்து குடியாட்சி தழைத்தோங்கும் காலத்திலும் தடுக்க இயலவில்லை. அதே நேரத்தில் மேற்கூறப்பட்ட குற்றங்கள் சமுதாயத்தை நேரிடையாக பாதிக்கவில்லையாதலால் பொது மக்களும் இவ்வகையான குற்றங்களைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் முயற்சியை மேற்கொள்வதில்லை. ஆனல் நபருக்கெதிரான குற்றங்களாக இருப்பின் சமுதாயம் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் அவற்றைத் தடுக்க உடனடியாகச் செயல்களில் ஈடுபடுவார்கள். நபருக்கெதிரான குற்றங்கள் (Offences against persons) தனிப்பட்ட பகைமை அல்லது கூட்டுப்பகைமை, முன் கோபம், உணர்ச்சி வயப்படுதல், ஆத்திரப்படுதல், அறியாமை ஆகிய காரணங்களினுல் ஏற்படுகின்றன. ஆனுல் சொத்துக்கு எதிரான குற்றங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு புரியப்படுகின்றன. இதற்குப் பல ஆட்கள் தேவைப்படுகின்றனர். குற்றங்களும் ஆலைத் தொழில் மாதிரி நடத்தப்படுகின்றன. அதே போல நம்பவைத்து மோசடி செய்யும் விளையாட்டும் (Confidence Game) பல இயக்கங்களாகச் செயற்படுகின்றன.

குற்றக் குழுக்களின் கடுமையான கட்டுப்பாட்டு விதிமுறைகளாவன; குற்றக் குழுவினைச் சார்ந்த குற்றவாளிகள் எந்தச் சமயத்திலும் குற்றக் குழுவின் மற்ற அங்கத்தினர்களையோ—இருப்பிடத்தையோ செயல் முறைகளையோ—புரியும் குற்றங்களையோ காவல் துறை அதிகாரிகட்கு காட்டிக் கொடுக்கவோ—துப்புக் கொடுக்கவோ கூடாது. நண்பனைக் காட்டிக் கொடுக்காதே (Dont Squeal) அல்லது கூட்டாளியை வாட்டி வதைக்காதே (Dont burn your partner) தப்பிவிடு அல்லது செத்தாலும் உண்மையைக் கூருதே, மற்றவர்க்காக உயிரைவிடு, ஆனுல் மற்றவர்களை அழித்து வாழக் கனவிலும் எண்ணுதே போன்ற வாசகங்கள்தான் குற்றக் குழுக்களின் அடிப்படைக் கட்டளைகளாகும்.

மேற்கூறப்பட்ட விதிமுறைகள் சில வேளைகளில் குற்றக் குழுவின் அங்கத்தினர்களால் மீறப்படுவதுமுண்டு. காதல் வயப்படும்போது குழுக்கட்டளைகளை எளிதில் மீறி விடுகின்றனர்கள். அதற்காகத்தான் குழுவின் அங்கத்தினர்கட்கு ஈவு, இரக்கம் மனிதத்தன்மை ஆகியவற்றை மறந்துவிடவேண்டும் என்ற

கட்டளையுண்டு. வாணிகர்கள் பந்த பாசத்தை மறந்து வாணிகம் செய்வதைப்போல குற்றவாளிகள் குற்றம் புரிவதையே தங்கள் வாழ்க்கையாகக் கொள்ளவேண்டும். அதற்காக என்னென்ன செய்தாலும் அதைக் குழு வரவேற்கும். அதை மீறிச் செயற்பட முற்பட்டாலும், முற்படுவது மற்ற அங்கத்தினர்கட்குத் தெரிந்தாலும் உடனே சுட்டுக் கொன்று விடுவார்கள்.

அடுத்து, குற்றக் குழுவின் தலைவரானவர் குற்றக் குழுவின் அங்கத்தினர்களின் தகுதி திறமைக் கேற்ப பதவி உயர்வு, அதிகப் பங்கு ஆகியவற்றை அளிக்கின்றார். அதாவது பட்டப் பகலில் காவல்துறை அலுவலகத்துக்கு அருகாமையில் கொள்ளை யிடுதல், அவ்வலுவலகத்தின் தானியக் கிடங்குகளை கொள்ளை யிடுதல் அல்லது தீயிட்டுக் கொளுத்தல், வைர மாலைகளைக் கொள்ளையிடுதல் ஆகிய குற்றம் புரிந்தவர்களைக் குற்றக் குழுவின் தலைவர் உட்பட அனைவரும் பாராட்டுவார்கள். இம்முறை அமெரிக்காவில் நிறைந்திருப்பதாகச் சதர்லாண்டு கூறுகின்றார்.

இவ் வகையான குற்றவாளிகள் குற்றம் புரியும்போது யாராவது பார்த்தாலோ அல்லது தடுத்தாலோ உடனே கொன்று விடுதல் போன்ற கடுமையான செயல்களில் ஈடுபடுவர். அதே போன்று கொள்ளையிடுமிடத்தில் பணம் இல்லையென்றால் உடனே ஆத்திரமடைந்து கடை அல்லது எந்த இடமாக இருந்தாலும் உடனே தீயிட்டு அழித்து விடுவதன் மூலம் மன அமைதி அடைவார்கள். தீயிட்டுச் சொத்தை அழித்தல் சூழ் நிலையால் நிகழ்வதாகும். இதை அறிந்த பொது மக்களும் கடையை மூடும்போது பூராப் பணத்தையும் எடுத்துக்கொண்டு பெட்டியைக் காலியாக விடுவதில்லை. அதில் கொஞ்சம் பணத்தை வைத்தே கடைகளை மூடும் வழக்கம் பல வாணிகர்களிடம் உண்டு. சிறு தொகை போனாலும் சொத்தை அழிக்காமல் விடுகிறார்களல்லவா !

இறுதியாக, குற்றவொழுக்க முறை, குற்றக் குழுக்களின் அமைப்பு முறை ஆகியவை தனி நபரின் குற்றச் செயல்களின் கூட்டுமட்டுமல்ல இதில் குற்றக் குழுவின் கட்டளை விதிமுறைகள், குற்றக் குழுக் குறிகள் அல்லது குற்றக் குறிகள் (Criminal Codes) குற்றக் குழுவின் மதிப்புணர்ச்சிகள் (Esprit de Corps) சமுதாயத்தின் அந்தரங்க ஆதரவு, குற்ற வாழ்க்கைத் தொழிலர்களின் வாழ்க்கை வரலாறு ஆகியவை குற்றக் குழுவின் அமைப்பு முறையில் காணப்படும்.

இந்த அத்தியாயத்தில் குற்றத் தகுதி அடைதல், குற்ற நுட்பங்கள், குற்றக் குறி, குற்றக் குழூக்குறி ஆகியவற்றைப்

பற்றி ஆராயப்பட்டது. இவற்றை மேலும் ஆராய்ந்து குற்றக் குறி, குற்றக் குழூக்குறி ஆகியவற்றைக் கண்டறிந்துவிட்டால்—குற்றங்களை முன்கூட்டித் தடுப்பதற்கும், குற்றவாளிகள் தப்பி ஓடா வண்ணம் தடுக்கவும் ஏதுவாக இருக்கும். அவற்றை ஆராய்ந்தறிய வேண்டுமானால் ஆராய்ச்சியாளனும் சில காலம் குற்றக் குழுவுடன் இணைந்து, அவர்களில் ஒரு அங்கத்தினராக விளங்குதல் வேண்டும். அப்படிப் பழகினால் முழு வெற்றி கிடைக்கும் சமுதாயத்தில் பெரிய மனிதர் போர்வையில் பக்திமான், வள்ளல் ஆகிய வேடத்துடன் திரைக்குள் யார் யார் வாழ்கின்றனர்கள் என்பதை ஆராய்ந்து சமுதாயத்தின் இரும்புத் திரை கிழிக்கப்படவேண்டும். மேலும் குற்றக் குழுக்களின் கோட்டைகள் எங்கெங்கே, எந்தெந்த முறையில் செயற்படுகின்றன என்பதையும் அதற்கு மறைமுக ஆதரவு நல்கும் அரசியல் தலைவர்களையும், அரசாங்க அதிகாரிகள் யார் யார் என்பதையும் கண்டு கையும் களவுமாகப் பிடிப்பதற்கு அடிப்படையாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்துடன் சமுதாயத்தில் இரு வழிகளில் செயல்படுவதும் இருவித அரசாங்கங்கள் நடைபெறுவதையும் காண முடியும். ஆனால் இந்தக் கடுமையான சோதனையில் ஈடுபடுவது யார்?

11. குற்றப் புள்ளி விவரங்கள்

(Criminal Statistics)

இது வரையில் குற்றங்களுக்கான பல்வேறு காரணக் கூறுகளை ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் குற்றப் புள்ளி விவரங்களையும் அதைச் சேகரிப்பதுபற்றியும் அதிலுள்ள குறைபாடுகளைப் பற்றியும் ஆராய்வோம்.

குற்றப் புள்ளி விவரங்கள்தாம் ஒரு நாட்டின் வளத்தையும், வறுமையையும், நல்லொழுக்கத்தையும் குற்றவொழுக்கத்தையும், சட்டத்தையும் அதைச் செயற்படுத்தும் முறையையும் அறிந்து கொள்ள அடிப்படையாக அமைகின்றன. ஆகவேதான் குற்றம், குற்ற வழிகள், வகைகள் ஆகியவற்றைப் பற்றிய புள்ளி விவரங்கள் பெரும்பாலும் உண்மையான புள்ளி விவரங்களை அளிப்பதில்லை. அளிக்கப்படும் புளளி விவரங்களும் நம்பக் கூடியவையாக இருப்பதில்லை. இதற்குப் பல்வேறு காரணக் கூறுகள் உள.

பொதுவாக, குற்றங்கள் புரிந்து, அதற்காகக் குற்றம் சாட்டப் பட்டுக் குற்ற நீதி மன்றத்தில், குற்ற விசாரணை நடத்தி, குற்றம்சாட்டப்பட்டவனுக்கு சிறைத்தண்டனையோ அல்லது அபாராதமோ விதிக்கப்பட்ட பிறகுதான் அவனுக்குக் குற்றவாளி என்று பெயர். இந்தக் குற்றவாளியினைப்பற்றிய தகவல்களைக் குற்றப்பட்டியலில் (Crime index) இருந்து எளிதில் அறிந்து கொள்ளலாம். குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுப் பதற்கும் குற்றத்திற்குரிய காரணக் கூறுகளை அறிவதற்கும், இக் குற்றப் பட்டியல் ஒரு விதத்தில் பயன்படுகிறது. ஆனால் குற்றங்கள் புரிந்துவிட்டு சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்பிவிட்டவர்கள், குற்றத்தைச் சரிகட்டி (Fix things) விட்டவர்கள், செல்வாக்காளர் குற்றம் புரிந்தவர்கள் (White Collar Criminals) ஆகியவர்களின் எண்ணிக்கையை எப்படிக் கணக்கெடுப்பது? இதனால் குற்ற விவரத்தில் குறைவான குற்ற எண்ணிக்கைதான் இருக்க முடியும்.

நீதி மன்றம், காவல் துறை, சிறைச்சாலை ஆகிய இடங்களில் குற்றப் பட்டியல்கள் இருக்கும். ஆனால் ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருக்கும். காவல் துறையில் அதிகமான குற்ற எண்ணிக்கையும் நீதிமன்றத்தில் அதற்குக் குறைவாகவும், சிறைச் சாலையில் அதைவிடக் குறைவாகவும் இருக்கும். காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் சில பல காரணங்களினால் நீதி மன்றத்திற்கு அனுப்பாமலே குற்ற விசாரணை நடத்தியோ அல்லது சமரசம் செய்தோ அல்லது அரசியல் தலையீட்டினாலோ அல்லது மேலதிகாரிகளின் பரிந்துரையினாலோ அல்லது செல்வந்தர் என்ற காரணத்தாலோ அல்லது போதிய சான்றுகள் இல்லாத காரணத்தாலோ அல்லது கையூட்டு வாங்கிக்கொண்ட காரணத்தினாலோ மேற்கொண்டு வழக்குத் தொடராமல் காவல் துறை அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டவனை (Accused) விடுவித்து விடுகின்றனர். இப்படிப் பல குற்ற வழக்குகள் நீதி மன்றத்துக்குச் செல்லாமல் தடைப்படுவதனால் நீதிமன்ற குற்றப் புள்ளிவிவரப் பட்டியலில் குற்ற எண்ணிக்கை குறைய ஏதுவாகிறது. அடுத்து நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் சில பல காரணங்களினால் தொடர்ந்து விசாரணை நடத்த முடியாமல் வழக்கைத் தள்ளுபடி செய்து குற்றவாளியை விடுவித்தோ அல்லது விடுதலை அளித்தோ தீர்ப்பு வழங்கப்படுகின்றது. குற்றவாளி என்று நீதி மன்றத்தில் நிரூபிக்கப்பட்டாலும் சிறைத் தண்டனை அளிக்காமல் வெறும் அபராதம் மட்டும தண்டனையாக விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்குவார் அல்லது அபராதத்துடன் நீதிமன்றம் கலைகின்ற வரையில் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்குவார் அல்லது குற்றவாளி என்று தெரிந்தும் அபராதமோ சிறைத் தண்டனையோ வழங்காமல் குற்றவாளியைக் கண்டித்து மன்னிப்பு வழங்கிவிடுவார் அல்லது குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கி ஆனால் சிறைக்கு அனுப்பாமல் நன்னடத்தை உறுதி மொழி விடுதலையில் (Probation) செல்ல அனுமதித்துவிடுவார். இதனால் குற்றவாளிகள் சிறைக்கு அனுப்பப்படாமல் நீதி மன்றத்திலேயே மேற்கூறிய பல்வேறு காரணங்களால் விடுவித்து விடுவதனால் சிறைச் சாலையிலுள்ள குற்றப் புள்ளி விவரப் பட்டியலில் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைய ஏதுவாகின்றது.

தமிழகத்திலுள்ள சிறைச் சாலைகளில் ஏறத்தாழ பதினான்கு ஆயிரம் 14,000) முதல் இருபதினாயிரம் (20,000) வரையில் கைதிகள் எப்போதும் உள்ளனர் என்றும் சிறையிலிருந்து ஒரு வருடத்தில் விடுதலை அடைபவர்களின் எண்ணிக்கை ஏறத்

தாழ பத்தாயிரம் (10,000 முதல் பதினான்காயிரம் 14,000) வரை ஆகும் என்று குற்ற அறிக்கை கூறுகின்றது. இந்த எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இந்தியா முழுமைக்கும் ஒரு வருடத்தில் ஏறத்தாழ பத்து லட்சம் (10,00,000) குற்றவாளிகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்படுகின்றார்கள் என்று மற்றொரு குற்ற அறிக்கை (Criminal Report) அறிவிக்கின்றது. ஒவ்வொரு லட்சம் பேருக்கு (1,00,000) 180 நபர்கள் சிறையில் உள்ளார்கள். இதில் பெண்களின் குற்ற எண்ணிக்கை மிகவும் குறைவாகும் அதாவது 4·3 சதம் கைதிகளும் 3·2 சதம் குற்ற விசாரணை நிலையில் உள்ளதாக அதே அறிக்கை கூறுகின்றது. ஆண் பெண் குற்ற விகிதங்கள் மாநிலத்திற்கு மாநிலம் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றது. அதாவது 1960 முதல் 1965 வரை பெண்களின் குற்ற விசாரணை எண்ணிக்கையும் பெண் கைதிகளும் இணைந்து 45—46 சதம் உள்ளனர். இது 1961 ஆம் ஆண்டை விட 45 சதம் அதிகரித்துள்ளது. ஆனால் அதே காலங்களில் ஆண்களின் குற்ற விசாரணையின் குற்ற எண்ணிக்கை 8 சதமும், 1·2 சதம் கைதிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே போன்று ஆந்திரா, தமிழ் நாடு, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பெண் குற்றவாளிகளின் சதம் 73 ஆகவும், குற்ற விசாரணையில் உள்ளோர் எண்ணிக்கை 54 சதமாகவும், ஆனால் ஆண்களின் குற்றவாளி எண்ணிக்கை 54 சதமாகவும், குற்ற விசாரணையில் உள்ளோர் எண்ணிக்கை 40 சதமாகவும் காணப்படுகின்றது. மேலும் 1961 முதல் 1965 வரை மகாராஷ்டிராவில் பெண் குற்றவாளிகளின் எண்ணிக்கை 426 சதம் உயர்ந்து காணப்படுகின்றது. ஆனால் ஆண்களின் எண்ணிக்கையில் 110 சதம் தான் உயர்ந்துள்ளது. அதே காலத்தில் பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால் மைசூரில் பெண்களின் குற்ற எண்ணிக்கை அதிக அளவில் குறைந்துள்ளது. அதாவது 72 சதமும் ஆண் குற்றவாளி 56 சதமும் ஆகும். பெண் குற்றவாளிகளில் 72 சதம் 21 முதல் 40 வயது வரை உள்ளவர்கள். மற்றும் 10 சதத்தில் 16 முதல் 20 வயது உடையவர்களாகும். அதேபோன்று ஆண் குற்றவாளிகளில் 21 முதல் 40 வயது உடையவர்கள் 67 சமுதம் 16 முதல் 20 வயது உடையவர்கள் 17 சதமும் ஆகும். பெண் குற்றவாளிகளில் கற்றவர்கள் 12 சதமும் ஆண் குற்றவாளிகளில் 33 சதமும் ஆகும். இதில் தேசிய கல்வி விகிதம் 18·4 சதம் பெண்களும் 39·5 சதம் ஆண்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து, பெண் குற்றவாளிகளில் திருமணம் ஆனவர்கள் 73 சதமும், திருமணம் ஆகாதவர்கள் 15 சதமும், விதவைகள் 12 சதமும் என்று குற்ற அறிக்கையில் காணப்படுகின்றது. மேலே காணும் குற்றப் புள்ளி விவரங்களை ஆராய்ந்தால் பெண்களின் குற்ற எண்ணிக்கை பெருமளவிற்கு அதிகரித்துள்ளதை அறியலாம். இந்தியாவில் பெண்களின் குற்ற எண்ணிக்கை அதிகரித்துள்ளதற்கு முக்கியமான காரணக்கூறு இந்திய பெண்கள் மேலைநாட்டு நாகரிகத்தின் சாயலை, பண்பாட்டைப் பின்பற்றி வருவதேயாகும். இதனால் இந்திய பெண்களிடத்திலே குற்றவொழுக்கம் மிகுந்தும் ஆடம்பரமான வாழ்க்கையை விரும்புவதாலும் பெண்கள் பரத்தைமை, பாலுறவுக் குற்றம், கள்ளக் கடத்தல் திருடுதல், சூதாடுதல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்றல் ஆகிய குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 1960-ல் மொத்த குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை 6,08,367-ம் 1970-ல் 9,55,422-ம் எண்ணிக்கையாக உயர்ந்துள்ளது இதில் மாநிலத்திற்கு மாநிலம் குற்ற எண்ணிக்கை விகிதம் வேறுபடுகின்றது. பரப்பளவு, மக்கள்தொகை, தட்பவெப்பநிலை, சுற்றுச் சூழ்நிலைகள், வறுமை, நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், வேலையின்மை போராட்டம், காவல் துறையினர்களின் கட்டுப்பாடு, அரசியல் திறமை, குற்றச் சட்டத்தை செயற்படுத்தும் முறை ஆகிய காரணக் கூறுகளினால் குற்ற எண்ணிக்கை விகிதம் மாறுபடுகின்றது. மேலும் கொள்ளை, கூட்டுக் கொள்ளை, கலகக் குற்றம், ஆட்கடத்துதல் ஆகிய குற்றங்களும் இதர குற்றங்களும் பெருமளவுக்குப் புரியப்பட்டுள்ளன. பெண் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை 1960-ல் 20,165 இலிருந்து 1970-ல் 27,226 ஆக உயர்ந்துள்ளது. மேலே கூறப்பட்ட குற்றங்கள் அனைத்தும் பிணையில் விடத் தகாத குற்றங்கள் ஆகும். ஆனால் பெண் குற்றவாளிகளில் 6 மாதத்திற்கு மேல் சிறைத் தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை 5 சதமும் ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களின் குற்ற எண்ணிக்கை 0·8 சதமும் ஆகும். அதே போன்று ஆண்களில் 6 மாதத்திற்குமேல் சிறைத் தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை 15 சதமும் ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வீதம் 1 சதமுமாகும். மேலும் மரண தண்டனை வழங்கப்பட்டவர்களின் குற்ற எண்ணிக்கை வீதம் ஆண்களில் 0·2 சதமும், பெண்களில் மரண தண்டனை ஒருவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து குற்றங்கள் மீண்டும் புரிவதில் ஆண்களில் 5 முதல் 7 சதமும், பெண்களில் 2 முதல் 5 சதமும் ஆகும். அடுத்து, குறைந்தகால சிறைத் தண்டனை அனுபவித்தவர்களில் பெண்களில் 95 சதமும், ஆண்களில் 85

சதமும் ஆகும். திரும்பத் திரும்ப குற்றம் புரிவதில் பெண்களைவிட ஆண்கள் அதிக அளவு காணப்படுகிறார்கள்.

இங்கிலாந்தில் சிறைத் தண்டனை குறைந்தும் குற்றவாளிகளுக்குப் புதுவாழ்வு அளித்தும் போதிய கல்வி. தொழில் ஆகியவற்றை வழங்கி வந்த காரணத்தினால் குற்றவாளிகளின் எண்ணிக்கை விகிதம் குறைந்துவிட்டது. அதாவது 50 ஆண்டு கால சீர்திருத்தத்தினால் விளைந்த நன்மையாகும். 1913-ல் 1 38,570 குற்ற எண்ணிக்கையிலிருந்து 1968-ல் 36,039 குறைந்துவிட்டது. இங்கிலாந்தில் 196?-ல் 3 மாத சிறைத் தண்டனைக்குக் குறைவாக அடைந்தவர்களின் எண்ணிக்கை விகிதம் 38·4 சதமும் அதே வருடத்தில் இந்தியாவில் 3 மாதத்திற்குக் குறைவாக தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை விகிதம் 80 சதமாகும். எந்த நாட்டில் குற்ற எண்ணிக்கை விகிதங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவோ அந்த நாட்டின் பொருளாதாரம் மேலும் சீர்கேடு அடையும். ஆக்க வேலைக்குப் பணத்தைச் செலவு செய்து பொருள்களை உற்பத்தி செய்வதை விடுத்துச் சட்டம், ஒழுங்கு. அமைதி ஆகியவற்றைப் பராமரிக்கச் செலவு செய்யப்பட்டால் அதனால் விளையக்கூடிய நன்மைதான் என்ன? இந்தியாவில் மொத்தம் 1,100 சிறைச்சாலைகள் உள்ளன. அத்துடன் ஆயிரக் கணக்கான குற்ற நீதிமன்றங்களும், காவல் துறை நிலையங்களும் லட்சக்கணக்கான காவல் துறை அதிகாரிகளும் இணைந்து செயல்பட வேண்டியுள்ளன. மேற்கூறப்பட்ட நிர்வாகங்களுக்கு ஏற்படும் செலவினால் மக்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக ஒரு கைதிக்கு ஆண்டுக்குச் சராசரி செலவு ரூபாய் 500 முதல் 600 வரை ஆகின்றது. மேற்கூறப்பட்ட காரணங்களினால் நாடு மேலும் வறுமையில் உழல ஏதுவாகின்றது என்று வாரப் பத்திரிகையில் காணப்படுகின்றது. (Illustrated Weekly dated 25-8-74). தமிழ் நாட்டில் 1969-70 ஆண்டுகளின் குற்றப் புள்ளி விவரங்கள் பின் வருமாறு: 1969-ல் மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 11,44,085-ம், 1970-ல் 12,42,124 ஆக உயர்ந்துள்ளது. இவை இந்திய குற்றச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்ற எண்ணிக்கையாகும். அடுத்து இந்திய குற்ற நடைமுறைச் சட்டம் மற்றக் குற்றச் சட்டங்கள் ஆகிய குற்றச் சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1969-ல் 1,20,489-ம் 1970-ல் 13,16,104-ம் ஆக உயர்ந்துள்ளது. இந்திய குற்றச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளில் 30 சதம் மனித உடலுக்கு எதிரான குற்றங்களாகும் (Offence against the human body). சொத்துக்கு எதிரான

குற்றங்கள் (Offence against the Property) 44 சதவீதம் காணப் படுகின்றன. இதில் திருட்டுக் குற்றம், உடலுக்கு எதிரான குற்றங்கள் அதிக அளவில் உள்ளன. 1969-ல் கொலைக் குற்றங்கள் 4264 ம் 1970-ல் 7110 ஆக உயர்ந்துள்ளது. கருச்சிதைவு, சிசுக் கொலை, சிசுவைக் கொன்று மறைத்தல், பிறப்பை மறைத்தல் வன்முறைத் தாக்க முனைதல், சட்டத்திற்கு முரணாகத் தடுத்தல், சட்டத்திற்கு முரணாக அடைத்து வைத்தல், ஆட்கடத்துதல், அடிமைப்படுத்தி வேலை வாங்குதல், வன்புணர்ச்சி, காயம் உண் டாக்குதல் ஆகிய குற்றங்கள் உடலுக்கு எதிரான குற்றங்களாகும். திருட்டு, அச்சுறுத்தி அபகரித்தல் கொள்ளை, கூட்டுக் கொள்ளை, கையாடல், நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல், சொத்து அழித்தல், மோசடியான சொத்து மாற்றங்கள் ஆகியவை சொத்துக்கு எதி ரான குற்றங்களாகும். மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப் பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 3,58,537 ஆகும். தமிழ்நாட்டில் 1969 ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்ற வாளிகளின் எண்ணிக்கை 117 ம் 1970-ல் 266 ஆக உயர்ந் துள்ளது. அதே போன்று 1969-ல் ஆயுட்கால சிறைத் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளின் மொத்த எண்ணிக்கை 204-ம் 1970 ல் 289 ஆகவும் உயர்ந்துள்ளது. மேலும் கடும் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளின் மொத்த எண்ணிக்கை 1969 ல் 67,938, 1970-ல் 80,778 ஆக உயர்ந்துள்ளது. அடுத்து எளிமையான சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1969-ல் 68,768-ம், 1970 ல் 1.2?3.19 ஆகவும் உயர்ந்துள்ளது. அபராதமும் சிறைத் தண்டனையும் இணைத்து விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1969 - ல் 1,00,662-ம், 1970-ல் 2,11,116 ஆக உயர்ந்துள்ளது. வெறும் அபராதம் மட்டும் தண்டனையாக விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1969-ல் 4,27,114-ம், 1970-ல் 7,53 615 ஆக உயர்ந்துள்ளது. 1969-ல் விதிக்கப்பட்ட அபராதத் தொகையின் மொத்த ரூபாய் 1,61,15,908-ம் அதில் 1.54.89,168 ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று 1970-ல் அபராத மாக விதிக்கப்பட்ட மொத்த தொகை ரூபாய் 1,77,55,838·97 அதில் வசூல் செய்யப்பட்ட தொகை 1,62,45,560·02 இதில் பாதிக்கப்பட்டவர்களுக்காக (Victim) வழங்கப்பட்ட இழப்பீடு 1969-ல் 61,225 ரூபாய் 1970-ல் 92,661·01 ஆக உயர்ந் துள்ளது. மேற்கூறிய குற்றப் புள்ளி விவரத் தகவல் தமிழக அரசின் குற்றப் புள்ளி விவரப் பட்டியலிலிருந்து அறிய முடிகிறது.

ஒரு நாட்டின் குற்ற விகிதங்கள் உயர்வதற்குப் பல காரணக் கூறுகள் ஏதுவாகின்றன. அதாவது மக்கள் தொகைப் பெருக்கம்,

வேலையில்லாத் திண்டாட்டம், உள் நாட்டுப் போர் அல்லது கலகம், கட்சிகளின் போராட்டம், தொழிலாளர் போராட்டம், விவசாயிகளின் போராட்டம், மாணவர் போராட்டம், திறமை யற்ற ஆட்சி ஊழல், சமுதாயத்திற்குத் தேவையற்ற சட்டங்களை இயற்றுதல் ஆகியவையாகும். மேலும் பல குற்றச் செயல்கள் குற்றம் என்றும் குற்றமல்ல என்றும், மாநிலத்திற்கு மாநிலம், நாட்டிற்கு நாடு வேறுபடுவதனால் குற்ற எண்ணிக்கை மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக பிறன்மனை புணர்தல், மதுவிலக்கு, பரத்தைமை காமக்கிழத்தி (Concubine) மணமாகா ஆண்பெண் கலவி (Fornication), முறை தகாப்புணர்ச்சி (Incestius) ஆகியவையாகும்.

செல்வாக்காளர் குற்றம் (White Collar Crime)

செல்வாக்காளர் குற்றம் (White Collar Crime) என்பதைப் பற்றி முதன் முதலில் சதர்லாண்டு (Southerland) தமது 'குற்றவியல் கோட்பாடு' என்ற நூலில் குற்றத்திற்கான வரையறையைத் தெளிவாக விளக்கங்களுடன் அளித்துள்ளார். அவரைத் தொடர்ந்து பல குற்றவியல் வல்லுநர்கள் மேலும் விளக்கங்கள் அளிக்கவும், ஆராயவும் முயன்றுள்ளனர். சமுதாயத்தில் செல்வாக்கும், தகுதியும், கௌரவமும், உயர்ந்த பதவி அல்லது பொறுப்புக்களில் வகிப்பவர்களும், அலுவலகத்தில் பணியாற்றுபவர்களும் தங்களின் பதவி அல்லது செல்வாக்கு அல்லது கௌரவம் உள்ள காலத்தில் புரியும் குற்றத்திற்கு 'செல்வாக்காளர் குற்றம்' என்று பெயர். மேலும், சமூகத்தில் மற்ற மக்களைவிட இவர்களுக்கு அதிக கௌரவமும், பொருளாதார மற்ற ஏனைய பிற நிலையில் உயர்ந்தும் காணப்படுவதனால் இவர்கள் சமூகத்தில் செல்வாக்கு உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்கள். இவர்கள் புரியும் குற்றத்திற்குச் 'செல்வாக்காளர் குற்றம்' என்றும், அக் குற்றவாளிக்கு 'செல்வாக்காளர் குற்றவாளி' என்றும் பெயரிடலாம்.

செல்வாக்காளர் குற்றங்கள் குற்றப் பட்டியலில் இடம் பெறுவதில்லையே தவிர, இவ்வகையான குற்றங்கள் உலகெங்கிலும் பெருமளவில் புரியப்பட்டு வருகின்றன. பொதுவாக, இவ்வகையான குற்றவாளிகள் மீது குற்றம்சாட்டப்படுவதுமில்லை வழக்குத் தொடரப்படுவதுமில்லை. மேலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதுமில்லை. சமுதாயத்தில் இவர்களுக்கிருக்கும் செல்வாக்கு, பொருளாதார வசதிகள், அரசியல் செல்வாக்கு, அற்பமான அல்லது சிறு குற்றங்கள் அல்லது குற்றத்தை நிருபிக்கப் போதுமான சான்றுகள் இல்லாமை அல்லது கூட்டு நிறுவனங்களில் புரியும் குற்றம் ஆகிய பல்வேறு நிலைகளில் பல்வேறு

காரணக் கூறுகளினுல் வழக்கு தொடரப்படாமல் விட்டுவிடப் படுகின்றன.

சமுதாயத்தில் உள்ள செல்வந்தர்கள், பெரிய மனிதர்கள், அதிகாரிகள். அரசியல் தலைவர்கள் ஆகியோர்கள் குற்றம் புரிந்தாலும் அவர்கள்மீது குற்ற நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடுவதற்கு முக்கிய காரணக் கூறுகள் சமுதாய உணர்ச்சியின்மை. இயற்கை நீதியின்மை எல்லோரும் சமம் என்ற கோட்பாடு இன்மை ஆகியவையாகும். அதாவது, காவல் துறை, குற்ற நீதிமன்றங்கள் ஆகியவையே செல்வாக்காளர் குற்றவாளிகளைப் பாதுகாக்க ஆதரவாக இருக்கின்றன. அப்படியே செல்வாக்காளர் குற்றவாளிகள்மீது குற்றவழக்குத் தொடரவேண்டிய நிலை வந்தால் குற்ற நீதிமன்றத்தில் தொடராமல் தனி விசாரணைக் குழுவின் (Commission) முன்பு விசாரணை நடத்தும்படி ஊக்குவிக்கலாம். அல்லது உரிமை நீதி மன்றங்களில் (Civil Courts) வழக்குத் தொடரும்படி பரிந்துரைத்தல். இப்படிப் பல சலுகைகள் செல்வாக்காளர் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படுகின்றன. ஆனல் இந்திய குற்றச் சட்டத்திலோ அல்லது குற்ற நடைமுறைச் சட்டத்திலோ வேறுபாடு அல்லது ஆதரவு வழங்க வேண்டுமென்று கோரப்படவில்லை. சாதி மதமின்றி ஏழை பணக்காரரின்றி, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி கற்றவர். கல்லாதவர் என்ற வித்தியாசமின்றி, ஆண் பெண் என்ற வேறுபாடின்றி, இந்திய குடிமக்கள், இந்தியாவில் தங்கி உள்ள அயல் நாட்டுக் குடிமக்கள் ஆகியோர் யார் எந்தக் குற்றத்தைச் செய்தாலும் அவர்கள் இந்திய குற்றச் சட்டத்தின் கீழோ அல்லது பிற குற்றச் சட்டத்தின் கீழோ குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடத்தி, தண்டனை வழங்கப்படுவார்கள். ஆனல், நடை முறையில் நடப்பது வேறாகும். சட்டத்திற்கு முரண்பாடான செயல்களைப் புரிய ஊக்குவிக்கப்படுகின்றார்கள். அதை ஏன் என்று தட்டிக் கேட்கக்கூடிய நல்லோர்கள், வல்லோர்கள், அறவோர்கள், பொது நலவாதிகள், மக்களிடையே இல்லாமலிருப்பதனுல் அரசாங்கம், நீதிமன்றம், காவல்துறை, நிர்வாகத்துறை, சட்டமன்றம் ஆகியவை தங்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்பச் செயற்பட்டு வருகின்றன. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட எதிர்க் கட்சியாக இருக்கும்போது "நீதி அழிந்துவிட்டது, நீதி மன்றங்கள் நேர்மையாகச் செயல்படவில்லை, காவல் துறையியினரின் ஓரவஞ்சனைப் போக்கு மிகவும் கண்டிக்கத் தக்கது, சமுதாயத்தில் பணக்காரர்களுக்கும், செல்வாக்கு உள்ளவர்களுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் வன்முறைகளுக்கும் அரசாங்கம் கீழ்ப்படிந்து விடுகிறது" என்றெல்லாம் குற்றம் சாட்டி

யவர்கள், அவர்களின் பேச்சு, நேர்மையான வாதங்கள், பொது வான கருத்துகள் ஆகியவற்றை மக்கள் ஏற்று எதிர்க்கட்சிக்கு நாடாள வாய்ப்பளிக்கிறார்கள். இதனால் எதிர்க்கட்சியாக இருந்த வர்கள் ஆளுங்கட்சியாக மாற்றப்பட்ட பின்பும் மேலே கண்ட குறைகள் நீக்கப்பட்டுவிட்டனவா என்றால் ஏமாற்றத்தைத் தவிர வேறு கிடையாது. சில நேரங்களில் முன்னைவிட அதிக மோச மான நிலைமையும் உருவாகிவிட வாய்ப்புண்டு. இதே நிலை மாறி மாறித் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருப்பதை உலக வரலாறு அறிவிக்கின்றது.

சமுதாயத்தில் செல்வாக்காளர் குற்றம் பல நிலைகளில் புரியப் பட்டு வருகின்றது. அதாவது தவறான விளம்பரங்கள், தகவல் தொகுப்புகள் ஆகியவை மூலமாக எத்தனையோ கூட்டுறவு நிறுவனங்கள் பணத்தைக் கொள்ளையடிக்கின்றன. மோசடியான விளம்பரங்களை நம்பிப் பொதுமக்கள் ஏமாந்துவிடுகின்றார்கள். அதாவது குறைந்த விலையில் வசதியான வீடுகள் கட்டிக் கொடுக் கப்படும் என்றும், குறைந்த தவணை முறையில் விலையுயர்ந்த பொருள்களைப் பெறலாம் என்றும், ஒன்பது ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கினால் மாதம் 27 ரூபாய் கிடைக்கும் என்றும் பல மோசடியான, மக்கள் மயங்கி ஏமாந்து போகக்கூடிய விளம் பரங்கள் தினமும் செய்தித் தாளில் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்தப் போலி விளம்பரங்களைப் படித்துவிட்டு கையிலுள்ள பணத்தைப் பறிகொடுத்து விட்டுத் துன்பப்படும் மக்கள் ஏராளம். இந்த மோசடியான விளம்பரம் காவல் துறை அதிகாரிகளுக்கும், மற்ற நிர்வாக அதிகாரிகளுக்கும் நன்றாகத் தெரிந்திருந்தும், இதைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதை விளம்பரம் செய்கின்ற செய்தித்தாள் நிறுவனத்தாருக்கும் இது மோசடியான விளம்பரம் என்று தெரிந்தும் அவர்களுக்குப் பணம் கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அதை வெளியிட்டு மக்களைப் பலி யாக்கிவிடுகிறார்கள். மோசடியான விளம்பரங்களினால் வந்து குவிந்த பணத்துடன் கொடுக்கப்பட்ட முகவரியை விட்டு உடனே வேறு ஊர்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். இதனால் பாதிக்கப் பட்டவர்கள் காவல் துறை அதிகாரிகளிடம் வழக்கு கொடுத் தாலும் அவர்கள் வழக்கைப் பதிவு செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் 'நீ ஏன் ஏமாந்தாய்'' என்று திருப்பிக் கேட்பார்கள் அல்லது தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிப்பார்கள். ஆனால் பிறகு ஒன்றும் நடவாது. அப் படியே மீறிக் குற்றவாளிகளைக் கைது செய்தால் உடனே குற்றவாளி தன் அரசியல் அல்லது மற்ற செல்வாக்கைப் பயன் படுத்தி மேற்கொண்டு குற்ற நடவடிக்கை எடுக்காதவாறு செய்து

விடுகின்ருன். அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டிய தொகையில் கால் அல்லது அரைப்பங்கு இழப்பீடாகக் கொடுத்து வழக்கைத் தொடரா வண்ணம் தடுத்துவிடுவார்கள். அல்லது தொடர்ந்திருந்தாலும் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வைத்துவிடுவார்கள். இம்மாதிரி சமுதாயத்தில் தினந்தோறும் எண்ணற்ற வழக்குகள் நடக்கின்றன. அதே போன்று வாணிகர்கள் புதிய புதிய விளம்பரங்களை வெளியிடுவார்கள். அதாவது பாதி விலை, புதிய துணி, மாதிரிக்காக விற்பனை (Sample sales) 25 முதல் 50 சதம் வரை தள்ளுபடி (Rebate) என்று பெரிய விளம்பரங்களைக் கொடுத்து, மக்களை மயக்கித் தங்கள் கடைகளுக்கு வரவழைத்து விடுவார்கள். ஆனுல் பொருளின் விலையைக் கூட்டிவிட்டு, பிறகு தள்ளுபடி என்ற பெயரால் அதே விலைக்கோ அல்லது உயர்த்தியோ விற்பனை செய்துவிடுவார்கள். இப்படிப் பல வகையான வாணிகர்களும் மோசடியான விளம்பரங்கள் வாயிலாக மக்களை ஏமாற்றிவருகின்ருர்கள். அவர்களைத் தடுக்கவோ தண்டனை வழங்கவோ யாரும் முன்வருவதில்லை. இவ்வகையான குற்றவாளிகள் சமுதாயத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்ருர்கள். ஆனுல் இவர்கள் புரியம் குற்றம் குற்றப் பட்டியலில் இடம் பெறுவதில்லை.

அதேபோன்று வணிகக் குறி (Trade mark) பதிப்புரிமை மீறல் (Copy right) பொருளாதார மோசடி, போர்க்கால விதிமுறைகளை மீறல், பஞ்சகால விதிமுறைகளை மீறல் ஆகிய குற்றங்களை வாணிகர்களும் செல்வந்தர்களும் புரிந்துகொண்டு வருகின்ருர்கள். ஆனுல் அவர்கள்மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. மேலும் சீட்டு நிதி (Chit Fund) நிறுவனத்தார்கள் பல தவருன விளம்பரங்கள் செய்து மக்களின் பணத்தை மோசடி செய்து விடுகின்ருர்கள். மற்றும் தொழிலாளர் விதிமுறைகளை மீறுதல் (Unfair Labour Practices) அதாவது அதிக உழைப்பு, குறைந்த கூலி வழங்குதல் ஆகிய குற்றங்களை ஆலை முதலாளிகள் புரிந்து வருகின்ருர்கள். ஆனுல் அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. மற்ற வணிகப் பொருள்களை விற்பதில் மோசடி செய்தல். அதாவது தவருன கருத்துகளை, உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுத் தரமற்ற பொருள்களை உயர்ந்த தரம் உள்ளவையாக விளம்பரம் செய்தல். அதாவது பற்பொடி, முகப்பூச்சு, மருந்துகள் மற்றும் எண்ணற்ற வணிகப் பொருள்கள் தவருன விளம்பரங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. விலைப்பட்டியல் தயார் செய்வதிலும், போலியான பட்டியலையும், உண்மையான பட்டியலையும் தயாரித்துப் போலியான பட்டியலைப் பொது மக்கள் பார்வைக்கு வைத்தல் உண்மை

யான பட்டியலை மறைத்துவிடுதல் போன்ற செயல்களையும் வாணிகர்கள் செய்யத் தவறுவதில்லை. மேலும், 'வாங்குநர் கவனிக்க' (Caveat Emptor) என்ற கொள்கையை நீதி மன்றங்கள் கடைப்பிடிப்பதனால் மோசமான பொருள்களைத் தரமான பொருள் என்று சொல்லி விற்றாலும் அந்த வாணிகர்மீது வழக்குத் தொடர முடிவதில்லை. ஆனால், இவ்வகையான குற்றங்களைச் செல்வாக்காளர் குற்றப் பட்டியலில் இணைத்துள்ளார் சதர்லாண்டு. அதேபோன்று ஈட்டுறுதி நிறுவனங்களில் (Insurance Company) பல மோசடிகள் புரியப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக ஒருவர் சாலை விபத்தில் இறந்துவிட்டால், இறந்தவரின் வாரிசு இழப்பீடு (Damages) பெறுவதற்காக விபத்துக்குக் காரணமானவர்கள் மீது வழக்கு தொடருகின்றான். இதில் ஈட்டுறுதி நிறுவனத்தின் வழக்கறிஞர், மனுதாரரின் வழக்கறிஞர், எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் ஆகிய மூவரும் கூட்டுச் சேர்ந்து குறிப்பிட்ட தொகையை இழப்பீடாக அளிக்க அவர்களுக்குள்ளே தீர்மானித்து விடுகிறார்கள். அதை நீதிபதிக்கு எடுத்துரைத்து நீதிபதியும் அதையே இழப்பீட்டுத் தொகையாகத் தீர்ப்பு வழங்குகின்றார். பொதுவாக, நீதியின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படுவதில்லை. மேலும், நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை முழுவதும் மனுதாரருக்குக் கிடைப்பதில்லை. மனுதாரரின் வழக்கறிஞர் நீதிமன்றத்திலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றார். அல்லது எதிர் மனுதாரரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்கின்றார்கள். பிறகு, அதில் 25 முதல் 50 சதம் வரையில் வழக்குத் தொகையாக (Fees) எடுத்துக் கொண்டு மீதித் தொகையிலும் செலவுத் தொகையைக் கழித்து மற்றதை மனுதாரருக்குக் கொடுக்கப்படுகிறது. மனுதாரரின் வழக்கறிஞர், எதிர் மனுதாரரின் வழக்கறிஞர், ஈட்டுறுதி நிறுவனத்தின் வழக்கறிஞர் ஆகிய மூவரும் இழப்பீடாக வழங்கப்பட்ட தொகையில் பாதியை, பங்கிட்டுக் கொள்கிறார்கள். இதில் மருத்துவர்களும் காவல் துறை அதிகாரிகளும் இழப்பீட்டுத் தொகையிலிருந்து கணிசமான தொகையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இறுதியில் மனுதாரருக்கு மூன்றில் ஒரு பங்கே கிடைக்கிறது. இன்றைய வழக்கறிஞர்களில் பலரும், அதிகாரிகள் பலரும் மேற்கண்டவாறு செய்துவருகின்றார்கள்.

பொதுவாக, வழக்கறிஞர்கள் தொழில் மோசடி நிறைந்து காணப்படுகிறது. அதாவது வழக்கறிஞர்கள் நேர்மையாக, கண்ணியமாகத் தொழில் நடத்தினால், சிறந்து விளங்க முடியாது என்ற கருத்துப் பரவலாகப் பரவியுள்ளது. ஆனால் வழக்கறிஞர்களின் அநீதியான செயல்களையும் மோசடியான செயல்களையும்

கண்காணித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வழக்கறிஞர் மன்றம் (Bar Council) இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடுகிறது. போட்டி மனப்பான்மையால் (Spirit of combat) வழக்கறிஞர்கள் தொழில் வெற்றி பெற சிலவேளைகளில் உண்மையை மறைத்துக் கட்சிக்காரர்களுக்குப் பொய்யான உறுதி அளித்து வழக்கை ஏற்றுக் கொள்கின்றனர்கள். அதாவது வழக்கு வெற்றி பெறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லையென்று நன்றாக அறிந்திருந்தும் எளிமையில் வெற்றி கிடைத்துவிடும் என்று பொய்யாகக் கூறி, கட்சிக்காரரிடம் உரிய பணத்தை வாங்கிவிடுவார்கள். பின் வழக்கு தோல்வி அடைந்தபின் கட்சிக்காரருக்கு ஏதாவது சமாதானம் கூறி அனுப்பிவிடுவார்கள். இவ்வாறு பல வழக்கறிஞர்கள் 'தொழில்' நடத்தி வருகின்றனர்கள். ஆனால் அவர்கள் மீது வழக்கறிஞர் மன்றமோ பொதுமக்களோ எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனால் சமுதாயத்தில் வழக்கறிஞர்களுக்குள்ள கௌரவம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. வழக்கறிஞர்களின் குற்றவொழுக்கத்தால் பொதுமக்களின் நலன் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகின்றது.

அடுத்து வருமானவரி செலுத்துபவர்கள் வரி செலுத்த அஞ்சிப் பல பொதுச் செயல்களுக்குச் செலவழித்ததாகக் கணக்குகாட்டுதல், கோயில் நம்பகங்களில் (Temple trusts) நம்பர்களாக (Trusties) பணியாற்றுவோர் நம்பகங்களின் விதிகளுக்கு முரணாகப் பணத்தைச் செலவழித்தல் அல்லது தம் சொந்த நன்மைகளுக்குச் செய்துவிட்டு கோயில் நம்பகங்களின் செலவுக் கணக்கில் எழுதி விடுதல். மற்றும் அரசாங்க உதவித் தொகை பெற்று நடத்தும் தனியார் பொது நிறுவனங்கள், அனாதை இல்லங்கள், கல்விக் கூடங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகிய நிறுவனங்களும் உதவித் தொகையைத் தவறான முறையில் செலவு செய்துவிட்டுக் கணக்கை மட்டும் ஒழுங்காக எழுதிவிடுதல், மதிய உணவுத் திட்டம் ஆசிரியர்களால் செயற்பட்டபோது பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கவேண்டிய உணவு வகைகளைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துக் கொள்ளுதல் குறிப்பாக பால், மாவு, சர்க்கரை, பருப்பு ஆகிய உணவுப் பொருள்களைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவாக அளிக்காமல், காய்கறியுடன் வழங்கப்பட்டதாகக் கூறும்படி இளம் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல் ஆகிய குற்றங்களும் செல்வாக்காளர் குற்றப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

கையூட்டு கொடுத்தல் வாங்குதல் ஆகிய குற்றங்கள் செல்வாக்காளர் குற்றப்பட்டியலில் இடம் பெறாவிட்டாலும் இக் குற்றம்

பரவலாகப் புரியப்பட்டு வருகின்றது. ஆனால் குற்றவாளிகளைக் கைது செய்வதோ தண்டனை வழங்குவதோ கிடையாது. மேலும் கையூட்டு வாங்குதல், கொடுத்தல் ஆகியவை அரசியல் வாதிகள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரின் கொள்கையாக (Policy) மாறிவிட்டது. கையூட்டு கேட்பதும், கொடுப்பதும் குற்றம் என்ற எண்ணமே எவரிடத்திலும் எழுவதில்லை. ஏனென்றால் சட்டம் இயற்றுபவர்கள். சட்டத்தைச் செயற்படுத்த வேண்டியவர்கள், வழக்கு தொடுக்கவேண்டியவர்கள் ஆகிய மூவருமே இக் குற்றத்தில் ஈடுபட்டிக்கும்போது கையூட்டுக் குற்றத்தைத் தடுப்பது எப்படி? வேலியே பயிரை மேய்கின்ற நிலைதான் இன்றைய அரசுகளின் போக்கு!

அடுத்து அரசாங்கம் ஏலம் விடும்போதும், பொது வேலைகளுக் கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும்போதும் ஒப்பந்தப் பணியைச் செய்து முடிப்பதிலும் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாக பாதை அமைத்தல், பாலம் கட்டுதல், பொது கட்டிடம் கட்டுதல், இன்னும் பிறவும் ஆகும். இவை பல ஊழலுக்குப் பின் செயற்படுத்தப்படுகின்றன. அடுத்து, பள்ளிப் பாட நூல்கள், தனியார் நூல் வெளியீட்டு நிறுவனங்களிலிருந்து வாங்கும்போது குறிப்பிட்ட புத்தகத்தைப் பாடநூலாகத் தேர்ந் தெடுப்பதற்கு பல நூல் நிறுவனங்கள் கல்வி அதிகாரிகளைச் சரி கட்டி அனுமதியைப் பெற்றுவிடுதல் சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது. ஆனால், தமிழகத்தில் அரசே தனி பாடநூல் நிறு வனம் அமைத்துச் செயற்படத் துவங்கியபின் முன் கூறப்பட்ட ஊழல் நீக்கப்பட்டுவிட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் உணவு விடுதி, திரையரங்கு, வங்கிகள், கூட்டுறவு நிலையங்கள், பொது இல்லங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை ஒழுங்குமுறைத் திட்டங்களையும், சுகாதார விதிமுறைகளையும் சாதாரணமாக மீறிவிடுகின்றன. ஆனால் அவற்றின் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய உணவுப் பண்டங்களை விற்பனைக்கு அனுமதித்தல். திரையரங்குகள் சுத்தமாக இல்லாமலும், காற் றோட்ட வசதி இல்லாமல் இருந்தாலும் அவற்றின்மீது நட வடிக்கை எடுக்கப்படுவதில்லை.

மாணவர் உணவு விடுதிகளுக்கு மளிகை சாமான், காய்கறிகள் பழவகைகள் மற்றும் மீன், முட்டை, கோழி, இறைச்சி, பால் ஆகியவற்றை வாங்கும்போது குறைந்த விலைக்கு வாங்கிவிட்டு அதிக விலைக்கும் அதிக அளவு வாங்கினதாகவும் பட்டியல்

தயாரித்தல், அதேபோன்று பொது நிறுவனங்களுக்கும், பொது விழாக்களுக்கும் வாங்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் இன்னும் பிற பொருள்கள் வாங்குவதில் ஊழல் புரிதல் முதலியவை செல்வாக்காளர் குற்றபட்டியலில் இடம் பெறுகின்றன.

துப்பாக்கி, வெடிகுண்டு மற்றும் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மறைமுகமாக கொள்ளைக் கூட்டத்தினருக்கும், கொரில்லாக்களுக்கும், நாட்டிலுள்ள விஷமிகளுக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்தல் மற்றும் காவல் துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற எழுத்தர்கள் ஆகியோர் வழக்குகளைச் சரிகட்ட (Fix things) உதவுதல், கவால்துறை அதிகாரிகளால் சர்வ சாதாரணமாகப் புரியப்பட்டுவரும் சட்ட முரணான கைதுகள் (Illegal Argest) ஆகிய குற்றவாளிமீது குற்றவழக்குத் தொடராமல் விட்டு விடுதல் சர்வ சாதாரணமாகும். இவை குற்றப்புள்ளி விவரப் பட்டியலில் இடம் பெறாததனால் குற்ற எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது. ஆகவே அதிகாரிகளைவிட பொது மக்கள்தாம் அதிக அக்கறையுடன் கண்காணித்து மேற்கூறப்பட்ட குற்றங்கள் நடவாவண்ணம் செயற்படவேண்டும். பொது மக்கள் பாராமுகமாக பொறுப்பின்றி இருப்பதனால் வாணிகர்கள், தனி மனிதர்கள், பொது நிறுவனத்தார்கள், அதிகாரிகள் ஆகியோர் தொடர்ந்து குற்றங்கள் புரிந்து வருகின்றார்கள். இதனால் பொது மக்களின் நலம் பாதிக்கப்படுகிறது. பொருளாதாரம் சீர்கேடடைகிறது. குற்றவாளிகள் சமுதாயத்தில் மேலும் செல்வாக்குள்ளவர்களாக விளங்குகிறார்கள். செல்வாக்கைப் பயன்படுத்தித் தவறான வழியில் பொருளீட்டும் வழியைத் தகர்த்தெறிதல் வேண்டும். அவர்களுக்குப் பொது மக்கள் ஆதரவாக இல்லாமல் இருந்தாலே செல்வாக்காளர் குற்றம் மிகவும் குறைந்துவிடும். பொதுமக்கள் கண்காணிப்புடன் இருந்து இவ்வகையான குற்றவாளிகள்மீது வழக்குத் தொடுத்து, தண்டனை வழங்கப்படுதல் வேண்டும். பிறகு இக் குற்றங்களும் குற்ற விவரப் பட்டியலில் இடம் பெறுவதுடன், அதே நேரத்தில் சமுதாயமும் சீரடையும் என்பது திண்ணம்.

முடிவாக,

குற்றப் புள்ளி விவரங்களை ஆராய்ந்தால் சில இடங்களில் அதிகமான குற்ற எண்ணிக்கை விகிதமும் சில இடங்களில் குறைவான குற்ற எண்ணிக்கை விகிதமும் காணப்படும். அதாவது, அதிகமான குற்றங்கள் புரியப்படும் பகுதிகளில் அதிகக் குற்ற எண்ணிகை விகிதமும், குற்றம் குறைவாகப் புரியப்படும் பகுதிகளிலும் சாதாரண பகுதிகளிலும் குற்ற எண்ணிக்கை விகிதம்

குறைந்து காணப்படும். அதேபோன்று நகர்ப்புறங்கள், குடிசை வாழ் பகுதிகள், சேரிகள், தொழிற்சாலை உள்ள பகுதிகள், துறை முகப் பகுதிகள், எல்லையோரப் பகுதிகள், காட்டுப் பகுதிகள், கண்மாய்ப் பகுதிகள் ஆகிய இடங்களில் அதிகமான குற்ற எண்ணிக்கை விகிதங்களை உடையதாக இருக்கும். மத்திய பிரதேசத்தில் சாம்பல் பள்ளத்தாக்கில் (Chambal Valley) மட்டும் 521 கூட்டுக் கொள்ளையர்கள் (Dacoits) சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாசரிடம் சரணடைந்துள்ளார்கள். மத்திய பிரதேசம் கூட்டுக் கொள்ளை புரிவதற்கு ஏற்ற இடமாக அமைந்திருப்பது இதற்கு முக்கிய காரணக் கூறாகும். இந்தியாவில் இவ்வளவு பெரிய கூட்டுக் கொள்ளையர் கூட்டம் வேறு எந்த மாநிலத்திலும் காணப்படவில்லை. குற்றவாளிகள் மிகுந்துள்ள பகுதிகளில் குற்ற எண்ணிக்கை விகிதம் அதிகரித்தும் குற்ற வாளிகள் குறைந்துள்ள பகுதிகளில் குற்ற எண்ணிக்கை குறைந்தும் காணப்படும்.

குற்றப் புள்ளி விவரங்கள்தாம் ஒரு நாட்டின் உண்மையான நிலையை அறிய உதவும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. அவற்றைக் கொண்டு குற்றங்கள் ஏன் செய்யப்படுகின்றன, எப்படிச் செய்யப்படுகின்றன. எவரால் செய்யப்படுகின்றன. எந்தச் சூழ்நிலையில் செய்யப்படுகின்றன எவ்விதக் காரணக் கூறுகளினால் அதக அளவுக் குற்றங்கள் புரியப்பட்டுள்ளன; எந்தப் பகுதியில் அதிகம் செய்யப்படுகின்றன; எந்தெந்த வயதினரால் அதிகக் குற்றங்கள் புரியப்படுகின்றன; எந்தப் பாலினத்தால் அதிகக் குற்றங்கள் புரியப்பட்டுள்ளன; எந்த இனத்தாரால் அதிகமான குற்றங்கள் புரியப்பட்டு வருகின்றன என்பன போன்ற பல்வேறு காரணக்கூறுகளை ஆராய்ந்தறியவும், குற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கேற்றவாறு காவல் துறை, நீதி மன்றம், சிறைச்சாலை ஆகியவற்றை அதிகப்படுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ, குற்றப் புள்ளி விவரங்கள்தாம் ஆதாரமாக அமைகின்றன.

இரண்டாம் பகுதி

12. தண்டனையியல்

(Penology)

குற்றக் கட்டுப்பாடு (Control of Crim)

தண்டனையின் தொடக்கம் (The Origin of Punishment)

முதற் பகுதியில் குற்றங்களுக்கான பல்வேறு காரணக்கூறுகளைப் பற்றித் தெளிவாக ஆராய்ந்து அறிந்தோம். இந்தப் பகுதியில் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குதலைப் பற்றியும் அதாவது குற்ற விசாரணை, நீதிமன்றம், சிறைத் தண்டனை, சிறைச்சாலை, குற்றவாளியைச் சீர்திருத்தல், குற்றத்தைக் கட்டுப்படுத்தல் ஆகிய பல்வேறு நடைமுறைச் செயல்களைப் பற்றியும் அதிலுள்ள குற்றவொழுக்கங்களைப் பற்றியும் குற்றச் செயல்களைப் பற்றியும் ஆராய்வோம்.

குற்ற இயலைவிட தண்டனை இயல்தான் முதன்முதலில் தோன்றியதாகும். குற்றச் சட்டம் வரையறுக்கபபடுவதற்கு முன்பும் சமுதாயத்தில் தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் குற்றங்களுக்கான காரண காரியங்களைப்பற்றி ஆராய முற்படவில்லை. சமுதாயத்தின் விதிமுறைகளை எப்படி மீறினர்கள், ஏன் மீறினர்கள் என்பதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. அதாவது விபத்தில் ஒருவன் இறந்துவிட்டாலும் அதற்குக் காரணமானவர்கள் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை வழங்கி வந்தார்கள். ஆனல் மரம் விழுந்து இறந்துவிட்டாலும், கால் தடுக்கி விழுந்து காயம் பட்டுவிட்டாலும் அல்லது இறந்துவிட்டாலும் உயிரற்ற பொருள்களையும் அவற்றைத் திருப்பி அடிப்பது அல்லது எல்லைக்கப்பால் எறிந்துவிடுவது மூலமாகத் தண்டனை நிறைவேற்றி மகிழ்ந்து வந்தார்கள். ஐரோப்பாவில் ஆங்கிலோ சாக்சான் காலத்தில் (Anglo saxon period) மிருகங்கள், உயிரற்ற பொருள்கள் ஆகியவை மனிதன் இறப்பதற்குக் காரணமாக விளங்கினல், அவற்றிற்குத் தண்டனை

வழங்கி வந்தார்கள். ஓர் எருது (Ox) ஒரு மனிதனைத் தன் கொம்பினால் குத்திச் சாகடித்து விட்டதற்காக அந்த எருதைக் குற்ற விசாரணை நடத்தி அதைக் கல்லால் அடித்துச் சாகடிக்கும்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதன் மாமிசத்தை உண்ணுதல் கூடாது. 1386-ல் ஒரு பெண் பன்றி (sow) இளம் குழந்தையானது முகம், கை, கால்களைக் கடித்துக்காயப் படுத்திக் குழந்தையைக் கொன்றுவிட்டது. பிறகு அந்தப் பன்றியை குற்ற விசாரணை நடத்தி அதன் கை கால்களை வெட்டிப் பிறகு தூக்கில் இடும்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. உயிரற்ற திடப் பொருள்களையும் மனிதன் இறப்பதற்குக் காரணமாக இருந்திருந்தால் அவற்றையும் நீதி விசாரணை நடத்தி தண்டனை வழங்கி வந்தார்கள். அவற்றை அழித்துவிடவேண்டும் அல்லது நாட்டுக்கப்பால் எறிந்து விடுதல் வேண்டும். ஒரு மனிதன் தற்கொலை செய்துகொண்டால் அவன் இறப்பதற்குக் காரணமாக விளங்கிய இரு கைகளையும் வெட்டி எடுத்துவிட்டு உடல் வேறு இடத்திலும், கைகளை மற்றொரு இடத்திலும் புதைத்து வந்தார்கள், அடுத்து, ஒருவன் கோடாரியால் மற்றொருவனை அடித்துக் கொன்று விட்டான். பிறகு நாட்டை விட்டு ஓடிவிட்டான். ஆனால் அந்தக் கோடாரி நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுக் குற்ற விசாரணை நடத்தப்பட்டு அதற்கு விடுதலை அளிக்கப்பட்டதாக ஐரோப்பிய தண்டனை வரலாறு கூறுகின்றது. இப்படித் துன்பத்திற்கு நேரடியாக யார், எது காரணமாக இருந்தாலும் அவற்றின்மீது பழிக்குப்பழி என்ற முறையில் தண்டனை அளித்து வந்தார்கள். அதே உணர்வுதான் இந்த நவீனகால மனிதனிடமும் காணப்படுகின்றது, யாராவது சுவரில், கதவில், மேசையில், வாயிற்படியில், தலையிலோ, கை கால்களிலோ இடித்துக் கொண்டாலும் உடனே அவற்றைத் திருப்பி உதைப்பதும் அல்லது கல்லைக்கொண்டோ பிற பொருள்களைக் கொண்டோ ஆசை தீர நறுக்குவதும் போன்ற செயல்கள் பலர் செய்கின்றார்கள்.

ஆதி மனிதன் காடுகளில் வாழும்போதும் குகையில், மரக்கிளையில், குடிசையில் இப்படி எங்கே வாழ்ந்து வந்தாலும் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு தன் உயிருக்கு ஊறு விளைவிக்கும் மற்ற உயிரினங்களை அழித்து வந்தான். தன் இனமும் தனக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும் என்று கருதிய நேரத்தில் மற்றவர்களைக் கொன்று குவித்தான். இதனால் தற்காப்பு என்ற அடிப்படையில் பழிக்குப்பழி என்ற கொள்கையில் தண்டனை பிறந்தது. இது இயற்கையின் உணர்வினால் உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் அமைந்துள்ள குணமாகும். பாம்பு, எறும்பு, தேள்,

நாய் ஆகியவையும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன்தான் பிறரைக் கடிக்க முற்படுகின்றன. மற்றப்படி நம்மைப் போன்று திருப்பி அடிக்க அவற்றிற்குக் கை இல்லை. அதே நிலைதான் இன்றும் காணப்படுகின்றது.

ஆனால் மனித வாழ்க்கை வரலாற்றில் எண்ணற்ற மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பழங்காலத்தில் வழங்கப்பட்டு வந்த கடுமையான, கொடூரமான தண்டனை முறைகள் இன்று அளிக்கப்படுவதில்லை. ஆனால் அதே முறையில்தான் இன்றும் குற்றம் புரியப்பட்டு வருகின்றது. குற்றம் புரிவதில் மாற்றமில்லை. ஆனால் தண்டனை அளிப்பதில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அன்று உயிருக்கு உயிர், ரத்தத்திற்கு ரத்தம், பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், இப்படி என்ன குற்றம் புரிந்தானே அதே மாதிரியான தண்டனை வழங்கப்பட்டு வந்தது, திருடினால் அந்தக் கையை வெட்டிவிடுதல், கற்பழித்தல் அல்லது வன்புணர்ச்சிக் குற்றத்திற்குக் காரணமாக இருந்த விதையை எடுத்து விடுதல் அல்லது ஆண்மையைப் போக்கி விடுதல். ஒருவன் மற்றொருவன் கண்ணை அழித்துவிட்டால் அழித்தவனின் அதே கண்ணைத் திருப்பி அழித்து வந்தார்கள். இப்படிப் பல கொடூரமான தண்டனைகளை வழங்கிவந்தார்கள். இப்படிப்பட்ட கடுமையான தண்டனையை வழங்கிவந்தாலும் குற்றங்களைத் தடுக்க முடியவில்லை. மேலும் அக்காலத்தில் தண்டனையின் நோக்கம் குற்றங்களைத் தடுப்பதற்காக அளிக்கப்படவில்லை. 'பழிக்குப் பழி' என்ற உணர்வைத் தீர்த்துக் கொள்ளத்தான் தண்டனை வழங்கப்பட்டு வந்தது.

அடுத்து, மனித உயிரின் அழிவுக்குக் காரணமான பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அறநிலைப்படுத்தப்பட்ட பொருள் (Deodand) முறையில் தண்டனை வழங்கப்பட்டது. அதாவது எந்தப் பொருள் மனிதன் இறப்பதற்குக் காரணமாக இருந்ததோ அதைப் பறிமுதல் செய்து இறந்தவருடைய வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பொருள்கள் மீது தங்கள் பழியைத் தீர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. ஒரு சிறுவன் பால் நிறைந்துள்ள பாத்திரத்தில் விழுந்து மூழ்கி இறந்துவிட்டான். உடனே அந்தப் பால் பாத்திரத்தை இறப்பதற்குக் காரணமானதாகக் கருதி அப் பாத்திரத்தைப் பறிமுதல் செய்து நீதி வழங்கப்பட்டது. இந்த முறையை கிறித்தவ சமய நீதி மன்றத்திலும் பின்பற்றி வந்துள்ளது. ஆனால் இறப்பதற்குக் காரணமாகக் கூறிப் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் தெய்வ வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டன. இப்படி இறப்பதற்குக் காரணமான பொருள்களைப் பறிமுதல் செய்

வதன் மூலம் நீதி வழங்கப்பட்டு வந்தது. நாளடைவில் இந்தப் பறிமுதல் செய்த பொருள்களைப் பலியானவர்களுக்கு இழப்பீடாக அளிக்கப்பட்டு வந்தது.

பறிமுதல் செய்யப்படும் பொருள்களின் தன்மை மேலும் விரிவாக்கப்பட்டது அதாவது ஒருவன் வண்டிச் சக்கரத்தின் கீழ் அகப்பட்டுக் கொண்டு இறந்துவிட்டாலும், குதிரைமீது சவாரி செய்யும்போது தூக்கக் கலக்கத்தினால் கீழே விழுந்து இறந்து விட்டாலும் அந்த வண்டி, குதிரை ஆகியவை இறப்பதற்குக் காரணமானவையாகக் கருதிப் பறிமுதல் செய்யப்பட்டு வந்தன. முதன் முதலில் பறிமுதல் செய்து தண்டனை வழங்கப்பட்ட காலத்தில் அப்பொருள்கள் பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுவிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றின்மீது அவர்கள் தங்கள் பழியைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் இம் முறையில் சிறிது மாற்றம் அடைந்தது குற்றத்திற்குக் காரணமாகக் கருதிப் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் அரசனிடம் ஒப்படைக்கப்பட்டு அவை அரசனால் விற்கப்பட்டு அந்தப் பணம் தெய்வீகப் பணிக்குப் பயன் படுத்தப்பட்டுவந்தது அதாவது இறந்தவர்களின் ஆத்மா (Soul) அமைதியடையும் பொருட்டுச் செலவு செய்யப்பட்டது. இம் முறையைச் சீர்திருத்தம் செய்து அந்தப் பணம் ஏழைகளுக்கு அளிக்கப்பட்டது. அல்லது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு அளிக்கப்பட்டு வந்தது. 1716-ல் ஒரு மரம் சிறுவன் மீது விழுந்ததனால் அவன் இறந்துவிட்டான். பிறகு அந்த மரத்தை இறப்பதற்குரியதாகக் கருதிப் பறிமுதல் செய்யப்பட்டு அது 30 சில்லிங்கிற்கு விற்கப்பட்டது. அது அந்தக் குழந்தையின் தந்தைக்கு வழங்கப்பட்டது. இம்முறை 1846 வரையில் செயற்படுத்தப்பட்டு வந்தது. புகைவண்டி நடைமுறைக்கு வந்த பிறகு இம் முறையை நீக்கிவிட விரைவாக முடிவெடுக்கப்பட்டது. 1841-ல் சோனிங் என்ற புகைவண்டி நிலையத்தில் ஒரு புகை வண்டிப் பெட்டியை இறப்பிற்குக் காரணமாகக் கருதி பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. அதே போன்று 1840-ல் புகை வண்டி விபத்துக்குள்ளாகி விட்டது. அப்பொழுது அந்தப் புகை வண்டியை இறப்பிற்குரிய காரணப் பொருளாகக் கருதிப்பறிமுதல் செய்யப்பட்டு அதன் மதிப்பு 2000 பவுன் என்று சான்றுயர் தீர்ப்பு வழங்கினர். ஆதிகாலத்தில் இவ்வாறு இங்கிலாந்தில் நீதி வழங்கப்பட்டு வந்துள்ளது.

அடுத்து, அதே இங்கிலாந்தில் பழைய காலங்களில் பணம் கொடுப்பதன் மூலமாகக் குற்றம் கழுவாய் செய்யப்பட்டது. ஆங்கிலோ சாக்ஸான் காலத்தில் 1118-க்கு முன் எல்லா ஆட்

கொலையும் கொலைக் குற்றமாகவே கருதப்பட்டு வந்தது. கருதியே கொலை செய்யப்பட்டால்தான் அது கொலைக் குற்றம் ஆகும். ஆனால் தற்செயலாக அல்லது விபத்தில் கொன்றுவிட்டாலும் அக்காலத்தில் கொலைக் குற்றம் என்றே கருதப்பட்டு வந்தது. தண்டனையும் வேறுபாடின்றி ஒரே மாதிரியான மரண தண்டனை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் சில வேளைகளில் குற்றக் கழுவாயாகப் பணம் வசூலிக்கப்பட்டு வந்தது. ஒருவனுடைய இறப்பிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது தற்செயலாகவோ ஒருவன் காரணமாக இருந்தால் இறந்தவரின் குடும்பத்திற்குக் கழுவாய்த் தொகை செலுத்திவிடவேண்டும். இதற்குக் கடும் பொறுப்பு (Strict or Absolute liability) என்று பெயர். இவ்வாறு கொலைக் குற்றங்களுக்குக் கழுவாயாகப் பணத்தை வசூலிக்கும் முறைக்கு 'கொலைக் குற்ற கழுவாய்த் தொகை' (Wergild) என்று பெயர். கடுங் குற்றங்கள் புரிந்துவிட்டாலும் அல்லது கொடுங்காயங்கள் ஏற்படுத்திவிட்டாலும் தாக்கப்பட்டவனுக்கு (Victim) அடிக்கும், காயத்திற்கும் ஏற்றவாறு அவன் மன அமைதி பெறும்பொருட்டு இழப்பீடு வழங்கப்பட்டு வந்தது. இதற்குக் கடுங் குற்றக் கழுவாய்த் தொகை (Boot) என்று பெயர். இத்துடன் குற்றங்களின் தன்மைகளைப் பொறுத்துக் குற்றவாளிக்கு அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட்டு வந்தது. அந்த அபராதத் தொகை அரசனுக்குச் செலுத்தப்பட்டு வந்தது. அவ்வாறு அரசனுக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கு 'அபராதம்' (Wite) என்று பெயர். இப்படி வசூலிக்கப்பட்ட அபராதம் அரசாங்க வருவாயாக அமைந்திருந்தது. அரசாங்கத்தின் வருவாய் மேலும் அதிகரிக்கும் பொருட்டு அதிகமான குற்றங்களுக்கு அபராதம் விதிகப்பட்டு வந்தது. இதனால் நாளடைவில் குற்றக் கழுவாய்த் தொகை (Boot) மறைந்து வெறும் அபராதம் மட்டும் தண்டனையாகச் செயற்படுத்தப்பட்டு வந்தது. கழுவாய்த் தொகை செலுத்தப்படவேண்டாத கொடூரக் குற்றங்களும் உண்டு. இதற்குக் கழுவாய்த் தொகை தண்டனையற்ற குற்றங்கள் (Bootless crimes) என்று பெயர். இம்மாதிரியான குற்றங்கள் அரசனின் தீர்ப்புக்கு விடப்பட்டன. இவ்வகையான குற்றங்களுக்குக் கொடூரமான தண்டனை வழங்கப்படுவதுடன் அவர்களுடைய சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு வந்தன.

மேற்கண்ட தண்டனை முறை நார்மன் காலத்தில் (Norman Times) வழக்கற்றுப் போய்விட்டது.

நார்மன் காலத்தில் மரண தண்டனையிலிருந்து உடல் ஒறுத்தல் (Mutilation) வரை பல்வேறு கொடுமையான தண்டனைகளுடன் அபராதமும் விதிக்கப்பட்டு வந்தது.

மேற்கூறப்பட்ட தண்டனைகளின் வகைகளை ஆராய்ந்து நோக்கும்போது தண்டனையானது குற்றங்களைத் தடுப்பதற்காக அளிக்கப்படவில்லை. பழிக்குப்பழி என்ற கொள்கையுடன் துன்பத்திற்கேற்ற இழப்பீடு அளிக்கப்படவேண்டும் என்ற கொள்கையும் அடங்கி இருப்பதைக் காணலாம். நாகரிகம் வளர, அறிவியல் மலர, குற்றச் சட்டம் இயற்றப்பட்டுக் குற்றங்களுக்கான வரையறைகள் வழங்கப்பட்டதுடன் தண்டனை முறைகளும் மாற்றி அமைக்கப்பட்டன. தண்டனை அளிப்பதன் மூலமாகக் குற்றவாளிகளுக்குத் துன்பத்தை அளிப்பது மட்டுமல்லாமல் குற்றம் மேலும் புரியாமல் தடுக்கவும் அதற்காக வேண்டி குற்றவாளியின் மனத்தைச் சீர்திருத்தவும் தண்டனை மாற்றியமைக்கப்பட்டது. பல்வேறு வகையான தண்டனைக் கொள்கைகள் பல்வேறு காலங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை :

1. பழிவாங்குவது தண்டனை என்ற கொள்கை [Retributive theory of Punishment]

2. அச்சுறுத்துவது தண்டனை என்ற கொள்கை [Deterrent theory of Punishment]

3. குற்றங்களைத் தடுப்பது தண்டனை என்ற கொள்கை [Preventive theory of Punishment]

4. சீர்திருத்துவது தண்டனை [Reformative Punishment] ஆகிய நான்கு வகையான கொள்கைகளின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டு வந்துள்ளது. அதே முறையைப் பின்பற்றிதான் தண்டனைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இறுதியாகக் கூறப்பட்ட இரண்டு தண்டனைக் கொள்கைகளும் குற்ற நடைமுறைச் சட்டத்தின் குறிக்கோளாகும். ஆனால் அவை குற்றச் சட்டத்தின் அடிப்படை நோக்கமல்ல.

தண்டனை என்பது என்ன ? (What is Punishment ?)
தண்டனைக்கு வரையறை (The definition of Punishment)

தண்டனை என்றால் துன்புறுத்துதல், அழித்தல், இழப்பு உண்டாக்கச் செய்தல் இழிவு உண்டாக்கச் செய்தல் ஆகிய செயல்களைக் குறிக்கும். மேலே கூறப்பட்ட தண்டனை வகைகளில் இருந்து இந்த வரையறையைப் பெறமுடிகிறது. குற்றவாளிக்கு மரண தண்டனை அளிப்பதன் மூலம் குற்றவாளியையே அழித்து விட முடிகிறது. குற்றவாளிக்கு உடல் ஒறுத்தல் தண்டனை அளிப்பதனால் துன்பம் விளைவிக்கப்படுகிறது. அபராதம் தண்டனை

யாக விதிப்பதன்மூலம் குற்றவாளிக்கு இழப்பு உண்டாக்கப்படுகிறது. இவ்வாறு குற்றவாளிகளுக்கு கடும் தண்டனைகளை அளிப்பதனால் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களுடைய வாரிசுகள் துன்பத்தையும் நட்டத்தையும் மறந்து பழிவாங்கும் எண்ணம் இல்லாமல் அமைதியுடன் சமுதாயத்தில் மகிழ்ச்சியாக வாழ ஏதுவாகிறது. சமுதாயத்தில் தொடர்ந்து குற்றங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்கவே தண்டனை வழங்கப்படுகிறது. அவ்வாறு தண்டனை அளிக்கப்படவில்லை என்றால் தாக்கப்பட்டவன் அல்லது அவனுடைய வாரிசு குற்றவாளியைத் திருப்பித்தாக்க முயற்சி செய்வான். இதனால் பழிவாங்கும் உணர்ச்சி இருசாராரிடத்தும் தொடர்ந்துகொண்டு இருக்கும். இதனால் சமுதாயத்தில் அமைதி இழந்து எப்போதும் குழப்பம் இருந்துகொண்டே இருக்கும். இவற்றைத் தடுக்கத்தான் சமூகம் வளர்ச்சியடையாத காலத்தில் இருந்தே தலைவன் தொடக்கத்திலேயே குற்றத்திற்குரிய துன்பத்தைக் குற்றவாளி அனுபவிக்கும்படி தண்டனை வழங்கப்பட்டது. இதனால் மேற்கொண்டு தாக்கியவனும் தாக்கப்பட்டவனும் நேரடியாக மோதிக்கொள்ளவோ அதைப்பற்றிப் பேசவோ கூடாது என்ற கட்டளையும் விதிக்கப்பட்டு வந்தன.

மேற்கூறிய எடுத்துக்காட்டிலிருந்து ஓர் உண்மையைத் தெளிவாக அறியமுடிகிறது. அதாவது. தண்டனை என்பது சமுதாயத்தின் தலைவனாலோ அல்லது அரசனாலோ வழங்கப்படும் துன்ப அளவேயாகும். அதே துன்ப அளவைத் தாக்கப்பட்டவனோ அல்லது அவனுடைய வாரிசுகளோ தாக்கியவனுக்கு அளிக்கப்பட்டுவிட்டாலும் தண்டனை வழங்கப்பட்டது என்று கூறமுடியாது. ஏனென்றால் தண்டனை வழங்கும் உரிமை சமுகத் தலைவனிடமோ அல்லது அரசனிடமோ வழங்கப்பட்டு இருந்தது. அதே உரிமை இன்று குற்ற நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவன் (Accused) குற்ற நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்காக நிறுத்தப்படுகிறான். அவனைக் குற்ற நீதிபதி குற்றத்தை விசாரித்துக் குற்றவாளி என முடிவுக்கு வந்தால், குற்றத்திற்குரிய தண்டனையை வழங்கித் தீர்ப்பளிக்கின்றார். மேலும், தண்டனை வழங்கப்பட்டுவிட்டதென்றால் குற்றவாளிக்குத் துன்பம் அல்லது பொருள் இழப்பு அல்லது உயிர் இழப்பு ஆகிய தன்மைகள் அமைந்திருக்கவேண்டும். அவ்வாறின்றிக் குற்றவாளிக்கு எந்த விதத் துன்பமோ அல்லது பொருள் நட்டமோ அல்லது தனி மனித சுதந்திரம் பறிக்கப்படவில்லை என்றாலோ அந்தத் தீர்ப்பைத் தண்டனை என்று கூறமுடியாது. பொதுவாக, தண்டனை வழங்கப்படும்போது குற்றவாளியின் மனநிலை தாக்க-

பட்டவனுடைய துயரநிலை, சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டனை வழங்கப்பட்டுவருகிறது. ஆனால், இங்கிலாந்தில் நாட்டு மரபுச் சட்டம் (Common Law) செயல்படா காலத்திற்கு முன்பு, குற்றவாளியின் குற்ற மனத்தையோ (Mensrea) அல்லது குற்றம் புரிந்த சூழ்நிலையையோ ஆராய்ந்து பாராமல் ஒருவன் கருதியே (Intention) கொலை செய்து இருந்தாலும் அல்லது கருதாமல் தற்செயலாகக் கொலை (Manslaughter) புரிந்திருந்திருந்தாலும் எந்த வித வேறுபாடின்றி மரண தண்டனையே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் சுற்றுச் சூழ்நிலையின் காரணக் கூறுகளினால் தற்செயலாகக் கொலைக் குற்றத்திற்குள்ளானாலும் அவனுக்கும் மரண தண்டனை அளிப்பதை வெறுக்கப்பட்டது. பிறகு இம்முறையில் சிறிது மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. நாட்டு மரபுச்சட்டம் செயற்படத் தொடங்கியபோது ஒருவன் குற்ற மனமின்றி குற்றச் செயல் (Actus reus) புரிந்தால் அதற்கு மரண தண்டனை வழங்குதல் கூடாது என்ற வன்மையான கொள்கைப் பின்பற்றப்பட்டது. இதனால் குற்ற மனமின்றிக் குற்றச் செயல் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. குற்றச் சட்டத்தில் குற்ற மனம் முக்கிய கருப் பொருளாக (Ingredients) கொள்ளப்பட்டது.

ஆனால், பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தில் குற்ற மனம் இன்றியும் குற்றச் செயல் புரிந்தால் குற்றமாகக் கருதப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சில வகையான குற்றங்களுக்குக் குற்ற மனம் தேவையில்லை. குற்றவாளி குற்றச் செயலைப் புரிந்து விட்டாலே குற்றமாகும். அதற்கு உரிய தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்ற கருத்துடன் இயற்றப்பட்டதாகும். இச் சட்டம் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டது. அதவாது குற்ற மனம் இன்றியும் குற்றச்செயல் குற்றம் எனக் கருதப்பட்ட குற்றங்கள் எளிய குற்றங்களாகும். பெரும்பாலும் இவ்வகையான குற்றங்களுக்கு வெறும் அபராதம் மட்டும் தண்டனையாக அளிக்கப்பட்டு வந்தது. அல்லது எளிமையான சிறைத்தண்டனை (Simple imprisonment) வழங்கப்பட்டு வந்துள்ளது. எடுத்துக்காட்டு: உணவுக் கலப்படம், குடிபோதையில் உள்ளவனுக்கு மது விற்றல் ஆகியவையாகும். குற்றவாளிக்குத் தெரியாமல் உணவு கலப்படம் செய்யப்பட்டு விற்பனைக்கு வைத்திருந்தாலும் குற்றவாளிக்குத் தெரியாமல் புதிய நபர் பாலில் நீர் கலந்துவிட்டிருந்தாலும் குடிபோதையில் இருக்கிறான் என்பதை உணராமல் மேலும் மது விற்பனை செய்வது குற்றம் என்று கூறுகிறது சட்டம். இக் குற்றங்களில் குற்றவாளியின் மன நிலையை ஆராய்ந்து அறியாமல்

செயலை மட்டும் ஆராய்ந்து செயல் குற்றமாகக் காணப்பட்டால் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று சட்டம் வலியுறுத்துகிறது. மேலும், இவ்வகையான குற்றங்கள் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியனவாகும். சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் குற்ற மனமின்றிக் குற்றச் செயல் புரிந்தாலும் குற்றம் என்று வரையறுத்துள்ளார்கள். இவ்வகையான குற்றங்களுக்கு குற்ற மனம் இன்றிக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கக் கூடாது என்று கூறப்பட்டிருந்தால் பாலில் நீர் கலந்து விற்பனை செய்பவரையும், உணவில் கலப்படம் செய்து விற்பவனையும் வழக்குத் தொடுத்து தண்டனை வழங்க முடியாது. ஏனென்றால் அவர்களே கலப்படம் செய்திருந்தாலும் தங்களுக்குத் தெரியாமல் வேறு யாரோ செய்து விட்டிருக்கிறார்கள், அதற்கு நாங்கள் எப்படிக் குற்றப் பொறுப்பாவோம் என்று வாதாடுவார்கள். இந்நிலையில் அவர்களின் குற்றத்தை நிரூபிப்பதும் காவல் துறையினருக்குக் கடினமாகும். ஆகவேதான் கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால் அவை யாரிடத்தில் இருக்கின்றனவோ (Possession) அவர்களே கலப்படத்தைச் செய்ததாகக் கருதி அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. இவ்வாறாகப் பல செயல்கள் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அடுத்து, இதுகாறும் குற்றச் செயலை யார் புரிகின்றார்களோ அவர்கள்தாம் குற்றவாளிகள் என்று கூறப்பட்டு வந்தது. ஆனால் இன்று ஒருவன் செய்யாத குற்றத்திற்கும் பொறுப்பாகும் நிலை உள்ளது. வேலைக்காரன் புரியும் சில குற்றங்களுக்கு முதலாளி குற்றப் பொறுப்பு ஏற்க வேண்டிய நிலை உள்ளது. இதற்குப் பகரப் பொறுப்பு (Vicarious liability) நிலை என்று பெயர். அதாவது, ஒருவன் நிலத்தில் அல்லது அவனுடைய இடத்தில் கலகக் குற்றம் (Rioting) நடந்தால் அந்த நிலத்திற்கு அல்லது இடத்திற்கு உரியவன் கலகக் குற்றத்திற்கு வழக்குத் தொடுத்து தண்டனையாக ரூ. 1,000-வரையில் அபராதம் விதிக்கப்படலாம் என்று இந்திய குற்றச் சட்டம் 154-ம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதாவது சட்ட முரணான கூட்டமோ (Unlawful Assembly) அல்லது கலகக் குற்றமோ நடப்பதற்கு அவனோ அல்லது அவனது பகரான் (Agent) அனுமதித்தால் அந்த இடத்திற்குரிய சொந்தக்காரன் குற்றவாளியாகிறான். இக் குற்றத்தில் அவன் பங்கு ஏற்க வேண்டிய அவசியமில்லை. ஒருவர் நிலத்தில் சட்ட விரோதமான கூட்டமோ அல்லது கலகமோ நடந்தால் அதைத் தடுக்க உரிய அதிகாரிகளுக்கு உடனே அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்காமல் இருப்பது குற்றமாகும். அதுபோலவே ஒருவன் இல்லத்தில்

பரத்தையர்கள் (Prostitutes) பரத்தைமை புரிய அனுமதிப்பதும், சூதாட்டம் ஆடுவதற்கு இடம் அளிப்பதும் குற்றமாகும். வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் மேலே கூறப்பட்ட குற்றங்கள் புரிவதற்கு இடம் அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை வழங்கப்படுவார்கள்.

இன்றைய குற்றச் சட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குற்றச் சட்டத்திற்கான தெளிவான வரையறைகள் வழங்கப்பட்டன. குற்றத்திற்கு ஏற்ற தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

சில வேளைகளில், குற்ற மனம், குற்றச் செயல் ஆகியவை இணைந்திருந்தும் குற்றவாளிக்குத் தண்டனை அளிக்கப்படுவதில்லை. தன் உயிர், உடைமை, தன்னைச் சார்ந்தவர்கள் உயிர், உடைமை ஆகியவைற்றைப் பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமைக்குத்தான் காப்புரிமை (Right of Private Defence) என்று பெயர். இந்த உரிமையைப் பயன்படுத்தும்போது எதிரி கொல்லப்பட்டாலும் குற்றமல்ல என்று குற்றச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

அடுத்து 7 வயதிற்குட்பட்ட குழந்தைகள் எந்தக் குற்றச் செயலைச் செய்தாலும் குற்றமல்ல என்று குற்றச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே 7 வயதிற்குட்பட்ட குழந்தைகள் குற்றத்தைப் புரிந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட மாட்டாது.

ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு அவர்களின் அறிவு வளர்ச்சி, குற்றத் தன்மை, குற்ற வகை, சுற்றுச் சூழ்நிலைகள் ஆகிய காரணக் கூறுகளை ஆராய்ந்து அறிந்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று குற்றச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வேறுபாடுகள் தொடக்க காலத்தில் செயற்படுத்தப்படவில்லை. குற்ற ஆய்வியலின் வளர்ச்சியால் குற்றச் சட்டத்தில் பாகுபாடு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்ற மனம், குற்றச் செயல் ஆகிய இரண்டும் இணைந்ததுதான் குற்றம் என்பது முதல் பாகத்திலேயே விளக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒருவன் குற்ற மனமின்றிக் குற்றச் செயல் புரிந்தாலோ அல்லது குற்றச் செயலின்றிக் குற்ற மனத்தை உடையவனாக விளங்கினாலோ அவனிற்குத் தண்டனை வழங்கப்பட முடியாது. இந்த அடிப்படையில்தான் பைத்தியக்காரன் (Insane person) குற்ற விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது குற்றச் சட்டத்தில்.

மேலே கூறப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் குற்ற விலக்களிப்பு, உரிமை ஆகியவற்றை இன்று உலகிலுள்ள எல்லா நாடுகளும் செயற்படுத்தி வருகின்றன. குற்றச் சட்டம், காலத்திற்கு ஏற்றவாறு மாற்றப்பட்டு இன்றைய பகுத்தறிவுக் கேற்றவாறு தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தண்டனையின் வகைகள் (Kinds of Punishment)

குற்றங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுவதைப்போல தண்டனைகளும் வேறுபடுகின்றன. பொதுவாக, குற்றங்கள் அனைத்துக்கும் ஒரே விதமான தண்டனை வழங்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்கு ஒரே மாதிரியான தண்டனையை எல்லா நாடுகளிலும் அளிப்பதில்லை. எடுத்துக் காட்டாக, கொலைக் குற்றத்திற்கு (Murder) இந்தியாவில் மரண தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா (பல மாநிலங்களில்) ஆயுள் சிறைத் தண்டனை மட்டும் வழங்கப்பட்டுவருகின்றது.

மரண தண்டனை (Capital Punishment)

தண்டனை வரலாற்றில் மரண தண்டனை மிகவும் பழமை வாய்ந்திருந்தாலும், அதன் சிறப்பைக் கருதி உலகிலுள்ள பல நாடுகள் இன்றும் அதைச் செயற்படுத்தி வருகின்றனர். மேலும் தண்டனை வகைகளிலேயே மரண தண்டனையே தலையாய தண்டனையாகும். 'மரண தண்டனை' ஈடு செய்ய முடியாத தண்டனையாகும் தொடக்கத்தில் சமுதாயம் வளர்ச்சியடையாத காலத்திலும், வளர்ச்சியடைந்த காலத்திலும் கடுமையான குற்றங்களுக்கு மரண தண்டனையே அளிக்கப்பட்டு வருகின்றது. எடுத்துக் காட்டாக, கொலைக் குற்றம், நாட்டுத் துரோகக் குற்றம் (Treason) மதத்திற்கெதிரான குற்றம், வன்புணர்ச்சிக் குற்றம் முதலியனவாகும்.

'பழிக்குப் பழி' என்ற கொள்கையின் (Retribution) அடிப்படையிலும் 'அச்சுறுத்தல்' என்ற கொள்கையின் (Deterrent) அடிப்படையிலும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டினுள் கொலைக்கு ஈடாக மரண தண்டனை (Life for life) வழங்கப்பட்டு வருகின்றது.

மரண தண்டனையை நிறைவேற்றும் முறைகள் (The Kinds of execution of Capital Punishment)

ஆதியில் தீமூட்டி அதில் குற்றவாளியை எறிந்து எரிப்பதின் மூலம் மரண தண்டனையை நிறைவேற்றி வந்துள்ளார்கள்.

கொலைக் குற்றம், மதத்திற்கு எதிரான குற்றம் ஆகிய குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளுக்கு மேற்கூறப்பட்ட முறையில் தண்டனையைச் செயற்படுத்தி வந்துள்ளார்கள். பெர்லினில் (Berlin) 1786-ம் ஆண்டு வரையில் மரண தண்டனை எரிப்பது மூலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் கொதிக்கும் எண்ணெயில் குற்றவாளியை எறிந்து மரண தண்டனையை நிறைவேற்றுதல், கழுத்தை வெட்டிவிடுதல், தூக்கில் ஏற்றுதல். கழுவேற்றுதல் (Impaling) நீரில் மூழ்கடித்தல், சிலுவையில் அறைதல் (Pillory) மறு கை, மறு கால் வெட்டுதல், சுட்டு விடுதல், விஷம் கொடுத்து சாகடித்தல் ஆகிய முறைகளிலும் மரண தண்டனை செயற்படுத்தப்பட்டு வந்தது. மலைப் பிரதேசங்களில் அம்பு எறிதல், கல்லால் அடித்தல் ஆகிய முறைகளில் மரண தண்டனையை நிறைவேற்றி வந்துள்ளார்கள். அவரவர்களின் நாகரிகம், பண்பாடு, அறிவு வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி ஆகிய காரணக் கூறுகளுக்குக் கேற்றவாறு காலத்திற்கு காலம் நாட்டிற்கு நாடு மரண தண்டனையை நிறைவேற்றி வந்துள்ளார்கள். இந்தியாவில் மொகலாயர்கள் காலத்தில் குற்றவாளியை உயிரோடு புதைத்துச் சமாதி கட்டும் முறையும் வரலாற்றில் காண முடிகிறது. ஆனால் தற்காலத்தில் மின் ஆற்றல் செலுத்தி மரண தண்டனையை நிறைவேற்றுதல் (Electrocution) முறை அதிக அளவு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுவாக, மரண தண்டனை கடுங் குற்றங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்தில் 1814-ல் மூன்று சிறுவர்கள் (8 வயது, 9 வயது, 14 வயது) ஒன்றுகூடி ஒரு ஜதை காலணி (a pair of shoes) திருடிய குற்றத்திற்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மதத்திற்கு எதிரான குற்றங்களுக்கு மரண தண்டனை அதிக அளவில் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளார்கள்.

மரண தண்டனையைப் பொதுவிடங்களில், மக்கள் பார்க்கும்படி தூக்கில் நிறைவேற்றப்பட்டது. பிணத்தை தாரில் நனைத்து மரத்தில் தொங்கவிட்டு விடுவார்கள். அது அதே மரத்தில் பல நாட்கள் தொங்கிக் கொண்டே இருக்கும். இதனால் குற்றத்திற்குக் கடுந் தண்டனை வழங்கப்படும் என்பதை அதைக் கண்ணுறும் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கையாகும். குற்றவாளிகளுக்குக் கடுந் தண்டனை வழங்குவதும், அதைப் பொதுமக்களின் பார்வையில் நிறைவேற்றுவதன் நோக்கம் என்னவென்றால், மேலும் அதுபோன்ற குற்றங்கள் நிகழாவண்ணம் தடுப்பதற்காகவேயாகும். யாராவது குற்றம் புரிய வேண்டும் என்ற எண்ணம்

கொண்டிருந்தாலும் தண்டனை அடைந்தவனின் பிணம் மரத்தில் தொங்குவதைப் பார்த்ததும் அந்த எண்ணத்தை விட்டுவிடுவதற்கோ அல்லது மாற்றிக் கொள்வதற்கோ ஏதுவாகின்றது என்பது சிறிது உண்மையாகும்.

சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டதனுலும் குற்ற இயல் வல்லுநர்களின் ஆய்வினுலும் சமுதாயவியல் வல்லுநர்களின் பரிந்துரையாலும் மரண தண்டனை வழங்குவதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக மேலை நாடுகள் மரண தண்டனையைக் கடுமையாக எதிர்த்து வந்ததனுல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (United States) சுமார் முப்பது மாநிலங்களில் மரண தண்டனை அடியோடு நீக்கப்பட்டு விட்டது. சில மாநிலங்களில் குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு மட்டும் மரண தண்டனை வழங்கப்பட்டு வந்தது. சில மாநிலங்களில் மரண தண்டனை வழங்கும் குற்றங்களின் எண்ணிக்கை மேலும் குறைக்கப்பட்டு விட்டது. 1959-ல் அமெரிக்காவில் ஒரு மாநிலம் மரண தண்டனையைச் செயற்படுத்தி வந்தது. மற்ற 41 மாநிலங்களில் மரண தண்டனையைக் கட்டாய வற்புறுத்தலின்றி, வேண்டுமானுல் நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்ததனுல் 14 மாநிலங்களும் ஒவ்வொரு வருடமும் மரண தண்டனையை நிறைவேற்றுமலே வந்துள்ளன. 7 மாநிலங்கள் மரண தண்டனையை அனுமதிக்கவில்லை. அவை மிக்கேன் (Michigan), மின்னேஸ்ஸோடா (Minnesota), நார்த் டக்கோடா (North Dakota), விஸ்கானஸிக் (Wisconsin), தேலவார் (Delaware), மெயின் (Maine), ரோடு ஐஸ்லாந்து (Rhode Island) முதலியனவாகும்.

அமெரிக்காவில்தான் முதன் முதலில் மரண தண்டனையை நீக்கிவிட்டுப் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. அதாவது 1847-ல் ஒரு மாநிலம் மரண தண்டனை அளிப்பதை நிறுத்தி வைத்தது. 1876-ல் நான்கு மாநிலங்கள் மரண தண்டனையை நிறுத்தி விட்டன. 1913 முதல் 1918 வரையில் 7 மாநிலங்களில் மரண தண்டனையை நீக்கிவிட்டன. ஆனுல் 2½ ஆண்டுகள் கடந்ததும் 5 மாநிலங்கள் மீண்டும் மரண தண்டனையைச் செயற்படுத்தின. 1957-ல் அலாஸ்கா (Alaska), ஹவாய் (Hawaii) ஆகிய இரு மாநிலங்கள் மரண தண்டனையை நீக்கிவிட்டன. ஆனுல் அதே நேரத்தில் அமெரிக்காவில் எல்லா மாநிலங்களிலும் மரண தண்டனையை நீக்கி விடுவதற்கான கருத்துகள் அந்தந்த மாநில சட்ட மன்றங்களில் விவாதிக்கப்பட்டன. அதே நேரத்தில் மரண தண்டனையைக் கட்டாயம் செயற்படுத்தப்பட வேண்டும் என்று கட்டாயம் இல்லாத மாநிலங்களில் ஒரு குற்ற

வாளிக்குக்கூட மரண தண்டனை வழங்கப்படவில்லை. குற்றச் சட்டத்தில் மரண தண்டனை வழங்கப்படலாம் என்றிருந்த போதிலும் கொள்கையளவில் அதை எதிர்த்து வந்ததனால் செயலளவிலும் அதைப் பின்பற்றிச் சிறைத் தண்டனை வழங்கப் பட்டு வந்துள்ளது. மேலும் மரண தண்டனை வழங்கும் குற்றங் களின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்பட்டுவிட்டன. அதாவது சில மாநிலங்களில் 12 வகைக் குற்றங்களும், சில மாநி லங்களில் 6 வகைக் குற்றங்களும், இன்னும் சில மாநிலங்களில் 4 வகையான குற்றங்களும், வேறு சில மாநிலங்களில் இரண்டு வகையான குற்றங்களும் மரண தண்டனை வழங்கும் குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் மரண தண்டனை வழங்கப் பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது.

தமிழகத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 1969-ல் 117-ம், 1970-ல் 266-ம் ஆகும். அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை அதாவது 1930 முதல் 1958 வரையில் 3616 ஆகும். இதில் 87 சதம் கொலைக் குற்றத்திற்கும், 10 சதம் வன்புணர்ச்சிக் குற்றத்திற்கும் ஆகும். இதில் வெள்ளையர்கள் 45 சதமும், நீக்ரோக்கள் 54 சதமும் மற்றவர்கள், 1 சதமும் பெண்கள் 0 7 சதமுமாகும்.

மரண தண்டனையின் நன்மை தீமைகள் (For and against of death sentence).

பழிக்குப்பழி, அச்சுறுத்தல், குற்றங்களைத் தடுத்தல் ஆகிய கொள்கையின் அடிப்படையில்தான் மரண தண்டனை வழங்கப் பட்டு வருகின்றது. கொலைக் குற்றவாளிக்கு மரணதண்டனை அளிப்பதன் மூலம் பலியானவர்களின் வாரிசுகள், உறவினர்கள் ஆகியோர் குற்றவாளியைப் பழிவாங்கும் நோக்கம் தடுக்கப்பட்டு விடுகின்றது. இல்லையென்றால் கொலைக்குற்றம் சங்கிலித் தொடர்போல நிகழ்ந்துகொண்டே இருக்க அதிக வாய்ப்புண்டு. அதாவது கொலைக்குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்படா விட்டால் பாதிக்கப்பட்டவர்கள் ஆத்திரமடைந்து கொலைக்குற்ற வாளியைக் கொன்றுவிடக் கூடும். இதனால் மற்றொரு கொலைக் குற்றம் நிகழ்ந்து விடுகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களே சட்டத்தைச் செயற்படுத்துகின்ற நிலை உருவாகி விடுகின்றது.

இவ்வாறு விசாரணையின்றிக் கொலைக் குற்றவாளியைக் கொன்று நீதியை வழங்குவதற்குச் சட்ட விரோதமான நீதிமுறை (Lynch Law) என்று பெயர். இதைச் செயற்படுத்துபவனுக்குக்

கொலையாளியைக் கொன்ற கொலைக் குற்றவாளி (Lynch criminal) என்று பெயர். ஆனால் கொலைக் குற்றவாளியைக் குற்ற நீதி மன்றத்தில் விசாரணை நடத்தி, குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கி, மரண தண்டனையை நிறைவேற்றும்போது அந்தச் செயல் சட்ட விரோதமான நீதி முறையாக (Lynch law) ஆவதில்லை. மரண தண்டனையைச் செயற்படுத்துகின்றவனுக்கும் கொலையாளியைக் கொன்ற குற்றவாளி (Lynch criminal) என்று அழைப்பதில்லை. மேலும் கொலைக் குற்றவாளியை விசாரணையின்றிக் கொன்றுவிடுவதற்கு மரண தண்டனை வழங்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுவதில்லை. நீதி விசாரணையின்றிக் குற்றவாளிக்கு இழைக்கப்படும் துன்பத்திற்கோ அல்லது உயிரிழப்புக்கோ 'தண்டனை' (Punishment) என்று கூறுவதில்லை. ஆகவே நீதி விசாரணையின்றி குற்றவாளிக்குத் துன்பத்தையோ அல்லது மரணத்தையோ உண்டாக்குவது குற்றமாகும். ஆனால் நாகரிகம் வளர்ச்சியடையாத காலத்தில், குற்றச் சட்டம் (Criminal law) வரையறுக்கப்படாத காலத்தில் கொலைக் குற்றவாளியைக் கொன்றுவிடுதல் குற்றமன்று. இந்தியாவில் அருணாசலப் பிரதேசத்தில் குற்றவாளியைக் கண்டவுடனே கொலை செய்துவிடும் முறையைச் செயற்படுத்தி வருவதாக ஓர் அறிக்கை அறிவிக்கின்றது. ஆகவே குற்றச் சட்டம் செயற்படாத நாடுகளில், பகுதிகளில் விசாரணையின்றியே குற்றவாளியை அதே இடத்தில் கொலை செய்ய அனைவருக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது அவரவர்களின் மரபுகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

பொதுவாக, குற்றங்களைத் தடுக்கச் சிறந்த முறை கடுமையான தண்டனை வழங்குவதே ஆகும் எனப் பல குற்ற இயல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். அதிலும் மரண தண்டனை அளிக்கப்படும்போது குற்றவாளி அழிக்கப்பட்டு விடுவதனால் மேற்கொண்டு குற்றங்கள் புரிய வாய்ப்பே அற்றுவிடுகிறது. அத்துடன் மற்றவர்களும் அவ்வகையான குற்றங்கள் புரியும் முன்பு பல முறை எண்ணிச் செயற்படவேண்டிய நிலை உள்ளது. அதாவது மாற்றான் உயிரைப் போக்கவேண்டுமென்றால் அதற்கு ஈடாகத் தன்னுயிரைப்(பணயம்) அல்லது இழப்பதற்குத் தயாராக இருந்தாலன்றி ஒருவன் கொலைக் குற்றத்தைப் புரிய துணியவே மாட்டான். ஒருவன் எண்ணிக் கொலைக் குற்றம் புரிகின்றான் என்றால் அவன் தன்னுயிரைப் பெரியதாக மதிக்கவில்லை. மற்றவரை அழிப்பதைத்தான் உயர்ந்ததாகக் கருதுகின்றான் என்பது பொருள். ஆனால் எல்லாக் குற்றவாளிகளும் எண்ணித் துணிகின்றார்களா? முன் கோபத்தால், உணர்ச்சி வசப்படுவதனால், அடக்க முடியாத ஆத்திரத்தினால் குற்றம் புரிகின்றவர்களின் கதி என்ன?

மேற்கூறப்பட்ட காரணக் கூறுகளை ஆராய்ந்து அறிந்த பிறகுதான் நீதிமன்றம் குற்றவாளிக்கு மரண தண்டனையோ அல்லது ஆயுள் சிறைத் தண்டனையோ அல்லது விடுதலையோ அளித்துத் தீர்ப்பு வழங்குகின்றது. ஆகவே கொலைக் குற்றம் புரிந்தவனுக்கு அதிலும் கருதியே, எண்ணித் துணிந்தே செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை அளிப்பதே சாலச் சிறந்ததாகும்.

அடுத்து, மரண தண்டனை வழங்குவதனுல் அரசாங்கத்திற்குப் பொருள் நட்டம் ஏற்படுவதில்லை. ஆயுள் சிறைத் தண்டனை அளிப்பதனுல் அரசாங்கத்திற்குப் பொருட் செலவு அதிகமாகின்றது. ஒரு கைதிக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 500 முதல் 600 வரையில் செலவு செய்யப்படுவதாக ஒரு குற்றப் புள்ளிவிவர அறிக்கை கூறுகின்றது. மரண தண்டனை சிக்கனமானது.

மேலும், குற்றவாளிக்கு மரண தண்டனை அளிக்காமல் ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டால் சிறைத் தண்டனையை அனுபவிக்காமல் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி மன்னிப்புப்பெற்று விடுதலை அடைந்துவிடுதல் அல்லது நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் (Parole) ஆகிய வழிகளில் தப்பித்துக் கொள்ளுதல், மேலும் ஆயுட் காலச் சிறைத் தண்டனை (கடுங் தண்டனை) இந்தியாவில் 14 ஆண்டுகள் வரைதான் சிறையில் கடுங் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று கூறுகின்றது. ஆனுல் இச் சட்டம் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. சிறைக் காலங்களில் குற்றவாளிகளின் நன்டைத்தை, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைப் பொறுத்துச் சிறைத் தண்டனை குறைக்கப்படுகின்றது. இதனுல் தண்டனைக் காலத்திற்கு முன்னேயே விடுதலை அளிக்கப்பட்டுவிடுகின்றது. மேலும் நாட்டின் அரசு முறை மாறுபடும்போதும் வெளிநாட்டுப் போரில் ஈடுபட்டு வெற்றியடையும்போதும் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விடுகின்றுர்கள். ஆக, குற்றவாளி உயிருடன் இருந்தால் தண்டனை அனுபவிக்காமல் வாழ்வதற்குப் பல வழிமுறைகளைத் தேடுகின்றுன். மரண தண்டனை அளித்துவிட்டால், மேற்கூறியவற்றை அடைய வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது.

மரண தண்டனை அளிப்பது தீமை என்ற கோட்பாடு

குற்றங்களைத் தடுப்பதற்கு மரண தண்டனை அளிப்பது முறையல்ல என்று கூறுகின்றவர்களின் வாதம் பின்வருமாறு: குற்றவாளி ஏற்கெனவே ஓர் உயிரைப் போக்கிவிடுகின்றுன், பிறகு அதற்குப்

பரிகாரமாக சட்டத்தின் துணையால், நீதியின் பெயரால் இன்னொரு உயிரைப் போக்குவது முறையன்று. ஒரு மனிதனின் உயிரைப் போக்குவது ஈடு செய்யமுடியாத இழப்பாகும். அத்துடன் அச்சுறுத்தல் தண்டனை முறை என்பது குற்றவாளி தன் குற்றத்தை உணரும்படி செய்தலாகும். ஆனால் குற்றவாளியை உடனே கொன்றுவிடுவதனால் குற்றவாளி தன் குற்றத்தை உணர்வதற்கும், அதற்கு ஈடாகத் துன்பத்தை அனுபவிப்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. மேலும் சீர்திருத்தல் தண்டனை என்ற கொள்கையில் குற்றவாளிக்குக் கடுந் தண்டனை அளித்து அவனை சமுதாயத்திலிருந்து அழித்து விடுதல் என்பது பொருள் அல்ல. குற்றவாளியின் குற்ற மனத்தை மாற்றி நல்லவனாக, சமுதாயத்திற்கு நண்பனாக, சமுதாயத்தில் அவனும் ஒரு குடிமகனாக, வாழ வைத்தல்வேண்டும். அதற்குரிய எல்லாச் சீர்திருத்த முறைகளையும் பின்பற்றுதல்வேண்டும் என்பது சீர்திருத்துதல் கொள்கையாகும். மரண தண்டனை வழங்கிவிடுவதனால் குற்றவாளியைச் சீர்திருத்தி சமுதாயத்தில் வாழ வைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. மேலும் குற்றங்களைத் தடுப்பதற்காக மரண தண்டனை வழங்கப்படுகின்றது என்ற கூற்று உண்மையாக இருக்குமேயானால் மீண்டும் கொலைக் குற்றம் நடவாமல் அல்லவா இருத்தல் வேண்டும். ஆனால் மனித சமுதாயம் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் அவ்வப்போது கொலைக் குற்றம் புரியப்பட்டுத்தானே வருகின்றது? மரண தண்டனை சமுதாயத்திற்கு ஒரு கடும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது. மரண தண்டனையைப் பொது இடங்களில் செயற்படுத்துவதனாலும், தூக்கிலிட்டும் அதைத் தாரில் நனைத்தும் மரத்தில் தொங்கவிட்டு பொது மக்களின் பார்வையில் வைப்பதனாலும் பார்க்கின்ற மக்கள் அச்சத்துடனும் அடக்கத்துடனும் வாழ முற்படுவார்கள் என்பது உண்மையானால் மேலும் குற்றங்கள் நாட்டில் நடவாமலல்லவா இருத்தல் வேண்டும்? அத்துடன் தண்டனையின் அச்சமும் பீதியும் எவ்வளவு காலம் வரையில் நீடிக்க முடியும்? மக்கள் எதையும் உடனே மறந்துவிடும் குணம், பண்பாடு உடையவர்கள் அல்லவா? ஆகையால் இம்முறையிலும் மரண தண்டனை குற்றங்களைத் தடுக்கப் பயன்படவில்லை என்பது புலனாகும். ஆனால் குற்றவாளிக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை அளிப்பதனால் குற்றவாளி சிறையில் இருந்தாலும் அல்லது வெளியில் இருந்தாலும் 'அவன் கொலைகாரன்' என்பதை மக்கள் மறப்பதில்லை.

மேலும் 'பழிக்குப்பழி' என்ற அடிப்படையில் மரண தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு வழங்கப்படவில்லை

யென்றால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளியைக் கொலை செய்து விடுகின்றார்கள். இதனால் கொலையாளியைக் கொன்ற குற்றவாளி (Lynch Criminal) உருவாக ஏதுவாகின்றது என்ற கூற்று உண்மையானதல்ல என்பதற்கு மரண தண்டனையை நீக்கிவிட்ட அமெரிக்காவிலுள்ள மாநிலங்களே சான்றாகும்.

மரண தண்டனை அளிப்பது என்பது மனித இனத்தையே இழிவுப் படுத்துதல், அழித்தல் போன்ற செயலாகும். மேலும் குற்றவாளிக்கு நீதி வழங்குவதில் பிழை நேர்ந்தவிடத்தும், மரண தண்டனையைச் செயற்படுத்தப்பட்ட பிறகு அநீதியை உணரக் கூடிய சூழ்நிலையோ வாய்ப்போ உண்டாகிவிடுமேயானால் அநீதியை ஈடுசெய்ய முடியாமற் போய்விடுகின்றதல்லவா? அத்துடன் நிரபராதிகளுக்கு மரண தண்டனை வழங்கிவிட்ட இழிவிற்குள்ளாகின்றார்கள் நீதிபதிகள். நீதிபதிகள் அனைவரும் பொற்கைப் பாண்டியனாக இருப்பதில்லை. மேலும் பகுத்தறிவு வளர்ந்து விட்ட இக்காலத்தில் காட்டுமிராண்டிக் கொள்கைகளைப் பின்பற்றுவது உகந்ததல்ல என்று வாதிடுவோரும் உள்ளனர்.

முடிவாக, கொலைக் குற்றங்கள் நிகழ்வதும், அல்லது நிகழாமல் இருப்பதும் குறைவதும் அல்லது அதிகரிப்பதும் கடுமையான குற்றச் சட்டத்தினாலோ அல்லது மரண தண்டனை வழங்குவதனாலோ அல்ல. அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் மனநிலை, வளமான வாழ்வு, சமுதாயத்தின் அமைப்பு, ஆகியவற்றைப் பொறுத்துக் கொலைக் குற்றங்கள் நிகழ்கின்றன. இவ்வடிப்படையில் ஆராயும்போது மரண தண்டனை ஒரு பிரச்சினையாக இருக்காது. எடுத்துக்காட்டாக அமெரிக்காவின் தென் மாநிலங்களில் வெள்ளையர், நீக்ரோ என்ற இன வேறுபாடும் அடிமைப் போக்கும் மலிந்து காணப்படுவதனால் அங்கே அதிகமான கொலைக் குற்றங்களும் அதே நேரத்தில் வட மாநிலங்களில் அமைதியாக வாழ்வதனால் மரண தண்டனையின்றியும் குறைவான கொலைக் குற்றங்களே நிகழ்ந்துள்ளன என்பதை ஆராயும்போது மரண தண்டனைக்கும் கொலைக் குற்றத்திற்கும் தொடர்பு இல்லாமல் இருப்பது வெளிப்படும்.

மேலை நாடுகளில் மரண தண்டனை அளிப்பதை நிறுத்தி விட்டாலும் அதன் விளைவுகள் அதிகமாக இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் இந்தியா போன்ற உஷ்ண நாடுகளில வாழும் மக்களின் ஒழுக்கக் கூறுகள் மிகவும் மாறுகொண்டனவாகும். இந்தியாவில் இரண்டு ரூபாய்க்காகக்கூட கொலை செய்த வழக்கு உள்ளது. சாதாரணமாக திடீர் கோபத்தாலோ அல்லது தற்காபபிற்காகவோ

அல்லது உணர்ச்சி வயப்பாட்டினாலோ அல்லது குற்ற மனமின்றியோ கொலை புரிந்தால் அதற்கு மரண தண்டனை அளிப்பதில்லை. முன் கூட்டியே திட்டமிட்டுக் கருதியே கொலை செய்பவனுக்குத்தான் மரண தண்டனை அளிக்கப்படுகின்ற காரணத்தினால் முரட்டுத்தனமான மக்களைக் கட்டுப்படுத்த ஒரேவழி மரண தண்டனைதான். ஆகவே பொருளாலும், மனத்தாலும் பின் தங்கிய நாடுகளில் மரண தண்டனை இருப்பது அவசியமாகின்றது. இந்தியாவில் வட மாநிலங்களில் கொலைக் குற்றம் அதிக அளவு நடந்துள்ளது. குறிப்பாக வங்காளத்திலும், கல்கத்தா, பீகார், பம்பாய், தமிழ் நாட்டின் தெற்குப் பகுதிகளிலும் கொலைக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. மரண தண்டனை இல்லையென்றால் கொலைக் குற்றங்கள் பல மடங்கு அதிகரிக்க அதிக வாய்ப்புண்டு. ஆகவே இந்தியாவில் மரண தண்டனை தொடர்ந்து வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

உடல் ஒறுப்பு (Corporal Punishment)

உடல் ஒறுப்பு அல்லது உடல் சித்திரவதை செய்தல் பழைய கால தண்டனை முறைகளில் ஒன்றாகும். இது அக்காலத்தில் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது. இந்த 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் குற்றச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டது. குற்றச் சட்டத்தில் இத்தண்டனை இல்லையே தவிர நடைமுறை வாழ்க்கையை விட்டு அகன்றபாடில்லை. அதாவது குழந்தைகள் குற்றம் புரிந்துவிட்டால் உடனே பெற்றோர்கள் குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துவதன் மூலமாகக் குழந்தைகளுக்குக் குற்றத்தை உணரச் செய்துவருகின்றனர். மேலும் கிராமப்புறங்களில் கிராமப் பஞ்சாயத்தாரால் குற்றம் விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளிக்கு உடல் ஒறுத்தல் தண்டனை அளிக்கப்பட்டு வருகின்றது.

குற்றச் செயலால் அடைந்த இன்பத்தின் அளவிற்கேற்றாற்போல அவனுக்கு உடல் ஒறுத்தல் தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. உடல் ஒறுத்தல் முறைகள் பின்வருமாறு : குற்றவாளிக்குச் சூடுபோடுதல் (கை, நெற்றி, தோள்பட்டை ஆகிய இடங்களாகும்), விதையடித்தல் (Castigation) அல்லது கை, கால், விரல் ஆகிய உறுப்புகளை வெட்டிவிடுதல், மரப்பணிச்சட்டத்தில் மாட்டித் துன்புறுத்தல் (Pillory) அல்லது இரும்புக் கூண்டுகளில் அடைத்துவைத்தல அல்லது இரும்பு இடுக்குகளில் அடைத்துச் சித்திரவதை செய்தல் அல்லது சாட்டையால், சவுக்கால், அடித்துத் துன்புறுத்துதல், ஊசியால் குத்துதல் முதலியவையாகும்.

சில வேளைகளில் உடல் ஒறுத்தல் தண்டனை மரண தண்டனையுடன் இணைந்திருந்தது. அதாவது கல்லினால் அல்லது சாட்டையால் அடித்தோ அல்லது கை, கால்களை வெட்டியோ மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வந்தது. குற்றவாளி அடைந்த இன்பத்திற்குத் தகுந்தாற்போல துன்பம் வழங்கப்பட்டது.

இவ்வுடல் ஒறுத்தல் தண்டனைமுறை மத்திய காலத்தில் அதிக அளவில் செயற்படுத்தப்பட்டுவந்துள்ளது. இந்தியாவில் உடல் ஒறுத்தல் தண்டனைமுறை சமீபகாலம் வரையில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது 1955-ல் குற்றச் சட்டத்திலிருந்து அடியோடு நீக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1952ஆம் ஆண்டு வரையில் உடல் ஒறுத்தல் தண்டனை வழங்கப்பட்டது.

சிறைத் தண்டனை அளிக்கப்பட்டாலும் உடல் ஒறுத்தல் தண்டனையும் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று அபராதம் விதிக்கப்பட்டாலும் அத்துடன் உடல் ஒறுத்தல் தண்டனையும் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக எவ்வகையான தண்டனை வழங்கப்பட்டாலும் அத்துடன் உடல் ஒறுத்தல் தண்டனையும் சேர்த்து வழங்கப்படும் வழக்கம் காணப்படுகின்றது.

குற்றவாளியை இழிவுபடுத்துதல் (Social Degradation)

குற்றவாளியை இழிவாக நடத்துவதும் தண்டனை முறைகளில் ஒன்றாகும். பொதுவாக, திருட்டுவகைக் குற்றங்களுக்கு இவ்வகையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது குற்றவாளி சமுதாயத்தில் நன்மதிப்பை, கௌரவத்தை இழக்கும்படி செய்தல். இந்த இழிவும் அவமதிப்பும் சில வேளைகளில் நிரந்தரமாகவும், சில நேரங்களில் தற்காலிகமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

16, 17ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளில் இவ்வகையான தண்டனை முறைகள் அதிக அளவில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவ்வகையான தண்டனையும் குற்றச் சட்டத்தில் நீக்கப்பட்டு விட்டதே தவிர, நடைமுறைப் பழக்கத்திலிருந்து அடியோடு நீக்கப்படவில்லை. முன்பு கூறப்பட்ட உடல் ஒறுத்தல் தண்டனை வகைகள் அனைத்தும் குற்றவாளிக்கு இழிவை உண்டாக்கக் கூடியதேயாகும். குற்றவாளியை முச்சந்தியில் நிற்கவைத்து அடித்தல், மரப்பணிச் சட்டத்தில் மாட்டித்

துன்புறுத்தல், நெற்றியில் சூடுபோடுதல், விரல்களை வெட்டி விடுதல், கை, கால்களை வெட்டிவிடுதல் ஆகியவை குற்ற வாளிக்கு இழிவை உண்டாக்கும் செயல்களாகும். இதில் நெற்றி, தோள்பட்டை ஆகிய பாகங்களில் சூடு போடுதலும், விரல், கை, கால், காது, கண் இவற்றை வெட்டிவிடுதல் அல்லது குத்தி விடுதல் ஆகியவை குற்றவாளிக்கு நிரந்தரமான இழிவை உண்டாக்கக் கூடியவையாகும்.

17ஆம் நூற்றுண்டில் நியூயார்க் நகரத்தில் ஒரு குற்றவாளி பக்கத்துத் தோட்டத்தில் முட்டைக்கோஸ் திருடிவிட்டதனுல் அதற்குத் தண்டனையாக அவனை மரப்பணிச் சட்டத்தில் பிணைத்து (Pillory) அத்துடன் அவன் தலையில், திருடிய முட்டைக் கோஸ் (Cabbage) வைத்திருக்கும்படி தண்டனை வழங்கப் பட்டுள்ளது. மேலும் அவன் அந்த நகரத்தை விட்டு ஐந்தாண்டுகள் வரையில் வெளியில் வாழவும் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இவ்வகையான தண்டனை முறைகள் இந்தியாவில் கிராமப் புறங்களில் சர்வ சாதாரணமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் திருட்டுக் குற்றவாளியை மொட்டை அடித்து, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, கழுதைமேல் ஏற்றிவிடுவார்கள். அத்துடன் திருடிய பொருளை அவன், தலை மேல் சுமந்துகொண்டு அந்தக் கிராமத்தையே சுற்றிவருதல் வேண்டும், அவ்வாறு வரும்போது சிறுவர்கள் அவனைப் பார்த்து கேலி செய்வதும், அழுகல் முட்டையால் அடிப்பதும், பெண்கள் அவன் முகத்தில் காறித்துப்புவதும் உண்டு. சில இடங்களில் கழுதை ஊர்வலத்திற்கு முன்பு மேளம் முழங்கிச் செல்வதும் உண்டு. இதனுல் வீட்டிலுள்ளோர் வெளியில் வந்து பார்ப்பதற்கு ஏதுவாகின்றது. இச்செயல் மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்து விடுகின்றது.

இம் முறையின் நன்மை தீமைகள் :

இம்முறையால் குற்றவாளி சமுதாயத்திற்குக் காட்டிக் கொடுக்கப்படுகின்றுர். இதனுல் சமுதாய மக்கள் குற்றவாளியின் அடையாளம், அவனுடைய குற்ற ஒழுக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்கின்ற காரணத்தினுல் வாழ்க்கையில் எச்சரிக்கையாக இருக்க ஏதுவாகின்றது. குற்றவாளியுடன் மற்றவர்கள் எச்சரிக்கை யோடு பழகவும் வாய்ப்புண்டாகிறது. மேலும் குற்றவாளியை நம்பி எதையும் ஒப்படைக்கமாட்டார்கள் என்பவை நன்மைகளாகும்.

இம்முறையால் குற்றவாளியை மக்கள் இழிவு அவமானப் படுத்திவிடுவதனால் அதே இடத்தில் வாழ்வதற்குக் குற்றவாளிக்கு அதிக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. மற்றவர்கள் இழிவாகப் பார்ப்பதுடன் குற்றவாளியை எளிதில் நம்ப மாட்டார்கள். இதனால் குற்றவாளிகள் சமுதாயத்துடன் சாதாரணமாகத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாததனால் குற்றவாளி தனிமையில் கஷ்டப்பட நேரிடுகின்றது. ஆகவே அவன் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய கட்டாயத்துக்குள்ளாகின்றான். சிலர் வெறுப்படைந்து, அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்வதும் உண்டு. இன்னும் சிலர், சமுதாயத்தில் இழிவான பெயர் எடுத்த பிறகு இனி நல்ல பெயர் எடுக்கப்போவதில்லை, தலைக்குமேல் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற கொள்கையின் அடிப்படையில் குற்றத்தைத் தொடர்ந்து திருட்டு, கன்னக்கோல், கொள்ளை, கூட்டுக் கொள்ளை ஆகிய கடுங் குற்றங்களில் ஈடுபட்டு விடுவதும் உண்டு. இம்முறையால் சாதாரண குற்றவாளி கடும் குற்றவாளியாக மாறிவிடவும் ஏதுவாகின்றது.

மேலும் உரிமம் (Licence) பெற்றுத் தொழில் நடத்துபவர்கள் விதிமுறையை மீறினால் உடனே உரிமத்தை நீக்கிவிடுவதனால் தொழில் தொடர்ந்து நடத்தமுடியாமல் போய்விடுகின்றது. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆலை முதலாளிகள், ஓட்டுநர்கள் ஆகியோர்கள் சிறு குற்றத்தைப் புரிந்தாலும் அல்லது தொழில் விதிமுறைகளை மீறினாலும் உடனே மேற்கொண்டு அவர்கள் தொடர்ந்து அந்தத் தொழிலை நடத்தாவண்ணம் உரிமத்தை நீக்கிவிடுவார்கள். இது தற்காலிகமாகவும் இருக்கும் அல்லது நிரந்தரமாகவும் இருக்கலாம். மேலும் பள்ளி, பயிற்சிப் பள்ளி, கல்லூரி, பயிற்சிக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களிலும் சிறு குற்றம் அல்லது கல்லூரிகளின் விதிமுறைகளை மீறிய மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பள்ளியையோ அல்லது கல்லூரியையோ விட்டு நீக்கிவிடும் விதிமுறைகளை எல்லாக் கல்வி நிறுவனங்களும் செயற்படுத்தி வருகின்றன. விதிமுறைகளை மீறும் மாணவர்களைக் கல்லூரியைவிட்டு நீக்கிவிடுவது மற்ற மாணவர்கட்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றது.

மேலே கூறப்பட்ட பலவகை நடவடிக்கைகள் அனைத்தும் தண்டனையாகக் கருதப்பட்டாலும் அது குற்றவாளிகளை இழிவுபடுத்துவதாகவே அமைந்துள்ளது. 15-20 ஆண்டுகளுக்கு முன்பு நேரங்கடந்து பள்ளிக்குவரும் மாணவர்களை கடைசி மேஜை மீது நிற்க வைக்கும் வழக்கம் உண்டு. அப்படி நிற்பதனால் மற்ற

மாணவர்கள் பார்ப்பதனால் அவர்களுக்கு அவமானத்தை உண்டாக்க வேண்டும் என்பது ஆசிரியரின் கொள்கை. இதனால் மீண்டும் அவ்வாறு வரக்கூடாது என்பதற்காகத்தான். இன்று நிலைமை மாறிவிட்டது. குற்றமே புரிந்து விட்டதற்காக மாணவர்களைக் கல்லூரியைவிட்டு நீக்கினாலே அதற்காக மற்ற மாணவர்கள் அவர்களுக்கு ஆதரவாகப் பள்ளி வேலைநிறுத்தம் தொடங்கி விடுகின்ற நிலை உருவாகிவிட்டது. அதேபோன்று திருடர்களை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபடுவதும் கடினம்தான். ஏனென்றால் இழிவுபடுத்தும் செயல்களைக் குற்றவாளிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றார்கள். 'குற்றத்திற்குரிய தண்டனை இதுவன்று' என்றும் 'உரிய தண்டனை கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன்' என்றும் கூறுகின்றார்கள். இதனால் இன்று நாகரிகம் வளராத பகுதிகளில்தான் குற்றவாளிகளை இழிவுபடுத்தும் செயல் புரியப் பட்டு வருகின்றது.

நாடு கடத்துதல் (Banishment)

'நாடு கடத்துதல் என்பது தண்டனை வகைகளில் ஒன்றாகும். ஆனால் இம்முறை குற்றச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. இது மரண தண்டனைக்கு அடுத்த கடுமையான தண்டனையாகும். உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் 'நாடு கடத்தல்' தண்டனையைச் செயற்படுத்தி வந்துள்ளன. பொதுவாக, சமுதாயத்திற்கு எதிரான செயல்கள், அரசன் அல்லது அரசிக்கு எதிரான செயல், அரசாங்கத்தைக் கவிழ்க்கக்கூடிய செயல்கள் ஆகிய செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு நாடு கடத்தல் தண்டனை வழங்கிவந்துள்ளார்கள். மேலே கூறப்பட்ட குற்றங்களுக்கு மரண தண்டனையும் வழங்கப்பட்டுவந்தது. மரண தண்டனை வழங்கப்படாதவர்களுக்கு நாடுகடத்தல் தண்டனை வழங்கப் பட்டுள்ளது என்பதறிக.

ரோம், இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்கா, ரஷியா முதலிய நாடுகளிலும் இன்னும் பிற நாடுகளிலும் நாடு கடத்துதல் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது. நாடு கடத்துதல் தண்டனையில் இருவகையாகும். ஒன்று தற்காலிகமாக நாடு கடத்துதல், இரண்டு நிரந்தரமாக நாடு கடத்துதலாகும். முன்னது வகையில் குறிப்பிட்ட காலம் (வருடம்) வரையில் தன் சொந்த, தாய்நாட்டைவிட்டு வெளிநாட்டில் தங்கியிருத்தல் வேண்டும். அந்தக் குறிப்பிட்ட காலம் கழிந்தவுடன் குற்றவாளி தாய் நாட்டிற்குத் திரும்பிவர உரிமை உண்டு. பின்னது வகையில் தாய்நாட்டிற்குத் திரும்பி வரவேகூடாது. அனுப்பப்பட்ட நாட்டிலேயே வாழ்ந்து மடிதல் வேண்டும்.

இங்கிலாந்தில் நாடு கடத்துதல் தண்டனை வழங்குவதற்கு 1597-ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடக்கக் காலத்தில் போக்கிரிகள், நாடோடிகள், பிச்சைக்காரர்கள் ஆகியோர்களை நாடுகடத்தி வந்துள்ளது. இங்கிலாந்தில் இருந்து அமெரிக்கா குடியேற்றப் பகுதிகளுக்கு (Colony) இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்கள் தாம், அமெரிக்காவில் வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டார்கள். 1786-ல் அமெரிக்க நாடு தனிச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யப்பட்ட பின்பு இங்கிலாந்து, குற்றவாளிகளை அமெரிக்கா குடியேற்றப் பகுதிகளுக்கு அனுப்பாமல் ஆஸ்திரேலியாவிற்கு நாடுகடத்தி வந்தது. ஆஸ்திரேலியாவிற்கு 1867ஆம் ஆண்டு வரையில் குற்றவாளிகளை நாடு கடத்தி வந்தது. இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டவர் அல்லது தாய்நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டவர்கள் மிகவும் அதிகமாகும். இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு நாடுகடத்தி அனுப்பப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,34,308 ஆகும். அதாவது வருடத்திற்குச் சராசரியாக 474 நபர் வீதம் 1787 முதல் 1816 வரையிலும், 1816 முதல் 1836 வரையில் 3,000 குற்றவாளிகள் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள். இதில் 1834-ல் 4,053 குற்றவாளிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடு கடத்தப்பட்டவர்களில் 480 குற்றவாளிகள் மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள். 10,716 குற்றவாளிகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களாகும். மரண தண்டனை வழங்கப் பட்டாலும் அதை நிறைவேற்றுமல் நாடுகடத்திவிடும் முறையும் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியில் இங்கிலாந்தில் நாடுகடத்தல் தண்டனை (கைவிடப்பட்டு) நீக்கிவிடப்பட்டது. அதாவது சீர்திருத்த தண்டனைக் கொள்கைக்கு இது முரண்பட்டதாகக் காணப்பட்ட தனுலும் நாடு கடத்தப்படுவதற்கு அதிகச் செலவு ஏற்பட்ட தனுலும் ஆஸ்திரேலிய நாடு இதைக் கடுமையாக எதிர்த்து வந்த தனுலும் இங்கிலாந்து நாடுகடத்தல் தண்டனையை நிறுத்திவிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயிற்று.

இம்முறையில் நன்மை தீமை இரண்டும் உண்டு. குற்றவாளி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படும்போது அவன் புதிய நாட்டிலும் தொடர்ந்து குற்றத்தைப் புரிய அதிக வாய்ப்புண்டு அல்லவா. திருட்டு வகையான குற்றங்கள் புரிந்த வர்களாக இருந்தால் மேலும் குற்றவொழுக்கம் பரவுவதற்கு

அதிக வாய்ப்புண்டு. ஆனால் கொலைக் குற்றமாக இருந்தால் குற்றங்கள் தொடர்வதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் குற்றவாளி கள் அனைவரும் ஒரே பகுதியில் குடியேற்றப்படுவதனால் அவர் களைச் சீர்திருத்தி, மறுசீரமைத்துப் புதுவாழ்க்கைத் தொடரவும், வாழ்வை வளப்படுத்தவும் அவர்களுக்குத் திறமை வாய்ந்த வழி காட்டிகளோ மற்ற வசதிகளோ கிடைப்பதில்லை.

இந்தியாவில் நாடுகடத்தல் தண்டனை சமீப காலம் வரையில் செயற்படுத்தப்பட்டது. இந்தியக் குற்றவாளிகள் அந்தமான், நிக்கோபர் ஆகிய தீவுகளுக்கு அனுப்பப்பட்டு வந்துள்ளார்கள். போர்ச்சுக்கல் நாடும் குற்றவாளிகளையும் இழிவான பெயரெடுத்த பெண்களையும் பிரேசிலுக்கும் (Brazil) பிறகு அங்கோலாவுக்கும் (Angola) அனுப்பிவந்துள்ளது. ரஷியா 1823-ல் சைபீரியா (Siberia) நாட்டைக் குடியேற்ற நாடாகப் பயன்படுத்தி வந்துள்ளது.

இத்தாலி 1865-லிருந்து தன் அருகில் உள்ள தீவுகளுக்குக் குற்றவாளிகளை நாடு கடத்தி வந்துள்ளது. அதே போன்று பிரான்சும் நாடுகடத்தல் தண்டனையைச் செயலாற்றி வந்துள்ளது.

பொதுவாக, திருத்தமுடியாத, நேர்மை, நெறிகெட்ட பெண்கள், குற்றவாளிகள், மயக்க போதைக்கு அடிமையான வர்கள், சர்வாதிகார வெறிகொண்டவர்கள், கடுங் குற்றவாளிகள் ஆகிய வகையான குற்றவாளிகள் நாடு கடத்தப்பட்டு வந்துள் ளார்கள்.

'தீயாரைக் காண்பதுவும் தீதே' என்பதற்கிணங்க குற்ற வாளிகள் மற்றவர்கள் கண்ணால் காணாதவாறு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தார்கள். தாய் நாட்டை மறந்து தாய், தந்தை, உற்றார், உறவினர்கள், சொத்து சுகம் ஆகியவற்றை மறந்து புதிய நாட்டில் வாழத் துவங்கும்போது அவர்களுக்கு அது புதிய பிறவி யாகத்தானே தோன்றக்கூடும்?

சிறைத் தண்டனை (Imprisonment)

குற்றச் சட்ட வரலாற்றில் சிறைத் தண்டனையானது மற்ற தண்டனைகளைவிட நவீனமானதாகும். கற்கால மனிதன் சிறைத் தண்டனையை அறியாமல் இருந்தான். நாகரிகத் தொடக்கக் காலத்திலும் கூட சிறைத் தண்டனையை அறியாமல்தான் இருந் திருக்கின்றார்கள். மத்திய காலம் வரையில் பிரான்சு சிறைத்

தண்டனையை அறியாமல் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கீரே நாட்டிலும் ஆதியில் சிறைத் தண்டனை செயற்படுத்தப்படவில்லை. 1670-ல் காணப்பட்ட பிரான்சு (நாட்டின்) குற்றச் சட்டத்தில் சிறைத் தண்டனை பற்றிய குறிப்போ அல்லது விளக்கமோ காணப்படவில்லை. ஆனால் அபராதத் தொகையை வசூல் செய்யும் பொருட்டுச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது அல்லது தணிப்புச் சூழ்நிலையில் கொலைக் குற்றம் புரிந்து மரண தண்டனையைக் குறைக்கப்பட்ட சூழ்நிலைகளில் அதாவது மரண தண்டனை வழங்கிவிட்டாலும் அதைச் செயலாற்றப்படாத சூழ்நிலைகளில் சிறைத் தண்டனையைச் செயற்படுத்தி வந்துள்ளார்கள்.

இவற்றிலிருந்து சிறைத் தண்டனை என்பது தண்டனை வகைகளில் ஒரு முறை என்ற கருத்தில் சிறைத் தண்டனை வழங்கப்படவில்லை. அபராதம் செலுத்தாமல் தப்பி ஓடிவிடக்கூடாது என்ற காரணத்திற்காகவே சிறையில் அடைக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்பது விளங்கும்.

இங்கிலாந்தில் ஆங்கிலோ சாக்சான் ((Anglo Saxon) காலத்தில் சில வகையான குற்றங்களுக்கு மட்டும் சிறைத் தண்டனை வழங்கி வந்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக, கொலைக் குற்றத்திற்கு 120 நாட்களும், திருட்டுக் குற்றத்திற்கு 40 நாட்களும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வந்துள்ளது. அதாவது குற்றவாளிகளின் உறவினர்கள் குற்றக் கழுவாய் செய்யும் வரையில் சிறையில் அடைத்து வைக்கப்பட்டார்கள். அக்காலத்தில் குற்றத்திற்குப் பரிகாரமாக, கழுவாயாக தாக்கப்பட்டவர்கள், அல்லது பலியாளின் உறவினர்களுக்குக் குற்றக் கழுவாயாக (Wergild) (இழப்பீட்டுத்தொகை) குற்றவாளிகள் கொடுக்கவேண்டும். அவ்வாறு உடனே கொடுக்கத் தவறியவர்களை மேலே கூறப்பட்ட காலம் வரையில் சிறையில் அடைத்துவைத்துள்ளார்கள். தெளிவாகக் கூறவேண்டுமானல் சிறைத் தண்டனை குற்றத்திற்கான தண்டனையாகக் கருதப்படவில்லை என்பது விளங்கும். மேலும் இங்கிலாந்தில் இரண்டாம் ஹென்றி (Henry II) காலத்தில் 'பொய்ச் சான்று' (Perjury) கூறிய குற்றத்திற்காக ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனையும் மூன்றும் ஹென்றி (Henry III) காலத்தில் வனச் சட்டத்தை (Forest law) மீறிய குற்றத்திற்கு ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. ஆனல் இந்தச் சிறைத் தண்டனையும் அபராதம் வசூலிக்கும் நோக்கத்துடனேயே வழங்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்தியவுடன் விடுதலை அளிக்கப்பட்டுவிடும்.

மாதாகோயில்கள் சிறைத்தண்டனை வழங்கி வந்தது (Imprisonment by Churches)

கிறித்தவ மதக் குருமார்கள் தங்களுக்குட்பட்ட எல்லைக்குள் குற்ற விசாரணை நடத்தித் தண்டனை வழங்க உரிமை பெற்றிருந்தார்கள். ஆனால் மரண தண்டனை வழங்க அவர்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை. ஆகவே மதத்தலைவர்கள் குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கிவந்தார்கள். மரண தண்டனை வழங்கப்படாத குற்றவாளிகளைச் சமுதாயத்திலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்திவைப்பதன் மூலமாகக் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கி வந்துள்ளார்கள். 1293-ல் ஒரு சகோதரன் மற்றொருவனுடைய கைவிரலை நாய்போலக் கடித்துவிட்டான். அதற்குத் தண்டனையாகக் குற்றவாளியைச் சங்கிலியால் பிணைத்துத் தனிச் சிறையில் அடைத்து அங்கேயே சிறிது ரொட்டி, மாறுபட்ட மது, பானையில் நீர், சிறிது மாமிசம் அல்லது மீன் ஆகிய உணவு வகைகளைக் கொடுக்கும்படி சமய வட்டத் தலைவர் (Bishop) தீர்ப்பு வழங்கியுள்ளார். மேலே கூறப்பட்ட உணவு வகைகளை வழங்கி வந்ததும் ஆறாவது நாள் குற்றவாளி தன் குற்றத்திற்காக மனம் வருந்தி, தக்க கழுவாய் மேற்கொள்ள முனைந்தால் விடுதலை அளித்துவிடவேண்டும் என்று அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. குற்றவாளிகளைச் சீர்திருத்துதல் தான் தண்டனையின் கொள்கை என்பதன் அடிப்படையில் இத்தண்டனை அமைந்துள்ளது என்பது ஆராயத்தக்கதாகும். மேலும் குற்றத் தேர்வு விசாரணைக் (Inquisition) காலத்திலும் குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து வைக்கும்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடுங்குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. சில வேளைகளில் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. இதில் இரு வகையான சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. சிலருக்குக் குறிப்பிட்ட காலம் வரையிலும் மற்றும் சிலருக்குக் காலவரம்பின்றியும் சிறையில் அடைத்து வைக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இறுதியில் சில குற்றவாளிகள் மன்னிக்கப்பட்டு விடுதலை அளிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு மன்னித்து விடுதலை அளிக்கப்பட்டதற்கு இரு காரணக் கூறுகள் காணப்படுகின்றன. குற்றவாளி தன் குற்றத்தை உணர்ந்து திருந்திவிடுதல். மற்றொன்று போதிய சிறைச்சாலைகள் இல்லாமையால் புதிய குற்றவாளிகளைச் சிறையில் அடைக்க வேண்டி பழைய குற்றவாளிகளை மன்னித்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து 'சிறைத் தண்டனை' தண்டனை வகைகளில் ஒன்று என்ற கருத்தின் அடிப்படையில் முதன்முதலில் செயற்படுத்தி வந்தவர்கள் சமயத் தலைவர்கள் தாம்.

கப்பல்களில் சிறைவைத்தல் (Imprisonment in the Galleys)

குற்றவாளிகள், அடிமைகள் ஆகியோர்கள் கப்பலில் அடைக்கப்பட்டு அவர்கள் துடுப்புத் தள்ளுவதற்கும் மற்ற வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளார்கள். இவ்வாறு 15ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரையில் குற்றவாளிகள் கப்பலில் அடைக்கப்பட்டுக் கப்பலின் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளார்கள். மேலும் கப்பலில் பணியாற்ற இயலாதவர்களான பெண்கள், முதுமை அடைந்தவர்கள், முடமானவர்கள் ஆகியோர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டார்கள்.

குற்றவாளிகளைச் சீர்திருத்த இல்லங்களில் சிறை வைத்தல் (Imprisonment in the House of Corrections)

இங்கிலாந்தில் 16ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் சீர்திருத்த இல்லங்கள் தோன்றலாயின. நகரங்களில் நாடோடியாகத் திரிந்தவர்களையும், பிச்சைக்காரர்களையும் பிடித்து ஒரே இடத்தில் அடைத்து அவர்களின் சோம்பலை ஒழிக்க வேண்டும் என்ற கருத்து மன்னருக்கு அறிவிக்கப்பட்டது. மன்னர் அந்தக் கருத்தை ஏற்று அதற்கு இல்லமாக அரண்மனையில் ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு அதைப் பயன்படுத்த அனுமதி அளித்தார். அந்த இடத்தில் இளங்குற்றவாளிகள். இளஞ்சிறுவர்கள், நாடோடிகள், மட்டமான தரத்தை உடையவர்கள் ஆகியோருக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முறையில் சிறந்த நன்மை ஏற்பட்டதனால் மேலும் ஒவ்வொரு நகரத்திலும் சீர்திருத்த இல்லங்கள் அமைக்க உத்தரவு போடப்பட்டது. இங்கிலாந்தில் 1576-ல் சீர்திருத்த இல்லங்கள் அமைப்பதற்கு வேண்டிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. 1609-ல் சீர்திருத்த இல்லங்கள் அமைக்கப்படாத நகரங்களுக்கு அபராதம் விதிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால் சீர்திருத்த இல்லங்கள் மேலும் பெருகியதுடன் இல்லங்களின் பணிகள் சிறப்படைந்தன. கடினமான, அதேநேரத்தில் குற்றவாளிகளுக்கு ஆர்வம் இல்லாத பணிகளில் ஈடுபடுத்துவதனால் குற்றவாளிகள் பணியின் கடுமையை எண்ணி மனம் திருந்துவார்கள் எனக் கருதப்பட்டது. தன் குற்றத்தை உணராதவர்கள், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தவர்கள் ஆகிய குற்றவாளிகள் சித்திரவதைத் தண்டனைக்குள்ளானார்கள். சிறைத் தண்டனையுடன் உடல் ஒறுத்தல் தண்டனையையும் இணைத்துச் செயலாற்றி வந்தார்கள்.

சீர்திருத்த இல்லங்களில் போக்கிரி, கயவன், வஞ்சகன், நாடோடி, சோம்பேறிகள், காமவெறி பிடித்த பெண்கள், பரத்தை

யர்கள், சட்ட முரணான குழந்தைக்குத் தாயானவர்கள், குடும்பத்தை அனாதையாக விட்டுவிட்டு நாடோடிகளாகத் திரியும் ஆண்கள் ஆகியோர்கள் அடைத்து வைக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சியும் உடல் ஒறுத்தல் தண்டனையும் அளிக்கப்பட்டுவந்தன. 18ஆம் நூற்றாண்டு வரையில் சீர்திருத்த இல்லங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் பெயரைத் தவிர வேறு வேறுபாடு இல்லாமல் செயற்பட்டு வந்துள்ளன. சிறைச்சாலை, சீர்திருத்த இல்லங்கள் ஆகிய இரு இடங்களிலும் ஒரே மாதிரியான கட்டுப்பாடுகள், ஒழுக்க விதிமுறைகள், பயிற்சி முறைகள் ஆகியவை செயற்படுத்தப்பட்டுவந்தன. 1711ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி சீர்திருத்த இல்லங்களில் குற்றவாளிகளை அதிக அளவு மூன்று வருடங்கள் வரையில் அடைத்து வைத்திருக்க உரிமை வழங்கப்பட்டது. அடுத்து நிறைவேற்றிய சட்டத்தில் சீர்திருத்த இல்லங்களில் அடைத்து வைக்கும் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன. இதனால் அதிகமான குற்றவாளிகள் சீர்திருத்த இல்லங்களில் அடைக்கப்பட ஏதுவாயிற்று.

1669-ல் குற்றவாளிகளை மரச்சட்டத்தில் பிணைத்து அடைத்து வைப்பதற்குப் பதில் உலைக்கூடம் (Workshop) நிறுவப்பட்டு அங்கே திருடர்கள், பரத்தையர்கள் ஆகியோர் பணியாற்ற வசதி செய்யப்பட்டது. அவ்வாறு தொழில் புரிவதனாலும். சமயக் கோட்பாடுகள் புகட்டுவதனாலும் குற்றவாளிகள் திருந்திவிடுவார்கள் என நம்பப்பட்டது.

1716-ல் வால்டிம் (Waldheim) சீர்திருத்த இல்லம் நிறுவப்பட்டது. இந்தச் சீர்திருத்த இல்லம் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று தரைப் பகுதி இல்லம், இரண்டாவது மேல்மாடி இல்லம் ஆகும். தரைப்பகுதி இல்லத்தில் குற்றவாளிகள் அடைக்கப்பட்டார்கள். மேல்மாடி இல்லம் அனாதைகளுக்கும் வறிஞர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. இந்த இல்லங்களுக்கு வரும் ஒவ்வோர் அங்கத்தினர்களுக்கும் பத்து சாட்டையடி (Ten Lashes) கொடுத்து வரவேற்கப்பட்டார்கள். இங்குக் கடினமான உழைப்பும் மயான அமைதியும் பின்பற்றப்படவேண்டும் என்பது கட்டாய விதியாகும். அங்குள்ள அதிகாரிகளே அவர்களுக்குச் சமயத் தலைவராகவும், ஆசிரியராகவும், மருத்துவராகவும் செயலாற்றிவந்தார்கள். முதல் நூற்றாண்டில் அந்த இல்லங்களில் அங்கத்தினர்களாக இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 954 ஆகும். அதில் 7,921 நபர் குற்றவாளிகள், 4,642 வறிஞர்கள், 1.391 அனாதைகள் ஆகியோர்களாகும். குற்றவாளிகளில் பாதிக்கு மேல் திருட்டுக்

குற்றத்தைப் புரிந்தவர்கள். மீதியில் கால்பாகம் பிச்சை எடுத்தல், நாடோடியாகத் திரிதல் ஆகிய குற்றங்களையும் எட்டில் ஒரு பாகம் ($\frac{1}{8}$) உடல் உறவுத் தொடர்பான குற்றங்கள் புரிந்தவர்களாகவும் விளங்கினர்கள். இந்தச் சீர்திருத்த இல்லங்களின் வளர்ச்சியால் மேலும் பல சீர்திருத்த இல்லங்கள் அமைக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட சீர்திருத்த இல்லங்களுக்கும், தற்பொழுது உள்ள சீர்திருத்த இல்லங்களுக்கும் அதிக வேறுபாடு உண்டு. தற்பொழுது சீர்திருத்த இல்லங்களுக்கு அனுப்பப்படுவோர்களுக்குச் சாட்டையடி கொடுப்பதில்லை. அடுத்து, உழைப்புண்டு. ஆனல் கடுமையான முறையில் நடத்தப்படுவதில்லை. அக்காலத்தில் பெயரைத் தவிர சிறைச்சாலைக்கும் இச் சீர்திருத்த இல்லங்களுக்கும் வேறுபாடு இல்லை. ஆனல் இன்று அதிக வேறுபாடு உண்டு. தற்காலத்தில் சீர்திருத்த இல்லங்களைத் தனியார்களும் நடத்தி வருகின்ருர்கள். ஆனல் அன்று மன்னர் அல்லது அரசாங்கத்தின்கீழ் செயற்படுத்தப்பட்டு வந்தது. இன்று சீர்திருத்த இல்லங்களுக்கு இளங் குற்றவாளிகள் மட்டும் அனுப்பப்படுகின்ருர்கள். அன்று வயது வேறுபாடு இன்றிக் குற்றங்களைப் பொறுத்துக் குற்றவாளிகள் அனுமதிக்கப்பட்டார்கள்.

சிறைத் தண்டனை என்பது 17, 18 ஆம் நூற்ருண்டுகளில் குற்ற விசாரணைக்காகக் காத்திருக்கும் குற்றவாளிகளையும், தண்டனை அடைந்த குற்றவாளிகள் குற்றத்திற்குப் பரிகாரம் அல்லது கழுவாய் அளிக்கும் வரையிலும் அடைத்துவைத்திருக்கும் இடமாகக் கருதப்பட்டு வந்தது. 19ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில்தான் சிறைத் தண்டனையானது தண்டனை வகைகளில் ஒன்று என்று கருதப்பட்டது. குற்றவாளிகளைச் சீர்திருத்த வேண்டும், அவர்களின் குற்றவொழுக்கத்தை மாற்றி நல்லொழுக்கம் உள்ள நல்லவர்களாக மாற்றவும் உகந்தது சிறைத் தண்டனை என்ற கொள்கையைச் சமுதாய வல்லுநர்கள் சமுதாயச் சீர்திருத்தவாதிகள், குற்ற இயல் வல்லுநர்கள் ஆகியோர் பரிந்துரைத்தார்கள். அதன் அடிப்படையில்தான் சிறைச்சாலைகள் சீர்திருத்தம் (Prison reform) வேண்டும் என்ற நோக்கம் பிறந்தது. அதன் பிறகு சிறைச்சாலைகளின் கடுமையான தன்மைகளை (போக்கி) மாற்றியமைத்துக் குற்றவாளிகளின் மனம் மாறுபடும் சூழ்நிலையை உண்டாக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பிறகு ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும், சிறுவர்களுக்கென்றும் தனித்தனி சிறைச்சாலைகள் அமைக்கப் பட்டன. அங்கே குற்றவாளிக்கு வேண்டிய இடவசதிகளுடன் கூடிய அறைகள் கட்டப்பட்டன. திருந்திய குற்றவாளிகளுக்குச் சுதந்திர வாழ்க்கையும் அனுமதிக்கப்பட்டது. இதனால் குற்ற வாளிகளின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப் பட்டது.

இதன் வளர்ச்சியால்தான் இக்காலத்தில் சிறைத் தண்டனை இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டது அதாவது கடுமையான சிறைத் தண்டனை (Rigorous Imprisonment), அடுத்தது எளிமையான சிறைத் தண்டனை (Simple Imprisonment) என்பனவாம். கடுமை யான குற்றங்களுக்குக் கடுமையான சிறைத் தண்டனையும் சாதாரண குற்றங்களுக்கு எளிமையான சிறைத் தண்டனையும் வழங்கச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப, குற்றவாளி களின் தகுதிகளுக்கு ஏற்ப, சிறையில் வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தொடக்கத்தில் பால்பாகுபாடு இன்றிக் குற்றங்களின் வேறு பாடின்றி, வயது வேறுபாடின்றிக் கைதிகள் அனைவரையும் ஒரே இடத்தில் அடைத்துவைத்ததனால் சிறையில் நோயாளிகளும் கலந்து இருந்த காரணத்தினால் மற்றக் கைதிகளுக்கு அந்நோய் எளிதில் பரவியது, மேலும் சுகாதாரச் சீர்கேட்டினால் உடல் நலமுள்ள கைதிகளுக்கும் நோய் பரவியது. இதனால் பல கைதிகள் இறக்க நேரிட்டது. மேலும் சிறையில் சூதாடுதல், மது அருந் துதல், மதத்தைப் பழித்தல் ஆகிய குற்றங்கள், கைதிகளால் அதிக அளவிற்குப் புரியப்பட்டு வந்தன. இதனால் கைதிகளின் ஆர்ப்பாட்டம், அட்டகாசம் பொறுக்கக் கூடியதாக இல்லை. கடுமை யான குற்றம் புரிந்தவர்களையும் எளிமையான, சாதாரண குற்றம் புரிந்தவர்களையும் ஒரே இடத்தில் அடைத்ததனால் கடுங்குற்ற வாளிகளுடன் எளிமையான குற்றவாளிகள் இணைந்து பழகு வதனால் சாதாரண குற்றவாளிகள் கடுங்குற்றங்களையும் புரியத் தேர்ச்சி பெற்றனர். இதனால் கடுங்குற்றங்கள் புரிவதற்கு வாய்ப்புண்டாயிற்று. இதைத் தடுக்கத்தான் சிறைகளைச் சீர் திருத்தம் செய்து குற்றவாளிகள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளாதவாறு தனித்தனி அறைகள் கட்டப்பட்டன. இதனால் சிறைத் தண்டனை வழங்கும் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக் கப்பட்டன. இந்திய குற்றச் சட்டத்தில் நாட்டிற்கு எதிரான

குற்றம், கொலைக் குற்றம், கூட்டுக் கொள்ளையுடன் கொலை செய்தல் ஆகிய குற்றங்களைத் தவிர மற்றக் குற்றங்களுக்குக் கடுஞ் சிறைத் தண்டனையோ அல்லது எளிமையான சிறைத் தண்டனையோ வழங்கப்படவேண்டும் எனக் குற்றச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்று சிறைத் தண்டனைதான் முக்கியமான தண்டனையாகக் கருதப்படுவதுடன் அதிக அளவிலும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. சிறைத் தண்டனையின் வளர்ச்சி மகத்தானதாகும்.

அபராதம் (Fine)

தண்டனை வகைகளில் அபராதம் விதித்தல் ஒன்றாகும். 'அபராதம்' தண்டனையாக விதித்தல் என்பது ஆதிகாலந் தொட்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் 'அபராதம் விதித்தல்' என்பது தொடக்க காலத்தில் குற்றவாளிக்கு விதிக்கப்பட்டது தண்டனையாக அல்ல; குற்றக் கழுவாய்த் தொகையாகக் கருதப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். குற்றக் கழுவாய்த் தொகையைப் பாதிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது பலியாளின் வாரிசுக்கோ வழங்கப்பட்டு வந்தது. இதற்கு, இந்தக் கழுவாய்த் தொகை 'Wergield' என்று அழைக்கப்பட்டுவந்தது. இதில் சிறிது தொகை அரசனுக்கு வழங்கப்பட்டுவந்தது. குற்ற விசாரணை நடத்தப்பட்ட செலவிற்கான தொகையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில்தான் குற்றங்களுக்கு அபராதம் விதிக்கும்முறை செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் அபராதத்தொகை இன்று அரசாங்கத்திற்குச் சேர்ந்துவிடுகின்றது பலியாளின் வாரிசுக்கோ அல்லது தாக்கப்பட்டவர்களுக்கோ வழங்கப்படுவதில்லை.

ஆனால் 12ஆம் நூற்றாண்டில் பலியாளுக்கு அல்லது தாக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த குற்றக் கழுவாய்த் தொகையின் பங்கு குறைக்கப்பட்டு அரசனுடைய பங்கு அதிகமாக ஆக்கப்பட்டது. இறுதியில் அரசனே, அபராதத்தின் முழுத் தொகையையும் எடுத்துக்கொள்ள சட்டம் இயற்றப்பட்டது. அபராதத்தின் மூலமாக வசூல் செய்யப்படும் தொகை அரசாங்க வருவாய்களில் முக்கியமானதாகும். அபராதத் தொகை கண்டிப்புடன் வசூலிக்கப்பட்டது. கட்டத் தவறியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். பலியாளுக்காகக் குற்றக் கழுவாய்த் தொகையாக வசூலிக்கப்பட்ட முறை மாறி அபராதம் விதிக்கப்பட்டுப் பிறகு அதுவே குற்றத்திற்கான தண்டனையாகக் கருதப்பட்டது. இதை ஆராயும்போது அபராதம் என்பது தண்டனையின்

அடிப்படையில் (தோன்றவில்லை) வளரவில்லை. பலியாளின் அல்லது தாக்கப்பட்டவரின் உரிமையின் அடிப்படையில் தோன்றியதாகும். இன்று உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் 'அபராதம்' குற்றத்திற்குரிய தண்டனையாக வழங்கப்பட்டுவருகின்றது.

மேலை நாடுகளின் குற்றச் சட்டங்களில் அதிக அளவு அபராதத் தொகையும் குறைந்த அளவு அபராதத் தொகையும் வரையறுக்கப்பட்டுள்ளன. சிறைத் தண்டனையின் குறைந்தவளவையும் உயர்ந்தவளவையும் வரையறுத்துள்ளார்கள். இதனால் நீதிபதிகள் தங்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப அபராதம் அதிக அளவோ குறைந்த அளவோ விதிக்க உரிமை அளிக்கப்படவில்லை. ஆனால் இந்தியக் குற்றச் சட்டத்தில் அதிகவளவான அபராதத்தொகை மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதால் நீதிபதிகள் தங்களின் விருப்புரிமையைப் பயன்படுத்த உரிமை உண்டு, இதனால் ஒரே குற்றத்தைப் புரிந்த பலவகையான குற்றவாளிகள் பல்வேறு நீதிபதிகளால் விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்குகின்ற காரணத்தால் அபராதமானது குற்றவாளிக்குக் குற்றவாளி வேறுபட ஏதுவாகின்றது. ஆனால் மேலை நாடுகளில் குறைந்தவளவு அபராதத்தொகை வரையறுக்கப்பட்டுள்ளதால் எந்த நீதிபதி விசாரணை நடத்தினாலும் குறிப்பிட்ட தொகைக்குக் கீழ் அபராதமாக விதிக்கமுடியாத நிலை உள்ளது. இந்தியாவில் ஒரே நீதிபதி பல குற்றவாளிகளை விசாரணை செய்யும்போதும், ஒரே குற்றமாக இருந்தபோதிலும் அதற்குத் தண்டனையாக அபராதத்தை விதிக்கும்போது அபராதத்தொகை குற்றவாளிக்குக் குற்றவாளி வேறுபடும் என்பதில் ஐயமில்லை. ஒரு குற்றவாளிக்கு ரூ 25 அபராதமும் அதே குற்றத்தைப் புரிந்த மற்றொரு குற்றவாளிக்கு ரூ. 15 அபராதமாகவும் மூன்றாமவருக்கு ரூ. 40 அபராதமாகவும் விதிக்கும் நிலை இங்கு உண்டு. குற்றத்திற்கான அபராதத் தொகை குற்றச் சட்டத்தில் வரையறுக்கப்படாததுதான் காரணமாகும். உயர்ந்தவளவு அபராதத் தொகை வரையறுக்கப்பட்டிருப்பதால் குறைந்தவளவாக ஒரு ரூபாய் கூட அபராதமாக விதிக்கப்பட்டாலும் குற்றமில்லை. ஆனால் இது முறையற்ற தீர்ப்பாகும்.

குற்ற இயல் வல்லுநர்கள், சமுதாய இயல் வல்லுநர்கள், உள இயல் வல்லுநர்கள் ஆகியோர்கள் குற்றவாளிகளை ஆய்வு செய்து சாதாரண குற்றவாளிகளுக்கு அதாவது சிறு குற்றங்கள் புரிந்தவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குவதைவிட அபராதம் தண்டனையாக வழங்குதல் சாலச்சிறந்தது எனப் பரிந்துரைத்துள்ளனர், 'சீர்திருத்தல் தண்டனை' என்ற கொள்கையின்

அடிப்படையில் ஆராய்ந்தாலும் சிறு குற்றங்களுக்கு 15 நாட்கள், ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் இப்படிப் பலவாறு சிறைத் தண்டனை வழங்கிக் குற்றவாளியைச் சிறையில் அடைத்துச் 'சிறைக் கைதி' என்ற கறையை ஏற்படுத்திச் சமுதாயத்தில் அவமதிப்பு உண்டாக்குவதனால் குற்றவாளிகளின் ஒழுக்கம் மேலும் பாதிக்கப்பட்டுக் கடுங்குற்றங்களில் ஈடுபடவும் ஏதுவாகின்றது. ஆனால் அபராதம் மட்டும் தண்டனையாக விதித்தால் குற்றவாளி 'சிறைக் கைதி' (Prisoner) என்ற அவப்பெயரை அடைய வாய்ப்பு இல்லை. இதனால் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. இங்கிலாந்தில் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொண்டதனால் சிறைத் தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை 1913-ல் 1,33,570-லிருந்து 1968-ல் 36,039-ஆகக் குறைந்துவிட்டது. அத்துடன் இங்கிலாந்தில் மூன்று மாதத்திற்குக் குறைவாகச் சிறைத் தண்டனை அடைந்தவர்கள் 38·4 சதமும் அதே காலத்தில் இந்தியாவில் 80 சதமாகவும் உயர்ந்துள்ளது. இந்தக் குற்றப் புள்ளி விவரத்தை ஆராய்ந்தால் மேலே கூறப்பட்ட கருத்துத் தெளிவாக விளங்கும். சிறைத் தண்டனை வழங்குவதனால் அரசாங்கத்திற்கு அதிகச் செலவாகின்றது. ஒரு கைதிக்கு 1 வருடத்திற்கு ரூபாய் 500 முதல் 600 வரையில் ஆகும். ஆனால் அபராதம் விதித்தால் அரசுக்கு நல்ல வருமானமாகும். தமிழகத்தில் 1969-ல் 1,61,15,908 ரூபாயும், 1970-ல் 1,77,55,838·97 ரூபாயும் ஆகும். இதில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 16,24,560·02 ஆகும்.

அபராதம் தண்டனையாக விதித்தல் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. எடுத்துக்காட்டாக, ஜெர்மனியில் 1882-ல் அபராதம் தண்டனையாக வழங்கப்பட்ட எண்ணிக்கை வீதம் 22·2 சதமாகும். ஆனால் 1934-ல் 54·7 சதமாக உயர்ந்துள்ளது. பிரான்சில் 1900-ல் 35·8 சதமும் 1934-ல் 47·8 சதமும் பெல்ஜியத்தில் 1905-ல் 48 சதமும் 1933-ல் 66·5 சதமும் ஆக உயர்ந்து உள்ளது. சுவீடன் நாட்டில் 1953-ல் 95 சதம் அபராதமாகவே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் அமெரிக்காவில் 75 சத வகிதத்திற்கு மேல் அபராதம் தண்டனையாக வழங்கப்பட்டுவருகின்றது. மேலே கொடுக்கப்பட்ட குற்றப் புள்ளி விவரங்கள் சிறு குற்றங்கள் அதிகரித்ததன் காரணக் கூறுகளினால் அபராதம் விதிப்பதன் சதம் உயர்ந்துள்ளது என்று பொதுவாகக் கருதினாலும் அது ஒருவாறு உண்மையாக இருப்பினும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தை எடுத்து ஆய்வு செய்தாலும் அபராதம் விதித்தல் அதிகரித்து உள்ளது விளங்கும்

எடுத்துக்காட்டாக ஜெர்மனியில் 1882-ல் மோசடிக் குற்றத்திற்கு (fraud) தண்டனையாக, அபராதமாக 11 சதம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1932-ல் அதே குற்றத்திற்கு 47·5 சதமாக உயர்ந்துள்ளது. பொதுவாக அபராதம் தண்டனையாக அதிக அளவில் விதிக்கப்பட்டு வருகின்றது என்பது தெளிவாகும்.

மேலும் அபராதம் விதிக்கப்பட்டாலும் அதைச் செலுத்த இயலாதவர்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று இணைத் தீர்ப்பும் வழங்கப்படுவதனால் சிலர் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடுகின்றது. மேலும் அபராதத் தொகையை வசூல் செய்ய அதுவே சிறந்த வழியாகும். இல்லையென்றால் குற்றவாளிகளிடமிருந்து அபராதத் தொகையை வசூல் செய்ய முடியாது. 1775-ல் நியூ ஜெர்ஸியில் (New Jersey) அபராதம் கட்ட இயலாத குற்றவாளிகளை அபராதத் தொகை செலுத்தும் வரைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவாறு குற்றவாளியை விற்றுவிடலாம் என்ற நிலைமை இருந்தது. 1804 ல் லூஸியானவிலும் (Louisiana) அதே கொள்கை செயற்படுத்தப்பட்டது,

இங்கிலாந்தில் 1905-ல் அபராதம் விதிக்கப்பட்ட குற்றவாளிகள் அபராதத் தொகையைத் தவணை முறையில் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது, ஆனால் தவணையின்படி தொகையைத் கட்டத் தவறினால் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. 1914-ல் தவணை முறையில் அபராதம் செலுத்தும் முறை சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதனால் அபராதம் கட்ட முடியாமல் சிறைத் தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை 1904-ல் 1,07,555-லிருந்து 1930-ல் 12,397 ஆகக் குறைந்து விட்டது.

ஏழைக் குற்றவாளிகள் அபாரதத் தொகையைத் தவணை முறையில் செலுத்த அனுமதிப்பது சாலச் சிறந்ததாகும். கூலி வேலை செய்து அபராதத் தொகையைக் கட்ட ஏதுவாகும். அவ்வாறின்றி மொத்த தொகையும் ஒரே முறையில் கட்டும்படி வற்புறுத்தினால் கட்ட இயலாதவர்களாக சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்து விடுகின்றது. இதனால் சிறைத் தண்டனை அடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து விடுகின்றது. இதனால் 'சிறைக் கைதிகள்' நாட்டில் அதிகரித்துவிட ஏதுவாகின்றது.

அபராதத் தண்டனையின் சிறப்பு இயல்புகள் (The characteristcs of Fine)

மற்ற தண்டனைகளைவிட அபராதம் விதித்தல் சாலச் சிறந்ததாகும். அபராதம் விரைவில், எளிதில் கட்டிவிட்ட பிறகு குற்றவாளி சுதந்திர மனிதனாகி விடுகின்றான். தன் தொழிலை,

வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை ஈட்டுகின்றான். இதனால் குடும்பம் பாதிக்கப்படாமல் இருப்பதுடன் தொடர்ந்து தலைவனின் பாதுகாப்பு கிடைக்க வாய்ப்புண்டாகின்றது. குற்றவாளிகளின் குழந்தைகள் தந்தை அல்லது தாயின் பாதுகாப்பைத் தொடர்ந்து அனுபவிக்க முடிகின்றது. மேலும் அபராதத்தைக் குற்றவாளியால் செலுத்த முடியவில்லையென்றாலும் அவனுடைய நண்பர்கள், உறவினர்கள், இரக்க மனம் படைத்தவர்கள் ஆகியவர்களில் ஒருவர் குற்றவாளிக்காக அபராதத்தைச் செலுத்திக் குற்ற வாளியை விடுவிக்க அதிக வாய்ப்புண்டு.

மரண தண்டனை, சிறைத் தண்டனை, உடல் ஒறுத்தல் ஆகிய தண்டனைகள் வழங்கப்பட்டால் குற்றவாளிக்குப் பதிலாக வேறு யாரும் ஏற்றுக்கொள்ள முன்வரமாட்டார்கள். அப்படி வந்தாலும் அனுமதிக்கப்படமாட்டார்கள். அனுமதிக்கவும் கூடாது. மேலும் நீதிபதி தவறுதலாக மரண தண்டனையோ அல்லது சிறைத் தண்டனையோ அல்லது உடல் ஒறுத்தல் தண்டனையோ வழங்கிவிட்ட பிறகு அதைச் செயற்படுத்திய பின்பு குற்றவாளி குற்றமற்றவன், நிரபராதி என அறிந்தால், வழங் கப்பட்டுவிட்ட தண்டனையிலிருந்து குற்றவாளியை மீட்க முடியாது.

ஆனால் கட்டிவிட்ட அபராதத் தொகையை மீண்டும் திருப்பிக் கொடுத்துவிட முடியும் அல்லவா? எடுத்துவிட்ட உயிரையோ அல்லது சிறையில் அனுபவித்த துன்பத்தையோ திருப்பி வாங்கிக் கொள்ள முடியாது.

மேலும் மரண தண்டனை, சிறைத் தண்டனை ஆகிய தண்டனை களினால் குடும்ப கௌரவம் பாதுகாக்கப்படுவதுடன் அந்தக் குடும்பங்கள் சிதறிய குடும்பங்களாக, சீர்கெட்ட குடும்பங்களாக மாறிவிட ஏதுவாகின்றன. அந்தக் குடும்பங்களிலிருந்து இளங் குற்றவாளிகள் உருவாக அதிக வாய்ப்புண்டாகின்றது. ஆனால் அபராதம் விதிக்கப்படுவதனால் மேலே கூறப்பட்ட அவல நிலைகள், தீமைகள், ஆகியவை தடுக்கப்பட்டுவிடுகின்றன.

இறுதியாக, 'தண்டனை' என்பது 'பழிக்குப்பழி' 'அச்சுறுத் துதல்' குற்றத்தைத் தடுத்தல்' 'சீர்திருத்துதல்', ஆகிய கொள்கை களின் அடிப்படையில் மரண தண்டனை, உடல் ஒறுத்தல், நாடு கடத்துதல், சிறைத் தண்டனை, இழிவுபடுத்துதல், அபராதம், சொத்தைப் பறிமுதல் செய்தல் ஆகிய தண்டனைகளாகக் காலத் திற்கு ஏற்றவாறு தண்டனைகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. சொத்

தைப்பறிமுதல் செய்தலும் (Forfeiture) தண்டனை வகைகளில் ஒன்ருகும். இந்திய குற்றச் சட்டத்தில் சொத்தைப் பறிமுதல் செய்தல் தண்டனையை 126, 127, 169. ஆகிய பிரிவுகளின் குற்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் நேச நாடுகளின் பிரதேசத்தில் கொள்ளையிடுதலும், கொள்ளையிட்ட பொருள்களைப் பறிமுதல் செய்தல், பொது ஊழியர்கள் சட்ட முரணுகப் பொருளீட்டிச் சேர்த்து வந்திருந்தாலும் அவற்றையும் பறிமுதல் செய்யச் சட்டம் அனுமதிக்கின்றது. இன்றைய பொது ஊழியர்கள் இக்குற்றத்தை அதிக அளவில் புரிந்து வருகின்ருர்கள். ஆனுல் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுமில்லை. அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதுமில்லை. இத் தண்டனை சரிவர செயற்படுத்தப்பட்டு வரவில்லை என்பதற்குப் பொது ஊழியர்கள் அதிக அளவில் தன் மனைவி, மகன், சாகேதரர் இன்னும் மற்றவர்களின் பெயரில் பொருள் சேர்த்து வைத்திருப்பதே சான்ருகும். சொத்துப் பறிமுதல் தண்டனை செவ்வனே செயற்படுத்தப்பட்டால் நாட்டில் கையூட்டுக் குற்றம் (Corruption) அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும். அதாவது சொத்தைப் பறிமுதல் செய்தல் தண்டனையை இன்னும் பல குற்றங்களுக்கு வழங்கப்பட சட்டம் இயற்றுதல் வேண்டும். பொது ஊழியர்கள் (Public Servant) குற்றம் புரிந்தால் மட்டும் சொத்தைப் பறிமுதல் செய்யப்படலாம் என்று சட்டம் கூறுகின்றது. ஆனுல் பொதுத் தொண்டு புரிகின்றவர்கள். அரசியல்வாதிகள், ஆகியோர்கள் சட்டத்திற்கு முரணுகப் பொருளீட்டிச் சேர்த்திருந்தாலும் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று குற்றச் சட்டத்தைத் திருத்துதல் வேண்டும். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டால் திடீர் செல்வந்தர்கள், திடீர் திருவாளர்கள் உருவாக வாய்ப்பில்லை.

13. காவல் துறை அமைப்பு

(The Police System)

குற்றங்கள் சமுதாயத்திற்கு விரோதமான செயல்களாகும். ஆகவே குற்றங்களைத் தடுப்பது சமுதாயத்தின் தலையாய கடமையாகும். குற்றங்கள் நிகழா வண்ணம் பாதுகாப்பதும் அவற்றைத் தடுப்பதும் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களின் கடமையாகும். குற்றங்கள் புரியும்போது தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலும், அல்லது குற்றவாளி என அறிந்து அவனை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்காமல் பாதுகாப்புக் கொடுத்து மறைத்து வைப்பதும் குற்றச் செயல்களாகும். தொடக்க காலத்தில் குற்றங்களைத் தடுக்கவும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்குவதற்கும் தனி அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. பொது மக்களே குற்றங்களைத் தடுக்கவும் குற்றவாளியைப் பிடித்துத் தண்டனை வழங்கவும் முன்வந்தார்கள். சமுதாயம் சிறிய அளவு இருந்த போது மேற்கூறியவாறு குற்றங்களையும், குற்றவாளிகளையும் கட்டுப்படுத்தியும் தண்டனை வழங்கியும் வந்துள்ளார்கள். சமுதாயம் வளர வளர குற்றங்கள் அதிகரித்தது. குற்றவாளிகளும் அதிகரித்துள்ளார்கள். குற்றவாளிகளை அடக்கி ஒடுக்குவதும் ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது. குற்றவாளிகளைக் கண்டு சிலர் பயந்தார்கள், சிலர் அச்சங் கொண்டார்கள், சிலர் குற்றவாளிகளிடையே வேற்றுமை பாராட்டினர். இந்த நிலையில் குற்றவாளிகளை அடக்கி ஒடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. உள் நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிக்கும் பொறுப்பு அரசாங்கத்தின் தலையாய கடமையாக அமைந்தது. அதற்காகக் காவல் துறை, நீதித் துறை, சிறைச்சாலை ஆகிய பிரிவுகள் நியமிக்கப்பட்டன. தொடக்கத்தில் அரசனே நீதி வழங்கி வந்தான். பிறகு கால வளர்ச்சியினால் நீதியை வழங்கும் பொறுப்பை ஒரு குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு அலுவல்கள் பல்வேறு குழுக்களிடம் ஒப்படைக்கப்

பட்டன. மேலை நாடுகளில்தான் நீதி மன்றம் என்ற ஒரு நிறுவனம் நியமிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் ஐம்பெருங் குழு, எண்பேராயம் போன்ற குழுக்கள் நீதி நிர்வாகத்துறைகளைக் கண் காணித்து வந்துள்ளன.

சட்டங்களைச் செயற்படுத்துவது அரசாங்கத்தின் கடமை யாகும். அரசாங்கம்தான் சட்டங்களை நிறைவேற்றி வரு கின்றது. அரசாங்கம் நிறைவேற்றும் பல்வேறு சட்டங் களையும் செயற்படுத்த பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு துறைக்கும் ஒரு சில அதிகாரங்கள் வழங்கப் பட்டுச் செயற்படுத்தி வருகின்றன. அந்த அடிப்படையில் அமைந்ததுதான் காவல் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை ஆகியவையாகும். ஒருநாட்டின் வளர்ச்சி, வீட்டில் மகிழ்ச்சி தழைக்க, அமைதியும் ஒழுங்கும் தேவைப்படுகின்றன. நாட்டில் அமைதி நிலவவும் ஒழுங்கைப் பராமரிக்கவும் வேண்டிய சட்டங் களை அவ்வப்பொழுது நிறைவேற்றிவருகின்றது அரசாங்கம். நாட் டில் சட்டம், ஒழுங்கு, அமைதி பராமரிக்கப்படவில்லையென்றால் எங்கும் ஒரே குழப்பம், கலகம், போராட்டம், புரட்சி, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, தீயிடுதல், சொத்து அழித்தல், சண்டை, சச்சரவு ஆகியவை சர்வ சாதரணமாக நிகழும். இதனால் நாட்டின் வளர்ச்சி. முன்னேற்றம், மக்களின் வளர்ச்சி, மக்களின் மகிழ்ச்சி, நாட்டின் உற்பத்தி, அறிவியல் துறை, ஆகியவை பெரிதும் பாதிக்கப்படும். மேலும் அரசாங்கம் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்றால் பாதிக்கப்பட்ட மக்களே குற்றவாளியை அடக்கி ஒடுக்க, தக்க நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்துள்ளாகின்றார்கள். பொது மக்களே நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்கள் நீதியை நிலைநாட்டுகின்றார்கள். இதற்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கும் வேறுபாடு காணப்படும். பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்கள் எடுக்கும் நடவடிக்கைக்கும் வழங்கும் தீர்ப்பும் மாறுபட்டிருக்கும். இதற்குப் பொதுமக்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்தும் சட்டத்திற்குப் பொதுமக்கள் அல்லது பாதிக்கப்பட்டவர் சட்டம் என்று பெயர் (Lynch Law). பாதிக்கப்பட்டவர்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கை அவரவர்களின் மனநிலையை, வலிமையைப் பொறுத்து அமைந் திருக்கும். பாதிக்கப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்கு இணங்க, அவர்கள் செயல் எதிர்ச் செயல் நடவடிக்கை அமைந்திருக்கும். இது நபருக்கு நபர், இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் வேறு படும். மேலும் எளிமைக்கும் வலிமைக்கும் ஏற்ப எதிர் நடவடிக் கையும் அமைந்திருக்கும். இதனால் குற்றங்கள் குறைவதற்குப்

பதில் மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு. அதாவது ஒரு குற்றத்தின் அடக்குமுறை, எதிர் நடவடிக்கை, ஒறுத்தல் ஆகிய வற்றைத் தொடர்ந்து பல குற்றங்கள் நிகழ்வதற்கும் மேலும் பல குற்றவாளிகள் உருவாகுவதற்கும் ஏதுவாகிறது. இவற்றைத் தடுக்க இயற்றப்பட்ட சட்டம்தான் குற்றச் சட்டம் (Penal Law) ஆகும். குற்றச் சட்டம் பொதுமக்களின் நன்மையைக் கருதி விருப்பு வெறுப்பு இன்றி இயற்றப்பட்டதாகும். பொது மக்களும் தங்களின் விருப்பு வெறுப்பின்றிக் குற்றச் சட்டத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டும். மேலும் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வர்கள் 'பழிக்குப்பழி' என்ற உணர்வோடு சுற்றித் திரியாமல் அந்தப் பொறுப்புகளை அரசாங்கத்திடம் விட்டுத் தங்கள் கடமை யைத் தொடர்ந்து செயலாற்றவேண்டும். மேலும் சமுதாயத்தில் ஒருவன் குற்றம் புரிந்துவிட்டாலும் அதனால் பாதிக்கப்பட்டவன் அமைதியாக இருந்துவிட்டாலும் பொதுமக்கள் குற்றவாளியைப் பிடித்துத் தண்டனை வழங்கத் தவறுவதில்லை. குற்றவாளி தன் குற்றத்திற்கான தண்டனையை அனுபவத்தே தீர வேண்டும் என்ற கருத்து எல்லாரிடத்தும் பரவியுள்ளது.

இந்திய குற்றச் சட்டம் (Indian Penal Code) இந்தியாவில் செயற்படுவதற்கு முன் குற்றவாளிகளிடையே பல வேறுபாடுகள் காணப்பட்டன. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கருத்துப் பரவாமல் இருந்தது. குற்றவாளிக்குக் குற்றவாளி வேறுபாடு காட்டப்பட்டது. அதாவது இனத்தின் அடிப்படையில் குற்ற விலக்கும் அளிக்கப்பட்டு வந்தது. மனு நீதிச் சட்டம் (Code of Manu) செயற்படுத்தப்பட்டபோது பிராமணர்கள் குற்றச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தார்கள். பிராமணன் இல்லாமல் அரசன் நீதி வழங்கக் கூடாதென்றும், பிராமணர்கள் எந்தக் குற்றம் புரிந்தாலும், மரண தண்டனையோ சிறைத் தண்டனையோ அளிக்கக்கூடாது என்றும் மனுநீதிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதனால் மனுநீதிச் சட்டத்தினால் பிராமணர்கள் அல்லாதோர் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். ஆரியர்கள் அரசனுக்கு அறிவுரை வழங்குபவர் களாக இருந்த காரணத்தினால் குற்றச் சட்டம் இயற்றும் போது தங்களுக்குத் தக்க பாதுகாப்பைச் சட்டத்தின் மூலமாகத் தேடிக் கொண்டார்கள். அதற்கு அரசர்களும் ஆதரவும், ஊக்கமும் அளித்து வந்தார்கள். பிராமணர்கள் இனத்தால் உயர்ந்தவர்கள், அறிவால் சிறந்தவர்கள் என்ற காரணம் காட்டிக் குற்றச் சட்டத்தி லிருந்து விலக்குப்பெற்று வந்தார்கள். எடுத்துக்காட்டாக, 'பிராமணர்கள் எந்தக் குற்றங்களைப் புரிந்தாலும் பிராமணக் குற்ற வாளியைக் கொல்லக் கூடாது. வேண்டுமானால் அவர்களின்

சொத்துக்கள் முழுவதுடன் உடல் ஊறின்றிப் பாதுகாப்பாக நாடு கடத்திவிடவேண்டும்' என்று மனுநீதிச் சட்டம் கூறுகிறது.

Never shall the king slay a Brahmin, though convicted of all possible crimes let him banish the offender from his realm, but with all his property secure and his body unhurt.

[Manu Ch. VIII 380]

மேலும் பிராமணர்களைக் கொலை செய்தல், கொலை செய்ய எண்ணுதல் என்பது இந்த உலகத்தில் அறிந்த குற்றங்களைவிடப் பெரிய குற்றம் வேறு எதுவுமில்லை என்றும் மனுநீதிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது (No greater Crime is known on earth than slaying a Brahmin). அத்துடன் பூசாரியைக் கொலை செய்ய மனத்தால் எண்ணுவதும் கூடாது என்று மனுநீதிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஒரு தனிப்பட்ட இனத்திற்குச் சாதகமாக மனுநீதிச் சட்டம் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. மனு நீதி என்ற பெயரால் தமிழர்களுக்கும் மற்ற இனத்தவர்களுக்கும் அநீதியையும் கொடுமையையும் இழைத்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

மேற்கூறப்பட்ட ஒரு சார்புள்ள குற்றச் சட்டத்தின் கொடுமைகள் எல்லாம் இந்திய குற்றச் சட்டத்தைச் செயற்படுத்துவதனால் ஒழிக்கப்பட்டுவிட்டது. இந்தக் குற்றச் சட்டத்தின் கீழ் அனைவரும் சமம். சாதி, மதம், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றிக் குற்றத்திற்குரிய தண்டனை வழங்கப்பெற வேண்டும் என்று இந்திய குற்றச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. இந்திய குற்றச் சட்டம் 1862-ம் ஆண்டு சனவரி முதல் இந்தியா முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. குற்ற நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) 1898-ம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. இந்திய குற்றச் சட்டத்தினால் விடிவு காலம் வந்துவிட்டது இந்திய குற்ற நடைமுறைச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. இது புதிய குற்ற நடைமுறைச் சட்டமாக 1974-ம் ஆண்டு இந்தியாவின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதில் காவல்துறை, நீதித்துறை, சிறைச் சாலையின் பணியாளர்கள் ஆகியோர்களின் கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் நீதித் துறை. சட்டத் துறை, நிர்வாகத் துறை (Judicial, Legislature and Executive) என மூன்று பிரிவுகளாகப் பிரித்து நாட்டின் பல்வேறு நடவடிக்கைகளையும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கு நிர்வாகத் துறையைச் சார்ந்த காவல் துறையைப்பற்றி ஆராய்வோம்.

காவல் துறை அமைப்பு

ஒரு நாட்டில் அமைதி நிலவச் சட்டம் தேவைப்படுகிறது. சட்டங்களை இயற்றுவது சட்ட மன்றமாகும். ஆனால் சட்டங்களை இயற்றிவிட்டால் மட்டும் நாட்டில் அமைதி நிலவி விடுமா என்ன ? சட்டங்கள் செவ்வனே செயற்படுத்தப்பட்டால்தான் நாட்டில் அமைதி நிலவும். நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைப் பராமரிப்பது காவல் துறையின் முழு கடமையாகும்.

காவல் துறையின் தோற்றுவாய் (The Dawn of the Police System)

காவல் துறையின் தோற்ற வரலாறு என்பது ஒரு நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பின் வளர்ச்சியைப் பொறுத்து அமைந்திருக்கும். ஒரு நாட்டிற்கு இரண்டு பாதுகாப்புப் படைகள் உண்டு, ஒன்று வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பது இராணுவப் படை, இரண்டாவது உள்நாட்டில் கலகம், குழப்பம், குற்றங்கள், புரட்சி ஆகியவை நடவாமல் பாதுகாப்பது காவல் துறையாகும். நாட்டில் உள்நாட்டுப் புரட்சி, போராட்டம் நிகழும் போது இராணுவப் படையின் உதவியும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே குற்றங்களைத் தடுக்கவும், நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், ஒழுங்கைப் பராமரிக்கவும் பொறுப்புள்ளது காவல் துறையாகும்.

காவல் துறை அந்தந்த மாநிலத்திற்குட்பட்டுச் செயற்பட்டு வருகின்றது. அந்தந்த மாநிலங்களில் உள்ளவர்களே காவல் துறைக்கு நியமிக்கப்படுகின்றார்கள். ஒரு காவல் துறை அதிகாரி அந்த மாநிலத்தின் எந்தப் பகுதிக்கும் மாற்றப்படலாம். ஆனால் காவல் துறையின் உயர் அதிகாரிகள் மட்டும் சில வேளைகளில் மாநிலம் விட்டு மாநிலத்திற்கு மாற்றப்படுகின்றார்கள். மற்றப்படி காவல் துறையாளர்களின் அதிகாரம் அந்தந்த மாநிலத்துடன் நிற்கும். வெளி மாநிலங்களால் குற்றம் புரிந்தாலும் பிரத்தியேக உத்தரவின்றி குற்றவாளியைப் பிடிக்க முடியாது. நீதியை நிலைநாட்டும் பல ஏஜெண்டுகளில் காவல் துறையும் ஒன்றாகும். அதாவது காவல்துறை, நீதித்துறை, சிறைச்சாலை ஆகியவை குற்றச் சட்டத்தைச் செயற்படுத்தும் அரசாங்க ஏஜெண்டுகளாகச் செயற்படுகின்றன.

ஆகவே குற்றங்களைக் களைவதும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதும், சட்டம், அமைதியைப் பராமரிப்பதும் காவல் துறையினர்கள் ' திறமையைப் பொறுத்து அமைந்திருக்கும். காவல் துறைகளில் பல பிரிவுகள் உள்ளன. அதாவது நகரக் காவல் துறை (City Police), மாவட்டக் காவல் துறை

(District Police), சேமக் காவல் (Reserve Police) ஆகியவை யாகும். அவற்றின் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

காவல் துறையினர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் மக்களின் பெருக்கமும், புதிய புதியச் சட்டங்கள் அடிக்கடி நிறைவேற்றுவதுமேயாகும்.

காவல்துறை அதிகாரிகள் நேர்மையோடும், கடமை உணர்வோடும் செயற்பட வேண்டும். உலகிலேயே காவல் துறையினர் நேர்மையும், கடமையுணர்வும் உள்ளவர்கள் என்று புகழப்படுபவர்கள் இங்கிலாந்தில் உள்ள காவல் துறையாகும். மற்ற நாட்டில் உள்ளவர்கள் பொதுவாக நேர்மையற்றவர்கள், கடமை உணர்வு இல்லாதவர்கள் என்ற கருத்துப் பொதுவாகப் பரவியுள்ளது.

காவல் துறை அதிகாரிகள் குற்றங்களை மட்டும் கட்டுப்படுத்தவில்லை. அத்துடன் ஆட்சிமுறை சார்ந்த பணிகளையும் செயலாற்றி வருகின்றார்கள். அதாவது சாலை விதிகளைப் பாதுகாத்தல், சாலையில் விளக்குக் குறி அமைத்தல், பாதை மாறும் குறிப்பும், குறியீட்டுச் சின்னங்கள் அமைத்தல், கார், பஸ், லாரி, டாக்ஸி, ஆட்டோ, போன்ற வாகனங்களை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் (Driving Licence) வழங்குதல், துப்பாக்கிபோன்ற ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்குதல் (Licence) அல்லது மறுத்தல் கூட்டங்களை அமைதியுடன் நடக்க உதவுதல், ஆபாச நாடகம், நடனம், திரைப்படம் அதன் தொடர்பான விளம்பரங்கள் ஆகியவற்றைத் தடுத்தல், தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஊர்வலங்கள் அமைதியாக நடக்க நடவடிக்கை எடுத்தல், இப்படி எண்ணற்ற செயல்களைச் செய்தும் வருகின்றார்கள். தனியாரின் வேண்டுகோளின்பேரில் பாதுகாப்பு அளித்தல், நடவடிக்கை எடுத்தல் போன்ற காரியங்களையும் செய்து வருகின்றனர்.

மேலும் குற்றங்களைக் கட்டுப்படுத்தல் அல்லது குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்தல் ஆகிய பணிகளில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

குற்றவாளியைக் கைது செய்யச் சட்டம் (The Law of Arrest)

பொதுவாகக் குற்றவாளிகளைக் குற்றம் புரியும் இடத்திலேயே கைது செய்யக் காவல் துறையினர்களுக்கு அதிகாரம், உரிமை

வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் குற்றங்கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(i) பிடியாணை வேண்டாக் குற்றம் (Cognisable Offence)

(ii) பிடியாணை வேண்டும் குற்றம் (Non-Cognisable Offence)

முதல் வகைக் குற்றங்கள் கடுமையான குற்ற வகைகளாகும். ஆகவே கடுமையான குற்றம் புரியும் நபர்களைப் பிடியாணையின்றி (Warrant) அதே இடத்தில் குற்றவாளியைக் கைது செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது. காவல் துறை அதிகாரிகளுக்கு இவ்வகையான குற்றவாளிகளைப் பொது மக்களிடம் பிடியாணையின்றிக் குற்றவாளியைக் கைது செய்ய உரிமை உள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இரண்டாம் வகையான குற்றங்கள் கடுமையான குற்றங்கள் அல்ல. ஆகவே அந்தக் குற்றங்களைப் புரிபவர்களைக் கைது செய்யப் பிடியாணையை (Warrant) முதலில் உரிய நீதிபதியிடம் பெற வேண்டும். பிடியாணையின்றியே பொது மக்களைக் கைது செய்ய உரிமை உள்ளது. ஆனால் கைது செய்யப் படுபவர் (Arrestee) குற்றத்தைப் புரிந்து இருத்தல் வேண்டும். இவ்வுரிமை இங்கிலாந்து. அமெரிக்கா. இந்தியா போன்ற நாடுகளில் கடுங் குற்றவாளிகளைக் கைது செய்ய பொது மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நடைமுறையில், பிடியாணை வேண்டும் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளைக் கைது செய்த பிறகுதான் நீதிபதியிடம் பிடியாணை உத்தரவைப் பெற்றுக் கொள்வது காவல் துறையாளர்களின் பழக்கமாகிவிட்டது. சில வேளைகளில் கைது செய்வதற்கு முன்பே பிடியாணை (Warrant) பெற்று விடுகின்றார்கள். இவ்வகையான குற்றவாளிகள் பெரும்பாலும் சமுதாயத்தில் செல்வாக்கு உள்ளவர்களாக விளங்குவார்கள். அதன் காரணமாகத்தான் கைது செய்வதற்கு முன் எச்சரிக்கையாகப் பிடியாணையைப் பெற்றுக்கொண்டு கைது செய்வது வழக்கம்.

சில வேளைகளில் சந்தேகத்தின்மீதும் நபர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இதற்குப் பிடியாணை உத்தரவு தேவையில்லை. அதாவது திருட முற்பட்டான். கன்னக்கோல் போட முயற்சித்தான், பூட்டை உடைக்க ஏற்பாடு செய்தான் என்று பல காரணங்களைக் காட்டி இரவில் சுற்றித் திரியும் நபர்களைக் கைது செய்தும் விடுவதுண்டு. இதில் உண்மையான குற்றவாளிகளும் இருப்பார்கள், நிரபராதிகளும் இருக்கக்கூடும். கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் சட்ட முரணைக் கைது செய்தல்

(Illegal Arrest) என்பது அதிகமாகக் காணப்படுகின்றது. சில வேளைகளில் நிரபராதிகளையும் கைதுசெய்து காவல்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கே தயாராக உள்ள சாராயத்தை வலுக்கட்டாயமாக வாயில் ஊற்றிப் பிறகு சாராயம் குடித்தான், மது விலக்குச் சட்டத்தை மீறி விட்டான் என்று குற்றம் சுமத்துவது கிராமப்புறங்களில் சர்வ சாதாரணமாகும். இம்மாதிரி ஏழை மக்கள், படிக்காத பாமரர்கள், ஏழை விவசாயிகள் ஆகியோர்கள் பலியாகின்றனர். பாதிக்கப்பட்டவர்களுக்குக் காவல்துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவோ வழக்குத் தொடுக்கவோ தெரியாது. அவர்களுக்கு தைரியமும் கிடையாது. சந்தேகத்தின்மீது கைது செய்து காவல் அலுவலகத்தில் அடைத்து வைத்தல், அதே நேரத்தில் நபரின் கைது பற்றி நாட் குறிப்பிலோ (Diary) அல்லது பதிவுப் புத்தகத்திலோ (Register) குறிப்பிடாமல் வைத்திருத்தல், வழக்குத் தொடர்ந்து விட்டதாக அச்சுறுத்தி அவர்களிடம் பணம் பறித்தல், பணம் பெற்றுக் கொண்ட பின்பு அவர்களை எச்சரித்து விட்டுவிடுதல் ஆகியவை சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. சட்டத்திற்குட்பட்டுக் கைது செய்வதைவிட (Legal Arrest) சட்டத்திற்கு முரணாகக் கைது செய்தல்தான் (Illegal Arrest) அதிகமாக உள்ளது. இது இந்தியாவில் மட்டும் அல்ல, அமெரிக்கா போன்ற நாடுகளிலும், அதிகவளவில் காணப்படுகின்றது. சட்டத்திற்கு முரணான வருவாயை எதிர் பார்த்துத்தான் இவ்வாறு கைது செய்கின்றார்கள் காவல் துறை அதிகாரிகள். இதைப் பொது மக்களும், கண்டும் காணாமல் விட்டுவிடுவதுடன் காவல் துறை உயர் அதிகாரிகளும் இம்மாதிரியான சட்ட முரணான கைதுகளைக் கண்டும் காணாமல் சென்று விடுவதனால்தான் அடிமட்ட அதிகாரிகள், தங்கள் உரிமையைத் தவறான முறையில் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனால் பாமரமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

ஆனால், அதே நேரத்தில் வெளிப்படையாகச் சட்டத்தை மீறுகின்றவர்கள், மீறின குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். காவல் துறை அதிகாரிகளுக்குத் தெரிந்தே கள்ளச் சாராயம் காய்ச்சுவார்கள், விற்பனை செய்வார்கள். குடித்துவிட்டும் நடமாடுவார்கள். அதேபோன்று சூதாட்டம், பரத்தைமை ஆகிய குற்றங்களும் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வருகின்றன. அவற்றைத் தடுக்கவோ குற்றவாளிகளைக் கைது செய்து தண்டனை வழங்கவோ முயற்சி செய்வதே இல்லை. இவ்வகையான குற்றவாளிகள் புரியும் குற்றங்கள் பொது மக்களுக்கும் நன்கு தெரியும். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்

காததைக் கண்டு ஆத்திரம் அடைவார்கள். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள், பொதுமக்களுக்குப் போதிய தைரியமோ, அனுபவமோ இருப்பதில்லை. ஜேப்படித் திருடர்கள் காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரிந்தும் தெரியாமலும் குற்றத்தைப் புரிகின்றனர்கள். குற்றத்தால் வரும் வருமானத்தின் ஒரு பங்கைத் தனக்குச் சாதகமாக இருக்க காவல் துறை அதிகாரிகளிடம் அளித்து விடுகின்றனர்கள். திருடர்கள் மட்டும் காவல் துறை அதிகாரிகளுடன் கூட்டாக இருப்பதில்லை, சாலை விதிகளை மீறி விற்பனை செய்பவர்களும் காவல் துறை அதிகாரிகளுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போக்குவரத்து மிகுந்த இடத்திலும் சாலை ஓரங்களிலும் கடைகள் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்கள். சாலையோரங்களில் கடைகள் வைக்கக் கூடாது என்று அனைவருக்கும் தெரிந்துதான் இருக்கும். காவல் துறை அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுத்துவிட்டுத் தொடர்ந்து வாணிகம் செய்து வருவதை நகர மக்கள் அன்றாடம் பார்க்கலாம். இப்படி எத்தனையோ குற்றவாளிகள் தொடர்ந்து குற்றங்கள் புரிய மறைமுகமாக ஆதரவளித்து வருகின்றனர்கள் காவல் துறை அதிகாரிகள். இதைச் சட்டமன்ற அங்கத்தினர்களோ மற்ற அரசியல் தலைவர்களோ கண்டிப்பதில்லை. ஒழுங்கற்ற காவல் துறை அதிகாரிகள், வாழ்க்கையில் வெறுப்பு அடைந்த காவல் துறை அதிகாரிகள், பணியாற்றுவதனால்தான் தங்கள் சடமையைச் செவ்வனே செயலாற்றாமல் குற்றவாளிக்குத் துணையாகிவிடுகின்றனர்கள்.

மேலும் குற்றவாளிகளைக் கைது செய்யும்போது காவல் துறை அதிகாரிகள் வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது என்று சட்டம் இருந்தாலும் அதைப் பின்பற்றுவதில்லை. குற்றவாளிகளை அச்சுறுத்தி, சில வேளைகளில் அடித்தும், குற்றத்தை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துகின்றனர்கள்.

குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைக் கைது செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருந்தாலும் அதைச் சுயநலத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர்கள். அவர்கள் குற்றச் சட்டத்தின்படியோ, குற்ற நடைமுறைச் சட்டத்தின்படியோ நடப்பதில்லை. அதாவது கள்ளத்தனமாக மது விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது வெளிநாட்டில் வாங்கிய மது பாட்டில்களைப் பறிமுதல் செய்ய நேரிட்டால் 500, 1000 பாட்டில்கள் பறிமுதல் செய்யும்போது அத்தனை பாட்டில்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைப்பது இல்லை. அதில் 100 பாட்டில்களை எடுத்துத் தெரிந்த உணவு விடுதியில்

கொடுத்து விற்றுப் பணம் கொடுக்கும்படிக் கூறிவிட்டு நீதி மன்றத்தில் கணக்குக் கொடுக்கும்போது மொத்தம் பறிமுதல் செய்த பாட்டில்கள் கணக்கைக் கொடுத்துவிட்டு அதில் பறிமுதல் செய்யும்போது ஏற்பட்ட சேதம் 100 பாட்டில்கள் என்று கணக்குக் கொடுத்து விடுகின்றார்கள் இதைப்பற்றி விசாரணை நடத்தும் நீதிபதியும் அக்கறை காட்டுவதில்லை. அல்லது சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொள்கிறார்கள் இப்படிப் பல முறைகளில் பறிமுதல் செய்யப்படும். நல்ல பொருள்களை எடுத்துக் கொள்ளும் மனப்பான்மை காவல் துறையினர்களிடம் உண்டு. அதே போன்று கள்ளக் கடத்தல் பொருள்களைப் பறிமுதல் செய்யும் போதும் சோதனைபோடும் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டிய பேனா, கைக் கடிகாரம், மற்றும் உள்ள, விருப்பமான பொருள்களை எடுத்துக் கொள்கின்றனர். ஆகவே சுங்க அதிகாரிகளும் (Customs Officers) இதற்கு விதி விலக்கு அன்று.

பொதுவாக, குற்றங்களைத் தடுக்க வேண்டியவர்கள் குற்றம் புரிவதற்கும் ஆதரவாக இருக்கின்றார்கள். சுய நலத்திற்காக (மாமூல்) கையூட்டு வாங்கிக்கொண்டு தொடர்ந்து குற்றங்கள் புரிய மறைமுகமாக ஊக்கம் அளித்து வருகின்றார்கள் காவல் துறையினர்கள் ஆதரவில் பல குற்றவாளிகள், பிழைப்பு நடத்தி வருகின்றார்கள் என்பது உண்மையான ஒன்றாகும். சட்டத்தைப் பாதுகாக்காமல், செயற்படுத்தாமல் தங்களின் விருப்பு வெறுப்பு காரணமாகச் செயற்பட்டு வருகின்றார்கள். காவல் துறையினர்களின் செயல்கள் பொதுமக்கள் வெறுக்கும் தன்மையில் உள்ளன. ஆகவேதான் காவல்துறையினரைக் கண்டால் பொதுமக்கள் வெறுக்கின்றார்கள். இதனால் குற்றவாளியைக் கைது செய்வதற்கு உதவி செய்யக்கூட பொதுமக்கள் முன் வருவதில்லை. காவல் துறையினர் மீது இரக்கப்படுவதுமில்லை. காவல் துறையினர் துன்புற்றால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைகின்ற நிலை ஏற்பட்டு இருக்கின்றது. மேலும் குற்றவாளியைப் பிடித்துக் காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தாலும் குற்றவாளிமீது தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை. அவனிடத்தல் மாமூல் கையூட்டு வாங்கிக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவதில் பொதுமக்கள் காவல்துறையை வெறுக்கின்ற நிலையும் உருவாகி உள்ளது.

அரசியல் (Politics)

மேற்கூறிய சில குறைபாடுகள் காவல்துறையில் நிகழ்வதற்கு முக்கிய காரணம் அரசியல் தலையீடாகும். அரசியல் குறுக்கீட்டால் பலவகையான குற்றவாளிகள் குற்றச் சட்டத்தின் பிடியிலிருந்து

தப்பித்துச் சுதந்திரமாகத் திரிந்துகொண்டிருக்கின்றனர்கள். அரசியல் தலைவர்கள் விருப்பு வெறுப்பிற்கிணங்க காவல்துறையினர்கள் செயற்படவேண்டி உள்ளது. இதனுல் குற்றவாளிகள் காவல்துறையினர்களின் கண்ணெதிரே நடந்து சென்றுலும் குற்றங்களைப் புரிந்தாலும் (சூதாட்டம், மது அருந்துதல், பரத்தைமை, கள்ள மதுபான விற்றல்) ஆகிய செயல்கள், குற்றங்களைப் புரிந்தாலும் அவற்றைத் தடுக்கவோ குற்றவாளிகளைக் கைது செய்யவோ இயலாத நிலையில் உள்ளார்கள். மேற்கூறப்பட்ட குற்றவாளிகள் அரசியல் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினுல் கைது செய்து விட்டாலும் வழக்குத் தொடராமல் விட்டுவிடும்படி வற்புறுத்தப்படுகின்றனர்கள். சில வேளைகளில் அரசியல் தலைவர்கள் காவல்துறையினர்களின் கைகளைத் தங்கள் செல்வாக்கினுல் கட்டிப் போட்டுவிடுவதனுல் குற்றங்கள் நிகழ்ந்தாலும் பொதுமக்கள் போன்றே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்கள். இதற்குப் பல்வேறு காரணக் கூறுகள் உண்டு. அதாவது அரசியல் தலைவர்களின் பரிந்துரையினுல்தான் அவர்கள் காவல்துறை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கலாம்; அல்லது தலைவர்களின் தொண்டர்களாக விளங்கி இருக்கக் கூடும். அரசியல் தலைவர் செல்வாக்கினுல்தான், பரிந்துரையினுல் தான், அதிகாரிகளுக்குக் காவல் துறையில் பதவி உயர்வு கிடைத்து இருக்கக்கூடும்; அல்லது அரசியல் தலைவர்கள் அல்லது அரசியல்வாதிகளின் குறுக்கீட்டால் அவர்களுக்கு ஊர் மாறுதல் கிடைத்திருக்கும்; அல்லது காவல் துறை அதிகாரியின்மீது எடுக்கப்பட்ட குற்ற நடவடிக்கை அரசியல்வாதியின் செல்வாக்கினுல், குறுக்கீட்டால் நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கப்படாமல் அழுத்தப்பட்டிருக்கலாம்; அல்லது நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கலாம்; அலலது திறமையின்றியும், அரசியல் தலைவர்களின் செல்வாக்கில் காவல் துறையில் உயர் பதவி கிடைத்திருக்கக்கூடும்; அல்லது காவல் துறை அதிகாரியின் மகன் அல்லது சகோதரர்களுக்கு அரசியல் வாதிகளின் செல்வாக்கினுல் பதவி உயர்வோ அல்லது பதவியோ கிடைத்திருக்கக்கூடும்.

மேற்கூறப்பட்ட காரணக் கூறுகளினுலும் காவல் துறை அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிக்கும் அதிகத் தொடர்பு உண்டு. ஆகவே, அரசியல்வாதி, அரசியல் தலைவர்களின் உறவினர்கள், நண்பர்கள், வேண்டியவர்கள். குற்றங்களைப் புரிந்துவிடும்போது அவர்களின்மீது குற்ற நடவடிக்கை எடுக்காதவாறு காவல் துறையினர் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்கள். அவர்களின் வேண்டுகோளையும் நிராகரிக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் காவல்

துறை அதிகாரிகள். மேலும் பல காரணங்களால் காவல் துறையினர் சில குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு முக்கிய காரணம் உண்டு. காவல் துறை அதிகாரிகளின் கரங்கள் தூய்மையானவை அல்ல. அவர்கள் பல கையூட்டுக் குற்றங்களைப் புரிந்து இருப்பார்கள். அவர்களைப் பற்றி அரசியல் வாதிகளுக்கும், தலைவர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். 'பாம்பின் கால் பாம்பறியும்' அன்றோ. ஆகவே அரசியல் தலைவர்கள், அரசியல் வாதிகள் கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் பதவியை இழக்க வேண்டி நேரிடும். இப்படிப் பல்வேறு காரணங்களினால் காவல்துறை அதிகாரிகள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்ய முடிவதில்லை. அவர்களின் திறமையின்மை ஒரு புறம் இருக்க அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் குறுக்கிடும் அவர்களுக்குத் திறமையிருந்தாலும் திறமையற்றவர்களாக்கி விடுகின்றார்கள். அரசியல்வாதிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் நலனைப் பேணிக் காக்கக் காவல் துறை செயற்படுவதாகக் கருத வேண்டியுள்ளது. கறை படிந்த அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டினால் இயங்குகின்ற காவல் துறையானது சட்டச் செயலாட்சியில்லாத (Lawless) நிறுவனமாகச் செயற்படுகின்றது. இப்படிக் குறிப்பிடுவதனால் ஒவ்வொரு காவல்துறை அதிகாரியும் கட்டுப்பாடு இல்லாதவர்களாக, கடமை தவறியவர்களாக விளங்குகின்றார்கள் என்பது பொருள் அல்ல என்றாலும் வெறுக்கத்தக்க சூழ்நிலையில் காவல் துறை இயங்கி வருவதாகச் சதர்லாண்டு என்னும் சட்டத்துறை நிபுணர் (Southerland) குறிப்பிடுகின்றார்.

அரசியல்வாதிகளைப் போலவே குற்ற வாழ்க்கைத் தொழிலாளர்கள் (Professional Criminals) காவல் துறையினர்களிடம் கள்ளத்தொடர்பு கொண்டு கொள்ளை, கூட்டுக் கொள்ளை, கன்னக் கோல் குற்றம், ஜேப்படி செய்தல் ஆகிய குற்றங்களைச் செய்து வருவதாகக் கிராப்ட் (Graft) என்பவர் குற்றம் சாட்டுகிறார். அமெரிக்காவில் காவல் துறை அதிகாரிகளையும், கொள்ளைக் கூட்டத்தினர்களையும் ஆராய்ந்ததில் திட்டமிட்டுச் செயற்படும் குற்றவாளிகளுக்கும் (Organised Criminals) காவல் துறையின் உயர் அதிகாரிகளுக்கும் நெருங்கிய வஞ்சக் கூட்டு (Collusion) இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக பிலடெல்பியாவில் (Philadelphia) ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ 1,52,000 டாலர் கையூட்டு வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

மேலும் கொள்ளைக் கூட்டத்தினரால் ஆண்டுதோறும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்குக் காட்டுப் பகுதியில் ஓர் உபசார

விருந்து கொடுக்கப்படுகிறது. அந்த விருந்தின்போது அந்த ஆண்டில் அவர்கள் கொள்ளை அடித்த மொத்த பணம், அதில் காவல் துறை அதிகாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு, ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு அதே இடத்தில் காவல் துறையினர்களுக்குள் பணத்தைப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். இந்த விருந்தைக் காவல்துறையின் உயர் அதிகாரிகள் ஏற்பாடு செய்கின்றார்கள். கொள்ளைக் கூட்டத்தினர்களுக்கு வேண்டிய கைத் துப்பாக்கி, வெடிகுண்டு மற்றும் நவீன, புதிய ஆயுதங்கள் வழங்குவதும். காவல்துறை அதிகாரிகள்தாம் என்பதைச் சமீபத்தில் கூட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர்கள் (Dacoits) பற்றிய ஆய்வில் உணரலாம். அவர்கள் மத்திய பிரதேசத்தில் தாங்களாகவே சர்வோதாயத் தலைவர் முன்னால் தோன்றிக் கைது செய்யும்படிவேண்டினார்கள் அல்லவா? அவர்களை ஆராய்ந்ததல் அவர்களுக்குவேண்டிய எல்லா ஆயுதங்களையும் காவல்துறை, இராணுவம், மூலமாகத்தான் பெற்றதாகக் கூறியுள்ளார்கள். இதைக் காவல்துறை அதிகாரிகளும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கூறப்பட்ட தகவல்களை ஆங்கில வார இதழ் மூலமாக அறிய முடிகிறது.

இப்படிக் காவல்துறையினர்கள் சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுவது தற்காலத்தில் மட்டும் அல்ல. காவல்துறை தோன்றிய காலத்திலிருந்தே, ஒழுங்கீனமான சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டுவருவதாக ஆராய்ச்சி அறிவிக்கின்றது. நியூ யார்க் நகரத்தில் லெக்ஸோ குழு (Lexow Committee) 1894-95-ம் ஆண்டில் ஆராய்ந்ததில் தனிப்பட்ட காவல்துறை அதிகாரி வாங்கும் கையூட்டைவிடக் காவல்துறை நிர்வாகம் வாங்கும் கையூட்டு அதிகமானது என ஆராயப்பட்டுள்ளது. கையூட்டு வாங்குவதே காவல்துறையினரின் சிறப்பான குணமாகும் என்றும் அறிவிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காவல்துறை ஒழுங்கீனத்திற்குப் பெயர் பெற்றவர்கள். ஒரு தலைமுறை கழித்து, சீபெரிக் குழு (Seabury Committee) ஆராய்ந்த போதும், அதே நிலை காணப்பட்டதாக அறிவித்துள்ளது. சிகாகோ நகரத்தில் 1915-ல் நகர குழு (City Council Committee) காவல்துறை அதிகாரிகளுக்கும் குற்ற வாழ்க்கைத் தொழிலர்களுக்கும் (Professional Criminals) வஞ்சக் கூட்டுத் தொடர்பு இருப்பதாக அறிவிக்கின்றது. டெக்ஸாஸ் நகரத்தில் (Texas) 1919-ல் நம்பிக்கை மோசடி விளையாட்டிற்காக 45,000 டாலர் காவல்துறை அதிகாரிகள் கையூட்டாக வாங்கியுள்ளார்கள்.

தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் செயற்படுத்தப்பட்ட பின்பும் கள்ளச் சாரயம் காய்ச்சுதல், விற்றல் தொடர்ந்து நடை-

பெற்றுவருகின்றது. அடிமட்ட காவல்துறை அதிகாரிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் கள்ளக் கூட்டு இருக்கின்ற காரணத்தினால் வெளிப்படையாகவே கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்படுகிறது. சில மாவட்டங்களிலிருந்து சென்னை நகருக்குக் கொண்டு வரப்படுகிறது. வாரந்தோறும் காவல்துறை அதிகாரிகளுக்குப் பணம் செலுத்தப்பட்டு வருகிறது. காவல்துறையின் உயர் அதிகாரிகள் சோதனையிட வரும் தேதியை முன்கூட்டியே குற்றவாளிகளுக்கு அறிவித்துவிடுகின்றனர். கீழ்மட்ட காவல் அதிகாரிகள், குற்றவாளிகள் சிறிதும் அச்சப்படாமல் குற்றங்களைப் புரிந்துவருகின்றனர். சோதனையிட உயர் அதிகாரி வருவதாகச் செய்தி வந்தவுடன் அந்த இடத்தைவிட்டு வெளியேறி வேறு புதிய இடத்திற்குப் போய்விடுகின்றனர், அல்லது சான்றுகள் கிடைக்காவண்ணம் எல்லாவற்றையும் மறைத்துவிடுகிறார்கள். அல்லது அழித்துவிடுகிறார்கள். மதுவிலக்குச் செயற்படுத்தப்பட்டது என்று அரசாங்கம் அறிவித்தாலும் சமுதாயத்தைவிட்டு மதுவை அகற்றவே இல்லை. அரசாங்கத்திற்கு வரும் வருமானம் குறைந்ததேதவிர, மற்றப்படி நடைமுறையில் மதுவிலக்குச் செயற்படுத்தப்படவில்லை என்றுதான் பொருள்படுகிறது. மதுவிலக்கு அகற்றியிருந்தபோது ஓர் ஊருக்கு ஓர் இடத்தில்தான், பல ஊருக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் சாராயம் விற்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் இன்று மதுவிலக்குச் செயற்படுத்தும் நேரத்தில் நினைத்த இடத்தில் சாராயம் விற்கப்படுகிறது. ஆங்காங்கே கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. இதை உறுதிப்படுத்தும் வகையில் 1975-ல் கள்ளச் சாராயம் குடித்துச் சென்னையில் சுமார் 40 நபர்கள் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளது.

அமெரிக்காவில் தரகு வாணிகர்கள் (Commission Merchants), ஒப்பந்தக்காரர்கள் (Contractors), தள்ளு வண்டி மூலம் விற்பனை செய்பவர்கள் (Push Cart), வீதியோரம் சட்டத்திற்கு முரணாக வியாபாரம் செய்பவர்கள் (Boot Blocks) ஆகியோர்கள் காவல் துறை அதிகாரிகளுக்குக் கையூட்டு வழங்குவதன் மூலமாகத் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடிகிறது என்று லெக்ஸோ குழு (Lexow Committee) அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் காணப்படுவதைப் போலவே இந்தியாவிலும் காணப்படுகிறது. ஆனால் இங்கு எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை. சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற பெரிய பெரிய நகரங்களில் சிறு சிறு வாணிகர்கள் காவல்துறை அதிகாரிகளுக்குக் கையூட்டு வழங்குவது சர்வ சாதாரணமாகும். இதற்கு

எடுத்துக்காட்டு நகரங்களில் தள்ளு வண்டி மூலம் விற்பனை செய்வதும் வீதியோரம் வாணிகம் புரிவதும் தொடர்ந்து நிலைத்து நிற்பதே கையூட்டுக்குச் சான்றாகும்.

அதேபோன்று விற்பனையில் எடை குறைத்தல், கலப்படமான உணவுப் பொருள்களை விற்பனை செய்தல், அளவையில் குறைத்தல் மற்ற ஒழுங்கு விதிமுறைகளை மீறுவதற்கும் கையூட்டுத் தான் மூல காரணம் என்று சீபெரிக் குழு (Seabury Committee) அறிவித்துள்ளது. மேற்கூறியவாறு சென்னைக் கொத்தவால் சாவடியில் எடையைக் குறைத்தும் அளவைக் குறைத்தும் காய்கறிகளையும் மற்ற உணவுப் பொருள்களையும் விற்கின்றார்கள். ஆனால் அதைத் தடுக்கவோ அவர்களுக்குத் தண்டனை வழங்கவோ எந்தக் காவல்துறை அதிகாரிகளோ, மற்ற உரிய அதிகாரிகளோ முற்படவில்லை. அதே மாதிரியாக சூதாட்டம், பரத்தைமை, மது ஆகிய செயல்களைப் புரியவும் கையூட்டு வழங்கப்படுகிறது. மேலும் எங்கெங்கே இலாபம் கிடைக்கக் கூடிய வழிமுறையோ, வாணிகமோ நடைபெற்றால் அங்கே கையூட்டு மிகத் தலையாய இடம் பெறுகின்றது. தனி நிறுவனமாக இருந்தாலும் சரி, கூட்டு நிறுவனமாக இருந்தாலும் சரி, கையூட்டு வழங்குவதன் மூலமாக இலாபம் கிடைக்குமேயானால் தவறாது கையூட்டு வழங்கி அந்த இலாபத்தை அடைந்து வருகின்றார்கள். தவறான வழியில் சென்றால் தான் இலாபத்தைப் பெறமுடியும். ஆகவே அதற்கு ஆதரவாக இருப்பதற்காகக் கையூட்டு வழங்கப்படுகிறது காவல் துறையினர்களுக்கு என்று கடிந்து கூறுகின்றார் சதர்லாண்டு.

போதிய திறமையின்மை, பயிற்சியின்மை, ஒழுக்கமின்மை, போதிய ஊதியமின்மை, போதிய அதிகாரிகளின் எண்ணிக்கையின்மை ஆகிய குறைபாடுகளுடன் கட்டுப்பாடில்லாத தான் தோன்றியான வாழ்க்கையைக் காவல்துறை அதிகாரிகள் மேற்கொள்வதனால்தான் அவர்களிடத்தில் ஊழல் மலிந்து கிடக்கிறது. மேலும் காவல்துறை அதிகாரிகளைக் கண்காணிக்கப் போதிய அதிகாரிகள் இல்லாமல் இருப்பதும், குற்றத்தைத் தடுக்கவும், குற்றவாளியைக் கைது செய்யவும் போதிய அதிகாரம் அவர்களிடத்தில் இருப்பதனால் அவர்கள் குற்றம் புரிந்தால் யாரும் தடை செய்யவோ தண்டிக்கவோ முடியாது என்ற எண்ணத்தினால் அவர்கள் அதிகமான ஊழல் புரிகின்றார்கள். காவல்துறை அதிகாரிகள்மீது கையூட்டு வழக்குத் தொடர அதே துறையினரைச் சார்ந்த உயர்ந்த அதிகாரிகளும் பொதுமக்கள் கூறும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளமாட்டார்கள். வழக்குத் தொடுத்தவர் மீதே வேறு ஏதாவது ஒரு பொய் வழக்கைப்

போட்டு அவனைச் சிறையில் தள்ளிவிடுவதும் உண்டு. ஆகவே தான் காவல்துறை அதிகாரிகள் வெளிப்படையாகவே கையூட்டு வாங்கி வருகின்றார்கள். அவர்களை யாரும் எதையும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையும் அவர்கள் குற்றம் புரிவதற்குக் காரணமாகும். அவர்களைத் தட்டிக் கேட்க அரசியல்வாதிகளுக்கோ, தலைவர்களுக்கோ தைரியம் இருப்பதில்லை. அவர்கள் குற்றம் புரிந்துவிட்டு வெளியில் தலைவர்களாகத் திரிபவர்கள், அல்லது குற்றவாளிக்காகப் பரிந்துவிடுவிக்கப் பாடுபட்டவர்கள், குற்றவாளிக்கு வக்காலத்து வாங்கினவர்கள். ஆகவே அவர்கள் காவல்துறையினர்களின் குற்றங்களைக் கண்டிக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

மேலும் 'குற்றவாளி' யாராக இருந்தாலும் ஒரே மாதிரியாகத் தான் நடத்தப்படவேண்டும் என்று கூறுகிறது சட்டம். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? ஏழை குற்றவாளியாக இருந்தால் அவனிடத்தில் முரட்டுத்தனமாகவும், பணக்காரன் குற்றவாளியாக இருந்தால் அவனிடத்தில் இணக்கமாகவும் நடந்து கொள்கின்றார்கள் காவல்துறை அதிகாரிகள்.

அதே போன்று குற்றவாளிகளிடமிருந்து குற்ற ஏற்புரை (Confession) பெறுவதற்கும் சான்றுப் பொருள்களை கைப்பற்றுவதற்கும் துன்புறுத்தக் கூடாது எனச் சட்டம் வரையறுத்தாலும் நடைமுறையில் குற்றவாளியைத் துன்புறுத்தியே குற்றச் சான்றுப் பொருள்களைக் கைப்பற்றுகின்றனர். சட்டத்தைப் பாதுகாக்க, குற்றத்தைத் தடுக்கக் குற்றவாளியைப் பிடித்து நீதி மன்றத்தில் நிறுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதைக் காவல் துறை அதிகாரிகள் மறந்து விடுகின்றார்கள். கட்டுப்பாடு இருக்க வேண்டிய இடத்தில் கட்டுப்பாடு இருப்பதில்லை. ஒழுக்கம், கடமை உணர்வு இருக்க வேண்டிய இடத்தில் ஒழுங்கீனங்கள் தலைவிரித்தாடுகின்றன. நாட்டின் அமைதியும், வீட்டின் அமைதியும் காவல் துறையினர்களின் கையில் உள்ளது என்பதை மறந்து விடுகின்றார்கள். 'காவல் துறை அதிகாரி' என்றாலே நேர்மையற்றவர்கள் என்ற கருத்துப் பொது மக்களிடையே வெகுவாகப் பரவியுள்ளது.

கண்ணியமான காவல் துறையை உருவாக்க வேண்டும்

ஊழல் கறைபடிந்த அரசியல்வாதிகளிடமிருந்து காவல் துறை விடுதலை பெற்றுத் தனித்துச் செயற்படவேண்டும். ஒழுங்கான முறையில் காவல் துறைச் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் துறையைப் பெரிய அளவில் உருவாக்க

வேண்டும். காவல் துறை அதிகாரிகளின் தரத்தை, திறமையை அதிகப்படுத்தவேண்டும். பணிகளைப் பகிர்ந்து அளித்து ஒவ்வொரு (Squad) பிரிவும் ஒரு குறிப்பிட்ட செயலைக் கண் காணிக்க அனுமதிக்கப்படவேண்டும். நவீனகால ஆயுதங்கள் அளிக்கப்படல்வேண்டும். காவல் துறையினர்களின் பாதுகாப்பை அபிவிருத்தி செய்யவேண்டும். குற்றங்களைத் தடுக்கும் உத்திகள் மேலும் ஆராயப்படுதல் வேண்டும். நேர்மையின் சின்னம் காவல் துறை என்ற அளவுக்குக் காவல்துறை இயங்க வேண்டும். பொது மக்களுக்கும் காவல்துறையினர்களுக்கும் உள்ள தொடர்பு சிறந்த முறையில், போற்றும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும். நீதியும், நேர்மையும் இணைந்து காவல் தொழில் என்ற உணர்வு காவல் துறை அதிகாரிகளுக்கு ஏற்படவேண்டும். மேற்கூறிய பல்வேறு சீர்திருத்தங்களைப் பற்றிக் கீழே விரிவாகக் காணலாம்.

அரசியலிலிருந்து காவல் துறை தனித்து இயங்கவேண்டும். அரசாங்கக் கட்டுப்பாடின்றி இயங்கவேண்டும் என்பது பொருள் அல்ல. அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அதே நேரத்தில் தனித்துச் செயற்படவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் காவல் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதை நடைமுறையில் செயற்படுத்த வேண்டும். குற்றவாளிகளுக்கு ஆதரவு தேடாமல் இருக்கவேண்டும். 'யார் செய்தாலும் குற்றம் குற்றம்தான்' என்ற அடிப்படையில் செயலாற்ற வேண்டும். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று சிவனைப் பார்த்து நக்கீரர் சூளுரைத்ததாக இலக்கிய வரலாறு பாங்குறப் பகர்கின்றது. அதேபோல் பணக்காரன் செய்தாலும் அரசியல்வாதியே குற்றத்தைப் புரிந்தாலும் அல்லது அரசியல் தலைவர்களின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் புரிந்தாலும் குற்றம் குற்றந்தான் என்ற நிலை உருவாக வேண்டும். சாதாரண மக்க பொது மக்கள் குற்றத்தைச் செய்தால் எந்த முறையில் குற்ற நடவடிக்கை எடுப்பார்களோ அதே முறையில் செல்வாக்கு உள்ளவர்கள் குற்றம் புரிந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டைச் செயற்படுத்துவதாகப் பொருள்படும்.

அரசியல் கட்சிகள் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற காரணத்திற்காக அரசியல் கட்சி தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித் தன்னைச் சார்ந்த தொண்டர்களுக்கும் அனுதாபிகளுக்குப் பரிந்து குற்ற விலக்கு அளிக்க முற்படுகிறது. அமெரிக்காவில் அரசியல் கட்சிகளின் குறுக்கீடு அதிக அளவில் காணப்

படுவதாகக் குறை கூறுகின்றார் சதர்லாண்டு. அரசியல் கட்சிகள் தங்களின் கொள்கையின் அடிப்படையில் வெற்றிபெற முனைதல் வேண்டுமேயன்றி இவ்வாறு சட்டத்திற்கு முரணாகச் செயல்களில் ஈடுபட்டுக் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது குற்ற வாளிகளுக்கு மேலும் குற்றம் புரிய ஊக்கம் அளித்தமாதிரியாகப் போய்விடுகிறது. மேலும், ஒரு முறை குற்றம் புரிந்தவன்தான் அதன் இலாபத்தின் சுவையில் மேலும், மேலும் தொடர்ந்து குற்றம் புரியத் தூண்டப்படுகின்றான் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. அப்படியே அவன் பிடிபட்டாலும் இலாபத்தின் ஒரு பங்கை அரசியல் கட்சியின் வளர்ச்சிக்கு நன் கொடையாக நல்கித் தன் குற்றத்தை மறைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் குற்றவாளிகளிடையே வளர்ந்து விடுகின்றது. இந்தியாவில் கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்களின் வாழ்க் கையின் தோற்றம் இவ்வாறுதான் அமைந்துள்ளது. அரசியல் கட்சிகளே கள்ளக் கடத்தல் பெருகுவதற்கு மறைமுகமான ஆதரவளித்துள்ளார்கள். அத்துடன் அதிகாரிகளும் அதற்கு உடந்தை என்பது நமக்கு வெட்கக் கேடாக உள்ளது. முளையி லேயே கிள்ளி எறிய வேண்டியதை. மரமாக வளரவிட்டுப் பிறகு அதை வெட்டுவதற்குத் தனித் தொழிற்சாலை நிறுவப்பட்டது போல் இத்தகைய நிகழ்ச்சிகள் உள்ளன. கடத்தல்காரர்கள் வளர்ச்சியும், அவர்களைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கையும் தொடக்க காலத்தில் கட்சியின் வளர்ச்சிக்காகப் பணத்தை யார் கொடுத்தாலும் வாங்கிக்கொள்கின்றார்கள். கொடுப்பவர்களின் தகுதி, தரம் ஆகியவற்றைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. பிறகு அதே ஆளுங்கட்சியாக மாறிவிடும்போது சாதாரண தொகையை நன்கொடையாக வழங்கியவன் பெரிய சலுகையை எதிர்பார்த்து நிற்கின்றான். இதே நிலை தேர்தல்முறை உள்ள எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. இந்தியா மட்டும் இதற்கு விதிவிலக்கு அன்று.

தேர்தல் முறையில் ஊழல் மலிந்து காணப்படுகின்றது. சாதாரண பஞ்சாயத்துத் தேர்தல், நகரசபைத் தேர்தல், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் இப்படி ஒவ்வொரு தேர்தலிலும் பல தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன. அதன் காரணமாகத்தான் காவல்துறை அதிகாரிகள் குற்றவாளிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்க முடிவதில்லை.

அரசியல் ஊழலில் உழன்றாலும் காவல் துறையானது செவ் வனே செயற்படவேண்டும். ஆனால் அமைச்சருக்கு விரோதமான நடவடிக்கை எடுக்கப்பட்டால் அந்த அதிகாரி உடனடியாக

வேறு ஊருக்கு மாற்றப்படுகின்றார். இந்த இடத்திற்கு அமைச்சருக்குச் சாதகமான அதிகாரியை உடனடியாக நியமித்துக்கொள்கின்ற நிலை உள்ளவரையில் காவல் துறை தன் பணியைச் சிறப்புறச் செயலாற்ற இயலாது.

மேலும் காவல் துறையினர்களின் திறமை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. இற்றைக்குச் சற்றேறக் குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் குறுக்கீடுகள் அதிகமாக இல்லை. அதே நேரத்தில் அரசியல் தலையீடு இன்றிக் காவல்துறை உயர் அதிகாரிகள் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதனால் காவல்துறை அதிகாரிகள் யாருக்கும் அச்சப்படாமல் யார் குற்றத்தைப் புரிந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுத்து வந்தார்கள். மற்றவர்கள் ஆதரவு. தயவு, உதவி அவர்களுக்குத் தேவையில்லாமல் இருந்தது. ஆனால் இன்றைய நிலைமை தலைகீழாக உள்ளது. தகுதி அடிப்படை போய், தொகுதி அடிப்படையில் காவல்துறை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். சில நேரங்களில் காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கின்றார்கள். அல்லது நடவடிக்கை எடுக்கும்படி கட்டளையிடுகின்றார்கள். இந்தியாவில் இமயம் முதல் குமரி வரையில் காவல்துறை அரசியல் கட்சியின் கைப்பாவையாக விளங்கி வருகின்றது. ஏன் அமெரிக்காவிலும் இதே நிலைதான் காணப்படுவதாக சதர்லாண்டு அறிவித்துள்ளார். தகுதியற்றவர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்துவது தான் இக்குறைபாட்டிற்கு ஆதாரமாகும். இறுதியில் மக்களின் தகுதியற்ற தன்மையைத்தான் இது பிரதிபலிக்கின்றது. காவல் துறை அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுவதைச் சட்டம் தடை செய்கிறது. ஆனால் பயங்கரமாக ஈடுபடுகின்றார்கள். சில அடிமட்ட காவல்துறை அதிகாரிகள் புனை பெயருடன் அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் மேடையில் முழங்கி வருகின்றார்கள். இவ்வாறு அரசியல் கட்சி வேட்கை உள்ளவர்கள் அந்தக் கட்சியின் தொண்டன் குற்றம் புரிந்தால் அவன்மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? இம்மாதிரி இந்தியாவில் மட்டும் அல்ல அமெரிக்காவிலும் காணப்படுகிறது. இல்லோனிஸ் (Illonis) மாநிலத்தில் காவல் துறை அதிகாரிகளில் 50 சதம் ஜனநாயகக் (Democrats) கட்சியைச் சார்ந்தவர்களாகவும், 50 சதம் குடியரசுக் (Republican) கட்சியைச் சார்ந்தவர்களாகவும், டோனல் மக் நாமரா (Donal E-Mac Namara) என்பவர் ஆராய்ந்துள்ளார். இதை நோக்கும்போது இந்தியாவில் காவல்துறை பலமடங்கு சிறந்து விளங்குவதாக அறியமுடிகிறது.

அடுத்து, காவல் துறையினர்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்கு 24 மணி நேர பணி என்று கூறப்படுகிறது. மற்ற ஊழியர்களைப் போல அவர்களுக்கும் ஊதியத்தைக் கூட்டியும் பணியின் நேரத்தை வரையறுத்தும் வழங்கப்படுதல் வேண்டும். அப்பொழுது பணி சிறப்பாக இருக்கும். 24 மணி நேரமும் கடமை உள்ளது என்றாலும் அவ்வளவு நேரத்தையும் விட்டால் தூங்கிக் கழிப்பதிலேயே சில அடிமட்ட அதிகாரிகள் காலத்தைக் கழித்து வருகின்றார்கள். குறைந்த ஊதியம் அளிப்பதன் நோக்கம் அவர்களுக்குச் சட்டத்திற்கு முரணான வேறு சில வருமானம் கிடைக்குமென்று அரசாங்கமே கருதி வருவதாக நம்பப்படுகிறது. அரசாங்கமே காவல்துறை அதிகாரிகள் கையூட்டு வாங்குவார்கள் என்று கருதுமேயானால் காவல்துறை அதிகாரிகளை ஏன் குறை கூறவேண்டும். இதனால் அவர்கள் கையூட்டு வாங்குவதற்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கப்படுகிறது. காவல்துறை அதிகாரிகளாக நியமிக்கப்படும்போது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களையே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். காவல் துறையில் பணியாற்ற இயலாத நபர்களும் சில வேளைகளில் காவல்துறைக்கு நியமிக்கப்படுவதனால் தரம் கெட்டு விடுகிறது. மேலும் அறிவிற் சிறந்தவர்கள் பலர் காவல்துறையில் பணியாற்ற விரும்புவதில்லை. குறைந்த ஊதியம் அதே நேரத்தில் உயிர் போகக்கூடிய சூழ்நிலையிலும் பணியாற்ற வேண்டும். திருடன், கொள்ளைக்காரன், கொலைகாரன் ஆகியோர்களுடன் தொடர்புகொள்ள சிலருக்குத் தைரியம் இருப்பதில்லை. சில நேர்மையான நல்லோர் பலர் இத்துறைக்கு வருவதில்லை. இத்துறையில் உள்ளவர்கள் சிறிது வசதியாக வாழ்ந்தாலும் அத்தனையும் கையூட்டு மூலமாக வந்தது என்ற கருத்துப் பொது மக்களிடையே அதிகமாகப் பரவியுள்ளது. ஆகவே குடும்பச் சூழ்நிலை அறிவாற்றல், உடல் வலிமை, மனத்திடம், கடமை உணர்ச்சி ஆகியவற்றைப் பெற்றிருப்பவர்களைக் காவல்துறை உயர் அதிகாரிகளாக நியமிக்கவேண்டும்.

இந்தியாவில் உள்ள காவல்துறையின் அமைப்பு இங்கிலாந்தில் உள்ள அமைப்பைப் போன்றதேயாகும். அமைப்பு நல்ல முறையில் உள்ளது. ஆனால் செயலில்தான் மாறுபட்டுள்ளது.

காவல்துறை அதிகாரிகள் குற்றவாளிகளைப் பிடிக்கும்போது ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்கவும் உயிர்ச்சேதம் நேரா வண்ணம் தகுந்த பாதுகாப்பு உடைகளையும், நவீன கால ஆயுதங்

களையும் வழங்குதல் வேண்டும். குற்றவாளியைப் பிடிக்கும் போது இறந்துவிடும் அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வெகுமானம் அளித்துக் குடும்பத்திற்கு உணவு, உடை, உறையுள், கல்வித் துறைகளில் பல சலுகைகள் செய்து பாதுகாக்கவேண்டும். அப்பொழுதுதான் மற்ற அதிகாரிகள் துணிந்து குற்றவாளிகளைப் பிடிக்க முன்வருவார்கள்—பெயரளவிற்குச் சிறிது தொகையை வெகுமதியாகக் கொடுத்து விட்டால் போதாது.

குற்றங்கள் நிகழாவண்ணம் முன்கூட்டியே தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகமான துப்பறியும் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் பொதுமக்களும் காவல் துறையுடன் நெருக்கமாக இணைந்து குற்றவாளியைப் பிடித்துத் தண்டனை வழங்க உதவுதல் வேண்டும். பொதுமக்கள் காவல் துறையை மட்டும் குறை கூறிக்கொண்டு இருக்கக்கூடாது. அவர்களுக்குக் கையூட்டு வழங்குவதும், கடமையைத் தவறச் செய்வதும் பொது மக்கள் தாம் என்பதை மறந்துவிடக் கூடாது. பொதுமக்களின் நன்மைக்காக சமுதாயத்தின் அமைதிக்காகக் காவல்துறை இயங்குகிறது என்ற உணர்வு இரு சாரார்களிடமும் இருத்தல் வேண்டும்.

காவல்துறை நாய்கள் (The Police Dog)

காவல்துறை அதிகாரிகளைத் தவிர காவல்துறை நாய்களும் (Police Dog) குற்றங்களைத் துப்பறியப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. இந்தியாவில் சென்னை நகரில் 1951-ல்தான் முதன் முதலில் சென்னைக் காவல்துறை நாய்ப்படை (Police Dog Squad) தொடங்கப்பட்டது. உயர்ந்த ரக நாய் வகைகளைக் காவல் துறையினர் வளர்த்து வருகின்றார்கள். நாய்க்குப் பல பயிற்சி அளித்து துப்பறியப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குற்றங்களைத் தடுக்கவும், குற்றங்களைத் துப்பறியவும், நாய்கள் மிகவும் உதவுகின்றன. சுலபமான முறையில் எளிய முறையில் குற்றவாளியையும் குற்றம் நடந்த இடத்தையும் மோப்பம் (Scent) பிடித்துக் குற்றவாளியைக் கண்டுபிடித்து விடுகிறது நாய்.

முதல் உலகப் போரின்போது (1914-1918) புதைத்து வைக்கப்பட்டுள்ள கன்னி வெடிக் குண்டுகளைக் (Mines) கண்டு பிடிக்க நாய்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தார் (Red Cross) அதே போன்று 1941 ல் இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதிகளில் நாய்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

நாய்கள் குற்றங்களை வெற்றிகரமாகத் துப்பறிந்துள்ளன. 1957-ல் மொத்தம் 29 கொலைக் குற்றத்தில் 19 குற்றவாளிகளையும், 5 கொள்ளைக் கூட்டத்திற்கு இரண்டு குற்றவாளிகளையும், அறுபத்து ஐந்து கன்னக்கோல் குற்றத்திற்கு ஒன்பது குற்றவாளிகளையும், 17 திருட்டுக் குற்றத்திற்கு 5 குற்றவாளிகளையும் வெற்றிகரமாகத் துப்பறிந்துள்ளது இதனது செயலாற்றலுக்குச் சிறந்த சான்று பகர்வனவாகும். ஆக 116 வழக்குகளில் 35 வழக்குகளைத் துப்பறிந்துள்ளது. இதேபோல் 1958-ல் 136 குற்றங்களில் 55 குற்றங்களை வெற்றிகரமாகத் துப்பறிந்துள்ளது என்று காவல்துறை அறிக்கை கூறுகிறது. மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருள்களைத் துப்பறிந்து கண்டுபிடிக்க நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நாய்களைப் பயன்படுத்துவதனால் நன்மையும் தீமையும் உண்டு. சில வேளைகளில் நிரபராதியைக்கூட சூழ்நிலையால், மோப்பம் பிடித்து குற்றவாளியாக்கிவிட முடியும். ஆகவே மற்றச் சான்றுகள்தான் குற்றத்தை நிரூபிக்க ஆதாரமாகும். நாய்கள் குற்றத்தைத் துப்பறியப் பயன்படுத்தியவுடன் மேற்கொண்டு காவல்துறை அதிகாரிகள் துப்பறிவதற்கு ஆதாரமாகவும், வசதியாகவும் இருக்கின்றது.

14. வழக்கு விசாரணைக்கு முன்பு குற்றவாளியைத் தடைப்படுத்தி வைத்தல்

(Detention before trial)

குற்றஞ் சாட்டப்பட்டவர்களை அதே இடத்தில் கைதுசெய்யக் காவல் துறை அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதை முன்பு ஆராய்ந்தோம். கைது செய்த பின்பு குற்றவாளிகளை என்னென்ன நடை முறைக்கு உட்படுத்தவேண்டும் என்ற விவரங்களை இங்கு ஆராய்வோம்.

எந்தவொரு நபரின் உயிரையும் உடைமையையும் சட்டத்தின் துணைகொண்டு சட்டத்தின் பேரால்தான் பறிக்கப்படவேண்டுமே தவிர சர்வாதிகாரத்தின் பேரால், அநீதியின் செயலால் பறிக்கப்படக்கூடாது என அரசியல் சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் உத்தரவாதம் அளித்துள்ளது. மேலும் கைது செய்யப்பட்ட எந்தவொரு நபரையும் கைது செய்த 24 மணி நேரத்திற்குள் உரிய நீதிபதியின் முன் குற்றவாளியை நிறுத்தவேண்டும். அத்துடன் கைது செய்வதற்கான காரணமும் விளக்கிக் கூறப்படவேண்டும். குற்றத்திலிருந்து விடுவித்துக் கொள்ள குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு (Accused) எல்லா வசதிகளையும் செய்துதர வேண்டும் என்றும் அரசியல் சட்டம் கூறுகின்றது. கைது செய்து வெறுமனே காவல் அலுவலகத்தில் தடைப்படுத்தி வைத்திருக்கக்கூடாது என்று சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட உரிமை ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும் (Fundamental Rights).

ஆகவே தனி நபர் கைது செய்தாலும் உடனே காவல் துறை அதிகாரிகளிடமோ அல்லது குற்ற நடுவர் (Magistrate) இடமோ

ஒப்படைத்தல் வேண்டும். காவல் துறை அதிகாரிகள் கைது செய்தாலும் குறிப்பிட்ட காலத்தில் கைது செய்யப்பட்ட நபரைக் குற்ற நடுவர் முன்பு ஒப்படைத்தல் வேண்டும். குற்றம் புரியாத நபர்களை எக்காரணத்தைக் கொண்டும் கைது செய்யக் கூடாது. ஆனல் சந்தேகத்தின்பேரில் கைது செய்யச் சட்டம் இடம் அளிக்கிறது. கொள்கை அளவில் சட்டத்தில் பல கட்டுப்பாடுகள் காவல் துறை அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அவர்கள் அவற்றைப் பின்பற்றுவதே இல்லை. குற்றஞ் சாட்டப்பட்டவனைக் (Accused) கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் குற்ற நடுவர் முன்பு ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம் வலியுறுத்தினலும் காவல் துறை அதிகாரிகள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களின் விருப்பு வெறுப்பிற் கிணங்க அவர்கள் தம் போக்கில் செயற்பட்டு வருகின்றனர்கள். அப்படிச் செய்வது சட்டப்படி குற்றமானலும் பாதிக்கப்பட்டவர்களைக் காவல் துறை அலுவலகத்திலேயே (Police Station) பல நாள் தடைப்படுத்தி வைத்திருப்பார்கள். ஏன் என்று கேட்க அந்த நபர்களுக்கோ அவரைச் சார்ந்தவர்களுக்கோ அதிகாரம் இருப்பதில்லை. இந்தியா, அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் அதிகமான அளவில் சட்டமுரணன கைதுகள் (Illegal arrests) செய்யப்படுகின்றன. இங்கிலாந்தில் சட்ட முரணன கைதோ (Illegal detention) அல்லது சட்ட முரணகத் தடைப்படுத்தி வைப்பதோ மிக மிகக் குறைவு. அது அந்த நாட்டின் காவல் துறை அதிகாரிகளின் நேர்மையையும் ஒழுக்கத்தையும், கடமை உணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

கைது செய்யப்படுகின்ற நபர்கள் அனைவரும் குற்ற நடுவர் முன்பு நிறுத்தப்படுகின்றனர்கள் என்றே அல்லது நீதி மன்றத்தில் குற்ற விசாரணை நடத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டுச் சிறைச் சாலைக்கு அனுப்பப்படுகின்றனர்கள் என்றே கூற முடியாது. காவல் துறை அதிகாரிகளால் கைது செய்யப்படும் நபர்களில் 25 சதம் காவல் துறை நிலையத்தில் தடைப்படுத்தி வைத்திருந்தபிறகு குற்றவாளியை விடுவித்து விடுவார்கள். இப்படி விடுவித்து விடுவதில் பல காரணக் கூறுகள் உள்ளன. குற்றவாளியிடம் கையூட்டு வாங்கிக் கொண்டு மேற்கொண்டு குற்ற வழக்குத் தொடராமல் விடுவித்துவிடுவார்கள் அல்லது அரசியல் செல்வாக்கின் காரணமாகக் குற்றவாளியை விடுவித்துவிடக் காவல் துறை அதிகாரிகள் வற்புறுத்தப்பட்டிருக்கலாம் அல்லது குற்றத்திற்கான போதுமான சான்று கிடைக்காமையாலும் குற்றவாளியை விடுவித்துவிடுவார்கள். அல்லது குற்றவாளியின் நன்னடத்தை, ஒழுக்கம், குற்றம் புரிந்த சூழ்நிலைகள் ஆகிய

வற்றைக் கருதிக் குற்றவாளியை மன்னித்து விடுவித்து விடுவார்கள். சாலை விதிகளை மீறுதல், தொழில் விதிகளை மீறுதல் போன்ற சிறு குற்றங்கள் புரிந்து விடுதல் ஆகிய குற்றவாளிகளை மேற்கூறிய முறையில் விடுவித்துவிடுவார்கள்.

சில வேளைகளில், கையூட்டுக் கொடுக்க மறுக்கும் சிறு சிறு வாணிகர்கள் அதாவது பாதையில் தள்ளு வண்டியில் விற்பனை செய்பவர்கள், வீதியோரம் கடை வைத்து விற்பனை செய்பவர் களைக் காவல் நிலையத்தற்கு அழைத்து வந்து தடைப்படுத்தி வைத்திருப்பார்கள். பணம் கொடுத்த பின்பு அவர்களை விட்டு விடுவார்கள், வேலியே பயிரை மேய்வதைப் போன்றதாகும்.

அடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் கடுங்குற்றங்களைப் புரிந்திருந்தால் அவர்கள் பிணையத்தில் (Bail) செல்ல அனுமதிக் கப்படமாட்டாது. பிணையில் விடத்தகாத குற்றமாக இருந்தால் காவல் நிலையத்தில் தடைப்படுத்தி வைத்திருந்த பிறகு நீதிபதியின் முன்பு ஒப்படைக்கப்படுவார்கள். குற்றம் சாட்டப்பட்டவன் பிணையில் செல்ல விருப்பி மனு செய்தால் நீதிபதி விரும்பினுல் பிணையில் செல்ல அனுமதி வழங்குவார். அவ்வாறு விருபவில்லை யென்றல் சிறையில் தடைப்படுத்திவைக்க உத்தரவு வழங்குவார். கடுங் குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பிணையத்தில் விடக் காவல் துறை அதிகாரிகளுக்கு உரிமை கிடையாது. ஆனல் சிறு குற்றங் களைப் புரிந்தவர்கள், கடுமையான குற்றங்களைப் புரியாதவர்கள், பிணையத்தில் விடத்தக்க குற்றங்கள் (Bailable offence) புரிந்த வர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களைப் பிணையத்தில் விடு வித்துவிடக் காவல் துறையினருக்கு அதிகாரம் உண்டு. குற்ற விசாரணை நடக்கும்போது குற்றவாளி நீதிமன்றத்திற்கு ஆஜராக வேண்டும். அப்படி நீதிமன்றத்திற்கு வரவில்லையென்றல் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுவிடுவார்கள். பிணையில் விடத்தக்க குற்றமாக இருந்தாலும் பிணையத்தில் விடுவிக்க மறுக்கப்படலாம்.

கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிப் பிணையத்தில் விடத் தக்கக் குற்றமாகப் புரிந்திருந்தால் குற்ற நடுவர் (Magistrate) முன்பு நிறுத்தப்பட்டவுடன் வழக்குத் தொடரத் தயார் நிலையில் இருந்தால் குற்றவாளியின் மீது குற்றம் சாட்டப்படும். பிறகு குற்றவாளி குற்றத்தை ஏற்றுக்கொண்டால் உடனே குற்ற நடுவர் குற்றவாளிக்குச் சிறைத் தண்டனையோ அல்லது அபரா தமோ அல்லது இரண்டையுமோ தண்டனையாக வழங்கித் தீர்ப்பு அளிப்பார், குற்ற விசாரணைக்குத் தயாராக இல்லாமல் இருந்

தாலும், குற்றவாளி தன் குற்றத்தை மறுத்தாலும் குற்ற விசாரணை பிறிதொரு நாளில் எடுத்துக் கொள்ளப்படும் என்று குற்ற நடுவர் அறிவிப்பார். குற்றவாளி தன் சார்பாக வாதாட வழக்கறிஞரை நியமித்துக் கொள்ளவும் மற்றும் சான்றுகள் தயார்செய்யவும், வழக்கை ஒத்திப்போட்டு, வழக்கு விசாரணையின் தேதி வழங்கப் படும். இதற்கிடையில் குற்றவாளி பிணையத்தில் விரும்பினால் குற்ற நடுவர் பிணையத்தின்மீது (Security) அதாவது பாண்டு எழுதிக்கொடுத்து விட்டுச் செல்லும்படி அறிவிப்பார், அப்படிப் பிணையத்தின் கட்டளையைப் பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால் சிறையில் தடைப்படுத்தி வைக்கக் குற்ற நடுவர் ஆணையிடுவார். பிறகு விசாரணை நாள் அன்று சாட்சிகள் வந்திருந்தால் விசாரணை தொடரும். இல்லையென்றால் மீண்டும் வழக்கை ஒத்திப்போடு வார்கள். இறுதியாக ஒரு நாள் விசாரணை நடைபெறும். அவ்வமயம் குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டால், குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவார். அல்லது நிருபிக்கப்படவில்லையென்றால் உடனே விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்குவார் குற்ற நடுவர். விடுதலை அளிக்கப்பட்டால் உடனே குற்றவாளி சுதந்திரமாகத் தன் வீடு செல்லலாம். தண்டனை வழங்கப்பட்டால் சிறையில் அடைக்கப்படுவான். சில வேளையில் குற்றவாளியின் வழக் கறிஞர் குற்றவாளியைப் பிணையத்தில் விடுவிக்க மனு செய்வார். குற்ற நடுவர் விரும்பினால் அனுமதிக்கலாம் அல்லது மனுவை நிராகரித்து அல்லது தள்ளுபடி செய்து விடுவார் குற்ற நடுவர். அதாவது குற்ற நடுவர் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உயர் குற்ற மன்றத்தில் மேல் முறையீடு (Appeal) செய்யும் நோக்கத்துடன் தான் பிணையத்தில் செல்ல உரிமை கோரப்படும். மாவட்டக் குற்ற நீதிமன்றத்தில் (Sessons Court) மேல் முறையீடு செய்து தீர்ப்பைப் மறுபரிசீலனை செய்து கீழ் நீதி மன்றத்தின் தீர்ப்புச் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தால் அதே தீர்ப்பை உறுதிப் படுத்தித் தீர்ப்பு வழங்குவார் அல்லது கீழ் நீதிமன்றத் தீர்ப்பைத் தள்ளுபடிச் செய்து குற்றவாளியை விடுதலை செய்வார்.

கடுங் குற்றங்களாக இருந்தால் குற்ற நடுவர் (Magistrate) முன் விசாரணை (Preliminary Enquiry) செய்து பிறகு, குற்ற வாளியை மாவட்டக் குற்ற நீதி மன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்புவார். இது பழைய குற்ற நடை முறைச் சட்டத்தின் (Old Criminal Procedure Code) விதியாகும்.

புதிய குற்ற நடைமுறைச் சட்டம்

புதிய குற்ற நடைமுறைச் சட்டம் 1974 ஏப்ரல் முதல் தேதி யன்று செயற்பட்டு வருகின்றது. அதன்படி கடுங் குற்றங்கள்

புரிந்த குற்றவாளிகளைக் குற்ற நடுவரின் முன் விசாரணை இன்றியே மாவட்டக் குற்ற நீதி மன்றத்தில் (Sessions Court) நேரடியாக விசாரணை செய்ய வேண்டும் என்று குற்ற நடைமுறைச் சட்டம் கூறுகிறது. இதனால் காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்கப்படுகிறது. குற்ற நடுவர் முன்பு வழக்கைப் பொறுத்து விசாரணையின் கால அளவு அதிகரித்தோ குறைந்தோ இருக்கும். சில வழக்குகளில் ஓராண்டு, ஈராண்டு காலம் வரையிலும் வழக்கு நடப்பதுண்டு. இந்தக் காலதாமதத்தினால் புதிய குற்ற நடைமுறைச் சட்டம் குறைந்துவிட்டது.

கடுங் குற்றஞ் சாட்டப்பெற்ற குற்றவாளிகள் பிணையத்தில் செல்லச் சட்டம் அனுமதிப்பதில்லை. சில பல காரணங்களினால் பிணையத்தில் செல்ல அனுமதிக்கப்படும். அதாவது இளங் குற்றவாளிகள், பெண்கள், உடல் நலக் குறைவுள்ள வயது வந்த ஆண் குற்றவாளிகள் ஒரு கொலையைப் பலர் சேர்ந்து செய்ததாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கும்போதும் பிணையத்தில் விடப்படும். மற்றப்படி கடுங் குற்றவாளிகளைப் பிணையத்தில் விடுவிப்பது கிடையாது. குற்ற நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள குற்றவாளியைப் பார்த்து நீதிபதி குற்றம் புரிந்தாயா என்று கேட்பார். அதற்குக் குற்றவாளி தன் குற்றத்தை ஏற்றுக் கொண்டால் மேலும் வழக்கை விசாரணை செய்யாமல் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிப்பார் நீதிபதி. குற்றத்தை மறுத்தால்தான் மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்துக் குற்றத்தை நிரூபிக்கப்படும். அதற்காகப் பல குற்றச் சான்றுப் பொருள்களையும் நீதி மன்றத்திலும் சமர்ப்பித்து குற்றத்தை ஐயமின்றி உறுதிப்படுத்தப்பட்ட பின்பு குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்படும்.

பொதுவாக, கடுங் குற்றவாளிகள், குறிப்பாக கொலைக் குற்றம் புரிந்தவர்கள் குற்றத்தை ஒத்துக் கொண்டாலும் உடனே குற்றத்திற்கான தண்டனை வழங்கிவிடக் கூடாது என உச்ச நீதிமன்றம் (Supreme Court) தீர்ப்பு வழங்கியுள்ள காரணத்தினால் குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் குற்றவாளியின் குற்றத்தை மற்ற சாட்சிகளைக் கொண்டும் சான்றுகளைக் கொண்டும் நிரூபிக்கப்பட வேண்டும். அப்படி நிரூபிக்கப்பட்டுவிட்டால் குற்றவாளி தன் குற்றத்தை மறுத்தாலும் நீதிபதி அதைப்பற்றிக் கவலைப்படாமல் அவனுக்குக் குற்றத்திற்குரிய தண்டனை வழங்கித் தீர்ப்புக் கூறுவார். குற்றவாளி தன் குற்றத்தை ஏற்றுக் கொண்டாலும் போதிய சாட்சிகளோ (Witnesses) சான்றுகளோ (Evidence) இல்லையென்றால் குற்றவாளிக்கு விடுதலை அளித்துத் தீர்ப்புக்

கூறுவார் நீதிபதி. ஏனென்றால் குற்றவாளி மற்றவர்கள் புரிந்த குற்றத்தைத் தானே புரிந்ததாக நீதி மன்றத்தில் கூறலாம். அதாவது மற்றவர்கள் தண்டனை அடையாவண்ணம் பாதுகாக்க முற்படலாம். அல்லது வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு வாழ விரும்பாதவன் மற்றவர்கள் புரிந்த குற்றத்தைத் தான் புரிந்ததாகக் கூறித் தண்டனையின் மூலம் இறக்க முயற்சி செய்யலாம். அல்லது பிறருக்காக உயிரைத் தியாகம் செய்ய முயலலாம். அதாவது கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் மகன் தந்தைக்காகவும், தந்தை மகனுக்காகவும் அதேபோன்று தாய், நண்பன், சகோதரன். இப்படி மற்றவர்களைத் தண்டனையிலிருந்து காப்பாற்றும் பொருட்டு மற்றவர்கள் குற்றத்தைத் தன் மேல் சுமத்திக்கொள்ளலாம். ஆகவேதான் குற்றவாளி தன் குற்றத்தை நீதி மன்றத்தில் ஏற்றுக்கொண்டாலும் அவன் ஏற்றுக் கொள்ள மறுத்ததாகவே நீதி மன்றம் கருதிக்கொண்டு அவன்மீது குற்ற விசாரணை தொடரப்படும். அவன் குற்றம் புரிந்ததற்குப் போதிய சாட்சிகள், சான்றுப் பொருள்கள் இருக்குமாயின் அவன் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றத்திற்கு உண்டான தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிப்பார் நீதிபதி. பல குற்றவாளிகள் விடுதலை அளிக்கப்பட்டுவிட்டாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது குற்ற நீதிமன்றங்களின் கொள்கையாக விளங்குவதுதான் இதற்கு அடிப்படைக் காரணம்.

குற்றவாளி ஒரு நபரைக் கொலை செய்துவிட்டால் பலியானவரின் வாரிசுகள்தாம் குற்றவாளிமீது வழக்குத் தொடர வேண்டும் என்பது இல்லை. குடிமக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே அந்தக் குடிமக்களுக்குத் துன்பம், ஆபத்து, சேதம் நேரிடும்போது அரசாங்கமே குற்றவாளியை விசாரித்துத் தண்டனை வழங்கக் கடமைப்பட்டுள்ளது. ஆகவே குற்றவாளியை விசாரணை நடத்தித் தண்டனை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. ஆகவே அரசாங்கம் தன் சார்பில் வழக்கறிஞர்களை நியமித்துக் குற்றவாளியின் குற்றத்தை நிரூபித்து குற்றவாளிக்குத் தண்டனை வாங்கித்தர அரசாங்க வழக்கறிஞர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்க வேண்டியது அரசு வழக்கறிஞர்களின் (Public Prosecutor) கடமையாக மாறுகிறது. மேலும் குற்றவாளிகளின் குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் அவர்கள் நிரபராதிகள் (Innocents) என்று சட்டம் கருதுகிறது. ஆகவேதான் குற்றம் நிரூபிக்கும் முன்பு குற்றவாளி என்று கூறுவதையும் தடை செய்கிறது சட்டம். குற்றம் சாட்டப்பட்டவர் (Accused) என்றுதான் அழைக்கப்பட வேண்டும். ஆனால் வழக்கத்தில் பொதுவாக, குற்றவாளி என்று

வழங்கி வருகின்றனர்கள். குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்புதான் குற்றவாளி (Offender) என்று கூறுதல் வேண்டும்.

மேலும் குற்ற விசாரணையின்போது குற்றவாளியின்மீது சிறிது ஐயம் ஏற்பட்டாலும் வழங்கப்பட்ட சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும்போது அந்தச் சூழ்நிலையில் குற்றவாளி குற்றத்தைப் புரிந்தும் இருக்கலாம் அல்லது நிரபராதியாகவும் இருக்க வாய்ப்புண்டு அல்லது சான்றுகள் தெளிவாக இல்லை என்று நீதிபதி கருதுவாரேயானால். உடனே குற்றவாளிக்கு விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையை நீதிமன்றம் கடைப்பிடித்து வருகின்றது. அதாவது ஐயத்தினால் விளையும் இலாபம் குற்றவாளிக்குத்தான் (Benefit of doubt goes to the Accused) என்ற கோட்பாடு இயற்கை நீதியின் அடிப்படையில் (Natural Justice) அமைந்ததாகும்.

அடுத்து, குற்றவாளி தன் குற்றத்திலிருந்து விடுவித்துக் கொள்ள எல்லா உரிமைகளையும் வழங்கியுள்ளது அரசியல் சட்டம். குற்றவாளி வசதியுள்ளவனாக, பணக்காரனாக இருந்தால் தகுதிக்கேற்ற அளவில் வழக்கறிஞர்களை நியமித்துக் கொள்ள சட்டம் அனுமதிக்கிறது. குற்றவாளிகள் வழக்கறிஞர்களைக் கலந்து ஆலோசிக்கவும், தனக்காக நீதிமன்றத்தில் வழக்காடி விடுதலை பெறவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்குச் சாதாரண குற்றவாளி முதல் கடுங்குற்றவாளிகள் வரையில் ஏற்றத் தாழ்வின்றி உரிமை வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிக்காக வழக்காடும் வழக்கறிஞர் (Defence Counsel) நீதி மன்றத்தில் ஆஜராகிக் குற்றவாளிக்காக வழக்கை நடத்திக் குற்றவாளியை குற்றத்திலிருந்து விடுவிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார். குற்றத்தை நிரூபிக்க சாட்சியாளர்களாக நீதி மன்றத்தில் விசாரணை செய்பவர்களைக் குறுக்கு விசாரணை செய்யவும் குற்றத் தொடர்பான நாட்குறிப்பு, பதிவு ஆகியவற்றை ஆராய்ந்து அறியவும் உரிமை உண்டு. குற்றவாளியின் வழக்கறிஞர் தன் வாதத்திறமையினால் குற்றத்தைப் பொய்யாக்கிக் குற்றவாளியை உடனே விடுதலைசெய்ய வேண்டுவார்.

குற்றவாளிகள் ஏழையாக இருப்பினும் குற்றத்திலிருந்து விடுவித்துக்கொள்ள வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள நீதி மன்றம் துணை செய்கிறது. ஏழையாக இருக்கின்ற காரணத்தினால் அடிப்படை உரிமை பறிக்கப்படுவதில்லை. குற்ற நீதிபதி குற்ற விசாரணை நடத்தும்போது குற்றவாளியைப் பார்த்து வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்த

உனக்கு வசதி இருக்கிறதா என்று கேட்பார். வசதி இருக்கிறது என்றால் வழக்கறிஞரை நியமிக்கப் போதிய அவகாசம் வழங்குவார். வசதி இல்லை என்று கூறினால் குற்றவாளியின் சார்பில் குற்றவாளிக்காக வழக்கை நடத்த நீதிபதியே வழக்கறிஞரை நியமிப்பார். அவருக்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குற்றவாளியின் வழக்கறிஞர் (State Brief) என்று பெயர். இவ்வகையான வழக்கறிஞர்களும் குற்றவாளிக்காக வாதாடி குற்றவாளிக்கு விடுதலை அளிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார்கள். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் என்ற காரணத்திற்காக அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயல்படமாட்டார்.

ஆனால் இம்மாதிரி நியமிக்கப்படும்போது தகுதியும், அனுபவமும், திறமையும் உள்ளவர்களைத்தான் நியமிக்க வேண்டும். அங்ஙனமும் சில சூழல்கள் நடக்கின்ற காரணத்தினால் நீதிபதிக்கு வேண்டியவராக இருந்தால் அனுபவம் இல்லாத வழக்கறிஞர்களையும் வழக்கை நடத்த நியமித்துவிடுவதுண்டு. அதைக் குற்றவாளி மறுக்கவும் உரிமை உண்டு. மேலும் ஏற்கெனவே அவன் ஏழை. அவனுக்காக யாராவது வாதாடினால் போதும் என்ற நிலையில் உள்ளதாலும் வழக்கறிஞரைப் பற்றிய முன் அனுபவம் இல்லாத காரணத்தினாலும் அவன் வாளா இருந்து விடுகின்றான்.

மேற்கூறப்பட்ட நடைமுறைகள் அனைத்தும் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன்பு ஒப்படைக்கப்பட்ட பின்பு நிகழும் நிகழ்ச்சிகளாகும். ஆனால் கைது செய்து காவல் நிலையத்திலே தடைப்படுத்தி வைத்திருந்தாலும், கைது செய்யப்பட்டதற்கான காரணத்தையும் அறிவிக்காமல் இருந்தாலும், அது சட்ட முரணான கைதாகக் கருதப்படும். அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை (Writ of Habeas Corpus) வழக்குத் தொடுத்துச் சட்டத்திற்கு முரணாகத் தடைப்படுத்தி வைத்திருப்பதை விடுவிக்க உரிமை கோரலாம்.

அலுவல்சாரா முறையற்ற விடுவிப்பு (Un Official Release)

காவல் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான நபர்களைக் காவல் துறை அதிகாரிகள் பொறுப்பு நீக்கம் செய்து அனுப்பி விடுகின்றார்கள். சட்ட முரணாகக் கைது செய்து (Illegal arrest) காவல் நிலையத்தில் தடைப்படுத்தி வைக்கப்படும்போது அது சட்ட முரணான தடைப் படுத்தி வைத்தலாகிறது (Illegal detention). இதனால் காவல் துறை அதிகாரிகள் இரு

குற்றங்களைப் புரிந்தவர்களாகின்றார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட நபர்கள் தக்க நடவடிக்கை எடுப்பதில்லை. அதற்குக் காரணம் ஏழைமை, அறிவின்மை, தைரியமின்மை, மற்றவர்கள் உதவி கிடைக்காமை ஆகியவையாகும். ஆகவே காவல் துறை அதிகாரிகள் தொடர்ந்து சட்ட முரணாகக் கைது செய்தும் சட்ட முரணாகத் தடைப்படுத்தி வைத்தும் வருகின்றார்கள். அதிகாரிகள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமலும் வேண்டாத வகைகளில் ஈடுபட்டும் வருகின்றார்கள். அமெரிக்காவில் டெட்ராய்ட் (Detroit) நகரத்தில் 1958-59-ல் குடிபோதைக் குற்றத்திற்காக மொத்தம் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,048 நபர்களாகும். இதில் 40 சதம் ஆதாரமில்லாமல் கையூட்டு வாங்கிக் கொண்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் 1 சதம் தான் பொறுப்புடன் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அதே போன்று 26,-30 நபர்கள் பல குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் 14·8 சதம் குற்ற வழக்குத் தொடராமல் விடுவித்துள்ளார்கள். காவல் துறை அதிகாரிகள் தங்களின் அதிகாரங்களைத் தவறான வழிகளில பயன்படுத்திவருவது தெள்ளத் தெளிவாகிறது.

பிணையத்தில் விடுவித்தல் (Release on Bail)

பிடியாணை வேண்டாக் குற்றங்கள் (Cognisable offences) தவிர மற்றக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட நபர்கள் பிணையத்தில் விடுவிக்கப்படலாம். பிணையத்தில விடத்தக்க குற்றங்கள் (Bailable offence) புரிந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் குற்ற வழக்குப் பதிவு செய்து கொண்ட பிறகு வழக்கு நடக்கும்போது நீதிமன்றத்திற்குத் தவறாமல் வர வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன், கண்டிப்புடன் விடுவிக்கப்படுகிறார்கள். அந்த நபருக்கு ஆதரவாக அல்லது பிணையமாக ஒருவரோ அல்லது இருவரோ பொறுப்பு ஏற்று நீதி மன்றத்திற்கோ அல்லது காவல்துறை அதிகாரிகளுக்கோ பிணையப்பத்திரம் (Security Bond) எழுதிக் கொடுக்கவேண்டும். அத்துடன் பிணை ஆள் (Surety) தன் நிலத்தையோ வீட்டையோ நீதி மன்றத்தில் பிணையப் பொறுப்பாக எழுதிக் கொடுத்தல் வேண்டும். சில வேளைகளில் ரூ. 250 ரூ. 500 அல்லது 1,000 ரூபாய்க்கு பிணையப் பாண்டு எழுதிக் கொடுத்தல் வேண்டுல் இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவனும் தன் சொத்தையோ பணத்தையோ பிணையமாக நீதி மன்றத்திற்கு எழுதிக் கொடுத்தல் வேண்டும். பிணையத் தொகை குற்றத்திற்குக் குற்றம் வேறுபடும். குற்றவாளிகளின் தகுதியைப் பொறுத்தும் பிணையத்தொகை உறுதி செய்யப்படும். குற்றவாளி

விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு வராவிட்டால் பிணை ஆளைக் கைது செய்து, நீதி மன்றத்தின் முன்பு நிறுத்தப்படுவர்; பிணையச் சொத்து அல்லது பணத்தைப் பறிமுதல் செய்யப்படும். குற்றம் சாட்டப்பட்டவன் தப்பி ஓடிவிடக்கூடாது என்ற நோக்கத்திற்காக இவ்வாறு பிணை ஆள், பிணையப்பத்திரம் (Security Bond) ஈடாகப்பெறப்பட்டு வருகின்றன. அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் குற்றவாளிகளுக்குப் பிணையம் அளிப்பதற்காகவே பல கூட்டுறவு நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார் சதர்லாண்டு என்னும் அறிஞர். நியூ யார்க்கு நகரத்தில் மட்டும் 40 முதல் 50 சதம் வரையில் கூட்டுறவு நிறுவனங்கள் (Companies) பிணையம் அளிக்கச் செயற்பட்டு வருவதாக அறிக்கை கூறுகின்றது.

இந்தியாவில் பெரிய நகரங்களான சென்னை, கல்கத்தா, டெல்லி, ஹைதராபாத் போன்ற இடங்களில் பரத்தமைக் குற்றத்திற்காக (Prostitution) கைது செய்யப்பட்ட பெண்களுக்காகப் பிணையம் அளிக்கத் தனிப்பட்ட செல்வந்தர்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் முன் வருகின்றன. கைது செய்யப்பட்ட பெண்களுக்குப் பிணையம் அளித்து விடுவித்த பிறகு அவர்களின் பாதுகாப்பில் வைத்துக்கொண்டு பரத்தைமையைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். வழக்கு நடப்பதற்குள் இடைப்பட்ட ஒரு மாதத்திலோ அல்லது இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவோ பிணையத்திற்காகச் செலவு செய்யப்பட்ட தொகையைவிடப் பல மடங்கு சம்பாதித்து விடுகின்றார்கள். பரத்தையர்கள் மீது வழக்கு நடக்கும் நாட்களிலும் திடீரென்று வழக்கைத் தள்ளிப் போடுமாறு வழக்கறிஞரை மனு தாக்கல் செய்யும்படிக் கூறிவிட்டுப் பரத்தையரின் பரத்தைமைத் தொழிலுக்காகப் போய்விடுகின்ற நிலைமைச் சர்வசாதாரணமாக நிகழ்கின்றது. இதற்குக் குற்ற நீதி மன்ற எழுத்தர் (Bench Clerk) வழக்கறிஞர் இருவரும் உடன்பாடு செய்து கொண்டு நீதிபதி ஏற்கக்கூடிய பொய்யான காரணத்தைக்கூறி வழக்கை ஒத்திப்போடும்படிச் செய்துவிடுவார்கள். அதே போன்றுதான் கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விற்றல், கள்ளக் கடத்தல் ஆகிய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களும் பிணையத்தில் விடுதலை பெற்றுத் தங்களின் தொழிலைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

பிணையத்தில் விடத்தகாத குற்றங்களுக்காக (Non Bailable Offence) கைது செய்யப்பட்டுள்ள நபர்களும் சில வேளைகளில் பிணையத்தில் (Bail) விடுவிக்கப்படுகின்றார்கள். பிணையத்தில் விடக்கூடாது என்று சட்டம் வலியுறுத்தினாலும் குற்றவாளிக்காக ஆஜராகி வழக்கு நடத்தும் வழக்கறிஞரைப் பொறுத்தும் நீதிபதி

யைப் பொறுத்தும் பிணையத்தில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இது வழக்கிற்கு வழக்கு மாறுபடும். அதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட ஒரு நபருக்குப் பிணையத்தில் செல்ல மறுக்கப் படலாம். ஆனால், அதே நேரத்தில் மற்றொரு நபருக்குப் பிணையத் தில் செல்ல அனுமதிக்கப்படலாம் மனு செய்யும் வழக்கறிஞர் களுக்கும் நீதிபதிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குமேயானால் அந்த வழக்கறிஞர்களுக்காக அந்த நபருக்குப் பிணையத்தில் செல்ல அனுமதிப்பது உண்டு. அதே போன்று செல்வாக்குடைய நபர் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தாலும் அவரின் தனிப்பட்ட கௌரவத்தைக் கருதி பிணையத்தில் செல்ல அனுமதிக்கப்படுவதுண்டு. ஆக சமுதாயத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் எந்த நிலையிலும் தங்களின் செல்வாக்கைப் பயன் படுத்திப் பிணையத்திலோ அல்லது விடுதலையோ அடைந்து விடுகின்றார்கள். ஆனால் ஏழைகளுக்கு யாரும் உதவி செய்வதில்லை. சட்டமும் அமைதியாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. வழக்கறிஞர், நீதிபதி ஆகியோர் வஞ்சக்கூட்டு அல்லது உடன் படிக்கையினால் கடுங் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட நபர்களையும் பிணையத்தில் விடுவிக்க அனுமதித்து வருகின்றார் நீதிபதி. எடுத்துக் காட்டாக சிகாகோ (Chicago) நகரத்தில் கொள்ளைக் குற்றத்திற்காக (Robbery) கைது செய்யப்பட்ட மூன்று நபர்களைப் பிணையத்தில் விடுவிக்கப் பத்து லட்சம் டாலருக்கு மேல் (More than a million dollars) வாங்கி உள்ளதாக ஓர் அறிக்கை கூறுகிறது. குற்ற வாழ்க்கைத் தொழிலர்கள் (Professional Criminals) கைது செய்யப்பட்டுவிடும்போது நீதிபதிக்குக் கையூட்டைக் கொடுத்துப் பிணையத்தில் சென்று விடுகின்றார்கள். அல்லது வழக்கைத் தள்ளுபடி செய்துவிடும்படி தூண்டு கின்றார்கள். நீதியைக் காக்கவேண்டிய நீதிமன்றங்கள் நீதியைக் குழி தோண்டிப் புதைத்தும் விடுகின்றன. நீதிக்காக வாதாட வேண்டிய வழக்கறிஞர்களும் நீதியை நிலைநாட்டக் கூடிய நீதிபதிகளும் நீதியை அழித்துவிடுகின்றார்கள். அழகான பெண், இளமை முறுக்குடன் விளங்கும் பெண். குற்றம் சாட்டப் பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டால், நீதிபதி அவளுக்கு உடனே பிணையத்தில் செல்ல அனுமதித்து விடுகின்றார் பிறகு தன்னைச் சந்திக்கும்படி உத்தரவிடுகின்றார். இறுதியில் வழக் கையும் தள்ளுபடி செய்து விடுதலை அளித்து விடுகின்றார். இப்படியும் சில நீதிபதிகள் உள்ளனர். சமுதாயத்தைச் சீர்திருத்த, முதலில் மேற்கூறப்பட்ட வகையான நீதிபதிகளைத் திருத்த முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும் அப்பொழுதான் நீதித் துறைகளிலுள்ள களைகளைக் களைந்தெறிந்து நாட்டில் நீதி என்னும் அன்புப் பயிரை வளர்க்க முடியும்.

பிணையத்தில் விடுவிப்பதில் விளையும் பல குறைபாடுகளை நீக்கக் குற்ற இயல் வல்லுநர்கள் சில கருத்துகளை வெளியிட்டுள் ளார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பிணையத்தில் விடுவிக்கும் பொறுப்பைத் தனிப்பட்ட குழுக்களிடம் (Bureau) ஒப்படைக்க வேண்டும். அந்தக் குழு பிணையத்தில் விடுவிப்பதைப் பற்றியோ, பிணையச் சொத்தைப் பற்றியோ, பிணைய ஆணைப் பற்றியோ ஆராய்ந்து அறியவும், அதன்படி செயற்படவும், பிணையச் சொத்தைப் பறிமுதல் செய்வதற்கும் உரிமை வழங்கப் படவேண்டும். பிணையத்தில் விடத் தகுந்த குற்றங்களைப் புரிந்த நபர்களாக இருந்தாலும் மேலும் குற்றங்களைப் புரிவதற்காக (உதாரணம் பரத்தைமை, சூதாட்டம், கள்ளச் சாராயம் விற்றல்) பிணையத்தில் செல்லக் கருதினால் பிணைய உரிமை மறுக்கப் படவேண்டும். மேற்கூறிய தகவல்களை அந்தக் குழு, குற்றம் சாட்டப்பட்ட நபரைப் பரிசீலனை செய்து, உண்மையான காரணத்திற்காகப் பிணையத்தில் செல்ல விரும்பினால் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இரண்டாவதாக பிணையத்தை அளிப்பதற்காக இயங்கும் கூட்டுறவு நிறுவனத்தையோ அல்லது தனிப்பட்ட செல்வந்தர் தன் சொந்த நலனைக் கருதிப் பிணையம் அளிக்க முன் வருவதையோ தடை செய்யமுடியும். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் பிணையம் அளிக்க வருபவர்களுக்கும் உள்ள உறவு, தொடர்பு ஆகியவற்றை அந்தக் குழு ஆராய்ந்து அறிந்து பிறகே பிணையத்தில்விட அனு மதிக்கப்படவேண்டும். இந்தப் பணிகளை நீதிபதிகள் செய்ய முடியாது. ஆகையினால் தனிப்பட்ட குழுவிடம் ஒப்படைத்தல் சாலச் சிறந்ததாகும். குழு என்று கூறியவுடன் ஒன்றிற்கு மேற் பட்ட நபர்கள் இருப்பதனால் வழக்கறிஞர்கள் கள்ளக் கூட்டு மூலமாகப் பிணைய உத்தரவைப் பெறவும் இயலாமல் போகக் கூடும்.

மூன்றாவதாகக் குற்ற வாழ்க்கைத் தொழிலர்கள், அரசியல் செல்வாக்குள்ள குற்றவாளிகள் ஆகியோர் தங்களின் குற்ற உத்தியால், செல்வாக்கினால் குற்றத்தைச் சரிகட்டுதல் (Fixing the Case) முடியாமல் போகக்கூடும். பிணையத்திலும் விடுதலை பெற முடியாது.

நான்காவதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை நிரூபிக்கின்ற வரையில் நிரபராதிகள் (Innocent) என்று கருதப்

படுகின்ற காரணத்தினால் அவர்களைக் குற்றவாளிகளைப் போல நடத்தப்படாமல். சிறையில் தடைப்படுத்திவைக்கப்படாமல், ஒரு பயிற்சி முகாம் போன்ற சூழ்நிலையில் வைக்கப்படவேண்டும். ஆனால் தற்பொழுது கைது செய்யப்பட்டவர்கள் நசுக்கப்படுகின்றார்கள்; அச்சுறுத்தப்படுகின்றார்கள்; குற்றத்தை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்றார்கள். காவல்துறை அதிகாரிகளின் துன்புறுத்தலைப் பொறுக்கமாட்டாமல் நிரபராதிகள்கூட குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொண்டு விடுகின்றார்கள். முதல் முறை வந்த குற்றவாளிகள் நயமாகவும் கண்ணியமாகவும் நடத்தப்படவேண்டும். இரண்டாம் மூன்றும் முறை குற்றவாளிகளையோ அல்லது திரும்பத் திரும்ப குற்றம்புரியும் நபர்களையோ (Recidivist) அவ்வாறு நடந்தவேண்டும் என்பது அல்ல.

முதன் முறைக் குற்றவாளிகளின் மனம் மாறும்படியான நல்ல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதைக் காட்டிலும் குற்றவாளியின் குற்ற வொழுக்கத்தை மாற்றி நல்லொழுக்கமுள்ளவனாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். குற்றவாளி தண்டனை அடைந்து துன்புற்று மனம் வெந்து மேலும் குற்றச் செயலில் ஈடுபடவும், கடுமையான குற்றங்களைப் புரியவும் எத்தனிப்பதைவிட அவனைத் திருத்தி நல்லவனாக வெளியேற்றி விட்டால் திரும்பத் திரும்ப குற்றம் புரியும் நபராக மாறுவது தடுக்கப்பட்டு விடுகிறது அல்லவா.

கைது செய்யப்பட்ட நபர்கள் காவல் நிலையத்தில் தடைப் படுத்தி வைக்கப்படுகிறார்கள். பிறகு சிறையில் தடைப்படுத்தி வைக்கப்படுகின்றார்கள். குற்ற விசாரணை நடந்தவுடன், குற்றம் நிரூபிக்கப்பட்டவுடன், தொழிலுடன் கூடிய சிறைச் சாலைக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

முதன் முறைக் குற்றவாளிகளைக் கடுமையான குற்றங்கள் புரிந்தவர்களுடன் இணைந்து வைத்தல் கூடாது. குறிப்பாக விசாரணைக்கு முன்பு தடைப்படுத்தி வைக்கப்படும் குற்றவாளிகளைத் தனியாகத்தான் தடைப்படுத்தி வைக்கப்படவேண்டும், அத்துடன் குற்றவழக்கு விசாரணையைக் காலம் கடத்தாமல் விரைவில் முடிக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இதனால் குற்றவாளிக்கு அவன் குடும்பத்திற்கு, அரசாங்கத்திற்கு அனைவருக்கும் நன்மை உண்டு. தடைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் எண்ணிக்கையும் குறையும். சாட்சிகளையும் (Witnesses) தடைப்படுத்தி வைத்திருக்க

வேண்டிய அவசியம் சில வேளைகளில் ஏற்பட்டுவிடுகிறது. பொதுவாக, சாட்சியாளர்கள் விசாரணையின்போது நீதி மன்றத்திற்கு வந்து சான்று கூறுவது வழக்கம். ஆனால் முன்கூட்டியே அவர்கள் நீதிமன்றத்தில் சான்று கூறவேண்டிய தேதி நேரம் ஆகியவை குறிப்புகளுடன் அழைப்பாணை (summons) அனுப்பப் பட்டு வரும். அழைப்பாணையை ஏற்று நீதிமன்றத்திற்குச் சான்று கூற வரமறுப்பவர்களை அல்லது ஏமாற்றுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரும்படி நீதிபதி உத்தரவிட உரிமை உண்டு. அதன்பேரில் சாட்சியாளர்களைக் காவல்துறை அதிகாரிகள் கைது செய்து நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப் படுவார்கள். அவர்களின் சான்று கூறுவது முடிவடையும் காலம் வரையில் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறையில் தடைப்படுத்தி வைக்கப்படுவார்கள். இம்மாதிரி மிக மிகக் குறைவான நபர்கள்தான் செயற்படுவார்கள். சான்று கூறுவதற்கு நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று அழைப்பாணை விடுத்தவுடனே சான்றுளர்கள் நீதிமன்றத்திற்குத் தவறுமல் வந்துவிடுவார்கள்.

இளங் குற்வாளிகளைச் சிறையில் தடைப்படுத்தி வைப்பதில்லை. சிறுவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்தால் விசாரணை நடக்கும் வரையில் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் இருக்கும்படி விட்டுவிடுவார்கள். நீதிவிசாரணை நடக்கும்போது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் சிறுவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வருதல் வேண்டும். பெற்றோர்களோ அல்லது பாதுகாவலர்களோ இல்லாத சிறுவர்களாக இருந்தால் குற்றவிசாரணை நடக்கும் வரையில் சீர்திருத்தப் பள்ளியில் அல்லது இல்லங்களில் தங்கி இருக்க ஏற்பாடு செய்வார்கள். குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டால் அதே சீர்திருத்தப் பள்ளிக்கோ அல்லது இளைஞர் சிறைக்கோ (Borstal School) அனுப்பப்படுவார்கள். எக்காரணத்தைக் கொண்டும் இளைஞர்களைக் காவல் நிலையத்திலோ அல்லது சிறைச் சாலையிலோ தடைப்படுத்தி வைத்தல்கூடாது. ஆனால் காவல் துறை அதிகாரிகள் இந்த விதியை அடிக்கடி மீறிவிடுகின்றார்கள். பெரும்பாலும் காவல் நிலையத்தில் ஒரு வாரம் வரையிலும் தடைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். மேலும் இளங் குற்றவாளிகள் தப்பி ஓடிவிடாமல் பாதுகாக்க வசதியில்லை என்றாலும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை இருந்தாலும் குற்றம் கடுங்குற்றமாக இருந்தாலும் இளங் குற்றவாளிகள் காவல் நிலையத்தில் அல்லது சிறைச்சாலையில் தடைப்படுத்தி வைக்கப்படுவார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1929-30-ல் 1,18,772 இளங் குற்றவாளிகளில் 15 சதம் சிறையிலும் காவல் துறை நிலையத்திலும் 85 சதம் பொது இல்லங்களிலும் (சீர்திருத்தப் பள்ளிகள், இல்லங்கள்) மற்றவர்கள் தனியாரின் அனாதை இல்லங்களிலும் விடுதிகளிலும் மருத்துவ மனைகளிலும், பிச்சைக்கார விடுதியிலும் தடைப்படுத்தி வைத்திருந்ததாக ஓர் அறிக்கை கூறுகிறது. வருடத்திற்கு 5,000 முதல் 70,000 (எழுபதாயிரம்) சிறுவர்கள் வரையில் நகரச் சிறைச் சாலைகளிலும் காவல் அறைகளில் தடைப்படுத்தி வைத்திருப்பதாக மற்றொரு அறிக்கை கூறுகிறது.

இப்படி இளங் குற்றவாளிகளை, சிறுவர்களைப் பல்வேறு நிறுவனங்களில் தடைப்படுத்தி வைத்திருத்தல் பற்றி வெகுவாகக் குறை கூறப்படுகிறது. சில நிலையங்கள் சிறுவர்களுக்குச் சாதகமாகவும் சில நிறுவனங்கள் சிறுவர்களுக்குப் பாதகமாகவும் செயற்படும். அதாவது சில நிறுவனங்கள் கடினமான உழைப்பு, அதிகக் கண்டிப்பு, அச்சுறுத்தல் தன்மையில் செயற்படக்கூடும். சில நிறுவனங்கள், சிறுவர்கள் மனம் பாதிக்கப்படாமல் அன்பாக நடத்தக்கூடும். இதனால் சிறுவர்கள் மனம் திருந்தி நல்லவர்களாக வாழவும் வழியுண்டு. அதே நேரத்தில் மேலும் கடுங்குற்றங்களில் ஈடுபடவும் வாய்ப்புண்டு. அந்தந்த இல்லங்களில் இருக்கும் மற்றச் சிறுவர்களைப் பொறுத்து அதில் இணையும் சிறுவனின் ஒழுக்கம் அமைகிறது. ஆகவே இந்த வேறுபாட்டைப் போக்கக் குற்றம் சாட்டப்பட்ட சிறுவர்கள் அனைவரையும் ஒரே மாதிரியான நிலையங்களில் தடைப்படுத்தி வைத்தால் மிகவும் சிறந்த முடிவைக் கொடுக்கும் என்பது திண்ணம்.

பொது நிறுவனங்களைப் பராமரிக்கப் போதுமான கவனம் செலுத்தல் வேண்டும். மனிதன் வசிக்கக் கூடிய இடமாக இருத்தல் அவசியம், அந்தக் காலத்தில், குப்பையான இடம், மூட்டைப் பூச்சி, கொசுக்கள் மற்றும் விஷக் கிருமிகள் வாழும் இடமாகவும், தீயின் ஆபத்தும், போதுமான உணவு இன்மை, போதுமான தண்ணீர் இன்மை, போதுமான வெளிச்சம் இன்மை, போதுமான காற்றோட்டமின்மை, தனித்து நடமாட முடியாத சிறிய அறை, தொற்று நோயாளியுடன் உறையும் அவல நிலை, எங்கும் சோம்பேறித்தன்மை, பெண்களைக் கண்காணிக்க ஆண்களை நியமித்தல், போதுமான மருத்துவ வசதியின்மை, குற்றவாளிகளுக்குள் பாரபட்சம் காட்டுவது, வேண்டிய குற்றவாளிகளுக்கு விரும்பிய சலுகை அளித்தல், தப்பி ஓடக்கூடிய வசதி ஆகிய தன்மைகளைக் கொண்ட சிறைச்சாலையாக விளங்கியதாக அறிவிக்கின்றார் சதர்லாண்டு.

மேலும், ஃபிஸ்மேன் (Fishman) என்பவர் சிறையின் நிலைமையை ஆராய்ந்து கீழ்வருமாறு விவரிக்கின்றார்.

நம்ப முடியாத அளவிற்குக் குப்பை கூளமாகக் காட்சியளிக்கிறது சிறை. சாதாரண குற்றவாளிகள், கடுங்குற்றவாளிகள், ஆண் பெண் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள், குற்ற விசாரணைக்காகக் காத்திருக்கும் குற்றவாளிகள் ஆகிய அனைவரும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார். மேலும் நோயாளிக்கு என்றோ, இளைஞர்களுக்கென்றோ தனியாக அறைகள் இல்லை. மனித இனத்தையே இழிவுபடுத்தக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது. குற்றவாளிகளுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் தனித்தனி அறைகள் கிடையாது. மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சி, பேன், எலி, உண்ணி மற்றும் விஷக் கிருமிகள்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. துர்நாற்றம், வாழ்க்கையை வெறுக்கக் கூடிய சூழ்நிலை, உழைக்கக்கூடிய ஆயிரக்கணக்கான ஆண் பெண் குற்ற வாளிகள் சோம்பேறிகளாக ஆக்கப்பட்டு விட்டார்கள். குற்றம், குற்ற வொழுக்கத்தைப் பற்றியும் தீயசெயல்களைப்பற்றி மற்றக் குற்ற வாளிகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் நிறைய வாய்ப்புண்டு. அதாவது சாதாரண குற்றவாளியாகச் சிறையினுள் புகுந்தவன் சிறையிலிருந்து வெளிவரும்போது குற்றத்தில் தேர்ச்சி பெற்ற வல்லவனாக விளங்குகின்றான் என்று அமெரிக்காவில் உள்ள சிறையின் அவல நிலையைப்பற்றி ஆராய்ந்துள்ளார். மேற்கூறப்பட்ட நிலை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையாகும். ஆனால் இன்று சிறைச்சாலைகள் ஓரளவிற்குச் சீர்திருத்தம் அடைந்துள்ளன. ஆனால் 1957-ல் கூட அமெரிக்காவின் சிறைச்சாலைகளின் தரம் உயர்த்தப்படவில்லை என்று மற்றொரு அறிக்கை கூறுகிறது. 58 நகர சிறைச் சாலைகளில் 5 மட்டும்தான் அடிப்படைத் தேவையுடன் விளங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 1597-ல் சிறைச்சாலை தொடங்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை மிகவும் மட்டரகமான இடமாகக் காணப்பட்டது. ஆண், பெண், இளைஞர்கள், திரும்பத் திரும்ப குற்றம் புரிந்தவர்கள் ஆகிய பலவகையான குற்றவாளிகளையும் ஒரே இடத்தில் அடைத்து வைத்துள்ளார்கள். அதாவது எலி வளையில் அடைக்கின்ற மாதிரியும், பன்றிகள் ஒன்றோடு ஒன்று புரளுகின்ற மாதிரியும் குற்றவாளிகள் அடைக்கப்பட்டு வந்தார்கள் என்று ஓர் அறிக்கை குறிப்பிடுகின்றது.

ஒரு குற்றவாளி, சிறைச் சாலையில் தடைப்படுத்தி வைத்திருந்த போது ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகின்றார்.

'நான் புதிய குற்றவாளியாகச் சிறையில் நுழைந்தேன். அங்கே மூன்று மாதம் மட்டும்தான் தங்கியிருந்தேன். அந்தக் குறுகிய காலத்தில் சமுதாயத்திற்கு எதிராகச் செயற்படுவதைக் கற்றுக் கொண்டேன். நான் வெளியில் இருந்திருந்தால் அவற்றைக் கனவு கூட கண்டிருக்க முடியாது! வயதடைந்த குற்றவாளியுடன் நான் தினமும் பழகினேன், அவர்களின் பழக்க வழக்கங்கள் அத்தனையும் கற்றுக்கொண்டேன், ஏற்றுக் கொண்டேன், அவர்களின் குற்றக்குறி, மறைமுகமான மொழி, நுட்பம் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டேன். அவர்கள் கூறும் கதைகள் வீரத்தை உண்டாக்கக் கூடியனவாக இருந்தன. என்னைப் பெரும் முரடனாக ஆக்கிவிட்டது. பழைய குற்றவாளிகள் என்னைப் பார்த்து பொறாமைப்படும் அளவிற்கு வளர்க்கப்பட்டேன். அவர்கள் எனக்குத் தலைவர்களாக விளங்குகின்றார்கள். என்னிடத்தில் வீரச் செயலை எதிர்பார்க்கின்றார்கள்' என்று காரசாரமாகக் கூறியுள்ளார். இந்த நிகழ்ச்சி ஏறத்தாழ 1915-க்கு முன் நிகழ்ந்ததாகும்.

ஆகவே மேலே கூறப்பட்ட இழிநிலைகளை அகற்றிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

உண்மையாகக் குற்றம் புரிந்திருந்தாலன்றி மற்றப்படி கைது செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். பணத்தை எதிர்பார்த்துக் கைது செய்வதையும் பணத்தைக் கொடுத்தவுடன் விடுவித்து அனுப்பிவிடுவதையும் தவிர்த்தல் வேண்டும். பெரும்பாலான கைது செய்யப்பட்ட நபர்கள் குற்ற விசாரணையின்றியே விடுவிக்கப்படுகின்றார்கள். இந்த அவலநிலையைத் தடுக்க வேண்டும். பல குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் விடுதலை அளித்து விடுகிறது. போதிய சான்றுகள், சான்றுப் பொருள்கள் இல்லையென்பதை இது காட்டுகிறது.

நீதிமன்றங்கள் வழக்குகளை உடனடியாக விசாரணை நடத்துதல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீண்ட காலம் வரையில் சிறையில் தடைப்படுத்தி வைத்தலைத் தவிர்க்க வேண்டும். இதனால் தடைப்படுத்தி வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைக்கப்படலாம்.

காவல் நிலைய அறை, சிறை ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்தல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களும் மனிதர்கள்

தாம் என்ற உணர்வோடு கருதி அவர்களைத் தடைப்படுத்தி வைக்கும் இடமும் மனிதன் வாழக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும். தடைப்படுத்தி வைக்கும் காலத்தைக் குறைத்தல் வேண்டும். தரம் பிரித்து தடைப்படுத்தி வைக்கும் முறையைப் பின்பற்றுதல் வேண்டும். ஒவ்வொரு வகையான குற்றவாளிக்கும் ஒவ்வொரு வகையான சிறைச்சாலைகளை அதிக அளவில் அமைத்தல் வேண்டும்.

தண்டனை அனுபவிக்கும் கைதிகளையும், குற்றம் சாட்டப் பட்டவர்களையும் இணைத்து வைத்தல் கூடாது. அதே போன்று ஆண், பெண், நோயாளி, இளைஞர், ஆகியவர்களின் நிலைமைக்கு ஏற்றவாறு சிறை அமைந்தால் சிறைச்சாலைகளில் ஓர் ஒழுங்கைக் காணலாம். குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காகத் தடைப் படுத்தி வைக்கப்பட்டிருப்பவர்களின் ஆதரவில் இருப்பவர்களுக்கு அரசாங்கம் தக்க உதவிகளை, அந்தக் காலம் முடிவடையும் வரையில் செய்தல்வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவன், விசாரணைக்கு முன்பு இருந்த நிலையையும் தண்டனை வழங்கப்பட்ட பின்புள்ள நிலையையும் ஆராய்ந்து, அவற்றின் வேறுபாட்டை உணர்தல் வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை அளிக்கப்பட்டால் அரசாங்கம், அவர்களுக்குத் தகுந்த ஈட்டுறுதி (indemnity) அளிக்கவேண்டும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பணச் செலவை, குற்றமற்றவன் என்று விடுதலை அளிக்கப்பட்டால், திருப்பி அளிக்கப்படவேண்டும். இம்மாதிரி ஐரோப்பிய நாடுகளில் செயற்பட்டு வருவதாக அறிவிக்கிறார் சதர்லாண்டு. அமெரிக்காவின் சில மாநிலங்களிலும் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப்பட்டால் ஈட்டுறுதி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவிலும் இம்முறையைப் பின்பற்றுவது சாலச் சிறந்ததாகும். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஈட்டுறுதி அளிக்கக் கூடிய சட்டம் இருக்குமேயானால், சட்ட முரணாகக் கைது செய்யப் படுவதும், சட்டமுரணாகத் தடைப்படுத்தி வைத்தலும் அடியோடு நீக்கப்பட்டுவிடும். மேலும் சட்ட முரணான கைது செய்து, தடைப்படுத்தி வைத்தால் சிவில் சட்டப்படி உரிமை வழக்குத் தொடுத்து ஈட்டுறுதியைப் பெறச் சட்டம் உண்டு. ஆனால் அதை அதிகமாகப் பயன்படுத்துவது கிடையாது. மேலும் ஈட்டுறுதி வழங்கப்படுவதனால் தடைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த காலத்தின் பொருள் இழப்பை ஒருவாறு ஈடுகட்ட முடியும். மேலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என்று நீதி

மன்றம் விடுதலை அளிக்கும் போதும் குற்றத்திற்கு ஆதாரம் இல்லை என்று வழக்கைத் தள்ளுபடி செய்து நபர்களை விடுவிக்கும் போதும் ஈட்டுறுதி வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கும் போது அந்த நபர்கள் பெரும் மகிழ்ச்சியை அடைவதுடன் அவர்களுக்குக் கௌரவமாகவும் இருக்கக்கூடும். இதனால் அவர்களின் ஒழுக்கம் மேலும் புனிதமடையும். கைது செய்யப்பட்டதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மகிழ்ச்சியடையும். மனித உரிமையும் பாதுகாக்கப்பட்டதாகக் கருதப்படும். மொத்தத்தில் நாட்டில் இன்பம் நிலவும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

15. குற்ற நீதி மன்றம்

(The Criminal Court)

குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் குற்ற வழக்கு விசாரணையைத் தொடங்கும் வரையில் சிறையில் தடைப் படுத்தி வைத்திருந்து பிறகு குற்ற நீதிமன்றத்தில் விசார ணைக்காக குற்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். குற்ற வாளியின் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றத்திற்கான தண்டனையை வழங்குவது நீதிமன்றம்தான். குற்றத்திற்குரிய தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டும்தான் உண்டு. குற்றத்தின் அளவு, தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. தண்டனைக் கொள்கையை நீதிமன்றம்தான் செயற்படுத்துகிறது. குற்றவாளி தன் குற்றத்தை உணர்வது நீதிபதி தண்டனை வழங்கும்போது தான், அது வரையில் அவனுக்குக் குற்றத்தைப் பற்றிய உணர்வு இல்லாமல் இருந்தாலும், தண்டனை வழங்கியதும் தன்னைப் பற்றியும், தன் இல்லத்தைப் பற்றியும் நினைக்கிறான். அதுவரை யில் நீதிபதி அவனுக்கு விடுதலை அளித்து விடுவார் என்ற எண்ணத்தில் இறுமாந்து இருப்பான். பல கொலைக் குற்றவாளி களை ஆராய்ந்ததில் குற்ற விசாரணையின் போதும் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றார்கள். தூக்குத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை என்று அறிவித்தவுடன் அப்பொழுதுதான் தம் குற்றத்தை எண்ணி மனம் கலங்குகின்றார்கள். ஆகவே நீதியை நிலைநாட்டுவது நீதிமன்றம்தான். குற்றத்தை உணரச் செய்வதும் நீதிமன்றம்தான். ஆனால் அந்த நீதி மன்றம் 'சமன் செய்து சீர் தூக்கும் துலாக்கோல்போல்' நின்று செயற்படவேண்டும். குற்றவாளியைச் சீர்திருத்துவதையோ, மன மாற்றத்தை ஏற்படுத்துவதைப் பற்றியோ, நீதி மன்றம் கவலைப்படுவது இல்லை. குற்றம் சாட்டப்பட்டவன் குற்றவாளிதானா அல்லது நிரபராதியா என்பதைத் தீர்மானிக்கிறது நீதி மன்றம். அத் துடன் நீதி மன்றத்தின் கடமை முடிந்துவிடுகிறது. குற்றவாளி

சிறையில் எப்படிக் கழிக்கின்றான், திருந்திவிட்டானா அல்லது மேலும் கடுமையான குற்றவாளியாக மாறிவிட்டானா என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிவதில்லை. அறிந்து கொள்ளவும் விரும்புவது இல்லை. குற்றவாளி சிறைத் தண்டனை அனுபவிக்கின்றானா அல்லது வெளியில் விடப்பட்டிருக்கின்றானா என்ற விவரமும் நீதிமன்றத்திற்குத் தெரியாது. குற்றத் தீர்ப்பு வழங்கிய பிறகு குற்றவாளி குற்றக் கூண்டைவிட்டு அப்புறப்படுத்தப் பட்டபின்பு நீதிபதிக்கு மேற்கொண்டு ஒன்றும் தெரியாது. இம் மாதிரி செயற்படுவது நேர்மையான செயலாக அறிய முடிய வில்லை. தண்டனை வழங்கிய பிறகு குற்றவாளியின் நடத்தை யைப்பற்றி நீதிபதி நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அவனின் நடத்தை, ஒழுக்கம், போக்கு ஆகியவற்றைக் கொண்டு அதே போன்ற மற்றக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும்போது பெரிதும் பயன்படும். அதாவது தண்டனையைக் கூட்டியோ குறைத்தோ அளிப்பதற்கு அடிப்படையாக அமையலாம். அல்லது உரிய பரிகாரம் தேடுவதற்கும் ஏதுவாக இருக்கும்.

இந்தியாவில் பலவகையான குற்ற நீதிமன்றங்கள் செயற் படுகின்றன.

1. மாவட்ட குற்ற நீதிமன்றம் (Distriet and Sessions Court)

2. முதல் வகுப்பு குற்ற நீதிமன்றம் (Judicial Magistrate of the First Class)

மாவட்டங்களிலும், மாநகர குற்ற நீதிமன்றம், சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் மட்டும் மாநகர குற்ற நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன (Metropolitan Magistrates).

3. இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் (Judicial Magistrate of the Second Class)

4. நிர்வாகக் குற்ற நீதிமன்றம் (Executive Magistrates)

இந்த நான்கு குற்ற நீதிமன்றங்களும் குற்ற விசாரணையைப் பாங்குற நடத்த உரிமை பெற்றுள்ளன. அத்துடன் உயர் நீதி மன்றம் குற்ற மேல் முறையீடு (Criminal Appeal) வழக்குகளை ஆராய்ந்து கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்பை உறுதிப்படுத்தவோ, அல்லது தள்ளுபடி செய்யவோ அல்லது மாற்றத்துடன் உறுதிப் படுத்தவோ அல்லது மீண்டும் விசாரணையைத் தொடங்கும்படி ஆணையிடவோ உரிமை வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்

தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) மேல் முறையீடு செய்யவும் குற்றவாளிக்கு உரிமை வழங்கப் பட்டு உள்ளது.

பிணையத்தில் விடாக் குற்றங்கள் (Non-bailable Offences) பிடியாணை வேண்டாக் குற்றங்கள் (Cognizable Offences) ஆகிய குற்றங்களை மாவட்ட குற்ற நீதிமன்றங்களிலும், முதல் வகுப்புக் குற்ற நீதிமன்றங்களிலும் விசாரணை நடத்த உரிமை வழங்கப் பட்டுள்ளது. சாதாரண குற்றங்களை இரண்டாம் வகுப்புக் குற்ற நீதிமன்றத்திலும் உடனடியாக விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கும் தன்மையுள்ள வழக்குகளை நிர்வாகக் குற்ற நீதிமன்றத் திலும் நடத்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதி மன்றமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாவட்ட குற்ற நீதிமன்றமும், முதல் வகுப்பு குற்ற நீதிமன்றமும், வட்டந்தோறும் இரண்டாம் வகுப்பு குற்ற நீதிமன்றம், நிர்வாக குற்ற நீதிமன்றம் ஆகியவை இயங்கி வருகின்றன. இந்தியா முழுமைக்கும் ஒரே ஒரு உச்ச நீதிமன்றம் தான் செயற்படுகின்றது. மாவட்ட குற்ற நீதி மன்றங்கள், உயர் நீதி மன்றங்கள், உச்ச நீதிமன்றம் ஆகியவை குற்ற வழக்குகளுடன் உரிமை வழக்குகளையும் (Civil Cases) விசாரணை நடத்த உரிமை வழங்கப் பட்டுள்ளது. இந்தியா சுதந் திரம் அடைவதற்கு முன்பு, இங்கிலாந்தில் உள்ள பிரிவுக் கவன்சிலின் (Privy Council) தீர்ப்பே முடிவானதாகும். ஆனால் இன்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்ற நீதிமன்றங்களைக் கட்டுப் படுத்தும், அதே தீர்ப்பைத்தான் பின்பற்ற வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மாவட்ட குற்ற நீதிமன்றங் களுக்கு நீதிபதிகளை மாநில அரசும், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றிற்கு மைய அரசும் நியமித்து வருகின்றன. எல்லா நீதிபதிகளுக்கும் விருப்புரிமை (Discretionary Power) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்பு நீதிபதியுடன் அமர்ந்து தீர்ப்பு வழங்க சான்றுயர்கள் (Jurors) நியமிக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் அந்த முறை இப்பொழுது அடியோடு நீக்கப்பட்டு விட்டது. அமெரிக்கா போன்ற நாடுகளில் இம்முறை இன்றும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசாங்கக் குற்ற வழக்கறிஞர் (Public Prosecutor)

குற்ற நடைமுறையில், குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்க அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்களுக்கு அரசாங்கக் குற்ற வழக்கறிஞர் என்று பெயர். இவர்கள் பல பிரிவுகளாக நியமிக்கப்படுகின்றார்கள். வட்ட, மாவட்ட, மாநில குற்ற வழக்கறிஞர்கள் எனப் பெயர். வட்ட அரசாங்கக் குற்ற வழக்கறிஞர், வட்டக் குற்ற நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றவாளிகளை விசாரணை செய்து குற்றத்தை நிரூபிக்கின்றார் மாவட்ட அரசாங்கக் குற்ற வழக்கறிஞர், மாவட்ட நீதிமன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணை நடத்திக் குற்றத்தை நிரூபிக்க வேண்டியது இவரது கடமையாகும். மாநில அரசாங்கக் குற்ற வழக்கறிஞர் குற்ற விசாரணை நடத்துவதில்லை. வட்ட, மாவட்ட; நீதிமன்றங்களிலிருந்து மேல் முறையீடு (Appeal) செய்யும் வழக்குகளை ஆராய்ந்து அறிந்து குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்கின்றார். பொதுவாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை நிரூபிக்கப்பட வேண்டியது இவர்களது கடமையாக இருந்தாலும், குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்க போதிய சாட்சிகளோ சான்றுகளோ இல்லையெனின் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்கும்படி நீதிபதிக்கு ஆலோசனை கூறவும் உரிமை உண்டு. அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இந்த வழக்கறிஞர்கள்தாம், இவர்களின் சொல், செயல் ஆகியவை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும்; அல்லது இவர்களின் சொல், செயல்களுக்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கும். மத்திய அரசாங்கச் சார்பில் அரசாங்க வழக்கறிஞர் நியமிக்கப்படுகின்றார்கள். இவர் குற்ற வழக்கு. உரிமை வழக்கு இரண்டையும் நடத்தி வருகின்றார். சுருங்கச் சொன்னால் குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்படுவதற்கும் குற்றத்திற்குரிய தண்டனை வழங்குவதற்கும் அரசாங்கம் தன் பிரதிநிதியாக மேற் கூறப்பட்ட பல்வேறு வகையான வழக்கறிஞர்களை நியமித்து வருகிறது. அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, குற்றவாளிக்குத் தண்டனை வழங்கி வருகின்றார் நீதிபதி. சில வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கப்படுகின்றது. சில வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கும்படி நீதிபதிக்கு ஆலோசனை கூறுவார், அரசாங்கக் குற்ற வழக்கறிஞர் சில வேளைகளில் சில வழக்குகளில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிக்கும்படி பரிந்துரைப்பார். குற்றவாளிக்குச் சிறைத் தண்டனை மட்டுமா? அல்லது அபராதமும் இணைந்து தண்டனை விதிப்பதைப்பற்றியும் நீதிபதிக்குத் தன் கருத்தை அறிவிப்பார். வழக்கைத் தள்ளி விடவும் பரிந்து

ரைப்பர். அல்லது குற்றவாளிக்கு விடுதலை அளிக்கும்படியும் நீதிபதிக்குத் தன் கருத்தை அறிவிப்பார்.

அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்கள் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கித்தர வேண்டும் என்பதுடன் நீதி நேர்மையோடு செயற்படவேண்டும் என்ற நோக்கமும் உள்ளவர்கள். குற்றவாளி குற்றத்தை ஏற்றுக்கொண்டாலும் அவன் தற்காப்பிற்காகக் குற்றத்தைப் புரிந்திருந்தால் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப் படவேண்டும் என்பது சட்டமாகும்.

வட்ட, மாவட்ட, நீதிபதிகள் சில வேளைகளில், சிலர் அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்களின் கருத்துப்படி செயற்படுவார்கள். உயர்நீதிமன்றத்திலும் அவரது கருத்துக்கு செவி சாய்க்கப்படுகின்றது. குற்ற விசாரணை நடத்தும் நீதிபதி குற்றவாளியின் வாக்குமூலம், சாட்சியாளர்களின் தரம், அவர்கள் அளித்த சான்றுகளின் மதிப்பு, சட்டம், அரசாங்கக் குற்ற வழக்கறிஞரின் வாதம், எதிர் வழக்கறிஞரின் வாதம் ஆகியவற்றை ஆராய்ந்து உணர்ந்த பின்புதான் நீதபதி தன் தீர்ப்பை வழங்குவார். ஆனால் சில வட்ட, மாவட்ட நீதிபதிகள் அரசாங்க வழக்கறிஞர்கள் என்ன கூறுகின்றார்களோ அதையே தீர்ப்பாக அளித்துவிடுகின்றார்கள். இந்த மாதரி செயற்படும் நீதிபதிகள் உள்ள நீதிமன்றங்களில்தான் குற்றத்தைச் சரிகட்டுதல் (Fixing the Case) சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வருகின்றது. அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்களுடன் கள்ளக் கூட்டுக் கொண்டு பிணையத்தில் விடுதலை அடைவதையும் வழக்கைத் தள்ளுபடி செய்வதையும், குற்றவாளிகளுக்கு விடுதலை பெறுவதையும் அரசியல் வாதிகள், தலைவர்கள், மகளிர் கூட்டத்தினர்கள் ஆகியோர்கள் சர்வ சாதாரணமாகச் செய்து வருகின்றார்கள்.

அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. காவல் துறை அதிகாரிகள் குற்றத்தை நிருபிப்பதற்குவேண்டிய சான்றாளர்களையும் (Witness) சான்றுகள் தாங்கிய பொருள்களையும், அரசாங்கக் குற்றவழக்கறிஞர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். பொதுவாக நீதிமன்றத்தில ஒப்படைக்கப்பட்டாலும் சான்றாளர்கள் அல்லது சாட்சிகள் எப்படி நீதிமன்றத்தில் சான்று கூறுதல் வேண்டும் என்பதைப்பற்றி முன்கூட்டியே அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லித் தரப்படும். ஏற்கெனவே காவல் துறை அதிகாரிகள், சான்றாளர்கள் எப்படிச் சான்று கூறவேண்டும் என்று பயிற்சி அளித்து இருப்பார்கள். ஆகவே குற்றத்தற்குரிய தீர்ப்பை

வேண்டிய மாதிரி மாற்றிக் கொள்ள இவர்களுக்குச் சாதமாக உள்ளது.

மேலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசாங்கக் குற்றம் சாட்டும் வழக்கறிஞர்கள் (Public Prosecutor) தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இதனால் அவருக்கு வாக்களித்தவர்களுக்குச் சாதகமாகச் செயற்படவேண்டிய கட்டாயம் இவர்களுக்கு உண்டு. அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக வாக்காளர்களின் விருப்பப்படி செயற்படுகின்றார்கள். மேலும் இவர்கள் அடுத்த தேர்தலில் வெற்றிபெறக் கருதி தம் பதவிக் காலத்தில் அதிகமான குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தர பாடுபடுகின்றார்கள். அதிகமான குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தந்தால் அது அவரின் திறமை, அல்லது சிறப்பை வெளிப்படுத்தும். இதனால் வாக்காளர்கள் மேலும் தொடர்ந்து அவருக்கு ஆதரவளிக்க ஏதுவாக இருக்கும் அல்லவா? இதற்கு எடுத்துக்காட்டாக கன்சாஸ் நகரத்தில் (Kansas City) 'யார் எவர்' என்ற (Who is Who) குறிப்புப் புத்தகத்தில், ஒரு வழக்கறிஞர் 287 வழக்குகளில் 285 வழக்குகளுக்குத் தண்டனை வழங்கப் பாடுபட்டுள்ளார் என்ற உண்மையை ரீடு என்பவர் (Reed) அறிவிக்கின்றார். மேலும் பதவி உயர்வு எதிர்பார்த்து அரசியல் தலைவர்களின் செல்வாக்கைப் பெறவும் அதிகமான வழக்குகளுக்கு மிகவும் கடுமையான தண்டனைகள் வாங்கித்தரத் துடிப்பார்கள். இதனால் பல குற்றவாளிகளைக் கடுந்தண்டனைக்குள்ளாகின்றார்கள்.

தமிழ்நாட்டில் ஒரு மாவட்ட குற்ற நீதி மன்றத்தில் ஒரு கொலை வழக்கு நடந்ததில் அதை நடத்திய அரசாங்கக் குற்றஞ்சாட்டும் வழக்கறிஞர் குற்றவாளி கடுமையான குற்றத்தைப் புரிந்துள்ளான்; ஈவு இரக்கமின்றி அவனுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்படவேண்டும் என்று உணர்ச்சி பொங்க நீதிபதிக்குத் தன் கருத்தை அறிவித்தார். அந்த மாவட்ட குற்ற நீதிபதியும் அவரின் கருத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு அளித்தார். ஆனால் அதே வழக்கு உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டதில் உயர்நீதி மன்ற நீதிபதிகள், வழக்கையும் அதைச் சார்ந்த சான்றுரைகளையும் ஆராய்ந்து குற்றவாளிக்கு 7 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்கள். அதே போன்று மற்றொரு வழக்கில் ஒரு கொலைக் குற்றத்திற்கு நால்வர் குற்றம் சாட்டப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு நால்வருக்கும் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிக்கப்

பட்டது. அதே வழக்கு உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு குற்றத்தை மறு பரிசீலனை செய்து நால்வருக்கும் விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்படி எத்தனையோ வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப் பட்டு விடுகின்றன. இதனால் பல உண்மைகள் வெளிப்படு கின்றன. மாவட்ட அரசாங்கக் குற்றஞ்சாட்டும் வழக்கறிஞர்கள், அரசியல் தலைவர்களின் விருப்பு. வெறுப்புக்கிணங்கச் செயற் பட்டு வருகின்றார்கள். அவர்கள் குற்றச் சட்டத்தைப்பற்றியோ அல்லது நீதியை நிலைநாட்டுவதைப் பற்றியோ கவலைப்படுவ தாகத் தெரியவில்லை. அரசாங்கக் குற்ற வழக்கறிஞர்கள் தகுதி, அனுபவம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நியமிக்கப் படுதல் வேண்டும். அவ்வாறின்றிக் கட்சி, சாதி, அரசியல் செல் வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் நியமிக்கப்படும்போது வழக்கையும் விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறு நடத்துகின்றார்கள். திறமையின்மையினால்தான் அரசியல்வாதிகளின் சொற்படி நடக்க ஏதுவாகின்றது. திறமையுள்ளவன் எந்த ஆசை வார்த் தைக்கும், பதவிக்கும், பணத்திற்கும் மயங்கிவிட மாட்டான். அரசியல் அடிப்படையில் வழக்கறிஞர்களை நியமிக்கும்போது அரசியல்வாதிகள் குற்றம் புரிந்தாலோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் குற்றம் புரிந்தாலோ வழக்கைத் தெளிவாக நடத் தாமல் குற்றவாளிகளுக்கு விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்க ஏதுவாகின்றது.

திறமையற்றவர்கள் அரசாங்கக் குற்றஞ் சாட்டும் வழக் கறிஞர்களாக நியமிக்கப்படுவதனால் பல குற்றவாளிகள் தண்டனை பெறாமல் தப்பிவிடவும் ஏதுவாகிறது. குற்றவாளிகள் திறமையும் அனுபவமும் வாய்ந்த வழக்கறிஞர்களைத் தங்களுக்காக அமர்த்திக் கொள்ளும்போது எதிரி வழக்கறிஞர் (Defence Council) தன் திறமையினாலும் அனுபவத்தினாலும் நீதிபதியைக் குழப்பத்திற்கு உள்ளாக்கிக் குற்றவாளிக்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கும்படியும் செய்துவிடுகின்றார்கள். ஏதாவது ஒரு ஐயத்தைக் கிளப்பிவிட்டு அதையே பிடித்துக் கொண்டு வாதாடிக் குற்றவாளிக்கு விடுதலை அளித்துத் தீர்ப்பு வழங்கும்படி வற்புறுத்தி, வெற்றியும் அடை கின்றார்கள்.

அரசு உதவிக் குற்றஞ் சாட்டும் வழக்கறிஞர்களையும் (Assistant Public Prosecutor) அரசு நியமிக்கின்றது. அவர்களின் சொல், செயல், தகுதி, திறமை, மற்ற நடத்தை, போக்கு எல்லாம் அரசாங்கக் குற்றஞ் சாட்டும் வழக்கறிஞர்கள் போன்றுதான் காணப்படுகின்றன.

ஆகவே அரசு குற்றஞ் சாட்டும் வழக்கறிஞர்கள், உதவிக் குற்றஞ் சாட்டும் வழக்கறிஞர்கள் ஆகியோர்கள் நியமிக்கப்படும் போது அரசியல் கண்ணோட்டத்தை மறந்து நியமித்தல் வேண்டும். அப்பொழுதுதான் நீதி தலைழக்கவும், மக்கள் சட்டத்தின் பலனை அனுபவிக்கவும் முடியும். ஒரு நாட்டின் ஒளி விளக்கே நீதிதான். நீதி தழைக்கவில்லையென்றால் அந்த நாடு இருளில்தான் வாழ்கிறது என்று பொருள்படுகின்றது.

எதிரி வழக்கறிஞர் அல்லது குற்றவாளிக்கு ஆதரவாக வழக்காடும் வழக்கறிஞர் (Defence Counsel)

இன்றைய நிலையைப்போல் ஆதி காலத்தில் குற்றஞ் சாட்டும் வழக்கறிஞர்களோ (Prosecutor) குற்றத்தை எதிர்த்து வழக்காடும் வழக்கறிஞரோ இல்லை (Defence counsel). குற்றத்தை சமூகத் தலைவனோ அல்லது அரசனோ அல்லது சமயத் தலைவனோ விசாரணை நடத்தக் குற்றத்திற்குரிய தண்டனை அளித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டு வந்தது. அன்று குற்றவாளிக்காகப் பரிந்து பேச யாரும் முன்வருவது கிடையாது. அப்படிப் பேசுவது இழிவாகவும் கருதப்பட்டது. அரச குடும்பத்தில் யாராவது குற்றம் புரிந்துவிட்டால் அரசன் அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கும் போது உடன் இருக்கும் அமைச்சர்கள் குற்றவாளியை மன்னித்து விடும்படியோ அல்லது எளிமையான தண்டனை வழங்கும் படியோ பரிந்துரைப்பார்கள். மற்றப்படி குடிமக்கள் குற்றவாளியாக இருந்தால், அவனுக்காகப் பரிந்துரை பகர யாரும் முன்வர மாட்டார்கள். இங்கிலாந்திலும் ஆதியில் குற்றவாளி தனக்காக வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. பிறகு காலத்தின் மாற்றத்தால், குற்றவாளி தனக்காக வழக்கறிஞரை நியமித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் நாட்டுத் துரோகக் குற்றம் அல்லது அரசுக்கு எதிரான குற்றம் (Treason) புரிந்த குற்றவாளிகள் தங்களுக்காக வழக்கறிஞரை அமர்த்திக்கொண்டு வழக்கை நடத்த அனுமதிக்கப்படவில்லை. நாட்டுக்கு எதிரான குற்றத்தைக் கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு வந்ததுடன் அதற்குத் தண்டனையாக மரண தண்டனை வழங்கப்பட்டு வந்தது. பல ஆண்டுகள் கடந்த பிறகு நாட்டுத் துரோகக் குற்றத்திற்கும் குற்றவாளி வழக்கறிஞரை நியமித்துக்கொள்ள உரிமை வழங்கப்பட்டது. ஆதியில் நாட்டுத் துரோகக் குற்றம் புரிந்தவர்களை யார் எங்கே கண்டாலும் அவர்களை வெட்டிவிடவும், கொன்று விடவும் மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்டு இருந்தது என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

குற்றவாளிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, தண்டனையிலிருந்து விடுவித்துக்கொள்ள, வழக்கறிஞர்களை அமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டதும் அந்த உரிமையைப் பயன் படுத்திக்கொள்ள ஏழைகளால் இயலவில்லை. அந்தக் குறைபாட்டைப் போக்கத்தான் அரசாங்கம் தன் செலவில் வழக்கறிஞரை நியமித்துக் குற்றவாளிக்காக வழக்கு நடத்த வழி வகுக்கப்பட்டது. இவர்களுக்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட எதிரி வழக்கறிஞர் என்று பெயர் (State Brief). இம்முறை பொதுவாகப் பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் கடுங் குற்றங்கள் புரிந்த (Feloneous) குற்றவாளிகளுக்கு மட்டுந்தான் இந்தச் சலுகை அளிக்கப்பட்டு வருகின்றது. சாதாரண குற்றங்கள் புரிந்தவர்களுக்கு இச்சலுகை கிடையாது. ஆனால் புதிய குற்ற நடைமுறைச் சட்டத்தின்படி மேலும் பல குற்றங்களும் இந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றன. இதனால் மேலும் பல குற்றவாளிகள் பயன் அடைவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நாட்டில் உள்ள சாதாரண குற்றம் புரியும் ஏழைகளும் சட்டத்தின் பலனை அடையவேண்டும் என்ற கருத்துக் குற்ற இயல் வல்லுநர்களிடையே பரவிவருகிறது. அதன் காரணமாக சட்ட உதவி (Legal aid) அளிக்க தனிப்பட்ட வழக்கறிஞர்கள் முன் வரவேண்டும் என்ற முழக்கம் பெருகி வருகின்றது. ஏழைக் குடும்பத் தலைவி, தன் கணவனால் கைவிடப்பட்டவள், வாழ்க்கைப்படி அல்லது வாழ்க்கைச் செலவுத் தொகையைப்பெற நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்துத் தன் கணவனிடம் பெற முடியாதவர்களுக்கும் இன்னும் ஏழை எளியவர்களுக்கும் உதவும் வகையில் சட்ட உதவிக் கழகம் (Legal clinic or Legal aid) பெரிய பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டுவருகின்றன. இம்முறை வளர்ச்சியடைந்தால் ஏழையின் துயர் சிறிது நீங்கும் என நம்ப இடமுண்டு. ஏழைக் குற்றவாளிக்காக அரசாங்கம் நியமிக்கும் வழக்கறிஞர்கள் திறமையின் அடிப்படையில், அனுபவத்தின் அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. அங்கேயும் அரசியல், இனம், உறவு, மற்றச் செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில்தான் செயற்படுத்தப்படுகின்றன. முடிவாகக் கொள்கை அளவில் சிறந்து விளங்கினாலும் செயல்முறையில் சிறந்து விளங்கவில்லை என்பதை உணர்தல்வேண்டும்.

குற்ற வழக்கறிஞர்கள் (Criminal Advocates) அதாவது குற்ற வழக்குகளையே நடத்திப் பெரும் புகழ் அடைந்தவர்கள் பெரும்பாலும் சமுதாயத்தால் வெறுக்கப்படுகின்றார்கள். பொதுவாக

சமுதாயத்தில் அவர்களுக்கு நல்ல பெயர் கிடையாது. குற்றவாளி களிடமிருந்து அதிகமான பணத்தைப் பிடுங்கிவிடுகின்றார்கள் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இந்தக் கூற்றில் சிறிது உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் வழக்கறிஞர்கள் நாட்டில் இல்லை என்றால் அரசாங்கத்தையோ, காவல்துறை அதிகாரிகளையோ இன்னும் தொழிலாளிகள், முதலாளிகளை எதிர்த்தோ, ஏழை பணக்காரனை எதிர்த்துப் பேசவோ செயற் படவோ முடியாமல் போய்விடும் குற்ற வழக்கறிஞர்கள் நாட்டில் நடமாடுவதனால்தான் ஏழைகள் பணக்காரனை எதிர்த்துப் பேசவும், மானத்தோடு, மகிழ்ச்சியோடு வாழவும் முடிகிறது. அரசியல் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், தொண்டர்கள், ஊழியர்கள். சத்தம்போட்டுப் பேசமுடிவதுடன் ஆளும் கட்சியை வசைமாரி பொழியவும் முடிகிறது. வல்லவன் எளியவனை அடித்து விட்டாலும் அவனால் திருப்பி அடிக்கமுடியவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வல்லவனுக்குத் தகுந்த தண்டனையை வாங்கிக் கொடுத்துவிடமுடிகிறது குற்றச் சட்டம், குற்ற நீதிமன்றம், குற்ற வழக்கறிஞர்கள் நாட்டில் இல்லையென்றால், நாடு கடும் புலி வாழும் காடாக மாறிவிடும். அஞ்சி அஞ்சி வாழ வேண்டியிருக்கும். அக்கம் பக்கம் பார்த்துப் பேசவேண்டிவரும். ஏன், அடிமை வாழ்க்கைதான் வாழவேண்டிவரும். வாய் இருந்தும் ஊமையாய், கண் இருந்தும் குருடாய், காது இருந்தும் செவிடாய், காலிருந்தும் முடமாய், அறிவிருந்தும் அடிமையாய் வாழவேண்டிய ஒரு நிலை உருவாகிவிடும். ஆகவே குற்ற வழக்கறிஞர்களின் பணி மகத்தானது. அதை உணர்ந்து அவர்கள் நேர்மையுடனும் ஒழுக் கத்துடனும், கடமையுடனும், செயற்படுவதுடன் சமுதாயத்தின் நலனையும் கருதிச் செயற்படவேண்டும்.

குற்ற வழக்கறிஞர்கள் சட்டத்தின் துணைகொண்டு தம் திறமையினால் குற்றவாளிக்கு விடுதலை கிடைக்க முயற்சி மேற் கொள்ளவேண்டும். தவிர, அரசாங்க வழக்கறிஞர்களுக்கு கையூட்டுக் கொடுப்பதன் மூலமாகவோ அல்லது நீதிபதிக்கு கையூட்டுக் கொடுப்பதன் மூலமாகவோ அல்லது தம் செல்வாக் கினால் நீதிபதியை இணங்க வைப்பதனாலோ மது, மாது வழங்கி நீதிபதியை மயக்குவதனாலோ, சாட்சியாளர்களை அச்சுறுத்தி உண்மைக்குப் புறம்பாகக் கூறும்படி செய்வதனாலோ, குற்ற வாளிக்கு விடுதலை வாங்கித்தரவோ, அல்லது குறைந்த தண்டனை கிடைக்கும்படி செய்வதோ அல்லது அபராதம் மட்டும் விதிக்கும் படி ஏற்பாடு செய்வதோ அல்லது நன்னடத்தை உறுதி மொழியில் விடுவிக்கவோ (Probation) அல்லது எச்சரித்து விடுதலை அளிக்க ஏற்பாடு செய்வதாலோ (Admonition), அல்லது பலியாளியை,

தாக்கப்பட்டவர்களை மிரட்டி, அச்சுறுத்திக் குற்றவாளியுடன் சமாதானத்திற்கு வரும்படி (Compromise) செய்தலோ கூடவே கூடாது.

குற்ற வழக்கறிஞர்கள் நெறி கெட்டவர்களாக இருந்தால் நாடு கெடடுப் போகும். நாட்டில் கலகம், குழப்பம், புரட்சி, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, தீவைத்தல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் ஆகியவை சமுதாயத்தில் பெருகிவிடும். குற்ற வழக்கறிஞர்கள் கூட்டுக் கொள்ளையினர்களுடனும் (Dacoits) கொள்ளைக் கூட்டத்தினர்களுடனும் (Robbers) கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு நாட்டைச் சூறையாடும்படி தூண்டிவிட்டு அதில் வரும் இலாபத்தில் ஒரு பங்கைப் பெற்றுக் கொள்வார்கள். அந்த நேரத்தில் சட்டத்தின் பிடியிலிருந்து, தண்டனையிலிருந்து விடுவித்து விட எல்லாத் தில்லுமுல்லுகளையும் மேற்கொள்ளுவார்கள். நாட்டில் புகழ்பெற்ற சில குற்ற வழக்கறிஞர்களிடம்தான் சில கொள்ளைக் கூட்டம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. தன்னைக் காப்பாற்றக் குறிப்பிட்ட குற்ற வழக்கறிஞர் இருக்கின்றார் என்ற தைரியத்தில்தான் கொள்ளை, கொலை எளிமையாகச் செய்து விடுகின்றான். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குற்ற வழக்கறிஞர்களிடம் தொடர்பு கொண்டு பல கொள்ளைக் கூட்டம் செயற்பட்டு வருவதாகவும், இதனால் அமெரிக்காவின் நீதியே தோல்வி அடைந்துவிட்டதாகவும் ஓர் அறிக்கை கூறுகின்றது. 'நீ கொலை செய்து விட்டு வந்துவிடு, நான் பார்த்துக் கொள்கின்றேன்' என்று சில குற்ற வழக்கறிஞர்கள் சர்வசாதாரணமாகக் கூறுகின்றார்கள். சாதாரணமாக ஒரு கட்சிக்காரன் தன்னைப் பற்றி இழிவாகப் பேசினான்; அல்லது அடிக்க வருகின்றான்; அதற்கு என்ன செய்யவேண்டும் என்று குற்ற வழக்கறிஞரிடம் வினவினால் அதற்கு 'சும்மா ஏன் அப்பா வந்தே? திருப்பி அடித்துவிட்டு வா, அல்லது கொலைகூடச் செய்து விட்டுவா. நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று கூறுவதற்குக் கூட சில வழக்கறிஞர்கள் தயங்குவதில்லை. அதேபோன்று கடன் கொடுத்தவன் வழக்குத் தொடுத்தால் கடன் வாங்கியவன் 'வட்டி அதிகமாக இருக்கு. கொஞ்சம் குறைக்கச் செய்தால் பூராவும் கட்டிவிடுவேன்' என்று வழக்கறிஞரை நாடினால், உடனே அதற்கு வழக்கறிஞர் 'நீ ஏன் பணத்தைக் கட்ட வேண்டும்? பணமே வாங்கவில்லை என்று கூறினால் போயிற்று, பிறகு பார்த்துக் கொள்ளலாம்!' என்று கூறி வழக்கைத் தொடர்ந்து நடத்த முயலுவார். கடன் வாங்கியவன் மொத்த தொகையையும் ஒரே நேரத்தில் கட்டி விடுகின்றேன் என்று கூறினால் உடனே 'ஏன் உன்னிடத்தில் அதிகப் பணம் இருக்

கிறதா? முழுத்தொகையையும் கட்டாதே. கொஞ்சம் கொஞ்சமாகத் தவணை முறையில் கட்டி வா அதுவும் முடியவில்லையென்றால் கட்டாமல் இருந்துவிடு. தீர்ப்பாணையைச் செயற்படுத்த (Decree) நிறைவேற்றல் மனு (Execution Petition) போட்டாலும் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; அல்லது கைது செய்தாலும் உடனே பிணையத்தில் (Bail) உன்னை வெளியே விடுவித்து விடுகின்றேன்' என்று கூறும் வழக்கறிஞர்கள் உள்ளனர். நல்லொழுக்கம் உள்ளவனையும் குற்றவொழுக்கம் உள்ளவனாக மாற்றிவிடும் தன்மையை, திறமையை வழக்கறிஞர்கள் பெற்றுள்ளனர். வழக்கறிஞரே நமக்குச் சாதகமாக இருக்கின்றார், ஏன் பயப்படவேண்டும்? என்ற எண்ணம் பொதுமக்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. பிறகு அவர்களிடத்தில் குற்றவொழுக்கம் பரவிவிடுகின்றது. வழக்காடுதல் கௌரவமான தொழில். ஆனால் சில வழக்கறிஞர்களின் செய்கையால் வழக்காடுதல் தொழிலுக்கே இழுக்கைக் கொண்டு வந்து விடுகின்றனர். 'வழக்கறிஞர் கூறும் ஒவ்வொரு கருத்தும், நட்டத்திற்கும் இழிவிற்கும் துணை போகின்றது. வழக்கறிஞர் ஒரு திட்டத்தைச் சீர்திருத்தவும் முடியாது. மற்றவர்களைச் சீர்திருத்தவும் விடமாட்டார்கள். அதை உருப்படியாகவே விடமாட்டார்கள்' என்று காலீஸன் (Gallison) என்பவர் கூறுகின்றார்.

சில வழக்கறிஞர்கள் தங்களிடம் திறமை இல்லையென்றாலும் மற்றச் செல்வாக்கைப் பயன்படுத்த, தம்மிடம் அதிகமான வழக்குகள் வருவதற்கு ஏற்பாடு செய்துகொள்கின்றார்கள். நீதிபதியுடன் தவறான சாக்கு, திருக்கு முறுக்கு வாதம் (Subterfuge) செய்து குற்றவாளிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

சில வழக்கறிஞர்களிடம் பரத்தையர்கள், சூதாட்டக்காரர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் ஆகியவர்களுக்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. வழக்கு நடத்தப் பணம் வாங்காமல் அவர்கள் புரியும் குற்றத்திலிருந்து வரும் இலாபத்தில் ஒரு பங்கை பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் அந்தக் குற்றவாளிகள் பிடிபட்டவுடனே அவர்களை விடுவிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். இதற்காக அரசாங்க வழக்கறிஞர், காவல்துறை அதிகாரி, நீதிபதி, அரசியல் தலைவர்கள் ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து வழக்கைச் சரிகட்டி மறைத்து விடுகின்றார்கள். அமெரிக்காவில், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காகப் புதிய குற்றச் சட்டங்களை நிறைவேற்ற முற்படுவதை, நிறைவேற்றாமல் தடுக்கக் கூடியவர்கள் அங்குள்ள வழக்கறிஞர்கள்தான் என்று சதர்லாண்டு (Southerland) தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இந்த இழிவான நிலை உருவாகவில்லை. ஆனால் அரசுக்குக் கருத்துரை வழங்க நியமிக்கப்பட்டிருக்கின்றவர்கள் நேர்மையான, பொதுவான. வலுவான கருத்துரைகளை வழங்குவதில்லை. அரசாங்கத்திற்குத் தவறான கருத்துரைகளை வழங்கி விடுகின்றார்கள். இது அவர்களின் கொள்கையையும் வெளிப்படுத்தலாம் அல்லது அவர்களின் அறியாமையையும் வெளிப்படுத்தக் கூடும். அரசாங்கத்திற்குக் கருத்துரை (Opinion) அளிக்க நியமிக்கப்படுபவர்கள் மிகவும் திறமையுள்ளவர்களாகவும் அனுபவமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். தவறான சட்டங்கள் இயற்றப்படுவதால் பல சிக்கல்கள் தோன்றுவதற்கு ஏதுவாகின்றன. ஆகவே அரசாங்கமும் திறமையான வழக்கறிஞர்களை அணுகி கருத்துரை ஏற்றுச் செயற்படவேண்டும். பொதுவாக வழக்கறிஞர்கள் தங்கள் கடமையை உணர்ந்து செயற்படவேண்டும். திறமைக்கு மீறிய வழக்குகளை நடத்த ஏற்றுக் கொள்ளக் கூடாது. நன்மை செய்யமுடியாவிட்டாலும் தீமை செய்யக் கூடாது என்ற கொள்கையைச் செயற்படுத்தவேண்டும்.

நீதிபதி (Judge)

நீதிபதிகளை எந்தெந்த நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்களோ அந்தந்த நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கும் உரிமையளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உச்ச நீதிமன்றம் (Supreme Court) உயர்நீதி மன்றம் (High Court) ஆகிய இரு மன்றங்களின் நீதிபதிகளை மைய அரசு நியமிக்கிறது. மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாநில அரசு நீதிபதிகளை நியமிக்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ருஷியா போன்ற நாடுகளிலும் மாவட்ட நீதிபதிகள் (County Judges) தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். சான்றாயர்கள் (Jurors) செயற்படும் நாடுகளில், அவர்கள் நீதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள். இம்முறை இந்தியாவில் நீக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்த முறை மேலை நாடுகளில் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

நீதிபதிக்குக் குற்ற நீதிமன்றத்தைக் கண்காணிக்கவும் மற்ற அலுவலர்களை நியமிக்கவும் உரிமை உண்டு. அவர்முன் தொடரப்பட்டுள்ள வழக்குகளையும் அதன் தொடர்பாகச் சான்றாளர்களையும் (Witnesses) மற்றச் சான்றுகள் தாங்கிய பொருள்களையும் விசாரணை நடத்தவும், ஏற்றுக்கொள்ளவும், மறுக்கவும் நீதிபதிக்கு முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக நீதிபதிகள், ஆழ்ந்த

அறிவு, நீண்டகால அனுபவம், உரிய வயது, நல்லொழுக்கம், திறமை, பொறுமை, அன்பு ஆகியவற்றைப் பெற்றவர்களாகப் பார்த்து நியமித்தல் வேண்டும். ஆனால் இன்று நிலைமாறி விட்டிருக்கின்றது. மேலே கூறப்பட்ட பண்புக் கூறுகளை ஆராய்ந்து பார்க்காமல்தான் நீதிபதிகள் நியமிக்கப்பட்டு வருகின்றார்கள்.

நீதிபதி குற்றவாளியின் குற்றத்தையும் கொடுக்கப்பட்டுள்ள சான்றுகளையும் ஆராய்ந்து தீர்ப்பு வழங்குதல் வேண்டும். ஆனால் இன்று, குற்றவாளி என்ன சாதி? எந்தக் கட்சி? அவனுக்கு வாதாடும் வழக்கறிஞர் யார்? சமுதாயத்தில் அவனது செல்வாக்கு ஆகியவற்றை மனத்தில் கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. குற்றவாளி அழகான பெண்ணாக இருந்தால் அவளுக்கு விடுதலை அளித்து விடுகின்ற நிலைமையும் இந்தியாவில் உள்ளது. பிணையத்தில் விடுவிப்பதைப்பற்றி முன்பே கூறப்பட்டு விட்டது.

சில நீதிபதிகள் தம்முன் வரும் எல்லாக் குற்றவாளிக்கும் அதிகமான தண்டனை வழங்கி வரும் கொள்கை உடையவர்களாக விளங்குகின்றார்கள். இப்படிச் செயல்பட்டு வருவதனால் இவர் கடுமையான நீதிபதி (Severity) என்று அழைக்கப்படுகின்றார். சில நீதிபதிகள் தம்முன் வரும் எல்லாக் குற்றவாளிகளுக்கும் முடிந்த வரையில் விடுதலை அளித்தல், அல்லது குறைந்த காலத் தண்டனை வழங்கல், அல்லது அபராதம் மட்டும் அளித்தல் அல்லது எச்சரித்து விட்டுவிடுதல் போன்ற இரக்கமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் சமுதாயத்தில் நல்ல நீதிபதி அல்லது இணக்கமான நீதிபதி என்று போற்றப்படுகின்றார்கள். வழக்கறிஞர்களும் அவர்களைப் புகழ்கின்றார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் இருவகையான நீதிபதிகளும் நீதியைப் பின்பற்றவில்லை. தங்களின் கொள்கையைத்தான் பின்பற்றுகிறார்கள் என்று பொருள். குற்றத்திற்குத் தகுந்த தண்டனை வழங்குவதுதான் நீதியாகும். கூட்டியோ குறைத்தோ வழங்குவது அநீதியாகும். ஆகவே நீதிபதிகள் சட்டத்தைத்தான் தம் தீர்ப்புக்குத் துணையாகக் கொள்ளவேண்டுமே தவிர, தம் கொள்கையையல்ல என்பதை உணரவேண்டும்.

இப்படி இருவகையான பெயர்களை வழக்கறிஞர்களிடையே பெற்றுவிடுவதனால் கடுமையான கொள்கையைப் பின்பற்றும் இயல்புடைய நீதிபதி விடுமுறையில் செல்லும் நாளை எதிர்நோக்கியிருந்து புதிய வழக்குகளை இணக்கமான நீதிபதிமுன் வரும்படிச்

செய்து தங்களுக்கு வேண்டிய உத்தரவுகளை எளிதில் பெற்று விடுகின்றார்கள். இப்படியெல்லாம் உயர் நீதி மன்றங்களில் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. இதைத் தடுக்க யாரும் இது வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கறிஞர்கள் மன்றத்திற்கு (Bar Council) இதைப் பற்றிப் புகார் கொடுக்க உரிமை உண்டு. ஆனால் அவர்களும் இதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை.

நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படும் நாடுகளில் வாக்காளர் களின் விருப்பு வெறுப்பு அறிந்து தீர்ப்பு வழங்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். மேலும் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதி களுக்குத் திறமையும், அனுபவமும் மற்றும் ஒழுக்கக் கூறுகளும் இருக்குமா என்பதும் ஐயந்தான். ஆகவே சட்டத்தின் அடிப் படையில் நீதி வழங்கும் தகுதியை இழந்தவர்களாகக் காணப் படுகின்றார்கள் என ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

நீதிபதிகள், குற்றத்திற்குத் தகுந்த தண்டனைகள் அளிக்க வேண்டும். குற்றவாளியைப் பார்த்து அளிக்கக்கூடாது. அவர் அரசாங்கத்திற்கோ மற்ற தலைவர்களுக்கோ அச்சப் படவேண்டிய அவசியம் இல்லை. நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதற்காக நீதிபதிக்குத் தனிச் சலுகையும் (Privilege) விருப்புரிமையும் (Discretionary) அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதாக அறிய முடியவில்லை. அப்படியே பயன்படுத்தப்பட்டாலும் தவறான வழிகளில் செயற்படுத்து கின்றார்கள்.

நீதிமன்ற எழுத்தர்களும், ஊழியர்களும் (Clerks and Attendants)

நீதி மன்றங்களில் பணியாற்றும் நீதிமன்ற எழுத்தர்கள், (Bench Clerk) மற்றும் பல ஊழியர்கள் ஆகியோர்கள் நீதிமன்றம் நேர்மையோடு செயற்படுவதற்கு நெருங்கிய தொடர்புடைய வர்கள். வழக்குகள் விரைவில் விசாரணை நடத்தி முடிப்பதற்கும் தண்டனையை நிறைவேற்றுவதற்கும் அவர்களின் பணி பெரும்பங் காகும். குறிப்பாக வட்ட, மாவட்ட நீதி மன்றங்களில் பணியாற்றும் நீதிமன்ற எழுத்தர்களின் பணி சிறந்து காணப்படுகின்றது. ஆனால் வழக்கைச் சரிகட்டுதலுக்கு இவர்கள்தாம் அடிப்படையாக விளங்குகின்றார்கள். அதாவது அரசியல்வாதிகள், வழக்கறி ஞர்கள், காவல் துறை அதிகாரிகள், நீதிபதிகள் ஆகியவர்களைச் சரிகட்டுவதற்கும், வழக்கைத் தள்ளிப் போடுவதற்கும் ஆதர வாக உள்ளவர்கள் இவர்கள்தாம். சில வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்ற எழுத்தர்களுக்கும் கள்ளக்கூட்டுண்டு. அதாவது குறிப்

பிட்ட வழக்கறிஞரிடம் குற்றவாளிகள் வழக்கை ஒப்படைக்கப் பரிந்துரைக்கின்றனர். அதில் வரும் பணத்தில் இவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு பிணையத்தில் குற்றவாளியை விடுவிப்பதிலும் நீதிபதி உத்தரவு வழங்கிவிட்டாலும் அதன் நகலைக் கொடுப்பதற்கு அதிக நேரத்தை எடுத்துக் கொள்வார்கள். கையூட்டை எதிர்பார்த்து வேண்டும் என்றே காலம் கடத்துவார்கள். பணம் கொடுத்த பின்பு உடனே வழங்கிவிடும் தன்மை உண்டு.

வட்ட நீதிமன்றங்கள், மாநகர குற்ற நீதிமன்றங்கள் ஆகியவை முன்பு சந்தேகத்தின் மீது கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போதும், மற்றச் சிறு குற்றங்களைப் புரிந்தவர்களுக்கும் நீதிபதி விசாரணை நடத்தி அவர்களை மன்னித்து விடுதலை அளித்து விடுவதுண்டு. நீதிபதி உடனே நீங்கள் போகலாம் என்று கூறிய பின்பும் உடனே நீதிமன்ற எழுத்தர், மற்ற ஊழியர்கள், ஆகியோர் அவர்களை நிறுத்திக் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போக வேண்டும். நில்லுங்கள் என்று கூறித் தடுத்து நிறுத்தி விடுவார்கள். பிறகு அவர்களிடம் இரகசியமாக நீதிபதியிடம் நான்தான் உங்களை மன்னித்து விட்டுவிடச் சொன்னேன் என்று கூறி அவர்களிடம் பணம் பிடுங்கிக்கொண்டு வெளியில் விடும் பழக்கம் நீதிமன்றங்களில் காணப்படுகிறது. நீதிமன்ற எழுத்தர்கள், மற்ற எழுத்தர்கள், ஊழியர்கள் பிற்காலத்தில் வட்ட நீதிபதிகளாக (Sub Magistrates) நியமிக்கப்படுகின்றனர்கள். நீதிமன்ற எழுத்தர்களாக இருந்தபோது விளங்கிய ஒழுக்கம்தான் நீதிபதியாக நியமிக்கப்பட்ட பிறகும் விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இவர்களைக் கண்காணித்து ஊழல் குற்றம் புரியாதவாறு தடுத்தல் வேண்டும்.

குற்ற விசாரணை (The Trial)

குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதி மன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்பு தண்டனை வழங்கப்படுகின்றது. நிரூபிக்கப்படவில்லையெனில் குற்றவாளிக்கு விடுதலை அளித்து விடுவிக்கப்படுகின்றனர்கள். குற்றவாளியின் குற்ற ஏற்புரையின்மீதும் (Confession) குற்றத்தை ஒத்துக் கொள்ளுதல் மூலமாகவும் குற்றவாளிக்கு உடனடியாகத் தண்டனை வழங்கப்படும். ஆனால் மரண தண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களைப் புரிந்த குற்றவாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டாலும் முற்ற விசாரணை நடத்திக் குற்றம் நிருபிக்கப்பட்ட பின்பு குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். இதைப்பற்றி விளக்கமாக முன் அத்தியாயத்தில் ஆராய்ந்துள்ளோம்.

சான்றுயம் (The Jury)

ஆதியில் அரசனுடைய சர்வாதிகாரப் போக்கைக் குறைப்பதற்காகவும், சர்வாதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும் கொண்டுவரப்பட்ட முறைதான் சான்றுயம் முறையாகும். நீதி வழங்கும் போது அரசனுக்கு உதவியாக மற்ற அறிஞர்களும் துணையிருக்க வேண்டும். அவர்களின் கருத்தை ஏற்றுத்தான் இந்தத் தீர்ப்பை அரசன் வழங்கவேண்டும் என்ற விதி வகுக்கப்பட்டது. இந்தியாவில், தமிழகத்தில் சோழர் காலத்தில் எண்பேராயம் என்ற ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு பணியினைச் செய்துவர அனுமதிக்கப்பட்டு வந்தது. அந்தக் குழுக்களுக்குத் தலைவனாக அரசன் விளங்கி வந்தான் என்ற உண்மையை வரலாறு கூறுகின்றது ஆகவே சான்றுயம் முறை மேலை நாடுகளில் மட்டும் செயற்படவில்லை. தமிழகத்திலும் செயற்பட்டு வந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

சான்றுயர்களாக நியமிக்க, குறைந்த படிப்பு இருந்தாலும் நிறைந்த மனிதத் தன்மையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். குற்றவாளிக்காகப் பாடுபடக்கூடியவர்கள் அயர்லாந்துக்காரர்கள். அவர்கள் சிறந்த சான்றுயர்களாகப் பணி புரிந்துள்ளார்கள் என்று ஓர் அறிக்கை கூறுகிறது. மனித உணர்வு அற்ற ஸ்காட்லாந்து மக்கள் சான்றுயர்களாக நியமிக்கத் தகுதியற்றவர்கள். அதே போன்று சட்டத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் ஸ்காண்டிநேவியர் மக்களிடம் சான்றுயர்களாகப் பணியாற்றத் தகுதி அற்றவர்கள். மதப்பற்று உள்ளவர்களிடம் சான்றுயர் பொறுப்பு அளிப்பது நல்லது அல்ல. சாதாரண மக்களும், பொதுப்படையாக நேர்மையோடு எண்ணிச் செயற்படக்கூடியவர்கள், சட்டத்தின் பாதுகாவலர்கள், அவர்கள்தாம் சான்றுயர்களாக நியமிக்கப்படவேண்டும் என்று டாரோ (Darrow) கூறுகின்றார். ஆனால் இந்தியா இத்தகைய அமைப்பு முறை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

சான்றுளர்களும் சான்றும் (Evidence and Testimonial)

வழக்கில் குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்க முக்கியமானது சான்றுளர்களின் சான்றும், சான்றுகள் தாங்கிய பொருள்களுமேயாகும். இவைகளின்றிக் குற்றத்தை நிரூபிக்க வேறு நம்பத் தகுந்த சான்றுகள் ஏதுமில்லை. வழக்கிற்கு இவைகளே உயிர் நாடியாகும். சான்றுளர்கள் அல்லது சான்றுப் பொருள்கள் இல்லாத வழக்கு 'செத்துப்போன வழக்கு' என்றுதான் பொருள்படும். சான்றுளர்களுக்காக நீதி மன்றம் அதிகத்

தொகையைச் செலவழிக்கின்றது. தமிழகத்தில் மாவட்ட குற்ற நீதி மன்றங்களில் 1970 ம் ஆண்டில் சான்றுளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 1,06,823-ம், 1969-ல் 1 03,774 ரூபாயும் வட்ட, மாநகர நீதிமன்றங்களால் செலவிடப்பட்ட தொகை 1970-ல் 2,51,447-ம், 1969 ல் 2,60,375 ரூபாயும் ஆகும்.

சான்றுளர்களின் மனம், அவர்களின் நடத்தை, போக்கு, ஒழுக்கம், மனநிலை, புரிந்து கொள்ளும் திறன், பார்வையின் சக்தி, காது கேட்கும் தன்மை. கல்வி, குற்றவாளிகளுக்கும் சான்றுளர்களுக்கும் உற்ற உறவு, நட்பு, பகைமை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்த பின்பே சான்றுளர்கள் கூறும் சான்றுகளின் மதிப்பைக் கொண்டு குற்றவாளியின் குற்றத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

பொய்ச் சத்தியம் கூறுபவன்மீதும், பொய்ச் சான்று கூறுபவர்கள்மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்கப் படுதல் வேண்டும் அப்பொழுதுதான் மேற்கொண்டு சான்றுளர்களாக வருபவர்களுக்கு ஒரு கடும் எச்சரிக்கையாக அமைவதுடன் குற்ற விசாரணையின்போது உண்மையை மட்டும் கூற ஏதுவாகும்.

ஆனல் நவீன காலத்தில் அறிவியல் சார்ந்த கருவிகளைக் கொண்டு சான்றுளர்கள் கூறும் பொய்யைத் துப்பறிவதற்குப் 'பொய்த் துப்பறியும் கருவி' (Lie detector) பயன்படுத்தப்படுகின்றது. இதனல் சான்றுளர்கள் கூறும் பொய்யை ஆராய்ந்து அவர்களுக்குத் தண்டனை வழங்க ஏதுவாகிறது. குற்றவாளிகளைப் பிடிப்பதற்குக் காவல் துறை அதிகாரிகள் தங்களின் கையாட்களை (Decoy) ஏவுவார்கள். கையூட்டுக் குற்றம், பரத்தைமைக் குற்றம், சூதாட்டர் ஆகிய குற்றவாளிகளைக் கைது செய்வதற்குக் கையாட்களைப் பயன்படுத்துவார்கள். நீதி மன்றத்தில் சிலர்களின் சான்றை மட்டும் எடுத்துக்கொண்டு குற்றவாளியின் குற்றத்தைத் தீர்மானிக்கக் கூடாது ஏனென்றல் இவர்கள் காவல் துறை அதிகாரிகளுடன் உடந்தையாக உள்ளவர்கள். ஆகவே தனிப்பட்ட சான்றுகளோ சான்றுளர்களோ கூறப்பட்ட சான்று விவரங்களைக் கொண்டுதான் குற்றத்தைத் தீர்மானிக்கப்படவேண்டும்.

சான்றுளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் குற்றத்தைத் தீர்மானிப்பது இல்லை. அவர்களின் தரத்தைப் பொறுத்து, நேர்மையைப் பொறுத்துக் குற்றத்தை நிர்ணயிக்கப்படுகின்றது.

வழக்கைச் சரிகட்டுதல் (Fixtng the case)

நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும், குற்ற விசாரணை நடத்தப்படுவதில்லை குற்ற விசாரணை நடத்தி விட்டாலும் தீர்ப்பு அளிக்கப்படுவதில்லை. அதற்குள் பல்வேறு குறுக்கீட்டால் வழக்குகள் சரிகட்டப்பட்டு விடுகின்றன. அதாவது கையூட்டு, அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள், காவல் துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களின் தலையீட்டால் வழக்கைத் திரும்பப் பெறமுடிகின்றது; அல்லது தள்ளி விடப்படுகின்றது. அதற்காகப் பல்வேறு காரணக் கூறுகளை எழுதிவிடுதல், அதாவது சான்றுரைஞர்கள் காணப்படவில்லை, அல்லது இறந்து விட்டார்கள், சாதாரண வழக்குகள் உடன்பாடு செய்து கொண்டார்கள் என்று பல காரணங்களைக் காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்யப்பட்டு விடும்.

நீதிமன்றம் நீதியை நிலைநாட்டும் இடமாதலால் அங்கே நீதிமுறையாக செயலாற்றுபவர்களும், உதவியாகப் பணிபுரியும் மற்ற நீதிமன்ற ஊழியர்களும் நீதியைக் காக்கப் பாடுபடவேண்டும். அத்துடன் பொதுமக்களும் சான்றுரைஞர்களாக மாறும்போது நீதியை நிலைநாட்டும் பொருட்டுச் சான்று அளிக்க வேண்டுமே தவிர பகைமைக்காகவோ, பாசத்திற்காகவோ பணத்திற்காகவோ, பக்திக்காகவோ, பயத்திற்காகவோ, நீதிமன்றத்தில் சான்று கூறுமல் தம் கடமைக்காக நீதிமன்றத்தில் சான்று உரைத்தல் வேண்டும். அரசியல் தலைவர்கள், அரசியல் வாதிகள், மற்றும் செல்வந்தர்கள், தீய ஒழுக்கமுள்ள வழக்கறிஞர்கள் ஆகியோர் நீதிமன்றத்தைவிட்டு விலகி நின்று நீதியைத் தழைத்தோங்க உதவி செய்தல் வேண்டும். அநீதியிலிருந்து நீதி காக்கப்பட்டேயாக வேண்டும். அப்போதுதான் மக்கள் சட்டத்தின் பலனை அனுபவிக்க முடியும்.

16. குற்றச் சிறுர் நீதிமன்றம் அல்லது இளங் குற்றவாளி நீதிமன்றம்

(Juvenile Court)

7 வயதிற்குமேல் பதினெட்டு வயதிற்குள் உள்ள இளம் வயதினர் குற்றம் புரிந்தால் அவர்களுக்கு இளங் குற்றவாளிகள் என்று பெயர். ஆதிகாலத்தில் இளங் குற்றவாளிகள், வயதடைந்த குற்றவாளிகள் என்ற வேறுபாடு இல்லாமல் குற்றம் புரிந்தவர்கள் அனைவரும் 'குற்றவாளிகள்' என்று கருதப்பட்டு ஒரே நீதிமன்றத்தில் குற்றத்திற்குரிய தண்டனை வழங்கப்பட்டு வந்தது. தண்டனை அடைந்தவர்களையும் தனித்து அடைத்து வைக்கப்படாமல் ஒரே சிறையில் தடைப்படுத்தி வைக்கப்பட்டு வந்தார்கள்.

குற்றச் சிறுர் நீதிமன்றத்தின் தோற்றுவாய் (The origin of Juvenile Conrt)

இங்கிலாந்தில் நாட்டு மரபுச் சட்டம் (Common Law) செயற்படுத்தப்பட்டு வந்த காலத்தில் குற்றத்தைத் தடுக்க ஒரே வழி கடுமையான தண்டனை வழங்குவதுதான் என்ற கொள்கை பின்பற்றப்பட்டு வந்தது. அதன் அடிப்படையில் வயது வந்த குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனையே சிறுர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்தது. குற்றத்தைத் தடுக்கக் கடுமையான தண்டனை வழங்குவதனுல் மட்டும் தடுக்க முடியாது. குற்றவாளியின் உள்ளத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற கருத்தைக் குற்ற இயல் வல்லுநர்கள், சமுதாய இயல் வல்லுநர்கள், உளவியல் வல்லுநர்கள் ஆகியோர்கள் பரிந்துரைத்தார்கள். அதன் பிறகு 'பழிக்குப் பழி' என்ற கொள்கையில் தண்டனை வழங்குவதை மாற்றி அமைக்கச் சட்டத்தையும் மாற்றியமைக்கப்பட்டது. கடுமையான தண்டனை வழங்குவதையும் நிறுத்தப்பட்டது. மரண தண்டனை வழங்கும் குற்றங்களின் எண்ணிக்கை குறைக்

கப்பட்டது. குற்றவாளிகளை நல்லவர்களாக மாற்றுவதற்கான நடைமுறைச் செயல்களுக்குச் சமுதாயப் பெரியோர்கள் முன் வந்தார்கள். அதன் பயனுகத்தான் சிறைச்சாலையைச் சீர்திருத்துதல், குற்றவாளிகளுக்குக் கல்வி. தொழிற்கல்வி, ஒழுக்கம், நீதி போதனை, ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதுடன் ஆண் பெண் இருவருக்கும் தனித் தனி சிறைகள் அமைக்கப்பட்டன. இளங் குற்றவாளிகளுக்குத் தனிச் சீர்திருத்த இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள நியூயார்க் நகரத்தில் முதன் முதல் 1824-ம் ஆண்டில் குற்றச் சிறுர் சீர்திருத்தப் பள்ளி (Juvenile Reformation) நிறுவப்பட்டது. 1931-ல் இல்லோனிஸ் (Illonis) மாநிலத்தில் ஒரே ஒரு குற்றத்தைப் புரிந்தாலும் வயதில் வேறுபாடு இருந்தால் வேறுபட்ட தண்டனை வழங்குவதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அதே மாநிலத்தில் 1861-ம் ஆண்டு 6 வயது முதல் 17 வயது வரையில் உள்ள குற்றச் சிறுர்களின் வழக்குகளை நடத்த சிகாகோ மேயருக்கு அதிகாரம் வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சிறு சிறு குற்றங்களைப் புரிந்த இளங் குற்றவாளிகளை விசாரணை நடத்தி நன்னடத்தை உறுதி மொழியில் விடுவிப்பதோ சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்புவதோ போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனல் 1867 ல் மேலே குறிப்பிட்ட பணிகள் அனைத்தும் நீதிபதிக்கு மாற்றப்பட்டு விட்டன. பாஸ்டனில் (Boston) 1870-ல் குற்றச் சிறுர்களை விசாரணை நடத்த குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் நியமிக்கப்பட்டன. 1872-ல் மசாசுசட்ஸ் (Massaehusetts) முழுவதும் குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் நியமிக்கப்பட்டன.

19-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் குற்றச் சிறுர்களைச் சாதாரண இடத்தில் நீதிமன்றங்களாக அமைக்கப்பட்டு சான்றுயர்கள் இல்லாமல், சட்ட விதிமுறைகளைப் பின்பற்றுமல், விசாரணை நடத்தப்பட்டு வந்தது. 1899-ல் சிகாகோ நகரத்தில் குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் உருவாயின. அதாவது குற்றச் சிறுர்களுக்கென்று தனியாக நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தில் 7 வயது முதல் 16 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகளை மட்டும் விசாரணை நடத்தப்பட வேண்டும். அடுத்து விசாரணை நடத்தி முடிந்த பின்பு 'குற்றவாளிகள்' (Criminals) என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் கடமையைத் தவறியவர்கள் (Delinquents) என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்படி அறிவிக்கப்பட்டது. மேலும் சட்டத்தின் அடிப்படையில் நீதி விசாரணை நடத்தாமல் நேர்மைநெறி (Equity) முறையில் நடத்தும

படி கூறப்பட்டது. அனாதைக் குழந்தைகளுக்குப் பாதுகாவலர் அரசாங்கந்தான் என்று கருதப்பட்டது. சில சிறுவர்களைச் செல்வந்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பாதுகாக்கப் பட்டு வந்தார்கள்.

சிகாகோ நகரத்தில் குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் செவ்வனே செயற்பட்டு வந்ததால் பத்து ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 22 மாநிலங்களில் குற்றச் சிறுர் நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. 1925-ல் இரண்டு மாநிலங்கள் நீங்கலாக மற்ற மாநிலங்கள் முழுவதும் குற்றச் சிறுர் நீதி மன்றங்கள் அமைக்கப் பட்டன. 1945-ல் அந்த இரண்டு மாநிலங்களிலும் குற்றச் சிறுர் நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் 1938-ல் குற்றச் சிறுர் நீதி மன்றச் சட்டம் (Juvenile Courts Act) நிறைவேற்றப்பட்டது.

குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் உலகெங்கும் நிறுவப்பட்டு வந்தன. நீதி மன்றங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இளங் குற்றவாளிகளின் வயது 16 வயதிலிருந்து 18 வயதாக உயர்த்தப்பட்டது. சில இடங்களில் 21 வயது வரைக்கும் உயர்த்தப்பட்டது. இளங் குற்றவாளிகளுடன் வயது வந்தவர்கள் இணைந்து குற்றத்தைப் புரிந்து இருந்தாலும் அல்லது ஊக்குவிக்கப்பட்டு இளங் குற்றவாளிகள் குற்றம் புரிந்திருந்தாலும் அல்லது ஊக்குவிக்கப்பட்டு இளங் குற்றவாளிகள் குற்றம் புரிந்திருந்தாலும், குற்றச் 'சிறுர் நீதி மன்றத்திலேயே விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டது. இக் குற்றச் சிறுர் நீதி மன்றங்கள் மகவேற்பு (Adoption) நடைமுறைச் செயல்கள், தாய்மார்களின் ஓய்வு ஊதியம், இன்பப் பொழுதுபோக்குப் பணிகள், கல்விப் பணிகள் ஆகிய பணிகளைச் செயலாற்றிவந்தன.

குற்றச் சிறுர் நீதிமன்றத்திற்கும், குற்ற நீதி மன்றத்திற்கும் அதிக வேறுபாடு உண்டு. குற்ற நீதிமன்றத்தின்போது நீதி மன்றத்தில் மக்கள் வெள்ளம் வழியும். இரண்டு கட்சிக்காரர்களும் குழுமிருப்பார்கள். ஒரே கூச்சலுடன் இருவரும் சண்டை போடுகின்ற மாதிரியாக வாதம் புரிவார்கள். ஆனால் குற்றச் சிறுர் நீதி மன்றத்தில் அறிவியல் சார்ந்த முறைப்படி, நேர்மை, நெறி முறைப்படி விசாரணை நடத்தப்படும். மேலும் குற்றச்சிறுர் நீதி மன்றங்களில் சிறுவர்களின் ஒழுக்கம், நடத்தை, போக்கு, கல்வி, குடும்பப் பின்னணி, கடமையைத் தவறுவதற்கான காரணக் கூறுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிய அதிக அக்கறை காட்டப்படும். குற்ற நீதி மன்றத்தில் மேற்கூறியவற்றைப்

பற்றிக் கவலைப்படாமல் குற்றம் புரிந்திருந்தால் தண்டனை வழங்கப்படுகிறது. தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் சிறையில் அடைத்து வைக்கப்படுகின்றுர்கள். குற்றச்சிறுர் நீதிமன்றத்தில், குற்றவாளி சென்று, தீர்ப்பு வழங்குவதில்லை. மேலும் குற்றத்திற்காகச் சிறைக்கு அனுப்புவதில்லை. சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றுர்கள். இந்தக் குற்றவாளிகளைச் சீர்திருத்துவதே முதல் நோக்கமாகும். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதே முதல் நோக்கமாகும்.

மேலும் குற்றச்சிறுர் நீதிமன்றங்கள் அமைப்பு தனியானதாகும். குற்றவாளி அமரும் இடம், நீதிபதியின் இடம், வழக்கறிஞர்கள் அமரும் இடம், பெற்றேர்கள், பாதுகாவலர்கள் ஆகியோர்கள், நீதிமன்ற எழுத்தர்கள், மற்ற ஊழியர்கள் அமரும் இடங்கள், ஏறத்தாழ பள்ளி மாதிரி காட்சியளிக்கும். அது பார்வைக்கு நீதிமன்றம் போலத் தோன்ருது. அத்துடன் நீதிபதியும் கறுப்பு அங்கி அணியமாட்டார், மற்ற வழக்கறிஞர்களும் கறுப்பு அங்கி அணிந்து வரமாட்டார்கள். பெற்றேர்கள் சிறுவர்கள் அருகில் அமர்ந்து கொள்ளவும் வசதியுண்டு. அங்கே குற்றநீதி மன்றமாக இல்லாமல் குடும்ப விகாரத்தைப பரிசிலனைச் செய்வதைப் போன்ற நிலைமையில் அமைந்திருக்கும். விசாரணைக்காக அமர்ந்திருக்கும் சிறுவர்களுக்கு அச்சமோ பயமோ ஏற்படாதவாறும், கண்ணுடி போன்ற உள்ளத்தை உடையாமல் தூசி துடைப்பதைப் போன்று இளைஞர்களின் குற்றவொழுக்கத்தை அகற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுவாக சிறுவர்கள், குற்றச் சட்டத்தை மீறினவர்களும் திருத்தமுடியாதவர்கள், சீர்கேடானவர்கள், உணர்ந்து குற்றத்தைப் புரிந்தவர்கள். குற்ற மனத்தோடு திருடினவர்கள். கயமையானவர்கள், கேடுவிளைவிக்கக் கூடியவர்கள். நேர்மை நெறிதவறியவர்கள், ஒழுக்கங்கெட்டவர்கள், ஆகியோர்களுடன் இணைந்து நண்பராகப் பழகினுலும் அல்லது அவர்களுடன் ஊர் சுற்றித் திரிந்துவந்தாலும், காரணமின்றி, பெற்றேர்களின் அனுமதியின்றித் தன் இல்லத்தை அல்லது பாதுகாவலரின் இல்லத்தை விட்டோ அல்லது பள்ளியை விட்டோ வெளியேறிவிடுதலோ அல்லது தன் இல்லத்திற்கு மீண்டும் வராமல் அங்கேயே தங்கிவிடுதல், சோம்பேறித்தனத்தை வளர்த்தல். அல்லது குற்றத்தில் கை தேர்ந்தவராகப் பழகிக் கொள்ளுதல், அல்லது மதுக்கடைக்கு அடிக்கடி செல்லுதல், அல்லது சூதாடும் இடத்தில் வேடிக்கை பார்த்தல், அங்கேயே தங்கிவிடுதல், அல்லது ஆடம்பரமான இடங்களுக்குச் செல்லுதல், கடைக்குச் செல்லுதல், அல்லது

பந்தயம் விளையாடும் இடங்களுக்குச் செல்லுதல், வேலையின்றி வீதி விதியாகச் சுற்றுதல், அல்லது இரவு நேரங்களில் வீதிகளில் அலைந்து திரிதல், அல்லது புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நெருக்கடியான கடைவீதிகளில், சரக்கு ஏற்றிக் கொண்டு செல்லும் பாதைகளில் தங்கியிருத்தல் ஆகிய இடங்களுக்குச் செல்லுதல், அல்லது வேகமாகச் செல்லும் வாகனங்களிலிருந்து இறங்குதல் அல்லது ஏறுதல். மற்றவர்களின் தானியங்கி வண்டிகளினுள் அனுமதியின்றி நுழைதல். எப்பொழுதும் பயனற்ற சொற்களையும் ஆபாச வார்த்தைகளையும் பேசுதல், ஆபாசமான செயல்களில் ஈடுபடுதல், பள்ளியின் அருகில் ஆபாசமான வார்த்தைகளை இரைந்து பேசுதல், பள்ளியைப் பற்றி இழிவாகக் கூறுதல் ஆகிய செயல்களில் ஒரு சிலவற்றை யார் செய்தாலும் அவர்கள் கேவலமான, தகுதியற்ற, சிற்றின்ப அவாவுடைய தீய செயல்களை விரும்புகின்ற, குற்றவொழுக்கம் உள்ளவர்கள் என்று கருதுதல் வேண்டும் என்று குற்றவொழுக்கத்திற்கு வரையறையளிக்கப்பட்டுள்ளது.

மேலை நாடுகளில் சிறுவர்களை எவ்வளவு கட்டுப்பாடுடன் வளர்த்து வருகின்றார்கள் என்பதற்கு மேலே கூறப்பட்டவைகளே சான்றாகும். இந்தியாவில், சிறுவர்கள் எங்குப் போய்த் திரும்பி வந்தாலும், எங்குப் போய் வருகின்றாய் என்று பெற்றோர்கள் கேட்பதில்லை. வந்தால் போதும் என்று நினைக்கின்றார்கள். இந்தியாவில் உள்ள பல பெற்றோர்களே தங்களின் சிறுவர்களை மேற்கூறப்பட்ட பல நெறிகெட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றார்கள். சில வேளைகளில் பெற்றோர்களே கள்ளச் சாராயம் வாங்கிவர அனுப்புகின்றார்கள்.

குற்றச் சிறார் நீதிமன்றங்களில் கடமையைத் தவறியவர்களை மட்டும் பரிசீலனை செய்வதில்லை. பெற்றோர்களால் ஒதுக்கப்பட்ட குழந்தைகள், அனாதைக் குழந்தைகள், இல்லத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்காத குழந்தைகள் ஆகியவர்களையும் பாதுகாத்துச் சீர்திருத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் குற்றவொழுக்கத்துடன் வளர்ந்து பெருங் குற்றவாளிகளாக மாற்றப்படுவது தடுக்கப்படுகிறது.

அனாதைச் சிறுவர்கள், பெற்றோர்களால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள், ஆகிய நிலையில் வாழும் சிறுவர்கள்தாம் அதிகமான குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள். 1958-ல் கலிபோர்னியாவில் குற்றச் சீர்திருத்த மன்றத்தில் மொத்தம் 1,80,596 குற்றச் சிறார்கள் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு

உள்ளார்கள். அதில் 27 சதம் குற்றம் புரிந்தவர்கள். வயது மட்டும் தடையாக இல்லையென்ருல் அவர்களுக்குக் கடுந் தண்டனை வழங்கப்பட்டிருக்கவேண்டும். பிறரைச் சார்ந்து வாழுகிறவர்கள் அல்லது பெற்ருேர்களால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட காரணத்தால் குற்றத்தைப் புரிந்த இளங் குற்ற வாளிகளின் எண்ணிக்கை 8 சதம், சாலை வழி மீறுதல் மற்றக் குற்றங்களுக்கான எண்ணிக்கையின் விகிதம் 65 சதமாகும்.

மற்ருரு அறிக்கையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள குற்றச் சிருர் நீதிமன்றங்களில் உள்ள மொத்த வழக்குகளில் 75 சதம் குற்றத்தைப் புரிந்தவர்கள். பெரும்பாலும் குடும்பத்தி லிருந்து ஒதுக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது மற்றவர்களை நம்பி வாழும் நிலையில் உள்ள சிறுவர்கள் புரிந்துள்ள குற்ற எண் ணிக்கை விகிதம் 20 சதமும் மகவேற்பால் (Adoption) கைவிடப் பட்டுப் பிறகு குற்றவாளிகளாக மாறிய சிறுவர்களின் எண்ணிக்கை விகிதம் 5 சதமுமாகும்,

அமெரிக்காவில் உள்ளதைப் போலவே இங்கிலாந்திலும் இந்தியாவிலும் குற்றச் சிருர் நீதிமன்றங்கள் செயற்பட்டு வரு கின்றன. இந்தியாவில் இளங் குற்றவாளிகளைத் தடைப்படுத்தி வைப்பதற்கு இளநிலை திருத்தப்பள்ளி (Junior Approved School) என்றும் முதுநிலை திருத்தப்பள்ளி (Senior Approved School) என்றும் செயற்பட்டு வருகின்றன. 6 வயதிற்குமேல் 14 வய திற்குள் உள்ள குழந்தைகளை இளநிலை திருத்தப் பள்ளியிலும் 14 முதல் 18 வயது வரையில் உள்ள சிறுவர்களை முதுநிலை திருத்தப் பள்ளியிலும் சேர்க்கப்படுகின்ருர்கள். குழந்தைகள் திருந்தவில்லையென்ருல் தொடர்ந்து முதுநிலைப் பள்ளிக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்ருர்கள்.

இந்தியாவில் 1960 முதல் 1970 வரையில் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை விகிதம் 35 சதம் அதிகரித்துள்ளது. 1960-ல் மொத்தம் 20,165 இளங்குற்றவாளிகளும் 1970-ல் 27 226 இளங்குற்றவாளிகளும் காணப்படுகின்றனர். 1966-1969 வரையில் 25·4 சதம் அதிகரித்துள்ளது. இந்தியாவில் உள்ள இளங்குற்றவாளிகளின் குற்றவகைகளின் விகிதங்கள் 76 சதம் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள், கலகக் குற்றம் (Riots) புரிந்வவர்கள் விகிதம் 703·8 சதமாகும். கூட்டுக் கொள்ளைக் குற்றம் புரிந்தவர்கள் 92·5 சதமும் கொள்ளைக் குற்றம் 108·5 சதமும் ஆகும்.

இந்தியாவில் இளங் குற்றவாளிகளுக்காக அமைக்கப் பட்டுள்ள சீர்திருத்த இல்லங்கள் ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. சீர்திருத்த இல்லங்களில் கல்வி, பயிற்சி. ஆடை அணியவும், உண்ணவும் கற்றுக் கொடுப்பதுடன் உடை. உணவு ஆகியவையும் வழங் கப்படுகின்றன. பெண்கள் சீர்திருத்த இல்லங்களில் பெண் குற்றவாளிகளுடன், வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், பரத்தைமைக் குற்றத் துக்காகத் தண்டனை அடைந்தவர்கள். அனாதைப் பெண்கள் ஆகியவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் குற்றச் சிறார் நீதி மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. சுமார் 70-க்கு மேற் பட்ட குற்றச்சிறார் நீதி மன்றங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனி இளங்குற்றவாளிச் சட்டம் அல்லது சிறுவர் சட்டம் (Children's Act) இயற்றப்பட்டுச் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், பெண் குற்றவாளிகள் ஆகியோர் கொலைக்குற்றம் புரிந்திருந்தாலும் அவர்கள் பிணையத்தில் (Bail) செல்ல அனுமதிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

தண்டனை வழங்கப்பட்ட சிறுவர்கள் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுகின்றார்கள். ஆனால் 21 வயதிற்குமேல் எக்காரணத் தைக் கொண்டும் வைத்திருக்கக் கூடாது என்று சட்டத்தில் வரை யறுக்கப்பட்டுள்ளது.

குற்றம் புரியாத சிறுவர்களும் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப் பப்படுகிறார்கள். அதாவது நாடோடியாக ஊர் சுற்றுதல், வீடற்ற குழந்தைகள், வாழ்க்கைக்கு வேண்டி அடிப்படை வதிசயற்ற குழந்தைகள், புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், அனாதைக் குழந்தைகள், கள்ளக்காதலால் பிறந்து புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோர்கள் சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பதனால் பராமரிக்க முடியாமல் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோர்கள் முழு குடிகாரர்களாகவோ அல்லது தொடர்ந்து குற்றம் புரியும் தன்மையுடையவர்களாகவோ விளங் குவது அல்லது தாய் பரத்தைமைத் தொழிலில் ஈடுபடுதல், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், திருந்தாத பெற்றோர்கள் ஆகிய சூழ்நிலையில்வாழும் சிறுவர்களையும், சிறுவர்கள் எப்பொழுதும் பெயரெடுத்த திருடர்களுடன் இணைந்திருந்தாலும் அல்லது நண்பர்களாகக் கருதிப் பழகினாலும், வீதியில் அல்லது பொது

இடங்களில் பிச்சை எடுக்காமல் ஆடிப்பாடி வீணாகக் காலத்தைக் கழிக்கும் சிறுவர்கள். அனைவரையும் இளநிலை சீர்திருத்தப் பள்ளிக்கோ. அல்லது முதுநிலை சீர்திருத்தப்பள்ளிக்கோ அனுப்ப நீதிபதி உத்தரவு வழங்குவார். ஆண் சிறுவர்கள் 18 வயது வரையிலும் பெண் சிறுவர்களாக இருந்தால் 21 வயது வரையிலும் திருத்தப்பள்ளியில் தடைப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய கல்வி, தொழிற்கல்வி, ஒழுக்கம், உணவு, உடை ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று சென்னைச் சிறுவர்கள் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மேலே கூறப்பட்ட சூழ்நிலையைவிட மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழும் சிறுவர்களின் எண்ணிக்கையைக் கூற முடியுமா? அவர்கள் காவல்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுக் குற்றச் சிறுர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகின்றார்களா? அப்படிச் செய்திருந்தால் நாட்டில் குற்றவாளியின் எண்ணிக்கை விகிதமும், இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை விகிதமும் குறைந்து அல்லவா இருக்கவேண்டும்? 10 ஆண்டுக் காலத்தில் 35·5 சதம் குற்ற விகிதம் அதிகரித்துள்ளதாக ஓர் அறிக்கை கூறுகிறதே? ஆகவே சட்டத்தில் எவ்வளவு நல்ல கருத்துகள், நன்மையான திட்டங்கள், குற்றமற்ற சமுதாயத்தை அமைப்பதற்குரிய கட்டு திட்டங்கள் ஆகியவை வரையறுக்கப்பட்டு இருந்தாலும் அதைச் செவ்வனே செயற்படுத்தாத வரையில் சிறுவர்களுக்கோ நாட்டுக்கோ சிறிதும் நன்மை கிடையாது?

குற்ற நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளின் விவரத்தைச் செய்தித் தாள்களில் வெளியிட அனுமதிப்பது போன்று குற்றச் சிறுர் நீதிமன்றத்தில் விசாரணை நடக்கும் வழக்கின் விவரத்தையோ அல்லது இளங் குற்றவாளியின் புகைப்படத்தையோ செய்தித் தாள்களில் வெளியிட அனுமதிப்பது இல்லை. குற்றச் சிறுர் நீதிமன்றங்கள். சமுதாயத்தின் அறிவுக்கூடமாகவும், நீதிமன்றமாகவும் செயற்படுகின்றன. சிறுவர்களுக்கு அறிவுரையும் ஒழுக்கமும் விசாரணையின்போது உரைக்கப்படுகின்றன.

இளங் குற்றவாளிகள் தங்களுக்காக வழக்கு நடத்துவதற்கு வழக்கறிஞர்களை நியமித்துக் கொள்ளவும் உரிமை உண்டு. குற்றச் சிறுர் நீதிமன்றத்தால் இளங் குற்றவாளிக்கு அபராதமோ, தண்டனையோ வழங்கித் தீர்ப்பு அளிக்கப்பட்டால் அதை எதிர்த்து, உயர், உச்ச நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது,

குற்றச்சிறுர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டாலும் குற்றங்கள் குறையவில்லை என்பதற்குக் கீழ்க்காணும்

புள்ளி விவரங்களே சான்ருகும். இந்தியாவில் இளங் குற்றவாளிகளின் சராசரி எண்ணிக்கை விவரம்: 1960—1964-வரையில் ஓராண்டுச் சராசரி குற்ற எண்ணிக்கை 17.500 ஆகும். 1967-ல் பிணையில் விடத்தகாத குற்றங்களைப் புரிந்த இளங்குற்றவாளிகளின் மொத்த எண்ணிக்கை 23.000 ஆகும். இதில் திருட்டுக் குற்றவாளிகளின் எண்ணிக்கை 14.000 ஆகும். இதிலிருந்து இளங்குற்றவாளிகள் அதிகமாக ஈடுபடுவது திருட்டுக் குற்றத்தில் தான் என்பதை உணர ஏதுவாகிறது. மேலே கூறப்பட்ட குற்றங்களைப் புரிந்தவர்களின் வயதாவது: 7 முதல் 12 வயது, 12 முதல் 16 வயது, 16 முதல் 21 வயது வரை என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 5.000 இளங் குற்றவாளிகளுக்குமேல் கைது செய்யப்படுகின்ருர்கள். 1970-ல் 27,266 குற்ற வழக்காக உயர்ந்துவிட்டது.

மகாராட்டிர மாநிலத்தில் இளங் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை: 1967-ல் 4,722 குற்ற வழக்குகளாகும். இதில் 345 சாதாரண திருட்டுக் குற்றமாகும். 61 கொலைக் குற்றம், 90 வீட்டை உடைத்துத் திருடிய குற்றம், 24 கூட்டுக் கொள்ளை ஆகிய குற்றங்களாகும். ஆனல் 1970-ல் மொத்த குற்றம் 5.398 ஆக உயர்ந்துள்ளது. சாதாரண திருட்டுக் குற்றம் 2.371 ஆகவும் வீட்டை உடைத்துத் திருடும் குற்றமும் 836 ஆக உயர்ந்துவிட்டது.

பம்பாய் நகரத்தில் மட்டும் உள்ள இளங் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கையின் விவரம்: 1969-1970-ல் 1.222 குற்றத்திலிருந்து 1971-72-ல் 1,239 ஆகவும், 1973-74-ல் 1.269 ஆகவும் உயர்ந்துள்ளது. 1970-71-ல் 1,052 லிருந்து 1972-73-ல் 1,094 ஆக உயர்ந்துள்ளது. வீட்டை உடைத்துத் திருடுதல் குற்றம் 851-லிருந்து 869 ஆகவும் பிறகு 906 ஆகவும் உயர்ந்துள்ளது. கள்ளச்சாராயம் கடத்துதல், உணவு கடத்துதல், கோதுமை, அரிசி பருப்பு வகைகள் ஆகிய திருட்டுக் குற்றங்களில் பெண் குற்றவாளிகள் அதிக அளவில் ஈடுபட்டுள்ளார்கள். திருட்டுக் குற்றம் புரிந்த இளங் குற்றவாளிகளின் வயது 14 முதல் 16 ஆகக் காணப்படுகிறது.

அடுத்து, தில்லி நகரத்தின் இளங் குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை 1970-ல் 7 வயது முதல் 16 வயது வரையில் உள்ள இளங் குற்றவாளிகள் 616 ஆகவும், 118 இளம் பெண்கள் குற்றவாளிகளும் காணப்படுகின்ருர்கள். அதே போன்று 12 வயது முதல் 16 வயது வரையில் 1972-ல் 61 கொள்ளைக்

குற்றமும், மற்றக் கொலைக் குற்றமும், வன்புணர்ச்சிக் குற்றமும், கள்ளச் சாராயம் விற்றல் ஆகியவையும் உள்ளன.

16 வயது முதல் 21 வயது வரையில் உள்ளவர்கள் புரிந்த குற்றங்கள் தற்கொலை முயற்சி, கொலையாகாத மரணம் விளை விக்கும் குற்றம் (Culpable Homicide) கலகக் குற்றம் முதலியவை யாகும்.

1972-ல் 342 திருட்டுக் குற்றமும், 15 போதைப் பொருள், அபின் சட்டத்தை மீறியவர்கள் ஆகியோர்களின் வயது 16 முதல் 21 ஆகும்.

ஆனால் 1970-ல் 257 திருட்டுக் குற்றத்திலிருந்து, 1972-ல் 181 ஆகக் குறைந்துள்ளது. ஆனால் 1973-ல் 225 ஆக உயர்ந்துள்ளது. 1972-ல் குற்றச் சிறுர் நீதிமன்றத்தில் விசாரிக் கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 569 ஆகும். ஆனால் 1973-ல் 401 ஆகக் குறைந்துள்ளது. 1974-ல் ஆகஸ்டு மாதம் முடிய 258 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்கு வங்கத்தில் இளங்குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை யின் விவரம்: 1973-ல் கல்கத்தாவில் 316 வழக்குகளும், குற்றச் சிறுர் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. கொலைக் குற்றம், வன்புணர்ச்சிக் குற்றம், ஆள் கடத்துதல், அரசு ஊழியரைத் தாக்குதல் ஆகிய குற்றங்களுக்குத் தலா ஒரு நபரும், கூட்டுக் கொள்ளைக் குற்றத்திற்கு 9 நபர்களையும், கொள்ளைக் குற்றத்திற்கு ஒரு நபருமாகக் குற்றம் சாட்டப்பட் டுள்ளார்கள். கல்கத்தாவில் நக்ஸல்பாரி (Naxalbari) இயக் கத்தில் இணைந்துள்ள சிறுவர்கள் அதிகக் கடுங்குற்றங்களைப் புரிந்துள்ளார்கள். மற்றப்படி, சாதாரண ஜேப்படிக் குற்றம், கடை, வீடு புகுந்து திருடுதல், வழிப்பறித் திருட்டு ஆகிய குற்றங் களாகும். பெண்கள் பெரும்பாலும் பரத்தைமைக் குற்றம் புரிந் துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இளங் குற்றவாளிகள் குற்ற எண்ணிக்கை விவரம்: 1974-ல் சீர்திருத்தப்பள்ளியில் உறையும் இளங்குற்ற வாளிகள் (ஆண், பெண் உட்பட) மொத்தம் 2,500-க்கு மேல் உள்ளனர். இவர்களில் பெரும்பாலும் கள்ளச் சாராயம் விற்றல் குற்றத்தை அதிகமாகப் புரிந்துள்ளார்கள். மதுவிலக்கு செயற் பட்ட பின்பு கால்பந்து உறைகளில் (Foot Ball Bladders) சாரா யத்தை நிரப்பிக் கள்ளத்தனமாக விற்பனை செய்கின்றுர்கள். பர்மா பசாரில் உள்நாட்டுச் சாமான்களையே வெளிநாட்டுச்

சாமான்கள் என்று கூறி மோசடி செய்து ஏராளமான இளைஞர்கள் விற்பனை செய்கின்றார்கள். துறைமுகத்தில் அத்து மீறி நுழைந்து அங்கே சிறு சிறு பொருள்களைத் திருடிக்கொண்டு வருதல், கேமரா, கடிகாரம் ஆகியவற்றைத் திருடி பர்மா பசார் கடைகளில் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களைப் புரிந்துள்ளார்கள். பெண்களில் 11 வயது முதல் 14 வயது வரை உள்ளவர்கள் அதிகமாகக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் ஆராய்ந்து அறிவிக்கப்பட்ட அறிக்கை என்றாலும் அது உண்மையான அறிக்கையாக இருக்க வாய்ப்பில்லை. நாட்டில் இன்று வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, விலை உயர்வு, பணப் புழக்கம் ஆகிய காரணக் கூறுகளினால் இளைஞர்கள் குற்றவொழுக்கத்தை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் டில்லி, மகாராஷ்டிரம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் இளங்குற்றவாளிகளின் குற்ற எண்ணிக்கை விகிதம் ஆண்டுக்காண்டு உயர்ந்துள்ளது. இதனால் நாட்டில் இளங்குற்றவாளிகளின் போக்கைத் தடுத்து நிறுத்த எவ்வளவு நடவடிக்கை எடுத்தாலும் மற்றக் காரணக் கூறுகளுக்குப் பரிகாரம் காணப்படாத வரையில் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது. மேலே கூறப்பட்ட இளங்குற்றவாளிகளில் பெரும்பாலும் குடும்பத்தால் ஒதுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் என அறிய முடிகிறது. ஆகவே இளங் குற்றவாளிகளைச் சீர்திருத்தம் செய்ய, குற்றத்தைத் தடுக்க முதலில் அவர்களின் வீடுகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்காகச் செயற்படச் செய்தல் வேண்டும், சிறுவகர்ளை ஒதுக்கும் பெற்றோர்கள் தண்டிக்கப்படவேண்டும். அனாதைக் குழந்தைகளைக் கண்டறிந்து சிறு வயதிலிருந்தே அரசாங்கம் தன் பொறுப்பில் வளர்த்து வரவேண்டும். அதற்காக அதிகமான சீர்திருத்த இல்லங்கள், பள்ளிகள், தொடங்குதல் வேண்டும். தமிழ்நாட்டில் மொத்தம் 19 சீர்திருத்த இல்லங்களும் சீர்திருத்தப்பள்ளிகளும்தான் உள்ளன. இளங்குற்றவாளிகளைக் கட்டுப்படுத்த வட்டத்திற்குக் குறைந்தது ஒரு சீர்திருத்தப்பள்ளியாவது இருத்தல் வேண்டும், இளநிலை, முதுநிலைப்பள்ளி அமைத்தல் வேண்டும்.

சில வேளைகளில் தாய்மார்களே தம் இளம் பெண்ணைப் பரத்தைமைத் தொழிலில் ஈடுபடுத்திவிடுவதும் உண்டு. ஆகவே முதியோர் கல்வியை மேலும் வலுப்படுத்துவதுடன் முதியோர்

களுக்கு நீதி, நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றுடன் குழந்தைகளை வளர்த்தல் விதிமுறைகளையும் கற்றுக்கொடுத்தல் வேண்டும்.

இந்தியாவில் இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்த முதன் முதலில் 1876-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த ஆண்டு தான் சீர்திருத்தப்பள்ளிச் சட்டம் (Reformatory School Act) நிறை வேற்றப்பட்டது. ஆனால் 70 ஆண்டுகளுக்கு முன்புதான் இளங் குற்றவாளிகள்மீது அக்கறை காட்டப்பட்டது. 1897-ல் பழைய சீர்திருத்தப்பள்ளிச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிய சீர்திருத்தப் பள்ளிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைப் பின்பற்றித்தான் சிறுவர்கள் சட்டம் (Children's Act) இயற்றப்பட்டது. சிறுவர்கள் சட்டம் இயற்றப்படாத மாநிலங்களில் சீர்திருத்தப்பள்ளிச் சட்டத்தையே பின்பற்றி வந்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் 1920-ல் சிறுவர்கள் சட்டம் இயற்றப்பட்டது. அதைத் திருத்தி 1958-ல் மறுபடியும் நிறைவேற்றப்பட்டது. வங்காளத்தில் 1922-லும், பம்பாயில் 1924-லும் மத்திய மாநிலங் களில் 1928-லும் சிறுவர்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளன. மற்றும் ஆந்திராவில் 1951-லும், அசாமில் 1969 லும். பீகாரில் 1897 சட்டத்தைப் பின்பற்றிப் பின்பு 1969-ல் சிறுவர்கள் சட்டத்தை நிறைவேற்றி உள்ளார்கள். கேரள மாநிலத்தில் தமிழ்நாட்டின் சிறுவர்கள் சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. கர்நாடக மாநிலத்தில் இளைஞர்கள் புகைத்தலைத் தடுக்கும் சட்டம் 1911-ல் இயற்றப்பட்டுள்ளது (The Prevention of Juvenile Smoking Act).

மைசூர் சிறுவர்கள் சட்டம் 1964-ல் இயற்றப்பட்டது. ஒரிசாவில் 1897-ன் சீர்திருத்தப்பள்ளிச் சட்டமே பின்பற்றப்பட்டு வருகின்றது.

பஞ்சாப்பிலும் 1897-ன் சீர்திருத்தத் பள்ளிச் சட்டமே பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் பஞ்சாப் சிறுவர்கள் சட்டம் 1949-ல் இயற்றப்பட்டது. மைசூர், பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களிலும் 'சிறுவர்கள்' என்றால் ஆண் சிறுவர்கள் 16 வயதிற்குள்ளும், பெண் சிறுமிகள் 18 வயதிற்குள்ளும் சிறுவர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஆண் சிறுவர்கள் 18 வயதும் பெண்கள் 21 வயதும் உள்ளவர்களைச் 'சிறுவர்கள்' என்று சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக, எல்லா மாநிலங்களிலும் 7 முதல் 14 வயது வரையில் உள்ளவர்களுக்கு குழந்தை அல்லது சிறுவர்கள் என்றும். 14 முதல் 18 வரையில் உள்ளவர்களை இளங் குற்றவாளிகள் (Youthful Offenders) என்றும் கூறப்படுகிறது.

குஜராத் மாநிலத்தில் 1897-ம் சீர்திருத்தப் பள்ளிச் சட்டமே பின்பற்றி வரப்பட்டுள்ளது. பம்பாய் சிறுவர்கள் சட்டம் 1948-ம் சட்டத்தையே குஜராத்து மாநிலம் பின்பற்றி வருகிறது.

உத்தர பிரதேச மாநிலத்திலும் 1897-ம் ஆண்டுச் சீர்திருத்தப்பள்ளிச் சட்டத்தைப் பின்பற்றி வந்துள்ளது. 1951-ல் உத்தரபிரதேச சிறுவர் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தில்லியின் நேரடி அல்லது மேற்பார்வை ஆட்சியில் இயங்கி வரும் மாநிலங்களான தில்லி, இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, லட்சத்தீவு, அமீன் தீவுகள், வடகிழக்கு எல்லை மாநிலங்கள், அந்தமான் நிக்கோபார் தீவுகள், பாண்டிச்சேரி ஆகியவற்றின், 'சிறுவர் சட்டம்' 1960-ல் இயற்றப்பட்டது. அதைத்தான் பின்பற்றி வருகின்றன.

இந்தியாவில் சீர்திருத்த இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றுடன் இளைஞர் சிறைப்பள்ளி (Borstal School) நிறுவப்பட்டு சிறை அதிகாரிகளின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

அரசாங்கத்தைத் தவிர தனியார்களும் இளங் குற்றவாளிகளுக்கென்று அனாதை இல்லங்கள், பள்ளிகள், ஆகியவற்றை அரசு உதவிபெற்று இயக்கி வருகின்றனர். 100 காவல் வைப்பு இல்லங்களும் (Remand Homes) 75 பள்ளிகளும் உள்ளன.

இந்தியாவில் மாநில வாரியாக மொத்த குற்ற எண்ணிக்கை விவரம் 1967-ல் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. மத்திய பிரதேசத்தில் 3289, மகாராஷ்டிரத்தில் 4906, தமிழ்நாட்டில் 2477, உத்தரபிரதேசத்தில் 1781, பஞ்சாப்பில் 1491, குஜராத்தில் 1702, ராஜஸ்தானில் 1030, மேற்குவங்கத்தில் 729 என்று அறிக்கை கூறுகிறது. மற்றக் காரணக்கூறுகளுடன் மக்கள் தொகையின் வேறுபாட்டினாலும் குற்ற எண்ணிக்கை வேறுபடக் கூடும்.

சிறுவர்களின் குற்றவொழுக்கங்கள் (The Behaviour of the Juveniles)

இளம் வயதில் பல்வேறு காரணக்கூறுகளினுல் நாடோடியாகவும், பிச்சை எடுத்தும், தீயவர்களுடன் இணைந்தும், பள்ளியைவிட்டு நின்று விடுவதும் இப்படிப் பல காரணங்களுக்காகச் சிறுவர்கள் கடமையைத் தவறிய குற்றத்திற்காகச் சீர்திருத்த இல்லங்களிலோ, பள்ளிகளிலோ தடைப்படுத்தி வைக்கப்படுகின்றுர்கள். உண்மையில் கூறப்போனுல் இவர்கள் குற்றம் புரியாதவர்கள். அப்படியே புரிந்திருந்தாலும் அதற்கு மற்றவர்கள்தாம் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள். பெற்ருேர்கள் இல்லாததனுலும், பெற்ருேர்கள் கைவிட்டதனுலும், பெற்ருேர்கள் குற்றவொழுக்கத்தில் ஊறிவிட்டிருப்பதனுலும் இளம் சிறுவர்களுக்கும் சுற்றுச் சூழ்நிலையால் குற்றவொழுக்கம் உருவாகிவிடுகிறது. அதைத் தடுப்பதற்காக அவர்களைத் திருத்தப்பள்ளிக்கோ அல்லது திருத்த இல்லங்களுக்கோ அனுப்பப்படுகின்றுர்கள். அந்த இல்லங்களில் தடைப்படுத்தி வைத்திருந்து அவர்களுக்குக் கல்வி, பயிற்சி, நல்லொழுக்கம், உணவு, உடை ஆகியவை அளிக்கப்படுகின்றன. சில காலம் கழித்து விடுவிக்கப்படுகின்றுர்கள். அப்படிப் பயிற்சி பெற்றுச் சென்ற இளவல்கள் மீண்டும் குற்றவொழுக்கத்தில் ஈடுபடாமல் நல்லவர்களாக விளங்குகின்றுர்களா என்பதை ஆராய்ந்து அறியப்பட்டதில் அவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழவில்லை. குற்றவொழுக்கத்துடன் குற்றங்கள் புரிந்து வருகின்றுர்கள் என்று கீழ்க்காணும் அறிக்கை விளக்குகிறது.

பாஸ்டனில் 800 இளங் குற்றவாளிகளை ஆராய்ந்ததில் அவர்கள் வயதடைந்த பிறகும் அவர்களில் 24·6 சதம் குற்ற நீதிமன்றங்களில் குற்ற விசாரணைக்காக நிறுத்தப்பட்டுள்ளவர்கள் என்று ஹீலியும், பிரோனரும் (Healy & Broner) தங்கள் அறிக்கையில் கூறியுள்ளார்கள். மற்ருெரு அறிக்கையில் சிகாகோ நகரத்தில் 420 இளைஞர்களில் 61 சதம் மீண்டும் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள், 16 சதம் குற்ற வாழ்க்கைத் தொழிலர்களாக மாறியுள்ளார்கள். 5 சதம் கொலைக் குற்றம் புரிந்துள்ளார்கள். மற்ருெரு அறிக்கையில் 1,000 இளங் குற்றவாளிகளில் 88·2 சதம் வயதடைந்தவுடன் மீண்டும் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று அறிவிக்கிறது. பிறிதொரு அறிக்கையில் 500 இளங் குற்றவாளிகளில் 80·6 சதம் மீண்டும் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கூறுகிறது. ஓகியோ (Ohio) மாநிலத்தில் 1943-1947 வரையில் மொத்தம் 1,01,043 இளங் குற்றவாளிகளில் 42·7 சதம் மறுபடியும் குற்றங்களைப் புரிந்துள்ளார்கள். மேலே கூறப்

பட்ட குற்றப் புள்ளி விவர அறிக்கையினுல் இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பயிற்சியினுல் நல்லொழுக்கம் பெறவில்லை. இளைஞர்கள் தொடர்ந்து வறுமை, ஏழைமை, வேலையின்மை, வாழ்க்கையில் வசதியின்மை நம்பிக்கையின்மை ஆகியவற்றை எதிர் நீச்சல் அடிக்கவேண்டியுள்ளதாலும், சமுதாயமும் அவர்களைப் புறக்கணித்து வருவதனுலும் அவர்களின் குற்றவொழுக்கத்தில் மாற்றம் அடையவில்லை.

மேலே கொடுக்கப்பட்ட குற்றப் புள்ளி விவரங்களில் இளங் குற்றவாளிகளாக விளங்கியவர்களில் குறைந்தது 25 சதம் மீண்டும் குற்றத்தில் ஈடுபட்டுள்ளார்கள். சில அறிக்கையில் 42·7 சதம், 61 சதம், 68·2 சதம் என்றும் காணப்படுவதனுல் இளங் குற்றவாளிகள் திருத்தப்படாத சூழ்நிலையில் உள்ளார்கள். அல்லது திருந்தா நிலையில்தான் உள்ளார்கள் என்று அறியமுடிகிறது. இளங் குற்றவாளிகளில் பெரும்பாலோர் வீடின்றி, பாதுகாப்பின்றி, வாழ்க்கைக்குப் பொருள் உதவியின்றி, நல்ல வழிகாட்டியின்றி வாழ்கின்ருர்கள். ஆகவே அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியோ, தொழிற் பயிற்சியோ, ஒழுக்கமோ போதுமானதாக இல்லாமல் இருப்பதுடன் பயிற்சி பெற்ற பின்பு அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காவிட்டால், அவர்கள் கற்ற கல்வியும், தொழிற் பயிற்சியும் வீணுகிவிடுகின்றன. அத்துடன் இளமையில் வறுமை கொடுமைப்படுத்துகிறது. இளமைப் பருவத்தில் நீதியைப்பற்றியும், நேர்மையைப்பற்றியும், ஒழுக்கத்தைப்பற்றியும் போதித்தால் அமைதியற்ற சூழ்நிலையில் அவர்கள் அவற்றை எப்படி ஏற்றுக்கொள்வார்கள் ? அவர்கள் எண்ணமெல்லாம் நாளையபொழுது எப்படிக் கழியும் என்று எண்ணி ஏங்குகின்றன. ஆகவே, இளைஞர்களின் வறுமையைப் போக்க அரசாங்கம் முதலிலே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முதியவர்கள் வறுமையில் வாழ நேர்ந்திட்டாலும் அவர்கள் குற்றவொழுக்கத்தில் குற்றச் செயல் புரிவதற்குத் துணியமாட்டார்கள். அதைவிட அவர்கள் தற்கொலை செய்துகொள்ள விரும்புவார்கள். அவர்கள் வாழ்ந்தவர்கள், ஒழுக்கத்திற்காக உயிரை விட்டுவிடுவார்கள். சமுதாயம் அவர்களை மதிக்கிறது. அந்த மதிப்பை அவர்கள் கெடுத்துக்கொள்ள விழைவதில்லை. இவ்வளவு காலம் நல்லவர்களாக வாழ்ந்துவிட்டு முதுமையில் ஏன் குற்றவொழுக்கத்தில் ஈடுபடவேண்டும் என்ற உள்ளுணர்வு அவர்களுக்கு உண்டு. வறுமையிலும் மானத்தோடு, கௌரவத்தோடு வாழவேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். ஆனுல் இளம் உள்ளங்கள், சமுதாயத்தில் வாழப் பிறந்தவர்கள், வளமான வாழ்வை எதிர் நோக்கிக்கொண்டிருப்பவர்கள், வறுமையைத் தாங்கிக்கொள்ளும்

சக்தி இளம் உள்ளங்களுக்கு இல்லை. சமுதாயத்தின் மதிப்பையும், கௌரவத்தையும் ஆராயும் அமைதியோ, சக்தியோ இருப்பதில்லை. மற்ற இளைஞர்களைப்போல வாழ வேண்டும், இன்பமாக இருக்கவேண்டும். அதற்காக அவர்கள் துன்பத்தையும் பொருட்படுத்துவது இல்லை. இளைஞர்களிடத்தில் துடிப்பு, ஆவேசம், எதிர்க்கும் எண்ணம், உறுதி ஆகிய பண்புகள் காணப்படுமே தவிர சிந்தனை இருக்காது.

ஆகவே நாட்டில் மக்கள் வளர்ச்சிக்கு ஏற்றவாறு சீர்திருத்த இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், நீதிமன்றங்கள் முதலியன அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன் சீர்திருத்தப் பள்ளிகள் இல்லங்கள் என்ற பெயர்களில் ஒப்புக்காகச் செயற்படாமல் உண்மையாகச் செயற்படவேண்டும். அங்குப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத்தான் முதலில் வேலை வாய்ப்பு என்ற நிலை உருவாக வேண்டும். அந்த அளவிற்கு இல்லங்களின் தரம் உயர்த்தப்படல் வேண்டும். அனாதைகள், சிதறிய குடும்பத்திலிருந்து வரும் சிறுர்கள், ஏழைச் சிறுவர்கள் ஆகியோருக்குத் தக்க கல்வி அளித்து அவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தி விடவேண்டும்; அல்லது வேலைவாய்ப்பு அளித்தல் வேண்டும். அவர்கள் வெளியில் சுற்றித் திரியும் வரையில் அவர்கள் தொடர்ந்து சமுதாயத்திற்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

மேலும், ஆறு வயதிற்குட்பட்ட சிறுவர்களும் குற்றம் புரிகின்ற நிலை இன்று உருவாகிவிட்டது. இந்த நிலை மேலும் வளர்ந்தால் நாட்டில் குற்றவொழுக்கம் பெருகி, கலகம், புரட்சி, போராட்டம் என்று வளர்ந்துவிட ஏதுவாகும்.

இதற்கு ஆதரவாக நாளும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. மீரட்டில் (Merut) கல்லூரி மாணவர்கள், பட்டதாரிகள், சட்டம் பயின்றவர்கள் உட்பட இணைந்து கொள்ளைக் குற்றம், கூட்டுக் கொள்ளைக் குற்றம், வழிப்பறிக் கொள்ளை ஆகிய குற்றங்கள் புரிந்துள்ளார்கள். பட்டதாரிகள் இருவர் வங்கியில் கொள்ளையிட்டுச் செல்லும்போது 'வருந்துகிறோம் எங்கள் செயலுக்கு; ஆனால் வேலையற்ற பட்டதாரிகள்' என்று கூறியுள்ளார்கள். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது கொடிய நோயாகும். அது உடனடியாகத் தடுக்கப்படவில்லை என்றால் 'புரட்சி' என்ற பெயரால் பெரிய போராட்டம் வெடித்து அது சமுதாயத்தையே விழுங்கிவிடும். இதை உணர்ந்து அரசாங்கம், பொதுமக்கள் ஆகியோர் செயற்பட வேண்டும். இளம் குற்றவாளிகள் உருவாவதைத் தடுத்துவிட்டால் நாளை

குற்ற நீதிமன்றத்தின் பணிவும் குறைந்துவிடும். குற்றச் சிறுர் நீதிமன்றங்கள் இளம் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் இடமாக மட்டும் இல்லாமல் குற்றவாளி திருந்தியவுடன் அவனுக்குத் தகுந்த வேலைவாய்ப்புத்தேடி அளிக்க முன்வரவேண்டும்.

இன்றைய தேவைக்கேற்றவாறு திட்டங்களைத் தீட்டாமல் வருங்கால இளவல்களின் தேவைகளைக் கணக்கிட்டுத் திட்டங்கள் வகுப்படவேண்டும். அதற்கேற்ற கல்வி நிறுவனங்கள், தொழிற் சாலைகள், உணவு உற்பத்தி, நோய்த் தடுப்பு முறைகள், வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு ஆகியவற்றைச் செயற்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் குற்றச்சட்டம் பயனற்றதாகிவிடும் என்று கூறத் தேவையில்லை.

குற்றச்சிறுர் நீதிமன்றங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும். தற்சமயம் குற்ற நீதிமன்றங்களிலேயே நீதிமன்ற விடுமுறை நாட்களிலோ அல்லது குற்ற விசாரணை நடைபெருத நாட்களிலோ இளங் குற்றவாளிகள் விசாரணை நடத்தப்பட்டு வருகின்ருர்கள். இதில் சிறிது மாற்றம் தேவை. குற்றச் சிறுர் நீதிமன்றங்களுக்கென தனியாக நீதிபதிகளை நியமித்தல், அனுபவம், ஆற்றல், வயது ஆகியவற்றில் முதிர்ந்தவர்களைக் குற்றச் சிறுர் நீதிபதிகளாக நியமித்தல் வேண்டும். அவர்கள் முழுநேரம் பணியாற்றுபவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும். இதில் அரசியல், சாதி, மதம், மற்றச் சமுதாயச் செல்வாக்கு ஆகியவற்றிற்கு இடமளிக்காமல் இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்தும் உன்னதமான பணியை மேற்கொள்ள வேண்டும். இளைஞர்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி சமுதாயத்திற்கேற்ற குடிமக்களாக உருவாக்குதல் வேண்டும். கல்வி முறையில் மாற்றம் செய்து குழந்தைகள் விரும்பிக் கற்கும் வண்ணம் திட்டம் அமைத்தல் வேண்டும். இளங்குற்றவாளிகளின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய குற்றச்சிறுர் நீதிபதிகளுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்,

17. முதன் முறைக் குற்றவாளிகளுக்கு நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலை அல்லது நன்னடத்தை உறுதி மொழி விடுதலை

(Probation)

குற்றம் புரிந்தவர்களைக் காவல்துறை அதிகாரிகள் குற்றம் சாட்டி அவர்களை நீதிமன்றத்தில் குற்ற விசாரணை செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டால் குற்றத்திற்குரிய சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டையுமோ விதித்துத் தீர்ப்பு வழங்குகின்றார் குற்ற நீதிபதி. குற்றம் நிரூபிக்கப்படாவிட்டாலும் குற்ற வழக்கைத் தள்ளுபடி செய்து குற்றவாளிக்கு விடுதலை அளித்துத் தீர்ப்பு கூறுகிறார் நீதிபதி. விடுதலை அடைந்த குற்றவாளி சுதந்திரமாகச் செல்லலாம். தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆனால் சில வேளைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டாலும் குற்றவாளிக்குத் தண்டனை வழங்காமல் கடும் எச்சரிக்கை விடுத்து நன்னடத்தை உறுதி மொழியில் விடுவிக்கப்படலாம். தண்டனை தணிப்புக்குரிய சுற்றுச் சூழ்நிலையில் (Mitigating Circumstance) குற்றம் புரிந்திருந்தாலும் குற்றவாளி நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலைச் சட்டத்தின் (The Probation of Offences Act, 1958) உதவியால் விடுதலை கோரலாம். ஆனால் முதன் முறைக் குற்றவாளிகளாக இருத்தல் வேண்டும். அவர்கள் புரிந்த குற்றம் மரண தண்டனை வழங்கக் கூடியதாகவோ, ஆயுள் தண்டனை வழங்கக் கூடியதாகவோ இருத்தல் கூடாது. அத்துடன் நன்னடத்தையுடன் நடப்பேன் என்று குற்றவாளிகள் எழுத்து மூலமாக உறுதிமொழி எழுதி நீதிபதிக்குக் கொடுக்க வேண்டும்; அல்லது குற்றவாளி நன்ன

டத்தையோடு நடப்பான் என்று அவனுடைய உறவினர்கள் அல்லது நண்பர்கள் நன்னடத்தை உறுதிமொழி எழுதிக் கொடுத்தல் வேண்டும். மேற்கூறியவற்றுடன் குற்றம் புரிந்த சூழ்நிலை, குற்றவாளியின் ஒழுக்கம், நடத்தை, போக்கு ஆகியவற்றையும் ஆராய்ந்து நன்னடத்தைச் சோதனை முறையில் செல்ல அனுமதிக்கப்படும்.

குற்றம் புரிந்தால் தண்டனை வழங்கப்படவேண்டும் என்பது குற்றச் சட்டத்தின் கொள்கையாகும். ஆனால் குற்றவாளிகளுக்கு நன்னடத்தையின் உறுதிமொழியின் மீது விடுதலை அளிப்பது தண்டனையற்ற இயல்பாக உள்ளது. குற்றச் சட்டத்திற்கு முரணாகவும் காணப்படுகிறது. சீர்திருத்துவது தண்டனைக் கொள்கை என்ற அடிப்படையில் குற்றவாளியைச் சீர் திருத்துவதற்கு இம்முறை மிகவும் ஏற்றதாகும். தண்டனை வழங்கப்பட்டாலும் அதைச் செயற்படுத்தாமல் குற்றவாளி கட்டுப்படுத்தப்படுகின்றான். குற்றவாளி விதிக்கப்பட்ட கட்டுப் பாட்டை மீறினால் வழங்கப்பட்ட தண்டனையை அனுபவிக்க வேண்டும். ஆகவே தண்டனை அனுபவிக்கவில்லை என்றாலும் குற்றவாளி அச்சத்துடன், நன்னடத்தையுடன் ஒழுகுவதற்கு ஏற்றவாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நன்னடத் தைச் சோதனைமுறை விடுதலை என்பது 'தண்டனை' தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது பொருள். சில கட்டுப்பாடுகளுடன் வழங்கப்பட்ட தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதுடன் குற்றவாளியைக் கண்காணித்தல் குற்றவாளிக்கு உதவி செய்தல் ஆகிய கடமைகளும் நீதி மன்றத்திற்கு உண்டு. குறிப்பாகக் குற்றவாளி திருந்துவதற்கு வேண்டிய எல்லா ஆதரவையும் நல்குவது நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையின் சிறப்புச் செயலாகும். மேலும் முதன் முறைக் குற்றவாளிகள் சூழ் நிலையின் வற்புறுத்தலினால், முன் கோபத்தினால், உணர்ச்சி வயப்பட்ட நிலையால் குற்றம் புரிந்துவிட்டுப் பிறகு அதற்காக வருந்தப்படும் குற்றவாளிகளுக்கு நன்னடத்தைச் சோதனை விடுதலை அளிப்பது என்பது மிகவும் பொருத்தமாகும். குற்றவாளி மேலும் கடும் குற்றவாளியாக மாறாமல் தடுப்பதற்கு ஏதுவாகும். நன்னடத்தைச் சோதனை விடுதலை அளிப்பது என்பது நீதிமன்றத் திற்கும் குற்றவாளிக்கும் இடையே ஏற்படும் இணக்கமான உடன் படிக்கையாகும். அந்த உடன்படிக்கையை மீறிவிட்டால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் தண்டனை உடனடியாகச் செயற் படுத்தப்படும். நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலையில் குற்றவாளிகளை விடுவிப்பதால் அவர்கள் தங்களின் தொழில்களைத் தொடர்ந்து செயலாற்ற முடிகிறது. குடும்பங்கள் பாதிக்கப்படுவ

தில்லை. குற்றவாளிக்குக் சிறை சென்ற 'கைதி' என்ற கறை சமுதாயத்தில் படாதவாறு காப்பாற்றப்படுகிறது. சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் தொடர்ந்து குற்றவாளிக்குக் கிடைக்கின்றன.

சில வேளைகளில், முதன் முறைக் குற்றவாளிகள் திருட்டுக் குற்றம் அல்லது இரண்டு ஆண்டுச் சிறைத் தண்டனை வழங்கும் குற்றங்களைப் புரிந்தவர்களுக்குக் கடும் எச்சரிக்கைவிடுத்து விடுதலை அளிக்கப்படுகின்றது. அதற்கு எச்சரிக்கை விடுதலை (Admonition) என்று பெயர். இதற்கும் குற்றவாளி நன்னடத்தை உறுதி மொழியை வாய்மொழியாகவோ அல்லது பத்திரம் மூலமாகவோ எழுதிக் கொடுத்தல் வேண்டும். குற்றவாளியிடமிருந்து மூன்று ஆண்டுக்காலம்வரையில் நன்னடத்தை உறுதி மொழி கோரலாம். ஆனல் இவர்களை நீதிமன்றம் கண்காணிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனல் ஆறுமாதம் அல்லது ஓர் ஆண்டுக் காலம் வரையிலும் நன்னடத்தை கோரப்படலாம். ஆனல் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் (Probation) நன்னடத்தையின் உறுதிக் காலம் வரையறுக்கப்படுவதில்லை. நீதிமன்றம், நன்னடத்தைப் பொறுப்பு அலுவலர் (Probation Officer) ஆகிய இருவரும் குற்றவாளிகளின் குற்றத்தின் கடுமை, குற்றவாளியின் தன்மை, தண்டனையின் அளவு ஆகியவற்றைப் பரிசீலனை செய்து பிறகுதான் நன்னடத்தைச் சோதனையின் காலத்தை முடிவு செய்யப்படும். நன்னடத்தை உறுதி மொழி விடுதலையில் பலவகை உண்டு. நீதிமன்றத்தில் குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டனை வழங்கி விடுதல், பிறகு வழங்கப்பட்ட தண்டனையைச் செயற்படுத்தாமல் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் ஒரு வகை. இரண்டாவது வகையானது குற்றம் நிரூபிக்கப்பட்டும் குற்றத்திற்குரிய தண்டனை அளவை வரையறுக்காமல் குற்றவாளியை நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதித்தல், இவ்விரு வகைகளில் முதல் வகையான முறையைப் பல நாடுகள் பின்பற்றுகின்றன. இரண்டாம் வகையான முறையைச் சில நாடுகள் பின்பற்றுகின்றன. சில நாடுகளில் இரண்டு வகைகளுமே செயற்பட்டு வருகின்றன. குற்றத்திற்குரிய தண்டனையின் அளவை வரையறுத்துக் கூறப்பட்ட பின்பு குற்றவாளியை நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் அனுமதிக்கப்பட்டால். வழங்கப்பட்ட கட்டுப்பாட்டை, விதிமுறையை மீறப்பட்டுவிட்டால் குற்றவாளி ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்டனையை அனுபவித்தல் வேண்டும். இதில் நீதிபதிக்குப் புதியதாக தண்டனை வழங்க வேண்டிய அவசியமில்லை. ஆனல் குற்றம் நிரூபிக்கப்பட்டு அதற்குரிய

தண்டனையின் அளவைக் கூருமல் குற்றவாளியை நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்பட்டால், குற்றவாளி விடுதலையின் கட்டுப்பாட்டை மீறிவிட்டால், புறக் கணித்துவிட்டால் குற்றவாளியைக் கைது செய்து மீண்டும் நீதிமன்றத்தில் நிறுத்துதல் வேண்டும். நீதிபதி குற்றத்தின் கடுமை, குற்றவாளியின் தன்மை, கட்டுப்பாட்டை மீறியதின் எதிரொலி ஆகியவற்றை மனத்தில் கொண்டு குற்றவாளிக்குத் தண்டனை வழங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்ருர். ஏற் கெனவே புரிந்த குற்றத்திற்காகத்தான் தண்டனை வழங்கப் படுமே தவிர, நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையின் கட்டுப்பாட்டை மீறிய குற்றத்திற்கு அல்ல என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனுல் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்பட்டு தண்டனை யின் ஒரு பகுதியைச் சிறையில் கழித்து விட்டுப் பிறகு நன்னடத் தையை ஆராய்ந்து அறிந்து தண்டனையின் மற்றக் காலத்தை அனுபவிக்காமல் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும்படி நீதிபதி தீர்ப்பு வழங்கினுல் அது சட்டத்திற்கு முரணுனதாகும். தண்டனையின் ஒரு பகுதிக் காலத்தைச் சிறையில் அனுபவித்துவிட்டுப் பிறகு கைதியின் நன்னடத் தையைப் பொறுத்து, சிறை அதிகாரிகள் எஞ்சியுள்ள காலத்தை நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் (Parole) நீதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே, நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுதல் முறையான, தீர்ப்பை நீதிபதி வழங்கினுல் அது சட்டத்திற்கு முரணுன தீர்ப்பாகும் (Illegal). நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கும் உரிமை உள்ளவர்கள் சிறை அதிகாரிகள்தாம். சிறையில் கைதியின் ஒழுக்கம், நடத்தை, போக்கு, ஆகியவற்றைக் கண் காணித்து வந்தபிறகு குற்றவாளி குற்ற ஒழுக்கத்தை மறந்து நல் லொழுக்கத்தில் ஈடுபட்டு வந்தபிறகு குற்றவாளியைச் சிறைத் தண்டனையின் காலம் முடியும் முன்பே விடுதலை அளிப்பதனுல் சமுதாயத்திற்குத் தீமை இல்லை என்ற நிலை உருவான பிறகு கைதிக்கு அளிக்கப்படும் தனிச் சலுகையாகும். மேற்கூறப்பட்ட குற்றவாளியின் பண்புச் சிறப்பு இயல்புக் கூறுகளை ஆராய்ந்து அறிவதற்கு முன்பே நீதிபதி இரண்டு ஆண்டுச் சிறைத் தண்டனை காலங்களில் ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்து விடு தலையில் செல்லலாம் என்று இரண்டு விதமாகத் தீர்ப்பு அளிக்கப் பட்டால் நன்னடத்தைச் சோதனை முறையில் விடுவித்தல், (Probation) என்ற கருத்துக்கும், நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுதல் (Parole) என்ற கொள்கைக்கும் வேறுபாடு

இல்லாமல் போய் விடுகின்றது. நன்னடத்தைச் சோதனை முறை விடுவித்தல் (Probation) நீதிமன்றத்தில் தீர்ப்பாக அளிக்கப்படு கின்றது. நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் சிறைச்சாலையில் சிறை அதிகாரியினால் கைதிக்குச் சலுகையாக அளிக்கப்படுகிறது. கைதிக்கும் சிறை அதிகாரிக்கும் உள்ள பரஸ்பரத்தினால் சலுகை கிடைக்கிறது.

1956-ல் கலிஃபோர்னியாவில் (California) சிறைத் தண்டனை வழங்கப்பட்டதில் 45 சதம் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மூன்று நகரங் களில் மட்டும் 80 சதம் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை அளிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற எட்டு நகரங்களில் கொள்ளைக் குற்றவாளிகள் அனைவருக்கும் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை மூலம் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இந்தியாவில் தமிழகத்தில் 1970-ம் ஆண்டில் மொத்தம் 1,45.073 குற்றவாளிகளும் (சிறியவர், பெரியவர் உட்பட) 1969-ல் 1,20,941 குற்றவாளிகள் (சிறியவர், பெரியவர் உட்பட) நன்னடத்தைச் சோதனை முறை விடுதலில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

நன்னடத்தை உறுதிமொழி விடுதலையின் வரலாறு (The History of Probation)

குற்றவாளியை மன்னித்து அல்லது கண்டித்து விடுதலை அளிக்கும் முறை ஆதிகாலந் தொட்டே இருந்து வருகின்றது. குற்றம் சாட்டப்பட்டவர் சமுதாயத் தலைவன் முன்பு அல்லது அரசன் முன்பு அல்லது குழு முன்பு நிறுத்தப்பட்டுக் குற்ற விசாரணை நடத்தப்பட்டு இறுதியில் குற்றவாளியின் தன்மை, குற்றத்தின் தன்மை, குற்றத்தின் கடுமை, சுற்றுச் சூழ்நிலை ஆகிய வற்றைக் கூர்ந்து ஆராய்ந்து இறுதியில் குற்றவாளியைக் கண்டித்து மன்னித்து விடுதலை அளிப்பதுண்டு. இந்தியாவில் தமிழகத்திலும் மற்ற மாநிலங்களிலும் இம்முறை காணப்படு கின்றது. முரசு கட்டிலில் அமர்ந்து உறங்கிய மோசிகீரனைக் கொலை செய்யாது அவரது தூக்கம் கலையாதவாறு களைப்புத்தீர உறங்க ஏதுவாக விசிறியை எடுத்துவீசி குளிர்ச்சியை உண்டாக் கினான் நெடுஞ்சேரலாதன் என்று இலக்கியவரலாறு கூறுகிறது. மேலும். பிள்ளைகள் குற்றம் புரிந்துவிட்டால் அதற்காகப் பெற்றோர் கள் மன்னிப்புக்கோரி பிள்ளைகளைக் கண்டித்து மன்னித்து விடும் படி வேண்டுவது சர்வசாதாரணமாகும். பிள்ளைகள் நன்னடத் தைக்குப் பெற்றோர்கள் உறுதியளிக்கின்றார்கள். மாணவர்கள்

குற்றச் செயலுக்காக ஆசிரியர்கள் வருந்தி நன்னடத்தை உறுதி மொழியில் கண்டித்து விட்டுவிடுதல்போன்ற நிலைகள் உண்டு. அதேபோன்று, மேலை நாடுகளில் மதப் பெரியவர்கள், சமயத் தலைவர்கள், மதத்தலைவர்கள் குற்றவாளியைக் கண்டித்து நன்னடத்தையில் ஒழுகும்படி எச்சரிக்கை விடுத்து குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப்பட்டு வந்துள்ளது. தண்டனை நிறுத்தி வைக்கப்படுவதுமுண்டு. ஆனால், மேலே கூறப்பட்ட முறைகள் யாவும் தற்காலத்து நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலையைப் போன்று அமைந்திருக்கவில்லையென்றாலும் நன்னடத்தைச் சோதனை முறையில் குற்றவாளிக்கு விடுதலை முறை தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்குவதாகும். இங்கிலாந்தில், நாட்டு மரபுச் சட்டம் (Common Law) செயற்பட்டபோது அதிகமான குற்றவாளிகள் தண்டனை அடைந்தும் அவர்களின் தண்டனையைச் செயற்படுத்தாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதாவது சில காலம் வரையில் அவர்கள் நன்னடத்தையில் ஒழுகவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது, குற்றவாளிகள் குவிந்துவிட்டபோதும் அல்லது சிறு கலகக் குற்றங்கள் புரிந்து சிறையில் இடம் கொள்ளாத அளவிற்கு குற்றவாளிகளின் தொகை காணப்படும்போதும் குற்றவாளிகள் நன்னடத்தையில் விடுதலை பெற அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே சிறையில் இடம் இல்லாத (போதாத) காரணத்தினாலும் நன்னடத்தை உறுதி மொழியின் விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட சூழ்நிலையால் விடுதலை அளிக்கப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தையோடு ஒழுகியதனால் இம்முறை மேலும் வளர்ச்சியடைந்து அதையே சட்டத்திலும் வரையறுக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, 1841-ல் ஜான் அகஸ்டஸ் (John Augustus) என்பவர் ஒரு காலணி செய்யும் தொழிலாளி (Shoe Maker) இருந்தார். அவர் தண்டனை வழங்கப்பட்ட ஒரு குடிகாரனுக்காக நன்னடத்தை உறுதி மொழியைப் (Surety) பிணையமாக எழுதிக்கொடுத்து அவனுக்குக் கட்டுப்பாடான விடுதலை பெற்றார். காவல் துறை நீதிமன்றத்திலிருந்து விடுதலை அடைந்த அந்தக் குற்றவாளி குடிப்பதை மறந்து, அறிவு தெளிந்து, உழைக்கும் குடிமகனாக மாறிவிட்டான். அந்தக் குற்றவாளி ஜான் அகஸ்டசின் கண்காணிப்பில் இருந்து வந்தான். முதல் குற்றவாளியின் நன்னடத்தையாலும். அவனுடைய திறமையாலும், மகிழ்ந்த ஜான் அகஸ்டஸ் மேலும் பல குற்றவாளிகளுக்குக் கட்டுப்பாடான விடுதலை பெற முன் வந்தார். இப்படியாக 17 ஆண்டுகளில் 1152 ஆண்களுக்கும் 794 பெண்களுக்கும் நன்னடத்தையின் உறுதிமொழியின் மீது விடுதலை பெற்று அவர்கள் திருந்தி வாழ

நன்னடத்தையில் ஒழுக உதவி செய்துள்ளார். மற்ற எண்ணற்ற குற்றவாளிகளும் விடுதலை பெற உதவி புரிந்துள்ளார். இவரைப் பின்பற்றி நல்ல மனம் படைத்த நல்லோர்கள் பலரும் குற்ற வாளிகள் நன்னடத்தை உறுதிமொழியில் செல்ல உதவி செய் தார்கள். ஆனால் தொடக்கத்தில் சாதாரண குற்றங்கள் புரிந் தவர்களுக்கு மட்டும் இவ்வாறு விடுதலை பெறப்பட்டது. தனிப் பட்ட சான்றோர்கள் பலர் முன்வந்து குற்றவாளிகள் திருந்து வதற்குப் பாடுபட்டார்கள். அதன் பலனாக நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையும், நன்னடத்தைப் பொறுப்பு அலுவலர் கள் நியமிக்கச் சட்டம் இயற்றப்பட்டது. அரசாங்கத்தால் நியமிக் கப்பட்ட நன்னடத்தைப் பொறுப்பு அலவலர்கள் (Probation Officers) சான்றோர்களைப் போன்று குற்றவாளிகளைக் கண் காணித்து நல்லொழுக்கத்துடன் ஒழுகும்படி மேற்பார்வையிட்டு வந்தார்கள்.

1869-ல் இதை ஆராய்ந்தறிந்த மசாசுசெட்ஸ் (Massachu setts) அரசாங்க அதிகாரிகள் இளங் குற்றவாளிகளின் பாதுகாப்புப் பொறுப்பைத் தனியார் குடும்பங்கள் கண்காணித்துவரும் வண்ணம் சட்ட மன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது. இது நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலையாகும். இதன்படி 1869-70-ல் பாஸ்டன் (Boston) நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட இளங் குற்றவாளிகளில் 23 சதம் நன்னடத்தை உறுதிமொழியில் விடுதலை அளிக்கப்பட்டு தனியார்களின் கண்காணிப்பில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் 1878-ல் தான் ஊதியம் வழங்கப் பட்ட நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப் பட்டார்கள். எல்லா நகராட்சி நீதிமன்றங்களும் ஊதியம் பெறும் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளின் மேற்பார்வையில் குற்ற வாளிகளை ஒப்படைக்கும் உரிமை வழங்கப்பட்டது. 1880-ல் மாநிலத்தின் மற்றப் பகுதிகளிலும் செயற்பட சட்ட மன்றம் உரிமை வழங்கியது, 1891-ல் கீழ்நீதிமன்ற நீதிபதிகள் நன்ன டத்தைப் பொறுப்பு அதிகாரிகளை நியமிக்க அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

1917-ல் அமெரிக்காவில் 22 மாநிலங்களில் வயதடைந் தவர்களுக்கும் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை அளிக்க அனுமதி அளித்தது. அல்லது தண்டனையை நிறுத்தி வைக்க அனுமதி அளித்தது, இம் முறையில் நகர்ப்புறங்களில் வாழும் குற்றவாளிகள் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை பெற முன்வந்தார்கள். பிறகு கிராமப்புறங்களுக்கும் இம்முறை பரவியது. 1925-ல் நன்னடத்தைச் சோதனை முறை

விடுதலை அளிக்கக் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கும் (Federal Courts) உரிமை வழங்கப்பட்டது. ஆனால் சில நீதிமன்றங்கள் இந்த அதிகாரம் பெறுவதற்கு முன்பே செயற்படுத்தி வந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஐரோப்பாவில் உள்ள அநேக நாடுகளில் தண்டனையை நிறுத்தி வைக்க உரிமை அளிக்கச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் 1953-ல் எல்லா மாநிலங்களிலும் இளைஞர், முதியோர் ஆகிய இருதரப்பினருக்கும் நன்னடத்தைச் சோதனை முறையில் விடுதலை அளிக்கச் சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. ஆனால் மிசிசிபி (Mississippi) மாநிலத்தில் மட்டும் முதியோருக்கான நன்னடைத்தைச் சோதனை முறை விடுதலை வசதி அளிக்கச் சட்டம் இயற்றப்படவில்லை.

இந்தியாவில் 1958-ல் நன்னடைத்தைச் சோதனை முறையான விடுதலைச் சட்டம் இயற்றப்பட்டது. சிறுவர்கள் சட்டம் (Children's Act) அந்த மாநிலங்கள் பல்வேறு காலங்களில் இயற்றி வந்துள்ளதை முன்பே கூறப்பட்டுள்ளது. சிறுவர்கள் சட்டத்திலேயே நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளின் கடமை வரையறுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும் குற்றவாளிகள் சட்டத்திலும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது (The Probation of Offenders Act, 1958).

அமெரிக்காவில் உள்ள 3,072 நகரங்களில் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை உரிமையைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் போதிய அளவு நியமிக்கப்படாததனாலும், அவர்களுக்குக் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டதனாலும், சிலர் பகுதி நேர அதிகாரிகளாகப் பணிபுரிந்த காரணத்தினாலும் நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலை செயற்படுத்தப்படவில்லை. ஆனால் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் மொத்த வழக்கில் 20 சதத்திற்கு மேல் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல குற்றவாளிகளை அனுமதிக்கப்பட்டுள்ளது.

நன்னடத்தை, உறுதிமொழி விடுதலையின் அமைப்பு முறைகளும் அதன் பணிகளும் (The Organisation of the Probation and its functions)

நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையான உரிமையை நீதிமன்றம் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருப்பதுடன் அதைத் தனிப்பட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்

பட்டுள்ளது. நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலை என்பதே தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தல் அல்லது தண்டனை வழங்கப்படாமல் நன்னடத்தைச் சோதனை முறையில் விடுதலை அளித்தல் என்ற அடிப்படையில் இது இயங்கிவருவதால் அந்தக் காலம் வரையில் நீதிமன்றங்களின் பணியும் கட்டுப்பாடும் தொடர்கின்றன. நன்னடத்தைச் சோதனை முறையில் விடுதலை அடையும் குற்றவாளி விடுதலையின் கட்டுப்பாட்டை மீறினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தண்டனை அல்லது குற்றத்திற்குரிய தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. நீதிமன்றத்தில் குற்றவாளி, நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரி, நீதிமன்றம் ஆகியோர்களுக்குள் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே, நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளை நியமிக்கும்உரிமையையும் சிலநாடுகளில் நீதிமன்றங்கள் வைத்துக் கொண்டுள்ளன. சில நாடுகளில் அரசாங்கம் நியமிக்கிறது. நீதிமன்றங்களே குற்றவாளி களின் கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் வைத்துக் கொண் டிருப்பதனால் சிலர் இந்த உரிமையைக் குறை கூறுகின்றார்கள். மேற்பார்வையிடுதல், கண்காணித்தல் ஆகிய பணிகள் ஆட்சி முறை சார்ந்ததாகும். நீதித் துறையைச் சார்ந்ததல்ல. நன்னடத் தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும் குற்றவாளிகளைக் கண்காணிக்க, மேற்பார்வையிட, நீதிமன்றங்களைவிட சிறைச் சாலைகள் அல்லது சீர்திருத்த இல்லங்கள், பள்ளிகள் ஆகியவை இப் பணியை ஏன் மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான காரணக் கூறுகள் காணப்படவில்லை. ஆட்சியாளர் பணியை நீதிபதி சிறப்பாக ஆற்ற இயலாது, நிர்வாகப் பணியைச் சிறப்பாகச் செயலாற்றும் திறன் நீதிபதிகளுக்கு இல்லை. ஏனென்றால் நீதிபதி களுக்கு இதைவிட முக்கியமான நீதிவழங்கும் பணி உள்ளதனால் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் பணியைச் செம்மையாகச் செயலாற்ற இயலாது. ஆகவே, நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் இப் பணியை முழுப்பொறுப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளே குற்றவாளிகளின் சுதந்திரமான வாழ்க்கைக்கு முழுப் பொறுப்பு உருவாக்கிவிட்டதனால் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவதில் பல தில்லுமுல்லுகள் நிகழக்கூடும். அதிகாரிகளும் தங்களின் செயலை நடுநிலையோடு செயலாற்ற முடி யாமல் போய்விடுகிறது. ஆகவே, லாஸ்ஏன்ஜெல்ஸ் (Los Angels) நகரில் நகர மேற்பார்வைக் குழு (County Board of Supervisors) என்று ஒன்று அமைக்கப்பட்டு நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும் குற்றவாளிகளைக் கண்காணிக்க நியமிக்கப் பட்டு அதன் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டது. இக் குழு இளங் குற்ற நீதிமன்றமாகவும், முதுநிலைக் குற்ற நீதிமன்றமாகவும்

செயலாற்றியது. மாநிலக் குழுவினரால் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். குறைந்தது 12 மாநிலங்களில் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அதிகாரிகளுக்கு மாநிலக் குழு ஊதியம் அளிக்கின்றது.

காவல் நிலையங்களைப் பராமரிப்பதைப் போன்றும், இளங் குற்ற நீதிமன்றங்கள் செயற்படுவதைப் போன்றும், நன்னடத்தைச் சோதனை முறையும் அதன் இயக்கக் குழுவும் அந்தந்த வட்டம், மாவட்டம், நகரங்கள் என்ற அளவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தந்த வட்டத்தில். மாவட்டத்தில், நகரத்தில் இயங்கும் குற்றச் சிறுர் நீதிமன்றங்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனுல் அமெரிக்காவில் பாதிக்கு மேற்பட்ட மாநிலங்களில் மாநிலக் குழுவின்கீழ் இது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

நன்னடத்தைச் சோதனை முறை விடுதலைக்குக் குற்றவாளிகளைத் தேர்ந்தெடுத்தல் (The Selection of Probationers)

முதுநிலைக் குற்றவாளிகளைப் பொறுத்த மட்டில் குற்றம் சாட்டப்பட்டு குற்ற விசாரணை நடத்தப்பட்டு 'குற்றவாளி' என நிருபிக்கப்பட்ட பின்புதான் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட குற்றத்திற்கு குறிப்பிட்ட தண்டனை அளவு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனுல் சில நீதிமன்றங்கள் குற்றச் சிறுர் நீதிமன்றத்தைப் பின்பற்றிக் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல விரும்பினுலும் அனுமதிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக. இளங் குற்றவாளிகள் குற்றம் சாட்டப்பட்டவுடன் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல விரும்பினுல் மேற்கொண்டு வழக்கு விசாரணை நடத்தாமல் விடுதலை அளிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

முதுநிலைக் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் விசாரணை நடப்பதற்கு முன்பு நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல விரும்பினுல் குற்றவாளியின் அறிக்கை, தன்னைப்பற்றிக் குற்றவாளி கூறிக் கொள்ளும் அறிக்கை, குற்றவாளியின் சிறப்புப் பண்பு, இயல்புக் கூறுகள், அவன் தோற்றம், அவனது குடும்ப வரலாறு, குடும்ப கௌரவம், குற்றத்தின் தன்மை, அவனுக்காக உறுதி மொழி அளிக்கும் நபர்களின் பண்புக் கூறுகள் (நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நீங்கலாக) ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து குற்றவழக்கை விசாரணை தொடங்காமலேயே குற்றவாளி நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலையில்

செல்ல அனுமதிக்கின்றார் நீதிபதி. ஆனால் அந்தக் கொள் கைக்கு இச்செயல் உகந்ததல்ல. இறுதியில் நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலை இகழ்ச்சிக்குள்ளாகிவிடுகிற நிலை ஏற்பட்டுவிடும். 1947-ல் குக் (Cook) நகரத்தில் விசாரணை யின்றி, தீர்ப்பின்றி, 13 சதம் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு நீதிபதி, தன்முன்பு நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலைக்காக மனு செய்த ஒரு நாளைக்குள் 43·9 சதம் மனுக்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்வதற்கு அருகதை, தகுதி, உரிமை இல்லாத 19 குற்ற வாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆகவே, நீதிபதி முறையான, ஒழுங்கான ஒரு கொள்கையோ சட்டக்கட்டுப்பாட்டையோ பின்பற்றுவதில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது, நன்னடத்தைச் சோதனை முறைவிடுதலில் செல்ல அனுமதி வழங்கிவிட்டபிறகு குற்ற ஆய்வுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, குற்ற வாளி கட்டுப்பாட்டை மீறினால் தண்டனை வழங்க ஏதுவாக இருப்பதற்காகத்தான்.

குற்றத்திற்கான காரணக் கூறுகள், குற்ற ஒழுக்கத்திற்கான காரணக் கூறுகள், சொத்து, வழக்கின் மொத்த நட்டம், ஆகிய வற்றைக் கணக்கிட்டு குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்பே நன்னடத்தைச் சோதனை முறை விடுதலில் செல்ல விழைகின்றான் குற்றவாளி. குற்றவாளியின் மனப்பாங்கு, குற்றத்திற்கான குற்ற வாளியின் மனப்போக்கு, குற்றவாளியின் முன்னைய குற்றப் பதிவு, அவன் குடும்பச் சூழ்நிலைகள், சுற்றுச் சூழ்நிலைகள், குற்றவாளி இணையும், பழகும் மற்ற குழுக்களின் போக்கு, ஒழுக்கம், குற்றவாளின் கல்வி, தொழில், அவனுடைய வரலாறு, அவன் பழக்கவழக்கங்கள், மது அருந்தும் பழக்கம் உள்ளவனா அல்லது மயக்க மருந்து உண்ணும் பழக்கம் உள்ளவனா, அவன் உடல் அமைப்பு, உள்ள அமைப்பு, மன ஆரோக்கியம், குற்ற வாளியின் எதிர்கால வாழ்க்கை, ஆகிய பல்வேறு காரணக் கூறுகளை ஆய்ந்து அறிதல் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரி களின் தலையாய கடமையாகும்.

நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும் குற்றவாளி அனுசரிக்க வேண்டிய விதிகள் (The term of Probation)

இந்த விதிமுறைகளை நீதிமன்றமோ அல்லது சட்டமன்றமோ அல்லது இரண்டும் இணைந்து விதிக்கப்படலாம் அல்லது நன்ன டத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லும் குற்றவாளிகள் கீழ்க்கண்ட விதிகளைப் பின்பற்றவேண்டும்.

குற்றவாளிகள் எல்லாச் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும். நல்ல பழக்கங்கள், நல்லோர் துணையை நாடுதல், விதிமுறைப்படி அதிகாரியைச் சந்தித்தல், ஒழுங்கான, சீரான பணி புரிதல், பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லுதல், பள்ளியில் வருகைப் பதிவுக்கு ஒழுங்காகக் கொடுத்தல், பள்ளிப் பாடங்களை ஒழுங்காகப் படித்தல், ஆசிரியர் ஆணைக்குக் கீழ்ப்படிதல், தூய்மையான ஆடை அணிதல். கந்தையாயினும் கசக்கிக் கட்டுதல், குளித்து உண்ணுதல், காலை மாலை சீராகப் படித்தல், பகலில் தூங்காமை அனுசரித்தல். தீயோர்களுடன் இணைவதைத் தவிர்த்தல், தீயோரைக் கண்ணால் காணாமல் தூரத்தே நீங்குதல், பொய் பேசாதிருத்தல், புறங்கூறாதிருத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், உடன் பயிலும் மாணவர்களைச் சகோதரர்களாக எண்ணுதல், மாணவர்களுக்குள் தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்தல், பொறாமையை விட்டொழித்தல், போட்டியை வளர்த்தல், அபராதத்தை உடனே செலுத்துதல் அல்லது இழப்பீட்டைச் செலுத்தி விடுதல், கள்ளுண்ணாமையை அனுசரித்தல், மயக்க மருந்தைத் தொடாமல் இருத்தல், மங்கையர்களை நோக்காமல் இருப்பதுடன் அவர்களுக்கு மாசு உண்டாகாதவாறு பார்த்துக் கொள்ளுதல். கடன் வாங்காமல் வாழ்தல், தேவையில்லாமல் கடன் வாங்குவதைத் தவிர்த்தல், நன்னடத்தைச் சோதனைக் காலம் முடியும் வரையில் திருமணம் செய்து கொள்ளாதிருத்தல், திருமணம் நடந்துவிட்டிருந்தால் மணமுறிவு செய்து கொள்ளாதிருத்தல், நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் அல்லது நன்னடத்தைச் சோதனை முறை விடுதலைக் குழு ஆகியவற்றிடம் முன் அனுமதி பெறாமல் இருப்பிடத்தை மாற்றாமல் இருத்தல், குறிப்பிட்ட இடத்தில் மத்தியில்தான் வாழவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருந்தால் வேறு இடம் மாற்றாமல் அங்கேயே வாழுதல், தன் சொந்த இல்லத்தில் தங்கி இருக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தால் இல்லத்திலேயே வாழ்தல், தன் இல்லத்தில் தங்கக் கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தால் தன்னில்லத்தில் வாழாமல் வேறொரு குறிப்பிட்ட இடத்தில் வாழுதல் அல்லது சீர்திருத்த இல்லங்களிலோ, சீர்திருத்தப் பள்ளிகளிலோ அல்லது அற நிலையங்களில் தங்கி இருக்கவேண்டும் என்றகட்டுப்பாடு இருந்தால் அங்கேயே தங்கி இருத்தல், மருத்துவ ஆய்வுக்குச் செல்ல வேண்டி இருந்தால் தவறாமல் செல்லுதல் அல்லது உளவியல் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தால் தவறாமல் செல்லுதல் ஆகிய கடடுப்பாடுகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். அதிகக் கட்டுப்பாடுகளை விதிக்கும் போது நன்னடத்தை அதிகாரி சில விதிமுறைகளை வற்புறுத்தாமல்

விட்டுவிடுகின்றார்கள்; அல்லது மீறினால் அதைப் பொருட்படுத்துவதில்லை. குற்றவாளியிடம் நல்ல பெயர் எடுக்கின்றார்கள். அதனால் தம் கடமையை அதிகாரிகள் தவறிவிடுகின்றார்கள். நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்பவர்கள் அபராதம், செலவு ஆகியவற்றைக் கட்டிவிடுதல் வேண்டும். இது அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையாக அல்ல. குற்றவாளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு, நட்டம், செலவு ஆகியவற்றைத் திருப்பிக் கொடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவு வழங்கலாம்; அல்லது நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படும்போது அபராதத்தைக் கட்டவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்படலாம். இம் முறையில் பல நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. 1954-ல் கலிஃபோர்னியாவில் நன்னடைத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அபராதம் செலுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடுடன் 18 சதம் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். இழப்பீட்டைத் திருப்பிக்கொடுத்தால்தான் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல முடியும் என்ற கட்டுப்பாட்டை விதித்து 33 சதம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இம்முறையில் சில குறைபாடுகள் உள்ளன. குற்றவாளிகள் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அபராதம் செலுத்தவேண்டும். இழைத்த தீங்கிற்குரிய எதிர்மாற்றீடு கொடுக்கவேண்டும். செலவு கட்டப்படவேண்டும் என்று கட்டாயப்படுத்தும்போது குற்றவாளிக்காக நன்னடத்தை உறுதிமொழி கொடுப்பவர்கள் அல்லது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர் அல்லது அதிகாரிகள் ஆகியோர் பொருளாதாரத் துன்பத்துக்குள்ளாக்கப்படுகின்றனர். அடுத்து, நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் குற்றவாளியிடமிருந்து அபராதத்தையோ, இழப்பீட்டையோ, செலவையோ வசூல் செய்யவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்படுகின்றார்கள். மேற்பார்வையுடன் இந்தப் பணியும் கூடிவிடுகிறது.

நன்னடத்தைச் சோதனைக்காலத்தின் அளவு நன்னடத்தைச் சோதனைமுறை விடுதல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கலாம்; அல்லது குற்றத்திற்குரிய தண்டனையின் கால அளவே வழங்கக் கூடும். நீதிமன்றம் அதிக கால அளவை வழங்கிவிட்டுப் பிறகு அதைமாற்றி அமைக்கவும் உரிமை உண்டு. அமெரிக்காவில் பல மாநிலங்களில் சராசரியாக 1 வருடத்திற்குக் குறைவான காலத்தைச் சோதனைக் காலமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மூன்று ஆண்டுக் காலம் வரையில் நன்னடத்தைச் சோதனைக் காலமாக விதிக்கப்படலாம் என்று நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலைச் சட்டம் (The Probation of Offenders Act) கூறுகிறது.

நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள், தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே செயலாற்றுதல் வேண்டும். நன்னடத்தைஉறுதிமொழி விடுதலையில் இருக்கும் குற்றவாளி கட்டுப்பாட்டை மீறினல் நீதிமன்றத்திற்கு உடனே அறிவித்தல் வேண்டும். நீதிமன்றம் அந்தக் குற்றவாளிக்கு மற்ருெரு எச்சரிக்கையோ அல்லது ஏற்கெனவே புரிந்த குற்றத்திற்கு வழங்கப்பட்ட தண்டனையைச் செயற்படுத்தும்படி உத்தரவு வழங்கப்படலாம். தண்டனை வழங்காமல் நன்னடைத்தை உறுதிமொழியில் விடுவித்திருந்தால் நீதிபதி புதிதாகத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்குவார். குற்றவாளி சிறைத் தண்டனை அனுபவித்தல் வேண்டும். இதில் ஏற்கெனவே குற்றவாளி நன்னடைத்தைச் சோதனையில் கழித்த காலம் தண்டனைக் காலத்துடன் கணக்கிடப்படமாட்டாது. அவன் கழித்தது சிறைத் தண்டனை அல்ல.

நன்னடத்தைச் சோதனைக் காலத்தில் புதிய குற்றம் புரிந்துவிட்டால் அமெரிக்காவில் சில மாநிலங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தண்டனையைச் செயற்படுத்த உத்தரவு வழங்கப்படுகின்றது. ஆனல் சில மாநிலங்களில் புதிய குற்றத்திற்கு விசாரணை நடத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. தண்டனை வழங்கப்பட்டால் மறுபடியும் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலைக்கு மனு செய்தல் வேண்டும் அல்லது தண்டனை வழங்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் குற்றவாளி இரண்டு குற்றங்களின் சிறைத் தண்டனையை ஒரே நேரத்தில் (Concurrently) அனுபவிக்கும்படி தீர்ப்பு வழங்கப்படலாம். அல்லது முதல் குற்றச் சிறைத் தண்டனையின் காலம் முடிந்தவுடன் தொடர்ந்து இரண்டாவது குற்றத்திற்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை அனுபவித்தல் வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்படலாம் (Consecutively).

ஆனல், நன்னடத்தைச் சோதனையின் காலத்தை விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை மீருமல் கழித்துவிட்டால் அதிகாரிகளே அவனுக்கு முழு விடுதலை அளித்துவிடலாம். அல்லது நீதிமன்றத்திற்கு வந்த பிறகு நீதிபதி குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கி முழுச் சுதந்திரமாகச் செல்ல விடுதலை அளித்து உத்தரவு வழங்கலாம். இச் செயல் வழங்கப்பட்ட காலத்தின் முடிவிலோ அல்லது இடையிலோ நிறைவேற்றப்படலாம்.

நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளின் கடமைகள் (The Duties of the Probation Officers)

நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்லக் குற்றவாளி விழைந்தால் அதற்குரிய கட்டு திட்டங்களை நிறைவேற்றிய பிறகு நீதிபதி, குற்றவாளி நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படுவதுடன் அவனுக்குரிய நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரியையும் நியமித்து விடுகின்றார். அந்த அதிகாரிதான் குற்றவாளி செயலாற்றவேண்டிய மற்ற விதி முறைகளை அறிவிக்கின்றார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குற்றவாளிகளின் இனம், மதம், பால், வேற்றுமை, பிரச்சினைகள் ஆகியவற்றைப் பொறுத்து நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கு உதவிபுரியவேண்டிய வழிமுறைகளையும் கூறப்படுகின்றது. பெரும்பாலும் ஒரு மாவட்டத்தில் பணியாற்றும் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரியின்கீழ் அந்த மாவட்டத்தில் உள்ள நன்னடத்தைச் சோதனையில் விடுதலை அடைந்த குற்றவாளிகள் ஒப்படைக்கப்படுவார்கள். ஆண் குற்றவாளிகளாக இருந்தால் ஆண் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரியிடமும், பெண்களாக இருந்தால் பெண் நன்னடத்தை அதிகாரியிடமும் ஒப்படைக்கப் படுகின்றார்கள். அதே போன்றுதான் இனம், மதம் பின்பற்றப் படுகின்றது. ஆனால் இந்தியாவில் ஆண், பெண் என்ற வேற்றுமையைத் தவிர மற்றப்படி இனம், சாதி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் குற்றவாளிகளுக்கு ஏற்ப நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளை நியமிப்பதில்லை,

அதிக மக்கள் நெருக்கம் உள்ள நகர்ப்புறங்களாக இருந்து அதிகமான நன்னடத்தை உறுதிமொழியில் விடுதலை பெற்றவர்கள் இருந்தால் அதிகாரிக்கு 50 நபர் வீதம் ஒதுக்கப்படுகிறது. அதிகாரிகள் முழு நேரத்தையும் குற்றவாளிகளைக் கண்காணிக்கவும், உதவி புரியவும் பயன்படுத்துதல் வேண்டும். ஆனால் இந்த எண்ணிக்கை நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. சில இடங்களில் ஓர் அதிகாரிக்கு 100 குற்றவாளிகள்கூட ஒதுக்கப்படுவதுண்டு. இந் நிலையில் அந்த அதிகாரி சிறந்த முறையில் மேற்பார்வையிடுவதோ, செயற்படுவதோ முடியாமல் போய்விடுகின்றது. அவ்வாறு மேற்பார்வையும் உதவியும் செய்யாமல் விட்டுவிடுவதால் சாதாரணமாகத் தண்டனை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். குற்றவாளி தன் மனம் திருந்துவதற்கும், நல்லொழுக்கத்தில் ஈடுபடுவதற்கும், தொழிலில் ஈடுபடுவதற்கும், குற்றவாளியின் குறை

களைக் களைந்தெறிவதற்கும் இயலாமல் போய்விடுகின்றன. நன்னடத்தைச் சோதனை முறையின் விடுதலை என்ற அடிப்படைக் கொள்கைக்கே பொருள் இல்லாமல் போய்விடுகின்றது.

அதேபோன்று, நன்னடத்தைச் சோதனையில் விடுதலை அடைந்தோர்களுக்கு மேற்பார்வை, கண்காணிப்பு, உதவி ஆகியவை தேவைப்படவில்லையென்றால்அவர்களை நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் அனுமதிக்கப்படக்கூடாது. அதே போன்று தேவைப்படுவோருக்கு அவை அவசியம் கிடைக்கும் படிச் செய்தல் வேண்டும். அதற்காக அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்படும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைத்து எல்லா நபர் களுக்கும் மேற்பார்வை, மற்ற உதவிகள் கிடைக்க வழி செய்தல் வேண்டும், ஊதியம் பெறுமல் நன்னடத்தைப் பொறுப்பு அதி காரிகளாகச் செயலாற்ற முன் வந்தாலும் அவர்களிடம் மிகவும் குறைவான நபர்களை ஒப்படைத்தல் சாலச் சிறந்தது. ஊதியம் பெறும் அதிகாரிகளிடம் அதிக நபர்களை ஒப்படைக்கலாம். அதனுல் அடிப்படைக் கொள்கை பாதிக்கப்படாது. ஆனுல், ஊதியம் பெறும் அதிகாரிகளில் சிலர் போதிய பயிற்சியின்றியும், திறமை யின்றியும், பயனின்றியும் காணப்படுகின்ருர்கள். இந்தப் பதவி சிறப்பாக இல்லாத காரணத்தினுலும், போதிய ஊதியம் வழங்கப் படாததனுலும் திறமை, பயிற்சி பெற்றுள்ள பயனுள்ள அதி காரிகள் முன் வருவதில்லை. அப்படி இருந்தாலும் நகர்ப்புறங்களில் தான் பணியாற்ற விரும்புவார்கள். கிராமப்புறங்களில் பணியாற்ற விரும்பமாட்டார்கள். தமிழகத்தில் 1974-ம் ஆண்டுப் ள்ளி விவரப்படி மொத்தம் 150-க்கும் மேற்பட்ட நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் தேவைப்படுகின்ருர்கள். ஆனுல் தற் பொழுது 80 அதிகாரிகள்தான் பணி புரிந்து வருகின்ருர்கள். இப்படித் தேவைக்குக் குறைவான அதிகாரிகள் செயற்பட்டு வருவ தனுல் அவர்களின் பணி அதிகரிப்பதுடன் ஆற்றுகின்ற பணியும் சிறப்பாக அமையாமல் போய்விடுகின்றது. குற்றவாளிகளை நன்னடத்தைச் சோதனை முறையில் விடுவிப்பதும் ஒன்றுதான் முழுவிடுதலை அளிப்பதும் ஒன்றுதான். இதனுல் குற்றவாளிக்கு யாதொரு பயனும் இல்லை. அவனுக்குத் தேவையான விளக் கங்கள் அளிக்கப்படாமலும் வேண்டிய உதவி அளிக்கப்படாமலும் இருக்கின்ற காரணத்தினுல் குற்றவாளியின் தன்மையில், போக் கில், நடத்தையில், ஒழுக்கத்தில் மாற்றம் எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே, குற்றவாளிகளுக்கும் ஏற்ற அளவு அதிகாரிகளை உடனடியாக நியமித்தல் வேண்டும். அப்படி உடனடியாக நியமித் தாலும் போதிய பயிற்சி, திறமை, பயன் ஆகியவை இல்லாத வர்களை நியமித்தல்வேண்டும் என்பது பொருளல்ல. அப்படி

நியமித்தாலும் அதனால் விளையும் பயன் யாது? ஆகவே காலம் கடந்தாலும் சிறப்பாகப் பயிற்சி அளித்துத் திறமை, வலிமை, வாய்மை ஆகியவற்றுடன் திகழும் நபர்களை அதிகாரிகளாக நியமித்தல் வேண்டும். குறிப்பாக, குற்ற இயல் தத்துவம் பயின்ற வர்களை நியமித்தல் சாலச் சிறந்ததாகும். அதிலும் பல பிரிவுகள் அமைத்து பதவி உயர்வு ஆகியவற்றை ஏற்படுத்தி வல்லவர் களைக் கவர்தல் வேண்டும்.

ஆராய்ந்து அறிதல் (Diagnosis)

குற்றவாளியை நன்னடத்தைச் சோதனை முறையில் விடுதலை அளிப்பதற்கு முன்பே அவனுக்கு இந்த விடுதலை தேவைதானா, அவன் மற்றவர்களின் உதவியினால் நல்லொழுக்கம் உள்ளவனாக விளங்குவானா, தொழிலைக் கற்றுக் கொள்வானா, மற்றவர்கள் உதவி யில்லாமல் வழிகாட்டி இல்லாமல் இப்படிக் குற்றவாளியாக மாறு யுள்ளானா என்பனவற்றை முன் கூட்டியே குற்றவாளியை ஆராய்ந்தறிந்து பிறகுதான் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலைக்குப் பரிந்துரைக்க வேண்டும். பிறகு எங்கே பயிற்சி அளித்தல், என்ன பயிற்சி அளித்தல், ஆகியவற்றையும் தீர்மானம் செய்தல் வேண்டும். இவற்றைக் குற்றவாளியை மேற் பார்வையிடும் அதிகாரிகள்தாம் தீர்மானிக்க வேண்டும். மேற் கூறப்பட்ட அதிகாரிகள் இவற்றைக் குற்றவாளிகளுக்கு எடுத் துரைப்பது, உதவி புரிவது கடமை எனக் கருதினாலும் அவற்றை இன்முகத்தோடு, கனிவாக எடுத்துக் கூறுதல் வேண்டும். இன் முகத்துடன் பழகுதல், பேசுதல். செயற்படுதல் வேண்டும் ஆனால், சில அதிகாரிகள் குற்றவாளியின் நடத்தைப் போக்கு, தொழில் ஆகியவற்றை அறிந்துகொண்ட பிறகு எப்பொழு தாவது ஒருமுறை அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று பார்வையிடுவார்கள், அல்லது அதிகாரிகள் இருக்கும் இடத்திற்குக் குற்றவாளிகள் வந்து பார்த்துவிட்டுப் போகும்படி உத்தரவு வழங்கி விடுவார்கள். இருவருக்கும் மற்றப்படி நெருங்கிய தொடர்போ, பழக்கமோ, முன்னேற்றமோ காணப்படமாட்டாது. குற்றவாளி உறைவிடம் சென்று மேற்பார்வையிடுவதுதான் சாலச் சிறந்தது. அதுதான் ஒரு நல்ல அதிகாரிக்கு இலக்கண மாகும். அப்படிச் சென்று மேற்பார்வையிட்டால்தான் அவன் வாழும் இடம், சுற்றுச் சூழ்நிலை, பழகும் நண்பர்கள், செய்யும் தொழில், ஆகியவைபற்றிய உண்மையான விவரங்களைப் பெற முடியும். அவற்றைக் கொண்டு அவை குற்றவாளிகள் நல் லொழுக்கத்தில் ஈடுபட ஏதுவாக இருக்கின்றனவா அல்லது குற்ற வொழுக்கத்திற்கு, குற்றத் தன்மைக்கு ஆதரவாக அமைந் துள்ளனவா என்பதை ஆராய்ந்தறிய முடியும். ஒரு மாதத்தில்

எப்பொழுதாவது ஒருமுறை குற்றவாளி தங்கியிருக்கும் அல்லது தொழில் புரியுமிடம் சென்று பார்வையிடுவதனுல் மட்டும் அவனின் சுற்றுச் சூழ்நிலே, மற்றக் காரணக் கூறுகளை ஆராய்ந்தறிந்துவிட முடியாது. அவன் அந்த நேரத்தில் நல்ல ஒழுக்கம் உள்ளவர்களுடன் பழகுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளக்கூடும். மற்ற வேலேகளில் குற்றவொழுக்கம் உள்ளவர்களிடம் இணைந்திருப்பதை எப்படிக் கண்டறிய முடியும்? சிலர் அந்தப் பக்கமே தலே காட்டுவதில்லே. இந்நிலேயில் செயற்பட்டால் குற்றவாளி திருந்தவேண்டிய சோதனைக் காலத்தில் மேலும்பல குற்றங்களேப் புரிய பயிற்சி பெற்றுவிடக் கூடும்; அல்லது கைதேர்ந்த குற்றவாளியாகக் கூட மாறிவிடலாம். அது அந்த அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்கக் கூடுமல்லவா? நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகள் குற்றவாளிகளேப்பற்றிய குறிப்புகளே அவ்வப்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்ருர்கள். அதாவது, வாரத்திற்கொரு முறையோ அல்லது மாதமிரண்டு அல்லது ஒருமுறையோ கூட இருக்கலாம்.

சில இடங்களில் அதிகாரிகள் குற்றவாளிகளின் தொழில், தோழன், பொழுதுபோக்கு, பழக்கங்கள் ஆகியவற்றைக் கேட்டறிந்து குறித்துக் கொள்வதோடு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளேயும் கூறுவார்கள். பொருளாதாரம், குடும்பம், சட்டம், பழக்கங்கள், வாசித்தல், முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைப்பார்கள். அதே நேரத்தில் குற்றவாளிகளிடம் அவர்கள் செய்யும் தொழில் அல்லது முதலாளியின் பரிந்துரை அல்லது முதலாளியின் அறிக்கை, குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான சான்றிதழ் அல்லது குடும்பத்திற்காகச் செலவு செய்யப்பட்ட செலவுச் சீட்டு, இழப்பீட்டைச் செலுத்திய சீட்டு, பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லும் அடையாளச் சீட்டு ஆகியவற்றைக் காண்பிக்கும்படி கோரப்படுகின்ருர்கள். இவற்றைக் குற்றவாளியிடமிருந்து கேட்டு அதிகாரிகள் அறிந்து கொள்வார்களே தவிர அவர்கள் நேரில் ஈடுபட்டும், ஈடுபடுத்தியும் ஆராய்தல் இல்லே.

குற்றவாளிகளின் பேராசையைத் தடுக்கவும், ஊதாரித்தனமாகச் செலவு செய்தலேத் தடுக்கவும், கடமையற்றவனுக்குக் கடமையைப் பற்றி ஊட்டுவதும் ஆகியவற்றைப் பற்றி ஆராய்தல் வேண்டும். குற்றவாளியின் உள்ளத்தில் இலட்சியத்தை, நல்ல நோக்கத்தை, கொள்கையை உண்டாக்குதல் வேண்டும். எதையும் தாங்கும் இதயத்தை உருவாக்க வேண்டும். கடமை, நேர்மை, கட்டுப்பாடு ஆகியவற்றை உணர்த்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவற்றைக் குற்றவாளிக்குக் கற்றுக் கொடுக்க அதிகாரிகள் ஒழுக்க சீலர்களாக அல்லவா திகழவேண்டும்.

மற்றும் பொருளாதார உதவி அளித்தல், அதாவது வேலை வாய்ப்பு தேடிக் கொடுத்தல், மறுவாழ்வு அமைத்தல், உதவித் தொகை கிடைக்க வழி செய்தல், தொழிற் பயிற்சிக்கு ஆக்கமும் ஆதரவும் அளித்தல். இதற்காக நன்னடத்தைச் சோதனை முறை விடுதலைக்குத் தன்னகத்தே ஒரு தொழிற்சாலையை உடையதாக இருத்தல் வேண்டும். அல்லது அரசாங்கம் இம்மாதிரியான குற்றவாளிகளுக்கென்று தொழிற்கூடத்தை அமைத்து செயற்படுத்தி வருதல் வேண்டும். அப்போதுதான் நன்னடத்தைச் சோதனையில் விடுதலை பெற்றுவரும் நபர்களை இத்தொழிலில் சுலபமாகப் புகுத்தி தக்க பயிற்சி அளிக்க ஏதுவாகும்.

அதிகாரிகளைக் கண்டு குற்றவாளிகள் அச்சம் கொள்வார்கள். தவறாக நடந்தாலும் கட்டுப்பாட்டை மீறினாலும் அவர்களுக்குச் சிறைத் தண்டனை உறுதி என்ற எண்ணம் தொடர்ந்து இருக்கின்ற காரணத்தினால், அதிகாரிகள் அதைப் பயன்படுத்திக் குற்றவாளிகளை நல்லொழுக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும். மேலும், குற்றவாளிக்கு அளிக்கப்படும் ஊக்கம், உறுதி, உதவி, வாழ்க்கைக்கு வேண்டியவையாக இருத்தல் வேண்டும். குற்றவாளி விடுதலை பெறுவதாக நாடகம் நடத்துகின்ற அளவில் இருக்கக் கூடாது. அவற்றை அதிகாரிகள் குற்றவாளிகளின் மனப் பயத்தைப் போக்க முயல வேண்டும். அதிகாரிகளின் ஊதியத்திற்காக இவ்வாறு உழைக்கின்றார்கள் என்ற எண்ணம் குற்றவாளிகளுக்கு ஏற்படக் கூடாது. தங்களின் நல்வாழ்விற்காகத்தான் இவ்வளவு சோதனைகளும், பரிசோதனைகளும் நடத்தப்படுகின்றனவேதவிர, ஏமாற்றுவதற்காக அல்ல என்று குற்றவாளிகள் உணரும் வண்ணம் செய்தல் வேண்டும். இரு தரத்தாரும் இணைந்து உண்மையான முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல் வேண்டும். ஒருவரை ஒருவர் ஏமாற்றும் நோக்கத்தோடு செயற்படக்கூடாது. அப்படி இருந்தால் குற்றவாளி தன் சோதனைக் காலம் முடிந்தவுடன் குற்றவொழுக்கத்தில் ஈடுபட வாய்ப்புண்டு. நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையினால் குற்றவாளி தண்டனையை அனுபவிக்காமலேயே தப்பிவிடுகின்றான். இதனால் குற்றவாளிக்கு மனமகிழ்ச்சி ஏற்பட்டாலும் சமுதாயத்திற்கு தீமைதானே. ஆகவே குற்றவாளி திருந்தும்படிச் செய்தல் வேண்டும்.

இம்முறை இளைஞர்களுக்கும் முதியோர்களுக்கும் நல்லபயனை அளித்துள்ளது. நன்னடத்தைச் சோதனைக் காலத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டுக் கட்டுப்படுத்தப்பட்ட இடத்திலிருந்தோ

அல்லது தன்னில்லத்திலேயோ சுதந்திரமாக வாழுகின்றார்கள். 1958-ல் அமெரிக்காவில் 84 சதம் வெற்றியடைந்துள்ளதாக ஓர் அறிக்கை கூறுகிறது. 1836-ல் 53·9 சதம்தான் வெற்றியடைந் துள்ளதாக அறிவிக்கின்றது. குளுக்ஸ் (Gluck) என்பவர் 15 ஆண்டு களில் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் சென்ற 806 இளங் குற்றவாளிகளை ஆராய்ந்ததில் 57·9 சதம் தோல்வியடைந் துள்ளது என்று அறிவிக்கின்றார். அதே மாதிரியாக மற்றொரு ஆராய்ச்சியில் 390 ஆண் குற்றவாளிகளில் (15 ஆண்டுகளில்) 92·4 சதம் தோல்வி கண்டுள்ளது என்று அறிவிக்கின்றார். அதே போன்று, 1943, 1944 ஆகிய ஆண்டுகளில் 35·3 சதம் தோல்வி அடைந்துள்ளது. மற்றொன்றில் 92 சதமும், 87 சதமும் தோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. பாஸ்டன் இளங் குற்றவாளிகள் 400 ஆண்பிள்ளைகள், 100 பெண் பிள்ளைகள். நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையின் காலத்தைக் கழித்த 5 முதல் 7 ஆண்டுக்குள் சிறுவர்கள் 21 சத மும், சிறுமிகளில் 12 சதமும் தோல்வியடைந்துள்ளது என்று பாஸ்டன் குற்றச் சிறார் நீதிமன்ற அறிக்கை கூறுகின்றது. மற்றொரு அறிக்கையில் 500 நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் சென்ற நபர்களில் 6 முதல் 12 ஆண்டுகளில் 17·7 சதம் மறுபடியும் குற்றத்திற்காகத் தண்டனை வழங்கப்பட்டுள் ளார்கள் என்று அறிவிக்கின்றது.

மேலே கூறப்பட்ட குற்றப்புள்ளி விவரத்தினால் குற்றவாளிகள் நன்னடத்தைச் சோதனைமுறை விடுதலையில் சென்ற நபர்கள் சோதனைச் காலங்களில் அவர்களுக்கு நல்லொழுக்கத்தை வளர்த் துக்கொள்ளவில்லை; அல்லது வளர்க்கப்படவில்லை என்பதைத் தான் காட்டுகிறது.

மேலும், இம்முறை சிறந்ததாகக் கருதப்படுவதனால் வெற்றி தோல்விகளைப் பற்றி ஆராய்வதைவிட எந்தெந்தச் சூழ்நிலையில், எந்தெந்த வயதுடைய குற்றவாளிகள், என்னென்ன குற்றம் புரிந்தவர்கள், எந்தெந்த இடங்களில் தங்கி இருந்தவர்கள், மீண்டும் குற்றம் புரிந்துள்ளார்களா என்பன போன்றவற்றை ஆராய்ந்தறிதல் வேண்டும். எந்த அதிகாரியின் கீழ் பயிற்சி பெற்றவர்கள் அதிகமான குற்றவாளிகளாக மாறியுள்ளார்கள் என்பனவற்றையும் ஆராய்ந்தறிதல் வேண்டும். அவற்றை ஆராய்ந்து காணப்படும் குற்றங் குறைகளைக் களைந்தெறிந்துவிட்டு மேலும் சிறந்த முறையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

அடுத்து கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் அனைத்தும் ஏறத்தாழ 6 ஆண்டுகளுக்கு மேல்தான் குற்றத்தை மீண்டும் புரிந்துள்ளதாக அறிவிக்கின்றது. அதில் 6 ஆண்டு என்பது நீண்ட காலமாகும். இதற்கிடையில் எத்தனை அரசியல் மாற்றங்கள், குடும்பச் சூழ்நிலையில் மாற்றங்கள், சுற்றுச் சூழ்நிலை மாற்றங்கள், இடம் பெயர்தல், திருமணங்கள், மணமுறிவு ஆகியவை நிகழ்ந்து இருக்கும் அல்லவா. அவை பல்வேறு காரணக் கூறுகளால் குற்றம் புரியப்பட்டிருக்கலாம். அவர்களுக்குப் போதிய பயிற்சியின்மை என்ற காரணத்தினுல் மட்டும் மீண்டும் குற்றங்களைப் புரிந்திருக்கமாட்டார்கள், அதைவிட வேறு பல காரணக் கூறுகள் குற்றம் புரிவதற்கு ஏதுவாக இருந்திருக்கலாம்.

மேலும், குற்றம் புரிந்தவர்கள்தாம் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படுகின்ருர்கள். இவர்கள் பெரும்பாலும் தீயொழுக்கம் உள்ளவர்கள், மோசமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், மோசமான பகுதிகளில் வாழ்பவர்கள், சந்தைப் பகுதிகள், கடைவீதிப் பகுதிகள், பெருவணிகத் தொழில் நடக்கும் பகுதிகள் ஆகிய குற்றப் பகுதிகளிலிருந்தும், குற்றம் புரிந்த குடும்பங்களிலிருந்தும் வந்தவர்கள், பள்ளிப் படிப்பு தொடராதவர்கள், கோவிலுக்குப் போகாதவர்கள் அல்லது வெறுத்தவர்கள், பரத்தையருக்குப் பிறந்தவர்கள், சூதாடுதல், கள்ளச் சாராயம் விற்றல் ஆகிய பகுதிகளிலிருந்து வந்த குற்றவாளிகள் மீண்டும் 44·8 சதம் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று அறிக்கை கூறுகின்றது. அதே நேரத்தில் குறைந்த குற்றங்கள் நடக்கும் பகுதிகளிலிருந்து வந்த குற்றவாளிகளில் 30·7 சதம் மீண்டும் குற்றம் புரிந்துள்ளார்கள். இந்த அறிக்கையிலிருந்தே பயிற்சியை விட மற்றக் காரணக்கூறுகள்தான் குற்றவாளிகளைக் குற்றம் புரிய கட்டாயப்படுத்துகின்றன என்று எண்ணமுடிகிறது. மேலும் பயிற்சி பெற்று வாழ்க்கை தொடங்கும் இடம் அதே குற்றப் பகுதியாகவும், வறுமையும், வசதியற்ற வீடும், மாருத குடும்பச் சூழ்நிலை ஆகியவற்றைத் தொடர்ந்து சில வேளைகளில் அதிகரித்து இருப்பதும் குற்றங்கள் மீண்டும் புரிவதற்கான காரணக்கூறுகளாகும்.

1956-ல் கலிஃபோர்னியாவில் 84,100 நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் சென்ற நபர்கள் தங்களின் நன்னடத்தைச் சோதனைக் காலத்தில் 27,47,000 டாலர் பொருளீட்டித் தங்களின் குடும்பச் செலவிற்காக அதிகாரிகளிடம் ஒப்படைத்து இல்லங்களுக்கு அனுப்பியுள்ளார்கள் என்று சதர்லாண்டு தன் ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலை அளிப்பதற்குச் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். அதாவது, நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை குற்றத்திற்குரிய தண்டனையைக் குறைத்து விடுவதனால் குற்றத்திற்குத் தண்டனை வழங்கப்படுவதில்லை என்ற கருத்து பரவுவதனால் மேலும் குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு. அடுத்து, ஏற்கனவே குற்ற வாழ்க்கைத் தொழில் புரிந்தவர்கள் சட்டத்தின் பிடியில் அகப்படாவண்ணம் வழக்குகளைச் சரிகட்டி விடுகின்றார்கள். இந்த நன்னடத்தைச் சோதனை முறை விடுதலை அதற்கு மேலும் வாய்ப்பாக அமைந்து விடுகிறது. நன்னடத்தைச் சோதனை விடுதலையில் குற்றவாளி எளிதில் தப்பித்துவிட ஏதுவாகிறது. அடுத்து, நன்னடத்தைச் சோதனை விடுதலையின்போது குற்றவாளியை வேறு இடங்களுக்கு மாற்றிவிடுவதனால் புதிய இடத்தில் புதிய சூழ்நிலையில் வாழ நேரிடும்போது குற்றவாளியின் ஒழுக்கம் மேலும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. இறுதியாக, நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனை நிறுத்தி வைக்கப்படுகின்றது; அல்லது 'பழிக்குப்பழி' என்ற கொள்கைக்கு இது விரோதமாக உள்ளது. குற்றம் புரிந்தவர்கள் துன்புற வேண்டுமென்பது நியதி அல்லவா? இப்படி நன்னடத்தை உறுதி மொழியில் செல்ல அனுமதிப்பதனால் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள்மீது வழக்குத் தொடுக்க முன்வர மாட்டார்கள். வழக்குத் தொடர்ந்தாலும் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்போவதில்லை. அவன் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படுவான் என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதனால் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாகப் பழிவாங்கவும் தூண்டப்படலாம். மேலும், வழக்குத் தொடராமல் விட்டுவிடுவதனால் குற்றவாளி தண்டனை இல்லாமல் சமுதாயத்தில் திரிகின்றான்; அல்லது வழக்கு தொடர்வதற்குப் பதில் பழிவாங்குவதனால் சமுதாயத்தில் புதிய குற்றவாளியும் உருவாவதற்கு வாய்ப்புண்டு அல்லவா?

ஆகவே, நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலையில் குற்றவாளி விடுவிக்கப்பட்டாலும் சோதனைக் காலத்தில் அவனுக்குச் சற்றுக் கடுமையான பயிற்சியாவது அளிப்பதன்மூலம் குற்றத்தை உணரச் செய்தல் வேண்டும். இம்முறை சிறப்புற அமைய மேலும் பல முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். சமுதாயத்தில் தொற்றுநோய் வந்தவிடத்து அது மேலும் பரவாமலிருக்க தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் போல் 'குற்றவாளி' என்று அறிந்தவுடன் அவனைத் திருத்திச் சமுதாயத்திற்கு ஏற்றவனாக மாற்றுவது சமுதாயத்தின் தலையாய

கடமையாகும். தொற்று நோயைத் தொடக்கத்தில் தடுக்கப் படாமல் விட்டுவிட்டால் அது சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் பரவி சமூகத்தையே பெரும் அளவிற்கு அழித்து விடுவதைப் போல 'குற்றவாளி' என்று ஒருமையில் இருந்தவன், சீர்திருத்தம் அடைய போதிய அக்கறை காட்டப்படாததனால் மேலும் மேலும் குற்றவாளிகள் பெருக வாய்ப்புண்டாகின்றது. இறுதியில் குற்றவாளியை அடக்குவதற்குப் பதில் அவனைக்கண்டு அஞ்சும் நிலைமை உருவாகிவிடுகின்றது. ஆகவே குற்றவாளிகளைச் சீர் திருத்தம் செய்வதில் நன்னடத்தைச் சோதனை அதிகாரிகள் மட்டும் செயற்பட்டால் போதாது, பொது மக்களும் தங்களால் இயன்ற அளவுக்கு ஒத்துழைத்துச் சமுதாயத்தில் முளைக்கும் களைகளை அழிக்க முன்வருதல் வேண்டும்.

18. கைதி, சிறைத் தண்டனை, சிறை

(Prisoners, Imprisonment and Prison)

இந்த அத்தியாயத்தில் கைதி, சிறைத் தண்டனை. சிறை ஆகியவற்றைப் பற்றி ஆராய்வோம்.

கைதி, சிறைத் தண்டனை, சிறை ஆகியவற்றிற்குள் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்புள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டு அதற்குரிய தண்டனையை வழங்குகின்றார் நீதிபதி. 'தண்டனை' என்பது மரணதண்டனையாகவும் இருக்கலாம். ஆயுள் சிறைத் தண்டனையாகவும் இருக்கலாம் அல்லது குறைந்த காலச் சிறைத் தண்டனையாகவும் இருக்கலாம். அவற்றுடன் அபராதம் இணைத்து தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம். அல்லது வெறும் அபராதம் மட்டும் வழங்கப்பட்டிருக்கலாம். ஆக குற்றத்திற்கேற்றவாறு தண்டனை வழங்கப்படுகிறது. சிறைத் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் சிறையில் தடைப்படுத்தி வைக்கப்படுகின்றார்கள். சிறைப்படுத்தப்பட்ட குற்றவாளியைப் பொதுவாகக் 'கைதி' (Prisoner) என்று அழைக்கப்படுகின்றது.

கைதிகளுக்கு அல்லது குற்றவாளிகளுக்கு ஒரே வகையான தண்டனை வழங்கப்படுதல் வேண்டும் என்ற கொள்கை வற்புறுத்தப்பட்டது. அம்மை நோய் கண்டால் அனைவருக்கும் ஒரே விதமான சிகிச்சை முறையைப் பயன்படுத்துவது போன்ற தாகும். நோய்க்கு ஏற்ற சிகிச்சை எங்கும் ஒரே மாதிரியாகக் கையாளப்படுவது போன்று குற்றங்களின் வகைக்கு ஏற்ப எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே விதமான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை சிலர் எதிர்த்தார்கள். தனிப் பட்ட நபர் அல்லது குற்றவாளியின் குற்றத் தன்மையைப் பொறுத்து தண்டனை வழங்கப்பட வேண்டுமேயன்றி ஒரேவித மான தண்டனையை வழங்குதல் கூடாது என்ற கருத்து வற்புறுத் தப்பட்டது.

பதினைன்காம் நூற்றுண்டுக்கு முன்பு சிறையோ, சிறைத் தண்டனையோ காணப்பட்டதாக அறிய முடியவில்லை. அக் காலத்தில் குற்றங்களுக்கான தண்டனையாக மரண தண்டனை, உடல் ஒறுத்தல், இழப்பீடு வசூலித்தல், நாடுகடத்துதல் போன்ற தண்டனை வகைகளைத் தான் செயலாற்றி வந்துள்ளார்கள். மரண தண்டனை விதிக்கப்பட்டால் பெரும்பாலும் அது உடனே நிறைவேற்றப்பட்டு வந்தது. அதாவது இப்பொழுது இருக்கின்ற மாதிரியாக மேல்முறையீடுகள் (Appeals) அக் காலத்தில் இல்லை. மேலும், அக் காலத்தில் நீதிபதி என்ற தனி அதிகாரி செயற்படவில்லை. குழுவின் தலைவரோ. அல்லது அரசனோதான் மற்றவர்கள் துணையுடன் குற்றங்களை விசாரித்துத் தண்டனை வழங்கினான். அரசனுக்கு அல்லது சமுதாயத் தலைவனுக்கு அல்லது குடும்பத் தலைவனுக்கு மேல் அதிகாரிகள் இல்லை. அவர்கள் வழங்கிய தீர்ப்பே இறுதியானதாகும். உயிர்போக்குத் தண்டனையை உடனடியாகச் செயலாற்றி வந்தார்கள். உடல் ஒறுத்தலில் சாட்டை அடியோ அல்லது கை கால்களை முடமாக்குதலோ என்றால் அது உடனே நிறைவேற்றப்பட்டது.

பொதுவாக, குற்றத்திற்குரிய தண்டனையை குற்றவாளி பிடிபட்டதும் அரசன்முன்பு நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படுவான். பெரும்பாலான குற்றங்களுக்கு மரண தண்டனையே வழங்கப்பட்டு வந்தது. ‘பழிக்குப்பழி’ என்ற கொள்கையின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்ட காலம் அது. மேலும், குற்றவாளிகள் என்றால் சமுதாயத்தின் பகைவன், தேவையற்றவன், அழிக்கப்பட வேண்டியவன் என்ற எண்ணம் பரவலாகப் பரவி வந்துள்ளது. மகன் குற்றம் புரிந்தாலும் ‘மகனாயிற்றே’ என்று இரங்குதல் இல்லை. உடனடியாக அழித்து நீதியைக் காத்து வந்தார்கள். ஓர் ஆவிற்கு நீதி வழங்க தன் மகனையே தேர்க் காலிலிட்டுக் கொன்று நீதியை நிலை நிறுத்தியவன் நந்தமிழ் மன்னன் மனுநீதிச் சோழனன்றோ.

குற்றத்தைத் தடுக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் நாட்டில் குடிபோதைக் குற்றவாளிகள், நாடோடிகள், பிச்சைக்காரர்கள், பரத்தையர்கள், சூதாடிகள் இப்படிப் பல குற்றவாளிகள் பெருகிவிட்டார்கள். இவர்கள் புரியும் குற்றங்கள் கடுங் குற்றமில்லை. ஆனால் அவர்களின் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். அதற்காகத் தண்டனை வழங்கப்பட வேண்டும். அது குறுகிய காலத் தண்டனையாகவும் குற்றவாளி தன் குற்றத்தை உணரும் தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருத்தல் வேண்டும். அதற்காக வழங்கப்பட்டதுதான் சிறைத் தண்டனையாகும்.

நாடோடிகளாகத் திரிபவர்கள் சீர்திருத்த இல்லங்களில் அடைக்கப்பட்டார்கள். சீர்திருத்த இல்லங்கள், சிறைச்சாலை ஆகியவற்றிற்கு வார்த்தையும் இடமும் தான் வேறுபாடு. ஆனால் அவற்றின் நிர்வாகம், செயல்முறை ஆகியவை ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. 1788-ம் ஆண்டு குற்றவாளிகளைச் சிறையில் அல்லது தொழிற்சாலையில் அடைத்து வைப்பதன் மூலம் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று நியூயார்க்கு நகரத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இங்கிலாந்தில் 1597-ல் சிறைச்சாலைகள் நிறுவப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 1788-க்கு முன்பு நியூயார்க்கில் தனிப்பட்ட சட்டத்தின் மூலமாகச் சிறைச்சாலைக்கு அல்லது தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வந்தார்கள்.

அக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகள், சீர்திருத்த இல்லங்கள் ஆகியவை மிகவும் மோசமான நிலையில் இருந்தன. குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை மிகவும் கடுமையாக இருந்தது. சிறையில் குற்றவாளிகளைக் கூட்டம் கூட்டமாக அடைத்து வைத்தார்கள். இதனால் அவர்கள் வேலையற்ற சோம்பேறிகளாக இருந்தார்கள். அவர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவர்களின் உயிரைக் காப்பாற்ற மற்றவர்களை நம்பிக் கொண்டிருந்தார்கள். அதாவது சிறையில் உணவுகூட வழங்கப்படவில்லை. பட்டினியால் செத்து வந்தார்கள். நோயால் அவதியுற்றார்கள், சிறைச்சாலை நரகமாகக் காட்சி அளித்தது. கள்ளத்தனமாகக் குற்றவாளிகளுக்கு மது வழங்கப்பட்டது. சூதாடுதல் போன்ற மற்றக் குற்றச் செயல்கள் தொடர்ந்து நடந்து வந்தன. உடல் உறவிற்காக கைதிகளுக்குப் பெண்கள் அளிக்கப்பட்டார்கள். மறைமுகமாக குற்றம் ஊக்குவிக்கப்பட்டு வந்தது. சிறை அதிகாரிகளும் அவர்களுக்கு உடந்தையாக விளங்கினார்கள். சிறையில் ஆண், பெண், இளைஞர் ஆகிய குற்றவாளிகள் அனைவரையும் ஒன்றாக ஒரே இடத்தில் அடைத்து வந்தார்கள். அல்லது பெண் குற்றவாளிகள் அதே சிறையின் மற்றொரு பாகத்தில் அடைக்கப்பட்டிருந்தார்கள். வேலையற்று இருந்ததனால் நாள் முழுவதும் உறங்கிக் கொண்டும் அரட்டை அடித்துக் கொண்டுமிருந்தார்கள். அவர்கள் பெண்களிடத்தில் உடல் உறவு கொள்வதற்கும் தடைவிதிக்கப்படவில்லை. சிறை அதிகாரிகள் மறைமுகமாக கைதிகளுக்குமது விற்று வந்தார்கள். கைதிகளுக்கு விடுதலை அளிக்கப்பட்டுவிட்டாலும் மது அருந்திய பாக்கிப் பணத்தைக் கட்டுகின்ற வரையில் சிறை அதிகாரிகள் அவர்களைத் தடைப்படுத்தி வைத்திருந்தார்கள். சிறையில் நடக்கும் தீய செயல்களை, குற்றங்களைத் தடுக்க எந்த

வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் சிறையிலிருந்து வெளிவரும்போது தெளிந்த, திறமையான குற்றவாளிகளாக வெளியேறினார்கள். 'சிறை' என்பது குற்றங்கள் புரிவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கக்கூடிய பயிற்சிக் கூடமாக காட்சியளித்தது.

அமெரிக்காவில் 1776-ல் சிறைச்சாலைகளில் கைதிகள் பசியால், பட்டினியால், நோயால் இறந்து கொண்டிருந்தார்கள். சிறையில் உள்ள கைதிகளுக்கு உணவு மற்றும் வாழ்க்கை வசதிகள் மறுக்கப்பட்டு வந்தன. அந்தக் காலத்தில் வாழ்ந்த ரிச்சர்ட்விஸ்டர் (Richard Wister) என்பவர் கருணை உள்ளம் படைத்தவர், இரக்கம் உடையவர். பட்டினியால் கைதிகள் இறந்து கொண்டிருப்பதைக் கண்ட அவர் உள்ளம் உருகித் தன் சொந்தச் செலவினால் சிறையில் உள்ள கைதிகளுக்கு உணவு அளித்து உயிர்பிச்சை அளித்தார். இந்த நற்செயலைக் கண்ணுற்ற மற்ற நல்மனம் கொண்டவர்களும் சிறைக் கைதிகளுக்கு உதவி அளிக்க முன் வந்தார்கள். 'கைதிகளின் துன்பத்தை துயரைத் தணிப்போம்' என்ற கொள்கையுடன் 'கைதிகளின் துயர் தணிப்புக்குழு (Alleviating Distressed Prisoners)' என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக் குழுவில் பொது மக்களில் நல்லோர்கள் இடம் பெற்றிருந்தார்கள். இது போரின் காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 1787-ல் கைதிகளின் துயர் தணிப்புக்காக ஃபிலடெல்ஃபியா குழு (Philadelphia Society) அமைக்கப்பட்டது. ஆனால் கைதிகளுக்கு உதவி அளித்தாலும் கைதிகளின் உடல் வலி அல்லது நோயைப் போக்குதல் இதன் முக்கிய நோக்கமாக விளங்கியது. மரண தண்டனையைத் தவிர்த்து தனியறை சிறையடைப்பு (Solitary Confinement) தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. குற்றவாளிகளின் மறுமலர்ச்சி வாழ்க்கையில அக்கறை மேற்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் சிறிய சிறைச்சாலைகள் பெரியவையாக மாற்றப்பட்டன. நகரச் சிறைச்சாலை என்ற பெயரை மாற்றி மாநில சிறைச்சாலை என்று அழைக்கப்பட்டது. 1773-ல் இம் மாதிரியான மாநில சிறைச்சாலைகள் தொடங்கப்படவில்லை. சில காலம் பழைய சுரங்கத்தை விலைக்கு வாங்கி அதையே சிறைச்சாலையாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. 1827-ம் ஆண்டு வரையில் கடுங்குற்றம் புரியும் குற்றவாளிகளுக்கு இச் சிறை பயன்படுத்தப்பட்டு வந்தது. சிறையில் கைதிகள் கழுத்திலும், காலிலும் வலுவான இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இரவு நேரங்களில் வைக்கப்பட்டார்கள். 1785-ல் தனியறைச் சிறையடைப்பில் உள்ள கைதிகள் கடுமையான வேலை

களையும் செய்யவேண்டும் என்ற கட்டளை செயற்படுத்தப்பட்டு வந்தது.

தனியறைச் சிறையடைப்புத் தண்டனை முறை அமெரிக்கா முழுவதும் வெகுவாகப் பரவியது. உழைப்பு! அமைதி!! குற்றத் திற்குக் கழுவாய் தேடுதல், குற்றத்திற்கு வருந்துதல் ஆகிய வாசகங்கள் மாநில சிறைச்சாலைகளில் எழுதப்பட்டுள்ளன. மாவட்ட சிறையாக இருந்தவை மாநிலச் சிறைகளாக மாற்றப்பட்டன. மனிதாபிமானத்திற்காக அல்ல, குற்றவாளிகள் தப்பித்துப் போகாமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையும், மரணதண்டனைக்குப் பதிலாக நீண்டகால தனி யறைச் சிறையடைப்பு (Solitary Confinement) வழங்கப்படலாம் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப் பட்டது. 1786-ல் கொலைக் குற்றம் நீங்கலாக மற்ற வகைக் குற்றங்களுக்கு மரணதண்டனை, உடல் ஒறுத்தல் ஆகிய தண்டனைகளை நீக்கிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அபராதம், சிறைத் தண்டனை ஆகியவை தண்டனையாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் உடல் ஒறுத்தல் தண்டனை நீக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனால் கைதிகளுக்குத் தனியான உடை அளிக்கப்பட்டு மொட்டை அடிக்கப்பட்டுச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுப் பொது இடங்களில் கடுமையான வேலை செய்ய ஈவிரக்கமின்றி வற்புறுத் தப்பட்டார்கள். பொது இடங்களில் சங்கிலியுடன் உழைக்கக் கைதிகள் விரும்பவில்லை. அது அவர்களுக்கு இழிவான செய லாகக் காணப்பட்டதில் வியப்பில்லை. ஆகவே, அவர்கள் நகரங் களுக்கும் கிராமப்புறங்களுக்கும் மாற்றப்பட்டு அங்கே அடைக்கப் பட்டார்கள். கைதிகளின் நலனுக்காக மாநில நிதியிலிருந்து சிறிது தொகை ஒதுக்கப்பட்டது. மேலும், நீண்டகால சிறைத் தண்டனை அடைந்துள்ள கைதிகளுக்குப் போதுமான பண வசதி யளிக்க முடியாமையினுல் அவர்களின் தேவைக்கு அவர்கள் உழைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் குற்றவாளி களைச் சிறையில் தடைப்படுத்தி வைத்து விட்டாலே 'போதுமான தண்டனையாகி விடாது' என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. ஆகவே கைதிகள் சிறைத் தண்டனையுடன் கடுமையான உழைப்பும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் கைதிகளுக்குக் கடுமையான உழைப்பு உழைக்க வசதி அளிக்கப்பட்டது. பிறகு கைதிகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற கொள்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி திருந்தியல் சிறை (Peniten-

tiary) அமைக்கப்பட்டது. பழிக்குப்பழி என்ற முறையில் சிறைத் தண்டனை அமையாமல் 'சிறை' கைதிகளைச் சீர்திருத்துவதற்கான கூடமாக அமைக்கப்பட்டது. அதற்காகத் திருந்தியல் சிறைகள் அதிக அளவில் நிறுவப்பட்டன. அல்லது பழைய சிறைகளே திருந்தியல் சிறைகளாக மாற்றப்பட்டன. திருந்தியயல் சிறையில் மது விலக்கப்பட்டது. தெளிந்தநிலை, அறிவு, அமைதி, துப்புரவு, மருத்துவ வசதி, ஒழுங்கான உழைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டன. வேலையில்லாத ஓய்வு நேரங்களில் தனியறைச் சிறையடைப்பு செயற்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் மத வழிபாடு செய்யவும் உடலையும் உள்ளத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும் குற்றமனம் திருந்தி நல்லோர்களாக நடக்கத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டார்கள். தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது தொழிற்சாலைகளின் வெளிப்புறங்களில் கடுங்காவல் வைக்கப்பட்டு கைதிகள் தப்பியோடாவண்ணம் பாதுகாக்கப் பட்டது. ஆனால் பணியாற்றும்போது முன்போல சங்கியால் பிணைக்கப்படவில்லை. இம்முறை குற்றவாளிகளின் புனர்வாழ்விற்கு மறு சீரமைப்புக்குப் பெரிதும் ஆதரவாகக் காணப்பட்டதனால் நாடெங்கும் பின்பற்றப்பட்டது.

ஆனால், குற்றத்தைத் தடுக்கவும், குற்றவாளியைச் சீர்திருத்தம் செய்யவும் 'கடுந்தண்டனை' தான் ஏற்றது என்ற கொள்கை உடையவர்கள் மேலே கூறப்பட்ட சீர்திருத்த முறையைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். சிறைத் தண்டனையுடன் உடல் உழைப்பு அளித்தல் குற்றத்திற்கான குற்றத்தை உணர்த்துவதற்கான போதுமான தண்டனையாகாது. தொழிலில் ஈடுபடுத்துதல் என்பது பொருள் வளத்தைப் பெருக்கும் பொருட்டு நல்லோர்களும் கடும் உழைப்பு உழைத்து வருகின்றார்கள். ஆகவே, நல்லவர்களின் கடும் உழைப்பிற்கும், குற்றவாளிகளின் கடும் உழைப்பிற்கும் என்ன வேறுபாடு காண முடியும்? சமுதாயத்தில் குற்றவாளிகளின் நிலை இழிவானது, தரங்கெட்டது என்பதைக் குற்றவாளிகள் உணரச் செய்தல் வேண்டும் என்பது எதிர்ப்பு வாதிகளின் வாதமாகக் காணப்பட்டது.

பென்சில்வேனியா முறை (Pensylvania System)

சிறையில் கைதிகள் நடத்தப்படும் நிலைமை, சிறையின் தன்மை ஆகியவை மிகவும் மோசமான வருந்தத்தக்க நிலையில் இருந்ததாகப் பென்சில்வேனியா அதிகாரிகள், சமுதாய வல்லுநர்கள், குற்றவியல் வல்லுநர்கள் ஆகியோர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். கைதிகளைக் கும்பலாக அடைத்து வைப்பது கூடாது. கைதிகளின் தரம் பிரித்து, தனியறைச் சிறையில் அடைத்து

வைக்கப்படவேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டது, அதன்படி வால்நட் (Walnut) வீதியில் ஒரு சிறைச்சாலை அமைக்கப்பட்டது. அங்கே மாநிலக் கைதிகள் தடைப்படுத்தி வைக்கப்பட்டார்கள். தனியறைச் சிறையடைப்பு முறையினால் கடுங் குற்றவாளிகளுடன் சாதாரண குற்றவாளிகளை இணைத்து அடைத்து வைப்பது தடுக்கப்படுகிறது. அதனால் சாதாரண குற்றவாளி கடுங் குற்றவாளியுடன் இணைவதனால் அவனுடைய குற்றவொழுக்கம் பரவுவதைத் தடுப்பதுடன் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையும் வழங்கப்பட்டு வருகின்றது. குற்றவாளிகளைத் திருத்துவதற்கு அவர்களின் தரம் காண்பது அவசியமாகிறது, தனியறைச் சிறையடைப்பு முறையில் கைதிகளைத் தனித்தனியாக அடைத்து வைப்பதனால் தரத்தை எளிதில் காண முடிகிறது. தரத்தின்படியாகத்தான் அவர்கள் அடைக்கப்படுகின்றார்கள்: அவர்களின் போக்கு, நடத்தையைக் கண்காணிக்கவும் வசதியாக அமைந்திருந்தது. இம்முறையில் கைதிகளைத் தொழிலில் ஈடுபடுத்தவில்லை. தனியறைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதனால் கைதிகள் மற்றொரு கைதியுடன் பேசவும், பார்க்கவும், முடியவில்லை. இதனால் தனிமையை எண்ணிக் கைதிகள் மனம் வருந்தித் தம் குற்றத்திற்கு இரங்கி நல்ல மனம் உடையவர்களாகத் திருந்துவார்கள் என்று நம்பப்பட்டது. நீண்ட நாட்கள் தனியறைச் சிறையில் அடைக்கப்பட்டு தனிமையில் வாழும்போதுதான் அவர்கள் தங்களின் செயல்களை எண்ணி எண்ணி ஏங்குவார்கள். அப்படிச் செய்வதற்கு இக்கொடிய தண்டனைதான் தேவை என்று கருதப்பட்டது. சில காலம் தனியறைச் சிறையடைப்பு முறை செயற்படுத்தப்பட்ட பிறகு கடுங்குற்றவாளிகள் கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள், தனிமையுடன் கடுமையான வேலையும் சேர்ந்து கைதிகளுக்கு மேலும் துன்பம் அதிகரித்தது. இப்படியாவது குற்றவாளி திருந்தி விடுவான் என்று கருதப்பட்டது. தனிமை, கடுமையான பணி, ஆகியவை இரண்டும் இணைந்து அதே நிலை நீடித்தால் கைதிக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்று எண்ணி வருடத்திற்கு ஒருமுறை 4-30 மணி நேரம் உரையாடுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் தனியறைச் சிறைக் கைதிகளின் நிலைமையைப் பற்றி எளிதில் அறிந்து கொள்ளலாம். மேலும், வழங்கப்பட்டுள்ள 4-30 நேர காலத்திலும் சமயத் தலைவர்களுடன் சமயக் கருத்துகளையோ அல்லது சமுதாயப் பெரியோர்களுடன் நல்லொழுக்கக் கருத்துக்களைப் பேசவும் அனுமதிக்கப்பட்டது. பொதுவாக, சமயத் தலைவர்கள், சமுதாயப் பெரியோர்கள், சிறையதிகாரிகள்தாம் கடுங் குற்றவாளியைப் பார்க்கவும் பேசவும் அனுமதிக்கப்பட்டார்கள். கைதிகளின் தனிமை பாதிக்காவண்ணம் எப்பொழுதாவது ஒரு முறை

மற்றக் கைதிகளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இம்முறை மற்ற இடங்களிலும் பின்பற்றப்பட்டது. வால்நட் வீதியில் உள்ள சிறையில் தொடக்கத்தில் கைதிகளைச் சோம்பேறியாக அடைத்து வைத்திருந்தார்கள். பிறகு சிறைக்குள் தொழில் புரிய அனுமதிக்கப்பட்டார்கள். இந்தப் பென்சில்வேனியா முறை நாளுக்குநாள் வளர்ச்சியடைந்தது, அதன் பயனாகக் கைதிகள் நூற்றல், நெய்தல், காலணி தயார் செய்தல்போன்ற வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள். சிறைக்கு வெளியே கைதிகளை அழைத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் கைதிகளின் கண்களைக் கட்டி அழைத்துச் செல்லப்பட்டார்கள். இம்முறையில் பல சிரமங்கள் காணப்பட்டதனால் 1913-ல் நீக்கப்பட்டுவிட்டது. அதன் பின் தனியறைச் சிறையடைப்பு முறை செயற்படுத்தப் படவில்லை.

ஆயுபர்ன் முறை (Ayuburn system)

கவர்னர் ஜான் ஜேய் (John Jai) அவர்களின் வேண்டுகோளினால்நியூயார்க்கில் குற்றச்சட்டம் திருத்தியமைக்க 1794-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு பென்சில்வேனியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கே பென்சில்வேனியா என்ற புதிய முறையை ஆராய்ந்தறியவும், சிறையில் திருத்தம் ஏற்படுத்தவும் அக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அந்தக் குழு பென்சில்வேனியாவிற்குச் சென்று சிறை அமைப்புகளைப் பார்வையிட்டு ஓர் அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டது. அக் குழு தன் அறிக்கையை வெளியிட்டதும் 1796-ல் நியூயார்க்கில் புதிய சட்டம் இயற்றப்பட்டது. அதாவது மரண தண்டனை வழங்கக் கூடிய குற்றங்கள் இரண்டாகக் குறைக்கப்பட்டன. மற்றக் குற்றங்களுக்கு வழங்கி வந்த மரண தண்டனை, உடல் ஒறுத்தல் தண்டனை ஆகியவை நீக்கப்பட்டு விட்டன, அதற்காகச் சிறைத் தண்டனை வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது இரண்டு சிறைச் சாலைகள் நிறுவுவதற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. 1797-ல் புதிய வாயிற் சிறை (New Gate Prison) என்ற பெயருடன் உடனடியாக ஒரு சிறைச்சாலை திறக்கப்பட்டது. இச் சிறைச்சாலை சிறிதாக அமைந்திருந்த காரணத்தினால் தனியறைச் சிறையடைப்பு தண்டனையைச் செயற்படுத்த இயலவில்லை. புதிய வாயில் சிறை போதிய வசதிகளுடன் விளங்கவில்லை என்பதை வெகு விரைவில் நிரூபித்துவிட்டது. ஆகவே 1816-ல் ஆயுபர்ன் (Ayuburn) என்னுமிடத்தில் மற்றொரு சிறைச்சாலை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இச்சிறையில் தனியறைச் சிறையடைப்புக்கு வசதியாக சிறையின் ஒரு பகுதியில் இடம் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வந்தது.

1821-ல் ஆயுபர்னில் உள்ள சிறைக் கைதிகளை மூன்று வகையாகப் பிரிப்பதற்குச் சட்டம் இயற்றப்பட்டது. முதல் வகுப்புக் கைதிகள், இரண்டாம் வகுப்புக் கைதிகள், மூன்றும் வகுப்புக் கைதிகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் வகுப்புக் கைதிகளில் வயதான, கடுமையான குற்றங்கள் புரிந்த குற்றவாளிகள் தனியறைச் சிறை முறையில் சிறையிலுள்ள தனியறைகளில் கைதிகள் தனித்தனியே அடைக்கப்பட்டு வந்தார்கள். இரண்டாம் வகுப்புக் கைதிகள் வாரத்தில் மூன்று நாட்கள் தனியறைகளில் அடைக்கப்பட்டு வந்தார்கள். மூன்றும் வகுப்புக் கைதிகள் வாரத்தில் ஒரு நாள் மட்டும் தனியறைகளில் அடைக்கப்பட்டு வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் சில நாடுகளில் முதல், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து வகுப்பு வரையில் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதன் தரம் மாறு பட்டிருக்கின்றது. முதல் வகுப்புச் குற்றங்கள் தற்செயலாக, சூழ் நிலையால் பிறர் நன்மைக்காகப் புரியும் குற்றங்களாகும். பெரும் பாலும் அரசியல் குற்றம் அரசியல் தலைவர்கள் இப் பட்டியலில் இடம் பெறுவார்கள். கடுமையான குற்றவாளிகள், பெண்கள், சிறுவர்கள், ஆகியோர் பல வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஆயுபர்ன் சிறையில் அறைகள் சிறியவைகளாக இருந்த தனுல் சிறையில் கைதிகளை வேலையில் ஈடுபடுத்த முடியவில்லை. அத்துடன் அறைகள் இருள் சூழ்ந்து இருந்த காரணத்தினுல் பணியாற்றவும் இயலாமல் போயிற்று. இந்தத் தனியறைச் சோதனை முறை பெரும் தோல்வியைக் கண்டது. இரண்டு ஆண்டுகளில் 80 கைதிகளில் இரண்டு கைதிகள் மட்டும் தனி யறைச் சிறைத் தண்டனையை வெற்றியோடு முடித்துவிட்டு வெளியேறியுள்ளார்கள். மற்றவர்களில் சிலர் இறந்துவிட் டார்கள், சிலர் பித்துப் பிடித்தவர்களாக மாறிவிட்டார்கள். சிலர் மன்னிக்கப்பட்டு விடுதலை அளிக்கப்பட்டுள்ளார்கள். 1824-ம் ஆண்டுச் சட்ட மன்றக் குழு (Legislative Commission) இதை ஆராய்ந்து இதன் மோசமான நிலையைக் கண்டறிந்து இம் முறையை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று பரிந் துரைத்தது. அந்தப் பரிந்துரையை ஏற்று உடனே செயற்படுத் தப்பட்டது. தற்பொழுது பகலில் கைதிகளைத் தொழிலில் ஈடு படுத்தி; இரவு வேளைகளில் தனியறைகளில் அடைத்து வைக்கப்படுகிருர்கள். மற்றக் கைதிகளுடன் இணைந்தும், நெருங் கியும், தொழில்புரிய அனுமதிக்கப்பட்டு வருகின்ருர்கள். ஆனுல் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விதி வகுக்கப்பட் டுள்ளது. மேற்கூறப்பட்ட சிறைத் தண்டனையின் செயற்படுத் தப்படும் முறைக்குத்தான் ஆயுபர்ன் முறை என்று பெயர்.

பென்சில்வேனியா முறையில் இரவிலும் பகலிலும் தனியறைகளில் அடைத்து வைக்கப்பட்டு வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பென்சில்வேனியா முறைக்கும் ஆயுபர்ன் முறைக்கும் உள்ள வேற்றுமைகள்: (The Controversy between the Auburn and Pensylvania Systems)

பென்சில்வேனியா முறை முதன்முதலில் தொடங்கப்பட்ட முறையாகும். ஆயுபர்ன் முறை அதைப் பின்பற்றித் தொடங்கப்பட்டதாகும். இந்த இரண்டு முறைகளையும் உலகில் உள்ள பல்வேறு நாடுகள் பின்பற்றியுள்ளன. இந்த இரண்டுமுறைகளுமே சிறைச்சாலைகளைத் திருத்தி அமைக்கவும் குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை உணரவும் எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் முயற்சியாகும். ஃபிலடெல்பியா குழு (Philadelphia Society) பென்சில்வேனியா முறைக்கு ஆதரவு அளித்தது. ஆயுபர்ன் முறைக்குப் பாஸ்டன் குழு (Boston Society) ஆதரவளித்தது. சிறைக் கட்டுப்பாட்டை அபிவிருத்தி செய்யவும் இளங் குற்றவாளிகளைச் சீர்திருத்த பாஸ்டனில் 1815-ல் ஆயுபர்ன் முறை பின்பற்றப்பட்டது. பொதுவாக, இவ்விரண்டு முறைகளும் தனித்தனி வகையில் சிறப்புற்று விளங்கின.

பென்சில்வேனியா முறையைப் பல மாநிலங்களில் செயற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஆயுபர்ன் முறைக்கு ஆதரவாகப் பல மாநிலங்கள் முன்வந்து செயற்படுத்தின. பெரும்பாலான மாநிலங்களில் ஆயுபர்ன் முறையைச் செயற்படுத்துவதற்கு முக்கிய காரணம் அதன் சிக்கனம்தான். கைதிகளைப் பயன்படுத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் பொருளாதாரத்தைக் பெருக்கமுடியும். பணியாற்றும் போது கைதிகள் ஒருவருக்கொருவர் பேசாமல் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடே குற்றவாளி தன்குற்றத்தை உணருவதற்கு—மனந்திருந்துவதற்குப்—போதுமான தண்டனையாகும். ஐரோப்பியர்கள் இவ்விரு முறைகளையும் பார்வையிட்டு ஆராய்ந்தறிந்த பின்னர் பென்சில்வேனியா முறை சிறந்துள்ளதாக அறிவித்துள்ளார்கள். 1835-ல் இங்கிலாந்து, பிரான்சு, புருஷியா, பெல்ஜியம் ஆகியநாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் மேற்கூறப்பட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள். இக்குழுவின் பரிந்துரையையும் ஆதரவையும் ஆராய்ந்த பின்னர் பென்சில்வேனியா முறையில் சிறிது மாறுபாடு செய்து ஐரோப்பிய நாடுகள் முழுவதும் செயற்படுத்தப்பட்டது. அதே முறை இந்தியாவில் சிறிது மாற்றத்துடன் செயற்படுத்தப்பட்டுவந்தது.

இந்த இரு முறைகளின் வேறுபட்ட கருத்துகள் ஏறத்தாழ 50 ஆண்டுகள் நீடித்தன. அதன் முடிவாக ஐரோப்பா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஒரு புதியமுறைச் செயற்படுத்தப்பட்டது. இதை முதன் முதலில் கேப்டன் மாக்ரே கீ (Captain Mocurochie) ஆஸ்திரேலியா கைதிகளுக்குப் பயன்படுத்தினர். ஆனல் இம்முறைக்கு அயர்லாந்து முறை என்று பெயர் (Irish System). இம் முறை அயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து பின்பற்றப்பட்டதாகும். இம் முறையில் கைதிகளின் சிறைத் தண்டனையின் காலத்தை வரையறுக்கப்படாமல் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். இதற்குக் கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை (Indeterminate Sentence) என்று பெயர். சீர்திருத்தக் கொள்கைக்கு மிகவும் ஏற்ற தண்டனை முறையாகக் கருதப்படுவது கால அளவு வரையறுக்கப்படாத சிறைத்தண்டனையாகும். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும்போது நீதிபதி சிறைத் தண்டனையின் கால அளவை வரையறுத்துக் கூருமல் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு கூறுவார். குற்றவாளி சிறையில் கைதியாக இருக்கும்போது அவனது நடத்தை, போக்கு, ஒழுக்கம், குற்றத்திற்காக வருந்துதல் ஆகிய தன்மைகளை ஆராய்ந்த பின்னர், சமுதாயத்திற்கு ஏற்றவனுக, நல்லவனுக, நேர்மைக்குந் பாடுபடக் கூடியவனுக உருவெடுத்த பின்பு அவனைச் சிறை அதிகாரிகள் விடுதலை செய்வார்கள் அல்லது நீதிபதிக்கு அவனது நன்னடத்தையைப் பற்றி எடுத்துரைத்துக் கைதிக்கு விடுதலை அளிக்கப் பரிந்துரைப்பார்கள். அதை ஆராய்ந்தறிந்த பிறகு நீதிபதி தண்டனையின் காலம் போதும் என்று தீர்ப்பளித்துக் கைதியை விடுவிக்க உத்தரவு வழங்குவார். குறிப்பிட்ட காலம் வரையில் அல்லது சிறைத்தண்டனையின் கால அளவை வரையறுத்துத் தீர்ப்பு வழங்கப்பட்டால் கைதி அதுவரையில் நல்லொழுக்கம் உள்ளவனுக, திருந்தியவனுக நடித்து சிறைத் தண்டனை முடிந்தவுடன் மீண்டும் குற்றவொழுக்கத்தில் ஈடுபட்டால் சிறைத் தண்டனை அவனைச் சீர்திருத்த உதவி செய்யவில்லையென்றுதான் வெளிப்படுத்துகின்றது. ஆனல் கால வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை வழங்குவதனுல், பல ஊழல்கள் புரிவதற்கு ஏதுவாகின்றன. கால வரையறுக்கப்படாததனுல் வழக்கைச் சரிகட்டுதல் போன்று அரசியல் மற்றக் குறுக்கீடுகளின் காரணமாகக் கைதி திருந்திவிட்டான் என்ற நற்சான்றிதழுடன் விரைவில் விடுதலைக்கு முயற்சி மேற்கொள்ளப்படலாம் அல்லவா. சீர்திருத்தக் கொள்கைக்கு இம் மாதிரியாக வரையறுக்கப்படாமல் இருந்தால்தான் குற்றவாளிக்கும் பயிற்சி அளிக்கவும், கல்வி கற்றுக் கொடுக்கவும் நல்

லொழுக்கம் போதிக்கவும், போதிய வசதியாக இருக்கும். எப்படியும் பயிற்சி முடிவடைவதற்கு முன்பு கைதியை விடுவிக்கப்போவதில்லை. இன்னும் சிறிது காலம் தங்கியிருந்தால் போதிய பயிற்சி, திறமை வந்துவிடும் என்றாலும் சிறை அதிகாரிகள் வழங்கப்பட்ட சிறைத் தண்டனையின் காலத்திற்குமேல் ஒருநாள் கூட வைத்திருக்கக் கூடாது. ஆகவே, குறுகிய காலச் சிறைத் தண்டனையினால் குற்றவாளிக்கு நன்மையில்லை என்று குறை கூறப்பட்டு வருகின்றது. ஆனால் குறைந்த தண்டனை வழங்கக்கூடிய குற்றமோ அல்லது சாதாரண குற்றமோ புரிந்தவர்களுக்குக் கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை என்பது கொடுமையாக இருக்காதா? மேலும் சாதாரண குற்றவாளி பயிற்சியிலும் திறமை பெறுவதிலும் அக்கறை காட்டாமல் இருக்கலாம். அல்லது போதிய கல்வியறிவு, ஊக்கம், ஞாபகசக்தி, உத்தி, நுட்பம், ஆகியவை இல்லாமல் இருக்கலாம். அவனுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்றால் இரண்டு மூன்று ஆண்டுகள் தேவைப்படலாம் என்றால் அதுவரையில் நிறுத்திவைக்க வேண்டும். மேலும், சாதாரண குற்றவாளியை மூன்று நான்கு ஆண்டுகள் சிறையில் தடைப்படுத்தி வைக்கப்படும்போது அரசாங்கத்திற்குக் கூடுதல் செலவு ஆகிறது. சிறையிலும் எளிதில் இடம் காலியாகாது. மேலும் எப்பொழுது காலியாகும் என்றுகூட கூறமுடியாத நிலைமை உண்டு. இதற்கு மாறாக, கடுங் குற்றவாளி கல்வி, பயிற்சி, அறிவு, உத்தி, நுட்பம் ஆகியவற்றில் தேர்ச்சி உடையவனாக விளங்கினால் இம்முறைப்படி. குறுகிய காலத்தில் அவன் விடுதலைக்குரியவனாகிறான். பத்தாண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவன் ஓரிரு ஆண்டுகளில் விடுதலை அடைந்து விடுவதற்கும் வாய்ப்பு உண்டு. ஆகவே, நன்மை சிறிது இருந்தாலும் ஊழல் புரிவதற்கு ஆதாரமாக விளங்குகின்றது இம்முறை.

1869-ல் இம்முறையை எல்மிரா சீர்திருத்தப்பள்ளியில் (Elmira Reformatory School) முதன் முதல் செயற்படுத்த சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் 1876-ல் தான் நடைமுறைப்படுத்தப் பட்டது. இளங் குற்றவாளிகளுக்குக் கல்வி, பயிற்சி, உற்பத்தி செய்தல் ஆகியவை போதிக்கப்பட்டன. அறிவும் ஒழுக்கமும் வாய்ந்த இளங் குற்றவாளிகளுக்கு அதிக மதிப்பெண் வழங்கப் பட்டு வந்தது. இதன் அடிப்படையில் நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் (Parole) செயற்படுத்துவதற்கு ஆதாரமாக அமைந்தது.

சிறைகளைச் சிறப்புற அமைத்தல் (Specialization of Prisons)

கைதிகளைத் திருத்துவதற்கு முன்னர் சிறைச் சாலைகள் சீர்திருத்தப்படவேண்டும் என்ற கருத்தில் சிறைகள் திருத்தி மாற்றியமைக்கப்பட்டன. குற்றவாளி குற்றத்தைப் புரிந்த போது அதற்குரிய தண்டனையை நினைத்துப் பார்க்காவிட்டாலும் கைது செய்யப்பட்ட பிறகாவது குற்றத்திற்குரிய தண்டனையைப் பற்றி எண்ணிப் பார்க்கத்தான் செய்வான். ஏறத்தாழ 200 ஆண்டுகளாகக் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டு வந்துள்ளார்கள். அவர்களில் பலர் சிறையிலேயே இறந்துள்ளார்கள். பலர் நோய்வாய்ப்பட்டு வெளியேறியுள்ளார்கள். வெகு சிலர் தண்டனையை முடித்துவிட்டு விடுதலை அடைந்துள்ளார்கள். பலர் பித்தர்களாக மாறியிருக்கின்றனர். அதன் காரணமாகச் சிறைச் சாலைகள் திருத்தப்படுவது அவசியம் எனக் கருதப்பட்டது. இளங்குற்றவாளிகளைத் தனியாகப் பிரித்து வைத்து விடவேண்டும் எனக் கருதிச் சீர்திருத்த நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. இந்த நிறுவனங்களுக்கு முதல் முறைக் குற்றவாளி, நாடோடிகள் ஆகியோர்கள் அனுப்பப்பட்டு அடைக்கப்பட்டார்கள். ஆனால் அந்தச் சீர்திருத்த நிறுவனங்களிலும் அதே முறைதான் செயற்படுத்தப்பட்டது. சீர்திருத்த நிலையம் என்ற பெயரில் சிறைத் தண்டனையின் நடைமுறைகளே செயற்படுத்தப்பட்டு வந்தன. ஆகையினால் அந்தச் சீர்திருத்த நிலையங்களையும் அதன் நடைமுறைச் செயல்களையும் கைவிட நேர்ந்தது. இதையடுத்து மாநிலச் சிறைச்சாலைகள் பல பிரிவுகளாக அமைக்கப்பட்டன. இளங்குற்றவாளி சிறை, பைத்தியக்கார சீர்திருத்த நிலையம், முதியோர் சிறை, பெண்கள் சிறை, நீக்ரோ சிறை எனத் தரம் பிரித்து அமைக்கப்பட்டது.

இந்தியாவில் இளைஞர்கள், முதியோர், பெண்கள் ஆகியோர்களுக்குத் தனித்தனியான சிறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த மாநிலத்தில் குற்றம் புரியும் குற்றவாளியாக அந்தந்த மாநிலச் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்படுகின்றார்கள். சில வேலைகளில் பாதுகாப்பு நடவடிக்கையை முன்னிட்டு ஒரு மாநிலத்திலுள்ள குற்றவாளிகளை வேறொரு மாநிலச் சிறைச் சாலைகளில் அடைத்து வைக்கப்படுவதுமுண்டு. கள்ளக்கடத்தல், பதுக்கி வைத்தல், அரசியல் குற்றங்கள் போன்ற குற்றங்கள் புரியும் குற்றவாளிகளை வேறு மாநிலச் சிறைகளில் அடைத்து வைக்கின்றார்கள். ஆனால் ஒரே மாநிலத்தில் உள்ளவர்கள் அதே மாவட்டச் சிறைகளில் அடைத்து வைக்கப்படுவதில்லை. பெரும்பாலும், வெவ்வேறு மாவட்டச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு வருகின்றார்கள். வட்டங்களில் சிறிய சிறைகளும் மாவட்-

டங்களில் பெரிய அளவிலும் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர மத்திய சிறைகளும் உண்டு.

சில வேளைகளில் அரசியல் குற்றவாளிகளுக்கு, அரசியல் தலைவர்களுக்குத் துன்பம் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அவரின் இல்லத்தைவிட்டு வெகு தூரத்தில் உள்ள சிறைக்கு அனுப்பப்பட்டுவிடுகின்றார்கள். அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கை என்று கூறினாலும் குற்றவாளி 'பழிவாங்கப்பட்டு விட்டது' என்று எண்ணுகிற நிலை உண்டு.

கைதிகளும் சமுதாயத் தொடர்பும் (Prisoners and Social Contacts)

பென்சில்வேனியா, ஆயுபர்ன் ஆகிய முறைகளை ஆராய்ந்ததில் கைதிகள் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்ற கருத்து வெளிப்பட்டது. இம் முறை மாறிப் படிப்படியாக சிறைச்சாலைகள் சீர்திருத்தம் செய்யப்பட்டன. அதன் பயனாக, கைதிகளின் வசதி பெருகியது. சிறையின் தரைப்பகுதிக்குப் பூசுதல், பலகணிகள் பொருத்தப்பட்டன. வெளிச்சம், காற்றோட்டம் ஆகிய சுகாதார வசதிகளுடன் சுகாதாரமான உணவு வகைகள் வழங்கப்பட்டன. முகம் மழித்தல், முடியலங்காரம் செய்தல், நல்ல உடை வழங்குதல், மருத்துவ வசதி, படிக்க வசதி, வழிபாடு செய்ய வாய்ப்பு அளித்தல், நன்னெறிப் போதனை அறிவுறுத்தல், தனிமையை அகற்றி மற்றக் கைதிகளுடனும், உறவினர்களுடனும் பேசுவதற்கு அனுமதித்தல், இன்பக் கேளிக்கைகள், நூல் நிலைய வசதி, சிறையில் கவிதை, கதை எழுதவும் வாய்ப்பு அளித்தல், படித்துப்பட்டம் பெறுதற்கு ஆதரவளித்தல், தொழில் புரிதல், பொருளீட்டுதல், சேமித்து வைத்தல் போன்ற பல்வேறு வசதிகளும், நல் வாய்ப்புகளும் அமைந்த சிறைச்சாலைகள் செயற்பட்டு வருகின்றன. கைதிகளின் உறவினர்களின் திருமணத்திற்கும் இறப்பிற்கும் பங்கேற்கும் வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய சிறைச்சாலை எல்லா வசதிகளையும் பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றது. நல்லொழுக்கத்துடன் ஒழுகும் கைதிகளுக்கு, கைதிகளுக்குள் பதவி உயர்வு அளிக்கப்படுவதுடன் நன்னடத்தையின் காரணமாக மூன்று மாதத்திற்கு ஒரு நாள் விடுமுறை அல்லது ஆறு மாதத்திற்கு 14 நாள் விடுமுறை அளிக்கப்படுகின்றது. அல்லது சிறைத் தண்டனையில் கழித்து, சிறைத் தண்டனை காலத்திற்கு முன்பே விடுதலை அளிக்கப்பட்டு வருகின்றது. சிறைகளில் தொழிற்சாலைகளை அமைத்து கைதிகள் பணியாற்றிப் பொருளீட்டும் வசதி மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் ஒரு பங்கு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகின்றது. அதில் மாதாமாதம் கைதியிடம்

அல்லது கைதியின் குடும்பத்திற்கு அளிக்கப்படுகிறது. மீதி ஒரு பாகம் சேர்த்து வைக்கப்பட்டு கைதி விடுதலையடையும்போது மொத்தமாக வழங்கப்படுகிறது. மர வேலைகள், தச்சு வேலைகள், கருமான் வேலை இப்படிப் பல துறைகளில் ஈடுபட்டுப் பணியாற்றி வருகின்றார்கள். அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் கைதிகள் தனியார் தொழிற்சாலைகளில் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றார்கள்.

ரஷியா, ஜெர்மன் போன்ற நாடுகளில் சிலவகையான கைதிகள் ஒவ்வொரு வாரத்தின் இறுதி நாளில் அவர்களின் சொந்த இல்லங்களில் தங்கவும் அனுமதிக்கப்படுகின்றார்கள். அல்லது பகலில் இல்லத்திலும் இரவில் சிறையிலும், இரவில் சிறையில் பணியாற்றினால் பகலில் இல்லத்திலும் தங்குவதற்கு அனுமதிக்கப் படுகின்றார்கள். மெக்ஸிகன் (Mexican) சிறைகளின் கைதி ஆண்களாக இருந்தால் அவர்களுடன் தங்குவதற்கு அவர்களின் மனைவி மார்கள் ஓர் இரவு அனுமதிக்கப்படுகின்றார்கள். மானிடப் பிறவிக்காக, கைதியாக இருந்தாலும் அவன் உடல், மனப் பசி தீருதற்கு உதவி அளிக்கப்படுகிறது.

இன்று நாட்டில் சாதாரண மக்கள், ஏழை மக்களின் வாழ்க்கையைவிட கைதிகளின் நிலைமை உயர்ந்து காணப்படுகிறது. உணவு வசதி, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றுடன் தொழிலும் எளிதில் கிடைத்துவிடுகின்றது. அதனால்தான் சிறைக்குச் சென்று வந்தவனை 'மாமியார் வீட்டிற்குப் போய் வந்தவன்' என்று செல்லமாகக் கூறுகின்றார்கள். இன்று சிறையிலிருந்து விடுதலை அடைந்து வரும் கைதி உடல் ஆரோக்கியத்துடன் தெம்பாகக் காணப்படுகின்றான். வெளியில் வந்தால் அவனுக்குப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. வேலைவாய்ப்பு, உணவு, உடை ஆகியவற்றிற்கு அவதிப்படுகின்றான். ஆகவே, மீண்டும் அவன் குற்றவொழுக்கத்தில் ஈடுபட முற்படுகின்றான். பொதுவாக, சாதாரண குற்றவாளிகள், ஜேப்படித் திருடர்கள், பலமுறை சிறைக்குச் சென்றவர்கள் முதலியவர்கள் சிறை வாழ்க்கையை வெறுக்கவும் இல்லை, விரும்பவும் இல்லை. ஆனால், அது கிடைத்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அதனுடன் இணைந்து விடுகின்ற தன்மை அடைந்து விட்டார்கள்.

ஆகவே, கைதியின் விடுதலைக்குப்பின் தக்க உதவி நடவடிக்கைளில் ஈடுபடுதல் வேண்டும். கைதியின் விடுதலைக்குப்பின் உதவுதல் (Aftercare system) முறை என்ற கொள்கையின் அடிப்படையில் பல நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

சிறையிலிருந்து விடுதலை அடைந்த கைதிகள் தொழிலில் ஈடுபடவும், வேலை தேடிக் கொடுக்கவும், தொழில் நடத்தப் பண உதவி மற்ற உதவிகள் வழங்கவும், விடுதலை அடைந்த கைதியின் மறுமலர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளையும் இக்குழு அல்லது நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது. இதற்கு விடுதலை அடைந்த கைதிகளின் உதவிச் சங்கம் (Discharged Prisoners Aid Socitey) என்று பெயர். விடுதலை அடைந்த கைதிகளுக்கு உதவி புரிவதற்காக மாநிலந்தோறும் பல நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. கைதிகளின் மறு சீரமைப்புக்கும், புனர் வாழ்விற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன.

இப்பணியில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். விடுதலை அடைந்த கைதிகளுக்கு மறு சீரமைப்புக் குழு என்ற பெயரில் 1926-ல் தொடங்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் விடுதலை அடைந்த கைதிகளுக்கு மறுசீரமைப்புக் குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று சித்தூர், கோவை, கோதாவரி, கோராப்பட்டு, மலபார், சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மறு சீரமைப்புச் சங்கம் அல்லது குழு என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றன.

குற்றவாளிகளின் குற்றவொழுக்கத்தைப் போக்க எவ்வளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அவற்றைத் தொடர்ந்து உறுதிப்படுத்த கைதிகள் விடுதலை அடைந்த பிறகு அவர்கள் நற்செயலில் ஈடுபட ஊக்கமும் ஆக்கமும் அளித்தல் அவசியமாகும். அப்பொழுதுதான் சிறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் பயனளிக்கும். கைதி வெளியில் வந்தவுடன் பழைய குற்றவொழுக்கத்துடனும், குற்றவாளிகளுடனும் இணையும்போது அவனது ஒழுக்கம் பாதிக்கப்படுகின்றது. வாழ்க்கையில் மீண்டும் ஏமாற்றம், வறுமை ஆகியவற்றைச் சந்திக்கும்போது குற்றவொழுக்கத்தில் ஈடுபடத் தயங்குவதில்லை.

பொதுவாக, பழிவுணர்ச்சியோடு, முன்கோபத்தோடு வெறுப்போடு புரியும் குற்றங்கள் பெரும்பாலும் நபருக்கு எதிரான குற்றங்களாகவே இருக்கும். சில வேளைகளில் சொத்திற்கு எதிரான குற்றங்களாகவும் உருவெடுக்கும். அதாவது நேரடித் தாக்குதல் இயலாதபோது மறைமுகமான தாக்குதலில் ஈடுபடுகின்றனர்கள். இவ்வகையான குற்றவாளிகள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர்கள். இவர்கள் வறுமையில் வாழ்பவர்களாக இருப்பதில்லை. இவ்வகை

யான கைதிகள் விடுதலை அடைந்தவுடன் வசதியான வாழ்க்கை யைத் தொடங்குகின்றார்கள். இவர்களின் பழி உணர்ச்சியைப் போக்கிவிட்டால் நல்லவர்களாக, வல்லவர்களாக விளங்குவார்கள். இவர்கள் சிறையிலிருந்து விடுதலை அடைந்து வந்தாலும் அவர் களைச் சமுதாயம் எளிதில் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் வறுமை யின் காரணமாக குற்றம்புரிந்து சிறைத்தண்டனை அடைந்து விடுதலை அடைந்த குற்றவாளிகளைச் சமுதாயம் எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் மீண்டும் குற்றவொழுக்கத்தில், குற்றச் செயலில் ஈடுபடும்படி வற்புறுத்தப்படுகின்றார்கள். இதைத் தடுக் கத்தான் கைதிகளின் மறுசீரமைப்புச் சங்கங்கள், குழுக்கள் தோன்றலாயின. இவர்கள் நல்லவர்களாக வாழ இச்சங்கத்தின் உதவி அவசியம் தேவைப்படுகின்றது. சிறைகளைச் சீர்திருத்தம் செய்து மாற்றி அமைக்கப்படவேண்டும். சிறையிலிருந்து விடுதலை அடைந்து வெளிவந்த பிறகும் அவர்களின் புனர்வாழ்விற்கு ஆக்க மும் ஊக்கமும் அளிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டால்—செயற்படுத்தப்பட்டால்—குற்றவாளி தன் குற்றத்திற்காக வருந்து வது எங்கே? பழிக்குப்பழி என்ற தண்டனைக் கொள்கையின்படி குற்றவாளி குற்றத்தால் அடைந்த இன்பத்தின் அளவிற்குத் துன்பத்தை அனுபவிக்கச் செய்தல் வேண்டும் என்ற கொள்கை மாறுபட்ட கொள்கையாக விளங்குகின்றது. மேலும் குற்றங்கள் அதிகரிப்பதற்கு எளிய, வசதியான தண்டனை ஊக்கம் அளித்தது போன்று அமைந்து இருக்கின்றது. இதனால் குற்றவொழுக்கம் தொடர்ந்து வருவதுடன் அதிக அளவில் பரவுவதற்கும் அதிக வாய்ப்புண்டு என்று பல்வேறு வினாக்கள் எழுப்பப்படுகின்றன. நாகரிக உலகில் எந்த ஒரு பிரச்சினையையும் அறிவியல் சார்ந்த முறையில் அணுகவேண்டும். ‘பழிக்குப் பழி’ என்ற கொள்கை யுடன் தண்டனை வழங்கிவந்த காலத்திலும் குற்றங்கள் தொடர்ந்து புரியப்பட்டுதான் வந்திருக்கின்றன. மாறுபட்ட எளிமையான தண்டனை வழங்கும் இந்தக் காலத்திலும் அதே அளவு குற்றச் செயல்கள்தான் புரியப்பட்டுவருகின்றன. குற்றப்புள்ளி விவரத்தில் எண்ணிக்கை அதிகம் இருப்பதற்கு பல்வேறு காரணக் கூறுகள் ஏதுவாகின்றன. அதே நேரத்தில் அக்காலத்தில் புரிந்த கடுமை யான கடற்கொள்ளைக் குற்றங்கள், ஆள் கடத்தி நரபலி இடுதல், கூட்டுக் கொள்ளையுடன் குடும்பத்தையே அழித்துவிடுதல் போன்ற பயங்கரமான கடுங்குற்றங்கள் இன்று குறைந்து வருகின்றன. அகிம்சை முறையில் எந்தப் பிரச்சினையையும் அணுகவேண்டுமே தவிர வன்முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடாது என்று காந்தியடிகள் கூறியுள்ளார். அதையே அவர் செயற்படுத்தியும் நிருபித்துள்ளார். பைந்தமிழ் மறையில்

"இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்று வள்ளுவப் பெருந்தகை அறிவுறுத்தியுள்ளார். கன்னத்தில் அறைந்து அறிவு புகட்டுவதைவிட அதே கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து அறிவுரை கூறும்போது குழந்தை எளிதில் ஏற்றுக் கொள்கிறது என்று இங்கர்சால் கூறியுள்ளார். பல்வேறு காரணக் கூறுகளினுல் குற்றங்கள் புரியப்படுகின்றன. குற்றவாளிகளின் சூழ்நிலைகளை ஆராய்ந்தறிந்து குற்றவொழுக்கச் சூழ்நிலையை அகற்றி நல்லொழுக்கத்தில் ஈடுபடுத்த முயன்ருல் குற்றவாளிகள் மனம் திருந்தி நற்செயல்களில் ஈடுபட வாய்ப்புண்டு. ஒருவன் வறுமையின் காரணக் கூறுகளினுல் குற்றம் புரிந்து விட்டால்— வறுமையைப் போக்க குற்றச் செயலில் ஈடுபட்டால்—வறுமை நீங்கிவிடாது. தொழில் கற்று உறங்காமல், தளராமல் உழைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் வறுமை ஒழியும் என்று அறிவுரை கூறுதல் சாலச் சிறந்ததாகும். அதை விடுத்துத் திருட்டுக்குற்றத்திற்காக 6 மாதம் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டு அவனை விழிப்படையச் செய்யாமல் சிறையில் அடைத்து வைத்திருந்து 6 மாதம் கழித்து விடுதலை அளித்தால் —மேலும் துன்பத்தைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விட்டால்—அவன் கடும் குற்றம் புரியும் கொள்ளைக்காரனுக மாறிவிடக் கூடும். சமுதாயம் அவனை வெறுக்கவில்லை. அவன் செயலைத்தான் வெறுக்கிறது. அவன் பணக்காரனுக மாறுவதை வெறுக்கவில்லை — பொருமைப்படவில்லை — அவன் கையாண்ட முறையைத்தான் வெறுக்கிறது என்று கூறுதல் வேண்டும். துப்பாக்கியைக் காட்டி கைதுசெய்ய முடியாத மத்திய பிரதேசத்தில் சாம்பல் பள்ளத்தாக்கில் உள்ள கூட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர்களை அன்பினுல் அவர்களாகவே சரண் அடையவில்லையா? ஆகவே எந்தப் பிரச்சினையையும் வன்முறையால் தீர்த்துவிட முடியும் என்று கருதுவது இக்காலச் சூழ்நிலைக்கு ஒவ்வாத ஒன்ருகும். கைதி, சிறை, சிறைத் தண்டனை ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களுடன் கைதியின் நல்லொழுக்கம், மறுசீரமைப்பு ஆகியவற்றுடன் சிறைச் சாலைகளைச் சீர்திருத்தியும் மாற்றியமைக்கப்படுவதைப்பற்றியும் அத்துடன் கால அளவு வரையறுக்கப்பட்ட சிறைத் தண்டனை, கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை ஆகியவைபற்றி ஆராயப்பட்டது.

மேலே ஆராயப்பட்ட சிறை மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் காணும்போது வருங்காலத்தில் சிறைத் தண்டனையே நீக்கப்பட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிறைகளை

ஏன் சீர்திருத்தம் செய்ய வேண்டும்? அதற்காக ஏன் அதிகச் செலவு செய்ய வேண்டும்? குற்றவாளிக்கு வெறும் அபராதம் மட்டும் விதித்துவிட்டால் சிறைகளே தேவையில்லையல்லவா? என்ற கொள்கை வளர்ச்சியடையலாம். அப்படி நிகழ்ந்துவிட்டால் பழங்காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனை முறையாகத்தான் காட்சி தரும். பழங்காலத்தில் சிறைகளும் இல்லை. சிறைத் தண்டனையும் வழங்கப்படுவதும் இல்லை. மரண தண்டனை அல்லது உடலொறுத்தல் அல்லது அபராதம் மட்டும் விதிக்கப் பட்டு வந்தது. நாகரிக உலகில் மரண தண்டனையும் குறைக்கப் பட்டு விட்டது, சில நாடுகளில் அடியோடு நீக்கப்பட்டு விட்டது. ஆகவே இனி மரண தண்டனை மீண்டும் அதிக அளவில செயற்படுத்த வாய்ப்பில்லை. தற்பொழுது சிறைத் தண்டனை அதிக அளவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. குற்றவாளி சிறைக்குச் சென்றால் சிறைக் கைதி என்ற மாசு படிகின்றது. அது சமுதாயத்தில் பெருங் கறையாகக் கருதப்படு வதனால் அதையும் நீக்கிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றவாளி தன் குற்றத்திற்குத் தகுந்தாற்போல இழப்பீடு அல்லது அபராதம் செலுத்தினால் போதும், சிறைத் தண்டனை தேவையில்லை. குற்றவாளி சிறைக்குச் சென்று விடுவதனால் அவன் குடும்பம் வறுமைக்குள்ளாகின்றது. அல்லது அவப் பெயருக்குஉள்ளாகின்றது. சமுதாயத்தில் மற்ற உறவு முறைகளும் சம்பந்தங்களும் வைத்துக்கொள்ள முடிவதில்லை. இவற்றைத் தடுக்க சிறையைத் தொழிற்சாலையாக மாற்றிவிட்டு, சிறைத் தண்டனையை நீக்கிவிட்டு, குற்றவாளிகள் அபராதம் மட்டும் கட்டவேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டாலும், அபராதம் செலுத்த முடியாத, கட்ட விரும்பாத குற்றவாளியை என்ன செய்வது? அவர்களுக்காகவாவது சிறைச்சாலை செயற் படத்தானே வேண்டும். ஆனால் சிறையில் கைதிகளின் எண் ணிக்கை பெரும் அளவு குறைக்கப்படலாம். இன்றைய சூழ்நிலை களுக்குச் சிறைத் தண்டனை மிகவும் அவசியமான ஒன்றாகும்.

19. நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல்

(Parole)

கைதி என்றவுடன் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளவன் என்று பொருள். குற்றவாளி தன் சிறைத் தண்டனையைச் சிறையில் அனுபவித்து வரவேண்டும். சிறைத்தண்டனையின் கால அளவு வரையறுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் அந்தக் காலம் முடியும் வரையில் சிறையில் தங்கி இருத்தல் வேண்டும். அல்லது சிறையில் இருக்க வேண்டிய கால அளவு வரையறுக்கப்படாமல் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் குற்றவாளியின் நல்லொழுக்கத்தைப் பொறுத்தும் சிறை அதிகாரிகளின் விருப்பு வெறுப்பைப் பொறுத்தும் சிறைத் தண்டனை முடிவடையும். அவ்வாறு குற்றவாளி சிறையில் கைதியாக இருக்கும் காலங்களில் கைதியின் ஒழுக்கம், நடத்தை, போக்கு ஆகியவை கண்காணிக்கப்படும். மேலும், கைதிக்குச் சிறையில் ஒழுக்கம், கல்வி, கைத்தொழில், நீதிநெறி, உழைப்பு, முயற்சி ஆகியவை கற்றுக் கொடுக்கப் படுகின்றன. கைதி அவற்றை எளிதில் கற்றுத் தெரிந்து, சமூதாயத்திற்கு ஏற்றவனாக, நல்லவனாக விளங்கினால் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்திற்கு முன்பே விடுதலை அளிக்கப்படும்; அல்லது நாணய வாக்குறுதியின் மீது கைதி கட்டுப்பாடுள்ள விடுதலையில் (Parole) செல்லலாம். கைதி சிறைத் தண்டனையின் ஒரு பகுதிக் காலத்தை கழித்த பின்பு, அவன் நாணய வாக்குறுதியில் கட்டுப்பாடான விடுதலையில் செல்ல அனுமதிக்கப்படலாம். சிறைத் தண்டனையின் மீதிக் காலத்தை வெளியில் கட்டுப்பாடுடன் கூடிய சுதந்திரமான இல்லத்தில் இருக்கலாம். இந்த உரிமை சீர்திருத்த இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளில் பயின்று வரும் இளங் குற்றவாளிகளுக்கும், பெண்களுக்கும் உண்டு. பொதுவாக, சிறையிலோ சீர்திருத்தப் பள்ளியிலோ, சீர்திருத்த இல்லங்

களிலோ எதுவாக இருந்தாலும் அங்கங்கே அடைத்து வைக்கப் பட்டிருக்கும் குற்றவாளிகள், இளங் குற்றவாளிகள், பெண் குற்ற வாளிகள் ஆகியோர் தங்களின் சிறைத் தண்டனை காலத்தில் அல்லது சீர்திருத்தப் பள்ளியில் தங்கியிருக்க விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் 3/4 பாகம் கழிந்தபின்தான் கைதிகளின் நாணய வாக்குறுதியின் மீது விடுதலை அளிக்கப்பட்டு அவர்களை நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளோ மற்ற நிறுவனங்களோ மேற்பார்வை, கண்காணிக்கும்படி நியமிக்கப் படுவதுடன் விடுதலையடையும் கைதிகளும் குறிப்பிட்ட காலம் வரையில் நல் லொழுக்கத்தில் ஒழுக வேண்டும் என்றால் அந்தக் காலம் கடந்த பிறகு குற்றவொழுக்கத்தில் ஈடுபடலாம் என்பது பொருளல்ல. வாழ்நாள் முழுவதும் நல்லொழுக்கத்துடன் விளங்க வேண்டும் என்று விரும்பப்படுகின்றது. ஆனல் 1/4 பாகம் சிறைத் தண்டனை யைச் சிறையில் கழிக்காமல் விடுதலை அடைகின்ற காரணத்தால் சில காலம் வரையில் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கவில்லை யென்றால்—கட்டுப்பாட்டை மீறிவிட்டால்—எஞ்சியுள்ள தண்ட னையைச் செயற்படுத்தப்படும். கைதி மீண்டும் சிறையில் அடைக்கப்படலாம்; அல்லது கடும் எச்சரிக்கைக்குப் பிறகு விடுதலையை மேலும் அனுமதிக்கப்படலாம். நாணய வாக் குறுதியின் மீது கைதியை விடுதலை செய்தலும், கட்டுப்பாடுடன் அளிக்கப்படும் மன்னிப்பும் ஒன்றாகும். இரண்டிலும் கட்டுப் பாட்டை மீறினல் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனையைச் செயற்படுத்தப்படும். ஆனல் கட்டுப்பாட்டுடன் அளிக்கப்படும் மன்னிப்பால் (Conditional Parole) குற்றவாளியின் கறை அகற்றப் பட்டுவிடுகிறது. நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடு வித்தலால் அந்தக் கறை அகற்றப்படவில்லை. கட்டுப்பாட்டுடன் அளிக்கும் மன்னிப்பால் குற்றவாளி சிறைத் தண்டனையை அனுபவிப்பது தவிர்க்கப்படுகிறது. ‘கைதி’ என்ற அவப் பெயர் அவனுக்கு இல்லாமல் தடுக்கப்பட்டு விடுகிறது. நாணய வாக் குறுதியின்மீது கைதி விடுதலையில் செல்வதனல் தண்டனைக் காலத்திற்கு முன் சிறையினின்று விடுவிக்கப்படுகின்றான். கட்டுப்பாட்டுடன் அளிக்கப்படும் மன்னிப்பு மற்ற தண்டனை களுக்கும் ஏற்றது. ஆனல் நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் முறையில் சிறைத் தண்டனையில் மட்டும் பயன் படுத்தப்படும். மேலும், நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தலில் அதிகக் கட்டுப்பாடும், கண்காணிப்பும் வழங்கப் படலாம். ஆனல் மன்னிப்பு வழங்கும்போது அதிகமான கட்டுப் பாடுகள் வழங்காமலும் இருக்கலாம்.

நன்னடத்தைச் சோதனை முறையில் குற்றவாளியை விடுவித்தலுக்கும் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் (The Controversy between Probation and Parole)

நன்னடைத்தைச் சோதனை முறையான விடுதலையைப் போலவே நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுதலை செய்தல் முறையிலும் தண்டனைச் சட்டத்திலிருந்து வேறுபடுகின்றது. இரண்டு முறைகளிலும் குறிப்பிட்ட சில குற்றவாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் தங்களின் மன மாற்றத்தினால் தங்களின் குற்றவொழுக்கங்களைத் திருத்திக்கொண்டு நல்லொழுக்கமுள்ளவர்களாக அனுமதிக்கப்படுகின்றார்கள். துன்பத்தைத் தண்டனையாக வழங்குவதுதான் தண்டனைச் சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இவ்விரண்டு முறைகளிலும் குற்றவாளிகளுக்கு உதவியும் அறிவுரையும் வழங்கப்படுகின்றன. அதேபோன்று கட்டுப்பாடும், கண்டிப்பும், வழங்கப்படுவதுடன் கட்டுப்பாட்டை மீறினால் குற்றத்திற்குரிய அல்லது வழங்கப்பட்டுள்ள தண்டனை செயற்படுத்தப்படும். ஆனால் நன்னடைத்தைச் சோதனை முறையான விடுதலையைவிட நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் முறையில் அதிகத் தண்டனையின் தன்மை உண்டு. குற்றச் சட்டத்தின் விதிப்படி குற்றவாளி சிறையில் அடைக்கப்பட்டு அதில் முக்கால் பாகம் தண்டனை அனுபவித்த பிறகுதான் கைதியை நாணய வாக்குறுதியின்மீது விடுவிக்கப்படுகின்றது. தண்டனை அனுபவித்த பிறகு சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளப் படுகின்றது. ஆனால் நன்னடைத்தைச் சோதனை முறையில் குற்றவாளியை விடுவித்தல் முறையில் குற்றச் சட்டத்தின் தன்மையோ சாயலோ இல்லை. முற்றிலும் மாறுபட்டு இருக்கின்றது. தொடக்கத்திலிருந்து தண்டனையே அனுபவிக்கவில்லை. சீர்திருத்த நடவடிக்கையே செயற்படுத்ததப்பட்டு வருகின்றது. நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலையை நீதிபதி வழங்குகின்றார். நாணய வாக்குறுதியின்மீது கைதியைச் சிறை அதிகாரிகள் அல்லது நிர்வாகக் குழு அனுமதிக்கின்றது. நன்னடத்தைச் சோதனை முறையில் குற்றவாளிக்குத் தண்டனை கால அளவு வரையறுக்கப்பட்டோ அல்லது கால அளவு வரையறுக்கப் படாமலோ இருக்கலாம். ஆனால் நாணய வாக்குறுதியின் மீதுகைதியின் கால அளவு வரையறுக்கப்பட்டே இருக்கும். மேலும் நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் செல்பவனைக் 'குற்றவாளி' என்றும் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தலில் 'கைதி' என்று அழைக்கப்படுகின்றது. முன்னதில் குற்றம் நிருபிக்கட்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டோ அல்லது

வழங்காமலோ இருக்கலாம். பின்னதில் தண்டனை வழங்கப்பட்ட துடன் அதில் பெரும்பான்மைக் கால அளவு கழிந்தபின்பு கைதி சிறையிலிருந்து நன்னடத்தையின் காரணமாக விடுவிக்கப்படு கின்றான். சிறையில் இருந்த காரணத்தினால் கைதி என்று அழைக்கப்படுகின்றது. முன்னவன் சிறை செல்லாத காரணத் தினால் வெறும் 'குற்றவாளி' என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. நன்னடத்தைச் சோதனை முறை விடுதலையில் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சீர்திருத்த நடவடிக்கையில் குற்றவாளி ஈடுபட்டிருக்கும்போதே மீறினால் தண்டனை வழங்கப்படும் என்ற அச்சுறுத்தலும் இணைந்தே இருக் கின்றது. நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல் முறையில் தண்டனையின் தன்மை உணரப்பட்டதுடன் கட்டுப் பாட்டை மீறினால் மீண்டும் அதே இடத்திற்குச் சென்று அதே தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்ற அச்சம் உள்ளது. இதில் தண்டனையும் அச்சமும் கலந்தே உள்ளது. நன்னடத்தைச் சோதனை முறையில் விடுதலை பெற குற்றவாளியோ அவனது உறவினர்களோ அல்லது நண்பர்களோ அல்லது குற்றவாளியுடன் இணைந்தோ உறுதிமொழிப் பத்திரம் நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்தல் வேண்டும். அல்லது நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளின் பரிந்துரையின்மீது குற்றவாளி நன்னடத்தைச் சோதனை முறையில் விடுவிக்கப்படுகின்றான். நாணய வாக்குறுதி யின் மீது கைதியை விடுவித்தல் முறையில் நன்னடத்தை உறுதி மொழி எழுதிக்கொடுத்தாலும் அவனது ஒழுக்கம், நடத்தை, போக்கு, ஆகியவற்றை முன்பே சிறை அதிகாரிகள் கண்காணித் துள்ளதனால் அதிகாரிகளின் மனத் திருப்தியின் பேரில் கைதியை விடுவிக்கின்றார்கள். குற்றவாளியைப்பற்றி அனுபவம் சிறை அதிகாரிகளுக்கு உள்ள மாதிரி நீதிபதிக்குக் கிடையாது. அவர் மற்றவர்கள் கூறும் நம்பிக்கையின் பேரில் செயற்படுகின்றார். நன்னடத்தைச் சோதனை முறை விடுவித்தல் முறையில் குற்றவாளி 'சிறைக் கைதி' என்ற கறைபடாதவாறு பார்த்துக்கொள் கின்றார்கள். ஆனால் சிறையிலிருந்து வாக்குறுதியின்மீது கைதி விடுதலை பெறுவதில் 'சிறைக் கைதி' என்ற கறை படிந்துவிடு கிறது. வாழ்க்கை முழுவதும் சிறைக்குச் சென்று வந்தவன் என்ற அவப்பெயர் தொடர்கின்றது.

தோற்றம் (Origin)

கைதிகளை விடுதலை காலத்திற்கு முன்பே விடுவித்துவிடும் பழக்கம் ஆதிகாலந்தொட்டே இருந்து வருகின்றது. ஆனால் கைதிகளுக்கு வழங்கும் உதவியும், அறிவுரையும் புதுமையான செயல்களாகும். கைதிகளைத் தொழில் முறைக் கட்டுப்பாட்டு

ஒப்பந்தம் மூலமாக முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வந்தார்கள். அதாவது கைதிகளைத் தொழிற்சாலை வைத்திருக்கும் முதலாளிகளிடமோ அல்லது நிறுவனங்களுக்கோ தொழில்முறை ஒப்பந்தப் பிணைப்பு செய்துகொள்வார்கள், பணியாற்றும் இடத்தில் கைதிகளை ஆலை முதலாளிகளோ அல்லது நிறுவனங்களின் அதிகாரிகளோ மேற்பார்வையிட்டு வந்தார்கள். ஒழுக்கக் கேடாக நடக்கும் கைதிகள் மீண்டும் சிறைச்சாலைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். இம்முறை இளங் குற்றவாளிகளுக்கு அனுதை இல்லங்கள் அமைத்துச் சீர்திருத்தம் செய்து வந்த ஆரம்பக்காலத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சில ஆண்டுகள் கடந்த பின்பு தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தப்படி கைதிகள் தொழிற்சாலை களுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்ட கைதிகளை மேற்பார்வையிடுவதற்கு அரசாங்கமே அதிகாரிகளை நியமித்துத் தொழிற்சாலையில் பணிபுரியும் கைதிகளைக் கண்காணிக்கப் பணித்தது. கைதிகளை அதிகக் கொடுமைப்படுத்தாமல் ஒப்பந்தப்படி வேலை வாங்கவும் அதே நேரத்தில் ஒழுக்கத்துடனும் கட்டுப்பாடுடனும் நடந்துகொள்கின்றார்களா என்பதைக் கண் காணிக்கவேண்டியது இந்த அதிகாரிகளின் கடமையாகும். இதன் தொடர்பாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டன. விடுதலை அடைந்த கைதிகளுக்கு மறு சீரமைப்பு, புனர் வாழ்க்கை அளிக்க அவர்களுக்கு வேண்டிய தொழில், தொழிற் கருவிகள், ஆடைகள், போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன. சிறையி லிருந்து விடுதலையடைந்த கைதிகளுக்கு நல்லொழுக்கத்தில் ஈடுபடுவதற்காக எல்லாத் தொழில் வசதிகளும் அளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சில மாநிலங்களில் முன்னுள் கைதிகளைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். இந்த அதிகாரிகள், முன்னுள் கைதிகள் வழங்கப் பட்ட வசதிகளைக்கண்டு கடமை தவருமல் பணியாற்றி வருகின்ருர்களா அல்லது குற்றவொழுக்கத்தில் மீண்டும் செயற் படுகின்ருர்களா என்பதைக் கண்காணித்து வந்தார்கள். இதன் வெற்றிதான் தண்டனைக் காலத்தின் முன்பே கைதிகளின் நாண யத்தின்மீது—நல்லொழுக்கத்தின்மீது—விடுதலை அளித்து அவர் களின் ஒழுக்கத்தை, நடத்தையை, போக்கை அதிகாரிகள் கண் காணித்து வரும்படி பணிக்கப்பட்டார்கள். இந்நிலையில்தான் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் (Parole) தொடக்கமாயிற்று.

இங்கிலாந்தில் 1820க்கு முன்பே நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் செயற்பட்டு வந்துள்ளது. ஆனல் அதற்

குப் பெயர் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிப்பது என்பது அல்ல. சிறைத் தண்டனை முடிவடையும் காலத்திற்கு முன்பே அனுப்பப்படுவதனுல் இதற்கு விடுமுறை அனுமதிச் சீட்டு (Ticket of leave) என்று பெயர். கைதிகள் விடுமுறை அனுமதிச் சீட்டு மூலமாக விடுவிக்கப்பட்டு அவர்களை மேற்பார்வையிட்டும் அவர்களுக்கு உதவியும் அளிக்கப்பட்டது. இது அயர்லாந்து முறையின் ஒரு பிரிவாகும். இதை அமெரிக்கர்களும் அறிந்து 1865-ல் மசாசுசெட்சில் (Massachusetts) 'இங்கிலாந்து விடுமுறை அனுமதிச் சீட்டு' (The Englisn Ticket of leave) என்ற பெயரில் மசாசுசெட்ஸ் சிறைக்குழு (Massachusetts Prison Board) நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கப் பரிந்துரைத்தது. மேலும் இங்கிலாந்து பாதுகாப்பு குற்றச்சட்டம் (The English Prevention of Crimes Act of 1871) 1871-ல் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி முன்னுள் கைதிகளை விடுவிக்கப்பட்ட 7 ஆண்டுக் காலம் வரையில் காவல் துறையினர் கடுங் கண்காணிப்புப் பணியில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தியது. இதை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்காவில் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் முறை செயற்படுத்தப் பட்டது. மசாசுசெட்ஸ் சிறைக்குழு இதைப் பரிசீலித்து நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் முறைக்குக் பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து 1869-ல் நியூயார்க் நகரத்தில் முதன் முதல் எல்மிரா சீர்திருத்த நிலையத்திற்கு (Elmira Reformatory) அதிகாரம் வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி எல்மிரா சீர்திருத்த இல்லம் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்க உரிமை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பல மாநிலங்களில் செயற்படுத்தப்பட்டன. 1922-ல் 45 மாநிலங்களில் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கும் சட்டம் இயற்றப்பட்டது. 1944க்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதுக்கும் இம்முறை செயற்படுத்தப்பட்டது. 1958-ல் 19 மாநிலங்களில் 75 சதம் சிறைக் கைதிகள் மாநிலச் சிறைகளிலிருந்தும் சீர்திருத்த இல்லங்களிலிருந்தும் நாணய வாக்குறுதியின்மீது கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். சில மாநிலங்களில் குறைவாகவும் சில மாநிலங்களில் அதிகமாகவும் செயற்படுத்தப்பட்டு வந்தது.

நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கும் குழு (The Parole Board)

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவிக்கத் தனிக் குழு நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றது. இக் குழுவின் பணிகளும் அதன் வகைகளுமாவன :

ஒவ்வொரு சிறையிலோ அல்லது நிறுவனத்திலோ இக் குழு அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது வட்டம், மாவட்டம் வாரியாக அமைக்கப்பட்டிருக்கலாம். இது நாட்டிற்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருக்கலாம். இக் குழுவில் அங்கத்தினர்களாக அந்தந்த நிறுவனங்களைச் சார்ந்த அல்லது சிறைச் சாலைகளைச் சார்ந்த நிர்வாக அத்காரிகள், பாதுகாவலர்கள் ஆகியோர் இருப்பார்கள். அல்லது மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளும் அதன் அங்கத்தனர்களாக இருக்கக் கூடும். அவ்வாறு இருக்கும்போது சிறைப் பாதுகாவலர்கள் (Warden) அதில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் பொதுவாக மாநிலச் சிறைச் சாலைகள், சீர்திருத்த இல்லங்கள், பள்ளிகள், ஆகியவற்றில் இருக்கும் கைதிகளை விடுவிக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. பொது மாநில நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் குழு அமைக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள சிறைச் சாலைகள், அல்லது சீர்திருத்த இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் இருக்கும் கைதிகளை ஆராய்ந்து விடுவிக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவிக்கும் குழு கைதிகளின் ஒழுக்கம், நடத்தை, போக்கு ஆகியவற்றை ஆராய்ந்து கைதியை முன்கூட்டியே விடுவிப்பதனுல் சமுதாயத்திற்கும் கைதிக்கும் ஆபத்து இல்லை என்ற நிலை உருவான பின்பு நாணய வாக்குறுதியின்மீது கைதிகளை விடுவிக்கின்றனர்கள். சில வேளை களில் சிறையில் கைதிகளின் கூட்டம் அதிகரித்து விட்டால் மேலும் புதிய கைதிகளைச் சிறையில் அடைக்க முடியாத சூழ்நிலை இருக்கும் போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி களை உடனடியாக நாணய வாக்குறுதியின்மீது விடுவித்து வெளியில் அவர்கள் ஒழுக்கத்துடன், கட்டுப்பாடுடன் ஒழுகுபடி மேற்பார்வையும், கண்காணிப்பும் செய்யும்படி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இந்த அதிகாரிகள் கண்காணிப்புடன் விடுவிக்கப்பட்ட கைதிகளுக்கு அறிவுரையும், உதவியும், ஆக்கமும், ஊக்கமும் அளிக்க முயற்சி மேற்கொள்வார்கள்.

இக் குழுவில் பணியாற்றும் அதிகாரிகள் முழு நேர அதிகாரி களாகப் பணியாற்றலாம் அல்லது பகுதி நேர அதிகாரிகளாகப் பணியாற்றலாம். முழுநேர அதிகாரிகளாக நியமிக்கப்படுவதுதான் சாலச் சிறந்தது. போதிய ஊதியத்துடன் மற்ற வசதிகளையும் அதிகாரிகளுக்கு வழங்குதல் வேண்டும். அதிகாரிகள் நியமிக்கப் படும்போது திறமை ஒழுங்கு, நேர்மையாக உழைக்கக் கூடிய மன நிலை ஆகிய நற்குணங்களையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தலின்

ஆரம்பம், கைதி சிறைக்கு வந்தவுடனே அவனது ஒழுக்கப்பட்டியல் தொடங்கப்படுகிறது. அதில் கைதியின் ஒழுக்கம், நடத்தை, போக்கு, மற்ற சிறப்பியல்புகள் ஆகியவை குறித்து வைக்கப்படும். பொதுவாக, முதன் முறைக் குற்றவாளிகளுக்குத்தான் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் உரிமை அளிக்கப்படுகின்றது. இரண்டாம் மூன்றும் முறைக் குற்றவாளிகளுக்கு அளிக்கக்கூடாது என்று எதிர்ப்பு உள்ளது. ஆனால், சில நாடுகளில் எல்லாக் கைதிகளுக்கும் நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவித்தல் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுவதுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், கைதிகளின் ஒழுக்கம், நடத்தை, மனமாற்றம் ஆகியவற்றைப் பொறுத்து விடுவித்தால் உடனே அவர்களுக்கு வேலைவாய்ப்பு, கண்காணிப்பு ஆகிய வசதிகளைப் பொறுத்து எல்லாக் கைதிகளுக்கும் அந்த உரிமை அளிக்கப்படுகின்றது.

கைதிகளை விடுவித்தால் போதிய வேலை வாய்ப்புகளை தேடித்தர முடியாத காரணத்தினால் நாணய வாக்குறுதியில் விடுதலை பெறத் தகுதியுடைய பல கைதிகள் விடுவிக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். நாணய வாக்குறுதியினால் விடுதலை அடைந்த கைதிகள் தனியார் நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் பணியாற்றினால் கைதிகளின் நிலைமையை அறிந்து கொண்ட ஆலை முதலாளிகள் கைதிகளைப் பிழிந்தெடுத்து விடுகின்றார்கள். கைதிகள் ஒன்றும் செய்ய முடியாது என்ற காரணத்தினால் குறைந்த ஊதியத்தில் அதிகமான உழைப்பைப் பெற்று அதிக இலாபத்தை அடைந்து வந்தார்கள். நாணய வாக்குறுதியின் மீது கைதி விடுதலை அடையத் தகுதி பெற்று விட்டால் தானாகவே வேலையைத் தேடிக்கொள்ளும் முயற்சி, திறமை இருந்து உறுதியளிக்கப்பட்டால் அந்தக் கைதியை உடனடியாக விடுவித்து விடுகின்றார்கள். விடுதலை பெறும் கைதிகள், தங்களின் முயற்சியாலும், நண்பர்கள். உறவினர்களின் முயற்சியாலும் வேலையில் சேர்ந்து விடுகின்றார்கள்.

நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கும் முறையின் கட்டுப்பாடுகள் (The Conditions of Parole)

சிறையிலிருந்து கைதி நாணயத்தினால் விடுதலை அடைவது என்பது கட்டுப்பாட்டுடன் வழங்கப்பட்ட சுதந்திரமாகும். அதாவது கைதி வழங்கப்பட்ட கட்டுப்பாட்டு விதிகளுக்குள் ஒழுக வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கலாம்; அல்லது விடுதலைக் குழுவினால் வரையறுக்கப்

பட்டு வழங்கப்பட்டிருக்கலாம் ; அல்லது சிறையதிகாரிகளினால் வரையறுக்கப்பட்டு செயற்படுத்தப்படலாம். ஆனால் வாக்குறுதியினால் விடுதலை அடையும் கைதிகளுக்கு கட்டுப்பாடு விதிப்பது முக்கிய செயலாகும். அந்தக் கட்டுப்பாடுகளை யார் வரையறுத்தார்கள் என்பது பிரச்சினை அல்ல. கைதிகள் சட்டத்திற்குக்கீழ்ப் படிந்து ஒழுகுதல் வேண்டும். மயக்க மருந்துகளையோ மதுவகைகளையோ தீண்டாமல் இருத்தல் வேண்டும். தீயவர்களைக் கண்டு ஒதுங்கி இருத்தல் வேண்டும்; அல்லது தீயவர் கண்ணில் படாமல் வாழ வேண்டும். இரவு வேளைகளில் இல்லத்தில் தங்கவேண்டும். சூதாடாமல் இருப்பதுடன் அந்த இடத்திற்குப் போதலும் கூடாது ; கெட்ட பழக்கங்களை விட்டுவிடுதல் வேண்டும். தன்னைச் சார்ந்த, தன்னை நம்பி வாழும் உறவினர்களுக்கு உழைத்துப் பொருளீட்டி உதவுதல் வேண்டும். குறிப்பிட்ட எல்லைக்குள் தங்கி வாழ்தல் வேண்டும். அனுமதியின்றித் தங்கியிருக்கும் இடத்தையோ அல்லது செய்யும் தொழிலையோ மாற்றிவிடக் கூடாது. அல்லது மாற்றின பிறகு, உடனடியாக அதற்குரிய காரணத்தோடு அறிவித்தல் வேண்டும். ஞாயிறுதோறும் கோவிலுக்குச் செல்லுதல் வேண்டும். முடியுமானால் தினமும் செல்லுதல் வேண்டும். அனுமதி இல்லாமல் திருமணம் செய்து கொள்ளவோ அல்லது திருமணம் ஆகியிருந்தால் மணமுறிவு செய்தலோ கூடாது. மற்றவர்களின் தருமத்தை நம்பி வாழக் கூடாது. குற்றத்திற்காக மனம் மட்டும் வருந்தினால் பயனில்லை. குற்றத்திற்கான இழப்பீட்டையோ அல்லது திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை உடனடியாகவோ அல்லது தவணை முறையிலோ (படிப்படியாகவோ) கொடுத்து விடுதல் வேண்டும். தினமும் நாட்குறிப்பில் தன் செயல்களைப்பற்றி எழுதி உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதல் வேண்டும், என்னும் கட்டுப்பாடுகளை, கடமைகளாகச் செயற்படுத்த வேண்டும். வாக்குறுதியில் விடுதலை அடைந்த சிறைக் கைதிகள் கட்டுப்பாட்டு விதிகள் அதிகமாகக் காணப்பட்டாலும் அவற்றைக் கைதிகள் செயற்படுத்திவருகின்றார்கள் என்று கூறுவதற்கில்லை. சில விதிமுறைகளை மீறிவிடவும் வாய்ப்புண்டு. கண்காணிக்கும் அதிகாரிகள் அவற்றைக் கண்டும் காணாமல் விட்டு விடுவதற்கு வாய்ப்புண்டு. கடமை தவறுதல் என்பது குற்றவாளி, கைதிகளுக்கு மட்டும் அல்ல. அதிகாரிகளுக்கும் ஏற்பட்டுவிடுகின்றது என்பது ஆராயத்தக்கதாகும்.

தண்டனையும், சீர்திருத்தமும் இணைந்த செயல்களாக அமைந்தால்தான் கைதிகள் குற்றத்திற்காக வருந்துவதற்கும் சீர்திருத்த நடவடிக்கையால் மனம் திருந்துவதற்கும் ஏதுவாகும். இப் பணிக்கு நியமிக்கப்படும் அதிகாரிகள் சில வேளைகளில் காவல்

துறை அதிகாரிகளாகவும் இருக்கின்றனர்கள். காவல் துறை அதிகாரிகள் இப்பணியை மேற்கொள்ளும்போது அதிகக் கண்டிப்பும் கட்டுப்பாடும் எதிர்பார்ப்பதுடன் கைதிகளுடன் இரக்கத்துடன் செயலாற்ற விரும்புவதில்லை. அவர்களின் கண்டிப்பும் கட்டுப்பாடும் இரக்கமற்ற போக்கும் கைதிகள் திருந்துவதற்குப்பதில் புதிய குற்றங்களைப் புரிவதற்கும் வாய்ப்புண்டு. எந்தெந்த அதிகாரிகளின் கீழ் உள்ள கைதிகள் மீண்டும் குற்றம் புரிகின்றனர்களோ அந்த அதிகாரிகள் குற்றஞ் சாட்டப்படுதல் வேண்டும். குற்றவாளிகள் மீண்டும் குற்றம் புரிய அதிகாரிகள் காரணக்கூறாக விளங்கியுள்ளார்கள் என்றுதான் பொருள். அதிகாரிகள் அடிக்கடி மேற்பார்வையிடுவதுடன் கடுங் கண்காணிப்புக்காகக் காத்திருத்தல் வேண்டும். அடிக்கடி அவர்களுக்கு நீதியைப் போதித்தல் வேண்டும். இவற்றைவிட அவர்களுக்கு உதவி அளிப்பதுதான் முக்கியமாகும். வேலை இல்லாமல் சும்மா இருக்கும்போதுதான் வெட்டிப் பேச்சு, வீண் செயல், வம்பு ஆகிய செயல்கள் பரவுவதற்கு வாய்ப்புண்டாகி விடுகின்றது.

நாணய வாக்குறுதியில் விடுதலை அடைந்த கைதிகள் கட்டுப்பாட்டு விதிகளை மீறிவிட்டால் அவர்களை மீண்டும் கைது செய்யப் பிடியாணை உத்தரவு வழங்கப்படும். மேற்பார்வை அதிகாரிகளின் பரிந்துரையின்மீது அவர்களின் நடவடிக்கையினால் கைதியை மீண்டும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சில வேளைகளில் சில கட்டுப்பாட்டு விதிகளைப் பொருட்படுத்துவதில்லை. கைது செய்யப்பட்ட விடுதலைக் கைதியை, மீண்டும் நீதிமன்றத்தில் குற்ற விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. பழைய தண்டனையே செயற்படுத்தப்படும். ஆனால் புதுக் குற்றம் புரிந்து விட்டால் குற்றவாளி நீதிமன்றத்தில் குற்ற விசாரணைக்காக விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படுவான். ஆனால், அமெரிக்காவில் சில மாநிலங்களில் குற்ற விசாரணையின்றியே மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டு வருவதாக சதர்லாந்து அறிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விதிகளை மீறியதனால் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள், வழங்கப்பட்ட தண்டனையின் மீதிக் காலத்தைக் கழிக்க வேண்டும். அல்லது கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அதிகமான காலம் சிறையில் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆனால் இவ்வகையான கைதிகள் மீண்டும் நாணய வாக்குறுதியின்மீது விடுதலை பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள். சில வேளைகளில் குறிப்பிட்ட ஆண்டுகள் வரையில் சிறைத்

தண்டனை அனுபவித்த பிறகு மீண்டும் அந்த உரிமை வழங்கப்படலாம். பழைய நல்லொழுக்கப் பதிவுகள் கிழித்து எறியப்படும். அல்லது அந்த நல்லொழுக்கப் பதிவுத் தாள்கள் கைதியை மீண்டும் விடுவிக்க அவை சான்றாக எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

கட்டுப்பாடுகளை நீக்கி, முழுவிடுதலை அளித்தல் (Discharge from Parole)

நாணய வாக்குறுதியில் விடுவிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் வழங்கப்பட்ட காலம் முடிவடைந்தவுடன், கட்டுப்பாடுகளை நீக்கி முழு விடுதலை அளித்தல் வேண்டும். சில வேளைகளில் முழு விடுதலை அளிக்கும் உரிமை விடுதலைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. விடுதலைக் குழுவின் விருப்பு வெறுப்பிற்கிணங்க கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. ஆனால் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்திற்கு மேலும் அவர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தல் கூடாது. பொதுவாக, தண்டனையில் இறுதியில் 1/4 பாகம் நாணய வாக்குறுதி விடுதலைக் கட்டுப்பாடுகள் விதிகள் செயற்படுத்துவதுண்டு. நாணய வாக்குறுதியில் விடுதலை அளிக்கப்பட்ட காலத்தில் சில நாடுகளில் உரிமைகள், சிவில் உரிமைகள் அனுமதிக்கப்படுகின்றன. சில நாடுகளில் நாணய வாக்குறுதி விடுதலையின் காலம் முடிந்த பின்பு சிவில் உரிமை வழங்கப்படுகின்றது. ஆனால், வேட்பாளராகவோ அரசு அதிகாரியாகவோ நம்பகர்களாகவோ (Trustee) பணியாற்ற அனுமதிப்பதில்லை. இதனால் குற்றவாளிகளைச் சமுதாயம் பண்போடு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

இம்முறையில் வெற்றி தோல்விகள் உண்டு. இளங் குற்றவாளிகள். முதிய குற்றவாளிகள், நாணய வாக்குறுதியின்மீது கைதி விடுவிக்கப்பட்டாலும் கைதி திருந்துவதற்கு அறிவுரையும், நல்வாழ்வில் ஈடுபடுவதற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தாலும் சில கைதிகள் மீண்டும் குற்றங்கள் புரிந்துள்ளார்கள். சீர்திருத்த நடவடிக்கையில், அதிகாரியின் கண்காணிப்புகளில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதுதான் இதற்குக் காரணமாகும். நாணய வாக்குறுதியில் விடுதலை அளிப்பது என்பது கைதி தன் சிறைத் தண்டனையில் ஒரு மாதத்தையாவது சரிகட்டிவிடுவதற்கு ஏதுவாகின்றது. குற்றவாளி திருந்த வேண்டும் என்று ஆவலோடு கட்டுப்பாட்டு விடுதலையைக் கோரவில்லை. சிறையைவிட்டு வெளியேறிவிட்டால் பிறகு எதையும் செய்து கொள்ளலாம் என்ற கருத்து—எண்ணம்—மேலோங்கி நிற்கிறது. அதற்கு உடந்தையாக மற்ற அதிகாரிகள் செயற்படுவதுதான் வருந்தத் தக்கதாகும், ஆகவே

இம்முறைச் செம்மையாகச் செயற்படுத்தப்படடால் குற்றவாளி களுக்கும், சமுதாயத்திற்கும் பெரும் நன்மை உண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், இதிலும் அரசியல், ஊழல், இனம், சாதி, மற்ற பொருளாதார வேறுபாடுகள் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அமெரிக்க ஐக்கிய நடுகளிலும் இம்முறையில் சிறிது தோல்வி கண்டுள்ளது. சீர்திருத்தி நல்மனத் துடன் கைதி வெளியே அனுப்பப்பட்டாலும் அவன் உறையும் இடம், பழகும் இடம் குற்றப்பகுதிகளாக இருந்தால் மீண்டும் அவனுக்குக் குற்றவொழுக்கம் பரவிவிடுகின்றது. ஆகவே, பொருளாதார நெருக்கடியும், சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழும் நிலைதான் மீண்டும் அவர்களை குற்றவொழுக்கத்திற்குச் செல்ல வற்புறுத்துகின்றன.

20. சிறைக் கல்வியும், தொழிலும்

(Education and Labour in Prison)

'கல்வி' கல்வி நிறுவனங்களில், வகுப்புகளில் மாணவர்களுக்குப் புகட்டுவதுதான் என்று கூறப்படுகின்றது. ஆனால், கற்றல் என்பது ஒருவன் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. வாழ்க்கையின் அனுபவமே கல்விதான். நிலையங்களில் படித்தால் அதற்குச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. வாழ்க்கையில் கற்கும் கல்விக்கு ஒருவரின் ஒழுக்கமும், அனுபவமும், நடத்தையும்தான் சான்றிதழ்களாகும். வாழ்க்கைக் கல்வியில் ஒருவன் ஒழுக்கம், நடத்தை, போக்கு, முன்னேற்றம், புகழ் ஆகியவை அடங்கி இருப்பதுடன் அவன் கற்ற கல்வியினால், தொழில், பொருளீட்டுதல், ஒழுக்கம், நடத்தை, புகழ், கருணை, தியாகம், குடும்பத்தைப் பேணல் ஆகியவை பிரதிபலிக்கின்றன. 'சிறைக் கல்வி' என்பது கைதிகளுக்குச் சிறையில் எழுதப்படிக்கவும், நல்லொழுக்கமும், தொழிற்பயிற்சியும், சமுதாயத்துடன் ஒட்ட ஒழுகலும், கட்டுப்பாடான உள்ளம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு கைதியின் பிற்கால வாழ்க்கையில் மாறுதல் ஏற்படுத்தவேண்டி சிறையில் அவனுக்குக் கல்வியுடன் பல நற்பயிற்சிகள், நன்னெறிகள் புகட்டப்படுகின்றன. இவற்றிற்குதான் 'சிறைக் கல்வி' என்று பெயர். கைதிகள் சீர்திருத்தப்படவேண்டும் என்ற அடிப்படையில் உருவானதுதான் சிறைக் கல்வியாகும். மனிதனுக்கு நல்லறிவுரை மிகவும் தேவைப்படுகின்றது .அதை நாடிப் பலரிடம் செல்கின்றான். நல்லுரை என்று எண்ணித் தீயுரை ஏற்றுச் செயற்படுவதுமுண்டு. இதனால் அவன் செயல்கள் குற்றச் செயலாகிவிடுகின்றன. ஆகவே நல்லுரை வழங்குதற்கும் நல்லொழுக்கம் தேவை. திருடன் நல்லொழுக்கத்தைப் பற்றியும் கொலைகாரன் அஹிம்சை பற்றியும் பேசினால் அவன் சொற்கள் வளமானதாக இருந்தாலும், அதைக் கேட்கும் மக்கள் அவர்களைத் திருடன், கொலைகாரன் என்று எண்ணும் போது நற்கருத்துகள் மறைந்து அவன் உருவம்தான் அவர்களுக்

குப் பிரதிபலிக்கும். ஆகவே சிறைக் கைதிகளுக்கு வெளியில் உள்ள ஆசிரியர்களைக் கொண்டே கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது.

கல்வி கற்றவர்கள், படித்தவர்கள்தாம் இன்று ஒழுங்கீனமாக குற்றவொழுக்கத்துடன் செயற்படுவதாக மக்களிடையே பரவலான கருத்து காணப்படுகிறது. படித்தவர்கள் இன்று எதைச் சொன்னாலும் அதை மற்றவர்கள் எளிதில் நம்புவதில்லை. படிப்புக் கேற்றவாறு அவன் ஒழுகாதிருப்பதுதான் இதற்குக் காரணமாகும். கற்ற கல்வியால் சமுதாயத்தை ஏய்க்க முற்படுவது தான் இதற்குக் காரணக் கூறுகும்.

" அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் "

என்று வள்ளுவர் கூறுவதும் கற்றும் குற்றவொழுக்கத்தினால் வாழ்வதனால்தான்.

பிச்சைபுகினும் கற்கை நன்றே என்று கல்வி கற்றலின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இன்று கல்வி இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பணத்தைச் சேர்த்து விட்டால் போதும் என்ற நிலை சமுதாயத்தில் உருவாகி விட்டது. பாலை விரும்புவது, பசுவைத் துன்புறுத்துவது போன்று வெறும் கல்வியைக் கொண்டு பொருளீட்டப் பயன்படுத்துவது, கல்வியுடன் கூடிய ஒழுக்கத்தை விட்டுவிடுதாகும்.

சிறைக் கல்வியின் வளர்ச்சி (The Development of Prison Education)

அமெரிக்காவில் சிறைக் கைதிகளுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடன் செயற்பட முனைந்தவர்கள் கிறித்தவச் சமயப் பெரியார்கள். இவர்கள் கிறித்தவ மதத்தின் கொள்கைகளைக் கைதிகளுக்குப் புகட்ட வேண்டி கைதிகளுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வந்தது. பிறகு சமயக் கொள்கைகளும் பிரச்சாரம் மூலம் உணர்த்தப்பட்டது. இது தான் சிறைக் கல்விக்கான அடிப்படைத் தொடக்கமாகும். மத்திய காலத்திலும் நவீன காலத் தொடக்கத்திலும், சமயப் போதகர்கள் ஆசிரியர்கள் சிறைகளுக்கு ஒழுங்கான முறையில் தினமும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் சென்று கைதிகளின் கூட்டத்திலோ அல்லது தனியாக ஏற்படுத்தப்பட்ட கூட்டத்திலோ மதக் கொள்கைகளை விளக்கி வந்தார்கள். நன்னெறிகளைப் போதித்து வந்தார்கள். சீர்திருத்தப்

பள்ளிகளில், இல்லங்களில், சமய ஆசிரியர்களுக்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு அவர்கள் அங்கே தங்கியிருந்து இளங்குற்றவாளிகளுக்குக் கல்வி, நன்னெறி, பக்தி, ஒழுக்கம், கடமை ஆகியவற்றைப் போதித்து வந்தார்கள். அடுத்தபடியாகச் சிறைகளுக்கும் இம்முறைச் செயற்படுத்தப்பட்டது. அவர்களுக்குக் கல்வி புகட்டியவுடன் படிக்கக் கற்றவுடன் அவர்களுக்கு விவிலிய நூல் (Bible) மற்றத் தெய்வ வழிபாட்டு நூல், இறைமை நூல், ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன. 1845க்கு முன்பே சில சிறைச் சாலைகளில் மதப் போதகர்கள் தங்குவதற்கு இடவசதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த மதப் போதகர்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. அத்துடன் அவர்களும் போதிய திறமையற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

விவிலியநூல் (Bible) படிக்கவும் அதில் சில பகுதிகளை மனப்பாடம் செய்யவும்தான் கைதிகளுக்குக் கல்வி அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 1824-ல் இதற்குக் கடும் எதிர்ப்பு இருந்து வந்தது. குற்றவாளிக்குக் கல்வி அளிப்பது சமுதாயத்திற்கு அதிக ஆபத்தை விளைவிக்கும் எனக் கருதப்பட்டது. குற்றவாளிக்குக் கல்வி கற்று கொடுப்பதனால் அவன் பொய்யாவண (Forgery) குற்றத்தைப் புரிவதற்கு ஆதரவாக அமையும் என நம்பினார்கள், இங்கிலாந்திலும் அதே மாதிரியான அச்சம் எழுந்தது. குற்றவாளிகளுக்குக் கல்வி அளிக்கப்பட்டால் மேலும் பல கடுங்குற்றங்களைத் திறமையாகச் செய்வதற்கு ஏதுவாகும் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில், நியூயார்க் நகரத்தில் நியூயார்க் அடைக்கல இல்லம் (New York House of Refuge) அமைக்கப்பட்டு அதில் தங்கியுள்ள இளங் குற்றவாளிகள், கடமை தவறியவர்கள், நாடோடிகள், ஆகியோர்களுக்குக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. அதில் ஒரு மணி நேரம் விவிலியம் கற்றுக் கொடுப்பதற்கும். மற்றொரு மணி நேரத்தில் சிறை அதிகாரிகளின் சொற்பொழிவு அல்லது உரையாடல், விளக்கங்கள் ஆகியவை மூலம் நன்னெறி விளக்கப்பட்டு வந்தது. அதே நியூயார்க் அடைக்கல இல்லத்தில் கல்விக்காக நான்கு மணி நேரம் ஒதுக்கப்பட்டது. எழுதப் படிக்கவும், பாடம் சொல்லவும், கணிதம் உள்பட பல பாடப் பிரிவுகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தன, இம்முறை சிறந்து விளங்கியதனால் மற்ற மாநிலங்களுக்கும் இம் முறையைச் செயற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சிறை அறைகள் பொதுவாகச்

சிறைக்கூடம் காற்றேட்டம் இல்லாமல், போதிய வெளிச்சம் இல்லாமல், சுகாதார வசதியில்லாமல் அமைக்கப்பட்டிருந்ததனுல் அங்கே கல்வி கற்றுக் கொடுப்பதற்கான போதுமான வசதிகள் இல்லை. ஆகவே கற்றுக்கொடுக்கும் சமயப் போதகர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் கடினமாகக் காணப்பட்டது. ஆயுபர்ன் சிறைச்சாலையில் 1826-ல் படிக்காதவர்களின் புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு அவர்கள் கல்வி கற்பதற்கு வசதி மேற்கொள்ளப்பட்டது. அங்கே ஒரு மதப் போதகர் தங்கி, கைதிகளுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சில காலங்களுக்குள் கல்வியின் பணி சிறந்து விளங்கியது. சிறையில் கல்வி பயலும் கைதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இதனுல் வகுப்புக்களின் எண்ணிக்கையும், பாடங்களின் எண்ணிக்கையும் வசதிகளும் அதிகரிக்கப்பட்டன. மேலும் சீர்திருத்தப் பள்ளிகள் மட்டும் இன்றிச் சிறைச்சாலைகளிலும் கல்வி வசதி அளிக்கப்பட்டது. வயது வந்த கைதிகளில் அவர்கள் படிக்காமல் விட்ட வகுப்புகளிலிருந்து மேலும் தொடர்ந்து படிக்க வசதி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக வெளியிலிருந்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் தினமும் குறிப்பிட்ட நேரம் சிறையில் கைதிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். ஆண்டு இறுதியில் தேர்வுகள் நடத்தப்பட்டன. தேறியவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதேபோன்று இந்தியாவிலும் கைதிகளுக்குக் கல்வி அளிக்கவும், தொழிற்பயிற்சி அளிக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இவ் வசதிகள் செய்யப்பட்டன. ஆரம்பக் கல்வி முதல் பயிற்சிக் கல்வி வரையில் சிறையில் கைதிகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. கற்றறிந்த கைதிகள் படிப்பதற்கு வசதிகளும் அளிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சிறையில் கைதிகள் வித்துவான் தேர்வு எழுதித் தேர்ந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பட்டப் படிப்பு படிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சிறைக் கைதிகள் அஞ்சல் பாடப் பயிற்சி முறை (Correspondence Course) பெறுவதற்கு அனுமதிக்சப்பட்டார்கள். அதனுல் மாலை நேரங்களில் அவர்கள் தங்களின் பாடங்களைப் படிப்பதற்கு ஏற்றவாறு கைதிகளுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனுல் கைதிகள் சிறைச் சாலைக்கு வெளியிலும் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுகிறது. அஞ்சல் பாடப் பயிற்சி முறை (Corresdenence Course) 1937-ல்

அனுமதிக்கப்பட்டது. அதன் பயனாக 400-க்கும் மேற்பட்ட கைதிகள் அஞ்சல் பாடப் பயிற்சி முறைக்குத் தங்களின் பெயர் களைப் பதிவு செய்துள்ளார்கள். ஆனால் இத்திட்டம் கைவிடப் பட்டதாகச் சதர்லாந்து தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைத் தொழிற்கல்வி (Vocational Education)

பொது அறிவிற்கு வேண்டிய கல்வியைவிட வாழ்க்கைத் தொழிற் கல்வி மிக மிக முக்கியமானதாகும். வாழ்க்கையில் வசதி யுள்ளவர்களைக் காட்டிலும் வசதியற்ற, வாழமுடியாத கைதி களுக்கு வாழ்க்கைத் தொழிற்கல்வி அவசியம் அளித்தல்வேண்டும். கைதிகள் விடுதலை அளிக்கப்பட்டு வெளியில் வந்தாலும் சமுதா யத்தில் உள்ளவர்கள் துணிந்து அவர்களுக்கு வேலை கொடுப்பது, நம்பிப் பொறுப்பை ஒப்படைத்தல் ஆகிய உதவிகளைச் செய்ய முன் வருவதில்லை. சீர்திருத்தவாதிகளும் தயங்குவார்கள். ஆகவே, இந்த அவல நிலையைப் போக்கவும் விடுதலை அடைந்த கைதிகள் தன்மானத்துடன் வாழவும், அவர்களுக்குச் சிறைத் தண்டனை காலத்தில் தக்க வாழ்க்கைத் தொழிலில் பயிற்சி அளித்தால் விடுதலையடைந்தவுடன் மற்றவர்களை நம்பியிருக்கவோ அல்லது மற்றவர்களிடத்தில் இகழ்ச்சிக்குள்ளாவதோ தடுக்கப்படுவதுடன் சுலபமாகத் தொழில் செய்து மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ ஏதுவாகும். தெரிந்த தொழிலைச் செய்வதில் தாழ்வுமில்லை; தரணியில் பஞ்சமுமில்லை. கைதிகளுக்குக் கைத்தொழில்கள், வேளாண்மைத் தொழில், இயந்திரத் தொழில், மற்றும் குடிசைத் தொழில்கள், தச்சு வேலை, கருமான் வேலை, ஓவியம் வரைதல், களிமண்ணில் சிற்பம் செய்தல், பாத்திரங்கள் செய்தல், மின் தொழில் வேலை ஆகிய தொழில்களை ஆண் கைதிகளுக்கும்; தையற் கலை, பூ வேலைப்பாடு செய்தல், சமையற்கலை, பாய் முடைதல், குழந்தை வளர்ப்பு, தீக்குச்சி தயார் செய்தல், தீப் பெட்டி செய்தல், கூடை முடைதல், கோலம் போடுதல், வீட் டைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல், நெய்தல், ஆகிய தொழில்கள் பெண் கைதிகளுக்கும் கற்றுக் கொடுக்கப்படு கின்றன.

கைதிகள் மீண்டும் மீண்டும் குற்றம் புரியாமல் தடுக்கவும், குற்றவொழுக்கத்தில் ஈடுபடாமல் பாதுகாக்கவும், குற்றப் பகுதி களில் வசிக்காமல் தடுக்கவும், கைதிகளுக்கு தொழிற்கல்வி அளித்து குறிப்பிட்ட நகரங்களிலோ, கிராமப் புறங்களிலோ தொழிலில் ஈடுபடுத்தவேண்டும்.

'வாழ்க்கைத் தொழிற்கல்வி' அளிப்பதற்கு கால அளவு வரை யறுக்கப்படாத தண்டனையாக (Indeterminate Sentence) இருப்பது

மிகவும் நல்லது, அல்லது குற்றவாளிக்குச் சிறைத் தண்டனை வழங்கும்போது அவனது பண்புக் கூறுகளை ஆராய்ந்து அறிந்து அவனுக்குத் தொழிற்கல்வி அளிக்க வேண்டியும், சீதிருத்தம் மேற்கொள்ளவும். சிறைத்தண்டனை வழங்கும்போது ஒரு வருடத்திற்கு மேல் வழங்கப்படுதல் வேண்டும். நீண்ட காலச் சிறைத் தண்டனையினால் தான் குற்றவாளியைச் சீர்திருத்தம் செய்யவும், போதிய கல்வி, தொழிற் கல்வி அளிக்கவும், குற்றவாளி தன் குற்றத்தை உணரச் செய்யவும் ஏதுவாக இருக்கும். மேலும் குறைந்த காலச் சிறைத் தண்டனை அளிப்பதனால் குற்றவாளிக்கோ, அரசாங்கத்திற்கோ லாபம் இல்லை. 15 நாட்கள், 1 மாதம், 3 மாதம், ஆறு மாதம் என்று இப்படிக் குறுகிய காலச் சிறைத் தண்டனை வழங்குவதனால் குற்றவாளிக்குச் 'சிறைக் கைதி' என்ற அவப்பெயர் சமுதாயத்தில் கறையாகப் பதிந்து விடுகின்றது. இந்தக் கறை படிந்ததனால் குற்றவாளி சமுதாயத்தால் வெறுக்கப்படுகின்றான். அவனுக்கு மீண்டும் வேலை கிடைக்க வாய்ப்பு இல்லை. எனவே மீண்டும் அதே குற்றத்தைச் செய்ய வேண்டிய காட்டாயத்துக்குள்ளாகின்றான். இதன் அடிப்படையில்தான் சில திருட்டுக் குற்றவாளிகள் 40 முதல் 50 தடவை திருட்டுக் குற்றங்கள் புரிந்துவிட்டு 40, 50 முறை சிறைத்தண்டனை அடைந்துள்ளார்கள். இதில் அவர்களுக்குப் பெரிய புகழும் கிடைத்து விடுகின்றது. குற்றவாளி திருந்துவதற்குப் பதில் அதே குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றான். ஆகவே கூடியவரையில் குறைந்தகாலச் சிறைதண்டனை விதிக்கப்படாமல் தடுக்கப்படுவவதுடன் அப்படி விதிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் தண்டனை 1 வருடத்திற்கு மேல் இருக்க வேண்டும். ஆனால் குற்றத்திற்குத் தண்டனை இரண்டு மாதத்திற்கு மேல் 3, 6 மாதத்திற்கு மேல் சிறைத் தண்டனை வழங்கப்படவில்லையென்றால் குற்றவாளிக்கு வெறும் அபராதம் மட்டும் தண்டனையாக வழங்குவது சிறந்ததாக அறியமுடிகிறது. இதனால் குற்றவாளியைத் திருத்துவதற்கும், நாட்டுக்கு நன்மையும், நல்ல வாய்ப்பும் உண்டு.

சிறை நூலகம் (The Prison Library)

சிறைக் கைதிகளின் கல்வியின் தரத்திற்கு ஏற்றவாறு சிறைகளில் நூலகம் அமைத்தல் வேண்டும், அமெரிக்காவில் கெண்டகீ (Kentucky) சிறையில் 1802-ல் நூலகம் அமைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கின்றது. ஆனால், 1840 வரையில் அநேக சிறைகளில் நூலகம் இல்லாமல் இருந்திருக்கின்றன. இருந்த சில புத்தகங்களும் விவிலியம், தெய்வ வழிபாடு, சமயத் தொடர்பான புத்தகங்களே அதிகமாக இருந்தன. இந்த நிலை

மாறி இன்று பள்ளிகளைப் போல், கல்லூரியைப் போல், கைதிகள் படிப்புக் கேற்றவாறு சிறைகளின் நூலகங்களில் புத்தகங்கள் உள்ளன. 'நல்ல புத்தகமே ஒருவனுக்கு நல்ல நண்பன்' என்று கூறுவதுண்டு. நண்பன், ஆசிரியர் மற்றும் சமுதாயப் பெரியோர்கள் கற்றுக் கொடுக்க முடியாததை - திருத்த முடியாததை—சிறந்த புத்தகங்கள் செய்து விடுவதுண்டு. ஆகவே அரசாங்கம் நல்ல புத்தகங்களை வாங்கிக் கைதிகள் படிக்கும் வண்ணம் வசதி செய்து கொடுத்தல் வேண்டும்.

சிறையில் உழைப்பு (Labour in Prison)

ஆரம்ப காலத்தில் குற்றவாளிகள் சிறைகளில் அடைக்கப்பட்டு வந்தார்களே தவிர அவர்களை உழைப்பில் ஈடுபடுத்தவில்லை. தனியறைச் சிறை முறையில் அடைத்து வந்தார்கள். தனி இருட்டறையில் காற்றோட்டமில்லாமல் அடைத்து வைக்கப்படுவதுதான் கடுமையான சிறைத் தண்டனையாகக் கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். நோய்வாய்ப்பட்டிருந்தாலும் மற்ற முக்கியமான காரணங் கருதிதான் வெளியில் வர அனுமதிக்கப்பட்டது. மற்றப்படி மாத, வருடக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். தனிமையின் கொடுமைதான் குற்றத்திற்கான பரிகாரமாக—கழுவாயாக—கருதப்பட்டது. சில நாட்களில் அவர்களுக்கு உணவு கூட வழங்கப்படவில்லை. அவர்களை மற்றவர்களின் கருணைக்கு விட்டு விட்டார்கள். சிறையில் கைதிகள் பசியாலும், பட்டினியாலும் வாட நேர்ந்தது.

அடுத்த நிலையில்தான் சும்மா அடைத்து வைத்திருந்தால் மட்டும் கைதிக்கு உரிய தண்டனையாகி விடாது. சிறையில் கடுமையான உழைப்பு வழங்கவேண்டும். குற்றவாளி தன் குற்றத்தை உணருவதுதான் சிறந்த பரிகாரம் எனக் கருதப்பட்டது. கடுமைக்கு கடுமை; அத்துடன் அரசாங்கத்துக்கு வருமானம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் பறிக்கத் திட்டம் தீட்டப்பட்டது. அதன் அடிப்படையில்தான் சிறையில் கைதிகள் உழைக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. இருட்டறைகளைப் போக்கி, வெளிச்சம், காற்றோட்டமான இடங்களில் உழைக்க வசதியான முறையில் அமைக்கப்பட்டது, அல்லது வெளியில் உழைத்து இரவில் தனியறைகளில் அடைக்கப்பட்டார்கள்.

'உழைப்பு' கைதிகளுக்குக் கூடுதலான தண்டனையாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று அந்நிலை இல்லை. 'உழைப்பு' ஆரோக்கிய வாழ்விற்கும் கைதிகளின் நேரத்தை வீணாக்காமல் உழைத்து ஊதியம் சேகரிப்பதற்குமாகும். இதனால் கைதி அந்தத்

தொழிலில் தக்க பயிற்சியடைந்து, விடுதலையடைந்து வெளியில் வந்தவுடன் அதைச் செய்து வாழ்க்கையைக் கழிக்கவும் அமைக்க பட்ட சீர்திருத்த தண்டனைக் கொள்கையாகக் கருதப்படுகின்றது. கைதிகளின் உழைப்பிற்குத் தக்கவாறு அவர்களுக்குக் கூலியோ, ஊதியமோ வழங்கப்பட்டு வருகின்றது. அமெரிக்கா, இங்கி லாந்து. இந்தியா, போன்ற நாடுகளில் கைதிகளுக்குப் கடும் உழைப்பு வழங்கப்பட்டு வந்தது. சிறையில் செக்கு இழுத்தல் (Tread Mills) கல் உடைத்தல் (Cranks) பீரங்கிகளைத் தோளில் தூக்கிக்கொண்டுபோய்ப் பாசறைகளில் வைத்தல். வெடிவைத்துப் பாறைகளைப் பிளத்தல், கிணற்றிலிருந்து நீர் இறைக்க சுற்றுக் கமலையை இழுத்தல், மாடுபோல் நுகத்தடியில் கட்டப்பட்டு நிலத்தை உழுதல், மரம் வெட்டி அறுத்தல் முதலியவை தண்டனைக ளாக வழங்கப்பட்டன. குறிப்பிட்ட மணிக்குள் இத்தனை மரங் களை வெட்டிச் சாய்க்க வேண்டும் அல்லது இவ்வளவு எடை விறகு களை வெட்ட வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. சிறையின் விதிகளை மீறும் கைதிகளுக்கு மேலும் கூடுதலான உழைப்பு கொடுக்கப்படடு வந்தது. சிறை என்றால் 'நரகம்' என்று எண்ணும் அளவிற்குக் அங்குக் கடுமையான உழைப்பு, கட்டுப்பாடுகள் ஆகியவை செயற்படுத்தப்பட்டன. 50 ஆண்டு களுக்கு முன்பு இந்தியாவில் உள்ள சிறைகளிலும் மேலே கூறப் பட்ட கொடுமைகள் இழைக்கப்பட்டு வந்துள்ளன, இதனால் கைதிகள் உழைத்து உழைத்து உருக்குலைந்து போய்விட்டார்கள். கொலைக் குற்றவாளிகளுக்கு மட்டுமல்லாமல் நாட்டின் விடுதலைக் காகப் போராடிச் சிறைசென்ற குற்றவாளிகளுக்கும் அதே கடுமை யான உழைப்பு கொடுக்கப்பட்டது. சிலர் கடும் உழைப்பால் சிறையில் இறந்தே போய்விட்டார்கள், சிலர் நோய்வாய்ப்பட்ட நிலையில் விடுதலை அளிக்கப்பட்டார்கள். ஆனால் கால வெள்ளத் தால் இக் கொடுமைகள் அடித்துச் செல்லப்பட்டன.

இன்று கைதிகளின் மனப்பாங்கை அறிந்து, திறமையை அறிந்து அவர்களுக்கு அந்தத் தொழிலில் உழைக்க வசதி செய் யப்பட்டு வருகின்றது. ஆனால் தொழில் கடினமாகவும், கைதிகள் வெறுக்கக் கூடியதாகவும், சலிப்பூட்டும் தன்மையாக வும் அமைந்திருக்கவேண்டும் எனக் கருதப்படுகின்றது. செயல் முறையில் இன்று சிறையில் கைதிகள் வெறுக்கக் கூடிய அளவில் உழைப்பு வழங்குவதில்லை. ஆனால் கட்டுப்பாடு, ஒழுக்கம், இணக்கம், சமுதாயத்துடன் ஒட்ட ஒழுகுதல் ஆகியவற்றை உழைப்புடன் கைதிகளுக்கு வற்புறுத்தப்படுகின்றன. சலிப்பூட்டுந் தன்மை, வருத்தம் ஆகியவைதாம் மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக் கையாக அமைந்திருக்கின்றது.

தண்டனையும் சீர்திருத்தமும் இணைந்துதான் சிறையில் உழைப்பு எனக் கூறப்பட்டது. மரண தண்டனை, உடல் ஒறுத்தல், நாடு கடத்தல் ஆகிய தண்டனைகள் நீக்கப்பட்டு விட்டதனால் சிறையில் அடைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இதனால் சிறைகளை விரிவுபடுத்தவும் மேலும் பல வசதிகளை மேற்கொள்ளவும் பொருள் வசதி தேவைப்பட்டது. அதன் காரணமாகத்தான் சிறைக் கைதிகள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அவர்கள் உழைப்பால் வரும் செல்வத்தைக் கொண்டு மேற்கூறப்பட்ட சீர்திருத்தங்களுக்குச் செலவிடப்பட்டன.

மேலை நாடுகள் கைதிகளைத் தொழிலில் ஈடுபடுத்தத் தீவிரம் கொண்டன. அதன்படி வசதியுள்ள சிறைகளுக்குள்ளேயே கைதிகளுக்குத் தொழில் புரிய வசதி அளிக்கப்பட்டது. வசதியில்லாத சிறைகளில் இருக்கும் கைதிகள் தனியார் தொழிற்சாலை, பண்ணைகள், ஆகியவற்றில் சேர்ந்து உழைக்க அனுமதிக்கப்பட்டது. கைதிகள் தனியார் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றினாலும் சில ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். வெளியில் பணியாற்றினாலும் கைதிகளின் பராமரிப்பு, கட்டுப்பாடு, உற்பத்திப் பொருளை விற்பனை செய்வதில் கட்டுப்பாடு ஆகியவை கண்காணிக்கப்பட்டு வந்தன. மேல் நாடுகளில் சில கைதிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை அவர்களே விற்பனை செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் இவ்வுரிமை இதுகாறும் வழங்கப்படவில்லை.

அமெரிக்காவில், கைதிகள் தனியார் இல்லங்களில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் 19-ம் நூற்றாண்டில் இம்முறை நிறுத்தப்பட்டது. உந்து வண்டிகள் (Bus) கண்டுபிடிக்கப்பட்ட பின்பு மீண்டும் இம் முறை செயற்படுத்தப்பட்டது. அதாவது, கைதிகள் பகலில் பண்ணைகளில், தொழிற்சாலைகளில் பணியாற்றிவிட்டு மாலையில் சிறைக்குத் திரும்பிவிடல் வேண்டும். அதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்புதான் கைதிகள் தனியார் பண்ணைகளில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்கள். தானியங்கி வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இம் முறை மேலும் அதிகப்படுத்தப்பட்டது. பண்ணைகளில் பணிபுரிதல், தீயணைத்தல், பூச்சி மருந்து தூவுதல், உழுதல், துப்புரவு செய்தல் ஆகிய பணிகளுக்குக் கைதிகள் பயன்படுத்தப்பட்டு வந்தனர்.

இளங் குற்றவாளிகள் அடைக்கப்பட்டுள்ள சீர்திருத்த இல்லங்களில் பள்ளிகளில் உற்பத்தி செய்யும் பொருள்களை

விற்பனை செய்யும் உரிமை அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டது. அந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருள்களின் இலாபத்தில் ஒரு பங்கை எடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப் பட்டது.

1800—1825 ஆண்டுகள் வரையில் எல்லாச் சீர்திருத்த நிறுவனங்களிலும் உழைப்பு செயற்பட்டு வந்தது. ஆனால் இம் முறை தோல்விதான் கண்டது. குற்றவாளிகள் அதிகரித்து விட்டார்கள், போதுமான வசதிகள் இல்லை, தேவையான உற்பத்திப் பொருள்கள் கிடைப்பதில்லை. வேண்டிய முதலீடு செய்வதற்கும் வசதியில்லாமற் போயிற்று. பொருள்களை விற் பனைக்கு எடுத்துச் செல்லவும் போதிய வசதிகள் இல்லை. கைதிகள் உற்பத்தி செய்த பொருள்களை வாங்குவதற்கும் மற்ற வர்கள் தயங்கினர்கள். மேலும் கைதிகளுக்குப் போதுமான அனுபவம் இல்லாததனால் அவர்கள் தயாரித்த பொருள்களும் தரமானதாக இல்லை. கடை வீதியில் விற்பனை மந்தமாக இருந்தது. கைதிகளின் திறமை மேலும் மேலும் வளர்ந்தது. அவர்களின் உற்பத்திப் பொருள்களும் தரமானதாக இருந்தன. ஆனால், அவர்கள் சிறைத் தண்டனை காலம் முடிவடைந்து விடுதலையாகி விடுகின்றார்கள் அல்லது நல்லொழுக்கத்திற்காகச் சிறைத் தண்டனைக் காலத்தைக் குறைத்து விடுதலை அளிக்கப்பட்டது. இதனல் கைதேர்ந்த-திறமைவாய்ந்த-கைதிகள் சிறையை விட்டு வெளியேறவும், புதிய கைதிகள் வந்து சேருவார்கள். இதனல் ஏறத்தாழப் பொருள்களின் தரம் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வந்தது. மேலும் இயந்திரவசதிகள் பெருகிவிட்ட காரணத்தினல் இயந்திரங்களைக்கொண்டு குறைவான செலவில் சிறந்த பொருள் களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்கப்பட்டது. அதே நேரத்தில் கையினல் தயார் செய்யப்பட்ட பொருள்கள் அவற் றுடன் போட்டிபோட முடிவதில்லை. மேற்கூறப்பட்ட காரணக் கூறுகளினல் சிறைத் தொழில்கள் நசுங்கிவிட்டன. ஆனல் கைதிகளின் நன்மையை முன்னிட்டு 1880-ல் மீண்டும் தொடங் கப்பட்டது. இதில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. கைதிகள் வாடகைக்கு விடப்பட்டார்கள். அதாவது பண்ணையார் சிறையதிகாரிகளை அணுகி அவருக்குத் தேவையான கைதிகளைக் கோரினல் குறிப்பிட்ட காலம் வரையில் பண்ணையில் உழைக்க அனுமதிக்கப்பட்டார்கள். அதற்குரிய தொகையை அவர்கள் சிறை அதிகாரிகளிடம் கொடுத்துவிடவேண்டும் அல்லது தேவை யான கைதிகளை ஒப்பந்த முறையிலும் பெற்றுத் தங்களின் பண்ணை களில் பணியாற்ற தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப் பட்டது. இம்முறையால் சிறையில் தொழில் புரிந்ததில் ஏற்பட்ட

தட்டப் தவிர்க்கப்பட்டது. மேலும், மற்றத் தொழிலாளர்களைவிட சிறைக் கைதிகள் குறைந்த ஊதியத்தோடு பணிபுரிய அனுமதிக்கப்பட்டதனால் பண்ணையாளர்கள், ஆலை முதலாளிகள் ஆகியோர் சிறைத் (கைதி) தொழிலாளர்களையே தங்களின் பண்ணைகளில் ஈடுபடுத்தி மிகுந்த இலாபத்தை அடைந்துவந்தார்கள்.

இதே முறையைச் சீர்திருத்தப் பள்ளிகள், மற்ற நிறுவனங்கள், மற்றச் சிறைகள் ஆகியவை செயற்படுத்திவந்தன. இம்முறை சிறை நிறுவனங்களுக்கு இலாபமாக இருந்தது. ஆகவே, அமெரிக்காவில் ஏறத்தாழ 1940ஆம் ஆண்டு வரை இம்முறை செயற்பட்டு வந்தது. தொழிற் சங்கங்களின் வளர்ச்சியினால் — மறுமலர்ச்சியினால்—உழைக்கும் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வெகுவாக எழுப்பப்பட்டதனால் சிறைத் தொழிலாளர்களின் நிலையும் உயர்த்தப்படவேண்டும் என்ற கொள்கை எழுந்தது. இதனால் ஒப்பந்த முறையில் சிறைத் தொழிலாளர்களைப் பெற முன்வரவில்லை. இம்முறை பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. சிறைகளிலும் தொழில் தொடங்கமுடியவில்லை, தனியார்களுக்கும் ஒப்பந்த முறையில் சிறைத் தொழிலாளர்களை அனுப்பும் வாய்ப்பு குறைந்துவிட்டது. கூலி உயர்த்த கோரிக்கை எழுந்ததனால் ஏற்கெனவே பயிற்சி பெற்ற திறமையுள்ள தொழிலாளர்களையே அமர்த்திக்கொள்ள ஆலை முதலாளிகள், பண்ணையார்கள் விரும்பினார்கள். இறுதியாகக் கைதிகள் சிறையில் சும்மா காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தது.

கைதிகள் குறிப்பிட்ட வேலைகளுக்காக ஒப்பந்த முறையில் தனியார்களுக்கு அனுப்பப்பட்டார்கள். இம் முறையும் பாதிக்கப்பட்டுவிடவே அடுத்து உத்தரவின்பேரில் சாமான்களைத் தயார் செய்து ஒப்பந்த விலைக்கு விற்றுவந்தார்கள். அதாவது பெரிய ஆலைகளுக்கு வேண்டிய சிறு சிறு சாமான்களைத் தயார் செய்து ஏற்கெனவே நிர்ணயித்த விலைக்கு விற்றுவந்தார்கள். இதற்காக அவர்கள் அதற்கு வேண்டிய மொத்தத் தொகையைப் பெற்றுக்கொண்டார்கள். உத்தரவு கொடுக்கப்பட்ட அளவுக்கு மட்டும் சாமான்கள் தயார் செய்து கொடுக்கப்பட்டுவந்தன. சாமான்கள் தேவைப்படுவோர்கள் சிறை அதிகாரிகளை அணுகி உத்தரவு கொடுத்துச் சிறையில் அந்தச் சாமான்களை செய்து கொடுக்கும்படி வேண்டிக்கொள்வார்கள். நியூஜெர்சியில் (Newjersy) 1798 முதல் 1830 வரையில் இம்முறை செயற்படுத்தப்பட்டுவந்தது. ஆனால் இன்று இம் முறை வெகுவாகக் குறைந்துவிட்டது.

குத்தகை முறை (Lease System) மேலே குறிப்பிட்டதைப் போல குறிப்பிட்ட வேலைக்காக ஒப்பந்த முறையில் கைதிகள் பணிபுரிய அனுமதிக்கப்பட்டார்கள். இம்முறையில் குறிப்பிட்ட காலம் வரையில் தனியார் பண்ணைகளில் பணியாற்றக் கைதிகள் ஒப்பந்தக் கட்டுப்பாட்டு முறையில் அனுப்பப்பட்டார்கள். ஒப்பந்த முறையில் வேலையின் அடிப்படையில் கைதிகள் தனியார் பண்ணைகளில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்கள். இம் முறையில் காலத்தின் (Duration) அடிப்படையில் கைதிகள் தனியார் துறைகளில் பணிபுரிய அனுமதிக்கப்பட்டார்கள். குற்றவாளிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டால் அதைக் கட்ட முடியாத கைதிகளை அபராதத் தொகைக்கு ஏற்றவாறு அவர்கள் தனியாரிடத்தில் பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். ஆனால் பணியாற்றும் காலத்தில் கைதிக்கு வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைத் தனியார்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். அபராதத் தொகைக்குச் சமமாக அவர்களின் உழைப்பு கணக்கிடப்பட்டுப் பிறகு அவர்களைத் திருப்பிச் சிறைக்கே அனுப்பிவிடுதல் வேண்டும். இம்முறை மசாசுசெட்சில் (Massachusetts) 1798-லும் கெண்டகியில் (Kentucky) 1825-லும் செயற்படுத்தப்பட்டுவந்தது. தென் அமெரிக்காவில் உள்நாட்டுப் போருக்குப் பின் இம்முறை அதிகம் வளர்ச்சியடைந்தது. தனியார்களிடம் குற்றவாளிகள் குத்தகையாக ஒப்படைக்கப்பட்டார்கள். இவர்கள் மரம் வெட்டுதல், சாலை அமைத்தல், கற்பூரத்தைலம் (Turpentine) தயாரித்தல் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். தென் மாநிலங்களில் பல நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் இம்முறை செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தென் ஆப்பிரிக்காவில் பல மாநிலங்களில் இம்முறையில் சிறிது மாற்றம் செய்து கைதிகளைப் பணியில் ஈடுபடுத்தி வருகின்றார்கள். விவசாயிகள் விவசாயச் சங்கங்கள் அல்லது வேளாண்மைக் கழகங்கள் (Farmers' Association) என்று அமைத்துக் கொண்டு அந்தச் சங்கத்தின் சார்பில் ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டிக் கொள்கின்றார்கள். அங்கே கைதிகள் வசதியாகத் தங்கவும், வயல்களில் பணியாற்றுவதற்கு ஏற்றதாகவும் அமைத்துக் கொள்கின்றார்கள். பிறகு அந்தக் கட்டடத்தையே சிறையாக மாற்றிவிடுகின்றார்கள். அது சிறைகளின் கிளையாகச் செயற்பட்டு வருகின்றது. அதை நிர்வகிக்க அந்தச் சங்கம் அதிகாரிகளை நியமிக்கின்றது. இதற்கு உழைக்கும் புறக்காவல் சிறை (Labour Out Post) என்று பெயர். இந்த உழைக்கும் புறக்காவல் சிறையில் உள்ளார் ஆண் குற்றவாளிகளில் இருமுறை, மும்முறை குற்றம்புரிந்த கைதிகள் ஒப்படைக்கப்படுகின்றார்கள். வேளாண்

மைக் கழகம் கைதிகளின் வேலைக்கான தினக்கூலியை நிர்ணயம் செய்துவிடும்.

குறைந்தகால தண்டனை பெற்ற கைதிகளை, எந்தக் கழகம் குறைவான கூலியுடன் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி ஆகியவற்றைக் கைதிகளுக்கு அளிக்க முன்வருகின்றதோ அந்த வேளாண்மைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு வந்தார்கள்.

1952–ல் நான்கு மாத கால தண்டனையடைந்த கைதிகள் 40,000-க்கு மேல் இத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டார்கள் என்று தென் ஆப்பிரிக்க செய்தி நிறுவனம் தன் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஆறு நாடுகளுக்கு மேல் கைதிகளின் சிறைத் தண்டனை முடிவடையும் காலமாக இருக்கும்போது தனியாரிடத்தில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்நிலையால் கைதிகளுக்கு, ஏறத்தாழ முழுச் சுதந்திரம் அளித்து விட்டதைப் போன்ற சூழ்நிலை உண்டாக்கப்படுகின்றது.

அமெரிக்காவில், சிறைக் கைதிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்களை அந்தந்த மாநிலங்களில் விற்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிடையே சிறைக் கைதிகள் தயாரித்த பொருள்களை விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டது.

சிறையில் உழைப்பு, கைதிகளின் நலன் ஆகியவை ஆராய்ந்து பார்க்கப்படவேண்டுமே தவிர இலாப நட்டத்தைப் பார்க்கக் கூடாது. கைதிகளுக்கு அளவான உழைப்பு வழங்கப் படுவதனால் அவர்களின் உடல் நலம் கெடுவதில்லை. அரசிற்குப் பொருளாதார நன்மை கிடைக்கிறது. கைதிகளுக்கு வாழ்க்கைத் தொழில் கிடைக்கின்றது. அத்துடன் அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கும், குடும்பத்தைப் பராமரிக்கவும் சிறிது ஊதியம் கிடைக்கின்றது. கைதிகளுக்குள் போட்டி ஏற்படுவதனால் தொழிலில் திறமை, ஊக்கம், உறுதி. நல்லொழுக்கம், தொழிற் பயிற்சி ஆகியவற்றுடன் புனர்வாழ்வும் கிடைக்கின்றது.

சிறையில் கைதிகளுக்கு உழைப்பு நல்குவதனால் சிறையில் ஒரு சிறிய சமுதாயத்தையே காணுகின்றார்கள் கைதிகள். சீர் திருத்தத் தண்டனைக் கொள்கை முறைக்கு இம்முறை மிகவும் சிறந்ததாகும். உழைப்பால் ஊதியம் பெறுகின்றார்கள். தன்னை

நம்பி வாழும் குடும்ப அங்கத்தினர்களுக்கு உதவ வசதியாக உள்ளது. அத்துடன் மனித சக்தி வீணுக்கப்படுவது தடுக்கப் பட்டுவிடுகின்றது.

இம்முறையில் மேலும் சிறிது மாறுதல் செய்து கைதி, அரசாங்கம் இரு சாராரும் நன்மையடையும் வகையில் அமைதல் வேண்டும். கைதிகளின் தண்டனைக்கு ஏற்றவாறு வேலை வாய்ப்பு அளித்தலை விட அவர்களின் தகுதிக்கு ஏற்றவாறு பணி களில் ஈடுபடுத்துவது சாலச்சிறந்ததாகும். வயது, அறிவு, திறமை, ஆர்வம் ஆகியவற்றைக் கொண்டு குற்றவாளிகளை வேலையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

21. சிறையிலிருந்து விடுதலை

(Release from Prison)

குற்றவாளி சிறையில் அடைக்கப்படுவதற்கும் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியேறுவதற்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை நிறைவேற்றும் பொருட்டுக் குற்றவாளி சிறையில் அடைக்கப் படுகின்றான். சிறைத் தண்டனைக் காலம் முடிவடைந்தவுடன் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப்பட்டுவிடுகின்றது. அதற்காக நீதிபதியின் உத்தரவு தேவையில்லை. ஆனால் பல்வேறு சூழ்நிலைகளில் குற்றவாளி சிறைத்தண்டனையை முழுவதும் அனுபவிக்காமலேயே தொடக்கத்திலேயோ அல்லது இடையிலோ விடுதலை அளித்துச் சிறையிலிருந்து விடுவிக்கப்படலாம். குடியரசு தலைவர், நிர்வாகத்துறை அதிகாரிகள், ஆளுநர் ஆகியோர்களால் குற்றவாளியின் தண்டனைக்காலம் முடிவடையும் முன்பே விடுவிக்கப்படலாம். ஆளுநர் (Governor) குற்றவாளியின் குற்றத்தை மன்னித்து அவனுக்கு விடுதலை அளிக்கலாம் அல்லது தண்டனையைக் குறைக்கலாம். இவற்றைச் செய்ய ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. சிறை அதிகாரிகள் நாணய வாக்குறுதியின் மீது கைதியை தண்டனைக் காலத்திற்கு முன்பே விடுவித்தல் அல்லது நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவிக்கும் குழு (Parole Board) குற்றவாளியின் நன்னடத்தையை, ஒழுக்கத்தை ஆராய்ந்து சிறையில் இருந்த காலத்தில் நடத்தை, போக்கை ஆராய்ந்து தண்டனைக் காலத்திற்கு முன்பே விடுதலை அளிக்கப் பட்டு விடுதல் ஆகியவையாகும்.

மேற்கூறிய முறைகளில் மட்டும் கைதியைச் சிறைத்தண்டனை முடிவடையும் காலத்திற்கு முன்பே விடுதலை அளிப்பதுடன் நாட்டில் சட்டங்களைத் திருத்தி அமைக்கப்படும்போதும் அல்லது சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்போதும்

அல்லது தற்காலிகமாக நீக்கிவிடும்போதும் அந்தச் சட்டத்தை மீறியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளைச் சட்டத்தை நீக்கப்பட்டவுடன் உடனடியாகக் குற்றவாளிகளுக்கு விடுதலை அளிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டாக, மது விலக்குச் சட்டம், பரத்தைமைச் சட்டம் முதலியனவாகும். மேற்கூறிய குற்றங்களை மீறியதற்காகச் சிறைத்தண்டனை வழங்கப் பட்டிருந்தாலும், அந்தத் தண்டனையின் காலம் முடிவடையாமல் இருந்தாலும் சட்டம் செயலற்றுவிடும்போது குற்றவாளிகளின் தண்டனைக் காலத்தைப் பாராமல் விடுவித்தல்வேண்டும்.

ஆட்சி மாறும்போது, அரசியல் குற்றவாளிகள் உடனடியாக விடுதலை அளிக்கப்பட்டுவிடுவார்கள். மற்றக் குற்றவாளிகளின் தண்டனைக் காலத்தையும் குறைத்துவிடுவார்கள். குறுகிய கால தண்டனையாக இருந்தால் விடுதலை அளிக்கப்பட்டுவிடும். இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிச் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த அரசியல் குற்றவாளிகள் அனைவருக்கும் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் விடுதலை அளிக்கப்பட்டது. மற்ற வகையான குற்றவாளிகளுக்குத் தண்டனையின் காலம் குறைக்கப்பட்டது. அதே போன்று இந்தியாவில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல் ஆட்சிக்கு வந்தவுடன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். அதேபோன்று கோவா விடுதலைக்குப் போராடிச் சிறை சென்றவர்கள் விடுதலை அளிக்கப் பட்டுள்ளார்கள். அந்தக் காலத்தில் மன்னர்கள், சக்கரவர்த்திகள், ராஜாக்கள் ஆகியோர்களின் திருமணத்தின்போதும், முடிசூட்டு விழாவின்போதும், போரிட்டு வெற்றி கொண்டாடும் போதும், குற்றவாளிகளை மன்னித்துவிடும் பழக்கம் இருந்ததாக அறியமுடிகின்றது.

இப்படிப் பல்வேறு நிலைகளில் குற்றவாளிகளின் தண்டனைக் காலம் முடிவடையும் முன்பு விடுதலை அளிக்கப்பட்டு வருகின்றது. மன்னிப்பு (Pardon) என்பது குற்றவாளியின் குற்றத்தைப் பொருட்படுத்தாது, குற்றவாளியின்மீது கருணை கொண்டு மன்னித்து விடுதலை அளித்தலாகும், மன்னிப்பு தனிப்பட்ட குற்றவாளிக்கும் எல்லாக் குற்றங்களுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது. எல்லாக் குற்றவாளிக்கும் மன்னிப்பு அளித்து விடுதலை அளிப்பதற்குப் பொது மன்னிப்பு அளித்தல் (Amnesty) என்று பெயர். இந்தப் பொது மன்னிப்பு அளித்தல் உரிமை குடியரசு தலைவருக்கும் (President) ஆளுநருக்கும் (Governor) அளிக்கப்பட்

டுள்ளது. பெரும்பாலும் அரசியல் குற்றவாளிகள் பொது மன்னிப்பால் விடுதலை அளிக்கப்படுகின்றனர்கள். இது ஆட்சியாளர்களின் கருணையால் மலர்வதாகும். மரண தண்டனை வழங்கப்பட்ட கைதிக்கு மாநில முதலமைச்சரின் பரிந்துரையால் அல்லது கவர்னர்களின் சொந்த விருப்பால் குற்றவாளி கருணை மனு (Mercy Petition) செய்திருந்தால் அதனைப் பரிசீலித்து மரண தண்டனை நிறைவேற்றப்படாமல் மன்னித்து ஆயுள் தண்டனையாக மாற்றுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். நீதிபதி குற்றவாளியை மன்னித்து விடுதலை அளிக்கலாம். ஆனால் குற்றவாளி நீதிமன்றத்தில் இருக்கும்போதே குற்றவாளிக்குக் கடும் எச்சரிக்கை கொடுத்து மன்னித்து விடுவதும் உண்டு. ஆனால் சிறையில் தண்டனை அனுபவிக்கும் கைதியை மன்னித்து விடுதலை அளிக்க நீதிபதிக்கு உரிமையில்லை. குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று நீதிபதி வலியுறுத்த முடியாது. அதே போன்று குற்ற விசாரணையில் இருக்கும் குற்றவாளிக்கு மன்னிப்பு அளித்து விடுதலை அளிக்கும்படி குடியரசு தலைவர் நீதிபதியைக் கட்டாயப்படுத்த முடியாது. மன்னிப்பு அளிக்கப்பட்டுவிட்டதென்றால் அவன் சுதந்திர மனிதனாகி விடுகின்றான்.

மன்னிப்பில் இருவகையுண்டு. 1. கட்டுப்பாடுடைய மன்னிப்பு (Conditional Pardon), 2. கட்டுப்பாடற்ற மன்னிப்பு (Absolute Pardon) என்பன. கட்டுப்பாடுடைய மன்னிப்பு என்பதால் குற்றவாளி குறிப்பிட்ட செயலைச் செய்யவேண்டும் அல்லது செய்யாமல் இருத்தல் வேண்டும். அந்தக் கட்டுப்பாட்டுடன் அந்தக் குற்றவாளிக்கு மன்னிப்பு அளிக்கப்படுகின்றது. அவ்வாறில்லையென்றால் மன்னிப்பு அளிக்கப்படமாட்டாது என்பது பொருள். கட்டுப்பாடற்ற மன்னிப்பு: இதில் குற்றவாளியை மன்னித்து விடுதலை அளிப்பதாகும். குற்றவாளி ஒரு செயலைச் செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ கட்டளையிடுவதில்லை. சுதந்திர மனிதனே மகிழ்ச்சியோடு வாழலாம். கட்டுப்பாடுடைய மன்னிப்பு என்பதில் குற்றவாளி மது அருந்தக்கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிக்கப்படலாம் அல்லது உடனடியாக நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கலாம். இந்தக் கட்டுப்பாடுகளை மீறிவிட்டால் வழங்கப்பட்ட தண்டனை செயற்படுத்தப்படும். தண்டனையைக் குறைத்தல் (Commutation) என்பதற்கும் மன்னித்தல் என்பதற்கும் வேறுபாடு உண்டு. குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்து விடுவதனால் விடுதலை அளிக்கப்படுகிறது.

பொதுமன்னிப்பு அளித்தல் (Amnesty)

ஏற்கெனவே இதைப்பற்றி ஆராயப்பட்டுள்ளது, 1945-ல் அமெரிக்க ஜனாதிபதியால் ஒரு வருடம் அல்லது அதற்கு மேல் இராணுவத்தில் பணியாற்றிய குற்றவாளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 1953-ல் இங்கிலாந்தில் போர்க்காலத்தில் படைத்துறைச் சேவையிலிருந்து இசைவு பெருமல் தப்பியோடிவிட்ட (Deserted from Force) 14,260 நபர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கப் பட்டு விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அளிக்கப்பட்ட பொது மன்னிப்பைப்பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுவிட்டது. பொது மன்னித்தல் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பின்பற்றப் பட்டு வருகின்றது. 1971-ல் வங்காள தேசத்தின் போரின்போது அதிகாரத்தைத் தவருன முறையில் பயன்படுத்திய 195 மேற்குப் பாகிஸ்தான் போர்க்குற்றவாளிகள் அனைவருக்கும் சிம்லா ஒப்பந்தத்தின்படி (Simla Pact) பொதுமன்னிப்பு அளித்து விடுதலை அளிக்கப்பட்டது. மற்றும் பொது மக்களுக்கும் (Civilian) பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு பாகிஸ்தான் நாட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். [வங்கதேசத் தலைமை அமைச்சர் முஜுபிர் ரஹிமான்மீது பாகிஸ்தான் நாட்டில் அரசு துரோகக் குற்றம் (Treason) சாட்டப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டது. அந்த மரண தண்டனையை மன்னித்து உடனே விடுதலை அளித்தது பாகிஸ்தான்.] அரபு நாட்டிற்கும், இஸ்ரேல் நாட்டிற்கும் நடந்த போரின்போதும் இரு நாட்டாரும் போர்க்கைதிகளை மன்னித்து அவரவர் நாட்டிற்குத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அரசியல் வாதிகள் போராட்டம் செய்து அதனுல் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது குற்ற வாளிகள் மன்னிப்புக் கோரினுல் அதை நீதிபதி ஏற்று மன்னித்து விடுவதும் உண்டு.

மன்னித்தலின் வரலாறு (The History of Pardon)

'மன்னிப்பு' என்பது வரலாற்றுக் காலந்தொட்டே இருந்து வருகின்றது. தந்தை மகனை மன்னித்துவிடுதல், சமுதாயத் தலைவன் குற்றவாளியை மன்னித்து விடுதல், ஆட்சித் தலைவன் அல்லது அரசன் குற்றம் புரிந்த குடிமகனை மன்னித்து விடுதல் ஆகியவை வரலாறு மூலம் உணரப்படுகின்றன. முரசு கட்டிலில் படுத்துறங்கிய மோசிகீரனுரை மன்னித் தருளினுன் இமயவரம்பன். 'பார்ப்பனர்கள்' (Brahmins) எந்தக் குற்றத்தைப் புரிந்தாலும் அவர்களின் உயிருக்கோ, உடை மைக்கோ ஊறு விளைவிக்காவண்ணம் மன்னித்து வேற்று நாட்

டிற்குத் தக்க காவலுடன் அனுப்பப்படவேண்டும் என்று மனுநீதிச் சட்டம் கூறுகிறது. இன்னு செய்தார்க்கும் இனியவையே செய்தல் வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை ஆணையிட்டுள்ளார். ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டும்படி ஏசு பணிக்கின்றார். காந்தியும் அதையே செயற்படுத்தியுள்ளார். 'மன்னிப்பு' என்பது அறநெறியின் அடிப்படையில் தோன்றியதாகும். கருணையின் உருவம் தான் மன்னிப்பு. அது இன்று சட்டமாகவும் செயற்பட்டு வருகின்றது. பொதுவாக 'மன்னித்தல் உரிமை' நாட்டுத் தலைவனுக்கும், ஆட்சியாளனுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சில நாடுகளில் சட்ட மன்றமே அந்த உரிமையை வைத்துக்கொண்டுள்ளது. அமெரிக்காவில் சில மாநிலங்களில் மன்னித்தல் உரிமையைச் சட்ட மன்றங்கள் செயற்படுத்திவருகின்றன. இந்தியாவில் குடியரசு தலைவருக்கும், ஆளுநர்களுக்கும் இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர்களின் பரிந்துரைமீது குடியரசு தலைவரோ, ஆளுநரோ மன்னிப்பு அளிக்கலாம். அமெரிக்க அதிபருக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மாநில ஆளுநர்கள் (கவர்னர்கள்) மன்னிப்பு அளித்தாலும் அல்லது மன்னிப்பு அளிக்க அவர்கள் மறுத்தாலும் அதைப்பற்றிச் சட்டமன்றத்தில் விளக்கப்படவேண்டும் என்ற உரிமை பல அமெரிக்க மாநிலச் சட்ட மன்றங்களில் காணப்படுகின்றது.

இறுதியாகத், 'மன்னிதல்' என்ற முறையே நீக்கப்படவேண்டுமென்று வாதாடுவோர் பலருண்டு. அரசியல் செல்வாக்கு உள்ள குற்றவாளிகள் இந்த உரிமையைத் தவருகப் பயன்படுத்திக் குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்கின்ருர்கள். குற்றவாளிகளின் குற்றவொழுக்கம் மாறுபட வாய்ப்பு இல்லை. தண்டனையின் கடுமையை உணர்த்த வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது. குற்றவாளிகளை அடிக்கடி மன்னித்து விடுதலை அளித்துவிடுவதனுல் நீதிபதிக்கு வெறுப்பு ஏற்படக்கூடும். என்ன தண்டனை வழங்கினுல் என்ன, எப்படியும் மன்னிப்பைப் பெற்று விடுதலை அடைந்துவிடக்கூடும் என்ற கருத்து நீதிபதிக்கு ஏற்பட்டு விட்டால் தண்டனை வழங்கும்போது சட்டத்தையும் குற்றத்தையும் ஆராயாமல் தண்டனையைக் கூட்டியோ அல்லது குறைத்தோ வழங்குவதற்கு ஏதுவாகும். அதாவது, ஆயுள் தண்டனை விதிக்க வேண்டிய வழக்கிற்கு மரண தண்டனை விதிக்கப்படும்போது குற்றவாளியைப்பற்றி எல்லாரும் இரக்கம் காட்டுகின்ருர்கள். இதனுல் அவன் மன்னிப்புப்பெற்று விடுதலை அளிக்கப்படலாம். அத்துடன் குற்றவாளிக்கு மன்னிப்பு அளித்தல் அவசியந்தானு

என்பதை ஆராய்ந்து அறியாமல் மன்னிப்பு அளிக்கப்படுகின்றது. போதுமான காரணமின்றியே மன்னிப்பு அளிக்கப்படுகின்றது. அல்லது நியாயமான காரணமின்றியும் மன்னிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. நியூயார்க் மாநிலத்தில் ஆளுநரின் நண்பரொருவர் இரு குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளித்தருளும்படி வேண்டினர். அதற்கு ஆளுநர், இருவரில் ஒருவருக்குதான் மன்னிப்பு அளிக்கப்படும். அதை நீங்கள்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கூறி ஆளுநரின் பொறுப்புப் பங்கு (Governor's Quota) தீர்ந்துவிட்டது, மீதி ஒன்றுதான் பாக்கி இருக்கின்றது என்று அதற்கான காரணத்தையும் விளக்கியுள்ளார். தேவையின் காரண காரியத்தின் அடிப்படையில் மன்னிப்பு அளிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது. நியூயார்க் நகரத்தில் 1776—1845 ஆண்டுகளில் பல கைதிகள் மன்னிக்கப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் புதிய குற்றவாளிகளுக்கு இடம் வேண்டியிருப்பதனால் பழைய கைதிகள் உடனடியாக மன்னித்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளார்கள். 1813-ல் நியூயார்க்கில் 134 கைதிகள் மன்னித்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளார்கள். 198 புதிய குற்றவாளிகள் அந்தச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆகவே, புதிய குற்றவாளிகளுக்கு இடம் வேண்டியும், பழைய கைதிகளை மன்னித்துவிடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

மேலும், குற்றவாளி போதுமான அளவு தண்டனை அனுபவித்துவிடல், குற்றவாளியைக் கண்டித்துவிடல், வயது, இளமை, முதுமை, பெண், உடல் நலமின்மை, கைதியின் காயங்கள் ஆகிய காரணக் கூறுகளினாலும் குற்றவாளியை மன்னித்து விடுதலை அளிக்கப்படுகின்றது. சாதாரணக் குற்றம் புரிந்துவிடுதல், மதுமயக்கத்தில் குற்றம் புரிதல். மற்றக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு உதவி புரிதல், சிறையில் தியாகச் செயல் (Meritorious Service in Prison) புரிதல், தீயணைத்தல், மற்றவர்களின் உயிரைக் காப்பாற்றுதல், போர்க் காலங்களில் நாட்டிற்குத் தொண்டு செய்தல் ஆகிய காரணக் கூறுகளினாலும் குற்றவாளி மன்னிக்கப்பட்டு விடுதலை அளிக்கப்பட்டு வருகின்றது.

மன்னிப்பு அளித்தல், காலத்திற்குக் காலம், நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. 'மன்னித்தல் உரிமை' இருப்பது மிகவும் அவசியமாகும். சில வேளைகளில் நிரபராதிக்குத் தண்டனை வழங்கப்பட்டு விடுவதுமுண்டு. மன்னிப்பு அளித்தலால் நிரபராதிகள் காப்பாற்றப்படலாம்.

கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை (The Indeterminate Sentence)

கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை இந்தியாவில் வழங்கப்படுவதில்லை. இந்தியக் குற்றச் சட்டத்தில் குற்றத்திற்குரிய தண்டனையில் கால அளவு வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. நீதிபதி குற்ற விசாரணை நடத்தும்போது குற்றம் நிருபிக்கப்பட்டதும் குற்றத்திற்குரிய தண்டனையைக் கால அளவுடன் வழங்குகின்றார். குற்றத்திற்குரிய தண்டனையின் அளவைச் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் உறுதி செய்து நிறைவேற்றுகின்றார்கள். ஆனால், எவ்வளவு தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற உரிமை நீதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நீதிபதிக்கு விருப்புரிமை அளிக்கப்பட்டிருப்பதனால் தண்டனையின் அளவு குற்றவாளிக்குக் குற்றவாளி மாறுபட்டிருக்கும். அதுவும் ஒரே குற்றத்தைப் பலர் பல சூழ்நிலைகளில் புரியும்போது பல்வகையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று நீதிபதிக்கு நீதிபதி தண்டனையின் அளவும் மாறுபடும். தண்டனையில் வேறுபட்டாலும் கால அளவு வரையறுக்கப்பட்டிருக்கும். ஆகவே, இதில் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கச் சிரமம் இருப்பதில்லை, ரஷ்யா போன்ற நாடுகளில் குற்றச் சட்டத்தில் குறைந்த தண்டனையின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கின்றது, எடுத்துக்காட்டாக, சொத்தை அழிக்கும் குற்றத்திற்குக் குறைந்தது 5 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதில் நீதிபதி குற்றவாளிக்குக் குறைந்தது 5 ஆண்டு சிறைத் தண்டனை என்று தீர்ப்பு வழங்கிவிட்டால் குற்றவாளியை 5 ஆண்டுக்காலம் சிறையில் அடைத்து வைத்த பிறகு விடுதலை அளிக்கப்பட வேண்டும் என்பது பொருளன்று. நிர்வாக அதிகாரிகள் குற்றவாளியின் நடத்தையில் மனநிறைவு கொண்டால் 5 ஆண்டு கழிந்த பிறகு விடுதலை அளிக்கப்படலாம் அல்லது மேலும் 1 வருடம் சிறையில் தடைப்படுத்தி வைக்கப்படலாம். அதே போன்று தண்டனையின் கால அளவை உச்சவரம்பு (Maximum) விதிக்கப்பட்டு குற்றவாளிக்கு விடுதலை அளிக்கும் உரிமையே நிர்வாகக் குழுவிற்கு அல்லது ஆட்சிக் குழுவிற்கு அளிக்கப்பட்டிருந்தால் தண்டனையின் இடைக்காலத்திலோ அல்லது முடிவிலோ விடுதலை அளிக்கப்படும். இதில் கால அளவு வரையறுக்கப்படாத தண்டனை என்று கூறுவதைக் காட்டிலும் விடுதலையின் காலம் குறிப்பிடப்படவில்லை என்று கூறுவது சாலச் சிறந்ததாகும். சிறைக் கைதிகளின் நடத்தையைப் பொறுத்து அமையும் விடுதலைத் தீர்ப்பு (Indeterminate sentence) சிறையில் கைதிகளின் ஒழுக்கம், நடத்தை, போக்கு ஆகிய

வற்றைக் கண்காணித்து விடுதலை அளிப்பதனால் சமுதாயத்திற்கு ஆபத்து இல்லையென்று ஏற்படும் சூழ்நிலையில் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு வழங்குவதுதான் கால அளவு வரையறுக்கப்படாத தண்டனை (Indeterminate Sentence) என்று வழங்கப்படுகின்றது. இதில் ஒரு சிறப்பு உள்ளது. உச்ச அளவு தண்டனையாக 5 ஆண்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றது என்று கொள்வோம். குற்றவாளி சிறையில் ஒழுக்கமாக, திருந்தியவனாகக் காணப்பட்டால் அவன் இரண்டு ஆண்டுகளில் கூட விடுதலை அடைந்துவிடலாம். அப்படித் திருந்தவில்லையென்றால் 5 ஆண்டுக்காலம் வரையில் சிறையில் அடைத்துவைக்க உரிமையுள்ளது. நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுதல் (Parole) முறைக்கும் காலஅளவு வரையறுக்கப்படாத உச்ச சிறைத் தண்டனைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காலவளவு வரையறுக்கப்படாத உச்ச தண்டனை என்பதில் சிறைக் கைதிகளின் நடத்தையைப் பொறுத்து வழங்கப்பட்ட காலத்திற்கு முன்போ அல்லது இறுதியிலோ விடுதலை அளிக்கப்படலாம் என்பதாகும்.

கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை இளங் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுவந்தது. இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளிக்கோ, சிறைப்பள்ளிக்கோ அனுப்பப்படும் போது குறிப்பிட்ட காலம் வரையில் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்று கூறுவதில்லை. சிறுவர்கள் குற்றத்திற்காக வருந்தி, மனம் திருந்திவிட்டால் உடனடியாக விடுதலை அளிக்கப்பட்டு வந்தது. குற்றச் சட்டத்தில் குறிப்பிட்ட காலம் வரையில் வைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலும் சிறுவர்களின் நன்மையைக் கருதி அந்தக் காலத்திற்கு முன்பேகூட விடுதலை அளிக்கப்படலாம். அல்லது அதற்கு மேலும் அடைத்து வைக்கப் படலாம். அரசியல் சட்டப்படி இவ்வாறு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனையும் வரையறுக்கப்பட்டிருந்தாலும் சூழ்நிலை காரணமாக சிறையில் அடைத்து வைத்திருந்தாலும் சட்டத்திற்கு முரணானதாகும். ஆனால் ஆதிகாலத்தில் குற்றச் சட்டம் தனித்து இயங்கி வந்த காலத்தில் மேல்நாடுகளில் கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனைகள் இளங்குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது (Indefinite Sentence). ஆனால் உச்ச கால அளவு, தண்டனைக் குற்றச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டது. உச்ச தண்டனையின் காலத்திற்குள் விடுதலை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இளங்குற்றவாளியை 3 ஆண்டுக் காலம் வரையில் சீர்திருத்தப்பள்ளியில் தடைப்படுத்தி வைக்கத் தீர்ப்பு வழங்கப்படலாம். இளங் குற்றவாளி நல்லொழுக்கம் உள்ளவனாக விளங்கினால் இரண்டு ஆண்டுகளில் கூட விடுதலை

அளித்துவிடலாம். இம் முறைக்குத்தான் கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை என்று பெயர். கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை எல்லாக் குற்றவாளிகளுக்கும் வழங்கப்படுவதில்லை. இது சில குறிப்பிட்ட குற்றவாளிகளுக்கு மட்டும் வழங்கப்படுவதுண்டு. இது நாட்டுக்கு நாடு வேறுபடும். சாதாரணக் குற்றங்கள் புரிந்த சாதாரணக் குற்றவாளிகளுக்கு இவ்வாறு உச்சகாலச் சிறைத் தண்டனை வழங்கிவிட்டு இடையில் நன்னடத்தையின் காரணத்தால் விடுதலை அளித்துவிடலாம். ஆனால், கடுங் குற்றங்கள் புரியும் குற்றவாளிகளுக்குக் கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை வழங்குவதில்லை. கொலைக் குற்றம், வன்புணர்ச்சி, கொள்ளை, கூட்டுக்கொள்ளைக் குற்றம் ஆகிய குற்றங்களுக்கு வரையறுக்கப்பட்ட தண்டனைதான் வழங்கப்படும். அதில் மாற்றம் இருக்காது.

குற்றவாளிகளுக்கு விடுதலை அளிக்கும் உரிமையைக் குழுவிற்கோ அல்லது சிறை அதிகாரிகளுக்கோ அளிக்கப்படும்போது அதை அவர்கள் தவறான முறையில் பயன்படுத்தவும் வாய்ப்புண்டு. எப்பொழுது விடுதலை அளிக்கப்படும் என்பது குற்றவாளிக்குத் தெரியாமல் இருப்பதனால் அவனுக்கு அதை அறிந்துகொள்ள ஆர்வம் அதிகம் இருக்கும். அதே குற்றத்தைப் புரிந்த மற்றக் குற்றவாளிகளுக்கு எப்பொழுது அளிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளத் துடிப்பாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கால அளவு வரையறுக்கப்படாத சிறைத் தண்டனை (Indefinite Term) அடைந்த ஒரு முன்னாள் சிறைக் கைதி பின் வருமாறு குறிப்பிடுகின்றான் : ‘கால அளவு வரையறுக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டேன். ஓராண்டுக் காலம் வரையில் அதைப்பற்றிப்பேச்சே இல்லை. ஓராண்டு கழிந்த பிறகு நாணய வாக்குறுதியில் விடுதலை அளிக்கும் குழு (Parole Board) அதிக அளவான தண்டனைக் காலத்தைத் தீர்மானித்தது. பிறகு கால அளவைக் குறைத்தது. முதலாண்டுச் சிறைத் தண்டனை, கைதிகளுக்கு நரகமாக விளங்கியது. அதே குற்றத்தைப் புரிந்த மற்றக் கைதிகளின் உச்சகால சிறைத் தண்டனை, பிறகு அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, விடுதலை ஆகியவற்றைப்பற்றி அறிய ஆவல் ஏற்பட்டது. நான் செய்த குற்றத்தையே வேறொரு கைதி செய்துள்ளான். அவனுக்கு ஒன்பதாண்டுக் கடுங் காவல் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவனுக்குப் பழைய குற்றவாளிப் பதிவு உண்டு. இன்னொரு முதன் முறைக் குற்றவாளிக்கு அதாவது ஆயுதம் இல்லாமல் அதே குற்றத்தைப் புரிந்த குற்றவாளிக்கு நான்கு ஆண்டுக் காலம் கடும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நானும், முதல் குற்றவாளி.

ஆனால் ஆயுதத்துடன் உள்ளேன். முடிவாக எனக்கும் 4 முதல் 9 ஆண்டுக்குள்ளாக சிறைத் தண்டனை வழங்கப்படும் என முடிவு செய்துகொண்டேன். சிறையில் எப்பொழுதும் இதையே யோசித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வோர் ஆண்டும் சிறையில் பல மாறுபாடுகள் காணப்பட்டுவந்தன. என் கவலையால் என் தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது.

வேலையில் திறமையற்றவன் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாக நேர்ந்தது. அது என் ஒழுக்கப் பதிவேட்டில் கறையாக அமைந்து விட்டது. இதனால் என் தண்டனைக் காலம் மேலும் அதிகரித்து விடுமோ என்ற அச்சம் குடிகொண்டிருந்தது. விடுதலைக் காலம் வரையறுக்கப்பட்டவுடன் கவலையெல்லாம் பறந்துவிட்டது' என்று கூறியுள்ளான்.

ஆகவே, தீர்மானிக்கப்படாத, கால அளவு வரையறுக்கப் படாத சிறைத் தண்டனை கைதிகளுக்கு அதிக குழப்பத்தையும், மனக் கவலையையும் அளித்து வந்துள்ளது என்பது ஆராயத்தக்க தாகும். இம் முறையில் நன்மையைவிடத் தீமை அதிகமாகக் காணப்படுகின்ற காரணத்தினால் சமுதாயத்திற்கு உகந்ததன்று.

22. குற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

(The Control of Crime)

குற்றத்தைக் கட்டுப்படுத்துதல் அல்லது தடைப்படுத்துதல் என்பது சவால் ஏற்கக்கூடிய பிரச்சினையாக உள்ளது. வெள்ளம் வருமுன் அணை போடவேண்டும். நோயைக் குணப்படுத்துவதை விட நோய் வராமல் தடுத்தல் நல்லதன்றோ. நாட்டில் குற்றம் வளர்வதற்கேற்ற சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டே இருந்தால் குற்றங்கள் தொடர்ந்து புரிந்துகொண்டே இருக்கின்றார்கள். குற்றங்கள் புரிவதற்குப் பல்வேறு காரணக் கூறுகள் என்பது முதல் பாகத்தில் ஆராயப்பட்டுள்ளது. குற்றங்களைத் தடுப்பதற்கான பல்வேறு தண்டனை முறைகளைப்பற்றியும், மற்ற வழி முறைகளைப் பற்றியும் இரண்டாம் பாகத்தில் ஆராயப்பட்டுள்ளது. கடுமை யான தண்டனை வழங்குவதனாலோ அல்லது சீர்திருத்தக் கொள் கையினாலோ அதாவது எளிமையான தண்டனை வழங்கி விடுவத னாலோ குற்றங்கள் தடுக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரம் இன்னும் குற்றங்கள் தொடர்ந்து புரிந்து கொண்டிருப்பதுதான். குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன என்பதற்குக் குற்றப் புள்ளி விவரங்களே சிறந்த சான்றாகும். மக்கள் தொகைப் பெருக்கமும் குற்ற விகிதங்கள் அதிகரித்திருப் பதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். பழங்காலக் குற்றங்கள் மறைந்து காலத்திற்கு ஏற்றவாறு புதிய குற்றங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. பழங்காலத்தில் இருந்த குற்ற இனம் (Criminal Tribes) இக்காலத்தில் இல்லை. இதற்கு ஆட்சியின் மாற்றம் முழு காரணமாகும். ஆனால் அதே இனமக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் வருகின்றார்கள். ஆனால் 'குற்ற இனம்' என்ற பெயரினால் அல்ல. அவர்களுக்குப் புதிய பெயர்களும், புதிய வாழ்க்கை முறைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இன்று இந்தியாவில் குற்ற இனங்கள் (Criminal Tribes) இல்லை. அவர்களின் இனத்தின் பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டு விட்டன. ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலைகள் மாற்றப்படவில்லை. 'சட்டத்தின் முன் அனை

வரும் சமம்' என்ற கொள்கை சட்டத்தில்தான் கொள்கையளவில் போற்றப்பட்டு வருகின்றதே தவிர செயலளவில் சமமாகக் கருதப் படவில்லை. வாய்ப்பும் வசதிகளும் அளிக்கப்படவில்லை. அதே பழைய கால வாழ்க்கை மாற்றம், ஏமாற்றம் இவை தாம் இன்று சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்தியா சுதந்திரம் அடைந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தியா வில் காணப்படும் மேடு பள்ளங்களைப்போலவே மக்களின் வாழ்வும் காணப்படுகிறது. இந்தியாவில் மட்டும் அல்ல. அமெரிக்கா, உருஷியா (Russia), இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மனி, கனடா, பிரான்சு, சீன (China), இலங்கை போன்ற பல்வேறு நாடுகளிலும் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இன்னும் நீக்கப்படாமல்தான் இருக்கின்றன.

நாட்டில் நாளுக்கொரு சட்டம் வீதம் இன்று உலக நாடுகளில் இயற்றப்பட்டு வருகின்றன. இப்படிச் சட்டங்கள், கட்டுப்பாட்டு வழிமுறைகள், கண்காணிப்புகள் இவை அதிகமாக அதிக மாகக் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்பதுதான் பொருள். 'நேர்மை நெறியை' மீருத வரையில் கட்டுப்பாடு தேவையற்ற தாக இருக்கின்றது. உணவுப் பொருள்களைப் பாதுகாக்காத வரையில், கள்ளக் கடத்தல் செய்யாத வரையில், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் தேவையில்லாமல் இருக்கின்றது (Maintenance of Internal Security Act). உணவுப் பதுக்கலும், கள்ளக் கடத்தலும் மலிந்துவிட்டால் அதைத் தடுக்கச் சட்டம் தேவைப் படுகிறது. நகர்ப்புறச் சொத்துகளுக்கு (Urban Property) உச்ச வரம்பு இல்லாத வரையில் மக்கள் முடிந்த வரையில் சேர்த்து விடுகின்றார்கள். அதனால் நாடே பாதிக்கப்படும்போது அதைப் பிடுங்குவதற்குச் சட்டம் இயற்ற வேண்டியுள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியாவில் எத்தனையோ சட்டங்கள் இயற்றப் பட்டுவிட்டன. வருமான வரி, விற்பனை வரிச் சட்டங்கள், வணிக வரிச் சட்டங்கள், இவையும் தவிர, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டங்கள் பல உள்ளன. வெறும் சட்டங்களை இயற்றி விடுவ தனால் மட்டும் நாட்டில் குற்றங்களை அகற்றிவிட முடியுமா? குற்ற வாளிகள் தோன்றாமல் செய்துவிட முடியுமா? ஆகவே அடிப் படைக் காரணக் கூறுகளை ஆராய்ந்து அறிந்து குற்றங்கள் புரிவதற் கான சூழ்நிலைகளைக் களைந்தெறிய வேண்டும். இரும்புப் பெட்டி யில் பணத்தைப் போட்டுப் பூட்டி வைத்தால்தானே திருடன் அல்லது கொள்ளைக்காரன் இரும்புப் பெட்டியை உடைத்துப் பணத்தைத் திருடுகின்றான். அந்தப் பெட்டியில் பணம் இல்லை யென்றால் அந்த இரும்புப் பெட்டியை ஏன் எடுக்கின்றான்? அதை ஏன் உடைக்கின்றான்? மேலும் அவன் தேவைக்குப் பணம் இருந்

தால் திருடுவதற்கு, கொள்ளையிடுவதற்கு ஏன் முற்படுகின்றான்? அவனால் உழைக்க முடியாதா? உழைக்க வாய்ப்பு இல்லையா? உழைத்தாலும் போதிய ஊதியம் வழங்கப்படவில்லையா? அவன் பணத்தை எவ்வழியில் செலவிடுகின்றான்? அவனைச் சார்ந்துள்ளவர்கள் எத்தனைபேர்? அவர்களின் நிலைமை என்ன? தேவைக்காகத்தான் திருடுகின்றானா? அல்லது பழிவாங்கும் நோக்கத்தோடு குற்றத்தில் ஈடுபடுகின்றானா? அவனுடைய நோக்கம், செயல் ஏன் குற்றத்தில் ஈடுபட்டது. நாட்டின் நன்மையை ஏன் அவன் எண்ணிப் பார்ப்பதில்லை. சமுதாயத்தை ஏன் பழிவாங்க முற்படுகின்றான். அவன் சமுதாயத்தை விட்டு விலகிப் போய் விட்டானா அல்லது சமுதாயம் அவனை விலக்கிவிட்டதா? நிகழ் காலம் குற்றம் புரிவது என்றால் அவன் எதிர் காலம் என்ன? அவனுடைய வாழ்க்கை, இலட்சியம், நோக்கம் குற்றம் புரிவதாக இருந்தால், அவனைச் சார்ந்துள்ள உறவினர்கள் வாழ்க்கை நிலையென்ன? அவர்களின் நோக்கம், செய்யும் தொழில், செய்ய முற்பட்ட செயல், அவர்கள் சமுதாயத்தை நோக்கும் பார்வை, சமுதாயம் அவர்களை நோக்கும் பார்வை ஆகிய பல்வேறு காரணக் கூறுகள் இணைந்துள்ளன ஒவ்வொரு குற்றவாளியின் வாழ்க்கையிலும். ஆகவே வெறும் சட்டம் இயற்றுவதனாலோ அல்லது கடுந்தண்டனை வழங்குவதனாலோ குற்றங்களைத் தடுத்து விடலாம் என்று கருதினால் அது பகற் கனவு போன்றதாகும். அப்போதைக்குக் குற்றத்தைத் தடுத்துவிட்டதாக எண்ணம், பிரமை தோன்றலாம். அதே நேரத்தில் பல்வேறு இடங்களில் பலவேறு குற்றங்கள் புரியப்பட்டு வருகின்றன. பொதுவாக, குற்றங்கள் புரியப்படுவதற்கு யார் காரணம்? மனித இனம் தவிர மற்ற உயிரினங்கள் தவறு செய்வதில்லை. தவறு செய்யவும் தெரியாது. ஆறறிவு படைத்த மனிதன், நன்மை, தீமை ஆராய்ந்தறியக்கூடிய மனிதன் தான் குற்றம் புரிகின்றான். அதிலும் வேடிக்கை, பாதுகாப்பு வேண்டும் என்று கருதுகிறவன் தான் மற்றவன் செயலைக் குற்றம் என்று கூறுகின்றான். அவனைப் பொறுத்த வரையில் நேர்மையான செயல் ‘தனக்கு இலாபம் கிடைக்கப் பாடுபடும் செயல்’ என்று கூறுகின்றான். ‘தேவை ஆகவே எடுத்துக்கொள்கிறேன்’ என்கிறான் குற்றவாளி. உணவுத் தானியங்களைப் பதுக்கி வைப்பது அவனின் சொந்த நலனுக்காக, அவனுடைய பரம்பரைக்காக அவன் செய்யும் முன்னேற்பாடு என அவன் கருதுகின்றான். ஆனால் சமுதாயம் அவன் செயலைக் குற்றம் எனக் கூறுகிறது. அவனைக் குற்றவாளி என அழைக்கிறது. அவன் கைது செய்யப்பட்டாலும் அவனைச் சமுதாயம் பழிக்கிறது. கைது செய்யப்படாத வரையில் அவனைத் போற்றிப் புகழ்கின்றது. ஆதரவு கொடுத்த சமுதாயமே அவனைத் தூற்றுகிறது. குற்றம்

புரியும்போது அவனுக்கு ஆதரவாக இருக்கிறது. அத்துடன் அவனை வெறுப்பதற்குப் பதில் நேசிக்கிறது.

இன்று பல குற்றவாளிகள் திரும்பத் திரும்ப குற்றம் புரிபவர்களாக (Recidivists) விளங்குகின்றனர்கள். ஒரு முறை தண்டனை அடைந்தவன் தண்டனையை எண்ணி மறுபடியும் குற்றம் புரியாமல் இருப்பதில்லை. மீண்டும் மீண்டும் அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்கின்றான். அவனுக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும் அவன் திருந்துவதாகத் தெரியவில்லை. அதற்காகத்தான் பழங்காலத்தில் திருடினால் கைகளை வெட்டி விடுவதன் மூலம் தண்டனை அளிக்கப்பட்டது. இதனால் அவன் திருட முடியாமல் ஆக்கப்பட்டான். திரும்பத் திரும்ப குற்றம் புரிபவனாக மாறுவது தடுக்கப்பட்டு வந்தது. அதே போன்று வன்புணர்ச்சிக் குற்றம் புரிந்தவனுக்கு விரையடிக்கப்பட்டது (Sterilization), (Castration). கொலைக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. ஆக அக்காலத்தில், தற்காலத்தில் இருக்கும் பலமுறை தவறு புரிந்தவர்களைப் (Recidivists) போல் இல்லை. அவர்களை இருக்க விடவில்லை. குற்றவாளிக்கு நெற்றியில் சூடும் போடப்பட்டது. இதனால் மற்றவர்கள் எளிதில் புரிந்து கொண்டு எச்சரிக்கையுடன் இருக்க வாய்ப்பு இருந்தது. அந்தக் கால அநாகரிகமான, கொடூரமான தண்டனைகள் இப்பொழுதுள்ள நிலைமைக்கு உகந்தவை அல்ல. எனவே அவை நீக்கப்பட்டுவிட்டன. அன்றைய நாளில் பலதரப்பட்டமக்கள் வாழ்ந்தார்கள். உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனச் சட்டத்தில் வேறுபாடு காட்டப்பட்டு வந்தது. ஆனால் இக்காலத்தில் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. மன்னர்களை மறைத்துவிட்டது, அல்லது மன்னர்களை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது சமுதாயம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று அழைக்கப்படுகின்றதே தவிர, அடிப்படை வாழ்க்கையில் மாற்றம் இல்லை. ஆகவே தொடர்ந்து மக்களில் பலர் குற்றங்கள் புரிந்துவருகின்றனர். புரையோடிவிட்ட புண்ணுக்கு மேலே மருந்து தடவிக் குணப்படுத்த முயல்வது போன்று அடிப்படை வாழ்க்கை வசதிகள் இல்லாத ஏழை மக்களை 'மன்னர்கள்' என்று வாயால் அழைப்பதனாலேயே தரத்தை உயர்த்திவிடப்படுகிறது, பழைய சமுதாயக் கட்டு திட்டங்கள் இன்றும் சமுதாயத்தில் நிலவி வருகின்றன. அதே வீடு, அதே இடம், அதே உணவு, அதே வாழ்க்கை முறை, கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கை நரகமாக அமைந்துள்ளது. அன்றும் இன்றும் கிராமப்புறமானாலும், நகர்ப்புறமானாலும் ஏழை மக்கள்

வாழும் பகுதிதான் குற்றப் பகுதிகளாக (Crime Areas) விளங்கி வருகின்றன எனக் குற்றப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. மொத்த குற்ற விகிதத்தில் 50 சதத்துக்கு மேல் அந்தக் குற்றப் பகுதிகளிலிருந்துதான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும் குற்ற விகிதம் அறிவிக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல, மேலை நாடு களிலும், கீழை நாடுகளிலும் இதே நிலைமைதான் காணப்படு கின்றது. உலக நாடுகளில் குற்றங்களைக் கட்டுப்படுத்த பல புதிய புதிய குற்றச் சட்டங்களை இயற்றிக் கொண்டு வந்துள்ளதே தவிர ஏழை மக்களின் வாழ்க்கை உயருவதற்காக உலக நாடுகளில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சில நாடுகளில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை உண்மையான பலனை அளித்து வருகின்றனவா என்பது ஐயந்தான். 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்பது தமிழ்ப் பழமொழி. பசியால் வாடும் ஏழை எதை எண்ணி அமைதியடைய முடியும்? குற்றச் சட்டத்தின் கடுமையையா? அல்லது தண்டனையின் கொடுமை யையா? அல்லது மானத்தைப் பற்றியா? அல்லது பசியின் கொடுமையைப் பற்றியா? அல்லது சமுதாயத்தின் மயான அமைதியையா? ஏழைகள் பசியால் வாடுகின்றார்கள் என அறிந்தும் அறியாமல் மயான அமைதி கொண்டிருக்கும் சமுதா யத்தையா? அல்லது அதை நடத்திச் செல்லும் அரசை எண்ணிப் பயந்து அமைதியாக இருப்பானா? எதை எண்ணுவான் என்று கற்பனை செய்ய முடியாது. அவன் நிலையில் வாழ்ந்து பார்த்தால் தான் உண்மையை அறிய முடியும். எத்தனையோ நூற்றாண்டுகள் உருண்டோடிவிட்டன. எத்தனையோ ஆட்சிகள் மாறி வந்து விட் டன. எத்தனையோ சமுதாயங்கள் அழிந்து மறுபடியும் வளர்ந்து விட்டன. ஆனால் அன்றிலிருந்து இன்று வரையில் நாட்டில் வறுமை மறையவில்லை. ஏழைமை நீங்கவில்லை. ஏழை மடியவில்லை. புதிய சமுதாயம் உருவானாலும், அல்லது உருவாக்கப்பட்டாலும், அத்துடன் வறுமையும், ஏழைமையும் கொண்ட மக்கள் தோன்றி விடுகின்றார்கள். சட்டத்தாலும் வறுமையைப் போக்க முடிய வில்லை. புரட்சியாலும் வறுமை நீக்கப்படவில்லை. சட்டங்கள் நிறைவேற்றப்படுவது எல்லாம் சமுதாயத்தின் ஒரு சிலரின் பாது காப்பிற்காகவே பயன்பட்டு வந்துள்ளது. சட்டம் ஏழைக்கு ஆதரவாக இருந்ததாகச் சரித்திரம் இல்லை. சட்டத்தைப் பயன் படுத்துகின்றவர்களும் பயனற்றதாக்கப்படுகின்றவர்களும் சமுதா யத்தில் உள்ள ஒரு சில பிரிவினர்கள்தாம். சட்டம் ஒரு சிலருக்குச் சாதகமாகவே இருந்து வருகின்ற காரணத்தினால்தான் இன்னும் குற்றங்கள் தொடர்ந்து புரியப்பட்டு வருகின்றன.

தொற்று நோயாளியைப் பிரித்துத் தனிமையில் வைப்பதைப் போன்று குற்றம் புரிந்தவர்கள் குற்றத்தை உணர முடியாத

வர்கள், சமுதாயத்தைப் பழிவாங்கத் துடிப்பவர்கள், திருந்தாத கைதிகள், வெறிகொண்ட குற்றவாளிகள், சமுதாயத்துடன் இணைந்து வாழ விரும்பாதவர்கள், குற்றத்தால் பேரும் புகழும் பெற விரும்பும் குற்றவாளிகள், ஆகிய மனப்பான்மை, ஒழுக்கம், நடத்தை, போக்கு, தன்மை, தரம் கொண்ட குற்றவாளிகளைச் சமுதாயத்திலிருந்து நீக்கித் தனிமையான இடங்களில் குடி வைத்தல். இம் முறையை உலக நாடுகள் அனைத்தும் செய்து வருகின்றன. ஆனால் புற்றீசல்போல, குற்றவாளிகள் சமுதாயத்தில் வெளி வந்துகொண்டேயிருக்கிறார்கள். குற்றவாளிகள் துன்பப் படவேண்டும் என்று கருதி அதற்காகச் சட்டம் இயற்றிச் செயற் படுத்திவந்தார்களே தவிர, குற்றவாளிகளின் துயர்களை ஆராய்ந்து துயர் துடைக்கச் சட்டங்கள் இயற்றப்படவில்லை. இயற்றினாலும் அது அவர்களுக்குப் பயன்பட வழிகாணவில்லை.

வறுமையின் காரணக் கூறாகக் குற்றம் புரிபவர்களின் நிலைமை முழுவதும் ஆராய்ந்து அதற்குரிய பரிகாரம் தேடினால்தான் அவர் களின் குற்றவொழுக்கத்தையும் குற்றச் செயல்களையும் தடுக்க முடியும். வெறும் கடுஞ்சட்டங்களோ தண்டனைகளோ தடுத்து விட முடியாது, வறுமையற்ற சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அன்றுதான் குற்றமற்ற சமுதாயத்தைப் பார்க்க முடியும், அமைக்க முடியும்.

சந்தர்ப்ப வசத்தால், உணர்ச்சிக் கொந்தளிப்பால் குற்றம் புரிபவர்கள். அவர்கள் தங்களின் குற்றச் செயலுக்காக எண்ணி வருந்துவார்கள். இவர்களின் பழி உணர்ச்சி அடங்கிவிட்டது. பிறகு அவர்கள் சமுதாயத்துடன் இணைந்து வாழ விருப்பம் உடையவர்கள். இவ்வகையான குற்றவாளிகள் சமுதயாத்தில் வாழ விரும்பும்போது அதற்கு ஊக்கம் கொடுத்து அன்புடன் ஆதரிக்கவேண்டும். குற்றவாளி, கைதி என்ற கறையைப் பெரிது படுத்தாமல் வாழ்வு அளிக்க வேண்டும். இவ்வகையாகக் குற்ற வாளிகள் மீண்டும் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுவதைத் தடுத்து விடலாம். அவர்களின் மனத்தைப் பக்குவப்படுத்த தக்க பயிற்சி அளிக்கப்படவேண்டும். மனிதப் பிறவிகள் அனைத்தும் வாழப் பிறந்தவர்கள், அழியப் பிறந்தவர்கள் அல்லர் என்ற உண்மையை உணர்த்தவேண்டும்.

சமுதாயத்தைப் பழி வாங்கத் துடிக்கும் சில குற்றவாளி களின் போக்கை அறிந்து கொண்டு அவர்கள் குற்றம் புரிய வாய்ப்பு அளிக்காமல் முன் எச்சரிக்கையுடன் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நவீன காலக் குற்றத் தடுப்பு

முறைகளைக் கையாளுதல், குற்றவாளி அறிவியல் சார்ந்த கருவிகளையும் நுட்பங்களையும் பயன்படுத்த முற்படும்போது காவல் துறையினர்களும் அதே வழியைப் பின்பற்றிக் குற்றத்தைத் தடுக்கவேண்டும். அரசியல் போராட்டங்கள், மாணவப் போராட்டங்கள், திருவிழாக்கள் போன்ற காலங்களில் பெயரெடுத்த குற்றவாளிகளை முன் கூட்டியே கைது செய்து விடுவதன் மூலமாகப் பெரிய அழிவையும், கொள்ளையையும், தீயிடுதலையும், கொலைகள் நடப்பதையும் தடுக்கலாம். பொது மக்களின் கடமை, பொறுப்பு மிக அதிகமாகும். காவல் துறை, நீதிமன்றங்கள் ஆகியவை குற்றங்களைத் தடுக்கவும், தண்டனை வழங்கவும், செயற்பட்டு வந்தாலும் பொது மக்கள் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கும், குற்றத்தைத் தடுப்பதற்கும், முழு ஆதரவும் அளிக்க வேண்டும். பொது மக்களின் மறைமுகமான ஆதரவினால்தான் குற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கள்ளச் சாராயம், பரத்தைமை, சூதாட்டம், கள்ள கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு முழு ஆதரவு அளிப்பது பொது மக்கள்தான். பொது மக்கள் ஆதரவு இல்லையென்றால் இவ்வகையான குற்றங்கள் நிகழ்வதற்கு ஆதாரமே இல்லை. கள்ளச்சாராயத்தை வாங்குபவர்கள் யார்? சூதாட்டத்தில் பணத்தைப் பறி கொடுப்பவர்கள் யார்? பரத்தையர்களிடம் செல்பவர்கள் யார்? கடத்தல் பொருள்களை வாங்குவது யார்? பொது மக்கள் தானே? குற்றவாளிகள் சட்டத்திற்கு முரணான செயல்களினால் பெருத்த இலாபத்தை அடைகின்றார்கள். அதற்கு ஏமாந்து பலியாகின்றவர்கள் பொதுமக்கள்தான். கள்ளச் சாராயம் விற்றாலும் பரத்தையர்களே அழைத்தாலும் சூதாடும் வசதி இருந்தாலும் அங்கே பொதுமக்கள் பங்கு எடுத்துக் கொள்ள வில்லை என்றால் அவர்கள் தாங்களாகவே கள்ளச் சாரயம் விற்பதை நிறுத்திவிடமாட்டார்களா? பரத்தையருக்கு வருமானம் இல்லை என்றால் வேறு தொழிலில் ஈடுபட்டுப் பொருளீட்டவேண்டிய கட்டாயத்துள்ளாக்குகின்றார்கள் அல்லவா? அதே போன்று தான் கள்ளக் கடத்தல்காரர்கள், உணவுப் பதுக்கல்காரர்கள் ஆகியோர்களின் நிலைமையும் பொதுமக்களைப் பொறுத்து தான் அமைந்துள்ளது. கள்ளக் கடத்தல் பொருள்களை வாங்கவும், பதுக்கல் உணவுப் பொருள்களை வாங்கப் பொது மக்கள் மறுத்துவிட்டாலும் அவர்கள் ஏன் கள்ளக் கடத்தல் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்ததைப்போலவும், ஆட்டைத் தோளிலே வைத்துக்கொண்டு ஊரெல்லாம் ஆட்டைத் தேடிய கதை மாதரியும் அல்லவா இருக்கிறது. பதுக்கலைத் தடுக்கவும், கள்ளக் கடத்தலை ஒழிக்கவும் சட்டம் போடு என்று கூறுவதும்.

கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கூறுவதும் பொதுமக்கள் தங்கள் கடமையை உணர்ந்து. நாட்டின் அமைதி, பாதுகாப்பு சட்டம், அமைதி, ஒழுங்கு யாவும் பாதுகாக்கப் பொது மக்கள் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். குற்றச் செயல்களினால் பொது மக்களும் இலாபம் பெற விழைகின்றனர்கள். குற்றத்தை நேரடியாக ஏற்றுக்கொள்ளும் தைரியம் இல்லாத காரணத்தினால் அவர்கள் மறைமுகமாக குற்றவாளிக்கு ஆதரவு கொடுக்கின்றனர்கள். திருட்டுப் பொருள்களை மார்வாடிகளோ மற்றவர்களோ வாங்க முன்வரவில்லையென்றால் பாதித் திருட்டுக்குமேல் உடனடியாகக் குறைந்துவிடும். திருட்டுப் பொருள்களைக் கால் விலைக்கும், அரை விலைக்கும் வாங்கி அதன் மூலம் இலாபம் தேடப் பலர் தயாராக காத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் சட்டங்கள், கட்டுப்பாடுகள், எவ்வளவு விதித்தாலும் அவையும் மீறப்பட்டுக் குற்றம் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. குற்றம் புரிவதிலும் அதற்கு ஆதரவு கொடுப்பதிலும் பங்கெடுத்துக்கொள்ளாத சில பொதுமக்களுக்கு நன்கு தெரியும். இருந்தும் அவர்களைப்பற்றிக் காவல் துறை அதிகாரிகளிடம் கூறுவதே கிடையாது. நமக்கென்ன என்று தெரிந்தும் தெரியாத மாதிரி போய்க்கொண்டு இருக்கின்றனர்கள். குற்றவாளியைப்பற்றி வெளியே கூறினாலும் தனக்கு ஆபத்து வந்து விடும் என்ற அச்சம், பயத்தின் காரணமாகவும் பார்த்தும் பார்க்காத மாதிரி போய் வருகின்றனர்கள். குற்றவாளியைப் பிடித்துக் கொடுக்கும் பொது மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க உறுதி அளிக்கப்படவேண்டும். அத்துடன் அவர்களின் நற்செயலுக்காக அதிக வெகுமானம் (Award) தொகையாக அளிக்கப்படவேண்டும். இதனால் பொது மக்கள் ஊக்குவிக்கப் படலாம். தற்போது அளித்து வரும் பாதுகாப்பும், வெகுமானமும் ஊக்குவிப்பதாக இல்லை. சில குற்றங்களைத் தடுக்க அரசாங்கம் சட்டம் போட்டால் மட்டும் போதாது. கள்ளக் கடத்தல், பதுக்கி வைத்தல் ஆகிய குற்றங்களைத் தடுக்க நாட்டில் பொது மக்கள் விரும்பும் வண்ணம் பொருள்களை உற்பத்தி செய்து மலிவான விலையில் உயர்ந்த பொருள்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். உயர்ந்த பொருள் மலிவான விலையில் எளிய முறையில் வாங்குவதற்கு வசதியளிக்கப்பட்டால் பொது மக்கள் கள்ளக் கடத்தல் சாமான்களை வாங்க முன்வரமாட்டார்கள். அவசியமான பண்டங்கள் எளிய முறையில் நியாயமான விலைக்குக் கிடைக்கும்படி செய்வதனால் உணவுப் பதுக்கல் செய்ய யாரும் முற்படமாட்டார்கள். இலாபத்தைக் கருதியே அவ்வாறு செய்யப்படுகிறது. இலாபம் கிடைக்காத மாதிரி செய்துவிட்டால்

அவர்கள் ஏன் பதுக்கி வைக்கின்றனர்கள்? இவர்கள் சமுதாயத்தைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தினால் செய்வதில்லை. இரட்டிப்பு இலாபம் பெற வேண்டும். சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றுச் செல்வாக்குடன் வாழ ஆசைப்படுவதுதான். ஆகவே நாட்டில் பற்றுக்குறை, வறுமை, தரமற்ற பொருள்கள் ஆகிய நிலைமை நீடிக்கின்ற வரையிலும், தரமான பொருள்களை எளிதில் வாங்க முடியாத நிலைமை சமுதாயத்தில் இருக்கின்ற வரையிலும் நாட்டில் கள்ளக் கடத்தல், பதுக்கிவைத்தல் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும்.

இறுதியாக பொதுமக்களுக்கு ஒழுக்கத்தை, கட்டுப்பாட்டை, நாட்டுப்பற்றை ஊட்டவேண்டும். சுதந்திரப் போராட்டக் காலங்களில், சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்து, சுதேசிப் பொருளை உபயோகிக்கப் பயிற்சி அளித்தார்கள். அன்னியப் பொருள்களை வாங்க மறுத்துவிட்டார்கள். வாங்கியவர்கள் அத்துணிகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் விட்டனர். அதே நாட்டுப் பற்றையும் கடமையையும் ஊட்டவேண்டும். அவ்வாறு செய்யப்பட்டு விட்டால் நாட்டில் கள்ளக் கடத்தல், கள்ளச் சாராயம், பதுக்கி வைத்தல், சூதாட்டம், பரத்தைமை, திருட்டுப் பொருள்களை வாங்குதல் போன்ற எண்ணற்ற குற்றங்கள் தடுக்கப்படலாம். இதிலும் சிறிது ஐயம் உள்ளது. மக்களின் வாழ்க்கைக்குப் போதிய அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் வழங்கி வந்தால் தான் பொது மக்கள் ஒழுக்கத்தைப் பற்றியோ, நாட்டுணர்ச்சியைப் பற்றியோ நினைத்துப் பார்ப்பார்கள். இல்லையென்றால் தன் வயிற்றுக் கவலையால் நாடே பறிபோனாலும் அமைதியாகத்தான் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அதன் எதிரொலிதான் இன்றும் சிலர் வெள்ளையன் ஆட்சியைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றனர்கள். அல்லது வெளிநாட்டின் ஆட்சியைப் போற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் தேசியப் பற்று பெருகுவதற்குப் பதில் மாநிலப் பற்று பெருகி விடுவதனால் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் சென்று வாழ்பவர்கள் வாழும் மாநிலங்களில் பற்றோடு வாழ்வதனால் அந்த மாநிலத்தின் செல்வத்தைச் சுரண்டி எடுத்து கொண்டு போய்விடும் போக்காக இன்று காணப்படுகிறது. வெளி மாநிலத்தில் வாணிகம் புரியும்போது குற்றச் செயல்களின் மூலமாக கொள்ளை இலாபத்தை அடைந்து வருகின்றனர்கள். வந்த சிறிது காலத்திற்குள் மாட மாளிகைகள். நவீன கால வசதிகள் இப்படி வசதியைப் பெருக்கிக் கொள்ளும்போது காலமெல்லாம ஒரே வாழ்க்கையை வாழ்ந்து வரும் அதே மாநிலத்தைச் சார்ந்தவர்கள்

வந்தவர்களைப் பார்த்துக் குமுறுகின்றார்கள். விரட்டியடிக்க முற்படுகின்றார்கள். வந்த புதிதில் ஆதரவு கொடுத்தவர்கள் பிறகு வெறுப்பதற்கு யாது காரணம்? குறுகிய காலத்தில் குற்ற வழிகளில் செல்வத்தைக் குவித்து விட்டதை எண்ணித்தான். இந்த நிலை இன்று இந்தியா முழுவதும் காணப்படுகின்றது. இதனால் வந்தேறிகளுக்கும், வாழ்ந்து வருபவர்களுக்கும் பகை, போராட்டம் தொடர்ந்து வருகின்றன. இதனால் பல குற்றங்கள் புரிவதற்கு ஏதுவாகின்றன. சமுதாயத்தில் இனப் பகை, கொள்கைப் பகை, போராட்டம், கலகம் ஆகியவற்றிற்குக் காரணக் கூறுகளாகின்றன.

காவல் துறையினர்களின் கடமை (The Duties of the Police)

சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாத்துச் செயற்படும் துறை காவல் துறையாகும். ஆனால் காவல் துறையினர் தங்களின் கடமைகளைச் செவ்வனே செய்வதில்லை. வீதியைக் கூட்டுவோர், கழிவுப் பொருள்களை அகற்றுவோர் (Scavenger) தங்கள் கடமையை ஒரு நாளைக்குச் செவ்வனே செய்யவில்லையென்றால் அழகிய நகரம் நரகமாக அல்லவா மாறி விடும்? அவர்களின் கடமையின் உணர்வும், செழுமையும். சோம்பேறித் தன்மையின் போக்கும், உடனுக்குடன் வெளிப்பட்டு வருகின்றது. இதனால் அவர்கள் தங்களின் கடமையைத் தவறுவதற்கு முடிவதில்லை, ஆனால் காவல் துறையினர்கள் கடமை தவறுதலின் எதிரொலி உடனடியாகப் பொது மக்களுக்கு, மலம் நாறுவதைப் போன்று தெரிவதில்லை. சிறிது ஆராய்ந்தால்தான் காவல் துறையினர்களின் கள்ளப் போக்கு வெளிப்படும். குற்றத்தைத் தடுக்கவேண்டியவர்கள் அதற்கு மறைமுகமாக ஆதரவு அளித்து வருகின்றார்கள். தங்களின் சுய இலாபத்தைப் பார்க்கின்றார்களே தவிர, சமுதாயத்தின் நன்மையைப் பார்ப்பது இல்லை. சட்டம் அவர்கள் கையிலே உள்ளது. அதை வைத்துக் கொண்டு தான் தங்களின் நன்மையைத் தேடிக் கொள்கின்றார்கள். கிராமப் புறமாகட்டும் நகர்ப்புறமாகட்டும் கூச்சல், குழப்பம், சண்டை நடந்தாலும் காவல் துறையினர்கள் அவர்களிடத்தில் முறையீடு செய்யாத வரையில் கண்டும் காணாமல் போய் விடுகின்றார்கள். அப்படியே முறையீடு செய்தாலும் உடனடியாகக் குற்றம் நடக்கும் இடத்திற்கு வந்து தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை. இரு தரத்தாரின் பலத்தைப் பார்த்து அவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இது நிலத் தகராறு, வழித் தகராறு, இதற்கும் எனக்கும் தொடர்பு இல்லை. நீங்கள் உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறிச் சென்றுவிடுவார்கள். அதே நிலை நீடித்து அடுத்த நாளோ

அல்லது ஒரு வாரம் கழித்தோ ஒருமாதம் கழித்தோ அந்த இரு பிரிவுக்குள் ஒரு கொலைக் குற்றம் நடந்து விடும். பிறகு காவல் துறையின் உயர் அதிகாரிகள் உட்பட பலநாட்கள் அங்கே தங்கி இருப்பார்கள். பெரிய உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற பிரமையை அந்த இடத்தில் ஏற்படுத்திவிடுவார்கள். வழக்கு முறையீடு செய்த போதே சாதாரணமாக இரண்டு அதிகாரிகள் அவர்களின் குறைகளை விசாரித்து நேர்மையான ஒரு முடிவு அளித்து இரு தரப்பினர்களையும் விசாரித்து நேர்மையான ஒரு முடிவு அளித்து இரு தரப்பினர்களையும் சமாதானப்படுத்தி விட்டிருந்தால் அங்கே ஒரு கொலை நடப்பதற்கே சூழ்நிலை தோன்றியிருக்காது. மனித உயிரும் பறிக்கப்பட்டு இருக்காது. அத்துடன் பகுதியின் அமைதியும் சீர்கெட்டிருக்காது. பெரும்பாலான கொலைக் குற்ற வழக்கு இத்தன்மைத்தாய்க் காணப்படுகிறது. மேலும் சிறு சண்டையைப் பற்றிக் காவல் துறையிடம் முறையிட்டால் 'போய் வெட்டிவிட்டு வா பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறி அனுப்பி விடுகின்றனர்கள். சொத்துத் தகராறு, சிறு சண்டைகள், குழப்பம், இருபிரிவினர்கள் பகைமைச் சண்டை, உடல் உறவு தகராறுகள் ஆகியவை ஆரம்பத்தில் சிறு பூசல்களாக காணப்படுகின்றன. பிறகு அதுவே வெடித்துக் கொலைக் குற்றத்தில் முடிவடைந்து விடுகின்றது. பல கொலைக் குற்ற வழக்குகளை ஆராய்ந்ததில் மேற்கூறப்பட்ட உண்மை புலனுகின்றது. சில வேளைகளில், அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் குறுக்கிட்டாலும் சில வகையான குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை. காவல்துறை சமுதாயத்தின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட துறை என்பதை மறந்து ஒரு சிலரின் விருப்பு வெறுப்பிற்காகவும் செயற்பட்டு வருகிறது. இந்த நிலை மாறவேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது சட்டத்தில் கூறப்பட்டிருந்தால் மட்டும் போதாது. அதைத் தீவிரமாகச் செயற்படுத்தவும் வேண்டும்.

மீண்டும் குற்றஞ் செய்யத் தலைப்படும் பான்மை (Recidivism)

பல நாடுகளின் குற்றப் புள்ளி விவரங்களை ஆராய்ந்து நோக்கும்போது புதிய குற்றவாளிகளைவிடப் பழைய குற்றவாளிகள் தான் மீண்டும் மீண்டும் குற்றம் புரிந்து வருகின்றதாக அறிய முடிகின்றது. திரும்பக் குற்றஞ் செய்யத் தலைப்படுவோர்களைச் (Recidivists) சீர்திருத்தம் செய்து, அவர்களின் குற்றவொழுக்கத்தைத் திருத்தி நல்லொழுக்கமாக மாற்றிவிட்டால் நாட்டில் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்து விடுவதுடன் குற்றங்களின் எண்ணிக்கை விகிதங்களும் குறைந்துவிடும். 'தலைக்குமேல் சாண் போனல் என்ன? முழம் போனல் என்ன?' என்ற அடிப்

படையில் ஒருமுறை குற்றம் புரிந்தவர்கள் சிறைக்குச் சென்று வந்தவர்கள் அடுத்தடுத்து, மீண்டும் மீண்டும் குற்றங்களைப் புரியத் தயங்குவதில்லை. கைது, நீதி மன்றம், சிறைத் தண்டனை, சிறை, ஆகிய அனுபவங்கள் உண்டாகிவிட்ட காரணத்தினால் மீண்டும் கைது செய்யப்படுவதைப் பற்றியோ, குற்ற விசாரணை நடத்தப் படுவதைப் பற்றியோ, சிறை செல்வதைப் பற்றியோ வெட்கப் படுவதோ, வேதனைப்படுவதோ, நாணச் செய்வதோ இல்லை. திருடன் என்ற பெயர் எடுத்தபின்பு மீண்டும் திருடன் என்று தான் கூறுவார்கள். ஒருமுறை திருடிவிட்டு மறுமுறை திருடாமல் நேர்மையாக வாழ்ந்தாலும் 'திருடன்' என்றுதான் சமுதாயம் அழைக்கும். ஆகவே ஒருமுறை தண்டனை அடைந்தவன் பலமுறை குற்றங்கள் புரியத் தயங்குவதில்லை என்பதற்குக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களே ஆதாரமாகும்

அமெரிக்காவில் 1958-ல் 67 சதம் குற்றவாளிகள் ஏற்கெனவே குற்றங்களுக்காகத் தண்டனை வழங்கப்பட்டவர்கள். 32 சதம் மூன்று முறை அல்லது அதற்குமேலும் தண்டனை அடைந்தவர்கள். அதேபோன்று 1956-57-ல் ஆண் குற்றவாளிகளில் 5 சதம் ஏற்கெனவே குற்றம் புரிந்தவர்கள். பெண் குற்றவாளிகளில் 37 சதம் ஏற்கெனவே சிறைத் தண்டனை அடைந்தவர்கள். மேற் கூறப்பட்டவர்களில், குறைந்தது ஒரு கடுங்குற்றத்தையாவது (Felony) புரிந்துள்ளார்கள். மசாசுசட்சில் (Massachusetts) 1957-ல் 72 சதம் முன்பே சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பப் பட்டவர்கள். இதிலிருந்து குற்றத்தில் ஊறியவர் மீண்டும் குற்றம் புரியத் தயங்குவதில்லை என்பது வெளிப்படையாகும், சமுதாயம் குற்றவாளிகளை வெறுப்பதும் ஒரு காரணமாகும். குற்றவாளி களுக்குச் சமுதாயத்தில் வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை. குற்ற வாளி, திருடன் எனக் கூறி எதிலும் வேலையில் அமர்த்திக்கொள்வ தில்லை. நான்கு நாளைக்கு இப்படியும் அப்படியும் திரிந்து பார்க் கின்றான். இறுதியில் குற்றச் செயலில் வேறு வழியின்றி ஈடுபடு கின்றான். மீண்டும் மீண்டும் குற்றங்கள் புரியப்படுவது பல்வேறு காரணக் கூறுகளினால் ஆகும். குற்றவாளிக்குத் தன் வறுமையின் காரணமாகவோ அல்லது ஏமாற்றத்தின் காரணத்தாலோ அல்லது தன் பண்புக் கூறுகளினாலோ அல்லது மற்றச் சூழ்நிலைகளின் வற்புறுத்தலினாலோ திரும்பத் திரும்ப குற்றங்களைப் புரிய வாய்ப் புண்டு.

திரும்பக் குற்றஞ் செய்யும் தன்மையானது சமுதாயத்தின் மனப்பான்மையைப் பொறுத்துள்ளது. ஆனால் குற்றவாளி களின் பண்புக் கூறுகளைப் பொறுத்தும், சமுதாயச் சுற்றுச் சூழ்

குற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

நிலைகளைப் பொறுத்தும் குற்றவாளிகள் தொடர்ந்து குற்றம் புரிந்து வருகின்றார்கள் என்பது மட்டும் உண்மை. குறைந்த குற்றப் பகுதிகளில் வாழும் குற்றவாளி, நல்லொழுக்கம் உள்ள குடும்பங் களில் வளர்க்கப்பட்டவர்கள், வாழ்க்கை வசதிகள் நிறைந்த வர்கள், ஆகிய சூழ் நிலைகளில் வளர்ந்தவர்கள். வாழ்பவர்கள். குற்றம்புரிந்து விட்டால், அவர்கள் சீர்திருந்த அறிவுரைகள் வழங் கப்பட்டால் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவது அபூர்வ மாகும். திரும்பத்திரும்ப குற்றங்கள் புரியவிழைவதில்லை. வாழ்நாள் முழுவதும் குற்றவாளிகளாகவே வாழவேண்டும் என்று எண்ணுவ தில்லை. சிறுவர்களாக இருந்தாலும் அவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி நல்லொழுக்கத்தில் நாட்டம் கொள்ளச் செய்யலாம்.

திரும்பத் திரும்ப குற்றங்கள் புரிபவர்கள் பெரும்பாலும் மோசமான குற்றங்கள் நிறைந்த பகுதிகளில் வளர்க்கப்பட்டவர் களாகவும், கைவிடப்பட்ட குடும்பங்களில் இருந்து வந்தவர்கள், தீயொழுக்கம், குற்றத்தன்மை. ஆகியவை சர்வசாதாரணமாக விளங்கும் குடும்பங்களால் வளர்க்கப்பட்டவர்கள், சட்டத்திற்கும். சமுதாயத்திற்திற்கும் கட்டுப்பட்டு அஞ்சி நடக்கும் மக்கள் வாழும் பகுதியைவிட்டுத் தனிமையான பகுதியில் வளர்க்கப்பட்டவர்கள், பெற்றோர்கள் குற்றவாளிகளாக விவங்கியுள்ளவர்களின் பிள்ளைகள் ஆகியோர்கள் மீண்டும் குற்றஞ் செய்யத் தயங்குவதில்லை. எவ்வளவுதான் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டாலும் மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளால் வளர்ந்தவர்கள் குற்ற வொழுக்கத்திலிருந்து திருந்துவதில்லை எனச் சதர்லாண்டு (Southerland) கூறுகின்றார். ஆனால் அவர்கள் திருந்தாத நிலைக்கு அடிப்படைக் காரணம் அவர்களின் வறுமையான வாழ்க்கைத் தரம் தான். வசதியுள்ளவன் ஒரு தரம் குற்றங்கள் புரிந்துவிட்டால் மறுதரம் குற்றம் புரிவதில்லை, ஏன்? வாழ்க்கை வசதிகள், கௌரவம் ஆகியவை குறைவதில்லை. வசதியுள்ளவன் குற்றம் புரிந்து தண்டனை அடைந்து வந்தாலும் சமுதாயம் அவனைக் குற்றக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதில்லை. பழைய கௌரவம், மரியாதை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மேல் நிலையில் வாழ்பவர்கள் ஒருமுறை குற்றம் செய்து விட்டால் மறுமுறை அதே குற்றத்தைச் செய்வதில்லை. அப்படிச் செய் தாலும் அவர்களைக் கைது செய்வதில்லை. ஏழை பரத்தைமைத் தொழிலில் ஈடுபட்டால் அவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். ஆனால் பணக்காரி, மாடிவீட்டில் பரத்தைமைத் தொழில் செய்தால் அதைச் சமுதாய நாகரிகம், கபடமற்ற, கரவு இல்லாத வாழ்க்கை, அன்பின் பெருக்கு எனப் பல புனைபெயர்கள் வைத்து மரியாதையுடன் அழைக்கப்படுகின்றார்கள். மேலும் பணக்காரப்

பெண்கள் பரத்தைமை புரிந்தால் காவல் துறை அதிகாரிகளும் கைது செய்ய முன்வருவதில்லை. அவர்கள் கைது செய்யப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் பரத்தைமைத் தொழில் செய்யவில்லை என்று கூறமுடியுமா? சமுதாயத்தில் மேல் நிலையில் வாழும் மக்களிடையே பரத்தைமை, பிறன்மனை புணர்தல், மது அருந்துதல் ஆகிய குற்றங்கள் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வரும் செயல்களாகும். ஆனால் அதைச் சமுதாயத்தின் மாற்றம், நாட்டின் சின்னம் என்று கூறுகின்றார்கள். இது இந்தியாவில் மட்டும் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லை. அமெரிக்காவிலும் காணப்படுகிறது. அமெரிக்காவில் வெள்ளையனைவிட நீக்ரோ அதிக அளவில் திரும்பக் குற்றஞ்செய்யத் தலைப்படுவோர்கள் காணப்படுகின்றார்கள். சிறுமிகளைவிடச் (Girls) சிறுவர்கள் (Boys) திரும்பக் குற்றஞ்செய்யத் தலைப்படுவோர் அதிகமாகக் காணப்படுகிறது. அதேபோன்று கிராமப் புறங்களில் வாழ்பவர்களைவிட நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் மீண்டும் குற்றம் புரிபவர்களாக காணப்படுகின்றார்கள் என ஆராயப்பட்டுள்ளது.

பழக்கம் உண்டாகிவிடுதல் (Habit Formation)

மனிதன் பழக்கத்திற்கு அடிமையாகிவிடும் இயல்பு உடையவன். ஆதலால் நல்ல பழக்கங்களுக்கு அடிமையானவன் செத்தாலும் தீய ஒழுக்கத்தில் ஈடுபடமாட்டான். அதே போன்று குற்றவொழுக்கத்திற்கு அடிமையானவன் உயிர் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது என்றாலும், துணிவுடன் ஏற்றுக் குற்றஞ் செய்து பெருமை கொள்வான். இதன் அடிப்படையிலும் திரும்பக் குற்றம் செய்யும் தன்மை அமைகின்றது. மயக்க மருந்து உட்கொள்ளுதல், மதுஅருந்துதல் ஆகியவற்றை மனிதன் பழக்கமாகக் கொண்டுவிட்டால் நாளடைவில் அதற்கு அடிமையாகிவிடுகின்றான். அவற்றை உட்கொள்ளவில்லையென்றால் உடலில் சிறிது மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகவே கருதுகின்றான். அவற்றை உட்கொள்ளாததனால் உடல் நலம் பாதிக்கப்பட்டுவிட்டது எனக் கருதுகின்றான். கடும் சட்டம் போட்டாலும் அதைமீறி அவற்றைப் பெற்று உண்பதில் மகிழ்ச்சியடைகின்றான். அதை உட்கொண்ட பிறகு அவன் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறான். அதே போன்ற கெட்ட பழக்கத்திற்கு அடிமையாவது, சூதாட்டம், பரத்தைமை ஆகியவையாகும். 'பாக்குக் கடிக்கும் நேரத்திற்குள் ஒரு வேசி தன் தொழிலை முடித்து விடுவாள்' என்பது பழமொழி. ஒரு விபச்சாரியைக் காவல் நிலையத்தில் காவல் வைத்தாலும் அங்கேயும் தன் தொழிலைத் தரமாகச் செய்யும் தனித்தன்மை பெற்றவள் அவள். அதே போல்

சூதாட்டம் ஆடுபவர்கள் சிறையில் அடைக்கப்பட்டாலும் அங்கேயும் சூதாடத் தவறமாட்டார்கள். அவர்கள் இருக்கும் இடத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எங்கே இருந்தாலும் அவர்களின் பழக்கத்தை விடக்கூடாது என்ற கொள்கை உடையவர்கள். கொலையே நடந்தாலும் சூதாடுவதை நிறுத்த மாட்டார்கள், தொடர்ந்து ஆடும் இயல்புடையவர்கள். மது அருந்துபவர்கள், மது எப்படி இருக்கின்றது என்று ஆராயமாட்டார்கள். மது என்றவுடன் அவர்களின் 'நா' ஊறுகின்றது உடனே குடித்துவிடுகின்றார்கள். மதுவின் தரம், தன்மையை ஆராயாமல் குடித்து இறந்தவர்களின் பட்டியல் அடிக்கடி செய்தித்தாளில் வந்து கொண்டே இருக்கின்றது. சாவதேயானாலும் மது அருந்தி விட்டு இன்பமாகச் சாவும் மனம் படைத்தவர்கள் அதிகம் உள்ளனர்.

அவர்களைச் சீர்திருத்துவது தண்டனையால் முடியாது. அவர்களின் உள்ளத்தைப் பண்படுத்துதல் வேண்டும். ஆரோக்கியத்தோடு வாழ்ந்தால் மேலும் பல காலம் வாழலாமல்லவா? என அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அல்லது அவர்கள் கெட்டுப் போனாலும் பாதியில் இறந்துபோனாலும் அவர்களின் இளைய தலைமுறைகளையாவது அதில் ஈடுபடாமல் பாதுகாக்க வேண்டும். சிறு வயது முதல் மதுவின் கொடுமையை, கெடுதியை எடுத்துக் கூறவேண்டும். பொதுவாக மது, பரத்தைமை, சூதாட்டம் ஆகியவற்றிற்கு அடிமைப்பட்டவர்கள் தங்கள் சொத்துக்கள் முழுவதையும் அழிப்பதுடன் இறுதியில் திருட்டுக் குற்றத்தில், ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப் படுகின்றார்கள். இவர்களைத் தனியான இடத்தில் வைத்து வலுவான உணவுச் சத்துகள் அடங்கிய உணவைக் கொடுத்து உடல் சக்தியுள்ளதாக மாற்றப் பட வேண்டும். பிறகு ஆரோக்கியமான வேலைகளில் ஈடுபடுத்தி நன்னெறியில் திருப்புதல் வேண்டும்.

சில பகுதிகளில் மக்கள் தனித்து வாழ்வதனாலும் அனைவரும் வறுமையில் வாழ்ந்து வருவதனாலும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் காணப்படுவதனாலும் குற்றங்கள் திரும்பத் திரும்ப புரிந்து வருகின்றார்கள். தீயவொழுக்கம் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் அதில் சிறந்து விளங்குவதனால் போற்றப்படுகின்றார்கள் குற்றச் சட்டத்தில் சிறந்து விளங்குபவன், குற்றம் புரிவதில் திறமை உள்ளவன் ஆகியோர்களை இச்சமுதாயம் போற்றுகின்றது. அதன் காரணமாகக் குற்றங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. குற்றப் பகுதியில் வாழும் சிறுவர்கள் மீண்டும் மீண்டும் குற்றம் புரியும்படி ஊக்குவிக்கப்படுகின்றார்கள், மேலும் அடிக்கடி குற்றம் புரிவதனால் காவல்துறையினர்களுக்கும்

குற்றவாளிகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. சட்டம், அமைதி, ஒழுங்குகளைப் பாதுகாக்கும் பிரிவு காவல் துறை அதிகாரிகள், குற்றவாளிகள் திருந்தி ஒழுக விரும்புவதில்லை. அவர்கள் தொடர்ந்து குற்றவொழுக்கத்தில் ஈடுபட்டு வந்தால் தான் அவர்கள் குற்றப் பதிவுகளில் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாக்கவும் முடியும். வாழைக்காய்த் திருடனை நெல் திருடிய தாக ஒப்புக்கொள்ளச் செய்து அவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனை கிடைக்க ஏற்பாடு செய்து விடுவார்கள். வாழைக் காய்த் திருடன் அகப்படாமல் போனால் வழக்கு (முறையீடு) தொடுத்தவர், செய்தவர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர் களாக இருந்தால் மேற்கூறப்பட்ட மாதிரியாக வழக்கைச் சோடனைச் செய்து முடித்து விடுகின்றார்கள். சிறையில் இருக்கும் போதுதான் சிறை அதிகாரிகளும் நன்னடத்தைச் சோதனை அதிகாரிகளும் சீர்திருத்த நடவடிக்கைகளைப் புகட்டுகின்றார்கள். ஆனால் விடுதலையாகி வெளியில் வந்தவுடன், அவர்களை நல்லொ ழுக்கத்தில் ஈடுபட, காவல் துறை அதிகாரிகள் உட்பட யாவரும் ஊக்குவிப்பது இல்லை. இதனால் குற்றவொழுக்கம் தொடர்ந்து விடுகின்றது. இதனால் குற்றவாளிகள் வாழும் பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பகுதிகளில் இளங் குற்றவாளிகள், வயது வந்த குற்றவாளிகள் ஆகியோர்கள் மலிந்து காணப்படுவார்கள். முதியவர்களின் குற்றவொழுக்கமும் குற்ற உத்தியும் ஆகியவை இளைஞர்களுக்கு எளிதில் பரவிவிடு கின்றன. சாதாரணமாகச் சிறு சிறு திருட்டுகளில் ஈடுபடுவது, துறைமுகங்களில் புகுந்து ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களைத் திருடுதல், நெருக்கமான வணிகர் வீடுகளில் புகுந்து கொள்ளை அடித்தல் ஆகியவை தினமும் நடந்துவரும் குற்றங்களாகும்.

மனக் குறைபாடு, பைத்தியம், பைத்தியம் சார்ந்த சிறப்புக் குணங்கள், உணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாமை, மூளை முரண்பாடு, தன்னல வேட்கை வெறி, ஆகிய உள்ளம், உடல் மனக் குறைபாடுகளினாலும் குற்றங்கள் திரும்பத் திரும்ப புரியப் பட்டு வருகின்றன.

இவர்களுக்குத் தக்க சிகிச்சையளித்து உளக் குறை பாட்டை, உடல் குறைபாட்டை, மூளை முரண்பாட்டைக் குணப்படுத்துவதன் மூலமாக அவர்கள் தொடர்ந்து குற்ற வொழுக்கத்தில் ஈடுபடுவதைத் தடுக்கலாம். அவர்கள் தொடர்ந்து உடற்பயிற்சிகள் செய்யவும், வசதி அளித்தல் வேண்டும். இதனால் அவர்களின் உடல் ஊனக் குறைபாடுகள் நீக்கப்படலாம். குற்றவாளிகளைத் திருத்தவும், அவர்களுக்கு மறு

சீரமைப்பு வாழ்க்கை வசதிகள் அமைத்துக் கொடுக்கவும் போதிய வசதிகளும் சூழ்நிலைகளும் அமையாத காரணத்தினுல்தான் குற்ற வாளிகள் தொடர்ந்து குற்றங்கள் செய்து வருகின்ருர்கள். கைதேர்ந்த குற்றவாளிகளால் நேர்மையான பணிகளில் ஈடுபட முடிவதில்லை. சிறிது வாய்ப்பு கிடைத்தாலும் அதைப் பயன் படுத்தி குற்றத்தைப் புரிந்துவிடும் வல்லமை படைத்தவர்களாக விளங்குகின்ருர்கள். அவர்களின் தனித்திறமை அவர்களை மேலும் ஊக்குவிக்கின்றது. காவல்துறை நிலையங்கள், தக்க பாதுகாப்பு உள்ள இடங்களில் திருடுவதையோ கொள்ளையிடுவதையோ அவர்கள் தங்களின் திறமையை வெளிப்படுத்த விழைகின் ருர்கள். இதனுல் குற்றப் பழக்கத்திற்கும் குற்றப் புகழுக்கும் அடிமையாகி விடுகின்ருர்கள். பலமுறை சிறை சென்று வருவ தையும் மிகவும் வீரமாகக் கருதுகின்ருர்கள். அதிக எண்ணிக் கையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் அவர்களுக்கு உண்டு. இவர்களை முதலில் தனிமைப்படுத்தி வைத்தல் வேண்டும். சமுதாயத்தை விட்டு ஒதுக்கி வைத்துவிட்டு, கடுமை யான வேலைகளை வழங்கவேண்டும். அவ்வாறு கடுமையான பணியைச் செய்யத் தூண்டுவதோடல்லாமல் நன்ருக உணவும் வழங்கவேண்டும். குற்றத்தை மறக்கச் செய்ய கடுமையான உழைப்பு ஒன்றே நல்ல வழியாகும். உழைப்பின் உயர்வைப் பற்றியும் உழைப்பால் உயர்ந்த தலைவர்களைப் பற்றியும் எடுத்துக் கூறி, முயன்ருல் சமுதாயத்தில் போற்றத்தக்க மனிதனுக முடியும். முயன்ருல் முடியாததொன்றில்லை என்பதை எடுத்துக் கூற வேண்டும். குற்றவாளி தானே குற்றத்தை மறக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். தன்னைப்பற்றி உணரச் செய்தல் வேண்டும். எண்ணிப் பார்க்க முடியாதவன்தான் தன் குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகின்ருன் என்பது உண்மை. ஆகவே தனிமை ஒருவனைச் சிந்திக்க வைக்கிறது. சிந்திக்கத் தெரியா தவன் மனிதனே அல்ல. சிந்தனையில்தான் தியானம் பிறக்கிறது. எணண அலைகள் உருவாகின்றன. சிந்தனை, குற்றத்தை நினைத் துப்பார்க்க வைக்கிறது. மனம் குற்றத்திற்காக வருந்துகிறது. வள்ளுவரும்,

'எண்ணித் துணிக கருமம்'

எனக் கூறியுள்ளார். 'எண்ணி' என்ருல் 'எண்ணம்'. அந்த எண் ணத்தைப் பலமுறை எண்ணிப் பலமுறை ஆராய்ந்து இறுதியில் முடிவு செய்து பிறகு செயற்பட வேண்டும். இதையேதான் குற்ற வாளிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். குற்றவாளிகளைத் தனிமைப் படுத்தி சிந்திக்க வைத்து வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும் நிலைமை உண்டாக்கப்பட்டுவிட்டால், எப்படியும் வாழலாம்

என்பதை மறந்து இப்படித்தான் வாழவேண்டும் என்ற தெய்வீகத் தத்துவத்தை உணர்வான். ஆகவே கைதேர்ந்த குற்றவாளிகளும் குற்றத்தைக் கைவிட்டு நல்லொழுக்கத்தில் ஈடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை. தனிமைப்படுத்தி விட்டாலும் போதாது. குற்றவாளியின் சிந்தனையை, எண்ணத்தைத் தூண்டக்கூடிய கருத்தினைக் கூறுவதற்கு ஏற்ற திறமையானவர்களை நியமித்தல் வேண்டும். கடுந்தண்டனையால் சாதிக்க முடியாததைக் கருணையால், அன்பான வார்த்தையால், சாதிக்கமுடியும். ஆனால் தனிமைப் படுத்தி வைக்கப்படுவதனால் குற்றவாளிகளின் நிலைமை மேலும் மோசமான நிலை அடைந்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். தனிமை என்றாலே சமுதாயத்தை விட்டு ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என்பதல்ல. சமுதாயத்திலே அன்புடன் கட்டுப்பாட்டுடன் கூடிய பணியில் ஈடுபடுத்துதல்வேண்டும் என்பதாகும். அடுத்து, குற்றவாளிகளுக்கு மதப்பற்று, நீதிக் கதைகள், சத்திய வாக்குகள். விவேகானந்தர், வள்ளுவர், ஔவையார், இளங்கோ, கம்பன், பாரதி, பாரதிதாசன் போன்றவர்களின் அரிய கருத்துக்களின் தொகுதிகளை வழங்கி அதைப்படித்து உணரும்படி செய்தல், கடவுள் வழிபாடு, கடவுள் நம்பிக்கை உள்ளவர்களானால், கீதை உபநியாசங்கள், பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள நன்னெறிக் கருத்துக்களைத் தொகுத்து அவற்றைப் படித்துப் பின்பற்றும்படி வற்புறுத்தல், தெய்வ நம்பிக்கை உள்ளவர்களைத் தெய்வத்தின்மீது ஆணையிட்டு குற்றம் புரியாமல் இருக்கும்படி செய்தல், பகுத்தறிவுவாதியாக இருந்தால் தாயின் மீது அல்லது தாய் மொழியின்மீது அல்லது அவன் வணங்கும் தலைவன்மீது ஆணையிட்டுத் தீயசெயல்களில், குற்றவொழுக்கத்தில் ஈடுபடமாட்டேன் என்று ஆணையிடச் செய்தல், சமுதாயத்திற்கு விரோதமான முரணான செயல்களில் ஈடுபடமாட்டேன் என்ற கொள்கையைப் பெற்றுவிடுதல், நீதி, நேர்மை, நியாயம், நல்ல தீர்ப்பு, நடுநிலைமை, அறம் வழுவாமை, நீதி தவறினால் அறம் கொல்லும் என்று அறக் கட்டளைகளைப் புகட்டுதல், அதன்படி ஒழுகும்படி இளைஞர்களைத் தூண்டுதல், முற்பகலில் குற்றம், தீயசெயல், ஆகியவற்றில் ஈடுபட்டால் அதன் பிரதிபலன் பிற்பகலில், கடுந்தண்டனை கிட்டுமன்றோ என்ற தத்துவத்தை உணர்த்தல், நாட்டுப்பற்றுக் கொள்ளும்படித் தூண்டிக் குற்றவொழுக்கத்திலிருந்து விடுபடச் செய்தல், சட்டம், நீதிமன்றம், சிறைத் தண்டனை ஆகியவை சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட கட்டு திட்டங்களாகும். ஆகவே சமுதாயத்துடன் ஒட்ட ஒழுகாதவன் அறிவிலி, முட்டாள் எனக் கருதப்படுவான். தீயவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதுதான் சட்டம். மற்றக் கட்டுப்பாட்டு முறைகளும், நல்லவர்களுக்கும் அவற்றிற்கும் தொடர்பே

இல்லை. பிறப்பால் யாரும் குற்றவாளிகளாகவோ அல்லது அறிஞர்களாகவோ பிறப்பதில்லை. எல்லாம் அவரவர் ஒழுக்கத்தினால் விளைவதேயாகும். ஒருவன் குற்றத்தால் அவன் பரம்பரையே பாதிக்கப்பட்டு விடுகின்றது. அதைப் பாதுகாப்பது ஒவ்வொருவருடைய முதல் கடமையாகும். உயிரைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. ஒழுக்கத்தைப் பற்றித்தான் சமுதாயம் கவலைப்பட்டுள்ளது. பழிக்குப் பழி வாங்குவதைவிட எதிரியை மன்னித்துவிட்டால் அவன் மிகவும் உயர்ந்தவனாகக் கருதப்படுகின்றான். அடக்கம் ஆயிரம் பொன். அடங்காமை ஆயுளைக் குறைத்துவிடும். எளிமையில் பொருளீட்டி வாழும் வாழ்வைக் காட்டிலும் உடலால் உழைத்து வரும் ஊதியத்தால் வாழும் வாழ்க்கை இன்பமானது; தன்மானம் உள்ளது; அச்சமில்லாத, களவு இல்லாத ஒரு தன்மான வாழ்க்கையாகும் என்று கூறினால் அது மிகையாகாது. வறுமையில் வாழ்ந்தாலும் பரிபூரண சுதந்திரம் உண்டு. கையில்லாத, காலில்லாத, கண்ணில்லாத நிலையில் உள்ளவர்களும் இன்று அவர்களின் திறமைக் கேற்ப உழைத்து நேர்மையான, அஞ்சாத வாழ்க்கை, வாழ்ந்து வரும் போது கை, கால்கள். ஆகியவை இருந்தும் குற்றம் புரிவதனால் பிறருக்குக் கட்டுப்பட்டு அடைபட்டுக் குருடராய் வாழும் நிலையை ஏன் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்? வறுமையைப் போக்க, துன்பத்தைப் போக்க, வருவாயைப் பெருக்க நேர்மையான வழிகள் இருக்கும்போது தீயவழிகளில் ஏன் செல்லவேண்டும்? வழங்கப்பட்ட உரிமைகளைப் பெறுவதற்கும் அறவழிகளை அல்லவா நாடவேண்டும். அறவழியில் போராடினாலும், புரட்சி செய்தாலும் அதைச் சமுதாயம் வரவேற்கும். எதையும் தாங்கும் இதயத்துடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ முற்பட வேண்டும். நேர்மையைப் பின்பற்றினால் வாழ்க்கையில் தோல்வி கிடையாது என்று பல அறநெறி உரைகளை இளங் குற்றவாளிகளுக்கும் குற்றவாளிகளுக்கும், அவர்களுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அறநெறிகளுடன், வாழ்க்கையில் இலட்சியம், கொள்கை, குறிக்கோள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டு அந்த இலட்சியத்திற்காக, கொள்கைக்காக, குறிக்கோளுக்காகத் தன் உடல் பொருள் ஆவி அத்தனையும் பயன் படுத்தவேண்டும். இளைஞர்களுக்கு இலட்சியம், குறிக்கோள், கொள்கை மிகவும் அவசியம் வாழ்க்கையின் பயன், இலட்சியம் இன்னது என்பதை வரையறுத்துக்கொண்டு அதற்காக அஞ்சாது செயற்படவேண்டும். வாழ்க்கையின் நோக்கத்தைத் தீர்மானிக்கவேண்டும். நோக்கமில்லாத வாழ்க்கை கொள்

கையில்லாத வாழ்க்கை, இலட்சியமில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையல்ல. புலி கூட ஒரு இலட்சியத்தோடுதான் வாழுகின்றது. புலி பசித்தால் புல்லைத் தின்னுவதில்லை. உடம்பில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாக் கவரிமான் போல் நாமும் மானத்தோடு வாழவேண்டும். கொள்கையில்லாத வாழ்க்கை, கரையில்லாத ஆறு. இலட்சியம் இல்லாத வாழ்க்கை. களர் மண்ணில் விதைத்த பயிர் போன்றதாகும். நோக்கம் இல்லாத வாழ்க்கை பாதையில்லாத வழியின் பயணத்தைத் தொடர்வதைப் போன்றதாகும். கட்டுப்பாடில்லாத வாழ்க்கை காற்றில் வைக்கப்பட்ட அகல் விளக்காகும் என்ற தத்துவங்களைப் பாங்குற எடுத்துக் கூறித் திருடர்களின் மனத்தை மாற்ற வேண்டும். மேலும் நாம் வாழும் நாட்கள் மிகக் குறைவு. அதிலும் இரவு வீணாகக் கழிந்து விடுகின்றது. பகல் ஒன்றில் தான் நம் செயல்கள் அடங்கியுள்ளன. ஆகவே அந்தக் குறைந்த காலத்தையும் சிறையில் இருந்து ஏன் வீண் செய்ய வேண்டும் என்று கூறவேண்டும். இந்தக் குறுகிய காலத்தில் தனக்கோ தன் குடும்பத்திற்கோ தன் தாய்மொழிக்கோ, தன் தாய்நாட்டிற்கோ ஏதாவதொரு நன்மை விளையக்கூடிய நல்ல செயல்களைச் செய்து விடவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டு இலட்சிய வீரனாகத் திகழ வேண்டும் என வற்புறுத்த வேண்டும். இன்று இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் பல மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. அரசியல் கட்சிகளின் பெயரால், இலக்கியங்களின் பெயரால், இலக்கியப் புலவர்களின் பெயரால், அரசியல் தலைவர்களின் பெயரால், சமுதாயச் சீர்திருத்தவாதிகளின் பெயர்களால், நடிகர்களின் பெயர்களால், நடிகைகளின் பெயர்களால் இன்னும் பல எண்ணற்ற மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. மேலும் இன்பப் பொழுதுபோக்கு நண்பர்கள் மன்றம், கூட்டுறவு மன்றம், மகளிர் மன்றம், முதியோர் கல்வி மன்றம், தொழிலாளர் சங்கம், மாணவர் குழு, ஆசிரியர்கள் சம்மேளனம், பக்தியின் பெயரால், கடவுளின் பெயரால் மதத்தின் பெயரால் பல மன்றங்கள் காணப்படுகின்றன. சிறுவர்கள் முதற் கொண்டு பெரியவர்கள் உட்பட ஏதாவதொரு மன்றத்தின் அங்கத்தினர்களாக இருக்க வாய்ப்புண்டு. இன்று சலவைத் தொலாளர் மன்றம், சவரத் தொழிலாளர் சங்கம், விவசாயச் சங்கம், பீடித் தொழிலாளர்கள் சங்கம், கடைநிலை ஊழியர் மன்றம் என்று பல சங்கங்கள் உருப்பெற்று வருகின்றன. நகர்ப்புறமானாலும் கிராமப் புறமானாலும் ஏழை முதல் பணக்காரன் வரையில் ஏதாவது ஒரு மன்றத்தில், அல்லது சங்கத்தில் தொடர்புடையவனாகவே விளங்குகின்றான். இந்த மன்றங்கள் நேர்மையோடும் இலட்சியத்தோடும் செயற்படுமேயானால் இன்று நாட்டில் குற்றங்கள்

புரிவதற்கு, நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லை. வறுமையில் வாடும் ஏழைச் சிறுவன்கூட ஏதாவது ஒரு நடிகர் மன்றத்தின் அங்கத்தினனாகவோ அல்லது அனுதாபியாகவோ இருக்கின்றான். அந்த மன்றம் அவனுக்கு நல்லறிவு, இலட்சியம், கொள்கை, நேர்மையை இளம் வயதிலேயே புகட்டி விடுமேயானால் சிறு வயதிலாகட்டும் வயதுவந்த பருவத்திலாகட்டும் குற்றவொழுக்கில் ஈடுபட வாய்ப்பு இல்லை. மற்ற நாடுகளில் இல்லாத சில நல்ல அமைப்புகள் இந்தியாவில் உள்ளன. ஆனால் அவை எப்படிச் செயற்படு படுகின்றன என்பதுதான் முதற்கேள்வி. சில வேளைகளில் இம் மன்றங்களே குற்றவொழுக்கத்தைப் புகட்டி வருகின்றன. நடிகர் மன்றங்களுக்குள்ளே பகையின் காரணமாக, மற்றொரு நடிகர் மன்ற அங்கத்தினர்கள், அனுதாபிகளைத் தாக்க ஊக்குவிக்கப்படு கின்றார்கள். இதனால் அந்த மன்ற அங்கத்தினர்கள், அனுதாபிகள், உணர்ச்சி வசப்பட்டு குற்றச் செயலில் ஈடுபடுகின்றார்கள். இவர்களின் குற்றச்செயலை மன்றம் அங்கீகரித்து வருவதுடன் அவர்களுக்குப் புகழ்மாலையும் போட்டு மேலும் ஊக்குவிக்கிறது. நல்ல நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட மன்றங்கள் இறுதியில் போராட்ட வீரர்களை உருவாக்கிக் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுத்தி வருகின்றார்கள். அரசியல் தலைவர்கள் இளைஞர்களின் பிற்கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்காமல், தங்களின் சுயநலத் திற்காகப் 'போராட்டம்,' 'புரட்சி' என்ற பெயரால் இளைஞர்களை ஈடுபடுத்திப் பிற்கால வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடுகின்றார்கள். குற்றம் புரிய தைரியம் இல்லாதவர்களுக்கும் தைரியத்தைக் கொடுத்து ஊக்குவித்து குழுவின் ஒற்றுமையால் குற்றவொழுக் கத்தில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இறுதியில் பாதிக்கப்படுவது வளமையான இளைஞர்களின் எதிர்காலம்தான். இன்று நாட்டில் புரியப்பட்டுவரும் குற்றங்கள் மேற்கூறப்பட்ட மன்றங்களில் ஏதாவது ஒரு மன்றத்தினர்களின் அங்கத்தினர்களாகவோ, அல்லது அனுதாபியாகவோ இருக்கக் கூடும். நாட்டில் உள்ள மன்றங்கள் நேர்மையாகவும் நல்லொழுக்கத்துடனும் கட்டுப் பாட்டுடனும் செயற்படுத்தப்பட்டு வந்தால் இளந் தலைமுறை யினர்கள் குற்றவொழுக்கத்தில் இருந்து காப்பாற்றப் படலாம். மன்றங்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதனால் நல்லொழுக் கத்தைப் புகட்டுவதும் மிகவும் எளிது.

வீதியில் திரியும் சிறுவர்களும் நடிகர் மன்றத்துடனோ அல்லது அரசியல் தலைவர் மன்றத்துடனோ அல்லது படிப்பகத்துடனோ தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். அவனுக்கு நன்னெறியையும், இலட்சியத்தையும் கற்றுக்கொடுப்பதுடன் அதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டால் பிற்கால வாழ்க்கையில்

இலட்சியவாதியாகக் காணப்படுவான். ஆனால் அவனை அதே நிலையில் விட்டுவிட்டு அவனுடைய உடல் வலிமையால் மற்றவர்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள். இறுதியில் அவன் குற்றவாளியாக மாறிவிடுகின்றான். அவன் தோட்டத்தின் வேலியாகவே ஆக்கப்பட்டு விடுகின்றான். மற்றவர்கள் தோட்டத்தினுள் மலர்ந்து நிற்கும் ரோஜாச் செடிகளாகக் காட்சியளிக்கின்றார்கள்.

சென்னை மாநகரத்தின் வீதிகளிலே இரவு 10 மணிக்கு மேல் உலாவி வந்தால் நான்கு வயதிற்கும் குறைவான சிறுவர் முதல் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் ஒன்றுகூடி கோல் சண்டை கற்றுக்கொள்வதைப் பார்க்கலாம். எதிர்கால வாழ்க்கைக்கு அது மிகவும் அவசியம் என்று அந்தச் சிறு உள்ளங்களே ஆராய்ந்து வைத்துள்ளது. கோல் சண்டை, குத்துச் சண்டை, கத்திச் சண்டை ஆகியவை குற்றவொழுக்கத்தின் சாயல்களாகும். குத்துச் சண்டை, கோல் சண்டை இவை வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் என்று கருதுகின்றார்கள். ஆனால் நேரிய வாழ்க்கைக்கு, அறவாழ்க்கைக்கு அவை தேவையற்றதாகும். வீதியில் உறங்கும் சிறுவர்கள் மட்டும் இன்று கத்திச் சண்டை, குத்துச் சண்டை ஆகியவற்றைக் கற்று வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. கல்லூரியில் பயிலும் மாணவர்களும் சைக்கிள் செயின், பெல்ட் (Belt), சுருள்கத்தி, அறுவாள் ஆகியவற்றை உடலில் மறைத்து வைத்துக்கொண்டு கல்லூரிக்கு வருகின்றனர். இந்த நிலை இன்று அதிகமாகத் தோன்றியுள்ளது. மேற்கூறிய தளவாடங்கள் கொண்டுவரும் மாணவர்கள் ஏதாவது ஒரு மன்றத்தில் மங்காத உறுப்பினர்களாக இருப்பார்கள். பேனா, புத்தகத்தைச் சுமக்க வேண்டியவர்கள் கத்தியையும் சைக்கிள் செயினையும் தாங்கி வருகின்றார்கள். நல்லொழுக்கம் துலங்கும் இடத்தில் குற்றவொழுக்கம் நிறைய கிடக்கின்றன. நற்செயல்கள் காணப்படுவேண்டிய இடங்களில் குற்றவொழுக்கங்கள் காணப்படுகின்றன. பிறந்த இடம், வளர்ந்த இடம், குற்றவொழுக்கம் இல்லாத இடங்களாக இருந்தாலும் படிக்கவந்த இடங்களில் குற்றவொழுக்கத்தைக் கற்றுக் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவருகின்ற நிலை அதிகரித்து வருகின்றது. இன்றைய குழந்தைகள் நாளைய மாணவர்கள். இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள். இது மறுக்க முடியாத உண்மை. மாணவப் பருவத்தில் குற்றவொழுக்கமும், குற்றச்செயலும் கைவந்த கலையாக, குற்றத்தில் கைதேர்ந்தவர்களாக விளங்கினால் நாளைக்குப் பொறுப்பு அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படும் நிலைமை உருவாகிவிடும்போது, அவர்களிடத்தில் எந்த ஒழுக்கம், எந்தச்செயல் அமைந்திருக்கும் என எண்ணிப் பார்த்தால் நமக்குத்

துன்பமாக உள்ளது. காந்தியை ஒப்பிட்டுப் பேசுபவர்களும் உள்ளனர்; காந்தியிடத்திலும் குற்றவொழுக்கம் நிறைய உண்டு என்பதைக் கூறி குற்றவொழுக்கம் உள்ளவர்கள் ஆறுதல் கொள் கின்றனர். அவர் தனிப்பட்ட நபருக்கோ கட்சிக்கோ இனத் திற்கோ பாடுபடவில்லை. ஆனால் சமுதாய, நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். ஆனால் நாட்டின் பெயரால், இனத்தின் பெயரால், சமுதாயத்தின் பெயரால், மொழியின் பெயரால், போராட்டம், புரட்சி என்று கூறிக்கொண்டு சுய நலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர்கள். மேலும் குடியரசு நாட்டில், வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ள நாட்டில், போராட்டம், புரட்சி, கதவடைப்பு ஆகியவை ஏன்? தலைவர்கள் எளிதில் போராட்டம், கதவடைப்பு என்று அறிக்கை விட்டுவிடுவதனால், அதனால் இறப்பவர்கள் பொதுமக்கள் தானே. போராட்டத்தின்போது இதுவரையில் ஏதாவது ஒரு தலைவர் இறந்து விட்டதாகச் செய்தி உண்டா? இதனால் தலைவர் இறக்க வேண்டும் என்பது இல்லை. தொண்டர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உயிரும் உடைமையும் பாதுகாக்கப்படவேண்டும். மற்றவர்கள் உயிர்த் தியாகத்தில், இரத்த வெள்ளத்தில, பதவி கிடைக்கப் பெற்றாலும் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஐந்தாண்டுக் காலம் பொறுத்தால் ஒரே நாளில் ஆட்சியை மாற்றிவிட உரிமை வழங்கப்பட்டிருக்கும்போது கட்சியின் வளர்ச்சிக்காகத் தொண்டர்களையும் பொது மக்களின் உடைமைகளையும் பலியிட்டு வருகின்றனர்கள் அரசியல் தலைவர்கள். குற்றத்தையே புரிந்தறி யாத இளம் உள்ளங்கள், மாணவர்கள் ஆகியோர் தலைவர்களின் வெறிப் பேச்சினால், போராட்டத்தில் புரட்சியால், கலகத்தில் பங்கு எடுத்துக் குற்றவொழுக்கத்தை ஏற்று, குற்றச் செயலில் ஈடு பட்டு, பொன்னான கல்வியின் காலத்தையும், மண்ணைக்கிப் படிப்பையும் கோட்டை விட்டு 'அரசியல்வாதி' என்ற பெயரோடு சமுதாயத்தில் திரிகின்றனர்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்க முடியுமா? அறிவும், ஆண்மையும், அடக்கமும் இருந்தால்தானே அங்கே நீதி, நேர்மை தழைத்து இருக்க முடியும்.

ஆகவே நாட்டின் குற்றவொழுக்கத்திற்கு அரசியல் தலைவர்களும் காரணமாகின்றனர்கள். அதைத் தடுக்கவேண்டும் என்றால் மாணவர்கள், அரசியல் தலைவர்கள் பின்னால் சுற்றுவதை நிறுத்தி, கல்லூரிகளில் ஒழுங்காகப் படித்து நல்லொழுக்கத்தையும், சீரான கல்வியையும் பெற்று வருங்கால சமுதாயத்தைக் குற்றமற்ற சமுதாயமாக உருவாக்கப் பாடுபட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசியல் தலைவர்கள்,

ஆகியோர்கள் பொறுப்பேற்று மாணவர்கள் சிறந்த ஒழுக்கம் உள்ள சீடர்களாக விளங்கப் பாடுபடவேண்டும். இப்படிச் செய்வ தனுல் நிகழ்காலக் குற்றவாளிகளை கட்டுப்படுத்துவதுடன் எதிர் காலத்தில் உருவாகும் குற்றவாளியையும் தடுக்க முடியும். ஒரு நாட்டின் பொற்காலம் என்று எதைக் குறிக்கின்ருேம்? அந்தக் காலத்தில் நேர்மை, வளமை, செழுமை, குற்றமற்ற சமுதாயம், அமைதியான வாழ்க்கை ஆகியவற்றைப் பொறுத்து அமைந் திருக்கும். உலக நாடுகளில் குற்றத்தைத் தடுப்பதற்காகப் பல கோடி ரூபாய் செலவிடப்படுகின்றன. அதனுல் யாது பயன்? உற்பத்தித் தொழிற்சாலையில் முதலீடு செய்தாலும் நாட்டில் பொருளாதாரம் பெருகும். குற்றம் நிகழாமல் தடுக்கப்பட்டு விட்டால் நாட்டில் அமைதி, பொருளாதார வளர்ச்சி ஆகிய வற்றுள் மக்கள் செழிப்புடன் வாழ ஏதுவாகும்.

சிகிச்சை முறையால் குற்றத்தைத் தடுத்தல் (Clinical Methods)

நோய்க்கு மருத்துவ மனையில் சிகிச்சை அளிப்பதைப்போன்று குற்றவாளிக்குத் தனிமையில் அவர்களின் உடல் அமைப்பு, மனப்பான்மை, போக்கு, உள இயல் ஆகியவற்றை ஆராய்ந்து தகுந்த சிகிச்சை அளிக்கப்படவேண்டும். இதனுல் திரும்பக் குற்றத்தில் ஈடுபடாவண்ணம் தடுக்கப்படலாம்; அல்லது உடல் உறுப்புகளின் குறைபாடுகளினுல், உடல் வளர்ச்சியின் மாறு பாட்டால் குற்றவொழுக்கத்தில் ஈடுபடும்போது குற்றவாளியின் உடலை அறுவை சிகிச்சை செய்வதன் மூலமாகக் குற்ற ஒழுக்கம் தடுக்கப்படலாம். எடுத்துக்காட்டு, மூளை அறுவை சிகிக்சை (Lobotomy) ஆண்மைப் போக்கு (Castration) ஆகிய வையாகும். அதே போன்று சுரப்பிகள் சார்ந்த. (Glandular) பணிகளின் மாறுபாடுகளினுல் குற்றவொழுக்கம் காணப்பட் டாலும், அவற்றைச் சரிசெய்து குற்றவொழுக்கத்தைப் போக்க வேண்டும்.

மேலும் குற்றவாளித் தடங்கல் இன்றிப் பேசவும், அச்ச மின்றிப் பழகவும், வாய்ப்பு அளித்து தன் குற்றத்திற்கான காரணக் கூறுகளைக் கூறும்படி வேண்டுதல், அவற்றைக் களைத்தெறிய நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஆய்வில் சிறந்த வொழுககத்திற் குரிய காரணக்கூறுகளைக் கண்டறிந்தால் அதைப் போக்குவதற்கு, அல்லது மாற்றி நன்னடத்தையில் ஈடுபடுத்த முயற்சி மேற் கொள்ளப்படவேண்டும். அடிப்படைக் குற்றவொழுக்கத்திற்கான காரணக் கூறுகளையும் ஆராய்தல் வேண்டும்., உணர்ச்சிக்கு அடிமையாகும் தன்மையைக் கொண்டிருந்தால் அதை உளவியல் சார்ந்த அல்லது உடல் இயல் சார்ந்த அல்லது அறிவியல் சார்ந்த

முறைகளினால் உணர்ச்சி வயப்படுவதனால் உள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி உணர்ச்சி வயப்படுவதைத் தடுக்கவேண்டும். உடல் அமைப்பினால் உணர்ச்சி வயப்படுகின்றான் என்பதை ஆய்வு செய்து அதற்கேற்றவாறு அவற்றைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்வேண்டும். தனிமையில் இருக்கும்போது உணர்ச்சி வயப்படுவதும் உண்டு. கூட்டத்துடன் இருக்கும் போது மட்டும் உணர்ச்சி வயப்படும் தன்மையும் உண்டு. இதனால் தனிமையில் உள்ளவனைக் கூட்டத்துடனும், கூட்டத்துடன் இருந்தால் உணர்ச்சி வயப்படக்கூடியவர்களைத் தனிமைப்படுத்தியும் வைக்கவேண்டும். குற்றக் கூட்டத்தில் இருந்தவன் திருந்தினால், குற்றவொழுக்கம் மறைந்து விட்டால், அவனைச் சமுதாயத்துடன் இணைந்து வாழவழி செய்தல்வேண்டும். சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுகும் மக்களுடன் வாழ வசதி அளித்தல்வேண்டும். பழைய குற்றத்தை மறப்பதற்கும் குற்றவொழுக்கத்தை விட்டுவிடுவதற்கும் நல்லொழுக்கத்தால் மத்தியில் வாழ வசதி செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதனால் திரும்பத் திரும்ப குற்றம் புரிய முற்படுதலைத் தடுக்க முடியும்.

குற்றவாளியைச் சீர்திருத்தம் செய்தலை அல்லது குற்றவொழுக்கத்தைப் போக்கி நல்லொழுக்கத்தை நாடும்படி செய்தால் மற்றக் குற்ற அங்கத்தினர்கள் வெறுப்புத் தெரிவிக்கக்கூடும். எதிர் நடவடிக்கை எடுக்கவும் கூடும். பொதுவாகக் கொள்ளைக் கூட்டத்தாருடன் இணைந்து கொள்ளைக் குற்றம் புரிந்தவனைத் திருந்தி வாழ மற்றவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். திருந்தி விட்டால் மற்றவர்களுக்கு ஆபத்து என்ற காரணத்தினால் மற்றவர்கள் அவனைக் குற்றவொழுக்கத்திலிருந்து விடுபட அனுமதிக்கமாட்டார்கள். திருந்தி வாழ வேண்டும் என்று கூறுபவனைக் கொலைகூட செய்துவிடுவார்கள். அவனைத் திருத்துவதற்கு முதலில் அவனை அந்தக் கூட்டத்திடமிருந்து பிரித்து, அவன் தனித்து வாழச் சமுதாயம் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இறுதியில் அந்தக் கூட்டத்தினர்களையே திருத்துவதற்கு முயலுதல் வேண்டும். இருட்டில் வாழும் இதயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவரவேண்டும். குருடர்களின் கண்களைத் திறந்துவிட வேண்டும். அவர்களை உழைக்கச் செய்து அதன் மூலம் வாழ வைக்கவேண்டும்.

— அடுத்து, ஒவ்வொரு வட்டாரமும் தன் பகுதியில் குற்றங்கள் புரிய வாய்ப்பு அளிக்கக்கூடாது என்ற கொள்கையுடன் செயற்பட வேண்டும். ஒவ்வொரு இனமும், பரம்பரையும் குற்றம் புரியாமல் இருக்க வஞ்சினம், உறுதி மொழி எடுத்துக் கொள்வதுடன் அந்த

இடத்தைச் சார்ந்தவர்கள், பரம்பரையைச் சார்ந்தவர்கள் குற்றம் புரியாமல் தடுக்கவேண்டும். அதற்குத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதற்காகப் பள்ளிகள், கோயில்கள், காவல் நிலையங்கள், சமுதாய நலன் நாடும் நற்கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், கிராமப் பஞ்சாயத்துகள், மற்றும் பல்வேறு பொதுக் குழுக்கள் ஆகியவை குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன் அதன் அங்கத்தினர்களோ அல்லது மேற்கூறப்பட்ட நிறுவனங்களிலோ குற்றம் நிகழாத வண்ணம் கண்காணித்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட குழுக்கள் இப்பணியில் சிறந்த முறையில் செயலாற்றலாம். ஆனால் அக் குழுவின் அங்கத்தினர்களே குற்றச் செயலில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது வருந்தத்தக்க செயலாகும்.

காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், சீர்திருத்தப் பள்ளிகள், சீர்திருத்த இல்லங்கள் ஆகிய நிறுவனங்களுக்குத் திறமை வாய்ந்த பொறுப்புள்ளவர்களை நியமித்தால் வேண்டிய அளவுக்கு குற்றத்தைத் தடுக்க வாய்ப்புண்டு. திறமையின்மை தான் ஊழலுக்கு ஏதுவாகின்றது என்பதை நாம் ஏற்கெனவே ஆராய்ந்துள்ளோம். நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரிகளும் திறமையும் பொறுப்பும் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

எந்தத் துறையாக இருப்பினும் திறமையின் அடிப்படையில் அதிகாரிகளாக நியமிக்கப்படும்போது அதன் நிர்வாகம், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை சிறந்து விளங்கும். திறமையுள்ளவனுக்கு உரிய வாய்ப்பு மறுக்கப்படும்போது, உள்ளக் கொதிப்பால், உணர்ச்சி மேலீட்டால் அவன் குற்றவொழுக்கத்தில் ஈடுபடக் கட்டாயப்படுத்தப்படுகின்றான். அநீதியை அழிக்கவும் நீதியை நிலைநாட்டவும் வன்முறையில் இறங்கி வருகின்றான். அறத்தைக் கொண்டே நீதியை நிலைநாட்ட மறந்து வருகின்றான் உணர்ச்சி வேகத்தில். பல கொலைக் குற்ற வழக்குகளில் ‘குற்றவாளி’ என நிரூபிக்கப்படுவதற்குப் போதிய ஆதாரமில்லை என்ற காரணங்களினால் குற்றவாளிக்கு விடுதலை அளிக்கப்பட்டது. ஆனால் அவனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உடனே அவனைக் கொலை செய்துள்ளார்கள். நீதி மன்றத்தில் நீதி தவறி விடும்போது பாதிக்கப்பட்டவர்கள் அதே குற்றத்தினால் நீதியை நிலைநாட்டுவதாகக் கருதுகின்றார்கள். இதனாலும் சமுதாயத்தில் குற்றங்கள் தொடர்ந்து செய்யப்பட்டுவருகின்றன. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போன்று அல்லவா நீதி வழங்குதல் வேண்டும். ஆகவே காவல் துறை, நீதித்துறை இரண்டும் செவ்வனே செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்

மக்களிடம் நேர்மையுணர்வு உறுதி (Moral Courage) ஊட்டப்படவேண்டும். அப்பொழுதுதான் குற்றத்தைத் தடுக்கவும். குற்றவாளியை வெறுக்கவும் தைரியம் ஏற்படும். அத்துடன் குற்றச் செயல்களினால் செல்வந்தர்களாக மாறியவர்களுக்கு மரியாதை, கௌரவம் அளிக்கமாட்டார்கள். சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டாலும் சமுதாயத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்ற எண்ணம் குற்றவாளிகளுக்கு உண்டாகும் வண்ணம் சூழ்நிலையை உண்டாக்கவேண்டும். குற்றத்தைச் சரிகட்டி விட்டாலும் பொது மக்கள் குற்றவாளியை வெறுத்து, ஒதுக்கவேண்டும். மனம் திருந்தியவனாகக் காணப்பட்டால் தான் அவனைச் சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராம மக்களும் நேர்மை உணர்வு உறுதி உள்ளவர்களாகக் காணப்பட்டால் அந்தக் கிராமத்தில் குற்ற வொழுக்கமும் காணப்படாது; குற்றச் செயலும் நிகழாது தடுக்கப்பட்டுவிடும்.

நகர்ப் புறங்களில் திரும்பத் திரும்ப குற்றம் புரியும் குற்றவாளிகளின் குற்றத்திற்கான காரண காரியங்களை ஆராய்ந்து அறிந்து குற்றவாளியைச் சீர்திருத்தல் முறையை மேற்கொள்ள வேண்டும். நகரங்களில் பல இனம், பல பிரிவு இணைந்து வாழ்வதனால் இனத்தின் அடிப்படையில் சீர்திருத்தவோ, கட்டுப்படுத்தவோ இயலாது. ஆகவே தனிப்பட்ட குற்றவாளிகளை ஆராய்ந்து குற்றவொழுக்கத்தைப் போக்கவேண்டும். குற்றத்தை நீக்க நிபுணர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு (Therapists) அவை சமுதாயத்தில் இயங்கி வருகின்றன. குற்றத்தின் காரணக்கூறுகளை மறைக்காமல் கூறினால்தான் அவர்கள் குற்றவொழுக்கத்தைப் போக்க தக்க பரிகாரம் தேடமுடியும். பல நோக்கங்களுக்காக சாதி அடிப்படையில், இன அடிப்படையில், கட்சி அடிப்படையில், தொழில் அடிப்படையில், தெய்வ வழிபாட்டு அடிப்படையில் கூட்டம் போடுகின்றார்கள்; ஒன்று கூடுகின்றார்கள். ஆனால் அவர்கள் குற்றங்களைக் களைந்தெறிவதற்காக ஒரு கூட்டம் கூட்டப்படுமேயானால் அதிகமான குற்றங்கள் தடுக்கப்படலாம். ஆனால் அந்தக் கூட்டங்களே சில வேளைகளில் குற்றவொழுக்கத்தையும் குற்றச் செயலில் ஈடுபட ஆக்கமும், ஊக்கமும் நல்கி வருகின்றன. நீதிமன்றம், காவல்துறை ஆகிய நிறுவனங்களின் உதவியின்றியே குற்றங்களைத் தடுத்து விட முடியும்.

அரசினர் ஆரம்பப் பாடசாலைகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் ஆகிய பொதுக் கல்வி நிறுவனங்களில் பயிலும் சிறுவர்களாக இருந்தாலும், பெரிய மாணவர்களாக இருந்தாலும் ஒழுக்கீனமாக நடந்து வருவதாகப் பல ஆய்வுரைகள்

கூறுகின்றன. அவற்றின் குறைபாடுகளைக் களைந்தெறிந்து நல்லொழுக்கம் உள்ள மாணவர்களாக விளங்கச் செய்தல்வேண்டும். தனி வீடாக இருக்கும் இடத்தில் வளரும் குழந்தைகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஊருடன் இணைந்துள்ள குடும்பங்களில் வளரும் இளைஞர்களிடத்தில் குற்றவொழுக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. இதே போன்று எந்தக் காட்சியுடனும் அல்லது மன்றத்துடனும் அல்லது படிப்பகத்துடனும் அல்லது மனமகிழ் மன்றத்துடனும் அங்கத்தினர்களாகச் சேராத, அனுதாபிகளாக இல்லாதவர்கள் குறைந்த குற்றவொழுக்கம் உள்ளவர்களாகவும், குறைந்த குற்றவாளிகளாகவும் காணப்படுகின்றார்கள். இதனால் இளைஞர்கள் மற்ற மன்றங்களுடன் அல்லது மாணவர்களுடன் இணைந்து பழகும் வாய்ப்பினால்தான் குற்றவொழுக்கம் அதிக அளவில் பரவியிருக்கிறது என்பதை அறிய முடிகின்றது. தனித்து நிற்கும் போது குற்றம் புரியும் துணிவும் இருப்பதில்லை. கூட்டத்துடன் இணையும்போது மற்றவர்களின் பாராட்டிற்காகவாவது தன் சக்தியையும் மறந்து சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களையும் செய்துவிடும் நிலை உண்டாகிவிடுவதுண்டு. ஒருவன் எளியவனாக, சாதுவாகக் காணப்படுவான். ஆனால் அவன் மற்றச் சிறுவர்களுடன் இணைந்து பழகும்போது முரடனாக, முன்கோபம் உள்ளவனாக மாறிவிடுவதும் உண்டு. ஆகவே பெற்றோர்கள் தான் தங்களின் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களையும் பழகும் இடங்களையும் தெரிந்துவைத்துக் கொள்வதுடன் அவர்கள் நடத்தை, போக்கு, சாயல் இவற்றைக் கண்காணித்து, பாதை மாறும்போது தடுத்து நிறுத்தப்படவேண்டும். எங்கே போகிறாய்? ஏன் போகின்றாய்? எப்பொழுது வருவாய்? போன்ற கேள்விகளைப் பெற்றோர்கள் கேட்காத காரணத்தினாலேயே பல இளைஞர்கள் குற்றவொழுக்கத்தில் ஈடுபட்டுப் பிறகு குற்றவாளிகளாக மாறியுள்ளார்கள். அவன் கூறும் காரணம் உண்மையா அல்லது பொய்யா என்பதையும் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டால் பிறகு அவன் குற்றவாளியாக நிற்பதைத்தான் பார்க்க முடியும். பிள்ளையைப் பெற்றுவிட்டால் மட்டும் கடமை முடிந்து விடவில்லை. அவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் மாற்றுவதும் பெற்றோர்களின் கடமைதான் என்பதை மறந்துவிடக் கூடாது. குயவன் செய்ய வேண்டிய பானையின் அளவை மனத்தில் வைத்துக் கொண்டுதான் சக்கரத்தைச் சுழற்றும் போது அளவோடு சுற்றி நிறுத்தி விடுகின்றான். மண் நிறைய இருக்கின்றதே, சக்கரம் சுழல்கின்றதே என்று சுற்றிக் கொண்டேயிருந்தால் அழகான பானையைச் செய்ய முடியுமா? குற்றமும் மண் போன்றுதான். பிறக்கும்போதே குற்ற வொழுக்கத்

தோடு அல்லது நல்லொழுக்கத்தோடு பிறப்பதில்லை. மண்ணாக இருக்கும்போது எப்படி அது கூஜா, பானை என்று வேறுபடுத்திக் காட்ட முடியாதோ அதே போன்றுதான் குழந்தைகளின் ஒழுக்கங்களையும் வேறுபடுத்திக் காட்ட முடியாது. மற்றவர்களைப் பார்த்துத்தான் கற்றுக் கொள்கிறது குழந்தை. ஆகவே வசதி படைத்தவர்களின் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அவர்களிடத்திலேயே ஒப்படைத்துவிட்டு ஏழை, அனாதை, சிறிய குடும்பங்கள், பெற்றோர்கள் இல்லாத குடும்பங்கள் ஆகிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அரசாங்கமே எடுத்துச் செம்மையான முறையில் வளர்த்து நாட்டுக்கு உழைக்கும் உத்தமர்களாக உருவாக்க முடியும். ஆனால் செவ்வனே செயற்படுத்த வேண்டுமே! முடியுமா? அல்லது சிறுவர்கள் குற்றங்களுக்குப் பெற்றோர்கள் அபராதம் செலுத்த வேண்டும் என்ற சட்டத்தை யாவது செயற்படுத்த வேண்டும். தற்பொழுது கடுமையான நிபந்தனையாகத் தண்டனையாகத் தெரியும், ஆனால் எல்லாப் பெற்றோர்களும் பொறுப்புடன் விளங்கினால் குற்றவாளிகளையோ, குற்றவொழுக்கம் உள்ள குழந்தைகளையோ காண முடியாது. பெற்றோர்களின் பொறுப்பற்ற தான்தோன்றித்தனத்தினால்தான் குழந்தைகள் குற்றவொழுக்கத்தில் ஈடுபடுகின்றார்கள். அரசாங்கமும் பெற்றோர்களுக்குத் தேவையான ஊக்கமும் ஆக்கமும் வழங்கி வரவேண்டும். பெரிய குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடும்போது வருங்காலத்தில் குற்றத்தைத் தடுப்பதற்காக அதற்கு முன் ஆதாரமாக, ஏன், ஒரு பகுதித் தொகை செலவிடக் கூடாது? இங்கிலாந்து (United Kingdom) நாட்டில் ஏழைக் குழந்தைகளுக்கு உதவி அளிக்கச் சட்டம் இயற்றப் பட்டுள்ளதைப்போல இந்தியாவிலும் ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்வதற்காகச் சட்டம் ஏன் இயற்றக்கூடாது? படித்த இளைஞர்கள் வேலையில் சேரும் வரையில் அவர்களுக்கு உதவித்தொகை அளிப்பதன் மூலமாக இளைஞர்கள் குற்ற வொழுக்கத்தில், குற்றச் செயலில் ஈடுபடுவது தடுக்கப் படலாம். 'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்' என்பதைப் போல படித்த இளைஞர்கள், பலர் மத்தியில், படித்த ஒருவன் குற்றச் செயலில் ஈடுபடும்போது மற்றவர்கள் தரம் பாதிக்கப்படுகின்றது. ஒரு அயோக்கியன் பல இளைஞர்களைக் கெடுத்து விடவும் வாய்ப்புண்டு. கள்ளம் கபடமற்ற குழந்தை ஏழையின் இல்லத்தில் பிறந்ததனால் ஏன் துன்பப்படவேண்டும்? சுற்றுச் சூழ்நிலையால், குற்றக் கூண்டில் ஏன் நிற்க வேண்டும்? பகுத்தறிவு பறைசாற்றும் இந்தக் காலத்தில் 'தலைவிதி' (Fate) என்ற கட்டுப்பாட்டை அறுத்துவிட்ட இந்த காலத்தில் 'அனைவரும் சமம்' என்று சட்டத்தால் உரிமை வழங்கப் படடிருந்தும் குடிசையிலும் கோட்

டையிலும் குழந்தைகள் ஏன் வளரவேண்டும்? ஆகவே சமுதாய வல்லுநர்கள். அரசியல்வாதிகள், குற்ற இயல் வல்லுநர்கள், உளவியல் வல்லுநர்கள், தலைவர்கள் ஆகியோர்கள் ஒன்றுகூடி 'வறுமையால்' குற்றவாளியாக மாறும் குழந்தைகளைத் தடுத்துக் காப்பாற்றப்படவேண்டும்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை'

என்ற ஔவையார் கூற்றை ஏற்ருவது வறுமையில் வாடும் குழந்தைகளின் பளிங்குபோன்ற தூய உள்ளம் களங்கப்படுவதற்கு முன் அல்லது கண்ணுடி போன்ற உள்ளம் உடைவதற்கு முன் ஆதரவளித்து நல்ல குடிமக்களாக வாழ முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். இது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

இளம் உள்ளங்கள் களங்கப்படாமல் வளர்க்கப் படுதல் வேண்டும். சிறுவர்கள் வெட்கம், நாணம், தற்புகழ்ச்சிக் குணம், கீழ்ப்படியாத தன்மை, அடக்கியாளும் தன்மை, அதிகாரத் தன்மை, கொடுமையான தன்மை, அல்லது எளியவரைக் கொடுமை செய்யும் தன்மை, ஏமாற்றம், இரக்கமற்றதன்மை, முழக்கம் செய்யும் தன்மை, கூப்பாடு போடும் தன்மை, வஞ்சகம், புரளி, பொய்ம்மை. அறை கூவல், எதிர்த்து நிற்றல், மற்றவர்களின் ஆதரவை எதிர்நோக்கி இருத்தல், அழிவு உண்டாக்கக் கூடிய தன்மை, மது அருந்துதல், உணவருந்தும்போது அமைதியின்றி உண்ணுதல், சிறு நீர் அடக்க முடியாமை, கட்டுக் கதை விடுதல். கடமை தவறுதல், சண்டையிடுதல், போலி வாழ்க்கை அல்லது போலியான தன்மை, சூதாடுதல், அழையாது நுழைபவர், நகம் கடித்தல், தீயொழுக்கம், திமிரான அவமதிப்பு, அசட்டைப் படுத்துதல், ஒழுங்கின்மை, உடல் உறவில் வெறி கொள்ளுதல், காதல் விளையாட்டு விளையாடுதல், காதலில் ஈடுபடுதல், புகை பிடித்தல், திருடுதல், கொடாக் கண்டன், விடாக் கண்டன், நச்சரித்தல், சிடுசிடுப்புத் தன்மை, நையாண்டி செய்யும் தன்மை, வம்பளத்தல், பீதியியல்பு, வீட்டை விட்டு ஓடி விடுதல், பள்ளியை விட்டு அனுமதியின்றி நின்றுவிடுதல், அசுத்தமாய் இருத்தல், பண்பாடு அற்றத் தன்மை, கூடா நட்பு, பெருந்திணை, வீதிகளின் விதிகளை மீறுதல், சாலைகளின் விதிமுறைகளை மீறுதல், மடமை. முன்கோபம், சிறிய செய்தியைப் பெரிது படுத்துதல் ஆகிய தன்மைகளைப் பெற்றிருந்தால் அவர்கள் இளங் குற்றவாளிகளாக மாறக்கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்ருர்கள். இதை அறிந்து பெற்ருேர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் குற்றவொழுக்கத்தைப் போக்கி நல்லொழுக்கத்தில் நாட்டம் கொள்ளச் செய்தல் வேண்டும். குழந்தைகளுக்கு நீதி, நேர்மை,

அறம், மறம் ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்தல் வேண்டும். ஆரம்பப் பள்ளியில் பயிலும் சிறு குழந்தைகள் கட்டுப்பாடு இல்லாமல் விட்டுவிடுதல், பள்ளியில் போதிய இடவசதியின்மையால் குழந்தைகளை மரத்தின் அடியில், கோவிலில், விளையாட்டு மைதானத்தில், பொது இடங்கள், சுத்தமற்ற இடங்களில் உட்கார வைத்துக் கல்வி கற்பிக்கப்படுவதனாலும் குழந்தைகளுக்குக் குற்றவொழுக்கம் பரவுகின்றது. அமரும் இடத்தில் சிறு கற்கள், ஓடுகள், மணல் இவற்றைக் குழந்தைகள் எடுத்து மற்ற மாணவர்கள் மீது வீசுகின்றார்கள். சில குழந்தைகள் மணல் தரையில் உட்காருவதையும் வெறுக்கின்றார்கள். இதனால் பள்ளிக்குச் செல்லவும் விரும்புவதில்லை. ஆகவே குழந்தைகளின் குற்றவொழுக்கத்திற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசு ஆகியோர்கள் காரணமாகின்றார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களும் குற்றவொழுக்கத்துடன் விளங்குவதனால் அதே குற்றவொழுக்கம் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் எளிதில் பரவி விடுகின்றது. வீடு, பள்ளி, மற்றப் பொது நிறுவனங்கள் குழந்தைகள் விரும்பும் வண்ணம், மாற்றி அமைப்பதுடன், ஒழுக்கத்திற்கு எடுத்துக் காட்டாகவும், பண்பின் கலைக்கூடமாகவும் விளங்கும்படி செய்தல் வேண்டும். அரசு விருப்பு வெறுப்பின்றி இந்திய மக்கள் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்கள், அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது என்ற உணர்வுடன் கட்சி வேறுபாடின்றி, சாதி வேறுபாடின்றித் திறமைக்கு, தகுதிக்கு ஏற்ப வாய்ப்பு அளிக்கவேண்டும். இதனால் நாட்டில் குற்றவொழுக்கம் பரவுவதைத் தடுக்கலாம்.

தற்கொலை முயற்சிக் குற்றம் (Attempt to Commit Suicide)

தற்கொலை முயற்சிக் குற்றம் இன்று பலருக்கு இது குற்றம் என்ற நினைவு தோன்றுவதில்லை. தற்கொலை செய்து கொள்ள முயல்வது குற்றம் என்று இந்திய குற்றச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. தற்கொலை முயற்சிதான் குற்றம். ஆனால் 'தற்கொலை' முடிந்துவிட்டால் குற்றமில்லை. இறந்துவிட்ட பிறகு யாரைத் தண்டிப்பது? இங்கிலாந்து மற்ற மேலை நாடுகளில் 'தற்கொலை' முயற்சி குற்றமாகக் கருதப்படவில்லை. மனிதன் ஏற்கெனவே வாழ்க்கையை வெறுத்து முடித்துக்கொள்ள எண்ணித்தான் இறப்பதற்குத் துணிகின்றான். அந்தச் செயல் முடிவடையாமல் தடைப்பட்டுவிடும்போதும் அல்லது சாகாமல் இருந்துவிடும் போதும் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டால் அவனுக்கு ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் இணைத்துத் தண்டனை வழங்கப்படலாம் எனச் சட்டம் கூறு

கின்றது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் நோக்கும்போது தற்கொலை முயற்சிக்காகத் தண்டனை வழங்கப்பட வேண்டிய தில்லை. தற்கொலை முயற்சியைக் குற்றமாகவே கருதக் கூடாது எனத் தோன்றுகிறது. சாகத் துணிந்தவன், சூழ்நிலையால் 'தற்கொலை' முயற்சியாக மட்டும் அமைந்துள்ள காரணத்தினுல் அவனுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. ஆனுல் சட்டம் அவன் ஏன் சாகத் துணிந்தான் என்பதை ஆராய்வதில்லை. மனம் உடைந்தவனுக்கு மேலும் சிறைத் தண்டனை வழங்கித் துன்புறுத் துவது நாகரிகமாகாது. 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினுல் போல்' மேலும் துன்பத்தைக் கொடுப்பது பகுத்தறிவுக்கு ஆகாது. ஆகவே தற்கொலை முயற்சிக் குற்றத்திலிருந்து நீக்கிவிடுவது சாலச் சிறந்தது ஆகும். தற்கொலை முயற்சிக்காக நபரைக் கைது செய்வதைவிட கட்டியணைத்து அன்பால் தேற்றி, அன்பாக நாலு வார்த்தைகள் கூறினுல் இதயம் மலர்ந்து இனி இன்பமாக வாழ முற்படுவான். அதை விடுத்துஉயிர் பிழைத்தவனை, கைது செய்து அவன்மீது குற்ற நடவடிக்கை எடுப்பது 'நீ ஏன் பிழைத்தாய்? அதற்காகத் தண்டனை' என்று கூறும்படியாக அமைந்திருக்கின்றது குற்றச் சட்டம். தன்னுயிரேயானுலும் அதை மாய்த்துக் கொள்ள உரிமை இல்லை என்ற அடிப்படையில்தான் தற்கொலை முயற்சி குற்றச் செயலாகக் கருதப்படுகிறது.

ஆனுல் அதற்காகத் தண்டனை வழங்குவது நகைப்பாக இருக் கின்றது. இதனுல் சில குற்றவாளிகள் தடுக்கபடலாம் என்பதும் உண்மையே. ஆனுல் உயிரை மாய்த்துக் கொள்ள முயல்கின்ருன். விஷம் குடித்து விடுகின்ருன். குடித்த பிறகு உயிர்மேல் ஆசை ஏற்பட்டு விடுகின்றது என்று வைத்துக்கொள்வோம். உயிர் வாழ விரும்பினுல் மற்றவர்களுக்கு விஷம் அருந்தியதை உடனே அறிவிக்க வேண்டும். அவர்கள் உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வார்கள், அங்கே மருத்துவமனையில் உடனடி யாகச் சிகிச்சையளிப்பதில்லை. முதலில் காவல்துறை அதிகாரி களிடம் முறையீடு செய்துவிட்டுப் பிறகுதான் சிகிச்சை என் பார்கள். இதற்குள் உயிர்போய்விடும் அல்லது தனியார் மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்வார்கள். அங்கு எந்த வசதியும் இருக் காது. அரசாங்க மருத்துவ மனைக்குள் எடுத்துச் சென்ருல் அங்கே வழக்குத் தொடரப்படும் எனக் கருதிச் சிறிது தாமதப்படு கின்ருர்கள். இறுதியாகத்தான் அரசாங்க மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்ருர்கள். சில வேளைகளில் நிலைமை மோச மாகி இறந்து விடுவதும் உண்டு. இப்படி உரிய காலத்தில் சிகிச்சை அளிக்கப்படாமல் இறந்துவிட்ட உயிர்கள் ஏராளம். அச்சத்தின் காரணமாக, பயத்தின் காரணமாகப் பெற்ருேர்களோ அல்லது

நண்பர்களோ உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அஞ்சுகின்றார்கள். சீரிய உயிர் பிரிந்து விடுகின்றது. ஆகவே தற்கொலை முயற்சி குற்றச் சட்டத்தினின்றும் நீக்கப்படவேண்டும் என்பது பரிசீலனைக்குரியதாகும். மேலை நாடுகளைப்போல் இந்தியாவிலும் குற்றச் சட்டத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்பது அனைவரின் கருத்தாகும்.

நாடு எவ்வளவுதான் வளமானதாகக் காணப்பட்டிருந்தாலும் மக்கள் செல்வத்தில் மூழ்கியிருந்தாலும் அத்த நாட்டில் திருட்டுப் பயம், கொள்ளையரின் அச்சம், கொலையின் கொடூரம், குடிகொண்டிருந்தால் மக்கள் சுதந்திரமாகச் செல்வத்தை அனுபவிக்கவும் நடமாடவும் முடியாது அல்லவா? ஆகவே நாட்டில் வறுமையைப் போக்குவது எவ்வளவு முக்கியமோ, அறியாமையை அகற்றுவது எவ்வளவு முக்கியமோ, அதேபோல நாட்டில் குற்றங்கள் பரவாமல் தடுப்பதும் மிக முக்கியமானதாகும். ஆடும், நரியும், மானும், புலியும் ஒரே இடத்தில் நீர் பருகும் நிலை சமுதாயத்தில் உருவாக்கப்பட வேண்டும். பகுத்தறிவின் தன்மையால் அனைவரும் மனிதர்கள். உயிர்களில் வேறுபாடு இல்லை என்பதை உணர வேண்டும். ஆசைக்குத் தடையுண்டு அன்புக்கு வரம்பில்லை. ஆனால் ஒவ்வொரு உயிருக்கும் தத்தம் சக்திக்கு ஏற்பக் கடமை உண்டு என்ற உணர்வுடன் செயலாற்றி வந்தால் நாட்டில் வறுமையில்லை, பகைமையில்லை, குற்றம் இல்லை, கொள்ளை இல்லை என்ற தெய்வீகச் சூழலை மனித சமுதாயத்தில் காணலாம்.

இனியொரு விதி செய்வோம், குற்றவொழுக்கத்தை நாடோம், குற்றத்தைத் தவிர்ப்போம், அதைச் செய்வோரையும் விடோம், நீதியைக் காப்போம், நேர்மையை வளர்ப்போம், அன்பே தெய்வம், பண்பே அறிவு, அதை எந்த நாளும் காப்போம்.

மேற்கோள் நூல்கள்

1. The Principles of Criminology — SUTHERLAND, CRESSEY
2. The Criminology and Penology — GILLIN
3. The Principles of Criminology — K. SUBRAMANIA PILLAI
4. The Principles of Criminal Law — JEROME HOLL.
5. The Society and the Criminal — J. M. J. SETHNA
6. The History of the Madras Police — ('859—1959) — By INSPECTOR GENFRAL OF MADRAS
7. Outlines of Criminal Law — KENNEY
8. The Penal Laws of India — HARI SINGH GOUR
9. Crimin logy and Administration of Criminal Justice. — N. V. PARANJAPE
10. Administration Rep rt of the Criminal Courts Statistics for the year 1970.
11. Weekly Magazines.
12. News Papers [English].
13. Crim nal Cases.
14. Indian Penal Code.
15. Criminal Procedure Code of India.
16. Children Act.
17. India Evidence Act.
18. Constitution of India.
19. On Crimes and Punishments — BECCARIA.

கலைச்சொற்கள்

A

Act — குற்றச் செயல்

Adhesive tape — பசை நாடா

Admonition — எச்சரிக்கை விடுதல்

Administrative Commission — ஆட்சி ஆணைக்குழு

Aetiology — வைத்தியத் தோற்றத்தின் மூலம் பற்றிய ஆய்வு (குற்றத்திற்கான காரண காரிய விளக்கக் கோட்பாடு)

Air piracy — விமானக் கடத்தல் (ஆகாயக் கொள்ளை)

Alcoholism — வெறிய நச்சுத் தன்மை

Amnesty — பொது மன்னிப்பு

Anthropologists — மனித இன இயல் வல்லுநர்

Appeal Case — மேல் முறையீட்டு வழக்குகள்

Armoured Car — பாதுகாப்புடைய கார்

Assault — தாக்க முனைதல்

Automobiles Act — தானியங்கிச் சட்டம்

Autonomous — சுயாட்சியுள்ள வகை

Automatism — தன்னியக்கமுள்ள, தன்னியக்க உணர்ச்சி

B

Bad Law — கீழ்த்தரமான சட்டம், மோசமான சட்டம்

Bailable Offence — பிணையில் விடத்தக்க குற்றம்

Behaviour — நடத்தை, ஒழுக்கம்

Bhang — பங்கி

Biological Inferiority — உயிரியல்சார்ந்த கீழ்த்தரமான தன்மை

Bigamy — இருதுணை மணம்

Bot — கடுங்குற்ற கழுவாய்த்தொகை

Boot Legging — கள்ளச்சாராய வாணிபம்

Boot Leggers — கள்ளச்சாராய வாணிகர்

Bootless Offence — கழுவாய்த் தொகையைத் தண்டனையாகச் செலுத்த முடியாத குற்றம்

Burglary — கன்னக்கோல் திருட்டு

Burglar — கன்னக்கோல் திருடன்

C

Caveatemptor — வாங்குநர் கவனத்தைச் செலுத்துக (வாங்குநர் எச்சரிக்கையாக இருத்தல்)

Centatomic — நினைவு பாருட்டக் கோளாறு (சொல் மாருட்டக்கோளாறு) செயல் மாருட்டக் கோளாறு

Charas — கஞ்சா

Civil Law — உரிமைச் சட்டம்

Classical theory — பண்டைய கொள்கை, சிறந்த கொள்கை, முதல் கொள்கை

Code of Manu — மனு நீதிச் சட்டம்

Common Law — நாட்டு மரபுச் சட்டம்

Commonsense methodology — பொது அறிவு ஆராய்ச்சிமுறை

Confidence game — மோசடி விளையாட்டு

Consent — இசைவு

Concubine — வைப்பாட்டி

Conventions — நடைமுறை விதிகள்

Conspiracy — சதிக்குற்றம்

Corporation — கூட்டுறவு

Correspondence Course — அஞ்சல் பாடப் பயிற்சிமுறை

Criminal — குற்றவாளி
Crimi..al intent — குற்ற எண்ணம்
Criminal Breach of Trust — நம்பிக்கை மோசடிக் குற்றம்
Criminology — குற்ற ஆய்வியல்
Criminal aetiology — குற்றத்திற்கான காரண காரிய ஆராய்ச்சிகள்
Criminal Behaviour — குற்ற ஒழுக்கம்
Criminal Law — குற்றச் சட்டம்
Criminality — குற்றத்தன்மை. குற்ற உணர்வு
Criminal Pattern — குற்றச் சாயல். குற்றப் போக்கு
Criminal Procedure Code — குற்ற நடைமுறைச் சட்டம்
Criminal technique — குற்ற உத்தி நுட்பம்)
Criminalistic tendency — குற்ற உணர்வு
Culture conflict — கலாசார முரண்பாடு
Custom — மரபு

D

Dacoity — கூட்டுக்கொள்ளை
Definitions — வரையறைகள்
Defence — பாதுகாப்பு, குற்றத்திலிருந்து விடுவித்துக் கொள்ளுதல்
Deceased — வலியால் இறந்தவன்
Delinquency — குற்றத்தன்மை
Delinquent — குற்றவாளி, கடமையைத் தவறியவன், குற்ற ஒழுக்கமுள்ளவன்
Descendant — பின் தோன்றல்கள், வழித் தோன்றல்கள்
Delinquency area — குற்றப்பகுதி
Disorderly conduct — ஒழுங்கீனமாக நடத்தை
Division of Labour — உழைப்புப் பங்கு
Discretionary power — விருப்புரிமை அதிகாரம்
Direct evidence — நேர்முகச் சான்றுகள்
Differential of Crime — குற்ற வகைகளின் பண்பு
Diathesis — முற்சார்புகள்

Don't squeal — நண்பனைக் காட்டிக் கொடுக்காதே, கூட்டாளியைக் காட்டிக் கொடுக்காதே

Drug Addiction — மயக்க மருந்துகளின் கெட்ட பழக்கம்

Drill proof — துளையிடா வண்ணம்

E

Ecological — சுற்றுச்சூழல் ஆய்வியல்

Economic crime — பொருளாதாரக் குற்றம்

Egocentric — தன்முனைப்புள்ள பைத்தியம்

Emotional disturbance — உணர்ச்சி வயப்பட்ட குழப்பம்

Embezzlement — ஒப்புவிக்கப்பட்ட உடைமையை மோசடியாகக் கையாடல் குற்றம்

Encephalitis lettargia — மூளைச் செயலின்மை, மூளை இயக்க மயக்கம்

Environment — சுற்றுச் சூழ்நிலை

Epidemic Encephalitis — மூளைவீக்க நோய்

Epilepsy — காக்காய் வலிப்பு

Esprit de corps — குற்றக் குழுவின் மதிப்புணர்ச்சிகள்

Exhortation — குற்றவாளிகளுக்கு நன்மதி கூறுதல்

Expiation — கழுவாய், குற்றக் கழுவாய்

Equity cant — நேர்மை நெறி மன்றம்

F

Family tree — குடும்ப மரபுக் கிளை விளக்கப் படம்

Felon — கடுங் குற்றவாளி

Felonious — கடுங் குற்றங்கள்

Feebleminded — மன உறுதியற்ற நிலை, தன்மை

Fixing the case — குற்றத்தைச் சரிக்கட்டுதல்

Fl pean — தொங்கு காதுகள்
Fixing the things — வழக்கைச் சரிக்கட்டிவிடுதல்
Frustration — எண்ணக் குலைவு, ஏமாற்றம்
Forgery — பொய் ஆவணம் தயார் செய்தல்
Freak — தான்தோன்றித்தனம்
Financial Fraud — நிதி மோசடி
Fundamental rights — ஜீவாதார உரிமை

G

Garden Party — காட்டுத் தேநீர் விருந்தில் கையூட்டுப் பங்கிடுதல்
Geographic — நில இயல்
Geographic School — நில இயல் ஆய்வுக் கழகம்
Group Solidarity — குழு ஒற்றுமை, குற்றவாளிகளின் கூட்டு ஐக்கியம்
Gipsy — நாடோடி
Gird — ஏளனம். இகழ்
Graft — சுரண்டல்
Grand-uncle — பாட்டனுர் அல்லது பாட்டியார் உடன் பிறந்தார்
Grand-Juror — தனிச்சிறப்புச் சான்ருளர் குழுவின் உறுப்பினர்
Grand-Jury — தனிச் சிறப்புச் சான்ருளர் குழு
Grandeur — பெரும் பதவி, வாழ்க்கை உயர்வு
Grating — சினமூட்டுகிற
Gravamen — குற்றச்சாட்டின் சாரம் குற்றச்சாட்டின் மோசமான பகுதி
Grand-aunt — பாட்டனுர் அல்லது பாட்டியாரின் உடன் பிறந்தாள்
Gutter-child — அநாதைக் குழந்தை, யாருமிலாக் குழவி
Gyves — கைவிலங்கு

H

Hallucinatory voice — மற்றவர்களைக் கொலை செய்யும்படி உள்ளுணர்வு தூண்டுதல்

Hashish — கஞ்சா

Hay fever — வேனிற்காலச் சளிக் காய்ச்சல்

Harm — தீங்கு (உடல், உடைமை, புகழுக்கும் தீங்கு)

Hedonistic Psychology — அறநூல் வகையில் இன்பமே சிறந்த நலம் என்னும் கொள்கை உடைய உள இயல்

Heir — வழித் தோன்றல், பின் தோன்றல்

Heredity — பரம்பரைத் தொடர்பு, பண்பின் மரபுத் தொடர்பு

Homosexual — தன்னொத்த பாலினத்தவர் மீதே உடல் உறவு கொள்ள விருப்பம் உடையவர்

Homogenous — ஒரே கருப்பொருளை உடைய

Homicide — மனிதக் கொலை, மனிதனை மனிதன் கொலை செய்தல்

Hooligan — போக்கிரி

Hooliganism — போக்கிரித்தனம்

Hypothesis — கொள்கையளவில் வாதத்தில் காணும் உண்மை, தற்காலிகமாக ஆதாரமாய் எடுத்துக் கொள்ளும் கருத்து

I

Iconoclast — கடவுள் சிலையை உடைப்பவர்

Iconoclasm — உருவ வழிபாட்டு எதிர்ப்பு

Ideal — குறிக்கோள்

Idiot — முழுமூடன். தாய் தந்தை யார் என அறிந்துகொள்ள முடியாதவன்

Illegitimate — முறை கேடாகப் பிறந்த, திருமணமாகமலே குழந்தை பிறத்தல்

Imbecile — பிறவியிலேயே மூளை வளர்ச்சியற்றவர்

Imitation — பார்த்துக் கற்றுப் பின்பற்றுதல்

Immigrant — வந்தேறி, குடிபுகுந்தவர்

Immigration — குடியேறுதல்

Immunity — குற்றத்திலிருந்து பாதுகாப்பு, காப்புரிமை

Innocent — நிரபராதி, குற்றமற்றவர்

Individualistic — தனியுரிமைக் கோட்பாடு

Intellectualistic — ஆய்வறிக் கோட்பாடு

Inherited — பரம்பரை மூலமாக, மரபு வழியாக

Incest — முறையற்ற ஆண்பெண் உடல் உறவு

Illegal detention — சட்ட முரணாகத் தடைப்படுத்தி வைத்தல்

Illegal arrest — சட்ட முரணான கைது

Incamera — நீதிபதியின் உள்ளரங்கத்தில் வழக்கு நடத்துதல்

Incarcerate — சிறைப்படுத்து

Inchoate crime — முற்றுப் பெறாத குற்றம்

Incorrigible offender — திருத்த முடியாத குற்றவாளி

Intentional act — நோக்கிய செயல், கருதிய செயல்

Inaction — செயலின்மை

Imprisonment — சிறைத் தண்டனை

Identical and fraternal twins — உடன்பிறந்த இரட்டையர்கள்

Infanticide — குழந்தைக் கொலை
Interaction — செயலெதிர்ச் செயல்கள்

J

Junior Approved School — இளநிலைச் சீர்திருத்தப் பள்ளி
Jury — சான்றாயம்
Judgement — நீதிமன்றத் தீர்ப்பு
Juvenile delinquent — இளங் குற்றவாளி
Juvenile Court — இளங்குற்ற நீதிமன்றம், குற்றச் சிறார் நீதிமன்றம்

K

Kleptomania — சிறு பொருள்களைத் திருடுவதில் ஆர்வம், திருட்டார்வக் கோளாறு

L

Labour Out-Post — கைதிகள் தங்கி உழைக்கும் புறக்காவல் சிறை
Lombrosion School — லோம்பரோசோவின் கழகம்
Lynch Law — சட்ட விரோதமான நீதிமுறை, தாக்கப்பட்டவன் தாக்கியவனை உடனே தாக்கி நீதியை நிலைநாட்டுதல், சட்ட விரோதமான நீதிமன்ற விதிமுறை
Lynch Criminal — கொலையாளியைக் கொன்ற கொலைக் குற்றவாளி, குற்றவாளியைத் தாக்கிய குற்றவாளி

M

Misdemeanour — கடுங் குற்றம் அல்லாத, சிறு குற்றவகைகள்
Misdemeanant — கடுங்குற்றம் இல்லாத சிறு குற்றம் புரிந்த குற்றவாளி

Mendelian Unit	—	மரபுப் பண்புகளை எண்கணிப்பு முறைக்குள்ளாக்கும் கோட்பாடு
Morphological	—	மனித இயற்கை உருவம் பற்றிய ஆய்வு, உடல் அமைப்புகளைக் கொண்டு குற்றத் தன்மையை, ஒழுக்கத்தை ஆராய்தல்
Migration	—	குடியேறுதல்
Moral Courage	—	நேர்மையுணர்வு உறுதி
Morphine	—	அபினி
Moral Insanity	—	கொள்கை வெறி
Miscellaneous Crimes	—	பொருளாதார, அரசியல், பால் உணர்வுக் குற்றங்கள் நீங்கலாக
Monomania	—	ஒரே கொள்கையில் வெறியாக இருத்தல், ஒற்றைக் கருத்து வெறி
Moron	—	முட்டாள், அறிவு வளர்ச்சி, உணர்ச்சி என்பது பன்னிரண்டு வயதளவில் நின்றுவிட்ட பேதை
Murder	—	கொலைக் குற்றம்
Maturation	—	குற்றத் தகுதியடைதல், குற்றம் புரிவதில் தேர்ச்சியடைந்து விடுதல்
Morid	—	எண்ணங்கள் தீய செயலிலேயே ஈடுபடுதல், மனநிலை திரிந்த நிலை
Mensrea	—	குற்ற மனம், குற்றம் புரிய வேண்டும் என்ற எண்ணம்

N

Narcotic drugs	—	மயக்க மருந்து
Nature of act	—	செயலின் பண்பு

Neurotic defects — நரம்புக் கோளாறு

Non-Bailable Offence — பிணையத்தில் விடத்தகா குற்றம்

Nuisance — தொல்லைக் குற்றம்

Neuropathy — மிதமிஞ்சிய நரப்புக் கோளாறு

Non-feasance — செய்யவேண்டிய செயலைச் செய்யாமல் விடும் குற்றம்

Nullity — செல்லுபடி ஆகாத சட்டம், பயனற்ற ஆவணம்

O

Omission — செயல் செய்யாமல் விட்டு விடுதல்

Offences — குற்றங்கள்

Offender — குற்றவாளி

Organised Criminals — ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள், கட்டுப்பாடு உள்ள குற்றவாளிகள்

Oedipus Complex — உள ஆய்வியலின்படி எதிர் பாலராகிய பெற்றோர் வகையில் பிள்ளைக்கு உட்செறிவாக இருப்பதாகக் கருதப்படும் உள்ளுணர்ச்சிக் கொந்தளிப்பு, தாய்மீது மோகம் கொள்வதனால் மகன் தந்தையை வெறுக்கும் உள்ளுணர்ச்சிக் கொந்தளிப்பு அல்லது உள்ளுணர்ச்சிக் கூறு

Outcaste — சாதியிலிருந்து நீக்கி விடுதல்

Overt act — வெளிப்படையாகச் செயல் புரிதல்

P

Parental contagion — பெற்றோர்களிடமே குற்றஒழுக்கத்தைப் பெறுதல், பெற்றோர்களிடம் இருந்து குற்ற ஒழுக்கம் பரவுதல்

Pathological traits — உணர்ச்சி வயப்படுதல் தன்மை

Paranoid — சித்தப்பிரமையின் காரணமாக அறிவுப் பிறழ்ச்சி

Parolee — விடுதலைக் கைதி

Parole — நாணய வாக்குறுதியின் மீது கைதியை விடுவித்தல்

Penology — தண்டனை இயல்

Personality Deviation — மாறுபட்ட மனிதப் பண்புக் கூறுகள்

Pillory — மரப்பட்டணிச் சட்டத்தில் மாட்டித் துன்புறுத்துதல்

Personality — மனிதப் பண்புக் கூறுகள்

Political Crime — அரசியல் குற்றம்

Penal Sanction — தண்டனை வழங்குதல்

Politicality — அரசியல் தன்மை

Personal Violence — நேரிடையான வன்முறைச் செயல்கள்

Physical Conditions — இயற்பியல் சூழ்நிலைகள்

Physiognomy — உடல் அமைப்பு

Predatory Politicians — கொள்ளையடிக்கின்ற அரசியல் வாதிகள்

Prisoner — கைதி

Prison Library — சிறை நூலகம்

Prison Labour — சிறைத் தொழில்

Prison Education — சிறைக் கல்வி

Probation — நன்னடத்தைச் சோதனை முறையான விடுதலை

Problem of Crime — குற்றப் பிரச்சினை

Pleads Guilty — குற்ற ஒப்புதல்

Professional Criminals — குற்ற வாழ்க்கைத் தொழிலர்கள். குற்றம் புரிந்தே வாழ்க்கையை நடத்துபவர்கள்

Prosecutors — ம் சாட்டும் வழக்க

524

Psychoanalytic Theory — உளநிலைப் பகுப்பாய்வுக் கொள்கை
Persecution — அடக்குமுறை அட்டூழியம்

Q

Quarantine Law — நோய்பரவாமல் தடுப்புக் காப்புச் சட்டம்

R

Religious Offences — சமயத் தொடர்பான குற்றங்கள்
Repercussions — செயல்களின் பதில் விளைவு
Rigorous Imprisonment — கடுங்காவல் தண்டனை
Robbery — கொள்ளைக் குற்றம்
Robber — கொள்ளையிடுபவன்
Resemblance — உடலமைப்பு மாதிரி தோற்றம்
Retardation — சுணக்கம்
Reasonable Man — எண்ணிச் செயல்படுபவன்
Rehabilitation of Offenders — குற்றவாளிகளின் வாழ்க்கையைத் திருத்திப் புது வாழ்க்கை அமைத்தல்
Ring Leader — கலகத் தலைவன்
Reckless Act — அசட்டையான செயல்

S

Sanitation Law — சுகாதாரச் சட்டம், துப்புரவுச் சட்டம்
Savage Family Tree — நாகரிகமற்ற குடும்பங்களின் பரம்பரை விளக்க முறை
Scent — குற்றவாளியின் இடத்தை மோப்பம் பிடித்தல்
School of Thought — சிந்தனைக் கழகம்
School — கழகம்
Sexual Offences — பால் உறவுத் தொடர்பான